ஐங்குறு நூறு

மூலமும் விளக்கவுரையும்

உரை ஆசிரியர்

சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், வித்துவான்

திரு. ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர்

1978

ஐங்குறு நூறு

மூலமும் விளக்கவுரையும்

உரை ஆசிரியர்

சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், வித்துவான்
திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்
1978

இரண்டாம் பதிப்பு 1978


திருப்பனந்தாள் திருமட நிதிய வெளியீடு

விலை ரூ. 5

அச்சிட்டோர்:

ஸ்ரீ விநாயகா பிரஸ்
சிதம்பரம்

உள்ளுறை



திருப்பனந்தாள் காசிமடத்து இருபத்தொன்ருவது பட்டத்து எழுந்தருளியுள்ள, திருப்பெருந்திரு.

காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

பதிப்புரை

சங்க இலக்கியம் என்ற பழந்தமிழ்ச் சோலையில் ஐங்குறுநூறு ஒரு வண்ணநறுமலர்க்கொடி. இதன் தமிழ் மணத்தைப் பரப்பும் திருப்பணியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1957–ஆம் ஆண்டில் ஈடுபட்டது. ஐந்நூறு பாடல்களைக் கொண்ட ஐந்திணைகளையும் மூன்று பகுதிகளாக வெளியிட்டது. ஐந்நூறு பாடல்களுக்கும் சித்தாந்த கலாநிதி, பேராசியர், வித்துவான் திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் நற்றமிழில் தெள்ளிய உரை எழுதிப் பழந்தமிழ்ப் புலவர்களின் பாடல்களைப் படிப்போருக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். மூன்று தொகுதிகளாக இருந்த இத்தொகைநூலை ஒரே தொகுதியில் வெளியிட வேண்டும் என்ற திட்டத்தைப் பல்கலைக்கழக வெளியீட்டுக்குழுவும் ஆட்சிக் குழுவும் ஏற்றுக்கொண்ட முடிவிற்கேற்பப் பெற்ற வடிவம்தான் இப்பதிப்பு; இதேபோல் மூன்று பகுதிகளாகத் தனித்தனியாக இருந்த, கல்வெட்டறிஞர். தி. வை. சதாசிவப்பண்டாரத்தார் அவர்களின் ''பிற்காலச் சோழர் வரலாற்றை''யும் முழுப் பதிப்பாகச் சில ஆண்டுகளுக்கு முன் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

சமயம், இலக்கியம், கலை, இவற்றைப் பரப்ப அறக்கட்டளை நிறுவிய திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து நிதியத்தின் வழி இப் பதிப்பு வெளிவருவது இப்பதிப்பின் கூடுதல் சிறப்பாகும். அடக்க விலையில் காற்பங்கு விலையிலே விற்கப்பட வேண்டும் என்ற அந்நிதிய நிறுவனர்களின் நோக்கத்திற்கேற்ப 1000 பக்கங்களுக்கு

மேல் உள்ள இந்நூல் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நிலேயான மொழித்தொண்டைச் செய்து வரும் அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தின் தமிழ்ப் பணிக்கு இஃது ஒரு முத்திரையாகும். பழந்தமிழ் இலக்கியங்களேயும், இலக்கணங்களேயும் பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் வியக்கும் வகையில் மலிவாகத் தரத் திட்டமிடப்பட்டுப் பல நூல்கள் இதுவரையில் தொடர்ந்து வெளிவந்துள்ளன. அவைகளில் சில நூல்கள் : (அ) யாப்பருங் கலக்காரிகை, (ஆ) நம்பியகப்பொருள், (இ) தொல்காப்பியம், (ஈ) தமிழ் இலக்கிய வரலாறு, (கி. பி. 250 முதல் 600 வரை), (உ) தமிழ் இலக்கிய வரலாறு (13, 14, 15–ஆம் நூற்ருண்டு), (ஊ) பன்னிரு திருமுறை வரலாறு, (முதல் இருபாகங்கள்) முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

கண்டிக்க வேண்டிய கருக்களேக் கொண்ட படைப்புக்களேப் பெருவிலேக்கு விற்றுவரும் புத்தகச் சந்தையில் பழந்தமிழர்தம் பண்பாட்டை விளக்கிடும் ஐங்குறுநூற்றுப் பாடல்களே இவ்வண்ணம் தரப் பல்கலேக்கழகம் கண்ட அறத் தந்தை அரசர் அண்ணுமலே வள்ளல் நாளும் பொழுதும் போற்றத்தக்கவர்கள். அப்பெரியவரின் அடிச்சுவட்டில் மாருது அடியெடுத்து நடந்துவரும் புரவலர் முத்தையவேள் தமிழ்பேசும் அனேவராலும் என்றும் மறக்க முடியாதவர்கள். பண்ணுர் தமிழ் அறிந்த மதுரைச் சோமசுந்தர ரென எண்ணத்தகும் பல்கலேக்கழகத் துணேவேந்தர் திரு. பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள் இத்தமிழ்த் தொண்டிற்கு உறுதுணேயாக நின்று ஒல்லும் வகையெல்லாம் உதவி வருவதால் என்றும் தமிழ் மக்களின் போற்றுதற்குரியவர்கள்.

இந்நூல் அச்சாகும் வேளேயில் படிகளேத் திருத்தி உதவிய தமிழ்த்துறை விரிவுரையாளரான புலவர். திரு. அ. ஆனந்த நடராசன், M.A., B.O.L., Dip. in. Sanskrit., அவர்களுக்கும், வனப்புற அச்சிட்ட ஸ்ரீ விநாயகா அச்சகத்தாருக்கும் வெளியீட்டுத் துறைசார்பாக நன்றி உரியதாகுக.

டாக்டர். ஆறு. அழகப்பன்

முன்னுரை

"நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே"

சங்கத் தொகைநூல்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என இருதொகுதிப்படும். எட்டுத் தொகையுள், நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு, அகநானூறு என்ற எட்டும் அடங்கும்; இதனை,

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை"

என்ற பழம்பாட்டு ஒன்று வற்புறுத்துகிறது. இவை யாவும், புலவர் பெருமக்கள் பலர், அவ்வப்போது பாடிய பாட்டுக்களின் தொகுப்பாகலின், தொகைநூல் எனப்படுதலும் உண்டு. இப் பாட்டில், மூன்றாவதாக, ஐங்குறுநூறு வைத்துச் சிறப்பிக்கப் படுகிறது. இதனால் இந்நூலைப் பதிப்பித்த பிறரெல்லாம் எட்டுத் தொகையுள் மூன்றாவதாகிய ஐங்குறுநூறு என்று குறித்தனர். முதலாவது என்றும் இரண்டாவது என்றும் ஒன்றினொன்று முற்

பிற்பாடு உடையவாக இவற்றை முறைப்படுத்தல் வேண்டா என்பதற்காகவே, நல்ல குறுந்தொகை, ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல், கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று சிறப்பித்துள்ளனர். அதனை எண்ணியே இங்கு எட்டுத்தொகையுள் ஒன்றாகிய ஐங்குறு நூறு என்று குறித்தாம்.

இத்தொகை நூல்களுள் ஓதப்படும் பொருள், தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் இலக்கணங்களிற் கூறப்பெறும் பொருட்பகுதி யாகும். பொருள், அகம், புறம் என இருவகைப்படும். நற்றிணை முதலாக வுள்ள எட்டனுள், பதிற்றுப்பத்தும் புறநானூறு மாகிய இரண்டும் ஒழிய ஏனைய ஆறும் அகப்பொருள் பற்றியன; அவ் விரண்டும் புறப்பொருள் நுவலுவனவாம்.

இச் சங்கத்தொகைநூல்கள் முதற்கண் அச்சேறிய காலத்தினும், இக்காலத்தில், இவற்றின் பொருள் நலங்களை அறிந்தோர் பல்கி யுள்ளனர். நாள் கிழமை திங்கள் வெளியீடுகள் பல இத்தொகை நூற்கருத்துக்களை எளிய முறையில் மக்களிடையே பரப்புகின்றன. கழகங்கள் கோயில்கள் முதலியன எடுக்கும் விழாக்களிலும் சிறப்புக்களிலும் இத்தொகைநூற் கருத்துக்களும் பாட்டுக்களும் பொருளாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. உயர்கல்வி பயிலும் மாணவர்களின் பாடநூல்களும், அரசியல் சமுதாயம் சமயம் முதலிய துறைகளில் உழைக்கும் அறிஞர்களின் எழுத்திலும் சொல்லிலும் இத்தொகைநூற் பொருள்கள் பல சிறந்த இடம் பெறுகின்றன. இவ்வாற்றால் சங்கத் தொகை நூல்கள் பலவும் தமிழ் மக்களிடையே பெரிதும் பரவியுள்ளன. அதனால் இவற்றைப் பற்றி அறிந்தோர் தொகை, இப்போது தமிழருள் ஓரளவு பெருகி வருதல் கண்கூடாக இருக்கிறது.

மேலே குறித்த அறிஞருட்பலர் எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் பற்றியன மிகச்சிலவும் அகப்பொருள் பற்றியன பலவுமாக இருப்பதை எண்ணத்தலைப்பட்டு, ''மக்களின் வாழ்க் கைக்கு அமைந்த அரசியல், பொருளியல், வாணிகம், போரும் உழவும் பிறவுமாகிய தொழில் முதலியவற்றைப் பொருளாகக் கொண்டவை புறப்பொருள் எனப்படும்; அப் பொருள்பற்றிய

நூல்கள் பலவாக இருப்பதே உலகியல் வாழ்க்கைக்கு உகந்தது; அதனை மனத்துட் கொண்டே திருவள்ளுவரும் அகப்பொருளைக் காமத்துப்பாலில் இருபத்தைந்து அதிகாரங்களில் சுருங்க வுரைத்து, ஏனைப் பொருட்பகுதியை நூற்றெட்டு அதிகாரங்களில் விரியக் கூறினர். அங்ஙனம் இருக்க, சங்கச்சான்றோர் தொகுத்த எட்டுத் தொகையுள் அகப்பொருள் நுவலும் தொகைநூல்கள் பெருக இருப்பதற்குக் காரணம் என்னை?'' என ஆராய்வாராயினர். தமிழ் இலக்கிய வரலாறும் மக்களினத்தின் மனவுணர்வுத்திறனும் ஒழுகலாறும் காலந்தோறும் மாறி இயங்கும் திறமுமுணரும் நல மில்லாதோர் சிலர், தமிழ்கூறும் பொருநூல்களின் நுட்ப முணர மாட்டாமையால், ''கீழைநாட்டுப் புலவர்கட்குக் காதற்பாட்டுக் களில் விருப்பம் மிகுதி; அதனால் அகப்பொருணூல்கள் எட்டுத் தொகையுள் பெருகியுள்ளன'' என்று கூறுவாராயினர்.

நிலவுலகில் வாழும் ஏனைமக்களும் தம்மைப்போல் இங்கே வாழப்பிறந்தவர் என்றும், அவர் வாழும் நாடும் ஊரும் தம்முடை யன போல வாழ்க்கைக்கேற்ற தகுதியும் சிறப்பும் ஒப்ப உடையவை என்றும், எனவே அவரும் தம்மை யொத்த பண்பும் பாங்கும் உடையவர் என்றும் கருதி ஒழுகும் பரந்த நோக்கம் இயல்பாக வுடையவர் பழந்தமிழ்மக்கள். அதனால், ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' எனவும், ''யாதானும் நாடாமால் ஊராமால்'' எனவும் காலம் வாய்த்த போதெல்லாம் மக்களைத் தெருட்டி வந்தனர். இந்நாட்டில் வாழும் தமக்கு இதன்கண் எத்துணை உரிமையுண்டோ, அத்துணை யுரிமை பிறர்க்கும் உண் டென்ற கருத்தால் அவர்க்கு இடமும் பொருளும் ஏற்பன உதவி வாழ்ந்தனர். ''உலகு முழுதும் வரினும் வழங்கத் தவாஅ'' வளமுடைமையே நாட்டுக்குச் சிறப்பாக நூல்களில் வற்புறுத்தினர். சங்க காலத் தமிழ் மக்கள் வாழ்வில் சாதி நிறவேற்றுமைகள் தலை காட்டவில்லை; எந்நாட்டவரும் எளிதிற் போந்து இனிது வாழ் தற் குரிய சூழ்நிலையே சிறந்து விளங்கிற்று. இந்த அடிப்படையில் தான் தமிழரிடையே விருந்தோம்புவது பேரறமாகப் பிறங்கிற்று. இதற்கு ஒவ்வொரு குடியிலும் கணவனும் மனைவியும் கருத்து ஒரு

மித்து ஒத்த உள்ளமும் ஒத்த செய்கையு முடையராக இருக்க வேண்டியது இன்றியமையாத உறுப்பாகக் கொள்ளப்பட்டது.

உலகியலில் ஒருவனது வாழ்வு இனிது இயலுமாயின், அவன் மறுமையில் வானுறையும் தெய்வவாழ்வு பெறுவன் என்பது தமிழர் கருத்து. ''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்று திருவள்ளுவனர் தெளிவிக் கின்ருர். வாழ்வாங்கு வாழ்தலாவது, ''வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்'' என்பது; இதனை விளங்கக்கூறின், அகமும் புறமுமாகிய இருவகை வாழ்க்கைக் கூறுகளும் நன்கு அமையப் பெறுதல் என்று சொல்லாம். புறவாழ்க்கை புறப்பொருள் எனவும், மனைவாழ்க்கை யாகிய அகவாழ்க்கை அகப்பொருள் எனவும் தமிழ்ச் சான்ருேரால் வகுக்கப்பட்டுள்ளன. புறப்பொருள், தொழில் வாணிகம் நாடுகாவல் அரசு செய்தல் முதலியவற்றைத் தன் னகத்தே கொண்டது.

அகமாகிய மனைவாழ்வு செம்மையாக அமைந்தாலன்றி மக்க ளினத்தின் புறவாழ்வு, பொருளும் புகழும் பெற்றுப் பொலிவுருது என்பது தமிழ்வாழ்வின் அடிப்படை. மனைவாழ்வு உலகில் நிலை பெற்று வழிவழியாக வழங்கி வருதற்கு மக்கட்பேறு இன்றியமை யாது. பொருள் இல்லார்க்கு இவ்வுலகில் வாழ்வில்லை யாவது போல, ''மக்களை யில்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே'' என்பர். அதனுல் பழந்தமிழர் தம்மக்களைத் தமது பொருளாகவே கருதுவர், தம்பொருள் என்ப தம் மக்கள்'' என்பது திருக்குறள். மக்களைப் பெருத மாந்தரை ஆண்மை யுடைய மக்களாகக் கருதுதல் கிடையாது. போர்த்தொழிற்கு ஆகாதவரென விலக்குண்ட மக்களில் மகப்பெருதவரும் அடங்குவர். தம்மினும் தம்முடைய மக்கள் அறிவு மிகவுடையராய், சான்ருேர் பரவும் சால்புடையராய், அறிஞர் கூடிய நல்லவையில் முந்துற்றிருக் கும் முதுக்குறைவுடையராய் விளங்குதல் வேண்டுமென விழைந்து, அதற்கு உரியவற்றைச் செய்வதில் பெற்ருேர் சிறிதும் பிற்படுதல் இலர். இத்துணைச் சிறப்புடன் பேணி வளர்க்கும் தம் மக்கள் மணம் செய்துகொண்டு மனையறம் புரியும் செவ்வி எய்துமிடத்து

நன்மகளொருத்தியை நாடித் திருமணம் செய்வது பெற்ருேர்க்குக் கடன் என்று தமிழ்மக்கள் மேற்கொள்ளவில்லே. மனையறம் மேற் கொள்ள விரும்பும் ஆடவன், தன் கருத்திற் கொத்த நங்கையைத் தன் வாழ்க்கைத் துணையாகத் தேடிக் கொள்வன். அவன் குறிக்கும் மகளேயே பெற்ருேரும் சான்ருேரும் இருந்து மணம்செய்து வைப்பது மரபு. இதுபற்றியே தொல்காப்பியராதல் திருவள்ளுவ ராதல் ஒருவரும் தாம் பெற்ற மக்கட்குத் தக்காரை மணம் புரிவித்தல் பெற்ருேர்க்குக் கடன் என யாண்டும் தம் நூல்களிற் குறிக்கவில்லே.

முன்பே குறித்தபடி மனையறமே பழந்தமிழர்க்கு உலகியல் வாழ்வின் சிறந்த கூருகும். அதன்பொருட்டே உலகில் தொழிலும் வாணிகமும் அரசும் பிறவும் அமைந்துள்ளன. மக்களுலகின் நிலே பேற்றுக்கே காரணம் ஆடவரும் பெண்டிரும் மணம் புரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் வாழ்க்கைத்துணையால் மனையறம் செய்தலே என்பது தமிழர் நன்கறிந்திருந்த உண்மை. மனையறம் மாண்புறுமாயின் உலகியல் வாழ்வு அன்பும் அறமும் நிறைந்து பொருளும் இன்பமும் பயந்து வானுறையும் தெய்வவாழ்வு பெறுதற்குப் பெருவழியாம்.

மனையறம் மாண்புற வேண்டின் அதனை நடத்தும் கணவனும் மனைவியும் உயிரொன்றிய காதலுறவு உடையராதல் வேண்டும். அதுவே வாழ்க்கைக்கு உறுதுணையாம் சிறப்பு நல்குவது. காணப் படும் இருவரை நோக்கி, ‘‘ நீவிர் மனமொத்த நண்பராய் இரு மின் ’’ என்று பிறர் விதிப்பது நட்புக்கு அடிப்படை யென்ருே, நட்பின் தோன்றுநிலே என்ருே அறிவுடையோர் யாரும் கூருர் ; புணர்ச்சி பழகுதல் உணர்ச்சி ஆகிய இவையே நட்பாம் கிழமை தரும் எனத் திருவள்ளுவர் முதலியோர் தெருட்டுவர். அது போலவே ஓர் ஆண்மகனையும் ஒரு பெண்மகளேயும் நோக்கி, ‘‘ நீவிர் இருவரும் வாழ்வு முழுதும் உயிரொத்த அன்பராகுக ’’ என்பது முறையாகாது எனக் கருதிய பண்டைத் தமிழ் மக்கள், ஒருவனும் ஒருத்தியும் தம்மில் தாம் கண்டு காதலுறவு கொள்ளு முகத்தால், உயிரொன்றிய கேள்வராதலேயே நேரிது என்று

கண்டனர். இக்கேண்மையே, ஆடவரும் பெண்டிரும் உளம் கலந்து உணர்வு ஒன்றிச் செய்யும் மனையறத்துக்கு இன்றியமை யாதது; இது, கணவனும் மனைவியுமாகிய இருவர் உள்ளத்தே நிகழும் ஒருமை அறமாய், ஒருவர்க்கொருவர் உயிரும் உடம்பு மாய் இயைவிக்கும் உண்மை யன்பாய் நிலவும் உறுதிப் பொரு ளாதலின் இதனை அகப்பொருள் என்றனர்,

இந்த அகப்பொருள், புணர்தல் இருத்தல் பிரிதல் ஊடல் இரங்கல் என ஐந்து கூருக வகுத்துக் காணப்படும். ஒவ்வொரு கூறும் திணை யெனவும் படுதலின், அகப்பொருளை அகன் ஐந்திணை என்றலும் வழக்கம். அகமாகிய மனைவாழ்வுக்கு உரியவாதல் பற்றிப் புணர்தல் முதலிய ஐந்திணையும் உரிப்பொருள் எனவும், அகப்பொருட்குரிய ஒழுக்கமாவதுபற்றி அகவொழுக்கம் எனவும் வழங்குவர். இக்கேண்மை தோன்றி வளர்ந்து நிலைபேறு எய்துங் காலம் மணமாதற்கு முன்னும் மணத்துக்குப்பின் மகப்பயந்து மகன் நடைகற்கும் துணையும் ஆகும். இக்காலத்து நிகழ்ச்சிகளால் இருவரது காதலுறவும் சிதைவுருது திண்மையுற்றுச் செந்நெறிக் கண் ஒழுகச்செய்வது அகப்பொருள் நூல்களின் குறிக்கோள்.

கணவனும் மனைவியுமாகும் இருவரும் ஒருவருக்கொருவர் துணைவ ராதலால், இவர்கள் ஒருவரை யொருவர் தேர்ந்து கொள்வது அவர்கட்குத் தனியுரிமையாம் என்பது தமிழ்மரபு. அம்முறையில் ஒரு ஆடவன் ஒரு பெண்மகளையும், ஒரு பெண்மகள் ஒரு ஆடவனையும் வாழ்க்கைத் துணையாய்த் தேர்ந்து மனத்திற் கொள்வதும், அத்துணைமையைத் தனிமுறையில் வளர்த்துக் கொள்வதும், வளர்ந்துவரும் துணைமைக்குக் காரணமாகிய காத லுறவு பெருகி முறுகுதலால், ஒருவரை யொருவர் இன்றியமையா ராவதும், பின்னர் இருவரும் பெற்ருேரும் சான்ருேரும் அறியத் திருமணம் செய்து கொள்வதும், அவ்விருவரும் கூடி மனையறம் புரிவதும் அகப்பொருள் நெறிக்கட் கூறப்படும் செயல்முறை களாகும். ஒருவரை யொருவர் தனிமையிற் கண்டு வாழ்க்கைத் துணைமைக்குரிய காதலுறவு கோடலும், அதனைப் பிறர் அறியா வகையில் வளர்த்தலும், பின்பு அதனைப் பலர் அறிய வெளிப்

படுத்தலும் களவு எனப்படும். கடிமணம் புரிந்து கோடலும் மனையறம் செய்து பொருளீட்டி இன்புறும் வகையில் தாமும் இனிது வாழ்ந்து, ஏனை மக்களினமும் இன்புற்று வாழ இயன்றன உதவி இம்மையிற் புகழும் மறுமைக்கண் இறவாத இன்ப வாழ்வும் பெற முயல்வது கற்பு எனப்படும்.

உண்மையன்பும் ஒழியாத அறச்செய்கையு முடையதானல் உலகியல் வாழ்வு மக்கட்கு இன்ப வாழ்வாகும். ஒவ்வொரு மனையும் அன்பும் அறமும் பண்பும் பயனுமாக வளம் பெறு வதையே உலகியலறிவு வற்புறுத்துகிறது. அம்மனையிலிருந்து வாழ்க்கை நடத்தும் ஆண்மகனும் பெண்மகளும் ஒத்த அன்பும் உயிரொன்றிய உணர்வும் உடையராவது இன்றியமையாது. இது பற்றியே பழந்தமிழ்ச் சான்ரோர் இந்த அகப்பொருள் ஒழுக்கத்தைப் பன்னெறியாலும் நுணுகிநுணுகி ஆராய்ந்து மிகப்பலவாய பாட்டுக்களைப் பாடியுள்ளனர். இடைக்காலத்தே இந் நுட்பத்தை யுணரும் நல்ல தமிழறிவு தமிழரிடைய வீழ்ந்தது; தமிழ் அறியாத மடமையே மக்களுக்குப் பெருமை எனக் கருதும் கீழ்மை தமிழ் இனத்தின் உள்ளத்தில் நுழைந்து கொண்டது. அகப்பொருளின் நுட்பம்கண்டு அறிவுக்கூர்மை எய்தும் கருத்தின்றி அதனை எள்ளி நகைக்கும் விலங்கறிவு விளக்கம் பெற்றது.

மனைமாட்சிக் குரிய காதலுறவு தோன்றி வளர்ந்து சிறத்தற்கு அமைந்த அகப்பொருள் ஒழுக்கம் புணர்தல் முதலிய ஐவகைத் திணைகளில் இயலுவதென முன்பு கண்டோமன்ரே? உலகில், வாழப்பிறந்த ஒருவனும் ஒருத்தியும், கூடுதலும், பிரிதலும், கூடியும் பிரிந்தும் இருத்தலும், உவகையால் ஊடுதலும், தனித்திருந்து இரங்குதலும் ஆகிய செயல்வகையால் காதலன்பு சிறக்கின்றனர். அவற்ருல் அவரது உழுவலன்பு பெருகி மாட்சியுறுதலால் புணர்தல் முதலிய ஒவ்வொன்றின் கண்ணும் காதலர் உள்ளத்தெழும் எண்ணங்களையும் ஏனைச் சொற் செயல்களையும் எடுத்துக்காட்டு வதைச் சங்கச் சான்ரோருடைய புலமை தனக்குச் சால்பாகக் கொண்டது. உண்மையன்பாலும் உயரிய அறத்தாலும் மக்களது மனைவாழ்வு மாண்புற வேண்டும் என்பதே தமிழ்ப்புலமையின்

உரிமைப்பணியாகச் சங்க காலம் வற்புறுத்தியுள்ளது. நல்லிசைப் புலவர் பலரும், அவ் வகப்பொருட் கருத்துக்களைப் பாட்டில் தொடுத்துப் பாடி, மக்களை நல்வாழ்வினராக்கும் பெரும்பணியைச் செய்தனர். அத்தொழில் புலனெறி வழக்கம் என அறிஞர்களால் போற்றப்பட்டு வந்தது.

கூடுதல் பொருளாக நிகழும் உணர்வு உரை செயல் ஆகிய மூன்றையும், குறிஞ்சித்திணை யெனவும், பிரிவு பொருளாக நிகழ்வன பாலை எனவும், இருத்தல் முல்லை யெனவும், ஊடல் மருதம் எனவும், இரங்குதல் நெய்தல் எனவும் பண்டைத் தமிழர் வகுத்துக் கொண்டனர். அவ்வாறே, வாழ்வுக்கு இடமாகிய நிலப்பரப்பும் மலை, காடு, பாலை, வயல். கடற்கரை என ஐந்து கூறுபடுகிறது. இவற்றையும் திணை யென்பது நிலநூல் வழக்கம். கூடுதல் பொருளாக வருவனவற்றை உரைத்தல் வேண்டி, அவற்றிற்கு இடமும் காலமும் குறித்தல் முறையாதல் கண்டு, புணர்தலுக்குக் குறிஞ்சி நிலத்தையும், பிரிவுக்குப் பாலையையும், இருத்தலுக்கு முல்லையையும், ஊடலுக்கு மருதத்தையும், இரங்குதலுக்கு நெய்தலையும் திணைக்களமாக பகுத்துப் புலனெறிவழக்கம் செய்வது மரபாயிற்று. இக்கருத்தைப் ''படுதிரை வையம் பாத்தியபண்பு'' என ஆசிரியர் குறித்திருப்பதால் அறியலாம். இதனால் தான் குறிஞ்சிப் பாட்டில் கூடுதல் பொருளாக வரும் கருத்துக்களும், பாலைப் பாட்டில் பிரிவுக்குரிய கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

குறிஞ்சி முல்லை முதலியவற்றைத் திணைக்களமாகக் கொண்ட பாட்டுக்களில் அங்கு வாழும் மக்கள் விலங்கு புள் மரம் செடி கொடி முதலியவற்றின் காட்சியும் செய்கையும் சிறந்து நிற்கும். சான்றோர் அவற்றை நிலைக்களமாகக் கொண்டு புணர்தல், இருத்தல் முதலிய அகவொழுக்கங்களைத் தொடுத்துப் பாடுவர். ஒருசில சமயங்களில் திணைக்களமாகிய இயற்கைக்காட்சி ஒரு திணையாகவும், அகவொழுக்கம் ஒரு திணையாகவும் மாறிப் பாடுவதுண்டு. அதனைத் திணைமயக்கம் என்பர். குறிஞ்சித் திணைக் களத்தில் குறிஞ்சியொழுக்கத்தையும், நெய்தல் திணைக்களத்தில் நெய்தலொழுக்கத்தையுமே வரையறுத்துப் பாடிவரின், குறிஞ்சி

நிலத்தில் பிரிவும், மருதத்தில் கூடலும், நெய்தலில் இருத்தலும், பிறவுமாகிய அகப்பொருணிகழ்ச்சிகள் தோன்று போலும் என்ற கருத்துப் பிறந்து விடும். அந்தக்கலக்கம் தோன்றுதபடி விலக்குதற்பொருட்டே திணைமயக்கம் புகுத்தப் பட்டது. எனினும் அது சிறுபான்மையாக இருக்கும் என அறிதல் வேண்டும்.

புணர்தல் பிரிதல் முதலிய ஐந்திணை யொழுக்கத்தின் அரிய குறிக்கோளையும் அதனால் விளையும் அறப்பயனையும் கண்ட சான்றோர்தாம் பாடும் பாட்டுக்களி லெல்லாம் அகவொழுக்கத்தையே பெரிதும் எடுத்துப் பாடினர். மேலும் இவ்வகப்பொருட்காட்சியும் அறிவும், அறம் புரிந்தொழுகும் தூய மக்கட் சமுதாயம் தோன்றுதற்கு இன்றியமையா எனக் கண்டதனால், இதனை வழக்குநூன் முறையிற் கூறுவதே புலனெறி என்று மேற்கொண்டனர்.

உலகில் வாழும் மக்களுள், குணமே நிறைந்து குற்றமே இல்லாதவரோ, குற்றமே நிறைந்து குணமே இல்லாதவரோ எக்காலத்தும் இருந்ததில்லை; எல்லோரும் குணமும் குற்றமும் விரவியவரே. இது பற்றியே யாவரையும் ''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடிக்'' கொள்ளுவதோ தள்ளுவதோ செய்தல் வேண்டும் என்றும், அரிய கற்று ஆசற்றார்கண்ணும்'' வெளிறின்மை அரிது என்றும் திருவள்ளுவனார் தெளிய உரைத்தார்.

இங்ஙனம் மக்கள்பால் விரவிக் கிடக்கும் குணம் குற்றங்களுள் குணத்தால் இன்பமும் குற்றத்தால் துன்பமும் விளையக் கண்ட உலகியலறிவு, குணத்தை விரும்பி அது மிக்கோரையே பின்பற்றி வாழ்வதாயிற்று. துன்பத்தை வெறுத்தலும், இன்பத்தை விரும்புதலும் உயிர்கட்கு இயல்பு. துன்பம் கலவாத இன்பத்தைப் பெறுவதிலே உயிர்களின் நாட்டம் எல்லாம் ஒன்றியிருப்பது கண்கூடு. அதனால் குணமே நிறைந்து இன்பமே பயக்கும் செயலுடையவரையே பாராட்டுவதும், அவருடைய உணர்வு உரை செயல்களைப் பின்பற்றுவதும், மக்களுயிர் தாம் மாண்புறும் நெறியாகக் கொண்டுள்ளன. அரசு, வாணிகம், தொழில் முதலிய வழக்கியல் துறைகட்கு முறையும் நெறியும் வரையறுத்து

உரைக்கப் புகுந்த வழக்கு நூற்புலவர், குணமே நிறைந்த ஆண் மகன் (Ideal Man) ஒருவனைப் படைத்துக் கொண்டு விதிவிலக்கு களை வகுக்கின்றனர். இந்நாளில் சட்டநூல்களை எழுதும் அறிஞர் இக்கருத்தையே மனத்திற் கொண்டிருப்பது யாவரும் அறிந்தது.

பன்னூறு நூற்றுண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களும் இந்த முறையையே கண்டு மேற்கொண்டு அற நூல்கள் பலவும் ஆக்கினர். குற்றமென்பதே யின்றிக் குணமே நிறைந்த ஆண்மகன் (Ideal Man) ஒருவனையும் பெண்மைக்குரிய நலமெல்லாம் உருவாய்த் திரண்ட பெண்மகள் (Ideal Woman) ஒருத்தியையும் படைத்து நிறுத்தி, அவர்களிடையே இந்த அகப் பொருள் ஒழுக்கத்தைப் புகுத்தி, அதற்குரிய நினைவு சொற் செயல்களைத் தொடுத்து உரைப்பாராயினர். அவர்கள் காட்டும் நெறியை ஏனை மக்கள் அனைவரும் அறிந்து பாராட்டி உய்தி பெறும் பொருட்டு அவர்களை முறையே தலைவன், தலைமகன் என்றும், தலைவி, தலைமகள் என்றும் கூறுகின்றனர்.

அறிஞர் குழுவால் பயன்கருதிப் படைத்துக் கொள்ளப்பட்ட வர்களாதலால் இத் தலைமக்கட்குப் பிறப்பு, பிணி, மூப்பு, வறுமை, சாக்காடு முதலிய குற்றங்கள் இருப்பதாகக் கருதக் கூடாது. மேலும் மக்கள் அனைவரும் இனம் சூழ வாழும் இயல்பினராதலின் அவருள் ஒவ்வொருவர்க்கும் சிறந்த நண்பர் உளராவது இயல்பு. அம்முறையில் தலைமகற்கு ஒரு தோழனும் தலைமகட்கு ஒரு தோழி யும் உளராவர். மக்கள் வாழ்வு செந்நெறியில் செல்லுதற்கு அன்பும் அறிவும் அறமும் துணைசெய்வதுபோலத் தலைமக்களின் தலைமைவாழ்வுக்கு, அந்த அன்பு முதலிய மூன்றையுமே, முறையே சொல்லும் மனமும் செயலுமாகக் கொண்ட நட்பின் வடிவைத் தோழனும் தோழியுமாகப் படைத்துள்ளனர். தோழ மைப்பண்பின் (Ideal friendship) பெண்வடிவம் தோழி யெனவும், ஆண்வடிவம் தோழன் எனவும் கோடல் வேண்டும்.

பாடப்படுவது குறிஞ்சிப்பாட்டாயின், தலைமகன் வெற்பன் சிலம்பன் மலைநாடன் எனவும், மருதப்பாட்டாயின் மகிழ்நன்

ஊரன் எனவும், நெய்தற்பாட்டாயின் சேர்ப்பன் துறைவன் எனவும் தலைமகள்கொடிச்சி, எயிற்றி முதலிய பெயர்களாலும் குறிக்கப் படுவர். படினும், எப்படியோ மேற்கூறிய இலக்கணம் அமைந்த தலைவன் தலைவி என்ற சொற்களின் கருத்தை மறந்தமையால், பிற்காலத்தே அத்தலைமக்களைக் குறிஞ்சி முல்லை முதலிய நாடுகட்கு அரசர் அரசியர் என்றும், ஏனை மக்களினத்து ஒருவர் போலக் குணமும் குற்றமும் விரவிய பிறப்பொழுக்கம் உடைய ரென்றும் கருதும் தவறு இப்பாட்டுக்களைப் படித்தோரிடையே தோன்றிக் குழறுபடைச் செய்வதாயிற்று.

மேலே விரிவாகக் கூறிய புணர்தல் பிரிதல் முதலிய ஐவகை அகப்பொருணெறியும் பொதுவாகக் களவு கற்பு என இருவகைப் படும். இவ்விருவகை ஒழுக்கத்தினும் புணர்தல் முதலிய ஐந்தும் நிகழும் என அறிதல் வேண்டும். ஆயினும் கற்பின்கண் ஊடலும் இருத்தலும் சிறப்பாக எடுத்து உரைக்கப்படும். ஏனையவை களவின்கண் சிறந்து தோன்றும். களவின்கண் மணமாதற்கு முன்னர் உளதாகும் அகவொழுக்கமும் கற்பின்கண் மணமான பின்னர் மகன் பிறந்து நடைபயிலும் பருவம் ஈருக வுள்ள காலத்து அகவொழுக்கமும் இடம்பெறும். களவொழுக்கத்தின் வளமையைச் சார்ந்தே கற்பின் திண்மை அமைந்திருத்தலால், கற்புக்குக் களவை வழிநிலையொழுக்கமாகச் சான்றோர் கருதிக் கூறியுள்ளனர். மகப்பேற்றுக்குரிய மெய்யுறு புணர்ச்சி கற்பு காலத்தில்தான் உண்டு. களவின்கண் அது கிடையாது. களவிற் கூறப்படும் மெய்யுறுபுணர்ச்சிக்கு மெய்தீண்டல் முயங்குதல் முத்திகொளல் என்பன பொருளாகும். இதற்கு, ''கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள'' என்றும், ''பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி வாலெயிறு ஊறிய நீர்'' என்றும் வரும் திருக்குறள்களே போதிய சான்று களாகும்.

களவொழுக்கம், இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற்கூட்டம் என நான்கு வகைப்படும் இயற்கைப்புணர்ச்சியைக் காமப்புணர்ச்சி என்றும், தெய்வப் புணர்ச்சி யென்றும் வழங்குவர்.

" காமப்புணர்ச்சியும் இடந்தலைப்படலும்,
பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்பொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே "

என்று தொல்காப்பியம் கூறுகிறது. இவற்றுள், மேற்கூறிய தலைவனும் தலைவியும் முதன்முதலாக ஒருவரையொருவர் தனித்துக் கண்டு உள்ளத்தாற் கலத்தல் இயற்கைப்புணர்ச்சி எனப்படும். முன்னால் கண்டவிடத்தோ அதனைச் சார்ந்த பிறிதோரிடத்தோ மறுபடியும் கண்டு முன்பு உளதாய உள்ளக்கலப்பை வலியுறுவிப்பது இடந்தலைப்பாடு. பின்பு, தலைமகன் தன் காதற் கருத்தைத் தன் தோழனுடன் அளவளாவித் தலைவியின் இயலிடம் தெளிந்து அவன் அறிய அவளுடைய காதலுறவைப் பெறுவது பாங்கற்கூட்டம்; இது பாங்கொடு தழாஅல் எனவும் வழங்கும். தலைமகளுடைய தோழியை அவள் காட்டும் குறிப்பால் உணர்ந்து தலைவியை அவள் அறிய அளவளாவப் பெறுவது தோழியிற்கூட்டம் எனப்படும். தோழியிற்கூட்டம் பெற்றவன், தலைவி யுள்ளத்துத் தோன்றி விளங்கும் காதலுறவு முறுகிப் பெருகித் தன்னை யின்றி அவள் இமைப்போதும் அமையாவாறு வளர்வது குறித்துப் பகற்போதினும் இரவுப்போதினும் போந்து குறிப்பிட்ட ஓரிடத்தே அவளைத் தலைப்பெய்து இன்புறுவன்; ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என்பவற்றால் அவள் காதலை மிகுவித்தலும், தான் கருதுமளவிற்குக் காதல் முறுகாதவழி வரைவை நீட்டித்தலும் செய்வன். தலைமகன் உள்ளத்தில் மிளிரும் காதலுறவின் திட்பத்தைத் தோழி பகல்வரவு விலக்கியும் இரவுக் குறி மறுத்தும் முறுகுவிப்பள். இது சேட்படை எனவும் வழங்கும். தலைவியின் காதற்பெருக்கை யுணர்ந்து தலைமகனைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காதலுறவுக்கு இடையூறுகும் காரணம் பல காட்டி வரைந்து கொள்ளுமாறு தூண்டுவள். அது வரைவுகடாதல் எனப்படும். தலைமகன் வரைந்து கொள்ளாது நீட்டித்தலோ கடமை காரணமாக ஒருவழித்தணத்தலோ, வரைபொருள் குறித்துப் பிரிதலோ செய்யுமிடத்து, பெற்றோர் தலைவியின் வேறுபா டறிந்து திருமணத்துக்கு முயல்வாராயின், தோழியும் தலைவியும்

பெற்ரோர்க்குத் தலைமகற்கும் தமக்கும் உண்டாகி யிருக்கும் காதலுறவை எடுத்துரைப்பர் ; அஃது அறத்தொடு நிற்றல், அறத்தொடு நிலை எனப்படும். சில சமயங்களில் தலைவியின் பெற்ரோர் அவளைப் பிறர்க்கு மகட்கொடை புரிவரென்ரே, தலைமகற்கு மறுப்பரென்ரே தோன்றுமாயினும், அறத்தொடு நிற்றற் குரிய வாய்ப்புக் குன்றுமாயினும், பெற்ரோர் அறியாவாறு தோழி யின் துணையால் தலைமகளைத் தலைமகன் தன்னோடு கூட்டிக் கொண்டு போய் விடுவதுண்டு. அஃது உடன்போக்கு எனப்படும். அறத்தொடுநிலையும் உடன்போக்கும் திருமணத்துக்கு நிமித்த மாகும். வரைவு என்பது தலைமகள் தலைமகனுக்கே உரியவள் எனச் சான்ரேரும் தமரும் அறிய வரையறை செய்தல். அதன் பின், தலைமக்களின் தாய்தந்தையரும் தமரும் சான்ரேரும் கூடி இருவரையும் மணவமளியேற்றித் தனிமனைப்படுத்துதல் வதுவை மணம் என வழங்கும். உடன்போக்கும் வரைவும் வதுவைமணமும் கற்பின் கூறுதலின், இயற்கைப்புணர்ச்சி முதல் உடன்போக்கு எல்லையாக நிகழ்வன களவொழுக்கமாயின.

களவின்கண் நிகழும் செயல்வகைகள் யாவும், தலைமக்கள் உள்ளத்தே தோன்றிய காதலுறவு முறுகிப் பெருகி ஒருவரை யொருவர் இன்றி உயிர்வாழ்வு அமையாராகும் ஒள்ளிய நிலையை எய்துமாறு உருவாக்குதலையே குறிக்கொண்டுள்ளன ; ''வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல் அதற்கன்னள் நீங்கும் இடத்து[1]'' எனத் திருவள்ளுவனர் தலைமகன் கூற்றில் வைத்து உரைக்கு மாறு காண்க. இயற்கைப்புணர்ச்சி வாயிலாகத் தோன்றும் காதலன்பு, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் ஆகியவற்ருல் தலைவன் உள்ளத்தில் நிலைபேறுகொண்டு, தோழியிற்கூட்டத்தில் அவனைச் செலுத்துகிறது ; அங்கே, தோழியைத் தன் கருத்துக்கு உடம்படுத்தற்கண் எய்தும் அருமையும், சேட்படைத்துன்பமும், இரவுக்குறிக்கண் தலைமகளைக் கண்டு பயிலும் துறையில் வழியின் கொடுமையும், தலைவி மனையின் காவற்பெருமையும், அல்லகுறி யவலமும், தோழி பகல்வருவானை இரவு வருகென்றலும், இரவுக் குறி மறுத்தலும், இருபோதும் வாரற்க என அலைத்தலும் பிறவு

1. குறள். 1124.

மாகிய அல்லல்களால் தலைமகன் உள்ளத்துக் காதல் பெருகிச் சிறப்பெய்துகின்றது. தலைவனைத் தன் கண் காணத் தோழி சேட்படுத்தும், பகற்குறி விலக்கியும், இரவுவரவு மறுத்தும் அலைப்பதும், தன்பொருட்டு அத் தலைவன் பனி, வெயில், கார்மழை, கொடுவிலங்கு, கடுங்காவல், காட்டாற்றுப்பெருக்கு, இடிமின்னல் முதலாய இடையூறுகளை எதிர்த்து நீந்திப் போதருவதும், ஒரு வழித் தணப்பின்கண் அவனைத் தான் காணுமல் பிரிந்திருப்பதும் ஒருபால் வருத்த, தன் மேனி வேறுபாடுகண்டு, ஊரவர் அலர் கூறுவதும், அன்னை வெறியெடுப்பதும், வேற்றவர் மகட்கொடை வேண்டி வருதலும் பிறவும் வேருெரு பால் நின்று வெதுப்ப, இடைநின்று வருந்தும் தலைவியின் உள்ளத்திற் காதல் பெருகி முறுகுகின்றது. பின்னர் உடன்போக்காலும், வரைவாலும், இருவர் காதலும் வெளிப்பட்டு, வதுவைமணத்தால் நாடு நகரம் நன்கு அறியக் கலந்து ஒருவர்க்கொருவர் உடம்பும் உயிருமாம் ஒருமைநிலையைப் பயந்துவிடுகிறது. அதனை உணரும் தலைமகன், ''உடம்போடு உயிரிடை யென்னமற்று அன்ன, மடந்தையொடு எம்மிடை நட்பு[1]'' என்று கூறுதல் காண்க.

களவின்கண் தலைமக்கள் தம்முடைய காதலுறவை வளர்ப்பது கருதிப் பகற்குறி இரவுக்குறிகளிலும் பிருண்டும் தனித்துக் கண்டு பயிலுங்கால் தவறுண்டாகாது கொல்லோ எனச் சிலர் ஐயுற்றதுண்டு; அவ்வாறு ஐயம் எழத்தக்க வகையில் பிற்காலத்தே பாட்டுக்கள் பாடியோரும் உண்டு. சங்ககாலத்துக்குப் பின்னர்ச் சுமார் ஆயிரம் ஆண்டுகள் வரை, நம் தமிழகம் தமிழரல்லாத களப்பிரர் பல்லவர் ஆட்சியிற்பட்டுத் தமிழுக்கே யுரிய தூய உணர்வு ஒழுக்கங்களில் மிகப்பெரிதும் சீரழிந்தது. ஐரோப்பியரின் கீழ் இருந்த இரண்டு நூற்ருண்டுகளில் எத்துணையோ பல நலங்களை மறந்தொழிந்த தமிழகம், பத்து நூற்ருண்டுகள் வேற்றரசின் கீழ்ப்பட்டிருந்த போது தன்னுடைய நலங்கள் பலவற்றைக் கையிழந்து ஏழையான திறத்தை அவரவரும் தத்தம் மனக்கண்ணுல் எண்ணிக் கொள்ளக் கடவராவர். தன் தனிப் பெருமையிழந்து அடிமைச்சேற்றில் சிக்கின அந்நாளில், தமிழர்களின் பழங்கால

1. குறள். 1122.

வழக்க ஒழுக்கம் உணர்த்தும் நூல்கள் இறந்தொழிந்தன. சங்க கால இலக்கியங்களுள் எண்ணிறந்தன இறந்தன. இன்று கிடைத்துள்ள சிலவற்றுள் சங்ககாலத் தொகைநூல்கள் அடங்கும். இலக்கியத்துறை தன் இயற்கை அறிவுக்கண்ணை யிழந்து வடவரும் பிறரும் காட்டிய கைக்கோலைப் பெற்றுத் தடுமாறி நடந்தது. அதனுல் தமிழர் மனையற முணர்த்தும் பொருணூல்களின் கருத்துக்கள் பல பொய்யாக் கனவாய்ப் புனைந்துரையாய்ப் பொற்பிழந்தன. அவ் விருட்காலத்தும் பிற்காலத்தும் எழுந்த நூல்கள், குற்றமே இல்லாத தலைமக்கள் வாழ்வில் குற்றமுண்டாகும் வகையில் அமைந்தொழிந்தன. பிற்காலக் கோவைநூல்கள் இதற்குப் போதிய சான்று பகரும். குணமே வடிவாக நிறைந்த தலைமக்களைப் படைத்த நூலோர், தனிமையிற் கண்டு பயில நேரும்போது தவறு உண்டாகுமாறு செய்வரா? அந்நிலையில் தலைமக்கள் என்போர் தவறு செய்வாராயின், அவர்களைத் தலைவர் என்பது பொருந்துமா? அவர்கள் தலைவன் தலைவி என நின்று பிறர்க்கு வழிகாட்டியாவது யாங்ஙனம்? தவறு செய்வோர் ஏனை மக்கள்போல குணம் குற்றம் உடையராவரே யன்றிக் குணவடிவான தலைமக்களா காரன்றே! மேலும், தவறுசெய்தற்கு ஏற்ற இடமும் காலமும் வாய்த்தவிடத்து நெஞ்சைத் தவற்றின்கண் செல்லாவாறு அறிவால் தடுத்து நன்னெறிக்கட் செலுத்துவதுதானே தலைமக்களின் தலைமைப் பண்பு. தனிமையிற் கண்டு பயிலுமிடத்து ஆணும் பெண்ணுமாகிய தலைமக்கள் தவறு செய்வர் எனக் கருதுவதும், கருதுமாறு உரைப்பதும், தலைமைநெறி காட்டும் தக்கோர்க்கு அறமாகாது; அவ்வாறு உரைப்பன உளவேல், அவை, தமிழர் கண்ட அகப்பொருளின் மாண்பை அழித்தற்கெழுந்தவை என்று தெளிந்து விலக்குவதே அறிஞர் கடனுகும்.

கற்பின்கண் வதுவை மணத்தால் மனையறம் புரியலுறும் தலைமக்களது காதலன்பு, சமநிலத்தோடும் நீர்போற் செல்லாது, கல்வி குறித்தும் பொருள் கருதியும் வினையாண்மை வேண்டியும் நிகழும் பிரிவுகளால் அலைப்புண்டு கலங்கி, மகப்பேற்ருல் தெளிவுற்று, மனைவாழ்வை மாண்புறுத்து, வாழ்க்கைத் துணையாம் வண்மையுற்று, அறத்தாற்றில் பொருளீட்டி இம்மைக்கண்

இறவாப் புகழ் நல்கி இலங்குகிறது. பின்னர்த் தலைமக்கள் இருவரும், அறம்புரி சுற்றம் துணையாகத் துறவுள்ளம் மேற்கொண்டு மெய்யுணர் வெய்தி அவாவறுத்துச் சிறந்தது எனப்படும் வீடுபேற்றுக்குச் சமைகின்றனர்; அவரது காதலன்பு வீடு காதலிக்கும் வியன்பேரன்பாய் மிளிர்கிறது. இதனைக்

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என ஆசிரியர் தொல்காப்பியனார் உரைப்பது காண்க. இந்நூற்பாவில், இறந்தது என்றது வயதுமுதிர்தலை; "இளமையும் தருவதோ இறந்த பின்னே" என்ற கலிப்பாட்டடி இதற்குப் போதிய சான்று.

கற்புறு மனைவாழ்வின்கண், தலைமக்கள் எய்தும் நுகர்ச்சியால் இன்பம் ஊறிச் சிறக்கும் காதலன்பு, மகப்பேற்றுக்கு முன்னும் பின்னும் நிகழும் பிரிவுகளால் வளமுறுகிறது. உலகியலில் பொருள்கள் யாவும் நின்றாங்கு நிலைபெற்று நின்று மாறாத இன்பம் தருவன வல்ல. பொருளின் வளர்ச்சிக்கண் பெருகித் தோன்றும் நலம் அவ்வளர்ச்சி முற்றியதும் குன்றத்தலைப்படுதலால் தானும் நிலையின்றித் தேயத் தொடங்குவது இயல்பு. கதிர் முற்றுங்காறும் தலைநிமிர்ந்து இனிய காட்சி பயக்கும் நெற்பயிர், நென்மணி முற்றியதும், சாய்ந்து நிறம் வேறுபட்டு நிலத்தே வீழ்வது இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு. இளந்தளிரும் நறுமலரும் தாங்கிக் காணும் கண்ணுக்கு இனிய காட்சி தந்து, பாடிவரும் வண்டுகட்குத் தேனளித்து விருந்தோம்பும் நன்மரம், காய் முற்றிக் கனிநல்கும் காலத்தும் அதன் பின்னும், முன்னைப் பொலிவும் நலமும் இன்றிக் குன்றுகிறதன்றோ? அவ்வாறே மக்களுடம்பும், கவினுறு காட்சியும் எழில்மிகு தோற்றமும் பொற்பமை மேனியும் கொண்டு இளநலத்தால் ஏற்றம் பெற்று மகப்பேறு எய்தி மாண்புறுங்காலத்துத் தெய்வ மணங்கமழ் பண்டை இளநலம் தேயத் தலைப்படுகிறது. மக்கள் உள்ளத்தை மலர்வித்து இன்பப்பேற்றுக்கு இலக்காக்கிய காதலுறவு, இளமைக்காலத்து இன்பத்தோற்றத்தை அடிப்படை

யாகக் கொண்டு தோன்றியதாகலின், அடிவேர் வலியிழந்த மென் கொடிபோல் விளர்த்து மெலிந்தொழிகிறது. இவ்வியல்பு மாக்க ளிடத்தும் ஒப்ப நிலவுதலின், மக்களுயிர் வேறுபட வேண்டியது கடனாகிறது. உடலின் தோற்றப் பொலிவைக் கால் கொண்டு தோன்றிய காதலுறவு, பெருகி உயிரைப் பிணிக்குங்கால், உயிரையே அதற்குக் காலாக்கி அதன்கண் நிறுத்தி மறுமையின்பப் பேற்றுக்கு வழியாக மாற்றிக்கொள்ளற்பாலர் மக்கள். களவுக் காலத்துக் கதிர்த்துப் பெருகித் தன் உயிரைப் பிணித்த காதலன்பு, கற்பின்கண், தன் உயிரையே காலாகக்கொண்டு நிற்கும் செவ்வி கண்டு, அக்காலத்தே நிகழும் பிரிவுகளாலும் மகப்பேற்றாலும், தன் உயிரினின்றும் நெகிழ்ந்து நீங்காவாறு பிணித்து மெய்ந் நெறிபற்றிப் படருமாறு விடுகின்றான் தலைமகன்; அதுவே கற்பொழுக்கத்தின் குறிக்கோளும் பயனுமாகும்.

மனைவாழ்வின்கண், கணவன் மனைவியரிடை நிலவும் காதலன் பின் வன்மை, கணவனான தலைமகன் நிகழ்த்தும் பிரிவுகளால் நெகிழ்ந்து மென்மை யுறுதற்கு வாய்ப்புண்டு. அப்பிரிவுகள், சிறப்பாகக் கல்வி, பொருள், பகைதணிவினை, நாடு காவல், தூது முதலிய நற்பணி குறித்தவையாம். பரத்தையிற் சேறல் தொல் காப்பியனார் முதலிய பண்டைச் சான்றோரால் இவற்றோடு ஒப்பக் கூறப்படவில்லை. மேற்கொண்ட பிரிவுக்குரிய காரணம் தனக்கெனக் குறிக்கப்பெற்ற காலவெல்லை நீட்டிக்குமாயின் தலைமகன் வாராமை பற்றித் தலைமகட்கு வருத்தம் மிகும். காதலனது அன்பு, தன்பால் சுருங்கி மேற்கொண்ட பொருள்வினைபால் பெருகிற்றுப் போலும் என்ற வேறுபாட்டுணர்வு தோன்றி அவளைப் பேதுறுக்கும். இவ் வாற்றால் களவின்கண் பிரிவரிதாய்ப் பிறங்கிய காதலுறவு, கற்பின் கண் வேறுபாட்டுக்கு இடம் தந்தும், பிரிவு நீண்டவிடத்து ஆற்றி யிருக்கு முகத்தால் சிறிது வலியிழந்தும் இயலும். தலைமகன்பால் பெருகிநின்ற காதலும், அவன் மகன் முகத்தைக் கண்டு பயிலு மாற்றால் சுருங்கும். இவைகளை ஊடலும் புலவியும் நல்கும் இன்பத்தால் மாற்றிக் கூடலால் காதலன்பு நெகிழ்ந்து நீங்காவகை நிறுத்துவது கற்பாம். இதுபற்றியே, ஆசிரியர் திருவள்ளுவனார், ''ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்''

என்றும், ''உணலினும் உண்டது அறல் இனிது காமம் புணர்தலின் ஊடல் இனிது'' என்றும் கூறினர்.

இக் கற்பொழுக்கத்தின்கண், தலைமகன் பரத்தையர் மனைக்குச் செல்வதும் அவர்களிற் பலரோடு தொடர்பு கொள்வதும், அதனால் தலைமகட்கு மனத்தில் பொறாமை தோன்றுவதும், அவர்கள் வாழ்வில் புலவியும் ஊடலும் உண்டாவதும் பிறவும் கூறப்படுவ துண்டு. பாணர் விறலியர் முதலியோர் தலைமக்கள் உதவிபெற்று வாழ்பவரெனவும், அவர்கள் தலைமகனுக்கும் பரத்தையர்க்கும் தொடர்பு உண்டாக்குவரெனவும், பரத்தமை யொழுக்கத்திளின்று நீங்கித் தலைவன் தன் மனைக்கு மீளுமிடத்து அவற்கும் தலைவிக்கும் பாணரும் பிறரும் வாயிலாய் நின்று பணிபுரிவர் எனவும் நிகழ்ச்சி கள் பல தொடுத்துக் கூறப்படும். தலைமகள் கருக்கொண்டு முதிர்ந்து மகப்பெற்று உறையுங் காலத்தோ தன் தலைமகற்குப் பரத்தமையொழுக்கம் தோன்றுவதாகச் சான்றோர்களின் பாட்டுக் கள் தெரிவிக்கின்றன.

தலைமைமாண்புடைய ஒருவனுக்குப் பரத்தையர் தொடர்பு இழுக்காம் என்பது இன்றையச் சமுதாயச் சூழ்நிலை யமைப்பின் கருத்தாகும். மக்கட் சமுதாயம் காலந்தோறும் இடந்தோறும் மாறியும் வேறுபட்டும் வரும் இயல்பினது. உடன்பிறந்த தமக்கை தங்கைகளை மணம் புரிதற்கு இடந்தந்த எகிப்திய யவன சமுதாயம் இன்று அதனை இழுக்கென நீக்கிவிட்டது; உடன்பிறந்தான் மக்களைத் தம்மக்களோடு ஒப்பக் கருதி இருவர் மக்களும் அண்ணன் தம்பிகளாகவும் தங்கை தமக்கைகளாகவும் கொண்டு ஒழுகும் ஒரு சமுதாயத்தின் கொள்கை, பிறிதொன்றுக்கு இழுக்காகத் தோன்று வது கண்கூடு. ஒரு சமுதாயத்துக்குள்ளேயே ஒரு கோத்திரத் தவர்க்குள்ளே மகட்கொடை புரிவதை இழுக்கெனக் கருதும் இனமும் இழுக்கன்றென மேற்கொள்ளும் இனமும் உண்டு. முதற் கண் ஒருவனை மணந்து, மகனையோ மகளையோ பெற்ற ஒருத்தி, பின்னர் ஒருவனை மணந்து அவற்கு வேறு மக்களைப் பெறுவ ளாயின், அவ்விருதிறமக்களும் தம்மில் மணந்து கணவனும் மனைவியுமாய் வாழ்வது மேனாட்டுச் சமுதாய விதிக்கு ஒத்துளது.

இவ்வாறே பரத்தையிற் பிரிந்தொழுகும் புறத்தொழுக்கம் தலைவனது தலைமைப் பண்புக்கு இழுக்கெனச் சங்காலச் சமுதாயம் கருதவில்லை யென்பதைச் சங்கத் தொகைநூல்கள் காட்டுகின்றன. அக்காலம் பரத்தையர் தோன்றுதற்கு இடம் தந்தமையின், அஃது இழுக்காகக் கருதப்படவில்லை. சில ஆண்டுகட்கு முன்வரையில் பரத்தையர் இருப்புச் சமுதாயத்துக்கு மாசு தருவது என்று நம் நாட்டவர் எண்ணுமல் இருந்து வந்தனர். இருமணம் கூடுதல் ஒருத்திக்கு இயல்பன்று என்று கருதியது பழந்தமிழ்ச் சமுதாயம். ஒருத்தி, ஒருவர்பின் ஞெருவராகப் பலரை மணம்புரிந்து கொள்வதை ஒழுக்கநெறியாகக் கருதுவது பல சமுதாயங்கட்கு ஒத்ததாக இருக்கிறது; அதனுல் அவற்றிடையே பரத்தையர் இருப்புக்கு இடமில்லை. ஒருத்திக்கு ஒருவன்; ஒருவற்கு ஒருத்தி என்ற மணமுறை தோன்றியதனுல் தமிழினத்தில் பரத்தையர் உளராயினர்.

அந்நாளைய அரசியற் சூழ்நிலை, அடிக்கடி நிகழும் போர், சமுதாய அமைப்பு ஆகியவற்ருல் ஆடவர் தொகையினும் மகளிர் தொகை மிகுதற்கு வாய்ப்பிருந்தது. கட்டாண்மையுடைய மக்களையே போர்த்துறையும் வேண்டி நின்றது. பெண்டிற் பிணி யுற்ருேர் இளையர் முதியோர் மகப்பெருதோர் ஆகியோர் போரில் விலக்குண்டனர்; இளமை வளம் படைத்த ஆடவரே போர்ப் பேய்க்கு இரையாயினர்; அவர் தொகை குன்றினமையின், மிகை மகளிர் மணக்கும் ஆடவ ரின்மையின், வரைவில் மகளிர் என உளராயினர். அவர்மனம் ஆடவர் பலர்பால் பரந்து சென்று ஒழுகினமையின் அவர் பரத்தையர் எனப்பட்டனர். அவர்க்கு வாழ்வளிக்கும் வகையில் ஆடல் பாடல் அழகு என்ற கலைத் துறைகள் சிறப்பாக அமைந்தமையின், அவற்றை ஆதரித்து அளிக்கு முகத்தால் தலைமக்கள் தொடர்பு உண்டாதலின், அக்காலச் சூழ்நிலை பரத்தையர் சேறலை இழுக்கென விலக்கவில்லை. திருவள்ளுவர் முதலிய ஒழுக்கநூல் அறிஞர்கள் பரத்தமை யொழுக்கத்தைப் பைய விலக்கி வந்தாராயினும், நீங்காதிருந்த அது, இந்த இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியில்தான் அரசியற் சட்ட வாயிலாக அறவே துடைக்கப்பட்டது. ஆகவே, இன்றைய

சமுதாய விதிவிலக்குகளைக் கொண்டு பன்னூ ருண்டுகட்கு முன்பு நிலவிய ஒழுக்கநெறிகளின் இயல்பை மதிப்பிடுவது ஆராய்ச்சி நெறிக்கு மாண்பன்று.

இப்பரத்தையர் அகனைந்திணைக்குரிய முறையில் ஒருவற்கே யுரிய மனைமகளிராகாது புறமாகிய பொருளீட்டுவதொன்றே கருதித் தம் நலத்தை விற்பனை செய்தொழுகினமையின் அவர்கள் புறமகளிர் என்றும் புறத்தோர் என்றும் கூறப்பட்டனர். போர்க் காலங்களில் ஆடவர் உடல்வளத்துக்கே ஆக்கமும் ஊக்கமும் நல்கப்படுதளால் சிலர் அறிவுநலம் குன்றி விலங்குணர்ச்சி மீதூர்ந்து நெறி பிறழ்தல் கண்ட சான்றோர், அவர்க்கு இப் புற மகளிரைத் துணைமைப்படுத்தும் ஒருமுறையைப் பண்டைநாளில் அமைத்திருந்தனர். இக்காலத்தும் அம்முறை கைவிடப்படவில்லை. அதனால், பாசறைக்கண் மகளிரொடு வதிதல் கூடாதென விலக்கிய தொல்காப்பியனார், புறத்தோராகிய மகளிர் செல்லுதல் விலக்கன்று என்றற்குப் ''புறத்தோர் ஆங்கண் புரைவது என்ப'' என்று கூறினார்.

இதுகாறும் கூறியவாற்றால் சங்ககாலத் தமிழ்ச் சான்றோர் எந்த உயரிய நோக்கத்துடன் அகப்பொருட் கருத்துக்களை உரைத் துள்ளனர் என்பது படிப்போர்க்கு இனிது விளங்கியிருக்கும். அக் கருத்துக்கள் யாவும் புணர்தல் பிரிதல் இருத்தல் ஊடல் இரங்கல் என்ற ஐவகையுள் அடங்கும் என்றும், அந்த ஐந்தும் முறையே குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்ற ஐவகைத் திணை களாம் என்றும், அவற்றை உணர்த்தும் பாட்டுக்களும் முறையே குறிஞ்சிப்பாட்டு பாலைப்பாட்டு முல்லைப்பாட்டு, மருதப்பாட்டு, நெய்தற்பாட்டு என ஐந்தாம் என்றும்நினைவிருக்கும்.

சான்றோர் பாடிய பாட்டொன்று கிடைப்பின், அது குறிஞ்சி முதலிய வகையினுள் எவ்வகைப் பாட்டு என்பதை முதலிற் காண வேண்டும். அது காண்டற்கு அப்பாட்டுள் மூன்று பொருள்கள் சிறந்து விளங்கும்; அவை முதல், கரு, உரி என்பனவாம். முதல் என்பது அப்பாட்டின்கண் காட்டப்படும் நிலமும் காலமு

மாகும், காலம் என்றது, கார் கூதிர் முன்பனி பின்பனி இள வேனில் முதுவேனில் என்பனவற்றையும், விடியல் எற்பாடு காலை நண்பகல் மாலை நள்ளிரவு என்பவற்றையும் குறிக்கும். குறிஞ்சித் திணைக்குக் கார்ப்பருவமும், நள்ளிரவும் காலமாகும். இவ்வாறே ஏனைத் திணைகட்கும் இக் காலப்பாகுபாடு உண்டு. குறிஞ்சி நிலத்துக் குரிய மரம் செடி கொடி பறவை விலங்கு முதலியன கருப்பொருள் எனப்படும். இவை இறைச்சி எனப்படுவதும் உண்டு. இத் திணைக்குரிய புணர்தல் பொருளாக வரும் கருத்துக் களை உரிப்பொருள் என்பர். ஒரு பாட்டில் குறிஞ்சிநிலமும் அதற் குரிய காலமும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின் அதனைக் குறிஞ்சிப் பாட்டு என்பது பொதுவிலக்கணம்; ஒரு பாட்டில் குறிஞ்சிக்குரிய முதற்பொருளும் முல்லைக்குரிய கருப்பொருளும் மருதத்துக்குரிய உரிப்பொருளும் காணப்படின், முதற்பொருளைக் கொண்டு அதனைக் குறிஞ்சிப்பாட்டு என்பர்; ஒரு பாட்டில் முதற் பொருட் கூருகிய நிலமோ காலமோ குறிக்கப்படாமல் கருப் பொருளும் உரிப்பொருளும் குறிக்கப்படின், கருப்பொருள் எத் திணைக்குரியது எனக் கண்டு, குறிஞ்சிக் குரியதாயின் குறிஞ்சி யென்றும், மருதத்துக் குரியதாயின் மருதம் என்றும் கொள்வர். முதலும் கருவும் இன்றி, உரிப்பொருள் மாத்திரம் காணப்படின் அதுகொண்டு பெயர் கூறுவர். அதுபற்றியே ஆசிரியர் தொல் காப்பியனுர், "முதல்கரு வுரிப்பொருள் என்ற மூன்றே, நுவலுங் காலை முறைசிறந் தனவே, பாடலுட் பயின்றவை நாடுங்காலை" என்று தெளிவுபடுத்தினர்.

"பழனக் கம்புள் பயிர்பெடை யகவும்
கழனி யூரநின் மொழிவல் என்றும்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
அஞ்சா யோஇவள் தந்தைகை வேலே"

என்ற இவ்வைங்குறுநூற்றுப் பாட்டில், பழனம் கழனி என்றவை மருதநிலப் பகுதியான முதற்பொருள்; கம்புட்கோழி, அந்நிலத்தில் காணப்படும் பறவையான கருப்பொருள்; மனையவர் உறங்கும் நள்ளிரவில் வருகின்ருயே நீ, தலைவியாகிய இவள் தந்தையின்

கைவேலுக்கு அஞ்சமாட்டாயோ? என்றது உரிப்பொருள்; இது புணர்தல் என்ற குறிஞ்சித்திணைக் குரிய பொருளாகும். ஆகவே, இப்பாட்டு முதற்பொருள் கருப்பொருள் வகையில் மருதமாகவும் உரிப்பொருள் வகையில் குறிஞ்சியாகவும் இருப்பது தெளிவு. இதனை மருதப்பாட்டு என்பதா? குறிஞ்சிப்பாட்டு என்பதா? இதன்கண் முதற்பொருள் வந்து நிற்றலின், இதனை மருதப்பாட்டு என்றுதான் கொள்ளல் வேண்டும். அதனால் இதனை மருதத்திணையில் சேர்த்துள்ளனர். மேலும், மருதப்பாட்டில் குறிஞ்சித்திணைக் குரிய உரிப்பொருள் கூறியது மருதத்திற் குறுஞ்சி வந்த திணை மயக்கம்.

இனி, உரிப்பொருளே ஒவ்வொரு பாட்டுக்கும் உயிர்ப்பாதலின், அதனை உரைக்குமிடத்துப் பழந்தமிழ்ச் சான்றோர் தமது புலமைநல முற்றும் நன்கு பெய்து கூறுவர். உலகியலில் காதற்றுறையில் ஈடுபட்ட ஒருவனும் ஒருத்தியும் நிகழ்த்தும் உரையாடலிற்போல வேறு எத்துறையிலும் அறிவு அத்துணைக் கூர்மையாக வேலைசெய்வதில்லை. அதிலும் இளமைக்காலத்தில் அதன் வளம் மிக்குத் திகழ்கிறது. அக்காலத்தே இளைஞரது இயற்கையறிவு மிக்க செறிவும் திட்பமும் நுட்பமும் ஒட்பமும் சிறந்துநிற்கும். அவர்களுடைய எதிர்கால வாழ்வின் உயர்வு தாழ்வும் பெருமை சிறுமையும் செல்வ நல்குரவும் இளமையுள்ளத்தின் வளமையைச் சார்ந்துள்ளன. அவ் வளம் அவரது தூய காதலுறவின் மாண்பைச் சார்ந்து நிற்றலின், அதனைப் பொருளாகக்கொண்டு பாடும், புலமை மிக்க நயம் உடையதாக விளங்குகிறது. அக்காலத்தே அவரது காதல் குறித்து வரும் சொற்களில் வெளிப்படையினும் குறிப்புமொழிகளே பெரும்பான்மையாக இருக்கும். திருவள்ளுவனாரும், ''ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல் காதலார் கண்ணே யுள'' என்றும், ''செருஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும், உருஅர்போன்று உற்றார் குறிப்பு'' என்றும், "உருஅதவர்போற் சொலினும் செருஅர்சொல் ஒல்லை யுணரப்படும்'' என்றும் கூறுவர்.

காதலன் காதலி யுள்ளத்துத் தோன்றி நிற்கும் காதல் நன்கு முறுகிப் பெறுகுமாறு, திருமணத்தை உடனே செய்துகொள்ள விரையாமல் சிறிது காலம் நீட்டிக்கக் கருதுகின்றான். அவன் கருத்தை எவ்வாற்றாலோ உணர்ந்து கொள்ளுகிறாள் தோழி. ஒருநாள் தலைவியொடு செல்லும் தோழி அவனை ஓரிடத்தே காண்கின்றாள். அவள், அவனை நோக்கி, விரைவாக இவளை மணந்து கொள் என்று சொல்லி நீங்குகிறாள். அப்போது மகட்கொடை வேண்டி வேற்றோர் சிலர் தலைவி மனைக்கு வந்துள்ளனர். அவர்க்குப் பெற்றோர் இணங்கிவிடின் தலைமக்களின் காதலுறவு சிதைந்துவிடும் என்பதை அவனுக்குத் தெரிவிக்கவேண்டும். வெளிப்படையாக உரைப்பதற்கும் அவ்விடத்தே வாய்ப்பில்லை. அதனால் அவள்,

“ சிறுநனி வரைந்தனை கொண்மோ பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுரு கிருக்கும்
துறைகெழு தொண்டி யன்ன இவள்நலனே ”

என்று மொழிகின்றாள். அதுகேட்டு நீங்குபவன், ‘‘சுருக்காக வரைந்து கொள்க’’ என்று சொல்லும் தோழி வலைஞர் தந்த கொழுமீனைக் கவர்ந்துண்ணக் கருதி முதுகுருகு செவ்வி நோக்கி யிருக்கும் தொண்டிநகரைக் கூறுவானேன் எனச் சிந்திக்கின்றான். வலைஞர்களுடைய கொழுமீனைக் கொள்ளுதற்கு முதுகுருகு இருப்பதுபோலத் தலைமகளை மணந்துகோடற்குச் சான்றோராகிய அயலார் சிலர் தலைவி மனைக்கு வந்திருப்பதை அது குறிப்பாக உணர்ந்துகொள்கிறான். இவ்வாறு வெளிப்படையாக இன்றிக் குறிப்பால் உரைக்கும் சொற்கள் இவ்வகப் பாட்டுக்களில் நிரம்ப இருக்கும். அக் குறிப்புப்பொருளை அறிந்துகொள்வது கற்போர்க்கு அறிவின்பம் பயக்கும் இனிய செயலாகும். அதனால் அவற்றைக் கற்று ஆராய்பவர் அறிவு மிக்க சீர்மையும் கூர்மையும் எய்துகிறது. இதன் அருமைப் பாட்டைக் கண்டே திருவாதவூரடிகள்.

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும்
என்சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண்
தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ? அன்றி ஏழிசைச்
சூழல்புக்கோ?
இறைவா! தடவரைத் தோட்குஎன் கொலாம்மெலிவு
எய்தியதே?"

என்று குறித்துள்ளனர். வல்லாண்மை மிக்க நல்லாண் மகனுக்கு உடல் மெலிவு நல்கும் அறிவு ஆராய்ச்சி வகைகளுள் அகத்துறைப் பாட்டும் ஏழிசையும்ஆம் என்பார், ''கூடலின ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ, இறைவா தடவரைத் தோட்கு என்கொலாம் மெலிவெய்தி யதே?'' என்றார். என்றவர், ஏழிசையினும் தமிழ் அகத்துறைப் பாட்டின் அருமை சிறந்தது என்றற்கு இறைவன் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின் துறையை முதற்கண் கூறினர்.

புணர்தல் முதலிய உரிப்பொருட் கருத்துக்களைக் கூறும் புலவன் அதனை இயற்கைக்காட்சி யொன்றின் இடையில்வைத்துக் கூறுவன் என முன்பு கூறினோம். அதற்கேற்பவே இங்கே, நீ இவளைச் சுருக்காக வரைந்துகொள் என்ற உரிப்பொருட் கருத்தை நெய்தற்றிணைக் காட்சியிடையே வைத்து இதனைப் பாடிய சான்றோர் உரைக்கின்றார். நெய்தல் நிலத்து வலைஞர்கள் கடலி லிருந்து கொழுவிய மீன்களைப் பிடித்துக் கொணர்ந்து கரையில் எறிகின்றார்கள்; அவற்றைக் கவர்ந்து போதற்கு வயது முதிர்ந்து நெடிது பறக்கும் வலியில்லாத குருகுகள் ஒருபால் தங்கியிருக்கின் றன. இக்காட்சி யமைந்த தொண்டி நகர் போல்பவள் தலைவியென அதனை இப்பாட்டோடு இயைவிக்கின்றார். நெய்தலிற் காணப் படும் காட்சிவகை பலவற்றுள் இதனை மாத்திரம் வரைந்தெடுத்து இப்புலவர் பாடுவானேன் என்று நோக்கின், அஃது இப்பாட்டின் கருத்துக்கு ஒத்ததாக இருப்பது புலனாகும். ஆகவே, இது வேண்டு மென்றே பாட்டுடை ஆசிரியரால் கொணர்ந்து இதனுள்ளே

செறிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை இனிது விளங்கும்; இதனைப் பண்டைய ஆசிரியர், உள்ளுறையென வழங்கினர்.

உள்ளுறை என்பதற்கு உள்ளே பொருத்திவைப்பது என்பது பொருள். மேலே காட்டிய பாட்டில் நீ விரைவாக வரைந்து கொள்க என்பது தோழி வெளிப்படையாக உரைப்பது. இவளை வரைந்துகொள்வதற்காக அயலவர் பலர் காத்திருக்கிறார்கள் என்ற கருத்தொன்றை இந்த உள்ளுறையில் பொருத்தி யிருக்கிறாள் தோழி. அக்கருத்து தோழி கூற்றுக்குப் பொருந்திய காரணமாக இருக்கிறது. ''உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிக என உள்ளுறுத் திறுவதை உள்ளுறை யுவமம்'' எனத் தொல் காப்பியனார் உரைப்பது காணலாம். எடுத்துக் கூறப்படும் பொருள் ஒன்றை விளக்குதற்கு யாவரும் அறிந்த பொருளை உவமமாகக் கூறுவது போல இந்த உள்ளுறையும் கூறப்படுவது பற்றி, இதனை உள்ளுறை யுவமம் என்பது வழக்கம். ''உள்ளுறை யுவமம் ஏனை யுவமம் எனத் தள்ளாதாகும் திணையுணர் வகையே'' என்று ஆசிரியர் கூறுவர்.

இந்தப் பாட்டின் உள்ளுறைப்பகுதியில் வலைஞரும் மீனும் குருகும் ஆகக் காட்டப்பட்டவை கருப்பொருள். இவ்வாறு வருவனவற்றுள் அவ்வந்நிலத்துத் தெய்வமும் கருப்பொருளாயி னும், அதனைமாத்திரம் உள்ளுறை செய்யுமிடத்து நீக்கிவிடுவது மரபு. இக் கருப்பொருள்களுள் பெரும்பாலான தாம் தோன்றிய நிலத்தினின்றும் நீங்காது அங்கேயே வாழ்ந்து அமைவன; ஆதலால் அவற்றை இறைச்சி என்றும் கூறுவர். ''இறைச்சிப் பொருள் வயின் செய்யுளுட் கிளக்கும் இயற்பெயர்க்கிளவி உயர்திணை சுட்டா'' என்றும், ''அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும், வன்புறை யாகும் வருந்திய பொழுதே'' என்றும் ஆசிரியர் கூறுவது காண்க.

இனி, உள்ளுறைப்பொருள்கள் எடுத்தோதப்படும் பொருட்குக் காரணகாரிய இயைபிலோ, இடமும் இடத்து நிகழ்பொருளுமாம் இயைபிலோ உவமமும் பொருளுமாம் இயைபிலோ யாதானு

மோர் இயைபு பெற்று நிற்கும்; யாதோர் இயைபும் இல்லாதவை உள்ளுறையாகப் பயன்படா. ''இறைச்சி தானே பொருட்புறத் ததுவே'' என்றொரு நூற்பா தொல்காப்பியத்தில் உளது. இதனை அடிப்படையாகக் கொண்டு அதன் உரைகாரர் இறைச்சிப்பொருள் என ஒருவகைப் பொருள்கோளைக் கண்டுள்ளனர். அதனால், எடுத்தோதப்படும் பொருளுக்குப் புறமான கருத்தை யுரைத்து அஃது இறைச்சிப்பொருள் என உரைப்பாராயினர். பிரியேன் எனச் சூள்செய்து கூடிய தலைமகன் பிரிந்து வரவு தாழ்த்தானாக, வேறுபட்ட தலைமகளும் அவள் குறிப்பின்படி ஒழுகும் தோழியும் அவனை நொந்து கொடுமை கூறுமிடத்து அவன் மலையைப் பார்த்து,

> இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்து
> வானின் இலங்கும் அருவித்தே — தானுற்ற
> சூள்பேணான் பொய்த்தான் மலை

என்று கூறுகின்றாள். இதன்கண் சூள்பொய்த்தவன் மலையில் மழைபெய்தலும் அருவிவீழ்தலும் இல்லை என்பது பொருட்குப் புறமான கருத்து என்றும், ஆகவே அது இறைச்சி யென்றும் கூறினர். எனினும் இந்தப் பொருள் தொல்காப்பியனார் பிரீண்டுக் கூறும் குறிப்பு மொழிக்கண் அடங்குதலின் இறைச்சி யென வேறுகூறல் மிகையாம்; மேலும், அவர்க்கு அது கருத்தாயின், உள்ளுறைப் பொருள்கோளைக் கூறுமிடத்து இதனை யும் உடன் கூறியிருப்பர்; அவ்வாறு இறைச்சியென வேறே விதந்து கூறாமையின் இறைச்சிப் பொருள்கோள் என ஒன்றைத் தொல்காப்பியனார் கூறினார் எனக்கோடல் உண்மையாகத் தோன்றவில்லை.

''இறைச்சி தானே பொருட்புறத் ததுவே'' என்றும், ''இறைச்சி தானே உரிப்புறத்ததுவே'' என்றும் இருவகையான பாடத்தோடு கூறப்படும் நூற்பாவின் பொருள் யாது எனின், எடுத்தோதப்படும் உரிப்பொருட்கு நிலைக்களமாய் விளங்கும் இயற்கைக்காட்சியில் உள்ள கருப்பொருள் அனைத்தும் அதற்குப்

புறமாம் என்றும், முதற்பொருளைச் சேர்ந்த காலத்துக்கும் உரிப் பொருட்கும் உள்ள இயைபுபோலக் கருப்பொருட்கும் உரிப்பொருட் கும் நெருங்கிய தொடர்பு இல்லை யென்றும் கூறுதற்கு ஆசிரியர், ''இறைச்சிதானே பொருட்(உரிப்)புறத்ததுவே'' என்ருர். ஒரோ விடத்து, கருப்பொருளாய விலங்கு மரம் செடி கொடி முதலிய வற்றின் காட்சி உரிப்பொருள் நலத்தை மிகுவிப்பதுண்டு; அது பற்றி, ''அன்புறு தகுந'' என்ற நூற்பாவில் தொல்காப்பியனுர் உரைத்தனர். பிற்கால உரைகாரர்கள், இறைச்சியென வேறுபட நிறுத்திக் குழறுபடை செய்துள்ளனர். பின்வந்தோர் உரைகாரர் கூற்றை ஆசிரியர் கூற்ருகக் கருதி உள்ளுறைபோல இறைச்சியை யும் வேருெரு பொருள்கோள் முறையாகக் குறித்தனர். அவர்கள், உள்ளுறை இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும் என இரு திறமாய் இயலும்; இறைச்சிப்பொருள் பெரும்பாலும் தலைவனைக் கொடுமை கூறுதற்கே வரும் என்பர்; வேறுசிலர், உள்ளுறை கூறப்படாத திணைகளில் உள்ளுறை போல உரைப்பவற்றை இறைச்சி என்று கொள்வர்.

இத்தகைய அகப்பாட்டுக்களை ஆராய்தற்குத் தொல்காப்பியரே ஒரு நெறியும் காட்டியுள்ளார். அவற்றைத்திணை, கைகோள், கூற்றுநிகழ்த்துவோர், கேட்போர், இடம், காலம், மெய்ப்பாடு, பயன், எச்சம், முன்னம், பொருள், துறை எனப் பல கூறுபடுத்தி ஒவ்வொன்றையும் நன்கு விளக்கியுள்ளார். அம்முறையேபற்றி இந்நூற்கண் தொகுக்கப்பட்ட பாட்டுக்கள் யாவும் முன்னுளிலேயே மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை முல்லை என ஐந்து திணையாக வும் திணைக்கு நூறுபாட்டாகவும் தொகுத்துக் களவு கற்பென்னும் இருவகைக் கைகோட்குரிய துறை வகுத்துக் கோக்கப்பட்டுள்ளன. மருதத்திணைக் குரிய பாட்டுக்களை ஓரம்போகியாரும், குறிஞ்சியைக் கபிலரும், நெய்தலை அம்மூவனுரும், பாலையை ஓதலாந்தையாரும், முல்லையைப் பேயனுரும் பாடியுள்ளனர். அவர்களுடைய வரலாறு கள் ஒவ்வொரு திணையின் முன்னுரையிலும் எழுதப்பட்டுள்ளன. கூற்று நிகழ்த்துவோர் கேட்போர் முதலிய கூறுகள் துறை கூறுகின்ற போதே விளங்கக் காட்டப்பட்டிருக்கின்றன. ஏனைப் பொருட்கூறுகள் உறையின்கண் குறிக்கப்பட்டன. மெய்ப்பாடும்

பயனும், பொருளிலக்கண அமைதியும் பாடவேறுபாட்டாராய்ச்சியும் விரிவஞ்சி முதல் நூறுபாட்டோடு நிறுத்தப்பட்டன.

ஒவ்வொரு திணைக்குரிய ஆசிரியர் வரலாறும், சிறப்பிடம் பெற்ற கருப்பொருள்களைப் பற்றிய உலகியல் விஞ்ஞானம் தத்துவம் முதலிய கூறுகளோடு விரவிய ஆராய்ச்சியும் ஆங்காங்கு இந்நூற்கண் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலின் பெருமையையும் சிறுமையையும் எண்ணும்போது இதற்கு உரை காணப் புகுந்த என் உள்ளம் நாணத்தால் சுருங்குகிறது. இதுபோலும் அழகிய கருத்தமைந்த நூல்களைக் காலநிலைக்கேற்பச் செய்தளிக்கும் திறமும் புலமையும் படைத்த தமிழ்ச் செல்வர் பலர் இருக்க என்னை இத்துறையில் இயக்கிப் பணிகொள்ளும் அங்கயற்கண்ணி யாகிய தமிழன்னையின் அருள் நலத்தை எண்ணி இன்புறுகின்றேன்.

“என்னால் அறியாப் பதந்தந்தாய்,
யான்அஃது அறியாதே கெட்டேன் ;
உன்னால் ஒன்றும் குறைவில்லை;
உடையாய் ! அடிமைக்கு ஆர்என்பேன் ;
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியா ரொடுங்கூடாது
என்நாயகமே ! பிற்பட்டு இங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே ”

— திருவாதவூரடிகள்

ஔவை. சு. துரைசாமி

முதற் பதிப்புரை

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற சங்கத்தொகை நூல்களுள் எட்டுத்தொகை என்பது நற்றிணை குறுந்தொகை முதலிய எட்டு நூல்களைத் தன்கண் கொண்டது என்பது அறிஞர் அறிந்த செய்தி யாகும். ஒவ்வொரு தொகைநூலும் புலவர் பலர் பாடிய பாட்டுக் களின் தொகுப்பாகும். இந்த ஐங்குறுநூறு என்பது ஐந்து புலவர் கள் பாடிய ஐஞ்ஞூறு பாட்டுக்களைக் கொண்ட தொகை நூல்; ஒவ்வொருவரும் நூறுநூறு பாட்டுக்களைப் பாடியுள்ளனர். மேலும், ஒவ்வொரு நூறும் ஒவ்வொரு திணைக்கு உரியதாகும்.

ஐங்குறுநூறு முழுதுக்கும் ஒரு கடவுள் வாழ்த்துப் பாட்டுப் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடிச் சேர்க்கப்பட்டுள்ளது. அவர் இவ்வாறே நற்றிணை குறுந்தொகை அகநானூறு புற நானூறு என்ற தொகைநூல்களிலும் கடவுள் வாழ்த்துப் பாட்டுக் களைப் பாடிச் சேர்த்துள்ளார்.

இதன்கண் உள்ள ஐந்திணை ஐஞ்ஞூறு பாட்டுக்களும் சேர மன்னனான யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற வேந்தர் பெருமானால் ஆசிரியர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்ற சான்றோரைக் கொண்டு தொகுக்கப்பட்டன

வாம்). இவ்வரலாறு பண்டைநாளைச் சேரமன்னர் என்ற சேர மன்னர் வரலாற்றுநூலில் நன்கு கூறப்பட்டுளது. அவர் இதனைத் தொகுத்தபோது ஒவ்வொரு நூறையும் பப்பத்தாக வகுத்துத் தக்கத லைப்பும் தந்துள்ளார்.

இந்த ஐங்குறுநூறு என்ற தொகைநூலை அரிதில் முயன்று தேடி, பனையேட்டில் பிழைபடக் கிடந்த நிலையினை மாற்றிச் செம்மைசெய்து முதற்கண் (கி. பி. 1903ல்) வெளியிட்ட பெரியார், தமிழ்த்தந்தை யென மிக்க அன்புடன் பணிந்து பரவும் மகா மகோபாத்தியாய உயர்திரு. டாக்டர். உ. வே. சாமிநாதைய ராவர். இந் நூலின்கண், பண்டைச் சான்றோர் ஒருவரால் உள் ளுறைக் குறிப்பும் குறிப்புரையும் பல பாட்டுக்களுக்கு எழுதப் பட்டுள்ளன.

சுமார் முப்பது ஆண்டுகட்குமுன் என்பால் தமிழ் பயின்ற மாணவர் இருவர்க்கு இந்நூலைக் கற்பிக்க வேண்டிய நிலை வந்த போது அவர்க்கு முதலிலுள்ள மருதப் பாட்டு நூறுக்கும் உரை எழுதி யுரைக்கலுற்றேன். பின்னர், அது, 1938ல் ஐங்குறுநூறு மருதம் மூலமும் விளக்கவுரையும் என்ற பெயரால் அச்சேறி வெளி வந்தது. ஓரளவு அச்சாகியதும் அதனைப் பார்வையிட்ட கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவரான காலஞ்சென்ற தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் என் பொருட்டுத் திருப்பனந்தாள் சென்று காசிமடம் சிவத்திரு. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளை அடைந்து பொருளுதவி புரியுமாறு வேண்டி என்னையும் சிவத்திரு. சுவாமிகளைக் காணுமாறு பணித்தார்கள். அக்காலை அருள்திரு. தம்பிரான் சுவாமி அவர்கள் நூன்முழுதிற்கும் உரையெழுதுமாறு அருளினார்கள். அதன்பின், தொடக்கத்தில் எனக்குத் தமிழ் கற்பித்த சீர்காழி, உயர்திரு. கோவிந்தசாமி ரெட்டியார் அவர்களின் ஏட்டுப் பிரதி யொன்று கிடைத்தது. அதன்கண் அச்சுப் பிரதியில் காணப்படாத திருத்தங்களும், சில பாடல்களுக்குரிய குறிப்புரை களும் காணப்பட்டன. அவற்றை இப்பொழுது ஆங்காங்குக் குறித்துக் காட்டியுள்ளேன்.

பின்னர்ச் சிறிது காலத்துக்குள் நூன்முழுதுக்கும் உரையெழுதி அந்நாளில் விளங்கிய புலவர்பெருமக்கள் பலர்க்கும் காட்டி அவர் களுடைய ஆதரவையும் நல்லுதவியையும் பெற்றேன். எனினும், நூன்முழுவதையும் அச்சிடுதற்கேற்ற வாய்ப்புக் கிடைக்காமையால் சுமார் ஆறு ஆண்டுக்குமுன், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துக்கு விண்ணப்பித்து இதனை வெளியிடற்கான வசதி செய்து தர வேண்டினேனாக, பல்கலைக்கழகத்தார் வெளியிடத் துணிந்து, அச்சிட ஏற்பாடு செய்தனர்.

''தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டுத்'' தனிப் பெருஞ் செல்வராய்த் தமிழகத்தேயன்றி வேறு எந்நாட்டினும் இருந்த செல்வர் எவரும் சிந்தியாத அளவில் தனிமுறையில் தமிழும் தமிழகமும் உள்ளவளவும் தன் பெயர் நிலைபெறுமாறு தில்லைத் திருவேட்களநகர்க்கண் அண்ணுமலைப் பல்கலைக்கழகம் தோற்றுவித்த பெரும் வள்ளல் திரு. ராஜா சர். மு. அண்ணுமலைச் செட்டியார் அவர்களும், அவர்கள் புதல்வராய்ப் புகழ்மிக்கு விளங்கும் திரு. ராஜா சர். முத்தைய செட்டியார் அவர்களும் ''தந்தையர் ஒப்பர் மக்கள்'' என்ற தொல்காப்பியப் பொரு ளுரைக்கு இலக்கியமாய் நின்று கண்ணும் கருத்துமாய்ப் பேணி வரும் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தின் அரிய தமிழ்ப்பணி நாளும் பெருகித் தமிழ்ப் பெருமக்களின் கலை வளர்ச்சிக்குப் பேராக்கமும் அரணுமாய்த் திகழ்கிறது; நல்ல தெல்லாம் செய்ய வல்ல தில்லைப் பெருங்கூத்தன் திருவருளால் பல்கலைக்கழகச் செல்வர் அரசர்பெருமானுன வள்ளல் டாக்டர். திரு. மு. அ. முத்தைய செட்டியாரவர்கள் வழிவழியாகச் சிறந்து வளமிக நெடிது வாழ்க என வாழ்த்துவது தமிழ்மக்களின் தலையாய நன்றறி கடனும்.

இந்த நூலின் தொடக்கமுதல் இன்றுகாறும் வேண்டுவன யாவும் செவ்வையாக அமையுமாறு தோன்றுத் துணையாய் நின்று

அருள் புரிந்து நிற்கும் அங்கயற்கண்ணியோடு அமர்ந்த ஆலவாய் அண்ணல் திருவடிகளைப் பணிகின்றேன்.

"ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம்ஆதியே"

ஔவை. சு. துரைசாமி
9—9—1957
(முதற் பதிப்புரை)

புறவுரை

மருதம் முதல் முல்லை யீருக ஐந்து நூறு பாக்களையுடைய இவ்வைங்குறுநூறு நல்லிசைச் சான்ருேர் ஐவரால் ஆக்கப்பெற்றது. இதனை,

மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதும் குறிஞ்சி கபிலர் — கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலை ஓது ஐங்குறு நூறு.

என்ற பழைய வெண்பா தொகுத்துக்கூறுகிறது. அந்த ஐந்து நூறுகளையும் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் ; தொகுப்பித்த வள்ளல் கோச்சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன்.

இவ் வைங்குறுநூற்றில் உள்ள பாட்டுக்கள் யாவும் தமிழ்க்கே சிறப்பாக வுரிய பொருளிலக்கணப் பகுதியில் காணப்படும் அகப் பொருள் நலங்களையே உரைக்கின்றன. அவை களவும் கற்பும் என்ற இருவகை ஒழுக்கங்கள் எனப்படும். ஒழுக்கமாவது மக்கள் இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்தற் பொருட்டுச் செய்வனவும் தவிர்வனவும் இவையெனச் சான்ருேர்கள் கண்டு உணர்ந்து உரைத்த அறமாகும். அறங்கூறும் பெருந்தோன்றலாகிய திரு

வள்ளுவப் பெருந்தகை, களவு என்பது தவிரத் தகுவ தென்பது பற்றிக் கள்ளாமை என எதிர்மறைத் தலைப்பிட்டு அதன் தீமையை விரித்துரைத்தனர் ; அற்றாக, அக்களவினைக் கொள்ளத்தக்க ஒழுக்க மாகப் பொருளிலக்கணம் கூறுவது யாங்ஙனம் என ஐயுறுவோரும் உண்டு. ஐயம் அறுப்பது குறித்து அகலவுரை பல வழங்கினோரும் உண்டு.

ஒருவர்க்கு உரிய பொருளை அவர் அறியாதவாறு கவர்ந்து கொள்வது களவு என்பது. வாழ்க்கைத் துணையைநாடி நிற்கும் இளமைச் செவ்விக்கண், இனம் பெருக்கும் உணர்ச்சி, உடலூழாய் நின்று, உயிரறிவைத் தன்னடிப்படுத்தி, உடலின் புறத்தே ஒளியும் அழகும் உறுவித்து நிற்பது உயிர்நூல் காட்டும் உண்மை. இப் பெற்றித்தாய இளமையில் பெண்மகள் ஒருத்தியின் உள்ளத்தை அவளையறியாமல் ஓர் ஆண்மகனும், ஓர் ஆண்மகன் உள்ளத்தை அவனை அறியாமல் ஒரு பெண்மகளும் கவர்ந்து கொள்ளும் செயல் இங்கே களவு என்று குறிக்கப்படுகிறது. நிறையிழந்த சீவகன், ''வெஞ்சின வேழமுண்ட வெள்ளிலின் வெறியமாக, நெஞ்சமும் நிறையும் நீல நெடுங்கணால் கவர்ந்த கள்வி'' என்ப தாகத் திருத்தக்க தேவரும், ''பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும், எண்வழி உணர்வும் நான் எங்கும் காண்கிலேன், மண்வழி நடந்து அடிவருந்தப் போனவன், கண்வழி நுழையு மோர் கள்வனே கொலாம்'' என நிறையிழந்த சீதை கூறுவதாகக் கம்பரும் உரைப்பன மேற்கூறிய பொருளை வற்புறுத்தும்.

தவிரத் தகுவதாகிய களவு, பொருளைக் கவர்ந்தார்க்கும் கவரப் பட்டார்க்கும் இடையே வெறுப்பும் பகையும் விளைத்துத் துன்பத்தைப் பயப்பது போலாது இவ்வுள்ளக் களவு இருவர்க்கும் இடையே உவப்பும் உழுவலன்பும் விளைத்து இன்பமே பயத்தலின், இக்களவு அறமாகவும் ஒழுக்கமாகவும் கருதப்படுகிறது. இக் களவை மேனிகழும் இல்லறமாகிய கற்பறத்துக்கு வழிநிலையெனப் பழந்தமிழ்ச் சான்றோர் கொண்டனர், உள்ளத்தால் காதலுறவு பூண்ட ஒருவனும் ஒருத்தியும் கற்பின்கண் உலகவர் அறியத் தமது காதலைப் புலப்படுத்தி ஒழுகுவர் ; களவின்கண் அதனைத்

தம்மைப் பெற்ரேரும் அறியாதவாறு மறைத்து ஒழுகுதலால், அது களவொழுக்கம் எனப்படுகிறது.

களவுவழித் தோன்றும் கற்புமணம் போல வடநூலாரிடையும் ஒரு வகை மணம் உண்டு; அதனைக் காந்தருவம் என்பர். ஒருவரையொருவர் தனித்துக்கண்டு காதலுறவு கொள்ளும் களவு காந்தருவம் போல்வது என்பர். காந்தருவமணத்தார், ஒருவரை யொருவர் கண்டவுடனே கருத்து ஒருமித்துக் காமம் கையிகந்து கூடி மகப் பெற்றுக்கொள்வதும் உண்டு. சுருங்கச்சொல்லின், காந்தருவத்தில் கழிகாம விலங்குணர்ச்சி வீறுகொண்டு விளங்கும். களவின்கண் அறவுணர்வு மேம்பட்டு விளங்க விலங்குணர்ச்சி ஒடுங்கிக்கிடக்கும்; அதனுல் அக்காலத்தே மகப்பேற்றுக்குரிய மெய்யுறு புணர்ச்சியோ, மகப்பெறுதலோ இல்லை. மகப்பெறு கூட்டமும் மகப்பேறும் கற்பொழுக்கமாகும்; ஆகவே, களவின்கண் கற்பிற்போல அறிவும் நிறையும் மக்கட் பண்பும் முற்பட்டு நிற்றல் இன்றியமையாதாயிற்று. சகுந்தலையும் துட்யந்தனும் தனித்துக்கண்டு கழிகாமத்துக்கு இரையாகிக் கூடி மகப்பெற்றது காந்தருவத்துக்கு நேரிய எடுத்துக்காட்டு. ஆயிரக்கணக்கில் காணப்படும் பழைய தமிழ் அகப்பொருட் பாட்டுக்களில் களவின் கண் மகப்பேறு நிகழ்ந்ததாக இதுகாறும் ஒன்றேனும் கூறிய தில்லை. அதற்குரிய பழைய இலக்கணநூல்களும் ஒரு சிறு குறிப்பும் காட்டவில்லை.

கற்பின்கண் பரத்தையிற் பிரிவு என்பது ஒருநிகழ்ச்சி; ஒரு காலத்தே அப்பரத்தையர் இருப்பு ஒரு குற்றமாகக் கருதப்படாமல் இருந்தது; இது முன்னுரைக்கண் விளக்கப்பட்டுள்ளது. பொருள் வினை கல்வி ஆகியவை காரணமாகப் பிரிதல் சிறப்புடைய ஆண்மகனுக்குக் கடனுதல் போலப் பரத்தையரிற் பிரிவு கடமை யன்று. ஒரோருகால் காதல் சிறப்பது குறித்துத் தலைமகன் பரத்தையரிற் பிரிந்தான் போலக் கூறும் மரபு கற்பனையுலகில் உண்டு. அக்கற்பனை தலைமகனது தலைமை மாண்புக்கு இழுக் காகாது எனக்கொள்க.

இனி இந்நூல் உரையினையும் முன்னுரையையும் நோக்கு மிடத்து உரையில் இறைச்சிப்பொருள் காட்டியது வியப்புப்பயக்கும். முன்னுரைக்கண் காணப்படும் ஆராய்ச்சி, உரை முடிந்த பல்லாண்டுகட்குப் பின்பு நிகழ்ந்த தென்பது அறிஞர் உலகுக்கு இதனால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஔவை. சு. துரைசாமி
20—10—1958

உரையாக்கத்துக்குத் துணைபுரிந்த நூல்களின் நிரல்

அகநானூறு	....	(அகம்)
அகப்பொருள் விளக்கம்	....	(அ. பொ. வி.)
ஆசாரக்கோவை	....	(ஆசா)
இறையனர் அகப்பொருள் உரை	....	(இ. அ. பொ.)
ஐங்குறுநூறு	....	(ஐங்)
ஐந்திணையைம்பது	....	(ஐந்)
கம்பராமாயணம்	....	(கம்ப)
கலித்தொகை	....	(கலி)
கார் நாற்பது	....	(கார்)
குறிஞ்சிப்பாட்டு	....	(குறிஞ்சி)
குறுந்தொகை	....	(குறுந்)
சிலப்பதிகாரம்	....	(சிலப்)
சிவஞானமாபாடியம்	....	(சிவ. பா)
சிற்றட்டகம்	....	(சிற்றட்ட)
சிறுபஞ்சமூலம்	....	(சிறுபஞ்ச)
சிறு பாணாற்றுப்படை	....	(சிறுபாண்)

சீவக சிந்தாமணி	....	(சீவக)
சுந்தரர் தேவாரம்	....	(சுந். தே)
சூளாமணி	....	(சூளா)
தக்கயாகப் பரணி	....	(தக்க)
தணிகைப் புராணம்	....	(தணிகை)
தமிழ் நாவலர் சரிதை	....	(த. நா. ச)
திணைமாலை நூற்றைம்பது	....	(திணைமா. 150)
திணைமொழி ஐம்பது	....	(திணை 50)
திருக்குறள்	....	(குறள்)
திருக்கோவையார்	....	(கோவை)
திருஞானசம்பந்தர் தேவாரம்	....	(ஞானசம்)
திருநாவுக்கரசர் தேவாரம்	....	(நாவர)
திருமந்திரம்	....	(திருமந்)
நான்மணிக்கடிகை	....	(நான்மணி)
தொல்காப்பியம் எழுத்து	....	இளம்பூரணர்
,, ,,	....	நச்சினார்க்கினியர்
,, சொல்	....	இளம்பூரணர்
,, ,,	....	சேனாவரையர்
,, ,,	....	தெய்வச்சிலையார்
,, ,,	....	நச்சினார்க்கினியர்
,, பொருள்	....	இளம்பூரணர்
,, ,,	....	நாவலர் சோம சுந்தர பாரதியார்
,, ,,	....	நச்சினார்க்கினியர்
,, ,,	....	பேராசிரியர்
நற்றிணை	....	(நற்)
நாலடியார்	....	(நாலடி)

நெடுநல்வாடை	....	(நெடுநல்)
பட்டினப்பாலை	....	(பட்டினம்)
பண்டை நாளைச் சேரமன்னர்	...	(பண். சே. ம)
பதிற்றுப்பத்து	....	(பதிற்)
பரிபாடல்	....	(பரி)
பழமொழி நானூறு	....	(பழ)
புறநானூறு	....	(புறம்)
புறப்பொருள் வெண்பா மாலை	....	(பு. வெ. மா.)
பெரிய திருமொழி	....	(பெரி. திரு)
பெருங்கதை	....	(பெருங்)
பெருந்தொகை	....	(பெருந்)
பெரும் பாணாற்றுப்படை	....	(பெரும்)
பொருநராற்றுப்படை	....	(பொருந)
மணிமேகலை	....	(மணி)
மதுரைக்காஞ்சி	....	(மதுரை)
மலைபடுகடாம்	....	(மலைபடு)
முருகாற்றுப்படை	....	(முருகு)
முல்லைப்பாட்டு	....	(முல்லை)
யாப்பருங்கல விருத்தி	....	(யா. வி.)

Author of the Periplus of the Erythrean sea—
(Translation by M. Crindle)

Annual Reports on Madras Epigraphy (A.R)
Comparative Grammar of the Dravidian Languages—
Rev. Caldwell

Don Juan—Lord Byron

Early History of India—V. Smith

Epigraphica Indica - vol. XVII
Eugenics and Sex Relation for men and women—
Dr. M. H. Frank

Foreign Notices of South India—K. A. Nilakanta Sastri

History of the Tamils—P. T. S. Ayyangar

Muruga Pakshi Sastra—Hamsa Deva

Pandiya Kingdom—K. A. Nilakanta Sastri

Pudukkottah State Inscriptions
South Indian Inscriptions Vol.- II, V, VII (S.I.I.)
Travancore Archeological Ser es (T. A.'S.)

பாரதம் பாடிய பெருந்தேவனுர்

பாடிய

கடவுள் வாழ்த்து

உலகெலாம் பரவி நிலவும் உயர் மொழியினும் உயர் தனிச் செம்மொழி யென யாம் பரவும் தமிழ்மொழிக் கண், சங்க மருவிய நூல்களுள் எட்டுத்தொகை யெனத் தொகுக்கப் பெற்றவற்றுள் ஒன்றெனத் திகழ்வது இவ்வைங்குறுநூறு ; இது நின்று நிலவவும், ஆன்ருேர் மரபு இஃதெனக் காட்டவும், ஏனை நூல்களுட் செய்தாங்கு, ஆசிரியர் பாரதம் பாடிய பெருந்தேவனுர், இக்கடவுள் வாழ்த்தினைப் பாடிச் சேர்த்துள்ளார்.

பாரதம் பாடிய பெருந்தேவனுர் என்ற பெயர், தமிழில் முதல் முதலாகப் பாரதக் கதையைப் பாடியவர் இப்பெருந் தேவனுர் என்பதைக் காட்டுகிறது. கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் தெள்ளா றெறிந்த நந்திவன்ம பல்லவன் ஆட்சி செய்தபோது பெருந் தேவனுர் ஒருவர் தோன்றிப் பாரதக் கதையை வெண்பாவாகப் பாடினுர் ; அந்நூலின் ஒரு பகுதி அச்சாகி வெளிவந்துள்ளது. தொல்காப்பியம் முதலிய தொன்னூல்கட்கு உரை எழுதிய சான்ருேர்களால் பாரத வரலாறு குறிக்கும் வெண்பாக்கள் பல காட்டப்படுகின்றன. அவற்றுட் சில பாரத வெண்பாவிலும் பழைமையுடையனவாய்க் காணப்படுவது கொண்டு, பல்லவர் காலப் பெருந்தேவனுர்க்கு முன்னே ஒரு பாரதம் பாடியவர் இருந்திருக்கவேண்டும் என்று கருதுவோர் உளராயினர். அவரே

சங்கத் தொகை நூல்கட்குக் கடவுள் வாழ்த்துப் பாடிச் சேர்த்திருப்பர் என்பது அவர்கள் கருத்து. பல்லவர்காலப் பெருத் தேவனுர் பாட்டையும், பழம் பாட்டுக்களோடு சங்கத் தொகை நூற் கடவுள் வாழ்த்துப் பாட்டுக்களைச் சேரக்கொண்டு அவற்றையும் ஒப்ப நோக்குமிடத்து, பாரதம் பாடிய பெருந்தேவனுர் இருவர் வாழ்ந்துள்ளனர் என்பது வலியுறுகிறது. அதனுல், இத்தொகை நூற்கண் கடவுள் வாழ்த்துப் பாடிச்சேர்த்த சான்ரேர் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டிற்கு முன்னே வாழ்ந்தவர் என்பது தெளிவாகிறது.

கடவுள் வாழ்த்துப் பாடும் மரபு ஒன்று முன்னுளில் இருந்ததென்ற குறிப்பு, தொல்காப்பியத்தும் காணப்படுகிறது; எனினும், அதனை நூலின் தொடக்கத்தே வைத்தல் வேண்டுமென்ற விதியில்லை; அதற்குத் தொல்காப்பியமே தக்க சான்று பகர்கிறது; அதனேடு, சங்க காலத்தை அடுத்து நிற்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற நூலாசிரியர்கள் காலத்தும் இவ்விதி இருந்ததில்லை. திருக்குறள், சிலப்பதிகாரம் என்ற இரண்டின் தொடக்கத்தில் காணப்படும் வாழ்த்துக்கள் தொல்காப்பியம் காட்டும் வாழ்த்துவகையில் அடங்குகின்றனவேயன்றி, ஒரு குறிப்பிட்ட விதிவழி வந்தவை என்பதற்கு இடமில்லை. சங்கத் தொகைநூல்களுள்ளும் கலித்தொகையும் பத்துப்பாட்டும் கடவுளைப் பாடும் பாட்டுக்களை நூலின் தொடக்கமாகக் கொண்டுள்ளன. ஆயினும், ஒரு நூலுக்குத் தொடக்கமாய்த் தாம் செய்யும் கடவுட் பாட்டு இருத்தல் வேண்டுமென்ற குறிக்கோளுடன் அவற்றின் ஆசிரியர்களால் அப்பாட்டுக்கள் பாடப்பட்டன என்று கருதுதற்கும் அவை இடந்தரவில்லை.

'செய்யப்படும் ஒவ்வொரு நூலும் கடவுள் வாழ்த்து ஒன்றைத் தொடக்கத்தில் கொண்டிருத்தல் தக்கது; அது நூற்கு முன்னர் நிறுத்தப்படும் பாயிரத்துள் முதலில் இருத்தல் சிறப்பு' என்ரெரு முறை பிற்காலத்தே தோன்றிற்று; அதுவே "வணக்கம் அதிகாரம் என்றிரண்டுஞ் செப்பச், சிறப்பென்னும் பாயிரமாம்" எனப் பின்னர் விதியுருவாக வந்துளது.

இவ்விதிமுறை கி. பி. நான்காம் நூற்ருண்டவராகக் கருதப் படும் திருமூலர் காலத்தில் நடைமுறையில் இருந்திருக்கிறது. அக்காலத்தில் தமிழகத்தில் இருந்து சமயப் பணிபுரிந்த சான்ரேர் பலராலும் இவ்விதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது கண்டு சான்ரேரான பாரதம் பாடிய பெருந்தேவஞர், சங்கத் தொகை நூல்களுள், கடவுள் வாழ்த்து இல்லாதவற்றிற்கு அதனைப் பாடிச் சேர்ப்பாராயினர். ஆகவே, அவரது காலமும் கி. பி. நான்கு ஐந்தாம் நூற்ருண்டாகலாம்.

பெருந்தேவஞர் என்ற பெயர் சங்ககாலத்தும் இடைக்காலப் பல்லவ சோழ பாண்டியர் காலத்தும் மக்களிடையே பெரிதும் வழங்கி வந்துள்ளது. விசயநகர வேந்தர் ஆட்சிக்காலம் தொடங்கியே வடமொழிப்பட்ட கடவுட் பெயர்கள் மக்களிடையே மிகவும் வழங்குவனவாயின. இப்போது அரசியலார் வெளி யிட்டுள்ள கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் இதற்குச் சிறந்த சான்ருகும். இப்பெருந்தேவஞர் பாரதம் பாடியவர் என்ற குறிப் பொன்று தவிர வேறே யாதும் இவரைப்பற்றிக்கூற இடமில்லே. இவர் பாடிச் சேர்த்துள்ள பாட்டுக்கள் பலவும் சிவநெறியில் இயங்குதலால் இவர் சிவநெறியினர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்நூலிலுள்ள கடவுள் வாழ்த்தில், மூவுலகும் முறையே தோன்றி நிலவும் திருவடிகளையுடைய சிவபரம் பொருளை வணங்கு கின்ருர், ஏனை மக்களுயிரும் அது செய்து உய்தற்பொருட்டு.

நேரிசை யாசிரியப்பா

நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே.

இது வாழ்த்துக் கூறியது; வாழ்த்து வணக்கம் பொருளியல்பு உரைத்தல் என்ற வாழ்த்து வகை மூன்றனுள், இது பொருளியல் புரைத்தல்.

உரை ; நீலநிறமான திருமேனியையும் வாலிய இழையினையுமுடைய உமைநங்கையைத் தன் கூருகவுடைய ஒப்பற்ற சிவபெருமானுடைய இரண்டாகிய திருவடி நிழற்கீழ் மூவகை யுலகும் முறையே தோன்றி நிலவுவவாயின. ஆகலின், யாமும் அவ்வுலகருள் முதல்வனை வணங்கி அவனது தாணிழல் வாழ்க்கையைப் பெறுவேமாக என்றவாறு.

உம்மை, முற்றும்மை. வாலிழை, அன்மொழித்தொகை. வாலிழை, வாலிய இழை ; இது முத்துமாலையுமாம். நீலமேனிக்கட் கிடந்து ஒளிசெய்யும் பேரணிகலனுகலின், வாலிழை எனப்பட்டது. மூவகை யுலகமாவன விண், மண், பாதலம் என்பன. உலகுகள் நூற்றெருரு கோடியின் மேற்பட விரிந்தனவாயினும், மேல், கீழ், நடு என வகையால் மூன்ரு யடங்குதலின், மூவகை யுலகும் என்ருர். முகிழ்த்தல், தோன்றுதல். முறையாவது பாதலத்து வாழும் உயிர்கள் தாம் செய்த நல்வினைப்பயனை நுகர்தற்கு மண்ணுலகும், மண்ணுலகத் துயிர்கள் அது செய்தற்கு விண்ணுலகும் தோன்றிய முறை யென்ப.

'' மலைபல வளர்தரு புவியிடை மறைதரு வழிமலி மனிதர்கள், நிலைமலி சுரர் முதல் உலகுகள் நிலைபெறுவகை நினைவொடு மிகும் .... அரன்[1] '' என ஞானசம்பந்தப் பிள்ளையார் கூறியருளியது காண்க.

இனி, '' பரம்பொருளினின்றும் ஆகாயந் தோன்றி, அதனினின்றும் காற்றுத் தோன்றி. அதனினின்றும் தீத்தோன்றி, அதனினின்றும் நீர் தோன்றி, அதனினின்றும் நிலம் தோன்றிற்று என வேதங் கூறிற்று '' என்பர் சிலர். இவர்க்கு, '' நீராகி நிலம் படைத்தனை, நெருப்பாகி நீர் பயந்தனை, ஊரொழுவிற் காற்றெழுவினை, ஒளிகாட்டு வெளி காட்டினை[2] '' என்பது சான்ருகும். இதுவே '' மூவகை யுலகும் முகிழ்த்த முறை '' யென்ப.

---

1. ஞான சம். 21. 2. 2. தொல். பொ. 458. பேரா. மேற்

இனி, சிவஞான பாடியப் பேராசிரியரான சிவஞான முனிவர், இவ்வாறு, பவுட்கராகமம், தைத்தீரியம் முதலிய உபநிடதங்கள் கூறினவாயினும், அவை தம்முள் மாறுபடுவனபோலக் கூறுகின்றமையின் இம்முறை ஒருசார் மதம் என்றும், இது காரண காரிய இயல்பாராய்ச்சியில் பொருந்துமாறில்லை யென்றும், இவ் வேதாகம வாக்கியங்கள் முரணுவன போலத் தோன்றினும் அவற்றின் வன்மை மென்மை நோக்கித் தாற்பரியங் கோடல் வேண்டும் என்றுங் கூறுவர். அன்றியும், அவர். ''ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்புவும, அப்புவினின்று புடவியும் தோன்றும் என்பார்க்கு, காரியத்தின் குணம் காரணத்தினும் உண்டென்பது நியமமாகலின், புடவிக்குள்ள ஐந்து குணமும் காரணமென்ற புனலுக்கும் உளவாதல் வேண்டும்; வேண்டவே, அம்முறைபற்றித் தேயு வாயு வாகாயங்களும் ஐந்து குணம் உடையவாதல் வேண்டும். அஃதின்மையான், அவர் மதம் போலி யென்று ஒழிக'' என்பர். எனவே, இம்முறை தோற்றமுறை அன்றென்பது பெறப்படும். மற்று இம்முறையே தோன்றிய உலகு ஒடுங்குதற்குரியது என்பது, ''இருநிலனது புனலிடை மடிதர எரிபுக வெரியதுமிகு, பெருவளியினில் அவிதர வளிகெட வியனில முழுவது கெட, இருவர் களுடல் பொறையொடுதிரி யெழிலுரு வுடை யவன்[1]'' எனத் திருஞான சம்பந்தர் கூறியவாற்ருன் அறியப்படும். ஆசிரியர் பேராசிரியர்க்கும் இதுவே கருத்தென்பது. ''*நிலந்தீ நீர்வளி*[2]'' என்ற சூத்திரத்து உரை விளக்கத்தின்கண் எழுப்பும் கடாவிடைகளால் உணரப்படும்.

இக் கூறியவாற்ருல் உயிர்கள் செய்யும் வினைக்கீடாக இன்ப துன்பங்களை வரைந்து கொடுப்பான், பரமன் மூவகை யுலகும் தன் திருவடி நீழற்கண் முறையே முகிழ்வித்தான் என்பது முடிபாம். அகத்தில், ''தாவில் தாணிழல் தவிர்ந்தன்ருல் உலகே'' எனத் தங்குதல் கூறலின், ஈண்டுத் தோற்றம் கூறுவார், முகிழ்த்தல் கூறினர்.

---

1. ஞான. சம். 22. 7.   2. தொல். பொ. 644.

''பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று'' என்று புறத்திற் கூறினாராகலின், அவ்வுரு நலனை விளங்கக் கூறுவார், ஈண்டு மேனியும் இழையும் விதந்து, நீலமேனி வாலிழை பாகத்து என்றார். எனினும், இருவேறு உருவினன் அல்லன் என்றற்கு ஒருவன் என்றும் கூறினர். அவ்வொருவன் தாள்நிழல் மூவகையுலகும் முகிழ்த்தற்கு இடமா மெனவே, அவன் உலகருள் முதல்வன் என்பது கூறினாராயிற்று. ''சேர்ந்தோள் உமையே'' என அகத்திற் கூறினமையின் உமை நங்கை என்பது வருவித்து உரைக்கப்பட்டது.

உயர்ந்தோர் அருள்பெற்று வாழ்வாரை, யானே பெறுகவன் தாணிழல் வாழ்க்கை[1] என்றலும், அவ்வுயர்ந்தோர் உயர்வினை அவர் தாண்மேல் ஏற்றிக் கூறுதலும் சான்றோர் மரபாகலின் இருதாள் நிழற்கீழ், மூவகையுலகும் முகிழ்த்தன முறையே என்றார். ''வலத்தற் காலையாயினும், புரத்தல் வல்லன் வாழ்கவன் தாளே[2]'' எனவரும் ஔவையார் பாட்டால் இம்மரபு தெளியப்படும். உற்றாரைத் தாங்கலும் அவர்தம் அறியாமையினை உடைத்தெறிந்து அருளுதலும் என்ற இருவகையருள் நிலையமாகலின், அந்நயம் தோன்ற இருதாள் என்றார். ''உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்[3]'' எனச் சான்றோர் சுட்டியவாறு காண்க.

மூவகையுலகும் முறைமையில் திரிதலும் கெடுதலும் இன்றி, முகிழ்த்தல் கருதி மலைமகளைப் பரமன் மணந்து அவள் கூறனாயின மையின், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் எனச் சிறப்பித்தார். ''மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே'' என அவற்றின் வினையாற் கூறினாரேனும், முளைத்தற்றெழில் வித்தின்கண்ண தாயினும் அதற்கு ஆதாரமாகிய குளிர்ந்த நிலம் இல்வழிப் பயன் படாதவாறு போல, மூவகையுலகும் ஆதாரமாகிய இறைவன் அருளை இன்றியமையா என்றற்கு, இருதாள் நிழற் கீழ் என்றார். ''சிவன்றாள் பலபல சீவனு மாகும்[4]'' எனச் சான்றோரும் இக் கருத்துத் தோன்றக் கூறியது காண்க. அற்றேல், ஆதாரமாகிய

---

1. புறம். 379. 2. புறம். 103. 3. முருகு. 4.
4. திருமந். 1622.

இறைவன், அருளை நிலைக்களனாகக் கூறுது, இருதாள் நிழற்கீழ் எனக் கூறியது என்னையெனின், உலகு முகிழ்த்தற்கு நிலைக்களன் மாயை என்பதும், அது தானும் தனக்கு ஆதாரமாகிய இறைவன் அருளின்கண் ஒடுங்குவ தென்பதும் உணர்த்துதற்கென உணர்க. முகிழ்த்தன எனத் தலைமை பற்றிக் கூறினமையின், ஏனை நிலைபேறும், ஒடுக்கமும் அத்தாணிழற் கீழன என்றே கொள்க.

இத்துணையும் கூறியவாற்ருற் பயன், இம் மூவகை உலகின் கண்ணும் வாழ்வார்க்கு அத்தாள்கள் நீழல் செய்து வீட்டின்பம் பயத்தல் என்க. எனவே, இது, பொருளியல்பு உரைத்தலாய், படர்க்கைப் பரவற்கண் பிறர்க்குப் பயன்பட வாழ்த்தியதாம் என்க.

எனவே, உயிர்கள் வணங்கிப் பெறுவதோர் ஆக்கம் உணர்த்தப்பட்டமையும், அதன்பயனாக வியப்பு என்னும் மெய்ப்பாடு தோன்றினமையும் பெற்ரும். ''புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே[1]'' என்பது விதி. இவ் வாக்கமும் தன்கண் தோன்றியதும், பிறபொருளின்கண் தோன்றியதும் என இருவகைத்தாகலின், இது பெரும் பான்மையும் பிற பொருளின்கண் தோன்றிய ஆக்கம் பற்றிப் பிறந்த வியப்பு எனக்கொள்க பயன் : வாழ்த்து.

இனி, இஃது ஈற்றயலடி முச்சீரினையுடையதாய், மூவடிகளால் இயன்ற நேரிசை யாசிரியப்பா என்க ''ஈற்றயலடியே ஆசிரிய மருங்கின், தோற்றம் முச்சீர்த் தாகு மென்ப[2]'' என்றும், ''ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை, ஆயிரமாகும் இழிபுமூன் றடியே[3]'' என்றும் வருவன இலக்கணம் என்க.

இனி, ''மாஅமேனி'' யென்றும்; ''மாமலர் மேனி'' யென்றும் பாடமுண்டு. இவற்றிற்கு முறையே கரிய மேனி யென்றும், கரிய குவளைமலர் போலும் மேனி யென்றும் உரைக்க.

---

1. தொல். பொ. 255. 2. தொல். பொ. 380.
3. தொல்காப். 469.

ஆசிரியர் ஓரம்போகியார் பாடிய

மருதம்

செந்தமிழ் நிலத்துக்குரிய அகப்பொருள் நெறியிற் கூறப்படும் திணைவகை ஐந்தனுள் மருதம் என்பது ஒன்று. இது மருதத் திணையென வழங்கும். ஆசிரியர் தொல்காப்பியர் இம் மருதத்தை ''வேந்தன் மேய தீம்புனல் உலகம்'' எனச் சிறப்பித்துரைப்பர். எனவே, நீர் வளஞ் சிறந்த வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதம் என்பதாம். இதற்குப் பொழுது விடியற்காலம். இங்கு வாழ்பவர் உழுதும் உழுவித்தும் வாழும் வேளாண் பெருமக்கள்; செந் நெல்லும், வெண் நெல்லும் அவர்கட்குரிய உணவுப்பொருள். எருமை நீர்நாய் முதலியன இங்கே வாழும் விலங்குகள்; வஞ்சி, காஞ்சி, மருதம் முதலிய மரங்களும், தாரா, நீர்க்கோழி முதலிய புள்ளினமும் இங்கே காணப்படும். உழுதல், நடுதல், களைகட்டல் முதலியன இத்திணையில் நடைபெறும் தொழில்கள். தாமரை கழுநீர் முதலியவை இந் நிலத்திற் சிறந்து மலரும் பூ வகைகள். யாற்றுநீரும் மனைக்கிணறும் பொய்கையும் பிறவும் நீர் நிலைகள். மணமுழவும் நெல்லரிகிணையும் மருதயாழும் இத்திணைக்குரிய பறையும் யாழ்வகையுமாம். மக்கள் வாழும் பகுதிகள் மோகூர், செல்லூர், பழவூர், புத்தூர் என்றாற்போல ஊர் என்று பெயர் பெறும்.

''வேந்தன் மேய தீம்புனல் உலகம்'' என்று இம்மருதம் கூறப்படுவதால், இங்குள்ளவர்க்கு வழிபடு கடவுள் வேந்தன்

என்பது பெறப்படும். வேந்தன் என்றது இந்திரன் எனத் தொல் காப்பியவுரை கூறுகிறது. குடிகள் செய்யும் வினை வகைகளை யறிந்து முறை செய்யும் அரசனும், உயிர்கள் செய்யும் வினைவகை யையறிந்து முறை செய்யும் இறைவனும் வேந்தன் எனப்படற்கு இயைபு உண்மையின், மருதநிலத்துக் கடவுள் வழிபாட்டில் விண்ணக இந்திர விழவும் மண்ணக அரசவாழ்த்தும் பிறவும் காணப்படும். ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திணைக்குரிய உரிப்பொருள்.

இம் மருதம் பொருளாக இந்நூற்கண் காணப்படும் நூறு பாட்டுகளையும் பாடியவர் ஓரம்போகியார். இவர் பாடியினவாக, இம் மருதப்பாட்டுக்களின் வேருக அகநானூறு, குறுந்தொகை நற்றிணையென்ற தொகைநூல்களிலும் சில பாட்டுக்கள் உள்ளன.

ஓரம்போகியார் என்பது இவரது இயற்பெயர். இவர் ஆதன் அவினி யென்னும் சேரமன்னன் ஆதரவு பெற்றவர். வட கொங்கு நாட்டில் காணப்படும் அவினியாறு[1] இவன் பெயரால் வெட்டப் பட்டது போலத் தோன்றுகிறது. இவர் ஏனைச் சோழநாடு பாண்டி நாடுகளில் விளங்கிய பேரூர்கள் பலவற்றைக் கண்டிருக்கின்ருர் ; அந்நாடுகளில் வாழ்ந்த குறுநில மன்னர்களான மத்தி, விரான் முதலாயினுரால் சிறப்பிக்கப் பெற்றுள்ளார். பாண்டிநாட்டுத் தேனுரை, ''வேனிலாயினும் தண்புனலொழுகும் தேனூர்'' என்றும், விராலிமலைப் பகுதியில் வாழ்ந்த விராஅன் என்பவ னுடைய இருப்பையூரை, ''விண்டு வன்ன வெண்ணெற் போர்வின் கைவண் விராஅன் இருப்பை என்றும், சோழர்க்குரிய ஆமூரை, ''பகல்கொள் விளக்கோடு இராநாள் அறியா, வெல் போர்ச் சோழர் ஆமூர்'' என்றும், மத்தியினது கழாரை, ''கை வண் மத்தி கழார்'' என்றும் பாராட்டிக் கூறுகின்ருர்.

''விழையா வுள்ளம் விழையு மாயினும், என்றும் கேட்டவை தோட்டியாக மீட்டு ஆங்கு, அறனும் பொருளும் வழா அமை

1. A. R. NO. 96. of 1906.

நாடித், தற்றகவுடைமை நோக்கி மற்றதன், பின்னு கும்மே முன்னியது முடித்தல், அனைய பெரியோர் ஒழுக்கம்'' என்று பெரியோரது ஒழுக்கம் கூறுவதும், மனையறம் புரியும் மகளிர் தம் கணவனொடு புலத்தல் ஒல்லாது என்பதற்குப் புலந்தவழி, ''செய்யோள் நீங்கச் சில்பதம் கொழித்துத், தாமட்டுண்டு தமியராகித், தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப, வைகுந ராகுதல் அறிந்தும், அறியார் அம்ம அஃது உடலுமோரே'' என்பதும், தலைவனது புறத் தொழுக்கத்தை மனங் கொள்ளாது அவனை வரவேற்ற தலைவியை, ''யாயாகியளே விழவு முதலாட்டி'' என்றும், அவள் ''ஊரன் கொடுமை கரந்தன ளாகலின் நாணிய வருமே'' என வியந்தும் கூறுவதும் ஓரம்போகியாரது புலமை ஆழத்தை இனிது புலப்படுத்துகின்றன.

எருமை பகன்றை சூடிச் செருக்கிவரும் காட்சியைப் ''போர் செறி மள்ளரிப் புகுதரும்'' என்பதும், நண்டு சினைபயக்குங் காலத்தில் இறக்கும் என்பதும், முதலை தன் பார்ப்பினையே தின்னும் என்பதும், யாமையின் இளம் பார்ப்புத் தன் தாய்முகம் நோக்கி வளரும் என்பதும், யாற்றுநீர், கூதிர்க்காலத்தில் கலங்கியும்' வேனிற் காலத்தில் தெளிந்தும் இருக்குமென்பதும், யானை கவளம் உண்ணுங்கால் பரிக்கோற்காரால் சினமூட்டப்படின், அக்கவளத்தை வாயிலிடாது தன் மெய்யில் திமிரும் என்பதும் பிறவும் இவர் காட்டும் இயற்கைக் காட்சிகளாகும். மகளிர் தைந்நீராடலும், போர்க்களத்தில் வீரர் தமது வாட்படை வளைந்து விடின், அங்கே வீழ்ந்து கிடக்கும் களிற்றின் கோட்டிடைப் படுத்து நிமிர்த்துதலும் பிறவும் இவர் காட்டும் புலமைக்காட்சிகள். இவையும் இவை போல்வன பிறவும் இனிவரும் பாட்டுக்களிற் காணலாம்.

1

வேட்கைப்பத்து

இஃது, அகனைந்திணையிடத்து அன்பு நெறியின் பாற்படும் களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கத்திலும், ஒழுகிப் போந்த தலைமகன், தான் அவ்வொழுக்கத்திற் பிரிந்துறைந்த ஞான்று, தலைமகளும் தோழியும் ஒழுகிய திறம் வேட்டு, தோழியொடு சொல்லாடி வினவியவழி, தோழி, தலைமகளின் வேட்கைத்திறமும் தன் வேட்கைத் திறமும் கூறுதற் பொருளாக வரும் பாட்டுக் களின் தொகுதி; ஆகலின் இஃது இப்பெயர் பெறுவதாயிற்று. இதனுள், முதல் ஐந்து பாட்டுக்கள் கற்பினும், ஏனையைந்தும் களவினும் நிகழ்ந்தனவாம்.

வேட்கையாவது, பொருள்கண்மேற் செல்லுகின்ற பற்றுள்ளம். ஈண்டு, அஃது அப்பற்றுள்ளத்தால் நிகழ்ந்த ஒழுக்கத்தின் மேற்று.

ஈண்டுக் கூற்றுநிகழ்த்துவோள் தலைமகளது மனையகம் புகுந்து தகுவன உரைக்கும் உரிமையினை யுடைய வாயில்களுள் தலையாய வளாகிய தோழி யாகலின், அவ்வாயில்களால் கூறப்படுதற்குரிய தலைமகள் மாண்புகளைக் கூறுகின்ருள் என அறிக. மாண்பு களாவன, ''கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும், மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின், விருந்து புறந்தருதலும்

சுற்றம் ஓம்பலும், பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்,[1] '' என வருதலாலறிக. இச் சூத்திரத்தில் '' பிறவும் அன்ன '' என்றதனால், அரசர்க்கு வெற்றியும், உலகுயிர்கட்கு மழையும் அறமும் போல்வன விழைதலும் கொள்ளப்படும்.

1. வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாண ரூரன் வாழ்க
பாணனும் வாழ்க வென வேட்டேமே.

புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி, '' இது தகாது, '' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு, தலைவியொடு கூடி ஒழுகா நின்ற தலைமகன் தோழியொடு சொல்லாடி '' யான் அவ் வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது ?'' என்றாற்கு அவள் சொல்லியது.

பழைய உரை: '' காவற்பொருட்டு அரசன் வாழ்க; விருந் தாற்றுதற் பொருட்டு நெற்பல பொலிக; இரவலர்க்கு ஈதற் பொருட்டுப் பொன் மிகவுண்டாகுக '' என யாய் இல்லறத்திற்கு வேண்டுவனவே விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள்; அவள் இத்தன்மையளாக, நீ ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும், நின்னொழுக்கத்திற்குத் துணையாகிய பாணனுக்கும் தீங்குவரு மென்று அஞ்சி, யாணரூரன் வாழ்க பாணனும் வாழ்க என விரும்பினேம் யாங்கள் என்றவாறு.

தலைவியை யாய் என்றது புலத்தற்குக் காரணமாயின உளவாக வும், அவை மனங்கொள்ளாத சிறப்பை நோக்கி, தோழி யாங்கள் என உளப்படுத்தது ஆயத்தாரை நோக்கி யெனக் கொள்க. பூவும்

---

1. தொல். பொ. 152.

புலாலும் ஒக்க விளையும் ஊரன் என்றது, குலமகளிரைப்போலப் பொதுமகளிரையும் ஒப்பக் கொண்டொழுகுவான் என்பதாம். ஆதனவினி என்பான் சேரமான்களிற் பாட்டுடைத் தலைவன்.

உரை : ஆதன் வாழ்க; அவன் குடியிற் பிறந்த அவினி வாழ்க; நெல் மிக்கு விளைக; பொன் மிகவுண்டாகுக என்று தலைவி இல்லறமே நினைந்தொழுகினளாக. யாங்கள் பூக்களை நிறையவுடைய காஞ்சியும், சினைகளையுடைய சிறுமீன்களுமுடைய ஊரன் வாழ்க; அவற்கு வாயிலாகும் பாண்மகனும் வாழ்க என்று விரும்பியுறைந்தேம் என்றவாறு.

அவினி யென்பான் சேரமான்களில் ஒருவன். ஆதன் என்பது சேரமன்னருட் சிலருடைய குடிப்பெயர். ''எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல், ஆதன் எழினி[1]'' என்றும், ''அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்[2]'' என்றும் வருவன காண்க. பல பொலிக என்புழிப் பன்மை மிகுதிப்பொருட்டு. வேட்டாள் என்னும் முற்றுவினை ''ஆவோ வாகும் செய்யு ளுள்ளே[3]'' என்றதனால் வேட்டோள் என நின்றது. ஏகாரங்கள் யாமே என்புழிப் பிரி நிலையும், யாயே என்புழித் தேற்றமும் ஏனையவிடத்து அசை நிலையுமாம். நனைய, சினைய என நின்ற குறிப்புப் பெயரெச்சங்கள் முறையே காஞ்சியும் மீனும் கொண்டன. யாணர், புதுமை. பாணனும் என்புழி உம்மை இறந்தது தழீஇயிற்று. இனி, ஊரன் என்பதனை அண்மை விளியாக்கி, நீ யென்னும் எழுவாய் வருவித்து உரைத்தலுமொன்று; அதனாற் சொற்கிடக்கை முறைக் கேற்பப் பொருள்நலம் சிறவாமையறிக.

தலைமகன் புறத்தொழுக்கம் பூண்டொழுகுதலால், தலைமகள் புலத்தற்குரிய காரணம் பல வுளவாகவும், அவன் சோர்பு காக்கும் கடப்பாட்டினால் அவற்றை மனங்கொள்ளாத சிறப்புக் கருதித் தலைமகளை, யாய் என்றாள். யாமே எனப் பன்மை வாய்பாட்டாற் கூறியது, ஆயத்தாரையும் உளப்படுத்தற்கு.

---

1. அகம். 216. 2. புறம். 71. 3. தொல். சொல். 211.

அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், அரசர் முதலா யினாரை இன்னவாறு வழிபடுக எனக் கணவன் முதலாயினார் கற்பித்தவாற்றால் வழிபடுதல் கற்பாகலின், வாழி ஆதன் வாழி அவினி யென்றும், இல்லிருந்து நல்லறம் புரிவார்க்கு விருந் தோம்பல் தலையாய அறமாகலின், அது செய்தற்கு, நெற்பல பொலிக என்றும், தங்கண் வந்து இரந்தார்க்குப் பொன் முதலாயின கொடுத்து இசைநடுதல் இல்வாழ்வின் பயனாதல் குறித்து, பொன் பெரிது சிறக்க என்றும் தலைமகள் வேட்டாள் என்றாள். "அருந்திற லாசர் முறைசெயி னல்லது, பெரும் பெயர்ப் பெண்டிற்குக் கற்புச் சிறவாது[1]" என்றும், "மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித், தன்னகர் விழையக்கூடின், அது மன் பொருள்[2]" என்றும் சான்றோர் கூறுமாற்றால் இவற்றை வேட்டல் தலைமகட்கு அறமாதல் அறிக. இது புரையறந்தெளிதல்.

இனி, யாமே என்பது முதல் தோழி கூற்று. இல்லறமே நினைந்தொழுகும் தலைமகளின் மாண்பு கருதாது பொது மகளிரையும் அவளோடு ஒப்பக்கொண்டு புறத்தே ஒழுகும் தலைமகன் அவளைப் பிரியேனெனச் கூறிய சூளுறவு பொய்த்தலால் வரும் ஏதம் ஆய்ந்து, அஃது உண்டாகாவாறு யாணரூரன் வாழ்க என்றும், அவ்வாறு பொய்த்தற்கு வாயிலாய் நிற்கும் பாணனும் பொய்யனாதற்கு இரங்கி, பாணனும் வாழ்க என்றும் வேட்டேம் என்றாள். பழைய வுரைக்காரருக்கும் இதுவே கருத்தாதல் அறிக. இது தெய்வ மஞ்சலின் பாற்படும். இம்மெய்ப்பாடு தலைமகட்கே யுரித்தாயினும், "ஒன்றித் தோன்றும் தோழி மேன[3]" என்னும் விதியினால் சிறுபான்மை தோழியிடத்தும் தோன்றும் என்ப மேலே, தோழி கூற்றுக்களுள் மெய்ப்பாடு தோன்ற வருவன வற்றிற்கும் இதுவே இலக்கணமாகக் கொள்க. இது தோழியிடைத் தோன்றிய முன்னிலைப் புறமொழி. "முன்னிலைப் புறமொழி யெல்லா வாயிற்கும், பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்[4]" என்பது இலக்கணம். இது, "பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின்[5]" என்ற சூத்திரத்து, "பிரியுங்காலை எதிர்நின்று

---

1. சிலப். 28 : 207–8. 2. கலி. 8. 3. தொல். பொ. 39.
4. ஷை. ஷை. 167. 5. ஷை. ஷை. 150.

சாற்றிய, மரபுடை யெதிரும் உளப்படப் பிறவும்'' ''பிறவும்'' என்றதனுல், பிரிந்து ஒழுகிப் போந்த தலைமகற்குத் தோழி முன்பு நிகழ்ந்தது கூறும் பொருளதாகலின், தலைமகள் மாண்புகளையும், தன் செயல்களையும் வகுத்துக் கூறினுள். கூறுமிடத்துத் தலைமகனை வாழ்த்துதல் வழுவாயினும், ஏதமஞ்சி, மங்கல மொழியால் வாழ்க என்றது, ''மங்கள மொழியும் வைஇய மொழியும், மாறி லாண்மையிற் சொல்லிய மொழியும், கூறியன் மருங்கிற் கொள்ளு மென்ப[1]'' என்பதனுல் அமையும் என அறிக.

தலைமகளையும் பொதுமகளிரையும் தலைமகன் ஒப்பக் கருதி யொழுகுகின்ருன் என்பதனை உள்ளுறையாற் கூறினமையின் வெளிப்படக் கூறிற்றிலள். காஞ்சியின் பூவும், மீனின் சினையும் ஒப்ப விளையும் ஊரன் என்றதனுல் குலமகளிரையும் பொதுமகளிரை யும், ஒப்பக் கருதுகின்ருன் என உள்ளுறை யுவமம் கொள்ளப்படும்.

உள்ளுறை யுவமமாவது, ஏனை வெளிப்படை யுவமம் போலாது, உணர்த்தற்கரிதாய், களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளின் கண்ணும், வினை பயன் மெய் உரு பிறப்பு என்னும் ஐவகை நிலக்களனுடைத்தாய், தெய்வ மொழிந்த கருப்பொருளே பற்றிச் சான்ருேர் செய்யுட்கண் வரும் உவமவகை. ''பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி, முன்னை மரபிற் கூறுங் காலைத், துணிவொடு வரூஉந் துணிவினேர் கொளினே[2]'' என்றும், ''தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின், வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும், பிறப்பினும் வரூஉந் திறத்தியல் என்ப[3]'' என்றும் வருவனவற்ருல் இவ்வியல்பினை அறிந்து கொள்க. அன்றியும், ''உடனுறை யுவமம் சுட்டு நகை சிறப்பெனக், கெடலரு மரப்பின உள்ளுறை யைந்தே[4]'' என்பதனுல், இஃது ஐவகைப்படு மென்றும், ''இனிதுறு கிளவியும், துனியுறு கிளவி யும், உவம மருங்கின் தோன்று மென்ப[5]'' என்றதனுல் இஃது இன்பதும் துன்பமும் தோன்றச் சொல்லப்படுமென்றும் பிறவும்

---

1. தொல். பொ. 244. 2. ஷை. ஷை. 208 3. ஷை. ஷை. 300
4. ஷை ஷை 242. 5. ஷை ஷை.

கூறுப. ஈண்டுக் காஞ்சியின் நனையும், மீனின் சினையும் தம் நிலமாகிய மருத நிலக் கருப்பொருள்க ளாதலால், அவற்றைக் கொண்டு, இவற்றை ஒப்பவுடைய ஊரனுவே, குலமகளிரையும் பொதுமகளிரையும் ஒப்பக் கொண்டொழுகுகின்ருனெனத் துனியுறு கிளவி தோன்றச் சிறப்பு என்னும் வகையால் தோழி கூறினுள் என்றுணர்க. இனி வருமிடங்களில் இவ்வகையினை ஓர்ந்துகொள்க.

இதனுள், ஆதனவினியை வாழ்த்தியது கற்பும், நெல்லும் பொன்னும் வேட்டது நற்பாலொழுக்கமும் என்ற மாண்புகள் என அறிக. பழியொடு வாராத நற்செயல் புரிந்தமையால், மெய்ப்பாடு: தன்கண் தோன்றிய இசைமை பொருளாகப் பிறந்த பெருமிதம். ''கல்வி தறுகண் இசைமை கொடையெனச், சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே[1]'' என்பது விதி. இதனுற் பயன்: ஆற்றி யிருந்தமை கூறல். (1)

2. வாழி யாதன் வாழி யவினி
விளைக வயலே வருக விரவலர்
எனவேட் டோளே யாயே யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்த னிகர்க்குந்
தண்டுறை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்க வெனவேட்டேமே.

இதுவுமது.

ப. உரை: தலைவி இல்லறமே நினைந்து ஒழுகினுள்; யாங்கள் நின் காதல் அவள்மேற் சுருங்குகின்ற திறம் நோக்கி, ''நின் கேண்மை வழிவழிச் சிறக்க'' என விரும்பினேம் எ. று.

சிறப்புடைய கருங்குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்க்கும் ஊரன் என்றது, குலமகளிருடனே பொதுமகளிர் இகலும் ஊரன் எ. று.

---

1. தொல். பொ. 253.

உரை : ஆதனவினி வாழ்க என்றும், வயல் மிக்கு விளேக என்றும், இரவலர் பலநும் வருக என்றும் தலேமகள் இல்லத்திற்கு வேண்டுவனவே நினேந்து ஒழுகினளேயன்றிப் பிறிதொன்றும் நினேத்திலன் ; யாங்கள் பலவாகிய இதழ்களேயுடைய கருங்குவளே யுடன் நெய்தல்கள் ஒப்ப மலரும் தண்ணிய துறையினேயுடைய ஊரனது நட்புப் பிறப்புத்தோறும் இடையருது சிறக்குமாக என விரும்பி ஒழுகினேம் எ. று.

என வென்பது முன்னும் கூட்டப்பட்டது. ''என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி, ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே[1]'' என்பது விதி. நெய்தல்கள் நெய்தற்றிணேக்கே யுரியனவாயினும், ''எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாராவாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும்[2]'' என்றதனுல் மருதத்துக்கும் உரியவாயின. பல்லிதழ் என்றவிடத்து, பல வென்பது இதழ் எனப் பிரிந்து வந்தமையின், அகரம் கெட்டு, ''குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்[3]'' என்றதனுல் லகரம் இருட்டித்து, பல்லிதழ் என முடிந்தது. ''தொடர லிறுதி தம்முற் ரும்வரின், லகரம் றகரவொற்ருதலு முரித்தே[4]'' என்புழி, அருத்தாபத்தி முகத்தால் அகரம் கெடுமென்பது கொள்ளப்படும். நீலமொடு என்புழி, ஒடு, அதனேடியைந்த வேறுவினேக் கிளவி. கேண்மை, கேளாய் ஒழுகுந்தன்மை. வழிவழிச் சிறக்க என ஒற்றுமிகுதல் இலக்கணமாயினும் ஒன்றின்றியும் பாடம் வருதலும் உண்டு. ''பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து[5]'' என ஆசிரியர் தொல்காப்பியஞர் கூறியதனுலு மறிக.

அறமும் இன்பமும் எய்துதற்குரிய பொருள் வருவாயாகலின், விளேக வயலே என்றும், புகழ்வளர்ச்சிக் குரிய ஈகைக்கு இட மாதலின், வருக இரவலர் என்றும் வேட்டாள். இது விருந்து புறந்தருதலும் சுற்றந்தழாலும் இசைவளர்த்தலும் கூறிற்று.

---

1. தொல். தொல். 284. 2. ஷை. பொ. 19. 3. ஷை. எழுத்து. 160.
4. ஷை. ஷை. 214. 5. தொல். ஷை. 242.

தலைமகன் புறத்தொழுக்க முடையனுகலின், அவன் காதல் பொதுமகளிர்பாற் செல்லுமுகத்தால் தலைமகள்பால் சுருங்குதல் கண்டு, அது நிகழாமை குறித்து, ஊரன் கேண்மை வழிவழிச் சிறக்க எனத் தோழி வேட்டாள். 'உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்[1]'' என்பதனுல், தோழி உரனுடையளாய் அவன் கேண்மை சிறக்க வேண்டுதல் அமையும் என்க.

பலவாகிய இதழ்களாற் சிறப்படைய நீலத்தோடு நெய்தல் நிகர்க்கு மூரன் என்றதனுல், குலமகளிரொடு பொதுமகளிர் நிகர்க்கு முகத்தால் இகலி யொழுகுவர் என உள்ளுறை கொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை. (2)

3. வாழி யாதன் வாழி யவினி
பால்பல வூறுக பகடுபல சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
வித்திய வுழவர் நெல்லொடு பெயரும்
பூக்கஞு லூரன் றன்மனை
வாழ்க்கை பொலிக வெனவேட் டேமே.

இதுவுமது.

ப. உரை: தலைவி இல்லறமே நினைந்தொழுகினுள்; அவன் பொதுமனையில் வாழ்க்கை யொழிந்து தன்மனையிலே வாழ்வானுக என வேட்டேம் யாங்கள். எ. று. மேல் விளைதற்கு வித்திய வுழவர் முன்பு விளைந்த செறுவின் நெல்லொடு பெயருமென்றது பின்வரும் பரத்தையர்க்கு வருவாய் பண்ணி அக்காலத்து உளராகிய பரத்தை யரோடு இன்பம் நுகர்வான் என்பதாம்.

உரை: ஆதனவினி வாழ்க என்றும், ஆனிரைகள் பால்வளம் சுரக்க என்றும், எருமைகள் பலமிகுக என்றும் தலைவி இல்லறமே நினைந்து ஒழுகினுளாக, யாங்கள் பின் விளைவு வேண்டி விதைத் தற்குச் சென்ற உழவர் முன்னே விளைந்து முதிர்ந்துள்ள நெல்லைக்

---

1. தொல். பொ. 239.

கொண்டு மீளும் பூக்கள் நிறைந்த ஊரன், புறத்தொழுக்கம் தவிர்ந்து தன்மனையிலே இருந்து விளங்குவானாக என விரும்பி யொழுகி வந்தேம். எ. று.

சிறிதாகிய நீரைச் சின்னீர் என்பது போலப் பாலின் மிகுதி பல எனப்பட்டது. பகடு, எருமை; எருதிற்கும் யானைக்குமாம். வித்திய என்றும், பெயரும் என்றும் வந்த எச்சவினைகட்கு ஏற்புடைய சொற்கள் வருவிக்கப்பட்டன. கஞலுதல் — நிறைதல். உழவர் பெயரும் ஊரன், பூக்கஞலூரன் என இயைக்க. வித்திய சென்ற உழவர் நெல்லொடு பெயர்வர் என்னும் இக்கருத்து, ''அரிகான் மாறிய அங்கண் அகன்வயல், மறுகா லுழுத ஈரச் செறுவின், வித்தொடு சென்ற வட்டி பற்பல, மீனொடு பெயரும் யாண ரூர[1]'' என்பதனை நினைப்பித்து நிற்றல் காண்க.

பொருளும் உழவுத்தொழிலும் மிகுவதற்குப், பாலும் பகடும் வேண்டினாள். பாலின் பெருக்கம் விருந்தோம்புதற்கும், பகடு அழிவில் செல்வத்து ஆக்கத்திற்கும் என்க. பகடு என்றதனை யானை என்று கொள்ளின், ஈட்டிய ஒண்பொருளை இரவலர்க்கீந்து இசை நடுதற்பொருட்டுப் பகடு வேண்டப்பட்ட தென்றுமாம். எனவே, விருந்தோம்புதற்குப் பால் வேட்டாற்போல, கொடைக் கடன் இறுத்தற்குப் பகடுவேட்டாள் என்க. உள்ளுறையால் தலைமகனதுபுறத்தொழுக்கத்தால் வருங் குற்றம் தலைவியின் ஒழுக்கத் தால் மறையினும் வாழ்க்கை பொலிவுறாமை கூறுதலின், அவ்வாறு ஆகாமை வேண்டி, ஊரன் தன் மனைவாழ்க்கை பொலிக என்று வேட்டேம் எனத் தோழி கூறினாள். ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனும் அது[2]'' என்புழிக் கூறும் பயன் தலைவி வேட்டலால் ஒருவாற்றான் எய்தினும், புறத்தொழுக்கத்தால் பண்பாகிய அன்பு குறையின், அவ்வறம் கடைபோகா தென்பது உட்கொண்டு கூறினாளுமாம். ''பெறற்கரும் பெரும்பொருள்[3]'' என்ற சூத்திரத்துட் கூறும், '' நீத்த கிழவனை நிகழுமாறு படீஇக், காத்த தன்மையிற் கண்ணின்று'' பெயர்க்கும் கடப்பாடுடையளாகலின், தோழி இவ்வாறு கூறினாள் என அறிக.

---

1. நற். 210. 2. குறள். 45. 3. தொல். பொ. 150.

விளைவு கருதி வித்திய உழவர் விளைந்து முதிர்ந்துள்ள நெல்லைக்கொண்டு பெயரும் ஊரன் என்றதனால், தலைமகன் பின்வரும் பரத்தையர்க்கு வேண்டுவன புரிந்து அக்காலத்து நுகர்ச்சிக்குச் சமைந்துள்ள பரத்தையரைக் கூடி ஒழுகுகின்றான் என உள்ளுறை கொள்க. இனி, விளைவு வேண்டி விதைத்த உழவர், அவ்வாறே விளைந்த நெல்லைக்கொண்டு பெயரும் ஊரனாயினும், இல்லறப் பயனை வேண்டி இவளை மணந்த பின், அது பெருமை ஒழுகியது என்னை என இறைச்சி தோற்றியவாறும் காண்க. ''இறைச்சி தானே பொருட்புறத் ததுவே[1]'' என்பது விதி. இல்லறப்பயன், ''காமஞ் சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல்[2]'' என்ப. நெல்லொடு பேரும் என்று பாடமாயின், வியர்த்தல், வேர்த்தல் என வருதல் போல, பெயர்தல் பேர்தல் என வந்ததாம். மெய்ப்பாடும் பயனும் அவை. (3)

4. வாழி யாதன் வாழி யவினி
பகைவர் புல்லார்க பார்ப்பா ரோதுக
எனவேட் டோளே யாயே யாமே
பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற்
கழனி யூரன் மார்பு
பழன மாகற்க வென வேட்டேமே.

இதுவுமது.

ப. உரை: இவள் இல்லறமே விரும்பி ஒழுகினாள்; அவன் மார்பு ஊரவர்க்கெல்லாம் பொதுவாகிய பழனம் போலாது இவட்கே உரித்தாக என விரும்பினேம் யாங்கள் எ. று. பூத்துப் பயன்படாக் கரும்பினையும் காய்த்துப் பயன்படும் நெல்லினையு முடைய ஊரன் என்றது ஈன்று பயன்படாப் பொதுமகளிரையும், மகப்பயந்து பயன்படும் குலமகளிரையும் ஒப்ப நினைப்பான் எ. று.

---

1. தொல். பொ. 229. 2. தொல். பொ. 192.

உரை : ஆதனவினி வாழ்க என்றும், பகைவர் தம் பெருமிதம் இழந்து புல்லரிசிச் சோறுண்க என்றும், பார்ப்பார் மறை ஓதுக என்றும் தலைமகள் இல்லறத்திற்கு வேண்டுவனவே நினைந்து ஒழுகினளாக, யாங்கள், பூத்து விளங்கும் கரும்பும் விளைந்து சிறக்கும் நெல்லுமுடைய கழனியூரனது மார்பு எல்லார்க்கும் உரித்தாகிய பழனமாகா தொழிக என வேட்டொழுகினேம் எ. று.

புல், புல்லரிசி. இக் கருத்தே கொண்டு சேனாவரையரும் ''புற்றின்றல் உயர்திணைக்கு இயைபின்று எனப்படாது[1]'' என்றார். பார்ப்பார், வேதியார்; இவர், நன்றும் தீதும் ஆராய்ந்து நோக்கி உறுதி கூறுவார் என்பர் பேராசிரியர். ''அந்தணர் வேள்வியொடு அருமறை முற்றுக[2]'' என்றார் மதிவாணனார்[3]. ''தாறுபடு நெல்'' என்றாற்போலக் காய்த்த நெல் என்றார் என்பது [4]நச்சினார்க்கினியம் கழனி, வயல் பழனம், ஊரவர்க்கெல்லாம் பொதுவாகிய நிலம். ஆகற்க என்பது வியங்கோள் எதிர்மறை. எண்ணும்மை தொக்கது. இன், உருபுதொக நின்ற சாரியை.

உலகு புரக்கும் வேந்தனை வாழ்த்த விரும்பினோர், அவன் பகைவர்கேடும் ஒருவாற்றான் அவற்கு ஆக்கமாம் என்று கருதுப வாகலின், பகைவர் புல்லார்க என்று கூறினள் ''குணமுதல் தோன்றிய ஆரிருள் மதியின். தேய்வன கெடுகநின் தெவ்வ ராக்கம்[5]'' என்று பிறரும் கூறுதல் காண்க. அவ்வாறு பெற்ற ஆக்கம் கிளைத்தற்கும், வேதமோதுதலால் வேள்வி நடப்ப, வானம் பொய்யாது மாமழை பொழிய, விளைபொருள் மிகுதலால் இல் லறம் சிறத்தற்கும், பார்ப்பார் ஓதுக, என வேட்டு நின்றாளாம். இனி, பார்ப்பாரோதி வேட்பித்தலால் அரசன் வாழ்நாள் பெருகுதல் கருதி, பார்ப்பார் ஓதுக என்றாள் என்றுமாம். ''வேந்தன் வேள்வியின் யாண்டுபல வாழ்க'' என்றார் மதி வாணனார். பகைவர் புல்லார்க எனவே, நட்டோர் கிளைஞர் முதலாயினர். அமுதுண்க எனச் சுற்றந் தழாலும் விருந்தோம்பலு

---

1. சொல். 173. உரை. 2. தொல். பொ. 591. உரை
3. சிலப். அடி. மேற். 4. சீவக. 63. உரை. 5. மதுரை.. 195–6,

மாகிய மாண்புகள் கூறியவாறும். தலைமகள் தான் கூடி இன்புறும் தலைவன் மார்பினைப் பரத்தையர் நோக்கினும் பொறுது புலக்கும் பான்மைய ளாதலினாலும், உள்ளுறையால் தலைமகனது புறத் தொழுக்கத்தைக் கூறுகின்றா ளாதலினாலும், ஊரன் மார்பு பழனம் ஆகற்க எனவேட்டேம் என்றாள். ''பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொது உண்பர், நண்ணேன் பரத்தநின் மார்பு[1]'' என்றதனால், தலைமகளின் புலவிப்பான்மை யுணர்க. உள்ளுறை யால் பரத்தையரின் பாடின்மை கூறலின், இதுவும் முன்னையது போல, ''நீத்த கிழவனை நிகழுமாறு படீஇக், காத்த தன்மையிற் கண்ணின்று[2]'' பெயர்த்துக் கூறியது.

இனி, பூத்துப் பயன்படாக் கரும்பினையும், காய்த்துப் பயன் படும் நெல்லினையுமுடைய ஊரன் என்றது, மகப்பயந்து பயன்படும் குலமகளிரையும், அஃதில்லாத பொதுமகளிரையும் ஒப்பக் கருதி ஒழுகுவான் என்றாளாம். பொதுமகளிர் ஈன்று பயன்படா இயல் பினர் என்பதனை, ''அவரும், பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து, நன்றி சான்ற கற்பொடு எம்பா டாதல் அதனினும் அரிதே[3]'' எனவரும் சான்றோர் கூற்றான் அறிக. மெய்ப்பாடும் பயனும் அவை. (:)

5. வாழி யாதன் வாழி யவினி
பசியில் லாகுக பிணிசே ணீங்குக
எனவேட் டோளே யாயே யாமே
முதலைப் போத்து முழுமீ னாருந்
தண்டுறை யூரன் றேரெம்
முன்கடை நிற்க வெனவேட் டேமே.

இதுவுமது.

ப. உரை: இவள் இல்லறமே விரும்பி ஒழுகினாள், யாங்கள் அவன் தேர் பிறமகளிர் முன்கடை நிற்றல் ஒழிந்து எம் முன்கடை நிற்க என விரும்பினேம் எ. று. 'முதலைப் போத்து...... ஊரன்'

1. குறள். 1311. 2. தொல். பொ. 156 3. நற். 330.

என்றது, ஒருங்கு வாழ்வாரைப் பழமை நோக்காது உயிர் கவர்வான் என்பதாம்.

உரை: ஆதனவினி வாழ்க என்றும், பசி இல்லையாகுக என்றும், பிணி நெடிது நீங்குக என்றும் தலைமகள் இல்லறத்திற்கு உரியனவே நினைந் தொழுகினுளாக. யாங்கள் முதலைப் போத்துத் தன்னொடு வாழும் முதிர்ந்த மீன்களை உண்ணும் குளிர்ந்த துறையினையுடைய ஊரனது தேர் பிற மகளிரின் முன்கடை நிற்றல் ஒழிந்து எம்முடைய மனைமுற்றத்தே நிற்க எனை விரும்பினேம் எ. று.

பசியின் உண்மையும், இன்மையும் காரணம் பற்றித் தோன்றுவன வாகலின் ஆக்கங் கூறினர். சேண், சேய்மையிடம். முதலைப் போத்து, முதலையினது போத்து. இளமை சுட்டிய மரபுப் பெயர். ''பிள்ளை குழவி கன்றே போத்தெனக், கொள்ளவும் அமையும் ஓரறிவுயிர்க்கே[1]'' என்புழிக் ''கொள்ளவும் என்ற உம்மையை எச்சப்படுத்தி ஓரறிவுயிர்க்கேயன்றி ஏனையவற்றிற்கும் கொள்ப[2]வாகலின் முதலைக்கும் கொள்ளப்பட்டது. முழுமீன், இனி வளர்ச்சி யில்லையாமாறு முற்ற முதிர்ந்த மீன். பிறமகளிர் முன்கடை என்பது முதலாயின குறிப்பெச்சம்.

பசியும் பிணியும் நல்வாழ்வைச் சீர்குலைப்பன வாயினும், பிணிக்குரிய காரணங்களுட் பசி சிறந்தமையின், பசியில்லாகுக என்றும், பசியின்றியும் சிறுபான்மை பிணியுண்டாதலுண்மையின், பிணி சேண் நீங்குக என்றும் வேட்டாள். பிணி போலாது, எல்லா நன்மையையும் கெடுக்கும் இயல்பிற்றாகலின் பசியை முற்கூறினுள் என்க. தலைமகன் புறத்தொழுக்கத்தால் தலைமகளது

1. தொல். பொ 579.

2. ''ஓரறிவுயிர்க்குக் கொள்ளவும் அமையும் என்னும் உம்மையை எச்சப்படுத்துப் பிறவுழியுங் கொள்ளப்படும்'' என்று கூறி, ''புலிப்போத் தன்ன புல்லணற் காளை'' (பெரும். 138) எனவும், ''பகுவாய் வராஅற் பல்வரி யிரும் போத்து, (அகம். 36) எனவும் இவையும் இளமைக்குறிப்பின'' என்பர் பேராசிரியர்.

மேனி நலம் கெடுதலின், அவன் தேர் தன்மனைக்கட் சென்று நில்லா தாயினும் பரத்தையர் மனைக்கண் நின்ற வழித் தலைமகள் ஆற்றுளாதலின், ஊரன் தேர் எம்முன் கடை நிற்க என வேட்டேம் என்றாள். தமது மனைக்கண் நிற்றலால் தலைமகன் தம்பாற் காதலன் எனக் காட்டித் தலைமகள்முன் தருக்கித் திரியும் பரத்தையர் கண்டு அது தலைமடங்குவராகலின் முன்கடை என இடம் சுட்டினுள் என அறிக.

துறைக்கண் வாழும் முதலைப்போத்து உடனுறையும் முழு மீன்களின் முதுமை கருதாது உண்டொழுகும் ஊரன் என்றதனால், தலைமகன் தன்மனைக்கண் தன்னோடு உடனுறையும் தலைமகளின் தலைமை கருதாது அவள் நலம் கெடுக்கின்றான் எனத் துன்பியுறு கிளவி தோன்ற உள்ளுறுத் துரைத்தவாறு, மெய்ப்பாடும் பயனும் அவை. இவை யைந்தும் கற்பின்கண் நிகழ்ந்தது கூறின. (5)

6. வாழி யாதன் வாழி யவினி
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
எனவேட் டோளே யாயே யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்டுறை யூரன் வரைக
எந்தையுங் கொடுக்க வென வேட்டேமே

களவினிற் பலநாள் ஒழுகிவந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, ''யான் வரையாது ஒழுகுகுன்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம் யாது?'' என்றாற்கு அவள் சொல்லியது.

ப. உரை: நின்னை எதிர்ப்பட்ட அன்றே வரைந்தா யெனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது தலைவி பிறிதொன்றும் நினைத்திலள்; யாங்கள் அகன்ற பொய்கைக்கு அணியாகத் தாமரையையுடைய ஊரனாதலால் அத் தண்டுறையூரன்மனைக்கு அணியாம் வண்ணம் இவளை வரைவானாக,

எந்தையும் கொடுப்பானாக என விரும்பினேம் எ. று. ஈண்டுத் தலைவியை யாய் என்றது எதிர்ப்பட்ட ஞான்றே கற்புப் பூண்டு ஒழுகலுற்று நின்ற சிறப்பு நோக்கி.

உரை: எம்முடைய யாய் நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே நீ வரைந்தாய் என உட்கொண்டு, ஆதனவினி வாழ்க என்றும், வேந்தன் பகைமை யொழிக என்றும், அவன் பல யாண்டுகள் வாழ்க என்றும் தனக்குரிய அறநெறியே வேண்டியொழுகினாள்; அகன்ற பொய்கைக்கண் முகைகள் கொண்ட தாமரையினையுடைய ஊரன் இவளை விரைய வரைவானாக என்றும், அவன் அது வேண்டியவிடத்து எந்தையும் மருது கொடுப்பானாக என்றும் யாங்கள் விரும்பி யொழுகினோம் எ. று.

"நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்[1]" என்பதனால் இவை கற்புக்காலத்து நினைக்கப்பட்டன. பகை தணிதலாவது, பகைமேற் சென்ற வினை ஒழிதல். பகைதணிக என்பன எழுவாயும் பயனிலையுமாய் இயைந்து ஒரு சொல்லாய் வேந்து என்றதற்கு முடிபாயின. வேந்து, உயர்திணைப் பொருண்மைக்கண் வந்த அஃறிணைச்சொல். "உயர்திணை மருங்கின் நிலையின் வாயினும் அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்[2]" என்பது விதி. "மலர்ந்த மார்பு" என்றாற் போல மலர்தல் விரிதல் மேற்று. முகைந்த என்பது முகை யென்னும் பெயரடியாகப்பிறந்த பெயரெச்சவினை. நின்னை யெதிர்ப்பட்ட என்பது முதலாயின குறிப்பெச்சம். எந்தையும் என்புழி உம்மையால், தந்தை மருது மகட்கொடை நேர்தல் பெய்துரைக்கப்பட்டது.

தலைமகனை எதிர்ப்பட்ட ஞான்றே அவன் வரைந்தான் என உட்கொண்டு, ஆண்டுச் செய்தற்குரிய நல்லறமே விரும்பி யொழுகிய தலைமையுடைமையின், தலைமகளை யாய் என்றாள். வேந்து பகைதணியாவழி, பிணம்படு செருவேட்டு எழுதல்லது, மணம்புகு வைகள் நாளையாயினும், அதனை மனங்கொளா மற முடையை யாகலின், வேந்து பகைதணிக என்றும், காதலரைப்

1. தொல். பொ. 43. 2. தொல். சொல். 56.

பிரிந்து ஒரு கருமம் முடிப்பதனின் மிக்க ஆள்வினை இல்லை யென்னும் கருத்துடையையாய்ப் பகைதணிவினை மேற்கொண்ட வழி, அதன்கண் நீ இனிது முற்றி மீள்வாயாக எனவும், அவ்வண்ணம் மீண்டவழிக் கூட்டம் இன்பம் மிகுவித்தலின், யாண்டுபல நந்துக என்றும் வேட்டாள் என்றாள். "வேந்து பகைதணிக" எனவே, "தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மை[1]". கருதித் தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிந்தானாதல் அறிக. இவ்வாறு எதிர்ந்த ஞான்றே வரைந்தாயெனக் கற்புக்கடம் பூண்டாள், புகழ் விரிந்த நின் மனைக்கண் விளக்கெனத் திகழ்ந்து அதனைச் சிறப்பிப்பாளாகலின் வரைக என்றும், இவள் கற்புநிலையும் நின் மறநிலையும் உணராது எந்தை கொடானாயின் வரும் ஏதத்திற்கு அஞ்சி, எந்தையும் கொடுக்க என்றும் வேட்டேம் என்றாள். "ஒண்சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல, மனைக்கு விளக் காயினள் மன்ற[2]" என்றும், "விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியல், சுணங்கனி வனமுலை யவளொடு நாளை. மணம்புகு வைக லாகுதல் ஒன்றோ, ஆரம ருழக்கிய மறங்கிளர் முன்பின், நீளிலை எஃக மறுத்த வுடம்பொடு, வாரா வுலகம் புகுதல் ஒன்றெனப் படைதொட் டனனே[3]" என்றும் வருவன முறையே தலைமகள் மனைக்கு விளக்கெனத் திகழ்தலும் மகட்கொடை மறுப்புழி எய்தும் ஏதமும் உணர்த்துதல் காண்க. "தண்டுறை யூரன் வரைக" என்றதனால் தலைமகள் ஒருதலை யுரிமை வேண்டி நிற்றலும், "எந்தையும் கொடுக்க" என்று கூறவே, "அம்பலும் அலரும் களவு வெளிப்படுக்குமென்று" அஞ்சுதல் முதலியனவும் ஏதுவாகத் தலைமகள் வரைதல் வேட்கையுடைய ளாயினமை தோன்றத் தோழி கூறினாளாம்.

இனி, அகன்ற பொய்கைகண் தாமரை முகைந்தாற் போல, அகன்ற இவ்வூர்க்கண் அலர் எழுந்தமையின், இவளது ஆற்றாமை கண்டு வரைக என்றும், கொண்டு தலைக்கழிதல், மகட்கொடை யுடம்படல் என்பவற்றிற்கு இடையீடுகளாகிய இற்செறிப்பும்,

---

1. தொல். பொ. 41. 2. ஐங். 405. 3. புறம். 341.

வேற்று வரைவு வருதலும் பிறவும் நிகழ்ந்தமையின், எந்தையும் கொடுக்க என வேட்டேம் என்றும் கூறினள் எனினுமாம்.

''வேந்து பகைதணிக'' என்றமையின், தலைமகன் களவின் கண் வரைவு இடைவைத்துப் பிரிந்தவழித் தன்வயின் உரிமையும், அவன்வயிற் பரத்தைமையும் கூறற்பால ளாயினும், ''வாளாண் எதிரும் பிரிவு'' தலைமகற்குக் கடமை யென்பது உட்கொண்டு நின்ற அவளது பொறையுடைமை சிறப்பித்தவாறு.

இனி, ''பெறற்கரும் பெரும் பொருள்[1]'' என்ற சூத்திரத்து ''அற்ற மில்லாக் கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினும்'' என்பதனைக் கிழவோற் சுட்டிய எனப்பாடங்கொண்டு, ஆங்கு நிகழும் கூற்றுக்கு இதனை உதாரணமாக்குவர் இளம்பூரணர். மெய்ப்பாடும் பயனும் அவை. (7)

7. வாழி யாதன் வாழி யவினி
அற நனி சிறக்க அல்லது கெடுக
எனவேட் டோளே யாயே யாமே
உளைப்பூ மருதத் துக்கிளைக் குருகிருக்கும்
தண்டுறை யூரன் றன்னூர்க்
கொண்டனன் செல்க வெனவேட்டேமே.

இதுவுமது

உரை: நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே நீ வரைந்தாய் எனக்கொண்டு, ஆதனவினி வாழ்க என்றும், அறவினை மிக வோங்குக என்றும், அல்லதாகிய பாவம் முற்றவும் கெடுக என்றும் தலைமகள் இல்லறமே வேண்டி யொழுகினளாக, யாங்கள், உளை பொருந்திய பூக்களையுடைய மருதமரத்தில் குருகுகள் தம் கிளை சூழ இருக்கும் குளிர்ந்த துறையினையுடைய ஊரன் இவளைத் தன்னுடன் கொண்டு செல்வானாக என வேண்டி யொழுகினேம் எ. று.

---

1. தொல். பொ. 150.

அறம் அறவினை "அறம் நனிசிறக்க" எனவே, அல்லது முற்றவும் கெடுதல் கொள்ளப்படுவ தாயிற்று. உளைப்பூ, மேலே துய்யினையுடைய பூ; "உளைப்பூ மருதின் ஒள்ளின ரட்டி[1]" என்பதன் உரை காண்க. குருகு, பறவை; ஈண்டுக்கிளிகள் மேற்று; "கிளிவளர் பூமருது[2]" என்றார் தேவரும். இனி, இது நெய்தல் நிலத்துக்கு உரித்தாகக் கூறப்படும் ஒரு பறவை யென்றும், "இதனைக் கொக்கு என்பாரும் நாரை யென்பாரும் அன்னம் என்பாரு முளர்; இப்பெயர் நீர்வாழ் பறவைக் கெல்லாம் பொதுவாய் வருமாயினும், "கொக்கினங்கால் குருகினங்காள்" என வேறுவேறு விளிக்கப்படுதலின், கொக்கு அன்றென்றும் கருங்கால் கூறப்படுதலின் நாரையும் அன்னமும் அன்றென்றும் துணியலாகும்" என்றும், "இது வெண்ணிற முடைமையால் வெள்ளாங்குருகு என்று வழங்கும்" என்றும் கூறுவர். அது கருத்தாயின், "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்[3]" என்பதனால் ஈண்டு அமைத்துக் கொள்க. கிளைக்குருகு இருக்கும் என்பதற்குக் கிளைக்கண் குருகுகள் தங்கியிருக்கும் என்றல் பொருட் சிறப்பெய்தாமை யறிக. கொண்டனன் செல்க என்பது முற்றெச்சத் தொடர்.

எதிர்ப்பட்டபொழுதே வரைந்தாயென உட்கொண்டு கற்பு நெறி நின்றாள், தான் நுகர்தற்குரிய இன்பம் அறத்தானன்றி எய்தாது என்பதனை உணர்ந்துளாள் என்பாள், அறம் நனி சிறக்க என்றும். அறவினையே செய்தொழுகுவாரைப் பாவம் பற்றா தாயினும், பற்றுமாறு பிறர் பழிமொழி கூறினும் அஃது அவரைச் சாராதாகலின், நனி சிறக்க என்றும் வேட்டாள் என்றாள். "அறத்தான் வருவதே இன்பம்[4]" என்றும், "அறனறிந்து ஒழுகும் அங்கணாளனைத் திறனிலார் எடுத்த தீமொழி யெல்லாம், நல்லவை யுட்படக் கெட்டாங்கு[5]" என்றும் சான்றோர் கூறுதல் காண்க. அறவினை செய்யார்க்கு அல்லது செய்யாமை நன்மை பயந்து அறமாய் முடிதலின், அல்லது கெடுக என வேட்டாள் என்றாள். "நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல்

---

1. முருகு. 28, 2. சீவக. 65. 3. தொல். பொ. 19.
4 குறள். 39. 5. கலி. 144.

ஓம்புமின் அதுதான், எல்லாரும் உவப்பது அன்றியும், நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே[1]'' என்ருர் சான்ரேரும். ''அறன் வாழ்த்த நற்காண்ட, விறன் மாந்தரன் விறன்மருக[2]'' எனப் பிறரும் கூறுமாறறிக. இது புரையறந் தெளிதல். இனி இல்லிலிருந்து நல்லின்பம் நுகர்வார்க்குரிய பொருளின்பங்கட்கு அறம் ஏதுவாகலினுலும், அறந்தெரி திகிரியினையுடைய அரசர்க்கும், அல்லது வழியடையாகும் தீது என்ப வாகலினுலும், அறம் நனி சிறக்க என்பதும், அல்லது கெடுக என்பதும் வேண்டப்பட்டன என்றலும் ஒன்று. இனி, களவின்கண் வரைவிடைவைத்துப் பிரிந்துழியும் தலைவி தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமை யும் தோன்ற, உயிராக் காலத்து உயிர்க்கும் இயல்பின ளாயினும், இவள் தகவல்லன நினைந்திலள் என்றற்கு இது கூறினுள் என்றும் கூறுவர். இஃது அவளது நற்பாலொழுக்கம் கூறிற்று.

நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே வரைந்தாய் என உட்கொண்டு, இல்லறத்தின்மேற் சென்ற வேட்கை மிகவுடையவளாய், ஆள் வினைக் குறிப்பால் நீ பிரிவை எனவும், களவு புறத்தார்க்குப் புலனுயின் அம்பலும் அலருமாம் என்று அறிந்தும், தமர் அறிவுற்றுக் காப்பு மிகுவிப்பரென்று அஞ்சியும், பிறவகையான் எய்தற்பாலவாகிய இடையூறு நினைந்தும் வேறுபட்டமையின், யாங்கள் அஞ்சி, ஊரன் தன்னூர்க் கொண்டனன் செல்க என வேட்டேம் என்று கூறினுள். ''ஒருதலை யுரிமைவேண்டியும் மகடூஉப், பிரித லச்ச முண்மை யானும், அம்பலு மலரும் களவு வெளிப் படுக்குமென், றஞ்ச வந்த ஆங்கிரு வகையினும், நோக்கொடு வந்த இடையூறு பொருளினும், போக்கும் வரைவும் மனைவிக்கண் தோன்றும்[3]'' என ஆசிரியர் கூறினர். ''ஒன்றித் தோன்றும் தோழி மேன[4]'' என்பதனுல், தோழி கூறலும் அமையும் என அறிக

மருதமரம் குருகு தங்கியிருத்தற்கு ஆதாரமானுற் போல, இவள் உயிர்வாழ்வதற்கு நீ இன்றியமையாய் என்பது உள்ளுறை.

1. புறம். 195. 2. பதிற். 90. 3. தொல். பொ. 225.
4. தொல். பொ. 39.

"மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே [1]" என்றார் சான்றோரும்; மெய்ப்பாடும் பயனுமவை. (7)

8. வாழி யாதன் வாழி யவினி
அரசுமுறை செய்க களவில் லாகுக
எனவேட் டோளே யாயே யாமே
அலங்குசினை மாஅத் தணிமயி லிருக்கும்
பூக்கஞ லூரன் சூளிவண்
வாய்ப்ப தாக வெனவேட் டேமே.

இதுவுமது

உரை: நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே தலைமகள் கற்புக் கடம் பூண்டு அதற்கு வேண்டுவனவே நினைந்து, ஆதனவினி வாழ்க என்றும், அரசன் முறையினைச் செய்க என்றும், களவு முதலிய குற்றங்கள் நிகழாதொழிக என்றும் வேட்டொழுகினளாக அசைகின்ற தளிர்களையுடைய மாமரத்தின்கண் அழகிய மயில் தங்கியிருக்கும் பூக்கள் நிறைந்த ஊரன், தலைப்பெய்த பொழுது செய்த சூளுறவு இப்பொழுது பொய்யாதொழிக என விரும்பி ஒழுகினேம் எ. று.

முறை செய்தலை "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார் மாட்டும், தேர்ந்து செய்வஃதே முறை[2]" என்பதனால் அறிக. அரசு என்பதற்கு, வேந்து என்புழி உரைத்ததனை உரைத்துக் கொள்க. களவு பிறர்க்கு உரிய தொன்றனை வஞ்சத்தாற் கொள்ளக் கருதுதல். மாமரக்கிளவி, "குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும் அறியத் தோன்றும் அகரக்கிளவி[3]" என்றதனால் அகரம் பெற்று, "அத்தின் அகரம் அகரமுனை யில்லை[4]" என்றதனால் அகரம் கெட்டு, "மாஅத்து" என நின்றது. சினை, ஈண்டுத் தளிர்மேற்று. "அலங்குசினை பொதுளிய நறுவடி மா அத்துப், பொதும்பு[5]" என்றார் பிறரும். சூள், வன்புறையால்

1. குறுந். 139. 1. குறள். 541. 3. தொல். எழுத்து. 226.
4. தொல். எழுத்து. 126. 5, நற். 243.

தெய்வத்தை முன்னிறுத்து ஆணையிட்டுக் கூறல்; ''நாடன், அணங்குடை யருஞ்சூள் தருகுவன்[1]'' என்றும் ''கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக், கடுஞ்சூள் தருகுவன்[2]'' என்றும் வருவன காண்க. ''நிற்றுறந்து அமைகுவ னாயின் எற்றுறந்து, இரவலர் வாரா வைகல், பலவாகுக யான் செலவுறு தகவே[3]'' என்பது போல்வனவும் அச்சூளுறவின் பாற்படும்.

''அருந்திறல் அரசர் முறைசெயி னல்லது, பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவா[4]'' தாகலின், அரசு முறை செய்க என்றும், முறை செய்தற்குரிய ஒள்ளிய அறிவு; களவினால் மழுங்கிப் பொய் கொலைகட்கு ஏதுவாய் அறிவறியாமை பயத்தலின், களவுஇல் லாகுக என்றும் வேட்டாள் என்றாள். ''களவென்னும் காரறிவாண்மை[5]'' என்பதனால் அறிவு அறியாமையாதல் காண்க. இனி, களவு உளதாயவழி, நாட்டில் பொய்யும் கொலையும் மிக்கு அரசுமுறை கோடுதற்கு ஏதுவாமாகலின், களவுஇல் லாகுக என வேட்டாள் எனினுமாம். ''அத்தஞ் செல்வோர் அலறத் தாக்கிக், கைப்பொருள் வௌவும் களவேர் வாழ்க்கைக், கொடியோர் இன்று அவன் கடியுடை வியன் புலம்[6]'' எனக் களவின்மை நாட்டுக்கு அணியாகக் கூறப்படுமாறு காண்க. களவில் லாகுக எனப் பொதுப்படக் கூறினமையின், அன்பின் ஐந்திணைக் களவும் பல வகையான இடையீடுகளால் அழிவில் கூட்டத்து இன்பநுகர்ச்சி யின்றித் தலைமகட்கு அசைவு பிறப்பித்தலின், அஃதும் உட்படக் கூறினாள் என்றும் கூறுவர்; மற்று, களவின்கண் நிகழும் இடையீடுகள் தலைமக்களிடையே எழும் இன்பத்துக்கு ஆக்கமாவன வாகலினாலும். ''கற்பெனப் படுவது களவின் வழித்தே[7]'' என்புழி. இஃது, உலகக் களவன்று, நன்மை பயக்கும் களவு என்று நக்கீரனார் கூறுமாற்றாலும் அது பொருளன்மை அறிக. அரசு முறைசெய்க எனவே, ''ஆள்பவர் கலக்குற அலைபெற்று[8]'' முறை தப்பிய நாட்டினை, அது பிறழாமைக் காத்தற்குத் தலைவன் பிரிந்தமை கொள்க. ''பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்,

---

1. நற். 386. 2. அகம். 110. 3. குறுந். 137.
4. சிலப். 28:207-8. 5. குறள். 287. 6. பெரும்பாண் 39-41
7. இறை. அ. பொ. 15. 8. கலி. 5.

இழைத்த ஒண்பொருண் முடியவும் பிரிவே[1]'' என்பர் ஆசிரியர். களவின்கண், நீ பிரிந்தொழுகிய ஞான்றெல்லாம், யாம் குறிப்பாலும் வெளிப்படையாலும் வரைவு கடாவியும் நீ அக்களவே விரும்பித் தாழ்த்தவிடத்து, தலைமகள் எய்திய வேறுபாடு கண்டு, நீ செய்த சூளுறவினை மறந்தனை கொல்லோ என அஞ்சினேமாகலின், சூள் இவண் வாய்ப்பதாக என வேட்டேம் என்றாள். மெய்ப்பாடும் பயனுமவை. (8)

9. வாழி யாதன் வாழி யவினி
நன்று பெரிது சிறக்க தீதில் லாகுக
எனவேட் டோளே யாயே யாமே
கயலார் நாரை போர்விற் சேக்கும்
தண்டுறை யூரன் கேண்மை
அம்பலா கற்க வெனவேட் டேமே

இதுவுமது

ப. உரை: இன்பம் நுகர்ந்தவன் செல்வமனைக் கண்ணே வைகும் வண்ணம், வரையும் துணையும் அவன் கேண்மை அம்பலாகாதொழிக என விரும்பினேம் யாங்கள் என்பது.

உரை: நின்னை எதிர்ந்தபொழுதே வரைந்தாய் எனக் கொண்டு தலைமகள் இல்லறமே நினைந்து, ஆதனவினி வாழ்க என்றும், நன்று மிகவும் பெருகுக என்றும், தீது சிறிதும் இல்லையாகுக என்றும் வேட்டொழுகினாள்; கயல்மீனை உண்ட நாரை நெற்போர்வின்கண் தங்கும் தண்ணிய துறையினையுடைய ஊரன் நட்பு அம்பலாகாதொழிக என வேட்டேம் யாங்கள் எ. று.

நன்று, இன்பம் பயக்கும் நல்வினை. தீது, துன்பம் பயக்கும் தீவினை. போர்வு. வைக்கோற் போர். ''கயலார் நாரை போர்விற் சேக்கும்[2]'' என்றும், ''பொய்கை நாரை போர்விற் சேக்கும நெய்தலங் கழனி[3]'' என்றும் பிறரும் கூறுவர். கேண்மை,

1. தொல். பொ. 28. 2. புறம். 24. 3. புறம். 209.

கேளாந்தன்மை. அம்பல், ''சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்வது'' என்பர் நக்கீரர்[1].

வாழ்க்கையின் பயன் இன்ப நுகர்ச்சியன்றிப் பிறிதின்மை யின், நன்று பெரிது சிறக்க எனவும், தீதுள தாயவழி இருமையும் கெடுதலின் தீது இல்லாகுக எனவும் வேட்டாள் என்றாள். ''தீது சேண் இகந்து நன்று மிகப்புரிந்து[2]'' என்றார் பிறரும். தம் மனத்து ஒரு கோட்டமுடையார் அப்பெற்றியே பிறரையும் கருதுவது உலகத்துத் தன்மையாகலின், வேறுநின்று தம் செயல் உசாவுவாரைத் தன் செயல் உணர்வாராக உணர்ந்து இவ் வொழுக்கம் இடையீடுபடும் என அஞ்சினளாயினும், வரைவு நீட்டித்துக் களவை வெளிப்படுத்தற்குரிய செயல் தலைவனதாக லின், அம்பலாகற்க என வேட்டேம் என்றாள். ''அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின், அங்கு அதன் முதல்வன் கிழவனாகும்[3]'' என்பது களவியல். அம்பலுக்குப் பொருள் தலைமகளாயினும், அவனது தொடர்பே அதற்குக் காரணமாதல் பற்றிக் கேண்மை ஆம்பல் ஆகற்க என்றாள்; இஃது ஒருவாற்றான் ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணும் பகுதியாமென உணர்க. தலைவியின் வேறன்மையின், தோழியிடைத் தோன்றிற்று.

தலைவியின் நலனுண்டவன் அவளை யுடனே வரைந்து கொள்ள நினையாது வரை விடைவைத்துப் பிரிந்து தன் மனைக்கண்ணே தங்கினான் எனத் தான் அக்காலத்துக் கருதினமை தோன்ற, கயலார் நாரை போர்விற் சேக்கும் என உள்ளுறுத் துரைத்தாள். மெய்ப்பாடும் பயனு மவை. (9)

---

1. ''அம்பல் என்பது சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்வதா யிற்று; .... அலரென்பது இன்னானோடு இன்னாளிடை அதுபோலும் பட்டது என விளங்கச் சொல்லி நிற்பது. அம்பல் என்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலருமென நிற்பது. அலர் என்பது அப்பெரும்போது தாதும் அல்லி யும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமை என வேற்றுமை சொல்லப் பட்டதாம்''— இ. அ. பொ. 22. உரை.

2. பதிற். 22. 3. தொல். பொ. 139.

வாழி யாதன் வாழி யவினி
மாரி வாய்க்க வளநனி சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
பூத்த மா அத்துப் புலாலஞ் சிறுமீன்
தண்டுறை யூரன் றன்னொடு
கொண்டனன் செல்கவென வேட்டேமே

இதுவுமது

ப. உரை: இவள் நின்னை எதிர்பட்ட அன்றே வரைந்தாய் எனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவனவே விரும்பி ஒழுகினுள்; யாங்கள் அவன் வரைந்துகொள்ள நினையானுயின், பூத்த மாவினையும் புலாலஞ்சிறுமீனையுமுடைய ஊரனுதலால், அதற்கேற்ப எம்மூர்க்கண் அறத்தொடுநிலை வகையால் கற்புடைமையும், எதிர்ப்பாட்டினுல் அலரும் கிளேப்பவாயினும் உடன்கொண்டு செல்வானுக என விரும்பினேம் என்பது.

உரை: இவள் நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே வரைந்தாய் என உட்கொண்டு ஆதனவினி வாழ்க என்றும், மழை தப்பாது பொழிக என்றும், வளங்கள் மிக உண்டாகுக என்றும் இல்லறத்திற்கு வேண்டுவனவே விரும்பி ஒழுகினுளாக, யாம் பூத்து மணங்கமழும் மாவினையும் புலால் நாறும் மீனினையுமுடைய குளிர்ந்த துறையினையுடைய ஊரன் இவளைத் தன்னேடு கொண்டுடன் செல்வானுக என வேட்டொழுகினேம் எ. று.

புலால் நாறும் மீன் கூறவே, மாவின் மணம் கமழ்தல் கூறப்பட்டது. வளம், செல்வம்; "பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறீச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்[1]" என்புழிப்போல.

அறமுதல் மூன்றும் பயக்கும் சிறப்புடைமையின், மாரி வாய்க்க என்றும், அது வாய்த்தவழி இடையீடு இன்றிப் பொருளும்

---

1. தொல். பொ. 91.

அறமும் பெருகி இன்பம் மிகுவிக்கு முகத்தால் இல்லறத்திற்கு ஏற்றம் பயத்தலின், வளம் நனிசிறக்க என்றும தலைமகள் வேட்டாள் என்றாள். இவனை வரைந்துகொள்ள நினையாது நீ களவே விரும்பி ஒழுகினமையின், அறத்தொடுநிலையால் கற்புடைமையும், எதிர்ப் பாட்டினால் அலரும் கிளைத்து வருத்தமுறுவிப்பினும் உறுக எனத் துணிந்தேம் என்பாள், தன்னொடு கொண்டனன் செல்க என வேட்டேம் என்றாள். இஃது அக்காலத்துத் தலைவரு விழும நிலை யெடுத் துரைத்தலாம். அறத்தொடுநிலையாவது, '' அறம் என்பது தக்கது; தக்கதனைத் சொல்லி நிற்றல். அல்லதூஉம், பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு, கற்பின்றலை நிற்றல் என்பதூஉமாம்[1] '' என்பர் நக்கீரனார்.

தலைமகன், வரைவு நினையாமையால் காப்புமிகுதி முதலியன நிகழ்தல் கண்டு தலைமகள் மேனி வேறுபட்டாளாகத் தோழி அறத்தொடு நிற்பள். '' காப்புக்கைம்மிக்குக் காமம் பெருகினும், நொதுமலர் வரையும் பருவமாயினும், வரைவெதிர் கொள்ளார் தமரவண் மறுப்பினும், அவன் ஊறு அஞ்சுங் காலமாயினும், அந்நாலிடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ, அறத்தொடு நிற்றல் தோழிக் குரித்தே[2] '' என்பர் இறையனார். மெய்ப்பாடும் பயனுமவை.

---

1. இ அ. பொ. 29. உரை. 2. இ. அ. பொ. 29.

2

வேழப்பத்து

வேழம் மருத நிலத்துச் சிறப்புடைக் கருப்பொருளாய் வரும் பாட்டுக்கள் பத்தினும் பயின்று வருதலின், இஃது இப்பெயரைப் பெறுவதாயிற்று.

இது வேழக்கரும்பு என்றும், கொறுக் கச்சியென்றும் வழங்கும். ''வேழப் பழனத்து நூழிலாட்டோதை எனவரும் மதுரைக்காஞ்சி[1] யடிக்கு ஆசிரியர் நச்சினர்க்கினியரும் வேழம் என்பதற்குக் ''கொறுக்கச்சி'' என்றே உரை கூறினர். இக் காலத்து இதனைக் கொறுக்கந்தட்டு என வழங்குவர். ஆறு குளம் முதலிய நீர் நிலைகளின் கரைகள் நீரால் அலைப்புண்டு வலியழியா வண்ணம், கரைக்குத் திண்மையுண்டாவது குறித்து இதனைப் பேணிவளர்ப்பது தமிழகத்தின் பொது இயல்பு. ''இலையே முறியே[2]'' என்னும் மரபியற் சூத்திரவுரையுள். ஆசிரியர் பேராசிரியர், ''புழற்கா லாம்பல் முதலியனவும் புல்லெனப்பட்டு அடங்கி, அவற்றின் பெயர்பெறும்'' என்றலினலும், ''தூம்புடைத் திரள்கால் ஆம்பல்[3]'' என்றார்போல 'ஓங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்கால்[4]'' என்று இந்நூற்கண் வழங்கப்படுதலி

---

1. 257. 2. தொல். பொ. 642. 3. குறுந். 178.
4. ஐங். 16.

ஞலும், இதுவும் புல் என்னும் வகையில் அடங்கும் என அறிக. கரும்பும் மூங்கிலும் புல் வகையில் அடங்கும்; வேழமும் புல்லே என்று தாவரநூலார் கூறுவர்.

இப்புல்வகை மிகப் பரந்துபட்ட தொன்று; இதன் இயல்பினை ஆராய்ந்த அறிஞர்கள் கூறியுள்ள கருத்துக்களை ஈண்டுத் தருகின்றேம். புல் வகையில் மூவாயிரம், நாலாயிரம் வகைகள் உண்டு. பிரிட்டன் தீவுகளில் மட்டும் நூறுவகைப் புல்லும், அமெரிக்காவில் எண்ணூறு வகைப் புல்லும் உள்ளன எனத் தாவர நூலார் கூறுவர். அமெரிக்கநாட்டுப் புலவர் ஒருவர் புல்வகை இயற்கையன்னை அருளும் அருள்வகை என்றும், உலகில் காடுகளும் விளைபயனும் நறுமலரும் பிறவும் அழிபவும் இப்புல்வகை மட்டில் அழியா என்றும், இவையே நாகரிக வளர்ச்சிக்குத் துணை புரிவன என்றும் கூறினர்.

இனி, ''கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்'' ''பரியுடை நன்மான் பொங்குளை யன்ன, அடைகரை வேழம் வெண்பூப் பகரும், ''புதன்மிசை நுடங்கும் வேழ வெண்பூ, விசும்பாடு குருகின் தோன்றும்'' என்று இந்நூல் கூறுதலால் வேழத்தின் பூ வெண்ணிறத்தது என்பதும், கரும்பினது பூவை நிகர்க்கும் என்பதும், உயரத்தே விரிந்து தோன்றும் இப் பூவின் தோற்றம் குதிரையின் உளைமயிரினையும் விசும்பூடு பறக்கும் குருகினையும் போன்று விளங்கும் என்பதும் பெறப்படும். பிற்காலச் சான்றோர், இந் நெறியேபற்றித் தம் புலமை நலம் தோன்றக் கவியோவியம் தீட்டுவர். கச்சியப்ப முனிவர், ''காலிரு மருங்கு நீண்ட கரைக் கலித் தெழுந்த வேழம், வாலிய பூத்து நிற்கும் வண்ணம் செங் களத்துப் போர்வேட்டு, ஆலிய மன்னர் சேனை அணிவகுத்து உடற்ற ஏந்தும், வேலிருங் கூட்டம் என்ன விளங்குவ இடங்கள் தோறும்[1]'' என்றனர்.

இனி, இது, காம்புகண் டன்ன தூம்புடைமைபற்றி இதன் புழையில் உழவர்மகளிர் அஞ்சனம் பெய்துவைப்பர் என்றும்,

---

1. தணிகைப்பு. திருநாடு. 77.

மூங்கில் போல இவையும் வீடுகட்கு வரிச்சற் பிடித்தற்குப் பயன் படும் என்றும் சான்றோர் கூறுவர். இஃது ''ஓங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்கால், சிறுதொழு மகளிர் அஞ்சனம் பெய்யும் பூக்கஞ லூரன்[1]'' என்றும், ''வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத், தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த, குறியிறைக் குரம்பை[2]'' என்றும் வருவது காண்க. ''புனலாடு மகளிர்க்குப் புணர்துணை உதவும் வேழம்'' என்று இந்நூல் கூறுதல் போல ஆசிரியர் பரணரும், ''வேழ வெண்புணை தழீஇ............ நெருநல் ஆடினை புனலே[3]'' என்று கூறினர். இதனால், நீராடுவார்க்கு வேழம் புணையமைத்துக் கோடற்குப் பயன்படும் என்பதும் அறிக.

11. மனைநடு வயலை வேழஞ் சுற்றுந்
துறைகே ழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே
அல்ல னென்னுமென் றடமென் றோளே.

பாணன் முதலாயினர்க்குத் தலைமகனது கொடுமை கூறி வாயின்மறுத்த தலைமகள், கழறிய பாங்கற்கு வாயில் நேர்வாள் கூறியது. ''தலைவன் எவ்வாறு தப்பி ஒழுகினும் அவன் கொடுமை நின்னாற் புலப்படுதல்தகாது,'' என்று கழறிய பாங்கிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

ப. உரை: மனைக்கண் வயலை புறத்து வேழம் சுற்றும் ஊரன் என்றது, மணமனைக்கண்ணே வைகுஞான்றும் பரத்தையர் திறமே சூழ்வான் என்பதாம்.

உரை: மனைக்கண் நட்ட வயலைக்கொடி சென்று வேழத்தைச் சுற்றிக்கொண்டு வளரும் துறை பொருந்திய ஊரனது கொடுமைக்கு நாணி, நாம் அவனை நல்லன் என்று கூறினே மாயினும், என்னுடைய பெரியவாகிய மெல்லிய தோள்கள்

1. ஐங். 16. 2. பெரும்பாண். 263-5. 3. அகம். 6.

ஆற்றுது தம் மெலிவால் அவன் நல்லனல்லன் எனக் காட்டி நின்றன, காண் எ. று.

வயலை, ஒருவகைக்கொடி. இதனைப் பசலைக்கொடி என்றும், இதன் தழையை வசலைக்கீரை என்றும் கூறுப. இது, வீடுகளில் இதற்கென அமைக்கப்பெற்ற பந்தரில் ஏறிப் படருமாறு நட்டு வளர்க்கப்பெறும்; மனைப்புறத்து நிற்கும் மரங்களிற் சென்று படருமாறு விடப் பெறுதலும் உண்டு. ''குடையடை நீரின் மடையினள் எடுத்த, பந்தர் வயலைப் பந்தெறிந்து ஆடி[1]'' என்றும் ''இல்லெழு வயலை[2]'' என்றும், 'மனைநடு வயலை மரன் இவர் கொழுங்கொடி[3]'' என்றும் சான்றோர் கூறுமாற்றால் அறிக. மேலும், இதன் கொடி செந்நிறத்த தாதல்பற்றி, ''வயலைச் செங்கொடி'' ''வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச், செவ்விரல் சிவந்த[4]'' என இந்நூலுள்ளும் பிறண்டும் கூறப்படும். வயலைக்கொடி மாலை தொடுத்தற்கும் பயன்படும் என்பது இக் காட்டியவாற்றானும், ''வயலையம் பிணையல் வார்ந்த கவாஅன் திதலை யல்குற் குறுமகள்[5]'' என்பதனாலும் உணரப் படும். அன்றியும், இக்கொடியை மகளிரே பேணி வளர்ப்பர் என்பது, ''தெற்றி உலறினும் வயலை வாடினும், நொச்சி மென் சினை வணர்குரல் சாயினும், நின்னினும் மடவள் நனிநின் நயந்த அன்னை,[6]'' ''வரியணி பந்தும் வாடிய வயலையும், மயிலடி யன்ன மாக்குரல் நொச்சியும்,[7]'' ''வயலை, நாடொறும், ... ஆரநீர் ஊட்டிப் புரப்போர், யார்மற்றுப் பெறுகுவை அளியை நீயே[8]'' என உடன்போக்கின்கண் தோழி யரும் தாயரும் புலம்பிக் கூறுவனவற்றால் நன்கு தெளியப்படும். கொடுமை, ஈண்டுக் கோடுந்தன்மை; கோடிய கோல் கொடுங் கோல் எனப்படுதல் போல. உயிரோரன்ன தலைமகட்கே யுரித் தென்று கருதிச் செய்யும் தலையளியை, அச் செந்நெறியினின்றும் நீங்கிப் பரத்தையர்க்குச் செய்து புறத்தொழுகுதல் கோடிய நெறி யாதலின், கொடுமை என்றார் எனவுணர்க. பிறண்டும் இதுவே

1. அகம். 275. 2. நற். 179. 3. அகம். 176. 4. ஐங். 25, 52
5. அகம். 189. 6. ஷி. 259. 7. நற். 305. 8. அகம். 383

உரைத்துக் கொள்க. கொடுமை என்புழிப் பொருட்டுப் பொருள தாகிய குவ்வுருபு தொக்கது. என்றும், பன்மைத் தன்மை வினை முற்று. ஆயினும் என்பது எஞ்சி நின்றது. யாம் என்றது தோழியரையும் உளப்படுத்திற்று. என்னும், படர்க்கை வினை முற்று. தோளைப் பிரித்துக் கூறலின், ஏகாரம் பிரிநிலை. சொல்லா மரபினவாகிய தோள்களைச் சொல்லிய என்றல், ''அவையல பிறவும் நுதலிய நெறியால், சொல்லுநபோலவும் கேட்குநபோல வும், சொல்லியாங்கமையும் என்மனார் புலவர்[1]'' என்பதனல் அமையும். மகளிர்க்குத் தோள் பெருத்தல் இலக்கணமாதலின், தடமென்றேள் எனப்பட்டது. ''அகலல்குல் தோள் கண் என மூவழிப் பெருகி[2]'' என்று பிறரும் கூறுப.

புறத்தொழுக்கத்தின்கண் தலைமகள் பரத்தையர் என்ற இவ ரிடத்து ஊடல் தோன்றின், தலைமகன் வாயில் வேண்டிவிடுதலும் அவர் வாயில் நேர்தலும், மறுத்தலும் மருதத்துக்கே பெரும் பான்மையும் உரிய; ''பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே, நிலத்திரி பின்றஃதென்மனார் புலவர்[3]'' என ஆசிரியர் கூறுதல் காண்க.

தலைமகனது ஒழுக்கத்தில் தவறு நிகழ்ந்துழி, அதனை மறைக்கும் கடப்பாடு குலமகளிர்க்கு உரித்தாகலானும், அதனை மறந்து, அவர்தாமே தலைவரை எள்ளுவராயின், அஃது அவர்க்கே இளி வரவைப் பயக்குமாதலாலும்,, ஊரன்கொடுமை நாணி நல்லன் என்றும் யாமே என்று கூறினள். ''அவன் சோர்பு காத்தல் கடன்[4]'' என்றும், எள்ளின் இளிவாம் என்று எண்ணி அவர் திறம், உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு[5]'' என்றும் ஆசிரியன்மார் கூறுதல் காண்க. யாமே என்றது ஆற்றலால் தலைமகனது கொடுமைமிகுதி உணர நின்றது. அக்கொடுமையால் தான் எய்தும் வேறுபாடு கண்டு ஆற்றாராய்த் தோழியர் அவனது சோர்பு கூறி எள்ளினும், அக்குற்றம் தன்னையே சார்வது கண்டு

---

1. தொல். பொ. 513. 2. கலி. 108. 3. தொல். பொ. 224.
4. ஷை ஷை 174. 5. குறள். 1298.

தலைவி நல்லன் என்றும் யாமே என உளப்படுத்தாள் என அறிக. தடமென்றோள் என்றது, பெருமை உடையவாயினும் அவன் கொடுமையை ஆற்றியிருக்கும் வன்மையுடையவல்ல என்னும் ஏதுவை உட்கொண்டது. தொடிநெகிழ்ந்தோள் என்னுது, பண்டை வனப்பே சுட்டித் தடமென்றாள் என்றது, தொடி நெகிழ்தற்கு ஏதுவாகிய அவன் கொடுமைக்கு நாணி, அதனை அறவே மறந்து, அவனது நன்மைப்பண்பே தன் நெஞ்சில் நிலவப்பண்ணிய அவளது பெண்மைச் சிறப்புக் கூறியவாறெனு அறிக. ' அடங்கா வொழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை. அடங்கங் காட்டுதற்[1] '' பொருட்கண் நெருங்கிக் கூறியார்க்கு அவர் அது கூறுதற்குரிய குற்றம் தோள்மேலதாம் என்பாள், அல்லன் என்னும் என் தடமென்றோள் என்று கூறினுள்.

மனைக்கண் நட்ட வயலை புறத்தே நிற்கின்ற வேழத்தைச் சுற்றும் ஊரன் என்றதனுல், தலைமகன் மணமனை வைகிய ஞான்றும் பரத்தையர் திறமே சூழ்வான் என உள்ளுறுத்து உரைத்தமையின், கொடுமைத் திறத்தை வெளிப்படக் கூருது கொடுமை நாணி என வேறுவாய்பாட்டாற் கூறினுள். கொடுமை அவற்கு மணமனைக் கண்ணேயே தோன்றிற்று என்பதனை அறிந்துவைத்தும், பின்னர் அதுகாரணமாக வேறுபடுதல் அறிந்தார் செயலன்மையின் நாணி என்ருள். எனவே, தான் நாணியவாறே தோள்களும் நாணி அமையாது தொடி நெகிழ்ந்து மெலிந்தன என்பதனைக் குறிப்பு வாய்பாட்டாற் கூறினுள். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்ருமை. ஏனை மெய்ப் பாடு: மருட்கை. பயன்: வாயில் நேர்தல். இவ்வுரை துறை யிரண்டற்கும் ஒக்கும்.

மனைநெடு வயலை என்பது பாடமாயின், மனையில் வளரும் நீண்ட வயலைக்கொடி என உரைக்க. அதனுல் உள்ளுறைப் பொருள் சிறவாமையறிக.

---

1. தொல். பொ. 150.

இனி, இதன்கண் மருதமாகிய முதற்பொருளும் வேழமும் வயலையுமாகிய கருப்பொருளும், வாயிலாய் வந்தார் கேட்பத் தலைமகள் வாயில் நேருங் கருத்தினளாய்க் கூறும் உரிப்பொருளு மாகிய மூன்றும் கண்டு, ஆசிரியர் நச்சினார்க்கினியர், '' இதனுள், முதல், கரு, உரி என்ற மூன்றும் கூறலின் நாடகவழக்கும்[1], தலைமகனைத் தலைவி கொடுமை கூறல் உலகியலாகலின் உலகியல் வழக்கும் உடன்கூறிற்று[2] '' என்பர். '' அவனறிவு ஆற்ற அறியு மாகலின்,[3] '' என்ற சூத்திரத்து, '' கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின், அலமருள் பெருகிய காமத்து மிகுதியும் என்பதற்கு எடுத்துக் காட்டுவர் ஆசிரியர் இளம்பூரணர். மற்று, இப்பாட்டு, அலமருள் பெருகிய காமத்து மிகுதிக்கண் நிகழும் கூற்றாகாது தலைமகன் கொடுமைக்கு அமைதி யுணர்ந்து ஒருமருங்கு அமை தலும், அவன் பிரிவாற்றாமையைத் தோள்மேல் ஏற்றி அமை யாமைக்கு ஏதுகாட்டுதலும் சுட்டிநிற்றலின், அவர் கூறுவது பொருந்தாமையறிக. அமைதற்கட் கூறிய வினைமுதலே அமை யாமைக்குக் கூறப்படாமையின், அலமரலின்மையும் அறிக. அமைதி, கழறிக்கூறும் பான்மையனாகிய பாங்கன் தலைமகனது காமநிலையுரைத்து நெருங்கியவழி நல்லன் என்றும் யாமே என வாயில் நேர்தல். அமையாமை, அவனது பரத்தைமையை மறுத்து. அல்லன் என்னும் என் தடமென்றோளே என உறுப்பின்மேல் வைத்துக் கூறுதல். '' காமநிலை யுரைத்தலும்[4] '' என்ற சூத்திரத்தால் பார்ப்பார்க் குரியவெனக் கூறியன. ஒப்பின் முடித்தல் என்பதனால் பாங்கற்கும் ஏற்பன கொள்ளப்படும் என்பவாகலின், காமநிலையுரைத்தல் பாங்கற்கும் அமையும் என அறிக (11)

---

1. நாடக வழக்காவது, '' உலகத்தோற்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறம் எனக்கருதி அந்நல்லோர்க்குள்ளவற்றிற் சிறிது இல்லனவும் (பெய்து புனைந்துரைவகை யால் சான்றோர்) கூறுதல். ''—நச்சினார்க்கினியம் (தொல். பொ. 53. உரை.)

2. தொல். பொ. 53. உரை. 3. தொல். பொ. 145.

4. தொல். பொ. 177.

12. கரைசேர் வேழங் கரும்பிற் பூக்குந்
துறைகெழு மூரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல யாமே
தோற்க தில்லவென் றடமென் றோளே.

உழையர் நெருங்கிக் கூறியதிறமும் தனது ஆற்றாமையும் நினைந்து வாயில் நேரக் கருதிய தலைமகள், பரத்தையர்க்குப் பின்பும் அவன் சிறப்புச் செய்தான் என்பது கேட்டுப் பொருளாய்க் கருத்தழிந்து தன்னுள்ளே சொல்லியது.

ப. உரை: கரைமருங்கு நிற்கும் வேழம், வயலகத்து விளைக் கும் தீங்கரும்பு போலப் பொலியும் ஊரன் என்றது, பொது மகளிர்க்குக் குலமகளிரைப் போலச் சிறப்புச் செய்கிற்பான் எ. று.

உரை: கரைக்கண் நின்ற வேழம் வயலகத்துக் கரும்பு போலப் பூக்கும் துறை பொருந்திய ஊரனது கொடுமையினை யாம் பெரிதும் ஆற்றியிருப்போமாக. என்னுடைய பெருமையும் மென்மையுமுடைய தோள்கள் ஆற்றாவாய்த் தோற்று மெலிக: தோலாவழி, எம்மைப் போல் ஆற்றியிராது வேறுபாடு மெய்க் கண் நிறுத்தித் துயர்செய்யுமாகலான் எ. று.

முன்னர் நீர்த்துறை கூறுகின்றாராகலின், அதன் கரைக்கண் நிற்கும் வேழத்தைக் கரைசேர் வேழம் என்றார். வயலகத் தென்பது அவாய்நிலை. இன்னுருபு, ஒப்புப்பொருட்டு. கெழு வென்னும் சாரியை "லனஎன வரூஉம் புள்ளி யிறுதிமுன்[1]" வருமாயினும், அச்சூத்திரத்தின்கண், "அன்ன மரபின் மொழி யிடைத் தோன்றி" என்புழி "மொழியிடைத் தோன்றி" என்ற மிகையால், பிற ஈற்று முன்னும் இச்சாரியை வருமென்றும், "அன்னமரபின்" என்றதனால், சாரியை காரணமாக வல்லெழுத்துப் பெறுதலும், அதுகாரணமாக நிலைமொழியீறு திரிதலும், சாரியையது உகரக்கேடும் எகரநீட்சியும் கொள்க"

1. தொல். எழுத்து. இளம். 481.

என்றும் கூறுபவாகலின், ஐகாரவிற்றுத் துறையென்னும் பெயர் முன், வேற்றுமை குறித்த பொருண்மைக்கண், கெழுவன்சாரியை கேழ் எனச் "செய்யுள் தொடர்வயின் மெய் பெற நின்று" கேழ் ஊரன் என முடிந்த வாறறிக. "தீம்பெரும் பொய்கைத் துறைகேழ் ஊரன்[1]" எனப் பிறரும் கூறுதல் காண்க. இனி, ஆசிரியர் அடியார்க்கு நல்லார், "சாரியையாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று, அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பொருள் பயந்ததும் பயவாததுமாய் நிற்பது. அவற்றுள் இது சிறிதுபொருள் பயப்ப நிற்பது; பொருந்துதல் என்னும் பொருண்மை சாரும்[2]" என்பர். எனவே, துறைகேழூரன் என்பது துறை பொருந்தியவூரன் என்னும் பொருண்மைத்து என்பதாம். இனி வருமிடங்களிலும் இதுவே உரைத்துக் கொள்க. "நன்று பெரிதாகும்[3]" தில்லென்னும் இடைச்சொல், "பிறிது அவண் நிலையலும்[4]" என்பதனுல் தில்ல என நின்றது. ஆற்ருமை பயக்கும் வருத்தத்தினை ஆற்றுதல் அதனை வேலலாகலின், ஆற்ருவாகிய தோள்களைத் தோற்கதில்ல என்ருள். ஆற்ருமை மிகுதியால் ஆற்றுமாறு விழைகின்ருளாகலின், ஆற்றுகதில்ல என்புழித் தில்லைச்சொல் விழைவின்கண் வந்த தாயிற்று. "விழைவின் தில்லை தன்னிடத்தியலும்[5]" என்பது விதி. தோலாவழி என்பது முதலாயின ஒழிந்து நின்றமையின், தோற்கதில் என்புழித் தில்லைச்சொல் ஒழியிசைக்கண் வந்ததாம்

தலைமகனது புறத்தொழுக்கத்தால் வேறுபட்டு ஆற்ருளாகிய தலைமகள் உழையர் ஆற்றுந்திறமாவன கூறத் தேறி இருந்தாள். பின்னும் அவன் புறத்தொழுக்கமே விரும்பிப் பரத்தையர்க்குச் சிறப்புச் செய்வது கேட்டுப் பொருது கழியவும் ஆற்ரு ளாயினமையின், நன்றும் ஆற்றுகதில் என்றும், ஆற்றுமிடத்தும் தோள்கள் ஆற்ருது, ஆற்றற்குத் துணியும் நெஞ்சொடு மாறுபட்டு மெலிதலின் தோற்கதில் என்றும் கூறினுள். தலைமகனைப் பிரியாவாறு பிணிக்கும் பெருமையுடையவாயினும், இதுபோது

1. அகம்.336. 2. சிலப்.பதிக.61.உரை. 3. தொல்.சொல் 343.
4. ஷை ஷை 251. 5. ஷை ஷை 260

பிணித்தல் செய்யாது தொடி நெகிழ்ந்து மெலியும் சிறப்பின்மை முடித்தற்குத் தடமென்றேள் என்றுள் என்க. இஃது உடம்பு நனி சுருங்கல். ''கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப், பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்[1]'' என்பதேனல், தலைமகள் அறத்தை விரும்பி ஆற்று வாளாயினள் என்பது, ஊரன் கொடுமை நன்றும் ஆற்றுகதில்ல யாமே என்பதனுல், அறிக. தோற்க தில்லவென் தடமென்றேளே என்றதனுல், ''கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின், அலமரல் பெருகிய காமத்து மிகுதிக்கண்[2]'' உறுப்பினை வேறுபடுத்துக் கூறினுளாம். ஆற்றற்கட் சென்ற நெஞ்சத்துள் அலமரல் தோன்றித் தோளை வேறு பிரித்துச் சிவந்து கூறுவித்தல் அறிக. ''நாளும் நயந்தோர்ப் பிணித்தல் தேற்ரு, வயங்குவினை வாளேர் எல்வளை நெகிழ்த்த, தோளே தோழி தவறுடையவ்வே[3]'' எனப்பிருண்டும் தலைவி தன் தோளை வேறு நிறுத்திச் சிவந்து கூறுமாறு காண்க.

கரைமருங்கு நின்ற வேழம் கரும்புபோலப் பூக்கும் என்றது, பொதுமகளிரும் குலமகளிர்போலச் சிறப்புப் பெறுகின்ருர் எனக் கருத்தழிந்து கூறியதற்குக் காரணம் குறித்தவாறு. இதனுல் தலைமகள்பால் பொருமை என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. ஏனைமெய்ப்பாடு: இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்: வாயில் நேர்தல்.

இனி, பேராசிரியர், பயவுவமப் போலிக்கு இதனை உதாரண மாகக் காட்டி, ''இதனுள் தலைமகன் கொடுமை கூறியதல்லது அக்கொடுமைக்கு ஏதுவாகியது ஒன்று விளங்கக் கூறியதில ளாயி னும், இழிந்த வேழம் உயர்ந்த கரும்புபோலப் பூக்கும் எனவே, அவற்றிற்கும் இழிபு உயர்வு என்பதொன்றில்லை; எல்லாரும் இன்பம் கோடற்குரியர். தலைமகற்கு என்றமையின், யாமும் பரத்தையரும் அவற்கு ஒத்தனம் என்றமையின் அவை கூறினுள் என்பது,[4]'' என்பர்

---

1. தொல். பொ. இளம். 145. 2. ஷை ஷை நச்சி. 147.
3. அகம். 267. 4. தொல். பொ. 300. உரை.

கொடுமை நாணி என்றும் பாடம் உண்டு. இஃது ஏடெழுதினோரால் முன்பாட்டை[1] எழுதிய நினைவினால் நேர்ந்த பிழையாகும் போலும். பேராசிரியர் உரைப்பதிப்பின்கண்ணும் இப்பாடமே காணப்பெறுகின்றமையின் இப்பிழை அவர்காலத்துக்கு முன்பே தோன்றிய தொன்மையுடைமை யறிக. இனி, பிழை யின்மை கருத்தாயின் ஊரன் கொடுமைக்கு நாணி யாம் ஆற்றுவேமாக, தோள்கள் ஆற்றாது மெலிக என்று உரைக்க. (12)

13. பரியுடை நன்மான் பொங்குளை யன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகருந்
தண்டுறை யூரன் பெண்டிர்
துஞ்சூர் யாமத்துந் துயிலறி யலரே.

வாயிலாய்ப் புக்கார்க்குத் தலைமகள், ''அவன் பெண்டிர் நள்ளென்னும் யாமத்தும் துயிலார், அவர் அறியாமல் அவன் வரும்திறம் யாது'' எனச்சொல்லி வாயின்மறுத்தது.

ப. உரை: பரியுடை நன்மான் தலைக்கணிந்த வெண் கவரி போல வேழம் வெண்பூவைக் கொள்வாரைக் குறித்துக் கொடுக்கும் ஊரன் என்றது, நன்றுபோலக் காட்டித் தம் நலத்தினை விற்பார் வாழும் ஊரன் எ. று.

உரை: செலவினையுடைய நல்ல குதிரையின் தலையில் அணிந்த உயர்ந்த சாமரை போலக் கரைக்கண் வளர்ந்த வேழம் வெள்ளிய பூக்களைக் கொடுக்கும் குளிர்ந்த துறையினை யுடைய ஊரன் பெண்டிர். ஊரார் கண்துயிலும் யாமத்திலும் தாம் துயிலுதலை அறியாராகலின், அவன் அவரை அறியாமல் வருந்திறம் யாது? எ. று.

பரி, செலவு; அஃதாவது குதிரையின் நடைவகை. மா, குதிரை. ''னகரம் ஒற்றும் மாவும் ஆவும்[2]'' என்றதனால் மான்

---

1. ஐங். 11. 2. தொல். எழுத்து. 231.

என நின்றது. உளை, குதிரையின் தலையில் அணியும் சாமரை; நெற்றியில் நான்றுகிடந்து உலையும் மயிருமாம். இதனைத் தலையாட்டமென்றும் கூறுப. ''விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்[1]'' எனப் பிறரும் கூறுவர். அடைகரை யென்புழி, அடையும் கரையே யாகலினாலும், அடையாகிய கரையென ஒன்றை ஒன்று சிறப்பித்து நிற்பதனாலும், இஃது இருபெய ரொட்டுப்பண்புத் தொகையாம். ''திணிமணல் அடை கரை அலவன் ஆட்டி[2]'' எனப் பிறருண்டும் வருதல் காண்க. இனி, வரு மிடங்களிலும் இதுவே உரைத்துக் கொள்க. ''கடற்கரை யென் பாரு முளர்'' எனச் சிலப்பதிகார வுரைகாரர் கூறுவர். பூப்பகர்தல், பூக்களைச் சொரிதல். ''குளவியொடு மிடைந்த கூதளங் கண்ணி, அசையா நாற்றம் அசைவளி பகர[3]'' என்புழிப் போலப் பரப்புதல் என்றுமாம். பெண்டிர் என்றது ஈண்டுப் பரத்தையரை. துஞ்சூர், வரையறை இன்மையின் பின் முன்னாகத் தொக்கது; ''மாண் வினைக் கலிமா. துஞ்சூர் யாமத்துத் தெவிட்டல் ஓம்பி[4]'' என்றார் பிறரும். துஞ்சூர் யாமம், ஊர்துஞ்சு யாமம்; அஃதாவது இடை யாமம். உம்மை, சிறப்பு. ஆகலின் அவன் என்பது முதலியன கூற்றெச்சம்; ''சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கைப், புல்லிய கிளவி எச்சமாகும்[5]'' என்பது விதி.

''இனிப் பிரியேன்'' எனத் தன்னைத் தெளிவித்துக் கூடிய தலைமகன், பின்பு பிரிந்து சென்று பெண்டிரைக் கூடினானாகலின், அப்பெற்றியே தம்மிற் பிரிதலை அஞ்சான் எனக்கருதி, அவர்கள் துயிறற்குரிய காலத்தும் துயிறலன்றிக் காத்து வருகின்றனர் என்பாள், ஊரன் பெண்டிர் துஞ்சூர் யாமத்தும் துயிலறியலரே என்றாள். துயிலார் என்னாது துயிலறியலர் என்றது, தலைமகனொடு கூடா முன்பு அவன் கூட்டம் நினைந்தும், கூடியபின்பு மேல் நிகழும் பிரிவு நினைந்தும் துயிலெய்தாமையின், இருவழியும் துயிலுதலை அறியாராயினர் எனத் தான் கருதிய இழிபு முடித்தற்கென்க. எனவே, பகலினும் இரவினும் வரும் பரிசு இல்லானை, உடையான்

1. அகம். 125. 2. அகம். 280. 3. அகம். 272.
4. அகம். 360. 5. தொல். பொ. 518.

போல வருவன் எனக்கூறி வாயில் வேண்டுவது என்னை என வாயின்மறுத்த வாரும். ஆகவே, இஃது ''அவனறிவு ஆற்ற அறியு மாகலின்[1]'' என்ற சூத்திரத்து, ''வாயிலின் வரூஉம் வகை'' என்பதனுல் அமைதல் காண்க.

பரியுடை நன்மானின் உளைபோல அடைகரையில் நின்ற வேழம் மலரும் என்றதனுல், கற்புச் சிறப்பினையுடைய குல மகளிரைப்போல, பரத்தையரும் தாம் நலம் சிறந்தார் போலக் காட்டி நயப்பித்து, நயந்தார்க்கு அதனை நல்குவர் என்ருளாம். வேழ வெண்பூவிற்கு உளை நிறத்தாலும் வடிவாலும் உவமை யாயிற்று. உள்ளுறையுவமம், ''வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும் பிறப்பினும் வரூஉம்[2]'' என்பது மேலே கூறினும். பரியுடை நன்மான் என்றது, குலமகளிரின் கற்புச் சிறப்பு உணர நின்றது. இஃது ஏனையுவமம் போல்வதாயினும் திணையுணர்தற்கண் பயன்படுதலின் தள்ளப்படாதாயிற்று. ''உள் ளுறை யுவமம் ஏனையுவமம் எனத் தள்ளாதாகும் திணையுணர் வகையே[3]''. என்ருர் ஆசிரியரும். ஏனையிடங்களிலும் இப் பொருண்மை யுணர்ந்து இதுவே இலக்கணமாக உரைக்க. மெய்ப்பாடு; வெகுளி, பயன்: வாயின் மறுத்தல்.

புரியுடை நன்மான், புரிவுடை நன்மான் என்றும், துஞ்சும் யாமத்தும் என்றும் பாடங்கள் உ..ண்டு. (13)

14. கொடிப்பூ வேழந் தீண்டி யயல
வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கும்
மணித்துறை யூரன் மார்பே
பனித்துயில் செய்யு மின்சா யற்றே.

தலைமகள் புணர்ச்சி வேட்கையைக் குறிப்பால் உணர்ந்த தோழி, ''அவன்கொடுமை நினையாது அவன் மார்பை நினைந்து ஆற்ருயாகின்றது என்னை'' என்ருளாகத் தலைவி, ''அவன்

---

1. தொல், பொ. 147. 2. ஷை ஷை 300. 3. ஷை ஷை 46.

கொடியனே யாயினும் அவன்மார்பு குளிர்ந்த துயிலைச்செய்யும் இனிய சாயலை யுடைத்து; ஆதலால் காண்'' என்று சொல்லியது.

ப உரை: நீண்ட பூவினையுடைய வேழம் தீண்டுதலான் வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கும் என்றது, பரத்தை யரால் தனக்கு உளவாகிய மெலிவு கூறியவாறு.

உரை: ஒழுகிய பூக்களையுடைய வேழம் தீண்டுதலால் அயலவாகிய வடுநிறைந்த மாமரங்களின் வளவிய தளிர்கள் அசையும் நீல மணிபோல் தெளிந்த நீர்நிறைந்த துறையினை யுடைய ஊரன் கொடியனே யாயினும், அவனது மார்பொன்றே குளிர்ந்த துயிலினைச் செய்யும் இனிய சாயலையுடையதா மாகலின், யான் அது நினைந்ததன்றே ஆற்றேனாயினேன், காண் எ. று.

கொடி ஒழுங்கு. தீண்டியென்னும் செய்தனெச்சம் காரணப் பொருட்டு. வடு, மாவின் முற்றாத காய். மணி, ஆகுபெயரால் நீலமணியின் நிறத்தையுடைய நீர்மேற்று. ''மணிகண் டன்ன துணிகயம் துளங்க[1]'' என்றார் பிறரும். இனி, மணித்துறை என்பதற்கு மணிகள் நிறைந்த நீர்த்துறை என்றும், அம்மணிகள் நீராடினார் அணிகலன்களினின்றும் உக்கன என்றும் கூறுப. ''துகில்சேர் மலர்போல் மணிநீர் நிறைந்தன்று[2]'' என்பதற்குப் பரிமேலழகர் கூறும் உரை காண்க. சாயல் மென்மை[3]''. சாய லென்னும் உரிச்சொல் மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐந்துபொறியானும் நுகரப்படும் மென்மையினை உணர்த்தும் என ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவர். ஈண்டு இஃது ஊற்றாற் பிறக்கும் மென்மைமேற்று; ''அறலென நெறிந்த கூந்தல், உறலின் சாயலோ டொன்றுதல் மறந்தே[4]'' என்பதனாலும் இஃது ஊற்றாற் பிறக்கும் மென்மையைச் சுட்டி நிற்றல் காண்க. கொடியனே என்பது முதலாயின குறிப்பெச்சம். அவனது

---

1. அகம். 56. 2. பரி. 12 : 93. 3. தொல். சொல். நச்சி. 325.
4. அகம். 213.

பொதுத்தன்மையினை விலக்கி, மார்பின் சாயலைச் சிறப்பித்தலின், ஏகாரம் பிறிதின் இயைபு நீக்கிய பிரிநிலை; சாயற்றே என்புழி அசைநிலை.

தலைமகனை இயற்பழிப்பதுபோலக் கொடுமை கூறி விலக்கிய தோழிக்கு, அவன் கொடுமையை உடன்பட்டு, அவன் பிரிவினைத் தான் ஆற்றாமைக்கு ஏது கூறுகின்றாளாகலின், தலைமகள் ஊரன் மார்பே பனித்துயில் செய்யும் இன் சாயற்றே என்று கூறினாள்; எனவே, இஃது அப்பிறிவாற்றாமையால் அவட்கு உறக்கமின்மையும், அவன்மார்பிற் புல்லிக் கிடக்கும் முயக்கத்தின்மேற் சென்ற வேட்கை மிகுதியும் தோன்றக் கூறியவாறும். உறக்கமின்றி வெதும்பிக் கிடப்பார்க்கு அவ்வுறக்கம் குளிர்ச்சியும் இன்பமும் பயத்தலின் அதனைப் பனித்துயில் என்றும், அவன் மார்பினது ஊற்றாற் பிறந்த மென்மை ஏதுவாகப் பிறத்தலின் அதன் வினைப் படுத்து, "பனித்துயில் செய்யும் சாயற்று" என்பாள், குளிர்ச்சியோடு இன்பமும் ஒருங்கு பயத்தல் பற்றி, இன்சாயற்று என்றும் கூறினாள். "குளிரும் பருவத்தே யாயினும் தென்றல், வளியெறியின் மெய்யிற் கினிதாம் - ஒளியிழாய், ஊடி இருப்பினும் ஊரன் நறுமேனி, கூடல் இனிதாம் எனக்கு[1]" எனவரும் மாறன் பொறையனார் பாட்டும், "இனித்தன், சாயன் மார்பிற் பாயல் மாற்றிக், கைதையம் படுசினைக் கடுந்தேர் விலங்கச், செலவரிது என்னும் என்பது[2]" என்பதும் இக்கருத்தினை வலியுறுத்தல் காண்க. இனி, முயங்குந்தொறும் விரிந்து நின்று அயரா இன்பம் அருளும் அழகுடைமையின் இன்சாயற்று என்றாள் என்றுமாம். "யாம், முயங்குதொறும் முயங்குதொறும் முயங்க முகந்துகொண்டு அடக்குவ மன்னோ தோழி .... சாரல் நாடன் சாயல் மார்பே[3]" என்றார் பிறரும். சாயல், அழகு என்னும் பொருட்டாதல், "கண்ணாரும் சாயற் கழி[4]" என்பதன் உரையால் அறியப்படும்.

நீண்ட பூவினையுடைய வேழம் தீண்டுதலால் மாவின் வளவிய தளிர் நுடங்கும் என்றதனால், அவன் மார்பினைப் பரத்தையர்

---

1. ஐந்தி. 30. 2. அகம். 210. 3. அகம். 328. 4. பரி. 11:54.

தீண்டுதலால் பொருது தான் ஆற்ருள் ஆயினமை உணர்த்தி ஞளாம். மெய்ப்பாடு : இளிவரல். பயன் ஆற்ருமை கூறுதல்.

பணித்துயில் என்னும் பாடத்தால் சிறப்புடைய பொருட் பேறின்மை அறிக.

இனி, ''அவனறிவு ஆற்ற அறியு மாகலின்[1]'' என்ற சூத்திரத்துக் ''காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்'' என்புழி இஃது உவத்தல் என்பர் நச்சிஞர்க்கினியர். (14)

15 மணலாடு மலிர் நிறை விரும்பிய வொண்டழைப்
புனலாடு மகளிர்க்குப் புணர் துணை யுதவும்
வேழ மூதூ ரூரன்
ஊர ஞயினு மூரனல் லன்னே.

சேணிடைப் பிரிந்து வந்து உடனுறைகின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகின்றது என்று குறிப்பினல் உணர்ந்து தலைமகள் வேறுபாட்டாளாக தோழி அதனை அறியாது ''அவன் உடனுறையவும் வேறுபடுகின்றது என்னை'' என்ருட்கு அவள் சொல்லியது.

ப. உரை : புனலாடும் மகளிர்க்குப் புணர்ந்த துணையை உதவுகின்ற வேழத்தையுடைய ஊரனுதலால், புனலாடும் பரத்தையர்க்கு வேழம் செய்வனவெல்லாம் செய்வான் என்பதாம்.

உரை : மணலை அலைத்துக் கொண்டு போதரும் நீர்ப் பெருக்கின்கண், விரும்பிய ஒள்ளிய தழையினை உடுத்துப் புனலாடும் மகளிர்க்குப் புணர்துணையினைச் செய்யும் வேழம் நிறைந்த மூதுரினை யுடைய ஊரன் உடனுறைதலால் நம் ஊரினனே யாயி னும், புறத்தொழுகுதலால் அல்லனுயினுன், காண். எ. று.

என்றது, ஊரனுயினும் ஊரனல்லனுய் ஒழுகுதலாற்ருன் யான் ஆற்ருது மேனி வேறுபடுவே னுயினேன் என்பதாம்.

---

1. தொல். பொ. 147.

மணலடு மலிர்நிறை என்பது மணலாடு மலிர்நிறை என நின்றது. மலிர்நிறை, நீர்ப்பெருக்கு; வினைத்தொகை. மலிர்தல், நிறைதலுமாம்; ''இருங்கழி யோதம் இல்லிறந்து மலிர[1]'' என்புழிப்போல. உடுத்தென்பது சொல்லெச்சம்[2]. ''சொல்லெனெச்சம் முன்னும் பின்னும், சொல்லள வல்லது எஞ்சுத லின்றே[3]'' என்றார் ஆசிரியரும். புணர்துணை என்றதற்குப் புணர்ந்த துணை எனப்பழைய வுரைகாரர் கூறியது காண்க. காத லன்பாற் பிணிப்புண்ட மைந்தரும் மகளிரும் கூடி நீராடுமிடத்து ஏனைத் துணைவரின் நீக்கி அவரது துணைமையைச் சிறப்பித்துப் புணர் துணை என்ப. ஈண்டுத் தலைமகன் புணர் துணையாதலைச் சிறப்பித்தது போல, ''புனலாடு புணர் துணை யாயினள் எமக்கே[4]'' எனத் தலைமகளைச் சிறப்பித்திருத்தல் அறிக. ஊரனாதற்கும் ஆகாமைக்கும் உரிய காரணங்கள் வருவிக்கப்பட்டன. உம்மை, எதிர்மறையெச்சமாய் எதிர்மறைமுடிபு கொண்டது; ''எதிர்மறையெச்சம் எதிர்மறை முடிபின[5]'' என்பது விதி.

உள்ளுறையால் அவன் புறத்தொழுக்கம் உடையன் என்பதனைக் குறிக்கின்றாளாகலின், வாளாது ஊரனல்லன் என்றாள். ஊரானாயினும் என்றது தோழி கூறியதனைக் கொண்டு கூறியது. ஆயினும் என்றதனால் ஊரனாகாமையே தலைமகளது உட்கோளாம். இதனாற் பயன், ஒரூர்க்கண் உறையினும் நம்மனைக்கண் வாரான்; ஒரோவழி வரினும், நெஞ்சம் புறத்தொழுக்கத்தின் மேற்றாகலின், இன்பஞ் சிறக்கும் முயக்கமும் செய்யான்; ஆகலின், யாம் வேறுபடுவதல்லது பிறிதில்லை என்பதாம். ''ஒரூர் வாழினும் சேரி

---

1. நற். 117.

2. ''பொருள் உணர்ந்தன்றிச் சொல் வருவித்தல் கூடாது, பொருளுணர்ந்த பின்னர்ச் சொல் வருவித்தலாற் பெறப்படுவதோர் பயனில்லை; ஆதலாற் சொல்லெச்சம் வருவித்தல் வேண்டாவாம், பிற எனின், - சொற்றொடர் உணர்ச்சி சொல்லா னன்றிப் பெறப்படாமையின், ஒரு தலையான் வேண்டும் என்க'' என்பர் மாதவச் சிவஞான முனிவர். (தொல். சூ. விருத்தி).

3. தொல். சொல். 441. 4. ஐங். 72. 5. தொல். சொல். 435.

வாரார், சேரி வரினும் ஆரமுயங்கார், ஏதிலாளர் சுடலை போலக். காணக் கழிப மன்னே[1] '' என்று பிருண்டு நிகழும் தலைவி கூற்றாலும் இப்பொருண்மை துணிக. இஃது உள்ளது உவர்த்தல். '' அவனறிவு ஆற்ற அறியு மாகலின்[2] '' என்ற சூத்திரத்துக் '' கொடுமை யொழுக்கம் தோழிக் குரியவை, வடுவறு சிறப்பின் கற்பில் திரியாமைக், காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும், ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும் '' என்பதனுள் இது காய்தலின் பாற்படும்.

வேழம் புனலாடும் மகளிர்க்கு உதவிபுரிதல் போலத் தலைமகனும் பரத்தையர்க்கு அவர் வேண்டுவன புரிந்து ஒழுகுகின்றான் என்பது உள்ளுறை. வேண்டுவன, பரத்தையரோடு புனலாட்டு முதலிய விளையாட்டயர்தல் விழாவயர்தல் பிரிவின்றிக் கூடியிருத்தல் முதலியன. மெய்ப்பாடும் பயனும் அவை.

மலர்நிறை என்றும், வெண்டழை என்றும் பாடம் உண்டு. '' காவிரி மலிர்நிறை[3] '' '' மலரார் மலிர் நிறை[4] '' என இந் நூலுள்ளும், '' கோடுதோய் மலிர்நிறை[5] '' எனவும் '' மலிர் புனல்[6] '' எனவும் '' கண்பனி மலிர் நிறை தாங்கி[7] '' '' உவலை சூடி யுருத்துவரு மலிர்நிறை[8] '' '' செங்குணக் கொழுகுங் கலுழி மலிர்நிறைக் காவிரியன்றியும்[9] '' எனவும் பிறநூலுள்ளும் பயில வழங்குமாற்றாலும், மலிர்நிறை என்பது நீர்ப்பெருக்கு என்னும் பொருள தாகா தாகலினாலும் அது பாடமன்மை அறிக. புணைதுணையாக என்பது பாடமாயின், புணையாகிய துணை என வுரைக்க. '' நட்புக் கொடுங்கோல் வேழத்துப் புணைதுணையாகப், புனலாடு கேண்மை அனைத்தே[10] '' என்று சான்றோர் கூறுவது காண்க. தழையாவது இளைய மகளிர் அணியும் உடை வகை. இஃது ஆம்பல் நெய்தல் செயலை ஞாழல் முதலியவற்றின் மலராலும் தழையாலும் தொடுக்கப்படுவது என்பதை, '' வயன்மல ராம்பற் கயிலமை நுடங்குதழை[11] '' '' கொடுங்கழை நிவந்த

---

1. குறுந். 231. 2. தொல். பொ. 147. 3. ஐங். 42.
4. ஷை 72. 5. அகம். 166. 6. பரி. 6 : 3. 7. பதிற். 26.
8. ஷை 28. 9. ஷை 50. 10. அகம். 186. 11. ஐங். 72.

நெடுங்கால் நெய்தல் அம்பகை நெறித்தழை,[1]'' ''கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர், சிறுமாண் நெய்தல் ஆம்பலொடு கட்கும்[2]'' ''செயலையம் பகைத்தழை[3]'' ''ஞாழன் மலரின் மகளிர் ஒண்டழை அயருந் துறைவன்[4]'' ''தழையோர் கொய்குழை யரும்பிய குமரி ஞாழல்[5]'' ''தண்ணருங் காவி யம்பகை நெறித்தழை[6]'' என்பனவும் பிறவும் உணர்த்தும். இவை பல்வேறு வண்ணமுடைய வாதல் பற்றிப் பகைத்தழை என வழங்கப்படுதலின், அவற்றுள் ஒன்றனை வரைந்து கொண்டு அதனுல் சிறப்பித்தல் நெறியன்மையாலும், அவ்வாறு சான்ருேர் செய்யுளுள் யாண்டும் வழங்கப்படாமையாலும் வெண்டழை என்பதும் பாடமன்று என உணர்க. (15)

16. ஓங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்காற்
சிறுதொழு மகளி ரஞ்சனம் பெய்யும்
பூக்கஞு லூரனை யுள்ளிப்
பூப்போ லுண்கண் பொன்போர்த் தனவே

வாயிலாய்ப் புகுந்தார்க்குத் தோழி, ''அவன் வரவையே நினைந்து இவள் கண்ணும் பசந்தன; இனி அவன் வந்து பெறுவது என்னை?'' எனச் சொல்லி வாயின் மறுத்தது.

ப. உரை: ஓங்குபூ .... பூக்கஞு லூரன் என்றது இழிந்தார்க்குப் பயன்படும் ஊரன் எ. று.

உரை: உயர்ந்த பூவினையுடைய வேழத்தின் புழைபொருந்திய திரண்ட தண்டின்கண் சிறுமை வாழ்க்கையினை யுடைய மகளிர் அஞ்சனத்தைப் பெய்து வைக்கும் பூக்கள் நிறைந்த ஊரனை நினைத்தலால், தலைமகளின் பூப்போன்ற மையுண்ட கண்கள் பொன்னிறப் பசலை பூத்தன; ஆகலின், இப்பொழுது தலைமகன் போந்து பெறுவது என்னை? எ. று.

---

1. நற். 96. 2. புறம். 61. 3. ஐங். 211. 4. ஷை 147.
5. நற். 54. 6. ஷை 123.

ஓங்குதலை வேழத்துக்கு ஏற்றுக. தூம்பு, மூங்கிலைப் போல உள்ளிற் புழையுடையது; ''கழைகண் டன்ன தூம்புடைத் திரள் கால்[1]'' என்பதனால் அறிக. சிறுமை, செல்வநிறைவு இன்மை, உலகவழக்கு; இக்காலத்தும் முன்பு செல்வமுடையராய்ப் பின்னர் வறுமைநிலை எய்தினரைச் சிறுத்துப்போனார் என்பர். தொழு, இல்வாழ்க்கை; ''தொழுவில் தோன்றிய தோமறு கேவலக் கிழவன்[2]'' என்பதன் உரைகாண்க இனி, சிறுதொழு மகளிர் என்றது, தொழுவறைகளில் தொழில்புரியும் கடையர்மகளிரை எனவும், தொழுதுண்டு வாழும் பணிப் பெண்களை எனவுமாம். குறிஞ்சிநில மகளிர் மூங்கிற் குழாய்களில் தேன் பெய்துவைப்பது போல மருதநிலத்துச் சிறுதொழுமகளிர் அஞ்சனத்தை வேழத்தின் தண்டிற் பெய்துவைத்தல் அக்கால வழக்குப் போலும். ''வாங்கமை பழுனிய நறவுண்டு[3]''. ''அம்பணை விளைந்த தேக்கட்டேறல், வண்டுபடு கண்ணியர் மகிழுஞ்சீறூர்[4]'' ''நீடமை விளைந்த தேக்கட் டேறல்[5]'' என்று வருவனவற்றால் குறமக்கள் இயல்பு அறிந்துகொள்க. உள்ளி என்னும் செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. பொன் போறலின், பசலையைப் பொன் என்றும், போர்த்தது போலப் படர்தலின், போர்த்தன என்றும் கூறினர். ''பொன்னேர் பசலைக்கு உதவா மாறே[6]'' ''பல்லிதழ் மழைக்கட் பாவை மாய்ப்பப், பொன்னேர் பசலை யூர்தர'' ''நெய்தல், மணிதேர் மாணலம் ஒரீஇப், பொன்னேர் வண்ணங் கொண்ட என் கண்ணே[7]'' என்று பிற சான்றோரும் கூறுப.

தலைமகன் வரவு கருதி இருந்தாட்கு அஃது ஒரு காலைக் கொருகாலை அணித்தாய்த் தோன்றுதலின் உள்ளி என்றும், உள்ளியவழி, அவன் வாராது பொய்த்தமையின் மேனி வேறு பட்டுக் கண் பசப்பெய்துதலால், பூப்போல் உன்கண் பொன் போர்த்தனவே என்றும் கூறினள். பசலை பாய்தலால் மேனி

---

1. அகம் 167. 2. சீவக. 856. 3. நற். 276.
4. அகம். 368. 5. முருகு. 195. 6. நற். 47.
7. அகம். 229, 290.

வேறுபடுமாறு ஒருபுடை நிற்க, கண்ணின் வனப்புக்கு இரங்குவாள், பூப்போல் உன்கண் எனச் சிறப்பித்தாள். ''மணிமருண் மேனி பொன்னிறங் கொளலே[1]'' என்றதனால் மேனி வேறுபடுதலும், ''பூப்போ லுண்கண் புதுநலம் சிதைய[2]'' என்றதனால், கண்ணின் பொலிவழிவு கருதி இரங்குதலும் சான்றோர் உரைக்குமா றறிக.

''பாணர் கூத்தர் விறலியர் என்றிவர், பேணிச் சொல்லிய குறைவினை யெதிரும்[3]'' என்ப வாயினும், வாயிலாய் வந்தார் எனப் பொதுப்படக் கூறியவழி இவர் அனைவரும் அடங்குதலின், இவர்க்குத் தோழி வாயின் மறுத்தலும் மறுத்தாள்போல நேர்தலும் பிறவும் இதன்கண் அடங்கும் என்க.

சிறுதொழுமகளிர் தம் அஞ்சனம் கெடாதவாறு பெய்து வைத்தற்கு வேழம் பயன்படுமாறு போல, பரத்தையர் தம் நலம் கெடாதவாறு கூடியிருந்து பயன் நுகரும் வகையில் அவர்கட்கு எளியனாய் இயைந்து தலைவன் ஒழுகுகின்றான் என உள்ளுறை கொள்க. இதனால், தலைமகள் எய்திய பசப்பிற்குரிய தலைவனது வாராமைக்கு ஏது கூறியவாறாயிற்று தலைமகன் பரத்தையர்க்கு அவர் இயந்தைவாறு ஒழுகுதல், ''அவனணங்கு மாதர், பணி யிகவான் சாலப் பணிந்து[4]'' என ஆசிரியர் கணிமேதாவியார் கூறுமாற்றாலும் அறியப்படும். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின் மறுத்தல். (16)

17 புதன்மிசை நுடங்கும் வேழ வெண்பூ
விசும்பாடு குருகிற் றோன்று மூரன்
புதுவோர் மேவல னாகலின்
வறிதா கின்றென் மடங்கெழு நெஞ்சே.

---

1. அகம். 156. 2. நற். 325. 3. தொல். பொ. 150.
4. திணைமா. 135.

தலைமகன் பரத்தையிற் பிரிந்தவழி, ''இவ்வாறு ஒழுகுதலும் ஆடவர்க்கு இயல்பு அன்றே! நீ இதற்கு நெஞ்சு அழிகின்றது என்னை? என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

ப. உரை: புறத்தொழுக்கம் உளதாகிய துணையே யன்றி, நாடோறும் கனவில் வந்து வருத்துதலும் உடைய னாதலால், என் நெஞ்சு பெருமை இழந்து மெலிகின்ற தென்பதாம். புதன்மிசையே நுடங்கும் வேழவெண்பூக் கரிதான விசும்பின்கண்ணே பறக்கும் குருகுபோலத் தோன்றும் ஊரன் என்றது, தன்மை தோன்றாது ஒழுகுவாரை யுடையான் எ. று.

உரை: தரன் நின்ற புதலின் மேற்பட நின்று அசையும் வேழத்தின் வெள்ளிய பூ விசும்பின்கட் பறக்கும் வெண்குருகு போலத் தோன்றும் ஊரன் நாளும் புதியராயினார்மாட்டு நசை யுடையனாகலின், அதனை அறியாது என் மடங்கெழு நெஞ்சம் அவனை நினைந்து மெலியா நின்றது எ. று.

வெண்பூ வேழம் என வரற்பாலதாகிய வண்ணச் சினைச்சொல், ஈண்டு உவமப் பொருண்மை குறித்து மாறி நின்றது. நுடங்கும் பூ என இயையும். பூக்கள் செறிந்த புதலினிடையே ஓங்கி நின்று மலர்ந்து அதற்கு அணி செய்தலின், புதல்மிசை நுடங்கும் வேழ வெண்பூ என எடுத்துக் கூறினர். ''வளரா வாடை உளர்புநனி தீண்டலின், வேழ வெண் பூ விரிவன பலவுடன், வேந்துவீசு கவரியின் பூம்புதல் அணிய[1]'' எனப் பிறரும் கூறுமாற்றால் அறிக. புதுவோர், நலம் புதியராய இளைய பரத்தையர்; ''வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய, பரிவொடு வருஉம் பாணன்[2]'' என்புழிப்போல. மேவல், நசை. ''நம்பும் மேவும் நசையா கும்மே[3]'' என்பர் ஆசிரியர். நெஞ்சு வறிதாதல், நினைந்த பயன் பெருமையால் அழிதல் ''வறிதுகு நெஞ்சினள்[4]'' என்றாற்போல. மடங்கெழு நெஞ்சு, மடமை பொருந்திய நெஞ்சம். கொளுத்தக்

1. நற். 241. 2. அகம். 56. 3. தொல். சொல். 329.
4. நற். 368.

கோடலும் கொண்டது விடாமையும் நெஞ்சின் செயலதாலின், அச்செயன்மை தோன்ற மடங்கெழு நெஞ்சு என்றார். "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த, நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப[1]" என்றார் ஆசிரியர்.

புதுவது காணுந்தோறும் அதனை விரும்பி ஒழுகுதல் மக்கள் மனப்பான்மை யாகலின், தலைமகன் புதுவோர் மேவலன் எனப் பட்டான்; "புதுவோர்ப் புணர்தல் வெய்யன்[2]" என்றும், "புகன்ற வுள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனை[3]" என்றும் சான்றோர் கூறுவர் இவ்வாறு புதுவோர்மேற் புகன்ற உள்ளத்தனாய் ஒழுகுபவனுக்கு, நலம் பழையளாய தான் கரும்பின் கோது போல விரும்பப்படும் நலம் இலளாமை கூறுவாள், புதுவோர் மேவலன் ஆகலின் என்றாள். "கருங்கயத்தாங்கட் கழுமிய நீலம், பெரும்புற வாளைப் பெடைகதூஉம் ஊரன், விரும்புநாட் போலான் வியனலம் உண்டான், கரும்பின்கோ தாயினேம் யாம்[4]" எனப் பிரூண்டும் தலைவி இனைந்து கூறுதலும், "எம் இளமை சென்று தவத் தொல்லஃதே[5]" என்று தலைவி தான் இளமைப் புதுநலங் கழிந்து பழையளாயினமை கூறுதலும் காண்க. இவ்வாறு புதுவோரை மேவிக் கூடுதலும், பழையோரைக் கைவிட்டுப் பிரிதலும் அவற்கு இயல்பு என்பதனை அறியாது நினைந்து, நினைந்த பயன்பெறாது ஒழிந்து நெஞ்சழிந்து நிற்கின் றேன் என்பாள், வறிதாகின்று என் மடங்கெழு நெஞ்சு என்றாள். "வருவரென்றுணர்ந்த மடங்கெழு நெஞ்சம், ஐயந் தெளியரோ நீயே[6]" என்பதனாலும் இக்கருத்து வலியுறுதல் அறிக. செம்புலப் பெய்ந்நீர் போல, இருவர் நெஞ்சமும் கலந்து ஒன்றாய காலத்தும் அவர் நெஞ்சின் பான்மை அறியாது அழிந்தமை கருதி நெஞ்சினை, மடங்கெழு நெஞ்சு என்று கூறினாள். இவ்வாறு நெஞ்சினை வேறுபட நிறுத்திக் கூறும் மரபு தலைமகன்பாலும் உண்டு. தலைமகளைக் கூடியிருந்த தலைமகன், பிரிவின்கண் தன் ஆற்றாமையை அவட்கு அறிவியாது ஒழிந்தமைக் குறித்துத் தன்

---

1. தொல். பொ. 99. 2. கலி. 75. 3. தொல். பொ. 147.
4. திணைமொழி. 39. 5. அகம். 6. 6. அகம். 303.

நெஞ்சினே, "உடம்பு ஆண்டு ஒழிந்தமை யல்லதை, மடங்கெழு நெஞ்சம் நின்னுழை யதுவே[1]" என்று கூறுமாற்ருன் அறிக. இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்ருமை.

இக்கூற்று, "காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்,[2]" என்புழிப் பிரித்தலின்பாற்படும். ஆசிரியர் நச்சினர்க்கினியரும் இதுவே கூறினர்.

புதன்மிசை நுடங்கும் வேழத்தின் வெண்பூ விசும் பின்கட் பறக்கும் குருகுபோலத் தோன்றும் என்றது, சிறப்பில்லாப் பரத்தையராயினும் புதுமை நலத்தால் உயர்ந்த குலமகளிர் போலத் தோன்றுவர் என்றவாறு. வேழத்தின் வெண்பூ புதன்மிசை நுடங்கினும், விசும்பாடு குருகுபோலத் தோன்றும் என்று கொண்டு நனவின்கண் நம்பால் அன்பின்றிப் புறத்தொழுகுவனுயினும் கனவின்கண் அன்புடையனுய்த் தோன்றுகின்ருன் என்று உள்ளுறை காண்பர் பழைய வுரைகாரர். மெய்ப்பாடு: தன்கண் தோன்றிய வருத்தம் பற்றிப் பிறந்த இளிவரல். பயன்: மெலிவுரைத்தல். (17)

18. இருஞ்சா யன்ன செருந்தியொடு வேழங்
கரும்பி னலமருங் கழனி யூரன்
பொருந்துமல ரன்னவென் கண்ணழப்
பிரிந்தன னல்லனே பிரியலெ னென்றே

பரத்தையிற் பிரிந்து வந்து தெளித்துக் கூடிய தலைமகற்குப் பின் அவ்வொழுக்கம் உளதாயவழி அவன் வரவிடுத்த வாயில் கட்குத் தலைமகள் சொல்லியது.

ப. உரை: செருந்திப்பூவோடு வேழம் கரும்புபோல அலமரும் ஊரன் என்றது, தம் பாங்கியரோடு பொதுமகளிர் குலமகளிரை போலத் தருக்கி ஒழுகும் ஊரன் எ. று.

---

1. அகம். 29. 2. தொ. பொ. 147.

உரை: கருங்கோரையை யொத்த செருந்தியுடன் வேழம் கரும்புபோலக் காற்றினுல் சுழன்று அசையும் கழனிகளை யுடைய ஊரன் முன்னர்ப் போந்து கூடிய ஞான்று, இனிப் பிரியேன் என்று கூறிப் பின்னர் அழகிய மலர்போலும் என் கண்கள் கலுழுமாறு பிரிந்தானுகலின் அவன் பொருட்டு நீயிர் போந்து வாயில் வேண்டுவது என்னை? எ. று

சாய், கோரை, செருந்தி. ஒருவகைக் கோரை; நெட்டிக் கோரை, வாட்கோரை யென்றும் கூறுவர்; கழினிமாய் செருந்தி கண்பமன் றூர்தர[1]'' என்பதன் உரைகாண்க. ஏனை வரு மிடங்களினும் இதுவே உரைத்துக் கொள்க. இப்பெயரியதொரு மரமும் உண்டு; அது நெய்தல் நிலத்துக்குரித்து. அதன் இயல் பினை, ''பாசிலைச் செருந்திதாய விருங்கழி[2]'' என்புழிக் கூறுவாம். அலமரல், சுழற்சி. காற்றினுல் என்பது அவாய்நிலை. அல்லனே என்புழி ஓகாரம் எதிர்மறை. பிரியலென் என்றது முன்பு பரத்தையிற் பிரிந்து வந்து கூடிய தலைமகன் தன்னைத் தெளித்துக் கூறியதனைத் தலைவி கொண்டு கூறியது. ஆகலின் என்பது முதலாயின குறிப்பெச்சம்.

பரத்தையிற் பிரிந்திருந்து போந்தான் கூட்டங் கருதி இனிப் பிரியாமையைத் தெளித்தவிடத்துக் கூறிய அது நீங்காது நெஞ்சில் நின்று நிலவுதலின், பிரியலென் என்றே என்றும், தன்னை மறந்தானுயினும் தன்னைத் தெளிவிப்பான் கூறிய சொல்லை மறந்து பொய்த்தொழுகுதல் கூடாதென்று கருதுகின்ரு ளாகலின், பிரிந்தனன் அல்லனே என்றும், வாயில்கள் கூறுவது தனக்கு ஒக்குமாயினும், தன் கண்கள் அதனை ஏலாது அழுதல் மேயின எனத் தன்னுறுப்பின்மேல் ஆற்ருமையை ஏற்றிப் பொருந்துமலர் அன்ன என் கண்ணழ என்றும் கூறினுள். தன் ஆற்ருமையை உறுப்பின்மேல் வைத்துக் கூறல் வழுவாயினும், ''வண்ணம் பசந்து புலம்புறு காலை, உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே[3]'' என்றதனுல், அமையும் என்க. பிரிந்தனன் அல்லனே என்றதனுல், வாயில்கள்

1. மதுரை. 172. 2. ஐங். 112. 3. தொல். பொ. 202.

அவள் புலந்தவழிக் கொடுமை கூறல் இலக்கணம் அன்மையின், தலைமகனது அன்புடைமை முதலாயவற்றைக் கூறினாராக, அவள், அவர்களை மறுத்து, அவன் பிரிந்தமையே அவனது அன்பின்மை உணர்த்துமென்று கூறினாள் என்று கொள்க. ''மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை, தம்முளவாதல் வாயில்கட் கில்லை[1]'' என்பதனால் வாயில்கள் தலைவன் குணங் கூறுவதல்லது கொடுமை கூறார் என்பதறிக. இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை:

வேழம் செருந்தியொடு கூடிக் கரும்பு போலக் காற்றினால் அலமரும் என்றதனால், பரத்தையரும் தம் தோழியருடன் கூடித் தமக்குத் தலைமகன் செய்யும் தலையளியால் தருக்கி ஒழுகுகின்றனர் என உள்ளுறுத்து உரைத்தவாறு. இதனாற் பயன், ''குல மகளிராகிய எம்பாற் பெறுவதனை, பரத்தையர் பாலும் பெறுதலின், நீயிர் அவற்கு வாயில் வேண்டுவது என்னை?'' என வாயின் மறுத்தவாரும். இவ்வுள்ளுறைகட் கூறிய கருப்பொருளாகிய கோரை, மகளிர் தம் முன்கையில் வளைபோல அணிந்து விளையாட் டயர்தற்குப் பயன் படுவதாகலின் அவளறி கிளவி யென அறிக; ''கிழவி சொல்லின் அவளறி கிளவி[2]'' என்பர் ஆசிரியர். ''சாயும் நெய்தலும் ஓம்பமதி எம்மின். மாயிருங் கூந்தன் மடந்தை, ஆய்வளைக் கூட்டும் அணியுமா ரவையே[3]'' எனச் சான்றோர் கூறுதலால், கோரை பயன்படுமாறு அறிக. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின்மறுத்தல். (18)

19 எக்கர்மா அத்துப் புதுப்பூம் பெருஞ்சினை
புணர்ந்தோர் மெய்ம்மணங் கமழுந்
தண்பொழில்
வேழ வெண்பூ வெள்ளுளை சீக்கும்
ஊர னாகலிற் கலங்கி
மாரி மலரிற் கண்பனி யுகுமே.

---

1. தொல். பொ. 165. 2. ஷை ஷை 301. 3. நற். 60.

''பன்னாள் அவன் சேணிடைப் பிரியவும் ஆற்றியுளையாகிய நீ சின்னாள் அவன் புறத்தொழுகுகின்ற இதற்கு ஆற்றாயாகின்றது என்னை ?'' என்ற தோழிக்கு, ''எதிர்ப்பாடின்றி ஓரூர்க்கண்ணே உறைகையினாலே ஆற்றேனாகின்றேன்'' எனத் தலைமகள் சொல்லியது. வாயிலாய்ப் புகுந்தார் கேட்டு நெருங்காது மாறுதல் கருத்து.

ப. உரை: மாங்கொம்பு பூத்து வதுவைமகளிர் மெய்மணங் கமழக் கடவ பொழிலை அம்மலர் அரும்பாகிய பருவத்தே வேழங்களின் பூத்துடைக்கும் ஊரன் என்றது, சேணிடைப் பிரிந்து வந்து தன் உடனாய் நிகழ்கின்ற பருவத்து இன்பங்கள் நுகராமல் இடையே விலக்குகின்ற பரத்தையரை யுடையான் எ. று.

உரை: எக்கரிடத்து நின்ற மாமரத்தின் புதியவாய் அரும்பி மலர்ந்த பூக்களையுடைய பெரிய கொம்பு, வதுவையிற் கூடிய மகளிரது மெய்ம்மணம் கமழும் தண்ணிய பொழிலின்கண், வேழ வெண்பூவின் இதழாகியஉளை அப்பூக்களைத் துடைத்தழிக்கும் ஊரனாகலின், என் கண்கள் கலக்கமுற்று மழையால் நனைந்த குவளைமலர் போல நீர் சொரியா நின்றன, காண் எ. று,

எக்கர், நீரால் கொணரப்பட்ட மணல் பரந்த இடம்; இக் கருத்தே கொண்டு நச்சினார்க்கினியரும் ''கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று, வடுவாழ் எக்கர் மணலினும் பலரே[1]'' என்புழி எக்கர் என்பதற்கு இடுமணல் என்று உரை கூறினார். சினை, மணங்கமழும் பொழில் என இயைக்க. செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. மெய்ம்மணம், மெய்யின்கண் எழும் மணம். சினை கமழும் மணம், புணர்ந்தோர் மெய் கமழும் மணம் போலுதலின், சினை புணர்ந்தோர் மெய்ம்மணங் கமழும் என்றார். வதுவையிற் கூடும் மகளிர் பலவகை, மலரும், விரையும், சுண்ணமும் புனைதலால் எழும்மணம் நறிதாதலின், புணர்ந்தோர் மெய்ம் மணம் எனச் சிறப்பித்தார்; ''தண்கய நண்ணிய பொழிறொறுங் காஞ்சிப், பைந்தாதணிந்து போதுமலி யெக்கர், வதுவை நாற்றம் புதுவது கஞல[2]'' என்றார் பிறரும். வேழப்பூவின் இதழ் உளை

---

1. மலைபடு. 556–7. 2. அகம். 25.

போறலின், வெள்ளுளை எனப் பிரித்தோதினர். மேலே, ''பரியுடை நன்மான் பொங்குளை அன்ன[1] என்புழி வேழப்பூ குதிரையின் உளைமயிர் போல்வதென உவமித்ததனை நினைவுக் கூர்க. சீத்தல், கெடுத்தல். இஃது இப்பொருட்டாதல், ஈண்டு நீர் மிசைத்தோன்றி இருள் சீக்கும் சுடரேபோல்[2]'' என வருதலால் அறிக. மாரிமலர், மாரிக்காலத்து மழையால் நனைந்த மலர். மாரிமலர் அசையுந்தோறும், அதன்கண் நின்ற நீர் துளிப்பது போல, கண் இமைக்குந்தோறும் கலுழ்ந்து நின்று நீர் துளிக்கும் என்றமையின், இது தொழிலுவமம், மலர் எனப்பொதுப்படக் கூறினமையின், ஈண்டு உவமையாதற்குச் சிறப்புடைய குவளை மலர் வருவிக்கப்பட்டது. ''தண்கயம் பயந்த வெண்காற் குவளை, மாரி மாமலர் பெயற்கேற்றன்ன, நீரொடு நிறைந்த பேரமர் மழைக்கண், பனிவார் எவ்வந் தீர[3]'' என்றார் பிறரும்.

உள்ளுறையால், தலைமகன் தன்னொடு கூடி நுகர்தற்குரிய இன்பங்களை நுகராவாறு விலக்கும் பரத்தையரை உடையன் என்கின்றாளாகலின் ஊரனாகலின் என்றும், ஒரூர்க்கண் உறை யினும், அவ்வாறு விலக்குண்டு வாராதொழிந்தான் பொருட்டுத் தான் செயற்பாலது பிறிதின்மையின் கலங்கி என்றும், கலங்கிய வழிக் கண் கலுழ்ந்து நீர்மிக்குச் சொரிதலின் கண் பனியுகும் என்றும் தலைமகள் கூறினாள். இதனுட் கலங்கி என்றதனால், தலைவி மாட்டு உயிர்ப்பு என்னும் மெய்ப்பாடும், ''மாரி மலரிற் கண் பனியுகுமே'' என்றதனால் அவன் பிரிவாற்றாமை என்னும் மெய்ப்பாடும் தோன்றின.

ஒரூர்க்கண் உறையினும் தலைமகனைக் கூடுதலின்றித் தனிப்ப எய்தும் இடும்பையால், தலைவி கூறுகின்றமையின், இஃது ''அவனறி வாற்ற வறியு மாகலின்[4]'' என்ற சூத்திரத்து, ''இன்பமும் இடும்பையும் ஆகிய விடத்தும்'' என்புழி இடும்பை என்பதன்கண் அடங்கும் என அறிக.

---

1. ஐங். 13. 2. கலி. 100. 3. அகம். 395.
4. தொல். பொ. 147.

மாவின் பெருஞ்சினை பூத்து மணங்கமழும் பொழிற்கண், வேழப்பூவின் வெள்ளுளை விரிந்து அப்பூக்களை அழிக்கும் என்றதனால், தலைமகன் தன்மனையின்கண் மாண்புமிக இருந்து எமக்கு இன்பம் தரச் சமைந்தானைப் பரத்தையர் விலக்கி, அது செய்யாவாறு கெடுக்கின்றார் என்று உள்ளுறுத் துரைத்தாளாம். இது, தன் ஆற்றாமைக்குரிய காரணராகிய பரத்தையரை வேழப்பூவின் வெள்ளுளைமேல் வைத்துக் கூறுதலின் சுட்டு என்னும் உள்ளுறை என உணர்க. மெய்ப்பாடு: இளிவரல். பயன்: அயாவுயிர்தல்.

இனி, புதுப்பூம் பெருஞ்சினைப் புணர்ந்தோர் என்றும், வெள்ளுளை சீய்க்கும் என்றும் பாடமுண்டு. ''சினைப்புணர்ந் தோர்'' என்புழிச் சினையினை ஆகுபெயரால் நிழலிடமாக்கி, ஆண்டுப் புணர்ந்தோர் என்று உரைக்க. அதனாற் பொருட் சிறவாமை அறிந்து கொள்க. சீத்தல் என்பது சீய்த்தல் என வருமாறு வழக்கினுள் இன்மையானும், ''நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினைச் சீக்கும்[1]'' என்புழி, அன்னதொரு பாடமின்மையானும் அது பாடமன்றென்க. ''இருள் சீக்கும் சுடரேபோல்[2]'' என்புழியும் இதுவே கூறிக் கொள்க. (19)

20. அறுசில் கால வஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்குங்
காம்புகண் டன்ன தூம்புடை வேழத்துத்
துறைநணி யூரனை யுள்ளியென்
இறையே ரெல்வளை நெகிழ்போ டும்மே.

தலைமகனை வாயில் நேர்வித்தற்பொருட்டாக, ''காதலர் கொடுமை செய்தா ராயினும் அவர் திறம் மறவாதொழிதல் வேண்டும்,'' என்று முகம்புகுகின்ற[3] தோழிக்கு, ''என் கைவளை

---

1. ஐங். 20. 2. கலி. 100.

3. முகம்புகுதலாவது, தான் கூறுவதனைத் தன் முகநோக்கி நின்று கேட்குமாறு ஒருவர்மற்றொருவர்பால் முன்னுரையாக வேண்டுவன சில கூறிச் சேறல்.

நில்லாதாகின்றது அவரை நினைந்ததன் பயனன்றே; இனி அமையும்'' எனத் தலைமகள் சொல்லியது.

ப. உரை: தாமரைப் பூவகத்து உளதாகிய தும்பிச் சினையை வேழம் சீக்கும் என்றது, தன்மாட்டு என்புதல்வன் உறைதலையும் விலக்குவாராகிய பொதுமகளிரை யுடையான் எ. று.

சினைச்சேக்கும் என்று பாடமோதுநர் தும்பிச்சினை வருந்த வேழம் தங்கும் என்று பொருளுரைப்ப.

உரை: ஆருகிய சில கால்களையும், அழகிய சிறையினையு முடைய தும்பி நூருகிய பல இதழ்களை யுடைய தாமரைப் பூவின் கண் ஈன்றுள்ள சினைகளை அழிக்கும் மூங்கில் போல் உள்ளிற் புழையினையுடைய வேழம் செறிந்த துறையினை அருகிலேயுடைய ஊரனை நினைந்ததனுல், இறையும் அழகும் ஒளியுமுடைய என் வளைகள் நில்லாது நெகிழ்ந்து ஓடாநின்றன எ. று.

பூவின்கண் தும்பி ஈன்ற சினையைச் சீக்கும் வேழம், தூம்புடை வேழம் என இயையும். ''சேற்றுவளர் தாமரை பயந்த ஒண் கேழ் நூற்றிதழ்[1]'' என்று பிறரும் கூறுப. நூற்றிதழ் என்புழி, நூறு என்பது பன்மை குறித்து நின்றது[2]. அதனை நோக்க ஆறு, சின்மைப் பொருட்டாதலின், அறுசில் கால என்ருர். கால என்னும் பெயரெச்சக் குறிப்பு, தும்பி என்னும் பெயர் கொண்டது. பூச்சினை, பூவின்கண்ணுள்ள சினை. சினை, முட்டை. நணி, அணிமை; ''துறைநணி யிருந்த பாக்கமும்[3]'' என்புழிப் போல். உள்ளி, காரணப் பொருட்டாய வினையெஞ்சு கிளவி. இறை, சந்து.

---

1. புறம். 27.

2. சதம் என்றது நூற்றினும் பலவினும் செல்லும் என்பர் தக்கயாகப் பரணி உரைகாரர் (தாழிசை. 3. உரை.)

3. நற். 101,

உள்ளுறையாற் பரத்தையர் தலைவனைப் பிரியாதவாறு பிணித்திருக்கும் கொடுமை கூறி, அதனை நினையுந்தோறும் நெஞ்சு நெகிழ்ந்து இனி அவனை எதிர்ப்படல் அரிது என எண்ணி வருந்துகின்றா ளாகலின் உள்ளி என்றும், பண்டெல்லாம் அவன் நினைவே பற்றுக்கோடாக நெகிழாது நின்ற வளைகள், இதுபோது அவ்வியல்பு மாறின என்பாள், இறையோ் எல்வளை நெகிழ்பு ஓடும்மே என்றும் தலைமகள் கூறினாள். இஃது உடம்பு நனி சுருங்கல். பண்டென்றது, களவின்கண் ஒருவழித் தணப்பு வரை விடைவைத்துப் பொருள்வயிற் பிரிவு முதலாயினவும், கற்பின்கண், ஓதல் பகை பொருள் முதலிய காரணமாகப் பிரிதல் என்ற இவை நிகழ்ந்த காலம்.

தாமரைப்பூவகத்து உளவாகிய தும்பியின் சினையை வேழத்தின் பூச் சிதைக்கும் என்றது, தலைமகள்பால் தங்கின தலைமகனைப் பரத்தையர் விலக்குவர் என உள்ளுறுத் துரைத்தவாறு. கற்பின் கண், தலைமகட்குப் பெற்ற மக்களும் ஒருவாற்றான் வாயிலாதல் உண்மையின், வாயின் மறுத்தலே அறமாகக் கொண்ட அகப் பொருள் நெறிக்கு மக்களை விலக்குதலும் அமையும் என்க. ''தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப்பரத்தை உள்ளிய வழியும், தன்வயிற் சிறைப்பினும், அவன்வயிற் பிரிப்பினும்''[1] என்புழிச் சிறுபான்மை, தன் மகனைப் பரத்தை அவன்வயிற் பிரித்தாளாகக் கூறலும் கொள்ளப்படும் என்க. மெய்ப்பாடும் பயனும் அவை.

என் நிறையே போல்வளை நெகிழ்போடும்மே என்பது பாட மாயின், நிறுப்ப நில்லாது அவன்பால் நெகிழ்ந்து மெலியும் என் நிறை போல, செறுப்பச் செறியாது நெகிழ்ந்தோடுவ வாயின என் வளைகள் என்றாள் என்க. துறைநனி யூரன் என்ற பாடத்தால் பொருள் சிறவாமை அறிக. (20)

---

1. தொல். பொ. 147.

3

கள்வன் பத்து

கள்வன் என்பது நண்டு மருதநிலக் கருப்பொருள்களுள் ஒன்ருகிய இது பின்வரும் பாட்டுக்கள் பத்தினும் சிறப்பாய்ப் பயின்று வருதலின், இப்பத்து இதனுற் பெயர் பெறுவதாயிற்று.

கள்வன் என்பது களவன் எனவும் வழங்கும். ''புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போல்[1]'' எனவும், ''அலவ னள்ளி குளிர்ஞெண் டார்மதி, களவன் என்றிவை கற்கடப் பெயரே'' எனத் திவாகரத்தும் சான்ருேர் கூறுதல் காண்க. ஐங்குறு நூற்று அச்சுப்பிரதியினும் களவன் எனப் பாடவேறுபாடு காட்டப் பெற்றுளது. அகநானூற்று அச்சுப்பிரதியும், கள்வன் மண்ணளைச் செறிய[2]'' என்று பாடங்கொண்டு களவன் என்பதனைப் பாட வேறுபாடாகக் காட்டிற்று.

தமிழிலக்கண முறைப்படி இது நான்கறிவுடைய உயிர் வகையைச் சேர்ந்தது. ''நண்டும் தும்பியும் நான்கறிவினவே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே[3]'' என்ப. இனிப் பேராசிரியர், ''மெய்யுடைமையின் ஊற்றுணர்வும், இரைகோடலின் நாவுணர்

---

1. கலி. 88. 2. அகம். 235. 3. தொல். பொ. 586.

வும், நாற்றங்கோடலின் மூக்குணர்வும், கண்ணுடைமையின் கண்ணுணர்வுமுடையவாயின ; நண்டிற்கு மூக்குண்டோ எனின், அது ஆசிரியன் கூறலான் உண்டு என்பது என்றனர்.

அலவன், குளிர்ந்த நீர் சூழ்ந்த நிலப்பகுதிகளில் மரஞ்செடிகளின், வேரிலும் வயல்களின் வரம்பிலும், நீர்நிலைகளின் கரைகளிலும் அளைவகுத்துக்கொண்டு வாழும். அதனால், ''நீர்மலி மண்ணளை[1]'' ''இருஞ்சேற் றீரளை'' ''தாழை வேரளை[2]'' ''கண்டல் வேரளை'' ''சிறுவி ஞாழல் வேரளைப் பள்ளி[3]'' ''தண்ணக மண்ணளை[4]'', என்று சான்றோர் மிக்கெடுத்துக் கூறுப.

நண்டின் உடலிற் புள்ளியும் வரியும் பொருந்தி மேனி நலம் செய்ய, சில பொன்னின் நிறம் கொண்டு உலவும். அதன் கால்கள் வளைந்து நுனி கூரியவாய் இருத்தலின், அது செல்வதனால் உண்டாகும் சுவடு, நிலத்தில் கோலம் எழுதியது போல விளங்குதல் கண்டு, வரித்தல் என்னும் வாய்ப்பாட்டால் பண்டையோர் வழங்கினர். இதனுடைய கண்கள் உடலிற் சிறிது உயர்ந்து வேம்பு நொச்சி முதலியவற்றின் அரும்புகளைப் போறலின், ''நொச்சி மாவரும் பன்ன கண்ண எக்கர் ஞெண்டு[5]'' ''வேப்புநனை யன்ன நெடுங்கட் கள்வன்[6]'' என்று சிறப்பிப்பர். ''புள்ளிக் கள்வன்[7]'' ''பொன்வரி அலவன்[8]'' ''பொறிமாண் அலவன்[9]'' எனவும், ''கொடுந்தாள் அளைவாழ் அலவன்[10]'' எனவும், ''அளைவாழ் அலவன் கூருகிர் வரித்த[11]'' ''எக்கர் ஞெண்டின் இருங்கிளைத் தொழுதி, இலங்கெயிற் றேஎ ரன்னை மகளிர் உணங்குதினை துழவுங் கைபோல், ஞாழல் மணங்கமழ் நறுவீ வரிக்கும் துறைவன்[12]'' என வருவனவும் பிறவும் போதிய எடுத்துக்காட்டுக்களாம்.

---

1. அகம். 176. 2. அகம். 350, 380. 3. குறுந். 117, 328.
4. ஐங். 27, 30. 5. நற். 267. 6. ஐங். 30. 7. ஷை 21.
8. குறுந். 303. 9. சிலப். 10 : 91. 10. குறுந். 351.
11. ஷை 351. 12. நற். 267.

கூரிய உகிருடைமையால், வயலில் முற்றிச் சாய்ந்து கிடக்கும் நெற்கதிர்களையும், வித்திய ஞான்று முளைத்த முளைகளையும் அறுத்து நெற்பயிர் முதலியவற்றுக்கு இடையூறு செய்வதும் நண்டிற்கு இயல்பு. மேலும், இது மெல்லிய நீர்க் கொடிகளைத் துண்டித்துத் தான் செல்லும் வழியைச் செம்மை செய்து கொள்ளும் சீர்மையும் உடையது ''கள்வன் ஆம்ப லறுக்கும்[1]'', ''வயலைச் செங்கொடி கள்வனறுக்கும்[2]'' ''கள்வள் வள்ளை மென்கால் அறுக்கும்[3]'' ''வித்திய வெண்முளை கள்வ னறுக்கும்[4]'' என இந்நூலுள்ளும் கூறுப. நெற் கதிரையும் பூவையும் கொண்டு சென்று, எதிர்காலம் நோக்கித் தன் மண்ணளைக்கண் நிறைத்து உண்ணுதல் பற்றி, ''செந்நலஞ் செறுவிற் கதிர்கொண்டு கள்வன் தண்ணக மண்ணளைச் செல்லும் ஊரன்'' என்று கூறுவர்.

நண்டுகள் நாவற்கனியைத் தம் கவைத்த உகிராற் பற்றிச் சுமந்துண்டல் பார்த்தற்கு இன்பம் பயக்கும். அதனினும் இன்பம் தருவது, அது தன் பெடை நண்டிற்கு அக்கனியை நல்குவதாகும்; ஆண் நண்டு கனியைச் சுமந்து நிற்பப், பெடைநண்டு அதனைத் தழுவி அமர்ந்து அதனுடன் கூடி யுண்ணும்; அக்காலை, அவற்றை நோக்குவார்க்கு, அவ்விரண்டனையும் பிணித்து நிற்கும் காதலன் பின் பெருமாண்பு தோன்றி மகிழ்வுறுத்தும். இதனைக் கூர்ந்து நோக்கிய சான்றோர், ''அகலிலை நாவல் உண்டுறை உதிர்த்த கனி கவின் சிதைய வாங்கிக் கொண்டு தன் தாழை வேரளை வீழ் துணைக்கீடுஉம் அலவன்[5]'' என்றும், ''பொங்குதிரை பொருத வார்மண லடைகரைப், புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி, கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப், பல்கால் அலவன் கொண்டகோட் கூர்ந்து, கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்[6]'' என்றும், ''சேய்கண் டனையன் சென்று ஆங்கு ஓரலவன் தன் சீர்ப்பெடையின்வாய் வண்டனையதோர் நாவற்கனி நனி நல்கக் கண்டு, பேய்கண்டனையதொன்றாகி நின்றான்[7]'' என்றும் கூறுவர்.

---

1. ஐங். 21. 2. ஐங். 25. 3. ஷை 26. 4. ஷை 29.
5. அகம். 380. 6. நற். 35. 7. கோவை. 84.

அலவன் என்பது ஓடு மூடிய பத்துக் கால்களையுடைய உயிர் வகை ; சிலர் இதனை ஒட்டுமீன்[1] என்பர் ஆயினும் மீனுக்குரிய இயல்புகள் முற்றவும் இன்மையின் மீன் என்றல் நிரம்பாது என்பர், உயிர்நூலறிஞர். தமிழ் நூலார்க்கும் இஃது உடன்பாடன்று.

இதன் உடலின் ஒரு பகுதி ஓடொன்றில் அடங்கியுளது ; உடற்பொருளை ஆராய்ந்த விடத்து, அது கடல்நீரிற் பிறக்கும் சுண்ணும்பினாலாகியது என்பது தோன்றுகிறது. இதன் நிறம் பொன்மையும் சாம்பல் நிறமும் எனப் பலதிறப்படும்.

இதன் தலை உடலின் வேறுபட நிற்பதன்று ; ஓட்டின் உள்ளே ஒருபுறத்தே கொடுக்குகளுக்கு இடையேயுளது. இதன்வாய், இரண்டு தசைச் செதில்களால் மூடப்பட்டுள்ளது. வாயின் இரு மருங்கிலும் இரண்டு உணரிகள்[2] உண்டு. அவை நீண்டு பல மூட்டுக்களால்[3] இணைப்புற்றிருக்கின்றன. இரண்டு சிறு தண்டு களின் நுனியில் கண்கள் அமைந்திருத்தலின், அலவன் நாற் றிசையும் காணக்கூடிய நோக்குடையது. தண்டின் நுனிக்கண் இருத்தலின், கண்களை வேண்டும்போது நீட்டவும் சுருக்கவும் ஒடுக்கவும் கூடும். கண்ணைச் சுமந்து நிற்கும் தண்டு வேப்பு நனையும், நொச்சியரும்பும் நிகர்த்தலின் அவற்றை உவமை கூறினர் சான்றோர்.

இதன் உடலின் அடிப்பகுதியில் செதில்கள் பல உண்டு ; அவை அடிக்கடித் தூய நீரை வாய்க்கண் இறைத்தலின், நண்டு உயிர்க் காற்றுப்[4] பெறுகின்றது. மருங்குக்குப் ஐந்தாகப் பத்துக் கால்கள் உடையதாயினும், தலைப்பகுதியின் இருபுறமும் இரண்டு கவைத்த கொடுக்குகள் நின்று, இரைப்பொருளைப் பற்றவும் துண்டிக்கவும் வேண்டுவன செய்யவும் கைபோற் பயன்படுகின்றன. ஏனையெட்டும் கூரிய உகிர் ஒன்றே யுடையவாய் நுண்மணலை வரிக்கும் நோன்மையுடையவாம். ஒவ்வொருகாலும் பல மூட்டுக்களால் இணைப்புற்றிருப்பது கண்கூடாக அறிந்தது.

---

1. Shell Fish 2. Feelers 3 Joints. 4. Oxygen

உறுப்புக்களுள் யாதானும் ஒன்று ஊறுபட்டு ஒடிந்துவிடின், அதனைப் போக்குதலும் புதியதொன்று முளைத்தலும் அலவனுக்கு இயற்கையே அமைந்தன. மேலும், உடல் வளர்ச்சிக் கேற்ப ஓடுகளும் காலந்தோறும் உகுதலும் பிறிதொன்று புதிதாய்த் தோன்றுதலும் உண்டு. இவ்வண்ணம் ஓடுமாற்றும் இயல்பினை ஆங்கிலத்தில் மோல்ட்டிங்[1]'' என்று கூறுவர். புதிதாய்த் தோன்றும் ஓடு, முதற்கண் மென்மைத்தாயினும், நாளேற ஏற முதிர்ந்து வலிதாம். தொல்லோடு நீங்கப் புத்தோடு தோன்றி வன்மை பெருத இடைக்காலம் அலவனுக்கு அல்லற் காலமாகும். ஆகலின், அதுபோது அஃது எங்கேனும் ஒடுங்கி மறைந்து கிடக்கும்.

தாயலவன் சினையீனுங் காலத்து, அதன் வாலின்கீழ் உள்ள சிறு மயிர்களில் அதன் சினைகள் ஒட்டிக்கொண்டு கிடந்து, பொரித்தவுடன் நெடிய வாலொன்றும் நீண்ட உணரியொன்றும் பெற்று நண்டினத்தைச் சாராத ஒரு புதுவகை உயிர்போலத் தோன்றும். உயிர்நூற் புலவரையன்றி ஏனையோர் அதனை நோக்கிய வழி, அஃது அலவன் பயந்த அழகுடைச் சினை என அறிதல் இயலாது. அலவனது முழுவுருவமும் அமைவதற்குள் அஃது அடையும் மாறுதல்கள் பல.

சினை பயந்த அலவன் உடல் சுருங்கிப் பின் முன்னையினும் பருத்தல் வேண்டி ஓடு மாற்றத் தொடங்கும். ஓடு கழருலும் அலவன் மெலிந்து புத்தோடு பெறுங்கால் அதன் வாலில் ஒட்டிக் கிடந்த சினைகள் பொரித்துத் தாயலவனை நீங்கும். சினை பயவா முன் இருந்த நிலைமையின் வேருய்ப் புத்தோடும் பருவுடலும் பெறுவான் புலர்ந்து ஓய்ந்து ஒடுங்கிக் கிடக்கும் நண்டு இறந்தது போலத் தோன்றுதலின், நம் நாட்டுப் பண்டைச் சான்றோர் ''தாயுயிர் வேண்டாக் கூருகிர் அலவன்[2]'' என்றும், ''தாய் சாவப் பிறக்கும் புள்ளிக் கள்வன்[3]'' என்றும் கூறுவாராயினர்.

---

1. Moulting 2. தொல். பொ. 157 நச். மேற். 3. ஐங். 24.

நம் நாட்டில், இழிந்த மக்களுட் பலர் நண்டினை உண்பர். மேனாட்டவரும் இதனைப் பிடித்துண்பர். நண்டுணவு எளிதிற் செரிக்காது என்று மருத்துவ நூலார் கூறுகின்றனர்.

உயிர் வரலாறு கூறும் ஆசிரியன்மார் நண்டினம் உலகில் ஏறக்குறையப் பத்து நூறாயிரம் யாண்டுகட்குமுன் தோன்றியிருத்தல் வேண்டும் எனவுரைக்கின்றனர்.

நண்டின் மூக்குணர்வு மிக்க நுட்பமானது. ஒளி குறைந்த காலங்களிலும், பெரும்பான்மையும் இருட் போதுகளிலும் நண்டினம் இரை தேடிச் சேறலாலும், உணவுப் பொருளினும் மிக்க புதியவற்றையே நாடி உண்டலாலும், அவற்றின் நாற்றத்தால் இடமறிந்து பற்றி யுண்ணும் அமைதியாலும், அதன் மூக்குணர்வு நுண்ணிதாதல் வேண்டும் என்பர். மற்று ஆசிரியர் பேராசிரியர், '' நண்டிற்கு மூக்குண்டோவெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது '' என்பாராயினர்.

நண்டினத்துள் பலவகை உண்டு. நீரில் வாழ்வனவும் தரையில் ஊர்ந்து செல்வனவும் பொதுவகை. நீர்த்தேளும்[1] தேண்மீனும்[2] நண்டினத்தைச் சேர்ந்த சிறப்புவகை. இவற்றைப் பற்றிய குறிப்புக்கள் ஈண்டு வேண்டப் படாமையின் விரித்திலம்.

நண்டுகள் மிக்க சூழ்ச்சியும் கூட்டமாய் வாழும் இயல்பும் நெடுந்தொலைவு இரை தேடிச் செல்லும் ஒட்பமும் உடையன. வலைகளாற் கவர்ந்து கரைமேற் கொணரப்பட்ட நண்டுகளுட் சில அவ்வலையிலிருந்து வெளிப்பட்டவுடன் இறந்தனபோன்று கிடந்து வலைஞன் அற்றம் அறிந்து ஓடி ஒளித்துக்கொள்ளும். கூட்டமாய்ச் சென்று இரைதேடும் இயல்புடைய நண்டினம், ஒருகால், இந்து மாக் கடற்கண் உள்ள நிலப்பகுதி காணச்சென்றோருள் ஆங்கிலேயர் ஒருவர் உறங்கிக் கிடந்த அமையம் நோக்கி, அவர் தம் உடைகளையும் அவர் பிடித்து வைத்திருந்த மீன்களையும் துண்டித்துக்

---

1. Hermit Crab. 2. Shrimp.

கவர்ந்து சென்றது என்று கூறுகின்றார். ஒருவர், ''நாங்கள் மாத்திரம் உடனே விழித்திலேமாயின், எங்களை அந்நண்டினம் கொன்றேயிருக்கும்'' என்று உரைக்கின்றார். தேங்காய் பறிக்கத் தென்னையின்மேல் ஏறினர். ஒருவர் ஆண்டுத் தேங்காயொன்றில் நண்டிருப்பக் கண்டாராம்; கடற்கரைக்கண் வாழும் நண்டுகள் சில பல கற்களுக்கப்பால் உலவக் கண்டதாக ஒருவர் எழுதியுள்ளார். இவ்வாறு உயிர்களின் இயல்பினை அவ்வப்போது ஆராய்ந்து கண்ட அறிஞர்களின் குறிப்புக்கள் பல கிடைக்கின்றன. அவற்றை விரிந்த உயிர் நூல்களுட் காண்க.

21. முள்ளி நீடிய முதுநீ ரடைகரைப்
புள்ளிக் கள்வ ளும்ப லறுக்குந்
தண்டுறை யூரன் றெளிப்பவும்
உண்கண் பசப்ப தெவன்கோ லன்னாய்.

''புறத்தொழுக்கம் எனக்கு இனியில்லை'' என்று தலைமகன் தெளிப்பவும், அஃது உளது என்று வேறுபடும் தலைமகட்குத் தோழி சொல்லியது.

ப. உரை: முள்ளி நீடிய ... ... ஊரன் என்றது தனக்கு உரித்தாகிய இல்லின்கண் ஒழுகிப் பரத்தையரோடு தொடர்ச்சி அறுப்பான் என்றவாறு

உரை: அன்னாய், நீர்முள்ளிச் செடிகள் நீண்டு வளர்ந்துள்ள பழைய நீர்மிக்க அடைகரையின்கண் புள்ளிகளையுடைய நண்டு அந்நீரிற் படிந்து கிடக்கும் ஆம்பலின் தண்டினை அறுக்கும் குளிர்ந்த துறையினையுடைய ஊரன் யாம் தெளியும்படி புறத்தொழுக்கம் எனக்கு இனியில்லை என்று கூறியிருப்பவும், அதனைத் தெளியாது நின்மையுண்ட கண்கள் பசந்து வேறுபடுவது என்னை, கூறுக. எ. று.

''முண்டகங் கலித்த முதுநீர் அடைகரை[1]'' என்றாற்போல, ''முள்ளி நீடிய முதுநீ ரடைகரை'' என்றார். முள்ளி, முட்களை யுடையது; காரண விடுகுறி. இதன்மலர் நீலமணி போல்வ தென்பது, ''மணிமருள் மலர முள்ளி[2]'' என்பதனு லறிக. ''மணிப்பூ முண்டகம் கொய்யேனாயின்[3]'' என்றார் பிறரும். புள்ளி யுவடமை நண்டிற்கு அணியாதலின், புள்ளிக் கள்வன் எனப்பட்டது ''பொறிமான் அலவன்[4]'' என்றார் இளங்கோவடிகளும். ஆம்பல், ஆகுபெயர். கூரிய உகிரால் தண்டினைப் பற்றித் துண்டித்தல் நண்டிற்கு இயல்பாகலின் ஆம்பல் அறுக்கும் என்றார். கூரிய உகிருடைமையை, ''விரவும் கொடுந்தாள் அளைவாழ் அலவன் கூருகிர்[5]'' என்றார் பிறரும். உம்மை, தெளியாமை தோன்ற நின்றது. புறத்தொழுக்கம் என்பது முதலாயின எஞ்சிநின்றன. எவன், அறியாப்பொருள் வயிற் செறியத் தோன்றும் வினாவின் கிளவி. கொல்; அசைநிலை

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகிய வழி, அதனை அறிந்த தலைவி அவனோடு புலந்தவிடத்து அவள் தெளியத் தகுவனவற்றை அவன் கூறியது தான் அறிந்துளா ளாகலின் தெளிப்பவும் என்றும், தெளியாமை ஆகாது என்றற்கு உரிய ஏதுவினை உள்ளுறையாற் கூறியும், அவள் தெளியாது புலத்தலே பொருளாகக் கொண்டு நிற்றலின் உண்கண் பசப்பது எவன்கொல் என்றும் கூறினாள். தலைமகன் தெளித்ததே யன்றித் தானும் அஃது இல்லை என உணர்ந்து உள்ளுறுத்து உரைத்துழியும் அவள் தெளி யாமைக்குக் காரணம் அறிந்திலள் என்பது தோன்றப் பசப்பது எவன் என்றாள். இஃது ''அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை, அடங்கக் காட்டுதற் பொருளின்கண்[6] '' தோழி கூறியது. அடங்கக் காட்டுதல் உள்ளுறையாற் பெற்றும்.

அடைகரைக்கண் வாழும் அலவன் ஆம்பற்றாளை அறுக்கும் ஊரன் என்றதனால், தலைவன் தனக்குரித்தாகிய இல்லின்கண்

---

1. அகம். 80. 2. ௸ 236. 3. நற். 191.
4. சிலப். 10 : 91. 5. குறுந். 351. 6. தொல். பொ. 150.

ஒழுகிப் பரத்தையர் தொடர்ச்சி அறுப்பான் என உள்ளுறை கொள்க. இஃது உவமமருங்கில் தோன்றும் இனிதுறு கிளவியின் பாற்படும், பரத்தையர் தொடர்பின்மை தலைமகட்கு இன்பம் பயப்பதாகலின். மெய்ப்பாடு: மருட்கை. பயன் : சிவப்பாற்று வித்தல். (21)

22. அள்ள லாடிய புள்ளிக் கள்வன்
முள்ளி வேரளைச் செல்லு மூரன்
நல்ல சொல்லி மணந்தினி
நீயே னென்ற தெவன்கொ லன்னாய்.

களவினிற் புணர்ந்து பின்பு வரைந்து கொண்டு ஒழுகா நின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்றாக ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ப. உரை : நல்ல........அன்னாய் என்றது இக்காலத்து இங்ஙனம் ஒழுகுகின்றான். அக்காலத்து அங்ஙனம் கூறியது என் கொல் எ. று. சேறாடிய கள்வன் முள்ளி வேரளைச் செல்லும் என்றது, பிறர் கூறும் அலரஞ்சாது பரத்தையர் மனைக்கட் செல்வான் என்பதாம்.

உரை : அன்னாய், சேறு படிந்த புள்ளிகளையுடைய அலவன் முள்ளியின் வேர்க்கண் அமைந்த வளையின்கட் புகும் ஊரன் களவுக்காலத்தே நன்மை பயக்கும் சொற்களைச் சொல்லி மணந்து கொண்டு, கற்புக்காலமாகிய இப்பொழுது நின்னைப் பிரியேன் எனக் கூறியதன் கருத்து என்னையோ, கூறுக எ. று.

அளை, நண்டுவாழும் இடம். ''கள்வன் தண்ணக மண்ணளைச் செல்லு மூரன்[1]'' என இந்நூலாசிரியர் கூறுவது போலவே ''கவைத்தாள் அலவன் அளற்றளை சிதைய[2]'' எனப் பிறரும் கூறுமாறு காண்க. களவுக் காலத்து என்பது முதலாயின எஞ்சி நின்றன. கூடினார்க்குப் பிரியாமை மேலும் நன்மைதருவன

1. ஐங். 27. 2. பெரும்பா. 208.

பிற இன்மையின், நன்மை ஈண்டுப் பிரியாமை மேற்று. அக்காலத்து அச்சொல் தேன்மயங்கு பாலினும் இனிதாயிருந்தமை யின், நல்ல சொல்லி என்றார். ''தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்[1] '' என்றும், '' நல்குவர் நல்ல கூறினும்[2] '' என்றும் பிறரும் கூறுப. நீயல், நீங்குதல்; ''நீயலேன் என் றென்னை அன்பினாற் பிணித்துத் தம் சாயலிற் சுடுதலல்லஃது[3] '' என்றாற் போல. கூறுக என்பது சொல்லெச்சம்

களவு கற்பு என்னும் இருவகைக் கைகோளினும் பிரியாமைச் சொல் நிகழ்வதாயினும், களவின்கண் வரைவு கண்ணியதாய் இன்பப்பயத்த தாகலின், நல்ல சொல்லி என்றும், கற்பின்கண், அது பொருமைக் கேதுவாய்ப் புறத்தொழுக்கத்துப் பிரிவுண்மையைப் புலப்படுத்து நிற்றலின், அவன் கூற்றினையே கொண்டெடுத்தும் கூறினாள். நீயேன் என்றது தலைமகன் கூற்று. ''நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்[5] '' என்பதனால் தலைவன் கண் நிகழ்ந்ததனைத் தலைமகள் நினைந்து கூறினாள். களவிற்போல் ஈண்டு அஞ்சவேண்டுதல் இன்மையின், எவன்கொல் என்றாள். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை. நீயேன் என்ற தனால், தலைமகன்பாற் பிரிவும், உள்ளுறையால் புறத்தொழுக்கமும் கூறியவாறு. கூறவே, அக்காலத்து அவ்வாறு கூறியோன் இக் காலத்து இவ்வாறு கூறியொழுகுதல் கூடாது என்றாளாம். ஆயினும், தலைமகன்பால் முரணிய சொன்னிகழ்ச்சி உண்டாயிற் றென ஆராய்ந்து கூறல், ஆற்றாமையாற் கூறுவார்க்கு அமைவது அன்மையான், இக்காலத்து இவ்வாறு கூறியொழுகுவான் அக் காலத்து அவ்வாறு கூறியது என்னை என்றாள் என்பது கருத்தாகக் கொள்க. பழையவுரைகாரரும், ''இக்காலத்து இங்ஙனம் ஒழுகு கின்றான், அக்காலத்து அங்ஙனம் கூறியது என்கொல் என்றவாறு,'' என்று கூறுதல் காண்க. இவ்வாறு தலைமகன் வஞ்சித்தான் என்பதுபடக் கூறுதல் தலைமகட்கு வழுவாயினும், ''மங்கல மொழியும் வைஇய மொழியும், மாறி லாண்மையிற் சொல்லிய

1. யா. விரு. மேற். சூ. 28. 2. அகம். 241. 3. கலி. 137.
4. தொல். பொ. 43.

மொழியும், கூறியல் மருங்கிற் கொள்ளும் என்ப '' என ஆசிரியர் கூறுதலால் அமையும் என்க.

அலவன் அள்ளலாடியதை நினையாது முள்ளி வேரளைக்கண் புகும் ஊரன் என்றதனுல், புறத்தொழுக்கத்தால் தன்னைப் பிறர் கூறும் அலர்க்கு அஞ்சாது தலைவன் பரத்தையர் மனைக்கட் புகுகின்ருன் என உள்ளுறை காண்க. ''களவுங் கற்பும் அலர் வரை வின்றே [2]'' என்றதனுல் அலர் கூறினுள். இது புறஞ்சொல் மாணுக் கிளவி. ''நல்ல சொல்லி மணந்து'' என்பது, மறைந்தவை யுரைத்தல். ஏனை மெய்ப்பாடு: இளிவரல். பயன் ஆற்ருமை கூறல். (22)

23. முள்ளி வேரளைக் கள்வ ஞட்டிப்
பூக்குற் றெய்திய புனலணி யூரன்
தேற்றஞ் செய்துநப் புணர்ந்தினித்
தாக்கணங் காவ தெவன்கொ லன்னுய்.

இதுவுமது.

ப. உரை: தன்னூர் விளையாட்டுமகளிர் அளையின்கண் வாழும் அலவனை அலைத்துப் பூக்குற்று விளையாடினுற் போலத் தன் மனைக் கண் வாழும் நம்மை வருத்திப் புறத்துப் போய் இன்பம் நுகர்வான் எ. று.

உரை: அன்னுய், மகளிர் நீர்முள்ளியின் வேர்க்கண் உள்ள வளையின்கண் வாழும் அலவனை அலைத்தும் பூக்களைப் பறித்தும் விளையாட்டெய்திய புனலணி யூரன், களவுக்காலத்து நாம் தெளியத்தகுவன கூறித் தெளிவித்து நம்மை மணந்து கொண்டு, இப்பொழுது, ஒழுக்கம் உரை ஆகிய இரண்டினுலும் தீண்டி வருத்தும் தெய்வமாவது என்னையோ கூறுக எ. று.

அலவனை அலைத்தலும், பூக்குறுதலும் மகளிர் விளையாட் டாகலின், மகளிர் என்பது வருவிக்கப்பட்டது. அலவனை அலைத்தல்

---

1. தொல். பொ. 244. ஷை ஷை 162.

மகளிர் விளையாட்டாதல், ''இலங்குவளை தெளிர்ப்ப அலவனுட்டி, முகம்புதை கதுப்பினள் இறைஞ்சி நின்றேளே[1]'' என இந் நூலுள்ளும், ''சேர்ப்பே ரீரளை அலவற் பார்க்கும் சிறுவிளை யாடலும் அழுங்க[2]'' எனப் பிறநூலுள்ளும் கூறுப. எய்திய வூரன், புனலணியூரன் என இயைக்க. புனலணியூரன், புனலால் அழகு பெற்ற ஊரன். தேற்றம் செய்து என்றது ஒரு சொல்லாய்த் தேற்றியென்னும் பொருட்டு. நப்புணர்ந்து என்பது, ''நப்புணர் வில்லா நயனிலோர் நட்பு[3]'' என்புழிப்போல, ஐகாரவேற்றுமைத் திரிபு புணர்ச்சி முடிபு; ''மெல்லெழுத்து மிகுவழி[4]'' என்ற சூத்திரத்து, ''அன்ன பிறவும்'' என்றதனுல் இஃது அமைந்தது. ஒழுக்கம், புறத்தொழுக்கம். உரை, நீயேன் என்ருற் போல்வன. ஒன்று நின்றே ஏனையது முடிக்கும் என்னும் இலக்கண முறையால் இனி என்றது கொண்டு, களவுக்காலம் வருவித்துரைக்கப்பட்டது. அணங்கு, காமநோயால் உயிர்கொள்ளும் தெய்வமகள். தாக்குதல், தீண்டுதல்.

களவின்கண், வன்புறையாலும், ஒழுக்கநெறியாலும் தன்னை யின்றி அமையான் என்பது தோன்ற ஒழுகித் தன் நெஞ்சு கவர்ந்துகொண்டான் என்பாள், தேற்றம் செய்து என்றும், புணர்ந்தவழி என்றும் பிரிவிலனும் என்பது படக்கூடினுன் என்பாள், நப்புணர்ந்து என்றும், இவ்வாறு தன்னெஞ்சினை அவன்பால் ஈர்த்துக் கொண்டதன் மேலும், புறத்தொழுக்கத்தால் தான் மேனிநலங் குன்றி வருந்துமாறு செய்தான் என்பாள், தாக்கணங்கு என்றும், அவ்வாருதல் அவற்கு இயல்பன்று என்பது பண்டு கூடிய வழி இன்மையினுல் அறிந்துளா ளாகலின், ஆவது எவன் கொல் என்றும் கூறினுள். தீண்டுதலும், தீண்டப்பட்டார் நெஞ்சைக் கவர்ந்து துன்புறுத்தலும் தாக்கணங்கின் செயல் என்பது, ''தெள்ளரிச் சிலம்பார்ப்பத் தெருவின்கண் தாக்கிநின், உள்ளங்கொண் டொழித்தாளைக் குறைகூறிக் கொளநின்ருய்[5]'' என்பதனுல் அறிக. இதனுல் தலைவிமாட்டுப் பொருமை என்னும்

1. ஐங். 197. 2. நற். 123. 3. ஷை 165.
4. தொல். எழுத். 157. 5. கலி. 69.

மெய்ப்பாடு தோன்றிற்று. இது ''கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின், அலமரல் பெருகிய காமத்து மிகுதிக்கண்[1]'' தலைமகன் செய்கை வேறுபாடு கண்டு தலைவி வருந்திக் கூறியவாறு.

மகளிர் அளைவாழ் அலவனை அலைத்துப் பூக்குற்று விளையாட்டெய்தும் ஊர் என்றதனால், தலைமகன் மனையின்கண் வாழும் தன்னை வருத்திப் பரத்தையர் மனைக்கண் இன்பம் நுகருகின்றான் என உள்ளுறை கொள்க.

இனி, அலவனை ஆட்டிப் பூவைக் குற்று எய்திய புனல் அணிந்த ஊரன் என்று கொள்ளினுமாம். மெய்ப்பாடும் பயனு மவை. (23)

24. தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூர்
எய்தின னாகிநின்று கொல்லோ மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்ப தெவன்கொ லன்னாய்.

பரத்தையருள்ளும் ஒருத்தியைவிட்டு ஒருத்தியைப்பற்றி ஒழுகுகின்றான் என்பது கேட்ட தோழி வாயிலாய் வந்தார் கேட்பத் தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை: தாய்சாப் பிறக்கும் .... அவனூர் என்றது, தொன்னலம் சாம்வண்ணம் பிறக்கும் பொய்யுடனே செய்தன சிதையத் தோன்றும் அருளின்மையு முடையான் எ. று.

உரை: அன்னாய், தாய் சாவப் பிறக்கும் புள்ளி பொருந்திய அலவனொடு தன் பார்ப்பினையே தின்னும் முதலையினையுடையது மகிழ்நனுடைய வூர்; அப்பெற்றித்தாய ஊரையுடையவன், சேரியிலுள்ளார் கூறுவதனால் இங்கு எய்தினனாயிற்றோ? அங்ஙனம்

---

1. தொல். பொ. 147.

எய்துவோன், பொன்னாலாகிய தொடிகள் ஒலிக்கத் தன்னைக் கூடிய மகளிரது நலத்தை நுகர்ந்து வைத்தும் அதுகெடப் பின்னர் அவரையே துறப்பது யாதுகருதியோ, கூறுக எ. று.

சாவவென்னும் செயவெனெச்சம் இறுதி வகரம் கெட்டது; ''சாவ வென்னும் செயவெ னெச்சத், திறுதி வகரம் கெடுதலு முரித்தே[1]'' என்றார் ஆசிரியரும். மகிழ்நன் என்பது மருதத்துத் திணைநிலைப் பெயர். ''தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன[2]'' என்பதனால், முதலையினது பிள்ளை பார்ப்பு எனப்படடது. இனிப் பேராசிரியர், முதலை தவழ்வனவற்றுள் அடங்குமென்பார், ''ஆமையும் முதலையும் நீருள் வாழினும் நிலத்தியங்குங்கால் தவழ் பவை யெனப்படும்'' என்றார். தன் பார்ப்பினுள் நோயுற்று வலியிழந்தவற்றைத் தன் பகையினம் பற்றி அவற்றின் வழியே பிறவற்றிற்கும் தனக்கும் ஊறு செய்யுமென உணர்ந்து, தின்னும் இயல்பிற் றுதல்பற்றி, பிள்ளை தின்னும் முதலை எனப்பட்டது இதன் இயல்பினை, ''தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை[3]'', என்புழிக் கூறுதும். செய்யுளாகலின், சுட்டு முற்படவந்தது. பொலம் தொடி, பொன்னென்னும் சொல்லின் செய்யுண் முடிபு பெற்றது. தெளிர்த்தல், ஒலித்தல்; ''செறிதொடி தெளிர்ப்ப வீசி[4]'' என்பதனாலும் அறிக. முயங்கியவர் நலங்கொண்டு துறப்பது என்றது சேரியோர் கூற்று. இது, கூற்றவன் இன்மையிற் கொண்டெடுத்து மொழிந்தது; ''ஊரும் அயலும் சேரி யோரும், நோய்மருங் கறிநரும் தந்தையும் தன்னையும், கொண்டெடுத்து மொழியப் படுவதல்லது கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்[5]'' என்பது இலக்கணம்.

உள்ளுறைக்கண், தலைமகனைக் கொடுமை கூறும் வகையால், அவன் வாராமைக்குரிய ஏதுவுணர்த்தினமையின், அவன் அன்புடையன் என்றுதல் பிரிவின்றி உறைவன் என்றுதல் கோடல் அமையாது என்னும் கருத்துப்பட வாயில்மறுக்கின்றமையின்,

1. தொல். எழுத். 209. 2. ஷை பொ. 560. 3. ஐங். 41.
4. நற். 20. 5. தொல். பொ. 503.

எய்தினனுகின்று கொல்லோ என்ருள். ஓகாரம் வாரான் என்னும் துணிவையே வற்புறுத்திற்று. பரத்தையருள்ளும் ஒருத்தியைக் கைவிட்டு, வேருெருந்தியைப்பற்றி ஒழுகுகின்ருன் என்பது கேட்டு, அப்பெற்றியோன் ஈண்டு எய்தினும் மீட்டும் பிரிவே நிகழ்த்தி, எம் நலம் கெடுவித்தலையே செய்வானுகலின், அவன் பொருட்டு வாயில்வேண்டுவது என்னை என்பாள், முயங்கிய அவர் நலங் கொண்டு துறப்பது எவன்கொல் என்ருள். புணர்ந்தோரைப் பிரிந்தவழி, அவர் மேனி வேறுபட்டு அழகு வாடுதலின் அவர் நலங்கொண்டு என்றும், முயங்கியவழிப் பிறந்த இன்பச் சிறப்பினை பொலந்தடி தெளிர்ப்ப எனச் சிறப்பித்தும் கூறினுள். துறப்பது என்றது, அத்தகைய இன்பத்தை முயக்கத்தால் உதவினுர்பால் உளதாகும் தொடர்பு அற நீங்கும் அன்பின்மை குறித்து நின்றது. இவ்வாற்ருல் தலைமகனது செயற் கொடுமையினை வெளிப்படக் கிளத்தல் வழுவாயினும், வாயில் மறுக்கும் குறிப்பினுல், ஆற்ருமையாற் கூறுதலின் அமையும் என்க. ''வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல், தாவின் றுரிய தத்தங் கூற்றே[1]'' என்பது விதி.

தாய் சாவப் பிறக்கும் கள்வனையும், பிள்ளை தின்னும் முதலையினையும் உடைய ஊர் என்றதனுல், முயங்கிய மகளிர் தொன்னலம் கெடுக்கும் அன்பின்மையும், இனி முயங்கும் மகளிர் நலம் நுகர்ந்து பிரியும் அருளின்மையும் உடையன் என்ருளாம். இது தலைமகள் கொடுமை உணர்த்திய துனியுறு கிளவி. இதுவே பழையவுரைகாரர்க்கும் கருத்தாதல் அறிந்துகொள்க. மெய்ப்பாடு: இளிவரலைச் சார்ந்தவெகுளி. பயன்: வாயின் மறுத்தல்.

பொலங்தொடி தெளிப்ப, தெழிப்ப எனவும் பாடம் உண்டு. தெழித்தல் என்பது 'எல்வளை தெளிப்ப[2]'' என்புழிப் போலத் தெளிர்த்தற் பொருட்டே. (24)

1. தொல். பொ. 241. 2. ஷை ஷை 167.

25. அயல்புறந் தந்த புனிற்றுவளர் பைங்காய்
வயலைச் செங்கொடி கள்வ னறுக்கும்
கழனி யூரன் மார்புபலர்க்
கிழைநெகிழ் செல்ல லாகு மன்னாய்.

இதுவுமது.

ப. உரை: அயல் புறந்தந்த .... அறுக்கும் என்றது எம் புதல்வன் வருந்துவதும் உணராது நம்மை வருத்து வான் எ. று.

உரை: அன்னாய், மனைக்கு அயலில் நட்டுப் பேணி வளர்த்த முற்றாத பசிய காயினையுடைய வயலையின் சிவந்த கொடியை அலவன் தன் கூருகிராால் அறுக்கும் கழனியையுடைய ஊரன் மார்பு ஒருவர்க்கே யன்றி மகளிர் பலர்க்கு இழை நெகிழத்தக்க இன்னாமையைத் தருவதாகும் எ. று.

அயல் புறந்தந்த வயலை, பைங்காய் வயலை என இயையும். புறந்தருதல் ஓம்புதல் மனைக்கண்ணேயன்றி வயற்புறத்தும் வயலையை நட்டு வளர்த்தல் மரபாதல்பற்றி, ''அயல் புறந்தந்த வயலை'' எனப்பட்டது; ''மனை நடு வயலை[1]'' என்று முற்கூறினர். புனிறு, ஈன்றணிமை; ஈண்டுக் காய் தோன்றிய செவ்வி. மார்பு செல்லலாகும் என இயைக்க. செல்லல், இன்னாமை. ''செல்லல் இன்னல் இன்னா மையே[2]'' என்ப. இழை நெகிழ் செல்லல், இழை நெகிழ்தற்குக் காரணமாய செல்லல்; ''இழைநெகிழ் பருவரல்[3]'' என்று வெள்ளி வீதியார் கூறியவாற்றாலும் இப் பொருண்மை நுணியப்படும்.

பரத்தையருள்ளும், ஒருத்தியைக் கைவிட்டு, ஒருத்தியைப் பற்றி ஒழுகுகின்றான் என்பது கேட்டுப் பொறாத உள்ளத்தளாய் வாயிலாய் வந்தார் கேட்பக் கூறுதலின், பலர்க்கு இழைநெகிழ் செல்லலாகும் அன்னாய் என்றாள். எனவே, அவன் மார்பு

1. ஐங். 21. 2. தொல். சொல். 302. 3. நற். 70.

நினைந்து மேனி வேறுபட்டு இழை நெகிழ்ந்து அவள் வருந்துவது உள்ளுறையால் பெற்றும். கூடினர் உள்ளம் குளிர மூழ்குமாறு உயர்ந்து அகன்று ஊற்றின்பம் மிகப்பயந்து, பிரிவின்கண் தன்னையே நினைந்து நினைந்து ஏங்கி மெலிவிக்கும் இயல்பிற்றாகலின்' மார்பு எனப் பிரித்துச் சிறப்பித்தாள். ''தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத் தாய்முகம் நோக்கி வளர்ந்திசி னாஅங்கு, அதுவே ஐய நின் மார்பே, அறிந்தனை ஒழுகுமதி அறனுமா ரதுவே[1]'' எனப் பிறாண்டுங் கூறுமாற்றால் இன்பத்தையும், ''கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன், மணங்கமழ் வியன்மார்பு அணங்கிய செல்லல்[2]'' எனப்பிரிவினால் துன்பத்தையும் தலைவன் மார்பு பயக்கும் இயல்பிற்றாதலைச் சான்றோர் கூறுதல் காண்க.

வயலைச் செங்கொடியின் பசிய காய் வருந்த அதன் கொடியை அலவன் அறுக்கும் என்றதனால், மகற் பயந்து மனையகத்திற்கும் நம் நலத்தினை நம் மகன் வருந்தச் சிதைக்கின்றான் என உள்ளுறுத் துரைத்தாளாம். இனி, அயல் வளர்ந்த வயலையின் தாய் வருந்தச் செங்கொடியை அலவன் அறுக்கும் என்றது, புறத்தே தன்னைக் கூடித்தனக்கும் பெண்டிராகிய பரத்தையரும் வருந்த அவர் தொடர்பறுத்து ஒழுகுகின்றான் என உரைப்பர் அப் பொருண்மை, ''பலர்க்கு இழைநெகிழ் செல்லலாகும்'' என்பதனாலும் அடங்கும். மெய்ப்பாடும் பயனு மவை. (25)

26. கரந்தையஞ் செறுவிற் றுணைதுறந்து கள்வன்
வள்ளை மென்கா லறுக்கு மூரன்
எம்மும் பிறரு மறியான்
இன்ன னாவ தெவன்கொ லன்னாய்.

தலைமகற்கு வாயிலாகப் புகுந்தார், ''நின் முனிவிற்கு அவன் பொருந்தா நின்றான்,'' என்றவழி, ''அவன்பாடு அஃதில்லை'' என்பதுபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

---

1. ஐங். 44. 2. அகம். 22.

ப. உரை : துணைதுறந்து .... ஊரன் என்றது தான் துணையாகக் காதலித்தொழுகுகின்ற பரத்தையையும் நீங்கி எம்மையும் வருத்தி ஒழுகுவான் எ. று.

வேறுரை : கரந்தையஞ் செறுவின் துணைதுறந்து என்றது நின்னைத் துறந்து எ. று, வள்ளை மென்கால் அறுக்கும் என்றது பரத்தையருள்ளும் ஒருத்தியை விடுவதும் ஒருத்தியைப் பற்றுவதுமாகி அவர்களை வருத்துகின்றான் எ. று. எம்மும் பிறரும் அறியான் என்றது எம்மையும் பிறரையும் ....

உரை : கரந்தைக்கொடி படர்ந்த வயலின்கண் அலவன் தன் பெடையினைத் துறந்து சென்று வள்ளைக் கொடியின் மெல்லிய தண்டினை அறுக்கும் ஊரன் எமது இயல்பும் பரத்தையரியல்பும் நன்கறியாது இவ்வியல் பினனாய் ஒழுகுதற்குக் காரணம் என்னை எ. று.

என்றது, தலைமகனைக் கொடுமை கூறுதற்கண், ஒரோவழி யாமும் பரத்தையரும் ஒத்த இயல்பினேமாயினும், எம்மியல்பும் அவரியல்பும் வேறுபடுமாற்றை அறியாது, அவரைத் தொடர்பறுத்து ஒழுகுதற்குக் காரணம் அவரவர் பாடறிந்து ஒழுகும் அவனது பண்புடைமையேயாம் என்பதாம். எனவே, எம்மாலும் பரத்தையராலும் கொடுமை கூறப்படுவதல்லது அவன்பாற் கொடுமை இல்லை என்றாளாயிற்று.

கரந்தை, ஒருவகைக்கொடி. ''காய்த்த கரந்தை மாக்கொடி விளைவயல், வந்திறை கொண்டன்று தானை[1]'' என்றும், ''கரந்தையஞ் செறுவின் வெண்குரு கோப்பும்[2]'' என்றும் வருவனவற்றால், இஃது ஒரு வகைக்கொடி என்பதும் வயற்கண் படர்வ தென்பதும் பெற்றாம். இதனைக் கொட்டைக் கரந்தையென்று இக்காலத்திற் கூறுப. வள்ளை, இதுவும் ஒருவகைக் கொடி. இதன் தண்டு உள்ளிற் புழையுடைய தென்பது, ''அந்தூம்பு வள்ளை[3]'' என்பதனால் அறிக. எவன் என்றது அறியாப்

---

1. பதிற். 40. 2. அகம். 226. 3. அகம். 6,376.

பொருட்கண் வந்தது. கொல், அசைநிலை. இன்னனுவது, அழிவில் கூட்டத்துக்குரிய மனையகத்துப்போலப் புறத்தொழுக்கத்தும் புணர்வும் பிரிவும் நிகழ்த்தி ஒழுகுதல். பிறர் என்றது பரத்தையரை. எம்மும் என்றது, தோழி தன்னையும் ஏனை வாயில்களையும் உளப்படுத்திக் கூறியது.

வாயில்கள் தலைவன் கொடுமையினைக் கூறல் வழுவாயினும், ஒரோவழி ''மனைவி முன்னர்க் கையறு கிளவி, மனைவிக் குறுதியுள்வழி யுண்டே[1]'' என்பதனுல், அஃது அமையுமாறு அறிக. அதனுல், அவ்வாயில்கள் கூறிய கொடுமையினை உள்ளுறத்துரைத்தாள். தான் காதலித்த பரத்தையர்பால் தொடர்பறுத்து ஒழுகும் இயல்புடையோன், நம்பால் மேவியவழியும் அது செய்தொழுகும் இயல்பினனும் என்பதுபட அவர் கூறியதனையே தானும் கொண்டு கூறலின் எம்மும் என்றும், பரத்தையர் சேரி முற்றும் அலர் கூறலின் பிறரும் என்றும், அறிந்தவழி அவ்வாயில்கள் போந்து தலைவனைக் கொடுமை கூறலும் பரத்தையர் சேரி அலருரைத்தலும் இல்லையாம் ஆகலின் அறியான் என்றும், அவரவர் பாடறிந்து ஒழுகும் பண்பினை உடைய னுகலின், பரத்தையர் நன்றி சான்ற கற்புடையராகும் பாடு இலராதல் பற்றி அவர் தொடர் பறுத்து ஒழுகுகின்றமையின், வேறு காரணமின்மை கூறுவாள் இன்ன னுதற்குக் காரணம் பிறிதொன்றும் இன்று என்றும் கூறினுள். உள்ளுறையில், தலைமகன் ஒழுக்கத்தின் இயல்பு கூறுகின்ருளாகலின், இன்னனுவது என வாளாது கூறினுள்.

பாடறிந்தொழுகும் பண்புடைத் தலைமகனுக்குப் புறத்தொழுக்கமும் அமையுமென்றல், ''அடங்கா ஒழுக்கத்து அவன் வயின் அழிந்தோளை, அடங்கக் காட்டுதற் பொருளின்கண்[2]'' நிகழும் கூற்றுவகையால் அமைக்கப்படும். தலைமகன்பால் அறியாமை சார்த்திக்கூறல் வழுவாயினும் அவன் பண்புடைமையைச் சிறப்பித்து நிற்றலின் அமையும் என்க. ''சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு அனை நால்வகையும்

1. தொ. பொ. 166. 2. பொ. 150.

சிறப்பொடு வருமே[1]'' என்பதற்கு இளம்பூரணர் கூறும் உரை காண்க.

கரந்தைச் செறுவில் துணைதுறந்து சென்ற கள்வன் வள்ளைக் கொடியின் மெல்லிய தண்டினை அறுக்கும் ஊரன் என்றதனால், தலைமகன் தான் காதலித்த பரத்தையைக் கைவிட்டுப் பிற பரத்தையரைப் பற்றிப்பின் அவரையும் அம்முறையே துறந்து ஒழுகுகின்றான் என உள்ளுறை கொள்க.

தலைமகன் பண்புடைமை மொழிந்து தலைமகளை வாயில் நேர்விக்கும் குறிப்பினள் என்பது இதுகாறும் கூறியவாற்றாற் பெறப்பட்டமையின், தோழி தலைமகளது உள்ளத்தில் தலைவனுடைய கொடுமை யொழுக்கத்துச் கொடுமையினை விதந்து நினைப்பித்து வாயில் நேர்வித்தல் சிறப்பன்மையின் பழையவுரை குறிக்கும் வேறுரை பொருந்தாமை யறிக. மெய்ப்பாடு : பெருமிதம். பயன் தலைமகன் இயலெடுத்துக்கூறி வாயில் நேர்வித்தல்.

இனி, இன்னாவது என்பது பாடமாயின், எம்மையும் பிறரையும் வேறுபட்ட இயல்பினர் என்பதனை அறியாது எம்பாலே போலப் பிறர்பாலும் தன் பிரிவால் இன்னாமையைச் செய் தொழுகுவானாவது என்றுரைக்க. இன்னான் என்பது இப் பொருட்டாதல், ''புணர்வின் இன்னான் அரும்புணர் வினனே[2]'' என வருதலாலுணர்க. இனி, இப் பெற்றியனாய் ஒழுகுவது எனினுமாம். (26)

27. செந்நெலஞ் செறுவிற் கதிர்கொண்டு கள்வன்
தண்ணக மண்ணளைச் செல்லுமூரற்
கெல்வளை நெகிழச் சாஅய்
அல்ல லுழப்ப தெவன்கொ லன்னாய்.

1. தொல். பொ. 241. 2. ஐங். 150.

தலைமகன் மணக்கண் வருங்காலத்து வாராது தாழ்த்துழி, அவற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்று எனக் கருதி வருந்தும் தலைமகட்குத் தோழி கூறியது.

உரை: அன்னாய், செந்நெல் விளையும் வயலின்கண் அலவன் அந் நெற்கதிரைக் கவர்ந்துகொண்டு குளிர்ந்த வாழிடமாகிய தன் மண்ணளையின்கட் புகும் ஊரன் பொருட்டு நீ நின் இலங்குகின்ற வளைகள் நெகிழும்படி மெலிந்து வருந்துவது என்னையோ, கூறுக எ. று.

செந்நெலஞ்செறு என்பது "விரிக்கும்வழி விரித்தல்" என்பதனால் அம்மு விரிந்து நின்றது. "செந்நெலஞ்செறுவின் அன்னம் துஞ்சும்[1]" என்று சான்றோர் கூறுதலால் செந்நெல் நீர்வளம் நிரம்பிய வயல்களில் விளையும் இயல்பிற்று என அறிக. இதன் பூ நனைந்த வேங்கைப் பூவை நிகர்க்கும் என்றும், இதன் கதிர் பண்டை நாடக மகளிர் அணிந்த வயந்தகம் என்னும் அணியை ஒத்து இருக்கும் என்றும் கூறுப. "அகடுநனை வேங்கை வீகண்டன்ன, பகடுதரு செந்நெல்[2]" என்றும், "வள்ளித ழுறஃடி வயங்கிய ஒருகதிர், அவைபுகழ் அரங்கின்மேல் ஆடுவாள் அணிநுதல், வகைபெறச் செரீஇய வயந்தகம் போல் தோன்றும்[3]" என்றும், "செந்தாமரைப்பூ வுறநிமிர்ந்த செந்நெலின், பைந்தார்ப் புனல்பாய்ந் தாடுவாள் — அந்தார், வயந்தகம்போல் தோன்றும்[4]" என்றும் வருவன காண்க. இச் செந்நெல்லை இடித்துப் பெற்ற அவலில் பாலையும் கருப்பஞ் சாற்றையும் பெய்துண்டல் மிக இனிதாம் என்பது யாம் அறிந்ததேயாயினும், இல் வழக்கம் மிகப் பழங்காலத்தே தோன்றியதென்பது, "கரும்பின் விளைகழை பிழிந்த வந்தீஞ் சேற்றொடு, பால்பெய் செந்நெற் பாசவற் பகுக்கும். புனல்பொரு புதவின் உறந்தை எய்தினும்[5]" என்பதனால் அறியப்படும். இச்செந்நெல் வயலில் நீரருமையின் தாமரை மலரும் என்பர்; "அகன்

---

1. நற். 73. 2. புற. 390. 3. கலி. 79. 4. திணைமா. 128.
5. அகம். 237.

வயலொலி செந்நெலிடைப் பூத்த முள்ளரைத் தாமரை[1] '' என்றும், '' எரியகைந் தன்ன தாமரை யிடை யிடை, அரிந்து கால்குவித்த செந்நெல்[2] '' என்றும் சான்றோர் கூறுவர். நீர் இடையருமையின் ஈரம் புலராத இடமாகலின், தண்ணக மண்ணளை என்றார். குவ்வுருபு பொருட்டு பொருளது, எல்வளை என்புழி, எல், இலக்கம் ; '' எல்லே யிலக்கம்[3] '' என்ப. சாஅய், மெலிதல். '' ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்[4] '' என்பது தொல்காப்பியம்.

உள்ளுறையால், தலைமகன்பாற் புறத்தொழுக்கம் இல்லை என்பதுபடக் கூறிய தோழி, வெளிப்படையாய். '' இல்லாத தொன்றனை உண்டுபோலும் என உட்கொண்டு மெலிதல் நன்றன்று, '' என்று கூறுவாள் எல்வளை நெகிழச் சாஅய் அல்லல் உழப்பது எவன் கொல் என்றாள். எனவே, சென்ற காதலர் தம் செய்வினை முற்றி விரைவின் மீள்வர் எனக் கருதியிருத்தலை விடுத்துச் சிறிது தாழ்த்தது கொண்டு, அவர்பால் தவறுண்டெனப் பிறழ நினைந்து வேறுபடுதல் நெறியன்று என்று கூறியவாரும். தலைமகளைத் தெளிவித்து ஆற்றுவித்தற்பொருட்டு நெருங்கிக் கூறுகின்றாளாகலின், எல்வளை நெகிழச் சாஅய் என்றதனோ டமையாது அல்லல் உழப்பது எவன் என்று கூறினாள் '' எல்வளை நெகிழச் சாஅய் '' என்றதனால் உடம்பு நனி சுருங்கலும், '' அல்லல் உழப்பது எவன் '' என்றதனால், இல்லது காய்தலும் தலைமகள் மெய்ப்பட்டுத் தோன்றினமை பெற்றாம்.

'' வன்புறை குறித்த வாயிலெல்லாம், அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின், சிறைப்புறங் குறித்தன்று என்மனார் புலவர்[5] '' என்புழிச் சிறைப்புறங் குறித்தலாவது '' கற்பெனப்பட்ட சிறை மேல் வைத்து ஆற்றுவித்தலென்பது '' என்றும், '' நம் பெருமான் தன் ஆண்மைத் தன்மை காட்டிப் பிரிந்தார் ; நீயும் அவர் கருதியது முடித்து வருந்துணையும் கற்புக் காத்திருக்க வேண்டும் என்றும்,

---

1. கலி. 79. 2. அகம். 116. 3. சொல். 269.
4. சொல். 330. 5. இ. அ. பொ. 54.

சான்ருேர் மகளிரென்பார் சிறியரன்றிப் பெரியராகல் வேண்டும் ……. …. …. தங்குலநோக்கித் தம் கற்புக்காத்து ஒழுகுதலாகிய அதனின் மிக்கதில்லை என்றும், இவ்வகை ஆற்றுவித்தல் சிறைப் புறங்குறித்தல் என்பது'' என்றும் நக்கீரனர் கூறுமாற்ருல் இஃது அமையுமாறறிக. இனிச் ''சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்[1]'' என்பதனல், அறஞ்செய்தற்குப் பொருள்வயிற் பிரிந்தான் என உள்ளுறுத்துக் கூறி, அப் பெற்றியோன் பொருட்டு நீ வேறுபடுவது என்னை என்ருளாம்.

அலவன் நெற்கதிரைக்கொண்டு மண்ணளைக்குட் செல்லும் என்றதனல் தலைமகன் செய்வினைப்பயன் கொண்டு விரைய மீளுவன் என உள்ளுறை கொள்க. கொள்ளவே, தலைமகன்பாற் புறத்தொழுக்கம் இல்லை என்றவாருயிற்று. மெய்ப்பாடு: தலைவியிடைத் தோன்றிய வருத்தம் பற்றிய இளிவரல். பயன்: தலைவி கேட்டு ஆற்றியிருப்பாளாவது.

இனி, இஃது, ''அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தலை, அரோடங்கக் காட்டுதற் பொருளின்கண்[2]'' நிகழும் தோழி கூற்றுக்கு இதனைக் காட்டுவர் நச்சினர்க்கினியர்; ஆயினும் அடங்காவொழுக்கம் அவன்வயின் உண்டு என்பது, இக்கூறிய வற்ருல் இப்பாட்டின் கட் பெறப்படாமை காண்க.

செங்நெற் செறுவின் கதிர்கொண்டு என்றும் பாடம் உண்டு. (27)

28. உண்டுறை யணங்கிவ ளுறுநோ யாயின்
தண்சேறு கள்வன் வரிக்கு மூரற்
கொண்டொடி நெகிழச் சாஅய்
மென்ருேள் பசப்ப தெவன்கொ லன்னய்.

இற்செறித்த விடத்துத் தலைமகட்கு எய்திய வேறுபாடு கண்டு, ''இது தெய்வத்தினல் ஆயிற்று,'' என்று தமர் வெறியெடுப்புழி, அதனை விலக்கக் கருதிய தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

---

1. தொல். பொ. 150. 2. ஷை ஷை 150.

உரை: அன்னாய், உண்ணுநீர் கொள்ளும் துறைக்கண் உறையும் தெய்வம் இவளுற்ற நோய்க்குக் காரணம் என்று கருதினையாயின், தண்ணிய சேற்றினை அலவன் தன் நடையால் வரிக்கும் ஊரன் பொருட்டு இவள் ஒள்ளிய தொடி நெகிழுமாறு தளர்ந்து மெல்லிய தோள்கள் பசந்து வேறுபடுவது என்னையோ, கூறுக எ. று.

இடத்துநிகழ் பொருளின்கட் படும் இயல்பு இடத்தின்மேற் கூறுவதோர் இயைபுபற்றி உண்டுறை எனப்பட்டது நோய் காரணத்தின்மேற்று. அணங்கு தெய்வம். நீர்த்துறைக்கண் தெய்வம் உறையும் என்பது, ''அணங்குடைப் பனித்துறைக் கைதொழு தேத்தி, ஆயும் ஆயமோ டயரும்[1]'' என்பதனாலும் அறியப்படும். ஆயின் என்றது ஆகாமைக் குறிப்புணர நின்றது. கள்வன் வரித்தல், கூரிய கால்களால் கோலமிட்டதுபோலச் சேற்றின் கட் சுவடுபடுத்தல். ''அவளைவாழ் அலவன் கூருகிர் வரித்த, ஈர்மண லீர்நெறி[2]'' என்றார் பிறரும்.

உண்டுறை அணங்கு இவள் உறு நோய் என்றது தமர் கூற்றினைக் கொண்டெடுத்து மொழிந்தது. இவளுற்ற நோய்க்கு அணங்கு காரணமாயின், ஊரன் பொருட்டு மேனி வாடுதலும் மெலிதலும் பிறவும் இலவாம்; ஆகலின், மென்றோள் பசப்பது எவன் என்றும், தோல் எய்திய பசப்பினும் மேனி வாட்டம் தொடி நெகிழ்ச்சியால் எளிது புலனாதலின், ஓண்டொடி நெகிழச் சாஅய் எனச் சிறப்பித்தும் கூறினாள். எனவே, இவள் வேறுபாடு தலைமகன் பால் உளதாகிய நட்புக் காரணமாக நேர்ந்தது எனப் பட்டாங்கு மொழிந்து அறத்தொடு நின்றாளாம். இஃது அறத்தொடு நிலைப்பகுதி ஏழனுள் உண்மை செப்பல். அவ்வேழும், ''எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல், கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாடு, உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ, அவ்வெழு வகைய என்மனார் புலவர்[3]'' என ஆசிரியர் கூறுமாற்றான் அறிக. இது குறிஞ்சி யாயினும், கருப்பொருளால் மருத மாயிற்று. இனி வருவனவும் அன்ன.

---

1. அகம். 240. 2. குறுந். 351. 3. பொ. 207.

அலவன் வரித்தலால் தண் சேறு அழகுறுதல் போல, தலைவனது வரைவினுள் இவள் வேறுபாடு நீங்கி மகிழ்வள் என்று உள்ளுறை கொள்க. மெய்ப்பாடு: அச்சம். பயன்: அறத்தொடு நிற்றல். (28)

உறை நோய் என்பது பாடமாயின், விடுதல் விடையென வருதல்போல உறுதல் உறையென வந்ததாம் என்க.

29. மாரி கடிகொளக் கர்வலர் கடுக
வித்திய வெண்முளை கள்வ னறுக்குங்
கழனி யூரன் மார்புற மரீ இத்
திதலை யல்கு னின்மகள்
பசலை கொள்வ தெவன்கொ லன்னாய்.

வரைவெதிர் கொள்ளார் தமர் அவண் மறுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

ப. உரை: மாரிகடிகொள ....கடுக என்றது, மாரி நின்ற யாமத்துக் காவலரைத் தப்பி அவன் தலைவியை எதிர்ப்பட்டமை உணர்த்தியது எனக்கொள்க. இஃது உண்மை செப்பல் என்னும் அறத்தொடு நிலை.

உரை: அன்னாய், மழை மிக்க பெயலைச் செய்யவும் காவலர் நன்கு காத்தலைச் செய்யவும் சிறிதும் அஞ்சாது போந்த, விதைத்த வெள்ளிய முளைகளை அலவன் துண்டிக்கும் கழனிகளையுடைய ஊரன் மார்பினை ஆர முயங்கியும், துத்தி பொருந்திய அல்குலையுடைய நின்மகள் பசந்து வேறுபடுவது என்னை எ. று.

கடி, மிகுதிப் பொருட்டு. கடிகொள என்பது ஒரு சொல்லாய் மிகுதிப் பொருண்மை உணர்த்திற்று; "பனி கடிகொண்ட பண்பில் வாடை[1]" என்புழிப்போல. "மாரி கடிகொள" என

1. அகம். 235.

மழையினை மருதத்துக் கூறியது, "வைகுறுவிடியல்[1]" என்ற சூத்திரத்து, "மெய்பெறத் தோன்றும்" என்றதனுல் அமையும்; ஆசிரியர் நச்சிஞர்க்கினியரும், "இவற்றிற்கு (மருதநெய்தல்கட்கு) அறுவகை இருதுவும் உரிய என்பதன்றிக் காரும் இளவேனிலும் பெரும்பொழுதாகக் கொள்ப என்பதற்குப் பொருள் பெறத் தோன்றும் என்ருர்" என்றனர். கடுக என்பது காவற் பொருட்டாய கடி யென்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைத் திரிசொல்; "கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது[2]" என்புழியும் அது. சிறிதும் என்பது முதலாயின எஞ்சி நின்றன. அடுக்கி நின்ற செயவெனச்சங்கள் அவாய் நின்ற வினைகொண்டன. கடிகொளவும், கடுகவும் போந்த வூரன், கள்வன் முளையினை அறுக்கும் ஊரன் என இயையும். மரீஇ என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. பசலை கொள்வது என்பது ஒரு சொல்லாய்ப் பசப்பதென்னும் பொருளதாயிற்று.

வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்தவழி, அறத்தொடு நிற்றலல்லது செயற்பாலது பிறிதின்மையின் உண்மை செப்பும் குறிப்பால் கழனியூரன் மார்புற மரீஇ என்றும், இம்மை மாறி மறுமை ஆயினும் இடையருப் பெருங்கேண்மையளுகலின், இதனை அறியாது தமர் வரைவுமறுத்தலால் பெரிதும் வருந்தினள் என்பாள், பசலை கொள்வது எவன்கொல் என்றும் கூறினள். "காப்புக் கைம்மிக்குக் காமம் பெருகினும், நொதுமலர் வரையும் பருவ மாயினும், வரைவெதிர் கொள்ளார் தமரவண் மறுப்பினும், அவன் ஊரஞ்சுங் காலமாயினும் அந்நாலிடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ, அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே[3]" என்ப வாகலின், தமர் வரைவு மறுத்தது கொண்டு தோழி அறத்தொடு நிலையன்றிப் பிறிது இலளாயினள் என அறிக. மாரி கடிகொளக் காவலர் கடுக என்றது அவன் வேட்கை யுரைத்தல். மார்புற மரீஇ என்றது உண்மை செப்பல். அறத்தொடு நிலைப்பகுதி உணர்த்தும் "எளித்தல் ஏத்தல்" என்ற சூத்திரத்து, "அவ்வெழுவகைய[4]" என்றதனுல், உண்மை செப்புங்கால்,

1. பொ. 8. 2. குறள். 693. 3. இ. அ. பொ. 29.
4. தொல். பொ. 207.

ஏனே ஆறு பொருளினுட் சிலவற்றை உடன் கூறலும், ஏனைய கூறுங்காலும் தனித்தனி கூருது இரண்டும் மூன்றும் உடன் கூறலும் கொள்ளப்படும்,'' என்பவாகலின், வேட்கையும் உடன் கூறப்பட்டது. ஈன்றதாயினும் களவின்கண் செவிலி சிறந்தமையின், நின்மகள் எனச் சிறப்பித்தாள். ''ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின், தாய் எனப்படுவோள் செவிலி யாகும்[1]'' என ஆசிரியரும் கூறினர்.

தம்முடைய மக்களின் மணவினைக்கண், இற்செறித்துக் காத்தலும் வரைவு மறுத்தலும் இவைபோல்வன பிறவும் அவர்தம் நலமே நினைந்து புரியும் பெற்ருேர்க்கு உரியவாதலின், அவர்தம் ஆணைவழி நிற்றல் மக்கட்கு அறமாம்: ஆயினும் அவர் செய்யும் காப்பு மிகுதியால் வருத்தம் எய்திய விடத்து, தனது கற்பைக் காக்கும் பேரறம் நோக்கிப் பெற்ருேர்க்குரிய அறமும் பிறவும் நீங்க நினையும் ஒழுகலாறு தலைமகட்கு வழுவாகாது. ''அன்பே யறனே இன்பம் நாணொடு, துறந்த ஒழுக்கம் பழித்தன் ருகலின், ஒன்றும் வேண்டா காப்பி னுள்ளே[2]'' என்பது விதி. "பசலை கொள்வ" தென்றது தலைமகள் பால் தோன்றிய பசலை பாய்தல் என்னும் மெய்ப்பாடு.

வித்திய விதையிடத்துத் தோன்றும் வெண்முளையைக் கள்வன் அறுக்கும் என்றது, தாம் பயந்த மகளிடத்துத் தோன்றும் குடிமைச் சிறப்பினை, வரைவெதிர் கொள்ளாது தமர் அவண் மறுத்துச் சிதைக்கின்றனர் என்றவாறு. மெய்ப்பாடும் பயனுமவை.

இனி, மார்புற வறீஇ என்ற பாடத்துக்கு அவன் மார்பினைக் கூடி அவற்கும் தனக்கும் உண்டான உறவினை அறிந்து வைத்தும் என வுரைக்க. (29)

30 வேப்புநனை யன்ன நெடுங்கட் கள்வன்
தண்ணக மண்ணளை நிறைய நெல்லின்
இரும்பூ வுறைக்கு மூரற்கிவள்
பெருங்கவி னிழப்ப தெவன்கொ லன்னய்.

---

1. ஷை ஷை 124. 2. தொல். பொ. 215.

இதுவுமது

ப. உரை: அலவன் மண்ணளை நிறைய நெல்லின்பூ உறைக்கும் ஊரன் என்றது, தலைவன் மனையிடத்து உளவாகிய வருவாய்ச் சிறப்புக் கூறியது எனக்கொள்க என்பது.

உரை: அன்னாய், வேம்பின் அரும்பையொத்த நீண்ட கண்களையுடைய அலவனது குளிர்ந்த அகமாகிய மண்ணளை நிறையுமாறு நெற்றாளின் மிக்க பூ உதிர்ந்து கிடக்கும் ஊரன்பொருட்டு இவள் தன் மிக்க அழகினை இழப்பது என்னையோ, கூறுக எ. று.

வேப்பு நனை "மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம், வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்[1]" என்பதனான் முடிந்தது. "வேப்பு நனை யன்ன நெடுங்கணீர் ஞெண்டு[2]" என்று பிறரும் கூறினர். இருமை, மிகுதி. இரும்பூ உறைக்கும் என்றதற்கு, மிக்க பூவைத் தன் மண்ணளை நிறைய அலவன் கொண்டுய்க்கும் என்று கூறலுமுண்டு. இப்பாட்டின் எருத்தடியின் ஈற்றுச்சீர் மாசேர்சுரம் என்ற வாய்பாட்டு வஞ்சியுரிச்சீராயினும், ஆசிரியப்பாவின்கண் அது மயங்குதலும் இலக்கணமாகலின் அமையு மென வறிக. "அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீர், ஒன்றுத லுடைய வேறொரு வழியே[3]" என்பது செய்யுளியல்; பிறண்டும் இதுவே கூறிக் கொள்க.

தானே தனக்கு நிகராகும் தலைமையும், இழந்த வழிப் பண்டைத் தன்மையுறப் பெறலாகாத அருமையுமுடைய தன் கவின், தமர்வரைவு மறுத்தலால் தலைமகனைக் கூடல் அரிதாம் என நினைந்து கெடுகின்றாள் என்பாள் ஊரற்கு இவள் பெருங்கவின் இழப்பது என்றும், "உற்றோர்க்கு உரியர் பொற்றொடி மகளிர்" என்னும் உயர்மொழியை உட்கொண்டு அவனை இன்றியமையாளாயினள் என்றற்குப் பெருங்கவின் இழப்பது எவன்கொல் என்றும் கூறினாள். உள்ளுறையால் தலைமகன் செல்வமிகுதி கூறுதலின், இஃது ஏத்தல் என்னும் அறத்தொடு நிலை. இங்ஙனம்,

1. தொல். எழு. 414. 2. அகம். 176. 3. தொல். பொ. 343.

ஊரன் காரணமாகத் தன் பெருங்கவின் இழப்பதை அறியாது இவளை நீவிர் வரைவு மறுத்தல் கூடாது என்பது கருத்து. இஃது இவ்விரண்டு பாட்டிற்கும் ஒக்கும்.

அலவன் மண்ணளை நிறைய நெற்பூ உதிர்ந்து கிடத்தல் போலத் தலைமகன் மனையகம் நிறையத் தீதின் றியன்ற செல்வம் மிகுந்துளது என உள்ளுறையால் அவன் செல்வச் சிறப் புரைத்தவாறு. மெய்ப்பாடும் பயனுமவை. (30)

4

தோழிக் குரைத்த பத்து

கூற்று நிகழ்த்துவோர், கேட்போர், கூற்றுப்பொருள் என்ற மூன்றனுள், இங்கு வரும் பாட்டுக்கள் பத்தும் கேட்போர் பொருளாகத் தொகை பெறுதலும், பிற நெறியால் பெருமையும் உடைமையின், கேட்போர் வகையுட் சிறந்தாளாகிய தோழிக் குரைப்பனவாகும் சிறப்புடைமை கருதி இஃது இப் பெயரதாயிற்று.

ஈண்டுக் கூற்று நிகழ்த்துவோர், தலைவியும் பரத்தையரும் பிறரும் எனப் பலராகலின் அவர் கூறக் கேட்கும் தோழியரும் பலரே யாவர். ஆயினும், தோழியாம் தன்மையின் ஒற்றுமை கருதிப் பொதுப்படத் தோழி என்பது கூறப்பட்டது. பன்மைப் பொருளதாயினும், ஒருமை வாய்பாட்டாற் கூறப்படும் வழக்கு நெறி கருதியே ஆசிரியர், '' ஒருபாற் கிளவி ஏனைப் பாற் கண்ணும், வருவகை தானே வழக்கென மொழிப [1] '' என்பாராயினர். ஆகவே, பண்டையாசிரியன்மாரும், இதுபோல்வன வற்றை, எப்பாற் கண்ணும் ஒப்பவரும் வழக்கு மொழி என்றனர். இதனைப் பிற்காலத்தார் சாதி யொருமை என்பர். '' உலகத்து ஒரூர்க்கண்ணும் ஒரோவொரு குலத்தின்கண்ணும் தலைவரும்

---

1. தொல். பொ. 222.

தலைவியரும் பலரேனும், அவர்களை யெல்லாம் கூறுங்கால் கிழவனும் கிழத்தியும் என்று ஒருமையாற் கூறுவதன்றி, வேறோர் வழக்கின்று'' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியரும் கூறினர். இனி, தலைவன், தலைவி, தாய் என வருமிடங்களிலும் இவ் விலக்கணமே கூறிக்கொள்க.

31. அம்ம வாழி தோழி மகிழ்நன்
கடனன் றென்னுங் கொல்லோ நம்மூர்
முடமுதிர் மருதத்துப் பெருந்துறை
உடனா டாயமோ டுற்ற சூளே.

முன்னொருநாள் தன்னோடு புதுப்புனலாடுழி, ''இனிப் புறத்தொழுக்கம் விரும்பேன்'' என ஆயத்தாரோடு சூளுற்ற தலைமகன், பின்பும் பரத்தையரோடு புனலாடத் தொடங்குகின்றான் என்பது கேட்ட தலைமகள் அவன் உழையர் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக. மகிழ்நன் வளைந்து முதிர்ந்த மருதமரங்கள் நிறைந்த பெருந்துறைக்கண் தன் உடனாடும் ஆயத்தார் அறிய அவரோடு உடனிருந்தே, ''இனிப் புறத் தொழுக்கம் விரும்பேன்'' என்று செய்த சூளினை மறவாது கடைப் பிடித்தல் தனக்கு முறைமையன்று என்று கூறுவான் கொல்லோ எ. று.

அம்ம என்பது கேட்பித்தற் பொருட்கண் வந்த இடைச்சொல்; ''அம்ம கேட்பிக்கும்.[1]'' வாழி, உரையசை. மகிழ்நன், திணை நிலைப்பெயர். கொல், ஐயம். ஓகாரம், அசைநிலை. கடன், உரிமையுடையார் எவ்வாற்றானும் பிழையாது செயற்பாலதாகிய நற்செயல்; ''கடன் என்ப நல்லவை யெல்லாம்[2]'' என்பது காண்க. முடமுதிர் மருதம், வளைந்து முதிர்ந்த மருதமரம். ஞாயிற்றின் ஒண்கதிர் பெறுதலை வேண்டித் தன் கிளைகளாலும்

1. தொல். சொல். 276. 2. குறள். 981.

பிற மரங்களாலும் தடைப்பட்டவழி வளைந்து சென்று பெறும் பான்மையுடைமையால் மரங்கள் முடமாதல் இயல்பாகலின், முடமுதிர் மருதம் எனப்பட்டது; ''முடமுதிர் பலவின் கொழு நிழல்[1]'' என்றார் பிறரும். முடம், வளைவு; இது முடவு எனவும் வழங்கும்; ''முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினை[2]'' என்பதனா லறிக. இச்சொல் உயர்திணைப் பொருளிடத்தும், ''முடமுதிர் பார்ப்பான்[3]'' என வழங்கப் பெறுகின்றது. அறிய என்பது முதலியன குறிப்பெச்சம்.

தலைமக்கள் தம்மோடு உடனாடும் உரிமையுடைய ஆயத் தாரோடு கூடியாடும் பெருமையுடைத்தாகலின் பெருந்துறை என்றும், தம்மை என்றும் பிரியாச் சிறப்புடைய ராகலின் உடனா டாயம் என்றும், அவ்வாயம் உட்படப் பிறவும் அறிய அவரிடையே நின்று சூள் செய்தானாகலின், உடனாடாயமோடு உற்ற சூள் என்றும், பின்பும் பரத்தையரோடு புனலாடுகின்றான் என்பது கேட்டுப் பொறாமை ஒருபால் வருத்தவே, செய்த சூள் பொய்த்தமையால் அவற்கு எய்தும் இளிவரலை எண்ணிக் கடனன்று என்னுங் கொல் என்றுங் கூறினாள். எஞ்ஞான்றும் பிரிவின்றி உடனிருந்து கடமையை வற்புறுத்தும் துணைவராகிய உழையர் கேட்பக் கூறுதலின் இதனை எடுத்து மொழிந்தாள் எனக் கொள்க.

தலைமகன் ''இன்னாத் தொல்சூள் எடுத்தற்கண்[4]'' என்புழி ''எடுத்தல்'' எனப் பெயர்ப்படுத்துக் கூறினமையின் தலைமகள் அவ்வாறு எடுத்த சூள் பொய்த்தமையால் எய்தும் ஏதும் தனக்கு வரும் என உழையர் கேட்ப மறுத்துரைத்தவாறு. மெய்ப்பாடு: இளிவரல். பயன்: உழையர் கேட்டு மாறுவாராவது. (31)

32. அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒருநா ணம்மில் வந்ததற் கெழுநாள்
அழுப வென்பவவன் பெண்டிர்
தீயுறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே.

---

1. அகம். 91. 2. அகம். 10. 3. கலி. 65. 4. தொல். பொ. 147.

வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக; நம் இல்லம் நோக்கி மகிழ்நன் ஒருநாள் வந்தானாக, அவன் பெண்டிர் பொருது அனலிற்பட்ட மெழுகுபோல விரைய உளம்நெழ்ந்து, ஏழுநாள்காறும் அழுது தீர்ந்தனர் என்று பலருங் கூறா நிற்பர், காண் எ. று.

எனவே அவன் நமக்குச் செய்த ஒரு நாளைய தலையளி அவன் பெண்டிர்க்கு எழுநாளைய துயரமாயிற்றாகலின், அவன் வருமாறு என்னை என்றவாறும்.

வந்ததற்கு என்புழி, குவ்வுருபு பொருட்டுப் பொருட்கண் வந்தது. காதலரைப் பிரிந்த மகளிர்க்கு, பிரிந்த ''ஒருநாள் எழுநாள்போல் செல்லும் [1]'' என்பது பற்றி எழுநாள் அழுப என்றார்; என்றது, பிறர் கூறிய கூற்றினைக் கொண்டு கூறியது. பெண்டிர், பரத்தையர் மேற்று; காமக்கிழமை யுடையருமாம்; ''நாளும் புலத்தகைப் பெண்டிரைத் தேற்றி [2]'' என்றாற்போல[3] தீயுறு மெழுகின் என்ற உவமை, அவன் வரவு கேட்டுச் சிறிதும் இடையீடின்றி அழுதல் மேயினர் என்பதுபட நின்றது. ஞெகிழ்தல் உருகுதல். இன்னுருபு, ஒப்புப்பொருட்டு.

''எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும், புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப [4]'' என்பதனால், வாயில் வேண்டிப் புகுந்தார் தலைமகன் பண்டு செய்த தலையளியைச் சிறப்பித்துக் கூறினார்

---

1. குறள். 1269. 2. கலி. 73.

3. "பெண்டிர் னன்பதன் ஈற்றிலுள்ள 'இர்' என்னும் இடைச்சொல் முன்னிலையிலன்றி 'ர்' 'அர்' என்பவைபோலப் படர்க்கைப் பன்மையிலும் வரும் விகுதிபோலும்; மகளிர், கேளிர். வேளிர், புத்தேளிர் முதலியவற்றில் இவ்விகுதி வருதலும் .. .. 'பெண்டிராயிற் பிறர்நெஞ்சு புகார்' (மணி. 22: 46)........எனப் பன்மைவினை பெற்று முடிதலும் இக்கருத்தை வலியுறுத்தும்" என்பர் இ. வை. அனந்தராமையர்.

4. தொல். பொ. 178.

என்பது தோன்ற, மகிழ்நன் என்றும், அவ்வொரு நாளைய தலையளியை உடன் பட்டுத் தழீஇ, அஃது அவன் பெண்டிர்க்கு எழுநாளைய துன்பமாயிற்று என்பாள், ஒரு நாள் நம்மில் வந்ததற்கு எழுநாள் அழுப என்ப அவன் பெண்டிர் என்றும், அத்துணைச் சிறுபிரிவையும் ஆற்றாத பேரன்பினர் என அவரது நலம் பாராட்டுவாள் போலத் தீயுறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே என்றும் கூறினாள். கூறவே, ஒருகால் அவன் வருதலைக் கருதினா ளாயினும், அவரது ஆற்றாமை கண்டு அது தவிர்வானாகலின் அவன் வருமாறு இன்றெனவாயின் மறுத்தவாறும். "கற்பு வழிப்பட்டவள் பரத்தை ஏத்தினும், உள்ளத்தூடல் உண்டென மொழிப [1]" என்றலின் ஈண்டுத் தலைவி பரத்தையை நலம் பாராட்டியது மறுத்தற் குறிப்பே என வுணர்க.

இனி, ஒரு சிறிது பிரியினும் மிக்க வேறுபாட்டை அடையும் அத்துணை மேன்மையயேமாகிய நம்மிற் பிரிந்து சென்று, அவர் மனைக்கண் ஏழுநாள் இருந்து, ஒருநாள் நம்பால் வந்தது குறித்துப் பின் ஏழுநாள் காறும் புலம்புவர் எனப் பரத்தையரை எள்ளி நகையாடி யுரைக்கின்றாளாகலின், எழு நாள் அழுப என்ப என்றும், பிற இயல்புக ளின்றித் தமது பெண்ணியல்பு ஒன்றே கொண்டு அவர் தருக்குவர் என்றற்கு, அவன் பெண்டிர் என்றும், மக்கட்பேறு முதலியவற்றால் எய்தும் கற்பு வலியிலர் என்றற்கு, தீயுறு மெழுகின் விரைவனர் ஞெகிழ்ந்தே என்றும் கூறுனாளுமாம். "காதலர், ஒரு நாள் கழியினும் உயிர்வேறு படூஉம், பொம்ம லோதி நம்மிவன் ஒழியச் செல்ப என்ப [2]" என்பதனால் தலை மகளின் மென்மைத் தன்மை உணர்ந்து கொள்க. ஒருவாற்றால் வாயில் நேர்நங் குறிப்பினளுமாகலின், வெளிப்படையால் காமக் கிழத்தியர் நலம் பாராட்டிக் குறிப்பால் தீமையின் முடித்தாள் என அறிக.

ஒருநாள் நம்மில் வந்ததற்கு எழுநாள் அழுப என்ப அவன் பெண்டிர் என்றதனால், பரத்தையர்பால் பொறாமை என்னும் மெய்ப்பாடும், தலைமகள்பால் உள்ளது உவர்த்தல் என்னும்

---

1. தொல். பொ. 233. 2. நற். 129.

மெய்ப்பாடும் தோன்றின. ஏனை மெய்ப்பாடு: பிறர்கட் டோன்றிய சிறுமை பொருளாகப் பிறந்த மருட்கை. பயன்: வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்டு மாறுவாராவது. (32)

33. அம்ம வாழி தோழி மகிழ்நன்
மருதுயர்ந் தோங்கிய விரிபூம் பெருந்துறைப்
பெண்டிரொ டாடு மென்பதன்
தண்டா ரகலந் தலைத்தலைக் கொளவே.

இதுவுமது

உரை: தோழி, கேட்பாயாக. மருதமரங்கள் மிகுந்தோங்கிய விரிந்த பூக்களையுடைய பெரிய நீர்த்துறைக்கண் மகிழ்நன் தன் குளிர்ந்த மாலையணிந்த மார்பினை ஒவ்வொரு வரும் புணையாகப் பற்றி முயங்குமாறு பரத்தையரோடு புனலாடுகின்றான் என்று கூறுவர் எ. று.

உயர்ந்தோங்கிய என்பது மிகுத்தற்கண் வந்தது; ''உயர்ந் தோங்கு செல்வத்தான்[1]'' என்புழிப்போல. இனி, உயர்வினை மருதுக்கும், ஓங்குதலைப் பெருந்துறைக்கும் ஏற்றினுமாம். ஓங்கிய பெருந்துறை, விரிபூம் பெருந் துறை. நீரின் நிறம் தெரியாவகைப் பூக்கள் விரிந்து பரந்து கிடத்தலின் விரிபூம் பெருந்துறை எனப் பட்டதென்க; ''நீர்நிறங் கரப்ப ஊழுறு புதிர்ந்து, பூமலர் கஞலிய கடுவரற் கான்யாறு[2]'' என்றார் பிறரும். ''தலைத் தலைக்கொளவே' என்புழித் தலைத்தலை என்பதற்குத் ''தலைத்தலை தருமே'' என்றாற்போலப் பொருள் கொள்க. ''பெருமலை நாடன் மார்பு புணையாக ஆடுகம் வம்மோ[4]'' என்பதனால், மார்பு புணையாதல் அறிக.

புறத்தொழுக்கத்தின் கண் தலைமகன் பரத்தையரோடு விளையாட்டயர்ந்தான் என்பது கேட்டவழித் தலைமகட்குப் புலத்தலும்

---

1. சிலப். 1:32. 2. அகம். 18. 3. புறம். 185.
4. அகம். 312.

ஊடலும் பிறந்து காமச்சிறப்பு எய்துதலின் வாயில் வேண்டி வந்தாரோடு வெகுண்டு கூறுவாள், மகிழ்நன் விரிபூம் பெருந் துறைப் பெண்டிரோடு ஆடும் என்ப என்ருள். ''கிழவோன் விளை யாட்டு ஆங்கும் அற்றே [1] '' என ஆசிரியரும் கூறினர். விரிந்த பூக்கள் நிறைந்த பெருந்துறை, காதலரொடு கூடியாடுவார்க்கு அக்கூட்டத்தின் மேலும் இன்பம் மிகுவிக்குமென உட் கொண்டு கூறலின், மருது உயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந்துறை எனச் சிறப்பித்தாள். புல்லுந்தோறும் அமையாது பரந்து சிறத்தலின், தண்டார் அகலம் என்றும், ஒருமுறை இருமுறை அமையாது பன்முறையும் முயங்கும் மிகுதி தோன்றத் தலைத்தலைக் கொளவே என்றும் கூறினுள். ''முயங்குதொறும் முயங்கு தொறும் முயங்க முகந்து கொண்டு, அடக்குவ மன்ஞே தோழி ....சாரல் நாடன் சாயன் மார்பே [2] '' என்பதனுலும், தலைமகனது தண்டா ரகலச் சிறப்புணரப்படும். இதனுல், தலைவி மாட்டுப் பொருமை என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. மெய்பாடு : வெகுளி. பயன்: வாயின்மறுத்தல்.

இனி, பெண்டிரொடும் ஆடும் என்ப என்ற பாடத்துக்கு உம்மை இழிவுச் சிறப்பெனக்கொள்க. இதனுற் பிறக்கும் அகைப்பு வண்ணம், தலைமகளின் பொருமைக் குறிப்பினைச் சிறப்பித்தல் காண்க. ''அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும் [3] '' என்ப. (33)

34 அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கைப் பூத்த புழைக்கா லாம்பல்
தாதேர் வண்ணங் கொண்டன
ஏதி லாளர்குப் பசந்தவென் கண்ணே

இதுவுமது

உறை: தோழி, கேட்பாயாக. அன்பிலனுய்ப் புறத்தே ஒழுகும் காதலன் பொருட்டுப் பசப்புற்ற என் கண்கள், நம்மூர்க்

1. தொல். பொ. 164. 2. அகம். 328. 3. தொல். பொ. 541.

கண்ணுள்ள பொய்கையிற் பூத்த புழை பொருந்திய தண்டினை யுடைய ஆம்பற் பூவின் தாதுபோலும் நிறத்தை அடைந்தன, காண் எ. று.

பொய்கை, மானிடராக்காத நீர் நிலை என்பர் நச்சினுர்க் கினியர்.[1] ஆம்பற்றுன் புழைபுடைய தென்பது, ''ஏந்தெழின் மலர தூம்புடைத் திரள்கால் ஆம்பல்[2]'' என்றதனுலும் அறியப் படும். புழை, உட்டுளை. ஏர், ஒப்பு; ''மலரேர் உண்கண்[3]'' என்ருற்போல. பரத்தையர்மனை, தம் மனையை நோக்கத் தலைமக்கட்கு ஏதிலாதலின், அவர் மனைக்கண் ஒழுகுவாரை, ஏதிலாளர் என்ருர்; சிறுவீஞாழல் பெருங்கடற் சேர்ப்பனை ஏதிலாளனும் என்ப[4]'' என்ருர் பிறரும். ஈண்டுத் தலைமகனை ஏதிலாளர் என்றது, ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியாய்ச் சினந்து கூறுதற்கண் வந்ததாம்:

தன் மனையை இகந்து பரத்தையர் மனைக்கண் உறைதலின், தலைமகள் வெகுண்டு வாயில்வேண்டி வந்தார் கேட்பத் தலைவனைக் கொடுமை கூறுங்குறிப்பால், ஏதிலாளர்க்கு என்றும், அவன் அன்னனுதலைத் தான் அறிந்தளாயினும், தன் கண்கள் அறியாது பசந்தன என்பாற், பசந்த என்கண் என்றும், அங்ஙனம் பசந்தவை, தாமரை குவளை முதலிய மலர்களை நிகர்த்தற்குரிய உவமவுரிமையை இழந்து இழிந்த ஆம்பற்றுதின் வண்ணம் பெற்றன என்பாள், புழைக்கால் ஆம்பல் தாதேர் வண்ணம் கொண்டன என்றும், ஆம்பற்றுது பொன்னிறத்தாகலின், பசப்புற்ற கண்களைத் தாதேர் வண்ணம் கொண்டன என்றும் கூறினுள். ''பூப்போலுண்கண் பொன் போர்த்தனவே[5]'' என முன்னரும் கூறியவாறு காண்க. கூறவே அவன் பொருட்டுப் பசந்ததன் பயன் இதுவே என்றவாரும்.

ஆம்பலின்கால் புழையுடையது என்றதனுல், தலைமகன் பால் அன்பின்மையும் தோன்றினமையின் ஏதிலாளர் என எடுத்துக்

---

1. சீவக. 107.உரை. 2. குறுந். 178. 3. அகம். 176.
4. நற். 74. 5. ஐங். 16.

கூறினுள் என்ருலும் ஒன்று. இவ்வாறு தலைமகன் தவற்றினை வெளிப்படையாகக்கூறல் வழுவாயினும், ''வாயிற் கிளவி வெளிப் படக் கிளத்தல், தாவின் றுரிய தத்தங் கூற்றே[1]'' என்பதனுல் அமையும் என்க. ஏதிலாளனை நீ பிரிந்ததற்கே[2]'' எனப் பிருண்டும் தோழி கூறுமாறறிக.

இனி, அவன் நம்பால் அன்பிலனுய்ப் புறத்தொழுகுதலால் எழும் அலரை, நாம் மறைப்பினும் நம் கண்கள் பொருது, முறுகிய பசப்புடையவாய் ஆம்பற்ருதின் வண்ணங்கொண்டன என்றும் கூறுவர். ''பசந்த என்கண்'' என்றது பசலைபாய்தல். ஏனை மெய்ப்பாடும் பயனுமவை.

வண்ணங் கொண்ட என்றும் ஏதிலார்க்கு என்றும் உள்ள பாடங்கள் கட்டுரைச்சுவை பயவாமையறிக. (34)

35. அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கை யாம்ப ஞருரி மென்கால்
நிறத்தினு நிழற்று மன்னே
இனிப்பசந் தன்றென் மாமைக் கவினே.

வாயிலாய்ப் புகுந்தார் தலைமகன் குணங் கூறியவழி, ''அவனுக்கு இல்லாதனவே கூறுதலால், இப்பொழுது காண், என் மேனி பசந்து'' எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை : தோழி, கேட்பாயாக, இதுகாறும் நம்மூரிற் பொய்கைக் கண் பூத்த ஆம்பலின் நார் உரிக்கப்பட்ட மெல்லிய தண்டினும் மிக ஒளிர்தலைச்செய்த என் மாமைக்கவின் அது கழிந்து இப்பொழுது தான் பசலை பாய்ந்தது, காண் எ. று.

நார் உரி மென்கால் என்புழி வினைத்தொகை இறந்த காலம் தொக நின்றது. உம்மை, இசை நிறை. மன், கழிவுப்பொருட்டு. நோயின்றியன்ற யாக்கை நலமும், அழகு திகழும் இளமை

---

1. தொல். பொ. 241. 2. ஐங். 232.

நலமும் ஒருங்கு விளங்கும் மகளிரது மேனி நிறம் மாமை[1] என்று சான்றோரால் வழங்கப்பெறும். இம்மாமைக்கு, மழையால் நனைந்து நீர் துளித்து நிற்கும் பச்சிளந் தளிரையும், நீலமணி பதித்த பொன்னையும் உவமை கூறுவர்; ''கொடுமுள் ஈங்கை நெடுமா வந்தளிர், நீர்மலி கதழ்பெயல் தலைஇய, ஆய்நிறம் புரையுமிவள் மாமைக்கவினே[2]'' என்றும், ''பூந்துணர், தாதின் துவலை தளிர்வார்ந் தன்ன, அங்கலுழ் மாமை[3]'' என்றும், ''பொன்னுரை மணியன்ன மாமைக்கட் பழியுண்டோ[4] என்றும், மணிமிடை பொன்னின் மாமை[5]'' என்றும் வருவன காண்க. பொன்னும் இளந்தளிரும் பொன்மை நிறமுடையவாதல் பற்றி, அந் நிறப் பண்புடையவனை ஏனை மலர் தளிர் முதலியவற்றை மாமைக்கு உவமங் கூறுப ''நுணங்கிய நுசுப்பின் நுண்கேழ் மாமை, பொன்வீ வேங்கைப் புதுமலர் புரைய[6]'' என்றும், ''செயலையந்தளிர் அன்ன என் மதனில் மாமை[7]'' என்றும் வருமாற்றால் அறிக. ''நீர்வள ராம்பல் தூம்புடைத் திரள்கால் நாருரித் தன்ன மதனின் மாமை[8]'' என ஒரோவழி நாருரித்த ஆம்பற் றண்டினையும் இதனோடு உவமிக்கும் உவமவியைபு குறித்து ஈண்டும், ஆம்பல் நாருரி மென்கால் நிறத்தினும் நிழற்றுமன் என்றார். நிழற்றுதல், ஒளிவிடுதல். ''மணிமிடை பொன்னின் மாமை சாயவென், அணிநலம் சிதைக்குமார் பசலை[9]'' என்றதனால் மாமை பசலையால் கெடுதல் அறிக. இனி என்றது பசப்பின் புதுமை எய்துவித்தது. ஆம்பற்றுள் நார் நீங்கிய விடத்து வலிகுன்றுதலின், மென்கால் என்றார், இன்னுருபு உறழ்ச்சிப் பொருட்டு.

---

1. மகளிர்க்கு நாணம் நிறை முதலியன அகநலமாய் நின்று சிறப்பிக்க, இம் மாமை புறநலமாய் விளங்கி அவர்க்கு இனிய சாயலை விளைவிக்கும் என்பர். இதனைப் பந்தாடி நின்ற விமலையின் அகப்புறநலங்களைச் சிறப்பிக்கப் புக்க திருத்தக்கதேவர், ''பெண்பாலவர்கட் கணியாய் பிரியாத நாணும், திண்பால் நிறையும் திருமாமையும் சேர்ந்த சாயல்'' (சீவக. 1961) என்று கூறுமாற்றல் அறிக.

2. நற். 205. 3. அகம். 41. 4. கலி. 48. 5. நற். 304.
6. அகம். 319. 7. நற். 244. 8. நற். 6. 9. ஷ 304.

பிரிவால் உளதாகும் மெலிவு எய்தியிருந்தாளாயினும், அவன் சோர்பு காத்தல் கடன் என்பதனை உட்கொண்டு ஆற்றியிருந்தமை யான், ஒளியுற்றிருந்த தன் மாமைக்கவின், ஆற்ருமைக்கேதுவாகிய சொல் ஒன்று தோன்றினும் வலி யழியும் மென்மைத்து என்பாள் ஆம்பல் நாருரி மென்கால் நிறத்தினும் நிழற்றுமன் என்று உவமித்தும், வாயில்கள் கூறிய பொய்ம்மொழிகளைக் கேட்ட மாத்திரையே, ஆற்ருது அக்கவின் கெடுதற்குப் புலந்து மன்னே என்றும், இனிப்பசந்தன்று என்றும் கூறினுள்; '' எக்கர் ஞாழல் இணர்படு பொதும்பர்த், தனிக்குருகு உறங்குந் துறைவற்கு இனிப்பசந்தன்று என் மாமைக் கவினே[1] '' என்புழியும் இக் கருத்தே வலிபெறுதல் காண்க. இது பசலைபாய்தல். ஏனை மெய்ப்பாடும் பயனும் அவை. (35)

36. அம்ம வாழி தோழி யூரன்
நம்மறந் தமைகுவ னுயி னுமறந்
துள்ளா தமைதலு மமைகுவ மன்னே
(கயலெனக் கருதிய வுண்கண்)
பயனை கொல்கா வாகுதல் பெறினே.

தான் வாயில் நேருங் குறிப்பினளானமை அறியாது தோழி வாயில் மறுத்துழி அவள் நேரும்வகையால் அவட்குத் தலைமகள் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக. ஊரனுகிய நம் காதலன் நம்மை மறந்துறைவானுயின், கயல்போலும் மையுண்ட நம் கண்கள் மட்டில் பசப்பு எய்தாமையை நாம் பெறின், அவனை மறந்து நினைப்பதேயன்றி அமைந்திருத்தலும் நமக்குக் கூடும்; அவை விரையப் பசத்தலானன்றே, நாம் அவனை இன்றியமையே மாகின்றேம் எ. று.

நம்மறந்து அமைகுவனுயினன் என்றது, நம்மை மறந்து அமைகுவன் தலைமகன் எனத் தோழி கூறியதனைக் கொண்டு

---

1. ஐங். 144.

கூறியது எச்சவும்மை தொக்கி நின்றது. அமைதலும் அமைகுவம் என்றது, ''அறிதலும் அறிதிரோ [1]'' என்றாற்போல நின்றது, கருதிய என்பது உவமவுருபு. பசலை, பயலை என நின்றது. கண்கள் முதலாயின ஒழிபிசையெச்சத்தை முடிக்க வந்தன. மன். ஒழியிசை ; அமையாது பசந்து அவனை இன்றியமையேமாகின்றேம் என எஞ்சி நின்றது காண்க. ஒல்குதல், சுருங்குதல். ஒல்குதற் குரிய ஏது வுண்மையின், ஒல்காவாதற்கு ஏது கூறுளாயினாள்.

வாயில் வேண்டி வந்தார் தலைமகனது காதன்மை கூறி நிற்ப தோழி அவனது கொடுமை கூறி வாயில் மறுத்தாளாக, தலைவி, நேருங் குறிப்பினளாய் அவள் கூறியதனை ஒரு மருங்கு தழீஇக் கூறுகின்றாளா கலின், ஊரன் நம்மறந்து அமைகுவனாயின் என்றும், நம்மை மறந்தாரை நாம் மறத்தல் அரிய செயலன்று என்றற்கு, நாம் மறந்து உள்ளாது அமைதலும் அமைகுவம் என்றும், வாயில் நேராதவழி, அவன் புறத்தொழுக்கம் புறத்தார்க்குப் புலனாகி இளிவரலைப் பயக்கும் என்று அஞ்சி, வாயின் மறுத்தற்கண் சென்ற உள்ளம் சுருங்கி நேர்தற்கண் நின்றது என்பாள், அதனை முந்துற்று அறிவிக்கும் கண் மேலேற்றி. உண்கண் பயலைக்கு ஒல்கா வாகுதல் பெறின் என்றும் கூறினாள். கூறவே, தலைமகள், தான் தலைமகனை மறந்து அமைதற்குரிய ஏது உளதாகிய வழியும், தன் கண்கள் அவன் தவற்றாலுண்டாகும் இளிவரலை அஞ்சிப் பசத்தலின், மறத்தல் நமக்குக் கூடாதாயிற்று என்றாளாம். இது வாயில் நேருங் கருத்தினைக் குறிப்பாய்க் கூறியவாறு. ''எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப் பொருட்புறத் ததுவே குறிப்பு மொழி யென்ப [2]'' என்றார் ஆசிரியர். ''பயலைக்கு ஒல்காவாகுதல் பெறின்'' என்றதனால், ஒல்கிப் பசத்தலே உண்மையாயிற்று. இது பசலை பாய்தல். ''கன்றும் உண்ணாது கலத்தினும் படாது, நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு [3]'' தனக்கும் ஆகாது, தலைவற்கும் உதவாது தன் மாமைக்கவின் பசலையாற் கெடுதலால், அப்பசலையை வயில் நேர்தற்குத் தலைவி ஏதுவாக்கினாளென அறிக.

1. அகம். 8. 2. தொ. பொ. 491. 3. குறுந். 27.

இவ்வாறு தலைமகனது காதன்மை கூறி வாயில் வேண்டி வந்தார்க்குத் தன் அன்புபொதி கிளவியினைத் தலைமகள் மொழிதலை, '' அருள்முந் துறுத்த அன்பு பொதி கிளவி, பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே[1] '' என்பதனுற் கொள்க. பொருள்பட மொழிதலாவது, அகத்தெழும் அன்பினைக் கரந்த வாய்பாட்டாற் கூறினும் அது தெரிய நிற்பக் கூறுதல். ஏனை இவ்வாறு வருமிடம் அறிந்து இதனை உரைத்துக் கொள்க. மெய்ப்பாடு: மருட்கை. பயன்: வாயில் நேர்தல். (36)

37. அம்ம வாழி தோழி மகிழ்நன்
நயந்தோ ருண்கண் பயந்து பனிமல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்
தேற்ற னுற்ற சூள் வாய்த் தல்லே.

தலைமகளைச் சூளினல் தெளித்தான் என்பது கேட்ட காதற் பரத்தை[2] தலைகட்குப் பாங்காயினர் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.

---

1. தொல். பொ. 161.

2. பரத்தையர், காதற்பரத்தை, இற்பரத்தை, சேரிப்பரத்தை எனப் பலவகையாய்க் கூறப்படுவர். அவரைத் தொல்லாசிரியர் பரத்தையர் எனப் பொதுப்பட மொழிவர்.

இனி, காமக்கிழத்தியர், பரத்தையர் என வேறுபடுத்து, '' காமக்கிழத்தியராவார் பின்முறை யாக்கிய கிழத்தியர்; அவர் மூவகைப்படுவர்: ஒத்த கிழத்தியரும், இழிந்த கிழத்தியரும், வரையப்பட்டாரும் என. ஒத்த கிழத்தியர், முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னும் தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல்; இழிந்தாராவார், அந்தணர்க்கு அரச குலத்தினும், வணிக குலத்தினும், வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசர்க்கு ஏனையிரண்டு குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், வணிகர்க்கு வேளாண் குலத்திற் கொடுக்கப்பட்டாரும். வரையப்பட்டார், செல்வராயினர் கணிகைக் குலத்தினுள்ளார்க்கு இற்கிழமை கொடுத்து வரைந்து கொள்ளப்பட்டார். அவர், கன்னியில் வரையப்பட்டாரும், அதன் பின்பு வரையப்பட்டாரும் என இருவகையர். அவ்விருவரும் உரிமை பூண்டமையாற் காமக்கிழத்தியர் பாற் பட்டனர். பரத்தையராவார் யாரெனின், அவர் ஆடலும் பாடலும் வல்லராகி

உரை: தோழி, கேட்பாயாக ; மகிழ்நன் தான் செய்த சூள் பொய்யாகாத வகையில் ஒழுகுதலைத் தெளிய மாட்டானாயினும், தன்னைக் காதலித்தோருடைய உண் கண் பசந்து நீர்த்துளி சொரியும் வண்ணம் அச் சூளுறவினைப் பொய்த்து நீங்குதலில் மிகவல்லனா யுள்ளான், காண் எ. று.

நயப்பு, காதல். பனி, நீர்த்துளி. அடுக்கு, துணிவின் கண் வந்தது. தேற்றான் என்பறு, ''உய்த்தல் தேற்றானாயின்[1]''

அழகும் இளமையுங்காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தங்காதார்'' என்பர் ஆசிரியர் இளம்பூரணர் (தொல். 149. உரை.)

நச்சினார்க்கினியர், காமக்கிழத்தியர், பரத்தையர் என்பாருள், ''காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கை யுடையராகிக் காமக் கிழமை பூண்டு இல்லறம் நிகழ்த்தும் பரத்தையர்'' என்றும், ''அவர் தலைவனது இளமைப் பருவத்திற் கூடி முதிர்ந்தோரும், அவன் தலைநின்று ஒழுகப்படும் இளமைப் பருவத்தோரும், இடைநிலைப் பருவத்தோரும், காமஞ் சாலா இளமையோரும் எனப் பல பகுதியினராம்'' என்றும், ஏனைப் பரத்தையர், ''கூத்தும் பாட்டும் உடையராகி வரும் சேரிப் பரத்தையரும், குலத்தின்கண் இழிந்தோரும், அடியரும்; வினைவல பாங்கினரும் பிறருமாம்'' என்றும் கூறி, இளம்பூரணர் ஒத்த கிழத்தியர் முதல் மூவகையினராகக் கூறிய பாகுபாட்டைச் சிறப்புடைத் தலைவியோடு பரத்தையரையுங் கூட்டிக் காமக்கிழத்திய ரென்று சூத்திரஞ் செய்யின் மயங்கக் கூறல் என்னும் குற்றம் தங்குமாகலின், அஃது ஆசிரியர்க்குக் கருத்தன்று என மறுத்து, ''சான்றோர் பலரும் காமக் கிழத்தியரைப் பரத்தையராகத் தேற்றுவாய் செய்து கூறுமாறும் உணர்க'' (தொல். பொ. 151) என்பர்.

நாற்கவிராச நம்பியார், ''ஒருவன் தனக்கே யுரிமை பூண்டு, வருதலைப் பரத்தையர் மகளிராகிக், காமக்குவரைந்தார் காமக்கிழத்தியர்,'' ''யாரையும் நயவா வியல்பிற் சிறந்த. சேரிப் பரத்தையர் மகளிராகிக், காதலிற் புணர்ந்தோர் காதற் பரத்தையர்,'' ''அவருளும் வரைதற் குரியா ருளரே'' (113-5) என்பர் — இஃது உரைகளில் வருமாறு. நாட்டில் அடிக்கடி நிகழ்ந்த போர்களால், மகளிரினும் ஆடவர் தொகை குறைந்ததாக, ஆடவரின்றி மிக்க மகளிர் பரத்தையர் எனப்பட்டனர். பரத்தையர், மிக்கவர். இது வரலாறு காட்டுமாறு.

1. புறம். 185.

என்றாற்போலத் தெளிவின்கண் வந்தது. ஆயினும் என்பது எஞ்சி நின்றது. வாய்த்தல்லே என்பது விரிக்கும் வழி விரித்தல். வாய்த்தல், சொல்லியாங்கு ஒழுகுதல்; மெய்ம்மைப்பட நிற்றல்.

தலைமகன் தலைவியைச் சூளினால் தெளிவிக்கின்றான் என்பது கேட்டு, அவள் அதனால் தெளியாவாறு விலக்குங் கருத்தின ளாகலின், அவட்குப் பாங்காயினார் கேட்பக் காதற் பரத்தை, தேற்றான் உற்ற சூள் வாய்த்தல் என்றதனோடு நில்லாது, வல்லன் வல்லன் பொய்த்தல் என்றும் கூறினாள். இது. ''புல்லுதன் மயக்கும்[1]'' என்ற சூத்திரத்து, ''இல்லோர் செய் வினை இகழ்ச்சிக் கண்ணும்'' என்பதனால், தலைவன் தலைவியைச் சூளால் தெளித்துக் கூடுதலை இகழ்ந்துரைத்தவாறு. இவன் செய்த சூளுறவு கண்டு இவன் பொய்த்தொழுகான் என உட்கொண்டு இவனை நயந்து பின்னர்ப் பொய்த்தமையின் பசந்து துன்புற்றார் பலர் என்பாள், நயந்தோர் உண்கண் பயந்து பனிமல்க எனப் பன்மை வாய்பாட்டாற் கூறிப் புலவியும் ஊடலும் நிகழ்வுழி யெல்லாம் சூளுறுதலும் பொய்த்தலுமே அவற்குச் செய்கை களாயின என்றற்கு வல்லன் வல்லன் பொய்த்தல் என்று கூறினாள். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவி அறிந்து வாயில் நேராளாவது.

இனி, பசந்து பனிமல்க என்னும் பாடம் எதுகையின்பம் சிறவாமை யறிக. (37)

38. அம்ம வாழி தோழி மகிழ்நன்
தன்சொ லுணர்ந்தோ ரறியல னென்றுந்
தண்டளிர் வெளவு மேனி
ஒண்டொடி முன்கை யாமழப் பிரிந்தே.

தலைமகன் மனைவயிற் போகக் கருதினான் என்பது சொல்லிய தன் தோழிக்குப் பரத்தை சொல்லியது.

---

1. புறம். 151.

உரை: தோழி, கேட்பாயாக. குளிர்ந்த மாந்தளிர் போலும் மேனியும், ஒள்ளிய தொடியணிந்த முன்கையுமுடைய யாம் ஆற்ருது அழும்வண்ணம் பிரியக் கருதுதலால், மகிழ்நன் என்றும் தான் தெளிவிப்பான் கூறுவனவற்றைத் தெளிந்து அமையும் மகளிரின் அன்பினை அறியும் அறிவிலனும் எ. று.

எனவே, அறிவறியாதார் செய்யும் செயல் வகைகளைப் பொருளாகக் கோடல் வேண்டா என்பதாம்.

மகிழ்நன் தன்சொல், மகிழ்நன் தெளிவிப்பான் கூறிய சொற்கள். தெளித்தது தேறியிராமை உணரார் செயலாகலின், உணர்ந்தோர் என்ருர். ''தன்சொல் உணர்ந்தோர் மேனி[1]'' எனப் பிருண்டும் கூறுவர். அறியலன் என்றதனுல், அறிதற்குரிய அறிவும், அறியப்படும் அன்பும் பெற்றும். தளிர் என்றதனுல் சிறப்புடைய மாந்தளிர் கொள்க. ''நறுவடிப் பைங்கண் மாஅத் தந்தளி ரன்ன, நன்மா மேனி[2]'' என்ருர் பிறரும். ''ஐதாகின்றென் தளிர்புரை மேனியும்[3]'' என்புழியும் இதுவே கூறிக்கொள்க. வெளவும் என்றது உவம வாய்பாடு. செய்த னெச்சம் காரணப் பொருட்டு. யாமழப் பிரிந்து என்றது தோழி கூற்றினைக் கொண்டமைத்துக் கூறியது. மேனியும் முன்கையு முடைய யாம் என இயைக்க. பிரிந்து என்றது கார்ணப் பொருளில் வந்த வினையெஞ்சு கிளவி; இஃது அறியலன் என்னும் வினைக்குறிப்பொடு முடிந்தது. ''வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும், நினையத் தோன்றிய முடிபா கும்மே[4]'' என்பது இலக்கணம்.

தலைமகன் தன்னை முன்னர்க்கூடிய ஞான்று தெளித்த சொல்லைத் தேறியிருக்கின்ரு ளாகலின், பிறர்போற் கூறும் குறிப்பினுல், தன் சொல் உணர்ந்தோர் என்றும், தோழியால் அவன் பிரியக் கருதியிருத்தலைக்கேட்டு, அவன் கருத்தையும் தன் காதலையும் தூக்கி, அவற்றுட் பின்னது சிறந்து நிற்றலையுணர்ந்து, அதனையறியாது அவன் கருதுதல் தக்கதன்றென்பாள் அறியலன்

1. ஐங். 41. 2. குறுந். 331. 3. அகம். 95. 4. தொல். சொல். 36.

என்றும், அவ்வறியாமை புணர்வு, பிரிவு என்ற இரண்டிடத்தும் எப்போதும் இயல்பாய் உளது என்பாள் என்றும் என்றும் கூறினுள். காரணமின்றியே ஒருவரைக் குறைகூறல் முறை யன்மையின், யாமழப் பிரிந்தே என்றது காரணமாயிற்று. இதனுற் பரத்தைமாட்டுக் கலக்கம் என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

பரத்தையர் இவ்வாறு தலைமகனைப் புலந்து கூறல் வழுவா யினும் அஃது அமையும் என்பதனைப் ''புல்லுதல் மயக்கும்[1]'' என்ற சூத்திரத்து இவற்ருெடு பிறவும் என்றதனுற் கொள்க. ஏனை மெய்ப்பாடு: இளிவரல். பயன்: தலைமகன் கேட்டுப் பிரியாணுவது. (38)

39. அம்ம வாழி தோழி யூரன்
வெம்முலை யடைய முயங்கி நம்வயின்
திருந்திழைப் பணைத்தோன் ஞெகிழப்
பிரிந்தன ஞயினும் பிரியலன் மன்னே

ஒருஞான்று தலைவன் தன் மனைக்கட் சென்றது கொண்டு அவன் பெண்மை நலமெல்லாம் துய்த்துக் காதல் நீங்கிப் பிரிந்தானென்பது தலைவி கூறினுளெனக் கேட்ட பரத்தை, அவட்குப் பாங்காயினர் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக. ஊரன் விருப்பம் தரும் நம்முடைய மார்பகம் முற்றவும் சேரமுயங்கிப் பின்னர் நம்மினின்றும் அழகிய இழையணிந்த பெரிய தோள்கள் நெகிழ்ந்து மெலியுமாறு பிரிந்தாணுயினும். நெஞ்சில் இடையறவின்றி நிற்றலின் பிரிந்தானல்லன் எ. று

எனவே, பிரிந்தான் எனத் தலைமகள் முதலாயினர் கூறுவ தென்னை என்ருளாயிற்று.

---

1. தொல். பொ. 151.

வெம்மை, வேண்டல்.[1] அடைய என்பது எஞ்சாமை உணர நின்றது; ''நல்லகவனமுலை யடையப் புல்லுதொறும்[2]'' என்றாற்போல. பிரிந்தனனாயினும், என்றது, தலைமகட்குப் பாங்காயினார் முதலியோர் கூற்றினைக் கொண்டு கூறியது. பிரிந்தானெனக் கூறுதல் என்னை என்பது ஒழிந்து நிற்றலின், மன் ஒழியிசை; இனி, பன்னாளும் எம்வயின் உறைந்து, ஒரு ஞான்று, நெஞ்சத்தானன்றி மெய்யாற் பிரிந்தது பிரிவாகா தென்பது படநிற்றலின், மன்னைச்சொல் பெரும்பான்மை என்னும் பொருட்டெனினுமாம். பிரியலன் என்றற்குரிய ஏதுக்கள் வருவிக்கப் பட்டன.

முயங்குந்தோறும் முயங்கற்கு விருப்பம் மிகுவிக்கும் இயல்பினவாகலின் வெம்முலை என்றும், அவ்வியல்புடைய முலைகள் முற்றும் அவன் மார்பிடை மூழ்கப் புல்லித் துய்த்த புலரா இன்பத்தை நினைந்து கூறலின், வெம்முலை யடைய முயங்கி என்றும், நம் பெண்மை நலமெல்லாம் துய்த்துக் காதல் நீங்கிப் பிரிந்தானாயின், நம்பால் நலமும் அவனது காதலும் இலவாதல் வேண்டும்; அவ்வாறின்றி, அவை உளவாயின என்பாள், திருந் திழைப் பணைத்தோள் என்றும், தலைமகட்குப் பாங்காயினார் கூற்றை மறுக்கும் குறிப்பினளாகலின், தோள் நெகிழப் பிரிந்தன னாயினும் பிரியலன்மன் என்றும் கூறினாள். மார்படைய முயங்கும் முயக்கத்தை மகளிர் பெரிதும் வேட்பர் என்பதனைக் ''கெடுத்துப் படு நன்கலம் எடுத்துக்கொண் டாங்கு, நன்மார் படைய முயங்கி மென்மெலக், கண்டனம் வருகஞ் சென்மோ[3]'' என்றும், ''தண்ணிது கமழும் நின்மார்பு ஒருநாள் அடைய முயங்கே மாயின் யாமும், விறலிழை நெகிழச் சா அய்தும்[4]'' என்றும் சான்றோர் கூறுமாற்றால் அறிக. பிரிந்தனனாயினும் என்றதனால் எய்தப் பெறும் பிரிவு பிரிவெனப் படாதென்பதாம். இஃது, ''இல்லோர் செய்வினை இகழ்ச்சிக்கண்[5]'' தலைவி புலந்தும் ஊடியும் தலைவனொடு கூடுவாள் கூறியது கேட்டுப் பரத்தை பொறாது கூறியது என்க. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவிக்குப் பாங்காயினார் கேட்டுத் தலைமடங்குவாராவது.

---

1. சொல். 334. 2. அகம். 337 3. நற். 182. 4. அகம். 218.
5. பொ. 151.

திருந்திழைப் பணைத்தோள் நெகிழ என்ற பாடத்துக்குத் திருந்திய தொடியாகிய இழை பெரிய தோள்களினின்றும் நெகிழ்ந் தோடுமாறு என்றுரைக்க. இழை, ஈண்டுத் தொடி மேற்று; ''தோளே தொடிகநெகிழ்ந்தனவே'' [1] என்றதனானும் தோழிற்குத் திருந்திய இழை தொடியாதல் காண்க. (39)

40. அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒண்டொடி முன்கை யாமழப் பிரிந்துதன்
பெண்டி ரூரிறை கொண்டன னென்ப
கெண்டை பாய்தர [2] வவிழ்ந்த
வண்டுபிணி யாம்பல் நாடுகிழ வோனே

உலகியல் பற்றித் தலைவன் தன் மனைக்கண் ஒருஞான்று போனதே கொண்டு, அவ்வழிப் பிரியாது உறைகின்றான் என்று அயற்பரத்தையர் பலரும் கூறினாரென்பது கேட்டகாதற் பரத்தை, அவர் பாங்காயினார் கேட்பத் தன்தோழிக்குச் சொல்லியது.

உரை : தோழி, கேட்பாயாக, கெண்டை மீன் பாய்வதனால் மலர்ந்த வண்டு விரும்பும் ஆம்பல் மிக்க நாடு உடையோனாகிய மகிழ்நன் ஒள்ளிய தொடியணிந்த முன்கையினையுடைய யாம் அழுமாறு பிரிந்து சென்று, தன் பெண்டாகிய மனைவி வாழும் இல்லினையடைந்து பிரியாது தங்கினான் என அயற்பரத்தையர் கூறாநிற்பர்; இஃது என்னையோ, கூறுக எ. று.

பெண்டிர் என்றது அயற்பரத்தையரைப் பொறாமையாற் பன்மை வாய்பாட்டால் இழித்துக் கூறியது. ஊர், தலைவி வாழும் மனை. இறைகோடல், தங்குதல்; ''வண்டிறை கொண்ட

---

1. நற். 197.

2. கெண்டை பாய்தலால் ஆம்பல் மலரும் என ஈண்டுக் கூறியதுபோல, ஆளுடைய பிள்ளையார், திருக்கேதாரத் திருப்பதிகத்தில் ''வரிக் கெண்டை பாயச், சுனைநீலம் மொட்டலரும் கேதாரமே'' (செவ்வழி. 1.) என்று அருளுமாறு காண்க.

எரிமருள் தோன்றி[1]'' என்புழிப் போல. அயற்பரத்தையர் என்றது எஞ்சி நின்றது. பாய்தர என்புழித் தருதலைத் துணை வினை என்ப. மலர்ந்த பூ அவிழ்ந்தது போறலின், ''அவிழ்ந்த'' என்றூர். இனி, முகைப்பதத்தில் பூவின் இதழ்கள் முருக்கிப் பிணிக்கப் பட்டது போறலின், அப்பொருண்மை தோன்ற அவற்றைப்பிணி தளை முதலிய வாய்பாட்டால் வழங்குப. அம் முகைகள் மலர்ந்த விடத்தும் அப்பொருண்மையே சிறப்ப, அவிழ்ந்த வாய்பாட்டாற் கூறல் மரபாகலின் அவிழ்ந்த என்றூர் என்றுமாம்; ''தோன்றி சுடர்கொள் அகலிற் சுருங்கு பிணி யவிழ,'' ''பிடவுத் தளை யவிழ[2]'' ''பொதியவிழ் வைகறை[3]'' எனப் பிறூண்டும் சான்றோர் கூறுதல் காண்க. ஏனை வருமிடங் களிலும் இதுவே கூறிக் கொள்க. ''வண்டு பிணி யாம்பல்'' என்றது நெஞ்சு பிணிபொருள் என்றூற் போல நின்றது. கிழவோன் என்பது ''ஆவோ வாகும் பெயருமா ருளவே[4]'' என்புழி, ''உம்மை எச்சவும்மை யாகலான், அகரம் ஓகாரமாய்த் திரியும் பெயரும் உள என்றவாறு. கிழவன், கிழவள் என்பன நாடு கிழவோன் கிழவோள் தே எத்து எனவும் வரும்,'' எனத் தெய்வச் சிலையார் கூறுமாற்றூற் கொள்ளப்படும். வழக்கினுள் கிழவன் என்றே வழங்குதலின், இதுவே நெறியாதல் துணிக. ''ஸ்ரீ ராஜ ராஜேசுவரம் உடையார்க்கு ஸ்ரீகாரியஞ் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான்[5]'' என வழக்கினுள் வருமாறு காண்க.

அவன் பிரிவு உலகியல்பற்றி யன்றி எம்பால் அன்பின்மை யான் அன்று என்பது அறியாது அயலார் கூறுவர் என்பாள், பெண்டிர் ஊர் இறை கொண்டனன் என்ப என்றும், அவ்வாறு கொள்ளினும். உள்ளுறையால் அவன் மார்பு எமக்கும் உரித்தாம் என்றும் கூறினுள். தலைவன் தனக்குரிய பெண்டிர்பால் இறை கொளப் பிரிந்தானுயினும். அவனது பிரிவாற்றூது ஏனைப்பெண்டிர் அழுதல் இயல்பாதலின் யாம் அழப் பிரிந்து என்றுள். இது பிரிவாற்றூமை.

---

1. அகம். 218. 2. ஷ 235, 304. 3. கலி. 52.
4. தொல். சொல். 188. 5. S. I. I. Vol. II. No. 38.

கெண்டை பாய்தற்கு மலரினும் ஆம்பல் வண்டினைப் பிணித்து நிற்பதுபோல, தன் மனைவியின் ஊடலைத் தீர்ப்பான் நல்கினும் அவனது மார்பு, எம்மாற் பிணித்துக் கொள்ளப்படும் இயை புடைய தென்றுளாம். ''வரிவே யுண்கணவன் பெண்டிர் காணத், தாருந் தானையும் பற்றி ஆரியர், பிடிபயின்று தரூஉம் பெருங் களிறு போல, தோள் கந்தாகக் கூந்தலிற் பிணித்து அவன், மார்பு கடிகொள்ளேனாயின் ஆர்வுற்று, இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள்போற், பரந்து வெளிப்படாதாகி, வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே [1]'' எனப் பிறண்டும் பரத்தை வெளிப்படையாய்க் கூறுமாற்றிக. மெய்ப்பாடு: இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்: அயற்பரத்தையரைக் கழறுதல். (40)

---

1. அகம். 276.

5

புலவிப் பத்து

இப்பகுதிக்கண்வரும் பாட்டுக்கள் பத்தும் புலவிக்காலத்து நிகழ்ந்த கூற்றுக்களையே பொருளாகக் கொண்டு நின்றமையின், இஃது இப்பெயரினையுடையதாயிற்று. ''மறை வெளிப்படுதலும் தமரிற் பெறுதலும், இவை முதலாகிய இயனெறி திரியாது, மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும், பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே[1]'' என்றதனுல், கற்பிற்கே சிறந்த மருதத்தின் கண், சிறப்புடைய புலவியே பொருளாக வந்தது.

காமப் புணர்ச்சிக்கண், துனி புலவி ஊடல் என்ற மூன்றும் காமவின் பத்துக்குச் சிறப்புத் தருவனவாம். இவற்றுள், துனி முதிர்ந்த கலாம் என்றும், புலவி இளைய கலாம் என்றும் பரி மேலழகர் கூறுவர். இவை காமக் கலவிக்கு முன்னர் நிகழ்வன. ''துனிபுலவி யூடலின் நோக்கேன் தொடர்ந்த, கனிகலவி காதலினுங் காணேன்[2]'' என்றதனுல், இவற்றின் பெயரும் முறையும் உணர்ந்து கொள்க.

புலவி மிக்கவழி, துனி தோன்றிக் காமவின்பத்சை சிறப்பிக் காமையின், அதன் இன்மை காமத்துக்கு ஆக்கம் என்றும்,

1. தொல். பொ. 499. 2. திணைமா. 153,

''ஊடுதல் காமத்திற் கின்பம்[1]'' ஆயினும், காமம் நீடுவதன்று கொல் என்னும் உணர்வை எழுப்பித் துன்பம் உறுவிக்கும் சிறுமை யுடைமையின், ஊடலினும் புலவியே சிறப்புடையது என்றும் சான்றோர் கருதுப. ''துனியும் புலவியும் இல்லாயின் காமம், கனியும் கருக்காயும் அற்று[2]'' என்றதனால் ஆசிரியர் திருவள்ளுவனார், துனியை விலக்கிப் புலவியின் சிறப்புடைமையை வலியுறுத்துதல் காண்க. அன்றியும், ''நலத்தகை நல்லவர்க்கு ஏ எர் புலத்தகை, பூவன்ன கண்ணாரகத்து'' ''உப்ப மைந் தற்றாற் புலவி அது சிறிது, மிக்கற்றால் நீளவிடல்[3]'' என்று கூறுமாற்றாலும் காம நுகர்ச்சிக்குப் புலவி அழகும் இன்பமும் பயக்குமாறு அறிக.

இனி, துனி முதலிய மூன்றனுள். புலவி நடுநிற்றல் அறம் முதலிய இம்மைக்குரிய உறுதிப் பொருள் மூன்றனுள், தான் எய்தியவழி இருதலையும் ஒருங்கு எய்துமாறு சிறந்த பொருள் நடுநிற்றல்போல என்க. எனவே, புலவியால் ஏனைத் துனியும் ஊடலும் எய்தும் என்பதாம். இதனைச் செய்யுட்களிற் காணலாம்; ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இனி, ஆசிரியர் பேராசிரியர், "புலவி யென்பது புணர்ச்சி யான் வந்த மகிழ்ச்சி குறைபடாமற் காலங் கருதிக்கொண்டு பயப்பதோர் உள்ள நிகழ்ச்சி'' ''ஊடலென்பது, உள்ளத்து நிகழ்ந்ததனைக் குறிப்பு மொழியானன்றிக் கூற்றுமொழியான் உரைப்பது'' ''அங்ஙனம், ஊடல் நிகழ்ந்தவழி, அதற்கேது வாகிய பொருள் இன்மை யுணர்வித்தல் உணர்வு எனப்படும் இல்லது கடுத்த மயக்கம் தீர உணர்த்துதல் உணர்த்துதல் எனவும், அதனை உணர்தலால் உணர்வு எனவும் படும்,'' என்றும், ''புலவிக்காயின், உணர்த்தல் வேண்டா; அது குளிர்ப்பக் கூறலும் தளிர்ப்ப முயங்கலும் முதலாயவற்றான் நீங்கு தலின்'' என்றும் கூறி, ''ஊடலிற் பிறந்த துனியும் பிரிவின் பாற் படும் என்பதூஉங் கொள்க: என்னை, காட்டக் காணாது கரந்து மாறுதலின்'' என முடிபு கூறினர். கூறினாராயினும்,

---

1. குறள். 1330. 2. ஷை 1306. 3. குறள். 1305, 1302.

உள்ள நிகழ்ச்சியும், கூற்றுமொழியான் உரைத்தலும் ஒரொவழி ஒற்றுமை யெய்தக் கூறப்படுதலும் உண்மையின், ஊடிய செய்கையினையும் சான்றோர் புலத்தல்வாய்பட்டாற் கூறுவதுண்டு. அக்காலை அதுவும் புலவி யெனப்படுதற்கு இழுக்கின்மையின், துனித்தார் போலவும், ஊடினார்போலவும் புலந்து கூறுவனவும் புலவியாதல் பற்றி இப்பகுதி புலவிப்பத்து எனப் பெயர் பெற்றது என்றுமாம்.

இனி, உயிராலும் உள்ளத்தாலும் குரவராற் செய்யப்படும் சிறப்பாலும் ஒற்றுமையுடைய தோழி கூற்றும் தலைமகள் கூற்றேயாய்க் கருதப்படுமாகலின், புலவிக்கண் அவள் கூற்றும் இங்குத் தொகுக்கப்பெறும் என உணர்க. (40)

41. தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத்தவ னூரென்பவதனால்
தன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே.

கழறித் தெருட்டற் பாலராகிய அகம்புகல் மரபின் வாயில்கள் புகுந்துழித் தலைவனையும் பாணன் முதலாகிய பக்கத்தாரையும் இகழ்ந்து தலைவி கூறியது.

ப. உரை: அன்பில் முதலை என்றது தலைவனை நோக்கிய தெனவும், பொய்கையில் வெண்பூ என்றது, புறத்தொழுக்கத் திற்குத் துணையாகிய அறிவிலாதாரை நோக்கியதெனவும் கொள்க.

உரை: தான் ஈன்ற பார்ப்பினைத் தானே தின்னும் அன்பில்லாத முதலைகளோடு வெண்மையான பூக்கள் நிறைந்த பொய்கையினையுடையது அவனது ஊர்; அதனால், அவ்வூர் கிழவனாகிய தலைமகன், தான் தெளித்த சொல்லைத் தேறியிருந்தவர் மேனியைத் தன் பிரிவால் பொன் போலும் பசப்பினை எய்துவிக் கின்றான். எ. று.

முதலை நீர்வாழும் உயிரினத்துள் வைத்துக் கூறப்படுதற்கு அமைந்ததாயினும், நிலத்தினும் இயங்கும் இயல்புடைமையின், இதனைத் தவழ்வனவற்றுள் அடக்கினர் ஆசிரியர் தொல் காப்பியனார்; ''தவழ்பவை தாமும் அவற்றோரன்ன[1]'' என்பது தொல்காப்பியம். ''கெண்டை யஞ்சினை மேய்ந்து கிளர்ந்துபோய், முண்டகத்துறை சேர்ந்த முதலைமா[2]'' என்று தோலா மொழித் தேவர் கூறியதனை எடுத்துக்காட்டி, ''முதலையை மா வென்பர்'' என்று கூறி, ''அவை மீன் எனப்படுவதல்லது, மா எனப்படா'' என்றனர் அடியார்க்கு நல்லார்[3], நச்சினார்க்கினியரும் ''முதலையும் சுறவும் மீனாதலின், மாவென்றல் மரபன்று[4]'' என்பர். இக் காலத்து உயிர் நூலறிஞர் சுறுவினை மீனினத்துட் கொண்டு, முதலையை மீன் என்னார். அவர்கள் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியாங்கு, முதலையைத் தவழ்வனவற்றுள்[5] வைத்தே ஆராய்வர். ''ஒடுங்கிருங் குட்டத்து அருஞ்சுழி வழங்கும், தொடுந்தாள் முதலையும், இடங்கரும், கராமும்[6]'' என்பதன் உரையில் ''இவை மூன்றும் சாதி விசேடம்'' என்று நச்சினார்க்கினியர் கூறினர். இனி, இக்காலத்தறிஞர், முதலைவகை இருபதின் மேலும் உள என்பர். இவை ஊனுள் வாழ்க்கைய[7] வாயினும் பெறலருமையான் பெரும்பாலும் மீனுண்டே வாழ்கின்றன. 'முதலைப்போத்து முழுமீன் ஆரும்[8]'' என இந்நூலுள்ளும் கூறுப இம் முதலைகள் நீரிலும் நிலத்திலும் இயங்குவனவாகலின், அவ்வியக்கத்திற்கு ஏற்பச் சூடுங் குளிர்ச்சியும் எய்துமாறு அவற்றின் குருதியும், நீரின் அடியிற்போல நிறத்தினும் நடப்பதற்கேற்ப அவற்றின் கால்களும் அமைந்திருக்கின்றன. முதலைகள் முட்டையிட்டு வாழும் உயிர்வகை. இவை முறைக்கு இருபது முதல் நூறுவரை முட்டை ஈனும். ஈனுங்கால், சில முதலைகள் மண்ணிற் குழி யொன்றை அகழ்ந்து, அதன்கண் தாம் ஈன்ற முட்டைகளை வைத்து மண்ணாலே மூடி அவை பொரிக்குமளவும் புறந்தருதல்

1. தொல். பொ. 560.
2. சூளா. நாட்டு. 22.
3. சிலப். பதி. 1-2. உரை.
4. தொல். பொ. 549.
5. Reptiles.
6. குறிஞ்சி. 256. 7.
7. Flesh-eaters.
8. ஐங். 5.

உண்டு; சில அக்குழியினிடத்தே அடைகாப்பனபோல இருந்து அமர்ந்துறையும். அக்குழியின் புறத்தே தரை பிளந்து தோன்றின் முட்டை பொரிக்குங் காலமாயிற்று என்று உணர்ந்து அம் முட்டைகளை வெளியே கொணர்ந்துவிடும். பின்பு, அம் முட்டைகளைத் தன் மூக்கின்கண் அமைந்த கூரிய உறுப்பினுல் உடைத்துக்கொண்டு முதலையின் பார்ப்பு வெளிப்போதரும். அவ்வாறு போந்தவற்றுள், தாயுடன் தொடர்ந்து சென்று இரை தேரும் மதுகையில்லாதவற்றைத் தாய்முதலையே உண்டுவிடும். நோயுற்றனவும் ஊறுபட்டனவுமாகிய பார்ப்புக்களைத் தாய்முதலை அன்பின்றித் தின்றுவிடும். இதனைக் கருதியே, ஈண்டும் ஆசிரியர் ஓரம்போகியார் ''தன் பார்ப்புத் தின்னும் அன்பின் முதலை'' என்ருர் போலும்.

அன்புடைமைக்குச் சிறப்புடைய எடுத்துக்காட்டாவது தாய்மையாகலின், அப் பண்பிற்கு மாருய செயலுடைமை பற்றித் தாய் முதலையைத் தன் பார்ப்புத் தின்னும் அன்பின் முதலை என்று காட்டினர். கொடுமை கூறற்குச் சிறந்த அன்பின்மை சுட்டி நிற்றலின், முதலையொடு என்புழி, ஓடு உயர்புன் வழித்தாயிற்று. வெண்பூ என்றற்கு ஏற்புடையன வெண்டாமரையும் வெள்ளாம்பலுமாயினும், உள்ளுறை பரத்தையைக் குறித்து நிற்றலின் சிறப்பில்லாத வெள்ளாம்பலே ஈண்டு வெண்பூ எனப்பட்டது என்க. அதனுல் என்னும் சுட்டு முதலாகிய காரணக்கிளவி அவனுடைய ஊரது உடைமை சுட்டி நின்றது. ஊர்க்குரிய செயல், அவ்வூரை உடையோர்க்கும் உண்டென்பது எய்துவித்தற்கு, ஊர் கிழவோன் என்ருர். பசப்பெய்திய மேனி பொன் போறலின் பொன் போற் செய்யும் என்று கூறப்பட்டது. போற் செய்யும் என்பன ஒரு சொல்லாய்ப் பிறவினைப் பொருள் தந்தன. மேனி பொன்போறல் மகளிர்க்கு இயற்கையின்மையின் காரணமும் உடன் கூறப்பட்டது; ''தொன்னலன் இழந்த என் பொன்னிறம் நோக்கி[1]'' என்பதனுலும் இப்பொருண்மை துணியப்படும்.

பிறவற்றின் பார்ப்பைத் தின்றல் அஃறிணையுயிர்கட்கு அமையும் என்பார்க்கும், தன் பார்ப்பினைத் தானே தின்றல்

1. நற். 56.

அமையாது என்னுங் கருத்தால், தன்பார்ப்புத் தின்னும் என்றும், அவ்வாறு அறன்கடை நின்ற உயிர்களைப் பொய்கைக்கண் உடைய ஊர்கிழவோனுக்குத் தன்னுல் எம்பால் உளதாய மேனி நலம் கெடுமாறு அன்பிலனுதலும் அமையும் என்றற்கு, அன்பின் முதலையொடு என்றும், தலைவனது புறத்தொழுக்கம் காரணமாகப் பசந்த மகளிரின் முகம்போல விளர்த்துத் தோன்றித் தம்மைக் காணும் அவர் மனத்து அன்பு தோற்றுவிக்கும் சிறப்புடைய வெண்டாமரையினும்' தம்மைப் பிரியாவாறு பிணித்து நிற்கும் பரத்தையர் இரவெல்லாம் துயிலாது நின்று காப்பதுபோல, விடியலினும் கூம்பாதுநிற்கும் இயல்பினையுடைய ஆம்பலை மிக வுடைய ஊரனுயினுன் என்பதுபட வெண்பூம் பொய்கைத்து அவனூர் என்றும், தலைமகனது கொடுமை யொழுக்கத்தைத் தான் அறிந்துளாளாயினும், தன் பாங்காயினுர் அவ்வொழுக்கத் தோடு அதற்குரிய பரத்தையரியல்பும் அறிந்து கூறலின், அவர் மேல் வைத்து என்ப என்றும், அப்பெற்றியினையுடைய தலைமகற்குச் சொல்லும் செயலும் ஒவ்வாமை யொழுகல் இயல் பாகலின், அதனையுணராது அவன் தெளித்த சொல்லையே தேறியிருந்தமை தோன்றத் தன்சொல் உணர்ந்தோர் என்றும், எனவே, தேறி இருக்குங்கால் சிறந்த மேனி நலத்தின் ஆக்கத் திற்கு மாருகிய பசப்பு நிகழ்தல் ஒருதலை யாகலின் மேனி பொன்போலுமாறு பசப்பிப்பன் என்றும், அவற்கு வாயிலாய் வந்தார் அனைவரும் அவனது கொடுமையினை மறைத்து மீட்டும் அவன் சொல்லையே தேறியிருக்குமாறு கூறலின் அவரும் அகப்பட ஊர் கிழவோன் என்றும் கூறினுள். அக்கருத்துக்கு ஊர் என்றது முன்னிலைப் புறமொழி. இதனுல், தலைமகற்கு வாயிலாய் வந்தாரையும் ஓராற்ருல் இகழ்ந்தவாறு காண்க.

தான் ஈன்று புறந்தருதற்குரிய தன்பார்ப்பினைத் தரனே தின்னும் முதலையினையும் அதனேடு உடனுறையும் வெள் ளாம்பலினையும் உடைய ஊர் என்றதனுல், தான் தெளிவிப்பான் கூறிய சொற்களைத் தன் புறத்தொழுக்கத்தால் தானே சிதைத்தலை யும், தன்கொடுமை நினையாது கூடியுறையும் அறிவில்லாத

பரத்தையரையுமுடையன் என்ருளாம். மெய்ப்பாடு: வெகுளி. பயன் : புலத்தல்.

இனி, பேராசிரியர், தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலே யென்பது இன்னும் தலேமகனது கொடுமைக்கு உவமையாயிற்று ; வெண்பூம் பொய்கைத்து அவனூர் என்பது தலேமகள் பசப்பு நிறம்பற்றி உவமையாயிற்று'' என்றும், தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலேயொடு ……………ஊர் கிழவோன் என்றவழி இன்ன திறத்தன் என்றதனுனே இத்தன்மைத்தாகிய ஊர் அனேயான் எனச் சொல்லுதலும்'' என்றும், "வெண்பூம் பொய்கைத்து அவனூர் எனத் தலேவன் ஊரின்கண் உள்ளது ஒன்றனல், தலேவிக்கு உவமையைப் பிறப்பித்தவாருயிற்று,'' என்றும், "தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலே யென்பது தோழி கூற்று ; என்னே, அவற்றின் செய்கையெல்லாம் அறியா ளன்றே ; தலேமகள் பெரும் பேதையாகலின் என்பது[1]'' என்றும் கூறுவர். மற்று, இதன்கண் தலேமகள் பெரும் பேதை என்பது ஒக்குமாயின், அறிவிக்க அறியும் அறிவமைதியுடைமை யால் தலேவி பிறர் கூறிய வாய்பாட்டால் அவனூர் என்ப என்று கூறுகின்ருளென்பது எய்துதலால், தோழி கூற்றென்றல் நிரம்பாமையறிக.

இனி, நச்சினர்க்கினியர், தன் பார்ப்புத் தின்னும் அன்பில் முதலேயொடு வெண்பூம் பொய்கைத்து அவனூர் என்ப என்ருற் போலத் தலேவன் கொடுமையும் தலேவி பேதைமையும் உடனுவமம் கொள்ள நிற்கும்[2]'' என்பர். எனவே, இவர்க்கும் இது தோழி கூற்று என்றலே கருத்தென்பதும், அது நிரம்பாமையும் உணர்ந்து கொள்க.

இனி, ஐங்குறுநூற்று அச்சுப்பிரதி, இப்பாட்டின் இரண்டாமடி ''வெண்பூம் பொய்கைத் தவனூ ரென்ப'' என நேரடியாகக் கொண்டு, ''அதனல்'' என்ற சீரினேக் கூனுகக் கொண்டுளது.

---

1. தொல். பொ. 300-1. உரை. 2. தொல். பொ. 230. உரை.

''சீர் கூனுதல் நேரடிக் குரித்தே[1]'' என்ற சூத்திரத்தின்கண் ஆசிரியர் தொல்காப்பியனுர் நச்சினுர்க்னியர், ''ஏற்புழிக் கோடல் என்பதனுல் அடி முதற்கட் கோடும்'' என்பராகலின், அது பொருந்தாமை பெறுதும். மற்று, ''கூர்முண் முள்ளிக் குவிகுலைக் கழன்ற'' என்ற அகப்பாட்டினுள்[2] ''இவை பாராட்டிய பருவமு முளவே, இனியே'' என்றும், ''தீம்பால் படுதல் தாமஞ்சினரே, யாயிடை'' என்றும், இரும்பிழி மகர்அஇவ்வழுங்கன் மூதூர்'' என்னும் அகப்பாட்டினுள்[3] ''நில்லாநெஞ்சத் தவர்வா ரலரே, யதனுல்'' என்றும் சீர் கூனுகி நேரடியீற்றில் வந்தன, முறையே ''புதல்வற்றடுத்த பாலொடு தடைஇ,'' ''கவவிக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடை'' எனவும், அரிபெய்புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து'' எனவும் முன்னர் நின்ற நேரடி முதற்கண் வந்தன எனப்படும் என்க. ஈண்டு அவ்வாறு நிற்றற்கு முன் நின்ற அடி நேரடியன்மையும் அறிந்து கொள்க. (41)

42. மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
யாண ரூரநின் மாணிழை யரிவை
காவிரி மலிர் நிறை யன்னநின்
மார்புநனி விலக்கல் தொடங்கியோளே.

தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை தலைவன் பிற பரத்தை யருடன் ஒழுகினுன் என்று புலந்தாளாக, அதனை அறிந்த தலைவி அவன் தன்னில்லத்துப் புகுந்துழித் தான் அறிந்தமை தோன்றச் சொல்லியது.

உரை : புதுவருவாயினையுடைய ஊரனே, மாண்ட இழைகளை அணிந்த நினக்குரியளாகிய அரிவை காவிரி யாற்றின் பெருக்குப் போல் விரிந்த நின்னுடைய மார்பினை மிகவும் விலக்குதலைத் தொடங்கினுள்; அவள் கள்ளுண்ட களிப்பு மேன்மேலும் மிக்குற மயக்கம் எய்தினுள் போலும் எ. று.

---

1. ஷெ செய். 49. 2. அகம். 27. 3. ஷெ 122.

அரிவை, தொடங்கியோள், மயங்கினள் கொல்லோ என இயையும். மகிழ், முதனிலைத் தொழிற் பெயர்; மகிழ்தல் கள்ளுண்டு மயங்கல்; மகிழக் களிப்பட்ட தேன்றேறல்[1]'' என்றதனுலும் இப்பொருண்மை துணியப்படும். உண்டு பயின்ற வழிக்கள்ளும் மயக்கம் செய்தாகலின் மிகச்சிறப்ப என்று சிறப்பித்தார். யாணர், புதுமை; ஆகு பெயரால், நாளும் இடையருது பெருகும் செல்வ வருவாய் மேற்று; ''அருஅ யாணர் அகன்றலைப் பேரூர்[2]'' என்புழிப்போல. ஏனையிடங்களினும் இதுவே கூறிந் கொள்க. அரிவை என்றது ஈண்டுப் பரத்தையை. தம்மை மறந்தாரைப் பிரியா வகையிற் பிணிக்கும் கருவியாய்ப் பயன் படும் சிறப்புடைமையின், அவரணியும் இழையினை மாணிழை என்ருர்; ''ஆய்தொடியார்[3]'' என்பதற்கும் பரிமேலழகர் இப் பொருளே உரைத்தனர். பரத்தையை இழித்துக் கூறல் கருத்தாகலின் இது குறிப்பு மொழி; இனி, உயர்த்திக் கூறிய தாகக் கொள் வழியும் இஃது அவள் மனத்துப் புலவிக் குறிப்பினையே உணர்த்தும் என அறிக: ''கற்பு வழிப்பட்டவள் பரத்தை ஏத்தினும், உள்ளத் தூடல் உண்டென மொழிப[4]'' என்பது பொருளியல். பூவும் சாந்தும் சுமந்து பரந்து விளங்குதலின் காவிரி மலிர்நிறை கூறினர்; ''புதுவது வந்த காவிரிக் கோடு தோய் மலிர்நிறை[5] '' என்றும், ''செங்குணக் கொழுகுங் கலுழி மலிர் நிறைக் காவிரி[6]'' என்றும் சான்ரோர் காவிரியினையே கூறுதல் காண்க.

பரத்தையர் சேரிக்கண் நிகழ்ந்ததனை மறைத்துத் தலைவிபால் எய்தியிருந்த தலைமகற்குத் தலைவி தான் அறிந்தமை தோன்றச் சொல்லெடுக்கின்ரு ளாகலின், மகிழ் மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ என்ருள். இதனல் தலைவன் மனத்துச் சூழ்ச்சி[7]

---

1. பரி. 16:28. 2. பொருந 1. 3. குறள். 911.
4. தொல். பொ. 233. 5. அகம். 166. 6. பதிற். 50.

7. ''சூழ்ச்சி யென்பது சுழற்சி. சூள்வருவாலைச் சுழல்வரும் என்ப வாகலின்; அது வெளிப்படுவதோர் குறிப்பின் அவன்கண் தோன்றின், அதுவும் மெய்ப்பாடு: அஃதாவது மனத்தடுமாற்றம்'' என்பர் பேராசிரியர்.

பிறந்தது. தலைமகன் பரத்தையிற் பிரிந்து நாளும் புதுவோரை மேவி ஒழுகுகின்றானுதலைச் குறிப்பாற் காட்டுவாள் யாணர் ஊர என்றும், பரத்தையர் அவற்குரியராக, அவருள் ஒருத்தி செய்த தனைத் தான் அறிந்தமை தோன்ற நின் மாணிழை அரிவை என்றும், காவிரி மலிர்நிறை மகளிர் பலரும் படிந்தாடும் பான்மை யுடைத்தாதல் போல, நிர்மார்பு நின்பெண்டிர் பலர்க்கும் உரித் தாயிற்று என்றற்குக் காவிரி மலிர்நிறை அன்னநின் மார்பு என்றும், அதனை அறியாது புலந்து தன் கையாலும் தானையாலும் கோதையாலும் நின்னைப் பலகாலும் சிறைப்ப, நின்மார்பு சிறைப்படாது அவளைச் செறியச் சென்றது என்பாள், நனி விலக்கல் தொடங்கினுள் என்றும், அக்காலை, அவள் ஊட லுணர்த்தும் வாயிலாக நீ செய்தனவும் செப்பினவும் உணரா இயல்பினரும் எளிதில் உணரும் பான்மையவாகவும் அவள் உணராது விலக்குதலே பொருளாகத் தொடங்கியதற்குக் காரணம் அவள் உணர்வு ஒழிந்தமையன்றிப் பிறிதில்லை என்பாள் மகிழ் மிகச் சிறப்ப மயங்கினள் கொல் என்றும் கூறினுள்.

இது, ''புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு, அகன்ற கிழவனைப் புலம்பு நனிகாட்டி, இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்ந் தருக்கி, எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கின்[1]'' தலைவி புலந்து கூறியது இதன்கண், யாணர் ஊர என்றது புதுவோர் சாய அகன்றவாறும், காவிரி மலிர்நிறை அன்ன மார்பு என்றது புகன்ற உள்ளமுடைமையும், நனி விலக்கல் தொடங்கியோள் என்றது புலம்பு நனி காட்டலும், மகிழ் மிகச் சிறப்ப மயங்கினள் என்றது இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த் தருக்கி எதிர்பெய்து கூறலும், இவ்வாறு தன்போல்வாள் ஒருத்தியைக் கூடிய துணையானே புலந்து வேறுபடுவள் தன்னின் வேருய என்மனை வருதலை அறிவாளேல் பிறிது படுவாளாகலின் அவள் பாலே செல்க என மறுத்தலும் சுட்டி நின்றவாறு காண்க. மெய்ப்பாடு: வெகுளியைச் சார்ந்த பெருமிதம். பயன் புலத்தல்.

---

1. தொல். பொ. 147.

இனி, ஆசிரியர் நச்சிஞர்க்கினியர், இதனைத் தோழி கூற்ருகக் கொண்டு, ''உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே[1]'' என்பதற்கு உதாரணமாகக் காட்டி, ''இதனுட் காவிரிப்பெருக்கு போலத் தலைவியை நோக்கி வருகின்ற மார்பினைத் தான் விலக்குமாறு என்னை எனத் தலைவியை உயர்த்துக் கூறியவாறு காண்க'' என்பர், அவ்வாறு விலக்குதற்குக் காரணம் மகிழ் மிகச் சிறத்தலாற் பிறக்கும் மயக்கம் போலும் என்கின்ருளாகலினுலும், அஃது உயர்மொழிக்கிளவி யாகாமையாலும் அவர் கூறியது பொருந்தாமை உணர்ந்துகொள்க.

விலங்கல் என்றும் பாடமுண்டு. அதனுல் சிறப்புடைப் பொருட்பேறு இன்று.

43. அம்பணத் தன்ன யாமை யேறிச்
செம்பி னன்ன பார்ப்புப்பல துஞ்சும்
யாண ரூர நின்னினும்
பாணன் பொய்யன் பலசூ ளினனே.

பாணன் வாயிலாகப் புகுந்து தெளிப்ப மறுத்த தலைமகள் பாணனேடு தலைவன் புகுந்து தெளித்துழிச் சொல்லியது.

ப. உரை: யாமைப் புறத்து ஏறிப் பார்ப்புப் பல துஞ்சும் ஊர என்றது, மார்பில் துயில்கின்ற புதல்வரையுடையாய் எ. று. மகப்பெற்று வாழ்வார்க்குப் பொய்கூறல் ஆகாது என்பதாம்.

உரை: செம்புகளை யொக்கும் யாமைப் பார்ப்புக்கள், மரக்கால் போலும் தாயாமையின் மேல் ஏறியுறங்கும் யாணரூரனே, நின்னினும் நினக்கு வாயிலாகப் புகுந்த பாணன் பொய் பல கூறுதலும் சூள்பல செய்தலும் உடையன், காண் எ. று.

அம்பணம், மரக்கால்; இதனைத் தரகர் அளக்கும் மரக்கால் என்பர் அடியார்க்கு நல்லார். ''பறைக்கட் பராரையர் அம்பண

1. தொல். பொ. 240.

அளவையர்[1]'' என்பதனைப் ''பறைக்கட் பராரை அம்பணம்'' என்று கொண்டு, ''பட்டமணிந்த வாயையும் பரிய அரையையு முடைய அம்பண வளவை'' என அதன் அரும்பதவுரைகாரர் கூறுவர். யாமைப் பார்ப்புக்களின் அடிப்பகுதி செம்மை நிறம் பெற்று ஓட்டின்கட் பெய்து நிரப்பி இறுகுவித்த செம்பின் குழம்பு போறலின், செம்பின் அன்ன பார்ப்பு என்றார்; ''கம்மியர் செம்புசொரி பானையின் மின்னி[2]'' என்றதனாலும், செம்பு அதன் குழம்பினை உணர்த்துமாறறிக. இனி, அம்பண வளவையின் வாயில் அணிந்த செம்பினால் இயன்ற பட்டம் போல, யாமைப் புறத்தே கிடந்து துஞ்சுதலின் இவ்வாறு கூறினர் எனினுமாம். இன்னுருபு, உறழ்ச்சி. பாணனது இயல்பு பாணற் குரைத்த பத்தின் முன்னுரைக்கட் கூறப்படும். பாணன் தலைமகற்கு வாயிலாய் வந்து, அவனது காதன்மையும் வரவுங் கூறி அவற் குரிய மகளிரின் சிவப்பாற்றுவிக்குமிடத்து, அவன் சொல்லினை மகளிர் தேறியிருத்தலும், அவன் கூறியாங்குத் தலைமகன் வாராது தாழ்த்தலும், அதனான் அம்மகளிர் ஆற்றாது வருந்தி வேறு படுதலும் அகவொழுக்கத்தில் நிகழ்தல் இயல்பாகலின், அவர்கள் அவன் சொற்களைப் பொய்யென மொழிதல் இயல்பு. ''நைவளம் பூத்த நரம்பியை சீர்ப் பொய்வளம் பூத்தன பாண நின் பாட்டு[3]'' ''கைகவர் நரம்பின் பனுவற் பாணன், செய்த அல்லல் பல்குவவையெயிற்று. ஐதகல் அல்குல் மகளிர் இவன், பொய் பொதி கொடுஞ்சொல் ஓம்புமின்'' ''பாணன் கையதை, வள்ளுயிர்த் தண்ணுமை போல, உள்யாதும் இல்லதோர் போர் வையஞ் சொல்லே[4]'' என்று சான்றோர் செய்யுட்களிற் பயின்று வருதல் காண்க. சூள் என்றது ஈண்டு வன்புறையை.

புறத்தே ஒழுகித் தன் மனையகம் போந்து புதல்வனைத் தாங்கி நின்ற தலைமகனை நோக்கி, புறத்தொழுக்கினரும் அவர்கட்குத் துணையாயினரும் பொய்ம் மொழியும், பொய்ச்சூளும் செய்தொழுகுவர்; ஆயினும், அச்செய்கை மகப்பயந்தார்க்குத்

---

1. சிலப். 14 : 209–10. 2. நற். 153. 3. பரி. 18, 20.
4. நற். 200, 310.

தக்கதன்றாக, அதனை நினையாது நீயும் நின்பாணனும் அது செய்து ஒழுகுகின்றீர்கள்'' என்றற்குத் தலைமகனையும் பாணனையும் ஒருங்கெடுத்துத் தலைமைக் குணங்களால் உயர்ந்த நின்பால் பொய்யொழுக்கம் தோன்றினமையின், நின் குறிப்புவழி ஒழுகும் பாணனிடத்தும் அது தோன்றிற்று என்பாள், நின்னினும் என உறழ்ந்தும், நின் பொய்யொழுக்கத்திற்குத் துணையாதல் தனக்குக் கடன் என்பதுபற்றிப் பாணன் அது செய்கின்றானாயின், அதனால் யாம் ஆய்நலக்கேடும் ஆறாத் துயரும் அடைய எய்தினேம் என்பாள், பாணன் பொய்யன் பல சூளினன் என்றும் சூளுறுகால், தெய்வத்தினை முன்னிலையாக்கிக் கூறுவதியல்பாகலின், அச்சூள், பொய்யினும் கொடிதாதல் நோக்கிச் சூளுறவினைப் பிரித்தும், பலகாற் போந்து பொய்யும் சூளும் செய்தான் என்பாள் பல பொய்யன் பலசூளினன் என்றும் கூறினாள். இதனால் பாணனை வாயில் மறுத்தற்கு ஏதுவும் கூறியவாறாற்று. ''கொண்க எம்வயின், மாணலம் மருட்டும் நின்னினும், பாணன் நல்லோர் நலம் சிதைக்கும்மே[1]'' எனப் பிறாண்டும் பாணனது கொடுமை கூறுமுகத்தால் அவற்கு வாயில் மறுத்து மறைமுகமாகத் தலைமகனது கொடுமை கூறப்படுமாறு காண்க.

யாமையின்மீது அதன் பார்ப்பு ஏறித் துஞ்சும் என்றதனால், தலைமகன் மார்பின்மீது அவன் புதல்வன் அமர்ந்து துயில்கின்றமை பெற்றாம்; பெறவே, மகப்பயந்து வாழ்வார்க்கு அம்மக்கள் தமது மார்பின்மீது ஏறி விளையாட்டயர்தலும், அமர்ந்து கிடந்து துயிறலுமாகிய இச்செயல்களாற் பிறக்கும் இன்பத்தினும் இம்மைக்கண் சீரியது பிறிதின்மையின் அதனைச் சுட்டி உள்ளுறுத் துறைத்தவாறாயிற்று; ''மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்[2]'' எனத் திருவள்ளுவனாரும், ''இன்னகை மனையோள் துணைவி யாகப் புதல்வன், மார்பின் ஊரும் மகிழ்நகை யின்பம்[3]'' எனப் பேயனாரும் கூறுதல் காண்க. மெய்ப்பாடும் பயனும் அவை. (43)

1, ஐங். 139. 2. குறள். 65. 3. ஐங். 410.

44. தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத்
தாய்முக நோக்கி வளர்ந்திசி னாஅங்
கதுவே யைய நின் மார்பே
அறிந்தனை யொழுகுமதி யறனுமா ரதுவே.

பரத்தையர் மனைக்கண்ணே பன்னாள் தங்கித் தன் மனைக் கண்ணே வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

ப. உரை: நின் மார்பாற் கொள்ளும் பயனின்றிக் காட்சி எய்தவும் பெறுகின்றிலள் எனப் புலந்து கூறியவாறறிக.

உரை: ஐய. இனிய நீர்மிக்க பொய்கைக்கண் வாழும் யாமையின் இளம்பார்ப்புக்கள் தம் தாய் தம்மை ஓம்பாவிடினும் தாம் அதன் முகநோக்கி வளர்ந்தது போல, இவள் நீ நல்கா யாயினும் நின்மார்பினையே நோக்கி வாழும் இயல்பினளாயினள்; நின் மார்பு அந்தன்மையதாகும். ஆகலின், நீ அதனை அறிந்து ஒழுகுவாயாக; அஃது இவள் உயிர் வாழ்க்கைக்கு ஆக்கமாவதே யன்றி நினக்கு அறமுமாம் எ. று.

தீம்பெரும் பொய்கை என்புழி, பெருமை இடத்தினையும், இனிமை இடத்து நிகழ்பொருளினையும் சிறப்பித்து நின்றன. யாமை தவழ்வனவற்றுள் ஒன்றாதலின், அதன் பிள்ளையைப் பார்ப்பு என்றார். "தவழ்பவை தாமும் அவற்றோரன்ன[1]" என்பது மரபியல். இது மேலதற்கும் ஒக்கும். தான் ஈன்ற பார்ப்பினைத் தாயாமை ஓம்புதல் இல்லை என்றும், அதன் கணவனே அது செய்யும் என்றும் பண்டையாசிரியன்மார் கூறுவர். உவமைக்கேற்பப் பொருள் வருவிக்கப்பட்டது. அத்தன்மை யாவது, தன்னை நோக்கி வாழ்வாரை வாழ்விக்கும் தன்மை. நின் மார்பு அதுவே என்றற்கு நின்மார்பு நயந்த இவளுக்கு நீ செய்யும் அருள், தான் ஈன்ற பார்ப்புக்குத் தாயாமை செய்யும் அருளேயாகும் எனினுமாம். வளர்ந்திசின் என்பது இறந்தகால

1. தொல். பொ. 560.

முற்றுவினைத் திரிசொல். '' இகுமுஞ் சின்னும் ஏனை இடத்தொடும் தகுநிலையுடைய[1] '' என்றதனுற் படர்க்கைக்கண் வந்தது. மதி முன்னிலையசை. உம்மை எச்சவும்மை. ஆர் அசைநிலை; '' அசைநிலைக் கிளவி ஆகுவழி யறிதல்[2] '' என்ப.

யாமைகளும் முதலைபோல நெடுங்காலம் வாழும் உயிர்வகை யாகும். ஊறின்றி வளரவிடின் முதலைகள் முந்நூறு யாண்டும், யாமைகள் முந்நூற்றைம்பது யாண்டும் உயிர்வாழும் என்று உயிர் நூலறிஞர் கூறுவர். இவை நீரினும் நிலத்தினும் இயங்குவன வாகலான், அவ்வவ்விடத்துத் தட்ப வெப்பங்கட் கேற்ப இவற்றின் உடற் குருதி அமைந்து மாறும் இயல்பிற்று. யாமை நாற்பதின் மேலும் வகைப்படும் என்றும், இவற்றுள் மிகப் பரியன பசிபிக் இந்து ஆகிய இருபேரளக்கரிலும் வாழ்கின்றன என்றும், அவற்றுட் சில ஐம்பத்தைந்து அங்குல நீளமும், ஐஞ்ஞூற்றைம்பது பவுண்டு நிறையும் உடையன என்றும் கூறுவர். பிரேசில் நாட்டு (Brazil) நாட்டு யாமைகள் இரண்டடி நீளமுடைய என்பர்.

யாமை இராக்காலங்களில் நிலத்திடை வந்து மேயும். சினை யீனுங் காலத்தில், நீராலும் பிறவற்றாலும் இடையூறு நிகழாத தோர் தனியிடங்கண்டு ஆங்கொரு குழி செய்து அதன்கண் தன் சினைகளை ஈன்று மணலால் மெத்தென மூடிவிட்டுப் பின் வேறொரு வழியால் நீர் நிலையை அடையும். சினையீனும் காலம் எய்திய வழியும், அக்காலத்து ஈன்றவழித் தனக்காதல் தன்சினைகட் காதல் ஊறு நிகழும் என்று தோன்றின், அது நிகழாமைக்குரிய காலம் வருமளவும், சினையீனுது நின்று பெயர்த்துக் கருவுயிர்க்கும் பெற்றிமையுடையது! சினையீன்ற யாமை முன்னர்ப் போந்த வழியே மீளாமல் பிறிதொரு வழியாற் சேறல், பகையுயிர்கள் தன் சுவடுபற்றிப் போந்து தன் சினைகட்குத் தீங்கு விளைவிக்கும் என்பது கருதிட்போலும்! இதனைக் கூர்ந்து நோக்கிய நம் பண்டைச் சான்றோர், யாமை தன் சினையினை மணலிடைப் புதைத்து வைத்தலையும், அக்காலை அம் முட்டைகள் தாயின்-துணையின்றித்

1. தொல். பொ. 275. 3. ஷி ஷி 271.

தமித்துக் கிடத்தலேயும் விதந்து, ''அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக், குப்பை வெண்மணற் பக்கஞ் சேர்த்தி, நிறைச்சூல் யாமை மறைத் தீன்று புதைத்த, கோட்டுவட் டுருவின் புலவுநாறு முட்டை, பார்ப்பிடனுகு மளவைப் பகுவாய்க், கணவன் ஓம்பும் கானலஞ் சேர்ப்பன்[1]'' என்றும், ''தாயில் முட்டை போல உட் கிடந்து, சாயினல்லது பிறிதெவன் உடைத்தோ யாமைப் பார்ப்பின் அன்ன, காமம் காதலர் கையற விடினே[2]'' என்றும் கூறினர். இக்காட்டியவற்றுள், தாயாமை ஈன்ற சினேகளே அதன் கணவனே அவை பார்ப்பாகுமளவும் புறந்தருவதை இதுகாறும் நிகழ்ந்துள்ள ஆராய்ச்சி காட்டவில்லே; எதிர்கால ஆராய்ச்சியால் இதன் உண்மை துணியப்படும். யாமையைப் பற்றிப் பண்டையோர் குறிப்பன பலவும் மெய்யாதல் விளங்குதலின் யாமையின் கணவன் செயலேப் புனேந்துரையென விலக்குதற்கு இடமில்லே. வெள்ளாங் குருகின் சேவல் அதுபோல் செய்வதாக ஆராய்ச்சியாளர் கூறு கின்றனர். அதனே வெள்ளாங் குருகுப்பத்தின்கட்[3] காண்க

முட்டை பொரித்தவுடன், யாமைப் பார்ப்புக்கள் மணலேக் கிளேத்துக்கொண்டு வெளிவரும். அவற்றிற்கு அக்காலத்திற் கண் முதலிய பொறி இல்லேயாயினும், வாயினுல் மணலேக் கறித்துக் கொண்டே நீர் நிலேயை அடையும். காந்தவூசியை எவ்வழித் திருப்பினும் அது வடதிசையே நோக்கி நிற்றல்போல, யாமைப் பார்ப்புக்கள் நீர்நிலேயை அடைதற்குரிய நெறியைப் பற்ருதவாறு எத்துணே இடையீடு படுப்பினும், அவை அவ்வனேத்தையும் கடந்து நீர்நிலேயைத் தவருது அடையும் இயற்கை ஒண்மை படைத்துள் ளன மற்று, தமிழாசிரியன்மார் இவை தாய்முகம் நோக்கி வளர் கின்றன என்றது, தம் தாய் வாழுமிடம் அந் நீர்நிலேயே யாகலின், ஆண்டு அடையின், தம் தாயினே அடைதல் கூடும் என்ற கருத்தினுற் போலும். இவ் யாமையின் ஊனும் ஓடும் பிறவும் பயன்படுமாற்றினே ஈண்டு விரிப்பிற் பெருகும். வேறு விரிந்த நூல்களுட் கண்டுகொள்க.

---

1. அகம். 160. 2. குறுந். 152. 3. 16.

பரத்தையர் மனைக்கண் பன்னாள் தங்கி வந்த தலைமகற்குத் தலைமகளின் மெல்லியற் பொறையை விளங்கக் கூறுதல் தோழி கருத்தாகலின், உவமமும் ஓர் அளவை யாதல் குறித்து, யாமைப் பார்ப்பின்மேல் வைத்து உவமித்தாள். தாய் பயந்த பார்ப்பினை யாமைக் கணவன் ஓம்புதல் போல, நின்பொருட்டு இவள் கொண்ட காமத்தினை நீ ஓம்பாயாயினும், அதனை நின்மார்பின் காட்சியே செய்யும் என்பாள், அதுவே ஐய நின் மார்பே என்றாள். ''காதலர் நல்கார் நயவா ராயினும், பல்காற் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே[1]'' என்றும், ''வேட்டோர்க்கு அமிழ்தத் தன்ன கமழ்தார் மார்பு[2]'' என்றும் சான்றோர் கூறியவாற்றானும் இக்கருத்து அறியப்படும். தன் மார்பின் இயல்பு அஃது என்பதை அறிந்தவழி, தலைமகள்பாற் பிறந்த காமம் அழியா வகை ஒழுகுதல் தனக்கு அறம் என்பது தலைமகனால் உணரப் படுமாகலின், அறிந்தனை ஒழுகுமதி அறனுமா ரதுவே என்று கூறினாள். ''உறுகண் ஓம்பல் தன் இயல்பாகலின், உரிய தாகும் தோழிகண் உரனே[3]'' என்றதனால் இது தோழிமாட்டு அமையும் என அறிக.

இது, ''பிழைத்து வந்திருந்த கிழவனை நெருங்கி, இழைத்து ஆங்கு ஆக்கிக் கொடுத்தற்கண்[4]'' தோழி நிகழ்த்தும் கூற்று வகையாகும். முன்னர் வருவதற்கும் இஃதொக்கும். இதன்கண் அறிந்தனை ஒழுகுமதி என்றதனோடு அமையாது அறனுமாரதுவே என்றதனால் நெருங்கிக் கூறியவாறு காண்க. மெய்ப்பாடும் பயனுமவை.

ஐயன் மார்பே என்று பாடமாயின், இப்பாட்டு அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்த தலைமகளை அடங்கக் காட்டுதற் கண், தலைவன் மார்பினது இயல்பு அஃது என்றும், அதனை அறிந்தொழுகுதல் அவட்கு அறம் என்றும் தோழி கூறியவாரும்.

---

1. குறுந். 60. 2. அகம். 332. 3. தொல். பொ. 259.
4. ஷை ஷை 150.

45. கூதி ராயிற் றண்கலிழ் தந்து
வேனி லாயின் மணிநிறங் கொள்ளும்
யாறணிந் தன்றுநின் னூரே
பசப்பணிந் தனவான் மகிழ்நவென் கண்ணே

நெடுநாள் பரத்தையரிடத்தனுய் ஒழுகிய தலைமகன் மனைவயிற் சென்றுழித் தோழி சொல்லியது.

ப. உரை: கலங்குதலும் தெளிதலும் உடைத்தாகிய யாற்றின் இயல்பும் பெருது என்றும் பசந்தே ஒழுகுகின்ருள் இவள் என்பதாம்.

உரை: மகிழ்ந, கூதிர்க்காலத்தில் நீர் பெருகுதலால் தண்ணிதாய்க் கலங்கி வேனிற் காலத்து அஃதின்மையால் தெளிந்து நீலமணியின் நிறத்தைப் பெறும் யாற்றினுல் நின்னுடைய ஊர் அழகு பெற்றது; அவ் யாற்றின் இயல்பு தானும் இன்றி இவள் கண்கள் எஞ்ஞான்றும் பசப்பினுல் அழகு பெற்றன, காண் எ. று.

கூதிர், அறுவகைப் பெரும்பொழுதினுள் ஒன்று; ஐப்பதியும் கார்த்திகையும் அதற்குரிய திங்களாம் தண்கலிழ், கலங்கிய நீர்ப்பெருக்கு. கலங்கிய நீர் குளிர்ந்தே இருக்குமாகலின், தண்கலிழ் எனப்பட்டது. வேனில், இளவேனில், முதுவேனில் என இருவகைத்தாம்; அவற்றிற்கு, முறையே சித்திரை வைகாசித் திங்களும், ஆனி ஆடித்திங்களும் உரியவாம். வேனிலில், மழையின்மையான் மேன்மேலும் வருவாய் இன்ருதலின், நின்ற நீர் தெளிந்து நீலமணி போறலின், வேனிலாயின் மணிநிறம் கொள்ளும் என்ருர். தெளிந்த நீர் நீலமணி போறலை, ''மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப[1]'' என்பதனுலு மறிக. ஊர் யாறணிந்தன்று என்றும், கண் பசப்பணிந்தன என்றும் இயையும். தலைவி உறுப்பினைத் தோழி தன்னுறுப்பாகக்

1. குறுந். 49.

கூறியது, "எம்மென வருஉங் கிழமைத் தோற்றம் அல்லா வாயினும் புல்லுவ வுளவே[1]" என்றதனுல் அமைந்தது.

"நின் ஊரணிந்தயாறு கூதிரிற் கலக்கமும், வேனிலில் தெளிவும் பெறுதல்போல, நின் தோளே மணந்த இவளும் நீ செய்யும் பிரிவு புணர்வுகளால் இடும்பையும் இன்பமும் எய்துதற் குரியள்" என்பதனைக் கூதிராயின் தண்கலிழ் தந்து, வேனிலாயின் மணி நிறங்கொள்ளும் யாறணிந்தன்று நின்னூரே என்பதனுல் எய்துவித்து, அவன் புறத்தொழுக்கத்துக் கொடுமையைச் சுட்டி, "பரத்தை மனைக்கண் நீ நெடிது தங்கினமையின், இவள் ஆற்ருது, அவ் யாற்றியல்பும் பெருது எஞ்ஞான்றும் பசத்தலையே பொருளாகக் கொண்டாள்" என்பாள், பசப்பணிந்தனவால் மகிழ்ந என் கண்ணே என்று தோழி கூறினுள்' வாழ்க்கைக்கண் புணர்வும் பிரிவும் நிகழ்தல் இயல்பாகலின், அவை காரணமாக முறையே இன்பமும் இடும்பையும் எய்துதல் தலைமக்கட்கு உரித்து என்ருள். "வருத்தமிகுதி சுட்டுங்காலே, உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்[2]" என ஆசிரியர் குறிப்பது காண்க. இவ் வுரிமை, இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும், நண்பக லமையமும் இரவும் போல, வேறுவேறியலவாகி மாறெதிர்ந் துள[3]" என்புழி உவமையாலும் பெறப்படும். மெய்ப்பாடும் பயனும் அவை.

இனி, இப்பாட்டின் கண் என் கண்ணே என்றற்கு உரைக்கும் வழுவமைதி வலிந்து கோடலாய்த் தோன்றுதலாலும், பிருண்டும், "ஐயவி யன்ன சிறுவீ ஞாழல், செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த் துறையணிந் தன்றவர் ஊரே, இறை யிறந்து இலங்குவளை நெகிழச் சாஅய்ப் புலம்பணிந்தன்று அவர் மணந்த தோளே[4]" என இக் கருத்தமைந்த பாட்டுத் தலைவி கூற்ருகவே கொள்ளப் பட்டிருத்தலாலும் இதனைத் தலைவி கூற்ருகக் கோடற்கும் இயைபுண்டு என அறிக. (45)

---

1. தொல். பொ. 221. 2. தொல். பொ. 226. 3. அகம். 327.
4. குறுந். 50.

46 நினக்கே யன்றஃ தெமக்குமா ரினிதே
நின்மார்பு நயந்த நன்னுத லரிவை
வேண்டிய குறிப்பினை யாகி
ஈண்டுநீ யருளா தாண்டுறை தல்லே.

மனைக்கண் வருதலைப் பரத்தை விலக்க விலங்கிப் பின்பு உலகியல்பற்றி அவள் குறிப்பினோடும் வந்தமை அறிந்த தோழி தலைமகனைப் புலந்து சொல்லியது.

ப. உரை : இவ்வாறு வருதலின் வாராமையே இனிது என்பதாம்.

உரை : பெரும, நின்மார்பினை விரும்பிய நல்ல நெற்றியினை யுடைய அரிவையாவாள் விழைந்து செய்த குறிப்பினையுடையாய் இங்கு வந்தருளுவ தொழித்து வாராது அவள் மனைக்கண்ணே தங்குதல் நினக்கே யன்றி எமக்கும் இனிதாம், காண் எ. று.

நினக்கே யன்று அஃது எமக்குமார் இனிதே, என்புழி, ஏகாரம் முன்னது பிரிநிலையும் பின்னது தேற்றமுமாம். ''இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி, நின்ற இகரம் உகரமாதல், தொன்றியன் மருங்கிற் செய்யுளுள் உரித்தே[1]'' என்புழித் தொன்றியல் மருங்கின் என்றதனால், அன்றி யென்றும் வினை யெஞ்சு கிளவி அன்று என வந்தது. அஃதென்னும் சுட்டு, செய்யுளாதலின், முற்பட வந்தது. வேண்டிய குறிப்பினையாகி என்புழி வேண்டல் தலைமகன் பரத்தை என்ற இருவர்பாலும் நின்ற விழைவு தோற்றுவித்து அவன் அவள் குறிப்பின்னுதற்கு ஏதுவுமாதலின் ஆக்கம் வந்தது. அருளாது என்னும் எதிர்மறை வினையெச்சம் உறைதல் என்னும் வினைப்பெயரின் வினை கொண்டது. ஈண்டு, ஆண்டு என்பன் முறையே தலைமகன் மனையையும் பரத்தை மனையையும் சுட்டி நின்றன.

மனைக்கண் வருதலைக் கருதிய தலைமகனை அவ்வாறு வாரா வகைப் பரத்தை விலக்கியது தான் அறிந்தமை தோன்ற, நின்

1. தொல். எழுத்து. 237.

மார்பு நயந்த நன்னுதல் அரிவை என்றும், ''அவள் விலக்க விலங்கி வாராது தவிர்ந்த நீ இன்று ஈண்டுப் போந்தது, உலகியல் பற்றி யல்லது இவளை அருளும் குறிப்புப்பற்றி அன்று'' என்பாள் வேண்டிய குறிப்பினையாகி என்றும், ''அக் குறிப்பினால் இதுபோது செய்யும் தலையளிதானும் அவளது குறிப்புவழிப் பட்டதேயன்றிப் பிறிதின்மையின், அவள் மனைக்கண் தங்குதலே நினக்கு இன்பமாவது'' என்பாள், ஈண்டு நீ அருளாது ஆண்டு உறைதல் என்றும், அது செய்தலால் நினக்கும் நின் பரத்தைக்குமே இனிதாம் எனக் கருதற்க, நின்னின் யாம் வேறல்லேமாய் நீ எய்துவனவெல்லாம் எய்த நிற்கின்றேம் என்பாள் நினக்கே யன்று அஃது எமக்கும் இனிதே என்றும் கூறினாள். எமக்குமா ரினிதே என்பது குறிப்பு மொழி.

நீ மனைக்கண் வருதலைப் பேணாது நின் பரத்தை விலக்க விலங்கிப் பின் அவள் குறிப்பினையாகி வருதல் எமக்கு நாணுத் தருமாகலின், ஆண்டு உறைதலே தக்கது எனப் புலந்து கூறுகின்றாளாகலின், இது, ''பேணா ஒழுக்கம் நாணிய பொருளின் கண்[1]'' தோழி கூறுவதன் பாற்படும். மெய்ப்பாடும் பயனு மவை.

இனி, ஆசிரியர் இளம்பூரணர், ''அவனறிவு ஆற்ற அறியு மாகலின்[2]'' என்ற சூத்திரத்துத் ''தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி, எங்கையர்க்கு உரையென இரத்தற் கண்ணும்'' என்பதற்கு உதாரணமாக்குவர்; நச்சினார்க்கினியர், அச் சூத்திரத்துக்[3] ''கொடுமை ஒழுக்கங் கோடல் வேண்டி அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காதல் எங்கையர் காணின் நன்றென, மாதர் சான்ற வகையின் கண்ணும்'' என்பதற்குக் காட்டினர். இக் கூற்றுவகை இரண்டும் தலைவிக்குரிய வாகலின், இப்பாட்டுத் தலைவி கூற்று என்பது அவர்கள் கருத்தாதல் அறிக, தலைவி கூற்றாயின், உலகியல்பற்றித் தன் மனைக்குப் போந்தான் பிரியான் என்பதை உணர்ந்துவைத்தும், நீ அவள் குறிப்பினையாய்

1. தொல். பொ. 150. 2. ஷை ஷை 145. 3. ஷை ஷை 147.

வருதலின் வாராது ஆண்டே சென்று உறைக எனக் கூறுதலான், இஃது அச்சூத்திரத்துச் ''செல்லாக் காலைச் செல்கென விடுத்தற் கண்ணும்'' என்புழி நிகழும் கூற்றுவகையாதல் காண்க அக்காலை, இது புலவிக்கண் நிகழ்தலின் உள்ளது உவர்த்தலாம் எனவும் உணர்க. (46)

47. முள்ளெயிற்றுப் பாண்மகளின் கெடிறுசொரிந்த
அகன்பெறு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிறைக்கு மூர
மாணிழை யாய மறியுநின்
பாணன் போலப் பலபொய்த் தல்லே.

பாணற்கு வாயின்மறுத்த தலைமகள் பின் அப்பாணனொடு தலைமகன் புகுந்து தன் காதண்மை கூறியவழிச் சொல்லியது.

ப. உரை: மாணிழை ஆயம் அறியும் என்ற கருத்து: நீ கூறுங் காதன்மை பொய்யென்பது ஆயமெல்லாம் அறியலாம்; நான் இதனை மெய்யென்று கொள்ளினும் அவர் கொள்ளார் என் பதாம். கெடிறு சொரிந்த வட்டி நிறைய மனையோள் பயறு நிறைக் கும் ஊர என்றது, நீ நின் காதல் சொல்லி விடுத்து அவர் சிறந்த காதல் சொல்லி வரவிடப்பெறுவாய் எ. று.

உரை: முட்போலும் கூரிய பற்களையுடைய பாண் மகளின் இனிய கெடிற்றுமீன் பெய்த அகன்ற பெரிய வட்டி நிறைய மனையவள் அரிகாலிடத்து வித்திப்பெற்ற பெரும்பயற்றைக் கொடுக்கும் ஊரனே, நினக்கு வாயிலாய்ப் புகுந்த பாணனைப் போல நீயும் பொய்பல கூறுதலைச் சிறந்த இழையணிந்த ஆய மகளிரும் அறிவராகலின், யான் மெய்யென்று கொள்ளுமாறு இல்லை, காண் எ. று.

கூர்மைபற்றி முள்ளெயிறு என்றார்; ''முள்ளெயிற்றுத் துவர்வாய்[1]'' என்று பிறரும் கூறுவர். பாண்மகள் என்புழிப்

1. அகம். 39.

பாண் என்பது குடிப்பெயர்; ''துடியன் பாணன் பறையன் கடம்பனென்று, இந்நான் கல்லது குடியும் இல்லை[1]'' என்பதனுலும் அறியப்படும். கெடிறு, ஒருவகை மீன்[2]. இதனை இக்காலத்திற் கெளுத்தி என வழங்குவர். கடையர் இதனைக் கள்ளொடு கலந்துண்பர் என்பர்; ''விழவின் றாயினும் உழவர் மண்டை இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து[3]'' என வருதல் காண்க. வட்டி, கடகப்பெட்டி. இஃது உட்புறம் பனங் குருத்தாலும், வெளிப்புறம் அதன் அகணியாலும் செய்யப்படும். இது, பாணரும் கடையரும் மீனும் ஊனும் பெய்து வைத்தற்குப் பயன்படுவதேயன்றி உழுதொழிலோர் விதை முளை வைத்தற்கும், மகளிர் பூப்பெய்து வைத்தற்கும் பயன்படுமென்று அறிக. முளை வைத்தலாவது, வித்தற் குரிய விதை முளைத்தற்குரிய செவ்வி பெறுவித்தல். ''கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன் மான்றசைச் சொரிந்த வட்டியும்[4]'' ''ஊனுர் வட்டியர்[5]'' ''வித்தொடு சென்ற வட்டி பற்பல, மீனொடு பெயரும்[6]'' என்றும், ''உழவர் விதைக்குறு வட்டி போதொடு பொதுளப், பொழுதோ தான் வந்ததன்றே[7]'' என்றும், ''துய்த்தலை யிதழ பைங்குருக் கத்தியொடு, பித்திகை விரவுமலர் கொள்ளீ ரோவென, வண்டுசூழ் வட்டியுள் திரிதரும், தண்டலை யுழவர் தனிமட மகளே[8]'' வரிமென் முகைய நுண்கொடி யதிரல், மல்ககல் வட்டியர்[9]'' என்றும் சான்றோர் கூறுதல் காண்க. அரிகால் அன்மொழித் தொகை; அரிந்த கால்கள் நின்ற வயல் என விரியும், அரிகால் போழ்ந்த தெரிபகட்டு உழவர்[10]'' என்புழியும் அது, ''அரிகால் மாறிய அங்கண் அகன்வயல்[11]'' என்புழி இறந்தகாலம் தொக்க வினைத்தொகையாய் நிற்றல் காண்க. அரிகாலில், எள்ளாதல் பயறுதல் விதைத்தல் இக்காலத்தும் உழவர் மரபாதலின், அரிகாற் பெறும்பயறு எனப்பட்டது. பாணன் பொய் கூறுவன் என்பதனை, ''பாணன் பொய்யன் பல சூளினனே[12]''

---

1. புறம். 335. 2. Surmullet. 3. புறம். 384.
4. ஷை 33. 5. மலைபடு. 152. 6. அகம். 41.
7. நற். 210. 8. ஷை 200 9. ஷை 210.
10. குறுந். 155. 11. நற். 67. 12. அகம். 391.

என இந்நூலுள்ளும், ''இவன் (பாணன்) பொய்பொதி கொடுஞ் சொல் ஓம்புமின்[1]'' எனப் பிருண்டும் கூறுப.

பண்டு, தலைமகளைத் தலைப்பெய்த விடத்து அவளோடு உடனாடும் ஆயமகளிர் அறிய வஞ்சின முரைத்துப் பின் அது பொய்படப் பிரிந்தானாகலின், மாணிழை ஆயம் அறியும் என்றும், அவற்கு வாயில் வேண்டி வந்தாருள், பாணன் பல பொய்ம் மொழிகளால் தலைவனது காதன்மை கூறக் கேட்டிருந்தாள், அவையனைத்தும் பொய்யாயினமை கண்டு பின்பொருகால் அது கூறிவந்த அவற்கு வாயின் மறுத்தாளாகலின், நின் பாணன் போல என்றும், இதுபோது பாணனோடு போந்து அக் காதன்மையே கூறுங் கருத்தின னாகலின், ''நின் பாணன் போலப் பல பொய்த் தல்லே'' என்றும் கூறினாள். கூறவே, நின் பொய்ம்மை எம்பால் நில்லாது எம்மோடு உடன்பயிலும் ஆயமும் அறியப் பரந்தமையின், யாம் மெய்யெனக் கொள்ளினும், அவர் பொய் யென்றே கொள்வர் என்றாளாம். ''உடனாடாயமோ டுற்ற சூளே[2]'' என்றும், ''தாதுசேர் நிகர்மலர் கொய்யும், ஆய மெல்லாம் உடன்கண் டன்றே[3]'' என்றும் வருவனவற்றால் ஆயம் அறிய ஒழுகியது பெரிதும் நினைக்கப்படுமாறு அறிக.

பாண்மகளது இழிந்த கெடிறு சொரிந்த வட்டி நிறைய, மனையோள் உயர்ந்த பெரும்பயற்றினைக் கொடுப்பள் என்றது, நினக்கு வாயிலாவார் வந்து பொய் பொதிந்த சொற்களால் மொழிந்த நின்காதனமைக்கு நின்னை நயந்தோர் வாயில் நேர்தலைப் பெறுவாய் என்றவாறு. எனவே, நீ இவ்வாறு பொய்த்தற்குக் காரணம், நின் வாயில்களால் நெஞ்சு நெகிழ்ந்து அது நேரும் தவறுடைய யாமே எனப் புலந்தவாறு, ''மாணிழை யாயம் அறியும்'' என்றது புறஞ்சொல் மாணாக்கிளவி. ''பல பொய்த்தல்'' என்றது ஓராற்றல் தெய்வமஞ்சலுமாம்.

இவ்வாறு, குறிப்பாலும் வெளிப்படையாலும் வைஇய மொழி கூறல் தலைமகட்கு வழுவாயினும், தன்வயின் உரிமையும், அவன்

---

1. நற். 200. 2. ஐங். 31. 3. குறுங். 311.

வயிற் பரத்தைமையும் விளங்கக் கூறும் பான்மைக்கண் நிகழ்தலின் அமையும் என்க; ஆசிரியரும் ''மங்கல மொழியும் வைஇய மொழியும். மாறிலாண்மையிற் சொல்லிய மொழியும், கூறியன் மருங்கிற் கொள்ளு மென்ப[1]'' என்றனர்.

இது, துணிபோலத் தோன்றினும், உள்ளுறையால் நயப்பாடு காட்டி நிற்றலின், சிறு துனியாய்ப் பின்னர் எய்தும் இன்பத்துக்கு ஆக்கமாம் என அறிக; ''ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி, வாடினும் பாடு பெறும்[2]'' என்பதனுல் அறிக. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல். (47)

48. வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுண் மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கு மூர
வேண்டேம் பெருமநின் பரத்தை
ஆண்டுச்செய் குறியோ டீண்டுநின் வரவே.

பரத்தையர்மாட்டு ஒழுகாநின்று தன் மனைக்கட் சென்ற தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

உரை: மீன்வலை வீசுதலில் வல்ல பாண்மகனும் வாலிய பற்களையுடைய இளையளாய பாண்மகளும் வரால்மீனைக் கொணர்ந்து சொரிந்த வட்டி நிறைய மனையவள் பழமையான வெண்ணெல்லை உதவும் ஊர, நின் பரத்தை ஆண்டுச் செய்த குறியுடன் ஈண்டு வரும் நினது வருகையை யாம் விரும்பு கின்றிலேம் எ. று.

வலைவீசி மீன் பிடிக்கும் வன்மையுடைமை பற்றி வலைவல் பாண்மகன் என்றும் ஒரோவழி அஃது அப் பாண்மகட்கும் எய்த வாலெயிற்று மடமகள் என்றும் கூடினர்; ''நாண்கொள் நுண் கோலின் மீன்கொள் பாண்மகள் தான்புனல் அடைகரைப் படுத்த வாரா அல், நாரரி நறவுண்டு இருந்த தந்தைக்கு, வஞ்சி விறகிற் சுட்டு வாயுறுக்கும், தண்டுறை யூரன்[3]'' என்று பிறரும் கூறுதல்

1. தொல். பொ. 244. 2. குறள். 1322. 3. அகம். 216.

காண்க. பாண்மகனும் பாண்மகளும் உள்ளிட்ட பாணர்களை வேண்டுவ கொடுத்து ஓம்புதல் மனையோட்கு இயல்பாதல் தோன்ற இருபாலாரையும் ஒருங்குக் கூறினர்; ''மனையோள் பாண ரார்த்தவும் பரிசில ரோம்பவும். ஊனொலி யரவமொடு கைதூ வாளே[1]'' எனவரும் புறப்பாட்டானும் ஈதறியப்படும். யாண்டுகழி வெண்ணெல் என்றது, விளைந்து ஓர் யாண்டின் எல்லை கழிந்த நெல்லை; அஃதாவது, பழமையுற்ற நெல் என்பதாம். யாண்டுகழி வெண்ணெல்லை இவ்வாற்ருற் செலவிடாத வழி, அவை பயனின்றிக் கழிதலே யன்றி, ஆண்டுதோ றெய்தும் புது நெல்லை நிறைத்தற்கு இடனுமின்ரும் எனவுணர்க. இவ் வகையிற் பழநெல்லே செலவிடப்பெறும் என்பதை, ''காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு, அவ்வாங் குந்தி அஞ்சொற் பாண்மகள், நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகிற் பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள், கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்[2]'' என்பதனுலும் அறியலாம். வெண்ணெல், கார் நெல் செந்நெல் என்பவற்றினைப் போலும் நெல்வகை. இஃது இனஞ் சுட்டிய பண்புகொள் பெயர். ஆண்டு, ஈண்டு என்பன பரத்தை மனையையும் தன்மனையையும் சுட்டி நின்றன. குறி, ''மூலையாலும் பூணுலும் முன்கண் தாஞ் சேர்ந்த, இலையாலும் இட்ட குறி[3]''.

''நினக்குரிய வாயில்களால் அது நேர்வித்துக் கூடும் இயல் புடையை யாயினும், நீ நின்பரத்தை செய்த குறியொடு வருதலின், யாம் நின்னை வேண்டேம்'' என்பாள், உள்ளுறையால் தலைமகன் வாயில் நேர்வித்துக் கூடுதலையும், வாயில் நேர்தற்குரிய தான் அது நேராதவாறு குறியொடு போதரு தலையும் தலைவி கூறினுள். ''நீ விடுத்த வாயில்கள் எம் நெஞ்சு நெகிழக் கூறிய காதன்மைக்கு யாம் அது நேரு முகத்தால் நின்னை வேண்டு நின்றேமாயினும், வேண்டாதவாறு நீ பரத்தைசெய்த குறியொடு வந்தனை'' என்பாள்' வேண்டேம் பெரும நின் பரத்தை ஆண்டுச் செய் குறியோடு ஈண்டுநின் வரவே என்ருள். ஊர என்றதனே டமையாது பெரும எனப் பெயர்த்தும் விளித்ததனுல், ''என் தொன்னலம்

1. புறம். 334. 2. அகம். 126. 3. திணைமா. 152.

தொலைவதாயினும், நின்மார்பினைக் கூடுதல் செய்யேன்'' எனப் புலவி மிகுந்து கூறியவாறும். தலைமகள், ''என் தொல்கவின் தொலையினும் தொலைக, சார விடேஎன்'' என்றும், ''குவவுமுலை சாடிய சாந்தினை, வாடிய கோதையை'' எனப் பரத்தை செய் குறியை விதந்தும், ''ஆகில் கலந்தழீஇ யற்றுமன்[1]'' என்று அக் குறியொடு வந்தானைக் கூடலை இழித்தும் தலைவி புலவி மிகுந்து கூறுதல் காண்க.

வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள் யாண்டு கழிந்த வெண்ணெல்லை நிறைக்கும் என்றது, வாயில்கள் கூறிய காதன்மைக்குத் தலைவி வாயில் நேர்ந்தமை கூறியவாறு. யாண்டு கழி வெண்ணெல் என்பது வாளாது பெயராய் நின்றது; ''அடி யளந்தான்[2]'' என்புழிப்போல, மெய்ப்பாடும் பயனும் அவை.

ஈண்டு வாரல்லே என்றும் பாடமுண்டு. அதற்கு நின் பரத்தைமை யொழுக்கத்தை யாம் விரும்புகிலே மாதலின், அவள் ஆங்கே தன் மனையிற் செய்த குறியுடன் நீ இங்கு எம்மனைக்கண் வாராதொழிக என்று உரைக்க; ''வாரல் வாழிநிற் கவை இயோளே[3]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. ஈண்டு நீ வரலே என்பது அச்சுப் பிரதியிற் காணும் பாடம். (48)

49 அஞ்சி லோதி யசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்
யாண ரூரநின் பாண்மகன்
யார்நலஞ் சிதையப் பொய்க்குமோ வினியே.

பாணன் வாயிலாகப் பரத்தையோடு கூடினனென்பது கேட்ட தலைமகள் தனக்கும் பாணனற் காதன்மை கூறுவிப்பான் புக்க தலைமகற்குச் சொல்லியது.

உரை: அழகிய சிலவாகிய கூந்தலையும் அசைந்த நடை யினையுமுடைய பாண்மகள் சிலவாகிய மீன்களைக் கொடுத்துப் பல

1. நற். 350. 2. குறள். 610. 3. நற். 350.

வாகிய நெல்லைப் பெறும் புதுவருவாயினையுடைய ஊரனே, நினக்கு வாயிலாகிய பாண்மகன் இனி யாருடைய நலம் கெடுமாறு பொய் கூறுவனோ, ஏனைப் பரத்தையரும் அவன் பொய்ம்மையினை உணர்ந்து கொண்டனராகலின் எ. று.

அஞ்சிலோதி, தொகை நூல்களில் மிகப்பயின்ற வழக்கிற்று. இனி யென்றதனால், பண்டெல்லாம் அவன் கூறியது கேட்டு மெய்யென நினைந்து தலைமகள் ஒழுகினாள் என்பது பெற்றும். ஓ, வினா, இனி, இதனை வினைப்படுத்து, "அவனை நீக்குக; அவன் பொய்ம்மை யாண்டும் அறியப்பட்டது" எனினுமாம். இஃதிப் பொருட்டாதல், "யான் ஓம் என்னவும் ஒல்லார்[1]" என்பதனாலும் அறிக. ஏனைப் பரத்தையரும் என்பது முதலாயின கூற்றெச்சம்.

தலைமகனோடு போந்த பாணனது மொழிக்கொடுமையினைக் கூறுகின்றா ளாகலின், தலைமகனை நோக்கித் தாம் கூறுவது பொய்யாவதையும், அதனால் மகளிர் பலர் நலங்கெடுவதையும் தெளியாதாரைத் தெரிந்தாளுதல் நினக்குத் தக்கதன்று என்பதுபட நின்பாணன் என்றும், முன்பு பரத்தைபால் நினக்கு வாயிலாய்ச் சென்று கூட்டிய செய்தியை யாம் அறிந்தமையின், அவன் இனிக் கூறுவன எம்மைத் தெளிவிக்கும் பான்மையை அல்லவாக, அவன் ஈண்டுப் போந்து இதுபோது கூறும் உரையைப் பரத்தை யரும் பொய்யென உணர்ந்து இனி இவன் கூறுவனவற்றைக் கொள்ளாராதலின் இவன் சொல்லுவன யாண்டும் செல்லா என்பால், யார் நலஞ் சிதையப் பொய்க்குமோ இனியே என்றும் கூறினாள்.

பாண்மகள் சில மீன் சொரிந்து பல நெற் பெறுவாள் என்றது, நினக்கு வாயிலாய் வந்த பாணன் நின் காதன்மை உணர்த்தும் சில சொற்களைச் சொல்லிப் பல மகளிரை நின்பாற் புணர்ப்பன் என்றவாறு. மெய்ப்பாடும் பயனுமவை.

இன்னோரன்ன கூற்றுக்கள், "அவனறிவு ஆற்ற அறியு மாகலின்[2]" என்ற சூத்திரத்து, "வாயிலின் வரூஉம் வகை

1. அகம். 26. 2. தொல். பொ. 145.

யொடு தொகைஇ'' என்புழி ''வகை'' என்பதன் பாற்படும் என்க. இவ்வாறு வாயில் நேர்விப்பான் புக்க பாணனொடு புலந்து கூறவே, அவனொடு புகுந்த தலைமகனையும் புலந்து கூறியவாறு பெற்றாம். (49)

50. துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்
வஞ்சி யோங்கிய யாண ரூர
தஞ்ச மருளாய் நீநின்
நெஞ்சம் பெற்ற விவளுமா ரழுமே.

மனையின் நீங்கிப் பரத்தையிடத்துப் பன்னாள் தங்கி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

உரை: வஞ்சி மரங்கள் ஓங்கிய யாணர் ஊரனே, நின்னைத் தன் நெஞ்சிடைப் பெற்ற இவள் எளியளாதலின் இவளையே அருளுக; நின் பிரிவாற்றாது இவளும் அழுகின்றாள்; ஒரோவழி நீ பிரியினும், பன்னாள் தங்கிவிடுதலால் துணையாயினார் செல்வமே யன்றி இல்லறம் சிறவாமையால் யாமும் வருந்தா நிற்கின்றேம் எ. று.

துணையோர், தலைமகனது துணைமை பெற்றுப் பொருள் செய்து கொள்ளும் பான்மையோர். செல்வம், இன்ப நுகர்ச்சிக்கு ஏதுவாய பொருள். யாமும் என்றது தலைமகளை உளப்படுத்து நின்றது. செல்வமும் யாமும் என எண்ணி நின்று, வருந்துதும் என உயர்திணை வினையான் முடிதலை, ''தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று, எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்[1]'' என்பதனாற் கொள்க. தஞ்சம் என்பது எண்மைப் பொருட்டு. நின் நெஞ்சம் பெற்ற இவள் என்பதற்கு, நின் நெஞ்சார்ந்த அருளைப் பெற்ற இவள் எனினுமாம்.

மனையின் நீங்கிப் போய்ப் பன்னாப் பரத்தை மனையின்கண் தங்கினானாதலின், ''அருள் நிறைந்த நின்னைத் தன்நெஞ்சிடைப்

1. தொல். சொல். 43.

பெற்றும் அவ்வருள் பெருது தஞ்சமாயினள் '' என்பாள். தஞ்சம் என்றும், அப்பெற்றியாட்கு நின் அருள் இன்றியமையாது என்றற்கு, அருளாய் நீ என்றும், பிரிவின்றியிருந்து அருளா விடின், இவள் செய்வது பிறிதின்மையின் இவளுமா ரழுமே என்றும், அதனுல் யாங்களும் நினக்கு அமைந்த துணைவரும் செய்வன சிறவாமையால் பயனிழந்து வருந்துவேமாயினேம் என்றற்குத் துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும் என்றும் தோழி கூறினுள். துணையாயினுர்க்கு ஆக்கம் தரும் வினையினும் ஆடவர்க்குச் சிறப்புடைய வினை பிறிதின்மையின் அதற்குரிய செல்வத்தை முற்கூறினுள். '' நட்டோராக்கம் வேண்டியும் ஒட்டிய, நின்ருேள் அணிபெற வரற்கும் அன்ருே தோழி அவர் சென்ற திறமே[1] '' என்று பிறரும் கூறுதல் காண்க. இனி, செல்வ மென்றது சான்ருேர் உயர்த்துக் கூறும் அருட்செல்வம் எனக் கொண்டு, '' நீ அருளாமையால் இவள் எய்திய அவலம் கண்ட துணையோரும் அருள் மேவிய தம் உள்ளம் மருளி ஆற்ருராயின மையின், யாமும் அத்தன்மையோராய் வருந்துதல் செய்யா நின்றேம் '' என்பாள். துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும் எனருள் என்று கூறினுமாம். உடையாரது தொழில் உடைமை மேல் ஏற்றிக் கூறப்படும் இயைபினுல், வருத்தம் செல்வத்தோடும் இயைந்தது. '' நெடிய மொழிதலும் கடிய வூர்தலும், செல்வ மன்று தன் செய் வினைப்பயனே, சான்ருேர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின், மென்கட் செல்வம்[2] '' என்றும், '' அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்[3] '' என்றும் சான்ருேர் கூறுவர்.

தலைமகள் முன்னின்று அவனது பரத்தைமை மறுத்தல் வேண்டி, ''தஞ்சம் அருளாய் நீ '' என்றதனுல் அன்பின்மையும், ''துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும் '' என்றதனுல் கொடுமையும் கூறலின், மெய்ப்பாடு வெகுளியும், பயன் வாயில்

---

1. நற். 286. 2. ஷை 210. 3. குறள். 241.

மறுத்தலுமாம்; பரத்தைமை மறுத்தல் வேண்டியும் கிழத்தி, மடத்தகு கிழமையுடைமை யானும், அன்பிலை கொடியை என்றலும் உரியள்[1] என்றதனால், தலைவிக்கு உரிமை எய்தும் இக்கூற்று, அவள் குறிப்பின்வழி மொழியும் தோழிக்கும் அமையுமாறு கண்டுகொள்க (50)

---

1. தொல். பொ. 158.

6

தோழி கூற்றுப் பத்து

இப் பத்தின்கண் வரும் பாட்டுக்கள் பத்தும், கூற்று நிகழ்த்துவோர் பொருளாகத் தொகுக்கப்பட்டனவாகலின், இஃது இப் பெயர் எய்துவதாயிற்று. தோழி கூற்று, தோழி கூறும் மொழிகள். கூறப்படுவது கூற்று ; பாடப்படுவது பாட்டு என்றும், ஓதப்படுவது ஓத்து என்றும் வருதல் போல முதனிலை ஈற்றுமெய் இரட்டித்துச் செயப்படு பொருண்மை உணர நின்றது. ஏனையிடங்களிலும் இதனையே உரைத்துக் கொள்க.

தோழியாவாள், தலைமகளைப் பயந்த நற்றாய்க்குத் தோழியாகி, பின் தலைமகளை வளர்த்தமையின் அவட்குச் செவிலித்தாயாகிய நங்கையின் மகள். இவள் தலைமகளோடு உடனிருந்து அவட்கு உயிர்த்துணை புரிபவளாவள்; தலைமகட்குரிய சிறப்பெல்லாம், தானும் அவள் பெற்றாற்போற் பெற்று ஒழுகும் சால்புடையவள். களவு கற்பு என்னும் இருவகைக் கைகோளினும் தலைமகட்கு உசாத்துணையும் அவளே. களவின்கண் தலைவியின் மறைந்த ஒழுக்கத்தைத் தன் கூர்த்த மதியால் ஆராய்ந்து கண்டு அறிந்து அது கற்பு நெறியாய்ச் சிறத்தற்கு ஆவனவற்றை ஆற்றும் அமைதியும், உலகியலின் உட்கிடையை உள்ளவாறு அறிந்து தலைமகள் உறுதி எய்துதற் குரிய நெறியறிந்து செலுத்தும் நீர்மையுமுடையவள். அதனால், தலைமக்களை ஒரோகால்

உறழ்ந்தும், கழறியும், உயர்பொருள் சுட்டியும் தக்காங்கு உரைக்கும் தகுதி வாய்ந்துள்ளாள். தலைமகளின் உணர்வுவழி நின்று, உவந்துழி உவந்தும். வருந்துழி வருந்தியும் வாழும் வாழ்க்கைய ளாயினும், தலைமகள் எய்தும் வருத்தம் பிறழ்ந்து தோன்றின், பிறழா நிலையில் தான் நின்று அவளை ஆற்றுவிக்கும் உரனுடை மையும், தலைமகன் பாலும் தான் அவனினும் உரனுடையாள் போலக் கூறும் இடமுண்டாகியவழி, அவ் வுரனுடைமை தோன்ரு வகையில், பணிந்த மொழியால் தான் கூறக் கருதுவதைக் கூறிக் கருத்தை முற்றுவித்துக் கொள்ளும் வாய்மையும் நிரம்பியவள். எவ்வாற்ருலும், தலைமக்கள் அறத்தின்வழி நின்று இன்பம் எய்துவ தொன்றனையே குறிக்கோளாகக் கொண்டு ஒழுகும் கடப்பாட்டினள் இத்தோழி என்பே மாயின், எஞ்சிய பிறவெல்லாம் எஞ்சாமற் கூறியவாரும். இக் கருத்துக்களெல்லாம் தோன்ற, ஆசிரியர் தொல்காப்பியர், தலைமகட்கும் தோழிக்கும் உரிய கிழமையினைத் ''தாயத்தின் அடையா வீயச்செல்லா, வினைவயின் தங்கா விற்றுக் கொள்ளப்படா, எம்மென வருஉம் கிழமைத் தோற்றம்[1]'' எனச் சிறப்பித்துள்ளார். இச்சிறப்பால், தலைவி உறுப்புக்களைத் தோழி தன் உறுப்பாகக் கூறிய வழியும், அது குற்றமாகாது அமையும் என்று மொழிந்திருக்கின்றனர். ஏனைச் சான்ருேர்களும் இதனை வலியுறுப்பார் போல, இந்நெறியே புலனெறிவழக்கமும் செய்திருக் கின்றனர். இயல்பாய் உளதாகிய உயிரறிவினைச் செயற்கையால் உளதாகும் கல்வியறிவு பண்படுத்தி உண்மை யறிவாக்குவது போல, தலைமகள்பால் தோழி அறிவுநெறியே நின்று அவள் வாழ்க்கையை அறவாழ்க்கை யாக்கும் மாண்பு கொண்டவள். சுருங்கச் சொல்லின், தோழியாவாள், அன்பும் அறிவும் அறமும் முறையே உள்ளம் உரை செயல்களாகத் திரண்டு பெண்ணுருக் கொண்டு வந்தாற்போலும் பெருமையுடையவள் என்றல் சாலும்.

51. நீருறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅ மூர
புளிங்காய் வேட்கைத் தன்றுநின்
மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே.

---

1. தொல். பொ. 221.

வாயில் பெற்றுப் புகுந்து போய்ப் புறத்தொழுக்கம் ஒழுகிப் பின்புறம் வாயில் வேண்டும் தலைமகற்குத் தோழி மறுத்தது.

உரை: நீரின்கண் வாழும் நீலநிறத்தை யுடைய சேவற் கோழியைக் கூரிய நகங்களையுடைய அதன் பெட்டை நினைந்து வேட்கை மிக்கு உறையும் ஊரனே, இவளது வயவு நோய்க்கு நினது அகன்ற மார்பு புளிங்காய் வேட்கைதானும் விளைவிப்ப தின்றி நினைக்குந் தோறும் புலவிக்கு ஏதுவாய் இராநின்றது காண் எ. று.

நீருறை கோழி என்றது, சம்பங்கோழியை; இது முறையே சேவலையும், பெடையினையும் சிறப்பித்து நின்றது. பெடை, பேடை, பெட்டை முதலியன பெண்மைப் பெயர்; "பேடையும் பெட்டையும் பெண்ணும்[1]", எனவரும் மரபியற் சூத்திரம் காண்க. வயாஅம் என்பது வேட்கைப் பெருக்கம் உணர்த்தும் உரிச்சொல் லடியாகப் பிறந்த பெயரெச்சவினை; இஃது ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டு ஏதுப்பெயர் கொண்டது. புளிங்காய் வேட்கை, புளிங்காய் பிறப்பிக்கும் வேட்கை போலும் வேட்கை; அஃதாவது, புளிங் காயை நினைத்தவழி வாயில் நீரூறி வேட்கை தணிவித்தல் போல, நினைந்தவழி நினைந்தார் நினைவில் இன்பம் கிளர்வித்து வேட்கை தணிவித்தல். வேட்கைத்து என்புழிச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. வயவுறு மகளிர்க்குப் புளிவேட்கை சிறந்து நிற்கும் என்பது உலக வழக்கினும், செய்யுள் வழக்கினும் காணப்படுவது. "பசுப்புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர்[2]" என்ப. வயா, வேட்கைப் பெருக்கம்; பெரும்பாலும், இது. கருவுற்ற காலத்து உயிரினம் எய்தும் வேட்கை மேற்று; "வீழ்பிடிக் குற்ற கடுஞ்சூல் வயா[3]" என்பதனாலும் அறியப்படும்.

புளிங்காயை நினைந்தவழி வாயில் நீரூறி நினைத்தாரது வேட்கையைத் தணிவித்தல் போல, நின் மார்பினை நினைத்தவழி அஃது இவட்கு இன்பவுணர்ச்சி பயந்து இவள் எய்திய வருத்தத் தைப் போக்கற்பாலதாகும்; இதுபோது அஃது அதனைச் செய்யாது

1. தொல். பொ. 558. 2. குறுந். 287. 3. கலி. 40.

ஒருகாலைக் கொருகாலைப் பிரிவுணர்வும் துன்பமும் பயந்து வருத்துவ தாயிற்று என்றற்குப் புளிங்காய் வேட்கைத்தன்று நின் மலர்ந்த மார்பு என்றாள். வயாவுற்றார் எய்தும் வேட்கையைத் தணிவித்தல் உரிமையுடையார்க்குத் தள்ளாக் கடப்பாடாதலைச் சுட்டி இவள் வயாஅம் நோய்க்கு என்று கூறினாள். விரிந்த பண்பிற் றாயினும், இவள் எய்தும் வருத்தத்தைப் போக்கியதில்லை எனத் தான் கருதிய தனை முடித்தற்கு மலர்ந்த மார்பு எனச் சிறப்பித்தாள்.

தலைவி காணுவகையில் தலைமகன் பிரிந்தொழுகுங்கால், அவன் மார்பு புளிங்காய் வேட்கைத்தாயும், கண்டவழி அவள் எய்தும் வேட்கை நோய்க்கு மருந்தாயும் விளங்குவதொன்று. இதனைத் '' தண்கயத்துத் தாமரை நீள்சேவலைத் தாழ்பெடை, புன்கயத் துள்ளும் வயலூர — வண்கயம், போலும் நின்மார்பு புளிவேட்கைத் தொன்று இவள் மாலுமாறுநோய் மருந்து'' எனப் பிறரும் கூறு மாற்றால் அறிக. இனி. நின் மார்பு நின் புறத்தொழுக்கத்தால் இவள் நோய் தீர்க்கும் மருந்தாகாமையே யன்றி, நினைந்தவழிப் பொறாமை தோற்றுவித்து வருதலின் வேட்கைத்தும் அன்று என்றாள் என்றுமாம்; அவ்வழி உம்மை எச்சப்பொருட்டு.

நீலச் சேவலைப் பெடை நினைந்து வயாவும் ஊரனாகலின், இவளும் நின் மார்பு நினைந்து வயாஉற்றாளாக அதனை நினையாது நீ மேன்மேலும் புறத்தொழுக்கம் விரும்புவாயாயினை என்றாளாம்; மெய்ப்பாடு : வெகுளி, பயன் : வாயில் மறுத்தல்.

இனி, பேராசிரியர் '' தவலருஞ் சிறப்பின் அத்தன்மை நாடின் வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும், பிறப்பினும் வருஉம் திறத்தியல் என்ப[1] '' என்புழிப் பயவுவமப்போலிக்கு இதனைக் காட்டி, ''நீருறைகோழி நீலச்சேவலை அதன் கூருகிர்ப் பேடை நினைந்து கடுஞ்சூலான் வந்த வயாத் தீர்தற் பயத்ததாகும்; அதுபோல நின்மார்பை நினைந்து தன் வயவுநோய் தீரும் இவளும் என்றவாறு. புளிங்காய் வேட்கைத்து என்பது, நின்

---

1. தொல். பொ. 300.

மார்புதான் இவளை நயவாதாயினும், இவள் தானே நின்மார்பை நயந்து பயம் பெற்றாள் போலச் சுவைகொண்டு சிறிது வேட்கை தணிதற்பயத்தளாகும்; புளிங்காய் நினைய வாய் நீர் ஊறுமாறு போல என்பது'' என்பர்.

இனி, வயாவு மூர என்றும், மலர்ந்த மார் பிவண் என்றும் பாடம் உண்டு. (51)

52. வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச்
செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கட்
செவ்வாய்க் குறுமகளினைய
எவ்வாய் முன்னின்று மகிழ்நநின் தேரே.

வாயில் பெற்றுக் கூடியிருந்த தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது.

உரை: மகிழ்ந, வயலையின் செங்கொடியால் மாலை தொடுத்தலின் செவ்விய விரல் சிவந்த, செவ்வரி பரந்த குளிர்ந்த கண்களையும், சிவந்த வாயினையுமுடைய இளையவள் அழுது வருந்த நின் தேர் நிற்றற்குக் குறித்தது எவ்விடம்? கூறுக எ. று.

தைஇ, பசந்த குறுமகள், கண்ணும் வாயுமுடைய குறுமகள் என இயையும். குறுமை, இளமைப் பொருட்டாய் அவளது ஆற்றாமைக் குரிய மென்மைத் தன்மை உணர நின்றது. முன்னின்று, வினைமுற்று. உடையானது தொழில் உடைமைமேல் நின்றது. எவ்வாய், இடப்பொருட்டாய திரிசொல். ''நீ மற்று எவ்வாய்ச் சென்றனை[1]'' எனப் பிறரும் கூறினர். வயலையும் கைவிரலும் வரியும் வாயும் இயல்பாகவே சிவந்திருத்தலின், வண்ணச்சொல் யாண்டும் தொடர்ந்தது.

மனையகத்துத் தான் பேணி வளர்த்த கொடியே யாயினும் அதனாற் பிணையல் தொடுத்தது பொறாது சிவக்கும் செவ்

---

1. நற். 147.

விரலுடையள் என்றது, நின்னாற் பேணப்படும் நலமுடைய ளாயினும் அதனால் நின் தேர் பிறிதோரிடத்து நின்றவழியும் பொருது கண்கலுழ்ந்து வாய்வெருவி மெய் வேறுபடுவாளாயினள் எனத் தலைவியின் ஆற்றாமையைச் சுட்டி நிற்பது தோன்ற, பிணையல் தைஇச் செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கண் செவ்வாய்க் குறுமகள் என்றாள். தேர் பிறிதோரிடத்து முன்னிய துணையானே நின் நெஞ்சு பிறள் ஒருத்திபால் மாறிற்றெனக் கருதி னள் என்பதற்கு ஏது கூறுவாள், அவளது இளமையை விதந்து குறுமகள் என்றாள்.

தலைவன் தன் மனைக்கட் போதரும் போதெல்லாம், அவனது தேர் தன் மணிக்குரல் இயம்பி அவன் வரவினை முன்னறிவித்துச் சிறப்பித்த தாகலின் அதன்பாற் பெரிதும் அன்புடையளாய தலைவி, அத்தேர் இப்போது அவள் மனைக்கண் நிற்றலை முன்னாது, பிறிதோரிடத்தினை முன்னியவழிப் பொருது வேறுபடுவாள் எனத் தேரினது இன்றியமையாமை தோன்ற, குறுமகள் இனைய எவ்வாய் முன்னின்று மகிழ்ந நின் தேரே என்றாள்; ''நற்றேர்த், தார்மணி பலவுடன் இயம்பச், சீர்மிகு குரிசில் நீ வந்துநின்றதுவே,....... புகழ் மிகு சிறப்பின், நன்ன ராட்டிக் கன்றியும் எனக்கும் இனிதா கின்றால், சிறக்கநின் ஆயுள்[1]'' எனத்தேரோடு போந்தானை மகிழ்ந்தவாறும், ''கலிமகி ழூரன் ஒலிமணி நெடுந்தேர், ஒள்ளிழை மகளிர் சேரிப் பன்னாள், இயங்கலானா தாயின் வயங்கிழை, யார்கொல் அளியள் ... கண்பனி ஆகத்து உறைப்பக் கண்பசந்து, ஆயமும் அயலும் மருளத், தாய் ஓம்பு ஆய்நலம் வேண்டா தோளே[2]'' எனத் தலைவன் தேரது புறவியக்கங் குறித்து வேறு பட்டவாறும் காண்க.

இனிக் கூடிமகிழ்ந்திருப்பவன்பால் பண்டு நிகழ்ந்தது கூறி அவனை அம் மகிழ்ச்சிக்கண்ணே நிலைபெறுவிக்கும் கருத்தினளாய்த் தோழி வேறுவகையாற் கூறின் தன்பால் வழு எய்துவது உணர்ந்து நகையாடிக் கூறுதலின் அவன் தேர்மேல் வைத்து எவ்வாய் முன்னின்று மகிழ்ந நின் தேரே என்றாள் என்றுமாம்.

---

1. அகம். 184. 2. அகம். 146.

வயலைச் செங்கொடியால் பிணையல் தொடுத்தவழி இயல்பாகவே சிவந்துள்ள இவள் விரல் மிகச் சிவத்தல் இயற்கையாகவும், அதனை அறியாது, செவ்விரல் சிவந்தன எனக் கண் கலுழ்ந்து வாய்வெருவிப் புலம்பினுள் என்றும், குறுமகள் என்றும் தலைவியைக் கூறியது, தோழி தான் பிறப்பித்துக் கொண்ட நகைக்குப் பொருளாம். மிகச்சிவத்தலை அறியாமை பேதைமையும், குறுமகள் என்றது இளமையும் குறித்தன. மேலும், நீ இயக்க இயங்கும் இயல்பிற்றுய தேர் நின்னை இன்றித் தனியே ஆண்டு நிற்பினும் தீதொன்றும் பிறவாதாகவும், அதனை அறியாது அது பிறிதோரிடத்து முன்னியது எனக் கொண்டு இனைந்தாள் என்றது தலைவியது பேதைமையினையே சுட்டி நகையாடற்குப் பொருளாயவாறு காண்க. "எள்ளல் இளமை பேதைமை மடன் என்று உள்ளப்பட்ட நகைநான்கென்ப[1]" என்பது தொல்காப்பியம்.

மெய்ப்பாடு: நகை. பயன்: தலைவன் கேட்டுப் பிரியாது உறைவானுவது.

53. துறையெவ னணங்கும் யாமுற்ற நோயே
சிறையழி புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும்
பழன வூரநீ யுற்ற சூளே.

தலைவி தன்னுடன் போய்ப் புனலாடிய வழி, "இது பரத்தையருடன் ஆடிய துறை" என நினைந்து பிறந்த மெலிவை மறைத்தமை உணர்ந்த தலைமகன் மனைவயிற் புகுந்துழி "தெய்வங்கள் உறையும் துறைக்கண்ணே நாம் ஆடினவதனுற் பிறந்ததுகொல் இவட்கு இவ்வேறுபாடு" என்று வினயினுற்குத் தோழி சொல்லியது.

உரை: அணையை அழித்துக்கொண்டு வரும் புதுவெள்ளம் கழனிக்கட் புகுந்ததாக அக் கழனிகளில் உள்ள தாமரைகள் கலங்கி மலரும் பழனங்களை யுடைய ஊரனே, புனலாடிய

1. பொ. 252.

நீர்த்துறைக்கண் நீ நின் காதற்பரத்தைக்குச் செய்த சூளே யாம் எய்திய நோய்க்குக் காரணமாகலின். அத்துறைக்கண் உள்ள தெய்வம் வருத்துமாறு என்னை ? இல்லையன்றே எ. று.

துறை, ஆகுபெயர். துறைகளில் தெய்வம் உறையும் என்பது பண்டையோர் கொள்கை. "அணங்குடைப் பனித்துறை[1]" "அணங்குடைப் பனித்துறை கைதொழுதேத்தி, யாயும் ஆயமோ டயரும்[2]" "நிலைத்துறைக் கடவுள்[3]" என்று சான்றோர் கூறுதல் காண்க. "துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும், முறையுளிப் பராஅய்ப் பாய்ந்தனர் தொழுஉ[4]" என்றதனால், துறையே யன்றிப் பிறவண்டும் தெய்வம் உறையும் எனப் பண்டையோர் கருதினமை அறிக. எவன் என்னும் வினைப்பெயர் இன்மை குறித்து நின்றது. காரணமாகிய சூள் காரியமாக உபசரிக்கப்பட்டது. சிறை, அணை; "சிறையழி புதுப்புனல் ஆடுகம்[5]" எனப் பின்னரும் கூறுப. கழனி, வயல். பழனம், ஊரவர்க் கெல்லாம் பொதுவாகிய நிலம் என்பர். எனவே ஈண்டைக் கழனி, பழனத்தைச் சார்ந்தது என்பது பெற்றும். "பழனப் பல்புள் இரியக் கழனி வாங்குசினை மருதத் தூங்கு துணர் உதிரும்[6]" எனப் பிறரும் பழனமும் கழனியும் இணைந்து வரக் கூறினர்[7]. துறை யுறையும் தெய்வத்தைப் பிரித்தலின் சூளே என்புழி ஏகாரம் பிரிநிலை ; ஏனையது அசைநிலை.

பண்டு தலைவியைக் கூடிய ஞான்று, தன் பிரியாமையினை வற்புறுப்பான் தெய்வத்தை முன்னிறுத்திச் சூள் செய்தவன், இப்போது பிரிந்து புறத்தொழுக்கம் மேற்கொண்டு பரத்தை யருடன் கூடி மகிழ்ந்துறைவது உணர்ந்து, சூள் பொய்த்தமையால்

---

1. ஐங். 174. 2. அகம். 240. 3. ௸ 156.
4. கலி. 101. 5. ஐங். 78. 6. நற். 350.
7. "பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனி யதனுள் போய்ப், புள்ளுப் பிள்ளைக் கிரைத்தேடும் புள்ளம் பூதங் குடியானே" (பெரிய திரு : 5:1:2) என்று கூறிய திருமங்கைமன்னர் திருமொழிக்கு உரை யெழுதிய சான்றோர், " பழனம், நீர்நிலைகள் " என்றனர்.

ஆண்டு முன்னிறுத்தப்பட்ட தெய்வத்தால் எமக்கு இந் நோய் உளதாயிற்றேயன்றித் துறை யுறையும் தெய்வத்தால் அன்று என்பாள் துறை யெவன் அணங்கும் என்றும், நீ யுற்ற சூளே என்றும் கூறினாள். "எம்மணங்கினவே மகிழ்ந.. எம்மூர் வியன்றுறை, நேரிறை முன்கை பற்றிச், சூரர மகளிரோ டுற்ற சூளே[1]" என இக்கருத்தே தோன்றச் சான்றோர் கூறியிருத்தல் காண்க. சூள் பொய்த்தவழித் தீங்கு எய்தும் என்பது, 'இன்னாத் தொல்சூள்[2]" என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதனாலும், "பூக்கஞலூரன் சூளிவண், வாய்ப்பதாக என வேட்டேமே[3]" எனச் சூள் பொய்த்தவழி எய்தும் ஏதம் குறித்து இந் நூலாசிரியர் கூறியதனாலும் உணரப்படும்.

"எம்மைக் கூடுங்கால் சூள் செய்து தெளிவித்தான், பரத்தையர்பாலும் அது செய்தேயிருப்பன்" எனத் துணிந்து அவன் ஆடிய துறையைக் கண்டு அவன் பரத்தைமையினையும் உடன் நினைந்து வேறுபட்ட தலைவியைத் தலைவன், "நின்னை இத்துறைக்கண் உறையும் தெய்வம் அணங்கிற்றுப் போலும் என்றானாக, அதனைத் துறை எவன் அணங்கும் எனத் தோழி கொண்டு கூறினாள்; ஆகலின், இது "கூற்றவண் இன்மையின்" வந்த கொண்டு கூற்றன்று.

சிறையழிக்கும் புதுப்புனல் பாயக் கழனித் தாமரை கலங்கி மலரும் பழனங்களை யுடைய ஊர என்றது, மகளிர் நலம் சிதைக்கும் புறத்தொழுக்கத்தை நீ மேற்கொண்டு ஒழுகுவதால் பொருது முன்னர் வேறுபட்டுப் பின்னர் கூடும் பரத்தையர் பலரை உடையையாயினாய் என்றவாறும். ஆகவே, இது தோழிபால் தோன்றிய துனியுறு கிளவி என்க. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: மறுத்தல்.

---

1. குறுந். 53. 2. தொல். பொ. 147. 3. ஐங். 8.

54. திண்டேர்த் தென்னவன் நன்னுட் டுள்ளதை
வேனி லாயினுந் தண்புன லொழுகும்
தேனூ [1] ரன்னவிவ டெரிவளை நெகிழ
ஊரி னூரனை நீதர வந்த
பஞ்சாய்க் கோதை மகளிர்க்
கஞ்சுவ லம்ம வம்முறை வரினே.

---

1. பண்டைநாளில் தேனூர் என்ற பெயருடைய ஊர்கள் பல இருந்துள்ளன. அவற்றுள் நிலைபேறுடைய குறிப்புக்கள் கொண்டவை பாண்டி நாட்டில் இரண்டும், நடு நாட்டில் ஒன்றும் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன. நடுநாட்டினுள்ளது பெண்ணைத் தென்கரை மகதை நாட்டுத் தென்கரைப் பழங்கூர்ப்பற்றுத் தேனூர் (A. R. 409 of 1938) எனப் படுகிறது. பாண்டிநாட்டில் முதுகுளத்தூர்ப் பகுதியில் திருமாலுகந்தான் கோட்டையென்பது பண்டைநாளில் தேனூர் என்ற பெயர்கொண்டு விளங்கியிருந்தது. இதனைக் கல்வெட்டுக்கள், திருமரவுகந்தநல்லூர் என்றும், ஏழூர்ச் செம்பிநாட்டுத் தென்முனைப்பற்றுத் தேனூரான திருமாவுகந்தநல்லூர் (A. R. 43 of 1931 - 32) என்றும், அளற்றுநாட்டுத் தேனூர் (A. R. 56 of 1931 - 32) என்றும் குறிக்கின்றன. தேனூரைச் சார்ந்த ஏழூர் திருநாவுக்கரசரால் (284.5) சிறப்பிக்கப்பெற்றுள்ளது. மற்றொன்று வையைக் கரையில் திருவேடகத்துக்கண்மையில் உளது. திருவேடகம் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் பரவும் சிறப்புப் பெற்றது. அதனை அடுத்திருக்கும் தேனூரைப் பழங்காலக் கல்வெட்டுக்கள் பாகனூர்க் கூற்றத்துப் பெருந்தேனூர் (A. R. 604 of 1926) எனவும். பாகனூர்க்கூற்றத்துத் தேனூர்த்திருவேடகம் எனவும் கூறுகின்றன. கி. பி. பதினோராம் நூற்றாண்டில் எழுந்த கல்வெட்டுக்கள், இதனைத் தேனூரான விருதராச பயங்கர நல்லூர் (606 of 1926) என்று குறிக்கின்றன. இத்தேனூர் வையை பாயும் நீர்வளமும் நிலவளமும் மிகுந்து இன்றும் சிறந்து விளங்குவதோடு "வேனிலாயினும் தண்புன லொழுகும்" சிறப்புக் குன்றாமலே யுளது. இதன் வெற்றிலை வளத்தை, தேனூர் வெற்றிலையும் மானூர் சுண்ணம்பும் என்ற பழமொழி காட்டி நிற்கிறது. திருஞானசம்பந்தர் "வானூரான் வையகத்தான் வாழ்த்துவார் மனத்தகத்தான் தேனூரான் செங்காட்டங்குடியான் சிற்றம்பலத்தான்" (ஞான. 61. 9) எனவும், "பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார், வையையின் வடகரை மருவிய ஏடகம்" (ஞான. 290. 6) எனவும் சிறப்பித்தலின் இவ்வேடகத் தேனூரே சங்ககாலத் தேனூர் எனலாம்.

வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தலைமகள் குறிப்பறிந்த தோழி அவன் கொடுமை கூறி வாயில்மறுத்து

உரை : திண்ணிய தேர்களையுடைய தென்னவனது நல்ல நாட்டிலுள்ள தாகிய, வேனிற் காலத்தும் வற்ருது குளிர்ந்த நீர் பெருகும் தேனூர் என்னும் ஊரினை யொத்த இவள் ஆய்ந்த வளைகள் நெகிழுமாறு, ஊரனுகிய நீ பரத்தையர் தெருக்கட் பிரிந்துழி, நெய்யணி குறித்து யான் அத்தெருக்கண் முறையே வருதலுறின், ஆண்டு நின்னல் தரப்பட்டு நின்னைச் சூழ்ந்து நிற்கும் பஞ்சாய்க் கோதை மகளிர்க்கு அஞ்சாநிற்கின்றேன் எ. று.

தென்னவன் பாண்டியன். செந்தமிழ் நிலைஇய சீரிய நாடாதல் பற்றி நன்னுடு என்ருர். உள்ளதை, ஐகாரம் அசை. "வெல் போர்க் கவுரியர் நன்னுட் டுள்ளதை[1]" என்று பிறரும் கூறினர். ஆயினும் என்றது புனலொழுக்கின் அருமை தோன்ற நின்றது. தேனூர், பாண்டி நாட்டிலுள்ளதோர் ஊர். இஃது "ஆம்பலஞ் செறுவின் தேனூர்," "தேர்வண் கோமான் தேனூர்[2]" என்றும், "வலஞ்சுரி மரா அத்து. வேணி லஞ்சினை கமழும் தேனூர் அன்ன நின்னெடுஞ் செலவே[3]" என்றும் சான்ருேர்களால் சிறப்பிக்கப் பெறுகின்றது. ஊரின் ஊரனை என்புழி, ஊரனை யென்றது முன்னிலைக் கண் வந்தமை அறிக. முதற்கண் நின்ற ஊர், ஊரின் ஒரு பகுதியாகிய பரத்தையர் சேரியைக் குறித்து நின்றது. ஊரெனச் சிறப்பித்துக் கூறப்படும் ஊர்களுள்ளும் மிகச்சிறந்த ஊர்களையுடையாய் என்றற்கு ஊரின் ஊர் என்ருள் என்றுமாம். பஞ்சாய்க்கோதை மகளிர், பஞ்சாய்க் கோரைபோல் நீண்ட கூந்தலையுடைய மகளிர்; இனி, பசிய தண்டான் கோரையை நாராய்க் கிழித்துத் தொடுத்த பூமாலையினையுடைய மகளிர் என்றும் கூறுவர். "பஞ்சாய்க் கூந்தல்[4]" என இந் நூலாசிரியர் கூறுமாறு காண்க. அம்முறை யென்புழிச் சுட்டு உலகறிச் சுட்டு. நெய்யணியாவது, மகப் பயந்த மகளிர் அவ் வாலாமை நீங்க நெய்யாடுதல்; "குவளை மேய்ந்த குறுந்தாள்

---

1. அகம். 342. 2. ஐங். 57, 55. 3. குறுந். 22. 4. ஐங். 76.

எருமை, குடநிறை தீம்பால் படூஉ முர, புதல்வனை யீன்றவள் நெய்யாடினளே[1] '' என வருதல் காண்க. இதனைத் தலைமகன் உணர்ந்து போந்து ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் செய் பெருஞ் சிறப்பினைச் செய்தற்பொருட்டுத் தோழி பரத்தையர் தெருக்கட் சென்று ஆண்டுறையும் தலைமகற்கு உணர்த்துவது முறைமை; இதனால் அம்முறை வரினே என்று தோழி கூறுகின்றாள்.

தலைமகன் அன்பின்றிப் பிரிந்து சென்று பரத்தையர் சேரிய னாயவழியும், தலைவி அயரா அன்புபூண்டு அவனை இன்றியமையா ளாயினாள் என்பது சுட்டி, வேனி லாயினும் தண்புனல் ஒழுகும் தேனூர் அன்ன இவள் என்றாள். அவ்வாறு, தன்னை இன்றியமையாப் பெருங்காதலால் அயரா அன்பு செலுத்தும் இவளைப் பிரிதலினும் மிக்க செயல் தலைமகற்குப் பிறிது இல்லை என்பதுபட இவள் தெரிவளை நெகிழ என்றும், '' இவ்வூரிடத்தும் நின் மனைக்கண் உறையாது பரத்தையர் மனைக்கண்ணே தங்கினை '' என்றற்கு, ஊரின் ஊரினை என்றும் கூறினாள். இது, தலைவியது உரிமையும், தலைவனது பரத்தையையும் வகுத்துக் கூறியது. '' தெரிவளை நெகிழ '' என்றது உடம்பு நனி சுருங்கல்.

தோழி பிறமகளிரைக் காணாளாயினும் எதிர்பெய்து மறுக்கும் குறிப்பினால், மகளிர்க்கு அஞ்சுவல் என்றும், அச்சமிகுதி தோன்ற அம்ம என்றும், அம்மகளிர் தாமும் எம் மனையின் அகன்று புகன்ற உள்ளமொடு சென்ற நின்னாற் புணரப்பட்ட புதுவோர் என்பாள், நீ தரவந்த மகளிர் என்றும் கூறினாள். மேலும், '' நெய்யணி மயக்கம் புரியும் தலைமகளை நோக்கிச் செய்பெருஞ் சிறப்பொடு அவளைச் சேர்தலாகிய முறைமை கருதி நீ வருத லுறினும் அம்மகளிர் என்னைச் சிறைப்பதே யன்றி, நின்னையும் அது செய்யாவாறு தகைப்பதும் செய்வர் என்று அஞ்சுகின்றேன் '' என்பது தோன்ற, அஞ்சுவல் அம்ம நீ அம்முறை வரினே என்றாளுமாம். எதிர்பெய்து பரிதலும், மறுத்தலும் தலைவிக்கு

---

1. தொல். பொ. 156. நச்சி. மேற்.

உரியவாகலான்: அவள் குறிப்பின்வழி ஒழுகும் தோழிக்கும் உரியவாயின.

உலகியல்பற்றி வருதலாகிய அம்முறைவரின் என்றதனுல். அம்முறை இல்வழி வாராய் எனத் தலைவன்பால் அன்பின்மையும் கொடுமையும், உவமையால் தலைவிபால் அன்புடைமையும் கூறித் தோழி மறுத்தவாரும். இவ்வாறு தலைவியது புலவிக் குறிப்பறிந்து கொடுமையும் அன்பின்மையும் தோழி கூறுவது தலைவனது பரத்தைமைமறுத்தல் வேண்டி நிகழ்தலின் அமையும் என அறிக. "பரத்தைமை மறுத்தல் வேண்டியும் கிழத்தி, மடத்தகு கிழமை யுடைமை யானும் அன்பிலே கொடியை என்றலும் உரியள்[1]" என ஆசிரியர் அமைக்குமாறு காண்க.

மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயில் மறுத்தல்.

தேனூறன்ன என்றும் பாடம் உண்டு; அது பொருட் சிறப்புடையதன்று. (54)

55. கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வண் கோமான் தேனூ ரன்னவிவள்
நல்லணி நயந்து நீ துறத்தலின்
பல்லோ ரறியப் பசந்தன்று நுதலே.

வரைந்த அணிமைக்கண்ணே புறத்தொழுக்கம் ஒழுகி வாயில் வேண்டி வந்து தன் மெலிவு கூறிய தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

ப. உரை: களிற்றெதிர் பிளிற்றும் என்றது, நீ கூறுகின்ற மெலிவுக்கு மேலே மெலிவு கூறுகின்றது இவள் நுதல் என்பதாம்.

உரை: கரும்பினை அடும் எந்திரம் களிறு பிளிறுவதற்கு எதிராக ஒலிக்கும் தேரினையும் வண்மையினையு முடைய அரசனாகிய

---

1. தொல். பொ. 158.

பாண்டியனது தேனூர் என்னும் ஊரை ஒக்கும் இவளது நல்ல அழகை நயந்து வரைந்து கொண்டு வரைந்த அணிமைக்கண்ணே புறத்தொழுக்கத்தால் நயவாது பிரிந்துறைதலின் இவளது நுதல் பலரும் நன்கு அறியுமாறு பசந்தது, காண் எ. று.

எந்திரம் பிளிற்றும் ஊர், கோமான் ஊர் என இயையும். இடத்து நிகழ் பொருளும் இடமுமாகிய இயைபு பற்றிப் பிளிற்றும் என்பது ஊர் என்னும் பெயர்கொண்டது. நயந்தென்னும் காரண வினை காரியத்தின் மேல் நின்றது. துறத்தலின் என்றதனால், அதற்குரிய காரணமும் காலமும் வருவிக்கப்பட்டன; "வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்[1]" என்பவாகலின் இவை எஞ்சி நின்றன. முற்றும்மை விகாரத்தால் தொக்கது. கரும்பாட்டும் ஆலையினைக் கரும்பின் எந்திரம் என்றார். எந்திரம், வடசொற்சிதைவு; "கரும்பின் எந்திரம் சிலைப்பின் அயலது, இருஞ்சுவல் வாளை பிறழும்[2]" எனப் பிற சான்றோரும் கூறினர்.

எதிர்பிளிற்றுதலாவது, "குயிலொடு மாறுகூவுதும், மயிலொடு மாறாடுதும்" என்றாற்போல ஒப்ப ஒலித்தல்; அஃதாவது ஆலையில் எழும் ஓசையொப்பக் களிறு பிளிறும் என்பது; "கணஞ்சால் வேழம் கதழ்வுற் றாங்கு, எந்திரம் சிலைக்கும் .... புகைசூழ்ஆலை[3]" என வருதல் காண்க.

"பண்டு களவில் ஒழுகிய ஞான்று, இவளுடைய அருமையும் பெருமையும் கெழுமிய அணி நயந்து வரைந்து கொண்ட நீ, இத் துணைச் சிறுபொழுதிலேயே இவளைத் துறந்து பிரிந்துறைதல் தகாது" என்பாள், நல்லணி நயந்து நீ துறத்தலின் என்றும், "பசலை யென்பது நுணுகி நோக்கினார்க்கன்றி நன்கு புலப்படா தாகவும், இவள் கொண்ட பசப்பு நின் திருமணம் போலப் பலரும் அறியத்தக்க நிலைமையினை யுடைத்து" என்பாள், பல்லோர் அறியப் பசந்தன்று நுதலே என்றும் கூறினாள்.

தலைவன் பிரிவதற்குமுன் தலைவி மேனிக்கட் கிடந்து பேரழகு திகழ்ந்த மாமைக்கவின், இப்போது அவன் பிரியப் பிரிந்து பசலை

1. தொல். சொல். 113. 2. புறம். 322. 3. பெரும்பாண். 259-61.

பாய்ந்து நிற்பதற்கு இரங்குவாள் போலத் தலைவனது நிலையின்மையினைக் குறிப்பால் உணர்த்துகின்றாளாகலின், நல்லணி எனச் சிறப்பித்தாள். நன்மை, தலைவன் இன்றியமையானாய் நயத்தற்கு ஏதுவாய், அவன் புணரப் புணர்தலும், பிரியப் பிரிதலுமாகிய இயல்பு. ''கான நாடன் பிரிந்தெனத், தானும் பிரிந்தன்று என மாமைக்கவினே[1]'' எனப் பிறரும் மாமையின் இயல்பு தெரித்தவாறு காண்க.

எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும் என்ற வினையுவமப்போலி, நீ கூறுகின்ற மெலிவுக்கு மேலே மெலிவு கூறுகின்றது இவளது நுதல் எனத் தலைவியது எளிமை கூறித்தோழி இரங்குதற்கு உபகாரமாய் நின்றது.

இது, ''பெறற்கரும் பெரும்பொருள்[2]'' என்ற சூத்திரத்து, ''அருமைக் காலத்துப் பெருமை காட்டிய, எண்மைக் காலத்து இரக்கத்தானும்'' என்புழித் தோழி நிகழ்த்தும் கூற்றுவகையாகும். இச் சூத்திரத்துப், ''பெருமை காட்டிய இரக்கம் எனக்கூட்டுக; இதனாற் சொல்லியது, வாளாதே இரங்குதலன்றி, பண்டு இவ்வாறு செய்தனை, இப்பொழுது இவ்வாறு செய்யாநின்றனை எனத் தமது உயர்ச்சியும், தலைமகனது நிலையின்மையும் தோன்ற இரங்குதலாயிற்று'' என ஆசிரியர் இளம்பூரணர் கூறுவர். அப்பொருண்மைக் கேற்ப, ''பண்டு நீ இவளது நல்லணி நயந்து இன்றியமையாயாய் மணந்தனை; இதுபோது அதனை நயவாது துறந்தனை; அதனால் நுதலும் பசந்தது'' என இரங்கியவாறாகக் கொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை.

இனி, ''களவும் கற்பும் அலர் வரைவின்றே[3]''என்பதனால், இது, தோழி அலர் கூறியது என்றும், மேலே காட்டப்பட்ட தொல்காப்பியச் சூத்திரத்துச் ''சீருடைப் பெரும்பொருள் வைத்த வழி மறப்பினும்'' என்பதனால், தலைமகன் அறம்பொருள்களைச் செய்தற்கும், இசையும் கூத்து மாகிய இன்பம் நுகர்தற்கும்

---

1. தொல். பொ. 112. நச்சி. மேற். 2. ஷ ஷ 150.
3. ஷ ஷ 162.

தலைவியை மறந்தொழுகுதற்கு இதனைக் காட்டி, '' இதனுள் துறத்தலின் எனப் பொதுவாகக் கூறினுள், அற முதலியவற்றைக் கருதுதலின், '' என்றும் கூறுவர் ஆசிரியர் நச்சினார்க்கினியர், இனி, ஆசிரியர் பேராசிரியர், '' தவலருஞ்சிறப்பின் அத் தன்மை நாடின்[1] '' என்ற சூத்திர வுரையின்கண், ''வினையுவமமும் உருவுவமும் ஒரு செய்யுளுள்ளே தொடர்ந்து ஒருங்கு வருத லுடைய,'' என்று கூறி, ''இத்தன்மைத்தாகிய ஊர் அனையான் ....'' எனச் சொல்லுதலும் உண்டென்று காட்டுதற்கு இதனுள், 'தேர்வண் கோமான் தேனூரன்ன இவள் என்பது அவன் ஊர் அனையாள் என வந்தது'' என்பர்.

பிளிறும் என்பதும் பாடம். ஆயினும் தொடைநலம் நோக்கிய வழி, பிளிற்றும் என்ற பாடமே சிறப்புடைத் தெனக் கொள்க.

56. பகல் கொள் விளக்கோ டிரா நாள் அறியா
வெல்போர்ச் சோழ ராமூ ரன்னவிவள்
நலம்பெறு சுடர் நுதல் தேம்ப
எவன் பயஞ் செய்யுநீ தேற்றிய மொழியே.

புறத்தொழுக்கம் உளதாகியது அறிந்து தலைமகள் மெலிந் துழி, அஃது இல்லை யென்று தேற்றும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

ப. உரை: தேம்ப என்பது தேம்பா நிற்க என்றவாறு. பகல் கொள் விளக்கோடு .... அன்ன என்பது ஒரு நாளும் மெலி வறியாத இவள் மெலிவறிய ஒழுகினுய் எ. று.

உரை: பகற்போதின் ஒளியினையுடைய விளக்கு[2] களால், இரவுக்காலத்தின் உண்மை அறியலாகாத வெல்லுகின்ற

1. தொல். பொ. 300.

2. வெயிலவன் ஒளி விளங்கும் நண்பகற் போதின் ஒள்ளொளியும், ஐஞ்ஞூறுயிரம் மெழுகுவத்திகளை யேற்றி, அவற்றிற்கு ஓரடி அணுக்கத்தே நின்று நோக்குழிப் பெறும் பேரொளியும் ஒக்கும் என இக்காலத்து ஒளியாராய்ச்சி யாளர் அளவிடுகின்றனர்,

போரிணையுடைய சோழரது ஆமூர் போலும் இவளுடைய நலம் பெற்ற ஒளி திகழும் நுதல் பசந்து ஒளி மழுங்குதலால், நீ பண்டு தெளித்துக் கூறிய மொழிகள் எப்பயனைச் செய்தன? செயலொடு ஒவ்வாது பொய்த்தமையின், இப்போது தெளிப்பனவும் அன்னவாத லன்றி ஒருபயனும் செய்யா எ. று.

பகல், நண்பகற் போதின் நல்லொளி; ஆகுபெயர். விளக்கு, பாண்டில் விளக்கு; ''வளிமுனை யவிர்வரும் கொடிநுடங்கு தெருவிற், சொரிசுரை கவரு நெய்வழி புராலின்; பாண்டில் விளக்குப் பரூஉச்சுடர் அழல[1]'' எனப் பிறரும் பேரொளிச்குப் பாண்டில் விளக்கினைக் கூறுதல் காண்க. நண்பகற் போதின் நல்லொளியைச் செய்யும் பேரொளி விளக்கு என்றற்குப் பகல் கொள் விளக்கு என்றார்.

''கலந்தரல் உள்ளமொடு கழியக் காட்டி[2]'' என்புழிப் போல, ஒடு ஆனுருபின் பொருட்டு. ஆமூர், ''அந்தணர் அருகா வருங்கடி வியனகர், அந்தண் கிடங்கின் ஆமூர்[3]'' எனவும் ''இன்கடுங் கள்ளின் ஆமூர்[4]'' எனவும் சோழநாட்டில் பல ஆமூர்கள் உள எனக் கொள்க. பசலையால் ஒளி மழுங்காவழி, அது பேரழகு திகழும் நல்லொளி கொண்டு விளங்குதலின், நலம் பெறு சுடர் நுதல் என்றார்; சுடர்புரை திருநுதல் பசப்ப[5]'' எனப் பிறரும் கூறினர். தேற்றிய என்றதனால், தேற்றிய காலம் வருவிக்கப்பட்டது. செயலொடு ஒவ்வாது என்பது முதலாயின எஞ்சிநின்றன. நீ தேற்றிய மொழி எவன் பயஞ் செய்தன என்னுது, செய்யும் என்றது, இப்பொழுதையிற் கூறும் தெளிப் புரையும் அதுபோலப் பொய்யாதலன்றி மெய்யாய்ப் பயன் தாராது என்பது முடித்தற்கு.

நீ தேற்றிய மொழி இப்பொழுதைய நின் புறத்தொழுக்கத்தால் பொய்த்தமை கண்டு, இனிக் கூறுவனவும் அன்னவேயாம் எனத் தெளிந்து வருந்துகின்றாள் என்பாள் நலம்பெறு சுடர்நுதல் தேம்ப

---

1. பதிற். 47. 2. அகம். 3. 3. சிறுபாண். 187–8.
4. புறம். 80. 5. நற். 108.

என்றாள். நலம்பெறு சுடர்நுதல் என்றது, அவ்வாறு தேம்புமாறு ஒழுகுதல் நின் தலைமைக்கு ஆகாது என வற்புறுத்தியவாறு. ''நும்மோ ரன்னோர் மாட்டும் இன்ன, பொய்யொடு மிடைந்தவை தோன்றின், மெய்யாண் டுளதோ இவ்வுலகத்தானே[1]'' என இவ்வாசிரியரே பிறண்டும் கூறுதல் காண்க. நின்பால் நலமே பெறத்தக்க இவளது திருநுதல், நீ தேற்றிய மொழியின் பயனாய்ப் பசப்பு எய்தினமையின் இனிக் கூறுவனவற்றால் எய்தக்கூடிய பயன் வேறொன்றும் இல்லை என்பாள் எவன் பயஞ்செய்யும் என்றும் அம்மொழியின் பொய்ம்மை சுட்டித் தேற்றிய மொழி என்றும் கூறினாள். ''எவன்பயஞ் செய்யும் நீ தேற்றிய மொழி'' என்றது தெய்வமஞ்சல். ''சுடர்நுதல் தேம்ப'' என்றது பசலைபாய்தல். ஏனை மெய்ப்பாடும் பயனும் அவை.

இரா நாள் உளதாகவும், விளக்கங்கள் தம் ஒளியால் அதனை அறியாவண்ணம் மறைப்பதுபோல, நின்பாற் பரத்தைமை உள தாகவும், அதனை இப் பொய்மொழிகளால் மறைத்துத் தெளிவிக் கின்றாய் எனத் தலைவனது தெளிப்புரையின் இயல்பு கூறினா ளாயிற்று.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர், ''சூள்நயத் திறத்தாற் சோர்வுகண் டழியினும்[2]'' என்புழி இதனைக் காட்டி, ''இதனுள் இவள் நுதல் தேம்பும்படி நீ தேற்றிய சொல் எனவே, சோர்வு கண்டு அழிந்தாள் என்பது உணர்ந்தும் இப் பொய்ச்சூள் நினக்கு என்ன பயனைத் தரும் எனத் தோழி தலைவனை நோக்கிக் கூறியவாறு காண்க'' என்பர்.

இனி. பகல்கொல் விளக்கு என்ற பாடத்துக்குப் பகலைத் தன் ஒளிமிகுதியால் மறைக்கும் என்றும், இரா நன்றறியா என்ற பாடத்துக்கு இரவுப் பொழுதினைப் பெரிதும் அறியலாகாத என்றும் உரைக்க. பகல் கொல்லும் விளக்கு எனச் சிறப்பித்தபின், இரா நன்றறியா என்பது பாட்டின் பொருள் நலத்தைச் சிறப்பியாமை யின் அது பாடமன்மை அறிக. (56)

---

1. அகம். 286. 1. தொல். பொ. 150.

57. பகலிற் றோன்றும் பல்கதிர்த் தீயின்
ஆம்பலஞ் செறுவிற் றேனூ ரன்ன
இவணலம் புலம்பப் பிரிய
அனைநல முடையளோ மகிழ்நநின் பெண்டே.

தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்று என்பது கேட்ட தோழி அவனை வினயது.

ப. உரை: வேள்வித் தீயினையும் ஆம்பலஞ் செறுவினையும் உடைய தேனூர் என்றது மனத்தொழுக்கத் தூய்மையு .... கூறியவாறு.

உரை: பகற்போதினைச் செய்யும் ஞாயிற்றைப் போலத் தோன்றும் பல கதிர்களையுடைய வேள்வித்தீயினையும், ஆம்பல் நிறைந்த வயல்களையு முடைய தேனூர் என்னும் ஊரை யொக்கும் இவளது அழகு தனிமையுற்று வருந்தப் பிரிதலின், நீ அவ்வாறு பிரியத் தக்க அத்துணை நலம் உடையளோ நின் பெண்டு, கூறுக எ. று.

பகல், ஆகுபெயர். பலவாகிய கதிர்களைப் பரப்பிக் கொழுந்து விட்டு எரிதலின் பல்கதிர்த் தீ என்றார்; "பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்[1]" என்றதனால், ஈண்டு விருந்தாகிய வேள்வி மேலதாயிற்று. "பகலெரி சுடரின் மேனி சாய[2]" என்பது கொண்டு பகலில் தோன்றும் தீயின் இவள் நலம் புலம்ப என இயைத்துப் பகல் விளக்குப் போல இவள் மேனி நலங்கெட என உரைத்தலும் ஒன்று. உடையளோ என்புழி ஓகாரம் வினா. பெண்டு என்றது பரத்தையை. இனி, பல்கதிர்த் தீயினால் இரவுப் பொழுதும் பகல்போலத் தோன்றும் தேனூர் என இயைப்பினுமாம்.

இல்வாழ்வார்க்கு உரிய வேள்வியினையும், வளவயற்கு அணி செய்யும் ஆம்பலினையும் கூறியதனால், தலைவிபால் மனையறம்

---

1. தொல். பொ. 666. 2. நற். 128.

புரிதற்குரிய மாட்சியும் கொடைக்கடன் இறுத்தற் குரிய வளமையும், கூறிச் சிறப்பித்தவா ருயிற்று. ''மகப்பயந்து பயன்படும் மாட்சியையுடைய இவள் போல, நின் பரத்தை பயன்படுதல் இலளாகவும் அவளை நீ பெரிதும் நயந்து உறைதலின், அவள் பால் பெருநலம் உளதாகல் வேண்டும் அன்றே?'' என்பாள், அனைநலம் உடையளோ நின் பெண்டு என்றாள். அனைநலம் என்றது மகப்பயந்து பயன்படும் அத்துணை நலம் என்றவாறு. எனவே பரத்தையின்மாட்டு அஃதில்லை என்பது குறிப்பு. ''எம்போற், புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து, நெல்லுடை நெடுகர் நின்னின்று உரையும், என்ன கடத்தளோ[1]'' என்பதனால் பரத்தையின் பயப்பாடின்மை துணியப்படும்.

''கற்பும், காமமும், நற்பாலொழுக்கமும்'' முதலாகிய மாண்புகளால் ஒப்புயர்வு இன்றி விளங்கும் இவள் நலம் கெடாத வாறு ஒழுகுதல் நினக்குச் சிறப்பியல்பாக அதனை நெகிழ்த்து இவள் தனிமையுற்று வருந்துமாறு மாண்பில்லாத பரத்தையை நீ நயந்து பிரிதல் கூடாது என்றற்கு இவள் நலம் புலம்ப என்றும், பிரிய என்றும் காரண காரிய இயைபு எய்த வகுத்தோதினாள். ''இவள் நலம் புலம்ப'' என்றது பசலைபாய்தல். ''பிரிய'' என்றது அழிவில் கூட்டத்து அவன் பிரிவு ஆற்றாமை. ஏனை மெய்ப்பாடு; இளிவரல். பயன்: பிரிவருமை கூறல்.

இனி ''பெறற்கரும் பெரும்பொருள்[2]'' என்ற சூத்திரத்து, ''பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி, இழைத்ததாங் காக்கிக் கொடுத்தற்கண்'' நிகழும் கூற்றுக்கு இதனைக் காட்டுவர் இளம் பூரணர்; நச்சினார்க்கினியர், இச்சூத்திரத்து, ''வணங்கியல் மொழியால் வணங்கற் கண்ணும்'' என்புழி நிகழும் கூற்றுக்கு உதாரணமாகக் காட்டி, ''இதுவும் அதன்பாற் படும்'' என்பர்.

அன்னலம் உடையளோ என்ற பாடத்துக்குத் தலைமகளை ஒத்த நலம் உடையளோ என்று உரைக்க. அவளோடு ஒழுகு

---

1. அகம். 176. 2. தொல். பொ. 148.

தலைப் பொருத தோழி அவளைத் தலைமகளோடு ஒப்பக் கருதுவதும் செய்யா ளாகலின் அப்பாடம் சிறவாமையறிக. (57)

58. விண்டு வன்ன வெண்ணெற் போர்வின்
கைவண் விராஅ னிருப்பை யன்ன
இவளணங் குற்றனை போறி
பிறர்க்கு மனையையால் வாழி நீயே.

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் புலந்த தலைமகற்குத் தோழி கூறியது.

ப. உரை : கைவண் விராஅன் இருப்பை யன்ன என்றது நினது இல்வாழ்க்கைக் குரியவாகிய குணங்களால் உயர்ந்தாள் எ. று.

உரை : மலைபோல் உயர்ந்த வெண்ணெற் போர்களையும், வரையாது வழங்கும் வண்மையினையு முடைய விராஅன் என்பானது இருப்பை என்னும் ஊரை யொக்கும் இவளால் வருத்தமுற்றாய் போல வருத்தினை; பிறமகளிர் பாலும் நீ இத் தன்மையை யாகலின் அமைக எ. று.

விண்டு - மலை; ''விண்டு வனைய விண்டோய் பிறங்கல்[1]'' என்றார் பிறரும். வெண்ணெல், நெல்வகையுள் ஒன்று விராஅன், இருப்பை யென்னும் ஊரின்கண் இருந்து விளங்கிய ஒரு வள்ளல். இவனைப் பரணர் ''முனையெழத் தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன், மலிபுனல் வாயில் இருப்பை'' என்றும், ''வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப், பழனப் பல்புள் இரியக்கழனி, வாங்குசினை மருதத் தூங்குதுண ருதிரும், தேர்வண் கோமான் விராஅன் இருப்பை[2]'' என்றும் சிறப்பித்திருக்கின்றனர். இப் பாட்டாலும், இருப்பையூர் வெண்ணெல்லால் வீறுபெற்று விளங்கு மாறு காண்க. மூன்றனுருபு விகாரத்தால் தொக்கது. ஏழாவதன் கண் நான்காவது வந்து மயங்கிற்று. வாழி, அசைநிலை.

---

1. புறம். 391. 2. நற். 260, 350.

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைவன் புலந்திருந்ததனை உணர்ந்த தோழி, அப்புலவி தீர்க்கும் கருத்தினளாகலின், அப்புலவியால் அவன் எய்திய வேறுபாட்டைப் பிறிதொன்றாக விதந்து, இவள் அணங்குற்றனை போறி என்றாள். மகளிரை அணங்குறுத்தற்கு உரிய நீ இவளால் அணங்குற்றாய் போறலின், அது நீ பிற மகளிராலும் இவ்வாறு அணங்குறுதற்கு அமைந்தனை எனத் துணிதற்கு ஏதுவாதலின் புலத்தலில் சிறப்பின்று என்பாள் பிறர்க்கும் அனையையால் என்றும், புலவி தீராவழித் தலைமகட் கெய்தும் வருத்தம் குறித்து, வாழி நீயே என்றும் கூறினாள். தலைவன் தலைவியால் அணங்குற்றதுபோலக் கூறுதல், "தான் நம் அணங்குதல் அறியான் நம்மின் தான் அணங்குற்றமை கூறிக் கானற், சுரும்பிமிர் சுடர்நுதல் நோக்கிப், பெருங்கடற் சேர்ப்பன் தொழுது நின்றதுவே[1]" என்பதனாலும் அறியப்படும். புலவி தீராவழி வருத்தம் உண்டென்பது, "அலந்தாரை அல்லல் நோய் செய்தற்றால் தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல்[2]" என்பதனால் உணரப்படும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவன் புலவி தீர்ந்து கூடுதல் உறுவானாவது.

"உணர்ப்புவயின் வாரா ஊடலுற் றோள்வயின், உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று, தான் வெகுண் டாக்கிய தகுதிக் கண்[3]" தலைவியைக் கழறிக் கூறற்பால ளாகிய தோழி, உணராமையால் புலந்த அத்தலைமகள் உணருமாறு அவன் தகுதி நோக்கித் தகுவன கூறலும் தனக்கு முறைமையாகலின், அவன் புலத்தலும் தலைவி பொறாமைக் கேதுவாய்' மீட்டும் அவள் ஊடு தற்கே இடனாதல் காட்டித் தலைவனைத் தெளிவித்தாளாம். அதனால் தலைவி புலவா வகையில் உவமையால் அவளது இல்வாழ்க்கைக் குரிய மாண்புகளைச் சுட்டினாள் என அறிக.

விராலின் இருப்பை என்ற பாடம் ஏனைச் செய்யுட்களிற் காணப்படவில்லை. அது "விராலிமலை" என வரும் வழக்குப் பற்றி, விராலின் எனக்கொண்ட பாடம் போலும். (58)

---

1. நற். 245. 2. குறள். 1303. 3. தொல். பொ. 150.

59. கேட்டிசின் வாழியோ மகிழ்ந வாற்றுற
மைய னெஞ்சிற் கெவ்வந் தீர
நினக்குமருந் தாகிய யானினி
இவட்குமருந் தன்மை நோமென் னெஞ்சே.

தலைமகள் ஆற்ருளாம் வண்ணம் மனைக்கண் வரவு சுருங்கிய தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகியவழி ஆற்ருளாகிய தோழி சொல்லியது.

உரை: மகிழ்ந, கேட்பாயாக. மயங்கிய நெஞ்சின்கண் எழுந்த வருத்தம் தீரப் பண்டு நீ ஆற்றுமாறு மருந்தாய்ப் பயன் பட்ட யான், இப்பொழுது இவளது ஆற்ருமை தீர்க்கமாட்டாமையின், அவ்வாறு பயன்படுமாறு இல்லேன்; அதனுல் இவளை ஆற்றுவிப்பது குறித்து என் நெஞ்சம் வருந்தாநிற்கின்றது எ. று.

கேட்டிசின், சின், முன்னிலையசை. ஆற்றுற என்பதனை மருந்தாகிய என்பதனோடு கூட்டுக. மையல், கருதியது எய்தப் பெருமையால் உளதாகும் திகைப்பு; அஃதாவது களவின் கண் இடையீடுகளாலும், கற்பின்கட் பிரிவுகளாலும் தலைக்கூடப் பெருமையால் தலைமக்கட்கு நிகழும் மையல். எவ்வம், வருத்தம் மையல் நெஞ்சிற்கு எவ்வம் தீர என்பதனை இவட்கு மருந்தன்மை என்பதனோடும் இயைக்க. மருந்தன்மை யென்புழி ஏதுப் பொருட்டாய இன்னுருபு தொக்கது. நோகும் என்பது ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டு நோம் என நின்றது என்பதுமுண்டு.

களவுக்காலத்து நிகழ்ந்த இடையீடுகளால் தலைமகன் தலைவியை எய்தப்பெருனுய் ஆற்ருது மையலுற்ற காலங்களில், ஆற்றத் தகுவன கூறி ஆற்றுவித்து, இடமும் காலமும் வாய்ப் புழிக் கூட்டமும் எய்துவித்துத் தோழி அவனது எவ்வம் களைந்தா ளாகலின், மையல் நெஞ்சிற்கு எவ்வம் தீர நினக்கு மருந்தாகிய யான் என்ருள். ''அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க் கடும்பாம்பு வழங்குந் தெருவின், நடுங்களுர் எவ்வம்

களைந்த எம்மே[1] '' எனத் தோழி தான் பண்டு நிகழ்த்தியது கூறுதல் காண்க. இப்பொழுது நீ இவளைப் பிரிந்து ஒழுகுதலின் யான் இவளுற்ற வருத்தம் நீங்கப் பெரிதும் ஆற்றுவித்த வழியும் நீ நின் புறத்தொழுக்கத்தை விடாதே மேற்கொண்டு சுருங்கிய வரவுடையை ஆயினமையின், யான் இவளைத் தேற்றும் திறனின்றி வறிது கழிவேனாயினேன் என்பாள், இவட்கு மருந்தன்மையின் என்றும், இந் நிலைக்கண் யான் ஈண்டை யிருந்தும், இவள் எய்தும் எவ்வம் தீர்க்கும் வலியின்றி அதனைக் கண்ணிற் கண்டு வருந்து கின்றேன் என்பாள், நோம் என் நெஞ்சே என்றும் கூறினாள். மெய்ப்பாடு : இளிவரல். பயன் : ஆற்றாமை கூறல்.

'' பெறற்கரும் பெரும்பொருள்[2] '' என்ற சூத்திரத்துப் '' பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி, இழைத்தாங் காக்கிக் கொடுத்தற்கண் '' நிகழும் கூற்றுக்கு இதனைக் காட்டினர் இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும்.

மகிழ்ந வாற்றும் என்பது பாடமாயின், ஆற்றும் என்பதை மருந்தென்பதனோடு இயைத்துக் கொள்க. (59

60 பழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவும்
கழனி யூரன்நின் மொழிவ லென்றும்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
அஞ்சா யோவிவள் தந்தைகை வேலே.

வரையாது ஒழுகும் தலைமகன் இரவுக்குறி வந்துழித்தோழி சொல்லியது.

உரை : பழனங்களில் வாழும் கம்புட்கோழி அழைப்பிடுதலை யுடைய பெட்டையைக் கூவி அழைக்கும் கழனிகளையுடைய ஊரனே, நின்பால் ஒன்று மொழிவேன் ; உள்ளிருப்பவர் இனிது உறங்கும் மனைகளையுடைய பெரிய நகரின்கண் என்றும் இரவில் வருகின்றா யாகலின், இவள் தந்தையின் கையில் உள்ள வேலுக்கு நீ

1. குறுந். 354. 2. தொல். பொ. 150.

அஞ்சுவையல்லை கொல்லோ, யாம் அஞ்சிப் பெரிதும் வருந்தா நிற்கின்றேம், காண் எ. று.

கம்புள், கம்புட்கோழி ; இதனைச் சம்பங்கோழி என்றும் கூறுவர். கம்புட்கோழி என்பது இறந்த வழக்கு என்று நச்சினார்க்கினியர் கூறுவர். [1] பயிர்தல், அழைப்பிடுதல் ; "யானைப் பெருநிரை வானம் பயிரும் [2]" என வருதல் காண்க. துஞ்சுமனை என்புழி இடத்துகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. வருதி, முன்னிலை வினைமுற்று. துஞ்சுமனை வருதி என்றதனால், இஃது இரவுக் குறிக்கண்ணது என்பது பெற்றும்.

வரைவுகடாவும் குறிப்பின ளாதலின், தோழி முதற்கண் நின் மொழிவல் என முகம்புகுகின்றாள். "வரைதலைக் கருதாது நாளும் களவே விரும்பி ஒழுகுகின்றாய்" என்பாள், என்றும் துஞ்சுமனை நெடுநகர் வருதி என்றும், இரவுக்குறிக்கண் வரும் அருமை தோன்றத் துஞ்சுமனை என்றும் கூறினாள். "இயங்குநர் மடிந்த அயந்திகழ் சிறுநெறிக், கடுமா வழங்குத லறிந்தும், நடுநாள் வருதி நோகோ யானே [3]" என இரவில் வருதலின் அருமை குறித்துத் தோழி கவன்று கூறுவது காண்க. காப்புமிகுதியும் நெறியினது அருமையும் கருதாது எம்பாற் கொண்ட பேரன்பினால் வருதலைச் செய்கின்றனை என்பாள் நெடு நகர் வருதி என்றாள். 'நீயே, அடியறிந் தொதுங்கா ஆரிருள் வந்து, எம் கடியுடை வியனகர்க் காவல் நீவியும், பேரன்பினையே பெருங்கல் நாட [4]" எனப் பிறாண்டும் வரும் தோழி கூற்றுக் காண்க. இவ்வாறு வருதலால் நினக்கு வரும் ஏதத்தை எண்ணி யாம் வருந்துமாறும், தாய் அறியின் இஃது இற்செறிப்புக்கு ஏதுவாமாறும் பிறவும் கருதாயாயினும், இவள் தந்தை தன்னையர் மிகக் கொடியராக லின், அவர் செய்யும் ஏதத்தினையும் கருதுகின்றலை என்பாள், அஞ்சாயோ இவள் தந்தை கைவேலே என்றாள். யாம் அஞ்சி என்பது முதலாயின எஞ்சிநின்றன.

---

1. சீவக. மண்மகள். 7. உரை. 2. அகப். 333.
3. நற். 257. 4. ஷை 156.

"பொழுதும் ஆறும் காப்பும் என்று இவற்றின், வழுவினுகிய குற்றம் காட்டலும், தன்னை அழிதலும் அவன் ஊறு அஞ்சலும், இரவினும் பகலினும் நீவரல் என்றலும் கிழவோன் தன்னை வாரல் என்றலும், நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும், புரைபட வந்த அன்னவை பிறவும், வரைதல் வேட்கைப் பொருள என்ப[1]" என்பதனுள் துஞ்சுமனை நெடுநகர் வருதி என்றது, பொழுதும் ஆறும் காப்பும் என்றிவற்றின் வழுவினுகிய குற்றம் காட்டல். அஞ்சாயோ இவள் தந்தை கைவேலே என்றது அவன் ஊறு அஞ்சல், "யாம் அஞ்சி வருந்துகின்றேம்" என்பது தன்னை யழிதல். "பல்லோர் துஞ்சும் பானுட் கங்குல், யாங்கு வந்தனையோ ஓங்கல் வெற்ப, வேங்கை கமழும் சிறுகுடி, யாங் கறிந் தனையோ நோகோ யானே[2]" எனத் தோழி வருந்திக் கூறியதும் இதுவே. மெய்ப்பாடு: அச்சம். பயன்: வரைவு கடாதல். இதன்கண் இரவுக்குறி வருதல் கூறினமையின், பகற் குறி மறுக்கப்பட்டமையும், இதனுல் இரவுக்குறியும் மறுக்கப் பட்டமையும் எய்தினமையின், தோழியின் கூக்கூற்ருற் பயன் தலைவன் தெருண்டு வரைவொடு புகுவான் என்பது.

இனி, நச்சினுர்க்கினியரும் இது "தோழி இரவுக்குறி மறுத்தது[3]" என்றே கூறினர்.

பயிர்பெடை என்றும், பயிற்பெடை என்றும் பாடம் உண்டு.

இது மருதத்துக் களவு. (60)

---

1. தொல். பொ. 219. 2. குறுந். 355. 3. தொல். பொ. 12. உரை.

7

கிழத்தி கூற்றுப்பத்து

இதுவும் முன்னையது போலக் கூற்று நிகழ்த்துவோர் பொருளாக வரும் பாட்டுக்களின் தொகையாகலின், இப்பெயரின தாயிற்று.

ஈண்டுத் தொகுக்கப் பெற்ற கூற்றுக்கள் யாவும் தலைவன் புறத்தொழுகித் தன் மனைக்கட் போந்தவிடத்து, தலைவி புலந்து கூறுவனவாகும். ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்துக்கே உரிய இன்பநெறிப் பொருளாகலின், அவ்வாறு தலைவி ஊடிக் கூறுவனவாகிய கூற்றுக்களே இதன்கண் வருதல்பற்றி, புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் கிழத்திகூற்று எனத் தொகுத்துச் சிறப் பித்தனர். அகனைந்திணைக்கண் வரும் தலைவன், தலைவி, கிழவன் கிழத்தி என்பார் மக்களுள் குற்றமேயின்றி உயர் குணங்களே உருக்கொண்டவர். பிணி மூப்பு முதலியன எய்தாது இளமையின் இன்பநலம் முற்றும் சிறிதும் எஞ்சாது நிரம்பியவர். தலைவன் தலைமைக்குரிய தலைமைப் பண்புகளனைத்தும் தனக்கே யுரிமையாக வுருக்கொண்டவன். தலைவி, மகளிர்க்கு வேண்டும் தலைமைப் பண்புகள்யாவுமான பெண் வடிவம். இவ்வாறு மக்களுள் இரு வரை நாட்டியே சான்றோர் இன்பவாழ்வுக்கு வேண்டிய அறநெறி களை அகத்திணைக்கண் வகுத்துள்ளனர். இன்றைய நீதிமுறைகளும்

இக்கருத்தையே அடிப்படையாகக் கொண்டு இயலுகின்றன. இன்றேல் எந்நாட்டிலும் நிரம்பிய நீதிநூல் தோன்றி நிலவுதல் இயலாது.

61. நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்
கைவண் மத்தி கழாஅ ரன்ன
நல்லோர் நல்லோர் நாடி
வதுவை யயர விரும்புதி நீயே.

வதுவை அயர்ந்தா ளொரு பரத்தையைச் சின்னாளில் விட்டு, மற்றொரு பரத்தையை வதுவை அயர்ந்தான் என்பது அறிந்த தலைமகள் அவன் மனைவயிற் புக்குழிப் புலந்தாளாக, ''இது மறைத்தற் கரிது'' என உடன்பட்டு, ''இனி, என்னிடத்து இவ்வாறு நிகழாது'' என்றாற்கு அவள் சொல்லியது.

உரை: மண மிக்க வடுக்களையுடைய மாமரத்திற் பழுத்து உகும் இனிய பழம், ஆழ்ந்த நீரினையுடைய பொய்கையின்கண் துடும் என்னும் ஓசையுடன் விழும், கொடை வண்மையினையுடைய மத்தி என்பானது கழார் என்னும் ஊர்போலும் நல்ல மகளிரையே நாடி நீ வதுவை கொள்ள விரும்புகின்றாயாக, ''இனி என்னிடத்து இவ்வாறு நிகழாது'' என்பது என்னை எ. று.

வடி, மாவடு; ''நறுவடிப் பைங்கண் மாஅத்து அந்தளிர் [1]'' என்பதனால், இஃது இப்பொருட்டாதல் உணரப்படும். நெடுநீர் ஆழ்ந்த நீர்நிலை. துடும் என்பது கனவிய பொருள் நீரின்கண் விழுதலால் எழும்ஓசை. ''கொக்கின் உக்கு ஒழிந்த தீம்பழம் கொக்கின் கூம்பு நிலையன்ன முகைய ஆம்பல், தூங்குநீர்க் குட்டத்துத் துடும் என விழூஉம், தண்டுறை யூரன் [2]'' என இக் கருத்தினையே பிறரும் கூறுதல் காண்க. வதுவை அயர்ந்த விடத்தும் பரத்தையர் மேனி நல மல்லது குலமகளிர் போலும்

---

1. குறுந். 331. 2. நற், 280.

கற்பு நலம் இலராகலின், அடுக்கு இழித்தற்கண் வந்தது. இனி என்னிடத்து என்பது முதலாயின எச்சவகையால் வந்தன.

மத்தி என்பவன் பரதவர் என்னும் தென்புல மக்கட்குத் தலைவன். இவனது படைப் பெருமையும் கொடைவண்மையும் புலவர் பாடும் நலம்பெற்றன. இதனை, ''வள்ளெயிற்று நீர்நாய், முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும், பல்வேள் மத்தி கழாஅர்[1]'' என ஆசிரியர் பரணர் பாடியிருத்தல் காண்க. அன்றியும், இவன் வெண்மணி என்னுமிடத்துப் பனித்துறை யொன்று கட்டி, ஆசிரியர் மாமூலனாராற் புகழப்பெற்றான். அது, ''வன்கட் கதவின் வெண் மணி வாயில், மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை[2]'' என வருகின்றது. கழாஅர் என்பது காவிரிக்கரையை யடுத்தது; மேலும், இது கழா அர்க்கீரன் எயிற்றியார் என்னும் புலவர் பெருமாட்டியார் பிறந்த ஊராய்க் கரிகால்வளவன் தன் மகள் ஆதிமந்தியும் அவள் கணவன் ஆட்டனத்தியும் சூழ்வரச் சென்று தண்பதம் கொண்ட சீரிய இடமுமாகும்.

முதற்கண் ஒருத்தியை மணந்து சின்னாளில் அவளைக் கை விட்டுப் பிறளொருத்தியை மணந்தான் என முன்னே கேட் டறிந்துளா ளாகலின் நல்லோர் நல்லோர் நாடி என்றும், அப்பெற்றி யோன் இனியும் அவ்வாறே செய்தொழுகுவான் என்று புலத்தலின் வதுவை யயர விரும்பினை என்னாது விரும்புதி என்றும் கூறினாள். இவை புறஞ்சொல் மாணாக்கிளவி. நல்லோர் நல்லோர் என்ற பெயர்த்துரை அவன் நாளும் புதுவோர் மேவலனாய் ஒழுகுதலை வற்புறுத்தது. பரத்தையரைத் தலைவன் தலைக்கூடலை வதுவை யயர்ந்தான் எனவும், அஃது அலராய் ஊர்முழுதும் கௌவை யாயிற்று எனவும், தான் அவனது புறத்தொழுக்கத்தை அறிந்த வாற்றைத் தலைவி வெளிப் படக் கூறுதலும் உண்மையின், ஈண்டு வாளா நல்லோர் நல்லோர் நாடி வதுவை விரும்புதி என்றாள். ''திருமருதோங்கிய விரிமலர்க் காவின், நறும்பல் கூந்தற் குறுந் தொடி மடந்தையொடு, வதுவை யயர்ந்தனை என்ப, அலரே.......... வீரர் ஆர்ப்பினும் பெரிதே[3]'' என்று தலைவி வெளிப்படக் கூறுவது

---

1. அகம். 6. 2. ஷை 211. 3. அகம். 36.

காண்க. ஈண்டுக் கற்புநலம் சுட்டாது மேனிநலம் குறிப்பாய் விதந்தவாறே, இவ்வகப்பாட்டினும் பரத்தையின் கூந்தலும் தொடியுமே தலைவி எடுத்தோதியவாறு காண்க.

நறுவடி மாவின்கண் விளைந்து முதிர்ந்த தீம்பழம் அதனின் நீங்கி நெடுநீர்க் குட்டத்துத் துடும் என விழும் என்றது, பரத்தையர் சேரிக்கண் நலங்கனிந்து சிறந்த பரத்தையர் தம் தாயார் முதலாயினரின் நீங்கி நின்னொடு வதுவையிற் கூடி மகிழ்வர் என உள்ளுறையாற் பரத்தையரைக் குறை கூறியவாறு.

இகுமதிநீயே என்பது பாடமாயின், வதுவை யயர்தற் பொருட்டு அவர்பால் நீ விழுகின்றாய் என்றும், எனவே, தீம்பழம் தன்னைப் பேணிய மாவின் சினை புலம்பக் குட்டத்து வீழ்தல் போல, நின்னைக் காதலித்துப் பேணிய யாம் புலம்பப் பரத்தையரை அணைகின்றாய் எனத் துணியுறு கிளவி உள்ளுறுத்து உரைத்தவாறு என்றும், ''உள்ளுறையுவமம் ஏனை யுவமமெனத் தள்ளாதாகும் திணையுணர் வகையே[6]'' என்றதனால் இஃது அமையும் என்றும் உரைக்க. மெய்ப்பாடு: வெகுளி பயன்: புலத்தல். (61)

62. இந்திர விழவிற் பூவி னன்ன
புன்றலைப் பேடை வரிநிழ லகவும்
இவ்வூர் மங்கையர்த் தொகுத்தினி
எவ்வூர் நின்றன்று மகிழ்நநின் றேரே.

இதுவுமது

உரை: மகிழ்ந, பூப்போலப் புல்லிய தலையினையுடைய குயிற்பேடை செறியாத நிழற்கண் இருந்து கூவும் இவ்வூரின்கண் எடுத்த இந்திரவிழவில் விரும்பிய மங்கையர் பலரைக் கொணர்ந்து தொகுத்து விளங்கும் நின் தேர் இப்போது எவ்வூர்க்கட் சென்று நிற்கின்றது, கூறுக எ. று.

பேடை அகவும் இவ்வூர் எடுத்த இந்திரவிழவில், மங்கையர்த் தொகுத்து, இனி, நின்தேர் எவ்வூர் நின்றன்று கூறுக என

இயையும். தலைமக்கள் விழவுக்காலத்துத் தம் மனத்துக்கினிய மங்கையரோடு கூடி மகிழ்தல் மரபாகலின், இந்திரவிழவு கூறப் பட்டது. நகரார் எடுத்த இந்திரவிழவு, ஈண்டு நினைவுகூர்தற் பாலது.

பேடை அகவும் என்றதனால், மயிற்பேடையும் குயிற் பேடை யும் கொள்ளப்படும்; ''நுகர் குயில் அகவும்[1]'' என்பது காண்க. நின்றன்று, முற்று.

இவ்வூர் மங்கையர்த் தொகுத்து இனி எவ்வூர் நின்றன்று நின்தேர் என்றது, இவ்வூரின்கட் பல மங்கையரை வதுவை அயர்ந்த நீ, அவர்களோ டமையாது வேறு பிற ஊர்கட்கும் சென்று வேறு மங்கையர் பலரைக் கூட விரும்புகின்றாய் என்ற வாறும். ''மாட்டுமாட் டோடி மகளிர்த் தரத்தரப், பூட்டுமான் திண்டேர்'' என்றும், ''நேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின், தேர்பூண்ட நெடுநன்மான் தெண்மணிவந் தெடுப்புமே[2]'' என்றும் ஊர்தொறும் பரத்தையர் மனைதோறும் சென்று மகளிரை நாடித் தொகுத்துக் கூடி மகிழும் நினது தேர் எம்மனைக் கண் நிற்றற்கு இயைபின் றென்பாள் எவ்வூர் நின்றன்று நின்தேர் என்றாள் என்க.

புன்றலைப் பேடை வரிநிழற்கண் இருந்து அகவும் என்றது, தலைவன் பிரிவாற்றாது தான் இல்லிருந்து வருந்தினமை உணர்த்தி நின்றது.

இந்திரவிழவிற் பூவினன்ன என்பதை மங்கையர்க்கு அடை யாக்கி, இந்திரவிழவின்கண் வேறுவேறு நிலத்தினின்றும் பூக்கள் பல கொணர்ந்து தொகுத்துப் பயன் கோடல் போல, வேறு வேறு ஊர்களிலிருந்தும் மகளிரைக் கொணர்ந்து வதுவையின்பம் கொள்கின்றாய் என்று கூறலும் ஒன்று. மெய்ப்பாடும் பயனும் அவை.

---

1. அகம். 97. 2. கலி. 98, 70.

மங்கையைத் தொகுத்து என்றும் மகிழ்ந்தநின் தேரே என்றும் வரும் பாடம் பொருட்சிறப்பில. இனி, மங்கையரைத் தொகுத்து அவரொடு காமக்களியாட்டயர்ந்து மகிழ்ந்த நீ, அம் மயக்கத்தால் எம் மனைக்கட் போந்தனை போலும் என்றற்கு எவ்வூர் நின்றன்று மகிழ்ந்த நின்தேர் என்றாள் எனினுமாம். இப் பொருள்கோளில் ஊர் என்றது, முறையே பரத்தையர் சேரியையும், தன் மனையை யும் குறிக்கும். ஆகவே, இது நின் பரத்தை மனையன்று செல்க என்பது கருத்தாயிற்று. (62)

63. பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉமூர
எந்நலந் தொலைவ தாயினும்
துன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த
நின்மார்பே.

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து கூறியது.

உரை: பெருமானே, பொய்கையாகிய இடத்தில் வாழும் புலால் நாறும் நீர்நாய் வாளைமீனை நாளிரையாகப் பெறும் ஊரனே, கூடி முயங்காதவழி எமது நலம் முற்றும் கழிந்து படுவதாயினும், பிறரைக்கூடி முயங்கிய நின் மார்பினை யாம் கூடுவேமல்லேம் எ. று.

பொய்கைப்பள்ளி, இருபெயரொட்டு; "கல்லளைப் பள்ளி[1]" எனப் பிற இடங்கட்கும் பள்ளியென்பது உரிமை யெய்துமாறு காண்க. நாளிரை, காலை வேளையிற் பெறும் உணவு. "நாள் ஞாயிறு[2]" என நாட் பெயர் காலைப்போது குறித்தல் அறிக. உம்மையால், கூடாதவழி நலங்கெடுதல் ஒருதலை என்பது உணர நின்றது. "அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய், வாளை நாளிரை பெறூஉம் ஊரன்,[3]" என்றும், "பொய்கை நீர்நாய்ப்

1. நற். 98. 2. கள. 2. 3. குறுந். 364.

புலவுநா றிரும்போத்து, வாளை நாளிரை தேரும் ஊர[1]'' என்றும் சான்ரேர் கூறுப. துன்னலம், அன்மை சுட்டிய எதிர்மறைப் பன்மைத் தன்மை வினைமுற்று.

நீர்நாய்[2] என்பது நீரில் வாழும் உயிரினங்களைப் பிடித்துண்டு வாழும் உயிர்வகையுள் ஒன்று. இது கரடி இனத்தைச் சேர்ந்தது என்றும் கூறுப. இஃது ஏனைய நாய்கள் செழித்து வாழும் நிலங்களிற் செம்மையாக வாழும் சிறப்புடையது. நீந்துவதிலும், நீர்க்கு அடியில் இரு கரைகளுக்கும் இடையே புழைகளைச்[3] செய்தலிலும் கைதேர்ந்தது. இதன் பற்கள் வாள்வாய் போல அமைந்து, அகப்பட்டபொருள் நெகிழ்ந்தோடா வகையில் இறுகப் பற்றும் பான்மை அமைந்தவை. அதனுல் மிக்க வழவழப்புடைய மீனினங்களையும் நீர்நாய் எளிதிற் பற்றிக் கொள்ளுகின்றது. இவ்வியல்பினைக் கண்ட சான்ரேர், "வள்ளெயிற்று நீர்நாய்'' எனச் சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். தான் வாழுமிடத்தில் தண்ணீரோ, தனக்குரிய இரையோ கிடைப்பது அரிதாய காலத்தில், அது குறித்து நெடுந்தொலைவு செல்லும் நேர்மையுள்ளது, நம் தமிழகத்தில் நீர்வளம் குன்றத் தலைப்பட்டதும் இவை வேறு நாடுகட்குப் போய்விட்டன.

நீர்நாய்களை மட்டில் சுமார் பன்னிரண்டு வகைகளாகப் பிரித்திருக்கின்றனர். அவற்றுட் கடலில் வாழும் நாய், கடல்நாய் எனப்படும். அதுவே மிகச்சிறந்ததாக மேனுட்டவர் கருதுகின்றனர். அதன் பூமயிர் பேரழகு வாய்ந்தது; அதைக் கைசெய்து அணிந்து கொள்வதில் மேனுட்டு மக்கட்குப் பெருவேட்கை யுண்டு. அதனுல், அதனைப் பெறுவது குறித்து வேட்டையாடுவோர் பெருகினர்; அதன்பயனுக, அதன் பூண்டே அற்றுப்போக நேர்ந்தது.

நீர்நாய்கள் செங்குத்தாய் உயர்ந்திருக்கும் ஆற்றங்கரைகளில் நயமான வழிகளைச் செய்து, அவற்றில் இன்புற ஏறியிறங்குவது காண்பார்க்குப் பேரின்பம் பயக்கும் காட்சியாகும்.

நீர்நாய் மிக்க மனத்திட்பம் உடையது. அது தனக்குத் தீங்கு செய்யக் கருதும் உயிரை எதிர்த்துநின்று வெல்லக் கருதும் வீறு

1. அகம். 386. 2. Otter. 3. Tunnel.

பெற்றது. ஒருகால் வேட்டுவன் ஒருவன், நீர்நாய்கள் இரண்டினைக் கண்டு, தன் கையிலிருந்த கொடுங்கூர்ங்கோல்[1] கொண்டு கொல்ல முயன்றானாக, அவை யிரண்டும் அவனை எதிர்த்து நெடிது போராடி முடிவில் அவன் தானே புறமிட்டு ஓடுமாறு செய்தனவாம்! உடற் சிறுமை கண்டு எளிதிற் பற்றி உயிர்குடிக்கக் கருதிய காட்டுப்பூனை[2] ஒன்று, நீர்நாய் ஒன்றை எதிர்த்ததாக, அந்நாய் அப் பூனையை வென்று கொன்றுதின்றொழித்ததாம். இத்தகைய நீர்நாய்கள் இன்றைய தமிழகத்தில் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே வேரோடழிந்து மறைந்தன. இதற்கு அம்சதேவர் எழுதிய மிருகபட்சி சாத்திரமே சான்று பகருகின்றது. சூழவுள்ள கடல் களிலும் இப்போது இவை காணப்படுவதில்லை.

களவிற் போல இனி மேனி வேறுபாட்டிற்கு அஞ்ச வேண்டாமையின் தலைமகள் எம்நலம் தொலைவ தாயினும் என்றாள். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவு ஆற்றாமை. சிறப்பில்லாத பரத்தையரோடு கூடியது பொருளாகப் புலவி மிகுகின்றா ளாகலின், ஊர என்றதனோடமையாது, பெரும என மீட்டும் முன்னிலைப் படுத்தாள். ஊர என்றது, உள்ளுறையால் அவனது புறத் தொழுக்கத்தைக் குறித்தற்கு என்றும் பெரும என்றது புலவி மிகுதியால் மார்பு தோய்வதை மறுத்தற்கு என்றும் வகுத்துக் கொள்க. குலமகளிரைப் போல் மனைவாழ்க்கைக்குப் பயன் படாமை பற்றிப் பரத்தையரைப் பிறர் என்றாள். உள்ளுரைக்கண் நீர்நாயை, ''புலவுநாறு நீர் நாய்'' எனச் சிறப்பித்ததனால் தலைவன் பரத்தையரைக் கூடிப் புணர்குறியும் மணமும் கமழ வந்தான் என்பது பெறுதும். அவற்றைக் காணுந்தோறும் தலைவிக்குப் பொறாமை மிகுதலின், துன்னலம் பெரும பிறர்தோய்ந்த நின் மார்பே என்றாள்.

இஃது, ''அவனறிவு ஆற்ற அறியுமாகலின்[3]'' என்ற சூத்திரத்து, ''புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு, அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி, இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த்து

---

1. Pitch fork. 2. Pole cat. 3. தொல். பொ. 147.

அருக்கி, எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கின்'' தலைவி நிகழ்த்தும் கூற்றுவகை யாகும். எம் நலம் தொலைவ தாயினும் என்றது, அகன்ற கிழவற்குத் தன் புலம்புநனி காட்டியது. துன்னலம் என்றது, இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த்து அருக்கி எதிர்பெய்து மறுத்தது. மெய்ப்பாடும் பயனும் அவை.

இனி, பேராசிரியர் இதனைப் பிறப்புவுமப் போலிக்கு உதாரண மாகக் காட்டி, ''நல்ல குலத்திற் பிறந்தும் இழிந்தாரைத் தோய்ந்தமையால் அவர் நாற்றமே நாறியது, அவரையே பாது காவாய், மேற்குலத்துப் பிறந்த எம்மைத் தீண்டல் என்பாள், அவையெல்லாம் விளங்கக் கூருது பொய்கைப் பள்ளிப் பிறந்த நீர்நாய் முன்னுள் தின்ற வாளைமீன் புலவு நாற்றத்தோடும் பின்னுளும் அதனையே வேண்டும் ஊரன் என்றமையின், பரத்தையர் பிறப்பு இழிந்தமையும் தலைவி பிறப்பு உயர்ந்தமை யும் கூறி, அவன் பிறப்பின் உயர்வும் கூறினமையின், இது பிறப்புவமப் போலியாயிற்று; இவையெல்லாம் கருதிக் கூறின், செய்யுட்குச் சிறப்பாம் எனவும், வாளாது நீர்நாய் வாளை பெறூ உம் ஊர என்றதனுல் ஒரு பயனுமன்றி எனவும் கொள்க,[1]'' என்பர்.

நீர்வாய் வாளை என்றும் பாடமுண்டு; இதற்கு நீரில் வாழும் வாளையென்றும் எனவே வாளைமீன் நாளிரையாகப் பெறப்படும் ஊர என்றும் உரைத்துக் கொள்க. (63)

64. அலமர லாயமோ டமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புன லாடக் கண்டோர்
ஒருவரு மிருவரு மல்லர்
பலரே தெய்யவெம் மறையா தீமே.

தலைமகன் பரத்தையரோடு புனலாடினுன் என்பது அறிந்த தலைமகள் அவன் மறைத்துழிச் சொல்லியது.

---

1. தொல். பொ. 300. உரை.

உரை : சூழ்ந்து திரியும் ஆயமகளிருடன் நின்ஞல் விரும்பப் பட்டு நினக்குப் புணர்துணையாகிய பரத்தையைத் தழுவிக்கொண்டு நீ அழகுமிக்க புதுப்புனலில் ஆடக் கண்டவர் ஒருவர் இருவர் அல்லர், பலர்காண் ; ஆகலின், நீ அதனை எமக்கு மறைத்தல் வேண்டா எ. று.

அலமரல், சுழற்சி ; சூழ்வருதலும் சுழற்சி யாகலின், 'அலமர லாயம்'' என்ருர். துணை, ஈண்டுப் புணர்துணையாகிய பரத்தை மேற்று. உம்மை எண்ணுப் பொருட்டு. இருவர் என்றதும் பலரையே எனினும், ஈண்டு, ''ஒன்று இரண்டு பல'' என்னும் வழக்குபற்றி வந்தது. ஏகாரம் தேற்றம். தெய்ய என்பது அசைநிலை ; இதனைக் ''கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும் கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே[1]'' என்பதனுல் அமைப்பர். மறையாதீமே, முன்னிலைப் பன்மை எதிர்மறை முற்று வினைத் திரிசொல். ஆகலின் என்பது முதலாயின குறிப்பெச்சம்.

ஆயவெள்ளம் புடைசூழத் திரியும் பரத்தை என்றற்கு, அலமர லாயமோடு அமர்துணை என்றும், தன்பால் அன்பு சுருங்கிப் பரத்தையால் மிகுந்தொழுகுகின்ருன் என்னும் நிம்பிரியினுல், அமர் துணை தழீஇ எனச் சிறப்பித்தும் கூறினுள். ''எஃகுடை எழில் நலத் தொருத்தியொடு நெருநல், வைகுபுனல் அயர்ந்தனை என்ப[2]'' எனப் பிற சான்ருேரும் கூறியவாறு காண்க. பல்வகை நறுமலரும் சுமந்து அளி மொய்ப்ப ஒளி சிறந்து காட்சியின்பமும், துணையொடுகூடி ஆடுவார்க்கு ஊற்றின்பமும் பயக்கும் சிறப்புடைப் புதுநீர்ப் பெருக்காதலால், அதனை நலமிகு புதுப்புனல் என்ருள். இதனைக் கண்டோர் ஒருவர் இருவராயின் நீ மறைத்தல் தகும் என்பாள்., ஒருவரும் இருவரும் அல்லர் என்றும், நீ புனலாடிய செய்கை அலராய் ஊரெங்கும் பரவிப் பலரும் அறிபொருளாயிற்று என்றற்குப் பலரே என்றும் கூறினுள். ''கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே[3] என்பதனுல் புனலாட்டும் புலவிக்கு ஏதுவாய்க் காமஞ் சிறப்பிக்கும் என அறிக. தலைவன்பாற் பரத்தமை கண்டு,

---

1. தொல். சொல். 296. 2. அகம். 116. 3. தொல். பொ. 164.

தன்வயின் உள்ள உரிமையால் உயர்வு தோன்ற எம் எனப் பன்மையாற் கூறினாள், இது புலவியாகலின். ''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் நினையுங் காலைப் புலவியுள் உரிய[1]'' என்பது தொல்காப்பியம், ''பேரூர் அலரெழ நீரலைக் கலங்கி, நின்னொடு தண்புன லாடுதும், எம்மொடு சென்மோ செல்லல் நின்மனையே[2]'' எனப் பரத்தை தலைவனொடு புனலாட்டயரு மாற்றினைப் பிற விடத்தும் காண்க.

மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புனலாட்டுக் கூறிப் புலத்தல். (64)

65. கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் மேனி
முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே.

ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

உரை: கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியின்கண் தழைத்த நீராம்பல் ஆண்டு வரும் வண்டுகளின் பசியைத் தன்னிடத்துத் தேனாற் களையும் மிக்க புனலையுடைய ஊரனே, புதல்வனைப் பயந்து முதிர்ந்த எம் மேனியைப் புல்லுதல் ஒழிக; அது நின் மார்பிற் கோலத்தைச் சிதைப்பதா மாகலின் எ. று.

கரும்பு நடுதற்கு வகுத்த பாத்திகளுள் நீர் இடையறாமையின் ஆம்பல் முதலிய நீர்பூக்கள் தழைப்பனவாயின என்க. பெரும் புனல் என்றவிடத்துப் பெருமை மிகுதிப்பொருட்டு. சுரும்பு முதலிய உயிரினம் தேனுண்டு வாழ்தற்கு ஏதுவாகிய ஆம்பல் முதலியவற்றைத் தழைப்பிக்கும் சிறப்புக் குறித்து, மிகுபுனலூர என்னாது, பெரும்புனலூர என்றாள். ''வயலே, நெல்லின் வேலி

1. தொல். பொ. 227. 2. ஐங். 77.

சூடிய கரும்பின், பாத்திப் பன்மலர்ப் பூத் ததும்பின்று[1]'' என்று பிற சான்றோரும் கூறினர். மோ, தெய்ய என்பன அசைநிலை. சிதைப்பதுவே என்புழிக் குற்றுகரத்தின் முன் உடம்படுமெய் விகாரத்தால் வந்தது. மார்பு, பரத்தையர் செய்த கோலத்தின் மேலதாகலின், ஆகுபெயர்.

உள்ளுறையால், தான் இல்லிருந்து தனக்குரிய நல்லறத்தை வழுவாது ஆற்றும் உயர்வு தோன்ற எம் மேனி எனப் பன்மை வாய்பாட்டாற் கூறினுள். புதல்வர்ப் பயந்த மேனி திதலை யணிந்து தீம்பால் கமழ்தலின், பூவினும் சாந்தினும் புதுமணம் கமழும் நின் மார்பின் நறுமணம் கெடும் என்பாள், எம் மேனி முயங்கன்மோ என்றும் நின் மார்பு சிதைப்பதுவே என்றும் புலந்து கூறினுள். ''இனியே, புதல்வன் தடுத்த பாலொடு தடைஇத், திதலையணிந்த தேங்கொண் மென்முலை, நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம் வீங்க முயங்கல் யாம் வேண்டினமே, தீம்பால் படுதல் தாமஞ் சினரே[2]'' என்று பிறரும் கூறியவாறு காண்க. சிதைதல், தீம்பாற்பட்டுப் பரத்தை செய்த கோலம் கெடுதல். புதல்வனை ஈன்ற என்றது, முதுமையும், முயங்கலாகாமைக்குரிய நலக்குறைவு மாகிய ஏதுவை உட்கொண்டு நின்றது. புதல்வர்ப் பயந்து புனிறு தீராநிலைமைக்கண், கண் குழிந்து இதழ் வெளுத்து மேனி குழைந்து மெலிந்து தோன்றுதலின், அதனை அப் புலவுப் புனிறு தீர்ந்து பொற்பொடு திகழும் இக்காலத்துத் தான் புலத்தற்குக் கருவியாகக் கொண்டாள்; பிருண்டும் ''பேஎய் அனையம் யாம் சேய் பயந்தனமே[3]'' என்பள்.

கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியின்கண், ஆம்பல் முதலியன தழைத்துச் சுரும்பினத்தின் பசிகளையும் என்ற வினையுவமப் போலியால், பரத்தையர்க்காக அமைக்கப்பட்ட இல்லின்கண் யாம் இருந்து விருந்தோம்பல் முதலிய அறங்களைப் புரிந்தொழுகு கின்றோம் என்றுளாம்.

---

1. புறம். 386. 2. அகம். 26. 3. ஐங். 70.

இனி, பேராசிரியர், ''கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை'' என்று பாடங்கொண்டு வினையுவமப் போலிக்கு உதாரணமாகக் காட்டி, ''தாமரையினை விளைப்பதன்றிக் கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியுள் தானே விளைந்த தாமரை சுரும்பின் பசி தீர்க்கும் ஊரன் என்றாள்; இதன் கருத்து, அது காதற் பரத்தையர்க்கும் இற் பரத்தையர்க்கும் என்று அமைக்கப்பட்ட கோயிலுள், யாமும் உளமாகி இல்லறம் பூண்டு விருந்தோம்புகின்றனம் .... இது சுரும்பு பசி களையும் தொழிலோடு விருந்தோம்புதற்றொழில் உவமம் கொள்ள நின்றமையின் வினையுவமப் போலியாயிற்று[1]'' என்பர். ஆசிரியர் இளம்பூரணர், ''அவனறி வாற்ற அறியு மாகலின்[2]'' என்ற சூத்திரத்து, ''கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி, நயந்த கிழவனை நெஞ்சுபுண் ணுறீஇ, நளியின் நீக்கிய விளிவரு நிலையும்'' என்புழி இளிவந்த நிலையாவது, தன்னை அவமதித்தான் என்னும் குறிப்பொன்று கூறி, இதனை அதற்கு மேற்கோளாகக் கொண்டனர். மற்று, நச்சினார்க்கினியார் இச் சூத்திரத்தே இக் கிளவிக்கண் இதனைக்காட்டி, ''இது, புதல்வர்ப் பயந்த காலத்துப் பிரிவுபற்றிக் கூறியது'' என்பர்.

இனி, புதல்வனை ஈன்ற எம் மேனி முயங்கல் என்றது. ''கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி'' நயந்து போந்த கிழவனை, ''நெஞ்சு புண்ணுறீஇ நளியின் நீக்கிய'' மொழியாக லின், அதுபற்றி ஆற்றாளாய், ''அலமரல் பெருகிய காமத்து மிகுதி''யால், அவன் அவளை செறிய நின்றான் என்பது "நின் மார்பு சிதைப்பதுவே" என்பதனால் பெறப்படுதலின், முரணின்மை யறிக. மெய்ப்பாடு. பெருமிதம். பயன் : புலவி தீர்தல்.

பாத்திக் கலித்த, பாத்தி கலித்த என்ற பாடங்கட்கு முறையே பாத்தியின்கண் தழைத்த என்றும், பாத்திகள் தழைப்பித்த என்றும் உரைக்க. ஈன்றது என் மேனி என்ற பாடத்திற்கு, ஈன்று நலங் குறைந்தது என்மேனி என்றும், ஈன்றென்னும் காரணவினை காரியத்தின்மேல் நின்றது என்றும் உரைக்க. ஈன்ற வெம்

---

1. தொல். பொ. 300. 2. ஷை ஷை 145.

முயங்கல் அதுவே தெய்ய நின் மார்பு சிதைப்பதுவே என்றும் பாடமுண்டு. (65)

66. உடலினே னல்லேன் பொய்யா துரைமோ
யாரவள் மகிழ்ந தானே தேரொடு
தளர்நடைப் புதல்வனை யுள்ளிநின்
வளமனை வருதலும் வெளவி யோளே.

புதல்வனைப் பிரியாதவன் புறத்துத் தங்கி வந்தானாக அவனொடு புலந்து தலைமகள் சொல்லியது.

உரை: மகிழ்ந, உருட்டி விளையாடும் சிறுதேரின் பின் தளர்ந்த நடையினையுடையனாய்ச் செல்லும் புதல்வனை நயந்து நீ நின் வளவிய மனைக்கு வருங்கால், நின்னைத் தகைந்து பற்றிச் சென்றவள் யாவள் கூறுக; யான் சினந்து வினவுகின்றே னல்லேன், பொய்யாது மெய்யினையே உரைப்பாயாக எ. று.

உடலுதல், சினம் காரணமாக இகலுதல். யார் என்னும் வினாவின் கிளவி முப்பாற்கும் உரித்து. சிறப்பு வகையாற் கிளவாது, பொதுவகையால் வினவியது இகழ்தற்குறிப்பு, சிறுதேரின்பின் மணியார்ப்பச் சாய்ந்து சாய்ந்து செல்லும் தளர்நடைச் சிறுவரைக் காண்டல் மிக்க இன்பம் தருவ தொன்றாகலின், தேரொடு தளர் நடைப் புதல்வன் என்றார். ''புணர்ந்த காதலியிற் புதல்வன் றலையும், அமர்ந்த உள்ளம் பெரிதாகின்றே, அகன்பெருஞ் சிறப்பின் தந்தை பெயரன், முறுவல் இன்னகை பயிற்றிச் சிறிதே ருருட்டும் தளர்நடை கண்டே[1]'' என்றும், ''கிளர்மணி ஆர்ப் பார்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும், தளர்நடை காண்டல் இனிது[2]'' என்றும் சான்றோர் கூறுப ; நம் வாழ்க்கையில், நாம் நாளும் காணும் காட்சியும் அதுவே. இனி, தேரொடு என்பதனைத் தலைவற்கேற்றி, புதல்வனை உள்ளித் தேரொடு வளமனை வருதலும் வெளவியோள் எனக் கூட்டி உரைத்தலும் ஒன்று. எல்லாப்

---

1. ஐங். 403. 2. கலி. 80.

பேற்றினும் சிறந்த மக்கட்பேறு வாய்த்தமையின், தலைவியில்லம் வளமனை எனப்பட்டது. வருதலும் என்னும் உம்மீற்று வினையெச்சம் முடிக்கும் வினையது வினைநிகழ்ச்சியின் விரைவுமிகுதி சுட்டி நின்றது. செய்யுளாகலின் சுட்டு முற்கூறப்பட்டது.

பிரிதல் கூடாத பேரன்பிற்குரிய புதல்வனைப் பிரிந்து புறத்துத் தங்கின தலைமகன் அவனைக் காண்டல் குறித்து வந்தான் என்றற்குப் **புதல்வனை உள்ளி வளமனை வருதலும்** என்றாள். எனவே, இதுகாறும் வாராமைக்கு ஏதுவாக அவனுக்குத் தன்பால் அன்பில்லை யென்றும், வரவிற்கு ஏது புதல்வன்பாலுள்ள அன்புடைமை யென்றும், அதனால் தனக்கு அவன் புதல்வன்தாய் என்னும் இயைபன்றிப் பிறிதில்லை யென்றும் சொல்லிப் புலந்தாளாம். புதல்வனும், தன் தளர்நடையால் தலைமகற்குக் காட்சியின்பம் தருவதென்றே யுடையன் என்பாள், தளர் நடைப் புதல்வனை யுள்ளி என்றும், அக்காட்சி வேட்கை மிக்க வழியும் அவனது வரவருமை தோன்ற, வருதலும் என்றும் கூறினள். "புதுவதின் இயன்ற அணியன் இத்தெரு விறப்போன், மாண்தொழில் மாமணி கறங்கக் கடைகழிந்து, காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும், பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர், தாங்குமதி வலவ என்று இழிந்தனன் தாங்காது, மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்புல்லிப் பெரும செல்லின் அகத்தெனக் கொடுப்போற்கு ஒல்லான் கலுழ்தலின் தடுத்த, மாநிதிக் கிழவனும் போன்ம் என மகனொடு, தானே புகுதந்தோளே"[1] எனப் பிற சான்றோரும் கூறுதல் காண்க. இதன் கண்ணும், தெருவிறந்து செல்லும் தலைமகன், பூங்கட் புதல்வனது தளர்புதளர்பு ஓடும் நடையழகால் ஈர்ப்புண்டு வந்தமையும், அக்காட்சியின்பம் பெற்ற பின்னர் நீங்க முயன்றவன், அப்புதல்வன் கலுழ்ந்து நின்றது காரணமாகவேத் தானே வளமனைக்குட் புகுந்தமையும் கூறப்படுமாறு அறிக. இவ்வாறு தன்பாலிள்ள அன்புமிகுதியால் தலைவன் தன் புதல்வனையும் மறந்து கிடப்பதை அறிந்துவைத்தும் பரத்தை நின்னைத் தடுத்தல் அறிவுடைமை யன்று; அறிந்தும் அறியாதார்போல்

---

1. அகம் 66.

ஒழுகும் அவளை அறிதல் வேண்டினேன் என்பாள், யார் அவள் மகிழ்ந என்றாள். இனி, செறுநரும் காண்டற்கு விரும்பும் செயிர்தீர் காட்சியினையுடையர் புதல்வர், அப்பெற்றியோனாகிய புதல்வனைக் காண்டற்குப் போந்தவனைத் தடுத்தல் நற்செய லன்மையின், அது செய்த பரத்தையை வெளவியோள் என்றாள். அச்செயல் நின்பால் அன்புடையார்க்குப் பெருசினம் விளைவிக்கும் இயல்பிற்றாயினும், நின்னையாதல் நின்னால் விரும்பப்பட்ட அப் பரத்தையை யாதல் சினந்திலேன்; மற்று, அப்புதல்வனைக் காண்டற்குப் போதரும் நின்னை மறிக்கவல்ல அத்துணைப்பேரன் புடையாளை அறிதல் வேண்டினேன் என்றற்கு யார் அவள் என்றும், உடலினேனல்லேன் என்றும் சொன்னாள் எனினுமாம். ''கற்புவழிப் பட்டவள் பரத்தையேத்தினும் உள்ளத்து ஊடல் உண்டென மொழிப[1] என்பது பொருளியல். பிரியேன் என்ற தலைமகன் பிரிந்தொழிகிச் சொல்லும் செயலும் ஒவ்வா னாயினமையின், அதனால் அவளை மறைத்தலும் கூடும் என உட்கொண்டு பொய்யாது உரைமோ என்றாள்.

தன்பால் அன்பு கூர்ந்து வந்தானையும் அஃது இல்லாதவன் போலத் தலைவி கூறுதலின் இஃது அவள்பால் தோன்றிய உள்ளது வர்த்தல். ஏனை மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல்.

இனி, நச்சினார்க்கினியர், ''அவனறிவு ஆற்ற அறியு மாகலின்[2]'' என்ற சூத்திரத்துக் ''கொடுமை யொழுக்கம் தோழிக் குரியவை, வடுவறு சிறப்பின் கற்பில் திரியாமைக் காய்தலும் உவத்தலும் பிரிதலும் பெட்டலும், ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும், வாயிலின் வரூஉம் வகை'' என்பதில் கூறிய ''பல்வேறு நிலையினும்'' என்றதனால், ''இது புதல்வனை நீங்கிய வழிக் கூறியது'' என்றனர். (66)

---

1. தொல். பொ. 233. 2. ஷி ஷி 147.

67. மடவ ளம்மநீ யினிக்கொண் டோளே
தன்னொடு நிகரா வென்னொடு நிகரிப்
பெருநலந் தருக்கு மென்ப விரிமலர்த்
தாதுண் வண்டினும் பலரே
ஓதி யொண்ணுதல் பசப்பித் தோரே.

தலைநின்று ஒழுகப்படா நின்ற பரத்தை புறனுரைத்தாள் எனக்கேட்ட தலைவி, தலைமகன் வந்துழி அவள் திறத்தாராய் நின்று ஒழுகும் வாயில்கள் கேட்பச் சொல்லியது.

உரை: நீ இப்பொழுது தலைக்கொண்டு ஒழுகும் பரத்தை தன்னோடு நிகரில்லாத என்னொடு தன்னை நிகராகக் கருதித் தனது பெருநலத்தை வியந்து என்னைப் புறனுரைத்தாள் என்பர்; முன்னர், நின்னால் நலன் நுகரப்பட்டுக் கதுப்பயல் விளங்கும் ஒள்ளிய நுதல் பசக்கப்பட்ட மகளிர் வண்டினம் தேனுண்டு கழித்த மலரினும் பலராதலை அறிந்திலளாகலின், அவள் அறியாமை நிரம்பிய இளையளே யாம் எ. று.

மடவள், மடம் உடையவள்; அஃதாவது ஈண்டு அறியாமையும் இளமைச் செவ்வியும் ஒருங்குடையள் என்பதுபட நின்றது. நிகர்தல், மெய்யுவமப் பொருட்டு; "கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய, ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப வென்று, அப்பா லெட்டே மெய்ப்பாலுவமம்[1]" என்பது உவமவியல். எனவே, மேனியிற் கிடந்து திகழும் இளமைநலமே ஈண்டு உவமங்கொள்ள நின்றதாம். தருக்குதல், தன்னை வியந்து, பிறரெல்லாம் தன்னிற் சிறந்தாரல்லரெனச் செருக்கி மாறுபடுதல்; ஈண்டுத் தலைவி தன்னிற் சிறந்திலள் என்பதுபடப் புறனுரைத்தல் மேற்று. உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. ஓதி, கூந்தல். கருங்குழலின் அயலே கிடந்து சுடர் விட்டுத் திகழும் இயல்பிற் றாகலின், நுதலை, ஓதி யொண்ணுதல் எனச் சிறப்பித்தார்; "கதுப்பயல் விளங்கும் சிறு நுதல்[2]" என்று சான்றோரும் கூறினர். பலரே என்புழி ஏகாரம்

1. தொல். பொ. 290. 2. குறுந். 129.

தேற்றம். பசப்பித்தோர், செயப்படு பொருண்மேல் நின்ற வினைப் பெயர்.

புறத்தொழுகிப் போந்த தலைவனால் தலையளிக்கப்பட்ட நலம் புதியாளாய பரத்தை தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்டுப் பொருத தலைமகள், அவன் முன்னின்று அவளைக் கண்ணுற இகழ்தலை நயவாதல்போல, நீ இனிக் கொண்டோள் தன்னொடு நிகரா என்னொடு நிகரிப் பெருநலம் தருக்கும் என்ப எனப் பிறர் மேல் வைத்துக் கூறினாள். இதனாற் பயன், ''நின் புறத் தொழுக்கம் குலமகளிரைப் பரத்தையரோடு நிகர்ப்பித்து வருத்து கின்றது'' எனத் தலைவற்கு உணர்த்தியவாறும். பரத்தைபால் பன்னாட் பிரிவின்றிக் கூடியிருத்தலால் நினக்கு என்பால் அன்பின் மையும், அதற்கேதுவாக என்பால் நலமின்மையும், அவள்பால் நினக்கு அன்புண்மையும், அதற்கேற்ப அவள்பால் நலமுண்மையும் இனிது உணரப்படுதலின், அவ்வாற்றால் நினது அன்புநெறிக்கண், யான் அவளோடு ஒவ்வேனாயினேன் என்பாள் தன்னொடு நிகரா என்னொடு என்றாள். இனி, இதுபோது நின்னாற்கொள்ளப்பட்ட அவளது நலத்தை நோக்க, அவட்கு முன்னர்க் கொளப்பட்ட எனது நலம் முதுமைத்தாகலின், நாளும் புதுவோரை மேவும் நினக்கு யான் அவளொப்பப் பெருநலம் உடையேனல்லேன் என்பாள், இது கூறினாள் எனினுமாம். இனி, இஃதறியாது நின்னாற் கொள்ளப்பட்ட தொன்றேயன்றிப் பெண்ணியல்பாலும் நிகர்க்கின்றேன் என உட்கொண்டு தன் இளமை நலத்தால் தருக்குகின்றாள் என்பாள், என்னொடு நிகரிப் பெருநலம் தருக்கும் என்றும், இவ்வாறு தான் உரைக்கின்றது பலரும் அறிந்தசெய்தி என்பதுபட என்ப என்றும் கூறினாள். கொளப்பட்டேம் என் றெண்ணிக் கொள்ளாத செய்தொழுகுவது[1] மடவோர் செய்கை என்றும், நிகராகாத ஒன்றினை நிகராக மதித்தல் அறிவுடையோர் செயலன்று என்றும் அறிந்திலள் என்பாள், மடவள் அம்ம என்றாள். ''நினக்குரிய மகளிருள் அவள் யாவள் என ஐயுறல் வேண்டா அவள் இன்னள்'' என வரைந்து கூறுவாள் இனிக் கொண்டோள்

---

1. குறள். 699.

என்ருள். ''பேணுதகு சிறப்பின் பெண்ணியல் பாயினும் என்னேடு புரையுநள் அல்லள், தன்னெடு புரையுநர்த் தான், அறியுநளே[1]'' எனப் பிறரும் கூறியவாறு காண்க. மேலும், அவள் தருக்குதற்கு ஏதுவாகிய இளமைப்புதுநலம், தன்னே நயந்துரையும் நின்னை பின்னர்ப் பிரியாவகைப் பிணிக்கும் பெருமையின்றி, விரைவிற் கழிந்து நின் பிரிவாற் பசந்து தேயும் சிறுமையுடைத்து என்பாள், புகழ்ச்சி வாய்ப்பாட்டாற் பெருநலம் எனக் குறித்தாள்.

இனி, இவற்றைத் தன் மடமையால் அறியாளாயினும், நின்னல் பசக்கப்பட்ட மகளிர் பலர் உளராதலைக் கண்டேனும் அறிதற்பாலள் என்பாள், பலரே ஓதி ஒண்ணுதல் பசப்பித்தோரே என்ருள் என்றது அறிந்த வழி, தன் பெருநலம் தருக்குதலைக் கை யொழிவள்; ஒழியாமையின், அவள் மடவள் மடவளே எனத் தான் முன் மொழிந்ததனை வற்புறுத்தாளாயிற்று. வண்டினம் தாதுண்டு கழித்த மலர் பொலிவு வாடுதல் போல, நின்னல் நலன் நுகரப்பட்டு ஒழிந்த மகளிர் பலர் பசப்பெய்தினர் என்றற்கு, வண்டு தாதுண் விரிமலரினும் பலர் என்ருள். ''புதுநலம் பூவாடி யற்றுத் தாம்வீழ்வார், மதிமருள நீத்தக் கடை[2]'' என்பதன் உரையால், வண்டு தாதுண்ட மலர் வாடுதல் உண்மை யறியப் படும்.

இது காமக்கிழத்தியர் நலம் பாராட்டிய பொருளின்கண் தலைவி கூறியது. காமக்கிழத்தியர் தம் நலத்தைப் பாராட்டுமிடத்துத் தலைவியொடு மாறுபட்டுத் தருக்கி ஒழுகுவ ராகலின், அஃது அறியும் தலைவி பொருது அவரை இகழ்ந்து மொழிதற்கும் உரியள். பெருநலம் தருக்கு மென்ப என்றது காமக்கிழத்தியாகிய பரத்தை தன் நலம் பாராட்டியதாகும். வண்டு தாதுண்ட மலரி னும் பலர் நுதல் பசக்கப்பட்டோர் என்றது, இவளும் அவர்போல நுதல்பசந்து நலங்கெடுதல் ஒருதலை என்பது எய்தத் தீமையின் முடித்தவாறு. இனி ''அவனறிவு ஆற்ற அறியுமாகலின்[3]'' என்ற

1. தொல். பொ. 180, உரை. 2. கலி. 147.
3. தொல். பொ. 147.

சூத்திரத்துக் ''காமக்கிழத்தியர் நலம்பா ராட்டிய, தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்'' என்னும் பகுதிக்கு, காமக் கிழத்தியர் நலம் பாராட்டிய பொருளின் கண்ணும், தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும், நலம் பாராட்டித் தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும் தலைவிக்குக் கூற்று நிகழும் எனவரும் எண்பொருளை நோக்காது, நச்சினார்க்கினியர், நலம் பாராட்டிய காமக்கிழத்தியர் தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும் என இயைத்துத் தலைவி தன்னிற் சிறந்தாராகத் தன்னால் நலம் பாராட்டப்பட்ட இற்பரத்தையர் மேல் தீமையுறுவர் என முடித்துக் கூறும் பொருளின் கண் என்று பொருள் உரைப்பர். மேலும், அவர் இப் பகுதிக்கு இப் பாட்டினையே காட்டி, ''இப்பொழுது கிடையாதது கிடைத்ததாக வரைந்து கொண்ட பரத்தை, தன்னொடு இளமைச் செவ்வி ஒவ்வா என்னையும் தன்னோடு ஒப்பித்துத் தன் பெரிய நலத்தாலே மாறுபடும் என்ப என அவள் நலத்தைப் பாராட்டியவாறும், நீ பசப்பித்தோர் வண்டு தாதுண்ட மலரினும் பலர் எனத் தீமையின் முடித்தவாறும் காண்க'' என்றனர். அன்றியும் அவர், இப்பாட்டின் முதலடியை மடவளம்ம இனிக் கொண்டோளே என்றும், தாதுண் வண்டினும் பலரே என்பதை, தாதுண் வண்டினும் பலர் நீ என்றும் பாடங் கொண்டிருக்கின்றனர். அவர் கருத்திற்கேற்ப, கூற்று நிகழ்த்துபவள் காமக்கிழத்தியும், ''இனிக்கொண்டோள்'' இற்பரத்தையுமாவர். இதன்கண், இற்பரத்தை தலைவியால் தன்னிற் சிறந்தாளாக நலம் பாராட்டப் பட்டவாறு இன்மையானும், ''அவள் நலத்தைப் பாராட்டிய வாறு'' என அவர் காட்டும் பகுதி நலம் பாராட்டலாகாமை யாலும், அது பொருந்தாமை யறிக. தீமையின் முடிக்கும் பொருளின்கண் நிகழும் கூற்றினை வரும் பாட்டிற் காண்க.

இனி, இதன்கண், தலைவி மடவள் அம்ம நீ இனிக் கொண்டோளே என்று எடுத்து மொழிந்த மேற்கோளையே, பெருநலம் தருக்கு மென்ப என்று கூறியும், அவளது பெருநலத்தின் பெருமையின்மையைப் பலரே ஒண்ணுதல் பசப்பித்தோர் என்று வற்புறுத்தியும் சாதித்தலின், மெய்ப்பாடு, பிறர்கண் தோன்றிய

மடமை பொருளாகப் பிறந்த நகையும், பயன், பரத்தை கேட்டுத் தலைமடங்குவாளாவதும், ஒரு முகத்தாற் புலந்தவாறுமாம். (67)

68 கன்னி விடியற் கணைக்கா லாம்பல்
தாமரை போல மலரு மூர
பேணு ளோநின் பெண்டே
யான்றன் னடக்கவுந் தானடங் கலளே.

பரத்தை தான் தலைமகளைப் புறங்கூறி வைத்துத் தன்னைத் தலைமகள் புறங்கூறினுளாகப் பிறர்க்குக் கூறினமை கேட்ட தலைவி தலைமகற்குச் சொல்லியது.

உரை: திரண்ட தாளினையுடைய ஆம்பல் விடியற் காலத்தில் தாமரையைப்போல மலரும் ஊரனே, நினக்குப் பெண்டாயின நின் காதற்பரத்தை அடக்கத்தைப் பொருளாகப் பேணிக் கொள்ளுவது இலள் கொல்லோ, அவள் அடங்கும் ஆறு என்று யான் அடங்கியிருக்கவும், அவள் தான் அடங்காது யான் புறங் கூறினேன் எனப் பிறர்க்குக் கூறுகின்றுளாகலான் எ. று.

விடியல் தோன்றிய அணிமைக்காலம் "கன்னி விடியல்" எனப்பட்டது; ''குமரியிருட்டு'' என்னும் வழக்குப்போல, ஆம்பல், மாலையிற் கூம்பி வைகறையில் மலரும்; ''குண்டுநீர் ஆம்பலும் கூம்பின இனியே, வந்தன்று வாழியோ மாலை[1]'' என்றும், ''கணைக்கால் ஆம்பல் அமிழ்துநாறு தண்போது, குணக்குத்தோன்று வெள்ளியின் இருள்கெட மலரும்[2]'' என்றும் வருவன காண்க. தாமரை மலரத் தொடங்குதற்கு அது கால மாகலின், ஆம்பல் தாமரைபோல மலரும் என்றூர். ஏதுவின்கண், அடக்கத்தையே விதந்து கூறுதலின், பேணுவது அடக்கமாயிற்று. ''காக்க பொருளா அடக்கத்தை[3]'' எனச் சான்றோர் கூறினர். அடங்குதல், ஈண்டுப் புறங்கூறுதல் முதலியன செய்யாது அமைந் திருத்தல். அடக்குதல், தான் அடங்குதலால், பிறர் தன்னைப் புறங்கூறுதற்குக் காரணம் பெருது அமைவித்தல்.

1. குறுந். 122. 2. நற். 230. 3. குறள். 122.

புறத்தொழுக்கத்தில் நின்றுற் கொள்ளப்பட்டுச் செருக்கித் திரியும் நின் காதற்பரத்தை என்பதுபட நின்பெண்டு என்றும், நினக்குப் பெண்டாயினுள் நீரல கூறி ஒழுகுதல், அவட்கே யன்றி நின் நீர்மைக்கும் மாசுதரும் ஆகலின், அதனை நினைந்து அடங்கி யிராது யான் புறனுரைத்தேன் எனப் பிறர்பால் இல்லதுகூறித் தருக்குகின்ருள் என்றற்குப் பேணுளோ என்றும் கூறினுள். யான் நின் பெண்டினையாதல், அவளொடு கூடியொழுகும் நின் ஒழுக்கத்தையாதல் குறித்து யாதும் கூருது அடங்கியிருந்தால் அவளும் அவளொத்த பிறரும் என்னைப் புறன் உரைத்தற்கு ஏது ஒன்றும் பெருது வாயடங்குவர் என்பது பேணினேன் என்பாள், யான் தன் அடக்கவும் என்றும், அடங்காமைக்குரிய காரணம் இன்ருகவும் அவள் உளதாகப் பொய்நினைந்து புறனுரைத்துத் திரிகின்ருள் என்பாள் தான் அடங்கலளே என்றும் கூறினுள்.

இவ்வாறு, தலைவி பரத்தை நலம் பாராட்டாது, அவள் செய்கையினைத் தலைவன்முன் இகழ்ந்து கூறும் இது, ''அவனறிவு ஆற்ற அறியுமாகலின்[1]'' என்ற சூத்திரத்துத் தீமையின் முடிக்கும் பொருளின்கண் அடங்கும்.

சிறப்பில்லாத ஆம்பல் தாமரைபோல மலரும் என்றதனுல், கற்புச்சிறப்பு இன்மையால் அடங்கிக் கிடத்தற்குரிய பரத்தை குலமகளிர் போலச் சிறப்புடையாள் எனக்கருதித் தருக்குகின்ருள் என்றவாறு. மெய்ப்பாடு: பிறர்கண் தோன்றிய சிறுமை பொருளாகப் பிறந்த மருட்கை. பயன்: ஒருமுகத்தாற் புலந்தவாறு. (68)

69. கண்டனெ மல்லமோ மகிழ்நநின் பெண்டே
பலராடு பெருந்துறை மலரொடு வந்த
தண்புனல் வண்ட லுய்த்தென
உண்கண் சிவப்ப வழுதுநின் ருேளே.

1. தொல். பொ. 147.

தலைமகன் பெதும்பைப் பருவத்தாள் ஒருத்தியைக் களவில் மணந்து ஒழுகுகின்றதனை அறிந்த தலைமகள் தனக்கு இல்லை என்று அவன் மறைத்துழிச் சொல்லியது.

உரை : மகிழ்ந, பலர் கூடி யாடும் நீர்த்துறைக்கண் மலரோடு பெருகிவந்த குளிர்ந்த புனல் வண்டலாட்டுக்கெனத் தான் செய்து வைத்த பாவையைச் சிதைத்ததாக, தன்மையுண்ட கண்கள் சிவப்பேற அழுது நின்றவள் நின் பெண்டேயாவள் ; யாம் அவளைத் தெளியக் கண்டேம் ஆகலின், நீ இல்லையென மறைப்பது என்னை ? எ. று.

கண்டனெம் அல்லமோ என்புழி, அல்லம் என்ற எதிர்மறை முற்றுவினையும் எதிர்மறை ஓகாரமும் இயைந்து, உடன்பாட்டுப் பொருளின்கண் தெளிவு விளங்க நின்றன ; தெளியக் கண்டேம் என்றவாறு. ஏகாரம், முன்னையது தேற்றம், ஈற்றது அசைநிலை. வண்டல், பண்டைக்காலத்தில் மகளிர் அயர்ந்த ஒருவகை விளையாட்டு. மலரொடு வந்த தண்புனல் எனவே, புதுப்புனல் என்பது பெற்றும் ; புதுப்புனலைத் தண்பதம் என்றும் வழங்குப. உய்த்தல், தான் சுமந்து போந்த நுரையும் திரையும் மலரும் பிறவும் கொணர்ந்து பரப்பிப் பரவுதல். உய்த்தென என்பது செய்தென என்னும் வினையெச்சம். மணற்றுறையாதலின் தண் புனல் உய்த்தவழி இடையறவின்றி இழைத்த வண்டல் விரையச் சிதைதலின், உய்த்தென என்றார். ஆகலின் நீ என்பது முதலாயின எஞ்சிநின்றன.

தலைவன் களவிற் கூடி ஒழுகும் பெண்டினைத் தலைவி அறிந்து கூறியவழி, அவன் இல்லையென மறைத்தலும் தான் அவனை மறுப்பாள், யாம் அவளைப் புனலாடச் சென்ற போதில் தெளியக் கண்டேம் ; அவள் நின்னால் கொளப்பட்ட பெண்டே என்பாள், கண்டென மல்லமோ மகிழ்ந நின் பெண்டே என்றாள் பன்மை, தன்வயின் உரிமை பற்றி வந்தது. பின்னர், அவள் அவற்குரிய பெண்டே எனத் தான் துணிந்தவாற்றைக் கூறுவாள், அவள் தன் உண்கண் சிவப்ப அழுததனை எடுத்துரைக்கின்றாள் : பலராடு

பெருந்துறைக்கண் தண்புனல் வண்டல் சிதைத்தல் இயல்பாகலின், அவட்கு அழுகையாம் புனலாடல் கண்டு பொருமையால் எழுந்தது என்றற்கு, அழுது நின்ருேள் என்றும், தண்புனல் எய்தா இடன் அறிந்து பிறிதொரு வண்டலமைத்துக் கோடலும் ஆண்டு நின்று அகறலும் இன்றி எம்மையே நோக்கி நின்றமையின், அவள் நின் பெண்டே என்பது துணியப்பட்டது என்பாள், நின் பெண்டே என்றும் கூறினள். தண்புனல் வண்டல் சிதைத்தற்கு அத்துணை அழுகை வேண்டாமையின், உண்கண் சிவப்ப அழுது என்றது பிற குறிப்புணர நின்றது. தண்புனல் வண்டலைச் சிதைத்தது அவள் அழுகைக்கு நிரம்பிய ஏதுவாகாது என்பதுபட, வண்டல் உய்த்தென என்ருள் என்க. " கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே, தெண்டிரை பாவை வௌவ, உண்கண் சிவப்ப அழுதுநின் ருேளே [1]" எனப் பிறண்டும் வருதல் காண்க.

பேதை, பெதும்பை என்ற இருபருவத்து மகளிருள், பெருந்துறைக்கண் தானே வண்டலமைத்து விளையாட்டயர்தல் பேதைக்குக் கூடாமையின், பெதும்பைப்பருவத்தாள் என்பது பெறப்பட்டது

தலைவி காமக்கிழத்தியின் நலங்கூறுவாள் போலத் தலைவனது புறத்தொழுக்கத்தின் தீமையைக் காட்டிப் புலத்தலின், இஃது, " அவனறிவாற்ற வறியுமாகலின் [2]" என்ற சூத்திரத்துக் " காமக் கிழத்தியர் நலம்பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின்கண் " தலைவி நிகழ்த்தும் கூற்றுவகையுள் அடங்கும். இனி, ஆசிரியர் நச்சினர்க்கினியார், இதனை, இச் சூத்திரத்துப் " பல்வேறு நிலையினும் " என்றதனல் அமைத்து, " இது காமஞ் சாலா இளமையோளைக் களவில் மணந்தமை அறிந்தேன் என்றது " என்பர்.

மெய்ப்பாடு: தன்கண் தோன்றிய பொருமை காரணமாகப் பிறந்த வெகுளி. பயன்: ஒருமுகத்தாற் புலத்தல்.

---

1. ஐங். 125. 2. தொல். பொ. 147.

70. பழனப் பன்மீ னருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாண ரூர
தூயர் நறியர் நின் பெண்டிர்
பேஎ யனையமியாஞ் சேய்பயந் தனமே.

பரத்தையரொடு பொழுதுபோக்கி நெடிது துய்த்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

உரை : பழனங்களிலுள்ள பலவாகிய மீன்களையுண்ட நாரை கழனியிலுள்ள மருதமரத்தின் உச்சியில் தங்கும் மிக்க நீரினையுடைய பொய்கையினையும் புதுவருவாயினையும் உடைய ஊரனே, யாம் மகப்பயந்து பேயினை ஒத்தேமாக, நின் பெண்டிர் தூய்மையும் நறுமையு முடையராகலின் அவர்பாலே செல்லுக எ. று.

பழனம், நீர்நிலை யென்பது முன்னரே கூறப்பட்டது. ஆர்ந்த[1] என்பது, அருந்த என வந்தது, வீழ்ந்த மரம், விழுந்த மரம் என வழக்கினும், ஆழ்ந்துபடு விழுப்புண் எனற்பாலது "அழுந்துபடு விழுப்புண்[2]" எனச் சான்றோர் செய்யுளினும் வருதல் காண்க. "அவரை யருந்த மந்தி[3]" என்புழியும் இதுவே கொள்க. சென்னி, உச்சி. மிக்க நீர் தனது ஆழமுடைமையாற் கருமை யாய்த் தோன்றுதலின் நீர் மிகவுடைய பொய்கையை, மாநீர்ப் பொய்கை என்றார். "மாநீர் வேலிக் கடம்பெறிந்து[4]" என

1. ஆசிரியர் நச்சினார்க்கினியர், "'ஆர்ந்த'' என்பதன் ஆகாரம் குறுக்கலும், உகரம் விரித்தலும் ஆகிய இரண்டும் வருவனவற்றை நாட்டல் வலிய (தொல். சொல். 403) என்றதனாற் கொள்க'' என்பர். "தாதுதேர் பறவை யின் அருந்து இறல் கொடுக்குங்கால்', (கலி. 22) என்பதன் அடிக் குறிப்பில், "நெடிலைக் குறுக்கிப் பின்னின்ற ரகரமெய்யின்மேல் உகரவுயிரேற்றல் தமிழ் மரபு'' என்பர் பிற்கால ஆராய்ச்சியாளர். குறுக்கும்வழிக்குறுக்கல் என்றத னால் ஆகாரத்தைக் குறைத்தபின், விரிக்கும்வழி விரித்தல் என்றதனால் உகரம் விரித்தல் மேற்கோள்மலைவாகலின், முன்னோர் கூறுவதே தலிக்கநெறிக்கு ஒத்தல் காண்க.

2. நற். 97. 3. ஐங். 271. 4. சிலப். 25:1.

அடிகளும் கூறினர். மா, கருமை. பரத்தையரின் பன்மை தோன்றப் பெண்டிர், எனப்பட்டது. சேய் பயந்த மகளிர், மெலிந்த மேனியும் குழிந்த கண்களும் ஒப்பனையின்றி உலறிய கதுப்பும் புலவுநாற்றமும் உடையராதலின் அவையெல்லா முடைய பேயினை உவமைக் கூறினர். மகப்பயந்து பயன்படாமையும், பிறர்நலம் நுகர்தற்கென்றே இடையருது ஒப்பனை செய்து கோடலும் உடையராதல் தோன்ற, தூயர் நறியர் என்றார்.

மகப்பயந்தமையின் மேனிநலம் முதிர்ந்து புனிற்றுப் புலவு நாறி வேட்கை சிறந்து நிற்கும் எம்மினும், அப்பயப்பாடு இல ராயினும் நலங்கிளரு மேனியும் புதுமணமும் உடையர் நின் பெண்டிர், அவர்பாலே செல்க என்பாள், தூயர் நறியர் நின் பெண்டிர் என்றாள். எனவே இது, ''காமக்கிழத்தியர் நலம் பாராட்டிய'' பகுதியாயினும், மகப்பயந்து வயங்கும் தன்பாற் போந்து, செய்தற்குரிய கடன்களைச் செய்யும் முறைமையால் பிரியானாகலின், அதனை அறிந்து வைத்தே புலக்கின்றாளாதலால் இது ''செல்லாக் காலத்துச் செல்க என விடுத்த'' கூற்றாகும் குறிப்புடைத்து.

யாம் சேய் பயந்தேமாக, எம் மேனி மெலிவும், புலவு நாற்றமும் அறிந்து, எம்மைக் காண்டலும் குற்றமெனக் கருதிப் பரத்தையர்பால் நெடிது தங்கினை என்பாள், பேஎய் அனையம், சேய் பயந்தனமே என்றாள். பேயினைக் காண்டலும் குற்றம் என்பது, ''அருஞ்செவ்வி இன்னா முகத்தன் பெருஞ்செல்வம், பேஎய் கண்டன்ன துடைத்து [1]'' என்பதனால் அறிக. இது காமக் கிழத்தியின் நலம் பாராட்டிய தலைவி, தனது தீமையினை முடித்துக் கூறும் பொருளாகும். இதனாற்பயன் ஒரு முகத்தாற் புலந்தவாறு; ''கற்புவழிப் பட்டவள் பரத்தை யெத்தினும், உள்ளத்து ஊடல் உண்டெனு மொழிப [2]'' என்பது காண்க.

இனி நின் பெண்டிர் தூயரும் நறியருமாயினும், எம்போற் புதல்வர் பயந்து பயன்படும் கற்புச்சிறப்பு இலர் என்றற்குச் சேய்

---

1. தொல். பொ. 233. 2. குறள். 565.

பயந்தனம் என்றும், மகப்பேற்ருல் மேனி தளர்ந்தேமாயினும் வழிபாட்டுமுறையிற் குன்றிற்றிலேம் என்றற்குப் பேஎய் அனையம் என்றும் கூறினள் என்றும், பின்னிலை முனியாதது பேஎய் என்பதற்கு, ''களிறுபடப் பொருத, பெரும்புண் ணுறுநர்க்குப் பே எய் போலப் பின்னிலை முனியா நம்வயின்'' என்றும் கூறுவர்.

பழனப் பன்மீனை உண்ட நாரை தங்குதற்குக் கழனி மருதின் சென்னி ஆதாரமானது போல, பரத்தையர் நலனை நிகர்த்த நீ அவர்பால் நெடிது தங்குதற்கு யாம் சேய்பயந்தமை ஆதார மாயிற்று என உடனுறையாகிய உள்ளுறையுவமம் கொள்க. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல்.

பேஎ, யனையம் யாஞ்சே பயந்தனை சென்மே என்பது பாடமாயின், யாம் பேயினை ஒத்தேம்; நீ தழுவுதற் குரிய ஏற்றினைப் பெற்றனை: நீ இனிச் செல்க என்று பொருளாம். ஈண்டு, சே என்றது, புதல்வனைக் குறித்ததாயின், நின் புதல்வனும், ''தந்தையர் ஒப்பர் மக்கள்[2]'' என்பதனுல், தாயாகிய என்பால் அன்பின்றி நீங்குவன் என்றும், பரத்தையரைக் குறிக்கு மாயின் அவர்பாற் செல்க என்றும் ஆம் (70)

---

1. நற். 349. 2. தொல். பொ. 147.

8

புனலாட்டுப்பத்து

புனலாடுதல் பொருளாகப் பிறந்த கூற்றுக்களைக் குறித்து வரும் பாட்டுக்களின் தொகையாதல் பற்றி, இஃது இப்பெயர் பெறுவதாயிற்று.

பண்டைக்காலத்துத் தமிழ் வாழ்க்கையில் நிகழ்ந்த விளையாட்டு வகைகளில், புனலாட்டு என்பது ஒன்று. யாறுகள் புதுநீர் பெருகிப் பொலிவுற்றுத் திகழும் சிறப்புக் குறித்துப் புனலாட்டயர்தல் பண்டையோர் மரபு.

குறிஞ்சியில் அருவிநீராட்டும், முல்லையில் ஆருட்டும், நெய்தலில் கடலாட்டும், மருதத்தில் புனலாட்டும் சிறந்து விளங்கின. ஆருட்டு என்ற வகையில் சேரநாட்டில் இதுமிக்க சிறப்புடன் கொண்டாடப் பெற்றுள்ளது. ''அண்ணல் நெடுங்கோட் டிழிதரு தெண்ணீர், அவிர்துகில் புரையும் அவ்வெள்ளருவித், தவிர்வில் வேட்கையேம் தண்டா தாடிப் பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி[1]'' எனக் குறிஞ்சி நில மக்கள் புனலாடியவாறு காண்க. பிறவும் இவ்வாறு வருமன ஏனைத் தொகை நூல்களிற் கண்டுகொள்க.

---

1. குறிஞ்சி. 54-7.

இப்புனலாட்டு, செல்வரும் மறியரும், இளையரும் முதியரும், ஆண்மக்களும் பெண்மக்களும் ஒத்த வகையாற் கூடிப் புனலாடி இன்பம் துய்க்கும் இனிமை உடையதாகலின், சான்றோர் இதனைச் சிறப்பக் கூறியிருக்கின்றனர். செல்வச் சிறப்பு மிக்க தலைமக்கள் புனலாட்டினைப் பெரிதும் விரும்பித் தம் மனக்கினிய காதலர் சூழச் சென்று விளையாடி இன்பம் நுகர்வர். இளையோர், இவ்வாறு புனலாடி இன்பம் நுகர்தலின்றித் தம் மனையின்கண் செறிப்புண் டிருத்தல் தீதுஎன்றும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் கருதினர். ''விளையா டாயமோடு ஓரை ஆடாது, இளையோர் இல்லிடத்து இற்செறிந்து இருத்தல், அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்[1]'' என்பதனால் இஃது இனிதுணரப்படும். இனி, தொடித்தலை விழுத் தண்டினார் என்னும் நல்லிசைச் சான்றோர் ஒருவர், கழிந்த தமது இளமைப்பருவத்தின் இன்ப நயப்பை நினைந்து, ''மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு, உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்த, நீர்நணிப் படி கோடு ஏறிச் சீர்மிகக், கரையவர் மருளத் திரையகம் பிதிர, நெடு நீர்க் குட்டத்துத் துடும் எனப்பாய்ந்து, குளித்து மணல் கொண்ட கல்லா இளமை[2]'' என இனைந்து கூறுவது' இப்புனலாட்டு ஆடவர் பெண்டிர் என்ற இருபாலாரும் விரும்பும் இயல்பிற்று என்பதனை வற்புறுத்துகின்றது.

புனலாட்டு நயந்த தலைவன், தலைவியோடும் காமக்கிழத்திய ரோடும் கூடி, தனது பதி இகந்து சென்று விளையாட் டின்பத்தினை நுகர்வன். ''யாறும் குளனும் காவும் ஆடிப், பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப[3]'' என ஆசிரியர் தொல்காப்பியனாரும் கூறியிருக்கின்றனர்.

இனி, கடற்கரையைச் சார்ந்த நெய்தல் நிலத் தலைமக்கள், புனலாட்டு விருப்பம் தோன்றிய வழிக்கடலில் நீர்விளையாட மேவுவர். இவ்விளையாட்டுக் கடலாடுதல் என்றும் சிறப்பிக்கப் படும். ''கடலாடு மகளிர் கானல் இழைத்த சிறுமனை[4]'' என்றும், ''தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியும்[5]'' என்றும் வருவன

1. நற். 68. 2. புறம். 243. 3. தொல். பொ. 191.
4. குறுந். 326. 5. அகம். 110.

காண்க. இதனைச் சிலப்பதிகாரம் முதலிய தமிழ் நூல்கள் பெரிதும் விளக்குவனாம். பண்டைத்தமிழ் வேந்தருட் சிறந்த கரிகால் வளவன் புனலாட்டிற் பெருவேட்கை கொண்டு, யாறும் கடலும் படிந்து புதுப்புனலாடிப் போகம் நுகர்ந்தான் என நூல்களால் அறிகின்றோம். காவிரிப்பூம் பட்டினத்து நிகழ்ந்த கடலாடு நிகழ்ச்சி யொன்றினைச் சிறப்பிக்கப்போந்த இளங்கோவடிகள், அது, ''விண்பொரு பெரும் புகழ்க் கரிகால்வளவன், தண்பதங்கொள்ளும் தலைநாட் போல[1]'' இருந்ததெனக் குறிக்கின்றார். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருமயிலையில் நடந்த கடலாட்டு விழாவை ''மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக் கடலாட்டு[2]'' எனத் திருஞானசம்பந்தர் சிறப்பிக்கின்றார்.

இக் கடலாட்டு, மேனாடுகளிலும் மிகவும் சிறப்பாகப் போற்றப் படுகின்றது. இக்காலத்திலும், கடற்கரை நகரங்களிலுள்ளவர்கள் இதனை விரும்புகின்றனர்.

கடலாடுவது உடல்நலங் குன்றிய இளைஞர்க்குப் பெரிதும் நன்மை தருவதாகும். ஆனால், அவர்கள், காலையில் உணவு கொண்டபின், இரண்டு மணிநேரம் கழித்துக் கடலாடல் வேண்டும்; அதுவும் குறைந்தது இரண்டு அல்லது மூன்றுமணி நேரம் நீரில் நீந்தி விளையாடவேண்டும். உணவுண்ட இரண்டு மணி நேரத்திற்குள் எவரும் கடலாடக் கூடாது. மிக்க உழைப்பால் உடல் ஓய்ந்து இருப்பவர்க்குக் கடலாட்டுத் தீங்கு விளைவிக்கும். நீராடுவோர் தமது உடல் சூடாக இருக்கும் போதுதான் அது செய்யத் தொடங்க வேண்டும். கடலில் நீராட இறங்குங்கால் சிறிதும் தயக்கமின்றி விரையச் சென்று இறங்கி மூழ்குவதும், கரையேறிய வழிச் சிறிதும் தாழாது உடலைத் துடைத்துக்கொள்வதும் கடலாடுவோர் குறிக்கொள்ள வேண்டின வாகும். இன்றேல், இவை உடல் நலத்துக்குப் பெருந்தீங்கினை உண்டுபண்ணும் என்று துணிந்திருக்கின்றனர். உடலில் தோய்ந்த நீர் தானே புலருமாறு விடுவதும் நீரின்கண் நெடிது தங்கி

---

1. சிலப்: 6 : 159—160. 2. ஞான சம். 183-6.

ஆடுவதும் ஆகா. நீராடுங்கால், ஆடுவோர் உடலில் குளிருணர்ச்சி தட்டுமாயின் உடனே கரையேறி விடுவது தக்கது.

கடலாடுவதையே பெருந்தொழிலாக உடையவர் பலர் உளர். அவர்களுட் பலர் காது நோயால் மெலிந்து உயிரை இழக்கின்றனர். கடலாடுவோருட் சிலருக்குக் கடல்நீர் காதுக்குட் புகுந்து மயக்கம் உண்டு பண்ணுவதும் உண்டு அன்னோர் முதற்கண் தமது காதுகளில் சிறிது பஞ்சை அடைத்துக் கொள்வது நலம் என்பர்.

கடலில் எவ்விடத்தில் வேண்டினும் இறங்கி நீராடுவது தீது ; மிகப்பெரிய அலைகள் இல்லாமல், அகன்று விரிந்து விளங்கும் மணற்றுறைகளே தக்க இடமாகும். நிற்போர் கால் நிலைக்காத நீரோட்டமுள்ள இடங்கள் கடலாட்டிற்கு ஏற்றவையாகா. கடற்றுறைகள், சேறும் மூழையும் கூரிய கற்களும் கடற்பூடுகளும் இன்றிப் பரந்து மணலே நிறைந்து கிடக்கும் இடமாதல் வேண்டும், நீராடுங்கால், ஆடுவோர் வாயைத் திறந்துகொண்டிருப்பது தீதென்பர். நீராடுமிடத்து, ஆடுவோருடைய கால் யாதேனுமொரு முழைஞ்சினுட் சிக்குமாயின், உடனே அவர் தமது வாயை மூடிக்கொண்டு நீரை உதைந்து பாய்தல் வேண்டும்; இன்றேல்' நீர் வாயுட்புகுந்து நீந்தும் அவருடைய நெஞ்சுறுதியைக் கெடுத்துப் பெருந் தீங்கை விளைவிக்கும்.

கடலாட்டு விழைந்து நீந்தப் பயில்வோர் தண்ணீரில் கரையை நோக்கியவண்ணம் நின்று நீராடவேண்டும். இறங்கும்போது மார்பளவு ஆழத்திற் சென்றதும், முகத்தைக் கரைப்பக்கமாகத் திருப்பிக்கொள்வது நன்று. அதன்மேலும் ஆழத்திற் செல்லக் கருதினல், கரையை நோக்கி நின்றே பின்னுகக் கழுத்தளவு வரையிற் செல்ல வேண்டும். நன்ருய்ப் பயின்றவர்களே அதன் மேலும் செல்லுதற்கு உரியவராவர்.

இக்கூறிய புனலாட்டு இன்பக்காரணமாகிய விளையாட்டாகலின், தலைமக்கள் தலைவியருடனும் பிற காதல் மங்கையருடனும் கூடியாடுவது புலவிக்கு ஏதுவாகிறது ; அது பற்றியே அது

" கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே[1]" எனக் கூறப்படுவதாயிற்று. ஆகவே, தலைவன் பரத்தையருடன் யாறும் குளமும் கடலும் ஆடி இன்ப நுகர்ச்சி எய்துவானாயின், அது தலைவிக்கும் ஏனைக் காமக்கிழத்தியர்க்கும் ஊடலும் புலவியும் பயக்கும் என்பதாம்.

71 சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
ஆடினை யென்ப புனலே யலரே
மறைத்த லொல்லுமோ மகிழ்ந
புதைத்த லொல்லுமோ ஞாயிற்ற தொளியே.

பரத்தையரோடு புனலாடினான் எனக் கேட்டுப் புலந்த தலைமகள், தலைமகன் அதனை இல்லை என்று மறைத்துழிச் சொல்லியது.

உரை: மகிழ்ந, சூது போலும் மூட்டுவாயினையுடைய குறிய தொடியும் வளைவுபொருந்திய வளையுமுடைய நின்னால் விரும்பப் பட்ட நின்காதலியைத் தழுவிக்கொண்டு நீ நெருநல் புனலாடினை என்று பலரும் கூறுகின்றனர்; ஞாயிற்றின் ஒளியை எவற்றாலும் எத்துணையும் மறைத்தல் கூடாதவாறு போல நீ புனலாடியதனால் எழுந்த அலர் நின் மாயப் பொய்மொழிகளால் சிறிதும் மறைக்கப் படாது, காண் எ. று.

சூது, சூதாடுவோர் இயக்கும் காய் தொடியின் மூட்டுவாய் அச்சூதாடுகாய் போறலின், சூதென்றது ஆகுபெயர். சூதார் குறுந்தொடி - உள்ளே புழையுடைய குறுந்தொடி என்றலுமொன்று. சூர், வளைவு; " சூர்ப்புறு கோல்வளை[1]" என வருதல் காண்க. சூர்ப்புற்ற வளை துவண்டு நுடங்கியது போன்று இருப்பது குறித்து, அதனை நுடக்கம் என்றார். தொடி தோளிற்கும்

---

1. அகம். 142.

வளை முன்கைக்கும் உரியவாதல்பற்றி இரண்டும் கூறினர்.[1] குறுந்தொடி எனவே, பரத்தையின் இளமை குறித்தவாரும். வெங்காதலி என்புழி, வெம்மை வேண்டற்பொருட்டு. ஓகாரம் இரண்டும் எதிர்மறை.

தலைவன் பரத்தையைக் கூடிப் புனலாடியது கேட்டுப் புலக்கின்ருளாகலின், சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து எனப் பரத்தையை நலம் பாராட்டுபவள் போலக் கூறினுள், ''கற்புவழிப் பட்டவள் பரத்தை ஏத்தினும், உள்ளத்து ஊடல் உண்டென மொழிப''. தொடியும் வளையுமாகிய அணிநல மல்லது பிற கற்பு நலம் இலளாயினும், அவள்பால் நினக்கு உண்டாகிய அன்பு பெரிது என்பாள் நின் வெங்காதலி என்றும், புனலாடிய போதேயன்றி அதற்கு முன்பும் பின்பும் முறையே அவளைத் தழீஇப் போவதும் வருவதும் செய்தனை என்பாள் தழீஇ என்றும், புனலாடிய காலம் சேய்த்தன்று, மிக்க அணித்தாய நேற்றைப்போது என்பது சுட்டி, நெருநை ஆடினை புனலே என்றும், நின் புனலாட்டும் பலர் அறிய நிகழ்ந்தது என்றற்கு என்ப என்றும் கூறினுள். ''அலரின் தோன்றும் காமத்து மிகுதி'' ''கிழவோன் விளையாட்டு ஆங்கும் ஆற்றே[2]'' என ஆசிரியர் கூறுதலின், அலர் விதந்து கூறப்பட்டது. இது புறஞ்சொல் மாணுக்கிளவி, ''களவும் கற்பும் அலர்வரை வின்றே[3]'' என்பதனுல், தலைவி அலர் எழுந்தமை கூறல் அமைவதாயிற்று.

புனலாடிய செய்தி கேட்டுப் பொருளாகிய தலைவி அதனுல் எழுந்த அலரைக் கூறினுளாக, அது கேட்ட தலைவன் அவ்வாறு இல்லை என்பதுபடப் பல சொல்லவும், அவள், அவையாவும் அவன் தன் பரத்தமையை மறைத்தற்குக் கூறியன என்று கொண்டு, நீ எத்துணைப் பொய்ம்மொழிகளால் அதனை மறைப்பினும், அது மறையாது யாவரும் அறிய அலர்மிகுவதாயிற்று

---

1. தொடியும் வளையும் வேறுவேறு என்பது சீவகசிந்தாமணி 468, 469ஆம் செய்யுட்களால் விளங்குமாறு கண்டு கொள்க.

2. தொல். பொ. 163, 164. 3. ஷெ. ஷெ 162.

என்பாள். அலரே மறைத்தல் ஒல்லுமோ என்ருள். "ஊர, பொய்யால் அறிவென் நின் மாயம் அதுவே, கையகப் பட்டமை அறியாய், நெருநை. மையெழில் உண்கண் மடந்தையொடு வையை, ஏர்தரு புதுப்புனல் உரிதினின் நுகர்ந்து பரத்தை ஆயம் கரப்பவும் ஒல்லாது, கவ்வகையாகின்ருற் பெரிதே[1]" என்றும், இவ்வகையால் எழுந்த அலரை மறைத்தல் முடியாது என்பதை, "அரிமதர் மழைக்கண் மாஅ யோளொடு, நெருநையும் கமழ் பொழில் துஞ்சி இன்றும், பெருநீர் வையை அவளோ டாடிப், புலரா மார்பினை வந்து நின்று எம்வயின், கரத்தல் கூடுமோ மற்றே .... அலராகின்று அது பலர்வாய்ப் பட்டே[2]" என்றும் வருவன காண்க.

விண்ணினும் மண்ணினும் தன் ஒண்கதிர் பரப்பிப் பேரொளி செய்யும் ஞாயிற்றை ஒருகால் கார்முகிற் கூட்டம் சிறிது மறைக்க முயலினும், ஞாயிற்ரொளி மறையாது விண்ணகத்தும் அம் முகிற் கூட்டத்தின் அடியிலுள்ள நிலப்பகுதி சிறிது ஒழிந்த பிருண்டும் நன்கு விளங்குதல் போல, நீ மறைக்க முயலும் அலர் நின்னுற் காதலிக்கப்பட்ட நின் பரத்தை ஒழியப் பிறர் பலரும் அறிய நிற்ப தாயிற்று என்பாள், புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்றது ஒளியே என்ருள். இது பிறிதுமொழிதல். நின்செயல் சிறிதும் மறைக்கப் படாது என்பது கருத்து. "ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்[3]" என்ருர் பிறரும்.

மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல். (71)

72. வயன்மல ராம்பற் கயிலமை நுடங்குதழைத்
திதலை யல்குற் றுயல்வருங் கூந்தல்
குவளை யுண்க ணேஎர் மெல்லியல்
மலரார் மலிர்நிறை வந்தனப்
புனலாடு புணர்துணை யாயின ளெமக்கே

---

1. அகம். 256. 2. ஷை ஷை 296. 3. பழமொழி. 32.

தலைமகள் புலவி நீக்கித் தன்னோடு புதுப்புனல் ஆட வேண்டிய தலைமகன், களவுக்காலத்துப் புனலாட்டு நிகழ்ந்ததனை அவள் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

உரை: வயலில் மலர்ந்த ஆம்பலால் தொடுக்கப்பட்ட மூட்டுவாய் பொருந்திய அசைகின்ற தழையினையும், அரிபரந்த அல்குலையும், அசைவிடப்பெற்ற கூந்தலையும், குவளைமலர் போன்ற மைதீட்டிய கண்களையும், அழகும் மென்மையும் பொருந்திய இயல்பினையு முடையவள், பண்டு யாம் களவில் ஒழுகிய காலத்துப் பல்வகைப் பூக்களைச் சுமந்து புதுநீர் வந்ததாக அதன்கண் யாம் ஆடுதற்குரிய துணையாயினள், எ. று.

இளைய மகளிர் ஆம்பற்றழை அணிதல் மரபாகலின் ஆம்பற்றழையினை முதற்கட் கூறினர். "சிறுவெள்ளாம்பல், இளைய மாகத் தழையா யினவே[1]" எனச் சான்றோரும் கூறினர். துயல்வருதல், அசைதல். ஏஎர், அழகு; நலத்தகை நல்லவர்க்கு ஏஎர்[2]" என்பர் சான்றோர். அழகாவது, "இன்பப்பயனைத் தலைப்படுதல்" என்றனர் பரிமேலழகர். புணர்துணை, இறந்தகாலம் தொக்க வினைத்தொகை. புணர்துணை ஆயினள் என இறந்த காலத்தார் கூறியது, இப்புனலாட்டுக் களவுக் காலத்தது என்றற்கு.

தலைவி கொண்ட புலவியை நீக்கும் குறிப்பினன் ஆகலின், அவள் பண்டு அணிந்திருந்த தழையினையும் ஏனை நலங்களையும் பாராட்டினான். தன்னொடு புதுப்புனலாட வேண்டுகின்றமையின் பண்டு நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைப்பித்து அவள் மனத்து நிகழும் புலவியுணர்வை மறப்பிப்பான், மலரார் மலிர்நிறை வந்தென என்றான். இதனால் தலைவன்பால் அன்புதொக நிற்றல் என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. என்பால் இவள் அன்று கொண்ட அன்பு இன்று சுருங்கிற்றன்றாகலின், இப்போழ்தும் புனலாடப் போந்து புணர் துணையாவள் என்பான், புனலாட புணர்துணை யாயினள் எமக்கே என இறந்தகாலத்துக் குறிப்பே எய்தக்

1. புறம் 248. 2. குறள். 1305.

கூறினுன். ''ஆர்கலி வெற்பன் மார்பு புணையாகக், கோடுயர் நெடுவரைக்கவா அன்பகலே, பாடின் அருவி ஆறுதல் இனிதே' '' எனத் தலைவி களவின்கண் தலைவனெடு தான் ஆடிய புனலாட்டு நிகழ்ச்சியை நயந்து கூறியிருத்தல் ,காண்க.

''யாறும் குளனும் காவும் ஆடிப், பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப[2]'' என்பதற்கு இதனைக்காட்டி, இது தலைவி புலவி நீங்கித் தன்னெடு புனலாடல் வேண்டிய தலைவன், முன்பு புனலாடியதனை அவள் கேட்பத் தோழிக்கு உரைத்தது'' என நச்சினுர்க்கினியர் கூறுவர். மெய்ப்பாடு: இளிவரல். பயன்: தலைமகள் கேட்டுப் புனலாடற்கு நேர்வாளாவது.

கயலமை நுடங்குதழை என்றும் பாடம் உண்டு. இதனைக் கயலமை வயல்மலர் ஆம்பல் நுடங்குதழை என இயைத்து, கயல் மீன்கள் பொருந்திய வயல்களிடத்து மலர்ந்த ஆம்பல்மலரால் தொடுக்கப்பட்ட நுடங்குதழை என்று உரைக்க. (72)

73. வண்ண வொண்டழை நுடங்க வாலிழை
ஒண்ணுத லரிவை பண்ணை பாய்ந்தெனக்
கண்ணறுங் குவளை நாறித்
தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே.

இதுவுமது.

உரை: வெள்ளிய இழையினையும் ஒள்ளிய நுதலினையு முடைய அரிவை அழகிய தழையுடை இடையிற் கிடந்து அசையப் பண்டு களவின்கண் பெருந்துறைப் புனலில் விளையாட்டயர்தற்குப் புகுந்தாளாக, அது தேன் பொருந்திய நறிய குவளையின் மணம் கமழ்ந்து தண்ணிதாயிற்று; ஆகலாற்ருன், இப்போதும் அதனை விரும்புவேனுயினேன் எ. று.

---

1. குறுந். 353. 2. தொல். பொ. 191.

வண்ணம், அழகு ; நிறமுமாம். வாலிழை, முத்துமாலையுமாம். புனலாடலும் விளையாட்டே யாதலின், பண்ணை எனப்பட்டது ; ''கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு[1]'' என்ப. என்றிசின், இறந்தகால முற்றுவினைத் திரிசொல். ''அவற்றுள் இகும் சின்னும் ஏனை யிடத்தொடும், தகுநிலை யுடைய என்மனார் புலவர்[2]'' என்பதனால், சின் படர்க்கைக்கும் அமைவதாயிற்று. கண்நறுங் குவளை எனக்கொண்டு, கண்போலும் நறிய குவளை என்றலுமாம்.

புனலாடிய ஞான்று தலைவியது இழையும் நுதலும் ஒளி திகழ்ந்து பொலிவு சிறந்த காட்சி தலைவன் மனத்தைப் பற்றி நீங்காது விளங்கினமையின் அது குறித்து அவற்றை விதந்து, வாலிழை ஒண்ணுதல் எனச் சிறப்பித்தான். தலைவி பண்ணை பாய்வோள் விரைந்தோடித் தன்னைத்தழுவி மகிழ்வு மிக்கு விளையாடிய காலத்தில், அவள் இடையிள் கிடந்து வண்ணம் சிறக்க அசைந்து சிறந்தமையின், தழையினை வண்ண ஒண்டழை நுடங்க என உள்ளதன் உண்மை கூறித் தலைவன் இன்புற்றான். அக்காலை, புனற்குவளை தலைவியின் கண்ணை நிகர்த்தும், அப் புனலின் தட்பம் அவளது மேனித்தட்பத்தை நிகர்த்தும் முறையே காட்சியின்பமும் ஊற்றின்பமும் பயந்தமையின், குவளை நாறிப் புனல் தண்ணெறிசின் என்றான். அவள் பண்ணை பாயாவழிப் புனல் இன்பம் செய்யா தென்றும், எனவே, இப்போது நிகழும் புனலாட்டிற்கும் அவள் இன்றியமையாள் என்றும் தோழி உட் கொள்ளுமாறு, பண்ணை பாய்ந்தெனக் குவளை கள் நாறியது எனவும், புனல் தண்ணெறிசின் எனவும் பாராட்டினான். மெய்ப் பாடும் பயனு மவை.

இனி, ''தவலரும் சிறப்பின்[3]'' என்னும் சூத்திரவுரையின் கண் பேராசிரியர், ''இஃது உருவுவமப் போலு'' என்றும், தலைவியைப் புலவி நீக்கி அவளொடு புனலாடிய தலைமகனைத் தோழி, நீ புனலாடிய ஞான்று பரத்தை பாய்ந்தாடிய புன

---

1. தொல். சொல். 319. 2. ஷி. ஷி. 275. 3. தொல். பொ. 300.

லெல்லாம் தண்ணென்றது '' எனக் கூறியவழி, தலைவன் இதனைக் கூறினன் என்று கொண்டு, அத் தடம்போல் இவள் உறக் கலங்கித் தெளிந்து தண்ணென்ருள் என்பது கருதி யுணரப் பட்டது '' என்றும், ''அவளொடு புனல் பாய்ந்தாடிய இன்பச் சிறப்புக் கேட்டு நிலையாற்ருள் என்பது கருத்து '' என்றும் கூறுவர்.

வெண்டழை என்பது பாடமாயின், வெள்ளாம்பலால் தொடுக்கப்பட்ட தழை என்று உரைக்க. தண்ணென் குவளை நாறி என்ற பாடத்துக்கு, விகாரத்தால் தொகும் உம்மையை விரித்து, தண்ணெற்ற குவளை நாறியும் புனல் தண்ணிதாகாது அரிவை பண்ணை பாய்தலால் தண்ணிதாயிற்றென உரைக்க. கண்ணூறுங் குவளை என்றும் பாடமுண்டு. (73)

74. விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே
பசும்பொ னவிரிழை பைய நிழற்றக்
கரைசேர் மருத மேறிப்
பண்ணை பாய்வோ டண்ணறுங் கதுப்பே:

இதுவுமது.

உரை: பசிய பொன்ருற் செய்யப்பட்டு விளங்கும் இழைகள் மெல்ல ஒளிவீசக் கரையில் நின்ற மருதமரத்தின் மேலேறிப் பண்ணை யாடிய இவளது குளிர்ந்த நறிய கூந்தல், விசும்பினின்று இழியும் தோகைமயிலின் சீரை ஒத்திருந்தது, காண் எ. று.

தோகை, மயில். சீர், விரியாது குவிந்து படிந்து நீண்டு விளங்கும் கலாவம்; ''மென்சீர்க், கலிமயிற் கலாவத் தன்ன இவள், ஒலிமென் கூந்தல்[1]'' எனவும், தோடுகொள், உருகெழு மஞ்ஞை ஒலிசீர் ஏய்ப்பத் தகரம் மண்ணிய தண்ணறும் முச்சி[2] '' எனவும் சான்ருேர் மகளிர் கூந்தற்கு மயிலின் சீரினை உவமங் கூறியிருத்தல்

---

1. குறுந். 225. 2. அகம். 393.

காண்க. நீண்ட தோகை காற்றில் அசைய' ஒளிவிட்டு இலங்கும் மயில் விசும்பினின்றும் இழிதல் போல, பண்ணை பாய்ந்தவழித் தண்ணறுங் கூந்தல் காற்றில் பறக்கப் பொற்கலம் ஒளிதிகழ மருத மரத்தினின்றும் தலைவி இழிந்தது கூறலின், இது வடிவும் தொழிலும் விரவி வந்த உவமமாம். ''விரவியும் வரூஉம் மரபின என்ப[1]'' என்பது உவமவியல். ''மின்னுநிமிர்ந் தன்ன கனங்குழை இமைப்பப், பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள், வரையிழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி, மிடையூர் பிழியக் கண்டனென்[2]'' எனப் பிற சான்றோர் இக் கருத்தினைக் குறித்தல் காண்க. போன்றிசின், என்ற இடைச்சொல் அடியாகப் பிறந்த முற்றுவினை திரிசொல். பாய்ந்தாள் எனற்பாலது மயங்குமொழிக் கிளவியாய் எதிர்வின்கண் வந்தது; ''இறப்பே எதிர்வே ஆயிரு காலமும், சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி[3]'' என்ப. உயர்சினை மருதத்து உச்சியேறி நீர்நிலைக்குட் குதித்து விளையாடும் மரபினைத் தொடித்தலை விழுத்தண்டினாரும், ''உயர்சினை மருதத் துறை யுறத் தாழ்ந்து, நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக், கரையவர் மருளத் திரையகம் பிதிர, நெடுநீர்க் குட்டத்துத் துடும் எனப் பாய்ந்து[4]'' எனறு கூறியுள்ளார்.

தலைவியைப் புலவிநீக்கி அவளோடு புனலாடக் கருதுகின்றானாகலின் பண்டு களவில் ஒழுகிய ஞான்று அவள் புனலாடியதனை விதந்து கூறிப் புலவிக்கருத்தை நீக்குவான் அவள் கேட்பக் கரைசேர் மருதம் ஏறிப் பண்ணை பாய்வோள் என்றான். எனவே, பண்ணையிற் பிறக்கும் இன்பத்துக்குக் கரைசேர் மருதம் உதவியாயது போல, களவின்கண் தான் துய்த்த இன்பத்துக்கு அவளது விளையாட்டு உபகாரமாயிற்று என்றானும். ஆகவே, இப்பொழுது தான் துய்க்கக் கருதும் இன்பத்துக்கும் புனலாட்டு வேண்டியிருக்குமாறு சுட்டியவாறு காண்க. மருதமேறி பண்ணை பாய்ந்தவிடத்து, அவளது நீண்ட கூந்தற் காற்றிற் பறந்து பேரழகு திகழக் கண்ட காட்சி, தலைவன் மனத்தே நிலைபெற நின்று

1. தொல். பொ. 277. 2. அகம். 158. 3. தொல். சொல். 247.
4. புறம். 243.

நினைக்குந்தோறும் மிக்க இன்பம் பயந்தது குறித்துத் தண்ணறுங் கதுப்பு விசும்பிழித் தோகைச் சீர்போன்றிசின் என்றான். களவுக் காலத்து அவளைக் கூடுந்தோறும், அவளுடைய கூந்தலைத் தானே கைசெய்தும் தன் மனக்கினிய பூச்சூடியும் இன்புற்றானாகலின், அதனால் அதனைத் தண்ணறுங் கதுப்பு எனச் சிறப்பித்தும், நீரால் நனைந்து விட்டுவிட்டு இமைத்தலின் அவள் அணிந்த இழையின் ஒளிவிளக்கத்தைப் பசும்பொன் அவிரிழை பைய நிழற்ற எனவும் கூறினான். மெய்ப்பாடும் பயனும் அவை.

களவுக்காலத்து நிகழ்ந்தன நினைப்பிக்கும் முகத்தால் கற்பினுள் தலைவன் தலைவியின் அழகினைப் புகழ்வது வேட்கை மிகுதியால் அவளது புலவிநீக்கும் குறிப்பிற்றாதலின் அமையும் என்க ''நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியின், புகழ்தகை வரையாற் கற்பினுள்ளே[1]'' என ஆசிரியர் தொல்காப்பியனார் விளங்கக் கூறுமாற்றாலும் இவ்வமைதி துணியப்படும். (74)

75. பலரிவ ணெவ்வாய் மகிழ்ந வதனால்
அலர்தொடங் கின்றா லூரே மலர
தொன்னிலை மருதத்துப் பெருந்துறை
நின்னோ டாடின டண்புன லதுவே.

பரத்தையோடு புனலாடி வந்த தலைமகன் அதனை மறைத்துக் கூறியவழித் தோழி கூறியது.

உரை: மகிழ்ந, மலர்களையுடைய பழைமையான நிலைமைத் தாகிய மருதமரங்கள் செறிந்த பெருந்துறைக்கண் ஒருத்தி நின்னுடன் தண்ணிய புனலாடினளாக, அதனை நீ எம்முன் இசையாது மறைப்பினும் நின்னை ஆங்குக் கண்டோர் இவ்வூரிடத்துப் பலர், காண்; ஆகவே, ஊர் அலர் கூறத் தொடங்கிற்று, இனி நீ மறைப்பதிற் பயன் இல்லை எ. று.

---

1. தொல். பொ. 228.

மகிழ்ந, பெருந்துறைக்கண், ஒருத்தி நின்னெடு தண் புனலாடினள்; நீ ஒவ்வா யாயினும் அதனைக் கண்டோர் பலர்; அதனுல் ஊர் அலர் தொடங்கின்று என இயையும். பலரும் ஏற்கத் தருவது ஒன்றனைக் கூறின், அவர்கள் '' அஃது ஒக்கும், ஒக்கும் '' என்பது போல, ஒத்தல் இசைதல்; '' ஒக்கும் அறிவல் யான் எல்லா விடு[1] '' என்பதுகாண்க. அதனுல் என்பது சுட்டு முதலாகிய காரணக்கிளவி; இஃது, ஈண்டு, கண்டோர் பலர் என்ற காரணத்தைச் சுட்டி நிற்கின்றது. தொடங்கின்று, இறந்தகாலத் தெரிநிலை முற்றுவினை. மலர என்னும் பெயரெச்சக் குறிப்பு மருதம் என்னும் பெயர் கொண்டது. தொன்னிலை, பழைமையான நிலைமை. தொகைநூல்களில் இது பெருகிய வழக்கிற்று. '' நின்னிலைத் தோன்றும் நின் தொன்னிலைச் சிறப்பே[2] '' ''தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணி[3] '' தொன்னிலை நெகிழ்ந்த வளையள்[4] '' எனப் பயில வழங்குமாறு காண்க. ஏற்புடைய சொற்கள் எச்சவகையாற் பெய்துரைக்கப்பட்டன.

'' நீ மருதத்துப்பெருந்துறைக்கண் நின் பரத்தையொடு புனலாடினை யல்லையோ '' என்ற தோழி கூற்றினை '' இல்லை '' எனத் தலைமகன் மறுத்து உடன்படா னுயினமையின், ஒவ்வாய் மகிழ்ந என்றும், '' நீ ஒவ்வா யாயினும், நின்னைப் புனலாட்டிற் கண்டோர், சிலர் அல்லர் '' என்பாள் இவன் பலர் என்றும் தோழி கூறினுள். தொன்னிலை மருதத்துப் பெருந்துறை என மருதத்தையும் துறையினையும் சிறப்பித்தாள், பழைமையில் திரிதலும் கற்புப்பெருமை யில்லாப் பரத்தையரோடு ஆடலும் விலக்கும் குறிப்பினளாகலின். இவ்வாறு, தோழிதலைமகளிலும் உயர்ந்தாள்போலக் கூறுதல் வழுவாயினும், அவன் செய்கையால் தலைவிக்கு உளதாகும் உறுகணைத் தாங்குதல் அவட்குஇயல்பாகலின் அமையும் என்பர்; உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின், உரியதாகும் தோழிகண் ணுரனே[5] ''என ஆசிரியர் அமைக்குமாறு காண்க. '' ஊர: பெரிய நாணிலை மன்ற பொரியெனப், புன்கவிழ்

1. கலி. 112. 2. பரி. 2 : 27. 3. அகம். 45.
4. குறுந். 303. 5. தொல். பொ. 239.

அகன்றுறைப் பொலிய ஒண்ணுதல், நறுமலர்க் காண்வரும் குறும்பல் கூந்தல், மாழை நோக்கின் காழியல் வனமுலே, எஃகுடை எழில்நலத் தொருத்தியோடு நெருநை, வைகுபுனல் அயர்ந்தனே என்ப அதுவே, பொய்புறம் பொதிந்து யாம்கரப்பவும் கையிகந்து, அலராகின்ருல் தானே[1] எனவரும் பரணர் பாட்டினும் தோழி அலர் பொருளாகத் தலைவனைக் கழறிக் கூறுமாறுக் காண்க. இது தோழிபால் தோன்றிய புறஞ்சொல் மாணுக்கிளவி. ஒன்றித் தோன்றும் தோழி மேன[2] என்பதனுல், இம் மெய்ப்பாடு தோழிக்கும் கொள்ளப்படுவ தாயிற்று. ஏனே மெய்பாடு: வெகுளி· பயன்: வாயின் மறுத்தல். (75)

76. பஞ்சாய்க் கூந்தற் பசுமலர்ச் சுணங்கின்
தண்புன லாடித்தன் னலமேம் பட்டனள்
ஒண்டொடி மடவர னின்னே
டந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே.

இதுவுமது.

உரை: தண்டான் கோரை போலும் கூந்தலும் பசிய மலர் போலும் சுணங்கும் ஒள்ளிய தொடியமுடைய மடவரலாவாள், நின்னுடன் தண்ணிய புனலாடி வானத்து மகளிரும் வணங்குதற் குரிய தெய்வம் போன்று தன் நலம் மேம்படலானுள்; ஆகலின், நீ அதனை மறைத்துக் கூறுவதென்னே எ. று.

பஞ்சாய், தண்டான்கோரை. இதனே நாராய்க் கிழித்துக் கண்ணியும் மாலையும் தொடுத்தல் மரபு; ''பஞ்சாய்க்கோரை பல்லிற் சவட்டிப் புணர்நார்ப் பெய்த புனேவின் கண்ணி, ஈருடை யிருந்தலே யாரச்சூடி[3]'' எனச் சான்ருேர் கூறியவாறு காண்க. நீண்ட கூந்தலுடையாளே, இக்காலத்தும் ''கோரைபோல் நீண்ட தலைமயிருடையாள்'' என்று மக்கள் வழங்குவது முண்டு. பசுமலர் என்புழிப் பசுமை புதுமை மேற்று. மடவரல், மடப்பமுடைய பெண். ''மடவர லின்றுணே[4]'' எனப் பிருண்டும் வருமாறு

1. அகம். 116. 2. தொல். பொ. 39. 3. பெரும்பாண். 217–9.
4. ஐங். 328.

காண்க. உம்மையை அந்தரமகளிரும் என மாறுக பரத்தையை அந்தர மகளிர்க்குத் தெய்வம் போன்று என்றது குறிப்புமொழி.

குலமகளிர் தம் கற்புடைமையினுல் அந்தர மகளிரும் வணங்கும் பத்தினி தெய்வமாய் நலம் மேம்பட்டுப் பலரும் அறியத் தக்க விளக்க மெய்துவர்; ''வானுறை மகளிர் நலன் இகல்கொள் ளும், வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பின், ஒடுங்கி ரோதிக் கொடுங்குழை கணவ[1]'' என்பதனுல் குலமகளிர் கற்பால் வானோர் பரவும் நலம் மேம்படுமாறு காண்க. மற்று, நின்மடவரல், நின்னோடு தன்புனலாடிய சிறப்பினுல், பலரும் அறிய நிற்பதொரு விளக்க மெய்தினள்'' என்பாள், அந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்று என்ருள். ''நாணி நின்ருேள் நிலைகண்டு யானும், பேணினெ னல்லனோ, மகிழ்ந, வானத் தணங்கருங் கடவு ளன்னோள் நின் மகன்ரு யாதல் புரைவதாங் கெனவே[2]'' எனப் பிற சான்ருேர் செய்யுளினும், தலைவியால், பரத்தை அந்தர மகளிரின் வைத்து உரைக்கப்பட்டிருத்தல் காண்க. ''பல மகளிரைக் கூடி நலமுண்டு கழிக்கும் நின் மனத்தைப் பிணித்து நீ பிரியாது உடன் வரச்சென்று புனலாடினளாகலின், அவள் ஏனைப் பலரினும் நலம் மேம்பட்டவள் என்பது துணியப்பட்டது'' என்பாள், தண் புனலாடித் தன் நலம் மேம்பட்டனள் என்ருள். வண்டோ ரனைய நின்னைப் பிணித்தலின் நலமிகுதியும், பரத்தையர் பலரும் கண்டு தம் மாட்டாமை நினைந்து இளிவரம் எய்துமாறு நிற்றலின், விளக்க மிகுதியும் உடையளாயினள் என்றவாரும். ''கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக், கிழவோன் குறிப்பினை யுணர்தற்கு முரியள்[3]'' என்பதனுள், ''பரத்தையென்னுது பிறள் என்றதனுல், ...தோழி கூறுங்கால் தலைவியரைக் கூறப்பெருள் என்பதூஉம், பரத்தையரைக் கூறின், அவர்க்கு முதுக்குறைமை கூறிக் கூறுவள் என்பதூஉம் கொள்க'' எனக்கூறி, இதுபோல வரும் தோழி கூற்று அமைக்கப்படும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: ஒருமுகத்தால் வாயில் மறுத்தவாறு.

---

1. பதிற். 14:13–5. 2. அகம். 16. 3. தொல். பொ. 234.

நலம் மேம்பட்டன வெண்டொடி என்றும், பைஞ்சாய்க் கூந்தல் என்றும் பாடமுண்டு பைஞ்சாய், பசியகோரை ; '' பழன, பைஞ்சாய் கொழுதி[1]'' என வருதல் காண்க. (76)

77 அம்ம வாழியோ மகிழ்நநின் மொழிவல்
பேரூ ரலரெழ நீரலைக் கலங்கி
நின்னொடு தண்புன லாடுதும்
எம்மொடு சென்மோ செல்லனின் மனையே.

முன்னொரு ஞான்று தலைவியோடு புனலாடினான் எனக்கேட்டு, ''இவனுடன் இனி ஆடேன்'' என உட்கொண்ட பரத்தைப் ''புதுப்புனல் ஆடப் போதுக'' என்ற தலைமகற்குச் சொல்லியது.

உரை: மகிழ்ந, நினக்கு ஒன்று கூறுவேன், கேட்பாயாக: நீ நின் மனைக்குச் செல்லாது எம்மோடு கூடிப் போதருவாயாயின், யாம் இப்பெரிய ஊர் அலர்கூற நீர் அலைத்தலாற் கலங்கி மகிழ்ச்சி மிகுமாறு தண்ணிய புனலாடுவோம் எ. று.

அம்ம, கேட்பித்தற் பொருட்டாய இடைச்சொல். மொழிவல் என்ற ஒருமை பரத்தைத் தலைவி மேற்று ஆடுதும், எம்மோடு என நின்ற பன்மை, அத் தலைவியையும், அவளது ஆயத்தையும் உளப்படுத்து நின்றது. அலைக்கலங்கி என்பது தொகை நூல்களில் மிகப்பயின்ற வழக்கிற்றாய சொற்றொடர். ''பெயலைக் கலங்கிய மலைப்பூங்கோதை,'' '' பனியலைக் கலங்கிய நெஞ்சம்[2]'' ''வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி,'' ''நோயலைக் கலங்கிய மதனழி பொழிது[3]'' என வருமாறு காண்க. '' நீரலைக் கலைஇய ஈரிதழ்த் தொடையல்,'' நீரலைக் கலைஇய கண்ணி'' ''நீரலைக் கலைஇய கூழை[4] என வேறுவாய்பாட்டினும் வழங்குதலுண்டு. சென்மோ, செல்லல் என்பன எச்சப்பொருளவாய்ச் செல்லின், செல்லாது என நின்றன.

---

1. அகம். 226. 2. அகம். 142, 183. 3.. நற். 143, 94.
4. ஷை 339, 357, 398.

முன்பு தலைவியோடு புனலாடினான் எனக் கேட்டு, ''இவ னுடன் இனி ஆடேன்'' என உட்கொண்டு புலந்திருந்த பரத்தையை அப்புலவி நீக்கித் தன்னோடு புனலாட வேண்டிய தலைமகற்கு உடன்படுவாள், நின்னோடு தண்புன லாடுவதும் என்றும், அது குறித்து அவன் தன்மனைக்கு ஏகாது தம்மோடு போந்து நீராடவேண்டும் என்பாள், எம்மோடு சென்மோ செல்லல் நின் மனையே என்றும் கூறினாள். தனக்குரிய மனைக்கு ஏகாதவாறு தலைவனைத் தகைத்தல் அரிய செயலாதலின், அதனை மொழிவாள் முதற்கண் நின்மொழிவல் என முகம்புகுந்தாள். தான் ஆடற்கு விரும்பும் புனலாட்டு மறைந்த நிகழ்ச்சியாகாது, பலரும் அறிய நிகழ்வதொன்றாகவேண்டும் என்றும், புனலாட்டும் நெடிது ஆடிக் கண் சிவப்புறக் களிக்கவேண்டும்என்றும் குறிப்பாள், பேரூர் அலரெழ எனவும், நீரலைக்கலங்கி எனவும் மொழிந்தாள். இதனாற் பயன், தலைவி கேட்டுப் பொருது புலந்த உள்ளத் தளாவது. செல்லல் நின்மனையே என்றதனாற் பரந்தைபால் பொருளைமச் குறிப்பு மெய்ப்பட்டது.

இது, '' புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும் '' என்ற சூத்திரத்து, '' எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும் '' என்புழி, பண்ணை பொருளாக நிகழும் கூற்றுவகை யாகும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: ஒரு முகத்தாற் புலந்தவாறு. (77)

78. கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையிற் கதழ்புநெறி வந்த
சிறையழி புதுப்புன லாடுகம்
எம்மோடு கொண்மோவெந் தோள்புரை
புணையே.

இதுவுமது.

உரை: மகிழ்ந, நின் மனைக்கட் சென்று நின் மனைவியொடு கூடிப் புனலாடுவதை விடுத்து எம்மொடு கூடிப்போந்து எம் தோளை நிகர்க்கும் புணையைப் பற்றிப் புனலாடுவை யாயின், யாம் ஒளிவீசும் இலையினையுடைய நெடிய வேலும் விரைந்த செலவினையுடைய குதிரையுமுடைய கிள்ளியினது பகைவர்களின்

மதிலே அழிக்கும் யானைபோலத் தன்னெறியே விரைந்து வந்து சிறையை அழிக்கும் புதுப்புனலில் நின்னோடு ஆடுவேம், காண் எ. று.

கிள்ளி, சோழவேந்தற்குரிய பெயர்களுள் ஒன்று. கடுமான் கிள்ளி என்றது சோழவேந்தன் ஒருவனது இயற்பெயராகக் கருதுவாரும் உளர். மதில்கொல் யானை யெனவே, பகைவர் மதில் என்பது பெறப்பட்டது; "நுதிமுக மழுங்க மண்டி ஒன்னார், கடிமதில் பாயும்நின் களிறு அடங்களவே[1]" என்பதனாலும் அறிக. கதழ்பு, விரைவுப் பொருட்டாய உரிச்சொல்லின் அடியாகப் பிறந்த வினையெச்சம்; "கதழ்வும் துனைவும் விரைவின் பொருள[2]" என ஆசிரியர் கூறுவர். மதில்கொல் யானையின் சிறையழி புதுப்புனல், நெறிவந்த புதுப்புனல் என இயைக்க நெறி வருதலாவது, கரை கடந்து சென்று தீங்கு செய்யாது, வேண்டுமிடங்களிற் சென்று பாய்ந்து வருவது; "வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது .... புதுநாற்றஞ் செய்கின்றே செம்பூம் புனல்[3]" எனவரும் பரிபாடல் காண்க. இனி, நெறிவந்த சிறையழி புதுபுனல் என்பதற்கு நெறியிடை அகப்பட்ட பொருள்களைக் கொணர்ந்து எற்றிச்சிறையை அழிக்கும் புதுப்புனல் எனினுமாம். "மைபடு சிலம்பிற் கறியொடும் சாந்தொடும், நெய்குடை தயிரின் நுரையொடும் பிறவொடும், எவ்வயினானும் மீதுமீ தழியும்[4] எனச் சான்றோர் கூறுப. சிறை, அணை. ஆடுகம் என்புழி, அம்மீறு ககரவொற்றுப் பெற்று முடிந்தது, புணை, வேழத்தாற் செய்த தெப்பம்; வேழவெண்புணை," "கொழுங்கோல் வேழத்துப் புணை[5] என வருதல் காண்க.

தலைமகன் பண்டு தலைவியுடன் புனலாடினான் என்பது கேட்டுப் பொருது புலக்கின்றா ளாகலின், அது தோன்ற எம்மொடு கொண்மோ என்றும், தலைமகளோடு ஆடியபுணை அவளுடைய தோள் போறலின், அதனை விடுத்துத் தன் தோள் போலும் பிறிதொரு புணை கொள்க என்பாள், எம்தோள் புரை புணை

---

1. புறம். 31. 2. தொல். சொல். 315. 3. பரி. 7, 19–22.
4. ஷ. 16. 5. அகம். 6, 186.

என்றும் கூறினள். இவ்வாறு, பொருமையால், ''இனி, இவனுடன் புனல் ஆடேன்'' எனப் பரத்தை தன்னுட் கொண் டிருந்த குறிப்பு நன்கு வெளிப்பட, புதுபுன லாடுகம் என்ருள் எம்மோடு கொண்மோ எம்தோள் புரை புணேயே என்பது மெய்ப் பாட்டியலுள் ஆகாதென விலக்கிய நிம்பிரி யாயினும், பரத்தையின் காதற் கருத்தைச் சிறப்பித்தலின் அமையுமென்க; சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு, அனை நால் வகையும் சிறப்பொடு வருமே[1]'' என ஆசிரியர் விதிக்குமா றறிக. இது சிறுபான்மை பரத்தைக்கும் எய்தப்பெறும்; அவளும் தலேவனெடு ஊடியும் உணர்ந்தும் உரைத்தற் குரிய ளாகலின். பிருண்டும் இதுபோல் வன அறிந்து கூறிக்கொள்க.

பகைவர் தமக்கு அரணுக அமைத்த மதிலேக் கிள்ளியின் யானே அழித்தாற்போல, உயிர்களின் நலப்பேற்றுக்கு அரணுக அமைந்த சிறையினேப் புகுப்புனல் அழிக்கும் என்றதனுல், எங்கள் இன்பப் பேற்றுக்கு அரணுக அமைந்த நின் கூட்டத்தை நீ தலேவியுடன் ஆடும் புனலாட்டு அழிக்கும் எனருளாம். ஆகவே, இஃது உவமையும் பொருளுமாய் நின்று கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்தலின், திணேயுணர்வகையில் ஏனேயுவம மெனத்தள்ளப் படா தாயிற்று, ''உள்ளுறை யுவமம் ஏனே யுவமமெனத், தள்ளா தாகும் திணேயுணர் வகையே[2] என ஆசிரியர் கூறுவர். ''கிழவோற் காயின் உரனெடு கிளக்கும், ஏனேர்க் கெல்லாம் இடம்வரை வின்றே[3] என்பவாகலின், பரத்தைபால் இஃது அமைவதாயிற்று

இனி, நச்சினுர்க்கினியர், ''இது, காமக்கிழத்தி நின் மனேவியோ டன்றி எம்மோடு புணேகொள்ளின் யாம் ஆடுதும் என்று புனலாட்டிற்கு இயைந்தாள் போல மறுத்தது'' என்பர். மெய்ப்பாடும் பயனும் அவை.

கதிமான் என்றும் கதவுநெரி தந்த என்றும் பாட வேறுபாடு உண்டு. (78)

---

1. தொல். பொ. 245. 2. ஷி ஷி. 46. 3. ஷி ஷி 302.

79. புதுப்புன லாடி யமர்த்த கண்ணள்
யார்மக ளிவளெனப் பற்றிய மகிழ்ந
யார்மக ளாயினு மறியாய்
நீயார் மகனையெம் பற்றி யோயே.

தன்ெனுடு கூடாது தனித்துப் புனலாடுகின்ருன் எனக் கேட்டுத் தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை தானும் தனியே போய்ப் புனலாடினளாக, அவளை ஊடல் தீர்த்தற் பொருட்டாகத் தலைமகன் சென்று தான் அறியான் போல நகையாடிக் கூறிக் கைப்பற்றியவழி அவள் தோழி சொல்லியது.

உரை: புதுப்புனலாடிச் சிவந்த கண்ணை யுடையளாகிய இவள் யாவர் மகள் எனச் சொல்லிக் கைப்பற்றிய மகிழ்ந, இவள் யாவர் மகளாயினும் அறியாமலே எம் கையைப் பற்றினையாகலின் நீ யாவர் மகன், அதனை முன்பு கூறுக எ. று.

அமர்த்தல், ஈண்டுச் சிவத்தல்; நீரில் நெடிதாடிய வழிக்கண் சிவக்கும்; ''நீர் நீராடிற் கண்ணும் சிவக்கும்[1]'' என்ப. சொல்லி என்பது சொல்லெச்சம். ஆயினும் என்றது, இவள் நின்னல் நன்கு அறியப்பட்டவள் என்பது எய்துவித்தது. தோழி எம் பற்றியோய் என்றது, "தாயத்தினடையா வீயச் செல்லா, வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா, எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம், அல்லா வாயினும் புல்லுவ வுளவே[2]'' என்பதனல் அமையும். மகனை என்புழி ஐகாரம் சாரியை.

தான் அவளோடு கூடிப் புனலாடாது தனித்தாடினனாக, அது கண்டு பொருது தனித்தாடி அவன் தலைப்பெயருமளவும் அப்புனலேயே நெது இருந்தாளாகலின், புதுப்புனலாடி அமர்த்த கண்ணள் என்றும், அவள் பார்வை தானும் அவள் மனத்து நிகழ்ந்த புலவிக்குறிப்பை இனிது புலப்படுத்தி அயன்மை தோன்ற நின்றமையின் யார் மகள் இவள் என்றும் கூறி அப்புலவி தீருமாறு கைப்பற்றினனயிற்று.

---

1. குறுந். 354. 2. தொல். பொ. 221.

மெய்யே அறியானுயின், யார் மகள் இவள் என வினவிக் கொண்டே, அவனைக் கைப்பற்ருனுகலின், ஈண்டை வினு, அறிந்து வைத்தும் அறியான்போல வினவியதாம். ஆகவே, இதனுற் பயன்பரத்தை புலவிதீர்வாளாவது. மற்று, அஃது அங்ஙனமாகாது மிகுதல் கண்டு, அது தீருமாறு கைப்பற்றினுன் என்பது தோன்றத் தோழி, பற்றிய மகிழ்ந என்ருள். தலைநின் ருெழுகும் பரத்தையை அறியான்போலத் தலைவன் மக்களினத் தன்றித் தேவ மகள்போல நலஞ்சிறந்து விளங்கும் இவள் என்னும் கருத்துப்பட யார் மகள் இவள் என்ருனுக, இவள் நின் பெண்டே'' எனினும் அதனை மறந்து தனித்துப் போய்ப் புனலாடினை யாதலின் இப்போது இன்னள் என எடுத்துக் கூறினும் நீ அறியாய் என்பாள் யார் மகளாயினும் அறியாய் என்றும், அறியாய் போல வினவுவதும், அறியுமுன்பே அறிந்தாய் போலக் கைப்பற்றுவதும் செய்தலின் நின்னை நன்கு அறிய விரும்பு கின்றேமென்பாள், நீ யார் மகனை எம் பற்றியோயே என்றும் கூறினுள். மெய்ப்பாடு. வெகுளி. பயன்: வாயில் மறுத்தல். (79)

80. புலக்குவே மல்லேம் பொய்யா துரைமோ
நலத்தகை மகளிர்க்குத் தோட்டுணை யாகித்
தலைப் பெயர் செம்புன லாடித்
தவநனி சிவந்தன மகிழ்நநின் கண்ணே.

தன்னை யொழியப் புதுப்புனலாடித் தாழ்த்து வந்த தலைமகனேடு தலைமகள் புலந்து சொல்லியது.

உரை: மகிழ்ந, நற்குணங்களால் தகுதி யுடையராய மகளிர்குத் தோட்டுணையாகி, முதற்பெயலாகிய மழையால் பெருக் குற்று வந்த புதுப்புனல் ஆடினமையால் நின்கண்கள் மிகச் சிவந்தன; அஃது உண்மையன்ருே, கூறுக; அதுபற்றி யாம் புலப்பேமல்லேம்; நீ பொய்யாது உரைப்பாயாக எ. று.

நலத்தகை மகளிர் என்றது பரத்தையரை. புனலாடு மகளிர் புணைபோலப்பற்றி நீராடுதற்குரிய துணைமை நல்குதல் நோக்கி அவன் கூட்டத்தைக் தோட்டுணை என்ருர். வேனிள் பருவத்துப்

பெய்யும் மழை ஆண்டின் முதன்மழை யாதலின் தலைப்பெயல் எனப்பட்டது. அதனுற் பெருகி வரும் புனல் தெளிவின்றிக் கலங்கி வருதல் பற்றிச் செம்புனல் என்ருர். ஆடி யென்னும் செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. தவநனி என்னும் உரிச் சொற்கள், ''பலசொல் ஒரு பொருட் குரிமை தோன்றினும்[1]'' என்பதனுல் மிகுதிப்பொருட்கு உரிமைபெற்று வந்தது.

தன் கண் சிவந்திருத்தல் தலைமகள் புலத்தற்கு ஏதுவாம் என்று கருதித் தலைவன் தாழ்த்து வந்தானுயினும், அதனை உணர்ந்த அவள், அவன் மறைப்பான் என உட்கொண்டு, புலக்குவேம் அல்லேம் பொய்யாது உரைமோ என்றும், தான் புலவாமை தோன்றப் பரத்தையைப் பாராட்டி, நலத்தகை மகளிர்க்கு என்றும், அவரோடு புனலாடியதனைத் தான் அறிந்தமை எய்தத் தோட்டுணையாகி என்றும் கூறினுள்.

புதுப்புனல் எய்துங்கால் காதலனுடன் கூடியாடுதற்கு இக் கற்புக் காலத்தேயன்றிக் கழிந்த களவுக் காலத்தும் விருப்பம் மிகவுடையளா யிருந்தமையின், அது தோன்றத் தலைப்பெயற் செம்புனல் எனச்சிறப்பித்தாள். களவுக்காலத்தில், ''காந்தளஞ் சிறுகுடிக் கௌவை பேணுது, அரிமதர் மழைக்கண் சிவப்ப நாளைப், பெருமலை நாடன் மார்பு புணையாக, ஆடுகம் வம்மோ காதலந் தோழி .... கொடிபட மின்னிப் பாயின்ருல் மழையே[2]'' எனத் தலைவி கூறுதல் காண்க. பரத்தையரோடு புனலாடிய நிகழ்ச்சியை நீ மறைக்கினும் நின் கண்கள் மறையாவாய்ச் சிவந்து தோன்றி யான் அறியக் காட்டி விட்டன என்றற்குத் தவநனி சிவந்தன மகிழ்ந நின் கண்ணே என்ருள். ''நீர் நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்[3]'' என்பர் சான்ரோர்.

மெய்ப்பாடு: வெகுளி. பயன் : புலத்தல். (80)

---

1. தொல். சொல். 297. 2. அகம். 312. 3. குறுந். 354.

9

புலவி விராய பத்து

இதன்கண் வரும் பாட்டுக்கள் பத்தும், தலைவியும் தோழியும் பரத்தையும் புலந்து கூறுவனவும் வாயின் மறுத்துக் கூறுவனவும், பிறவுமாய் விரவிவருதலின், இஃது இப்பெயரினைப் பெறுவதாயிற்று.

81. குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை
அருப்பறை வினைஞ ரல்குமிசைக் கூட்டும்
மலரணி வாயிற் பொய்கை யூரநீ
என்னை நயந்தனெ னென்றிநின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே.

தன்னைக் கொடுமை கூறினாள் தலைமகள் என்பது கேட்ட பரத்தை, தலைமகன் வந்து தன்மேல் அன்புடைமை கூறினானாக, அவட்குப், பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

ப. உரை: குருகுடைத் துண்ட யாமை மிச்சிலை வினைஞர் உணவிற்கூட்டும் ஊர எனவே, நாங்கள் நுகர்ந்து கழித்த மார்பை நுகர்வாள் என்று தலைமகளைப் பழித்தவாறும்.

உரை : குருகுகள் உடைத்து உண்டு கழித்த வெள்ளிய வயிற்றினையுடைய யாமை யிறைச்சியினை, அரிப்பறையை முழக்குதலையுடைய உழவர் தமது மிக்கவுணவோடு கூட்டி யுண்ணும் மலரால் அழகுற்ற துறையினையுடைய ஊரனே, நீ என்னை விரும்பினேன் என்று கூறுகின்றனை; மற்று, இதனை நின் மனைவி கேட்பின் பொருது மிகவும் வருந்துவள், காண் எ. று.

குருகு, கொக்கு, நாரை முதலிய புள்ளினங்கள். அகடு, வயிறு. அரிப்பறை, அரித்த ஓசையினையுடைய பறை. நெல் லரியும் உழவர் வயற்கண் விளைந்த நெல்லை அறுக்கப் புகுமுன் அவ்வயலிற் கூடமைத்து வாழும் புள்ளினங்கள் முன்னறிந்து ஏதமின்றி நீங்குவது குறித்து இப் பறையோசையை எழுப்புவது பண்டைத்தமிழர் மரபு. ''கழிசூற்றிய விளைகழனி, அரிப்பறையாற் புள்ளோப்புந்து[1]'' என மாங்குடிகிழாரும், ''வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப் பழனப் பல்புள் இரிய[2]'' எனப் பரணரும் கூறுமாறு காண்க. அல்குமிசை, மிக்க உணவு; ''அரிலிவர் புற்றத்து அல்கிரை நசைஇ[3]'' என வருமாற்ருல் உணர்க. இனி, ''சில நாளைக்கு இட்டுவைத்துண்ணும் உணவு'' என்பர் புற நானூற்றுப் பழைய வுரைகாரர். பிற உயிர்கள் உண்டு கழித்த மிச்சிலை மக்கள் உண்ணும் முறை, ''ஓய்பசிச் செந்நாய் உயங்கு மரை தொலைச்சி, ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய்நாட்டு, அருஞ் சுரம் செல்வோர்க்கு வல்சியாகும்[4]'' என வருதலாலும் தெளிவுப் படும். பொய்கைக்குத் துறை வாயில் போறலின், வாயில் என்ருர். என்றி, றகரம் ஊர்ந்த முன்னிலை நிகழ்கால முற்று வினை.

தலைமகள் தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்டுப் புலந்த பரத்தை அப் புலவி தீருமாறு தலைவன் தான் அவளை இன்றியமையாமை கூறினுனாக, அதனை மேற்கொண்ட அப் பரத்தை, என்னை நயந்தனென் என்றி என அவன் கூறிய அதனையே கொண்டெடுத்து மொழிந்தாள். தலைவன் இவ்வாறு

1. புறம். 396 2. நற். 350. 3. அகம். 257.
4. நற். 43.

கூறியதனால் பெருமகிழ்வு கொண்டவள் தலைவி கேட்டுப் பொருது வருந்தவேண்டும் என்ற கருத்தினால் நின் மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே என்றாள். ''கொடுமை யொழுக்கம் கோடல் வேண்டி, அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காதல் எங்கையர் காணின் நன்று'' எனத் தலைவன் பரத்தமை கூறித் தலைவி புலந் தாளாக, அது தன்னைப் புறனுரைத்ததாகக் கொண்டு பரத்தை அத் தலைவியை இகழ்வதாகிய குறிப்புத் தோன்ற வருதலின், இது, ''புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்[1]'' என்ற சூத்திரத்து, ''இல்லோர் செய்வினை இகழ்ச்சிக்கண்'' நிகழும் கூற்றுவகையாகும்.

குருகுகள் உடைத்து உண்டு கழித்த யாமைமிச்சிலை வினைஞர் தம் உணவிற் கூட்டி உண்பர் என்றது, நாங்கள் நுகர்ந்து கழித்த நின் மார்பினை நுகர்வாள் நின் மனையோள் என உள்ளூறுத்து உரைத்தவாறு. மெய்ப்பாடு: பெருமிதம், பயன்: தலைவியை இகழ்தல்.

இனி, வினைஞர் நல்குமிசை என்ற பாடம், பிறர்க்கு நல்கி யுண்ணும் உணவு எ. று. பாத்தூண் வாழ்க்கை எல்லா மக்கட்கும் பொதுவாகலின் இவ்வாறு கூறினர் என்க. ஆகவே, நின் மார்பு தனக்கேயன்றி எமக்கும் உரித்தாதலை அறியாது புலக்கின்றாள் நின்மனையோள் எனப் பரத்தை கூறினளாம். (81)

82. வெகுண்டன ளென்ப பாணநின் றலைமகள்
மகிழ்நன் மார்பி னவிழிணர் நறுந்தார்த்
தாதுண் பறவை வந்தெம்
போதார் கூந்த லிருந்தன வெனவே.

மனைவயிற் புகுந்த பாணற்குத் தலைமகன் கேட்குமாற்றால் தலைமகள் சொல்லியது.

---

1. தொல். பொ. 151.

ப. உரை: இதுவும் பொருதவள் நீ ஈண்டு வருதல் பொருள், கடிதிற் செல்க என்பதாம்.

உரை: பாண, மகிழ்நனது மார்பின்கண் உள்ள முறுக்கு அவிழ்ந்த பூங்கொத்துக்களால் தொடுக்கப்பட்ட நறிய மாலையில் தேனை யுண்ட வண்டினம்; போந்து எமது மலரணி கூந்தலில் தங்கின என்று அவட்குப் பாங்காயினுர் கூறக் கேட்டலும் நின் தலைவியாகிய பரத்தை வெகுண்டனள் என்று பலருங் கூருநின்றனர் இதுவும் பொருதாள், நீ ஈண்டு வருதலை அறியின் இறப்பவும் வெகுளுவள், ஆகலின், கடிதிற் செல்வாயாக எ. று.

மலரரும்பு பிணித்து முறுக்கியது போறலின், மலர்ந்தவழி அதனை முறுக்கு அவிழ்ந்த வாய்பாட்டால் அவிழிணர் என்றுர்; "பைங்கார் கொன்றை மென்பிணி அவிழ[1]" எனச் சான்ருேர் வழங்குமாறு காண்க. தாதுண்பறவை, வண்டினம்; "தாதுண் பறவை பேதுறல் அஞ்சி[2]" என்ப. ஏனைப் புள்ளினங்களிலும் தேன் உண்பன உளவாயினும், தாதுண் பறவை யென்பது வண்டினத்தையே குறிப்பது, பன்மைபற்றிய வழக்கு என அறிக. தேன் தேடி உண்ணும் புள் தேன்சிட்டு[3] என வழங்கும். தலைவியது இல்லின்கண் நிகழ்ந்தது உணர்ந்து பரத்தையர்க்குக் கூறுவோர் அவட்குப் பாங்காயினுரே யாகலின், அது வருவித்து உரைக்கப் பட்டது; "சான்ருேன் எனக் கேட்டதாய்[4]" என்பதற்குப் பரிமேலழகர் கூறிய உரை காண்க. நின் தலைமகள் என்றது பரத்தையை இழித்தற் குறிப்பிற்ருய உயர்சொற்கிளவி. இதுவும் பொருதாள் என்பது முதலாயின எஞ்சி நின்றன.

மகிழ் செய்யும் தேனை யுண்ணும் வண்டின மாகலின், தலைவன் தாரிலுள்ள தேனை உண்டதனேடு அமையாது, எம் கூந்தற் போது களிலுள்ள தேனை விரும்பி வந்திருந்தன என்பாள் தாதுண் பறவை என்றும், எம் போதார் கூந்தல் என்றும் கூறினுள். தலைமகன் தாரினை அவிழிணர் நறுந்தார் என்றும், தன் கூந்தலைப் போதார்

---

1. அகம். 4. 2. அகம். 4. 3. Sun bird.
4. குறள். 69.

கூந்தல் என்றும் சிறப்பித்ததனுல், தலைவன் தாவிற் பூக்கள் மலர்ந்து தேன்கமழ இருந்தமையும், தன் கூந்தலிற் பூக்கள் மலரும் செவ்வியவாய் இருந்தமையும் சுட்டினுள். இதனுற் பயன், மயக்க மிகுதியால் இவ்வேற்றுமை காணமாட்டாத வண்டின் செய்கையைப் பொருளாகக் கொண்டு வெகுளுதல் நன்றன்று எனப் பரத்தையைப் பழித்தவாறு; ''தாதுண் வேட்கையிற் போது தெரிந்து ஊதா வண்டு[1]'' எனச் சான்ருேர் வண்டின் இயல்பு விளங்கக் கூறியவாறு அறிக.

தலைவன் தாரினது மலர்த்தேனை உண்ட வண்டு, தலைவி கூந்தலில் அணிந்த போதுகள் மலரும் செவ்வி நோக்கி இருந்தன எனத் தனக்குப் பாங்காயினர் சொல்லக் கேட்ட பரத்தை தன்பால் இன்பம் நுகர்ந்த தலைவன் தன் மனையகம் புக்குத் தலைவி புலவி நீங்கும் செவ்வி நோக்கியிருந்தான் என உட்கொண்டு வெகுண்டாளாக, அதனை உணர்ந்த தலைவி பொருது அவளைப் பழித்தும் பாணனை மறுத்தும் நிகழ்ந்தவாறு கூறி வெகுண்டனள் என்றும், அதனைப் பலரும் கூருநிற்பர் என்றற்கு என்ப என்றும் எடுத்து மொழிந்தாள். பொய்யுரை மொழியும் இயல்பினனுகிய பாணன் தான் கூறுவதனையும் அவ்வாறே கொள்வன் என்னும் கருத்தால் தன் கூற்றின் வாய்மை பிறங்க, என்ப எனப் பிறர்மேல் வைத்து மொழிகின்ருள், என்க. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின் மறுத்தல்.

இஃது, ''அவனறிவு ஆற்ற அறியுமாகலின்[2]'' என்ற சூத்திரத்து, ''வாயிலின் வருஉம் வகை'' என்பதனுள் அடங்கும். (82)

83. மணந்தனை யருளா யாயினும் பைபயத்
தணந்தனை யாகி யுய்ம்மோ நும்மூர்
ஒண்டொடி முன்கை யாயமுந்
தண்டுறை யூரன் பெண்டெனப் படற்கே.

1. நற். 25. 2. தொல். பொ. 147.

வரைந்த அணிமைக்கண்ணே தலைமகற்குப் புறத்தொழுக்கம் உண்டாகியவழி அதனை அறிந்த தலைவி அவனோடு புலந்து சொல்லியது.

உரை : ஊர, எம்மை மணந்துகொண்ட நீ எமக்கு நின்னுடைய அருளை நெடிது செய்யாதொழியினும், நுமது ஊரிலுள்ள ஒள்ளிய தொடியணிந்த முன்கையினையுடைய பரத்தையர் பலரும் தண்டுறை யூரனுகிய நினக்குப் பெண்டு எனக் கூறப்படும் சிறப்புப் பெறுமாறு மெல்ல மெல்ல நீங்கி ஒழுகுவாயாக எ. று.

அருளுதல், தலையளித்தல். பைய பைய என்ற அடுக்குப் பைபய என மரூஉ வாயிற்று ; மெல்லமெல்ல என்பது பொருள் ; "படரும் பைபயப் பெயரும்[1]" என்ப. உய்தல், ஈண்டு ஒழுகுதன் மேற்று. தண்டுறையூரன் பெண்டு, தண்ணிய துறையினையுடைய ஊரற்குரிய காமக் கிழத்தியர் ; இது "கூற்று அவண் இன்மையின் யாப்புறத் தோன்றிய" கொண்டுகூற்று. தலைவனைக் கூடி விளையாடி இன்புறும் இயைபுப்பற்றிப் பரத்தையரைத் தலைமகற்கு ஆயம் என்றார். எனப்படற்கு என்பது, "உருபேற்று நின்ற தொழிற்பெயரோடு ஒப்புமை யுடையதாயினும், உருபும் பெயரும் ஒன்றாகாது, பகுப்பப் பிளவுபட்டு இசையாது ஒன்றுபட்டிசைத்தலால்[2]" அதனின் வேறாகிய செயற்கென்னும் வினையெச்சமாய்த் தணந்தனையாகி என்பதனோடு முடிந்தது.

வரைந்த அணிமைக்கண்ணே தலைவன்பால் புறத்தொழுக்கம் உண்டாயினமை அறிந்துகொண்ட தலைவி, மணந்தனை அருளாய் என்றும், பிரிவின்றி எம்மோடு உடன் உறைந்து அருளாயாயினும், நீநெடிது பிரிந்துறையின் நினது காட்சியின்பமும் பெறல் இன்றி வருத்தம்மிக்கு உறைவது எனக்கு இன்றாதாகலின், மெல்ல மெல்லப் பிரிந்துறைவதை வேண்டுகின்றேன் என்பாள், பைபயத் தணந்தனையாகி உய்ம்மோ என்றும் கூறினாள் ; "துனிதீர் கூட்டமொடு துன்னா ராயினும், இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல்[3]"

---

1. குறுந். 215. 2. சொல். 40 உரை. 3. நற். 216.

எனப் பிறரும் கூறுமாற்றல் அறிக. தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தமையும் சுட்டி நும்மூர் என்றாள் மணந்தவரைப் பிரிவின்றிக் கூடியிருந்து மகிழாது நாளும் பலப்பல மகளிரைக் கூடுவது, அப் பலரும் நின்பெண்டிர் எனப்படுவது ஒன்றையே கருதியதென்பது நின் ஒழுக்கத்தாள் விளங்கிற்றென்பாள், தண்டுறையூரன் பெண்டு எனப்படற்கு என்றாளாம். ஆயமும் என்ற எச்ச உம்மை, நின் பெண்டு எனப்படுமாறு என்னை மணந்ததேயன்றி, ஒண்டொடி முன்கை ஆயத்தையும் அவ்வண்ணமே செய்து ஒழுகுகின்றாய் என்பது எய்துவித்தது. பரத்தையரை ஒண்டொடி முன்கை ஆயம் எனச் சிறப்பித்ததனால், அவர்கள் பெண்ணியல் பொன்றையே யுடையராவரன்றி, எம்போல் நன்றி சான்ற கற்புடையராதல் இலர் என்றாளாம்.

இஃது "அவனறிவு ஆற்ற அறியுமாகலின்[1]" என்ற சூத்திரத்து, "செல்லாக் காலைச் செல்கென" விடுத்தற்கண் தலைவி நிகழ்த்தும் கூற்றுவகையாகும். மெய்ப்பாடு: வெகுளி. பயன்: புலத்தல்.

பைய என்றும் பாடம் உண்டு. (83)

84. செவியிற் கேட்பினும் சொல்லிறந்து
வெகுள்வோள்
கண்ணிற் காணி னென்னா குவள்கொள்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந் துண்ணு நின் பரத்தை மார்பே.

பரத்தையர் மனைக்கண் தங்கிப் புணர்ச்சிக் குறியோடு வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

உரை: மகிழ்ந, நறிய பூக்கள் அணிந்த கூந்தலையுடைய மகளிர் படிந்தாடும் தைஇத் தண்கயம் போலப் பலர் முயங்கி இன்பம் நுகரும் நின்மார்பினைச் சிறப்பித்துப் பிறர் கூறத் தன்

1. தொல். பொ. 147.

செவியிற் கேட்பினும் சொல்லரிய சினங்கொள்ளும் இவள், பரத்தை செய்த குறியொடு தோன்றும் அதனைத் தன் கண்களாலேயே காண்பாளாயின் என்னுவளோ, அறியேன் எ. று.

சொல்லிறந்து வெகுளலாவது சொல்லாடற்கியலாச்சினம் மிகுதல்; சொல்லாடுதற்கு நாவெழாத அத்துணை அளவிறந்த சினம் கொள்ளுதல். ஐம்பால், கூந்தல்; ஐவகை ஒப்பனை உடைமை பற்றி இது பெயராயிற்று. அவை, முடி கொண்டை குழல் பனிச்சை சுருள் என வரும். "நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன, ஐவகை பாராட்டினுய் மற்று எம் கூந்தற், செய்வினை பாராட்டினையோ ஐய[1]" என்றும் "ஐம்பால் வகுத்த கூந்தல்[2]" என்றும் வருவன காண்க. தைஇத் தண்கயம், தைத்திங்களில் மகளிராடும் தண்ணிய குளம்; தெளிந்த நீர் தண்ணிதாகலின் தெளிவும் கொள்க. கார்காலத்துப் பெருமழைபால் நீர் பெருகிக் கலக்க முற்ற கயம், தைத்திங்களில் நன்கு தெளிந்து தண்ணிதாதலால், தெண்ணீர்க் கயமென்னது, தைஇந் தண்கயம் என்ருர். "தை இத்திங்கள் தண்கயம் போலக், கொளக்குறை படாக் கூழுடை வியனகர்[3]" எனப் பிறரும் கூறுதல் காண்க. "உண்டற்குரிய அல்லாப்பொருளை, உண்டன போலக் கூறலும் மரபே[4]" என்பதனுல் முயங்கிப்பெறும் இன்ப நுகர்ச்சியை, உண்ணும் என்ருர். பரத்தை மார்பு, பரத்தை செய்த குறி கிடந்து விளங்கும் மார்பு. மார்பு செவியிற் கேட்பினும் வெகுள்வோள், கண்ணிற் காணின் என்னுகுவள்கொல் என இயையும்.

மகளிராடும் தண்கயம், அவரணிந்த கோதையும் குங்குமச் சாந்தும் நெய்யும் விரவித் தோன்றுதல்போல, நின் மார்பும் பரத்தையின் முயக்கத்தால் சாடிய சாந்தும் வாடிய கோதையும் உடைத்தாய்த் தோன்றுகின்றது என்பாள், நின் பரத்தை மார்பே என்ருர்; "குவவுமுலை சாடிய சாந்தினை, வாடிய கோதையை[5]" என வருதல் காண்க. இளையரும் முதியரும் எனப் பலரும் ஆடும்

1. கலி. 22. 2. நற். 160. 3. புறம். 70.
4. தொல். பொ. 213. 5. நற். 350.

கயம்போல, நின்னைக் கூடும் பரத்தையரும் அவ்வகைப்பட்ட பலர் என்றற்குத் தண்கயம் போலப் பலர் படிந்துண்ணும் மார்பு என்ருள்; '' வண்கயம் போலும் நின் மார்பு[1]'' என்று பிற சான்ரோரும் கூறினர். தைத்திங்களில் இள மகளிர் நீராடி நோற்பது மரபாகலின், தைஇத் தண்கயம் எனச் சிறப்பித்தாள்; '' இழையணி யாயமொடு தகுநாண் தடைஇத் தைஇத் தண்கயம் படியும் பெருந்தோட் குறுமகள்[2]'' '' தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்[3]'' '' தையில்நீ ராடிய தவம்[4]'' என வருமாறு காண்க.

நின் மார்பின் சிறப்பினைப் பிறர் புகழ்ந்து கூறக் கேட்ட துணையானே பொருது கழிசினங்கொண்டு சொல்லாட இயலாது கையற்று நிற்பவள், சாடிய சாந்தும் வாடிய கோதையும் கொண்டு தோன்றும் நின் மார்பினைக் காணின் உயிர்வாழாள் என்பாள் என்னுகுவள் கொல் எனத் தோழி கூறினாள். செவியில், கண்ணில் என நின்ற விதப்புமொழிகள், முறையே கேட்டல் காண்டல் முதலிய செயல் வகைகளில் அவள் எய்தும் மனவேறுபாட்டின் கடுமை உணர்த்தி நின்றன. மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயில் மறுத்தல்.

பரந்த மார்பே என்றும் பாடமுண்டு. (84)

85. வெண்ணுதற் கம்பு ளரிக்குரற் பேடை
தண்ணறும் பழனத்துக் கிளையோ டாலும்
மறுவில் யாணர் மலிகே ழூரநீ
சிறுவரி னினைய செய்தி
நகாரோ பெருமநிற் கண்டிசி னோரே.

தலைமகன் பரத்தையர்மேல் காதல் கூர்ந்து நெடித்துச்[5] செல்வழி மனையகம் புகுந்தானாகத் தலைவி கூறியது.

---

1. திணை. நூற். 142. 2. நற். 80. 3. பரி. 11: 91.
4. கலி 59. 5. நெடித்து—தாமதித்து, சீவக. 2147. உரை காண்க.

ப. உரை : கம்புட்பேடை சேவலொழியக் கிளையுடனே ஆலும் ஊர என்றது, கிளையுடனே வாழ்கின்ற எமக்கு நின்னின் நீங்கிய மெலிவு உளதாகக் கூறுகின்றேமல்லேம், நின் குலத்தொழுக் கத்துக்குத் தகாது எனக் கழறியதாம். "தாய்போற் கழறித் தழீஇக் கோடல், ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப[1]" என்றதூஉம் இத் திறன்நோக்கி எனக் கொள்க என்பது.

உரை : வெள்ளிய தலையினையுடைய கம்புட்கோழியின் அரித்த குரலையுடைய பேடை குளிர்ந்த நறுவிய பழனங்கலிலுள்ள ஏனைப் புள்ளினங்களோடு ஆலும் குற்றமில்லாத புதுவருவாய் மிக்க ஊரனே, நீ சிறுவர்களைப் போலப் பின்னிருந்து வருந்தத்தகுவன வாய இவற்றைச் செய்கின்றா யாகலின், பெரும, நின்னைக் கண்டோர் இச் செயல்பற்றி நகுதலைச் செய்யாரோ? கூறுக எ. று.

கம்புட்கோழியின் தலை வெண்ணிறமுடையதாகலின் வெண் ணுதற் கம்புள் என்றார்; வெண்டலைக் கம்புள் என்றும் பாடமுண்டு. அரிக்குரல், அரித்த ஓசையினையுடைய குரல்; இஃது "அரிக்குரல்[2]" என்று பாடமும் "அரிந்த குரல்" என உரையும் கூறப்படுவது முண்டு. மறுவில்யாணர், குற்றமில்லாத புதுவருவாய்; குற்றமா வது, நாடோறும் மக்களுக்குப் புதுமையிடத்து விழைவும் அது பற்றிய முயற்சியும் பெருகிவருதலின் அப்பெருக்கத்திற் கேற்ப வருவாய் குறைவுற வாராமை. சிறுவரின் என்புழி ஐந்தாவது ஒப்புப் பொருட்டு. இனைய பின்னிருந்து எண்ணி இரங்கத்தக்க இச்செயல்கள்; "எற்றென்று இரங்குவ செய்யற்க[3]" எனப் பெரியோர் தெருட்டுப. இவற்றைச் செய்தவழி, எல்லாரும் இகழ்தல் பற்றி, இவை விலக்கப்படுவனவாயின கண்டிசினோர் வினை முதன் மேனின்ற வினையாலணையும் பெயர்.

சிறுவர், தம் செய்கைகளை மேல் விளைவது நினையாது செய்தல் போல, நீயும், நின் பெருமைக்குரிய அறமும் பொருளும் பிற தகவுடைமையும் முன்னர் நோக்கிப் பின்னர்ச் செய்வதை விடுத்துப்

---

1. தொல். பொரு. 173. 2. பரி. 17:119. 3. குறள். 655.

பின்னிருந்து வருந்தத்தக்க பரத்தமை மேற்கொண்டு யாம் தமித்து வருந்த விடுகின்றனே என்பாள், சிறுவரின் இனையசெய்தி என்றாள். "விழையா வுள்ளம் விழையு மாயினும்" என்றும். "கேட்டவை தோட்டியாக மீட்டாங்கு, அறனும் பொருளும் வழாமை நாடித், தன் தகவுடைமை நோக்கி மற்றதன், பின்னாகும்மே முன்னியது முடித்தல், அனைய பெரியோர் ஒழுக்கம்[1]" எனவும், "செய்து பின்னிரங்கா வினையொடு, மெய்யல பெரும்பழி எய்தினனே[2]" எனவும் சான்றோர் தோழி கூற்றில் வைத்துத் தெரிந்திருத்தல் காண்க. "சிறியரின்" என்னாது சிறுவரின என்றாள், தாய்போற் கழறித் தழீஇக் கோடற் குரிய தகுதிபற்றி உள்ளுறையால், தலைவி தான் தனித்திருந்து வருந்தும் செய்தியைக் குறித்தமையின் இனைய எனச் சுட்டியொழிந்தாள். தலைவன் பரத்தமை, பின் அவன் தானே நினைந்து வருந்துதற்கும் இடமாதலுடைய தென்பது. "கிழவோன் இறந்தது நினைஇ ஆங்கண், கலங்கலும்உரியன்[3]" என ஆசிரியர் கூறுமாற்றால் விளங்குகின்றது.

கண்டோர் நன்கு மதித்தற்குரிய பெருமைப் பண்பும் பெருஞ் செயலு முடையாய் என்பாள பெரும என்றும். எனவே, பெருமைக்கு மாறான இவ்வொழுக்கம் அலரும் எள்ளற்பாடும் பயந்து கண்டோர் நகுமாறு செய்கின்றது என்பாள், நகாரோ பெருமநிற் கண்டிசினோர் என்றும் கூறினாள். சிறுவர் செயல் இளமைபற்றியும் இச்செயல் எள்ளல் பற்றியும் நகைப்படுதலின், நகாரோ என எதிர்மறை வாய்பாட்டாற் கூறினாள்.

இவ்வாறு தலைவன்பால் தோன்றிய செயல்பற்றிக் கழறிக் கூறினாளாயினும், தலைவி அவனது கூட்டம் பற்றிப் பிறந்த வேட்கை மிகுதியால் மயங்கிக் கூறுதலின், அமைவதாயிற்று; "தாய்போற் கழறித் தழீஇக் கோடல், ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப, கவவொடு மயங்கிய காலையான[4]" என ஆசிரியர் கூறியவாறு காண்க. சிறுவரின் இனைய செய்தி என்றது அறிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை; நகாரோ பெருமநிற்

1. அகம். 286. 2. ஷை. 268. 3. தொல். பொ. 172.
4. ஷை. ஷை. 173.

கண்டிசினேர் என்றது புறஞ்சொல் மாணக்கிளவி. ஏனை மெய்ப் பாடு : பெருமிதம். பயன் : வாயில் நேர்தல்.

மறிவில் யாணர் மலிகே ழூரநின் சிறுவரின் இனைய செய்தி என்றும் பாடமுண்டு. தடுத்தற் கியலாத புது வருவாயினையுடைய ஊரனே, நின் சிறுவரைப் போல இனைவன செய்தி என்பது பொருளாம். என் சிறுவனை நோக்கி, ''எம்போலக் கையாறுடை யவர் இல்லல்லாற் செல்லல்'' எனச் சிறைத்தவழியும், அவன், அதனை கைந்நீவிக், ''குன்ற விறுவரைக் கோண்மா இவர்ந் தாங்குத் தந்தை வியன்மார்பிற்'' பாய்ந்து என்பால் நில்லா தொழுகியதுபோல, நீயும். புறத்தொழுகுதல் வேண்டா எனச் சூள் முதலியவற்றுற் சிறைப்பினும், சிறைப்படாது ஒழுகுகின்றனை என்று தலைவி கூறியவாறும். செய்தியை என்ற பாடம் செய்தி க்லையுடையாய் என்றவாறு. (85)

86. வெண்டலைக் குருகின் மென்பறை விளிக்குரல்
நீள்வய னண்ணி யிமிழு மூர
எம்மிவ ணல்குத லரிது
நும்மனை மடந்தையொடு தலைப்பெய் தீமே.

''புதல்வன் கூறிய மாற்றம் தலைமகட்குப் பாங்காயினர் கூறக் கேட்டான்'' என்பது அறிந்த பரத்தை அதற்குப் புலந்து தலைமகற்குச் சொல்லியது.

ப. உரை: குருகின் பார்ப்பு அழைக்கும் குரல் வயல் நண்ணி இமிழும் ஊர என்றது, நின் புதல்வன் கூறிவிடுத்தல் நீ கேட்டமை[1] சேரியெல்லாம் அறிந்தது, நின்னால் மறைத்தல் அரிது என்பதாம். பார்ப்பினம் மெல்லியதாகப் பறத்தல்பற்றி மென்பறை என்று ஆகு பெயராற் கூறியதெனக் கொள்க.

---

1. அவ்வந் நிலத்துமக்கள் தமக்குரிய இடமும் பொருளும் உடையராய் வாழ்ந்த இடம் ஊர் பாடி, பாக்கம எனவும், அவர் ஆதரவுபெற்று வாழ்வோர் அவ்வூரைச் சேர உறைந்த இடம் சேரி எனவும்வரும் பொருண்மை காண மாட்டாதார் சேரி என்பது வட சொல் எனத் திரியக் கூறுநிற்பர்.

உரை : வெள்ளிய தலையினையுடைய குருகினத்தின் பார்ப்புக்களது அழைப்பிடுகுரல் நீண்ட வயல்களை அடைந்து ஒலிக்கும் ஊரனே, இனி நீ எம்மை அருளுதல் முடியாதாகையால் நின் மனையை அடைந்து அங்கு நின் மனையாட்டியுடன் கூடி இன்புறுக எ. று.

வெண்டலைக் குருகு, கம்புட் கோழியுமாம். பறை, சிறகு. "வெண்பறை நாரை" என வருதல் காண்க. ஈண்டு, இஃது அடையடுத்த ஆகுபெயராய்ப் பார்ப்பினத்தின் மேலதாயிற்று. இவண், பரத்தைமனை. தன் ஆயத்தை உளப்படுத்தி எம் என்றும், தலைவியையும் புதல்வனையும் உளப்படுத்தி நும் என்றும் உரைத்தாள். மடந்தை, மகப்பேற்றுக்குரிய பருவத்தையுடைய பெண். தலைப் பெய்தல், ஒருசொல்; தலைக்கூடல், தலைப்பிரிதல் என்றாற் போல.

தலைவன் இனித் தன் மனையகம் போந்து தன்னை அருளுவது அரிது எனப் பரத்தை மொழிந்ததற்குரிய ஏதுவை உள்ளுறுத்து உரைத்தமையின், வாளா நல்குதல் அரிது என்பது கூறப்பட்டது. புதல்வன்பால் அவன் மெய்தீண்டி உடற்கின்பமும், சொற்கேட்டுச் செவிக்கின்பமும், தளர்நடை கண்டு கட்கின்பமும் இடையறாது பெறுதலின் தன்னை நயந்து வருதல் கூடாதென்பாள், பரத்தை எம் இவண் நல்குதல் அரிது என்றாள். நல்குதல் எனவே, தான் அவனை இன்றியமையாமை பெறவைத்தாளாம். மனைக்குரியளாய தலைமகள் புதல்வனைப் பயந்து பொலிகின்றாள் என்பதுபட நும் மனை மடந்தையொடு என்றும், மனை அடைந்தவழி, பெறுதற்கரிய புதல்வற் பேற்றால் நின்னையும் நின் குடியையும் விளக்கமுறுத்தும் தலைவியைப் புதல்வன்தாய் எனப் புல்லி மகிழ்க என்பாள் தலைப் பெய்தீமே என்றும் கூறினாள். இதனாற் பரத்தைபால் பொறாமை தோன்றிற்று. மடந்தை யென்றது, புதல்வற்பேற்றால் முதுமை யுடையாள் என ஓராற்றால் தலைவியை இகழ்ந்தவாறுமாம்.

குருகின் மென்பறை செய்த விளிக்குரல் நீள்வயல் நண்ணி இமிழ்கின்ற தெனவே, நின் புதல்வன் சொல்லிவிட்ட மாற்றம்

---

1. குறுந். 166.

இச்சேரியிலுள்ளோர் யாவரும் அறியப்பட்டது என்ருளாம்; ஆகவே அப்புதல்வனை உள்ளி நீ நின் வளமனை செல்லுதல் ஒருதலை என்பதாம். வயல் நண்ணி இமிழ்கின்ற தென்றதனுல், அதனை இல்லை யென மறைத்தலும் நினக்குக் கூடாது என்றவாரும். மெய்ப்பாடு : வெகுளி. பயன் : வாயில் மறுத்தல்.

இது, ''புல்லுதன் மயக்கும்''' என்ற சூத்திரத்து, 'இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்'' என்புழி நிகழும் 'பரத்தையர் கூற்றுவகையுள் அடங்கும். இல்லோர் என்ற பன்மையால், வன்புறை வாயிலாகிய புதல்வனும் தலைவியும் கொண்டு புதல்வன் கூற்றைத் தன் புலவிக்கு ஏதுவாக்கியும், மடந்தையெனத் தலைவியை இகழ்ந்தும் கூறின்மை கொள்க.

எம்மிவண் நல்குதல் அறிதும் என்றும் பாடமுண்டு. மகன் விடு மாற்றம் கேட்டொழுகும் நினக்கு அவன்பாலும் அவன் தாய்பாலும் அன்பு செல்வதன்றி, எம்பால் செல்லாமை இனிது விளங்குகின்ற தென்பதுபட அறிசும் என்ருள் என்க. எனவே, நல்குதல் அறிதும் என்பது குறிப்புமொழியாம். (86)

87 பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்
யாண ரூரநின் மனையோள்
யாரையும் புலக்கு மெம்மைமற் றெவனோ.

தலைமகள் தன்னைப் புறங்கூறினுள் எனக் கேட்ட காதற் பரத்தை அவட்குப் பாங்காயினுர் கேட்பத் தலைமகனோடு புலந்து சொல்லியது

ப. உரை: கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும் ஊர என்றது, யாங்கள் பழித்தேமென்று அவட்கு இனியசொற் கூறி அவள் எங்களைப் பழித்துக் கூறும் சொற்களை நினக்கு இனிய வாகப் பெறுவாய் எ. று.

---

1. தொல். பொ. 151.

உரை : பகன்றைப் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியைச் சூடிய பல ஆனிரைகளையுடைய ஆயர்கள் கரும்பைக் குறுந்தடியாகக் கொண்டு மாவின் கனிகளை உதிர்க்கும் புது வருவாயினையுடைய ஊரனே, நின் மனைவி யாவரையும் புலந்து கூறும் இயல்பின ளாகலின் எம்மைப் புலத்தற்கு என்னை ?

பகன்றை, சிவதைப்பூண்டு. கிலுகிலுப்பைச் செடியன்று என நச்சினார்க்கினியரும்[1] பெருங்கையால் என அடியார்க்கு நல்லாரும்[2] கூறுவர். இது நீண்ட இலையும், வெண்மையான பூவும் உடையது. இதன் பூ வடிவில் வள்ளம் போன்றிருத்தலின், வெள்ளிய பாண்டிலை இதற்கு உவமம் கூறுவர், இப்பூவிற்கு மணம் கிடையாது. இது மருத நிலத்திற் குரியது. "வெள்ளிதழ்ப் பகன்மதியுருவிற் பகன்றை மாமலர்[3]" "பாண்டில் ஒப்பிற் பகன்றை மலரும்[4]" "பகன்றை வான்மலர் பனிநிறைந்தது போல் பால்பெய் வள்ளம் சால்கை பற்றி[5]" "பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ, இன்கடுங் கள்ளின் மணமில கமழும்[6]" என்பன முதலாகச் சான்றோர் கூறுமாறு கண்டுகொள்க. மணமில தாயினும் இதனால் கண்ணியும் மாலையும் தொடுத்து அணிதல் பண்டையோர் மரபு. "பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்[7]" என்றும், "சில்லே ராளர் பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல் ... சூடி[8]" என்றும் வருவன காண்க. குணில், குறுந்தடி ; "கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்[9]" என்புழிப் போல. இஃது அகத்துறைப் பாட்டாகலின், இதன் கண் முல்லை நிலத்துக் குரிய கோவலர் செய்தி கூறப்பட்டது ; "அவ்வம் மக்களும் விலங்கு மன்றிப், பிறவவண் வரினும் திறவதின் நாடித் தத்தம இயலின் மரபோடு முடியின், அத்திறத் தானே துறையெனப்படுமே[10]" எனவரும் தொல்காப்பியத்திற்குப் பேராசிரியர் கூறும் உரை காண்க.

புலத்தலின்றி மங்கலவகையால் தலைவி எதிரேற்றுக் கோடற் குரிய "பின்முறை யாக்கிய பெரும் பொருள் வதுவை[11]"

1. குறிஞ்சி. 88. 2. சிலப். 13:157. 3. ஐங். 455.
4. நற். 86. 5. அகம். 219. 6. குறுந். 330.
7. மலைபடு. 459. 8. பதிற். 66. 9. சிலப். 17. பாட்டு. 1.
10. தொல். பொ. 521. 11. ஷ ஷ 172.

மகளிரையும் அவள் புலக்கும் பான்மையள் என்பாள், நின்மனை யோள் யாரையும் புலக்கும் என்றாள். எனவே, அவள் எம்மைப் புலத்தல் சொல்லாமலே விளங்கும் என்றற்குப் பரத்தை எம்மைமற் றெவனோ என்றாள்.

கரும்பின் துண்டத்தைக் குறுந்தடியாகக் கொண்டு கோவலர் மாவின் தீங்கனியை உதிர்ப்பர் என்றது, யாம் கூறும் சொற்பகுதி களைத் தலைவியைப் பழித்துக் கூறியனவாக அவட்குக் கூறி அவளது புலவி தீர்த்துக் கூட்டம் பெற்று மகிழ்வாய் என்றவாறும். புலவி தீர்க்குமிடத்து, தலைவிக்குத் தலைமகன் இன்சொற் கூறலும் அவள் பரத்தையைப் பழித்துக் கூறுவனவற்றை ஏற்று அப்புலவி தீரத் தகுவன செய்தலும் உண்மையின், "யாங்கள் பழித்தே மென்று அவட்கு இனிய சொற்களைக் கூறி அவள் எங்களைப் பழித்துக் கூறும் சொற்களை நினக்கு இனியவாகப் பெறுவாய்" எனப் பழையவுரை கூறுவதாயிற்று. மெய்ப்பாடும் பயனுமவை.

இது "புல்லுதல் மயக்கும்[1]" என்னும் சூத்திரத்து "இல்லோர் செய்வினை இகழ்ச்சிக்கண்" பரத்தை நிகழ்த்தும் கூற்றுவகையாகும் (87)

88. வண்டுறை நயவரும் வளமலர்ப் பொய்கைத்
தண்டுறை யூரனை யெவ்வை யெம்வயின்
வருதல் வேண்டுது மென்ப
தொல்லேம் போல்யா மதுவேண் டுதுமே.

தலைமகனை நயப்பித்துக் கொள்கையில் விருப்பில்லாதாள் போல அவ்வாறு கோடலையே விரும்புவாள். அது தனக்கு முடியாதெனத் தலைமகள் புறனுரைத்தா ளெனக் கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினர்க்குச் சொல்லியது.

ப. உரை: இவ்வாறு என்னைக் கூறுகை தவிராளாயின், அதனை முடியச் செய்துவிடுகிறேன் என்பதாம். வள்ளிய துறைகளின்

---

1. தொல். பொ. 151.

கண்ணே எல்லாரும் கொள்ளும் வண்ணம் நயந்து பூக்கின்ற மலர்களையுடைய பொய்கையூரன் என்றது மகளிரெல்லார்க்கும் பொதுப்பட்டிருப்பான் எ. று.

உரை: வண்டுகள் உறையும் யாவரும் விரும்புகின்ற வளவிய மலர்ப் பொய்கையின் தண்ணிய துறையினையுடைய ஊரனை யாம் எம்மிடமே வருதலை வேண்டுகின்றேம் என்று எவ்வை சொல்லுவதனைப் புறத்தே விரும்பாதேம் போலக் காட்டி அகத்தே அதனை விரும்பி ஒழுகுகின்றேம் எ. று.

வண்டுகள், வண்டினம்; சங்குமாம். வண்டுறை வளமலர்ப் பொய்கை, நயவரும் வளமலர்ப் பொய்கை என இயையும். வண்டுறை என்பதற்கு வள்ளிய துறையெனவும், நயவரும் வள மலர் என்பதற்கு எல்லாரும் நயந்து கொள்ளும் வண்ணம் பூக்கின்ற வளவிய மலர் என்றும் உள்ளுறுத்த கருத்துக்கேற்பப் புழையவுரைகாரர் கூறுகின்றார். எவ்வை, எம் தங்கை; நும் தங்கை, நுவ்வையெனவும், தம் தங்கை, தவ்வை யெனவும் வருதல்போல; "நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று, அன்னை கூறினள்[1]" எனவும், நின் தவ்வைய ராவோர் தாரையும் வீரையும்[2]" எனவும் சான்றோர் வழங்குமாறு காண்க. "எவ்வைக் கெவன்பெரி தளிக்கும்[3]" என்பதற்கும் இதுவே கூறிக்கொள்க. ஒல்லேம்போல் என்றது உள்ளும் புறமும் ஒவ்வாமை உணர நின்றது; "மெல்லிய இனிய கூறலின் யான் ஒஃது ஒல்லேன் போல உரையாடுவலே[4]" எனப் பிற சான்றோரும் இப்பொருண்மை தோன்ற உரைக்குமா றறிக. தொல்லேம் போல் என்று கொள்வாரு முளர். பிரிநிலை ஏகாரம் விகாரத்தால் தொக்கது. பிறவெல்லாம் எச்சவகையாற் பெய்துரைக்கப் ட்டன

தலைவன் தன்பாலே வருதல் வேண்டுமெனப் பரத்தை மிக வேண்டி நின்றாளாயினும், தலைவி கூற்றை உடன்படாதாள் போல ஒழுகுதற்கு உரிய ஏதுவினை உள்ளுறைக்கண் கூறிவிட்டமையின்,

---

1. நற். 172. 2. மணி. 10:51-2. 3. ஐங். 89.
4. நற். 134.

எவ்வை எம்வயின் வருதல் வேண்டுதும் என்பது ஒல்லேம் என வாளாது மொழிந்தாள். கருத்து வகையால் உடன்பாடுண்மையின் தலைவியை எவ்வை யென்றும், அவ்வுடன்படாமையும் பிறர்க்குத் தோற்றுவித்தற்கே என்பது எய்த ஒல்லேம்போல் என்றும் கூறினு ளாயிற்று

தலைவி கூற்றைத் தான் உடன்படாதாள் போல ஒழுகுதலாவது, தலைவன் யாவர்மாட்டும் புணர்வு பிரிவுகளால் இன்பமும் இடும்பையும் நிகழ்த்துதலின், தலைவி எம்மைப்புலத்தல் கூடாது; அவள் கொழுநனே அவட்கு வருத்த மெய்துவிக்கின்றான் என்றாற் போல்வன கூறுதல். 'வானம் வேண்டா வறனில் வாழ்க்கை[1]' என்னும் அகப்பாட்டினுள், ''ஊரனொடு எழுந்த கௌவையோ பெரிதே, நட்பே, கொழுங்கோல் வேழத்துப் புணைதுணையாகப் புனலாடு கேண்மை அனைத்தே'' எனவும், 'அவனே.... தண்ணறுஞ் சாந்தங் கமழும் தோள்மணந்து, இன்னும் பிறள்வயினானே'' எனவும், இவற்றை அறியாது ''மனையோள், எம்மொடு புலக்கும் என்ப'' எனவும், ''உரிதினின், யாம்தன் பகையே மல்லேம், சேர்ந்தோர் திருநுதல் பசப்ப நீங்கும், கொழுநனே சாலும் தன் உடனுறை பகையே'' எனவும் பரத்தை தலைவனது நட்பைப் பழித்து அவன் தன்பாலே வருதலை நயவாதாள் போல அவனைப் பகை எனக் கூறியது போல்வன எனக்கொள்க.

இப்போழ்து, புறத்தே உடன்பாடின்மையும் அகத்தே உடன் பாடும் கொண்டு ஒழுகத் துணிந்த பரத்தை, தலைவி கூறியது தன் மாட்டாமை கூறித் தன்னை அவள் பழிப்பது போறலின் யாம் அது வேண்டுதுமே என்றாள். செய்குதும் என்னாது, வேண்டுதும் என்றதனால், ''அவள் (தலைவி) இவ்வாறு கூறுவதைத் தவிராளாயின், யான் பலரும் அறியத் தலைவன் எம்பாலே வரத் தகுவனவற்றைச் செய்துவிடத் துணிந்தேன்'' என்றாளாம். அஃதாவது, யான் தலைவனைக் கொண்டு கைவலிப்பல் எனவும் , அவன் என் வயின் வருமாறு செய்யேனாயின் இன்னளாவேன் எனவும் பிறவும்

---

1. நற். 186.

கூறித் தருக்குதல். ''மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கத், தண்டுறை யூரன் எம்சேரி வந்தென ...... ஆனுது கழறுப என்ப அவன் பெண்டிர் .... சிறைபறைந்து உரைஇச் செங்குணக் கொழுகும், அந்தண் காவிரிபோலக் கொண்டு கைவலித்தல் சூழ்ந்தின் யானே'' எனவும், ''துறைகேழூரனெடு ஆவதாக, இனி நாண் உண்டோ, வருகதில் அம்ம எம் சேரிசேர, வரிவேய் உண்கண் அவன் பெண்டிர் காணத், தாரும் தானையும் பற்றி ... தோள்கந்தாகக் கூந்தலிற் பிணித்து அவன் மார்பு கடிகொள்ளே னுயின் ஆர்வுற்று இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள் போல், பரந்து வெளிப்படாதாகி, வருந்துக தில்ல யாய் ஓம்பிய நலனே'''[1] எனவும் வருவன பரத்தையின் துணிபுரை வகையினை உணர்த்துவனவாம்.

எல்லாரும் நயந்து கொள்ளும் வண்ணம் பூக்கின்ற மலர்களை யுடைய பொய்கையூரன் என்றது, தலைவியும் யாமுமாகிய மகளிர் பலரும் விரும்பி நுகரும் வண்ணம் நயந்து போந்து இன்பம் நல்குவான் எனத் தலைவனது பொதுப்பண்பினை உணர்த்தியவாறு. ஆகவே, தலைவன் மகளிர் பலர்க்கும் பொதுப்பட ஒழுகுகின்ருன் என்றமை பெறப்படும். இவ்வாறு கூறியொழுகிய தன்னைத் தலைவி புறனுரைத்தாள் எனப்பொருது பரத்தை நெடுமொழி நிகழ்த்தும் உள்ளத்தளாய்த் தலைவியின் பாங்காயினுர்க்குச் சொல்லு கின்ருளாகலின் எம்வயின் என்றும் யாம் என்றும் பன்மை வாய் பாட்டாற் கூறினுள். இது, ''புல்லுதல் மயக்கும்[2]'' என்ற சூத்திரத்து, ''எண்ணிய பண்ணையென் றிவற்ருெடு பிறவும்'' என்புழிப் ''பிறவும்'' என்பதனுல் கொள்ளப்படும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன் தலைவியை இகழ்தல்.

வளர்மலர் என்றும் ப்ாடமுண்டு; மற்று, வளர்தற்ருெழில் மலருக்காதல், பொய்கைக்காதல் இயையாமையின் அது பாட மன்மை யறிக. (88)

---

1 அகம். 76, 276. 2. தொல். பொ. 161.

89 அம்ம வாழி பாண வெவ்வைக்
கெவன்பெரி தளிக்கு மென்ப பழனத்து
வண்டுதா தூது மூரன்
பெண்டென விரும்பின் றவடன் பண்பே.

தலைமகன் தலைமகளைப்பற்றி ஒழுகாநின்றான் என்பது கேட்ட காதற் பரத்தை அவன் பாணனுக்குச் சொல்லுவாளாய் அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

ப. உரை: அவன் ஆங்கு ஒழுகுகின்றது அவள் பண்புடைமை யல்லது வேறு காரணம் இல்லை என இகழ்ந்து கூறியவாரும்.

உரை: பாண, இதனைக்கேள்: பழனங்களில் மலர்ந்துள்ள பூக்களில் வண்டு தேனையுண்ணும் ஊரன் எம் தங்கையாகிய தலைமகளைப் பெரிதும் தலையளித் தொழுகுகின்றானென அவட்குப் பாங்காயினார் சொல்லுகின்றதென்னை? அவனை த தனக்குப் பெண்டெனக் கருதி அவன் விரும்பி யொழுகுவது அவள் தனது மனைமகளாம் பண்புடைமையே யொழிய வேறில்லை; இதனை அவர்கள் அறிந்திலர் போலும் எ. று.

பெரிதளிக்கும் என்பது பாங்காயினார் கூற்றைக் கொண்டு கூறியது. எவன் என்பது ''அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்'' வினாவின் கிளவி; ஈண்டு, இஃது அவர்கள் கூற்றை மறுக்கும் குறிப்புணர நின்றது. கூறுவோர் அவராகலின், அவட்குப் பாங்காயினார் என்பது வருவிக்கப்பட்டது; ஏனைய எச்சவகையாற் பெறப்பட்டன. விரும்பின்று, காலங்காட்டும் தொழிற்பெயர். காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. பிற நலங்களை மறுத்துப் பண்பினையே வற்புறுத்துதலின் ஏகாரம் தேற்றம். வாழி அசைநிலை

தலைவன் பரத்தையர்க்குத் தலையளி செய்தொழுகுதலை, உள்ளுறையாற் குறிக்கின்றா ளாகலின் அதனைக் கொள்ளாது உரைத்த தலைவியின் பாங்காயினார் கூற்றை மறுத்தற்கு,

எவ்வைக்கு எவன் பெரிது அளிக்கும் என்ப என்றும், அவ்னது ஒழுக்கத்தின்கண் பரத்தைபாற் செய்யப்படும் தலையளியினும் தலைவிபாற் செய்யப்படுவது சிறிது பெரிதாய்த் தோன்றின், அதற்குக் காரணம் இஃதென்பாள் ஊரன் பெண்டென விரும்பின்று அவள் தன் பண்பே என்றும் சொன்னாள். பரத்தைமை தோன்றினும், அதுபற்றி அவனை வெறாது புரையறம் தெளிந்து அவன் பால் அன்பு தொக நிற்றல் ஈண்டுப் பண்பாவதுஎன அறிக ''தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார், இகழினும் கேள் வரை யேத்தி யிறைஞ்சுவர்[1]'' என்றும், ''மாய மகிழ்நன் பரத்தைமை, நோவேன் தோழி கடன் நமக்கெனவே[2]'' என்றும் சான்றோர் உரைக்குமாறு காண்க.

பொதுவாகிய பழனங்களிற் பூத்திருக்கும் மலரிலுள்ள தேனை வண்டு உண்டு மகிழும் என்றதனால், தலைவன் பொதுமகளிரான பரத்தையிற் பிரிந்து இன்ப நுகர்தலைப் புலப்படுத்தா ளாயிற்று. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: பாங்காயிரை மறுத்தல்.

வேண்டென விரும்பின்று என்ற பாடத்துக்குத் தலைவன் மாறாது வேண்டுக என வாயில்விடுத்து விரும்பி ஒழுகுவது என உரைக்க. அவன் பரத்தைமையாற் புலந்து வேறுபட்டாளை அது நீக்கி ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுதலாற் காமம் சிறத்தலின் அது செய்வதும் தகுமென வறிக. ''அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப், புலந்தாரைப் புல்லாவிடல்[3]'' எனத் திருவள்ளுவப் பெருந்தகையார் அறிவுறுத்துமாறு காண்க. (89)

90. மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன்கொண் டான்கொல்
அன்ன தாகலு மறியாள்
எம்மொடு புலக்குமவன் புதல்வன் றாயே

---

1. பரி. 20:88-9. 2. கலி. 75. 3. குறள். 1303

தலைமகன் தன் மனைக்கட் செல்லாமல் தான் விலக்குகின்றாளாகத் தலைமகள் கூறினாள் என்பது கேட்ட காதற் பரத்தை, தலைமகன் கேட்குமாற்றால் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

உரை: மகிழ்நனுடைய மாண்புற்ற குணங்களை வண்டுகள் அடைந்தனவோ, அவற்றின் மாண் குணங்களை அவன் அடைந்தனனோ, செயலொற்றுமையால் வேறுபடுத்து அறியக் கூடாமையின், அச்செயல் அவற்கு இயல்பாகலும் அதனால் அவனை விலக்குத லாகாமையும் அறியாளாய் அவன் புதல்வற்குத் தாயாகிய தலைவி யாம் அவனைத் தன்மனைக்கு ஏகாவண்ணம் விலக்குகின்றேம் என எம்மோடு புலக்கின்றாள்; இஃதோர் அறியாமை இருந்தவாறு என்னே எ. று.

மகிழ்நன் மாண்குணம், நலம் புதியராய மகளிரையே கூடியொழுகுதல். வண்டின் மாண்குணம், எல்லாப்பூவினும் சென்று தாதுண்தல். ஏற்புடைய சொற்கள் எச்ச வகையால் வருவித்துக் கொள்ளப்பட்டன. அச்செயல் பற்றி அவனைப் பிறர் விலக்கலாகாமையும் எய்துவித்தலின் ஆகலும் என்புழி உம்மை எச்சப் பொருளதாம். அறியாள், முற்றெச்சம் புலக்கும் என்னும் வினைமுதல் வினை கொண்டது.

நலம் புதியளாய்ச் சிறக்கும் தன்பால் பிரிவின்றிக் கூடி இருந்து இன்பநுகர்ச்சி எய்தும் தலைவன் செயல் தேனுடைப் புதுமலரைத் தேர்ந்து தேன் உண்ணும் வண்டின் செயலை நிகர்த்தலின், மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண்டன கொல் என்றாள், எனவே, பரத்தை தன் நலத்தைக் குறிப்பாற் சிறப்பித்துக் கூறினாளாயிற்று. தாதுண்ணும் வேட்கையால் புதுப்பூ என்றுதல் பழம்பூ என்றுதல் நோக்காது எல்லாப் பூவினும் சென்று வண்டினம் ஊதுதல்போல, நலம் புதியளாய என்னைக் கூடலேயன்றி முதியளாய தலைவியையும் கூடுகின்றான் என்பாள், வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டான்கொல் என்றாள். எனவே, தன் இளமையும் தலைவியின் முதுமையும் கூறினாளாயிற்று. வண்டினம் எல்லாப் பூவினும் ஊதும் என்பதனை, "தாதுண்

வேட்கையிற் போது தெரிந்தூதா வண்டோ ரன்ன அவன் தண்டாக் காட்சி[1]'' என வருமாற்றுல் உணர்க.

புதுநலம் கெழுமிய மகளிரையே நாடி இன்பநுகர்ச்சி எய்தும் தலைவன் குணம் எல்லாப் பூவினும் ஒப்ப ஊதும் வண்டிற் கின்மையின், வண்டுகொண் டனகொல் என்றும் வண்டினம்போலத் தலைவன் இளையரையும் முதியரையும் ஒப்பக் கூடுதலின் அஃது அவற்கு இயல்பன்று என்பது பட, மகிழ்நன் கொண்டான் கொல் என்றும் கூறினுள்: ''புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவன்[2]'' என ஆசிரியர் தொல்காப்பியனுரும், ''ஊரன் புதுவோர் மேவலன்[3]'' என இந் நூலாசிரியரும் கூறிய வாற்றுல், தலைவன் புதுநலமகளிரையே நாடுமாறு அறிக. ''அவனே, நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித், தண்கமழ் புதுமலர் ஊதும், வண்டெ‌ன பொழிப மகன் என்னுரே[4]'' எனவரும் ஆசிரியர் மருதன் இளநாகனுர் பாட்டும் இக்கருத்துக்கட்குத் துணையாதல் காண்க.

இக் கூறியவாற்றுல், புதுநலமுடைய மகளிரைக் கூடி நெடிது இருத்தல் தலைவற்கு இயல்பாகலின் அதனைத் தலைவி அறிந்திலள் என்பாள், அன்னதாகலும் அறியாள் என்றுள். இளமைப்பருவம் கழியுங்காறும் அச்செயல் அவற்கு விலக்கப்படாமையும் அறிந்திலள் என்பாள், அதனை உம்மையால் எய்துவித்தாள்.

''பின்முறையாக்கிய[5]'' என்ற சூத்திரத்துக் ''கிழவோன் இறந்தது நினைஇ ஆங்கண், கலங்கலும் உரியன் என்மனுர் புலவர்'' என்னும் பகுதியில், களங்கலும் என்புழி உம்மை 'எதிர் மறையாகலாம் (பரத்தமை நீங்கி) மீளாமையும் உரித்தாயிற்று; என்னை, இளமைப் பருவம் கழியாத காலத்து அக்காதல் மீளா தாகலின்'' என நச்சினுர்க்கினியர் உரைப்பது காண்க.

மகிழ்நன் மாண்குணம், வண்டின் மாண்குணம் என்புழி மாண்புகள் முறையே புகழ்ச்சியும், இகழ்ச்சியும் குறித்து நின்றன.

1. நற். 25. 2. தொல். பொ. 147. 3. ஐங். 17.
4. நற் 290. 5. ஷெ. ஷெ. 172.

தலைவி, மகிழ்நன் குணச்சிறப்பும் விலக்கலாகாமையும் நோக்காது அவனை யாம் விலக்குகின்றேம் என எம்மொடு வறிதே புலக்கின்ருள் என்பாள், எம்மொடு புலக்கும் அவன் புதல்வன் தாயே என்ருள். தலைமகற்குரிய தலைவி பரத்தை முதலிய பெண்டிரைப் புதல்வன் தாய் எனப் பொதுவாகக் குறித்தல் மரபாயினும், ஈண்டு மகப்பயந்து மேனி முதிர்ந்து நலம் முதியளாயினள் என்பாள் தலைவியைப் புதல்வன் தாய் என்ருள். ''புதல்வன்தா யென ... எம் முதுமை எள்ளல்[1]'' எனப் பரணர், புதல்வன் தாய் என்பது புலத்திற்குரிய சொல்லென விளக்கியவாறு அறிக. ''நின்மகன் தாயாதல் புரைவது[2]'' எனத் தலைவியை மகன்தாய் எனக் குறிக்குமாறு காண்க. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவியை இகழ்தல். (90)

---

1. அகம். 6. 2. ஷை 16.

10

எருமைப்பத்து

இதன்கண் வரும் பாட்டுக்கள் பத்தினும் எருமையாகிய கருப்பொருளே சிறந்தெடுத்து மொழியப்படுதலின் இஃது இப் பெயரினைப் பெறுவதாயிற்று.

எருமையினம் உலகெங்கும் பரவியிருக்கின்றது; எனினும், நாடுதோறும் அவ்வந் நிலத்துத் தட்பவெப்ப நிலைகட்கேற்ப அவற்றின் உடலமைப்பும் கோடுகளின் வளர்ச்சியும் அமைந் திருக்கின்றன. நமது இந்நிலவுலகில் சிறந்து விளங்கும் நகரங்கள் யாவும் பண்டைக் காலத்தில் இவ்வெருமை யினங்களின் உழைப்புச் சிறப்பால் வளம் பெற்றன என்பர். பிற துணைக் கருவி களை ஆக்கிக்கொள்ளும் அறிவு நலம் மக்களிடைத் தோன்று தற்குமுன் ஊர்திகளாகவும் உழவுத் துணையாகவும் உதவிய பழம் பெருமை எருமையதே.

ஐரோப்பாவில் இப்போழ்து வாழும் எருமையினம் பலவும் பல நூற்றுண்டுகட்கு முன்பே ஆசிய நாட்டிலிருந்து சென்றவற்றின் வழித்தோன்றல்கள் என ஆராய்ச்சியாளர் கூறுவர். மேனுடுகளில் எருமையினமும் குதிரையினமும் தோன்றி மக்கட்கு வேண்டிய உதவியினைப் புரியத் தொடங்குதற்கு முன் ஆனேறும் ஆனிரை யுமே அதனை ஆற்றி வந்தன. பின்னரே எருமையினம் சென்று

அவற்றின் நிலையில் நின்று உழுதல் வண்டியிழுத்தல் சுமை கொண்டு சேறல் முதலிய செயல்களைச் செவ்வே செய்து போந்தன.

உயிர்நூல் அறிஞர், இவ்வெருமையினம் பலவும் பண்டையில் நம் நாட்டிற்றான் தோன்றின என்று கூறுகின்றனர். அமெரிக்க நாட்டிற் காணும் எருமையினம் (Bison) உண்மை எருமையின மாகா. ஆயினும் அவை உழவு முதலியவற்றைச் செய்தலும், பால் வெண்ணெய் இறைச்சி தோல் முதலியவற்றை உதவுதலும் செய்கின்றன.

எருமையினம் உடலுழைப்பால் களைப்பு மிக்க வழிச் சேற்று நீரிற் படிந்து கிடத்தல் இயல்பு. இதனை அறிந்தே நம் நாட்டுப் பண்டைச் சான்றோர், ''தடமருப் பெருமைப் பிறழ்சுவல் இரும் போத்து, மடநடை நாரைப் பல்லினம் இரிய, நெடுநீர்த் தண்கயம் துடும்எனப் பாய்ந்து, நாட்டொழில் வருத்தம் வீடச் சேட்சினை, இருள்புனை மருதின் இன்னிழல் வதியும்[1]'' எனவும், ''வலிமிகு முன்பின் அண்ணல் ஏஎறு, பனிமலர்ப் பொய்கைப் பகல்செல மறுகி, மடக்கண் எருமை மாண்நாகு தழீஇப், படப்பை நண்ணிப் பழனத்து அல்கும்[2]'' எனவும் கூறுவாராயினர் வெயில் அவிர் வெப்பம் மிக்க நம்நாட்டில் எருமைக்குச் சேற்றிற் படியும் இவ்வியல்பு ஒத்ததாயினும் குளிர்மிக்க மேனாடுகளில் இது வேண்டாவன்றே! அந்நாட்டினும் எருமைகள் இது செய்தலைக் காண்போர், இஃது இவற்றின் முதன்மை இனத்தின் பழைய இயற்கைத்தொடர்பு எனக் கருதுகின்றனர்.

ஆசிய நாட்டில், இந்தியா பர்மா மலேயா முதலிய பகுதிகளில் வாழும் எருமையினம் ஒரே இயல்பும் பண்பும் உடையனவாய் இருக்கின்றன. ஆப்பிரிக்க நாட்டுக் காங்கோ எருமையும், சூதன்[3] நாட்டு எருமையும், மேலை ஆப்பிரிக்க எருமையும் நிறத்தில் வேறுபட்டிருக்கின்றன. இவற்றுட் காங்கோ

---

1. நற் 330. 2. அகம். 146. 3. Sudan.

செம்மை நிறமும், சுதனம் சாண நிறமும்[1] மேலையாப்பிரிக்கா நாட்டவை மிக்க செம்மையும் பிறவும் கலந்த நிறமும் பெற்றுள்ளன. நம் நாட்டவை கருந்தாளும் செங்கண்ணும் வலிய கோடும் மெய்வன்மையும் பெற்றிருக்கின்றன. இவற்றை நம் தமிழாசிரியன்மார் சிறப்புற விதந்து கூறியுள்ளனர். "கருந்தாள் எருமை" என இந்நூலுள்ளும், "கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை[2] என நற்றிணையினும் கூறப்படும். நெறிமருப் பெருமை நீல விரும்போத்து," "கருங்கோட்டு எருமைச் செங்கண் புனிற்று," சேற்றுநிலை முனைஇய செங்கண்காரான்" எனவும் இவைபோல்வன பிறவும் மேற் கூறியவற்றை வலியுறுத்துவனவாகும்.

எருமையினத்துள் மக்கட் பயிற்சியில் வாராத காட்டெருமைகள், பயிற்சியில் வந்துள்ள ஏனையவற்றினும் மிக்க வன்மையுடையனவாம். பயிற்சிபெற்ற எருமைக் கோடுகளையே 'இரும்பியன்றன்ன கருங்கோட்டெருமை,' 'மள்ளரன்ன தடங்கோட்டெருமை' எனச் சிறப்பித்தும், மெய்வன்மையை, 'கருங்கோட் டெருமை கயிறுபரிந்து அசைஇ,' 'செங்காண் காரான், ஊர்மடி கங்குலின் நோன்றளை பரிந்து, கூர்முள் வேலி கோட்டின் நீக்கி" என எடுத்து மொழிபவெனின், காட்டெருமைகளின் வன்மை மிகுதி சொல்ல வேண்டாவாயிற்று. காட்டெருமைக் கடா ஒன்று மூன்று அரிமாக்களோடு போர் செய்ததாகக் கண்டோர் கூறியிருக்கின்றனர். விலங்கு வேட்டையிற் கைதேர்ந்தவர்கள், அரிமாவின் ஆற்றலினும் வெகுண்டு பாயும் எருமைக் கடாவின் ஆற்றலே பெரிதும் அஞ்சத் தகுவதெனக் கட்டுரைக்கின்றனர். சென்ற சில ஆண்டுகட்கு முன் தில்லிநகரத்தின் (Delhi) அருகில்நிகழ்ந்த புகைவண்டி விபத்திற்கும் ஓர் எருமையே காரணம் எனக் கூறப்பட்டது.

பழங்காலத்தில் எருமைகள் இரவுப்போதில் இரைமேய்தலும், பகற்போதில் ஓய்ந்திருப்பதும் செய்தன; அவ் விராக்காலங்களில், அரிமாக்கள் உலவத்தொடங்கியதும் இவை அவ்வியல்பை மாற்றிப்

---

1. Brown colour. 2. நற். 260.

பகற்போதில் மேய்வதும் இரவில் ஓய்வுகோடலும் செய்வனவாயின. பண்டைப் பயிற்சி வாதனையாற்றான், இப்போதும் சில எருமைகள் இராக்காலங்களில் கயிறு பரிந்துசென்று மேயல் ஆர்கின்றதும், இரவில் மேய்ந்து பகற்போதில் நீர் நிலைகளிற் படிந்து கிடத்தலும் செய்கின்றனபோலும். "பனிமலர்ப் பொய்கைப் பகல்செல மறுகி மடக்கண் எருமை மாணுகு தழீஇப், படப்பை நண்ணிப் பழனத் தல்கும்" என உவர்க்கண்ணூர் புல்லங்கீரனூர் உரைப்பது காண்க.

இனி, எருமையின் ஆணினை, கடா, போத்து, ஏறு எனவும், பெண்ணெருமையினை, நாகு, பெடை எனவும் சான்றோர் வழங்குவர். "மடக்கண் எருமை மாண்நாகு தழீஇ[1]" எனவும், "எருமைப்பெடை[2]" எனவும் வருதல் காண்க. பிறவெல்லாம் பயின்ற வழக்கினவாம். இவற்றுள் ஆண் எருமை உழவு, சுமை தாங்கிச் சேறல் முதலியவற்றைச் செய்யும். பெண்ணெருமை பாலும் நெய்யும் தயிரும் வழங்கும்.

எருமைப்பாலைக் கோடற்பொருட்டு அதன் கன்றினை மனையகத்தே தூணிற் கட்டிவைப்பர். தன் கன்றினை அரிதின் நீங்கி மேய்ற்கு ஏகும் எருமை, ஆங்குத் தன் காதற்கன்றினை உள்ளி யுள்ளிக் கனைக்கும்; அதுபோது அதன்மடி சுரக்கும்; பால் தானே சொரியும். ஊர்க்குறுமாக்கள் (சிறுவர்கள்) விடியற்காலத்தே எருமையினை மேய்த்தற்கு ஓட்டிச் செல்வர். செல்வோர் அவற்றின் முதுகிலேறி அமர்ந்து செல்வர். இதனை ஆசிரியர் பூதன்றேவனார் என்பார், "மன்ற எருமை மலர்தலைக்காரான், இன்றீம் பாற்பயன் கொண்மார் கன்றுவிட்டு, ஊர்க்குறு மாக்கள் மேற்கொண்டு கழியும் பெரும்புலர் விடியல்[3]" என்றனர். மேலே இவர்ந்து செல்லும் சிறுவர்களையும், அவர்களைச் சுமந்தேகும் எருமைகளையும் கண்ட மதுரை மருதன் இளநாகனார் என்னும் நல்லிசைப்புலவர், எருமையைத் துறுகல் போலவும் சிறுவர்களை அதன்மேல் இருக்கும்

1. அகம். 146. 2. கலி. 114. 3. நற். 80.

மந்தி போலவும் உவமித்து, ''திரிமருப்பெருமை, மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம், சிறு தொழில் மகாஅர் ஏறிச் சேஞேர்க்குத், துறுகல் மந்தியின் தோன்றும் ஊரன்[1]'' என நகைச்சுவை பயப்பக் கூறினர்

உழவுக்கும் சுமை தாங்கற்கும் கடாக்களைப் பயன் கொள்வோர் அவற்றிற்கு வைக்கோலை உணவாகத் தருவர். ''உழுத நோன் பகடு அழிதின் ருங்கு[2]'' என வருதல் காண்க. அழி - வைக்கோல்.

'' அச்சொடு தாக்கிய பாருற்று இயங்கிய, பண்டைச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய, வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும் பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ[3]'' என வருவதனுல் எருமைக் கடா வண்டி ஈர்த்தற்குப் பயன்படுமாறு அறியப்படும். இன்றும், நாட்டுப்புறங்களில் எருமைக்கடாக்கட்குக் கழுத்தில் மணிகட்டி வண்டியிற் பூட்டித் தொழில் செய்வித்தல் கண்கூடு. மணிகட்டும் இச் செயல் பண்டும் இருந்த தென்பது, ''திரிமருப் பெருமை இருணிற மையான், வருமிடறு யாத்த பகுவாய்த் தெண்மணி, புலம்புகொள் யாமத்து இயங்குதொறிசைக்கும்[4]'' எனவரும் குறுந்தொகைப் பாட்டாலும் அறியப்படுகிறது. தொழில் முடிந்த வழி இவற்றைக் கழனிகளில் மேயவிட்டு நீர்நிலைகளிற் கிடப்பித்தல் பண்டும் இன்றும் உள்ள செயல். மென்புலத்தை உழுத உழவர் எருமைகளை வன்புலத்து மேயவிடுவர் எனப் புறப்பாட்டு[5] ஒன்று கூறுகின்றது.

91. நெறிமருப் பெருமை நீல விரும்போத்து
வெறிமலர்ப் பொய்கை யாம்பன் மயக்குங்
கழனி யூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே.

---

1. அகம். 206. 2. புறம். 125. 3. ஷ 90.
4. குறுந். 279. 5. ஷ. 395.

குறைவேண்டிப் பின்னின்று வந்த தலைமகற்குத் தோழி, "இவள் இளையள் விளைவிலள்" எனச் சேட்படுத்தது[1].

ப. உரை: நாற்றம் கொள்ளப்படாத கரும்பின் பூவாற் செய்யப்பட்ட நெடிய மாலையை யுடையள் என்பதனால் பேதை என்றவாறு அறிக. எருமைப்போத்து வெறிமலர்ப் பொய்கை ஆம்பல் மயக்கும் ஊர் என்றது, நல்ல தன்மையை ஆராயாது கெடுக்கும் ஊராதலால், நினக்கு ஈண்டு வருதல் பொருந்தாது என்பதாம். பழனவெதிர் என்பது கரும்பு.

உரை: முடங்கிய கொம்புகளையுடைய எருமையின் கரிய பெரிய ஆண் மணமுற்ற பூக்கள் நிறைந்த பொய்கைக்கண் உள்ள ஆம்பலைச் சிதைக்கும் கழனிகளை யுடைய ஊரனுக்கு மகளாகிய இவள் பழனங்களிலுள்ள கரும்பின் பூவால் தொடுக்கப்பட்ட நீண்ட மாலையினை யுடையளாவள், காண் எ. று.

நெறி, முடக்கம்; "வாடிய நெறிகொள் வரிக்குடர்[2]" என்பதன் உரைகாண்க. எருமையின் மருப்பு ஓங்கி நில்லாது மெய் முகங்களின் நெறியே முடங்கி வளர்தலின் நெறிமருப்பு எனப்பட்டது போலும். நீலம் கருமை; "திரிமருப் பெருமை இருள்நிற மையான்[3]" என்பவாகலின், நீலம் ஈண்டுக் கருமை யாயிற்று. "போத்துங் கண்டியும் கடுவனும் பிறவும், யாத்த ஆண்பாற் பெயர என்ப[4]" என்றதனால், எருமையின் ஆண்

---

1. சேட்படுத்தல் என்பது சேட்படை யெனவும் வழங்கும். அஃதாவது, தலைமகளைக் குறைநயபித்துத் தன்னிணைய கூட்டங் கூட்டலுறும் தோழி, தலைமகளது பெருமையும், தனது முயற்சியது அருமையும் தோன்றுதல் காரண மாகவும், இத்துணை அருமையுடையாள் இனி நமக்கு எய்துதற் கருமையுடை யள் என நினைந்து நீட்டியாது வரைந்து கோடல் காரணமாகவும் தலைமகனுக்கு இயைய மறுத்துக் கூறுநிற்றல் என்பர் ஆசிரியர், பேராசிரியர். "சேண் என்பது அகற்றல்; பட என்பது நிகழ்தல்; நிறுத்தல் என்பது தழீஇக்கோடல்: காப்பு மிகுதி சொல்லி அகற்றித்தழீஇக் கோடல் என்றவாறு" என்பர் இறையனார் அகப்பொருள் உரைகாரர்.

2. புறம். 160. 3. குறுந். 279. 4. தொல். பொ. 557.

போத்து எனப்பட்டது. ''அரிமல ராம்பல் மேய்ந்த நெறிமருப்பு, ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து[1]'' எனப் பிறரும் கூறியவாறு காண்க. வெதிர் என்னும் வினை வேறுபடாப் பல பொருள் ஒருசொல், பழனவெதிர் எனக் கிளக்கப்பட்டமையின், கரும்பின் மேலதாயிற்று. ''வினை வேறுபடாஅப் பலபொரு ளொருசொல், நினையுங்காலைக் கிளந்தாங் கியலும்[2]'' என்பது தொல்காப்பியம்; ஈண்டு, முதலிற் கூறும் சினையறி கிளவியாய்க் கரும்பின் பூவைச் சுட்டிற்று.

தலைமகளைக் குறைநயப்பித்துத் தன்னினுகிய கூட்டம் எய்து விக்கும் தோழி தலைவன் நீட்டியாது தெருண்டு வரைதல் வேண்டி உள்ளுறையால் காப்புமிகுதியும் தலைவியது அருமையும் உணர்த்தி வெளிப்படையால் அவளது இளமைப் பருவத்துப் பேதைமையினைக் காட்டிச் சேட்படுகின்ருளாகலின் தலைவியைப் பழன வெதிரின் கொடிப்பிணையலள் என்ருள். எனவே, சிறப்பில்லாத கரும்பின் பூவால் பிணையல் தொடுக்கும் இத்துணைப் பேதைமையுடையாள் நின் குறையைப் போக்குமாறு இல்லை என்றும், நீயே தெருண்டு நீட்டியாது வரைதல் வேண்டும் என்றும் தோழி கூறிஞளாம். ''நறுந்தண் தகரம் வகுளம் இவற்றை, வெறும்புதல்போல் வேண் டாது வேண்டி எறிந்துழுது, செந்தினை வித்துவார் தங்கை பிறர் நோய்க்கு, நொந்தினைய வல்லளோ நோக்கு[3]'' எனப் பிறரும் கூறுதல் காண்க.

எருமைப்போத்துப் பொய்கைக்கண் ஆம்பலின் நலங்கருதாது அதனைச் சிதைக்கும் என்றதனுல், நின் வரவால் விளையும் நன்மையை ஆராயாது இவ்வூரவர் நினக்கு ஏதம் செய்வர் என்றவாறும். ஆகவே, இது தலைவியது அருமை குறிக்குமுகத்தாற் காப்புமிகுதி உரைத்து வரைவுகடாவும் நோக்க முடைத்தாதல் அறிக. மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவன் தெருண்டு வரைவாஞவது.

பழநல் வெதிரின் என்ற பாடத்துக்குப் பழமையான நல்ல கருப்பின் பூ என்க. எனினும், இது பலபொருட்குரிய பொதுமை

1. அகம். 316. 2. சொல். 54. 3. திணைமா. நூற். 24.

நீங்கிக் கரும்பிற்கே யுரிய சிறப்புப் பொருண்மை விளங்க நில்லாமையின் சீரிய பாடம் அன்மை யறிக. (91)

92. கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்றுக்
காதற் குழவிக் கூறுமுலை மடுக்கும்
நுந்தை நும்மூர் வருதும்
ஒண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே.

"நினக்கு வரைந்து தருதற்குக் குறை நின் தமர் அங்கு வந்து கூருமையே," எனத் தோழி கூறினுளாகத் தலைமகள் முக நோக்கி இவள் குறிப்பினுல் கூறினுளென்பது அறிந்த தலைமகன், "வரைவு மாட்சிமைப்படின் நானே வருவல்" எனத் தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை: எருமைப் புனிற்றுத் தன் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும் என்றது. அவள் பொருட்டு உற்ருர்பக்கல் தான் பெறுவனவும் கூறியவாறு.

உரை: பெரிய கொம்பினையும் சிவந்த கண்ணினையும் ஈன்ற அணிமையினையுமுடைய தாயெருமை, தன் அன்புடைய கன்றுக்குச் சுரக்கும் முலைதந்து பாலூட்டும் நின் தந்தையது ஊர்க்கு, ஒள்ளிய வளை அணிந்த மடந்தையாகிய நின்னை யாம் பெறுதல் கூடுமாயின் யானே வருகுவன் எ. று.

கருமை, பெருமை; நிறப்பண்புமாம், எருமை சிவந்த கண்ணுடையது என்பதைக் "கருங்கோட்டுச் செங்கண் எருமை[1]" என்பதனுலும் அறிக. தன் கன்றின் நினைவு தன் உள்ளத்து எழுந்த துணையானே ஒள்ளிய மடிசுரந்து பால் மிகச்சொரியும் வளம் சிறந்ததாகலின், எருமையின் மடியை, ஊறுமுலை எனச் சிறப்பித்தார். புனிற்று முலை மடுக்கும் ஊர், நுந்தை நும்மூர் என இயையும். உரனுடைமை பற்றிக் கூறலின், வருதும் எனப் பன்மை வந்தது.

---

1. திணைமா. நூற். 137.

பல்லாற்ருனும் சேட்படை முதலியவற்ருல் அருமை செய்து அயர்க்கப்பட்டுத் தலைவியைப் பெறலருமை நினைந்து வருந்துமாறு தோன்ற நின்னை யாம் பெறினே என்றும், பெறுதல் வரைவு மாட்சிமைப் படுதலாதலின், அது நிகழ்ந்த விடத்துத் தன் தமர் வரவு தாழ்ப்பினும் தான் தாழாது வருவது விளங்க, நுந்தை நும்மூர் வருதும் என்றும் தலைமகன் கூறினன். மெய்ப்பாடு, பெருமிதம். பயன்: வரைவு.

இனி, பேராசிரியர், "கிழவோற் காயின் உரனொடு கிளக்கும் ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே[1]" என்புழி, இதனைக் காட்டி, "தாய் போன்று நும்மைத் தலையளிப்பல் எனத் தலைமகன் தலைமை தோன்ற உரனொடு கிளந்தவாறு காண்க" என்பர். பழையவுரைகாரர், "எருமைப் புனிற்ருத் தன் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும் என்றதனல், அவள் பொருட்டுத் தான் உற்ருர் பக்கல் பெறுவனவும் கூறியவாறு" என்பர். இவ்விருவருள், பேராசிரியர் கூறுவது, "வரைவுடன் படுதலும் ஆங்கதன் புறத்தும்[2]" என்புழி வரைவுடன்பட்ட தலைவன் நிகழ்த்தும் கூற்றுவகையிலும், பழையவுரைகாரர் கூறுவது, "வரைதல் வேண்டித் தோழி செப்பிய, புரைதீர் கிளவி புல்லிய எதிர்வின் கண்" தலைமகன் நிகழ்த்தும் கூற்றுவகையினும் அடகுங்மாறு காண்க.

அருங்கோட் டெருமை என்ற பாடத்துக்குப் பகையினம் நெருங்குதற்கரிய கோட்டினையுடைய எருமை என்க. (92)

93. எருமைநல் லேற்றின மேய லருந்தெனப்
பசுமோ ரோடமோ டாம்ப லொல்லா
செய்த வினைய மன்ற பல்பொழில்
தாதுண வெறுக்கைய வாகியிவள்
போதவிழ் முச்சி யூதும் வண்டே.

---

1. தொல். பொ. 302. 2. ஷை. ஷை. இளம் 105.

முயக்கம் பெற்றவழிப் பிறந்த வெறிநாற்றத்தால் பண்டையளவன்றி வண்டுகள் மொய்த்தனவாக, "இதற்குக் காரணம் ஏன்?" என்று வினவிய செவிலித் தாய்க்குக் கூறுவாள் போன்று தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

உரை: அன்னாய், பல பொழில்களிலும் மலர்ந்துள்ள பூக்களின் தேனாகிய உணவை வெறுப்பவுண்டு, இவளது மலர்ந்த பூவணிந்த கூந்தலை மூசி முரலும் வண்டினம் எருமையின் நல்ல ஏற்றினம் மேய்ந்து விட்டதனால் பசிய செங்கருங் காலியும் ஆம்பலும் பொருந்தாவாயின; அவை தேன் ஈட்டுவதாகிய வினை முற்றின, அதனால் இவ்வாறு மொய்ப்பவாயின, காண் எ. று.

வெறுக்கையவாகி, முச்சியூதும் வண்டு ஏற்றினம் மேயல் அருந்தென, மோரோடமோடு ஆம்பல் ஒல்லா; அவை செய்த வினைய மன்ற என இயையும். போத்து முதலியன போல, ஏறு ஏற்றை என்பனவும் "யாத்த ஆண்பாற் பெயரென மொழிப[1]" வாகலின், எருமையின் ஆண் ஏறு எனப்பட்டது. உழுதொழிற்கும், வண்டியிழுத்தற்கும் பயன்படும் சிறப்புடைமையின் நல்லேற் றினம் என்றார். ஆர்ந்தென என்பது அருந்தென என வந்தது. மேயல் ஆர்ந்தென்பது ஒரு சொல்லாய் மேய்ந்து என்னும் பொருளதாயிற்று. செய்தென என்னும் வினையெச்சம் முடிக்கும் சொல்லால் உணர்த்தப்படும் தொழிற்குத் தன் முதனிலைத்தொழில் காரணம் என்பதுபட வரும் இயல் பிற்றாகலின், வண்டினம் ஒல்லாமைக்கு மேயலருந்தென என்றது ஏதுவாயிற்று. மோரோடம், செங்கருங்காலி. இதன்பூ மிக்க மணமுடையது; இப்பூவை ஏனை நறுமண மிக்க பூக்களோடு விரவிச் செப்பினுள் அடைத்துவைத்தலும் பண்டையோர் மரபு: "முதிரா வேனில் எதிரிய அதரல், பராரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர், நறுமோரோடமொடு உடனெறிந் தடைச்சிய செப்பு[2]" எனச் சான்றோர் கூறியவாற்றால் இஃது உணரப்படும். இம்மோரோடம் மாரோடமெனக் குறிஞ்சிப்பாட்டிற் காணப்படுகிறது; "குல்லை பிடவம்

---

1. தொல். பொ. 527. 2. நற். 337.

சிறுமா ரோடம்[1]'' என வருதல் காண்க. செய்த வினை, செய்து முடிக்கப்பெற்ற வினை; எனவே, நிகழ்வில் அவ்வினையின்மை கூறியவாருயிற்று. மன்ற, தெளிவுப் பொருட்டாய இடைச்சொல். பல்பொழில் என்பது வினைப்படு தொகுதி யன்மையின் முற்றும்மை வாராதாயிற்று. போதவிழ் முச்சி ஊதும் என்றதனுல், அவிழ்ந்த போதிலுள்ள தேனையும் உண்ணுது வெறிதே மூசி முரன்றமை பெற்ரும்.

களவு நெறியில் தலைமகனைக் கூடியொழுகும் தலைவி கூந்தலில் வண்டினம் மிகுதியாக மொய்த்தது செவிலியின் கருத்தில் ஆராய்ச்சி பிறப்பிக்கவே, அவட்குத் தோழி பல பொழில்களுக்கும் சென்று ஆங்கு மலர்ந்து தேன் நிரம்பி நிற்கும் பூத்தொறும் தேனை வெறிக்க வுண்டு அவற்றை நீத்த வண்டினம் இவள் கூந்தலில் மொய்த்து முரலுகின்றன என்பாள், பல்பொழில் தாதுண வெறுக்கைய வாகி இவள் போதவிழ் முச்சி ஊதும் என்ருள். எனவே, பொழிற் பூக்களை வெறுத்தமையால் வண்டினம் மணங்கருதி இவள் போதவிழ் முச்சியினை நயந்தனவேயன்றிப் பிறிதில்லை எனச் செவிலிக்கு விடையிறுத்தவாருயிற்று. ''அறுகாற் பறவை யளவில் மொய்த் தலின், கண்கோ ளாக நோக்கிப் பண்டும், இனையையோ என வினவினள் யாயே[2]'' எனப் பிருண்டும் செவிலி வினவியவாறு காண்க. அற்றேல், மோரோடமும், ஆம்பலும் இத்தகைய மணங்கமழ்வன உளவே எனின், அவையும் எருமையின் ஏற்றினம் மேய்ந்து ஒழிந்தமையின் இலவாயின என்பாள், எருமை நல்லேற்றினம் மேயலருந்தென, பசுமோரோடமோடு ஆம்பல் ஒல்லா என்ருள். மோரோடம் மகளிர் கூந்தலின் மணங்கமழும் என்பது 'நறுமோ ரோடமோ டுடனெறிந் தடைச்சிய, செப்பிடந் தன்ன நாற்றம் தொக்குடன், அணிகிறங் கொண்ட மணிமருள் ஐம்பால், தளர்நறுங் கதுப்பு[3]'' எனவரும் நற்றிணைப் பாட்டாலும், ஆம்பலின் மணமும் அத்தகையதே என்பது, ஆம்பல்நாறும் தேம்

1. குறி. 78. 2. நற். 55. 3. நற். 337.

பொதி நறுவிரை[1] ''* எனவரும் இளங்கோவடிகளின் பேருரையாலும் இனிது உணரப்படும்.

எஞ்ஞான்றும் தேன் நாடி ஈட்டலே இடையருத வினையாகவுடைய வண்டினம், அஃது ஒழிந்து வாளாது முரலுமாறு இல்லையே என எழும் வினவிற்கு விடை கூறுவாளாய் அவை அவ் வினையை முற்ற முடித்து விட்டன என்பாள் செய்த வினைய மன்ற என்றாள். ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி[2]'' என்றதனால், வண்டினம் தேன் நாடும் வினையினையுடைய என்பதும், முற்றாத வினை செய்த வினை எனப்படாமையின் வினை முற்றியவாறும் அறிந்து கொள்க.

எருமையின் ஏற்றினம் மேய்ந்தமையால் வண்டினம் மோரோடமும் ஆம்பலும் ஒல்லாவாயின என்றது, தலைவனோடு கூடியதனால் தலைமகள்பால் உற்ற வேறுபாட்டினை அவள்தமர் உணர்ந்து இற்செறித்தமையும், அவைதாதுண வெறுக்கையவாகி இவள் போதவிழ் முச்சி யூதும் என்றது, அயலார் தமக்குரிய செயல்மேற் செல்லாது இவளது வேறுபாட்டினைச் சூழ்ந்து அலர் கூறுநிற்பர் என்பதும் உள்ளுறுத்து உரைத்தவாறு. மெய்ப்பாடு:

---

* ''அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை, ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரைத், தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தல்'' எனவரும் இதற்கு, அரும்பதவுரைகாரர், ''அன்னமாகிய மென்னடையினையும், ஆம்பல் நாறும் நறுவிரையையும், தாமரையாகிய செவ்வாயையுப், அறளாகிய கூந்தலையுமுடைய பொய்கையாகிய பெண்'' என்றார். எனவே, இதன்கண் கூறிய நடை, விரை, வாய், கூந்தல் என்ற இவற்றிற்கு முறையே அன்னமும், ஆம்பலும், தாமரையும், அறலும் உவமைகளாக நின்றனவாம். இனி அடியார்க்குநல்லார், தேம்பொதி நறுவிரை ஆம்பல் நாறும் தாமரையென இயைத்துப் பொருள் கொள்வர்; ''இனித் தேம்பொதி நறுவிரைத் தாமரையாகிய ஆம்பல் நாறும் செவ்வாய் எனினுமமையும்'' என உரை விகற்பமும் கூறுவர். எனினும், இவ்வைங்குறுநூற்றுப் பாட்டின் கருத்தை நோக்கின் அரும்பதவுரைகாரர் கூறுவதே உண்மையுரையாதல் விளங்குகிறது. இஃது அறிஞர் ஆராய்ச்சிக் குரியதொன்று.

1. சிலப். 4:73. 2. குறுந். 2.

பெருமிதம். பயன்: செவிலி ஐயம் தீர்த்தலும், தோழி குறிப்பால் வரைவுகடாதலுமாம்.

எருமைநல் லேறின மேய லருந்தென என்ற பாடத்துக்கு, ஏற்றினம் ஏறினம் என வந்ததாக உரைத்துக் கொள்க. போதவிழ் மூச்சூய் ஊதும் வண்டு என்பது பாடமாயின், போது அவிழ்ந்து நெகிழ்ந்து பதனழிய ஊதும் வண்டு என்று உரைத்துக் கொள்க. ஊய்தல், பதனழிதல். (93)

94. மள்ள ரன்ன தடங்கோட் டெருமை
மகளி ரன்ன துணையொடு வதியும்
நிழன் முதி ரிலஞ்சிப் பழனத் ததுவே
கழனித் தாமரை மலருங்
கவின்பெறு சுடர்நுதல் தந்தை யூரே.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீள்கின்றான் சொல்லியது.

ப. உரை: எருமை துணையொடு வதியும் என்றது வரைந் தெய்தியவழித் தலைமகளோடு தான் ஒழுகும் இன்ப வொழுக் கத்தினை நினைந்து கூறியவாறு. கழனித் தாமரை மலரும் என்றது, அவ்விடத்துத் தன்னைக் கண்டு மகிழ்வார் முகமலர்ச்சி கூறிய வாறும்.

உரை: அழகுபெற்ற ஒளிவீசும் நெற்றியினையுடையாட்குத் தந்தையினது கழனிக்கண் தாமரை மலரும் ஊர், வீரர் போன்ற பெரிய கொம்பினையுடைய எருமை அவர் தம் மகளிர் போன்ற துணையாகிய பெண்ணெருமையோடு தங்கும் நிழல் சூழ்ந்த நீர் நிலைக்கு அருகேயுள்ள பழனத்திடத்ததாகும். எ. று.

எருமைக்கு வீரர் உவமையாதல், "கார்ச்சே ணிகந்த கரை மருங்கின் நீர்ச்சேர்ந்து ஒருமை யெழிலேறு எறிபவர் சூடிச்,

செருமிகு மள்ளரிற் செம்மாக்கும்[1]'' என்றும், ''ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து .... மூதூர்ப் போர்செறி மள்ளரிற் புகுதரும் ஊரன்[2]'' என்றும் சான்ளுேர் கூறுமாற்ருல் தெளியப் படும். ஆண் எருமைக்கு மள்ளரைக் கூறினமையின், அவற்றின் துணைக்கு அவர் தம் மகளிரை உவமை கூறினுர். முதிர்தல், சூழ்தல்; ''பார்முதிர் பனிக்கடல்[3]'' என்ருற் போல. தடங்கோடு உரிச்சொல் முடிபு. பழனம், ஊரவர்க்குப் பொதுவாகிய நிலம் என்பர்.

தனக்குச் சிறந்தாளாகிய தலைமகளைத் தலைமகன் நினைக்குந் தோறும், அவளது திருநுதல் அவன் நெஞ்சிடைத் தோன்றி அழகும் ஒளியும் திகழ நின்று தன்னை அவன் கண்ணிற் காணும் போழ்தினும் மிக்கு விளங்குதலின், கவின்பெறு சுடர்நுதல் எனச் சொல்லி இன்புற்ருன், வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தான் ஒருவன், வினைமுடியாமையின் பாசறைக்கண் இருந்து தான் குறித்த பருவவரவு கண்டு ஆற்ருது தன் தலைவியை நினைந்தானுக, அவன் உள்ளத்தும் அவளது நுதல் தோன்றுதலின், அஃது, ''இலங்கு நிலவின் இளம்பிறை போல .... கவின் பெறு சுடர்நுதல்[4]'' என்று அவனுல் சிறப்பிக்கப்பட்ட வாறறிக. இது, ''பண்பிற் பெயர்ப்பினும்[5]'' என்ற சூத்திரத்து ''ஆற்றிடை யுறுதலும்'' என்றதனை இரட்டுற மொழிதலால், ''வரை விடை வைத்துப் பிரிந்தான் ஆற்றிடை வருத்தமுற்றுக் கூறுவனவும்'' கொள்ளப்படும் என்று கொண்டு அமைத்துக்கொள்ளப்படும். அதனுள், வரை விடைவைத்துப் போகின்ருன் கூறுவனவும் மீள்கின்ருன் கூறுவன வும் என்ற இரண்டனுள் இது வரைந்து எய்தியவழித் தலைமகளோடு தான் ஒழுகும் இன்ப ஒழுக்கத்தையும், வரைவின்கண் காண்போர் மகிழுமாற்றையும் உள்ளுறுத்துக் கூறுதலின் மீள்கின்ருன் கூற்ருயிற்று.

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிபவன், அது முற்ருத வழி அதனுனும் பயனை நினைந்து தன்னுள் மகிழ்தல் ஆள்வினை

1. கார். 40 : 31. 2. அகம். 316. 3. முருகு. 45.
4. ஐங். 443. 5. தொல். பொ. 103

மிக்க அவன் தலைமைப் பண்புக்கு இழுக்காதலின், அவ்வாறன்றி அது முற்றியதும் அதனல் எய்தலுறும் பயனும் உடனெய்தியது போறலின், தன்னுள் மகிழ்ந்து தான் பெறவிருக்கும் இன்ப மிகுதியினை நினைந்து உவகையுறுவான், மள்ளர் அன்ன தடங்கோட் டெருமை, மகளிர் அன்ன துணையொடு வதியும் என்று வியந்தான். நிலமுதிர் இலஞ்சிப் பழனத்தது என்றது, தலைவி மனையின் அருளும் பொருளும் சிறப்பித்தவாறு.

இதுகாறும் பிறர் அறிவுறுதல் அஞ்சி மறைந்து ஒழுகியது போலாது கண்டோர் மகிழ்ந்து முகமலர்ச்சி எய்துமாறு ஒழுகுவது நினைந்து உவகைமிகுகின்ருன் என்பது எய்தக் கழனித் தாமரை மலரும் என்ருன். தலைவிக்கு ஊர் தன்னூரே யாயினும், அவள் வாழும் பகுதியை, அவட்கு அயன்மை தோன்றத் தந்தையூர் என்ருனும். இனித் தன் வரைவு எதிர்கொண்டு மகட்கொடை நேரும் உரிமையுடையவன் அவள் தந்தையாகலின் தந்தையூர் என்ருன் என்றுமாம். மெய்ப்பாடு : உவகை. பயன் : மகிழ்தல்.

திறங்கோடு என்ற பாடத்துக்கு மள்ளர் போலத் தொழிற் கூறுபாட்டினையுடைய கோடு என்க. தொழிற்கூறுபாடு, கொலை வகை.

இவை நான்கும் மருதத்துக் களவு. (94)

95. கருங்கோட் டெருமை கயிறுபரிந் தசைஇ
நெடுங்கதிர் நெல்லி ணுண்மேய லாரும்
புனன்முற் றூரன் பகலும்
படர்மலி யருநோய் செய்தன னெமக்கே

உண்டிக்காலத்து மனைக்கண் வருதலும் சுருங்கிப் பரத்தை யிடத்தனுய்த் தலைமகன் ஒழுகியவழி அவற்கு வாயிலாய் வந்தார்க் குத் தலைமகள் சொல்லியது.

ப. உரை: எருமை கயிற்றைப் பரிந்து போய் நாண்மேயல் ஆரும் என்றது, விலக்குவார்க்கு அடங்காது புறத்தொழுக்கம் விரும்புவான் எ. று.

உரை : பெரிய கொம்புகளையுடைய எருமைகள் இரவில் தாம் கட்டப்பெற்றிருக்கும் கயிற்றை அறுத்துக் கொண்டு சென்று நெடிய கதிர்களையுடைய நெல்லினை நாளுணவாக உண்ணும் நீர் நிறைந்த வயல் சூழ்ந்த ஊரன், பகற்காலத்தும் படர்மலி யருநோயினை எமக்குச் செய்து ஒழுகுகின்றானாகலின், அவன் பொருட்டு வாயில் வேண்டுவது என்னை எ. று.

பரிதல், அறுத்துக்கோடல்; சேற்றுநிலை முனைஇய செங்கண் காரான், ஊர்மடி கங்குலின் நோன்றளை பரிந்து, கூர்முள் வேலி கோட்டின் நீக்கி[1]" எனச் சான்றோர் உரைக்குமாறு காண்க. நாண்மேயல் விடியற்காலத்திற் பெறும் மேய்ச்சல்; நாளிரை, நாளுணவு என்றாற்போல. "இருவெதி ரீன்ற வேற்றிலைக் கொழுமுளை, சூன்முதிர் மடப்பிடி நாண்மேயல் ஆரும்[2]" எனப் பெரியோர் வழங்குமா றறிக. பரத்தைமையால் இரவுப்போதில் வாராமையே யன்றி, உண்டிக்காலமாகிய பகற்போதிலும் தலைவனது வாராமை உணர்த்தி நிற்றலின் உம்மை இறந்தது தழீஇயிற்று. முற்றுதல், சூழ்தல். படர்மலிஅருநோய், பலகாலும் நினைப்பெழுதலால் உளதாகும் பொறுத்தற்கரிய நோய்; இது சான்றோர் உரைகளில் " நன்னுதற் பசந்த படர்மலி யருநோய்[3]" எனவும், "படர்மலி எவ்வமொடு மாதிரந் துழைஇ[4]" எனவும் வருதல் காண்க

தோழி முதலிய அகம்புகும் மரபின் வாயில்கள் விலக்கவும் அடங்காது புறத்தொழுக்கமே விரும்பித் தலைமகன் இரவிற் பிரிந்தொழுகியதனால், படர்மிகுந்து தான் வருந்தி இருந்ததனை உள்ளுறையாற் குறித்தவள், "இரவுக்காலத்து அவன் வாராமையால் எழுந்த வருத்தத்தை உண்டி கோடற்கு பகற்காலத்து வருதலால் ஆற்றியிருந்தேன்; இனி அதுவும் ஒழிந்தமையால் ஆற்றேனாயினேன்" என்பாளாய், பகலும் படர்மலி அருநோய் செய்தனன் என இனைந்து கூறினாள். வாராமையாகிய வினை அவன்பால் நிகழ்ந்ததாயினும், அதன் பயனாய் விளையும் துன்பம் இரவும்

1. அகம் 46. 2. நற். 116. 3. ஷை. 322.
4. அகம். 189.

பகலும் முறுகிப் பெருகிப் பொறுத்தற்கரிய துன்பத்தைப் பயப்ப தாயிற்றென்றற்குப் படர்மலி அருநோய் என்றும், அது தானும் அவன் வந்தவழி அருகுதலும் வாராவழிப் பெருகுதலும் செய்தலின் அந்நோய்க்கு முதல் அவனே என்பாள் செய்தனன் என்றும் அவன் வினையாற் கூறினள். வாராவழி, அவன் தனக்குச் செய்த தலையளி நினைவில் எழுந்து வருத்துவதோடு பரத்தை முதலா யினார்க்குச் செய்தலால் பொறாமை தோற்றி மிக்க நோயினை விளைவிப்பத் தான் ஆற்றாளாவது கண்டு தோழி முதலாயினாரும் ஆற்றாது மிக வருந்துகின்றமையின் தான் ஆற்றாமை மீதூர்ந்தமை தோன்றத் தலைவி, எமக்கே என எடுத்து மொழிந்தாள்.

இரவில் எருமை கயிற்றைப் பரிந்துபோய் நெல்லின் நாண் மேயல் ஆரும் என்றதனால், தலைவன் இரவுப்போதில் வாராது விலக்குவார் சொல்லும் கொள்ளாது புறத்தொழுகியது கூறிய வாறாயிற்று. நெடுங்கதிர் நெல் எனச் சிறப்பித்தது, பரத்தையின் நலத்தைப் புகழ்வது போலப் பழித்தவாறு. பரத்தையின் நலத்தை நாண்மேயல் என்றமையின் அந் நலத்தின் புதுமை சுட்டினாளாம்; ஆகவே, இவ்வாறு யாவர் விலக்கினையும் கைகடந்து சென்று புதுநல மகளிரைக் கூடியுறைபவன், எம்மை நினைந்து வருமாறு இல்லை யாகலின் அவன் பொருட்டு நீவிர் வாயில் வேண்டுவது என்னை என மறுத்தவாறு. இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவு ஆற்றாமை, ஏனை மெய்ப்பாடு: வெகுளி. பயன்: வாயின் மறுத்தல். (95)

96 அணிநடை யெருமை யாடிய வள்ளல்
மணிநிற நெய்த லாம்பலொடு கலிக்கும்
கழனி யூரன் மகளிவள்
பழன வூரன் பாயலின் றுணையே,

பரத்தையர் பலரோடும் ஒழுகுதல்கண்டு பொறாதிருந்த தலைமகள் தலைமகன் மனைக்கட் புகுந்துழி உடன்படுதல் கண்ட வாயில்கள் தம்முள்ளே சொல்லியது.

ப. உரை : எருமை உழுது உழக்கிய அள்ளற்கண்ணே நெய்தலும் ஆம்பலும் கலிக்கும் என்றது, தலைமகற்கு வேண்டுவன புரிகின்ற இல்வாழ்க்கைக்கண்ணே தாம் பெறுகின்ற சிறப்புக் கூறியவாறு.

உரை: அழகிய நடையினையுடைய எருமை உழக்கிய சேற்றின்கண் நீலமணியின் நிறத்தினையுடைய நெய்தலும் ஆம்பலும் தழைக்கும் கழனிகளையுடைய ஊரனுக்கு மகளாகிய இவள் பழனங்களையுடைய ஊரனாகிய தலைமகற்குப் பாயல் இன்துணைவி ஆயினாள் எ. று.

" வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும் பெருமிதப் பகடு[1]" எனச் சான்றோர் சிறப்பிக்கும் அழகு உடைமையின் அணிநடையெருமை என்றார். அழகு, ஈண்டுப் பெருமிதம். எருமை உழக்கிய வயல் சேறுற்று உழுததுபோல வளம்பெறுதலின், நெய்தலும் ஆம்பலும் தழைப்பவாயின என உணர்க. நெய்தல் நீலமணி போல்வது என்பது, " சுரும்புண மலர்ந்த பெருந்தண் நெய்தல் மணியேர் மாணலம்[2]" என வருதலாலும் துணியப்படும். ஊரன் மகள் என்பது " அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகை " யாதலின், நான்கனுருபு விரித்துரைக்கப்பட்டது; ஏனையிடங்களினும் இதனை உரைத்துக் கொள்க. பாயல் இன்துணை, கூட்டத்திற்கு இனிய துணை, " பாயல் இன்றுணையாகிய பணைத் தோள், தோகை மாட்சிய மடந்தை[3]" எனப் பிறண்டும் வருமாறு காண்க. பாயல், உறக்கமுமாம்; " பன்னாலும் பாயல் பெறேஎன் படர்கூர்ந்து[4]" என்றாற் போல.

பரத்தையர் பலருடன் கூடி ஒழுகும் பான்மையன் என்றற்குப் பழனவூரன் என்றும், அவ் வொழுக்கத்தாற் பொருது வேறுபட்டிருந்தாள் அவன் வருதலும் புலத்தலின்றிக் கற்புக்கடம் பூண்டு அமைந்தமையின் பாயல் இன்றுணை என்றும் கூறினர்,

தாம் வாழும் அள்ளற்கட் புகுந்து தம்மை மயக்கி உழக்கிய எருமைக்குத் தாமே கலித்துப் பயன்படும் நெய்தலும் ஆம்பலும்

1. புறம். 90. 2. அகம். 290. 3. ஐங். 293.
4. கலி. 37.

உள்ள கழனியூரன் மகள் என்றது, தலைவன் புறத்தொழுக்கத்தால் தன்னைக் கலக்கி நுதல் பசந்து மேனி வேறுபாடு எய்துவித்தானாக வும், தலைவி அவன் புக்கவழி எதிரேற்று வழிபாடு புரிந்த கற்பு நலத்திற்கு ஏதுவாகி நின்றது. இது. ''கற்புங் காமமும்[1]'', என்புழிக் கூறப்படும் கிழத்தி மாண்புகளுள் நற்பாலொழுக்கம்.

இனி. நச்சினார்க்கினியர், ''இது கற்புக் கூறியது'' என்றும், இவ்வாறு வாயில்கள் தம்முட் கூறியது, ''வாயில் உசாவே தம்முளும் உரிய[2]'' என்பதனால் அமையும் என்றும் கூறுவர், இனிப் பழைய வுரைகாரர்' எருமையின் செய்தியால், ஆம்பலும் நெய்தலும் தழைக்கு மென்றது, வாயில் பெறும் சிறப்புக்குறித்து நின்றது என்பது காண்க. மெய்ப்பாடு: வியப்பு. பயன்: தம்முள் மகிழ்தல்

அணிநிற வெருமை என்ற பாடத்துக்கு அழகிய நிறம் உடைய எருமை யென்று பொருள் கூறிக் கொள்க. (96)

97. பகன்றை வான்மலர் மிடைந்து கோட்டைக்
கருந்தா ளெருமைக் கன்று வெரூஉம்
பொய்கை யூரன் மகளிவள்
பொய்கைப் பூவி னறுந்தண் ணியளே.

புறத்தொழுக்கம் இன்றியே யிருக்கவும் உளதென்று புலந்த தலைமகளைப் புலவி நீக்கிய தலைமகன் புணர்ச்சியது இறுதிக்கண் தன்னுள்ளே சொல்லியது.

ப. உரை. தாயினுடைய பகன்றைமலர் மிடைந்த கோட்டைக் கன்று வெரூஉம் என்றது, தன் தோளில் அணிந்த மாலையைப் பிறிதொன்றற் கணிந்த மாலை யெனக் கருதினள் என்பதாம்.

உரை: பகன்றையின் வெள்ளிய மலர்மிடைந்த கரிய தாள் களையுடைய தாயெருமையின் கோட்டைக் கண்டு அதன் கன்று அஞ்சும் பொய்கை யூரனுக்கு மகளாகிய இவள் பொய்கைக்கண் மலர்ந்த ஆம்பற் பூவினும் குளிர்ச்சியையுடையளாவள் எ. று.

1. தொல். பொ. 150. 2. தொல். பொ. 512.

வான்மலர், வாலிய மலர்; ''வான்சுதை வண்ணம் கொளல்[1]'' என்றாற்போல. மிடைதல், நெருங்கச் சூடுதல். எருமை பகன்றை மிடைந்த கோட்டவாய் வருமென்பதனை, எருமைச் சுவல்படு முதுபோத்து .... குரூஉக் கொடிப் பகன்றை சூடி மூதூர்ப், போர்ச்செறி மள்ளரிற் புகுதரும்[2]'' என்பதனாலும், அது கருந் தாளது என்பது காட்சியளவையானேயன்றி, '' கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை[3]'' எனவரும் சான்றோர் உரையாலும் உணரப் படும். ஆம்பல் '' மலரினும் தான் தண்ணியளே[4]'' என்று சான்றோர் கூறுதலின், பொய்கைப்பூ என்றது ஆம்பலாயிற்று. ஐந்தாவது உறழ்வின்கண் வந்தது. தட்பத்தை உணர்ந்து மகிழ்ந்து கூறலின், ஏகாரம் தேற்றம். கன்று வெரூஉம் ஊரன், பொய்கையூரன் என இயையும்.

தன்பாற் புறத்தொழுக்கம் இன்றாகவும், உளதெனக் கருதிப் புலந்த தலைவியைத் தெளியத் தகுவன கூறிக் கூடினனாகலின், அதனைப் பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக் கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம் என உள்ளுறுத்து உரைத்தான். வெயில் தெறும் வெம்பகற் போதின்கண் பொய்கை நீர் புறத்தே சிறுவெம்மையும் அகத்தே தட்பமும் உடையதாதல் போலத் தான் புறத்தொழுகிய காலத்துத் தலைவி, புறத்தே வெகுண்டாள் போலவும் அகத்தே அன்புமிக்கும் ஒழுகற்பாலள் என்பான் பொய்கையூரன் மகள் என்றும், அஃதில்வழி எஞ்ஞான்றும் தட்பங்குன்றாத பொய்கைப்பூப்போல் தண்ணியளாதற் குரியாள், அதனினும் மிக்க தட்பமுடையளாயினாள் என்பான் பொய்கைப் பூவினும் நறுந்தண்ணியளே என்றும் கூறினான். புணர்ச்சிக்கண் அகமும் புறமும் வெம்மையின்றி மிகக்குளிர்ந்து இன்பம் செய்தல் பற்றி, நறுந்தண்ணியள் என்றான்; பண்டு களவிற் புணர்ச்சி எய்தியபோதும், '' ஒடுங்கீ ரோதி ஒண்ணுதற் குறுமகள், நறுந் தண்ணீரள்[5]'' என்று தோழியும் கூறினாள்.

பொய்கை என்றது குடிமைச்சிறப்பினைச் சுட்டியதாயின், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தொழுகும் சால்புடைமை

---

1. குறள். 714. 2. அகம். 316. 3. நற். 260.
4. குறுந். 84. 5. குறுந். 70.

விளக்கியதாகக் கொள்க. இவ்வாறு தலைவியைத் தலைவன் புகழ்தல் வேட்கை மிகுதியால் நிகழ்தலின் அமையும் என்பர்; "நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியின் புகழ்தகை வரையார் கற்பினுள்ளே[1]" என்ப.

தாயெருமையின் கோட்டிற் கிடந்த பகன்றை மலரைக் கண்டு அதன் கன்று வேறுபட நினைந்து வெருவியது போல, தன் தோளிற் கிடந்த மாலையைப் புறத்தே பிறர் அணிந்த தெனப் பிறழ உணர்ந்து புலக்கின்றாள் என்றானும். இஃது உள்ளுறை வகை ஐந்தனுள் நகையின் பாற்படும். மெய்ப்பாடு: உவகை. பயன் மகிழ்தல். (97)

98. தண்புன லாடுந் தடங்கோட் டெருமை
திண்பிணி யம்பியிற் றோன்று மூர
ஒண்டொடி மடமக ளிவளினும்
நுந்தையும் யாயுங் கடியரோ நின்னே.

புறத்தொழுக்கம் உளதாகிய துணையானே புலந்து வாயில் நேராத தலைமகள் கொடுமை தலைமகன் கூறக் கேட்ட தோழி அவற்குச் சொல்லியது.

ப. உரை: இவளினும் நுந்தையும் யாயும் கடியரோ என்றது, நின்னிடத்துக் குற்றம் உளதாகியவழிக் கழறுங்கால் இவளினும் கடியரோ நுந்தையும் யாயும் என்றவாறு; அவரினும் கடுமையாற் கூறுதற் குரியாள் இவள் என்பதாம்.

நீராடும் எருமை பலரும் ஏறுதற்குரிய அம்பிபோலத் தோன்றும் என்றது, பலர்க்கும் உரியையாவை யெனப் புலந்தாள் என்பதாம்.

உரை: குளிர்ந்த நீரின்கண் ஆடும் பெரிய கொம்பினையுடைய எருமை. திண்ணிதாய்ப் பிணிக்கப்பட்ட அம்பி போலத் தோன்றும் ஊரனே, நின்பாற் குற்றமுளதாயவிடத்து அதுபற்றி நின்னைக்

1. தொல். பொ. 228.

கடியுங்கால் நின் தந்தையும் தாயும் ஒள்ளிய தொடியும் மடப்பமுமுடைய இவளினும் கடுமை யுடையராவரோ, கூறுக் எ. று.

திண்பிணி யம்பி அசைவின்றித் திண்ணிதாய்ப் பிணிக்கப்பட்ட அம்பி. அம்பி, தோணி. நீரலையால் அசைதலின் நீக்குதற்குத் திண்ணியதாய்ப் பிணித்தல் வேண்டுதலின், திண்பிணி யம்பி என்ருர். எருமைக்கு அம்பி உவமையாதல், "மரையேற்றின் மேலிருந் தாடித் துறையம்பி யூர்வான்போல் தோன்று மவன்[1]" என்பதனுலும் அறியப்படும். இவளினும் என்புழி உறழ்ச்சி, தந்தை தாயரினும் மிக்குற்ற சிறப்பினையுடையாள் என்பது தோன்ற நின்றது. அச்சிறப்பு, தந்தைதாய் என்ற இருவர் கடனும் தான் ஒருத்தியே ஆற்றுதல். குணநாடி மகிழ்தலினும் குற்ற நாடிக் கடிந்து தூய்மை செய்தலில் சிறந்தமையின், தந்தையை முற்கூறினர். சான்ருேனுக்குதல் தந்தைக்குக் கடனே[2]" எனச் சான்ருேர் கூறுமாறு காண்க. நின் னென்புழி இரண்டாவது தொக்கது; "ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின், மெய்யுருபு தொகா இறுதியான[3]" என ஆசிரியர் கூறியவாறு அறிக.

வாயில்பெற வேண்டிப் பல்லாற்ருனும் இரந்து பின்னின்ற தலைமகற்குத் தலைவி அது நேராமையின் அவன் வருந்தி அவளது கொடுமை கூறக் கேட்ட தோழி நின்பால் தவறுளதாய வழி அதுபற்றி நின்னைக் கழறிக் கூறும் உரிமையுடைய நின் பெற்ருேரினும் இவள் மிக்க உரிமையுடையவள் என்பாள், இவளினும் நுந்தையும் யாயும் கடிரோ நின்னே என்ருள். "தாய் போற் கழறித்தழீஇக் கோடல், ஆய்மனைக் கிழத்திக்கும்" உரித்தென்றதனுல், வாழ்க்கைத்துணையாம் நல்லியைபால் தான் இல்லிருந்து செய்யும் பேரறம் மாட்சியெய்துவது குறித்து, கடிவன கடிதலும் அவட்கு அறமென்றவாருயிற்று. பெற்ருேர் நின்பால் தமக்குள்ள மகன்மை உரிமையால் தகுவன கூறிக் கழறுமிடத்து நின் மனத்து அச்சமும் அவலமும் பிறத்தல் போலாது, இவள் கழறிக் கூறுந்தோறும் நின்மனத்துப் பேரின்பம் சுரந்து மிகுதலின்,

1. கலி. 104. 2. புறம். 312. 3. தொல். சொல். 105.

[1] உரிமை இவட்கு மிகவுளதாயிற்று; அதனால் கடுமை மிகுவ தாயிற் றாகலின், நீ இவள் கொடுமை கூறுதல் என்னை என்றுளாம். இனி பிறப்புத்தோறும் இடையறாது தொடரும் பெருங்கிழமை யுடைமையால் இவளது உரிமை பெரிதென்றா ளெனினுமாம்.

நீராடும் எருமை பலரும் ஏறுதற்குரிய அம்பிபோலத் தோன்றும் ஊரனாகையால் நீ மகளிர் பலர்க்கும் உரியனாயினை; அது கண்டு பெற் றோரினும் உரிமை மிகவுடைமையால் தலைவி கழறினாளாக நீ கொடுமை கூறல் கூடாது எனத் தோழி மறுத்தவாறு.

இது, "பெறற்கரும் பெரும்பொருள்[2]" என்ற சூத்திரத்து, "பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி, இழைத்தாங் காக்கிக் கொடுத்தற்கண்" தோழி நிகழ்த்தும் கூற்றுவகையாகும். மெய்ப்பாடு: பெருமிதம். பயன்: தலைவி கேட்டு வாயில் நேர்வா ளாவது. (98)

99. பழனப் பாகன் முயிறுமூசு குடம்பை
கழனி யெருமை கதிரொடு மயக்கும்
பூக்கஞ லூரன் மகளிவள்
நோய்க்குமருந் தாகிய பணைத்தோ ளோளே.

தோழி முதலாயினர் தலைமகன் கொடுமைகூறி விலக்கவும் தலைமகள் வாயில் நேர்ந்துழி அவன் உவந்து சொல்லியது.

---

1. காதலர் கூட்டத்துக் கழற்றுரை நிகழின் இன்பம் சுரக்கும் என்ற இயல்பினை லார்டு பைரன் 'Lord Byron' என்பார்.

"They smile so when one's right and when one's wrong,
They smile still more and there intervence
Pressure of hands, perhaps even a chaste kiss;"

என்று கூறியிருத்தல் காண்க.

— *Don Juan*. Can. II

2. தொல். பொ. 150.

ப. உரை : முயிறுமூசு குடம்பையை நெற்கதிரோடு எருமை மயக்கும் என்றது. யான் செய்த கொடுமையையும் அவர்கள் தன் மேற் காதலித்துக் கூறியவற்றையும் சிதைத்து என்பக்கலே நின்ருள் என்பதாம்.

உரை : பழனங்களிலுள்ள பாகல் இலையில் முயிறுகள் கூடமைத்து முட்டையிட்டு நெருங்கி உறைகின்ற அக்கூடுகளைக் கழனிக்கண் மேயும் எருமைகள் நெற்கதிர்களோடு சேரச் சிதைக்கும் பூக்கள் நிறைந்த ஊரனுக்கு மகளாகிய இவள், யான் உற்ற நோய் தீர்தற்குரிய மருந்தாகிய பருத்த தோள்களை யுடைய ளாயினுள் எ. று.

பாகல், பாகற்கொடி. ''பாகல் பலா என்று உரைப்பாரு முளர்[1]'' எனப் புறநானூற்றுரைகாரர் கூறுவர். இனி மருதனிள நாகனுர் பாகற் பழத்தை, 'பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்[2]', என்றலின் பாகல் வேறு பலா வேறு என்பது விளங்கும். "பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை, கழனிநாரை உறைத்தலின் செந்நெல், விரவு வெள் ளரிசியின் தாஅம் ஊரன்[3]'' என்புழி முயிற்றுக் குடம்பை செந்நெல் அரிசிபோலத் தாஅம் என்றமையின், இப் பாட்டிற் கதிர் என்றது நெற்கதிரையே யாயிற்று.

தோழி முதலிய வாயில்கள், தன் கொடுமையினை எடுத்து அவள்பாலுள்ள காதலால் மொழிந்து விலக்கவும் தனக்கு வாயில் நேர்ந்து இன்பமெய்துவித்ததனை உள்ளுறையால் கூறினுணுகலின், அவ் வின்பப்பேறு குறித்து வாயில் வேண்டுங்கால் எய்திய நோயினைத் தான் நீங்கியது நினைந்து மகிழ்ந்து கூறுவான் தலைவன், நோய்க்கு மருந்தாகிய பணைத்தோளாள் என்ருன். இவர்கள் விலக்குதலால் விலங்கி வாயில் நேராள் கொல்லோ என்று எய்திய வருத்தம் அவள் அது நேர்தலும் தோளொடு கூடி நீங்கினு ணுகலின் நோய்க்கு மருந்தாகிய பணைத்தோள் எனச் சிறப்பித்தான். இவள் எனச் சுட்டியது, வாயில்கள் கூறிய கொடுமையினையும் தலைவனது இன்றியமையாமையினையும் தூக்கிப் பின்னதன்

1. புறம். 16. 2. நற். 180. 3. அகம். 255.

பெருமை உணர்ந்து வாயில்நேர்ந்த சிறப்புணர நின்றது. பிரிவின்கண் தம்மையே நினைப்பித்து வருத்தமெய்துவித்துப் புணர்வின்கண் தம் செறிவால், அவ்வருத்தம் போக்கி இன்ப மிகுவித்து நோய் செய்த தாமே, மருந்தாய்ப் பயன்படும் பெருமை குறித்துத் தலைவி தோளைப் பணைத்தோள் எனப் பாராட்டினன்; "பிணிக்கு மருந்து பிறமன் ஆயிழை, தன்னோய்க்குத் தானே மருந்து[1]" எனத் திருவள்ளுவனார் சிறக்கக் கிளந்தவாறு அறிக.

எருமை முயிறு மூசு குடம்பையினையும் நெற்கதிரையும் சிதைக்கும் என்றதனால், இவள் தனக்கு வாயில்கள் கூறிய விலக்குரையினையும் என் கொடுமையினையும் சிதைத்து என்பாற் செறிவாளாயினள் என்றானும். மெய்ப்பாடு: உவகை. பயன்: மகிழ்தல்.

பழனப் பாகர் என்றும் பாடம் உண்டு. (99)

100. புனலாடு மகளி ரிட்ட வொள்ளிழை
மணலாடு சிமையத் தெருமை கிளைக்கும்
யாண ரூரன் மகளிவள்
பாணர் நரம்பினு மின்கிள வியளே.

வாயில் நேர்தற்பொருட்டு முகம்புகுவான் வேண்டி இயற்பழித்துழித் தலைமகள் இயற்பட மொழிந்த திறம் தலைமகற்குத் தோழி சொல்லியது.

ப. உரை: மகளிரது மறைந்த இழையை எருமை கிளைக்கும் ஊரன் மகள் என்றது, இப்போது வாயில் நேர்தலேயன்றிக் களவுக் காலத்து நீ செய்த நன்மை மறைந்தனவும் எடுத்துக் கூறினள் என்பதாம்.

உரை: புனலின்கண் ஆடிய மகளிர் களைந்து வைத்த இழைகள் மணற்கண் மறைந்தவற்றை அம்மணற்குன்றின் மேனின்று

---

1. குறள். 1102.

எருமைகள் தம் கோட்டினுலும் குளம்பினுலும் கிளைத்து வெளிப்படுத்தும் புதுவருவாயினையுடைய ஊரன் மகளாகிய இவள் பாணரது யாழ் நரம்பின் இசையினும் இனிய சொற்களையுடையளாவாள் எ று.

புனலாடு மகளிர், தாம்நீராடத் தொடங்குமுன் தமது இழைகளுட் சிலவற்றைக் கழற்றி வைத்துவிட்டு விளையாடுவது இயல்பாகலின், புனலாடு மகளிர் இட்ட இழை எனக் கூறினர். வண்டலாயமொடு உண்டுறைத் தலைஇப், புனலாடு மகளிர் இட்ட பொலங்குழை [1]'' என்று பிறரும் கூறுதல் காண்க. காற்று வீசுவதால், அவ்விழைகள் மணலிற் புதைந்து மறைந்த மேடாதல் தோன்ற மணலாடு சிமையம் கூறப்பட்டது. மணலாடு சிமையம், மணலால் உண்டாகும் மேடு. சேற்றிற் படிந்து கிடந்து அயர்வு போக்கி மதர்த்துவரும் எருமையினம் மணல் மேடுகளைக் கோடுகளாலும் குளம்புகளாலும் குத்தித்துழாவுதல் இக்காலத்தும் காணப் படுவதோர் காட்சியே. இச்செய்கைகளால் மணற்றுகளில் மறைந்த ஒள்ளிழை வெளிப்படுதலால், இதனை எருமை ஒள்ளிழைகளைக் கிளைக்கும் என்ருர். நரம்பு, ஆகுபெயர். கிளவி, சொல்.

தலைமகன் புறத்தொழுகிப் போந்தவன் வாயில் வேண்டி விடுத்தவழி, அவற்கு வாயில் நேர்விக்கும் கருத்தால் தோழி அது நேர்தலை விரும்பாதாள் போலத் தலைவனை இயற்பழிப்ப அது பொருத தலைவி இயற்பட மொழிந்த திறம் நினைந்து மகிழ்ந்து கூறுவாள், பாணர் நரம்பினும் இன்கிளவியளே என்ருள். பிருண்டுத்தலைவன் களவின்கண் தலைவி சொல்லைக்கேட்டு இன்புற்று, '' நரம்பார்த்தன்ன தீங்கிளவியளே [2]'' என்பது காண்க. எனவே, பாணர் யாழில் தம் தலைவன் புகழ் பாடுதல் போல, இவள் நினது இயலை எடுத்து இனிமையுறக் கூறினுள் என்ருளாம். நரம்பின் இன்கிளவியள் என்னுது, நரம்பினும் என்றதனுல், பாணர் நரம்புக்கு அவர் இயக்கிக் கூறுவனவேயன்றி, களவுக் காலத்து இன்பச் செய்தி கூறலும் நிகழ்காலத்து வேண்டாதன விலக்கி வேண்டுவன கூறலும் அன்புதொக நிற்றலும் இன்மையும், அவை

1. பெரும்பாண். 311-1. 2. ஐங். 185.

யாவும் தலைவி கூற்றில் உண்மையும் வேறுபடுத்து உரைத்தாளாம். இது, ''பெறற்கரும் பெரும் பொருள்''[1] என்ற சூத்திரத்து, ''அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை, அடங்கக் காட்டுதற் பொருளின்கண்'' தோழி நிகழ்த்தும் கூற்றுவகை யாகும். தோழி இயற்பட மொழிந்தது, ஓராற்றால் அடங்கா ஒழுக்கத்து அவன் வயின் அழிந்த தலைவியை அடங்கக் காட்டுதற் பொருட்டு என அறிக.

நீராடுமகளிர் இட்ட ஒள்ளிழை மணலில் மறைந்து கிடந்த வற்றை எருமை கிளைக்கும் என்றதனால், களவுக்காலத்து நீ செய்த நன்மைகள் மறைப்புண்டிருந்த வற்றை எடுத்து மொழிந்தாள் என்றாளாம். மெய்ப்பாடும் பயனும் அவை.

இதுகாறும் உரைகூறிப் போந்த மருதப்பாட்டுக்கள் நூறும் வேட்கைப்பத்து முதல் எருமைப்பத்து ஈறாகப் பப்பத்துக்களாகக் கூறப்பட்டிருக்கின்றன; எனினும், இவற்றின் வைப்புமுறை நன்கு புலப்பட்டிலது. இந்நூறு பாட்டுக்களையும் வகுத்துத் தொகுத்த ஆசிரியப் பெருமக்களும் இதுபற்றி ஒன்றும் குறித்திலர். ஒவ்வொரு பத்தும் தொகுத்துப் பெயர் குறிக்கப்பெற்ற முறைமட்டில் ஒரு வாறு புலனாகிறது. வேழப்பத்து(2), கள்வன்பத்து(3), எருமைப் பத்து(10) என்ற மூன்றும் மருதத்துக்குரிய கருப்பொருள் பற்றியும், வேட்கைப்பத்து(1), புலவிப்பத்து(5), புலவிராயபத்து(9), புனலாட்டுப்பத்து(8) என்ற நான்கும் உரிப்பொருளும் அதன் சார்புடையதுமான பொருள் பற்றியும், தோழி கூற்றுப்பத்து(6) கிழத்திக் கூற்றுப்பத்து(7) என்ற இரண்டும் கூற்று நிகழ்த்துவோர் என்னும் இயல்பற்றியும், தோழிக் குரைத்தபத்து(4) என்பது தொன்றும் கேட்போர் என்னும் இயல்பற்றியும் வகுக்கப்பெற் றிருக்கின்றன. கருவும் உரிருமாகிய பொருள் நெறியால் வகுக்கப் படாதன, கூற்றுவகையாலும், அந்நெறியாலும் அடங்காதன கேட்போர் வகையாலும் வகுத்துத் தொகுக்கப்பெற்றிருக்கின்றன என்பது இதுகாறும் கூறிய உரைகளால் இனிது விளங்கும். (100)

---

1. தொல். பொ. 150.

இனி, நெய்தல் முதலாகவரும் நானூறு பாட்டுக்கட்கும் இம்மருதப் பகுதியிற் போல உரைப்பின், நூலுரை பெரிதும் விரிவது கருதி உரையின்கண் சில பகுதிகளை விலக்கிச் சுருங்க உரைக்கின்றோம்.

முதலாவது

ஆசிரியர் ஓரம்போகியார் பாடிய மருதம் முற்றும்.

இரண்டாவது

ஆசிரியர் அம்மூவனார் பாடிய

நெய்தல்

நெய்தல் என்பது அகப்பொருள் நெறியின் ஐவகைத் திணைகளுள் ஒன்று. இதனை நெய்தற்றிணை என்பது வழக்கு. ஆசிரியர் தொல்காப்பியனார், இதனைப் பெருமணல் உலகம் என்றும், இங்கு வாழ்பவர்க்கு வருணன் வழிபடு தெய்வம் என்றும் கூறுவாராய், ''வருணன் மேய பெருமணல் உலகம்" என்று உரைத்தருளினார். வருணன் கடலுக்குரிய தெய்வம்; அதனால், நெய்தல், கடலும் கடல் சார்ந்த நிலமும் குறித்து வரும் என்பது விளங்கும். ஆயினும் கடலின்கண் வாழ்பவர் இன்மையின், கடற்கரையைச் சார்ந்த நிலப்பகுதியே நெய்தல் என உணர்தல் வேண்டும்.

இனி, இந் நெய்தல் நிலப் பகுதியில் வாழ்பவருள் தொல்குடி மக்களைப் பரதவர், நுளையர், அளவர் எனக் கூறுவர். இவர்களுள் தலைவராயினாரைச் சேர்ப்பன் என்றும், புலம்பன் என்றும் சிறப்பித்து வழங்குவர். இத்திணை பொருளாக வரும் பாட்டுக்களுள் கடற்காக்கையும் பிற மீன் தேர்ந்துண்ணும் புள்ளினங்களும் காணப்படும். நெய்தல் நிலமக்கள் மீன் பிடித்தலையும் உப்பு விளைவித்தலையும் பெருந்தொழிலாகக் கொண்டவர். கடற்காற்றும் கடல்நீரும் பரவும் நிலப்பகுதி நெல் முதலிய உணவுப் பொருள் விளைதற்கேற்ற வளம்

பெருமையின் இப் பரதவரும் பிறரும் மீனும் உப்பும் விற்றுப் பெறும் நெல்லும் பிறவுமே உணவாகக் கொள்வர். நெய்தல் நிலத்து ஊர்கள் பட்டினம் எனவும், பாக்கம் எனவும், குப்பம் எனவும் வழங்கும். இன்றும் தமிழகத்துக் கீழ்க் கடற்கரையில் சென்னைப்பட்டினம், நாகைப்பட்டினம் என்பனவும், மேலைக்கடற் கரையில் மகோதைப்பட்டினம், கருவூர்ப்பட்டினம் என்பனவும் சான்றாக நிற்கின்றன. இங்குள்ள நீர்நிலைகள் கடலும் கழியும் பொய்கையும் உவர்நீர்க் கேணிகளு மாகும். கழிகளில் முதலை களும், மீனினங்களும், கடலில் சுறுமீன் முதலியனவும், ஏனைய வற்றுள் சிறுமீன்வகைகளும் வாழ்கின்றன. கழிக்கரையிலும் பிற விடங்களிலும் புன்னை கைதை முதலிய மரங்களும், கண்டல் ஞாழல் முள்ளி முண்டகம் நெய்தல் அடம்பு முதலிய செடிகொடிகளும் வளர்ந்துள்ளன. நெய்தற்பூச் சிறந்து தோன்றுகிறது. மக்கள் வாழிடங்களில் மீன்கோட்பறையும் நாவாய்ப்பம்பையும், விளரியாழ் இசையும் செவ்வழிப் பண்ணும் இசைக்கப்படுகின்றன. மீன் உணக்குதலும், அவற்றைக் கவரும் புள்ளினங்களை ஓப்புதலும், நாவாய்களிற் சென்று மீன் பிடித்தலும், உப்பளத்தில் உப்புப் படுத்தலு மாகிய தொழில்கள் எங்கும் பொதுவாக நிகழ்கின்றன. செல்வர்கள் கடலாடிக் களிப்புறுகின்றனர்.

உண்மையன்பால் உள்ளம் பிணிப்புண்ட காதலரிடையே கடமை காரணமாகப் பிரிவு நேர்ந்தவழி, பிரிந்த காதலர் ஒருவர் ஒருவரை நினைந்து இரங்குதலும் அதற்குரிய நிமித்தமும் இந் நெய்தற் றிணைக்கு உரிப்பொருளாகும். இரங்கற்குரிய சிறுபொழுது எற்பாடு என்று குறிக்கப்படுகிறது. "வைகுறு விடியல் மருதம் எற்பாடு நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்[1]" என்று ஆசிரியர் கூறுகின்றார். எற்பாடு என்பது ஞாயிறு மறையும் மாலைப்போது. இதுபற்றிக் கூறவந்த நச்சினார்க்கினியர், "வெஞ்சுடர் வெப்பம் தீரத் தண்ணறுஞ் சோலை தாழ்ந்து நீழல் செய்யவும், தண்பதம் பட்ட தெண்கழி மெய்ந்து பல்வேறு வகைப்பட்ட புள்ளெல்லாம் குடம்பை நோக்கி உடங்கு பெயரவும், புன்னை முதலிய பூவின் நாற்றம் முன்னின்று கஞற்றவும், நெடுந்திரை யழுவத்து நிலாக்

1. தொல். பொ. 8.

கதிர் பரப்பவும் காதல் மிக்குக் கடற்கானும் கானற் கானும் நிறை கடந்து வேட்கை புலப்பட உரைத்தலின், ஆண்டுக் காமக் குறிப்பு வெளிப்பட்டு இரங்கற்பொருள் சிறத்தலின் எற்பாடு நெய் தற்கு வந்தது" என்று உரைக்கின்ருர்.

இந் நெய்தல் பொருளாக இந்நூற்கண் காணப்படும் நூறு பாட்டுக்களையும் பாடியவர் அம்மூவனுர். இவர் பாடியனவாக அகநானூற்றிலும் நற்றிணையிலும் குறுந்தொகையிலும் சில பாட்டுக்கள் காணப்படுகின்றன.

அம்மூவனுர் என்பது இச்சான்ருேரது இயற்பெயர். மூவன் என்னும் இயற்பெயரே, சிறப்புணர்த்தும் அகரத்தை முதற் கண்ணும், ஆர் விகுதியை ஈற்றிலும் பெற்று அம்மூவனுர் எனப் பாராட்டிக் கூறப்படுகிறது என்று கருதுவது முண்டு. ''ஆயினும், இவர் பாடலில் மேலைக் கடற்கரையின்கண் உள்ள தொண்டி மாந்தை முதலாய சேரநாட்டு ஊர்களைச் சிறப்பித்துப் பாடி யிருப்பது பற்றி இவர் சேரநாட்டு மேலைக்கடற்கரையில் இருந்தவ ரென்று கருதற்கு இடமிருத்தலாலும், இக்காலத்தும் அந்நாட்டில் அம்மு, திம்மு, திப்பு என்னும் பெயர்கள் மக்களுக்கு இடப்பட்டு வழங்கி வருவதாலும் இவரது இயற்பெயர் அம்மூவென்றும் இருக்கலாம்'' என்பர் பின்னத்தூர், திரு. அ. நாராயணசாமி ஐயர். சேரமான் கணைக்கா லிரும்பொறை வாழ்ந்த போது சேரநாட்டுப் பகுதியில் மூவன் என்பான் ஒருவன் இருந்து அவனேடு பொருது பல்லிழந்து கெட்டான் என்று பொய்கையார் கூறுவதால், மூவன் என்ற பெயருடையார் அந்நாளில் இருந்தமை துணியப்படும். மள்ளனுர், மெய்யன் நாகனுர் என்னும் பெயருடைய சான்ருேர் சிலர் அம்மள்ளனுர் எனவும், அம்மெய்யன் நாகனு ரெனவும் சிறப்பிக்கப்பட்டமை தொகைநூல்களிற் காணப்படுவதால். அம் மூவனுர் என்பதும் இவ்வாறு சிறப்பிக்கப் பெற்ற பெயர் என்று கோடலே சிறப்பாகும். இடைக்காலக் கல் வெட்டுக்களிலும் மூவன் என்று பெயர் கொண்டோர் பலர் காணப்படுகின்றனர். இவற்றை நோக்கின் மூவன் என்பது மூப்பன் என்னும் சொற் பொருள்பட வழங்கிய இயற்பெயர் வகையெனத் தெரிகிறது.

அம்மூவனூர் பாடியவற்றுள் பெரும்பாலான நெய்தற் பாட்டுக்களாகவே உள்ளன. அதனால் இவர் நெய்தல் நிலத்தில் பிறந்து வளர்ந்து புலமை சிறந்தவ ரென்பது விளங்குகிறது. தொண்டி மாந்தை முதலிய சேரநாட்டுப் பேரூர்களையும் பாண்டிநாட்டுக் கொற்கைப் பெருந்துறையையும் தொண்டைநாட்டுக் கொடுங்காலூரையும் சிறப்பித்துப் பாடுவதால் இவர் தமிழகம் முழுதும் சென்று தமிழ்வேந்தர்களால் நன்கு மதிக்கப் பெற்றவரென்று அறியலாம். பூழிநாட்டவர் தம்முடைய ஆட்டு மந்தைகளைப் பசும்புல் நிலத்திற் பரந்து மேயவிடுவதையும், விழுப்புண்பட்டு வீழ்ந்த மறவர் பொருட்டு நிறுவிய நடுகல்லிற்கு ஏனையோர் பீலி சூட்டித் துடி கொட்டித் தோப்பிக்கள்ளொடு துரூஉப்பலி கொடுத்துச் சிறப்புச்செய்வதையும் அழகுறப் பாடிக் காட்டுகின்றார்.

பரதவர்மகளிர் ''நெல்லின் நேரே வெண்கல்உப்பு'' என உப்பு விற்பதும், பரதவர் கடலில் மீன் வேட்டம் புரிந்து தாம் கொணர்ந்த மீனைக் கரையிற் பரப்பித் தம்மிற் பகுத்துக் கொள்வதும் இவருடைய பாட்டுக்களில் காணப்படுகின்றன. இந் நாட்டு மகளிருள் தலைமைக்குணமெல்லாம் ஒருங்கு பெற்றாள் ஒரு நங்கையின் நலம் கண்டு கருத்திழந்த தலைவனது உள்ள நிலையும் அவன் தனக்குள் உரைப்பனவும் இன்பங் கனிய இவரால் இயம்பப்படுகின்றன. ''வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென, மடநடை நாரை காணிய'' செல்வதும் நெய்தல் வைகறையில் மலர்வதும் பிறவும் இவர் பாட்டுக்கள் காட்டும் இயற்கைக்காட்சிகள். இவரது நெய்தலில், பரதவர் வளையின் பொருட்டுக் ''கடற்கோடு அறுத்து'' அரத்தாற் போழ்தல் முதலிய கைத்தொழிலில் ஈடுபட்டுச் சிறப்பெய்துகின்றனர். இன்னோரன்ன நலங்களை இனி வரும் பாட்டுக்களிற் காண்க.

1

தாய்க்குரைத்த பத்து

தோழிக்குரைத்த பத்து என்ருற் போலத் தாய்க்கு உரைக்கும் பாட்டுக்களின் தொகுதியாகலின் இப்பெயரினைப் பெறுவதாயிற்று; ஆகவே இது கேட்போர் பொருளாகத் தொகுக்கப்பெற்றதென்பது உணர்க. இனி வருமிடங்களினும் இவ்வாறே கொள்க. ஈண்டுத் தாய் என்றது செவிலியை. இவள் தலைமகட்குத் தோழி போலத் தலைமகளைப் பயந்த நற்ருய்க்குத் தோழியாய் சிறந்தவள். தலைமகட்கு உரவுத் துணையாய் நிற்கும் நற்ருயுமாவள். "ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை தோழிக்கு கிளத்தலின், தாய் எனப்படுவாள் செவிலியாகும்[1]" என்று ஆசிரியர் கூறுவது காண்க. இங்கே காணப்படும் பாட்டுக்கள் பத்தனுள், ஒன்ருெழிய ஒன்பது களவுக்கே உரியவாகும். களவின்கண், ஈன்ற தாயினும் செவிலித் தாயே சிறந்தாளாதல்பற்றிச் செவிலிக்குரைத்த பத்து என்னுது தாய்க்குரைத்த பத்து என்பது பெயராயிற்று. கற்பின்கண் ஈன்ற தாய், செவிலி என்ற இருவகைத் தாயரும் ஒப்ப வுரியர் எனக் கொள்க.

---

1. தொல். பொ. 124.

101. அன்னை வாழிவேண் டன்னை யுதுக்காண்
ஏர்கொடிப் பாசடும்பு பரியவூர் பிழிபு
நெய்தன் மயக்கி வந்தன்று நின்மகள்
பூப்போ லுண்கண் மரீஇய
நோய்க்குமருந் தாகிய கொண்கன் றேரே.

இஃது அறத்தொடுநின்ற பின்னர் வரைதற் பொருட்டுப் பிரிந்த தலைமகன் வரைவோடு புகுந்தவழி அதனைத் தோழி செவிலிக்குக் காட்டிக் கூறுவது.

ப. உரை: தேர் அடும்பு பரிய அதனை ஊர்ந்து இழிந்து நெய்தலை மயக்கி வந்தது என்றது, களவிற் கூட்டம் வெளிப்பட்ட பின்பும் வரையாது பிரிந்தான் என்று அலர் கூறுவார் வருந்த வந்தான் என்றவாறு.

உரை: அன்னாய், யான் கூறும் இதனை விரும்பிக் கேள்; நின் மகளின் நீல நிறமுடைய நெய்தற் பூவைப் போலும் மையுண்ட கண்ணிற் பரந்த பசலை நோய் தீர்தற்குரிய மருந் தாகிய தலைவனது தேர் நீண்ட கொடிகளையுடைய பசிய அடும்பு கள் கெடுமாறு நெய்தலைச் சிதைத்துக் கொண்டு வருவதை அங்கே காண்பாயாக எ. று.

அன்னை, அண்மை விளி; பெயர்த்தும் கூறியது வேண்டு கோள்; காதல் பற்றி யென்றுமாம். அன்னை வாழி வேண்டு அன்னை என்பது சான்றோர் செய்யுட்களில் பயில வழங்குவ தொன்று, ''அன்னாய் வாழி வேண் டன்னை[1]'' என வருதல் காண்க. ஏனை வருமிடங்களிலும் இதனையே கூறிக் கொள்க. உதுக்காண் ''என்புழிச்;சுட்டுமுதலுகரம், அன்னொடு சிவணுது[2]'' பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து மிக்கு முடிந்தது மெல் லெழுத்து மிகுவழி[3]'' என்ற சூத்திரத்து மெய்பெற என்றதனாற்

1. அகம். 48. 2. தொல். எழுத்து. 176.
3. ஷி. ஷி. 157.

கொள்ளப்படும். அடும்பு, கடற்கறைப்பகுதிகளில் வளரும் ஒரு வகைக் கொடி; இதனை அடம்பங்கொடி, அடப்பங்கொடி யென்றும் கூறுவர். இதன்பூ வெண்ணிறம் பெற்றுக் காண்டற்கு அழகாய் இருக்கும்; இலைகள் கவடுபட்டு மான்குளம்பு போலக் காட்சி தருகின்றன; இதன்கொடி சிவந்திருக்கும்; இவ்வியல்புகளைப் பண்டைச் சான்றோர், ''பொம்ம லடும்பின் வெண்மலர்[1]'' எனவும், ''மானடி யன்ன கவட்டிலை அடும்பின், தார்மணி யன்ன வெண்பூ[2]'' எனவும் கூறுதல் காண்க. இதன் பூக்களைக் கொய்து மகளிர் மாலை தொடுத்துத் தம் கூந்தலிற் சூடிக்கொள்வது பண்டை நாளை வழக்கு. ''மாக்கொடி யடும்பின் மாயிதழ் அலரி, கூந்தன் மகளிர் கோதைக் கூட்டும், காமர் கொண்கன்[3]'' என்றும், ''அடும்பின் ஆய்மலர் விரைஇ நெய்தல், நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்[4]'' என்றும், ''ஆய்பூ வடும்பின் அலர்கொண் டுதுக்காண் எம், கோதை புனைந்த வழி[5]'' என்றும் வருவன காண்க. கடற்கரை வழிகளின் குறுக்கே இக்கொடிகள் படர்ந்து கிடத்தலால் அவ்வழியே வரும் தேர்களின் ஆழியால் அறுபடுவது இயல்பாதலின், ஏர்கொடிப் பாசடும்பு பரிய வூர்பிழிபு என்றார் பிறரும் ''அடும்புகொடி துமிய ஆழி போழ்ந்து அவர் நெடுந்தேர் இன்னொலி இரவும் தோன்றா[6]'' என்றும், ''அடும்பின் செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ[7]'' என்றும் ''தேர் ஆய்க்கொடிப் பாசடும்பு பரிய வூர்பிழிபு நிவந்து படு தோற்றமொடு இகந்துமா யும்மே[8]'' என்றும் கூறுவர். இந்த அடும்பின் மென்கொடி வெயில் வெம்மைக்கு ஆற்றாது வருந்துவது கண்டு கடல் தனது அலையால் நீர்பாய்ச்சிக் குளிர்ப்பிக்கும் என்ற கருத்துப்பட ''உரவுக்கதிர் தெறுமென ஓங்குதிரை விரைபுதன், கரையமல் அடும்பளித்தாங்கு, உரவுநீர்ச் சேர்ப்ப அருளினை[9]'' என்று புனைந்து பாடுவர். கழிக்கரையில் அடும்பொடு நெய்தலும் உடன்படர்ந்து கிடத்தலின், தேராழியில் அதுவும் அகப்பட்டு வருந்துவ துண்டு; கடுமா நெடுந்தேர் நேமி போகிய,

---

1. நற். 272. 2. குறுந். 243. 3. நற். 145.
4. குறுந் 400. 5. கலி. 27. 6. நற். 338.
7. அகம். 80. 8. ஷை. ஷை. 330. 9. கலி. 10.

இருங்கழி நெய்தல் போல வருந்தினள்[1] '' என்ப ; அதுபற்றியே, ஈண்டு, கொண்கண் தேர் நெய்தல் மயக்கி வந்தன்று என்ருர். நெய்தல் மயக்கி என்றதற்கு அடும்பின் கொடி துண்டுபட்டு நெய்தலிடை வீழ்ந்து அதன் கொடியொடு கலக்கும் என்று கூறுதலும் உண்டு ; அதனல் பொருள் சிறவாமை யறிக.

மகளது வேறுபாடு கண்டு ஆற்ருது வருந்திய செவிலிக்கு அறத்தொடு நின்று முன்பே களவினைப் புலப்படுத்தினமையின் வெளிப்படையாகத் தோழி தலைமகளுற்ற நோய்க்கு மருந்து தலைவன் வரவல்லதில்லை என்பாள், நின்மகள் உண்கண் மரீஇய நோய்க்கு மருந்தாகிய கொண்கன் என்ருள். பூப்போலும் கண்ணென ஒழியாது உண்கண் எனச் சிறப்பித்தமையின் நீலநிறமுடைய நெய்தற்பூக் கொள்ளப்பட்டது, நெய்தற்குச் சிறந்தபூ அதுவாகலானும் மையுண்ட கண்ணுக்கு நேரிய ஒப்புமையாகலானும் என்க. '' நீனறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்[2] '' எனச் சான்ருேர் உரைப்பது காண்க.

கொண்கனது தேர்க்காலில் அகப்பட்டு அடும்பும் நெய்தலும் சிதைந்து மயங்கின என்றதனல், தலைவியது வேறுபாடு கண்டு அயலர் எடுத்த அம்பலும் அலரும் தலைமகன் வரைவொடு வருதலால் அடங்கி யொழிந்தன எனத் தோழி கூறினளாம். ஊரவர் எடுத்த அலருரையாலும் தலைவி எய்திய வேறுபாட்டாலும் தாய் எய்திய வருத்தத்தை நன்கு அறிந்துள்ளா ளாகலின், அவ்வருத்தம் நீங்குதற்குரிய நிகழ்ச்சியை அவட்குக் காட்டுதற்கண் மிக்க மகிழ்ச்சியுற்று தோழி உதுக்காண் என்ருள்.

உவக்காண் என்றும் பாடமுண்டு ; சுட்டு, சுட்டப்படும் பொருளின் பன்மைமேற்று ; '' உவக்காண் என்றும் உள்ளுவ போலச், செந்தார்ச் சிறுபெடை தழீஇப், பைங்குர லேனற் படர்தருங் கிளியே[3] '' என்றும், உவக்காண் தோன்றுவ[4] '' என்றும், '' உவக் காண்....... யாமம் கொள்பவர் நாட்டிய நளிசுடர், வானக மீனின்

1. குறுந். 336. 2. புறம். 144.
3. தொல். பொ. 111. நச்சி. மேற். 4. நற். 237.

விலங்கித் தோன்றும்[1]'' என்றும் வரும் சான்றோர் வழக்குகளைக் காணுங்கால், ஈண்டைக்கு ஏற்புடையது உதுக்காண் என்ற பாடம் என அறிக. இனி, இழியூஉ என்ற பாடம் செய்யூஉ என்னும் வினையெச்ச வாய்பாட்டு வகை.

இது நெய்தலிற் குறிஞ்சி வந்த திணைமயக்கம். திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே[2]'' என்பதற்கு இதனை எடுத்துக்காட்டி, ''இஃது அறத்தொடு நின்றபின் வரைதற்குப் பிரிந்தான் வரை வொடு வந்தமை தோழி செவிலிக்குக் காட்டியது'' என்று நச்சினார்க்கினியர் கூறுவது காண்க. (101)

102. அன்னை வாழிவேண் டன்னை நம்மூர்
நீனிறப் பெருங்கடற் புள்ளி னானாது
துன்புறு துயர நீங்க
இன்புற விசைக்குமவர் தேர்மணிக் குரலே.

இதுவுமது.

உரை: அன்னாய், யான் கூறும் இதனை விரும்பிக்கேள்; நம்மூர்க்கண் நீல நிறமுடைய பெரிய கடற்கரைக் கண் வாழும் பறவைகளின் ஒலியைப் போல வரைதற் பொருட்டுப் பிரிந்த அவருடைய தேரிற் கட்டிய மணியொலி துன்ப மிகுவிக்கும் பிரிவுத் துயர் நீங்கவும், இன்பம் மிகவும் அமையாது ஒலியாநிற்கும், காண் எ. று.

வரைதற்பொருட்டு என்பது முதலாயின எஞ்சி நின்றன. நீலம் என்பது கடைக் குறைந்து நீனிற மென வந்தது. ''நீனிறப் பெருங்கடல் கலங்க வுள்புக்கு[3]'' எனப் பிறரும் வழங்குதல் காண்க. துன்புறு துயரம் இன்புற என்புழி, உறுதல் மிகுதற் பொருட்டு.

---

1. அகம். 114. 2. தொல். பொ. 12. 3. நற். 45.

களவு வெளிப்பட்ட பின்னரும் வரையாது நீட்டித்தலின் உண்டாகும் துன்பம், வரையாது பிரிந்தமை குறித்து அயலார் அலர் எடுக்குந்தோறும் மிகுதலின், துன்புறு துயரம் என்றும், தேர்மணிக்குரல் கேட்ட விடத்து, அவன் வரவான் எழும் இன்பம், அலர் கூறுவார் வாயடங்குதலால் மிகுதல்பற்றி இன்புற இசைக்கும் என்றும் கூறினுள். தேர்மணிக் குரல் பிறர் கேட்க வருதல் களவுக்காலத்து இயைவ தன்மையின், இது வரைவொடு வந்தமை உணர்த்திற்று. இனிப் புள்ளொலியும் தேர்மணிக் குரலும் ஒத்தலின், புள்ளொலி எழுந்தோறும், தேரின் மணியொலி யெனப் பலகாலும் கேட்டறிந்து பயின்றுளா .ளாகலின் புள்ளொலியை உவமித்துத் தேர்மணிக்குரல் ... ஆனுது இசைக்கும் என்ருள். ''நள்ளென் கங்குற் புள்ளொலி கேட்டொறும், தேர் மணித் தெள்ளிசை கொல்லென, ஊர்மடி கங்குலும் துயில்மறந் ததுவே[1]'' என்று களவின்கண் சொல்லாடுவது காண்க.

இரைக்கும் என்பது பாடமாயின், இதுவே யுரைத்துக் கொள்க. ''புள்ளிரைப் பன்ன பொற்ருர்ப் புரவித்தேர்[2]'' என்ருர் தேவரும். (102)

103. அன்னே வாழிவேண் டன்னே புன்னேயொடு
ஞாழல் பூக்குந் தண்ணந் துறைவன்
இவட்கமைந் தனனுற் ருனே
தனக்கமைந் தன்றிவண் மாமைக் கவினே.

இஃது அறத்தொடு நின்ற தோழி வதுவை நிகழா நின்றுழித் தாய்க்குக் காட்டி உவந்து சொல்லியது.

ப. உரை: புன்னேயொடு ஞாழல் பூக்கும் என்றது குடிப் பிறப்பும் உருவும் நலனும் ஒத்தல் கூறியவாறு.

உரை: அன்னுய், விரும்பிக் கேள்; புனேயுடன் ஞாழல் பூத்தலேச் செய்யும் குளிர்ந்த அழகிய துறைவன் இவட்கே

---

1. நற். 287. 2. சீவக. 768.

அமைந்தானாகலின், இவளது மாமைக்கவினும் தானே அமைவ தாயிற்றுக் காண் எ. று.

ஞாழலினும் உயரத்தாலும் கிளைபரந்து தழைவிரிந்து நிற்கும் திறத்தாலும் சிறந்தமையின், புன்னையொடு எனக்கூறப்பட்டது. "ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே[1]" என்பது இலக்கணம். தண்ணந் துறைவன் என்புழி அம் அல்வழிக்கண் வந்தது, மெல்லம் புலம் என்றார்போல. தேற்றப் பொருட்டாய ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. அமைந்தன்று, முற்றுவினை. மாமைக் கவின், மாந்தளிரின் தன்மை பெற்ற அழகு. மாமை, மாவினது தன்மை. "துறைவற்கு இனிய மன்ற என்மாமைக்கவினே[2]" என்பது காண்க. இனி, துறைவன் இவட் கமைந்தவாறு போல மாமைக்கவினும் இவட்கு அமைவதாயிற்று என்றலும் ஒன்று.

உள்ளுறையால் தலைமகன் உருவும் நலனும் குறித்தமையின், வாளாது, இவட்கு அமைந்தனனால் என்றும், அவன் பிரிவின்கண் வேறுபடுதலும், புணர்வின்கண் தோன்றிப் பொலிதலு முடைய மாமைக்கவின் திருமணம் பயக்கும் அழிவில் கூட்டத்தால் வேறு படுதலின்றி நிலைபெற்றுச் சிறப்புறும் என்பாள், தானே தனக் கமைந்தன்று என்றும் கூறினாள். இனி. மாமைக்கவின் அமைத லாவது மாந்தளிரின் நிறமும் மணமுங் கோடல் என்க. "எக்கர் மாஅத்துப் புதுப்பூம் பெருஞ்சினை, புணர்ந்தோர் மெய்ம்மணங் கமழும்[3]" என்பவாகலின் வதுவை நிகழ்ந்துழி அம்மணம் தானே அமைந்து கமழக்கண்டு மகிழ்கின்றாள் தானே தனக்கு அமைந் தன்று என்றாள் என்றுமாம். புன்னையொடு என்புழி ஒடுவினை ஒருவினையொடுவாகக் கொள்ளாது எண்ணொடுவாக்கிப் புன்னையும் ஞாழலும் எனக்கொண்டு, குடிப்பிறப்பும் உருவும் நலனும் ஒக்கும் என உள்ளுறை காண்பார். "பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும், கானலம் பெருந்துறை[4]" எனவும், "நறுவீ ஞாழல் புதுமலர் தாஅய்ப், புன்னைதைந்த வெண்மணல் ஒரு சிறை[5]" எனவும் வருவன காண்க.

---

1. தொல். சொல். 91. 2. ஐங். 146. 3. ஐங். 19.
4. அகம். 70. 5. நற். 96.

இனி, நச்சினார்க்கினியர், '' நாற்றமுந் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்துப் ''பாங்குற வந்த நாலெட்டு வகையும்'' என்புழி வகை என்றதனால் அடக்கி, ''இது வதுவை நிகழாநின்றுழித் தாய்க்குக் காட்டித் தோழி கூறியது'' என்பர். (103)

104. அன்னை வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பலர்மடி பொழுதி னலமிகச் சாஅய்
நள்ளென வந்த வியறேர்ச்
செல்வக் கொண்கன் செல்வனஃ தூரே.

இது புதல்வற் பெற்றுழித் தலைமகன் மனைக்கட் சென்ற செவிலிக்கு முன்பு அறத்தொடு நின்று வதுவை கூட்டிய தோழி அவன் ஊர் நன்மை காட்டிச் சொல்லியது.

ப. உரை: செல்வக்கொண்கன் செல்வன் என்றது புதல்வனை ; செல்வக் கொண்கன் செல்வன் ஊர் என்னும் எழுவாயின் முற்றுச் சொல் அஃது என்னும் பெயர்.

உரை: அன்னாய், யான் கூறுகின்ற இதனை விரும்பிக் கேள். நம்மூர்க்கண் பலரும் மடிந்து உறங்கும் பொழுதாகிய நள்ளிருள் பரந்த நடுவியாமத்தில் தன் நலம் மிக மெலிவுற்றுப் போந்த இயன்ற தேரினையுடைய செல்வம் மிக்க கொழுநனுக்கு மகனாகிய செல்வனது ஊர் அஃதாகும் எ. று.

பலர் மடிபொழுது தாயரும் ஊரவரும் காவலரும் மடிந்துறங் கும் நள்ளிரவு. ''பல்லோர் துஞ்சும் பானாட்கங்குல்[2]'' என்றார் பிறரும். ''முந்தை யாமம் சென்ற பின்றைப், பணிலம் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து, நொடைநவில் நெடுங்கடை யடைத்து மட மதர், ஒள்ளிழை மகளிர் பள்ளி யயர, நல்வரி யிருஅல் புரையு மெல்லடை, அயிருருப்புற்ற ஆடமை விசயம், கவவொடு பிதத்த வகையமை மோதகம், தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவனர் உறங்க,

1. தொல். பொ. 114. 2. குறுந். 355.

விழவி னுடும் வயிரியர் மடியப் பாடான் றவிந்த பனிக்கடல் புரை யுப், பாயல் வளர்வோர் கண்ணினிது படுப்ப, பானுட் கொண்ட கங்குல்[1]'' என இது விளக்கப் படுமாறு காண்க. நள்ளென என்பது குறிப்புச்சொல். இயல்தேர், செய்யப்பட்ட தேர். பலரை யும் தன் ஆணைக்கீழ் நடப்பச் செய்யுந் தலைமைச் செல்வமுடைய னுகலின் செல்வக் கொண்கன் என்றும், ''தம்பொருள் என்ப தம் மக்கள்[2]'' என்பவாகலின், மகனைச் செல்வன் என்றும் கூறினுள் என்க.

களவின்கண், பிறர் அறியாவகை வருதற்குரிய பொழுது அதுவெனத் தேர்ந்து வந்தமையின், பலர்மடி பொழுது என்றும், கண்ணுறக்கம் இன்றியும் குறி இடையீடுபட்டும் தலைமகள் கூட்டம் பெறல் அரிதாங்கொல் என நெஞ்சமைதி இழந்தும் வருந்தினமை பற்றி, நலம் மிகச் சாஅய் என்றும் கூறினுள்.

நள்ளிரவில் வந்ததை நள்ளென வந்தான் என்றது, விடியலில் வருவானை வெள்ளென வந்தான் என்னும் வழக்குப்பற்றி; ''கடுமாப் பூண்ட நெடுந்தேர் கடைஇ நடுநாள் வரூஉம் இயல் தேர்க் கொண்கன்[3]'' என்ருர் பிறரும்.

தலைமகனைச் செல்வக் கொண்கன் என்றும், அவனுடைய மகற் பேருகிய பெருஞ் செல்வத்தைச் செல்வன் என்றும் விதந்து கூறும் தோழியுரையைக் கேட்கும் செவிலி, ஊரிடத்தே இருந்து பெறுதற்குரிய செல்வ நலங்களைக் கண்ணிற் கண்டு இன்புறுகின்ரு ளாகலின், அஃது என்று சுட்டி யொழிந்தாள்.

வியன்றேர் என்ற பாடத்துக்குப் பெரிய தேர் என்று உரைக்க. இனி, ''பெறற்கரும் பெரும்பொருள்[4]'' என்ற சூத்திரத்துப் ''பிறவும், வகைபட வந்த கிளவி யெல்லாம்'' என்புழிப் ''பிற'' என்றதனுல், இதனைத் தோழிக்கு அமைத்து, ''புதல்வற் பெற்றுழித் தலைவன் மனைக்கட் சென்ற செவிலிக்கு அறத்தொடு

1. மதுரை. 620–631. 2. குறள். 63. 3. நற். 149.
4. தொல். பொ. 150.

நின்று வதுவை கூட்டிய தோழி அவன் ஊர் காட்டிக் கூறியது'' என்றனர் நச்சினர்க்கினியர். (104)

105. அன்னை வாழிவேண் டன்னை முழங்குகடல்
திரைதரு முத்தம் வெண்மண லிமைக்கும்
தண்ணந் துறைவன் வந்தெனப்
பொன்னினுஞ் சிவந்தன்று கண்டிசி னுதலே.

இஃது அறத்தொடுநின்றபின் வேண்டுவன தருதற்குப் பிரிந்த தலைமகன் வரைவொடு வந்துழித் தலைமகள் நுதற்கண் முன்புள்ள பசப்பு நீங்கும்வண்ணம் தோன்றிய கதிர்ப்புக் காட்டிச் செவிலிக்குத் தோழி சொல்லியது.

ப. உரை: ஓதத்தால் அலைப்புண்டு போந்த முத்தம் மணற் கண்ணே கிடந்து விளங்கும் என்றது, தன் வருத்தம் நோக்காது நமக்கு நிலைநின்ற இன்பத்தைத் தருவான் எ. று.

உரை: அன்னய், இதனை விரும்பிக்கேள்; ஒலிக்கின்ற கடலலைகள் கொணர்ந்த முத்துக்கள் வெள்ளிய மணலின்கட் கிடந்து ஒளிரும் குளிர்ந்த துறையினையுடைய தலைமகன் வந்தானாக, இவளுடைய நுதல் பொன்னினுஞ் சிவந்து திகழ்வதாயிற்று, காண் எ. று

கடற்கட் பிறக்கும் முத்துக்களைத் திரைகள் அலைத்துக் கொணர்ந்து கரையிற் சேர்த்துக் கொள்வார் கொள்ளும் வகை உய்த்தலின், திரைதரு முத்தம் எனப்பட்டது. ''புலவுப்பொரு தழிந்த பூநாறு பரப்பின், இவர் திரை தந்த வீர்ங்கதிர் முத்தம்[1]'' என்றார் பிறரும். இமைக்கும் என்னும் பெயரெச்சம், துறைவன் என்புழித் துறையினேடு முடிந்தது. வந்தென என்ற செய்தென, என்னும் வினையெச்சம், நுதல் சிவத்தற்கு ஏது உணர நின்றது. இமைத்தல், ஒளிர்தல். சின், முன்னிலையசை.

---

1. அகம். 130.

வரைவிடை வைத்துத் தலைமகன் பொருள்வயிற் பிரிந்திருந்த காலையில் வருந்தியிருந்த தலைமகளது நுதல் ஒளிமழுங்கி இருந்த தனைத் தான் அறிந்திருந்தாளாகலின், அவன் வரைவொடு வந்துழி அது விளங்கித் தோன்றக் கண்டு மகிழ்வாள், பொன்னினும் சிவந் தன்று நுதல் என்றும், சுடச்சுடரும் பொன்போலாது, கண்டமாத் திரத்தே சிவந்து ஒளிர்வதாயிற் றென்றற்குப் பொன்னினும் என்றும் கூறினாள்.

திரிதரு முத்தம் என்ற பாடத்துக்கு ஓதத்தால் அலைப்புண்ணும் முத்தம் என்க.

இனி, இளம்பூரணர், ''நாற்றமுந் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்து, ''முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப், புரைதீர் கிளவி'' என்புழி, இது முன்னிலைப் பகுதியாய் நொது மலர் வரைவுபற்றி வந்தது என்பர். எனவே, துறைவன் வருத லால் நுதல் சிவந்து விளங்கும் இவள், நொதுமலர் வரைவு தோன்றின் ஆற்றாது பின்னும் வேறுபட்டுப் பிறிதுபடுவாள் என்பதுபடக் கூறினாளாம். மேலும் கடற்றிரையால் தரப்பட்ட முத்தம் வெள்ளிய மணலின்கட் கிடந்து விளங்கும் என்றது நொது மலர் வரைவினால் உளதாய முனிவு, தலைமகன் பிரிவு பற்றி வண்ணம் வேறுபட்ட நுதற்கண் மிக்குத் தோன்றுவதாயிற்று என்றவாறு. (105)

106 அன்னை வாழிவேண் டன்னை யவர்நாட்டுத்
துதிக்கா லன்னந் துணைசெத்து மிதிக்கும்
தண்கடல் வளையினு மிலங்குமிவள்
அங்கலி ழாகங் கண்டிசி னினைந்தே.

இஃது அறத்தொடு நின்ற தோழி அது வற்புறுப்பான் வேண்டிச் செவிலிக்குச் சொல்லியது.

---

1. தொல். பொ. 112.

ப. உரை : தண்கடல் வளையினும் இலங்கும் என்றது மேனி யில் வேறுபாடு.

உரை : அன்னாய், இதனை விரும்பிக்கேள் : அவர் நாட்டின் கண், துதிபோலும் கால்களையுடைய அன்னம் தன் பெடையன்னம் எனக் கருதித் தன்காலை வைத்து மிதித்து நோக்கும் குளிர்ந்த கடற்சங்கினும் இவள் தன் அழகொழுகும் மேனி அவனை நினைந்து வேறுபட்டுப் பசந்து தோன்றாநின்றாள் காண் எ.று.

இவள், நினைந்து, ஆகம், வளையினும் இலங்கும் என இயை யும். மேனி வேறு இவள் வேறு அன்மையின் முதல் வினையாய செய்தெனெச்சம் இலங்கும் என்னும் சினைவினை கொண்டது. அன்னத்தின்கால் நீண்டு மயிரடர்ந்து நுனி குவிந்து தோலுறை போறலின் துதிக்கால் அன்னம் என்றார். துதி, தோற்பை. "தூங்குதோள் துதிய வள்ளுகிர் கதுவலின், பாம்பு மதன் அழியும்[1]" என்றார் பிறரும். தோலுறைபோல் அடிபருத்து நுனி குவிந்து தோன்றுதல் ஒப்புமையால் யானையின் கையைத் துதிக்கை என வழங்குதல் இயல்பாயிற்று. அங்கலிழ் ஆகம், அழகொழுகும் மேனி. கலிழ் என்பது கலுழ் என்றும் வழங்கும் "அங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே[2]" என வருதல் காண்க.

வளையினும் இலங்கும் என்றது மிகப் பசந்து தோன்றுவ தாயிற்று என்றவாறு மேனி வேறுபாடு நோக்கி ஆராயத் தொடங்கின செவிலிக்கு அறத்தொடு நின்ற தோழி, அங்கலி ழாகம் வளையினும் இலங்கும் என வியந்துரைக்கற் பாலளாகிய செவிலி கூற்றைத் தானே எடுத்தோதியது, தலைமகன் தலைவிக்குச் சிறந்தான் என்பதனை வற்புறுத்தவாறு ; ஆகவே, வரைவொடு வரக்கருதித் தலைமகன் சிறிது வரவு நீட்டித்தானாக அஃது அறியாது இவளது மேனி பசக்கின்றது என்பாள், இவள் அங்கலிழ் ஆகம் வலையினும் இலங்கும் என்றாள் என்பதாம்.

---

1. அகம். 8. 2. குறுந். 143.

அன்னம் தண்கடல் வளையென அறியாத துணை எனக் கருதி மிதிக்குமாறு போலத் தலைமகன் பொருட்டுப் பிறந்த இவள் மேனி வேறுபாட்டினைப் பிறவாற்றான் உளதாயிற்றெனக் கருதி நீ ஆராய்கின்றாய் என உள்ளுறை கொள்க, இஃது ஏனையுவமம் போலத் திணை உணர்தற்கண் தள்ளாது வந்தது. ''உள்ளுறை யுவமம் ஏனை யுவமமெனத் தள்ளாதாகும் திணையுணர் வகையே[1]'' என்பது விதி (106)

107. அன்னை வாழிவேண் டன்னையென் றோழி
சுடர்நுதல் பசப்பச் சாஅய்ப் படர்மெலிந்து
தண்கடற் படுதிரை கேட்டொறும்
துஞ்சா ளாகுத னோகோ யானே.

இது தோழி செவிலிக்கு அறத்தொடுநிலை குறித்துக் கூறியது.

உரை: அன்னாய், இதனை விரும்பிக் கேள்; என்தோழி யாவாள் தன் ஒளி பொருந்திய நுதல் பசத்தலால் மெலிந்து அவனையே உள்ளி மேனி வாடிக் குளிர்ந்த கடலின் திரையோசை கேட்குந்தோறும் அவன் தேர் மணியோசை எனக் கருதி உறங்காது வருந்துதலால் யான் வருந்தா நின்றேன் என்று.

சுடர்நுதல், இயல்பாகவே ஒளி திகழும் நெற்றி; ''சுரும்பிமிர் சுடர்நுதல் நோக்கி[2]'' என்றாற் போல. திரை, ஆகுபெயர். நோகோ என்னும் குவ்வீற்றுத் தன்மை வினைமுற்றின் ஈற்று ஓகாரம் இரக்கப் பொருட்டு; ''இனமணி நெடுந்தேர் வாராதாயினும் வருவது போலச், செவி முதல் இசைக்கும் அரவமொடு, துயில்மறந் தனவால் தோழி எம் கண்ணே[3]'' எனத் தலைவி வருந்திக் கூறுதல் காண்க.

தலைமகன் கடிதின் வாராமையின் பசந்து ஒளி மழுங்குதலின் சுடர்நுதல் பசப்ப என்றும், பசியட நின்று ஏதம் ஆய்வதே தொழிலாகக் கொண்டிருத்தலின் படர்மெலிந்து என்றும், திரை

1. தொல். பொ. 46. 2. நற். 245. 3. குறுந். 301.

யொலி கேட்குந்தோறும், அவன் தேரிற் கட்டிய மணியொலி எனக் கருதி விழித்திருந்தாளாகலின், துஞ்சாளாகுதல் என்றும், இதனல் தான் செய்யக்கடவது ஒன்றும் இன்மையின், நோகோ யானே என்றும் கூறினள். நுதல்பசப்ப என்றது பசலை பாய்தல்; படர்மெலிந்து என்றது உடம்பு நனிசுருங்கல்: துஞ்சாளாகுதல் என்றது கண்டுயில் மறுத்தல்.

அறத்தொடு நிலைப்பகுதி ஏழனுள் இது. செவிலியொடு உசாவுவாள் போலக் கூறுதலின் கூறுதல் உசாதல். (107)

108. அன்னை வாழிவேண் டன்னை கழிய
முண்டக மலருந் தண்கடற் சேர்ப்பன்
எந்தோ டுறந்தன னுயின்
எவன்கொன் மற்றவ னயந்த தோளே.

இஃது அறத்தொடுநிலை பிறந்த பின்னும் வரைவு நீடிற்றாக மற்றொரு தலைமகளை வரையுங்கொல் என்று ஐயுற்ற செவிலி குறிப் பறிந்த தோழி அவட்குச் சொல்லியது.

ப. உரை: முண்டகம் மலரும் ...சேர்ப்பன் என்றது, அன் பிலன் போலத் தோன்றினும் அகத்தே திரியாத அன்புடையன் எ. று.

உரை: அன்னாய், இதனை விரும்பிக்கேள்; கழியின் கண்ண வாகிய முள்ளிகள் மலரும் குளிர்ந்த கடற்சேர்ப்பன் எம்முடைய தோளைக் கூடுதலைத் தவிர்ந்து நீங்குவானாயின் அவனல் விரும்பப் பட்ட தோள்கள் என்னும் எ. று.

முண்டகம், நீர்முள்ளி. தலைவியின் தோளினைத் தோழி தன் னுடைய தோளாக உளப்படுத் துரைத்தது, "தாயத்தின் அடையா ஈயச் செல்லா, வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படாஅ, எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம், அல்லா வாயினும் புல்லுவ

வுளவே'' என்பதனுல் அமைந்தது. செயின் என்னும் வினை யெச்சம் துறவாமை உணர நின்றது. எவன், வினுப்பெயர். கொல், மற்று என்பன அசைநிலை. நயந்த என்பது யான் உண்ணும் சோறு என்ருற் போலச் செயப்படுபொருள் கொண்டு முடிந்த பெயரெச்சவினை ; இது செயப்படு பொருளைச் செய்தது போலக் கூறியது. இறந்துபாடு ஒருதலை என்பாள் எவன்கொல் என்ருள்.

அறத்தொடுநிலை பிறந்த பின்னும் வரைவு நீடுதலின் இவளைத் துறந்து வேருெருத்தியை மணந்து கொண்டான் போலும் எனச் செவிலி ஐயுற்ரு ளாதலின், அஃது உணர்ந்த தோழி தலைமகன் மாரு அன்பினன் என உள்ளுறுத் துரைத்தலால் வெளிப்படையாக அதனை வற்புறுத்துவாளாய், எம் தோள் துறந்தன ஞயின் என்றும், துறந்தன ஞயின், இவள் தொடி நெகிழ்ந்து உடம்புநனி சுருங்கி மேனி வேறுபட்டு இறந்துபாடு எய்தியிருப்பாள் ; அவ்வாறின்றி, தோள்மெலிந்து நலம் துறவாமையே யன்றி, தன்னைக் கூடி யவளைத் துறவாமைப் பிணித்தலில் தீராமையின் அவன் துறந்திலன்; துறத்தலையும் செய்யான் என்று யாப்புறுத்தற்கு நயந்த தோள் என்றும், நாள் உலர்ந்தார்க்குத் தோள் மெலிந்து காட்டும் என்பது பற்றி, எவன்கொல் மற்று அவன் நயந்த தோள் என்றும் கூறினுள். நயந்த என விதந்து கூறியதனுல், அவனது கேண்மை பிறப்புத் தோறும் தொடர்ந்துவரும் பெருங்கிழமை உடையது என்பது குறித்தவாறு. '' விதந்த மொழியினம் வேறும் செப்பும் '' என்பது அளவை நூல்

நறுமணங் கமழாத கழியிட மாயினும் முண்டகம் மலர்ந்து மணங் கமழா நிற்கும் என்றது, கடிது வரையாது நீட்டித்தமை யால் நயவாதான் போல் தோன்றினும், துறவாமைக் குரிய பேரன்பினன் என்று உள்ளுறையால் தலைவனது மாருத அன்புடைமை கூறியவாறு பழைய உரைகாரர்க்கும் இதுவே கருத்தாதலை அறிந்து கொள்க. இப்பழையவுரை சில ஏடுகளில் விடுபட்டுளது.

---

1. தொல். பொ. 221.

இனி, ''நாற்றமும் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்துப் ''பாங்குற வந்த நாலெட்டு வகையும்'' என்புழி வகை என்பத னுள் அடங்கி ''இஃது அறத்தொடு நின்றபின் வரைவு நீட மற் ருெரு குலமகளை வரையுங்கொல் என்று ஐயுற்ற செவிலி குறிப் பறிந்த தோழி அவட்குக் கூறியது'' என்பர் நச்சினார்க்கினியர். என்தோள் துறந்தன ளுயின், என்னுங் கொல்லவன் நயந்த தோளே என்று பாடங் கொண்டு, ''கிழவோட் குவமம் ஈரிடத் துரித்தே[2]'' என்புழி நெய்தலிடத்துக்கு இதனை உதாரணமாக்கி, ''இதனுள் கழிய முண்டகம் மலரும் என்பது முள்ளுடைய பூ மலரும் என்று உள்ளுறுத்தது; அதனால் இருவர் காமத்துறைக் கண்ணும் ஒருதலை இன்னுது ஒருதலை இனிது என்ருள் என்பது. என்ருேள் துறந்தனன் என்பது முள்ளுடைமையோடு ஒக்க, என் னுங்கொல் அவன் நயந்தோள் தோள் என்றவழி, அவன் அன்பிற் றிரியாமை கூறினமையின் முண்டகமலர்ச்சியோடு ஒப்பிக்கப்படும்'' என்ப, இன்னுமை யுற்று நிற்கும் தன்னைத் தன்மைக்கண் நிறுத்தி என்தோள் என்றும், அவன் அன்பிற் றிரியாமை யுணர்த்தும் தலைவி தோளைப் படர்க்கைக்கண் நிறுத்தி நயந்தோள் தோள் என்றும் கூறியவாரும் என்க. என்தோள் என்புழி என் என்றது; ''ஒன்றித் தோன்றும் தோழி மேன[3]'' என்பதனுல் அமையும்.(108)

109. அன்னை வாழிவேண் டன்னை நெய்தல்
நீர்ப்படர் தூம்பின் பூக்கெழு துறைவன்
எந்தோ டுறந்த காலை யெவன்கொல்
பன்மாண் வருமவ னளித்த போழ்தே.

இஃது அறத்தொடுநின்ற பின்பு வரைவான் பிரிந்த தலைமகன் கடிதின் வாராதவழி ஐயுற்ற செவிலி 'அவ்ன் நும்மைத் துறந் தான் போலும்; நுங்கட்கு அவன் கூறிய திறம் யாது,'' என்ருட் குத் தோழி சொல்லியது.

உரை: அன்னய், இதனை விரும்பிக் கேள்: நெய்தலினது நீர்க்குட்படர்ந்தோடிப்பூக்கும் கொடியினுடைய பூக்கள் பொருந்திய

1. தொல். பொ. 114. 2. தொல். பொ. 304
3. தொல். பொ. 39.

துறைவ ஞகிய தலைமகன் பண்டு தலைப்பெய்து எம்மைத் தலையளி செய்தபோழ்து அவன் தெளித்துரைத்த சொற்கள், வரைவிடைவைத்துப் பிரிந்துறையும் இக்காலத்தே பன்முறையும் எம் நெஞ்சின்கண் எழுந்தவண்ணம் உள்ளன; காரணம் என்னையோ கூறுக எ.று.

நீர்ப்பூ வாகிய நெய்தலின் கொடி, ஆம்பல் தாமரை முதலியவற்றின் கொடி யாகிய தண்டுபோல உள்ளே புழையுடைமை பற்றி நீர்ப்படர் தூம்பு எனப்பட்டது. தூம்பு போல்வதனைத் தூம்பு என்றது ஆகுபெயர். எம்தோள் என்றதற்கு மேலே உரைத்தாம். போழ்து என்றது, ஈண்டு ஆகுபெயராய் அப்போழ்தில் தலைமகன் வற்புறுத்துரைத்த சொற்கண்மேல் நின்றது.

நீர்த்துறைக்கண் எம்மைத் தலைப்பெய்த ஞான்று, ''வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை, நின்னோடு உண்டலும் புரைவ தென்றுங்கு, அறம் புணையாகத் தேற்றி'', பின்னர், இருண்மாலைப்போது எய்துவது கண்டு, ''நேரிறை முன்கை பற்றி நுமர்தர, நாடறி நன்மணம் அயர்கம் சின்னுள், கலங்கல் ஓம்புமின் இலங்கிழையீர்[1]'' என்று தலைமகன் மொழிந்த வன்புறை தோன்றிய காலத்தை அவன் அளித்த போழ்து என்றும், இடைக்காலத்தும் அவன் அன்றையன்ன வேட்கை குன்று தொழுகினன் என்பாள் குறிப்பாகப் பன்மாண் வரும் என்றும் கூறினுள் ''தண்டாக் காதலும் தலைநாட் போன்மே[2]'' என்று பிறரும் கூறுதல் காண்க. இவ்வண்ணம் மறப்பருங் கேண்மையால் மாண்புற்றூர்பால் பிரிவென்பதே இல்லையாம்; வரைதல் காரணமாக மெய்யாற் பிரிந்தவழியும், மனத்தாற் பிரிவின்றி எம்மை நினைத்தவண்ணம் இருத்தலானன்றே, தலையளித்த அந்நாள் உரைத்த சொற்கள், பிரிந்துறையும் இக்காலத்தும் எம் நினைவின்கண் பன்முறையும் எழுந்து நிலவாநின்றன என்பாள், எம்தோள் துறந்த காலைப் பன்மாண் வரும் என்றும், நீ ஐயுறுமாறு அவர் எம்மைத் துறந்தாராயின், எம்மை அவர் நினைத்தலும், அந்நினைவு எம் நெஞ்சில் அவரை நினைப்பித்தலும் செய்யா வாகலின், நீ வறிதே ஐயுறுதல் வேண்டா என்றற்கு எவன்

1. குறிஞ்சி 205-8; 231-3. 2. அகம். 332.

கொல் என்றும் கூறினாள். இவ்வாறு செவிலி தலைமகன் பிறரை வரைகின்றானோ என்று ஐயுறுதற் கேற்ற மடமுடையளாதலை, "உயிரும் நாணும் மடனும் என்றிவை, செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும்உரிய[1]" என்புழி உம்மையை ஐயவும்மை யாக்கி அமைப்பர் நச்சினார்க்கினியர்.

ஒருநாள் துறந்தகாலை என்றும், பன்னாள் வரும் அவன் அளித்த பொழுதே என்றும் பாட வேறுபாடு உண்டு. அதற்கு, முன்னர்க் கூடிய ஞான்று செய்த தலையளியாற் பிறந்த கேண்மை, அவன் வாராது நின்ற பொழுதெல்லாம் மனத்தின்கண் தோன்றி, இன்று வாராராயினும் நாளை வாரா ரல்லர் எனப் பல நாளும் நினைப்பித்தலின், எம்மைத் துறப்பர்போலும் என நீ ஐயுறாதே கொள் என்று உரைக்க. "துணைத்த தோகைப் பணைப் பெருந் தோளினர் கடலாடு மகளிர் கானல் இழைத்த சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி, ஒருநாள் துறைவன் துறப்பின், பன்னாள் வரூஉம் இன்னா மைத்தே[2]" எனச் சான்றோர் உரைப்பது காண்க. (109)

110. அன்னை வாழிவேண் டன்னை புன்னைப்
பொன்னிறம் விரியும் பூக்கெழு துறைவனை
என்னை என்றும் யாமே யிவ்வூர்
பிறிதொன் றாகக் கூறும்
ஆங்கு மாக்குமோ வாழிய பாலே.

இது நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத் தொடு நின்றது.

உரை: அன்னாய், இதனை விரும்பிக்கேள்: புன்னையின் பொன் னிறங் கொண்ட பூக்கள் எங்கும் பரந்து உதிர்ந்து கிடக்கும் துறையினை யுடைய தலைவனை யாம் என்னை என்று கூறினேமாக இவ்வூரி லுள்ளார் பிறிதொன்றாகக் கூறாநிற்பராகலின், ஊழ் அவ்வண்ணமும் ஆக்குங் கொல்லோ, கூறுக எ. று.

1. தொல். பொ. 201. 2. குறுந். 326.

புன்னையின் பூ பொன்னிறத்தது என்பதை, ''பொன்னென நன்மலர் நறுவீ தாஅம் புன்னை நறும்பொழில்[1]'' என்பதனாலும் அறிக. என்னை, என்னுடைய தலைவன். துறைவனை என்னை என்றது, ''அன்னை என்னை என்றலும் உளவே, தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும், தோன்று மரபின என்மனார் புலவர்[2]'' என்பதனால் அமைந்தது. என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்[3]'' என்றார் திருவள்ளுவனாரும். என்றும், நன்மைப் பன்மை வினைமுற்று. தலைமகட்குத் தலைமகனிடை உளதாகிய கேண்மையினை உணராது நொதுமலர் வரைவு கூறுதலின், ஊர் என்றது ஈண்டுச் செவிலி தாயர் ஆகியோரை வேறுபடுத்துக் கூறியது; ஏதிலர் என்னும் இவ்வூர்[4]'' என்றாற்போல. ஆங்கு, உவமவுருபு. உம்மை, இழிவுச் சிறப்பு. வாழிய, அசை. பால், ஊழ்.

துறைவனை யென்னை யென்றும் யாமே என்றதனால் தலைவன் வரைதற் குரிய பிறப்பு குடிமை முதலாக முறையுறக் கிளந்த ஒப்புமையுடையன் என்பது உரைத்தவாறாயிற்று; ஆகவே, இஃது அறத்தொடு நிற்றல், இவ்வாறு யாம் அவன் வரைவினை யுட்கொண்டு கூறினேமாக, ஊரவர் நொதுமலர் வரைவை உட் கொண்டு கூறுகின்றனர் என்பாள், பிறிதொன்றாகக் கூறும் என அதனை வாயால் கூறுதற்கும் விரும்பாது பிறிது வாய்பாட்டாற் கூறினாள். முன்னர்த் தலைவனோடு கூட்டுவித்த ஊழ் மீட்டும் அது செய்தலைத் தவிராது என்று கருதிக் கூறுதலின், ஓகாரம் எதிர் மறை; ''உறற்பால யார்க்கும் உறும்[5]'' ''தந்த தெய்வம் தவிராது தரும்[6]''என்பன பழமொழி. கூட்டுவித்தவாறே கூட்டாது ஊரார் கூறியாங்குக் கூட்ட லுறின் வரும் ஏதத்திற் கஞ்சி வாழிய பாலே என்றாள்: இது குறிப்புமொழி.

---

1. அகம். 360. 2. தொல். பொ. 246. 3. குறள். 771.
4. குறள் 1109. 5. பழ. 229.

6. இப்பாட்டின் நலம்கண்ட கச்சியப்பமுனிவர், ''எள்ளாத காதற் கிரையா யிருத்திய தன்றிமன்யாம், விள்ளாத காதல மாக வுள்ளாது விடுத்தவர் பால் தள்ளாத கேண்மை முன்பேதந்த பாலும் தலைதிறம்பி, நள்ளாத ஏதிலர் பாலினு மாக்குங்கொல் நன்னுதலே'' (தணிகை. களவு. 499.) என்று அழகுறப் பாடியிருப்பது காண்க.

உள்ளுறையால் தலைவனது செல்வ மிகுதி கூறி என்னை யென்றும் என்றது ஏத்தல். புன்னை பொன்னிறம் விரியும் என்றது தலைவனது செல்வமிகுதி கூறியவாறு.

ஆசிரியர் இளம்பூரணர், ''மறைந்தவற் காண்டல்[1]'' என்ற சூத்திரத்து, ''வேற்று வரைவு வரின் அது மாற்றுதற்கண்'' நிகழும் கூற்றுக்கு இப்பாட்டினை உதாரணமாக்குவர். நச்சினார்க்கினியர், ''இறந்துபாடு பயக்குமாற்றால் தன் திறத்து அயலார் வரையக் கருதிய ஞான்று அதனை மாற்றுதற்குத் தலைவி கூற்று நிகழும் என உரைத்து இதனை எடுத்துக் காட்டினர். எனவே, அவர்கட்கு இது தலைவி கூற்றென்பது கருத்தாதல் அறிக. இப் பாட்டுத் தாய்க்குரைத்த பத்திற் கோக்கப்பட்டமையாலும், தலைவி நேரே தாய்க்கு அறத்தொடு நில்லாளாதலாலும் தலைவி கூற்றினைத் தோழி கொண்டெடுத்து மொழிதலாலும், ஈண்டுத் தோழி கூற்றென்று கோடல் பொருந்துமெனக் கொள்க. (110)

---

1. தொல் பொ. 109.

2

தோழிக்குரைத்த பத்து

இது மேலது போலக் கேட்போர் பொருளாகத் தொகுக்கப் பட்டமையின் இப்பெயர்த்தாயிற்று. இதன்கண் தொகுக்கப்பட்ட பாட்டுக்கள் பத்தனுள், ''சினவுவென் தகைக்குவென் சென்ற னென், பின்னினைந் திரங்கிப் பெயர்தந்தேனே[1]'' என்ற ஒன் ருெழிய ஏனைய யாவும் களவு ஆகிய கைகோளுக் குரியவாம்.

111. அம்ம வாழி தோழி பாணன்
சூழ்கழி மருங்கி ஞணிரை கொளீஇச்
சினைக்கயன் மாய்க்குந் துறைவன் கேண்மை
பிரிந்தும் வாழ்துமோ நாமே
அருந்துவ முயற லாற்ரு தேமே.

இஃது இற்செறிப்பாரெனக் கேட்ட தலைமகள் வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, இதனைக் கேட்பாயாக: சூழ வுள்ள கழியின் கண் வாழும் சினையொடு கூடிய கயல்மீன்களைப் பாணன் தன்

1. ஐங். 118.

தூண்டிற் கயிற்ருல் இரைகொள்வித்துப் பிடிக்கும் துறைவனது கேண்மையினைப் பிரியாது பெறுதற்குரிய அரிய தவத்தைச் செய்திலேமாகலின் பிரிவுத் துன்பத்தைத் தாங்கி இவண் உயிர் வாழ்வே மாயினேம் எ. று.

பாணன். பழந்தமிழ்க் குடிகளுள் ஒரு குடியினன்; "பாணன் பறையன் துடியன் கடம்பனென்று இந்நான் கல்லது குடியுமில்லை[1]" என்ப. பாணனுக்கு மீன் பிடித்தலும் தொழில்; "வலைவல் பாண்மகன்[2]" என்புழிக் காண்க. நாண்—தூண்டிலிற் கட்டிய கயிறு. மீன் வேட்டுவர் தூண்டில் நாணினது நுனியிலுள்ள முள்ளில் அயிரை கெண்டை முதலிய சிறு மீன்களைக் கோத்துத் தண்ணீரில் எறிந்து, வரால் முதலிய பெருமீன்களைப் பிடிப்பர். அச்சிறு மீன்கள் பெருமீன்களுக்கு இரையாதலின் அவை இரை என்றும், தூண்டில் நாணிற் கோக்கப்படுதலின், நாணிரை என்றும் குறிக்கப்படுகின்றன. கெண்டையை இட்டு வராலைப் பிடிப்பது என்பது நாட்டில் வழங்கும் பழமொழி. வலைக்கடங்காப் பெருமையுடைய என்றற்கு நாணிரை கொளீஇச் சினைக்கயல் மாய்க்கும் எனப்பட்டது. பிரிந்தும் என்றதற் கேற்பப் பிரியாது என்பது முதலாயின வருவிக்கப்பட்டன. பிரிந்தும் என்புழிப் பிரிதல் கூடாமை தோன்ற நிற்றலின் உம்மை எதிர்மறை. பிரிதலே யன்றி உயிர் வாழ்தலும் செய்கின்றேம் என்றலும் ஒன்று. இனிச் சிறப்பும்மை பிரிவருமை புணர நின்றது எனினுமாம். ஓகாரம், இரக்கப் பொருட்டு, முயறல் ஆற்ருதேம் என்பது ஒரு சொல்லாய் நின்று முயன்றிலேம் என்னும் பொருளதாம். தவமாவது, தைந்நீராடுதல் முதலாயின. இதனை மகளிர் தம்மனத்துக்கு இசைந்த கணவனைப் பெறுதற் பொருட்டுத் தைத்திங்களிற் செய்தல் பண்டைய மரபு. "தாம்வேண்டுகாதற் கணவர் எதிர்பட .... யாம்வேண்டும் வையைப் புனல் எதிர்கொள் கூடல்[3]" "வையெயிற் றவர் நாப்பண் வகையணிப் பொலிந்துநீ, தையில் நீராடிய தவம்தலைப் படுவாயோ[4]" "தீயெரிப் பாலும் செறிதவமுன் பற்றியோ

1. புறம். 335. 2. ஐங். 48. 3. பரி. 10 : 35–40.
4. கலி. 59.

தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்[1]'' என வருவனவற்ருலும் அறிக.

தன்கருத்தினைச் சிறைப்புறத்து நின்ற தலைமகன் உணர் தலையும், தோழி கேட்டுத் தலைமகற்கு உரைத்தலையும் கருதின ளாகலின், அம்ம வாழி தோழி என்றும், இற்செறித்தவழித் தனக்குளதாகும் பெருவருத்தத்தை உள்ளுறையாற் கூறலின், தலை மகன் தெருண்டு கடிதின் வரைதலை யன்றி நீட்டிப்பின் ஊர்க்கண் அம்பலும் அலரும் தோன்றி வருத்தியவழித் தனது ஆற்ருமை தோன்ற, பிரிந்தும் வாழ்துமோ என்றும், இறவாத இன்பப் பேற்றுக் குரிய தான் இவ்வாறு பிரிவு நிகழ்ச்சியால் எய்தும் வருத்தத்திற்குக் காரணத்தைத் தன்னுள் ஆராய்ந்து தலைமகன் கடிதின் வரையாமைக்குத் தன் தவமின்மையே காரணம் என்று துணிந்தனளாகலின், அருந்தவம் முயறல் ஆற்ருதேமே என்றும் கூறினுள். அருந்தவம் முயலாமையின் ஆருயிர்க் கணவனைப் பெற்றும் அவன்பாற் பெறற்குரிய அழிவில் கூட்டம் பெருமையே யன்றி, அவனைப் பிரிந்துழி இறந்துபாடு எய்தாது உயிர்வாழ்வதும் செய்வே மாயினேம் என்பாள் பிரிந்தும் வாழ்துமோ நாமே என்ருள். இவ்வாறே காப்புமிகுதிக் கண் ஆற்ருளாகிய தலைவி, ''பிரிவரிதாகிய தண்டாக் காமமொடு உடனுயிர் போகுக தில்ல கடனறிந்து. இருவேமாகிய வுலகத்து. ஒருவேமாகிய புன்மை நாம் உயற்கே[2]'' எனக் கூறுதல் காண்க

பாணன் நாணிரை கொள்வித்துச் சினைக்கயலை மாய்க்கும் துறைவன் என்றது. தலைமகன் தன் கேண்மையால் இன்பம் நுகர் வித்துக் கடிது வரையாது வருத்துகின்ருன் எனத் துனியுறு கிளவி தோன்றக் கூறியவாறு ; '' இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும், உவம மருங்கின் தோன்றுமென்ப[3]'' என ஆசிரியர் உரைப்பது காண்க. இது, தோழி வினவாமே தலைமகள் தானே கூறியதாயின். ''வரை விடைவைத்த காலத்து வருந்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினும், உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும், தானே கூறும் காலமு முளவே[4]'' என்பதனுல்

---

1. பரி. 11. 2. குறுந். 57. 3. தொல். பொ. 303.
4. தொல். பொ. 112.

அமையும். பிரிந்தும் வாழ்துமோ எனக் கூறத் தகாதன கூறுதலின் கலக்கம் அருந்தவ முயற லாற்ருதேமே என்றது அழிவில் கூட்டத்து ஆங்கு நெஞ்சழிதல். நாளிரை கொளீஇ என்ற பாடத்துக்குப் பாணன் நாட் காலேயில் உணவுண்டு கழியின்கண் சினைக்கயலைப் பிடிக்கும் துறைவன் என்று உரைக்க. நாள் இரை—காலைப்போதில் பெறும் உணவு. "வாளை நாளிரை பெறூஉம்[1]" என்று பிறரும் கூறுதல் காண்க. (111)

112. அம்ம வாழி தோழி பாசிலைச்
செருந்தி தாய விருங்கழிச் சேர்ப்பன்
தான் வரக் காண்குவ நாமே
மறந்தே மன்ற நாணுடை நெஞ்சே.

இது களவு நீடுவழி வரையலன்கொல் என்று அஞ்சிய தோழிக்குத் தலைமகன் வரையும் திறம் தெளிக்கத் தெளிந்த தலைமகள் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக; பசிய இலைகளை யுடைய செருந்தி மரத்தின் கிளைகள் பரவிய பெரிய கழியினையுடைய சேர்ப்பன் நம்மைத் தெளிவித்த போழ்து கூறியவற்றை நாணுடைமையால் நாம் முற்றும் மறந்தோம்; நம்மை என்றும் மறவாத மாண்புடைய மனத்தனுதலின், இனி, நாமே அவன் வரக் காண்போம், அஞ்சுதலை ஒழிக எ. று.

நம்மைத் தெளிவித்த முதலாயின குறிப்பெச்சம். செருந்தி யென்பது நெய்தல் நிலத்தில் வளர்வதொரு மரம். இது பெரும்பாலும் மணல் பரந்த எக்கர்பகுதிகளில் வளம்பட வளரும்; "எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழ[2]" என்றும், "வண்டுபட, விரிந்த செருந்தி வெண்மணல் முடுக்கர்[3]" என்றும் அறிந்தோர் கூறுதல் காண்க. இதன் பூ பொன்னிற முடைய்து; "பொன் னடர்ந்தன்ன ஒள்ளிணர் செருந்தி[4]" என்பது காண்க. இது

1. ஐங். 63. 2. ஐங். 141. 3. அகம். 240.
4. ஷை. 280.

காலைப் போதில் மலரும் இயல்பிற் றென்பது, "செருந்தி, காலையே கனகம் மலர்கின்ற சாய்க்காடே" (174. 9) என்று திருஞானசம்பந்தர் கூறுவதால் விளங்குகிறது. இதன் பூவை மாலையாகத் தொடுத்து மகளிர் அணிந்து கொள்வர்; "செருந்திப் பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையள்[1]" என இவ்வாசிரியர் பிறண்டும் கூறுதல் காண்க. நாமே, ஏகாரம் தேற்றம். நாண், காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோர் உள்ள வொடுக்கம். அதனையுடைமை, மறத்தற் கேதுவாயிற் றென்க. மன்ற, தேற்றப் பொருட்டு.

தலைக்கூடிய விடத்துத் தலைமகன், "நாடறி நன்மணம் அயர்கம் சின்னாள், கலங்கல் ஓம்புமின் இலங்கிழையீர்[2]" என்று கூறித் தெளிவித்ததனை நினையாது வரையலன்கொல்லென அஞ்சுகின்றாளாகலின் மறந்தேம் மன்ற என்றும், நெஞ்சின்கண் அறிந்த ஒன்றினை மறப்பின், பெயர்த்தும் அதன் நிகழ்ச்சி காண்டல், ஒத்தது காண்டல், மாறுபது காண்டல், காரணகாரியங் காண்டல் இடங் காண்டல், காலம் காண்டல் முதலியன பற்றி நினைவு கூர்தல் உண்மையின் ஈண்டு மாறுய குறிப்புக் கண்டு நினைவு கூரற்பாலை என்பாள் காண்குவம் நாமே என்றும், தலைமகனை எதிர்ப்பட்ட விடத்து நாணம் இறந்து அவன் கூறியவற்றைக் கேட்டு அமைந்த நெஞ்சு, தோழி அஞ்சிக் கூறிய ஈரமில் கூற்றினை ஏற்றற்கு நாணுதல் தோன்ற, நாணுடை நெஞ்சு என்றும் கூறினாள் "தானே கூறும் காலமு முளவே[3]" என்புழி உம்மையால் வினாதற் குறிப்புள்ளவழிக் கூறல் வலியுடைத் தாகலின் இஃது அஞ்சிய குறிப்புணர்ந்து கூறியவாறு.

பாசிலைச் செருந்தி தாய இருங்கழிச் சேர்ப்பன் என்றது தலைமகனது செல்வ மனையின் சிறப்புணர்த்தியவாறு. பாசிலைச் செருந்தி தாய இருங்கழிச் சேர்ப்பன் என்றதனால், தெளித்துரைத்த வன்புறையைக் கைந் நெகிழ்த்து மாறுவனல்லன்; மாறின், பாசிலையின்றி அவன் நாட்டுச் செருந்தி முதலியன கெட்டழியும்

1. அகம். 280. 2. குறிஞ்சி. 232 : 3.
3. தொல். பொ. 112.

என இறைச்சி தோன்றுமாறும் காண்க. ''இறைச்சி தானே பொருட் புறத்ததுவே[1]'' என்பர். தான்வரக் காண்குவம் என்றது தெரிந்துடம்படுதல். மறந்தேம் மன்ற என்றது மடந்தப வுரைத்தல். (112)

113. அம்ம வாழி தோழி நென்னல்
ஓங்குதிரை வெண்மண லுடைக்குந் துறைவற்
கூரார் பெண்டென மொழிய வென்னை
அதுகேட் டன்னா யென்றன ளன்னை
பையென வெம்மை யென்றனன் யானே.

இது வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்ப நெருநல் இல்லத்து நிகழ்ந்தது இதுவெனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை : தோழி, கேட்பாயாக; வெண்மையான மணல் பொருந்திய கரையை அலைக்கும் உயர்ந்த அலைகளையுடைய துறைவற்குப் பெண்டாயினா ளென்று என்னை இவ்வூரார் நெருநல் அலர்கூற, அதனைக் கேட்ட அன்னை சிவந்து, அன்னாய் என என்னை வினவினளாக, யான் எம்மை என்ற சொல்லை மெல்லக் கூறினேன்; இது காண் நிகழ்ந்தது எ. று.

உடைத்தல், ஈண்டு அலைத்தன்மேற்று. பெண்டு என்பது நலன் நுகரப்படா நிற்கும் செவ்வியிலுள்ள பெண்ணைக் குறிக்கும் சொல் ''ஊர் அவன் பெண்டென அறிந்தன்று[2]'' என்றும், ''நின் பெண்டெனப் பிறர் கூறும் பழிமாறப் பெருகிற்பின்[3]'' என்றும் வருவனற்றாலுணர்க. பைய என்பதற்கேற்பச் சிவந் தென்பது வருவிக்கப்பட்டது. ஊரார் கூறும் அலர்க்குப் பொருளாயினார் தலைமக்கள் இருவரு மாகலின், எம்மை என்றாள். தோழியை உளப்படுத்தற்கு எம்மை யென்றாள் என்றலும் ஒன்று

1. தொல் பொ. 229. 2. நற். 74. 3. கலி. 77.

தோழி, நென்னல், ஊரார் என்னை மொழிய, அன்னை, கேட்டு அன்னாய் என்றனளாக, யான் எம்மை என்றனன் என இயைக்க.

தலைவன் வரைவு கருதாது களவொழுக்கமே விரும்பி உறைதலால், இச்செய்தி ஊரெங்கும் பரவி அலராயிற்றென்பாள், ஊரார் பெண்டென மொழிய என்றும், இதனை அன்னை அறிந்து வெகுண்டு இற்செறிப்புக் கருதினள் என்றற்கு, அது கேட்டு அன்னாய் என்றனள் அன்னை என்றும், இவ்வாறு எய்தும் இடையீடுகளை அறியாது தலைமகன் ஒழுகுகின்றமையின் உண்மை முற்றும் செப்புதற் கஞ்சி,எம்மை என்றனன் என்றும் கூறினாள். இது "பொழுது மாறும்[1]" என்ற சூத்திரத்துப் "புரைபட வந்த அன்ன பிறவும்" என்றதனால் வரைதல் வேட்கைப் பொருட்டா யினமையின் தலைமகள் கூறல் வழுவன்மை உணர்க. "அலர்வாய் அம்ப லூரும் அவனொடு மொழியும்[2]" எனத் தலைவி கூறுதல் காண்க.

ஓங்குதிரை வெண்மணற் கரையை யுடைக்கும் என்றதனால், ஊரி லெழுந்த அலர் இவ்வொழுக்கத்தினைச் சிதைப்ப தாயிற்று என்றாளாம்.

அலர் அறிவுறுத்தித் தலைமகனோடு கூட்டம் விலக்குதற் கெழுந்த உள்ள நிகழ்ச்சி யுடைய ளாகலின், ஊரார் பெண்டென மொழிய என்றது அழிவில் கூட்டத்து அவன் புணர்வு மறுத்தலாம். அன்னாயென்றனள் அன்னை என்றது தமரறிவு உணர்த்தல். பைபய எம்மை யென்றனன் என்றது ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல்.

ஊரார் பெண்டென மொழிப என்றும், அது கேட்டு அன்னை என்றனள் அன்னை என்றும், பைய வெம்மை என்றும் பாடமுண்டு. மொழிப என்றது நிகழ்காலப் பல்லோர் படர்க்கை வினைமுற்று; உண்ணா நிற்ப என்றாற் போலத் தாய்கேட்ட பொழுதே யன்றி

1. தொல். பொ. 210. 2. அகம். 282.

இப்பொழுதும் கூருநின்றன ரென்றற்கு, மொழிப என நிகழ் காலத்தாற் கூறினுளென்க. அன்னே யென்றனள் அன்னே யென்புழி முன்னது சொல்லினும் எழுத்தினும் தோன்ரு மரபிற்ருகிய வழக்குச் சொல் அண்மைவிளி ஏற்றதென்றும், பின்னது பெண் பால் முறைப்பெயரென்றும் கொள்க. பைய என்னும் மென்மைக் குறிப்பிற்ருய இடைச்சொல் வினேயெச்சமாயிற்றென்க.

"களவல ராயினும்"[1] என்ற சூத்திரத்துக் "களவல ராயினும்" என்புழி நிகழும் செவிலி கூற்றுக்கு இதனேக் காட்டி, "இதனுள் பெண்டு என்றதனேக் கேட்டு அன்னுய் என்றனள் அன்னேயென அலர் தூற்றினமை கண்டு செவிலி கூறிய கூற்றினேத் தலேவி கொண்டு கூறியவாறு காண்க" என்பர் நச்சினுர்க்கினியர். (113)

114. அம்ம வாழி தோழி கொண்கன்
நேரே மாயினுஞ் செல்குவங் கொல்லோ
கடலி ஞரை யிரற்றும்
மடலம் பெண்ணே யவனுடை நாட்டே.

இஃது இடைவிட் டொழுகும் தலேமகன் வந்து சிறைப் புறத்தா னுனமை அறிந்த தலேமகள் அவன் கேட்குமாற்ருல் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: கொண்கன் உள்வழி நாமே சென்று சேர்தற்கு ஏற்ற உரிமை யில்லேமாயினும், கடல் நாரை வந்து தங்கி ஒலிக்கும் மடல் பொருந்திய பெண்ணேகள் நிறைந்த அவன் நாட்டிற்குச் சென்று வருவேமோ, கூறுக எ. று.

நேர்தல் ஈண்டுச் சென்று தலேப்பெய்தல். தலேமக்கள் இருவருள்ளும் தலேமகள் தலேமகன் உள்வழிச் சென்று சேர்தல் இன்மை, "உடம்பும் உயிரும் வாடியக் காலும், என்னுற்றன

1. தொல். பொ. 115.

கொல் இவை யெனின் அல்லது, கிழவோர்ச் சேர்தல் கிழத்திக் கில்லை[1]'' என்பதனால் அறிக. எனினும், ஒரோவழிச் செல்வேமோ எனத் தலைவி சொல்லுதல் உண்டு; அதனை, ''ஒரு சிறை நெஞ்சமோடுஉசாவுங்காலை, உரிய தாகலும் உண்டென மொழிப[2]'' என்று ஆசிரியர் கூறுவர். இதன்கண், உம்மையால் தோழியொடு உசாதலுங் கொள்ள வைத்தமையின், இஃது அமைவதாயிற்று ''பகலே பலருங்காண நாண்விட்டு அகன் வயற் படப்பை அவனூர் வினவிச் சென்மோ வாழி தோழி[3]'' என்றார் பிறரும். இனி இஃது அறக்கழிவுடையதாயினும் சிறைப்புறத்தே வரைவுகடாதற் பொருட் பயத்ததாய் வருதலின் அமைந்தவாறு என்றுமாம். ''அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின், வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப'' என்பது விதி. கொல், அசைநிலை. ஓகாரம், வினா. இரற்றுதல், ஒலித்தல்; பிருண்டும் ''மடநடை நாரை கையறுபு இரற்றும்[5]'' என்று வரும். ''ஈட்டருப் புள்ளினம் இரற்றும்[6]'' என்று பிறரும் வழங்குதல் காண்க. பெண்ணை, பனை; 'தடந்தாள் நாரை, பெண்ணை அகமடற் சேக்கும்[7]'' என நெய்தலிற் பனை வந்தவாறு காண்க.

தலைமகன் இடையிட் டொழுகுதலால் பிரிவாற்றாது வருந்து கின்றவள் அவனைச் சென்று சேர்தல் தனக்கு முறைமையன்று என்பதை உணர்ந்து உரைத்தலின், நேரேமாயினும் என்றும், ஊரலரும் காப்புமிகுதியும் தான் அவன் மார்புதரும் இன்பத்தை நுகர்தற்கு இடை யீடாக நிற்றலின் அவற்றின் நீங்கி அதனை இடையறாது பெருங்கருத்தினளாகலின், செல்குவம் கொல்லோ என்றும் கூறினாள். சேறற் கெழுந்த கருத்தினைத் தோழியொடு உசாவிய விடத்து அவள் அஃது ஆகாதென மறுத்ததனை உடம் பட்டுக் கூறியதாகலின், நேரேமாயினும் என்றது கற்றதும் தோழி கூறியதும் கொண்டு கூறியவாறு. இது, கலக்கம், கூறத் தகாதன கூறலின்.

---

1. தொல். பொ. 203. 2. ஷை. ஷை. 204. 3. நற். 365.
4. ஷை. ஷை. 218. 5. ஐங். 152. 6. சீவக. 95. 7. அகம். 40.

கடலின் நாரை போந்து ஒலித்தற்கு இடந்தரும் பெண்ணை களையுடைய நாடன் என்றது தன்மனையி னீங்கி அவனுடைய நாட்டைச் சென்று சேர்ந்தவழி அவன் ஏற்று மகிழ்வன் எனத் தன் கருத்துக்கு ஆதரவுபட உள்ளுறை கூறியவாறு காண்க. இனி, கடற்கண்ணுள்ள மீனைக்கவர்ந்து உண்டற்குரிய நாரை பெண்ணை மடலின் கண் தங்கி இரற்றுதல் போலச் செறிப்புற்றுக் கிடக்கும் என்னை வரைதலை நினையாது தன்மனைக்கண்ணே தங்கினுன் எனச் சிறைப்புறத்து நின்ற தலைமகனை வரைவு கடாதற் பயத்ததாய் உள்ளுறுத் துரைத்தவாறுமாம். செல்வங் கொல்லோ என்றது, தாவில் நன்மொழி கிழவி கிளத்தல்.

நேரேனுயினும் என்பது பாடமாயின், காப்பு மிகுதியானும், இடையிட் டொழுகும் அவன் ஒழுக்கத்தினுலும் தலைமகனை எதிர்ப் பட்டிலே னுயினும் என்று உரைக்க. மடலம் பெண்ணைய வவருடை நாட்டே என்ற பாடத்துக்கு, பெண்ணைய வென்பது பெயரெச்சக் குறிப்பென்றும் நாடு என்பதனேடு முடிந்ததென்றும் உரைக்க. (114)

115. அம்ம வாழி தோழி பன்மாண்
நுண்மண லடைகரை நம்மோ டாடிய
தண்ணந் துறைவன் மறைஇ
அன்னை யருங்கடி வந்து நின் றேனே

இஃது இற் செறிப்புண்ட பின்னும் வரைந்துகொள்ள நினையாது தலைமகன் வந்தானுக அதனை அறிந்த தலைமகள் அவன் கேட்கு மாற்றுல் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: பலவாகிய மாட்சிமைப்பட்ட நுண்ணிய மணல் செறிந்த கடற்கரைக்கண் நம்மோடு கூடி யாடிய குளிர்ந்த துறைவன் மறைந்து, அன்னையின் கடத்தற்கரிய காவலமைந்த இற்புறத்தே வந்து நின்றனன், காண் எ. று.

கடி, அதனையுடைய இல்லத்திற்குத் தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணிய ஆகுபெயர்; ''அறனில் அன்னை யருங்கடிப்

படுப்ப[1]'' என்றாற் போல. வரைந்து கோடலை நினையாது பண்டுபெற்ற களவுக் கூட்டத்தையே இன்னும் விரும்புகின்றா னென்பது தோன்ற, அடைகரை நம்மோடாடிய துறைவன் என்றும். தான் கடந்து வருதற் கரிய காவலையுடைய இற் செறிப்புற்ற மையின் வரைந் தெய்தினாலன்றிக் கூட்டம் எய்தாது என வரை வுடன் படுத்துவாள் அன்னை அருங்கடி என்றும் கூறினான் இது ''வரையா நாளிடை வந்தோன்[2]'' சிறைப்புறமாக முட்டிய தறிந்து தலைமகள் தானே கூறியது.

இதன்கண் அன்னை அருங்கடி என்றது கரந்திடத்தொழிதல் வந்து நின்றேனே என்றது கண்டவழி உவத்தல்.

''மறைந்தவற் காண்டல்[3]'' என்ற சூத்திரத்துப் பெற்ற வழி மலிவினும்'' என்புழி நிகழும் தலைவி கூற்றுக்கு இப் பாட்டினையே இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எடுத்துக் காட்டுவர்.

அருங்கடி மரீஇ என்றும் பாடவேறுபாடு உண்டு. (115)

116 அம்ம வாழி தோழி நாமழ
நீல விருங்கழி நீலங் கூம்பும்
மாலை வந்தன்று மன்ற
காலையன்ன காலைமுந் துறுத்தே.

இஃது ஏற்பாட்டின்கண் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: நீல நிறமுடைய பெரிய கழியின்கண் நீலமலர்கள் குவியும் இருண்மாலைப்போது, நாம் அழுது வருந்துமாறு நாட்காலைப் போது போலும் ஒளிமாலைப் போதினை முற்படவிட்டுப் போதருவதாயிற்று, தெளிவாகக் காண் பாயாக எ. று.

---

1. நற். 63 . 2. தொ. பொ. 112. 3. தொல். பொ. 111.

கரிய சேறு நிறைந்திருத்தல் பற்றிக் கடற்கழியினை, நீல இருங்கழி என்றார். கூம்புதல், ஈண்டு இதழ் குவிதல்; "மாலை மணி இதழ் கூம்ப[1]" என்றாற் போல, பிற்பகலில் வீழ்கதிர் ஞாயிறு அடிவானத்தை நெருங்கும் மாலைக்காலம் ஒளிமாலை யெனவும், கதிர்களின் பொன்னொளி மறையா நிற்க இருள் தோன்றி விரவிப்படரும் காலம் மருண்மாலை யெனவும், இருண்மாலை யெனவும் வழங்கும். மதியுமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த இம் மருண்மாலை" "பகல் செய்வான் போய் வீழ வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை[2]" எனச் சான்றோர் குறித்தல் காண்க காலைப்போதும், மருண்மாலை போல இருளும் ஒளியும் விரவி நிற்கும் இயைபுபற்றி, "காலை யன்னகாலை" என்றார்; "ஞாலங் காவலர் வந்தனர், காலை யன்ன மாலை முந்துறுத்தே[3]" என்று பிறரும் கூறுவர். மன்ற, தேற்றப் பொருட்டாய இடைச் சொல்.

மாலைப் பொழுதின்கண் மாவும் புள்ளும் தத்தம் சேக்கை யடைந்து துணையொடு கூடி இனிதிருத்தல் நோக்கித் தான் தன் காதலனுடன் கூடி இனிதிருக்கும் பேறின்றித் தனித்திருந்து வருந்துமாறு தோன்ற, நாம் அழ என்றும், கழிக்கண் மலர்ந்த நீலம் கூம்புமாறு போலத் தான் கண்ணுறக்கம் பெறாமையைக் குறிப்பாய், நீல இருங்கழி நீலம் கூம்ப என்றும் கூறினாள். இது புலம்பித் தோன்றல். இனி, இம்மாலைப் போது எனக்கு இறந்து பாட்டினைச் செய்வதல்லது இன்பம் செய்வதில்லை என வருந்தினளாக, அவட்குத் தோழி, இது மாலைப்போதன்று, நாட்காலைப் போதாகிய எற்பாட்டுக் காலை என்றாளாக, நீ அறியாய், எற்பாட்டுக் காலைபோலும் ஒளிமாலையை முன்னுறவிட்டு இருண்மாலைப் போதாகிய மாலை வாராநின்றது தெளியக்காண் என்பாள், காலையன்ன காலை முந்துறுத்து மாலை வந்தன்று என்றதனோடமையாது மன்ற என வற்புறுத்தினாள். இது கலங்கி மொழிதல். பிரிந்துறை மகளிர் காதலர் வருவரெனக் கருதி ஆற்றுமாறு பயக்கும் காலைப் பொழுது போலும் காலையை முந்துற விடுத்து, ஆற்றாமை பயக்கும் மாலைப்

---

1. அகம் 150 2. சிலப். கானல். 41, 50. 3. தொல். பொ. 148. இளம். மேற்.

போது பின் வந்தது என்றதனுல், அருளுவான் போல முந்துற வந்து கூடி, இப்போது வரையாமையால் வருத்துகின்ருன் என இறைச்சி தோற்றுவித்தல் காண்க.

இது, ''வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்[1]'' என்பதனைத் ''தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்'' என்னும் தந்திர வுத்தியால் வரைவிடை மாலைப்போது கண்டு ஆற்ருளாகிய தலைவி எற்பாட்டின்கண் தானே தோழிக்குக் கூறியது என்க. (116)

117. அம்ம வாழி தோழி நலனே
இன்ன தாகுதல் கொடிதே புன்னை
அணிமலர் துறைதொறும் வரிக்கும்
மணிநீர்ச் சேர்ப்பனை மறவா தீமே.

இது, வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத் தானுகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேள்: புன்னையின் அழகிய மலர்கள் துறை தோறும் படிந்து கோலஞ் செய்யும் தெளிந்த நீரினையுடைய சேர்ப்பன் தந்த நலத்தையுடையே மாகலின், அந்நலம் இத் தன்மைத் தாதல் கொடிதாம்; ஆகவே, அதனை மறந்து கூறுவார். கூறுவனவற்றைக் கூறற்க எ. று.

அவன் தந்த நலம் என்பது அவாய்நிலை. மறத்தல், ஈண்டு மறந்தார் கூறும் கூற்றில்மேல் நின்றது. மறந்தார் கூறுவன அன்பிலன், கொடியன் என்றல் முதலாயின. மணிநீர், தெளிந்த நீர். ''மணிகண் டன்ன துணிகயம்[2]'' என்ருர் பிறரும். மறவாதீமே என்றது, ''தலைப்பெய்தீமே[3]'' என்ருற் போலும் முற்றுவினைத் திரிசொல்.

தமர் அறிதற்கும் எதிர்ப்பாட் டருமைக்கும் அஞ்சி மேனி நலன் வேறுபட்டமையின், நலனே என்றது குறிப்புமொழி. அவ்

1. தொல். பொ. 112. 2. அகம். 56. 3. ஐங். 86.

வேறுபாடு கண்டு ஆற்ருது உரைக்கும் தோழிகூற்றினைக் கொண் டெடுத்து மொழிவாள், இன்னதாகுதல் கொடிதே என்று தோழியை ஒருமருங்கு உடன்பட்ட தலைமகள், தலைமகனை அன்பிலன் கொடியன் எனத்தோழி இயற்பழிப்பப் பொருளாய், இந்நலன் ருனும் முன்னர் அவனை எதிர்ப்பட்ட ஞான்று அவன் நல்கப் பெற்ற தாகலின், அதனையுடைய நாம், அந்நன்றி மறந்து கொடுமை கூறலாகாது என்பாள், மறவாதீமே என்றும் கூறினாள். நலனே என்றது உடம்பு நனி சுருங்குதலும், இன்னதாகுதல் கொடிதே என்றது ''உடம்பும் உயிரும் வாடியவிடத்து என்னுற்றன கொல் இவை'' என்றலுமாம். கொடிதெனவே மேனி வேறுபாடு தானே விளங்குதலின் , இன்னதாகுதல் என்றொழிந்தாள்.

புன்னையினுடைய அணிமலர் துறைதோறும் வரிக்கும் என்றத னுல், தலைமகனுடைய கூட்டம் நமக்கு எய்துந்தோறும், மேனி நலம்பெறுவ தாயிற்றென்ருளாம்.

இது வரையா நாளிடை வந்தோன்[1] சிறைப்புறமாக முட்டிய தறிந்து தலைமகள் தானே தோழிக்குக் கூறியது. ''மறைந்தவற் காண்டல்[2]'' என்ற சூத்திரத்து, ''காமஞ் சிறப்பினும்'' என்பதற்கு இதனைக் காட்டி இது, தலைவி தன்வயின் உரிமை தோன்றக் கூறியது என்பர் இளம்பூரணர். இப்பாட்டின்கண் தலைவிபால் அன்பு குன்ருமை தோன்றக் கூறியது தன்வயின் உரிமை. (117)

118 அம்ம வாழி தோழி யானின்
றறனி லாளற் கண்ட பொழுதின்
சினவுவென் றகைக்குவென் சென்றனென்
பின்னினைந் திரங்கிப் பெயர்தந் தேனே.

இது சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தோழி வாயின் மறுத்த தலைமகள், பின்பு தலைமகன் வந்துழி நிகழ்ந்ததனை அவட்குக் கூறியதூஉமாம்.

---

1. தொல். பொ. 2. ஷை. ஷை. 109.

உரை ; தோழி, கேட்பாயக ; யான் இன்று. அவ்வறனில்லாத தலைவனைக் கண்டபோது சினந்து, இனி இவண் வாரற்க எனத் தகைந்தொழிய எண்ணிச் சென்றேன். பின்னர் அது செய்தலால் நமக்கே இளிவாமென்று கருதி வருத்தமுற்று மீண்டேன் எ.று.

சினவுவென் தகைக்குவென் என்ற முற்று வாய் பாட்டு வினையெச்சங்கள் சென்றனென் என்னும் வினைகொண்டன. பின் நினைந்து இரங்கத் தகுவன செய்தல் அறிவுடையார் செயலன்மை யின் பின்நினைந்து இரங்கிப் பெயர் தந்தமை எடுத்தோதினர். "செய்து பின்னிரங்கா வினை[1]" என்றும், "எற்றென் றிரங்குவ செய்யற்க[2]" என்றும் சான்றோர் அறிவுறித்துமாறு காண்க. பின் என்றது, பின்னரெய்தும் இளிவரவினை: "எள்ளின் இளிவாமென் றெண்ணி அவர் திறம், உள்ளும் உயிர்க் காதல் நெஞ்சு[3]" என்பதனாலும் இது துணியப்படும். இளிவரலாவது வழி படாமையானும் பிரி வாற்றாமை யானும் நாணும் நிறையும் இழத்தலானும் உளதாவது.

சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக் சொல்லியதாயின், விரைந்து வரைதலைச் செய்யாது நீட்டித்து அவர் விளைத்தல் குறித் துச் சினவுவென் என்றும், அதனால் இருவரும் தலைப்பெய்தும் திறனின்றி, இற்செறிப்புறுதற் கஞ்சித் தகைக்குவென் என்றும், பிறர்க்குத் துன்ப முளதாயவழிக் காண்பார் கண்ணோடி அது தீர்த்தல் அறமாகலின், தன் துயர் துடைக்காத தலைமகனை அறனிலாளன் என்றும், இனி, தனக்கு ஒரு துன்பத்தைச் செய்த வழியுமே யன்றிச் செய்யாதிருந்த வழியும், ஒருவர் ஒருவர்க்கு அது செய்தல் அறமன்மையின், தன் கேண்மையால் நமக்குத் துன்பம் செய்தமை பற்றி அறனிலாளன் என்றும் கூறினாள் என்க. தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது கண்டிருந்த தலைவி, பின்பு அவன் வந்தவிடத்து நிகழ்ந்ததனை அவட்குக் கூறியது என்பது கருத்தாயின், இப் பாட்டின்கண், தலைவனைத் தலைமகள் அறனிலாளன் என்றது, தன்னொடு கூடிச் செயற்பால தாகிய அறத் தினைப் பிரிவானும் புறத் தொழுக்கத்தானும் செய்யாது ஒழுகுவது

1. அகம். 268. 2. குறள். 655. 3. ஷை. 1298.

பற்றி என்றும், பிரியேன் எனப்பண்டு களவின்கண் செய்த சூளுறவினைப் பொய்த்தமை பற்றிச் சினவுவென் என்றும். இதுபோது வந்து நம்மைக் கூடுவோன் பெயர்த்தும் புறத்தொழுக்கம் விழைந்து பிரிந்து சென்று நம்மை வருத்துவனுகலின், தகைக்குவென் என்றும் தலைமகள் கூறினுள் எனக் கொள்க.

இது ''வரைவிடைவைத்த காலத்து வருந்தினும்'' என்பதனைத் ''தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்'' என்னும் உத்தியால் வேறுபட வருவன வெல்லாம் கோடற்கண் ஆற்ருமையால் தானே கூறுதல். இங்ஙனம் கூறல் தலைமகட்குச் சிறப்பன்ருயினும், ' உயிரினும் சிறந்தன்று நாணே[1]'' என்ற சூத்திரத்து ஆவகைப் பிறவும் தோன்றுமன் பொருளே'' என்றதனுல் அமையும். (118)

119. அம்ம வாழி தோழி நன்றும்
எய்யா மையி னேதில பற்றி
அன்பிலன் மன்ற பெரிதே
மென்புலக் கொண்கன் வாரா தோனே.

இது, வரைதற்கு வேண்டுவன முயல்வேம் எனச் சொல்லி, வரையாது ஒழுகுகின்ற தலைமகன் சிறைப்புறத்தான் ஆனமை அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: நெய்தல் நிலத்தையுடைய தலைமகன் வரைந்து கோடற்குரிய நன்னெறியினை அறியாமையினுல் அதற்கு ஏதுவாகாதவற்றை மேற்கொண்டு ஒழுகுகின்றமையின் அவன் தெளிவாகப் பெரிதும் அன்பில்லாதவனுவான்; அன்புடையனுயின், இவை செய்யாது வரைதற்கு வேண்டுவன கொண்டு வாராதிரான், எ. று.

செய்யுட்கண், வாராதோன் என்புழி, ஆ, ஒவாயிற்று[2] உம்மை, இசை நிறை. மென்புலம்- நெய்தல் நிலம்; மென்புலக் கொண்

1. தொல். பொ. 113. 2. தொல். சொல். 213.

கண்[1]" எனப் பிறரும் வருதல் காண்க. வரைதற் கேது வாகாதன, பகலினும் இரவினும் பயின்று வருதலும், அலர் விளைவித்தலும் முதலாயின. எய்யாமை, அறியாமைப் பொருட்டு. "எய்யாமையே அறியாமையே[2] என்பது விதி.

வரைவுக்கு இடையீடாக அயல் வரைவு நிகழினும், அலர் வெளிப்படினும் யாம் இறந்து படுவேம் என்பது அறிந்திலன் என்பாள், நன்றும் எய்யாமையின் என்றும், தான் வேண்டும் களவொழுக்கமே விரும்பி அதனை நீட்டித்து ஒழுகுகின்றா னென்பாள், ஏதிலபற்றி என்றும், இவ்வாறு பல்லாற்றானும் தலைவன் வரைவிடைவைத்தொழுகுதலின் தலைவி ஆற்றாளாய்த் தோழி வினவாக்காலத்தும் தானே அவன் அன்பின்மையை எடுத்துக் கூறி, வரைதல் வேட்கை புலப்பட நிற்றலின், அன்பிலன் மன்ற என்றும் கூறினாள். அன்பிலன் மன்ற என்ற இஃது அன்புதலைப் பிரிந்த கிளவியாயினும், சிறைப் புறத்துக் கூறப்படுதலின் அமைவதாயிற்று. "அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின், சிறைப்புறம் குறித்தன்றென்மனார் புலவர்[3]" என்பது இலக்கணம். வரையாடு வன்பறழ்த் தந்தைக், கடுவனு மறியுமக் கொடியோனையே[4]" எனப்பிறரும் கூறுதல் காண்க. இக்கூற்று, "அன்னபிறவும், வரைதல் வேட்கைப் பொருள என்ப[5]" என்பதன்கண் அடங்கும்.

எய்யாமையின் ஏதிலபற்றி யென்றது பொய்யாக் கோடல். அன்பிலன் மன்ற என்றது துன்பத்துப் புலம்பல்.

இனி, ஏதிலர்ப் பற்றி யென்றும், ஏதில்பற்றி என்றும் வரும் பாடங்கட்கு, அயலாரைத் துணைக்கொண்டு என்றும், சிறைப்புறம் பெற்றுக் களவு பயிலுகின்றமையின் என்றும் உரைத்துக்கொள்க.

(119)

---

1. ஐங். 138. 2. தொல். சொல். 342. 3. ஷை. பொ. 113.
4. குறுந். 26. 5. தொல். பொ. 210.

120. அம்ம வாழி தோழி நலமிக
நல்ல வாயின வளியமென் றோளே
மல்ல லிருங்கழி மலிநீர் விரியும்
மெல்லம் புலம்பன் வந்த மாறே.

இது, வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வந்து சிறைப் புறத்தானாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக; வளவிய பெரிய கழியின்கண் நீர்மிக்குப் பரவும் நெய்தற் புலங்களையுடைய தலைவன் வந்ததனால், நலம் கெட்டு அளிக்கத் தக்கவாகிய எம்முடைய மெல்லிய தோள்கள் பண்டுபோல் நலம் மிக உடையவாயின, எ.று.

நல்லவாயின என்றதற்கேற்பப் பண்டைய வென்பது வருவிக்கப்பட்டது. மாறு, மூன்றுவதன் பொருள்பட வரும் இடைச் சொல். ஏனைவருமிடத்தும் இதுவே கூறிக்கொள்க. மலிநீர்-மிக்குற்ற நீர். "மல்ல லிருங்கழி மலிநீர்ச் சேர்ப்பன்[1]" என்று பிறரும் கூறுவர்.

"உடம்பும் உயிரும் வாடியக் காலும், என்னுற்றன கொல் இவையெனின் அல்லது, கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை[2]" என்பவாகலின், தோள்மேல் வைத்து நல்லவாயின என்றாள். நலம் மிக என்றது, வண்ணம் பசந்து புலம்புற்று இருந்தமையும், "உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே[3]" என்றதனால், அளிய மென்றோளே என்றும் கூறியவாறும். அன்றியும், தலைவன் வந்துழி நலம் மிகுதலும், பிரிந்தவழி அதுகுறைந்து மெலிதலும், புணர்வும் பிரிவும் நிகழ்வுழி யெல்லாம் எய்தும் வேறுபாடு நோக்கி மென்றோள் என்று ஒழியாது, அளிய மென்றோளே என்றாள். "மணப்பின் மாணலமெய்தித், தணப்பின் நெகிழ்ப தடமென்றோளே[4]" என்று

1. நற். 239. 2. தொல். பொ. 203. 3. ஷை. ஷை. 202.
4. குறுந். 299.

சான்றோர் உரைப்பது காண்க. கழிநீர் மலியுங்கால், கழிக்கரை யிடமெல்லாம் விரியும் புலம்பன் எனவே, அவன் வந்தமையால் மேனி நலம் மிகுந்து தோளும் நல்லவாயின எனக் காரணம் உள்ளுறுத் துரைத்தவாறு. ''மெல்லம் புலம்பன் வந்தமாறே'' என்ப துஅன்புடைமை கூறல். '' நலமிக நல்லவாயின மென்றோள்" என்றது ஆக்கஞ் செப்பல்.

மலிரறல் விரியும் என்றும் பாடமுண்டு; அதற்குக் கழிநீர் பெருகுதலால் கருமணல் விரியும் எனவுரைக்க. மல்ல லிருங்கழி மலரும் என்றும், இருங்கழி மல்கும் என்றும் பாடம். இனி, '' மறைந்தவற் காண்டல்''[1] என்ற சூத்திரத்து, '' பெற்ற வழி மலியினும்'' என்பதற்கு இதனை இளம்பூரணரும் நச்சினார்க்கினி யரும் எடுத்துக் காட்டுவர். இம்மலிவை, வரைவு நீட்டித்த காலத்து வெளிப்படக் கூறுதலும், நீட்டியாதவழி வெளிப்படுத் தாமையும் உண்டென்பர் நச்சினார்க்கினியர். (120)

---

1. தொ. பொ. 109.

3

கிழவற்கு உரைத்த பத்து

இதுவும் மேலது போலக் கேட்போர் பொருளாகத் தொகுக்கப் பட்ட பாட்டுக்களின் தொகுதி யாதலின், இப்பெயர் பெறுவ தாயிற்று. தலைவனைத் தலைமகன் என்றும் கிழவன் என்றும் வழங்குவது பற்றி ஈண்டுத் தலைவற்கு உரைத்த பத்து என்பதைக் கிழவற்கு உரைத்த பத்து என்றனர். தலைவன், தலைமகன் என்ற விடத்து மக்களினத்துத் தலைவனுக்கு இன்றியமையாது வேண்டப் படும் தலைமைக் குணங்களெல்லாம் திரண்டு உருவாகக் கொண்ட வன் என்று பொருள்படும். குற்றம் என்பதேயின்றிக் குணமே நிறைந்தவர் மக்களுலகில் ஒருவரும் இரார்; அவர் கடவுள் ஒருவரே ; குணமும் குற்றமும் விரவியவர் மக்கள் ; குணம் மிக்கவர் நன்மக்களாகவும், குற்றம் மிக்கவர் கீழ்மக்களாகவும் கருதப்படுவர். தலைமைக் குணமெல்லாம் ஒருங்கேயுடையவன் தலைவன் ; அவன் கடவுளினமாகாது மக்களினத்தவன் என்றற்குத் தலைமகன்[1] என்று வழங்குவது உண்டு. மக்கட்டு வேண்டு ம்நற்குணமெல்லாவற்றை யும் தனக்கே உரியவாகக் கொண்டவன் என்ற கருத்தால் தலைமகன் கிழவன் எனவும் குறிக்கப்படுகின்றான். இவ்வாறே கிழத்தி[2] என வருமிடத்தும் உரைத்துக்கொள்க. மக்கள் உலகுக்கு வாழ்க்கை

---

1. Ideal man. 2. Ideal woman.

யறம் உணர்த்தும் வழக்கு நூல் இங்ஙனம் தலைமகன், தலைமகள் என நிறுத்தி அறங் கூறுவது பண்டும் இன்றும் என்றும் வழங்கி வரும் வழக்காறு. இத்தொகுதிக்கண், கூற்று நிகழ்த்துவோர் சிறப்பில்லாத பரத்தையராதலின் அவராற் பெயர் குறியாது கேட்போர் வகையால் பெயர் குறிக்கப்பட்டதென அறிக.

121. கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
முண்டகக் கோதை நனையத்
தெண்டிரைப் பௌவம் பாய்ந்து நின்றோளே.

இது பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

பெதும்பைப் பருவத்தாளொரு பரத்தையொடு கூடி மறைந்து ஒழுகாநின்றான் என்ப தறிந்து தலைவி புலந்துழி, ''இத்தவறு என்மாட் டில்லை, நீ இப்புலவியை நீக்கவேண்டும்'' என்று தோழிக்குத் தலைமகன் கூற, புலவியை நீக்கக் கருதிய தோழி அவள் இளமை கூறி நகையாடிச் சொல்லியதூஉமாம்.

உரை: கொண்கனே, நினக்குக் கேளாயினாளை யாம் நன்கு கண்டுளேம்; அவள் கழிமுள்ளி மலரை யணிந்த தன் கூந்தல் நனையுமாறு தெளிந்த திரையினையுடைய கடலின்கட் படிந்து விளையாட் டயர்ந்தாளாகலான் எ. று.

கண்டிகுமல்லமோ என்றது, ''அஞ்சுவ எல்லமோ[1]'' என்றாற் போலத் துணிபுணர நின்றது, ஓகாரம், எதிர்மறை. பாய்ந்து நின்றோளே என்பதும், கண்டிகுமல்லமோ என்பதும் முறையே ஏதுவும் பயனுமாய் இயைந்து நின்றன. இனி வருமிடனெல்லாம் இதுவே கூறிக்கொள்க. கோதை, மாலை, ஈண்டு ஆகுபெயராய்க் கூந்தல் மேற்று. முண்டகம், கழிமுள்ளி என்னும் ஒருவகை நெய்தல் நிலச் செடி.

---

1. அகம். 158.

மகளிர் கடலிற் படிந்தாடுங்கால் தம்மை கழிமுண்டகத்தின் பூவால் தொடுக்கப்பட்ட மாலையணிந்து ஒப்பனை செய்துகொண்டு ஆடுதல் மரபு ; "அணிமலர் முண்டகத் தாய்பூங்கோதை, மணி மருள் ஐம்பால் வண்டு படத் தைஇத், துணிநீர்ப் பௌவம் துணையோடாடி[1]" எனவும், "வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல், முண்டகக்கோதை யொண்டொடி மகளிர்,......முந் நீருண்டு முந்நீர்ப்பாயும், தாங்கா வுறையுள் நல்லூர்[2]" எனவும் சான்றோர் உரைப்பது காண்க. முண்டகக் கோதை சூடுவதன் குறிப்பு ஆராயத்தக்கது.

தனக்குற்ற கேள்வன் துணையாக, நீராடும் உவகை மிகுதியால் ஒப்பனை செய்யப்பெற்ற தன் கூந்தல் திரையால் நனையப் பலரும் அறியக் கடலாடினு ளாகலின், அவனைக் கேளல்லள் எனலும் ஆகாதென்பாள், கண்டிகுமல்லமோ என்றாள். இரண்டாவதாகக் குறித்தது இதன் கருத்தாயின், இஃது "அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை, அடங்கக் காட்டுதற்[3]" பொருளின் கண் வந்ததாம். இனி வருவனவும் அது. (121)

122 கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே.

இதுவுமது

உரை: கொண்கனே, நினக்குக் கேளாயினாளை யாம் தெளியக் கண்டுளேம், அவள், மிக்குற்ற மணலில் வண்டல் அயருங்கால், தன் ஒள்ளிய இழை அம்மணற்கண் வீழ்ந்ததாக, அதனைக் கொள்ளும் பொருட்டு, அருகுமேயும் வெள்ளாங் குருகினை நோக்கிக் "கண்டனையோ" என வினவாநின்று ளாகலான் எ. று.

---

1. நற். 245. 2. புறம். 24. 3. தொ. பொ. 150.

வெள்ளாங்குருகு என்பது நெய்தல் நிலப் பறவையினத்துள் ஒன்று. இதனை உள்ளாங்குருவி என இக்காலத்து மருவி வழங்குப. இதன் இயல்பு பின்னர்க் கூறப்படும்[1]''

பல பொருள்களிடையே கிடப்பினும் தனது ஒளி விளங்கித் தோற்றுதலின் ஒள்ளிழை என்றும், தேடற்றுன்பம் பயவாது சிறிது நாடி நோக்கியவழி நன்கு தோன்றும் எளிமை யுணர்த்தற்கு உயர்மணல் என்றும், இத்துணை எளிதிற் கிடக்கும் இழையினை எடுத்துக்கொள்ளாது, நின்மேற் செலுத்திய உள்ளத்தளாய் அலமருகின்ருள் என்பாள், வெள்ளாங் குருகை வினவுவோளே என்றும் கூறினுள். இஃது இழையின் பயப்பாடறிந்து எடுத்தேகும் திறனில்லாத குருகினை வினவுகின்ருளென அவளது மடமைகூறி நகையாடியவாரும்.

இக் கருத்தேபற்றி, ''அவனறிவு ஆற்ற அறியுமாகலின்[2]'' என்ற சூத்திரத்து, ''காமக்கிழத்தி நலம் பாராட்டிய, தீமையின் முடிக்கும் பொருளின்கண்'' நிகழும் கூற்றுக்கு இதனைக்காட்டி, இதனுல் ''அவள் மிக்க இளமை கூறித் தலைவனைப் பழித்தாளாம். ஒரு முகத்தாற் புலந்தவாறு'', என்றும், ''கிழவோள் பிறள் குணம் இவை யெனக்கூறி, கிழவோன் குறிப்பினை உணர்தற்கு முரியள்[3]'' என்பதனு லமையும் என்றும் கூறுவர் இளம்பூரணர். கண்டிகுமல்லமோ கொண்கநின் கேளே என்றதனுல், காமக் கிழத்தியர் நலம் பாராட்டல் எடுத்தமையும், வெள்ளாங்குருகை வினவுவோளே என்று அவள் மடமைகூறி, அத்துணை இளமை யாளுடன் ஒழுகுதல் அன்பு தலையொத்த காமமன்ருமெனத் தீமை யின் முடித்தமையம், இதனைத் தலைமகள் கூறுதல் வழுவாயினும், தலைமகன் குறிப்பினை அறியும் கருத்தினளாகலின் அமைந்தவாறும் உணர்க.

இனி, நச்சினுர்க்கினியர், ''பெதும்பைப் பருவத்தாளோர் தலைவியொடு வேட்கை நிகழ்ந்தமையைத் தலைவி கூறித் தலைவன்

---

1. ஐங். 150. 2. தொல். பொ. 145. 3. ஷை, ஷை. 2301.

குறிப்புணர்ந்தது[1]'' என்று கூறி, ''கிழவோள் பிறள்குணம்[2]'' என்னும் சூத்திரத்துக்கு உதாரணமாக்குவர். அன்றியும், '' இது தலைவன் வரையக் கருதினுளோர் தலைவியை இளையளெனக் கூறி, அவள்மாட்டு இவன் எத்தன்மையனென்று விதுப்புற்றுக் கூறியது", என்றும், '' இது தலைவன் கூற உணராது தான் வேறென்று கூறி, அவன் குறிப்பறியக் கருதுதலின் வழுவாயமைந்தது'' என்றும் அவர் கூறுவர். (122)

123. கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
ஒண்ணுத லாய மார்ப்பத்
தண்ணென் பெருங்கடற் றிரைபாய் வோளே

இதுவுமது.

உரை: கொண்கனே, நினக்குக் கேளாயினுளை யாம் கண்டுளேம்; அவள் ஒள்ளிய நெற்றியையுடைய தோழியர் கூட்டம் ஆரவாரிப்பக் குளிர்ந்த பெரிய கடலில் அலையின்கட் பாய்ந்தாடுகின்றுளாகலான், எ. று.

சிறுவர் பலர் சேர்ந்து கடலாடும் போழ்தில், இனிய சொற்களாலும் பாட்டினுலும் பேரோசை செய்தல் இயல்பாகலின், ஒண்ணுதல் ஆயம் ஆர்ப்ப என்றும், உயரிய பெருந்திரை வருமிடத்து அதனூடு பாய்ந்தவழி, ஊசலாட்டிடைப்போல உவகை பயத்தலின் ஆடினுளென்னுது, திரைபாய்வோள் என்றும் கூறினுள்; '' ஓங்கற் புணரி பாய்ந்தாடு மகளிர்[3]'' எனப் பிறுண்டும் வழங்குதல் காண்க.

மகளிரது கூட்டமிகுதியால் அவளை மறைப்பினும், ஆய வெள்ளம் செய்த ஆர்ப்பினுல் யாம் அவளை அறிந்தேம்காண்

---

1. தொல். பொ. நச். 12. 2. ஷை. ஷை. நச். 234.
3. நற். 395.

எனப் புலந்தவாறு உணர்க. ஆயமார்ப்பத் திரைபாய்தலால் இளமைகூறி நகையாடியது முணர்க. (123)

124. கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
வண்டற் பாவை வவ்வலின்
நுண்பொடி யளைஇக் கடறூர்ப் போளே.

இது'வுமது

உரை: கொண்கனே, கடல்நீர் மிக்குப் போந்து, தான் இழைத்த வண்டலகத்தே வைத்தாடிய பாவையைக் கவர்ந்து செல்லுதலால் சினந்து, நுண்ணிய மணற் பொடியை அள்ளிக் கடற்கண் எறிந்து அதனைத் தூர்க்கா நின்ருளாகலான், நினக்குக் கேளாயினுளை யாம் தெளிய அறிந்தேம் காண் எ. று.

கழிக்கானலில் அலையலைத்துக் கொணர்ந்து ஒதுக்கும் மணலுக்கு வண்டல் மண் என்பது பெயர்; இதனை வண்ட லென்பதும் வழக்கு; வண்டல் மணலால் விளையாட்டு மகளிர் சிற்றில் இழைத்தும் சிறு சோறட்டும், கோரையாற் பாவை செய்து அதற்கு மணஞ்செய்தும் விளையாடுப; அதனுல், இதனை வண்டல் என்றும், பாவையை வண்டற் பாவை என்றும் சான்ருேர் குறிக் கின்றனர். ''வளைவாய்க் கோதை வண்டல் தைஇ[1]'' ''மணல் காண்டோறும் வண்டல் தைஇ[2]'' என்றும், ''நேரிறை மகளிர் வார்மணல் இழைத்த வண்டற்பாவை[3]'' ''வண்டற்பாவை வரி மணல் அயர்ந்தும், இன்புறப் புணர்ந்தும்[4]'' என்றும் வருவன காண்க. இவ்வாறு விளையாடுமிடத்துக் கடலின் அலை போந்து இம்மகளிர் இழைத்த வண்டல் மனையையும் பாவையையும் சிதைத்துவிடும். அதனுற் சிறுமகளிர் கடலின்மேற் சினங்கொண்டு கையால் மணலை யள்ளிக் கடற்கண் எறிவர்; அதனை இளங்கோ வடிகளும், ''வண்டால் திரையழிப்பக் கையால் மணல் முகந்து

1. அகம் 370. 2. நற். 9. 3. நற். 191. 4. அகம். 330

மதிமேல் நீண்ட, புண்தோய்வேல் நீர்மல்க மாதர் கடல் தூர்க்கும் புகாரே எம்மூர்[1]'' என்று பாடுகின்றார்.

வண்டலாடுபவள் தானிழைத்த வண்டற்பாவையைக் கடலழிப்ப, அது கவர்ந்ததாகப் பிறழ வுணர்ந்து சினமுற்றுத் தூர்க்கலாகாத அப்பெருங் கடலை மணற் பொடியால் தூர்க்க முயலும் அத்துணைப் பேதைமையுடையாளென அவள் மடைமை கூறி நகையாடியவாறு. (124)

125. கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
தெண்டிரை பாவைவௌவ
உண்கண் சிவப்ப வழுதுநின் றோளே.

இதுவுமது.

உரை: கொண்கனே, நினக்குக் கேளாயினாளை யாம் கண்டனம், காண்; தான் இழைத்த வண்டற் பாவையைத் தெளிந்த கடல் அலைகள் பாய்ந்து அலைத்தழிக்கவே அவை அதனைக் கவர்ந்து கொண்டன என மயங்கித் தன் மையுண்ட கண்கள் சிவக்குமாறு அழுது நின்றாளாகலான், எ. று

வண்டல் மனைக்கண் நன்கு ஒப்பனை செய்து பாவையை நிறுவி விளையாடுங்கால், கடல்திரை ஞெரேலெனப் பாயும்போது, மனையும் பாவையும் சிதைதலால், தெண்டிரை பாவை வௌவ என்றார். ''மாதர் மடநல்லார் மணலில் எழுதிய, பாவை சிதைத்ததென அழ ஒருசார்[2]'' என்று பிற சான்றோரும் கூறுதல் காண்க.

பாவையை அலைகள் அலைத்தழிப்ப, தான், மேலே செய்வகை ஒன்றும் அறியாளாய்த் தன் பேதைமையால் அழுகின்றாள் என நகையாடியவாறு. மகளிர் அமைத்து நிறுவி மகிழும் வண்டல் மனையையும் பாவையையும் தெண்டிரை வௌவியது என்றது,

1. சிலப். கானல். 30. 2. பரி. 7.

வளமனைக்கண் மகப் பயந்து சிறப்புமிகும் இல்வாழ்க்கையை நின் புறத்தொழுக்கம் போந்து சிதைக்கின்றது என உள்ளுறை கொள்க. (125)

126. கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
உண்கண் வண்டின மொய்ப்பத்
தெண்கடற் பெருந்திரை மூழ்குவோளே

இதுவுமது.

உரை: கொண்கனே, நினக்குக் கேளாயினளை யாம் கண்டனம், காண்; அவள் தன் மைதீட்டிய கண்களை மலரென எண்ணி வண்டுகள் மொய்த்து ஆரவாரிப்ப, தெளிந்த கடலின்கட் பெரிய திரைகளின் இடையே மூழ்கி யாடா நின்றாளாகலின் எ. று.

உண்கண், மைதீட்டியகண், மூழ்குதல், "அழுக்கறக் குளிரக் குளித்தல்[1]" என்பர் அடியார்க்கு நல்லார். உண்கண் பூப் போறலின், வண்டினம் உண்மை யறியாது மொய்த்தன என்பாள், உண்கண் வண்டினம்மொய்ப்ப என்றாள். இஃது ஒருவாற்றால் பரத்தை நலம் பாராட்டியது கூறியவாரும். மூழ்குதற்கு உரித் தல்லாத கடல் நீரில் மூழ்குகின்றாள் என்று நகையாடியவாறுமாம். இது புலவிக் கூற்றாயவழி, வண்டின மொய்த்தல் போல் நின் மனம் அவளிற் பிரியாது சூழ்வந்ததெனச் சினந்து கூறியதாம். (126)

127. கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
தும்மை மாலை யிளமுலை
நுண்பூ ணாகம் விலங்கு வோளே.

இதுவுமது.

உரை: கொண்கனே, நினக்குக் கேளாயினளை யாம் கண்டனம், காண்; அவள் தும்பை மலரால் தொடுக்கப்பட்ட மாலை

1. சிலப். 18 : 42.

யணிந்த தன் முற்றுத முலைகள் பொருந்திய நுண்ணிய பூண் அணிந்த மார்பு புல்லுதற்கட் பொருந்தாவகை விலங்கி நீங்குகின்று ளாகலான் எ.று.

விளையாட்டு மகளிர் தம் ஒப்பனைக்கெனப் பறித்துத் தொகுத்த பூக்களுள் ''தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி[1]'' எனத் தும்பையும் ஒன்றுகக் கூறப்படுவது காண்க. எம்பால் நின்றுங்குப் பிறமகளிர் மாட்டும் பின்னிலை முனிந்திலை யாகலின், நின் பரத்தைமை மறுத்தல் வேண்டி நின் கேளாகிய பரத்தை புலக்கின் ருள் என்பாள், நுண்பூண் ஆகம் விளங்குவோளே என்ருள். இது பரத்தை கூற்ருயின், ஏனைப் பரத்தையரிடத்தும் தலைவி மாட்டும் புலப்பட ஒழுகாது தலைவன் அவர் புல்லுதலை மறைத்து ஒழுகுதலால் பிறந்த புலவி யென்றும். தோழி கூற்ருயின், '' அடங்கா ஒழுக்கத்து அவன் வழியின் அழிந்தோளை, அடங்கக் காட்டுதற் பொருட்டு என்றும் கொள்க. (127)

128. கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
உருஅ வறுமுலை மடாஅ
உண்ணுப் பாவை யூட்டுவோளே.

இதுவுமது.

உரை: கொண்கனே, நினக்குக் கேளாயினளை யாம் கண்ட னம், காண்; உண்ணுதல் இல்லாத மரப்பாவைக்குத் தன் முகிழாத வறிய முலையை வைத்துப் பாலூட்டி விளையாடுகின்று ளாகலான் எ. று.

ஊரு என்பது ஊருஅ என நின்றது; ஊறுதல், பால்சுரத்தல். உண்ணுப்பாவை, வெளிப்படை. உண்ணுப்பாவை யூட்டுவாள் என்றது, காமஞ்சாலா இளமையோள் என்றற்கு. '' ஒண்டொடி யாயத் துள்ளும் நீ நயந்து, கொண்டனை யென்பவோர் குறுமகள்[2]'' என்ருர் பிறரும். ஊட்டுதலாவது, தாயார் தம் குழவியை முலை

1. குறிஞ்சி. 90. 2. அகம். 96.

தந்து பாலருந்தச்செய்தல். பாலின்றுயினும், தன் முகிழாத முலையைப் பாவையின் வாய்வைத்துப் பரிந்த மொழிகள் சில பகர்ந்து விளையாடுதலின், ஊட்டுவோளே என்றுள். இது மகளிர் விளையாடலுள் ஒன்று.

ஊரு வறுமுலை மடூஉ என்ற பாடத்துக்குப் பாலூருதவறிய முலையை வாயில் வைத்து என்றுரைக்க. இதனை நச்சினர்க்கினியர், "பெதும்பைப் பருவத்தாள் ஒரு தலைவியொடு வேட்கை நிகழ்ந் தமையைத் தலைவி கூறித் தலைவன் குறிப்புணர்ந்தது[1]" என்பர். (128)

129. * * * *

130. * * * *

---

1. தொல். பொ. 12.

4

பாணற் குரைத்த பத்து

இதுவும் மேலது போலக் கேட்போர் பொருளாகத் தொக்க தொகையாகலின், இப்பெயர் பெறுவதாயிற்று.

தலைமக்கள் வாழ்வில் தலைமகன்பால் பல்வேறு கடமையும் பிறவும் பற்றிப் பிரிவும் புணர்வும் நிகழுமாகலின், அக்காலை தலைமக்கட்குத் தகுவன கூறும் வகையில் அவர்களை அணுகி நிற்கும் தகுதியுடையோர் சிலர் உளர்; அவர்களை வாயில்கள் என்பர். "தோழி தாயே பார்ப்பான் பாங்கன், பாணன் பாடினி இளையர் விருந்தினர், கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர், யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப[1]" என ஆசிரியர் கூறுவது காண்க. இவர்களுள் பாணன் தலைமகன் தலைமகள் ஆகிய இருவரையும் அணுகிச் சொல்லாடும் வகையில் சிறந்து நிற்பன். தலைமகள் ஊரின் நீங்கியிருப்பின், அவன்பால் தூது சென்று உரைத்தற்கும் இப்பாணன் உரியன். தலைவன் மேற்கொள்ளும் அறத்துறை, பொருட்டுறை, இன்பத்துறை என்ற மூன்றனுள், பொருள் இன்பத் துறைகளுள் வாயிலாய்ப் பெரிதும் பயன்படுவது இவற்கு இயல்பு. இங்கே தொகுக்கப்பெற்ற பாட்டுக்கள் பலவும் இன்பத் துறையில் இவன் வாயிலாகும் இயைபு நோக்கி இவற்குத் தலைவி தோழி

---

1. தொல். பொ. 193.

பரத்தை முதலியோர் கூறும் கூற்றுக்களாதல் பற்றி இப்பாட்டுக் களைப் பாணற்கு உரைத்த பத்து என்று தொகுப்பாசிரியர் பெயர் குறித்துள்ளனர் எனக்கொள்க.

131. நன்றே பாண கொண்கனது நட்பே
தில்லை வேலி யிவ்வூர்க்
கல்லென் கௌவை யெழாஅக் காலே.

இது வாயில் வேண்டிவந்த பாணன் தலைமகனது காதன்மை கூறினனாகத் தலைமகள் வாயில் மறுப்பாள் அவற்குக் கூறியது.

உரை: பாணனே, தில்லைமரங்களினா லாகிய வேலி சூழ்ந்த இவ்வூரின்கண் கல்லென்னும்படி அலர் எழுந்து பரவாதாயின், கொண்கனது நட்புப் பெரிதும் நன்றேயாம் எ. று.

கௌவை எழாக்கால் நட்பு நன்றே என இயைக்க. கௌவை, அலர்; எனவே, அலர் எழுந்தமையின் அது நமக்குத் துன்பம் தருவதாயிற்று என்றவாரும். ''களவும் கற்பும் அலர் வரை வின்றே[1]'' என்பதனாலும், அதனாற் காமஞ் சிறத்தலினாலும் கௌவை கூறப்பட்டது. தில்லை, ஒருவகை மரம். தில்லைமரம், நெய்தல் நிலத்து மரவகைகளுள் ஒன்று. இதன் பூவும் தளிரும் துறவியர் சடை போலத் தோன்றும்; துறவி யொருவனது தலைச் சடையை, ''கறங்குவெள்ளருவி யேற்றலின், நிறம் பெயர்ந்து தில்லையன்ன புல்லென் சடையொடு[2]'' என்று சான்றோர் கூறுவது காண்க. ''நீர்நாய் கொழுமீன் மாந்தித் தில்லையம் பொதும்பிற் பள்ளிகொள்ளும்[3]'' என்றலின், இம்மரங்கள் நெய்தற் பகுதியில் செறிந்திருத்தல் பெறப்படும். சிதம்பரத்தின் பழம் பெயராகிய தில்லை என்பது இதனால் வந்தது. தில்லைச் சிற்றம்பலம் என்ற பழைய பெயர்களுள், தில்லை மறையவும், சிற்றம்பலம், சிதம்பரம் எனச் சிதைந்து மருவி விட்டது.

---

1. தொல். பொ. 172. 2. புறம். 252. 3. நற். 195.

'' மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை, தம்முளவாதல் வாயில்கட் கில்லை[1] '' என்பவாகலின், கொண்கனது நட்பே நன்றே என உடன்பட்டாள் போன்று தழீஇக் கூறினுள். தலைமகனது புறத்தொழுக்கத்தால் அலர் எழுந்தமை அறிந்து வைத்தும் அவன் காதன்மை கூறுவது என்னையென வாயில் மறுக்கின்ரு ளாகலின், கௌவை யெழாக்கால் என்றும், அவ்வலர் தானும், நின் பொய் யுரையால் மறையாது பரந்து பட்டது என்பாள், கல்லென் கௌவை யென்றும் கூறினுள். இஃது அழிவில் கூட்டத்துப் புறஞ்சொல் மாணுக்கிளவி; ஏனைக் கொண்கனது நட்புக் கௌவையின்றிச் செவ்வே நிலவின், இல்லிருந்து செய்யும் அறம் பலவும் புகழும் இன்பமும் பயப்பது ஒருதலை என்பாள், நன்றே என்ருள் என அறிக. (131)

132. அம்ம வாழி பாண புன்னை
அரும்புமலி கான லிவ்வூர்
அலரா கின்றவ ரருளு மாறே.

இது வாயில் வேண்டிவந்த் பாணன், '' நீர் கொடுமை கூறல் வேண்டா; நும்மேல் அருளுடையர்'' என்ருற்குத் தலைமகள் சொல்லியது.

உரை: பாணனே, கேட்பாயாக, புன்னையின் அரும்பு மிக்க கானற் சோலையினுடைய இவ்வூர்க்கண் அவர் அருளுந்திறம் அலராகாநின்றது அன்றே; அற்ருக, அவர் அருளுடையராதல் எங்ஙனம் அமையும் எ. று.

அற்ருக என்பது முதலாயின குறிப்பெச்சம். அலராதலை வெளிப்படையாகப் பாணற்கு உரைத்தல் வழுவாயினும்' '' வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல், தாவின்றுரிய தத்தங் கூற்றே[2]'' என்பதனு லமையும் என்க. அலராகின்று, வினைமுற்று; ''அலராகின்ருல் பெரும[3]'' என்ருற் போல.

1. தொல். பொ. 165. 2. ஷை. ஷை. 241. 3. குறுந். 258

அலராகின்று அவர் அருளு'ாறே என்றதனுல், அவன் பரத்தையர்க்கே தலேயளி செய்கின்ருன் என்பதும், அதனுல், அலர் பெரிதாயிற்றென்பதும், அவற்குத் துணேசெய்யும் நினக்குத் தீங்குவாராதாக எனப் பாணற்குக் கூறுவாள், வாழி யென்ருள் என்பதும் கூறியவாறு. இஃது அலர்கூறி வாயில் மறுத்ததாம். (132)

133. யானெவன் செய்கோ பாண வாணுது
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
புல்லென் றனவென் புரிவளேத் தோளே.

இது, வாயிலாய்ப் புகுந்த பாணன், தலேமகள் தோள் மெலிவு கண்டு, '' மனேப்புறத்துப் போய் வந்த துணேயானே நீ இவ்வாறு வேறுபடுதல் தகாது," என்ருற்கு அவள் சொல்லியது.

உரை: பாணனே, மெல்லிய நெய்தல் நிலத்தையுடைய தலேவன் மனேப்புறத்தே சிறிது பிரிந்தாஞக, என்னுடைய முறுக் குண்ட வளேயணிந்த தோள்கள் அதனே ஆற்ருது புல்லென்று மெலிந்தனவாகலின், யான் யாது செய்வல், கூறுக. எ. று

தலேமகன் சிறிதிடைப் பிரியினும், என் தோள்கள் என்வரை நில்லாது, அதனே முற்படவுணர்ந்து என்னினும் பெரிதும் மெலிகின்றன என்பாள், யான் எவன் செய்கோ என்ருள். ''நல்லனென்றும் யாமே, அல்லன் என்னும் என்தட மென்ருேளே [1]" என்ருர் பிறரும். புல்லென்றல், பொலிவின்றி மெலிதல். இஃது '' உணர்ந்த போல உறுப்பினேக் கிழவி, புணர்ந்த வகையிற் [2] '' புணர்த்துக் கூறியது, ஏனே வருமிட மெல்லாம் ஈதறிந்து உரைத்துக் கொள்க. இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற் ருமை.

---

1. ஐங். 11. 2. தொல். பொ. 202.

என் மெலிவுக்குக்காரணம் அவனது பிரிவேயாகலின் பிரிவு செய்த அவனுக்கு அது தகாமை கூறிக் கொணர்தலொழித்து என்பாற் கூறுதல் நினக்குத் தகாது என வாயில் மறுத்தவாறு.

இது, ''தலைவன் புறத்துப்போன அத்துணைக்கு ஆற்ருயாகுதல் தகாது என்ற பாணற்குத் தலைவி கூறியது[1]'' என்பர் நச்சினர்க்கினியர்.

இனி, எம்புரிவளைத்தோளே என்று பாடமாயின், ''ஒன்றித் தோன்றும் தோழி மேன[2]'' என்றதனுல் தோழி கூற்ருக்கிப் பாணற்கு வாயில் மறுத்தவாறு என்க. (133)

134. காண்மதி பாண விருங்கழிப் பாய்பரி
நெடுந்தேர்க் கொண்க னேடு
தான்வந் தன்றென் மாமைக் கவினே.

இது, பிரிவின்கண் தலைமகள் கவின்தொலைவு கண்டு வெறுத் தொழுகுகின்ற பாணற்குத் தலைமகன் வந்துழிக் கவின் எய்திய தலைமகள் சொல்லியது.

உரை: பாண, பெரிய கழியிடத்துப் பாய்ந்து செல்லும் குதிரைகள் பூட்டிய நெடிய தேரினையுடைய கொண்கன் வந்தானுக அவனுடனே தொலைவுற்றிருந்த மாந்தளிரின் தன்மையினையுடைய என் அழகும் தானுகவே வந்தமைந்தது, காண்பாயாக எ. று.

மாமை, மாந்தளிரின் தன்மை. ஒருவினை ஒடு நீண்டது. மாமைக்கவின் வருதற்கும், தொலைதற்கும் கொண்கனுடைய புணர்வும் பிரிவும் ஏதுவாம் என்பாள், கொண்கனேடு என்றும், தன் கவின் தொலைவுகண்டு வேறுபட்டு ஒழுகினுனுகலின், காண்மதி பாண என்றும் கூறினுள். (134)

---

1. தொல். பொ. 12.   2. ஷை. ஷை. 36.

135. பைதல மல்லேம் பாண பணைத்தோள்
ஐதமைந் தகன்ற வல்குல்
நெய்தலங் கண்ணியை நேர்தனும் பெறினே.

இது, பரத்தை யொருத்தியைத் தலைப்பெய்வான் வேண்டி, அதனைத் தலைமகன் மறைத்தொழுகுகின்றது அறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றாற் பாணற்குச் சொல்லியது.

உரை: பாண, மூங்கில் போலுந் தோள்களையும், மெல்லிதாய் அமைந்த அகன்ற அல்குலையும் நெய்தல்மலர் போலுங் கண்களையு முடையாளை நாம் எதிர்பெய்தலைப் பெறுவேமாயின் வருத்த மெய்துவேமல்லேம் எ. று.

பைதல், வருத்தம்; "பைதலன் பெயரலன் கொல்லோ"[1] என்றாற்போல. நேர்தல் நாம் பெறின் என்றதனால், நேர்தல் பெருமை, பைதலம் என்றதற்கு ஏதுவாயிற்று. இஃது அழிவில் கூட்டத்து இல்லது காய்தல். இது தலைவன் பாணற்குக் கூறும் கூற்றினைத் தலைமகள் கொண்டு கூறியது. இதனாற் பயன், தலைமகன் தன் புறத்தொழுக்கம் தலைமகட்குப் புலனாகியது உணர்ந்து மீள்வானாவது. "தலைமகள் மாட்டு எதிர்பெய்து மறுத்த ஈரமும், எதிர்பெய்யாது மறுத்த ஈரமும் என இருவகை[2]" மறுப்புண்மையின், இது பின்னது என்றலும் ஒன்று. (135)

136. நாணிலை மன்ற பாண நீயே
கோணே ரிலங்குவளை நெகிழ்த்த
கானலந் துறைவற்குச் சொல்லுகுப் போயே.

இது, வாயிலாய்ப் புகுந்து தலைமகன் குணம் கூறிய பாணற்கு, வாயின் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

---

1. அகம். 38. 2. தொல். பொ. 147.

உரை : பாணனே, வளைந்த அழகிய வளைகள் நெகிழுமாறு பிரிந்த கடற்கானற் சோலையையுடைய துறைவன் பொருட்டுப் பயன்படும் சொற்களை வறிதே மொழிகின்றனை யாகலின், நீ தெளிவாக நாணம் இல்லாதவன் ஆவாய் எ. று.

கோணோர், இலங்குவளை சொல்லுக்குத்தல் என்பன இப் பொருள வாதல், ''வாளரம் பொருத கோணேரெல்வளை[1]'' என்றும், ''செருக்கினல் வந்தீங்குச் சொல்லுகுத் தீவாயோ[2]'' என்றும் வருவனவற்றால் உணர்க.

ஒருவர்க்கு ஒன்று கூறுவோர் தம் கூற்றுப் பொய்யாதல் தோன்றியவழி நாணுவாராக, நீ நாணாது பலவும் கூறினை யென்பாள், நாணிலை மன்ற என்றும், அதனால் நீ கூறுவன யாவும் பொய்யாய்ப் பயனின்றொழிந்தன என்பாள், சொல்லுகுப் போயே என்றும் கூறினாள். வளை நெகிழ்தற்குரிய பிரிவினைத் தலைவன்மேல் வைத்து, நெகிழ்த்த தலைவன் என்றாள், பாணனை மறுத்துரைக்கின்றாளாகலின். (136)

137. நின்னொன்று வினவுவல் பாண நும்மூர்த்
திண்டேர்க் கொண்கனை நயந்தோர்
பண்டைத் தந்நலம் பெறுபவோ மற்றே

இது, தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்து நீங்கினவிடத்தும், அவன் முன்பு செய்த தீங்கு நினைந்து தலைமகள் வேறுபட் டிருந் தாளாக, இனி இந்த வேறுபாடு என்னென்று வினவிய பாணற்குத் தலைமகள் சொல்லியது.

உரை : பாணனே, நின்னை ஒன்று வினவுகின்றேன் : திண்ணிய தேர்களையுடைய கொண்கனை விரும்பிய மகளிருள், நும்மூரின்கண் இழந்த தம் நலத்தைப் பண்டுபோல் பெறுவார் உளரோ? கூறுக எ. று.

---

1. நற். 77. 2. கலி. 69.

திண்டேர்க் கொண்கனை நயந்தோர், நும்மூர், பண்டைத் தந்நலம் பெறுபவோ எனக் கூட்டுக. நும்மூர் எனத் தலைமகனையும் உளப்படுத்திக் கூறியது, தலைமகன் குணங் கூறிய பாண னாகலின், ஓகாரம், பெருமை உணர நின்றது. நயந்தோர் பண்டைத் தம் நலம் பெறுபவோ என்றதனால், தலைவிக்கு அவன் பிரிவால் உண்டான வேறுபாடு நீங்காமை பெறப்படும். அது குறித்து வினாவினார்க்கு, அவள் முன்பு நிகழ்ந்த பிரிவு நினைந்திருத்தலின், அவ்வேறுபாடு நீங்காது என்பாள், பெறுபவோ மற்றே என்றாள். ''நிகழ்ந்தது நினைத்தற் கேதுவாகும்[1]'' என்பது விதி. கடமுடையாரைக் கண்ட வழி, அக்கடன் நினைவில் தோன்றுதல் போலத் தலைமகனைக் கண்டவழி, அவன் கொடுமை நினைக்கப்படுவதாயிற்று என்க. இஃது அழிவில் கூட்டத்து உள்ளது உவர்த்தல். (137)

138. பண்பிலை மன்ற பாண விவ்வூர்
அன்பில கடிய கழறி
மென் புலக் கொண்கனைத் தாராதோயே.

இது தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்தது அறியாது வந்த பாணற்குத் தலைமகள் நகையாடிச் சொல்லியது.

உரை: பாணனே, இவ்வூரின்கண் மெல்லிய புலங்களையுடைய கொண்கனைக் கண்டு அவனிடம் அன்பில்லனவும் கடியத் தக்கனவு மாகிய இடிக்குஞ்சொற்கள் சில கூறி, அவனை இன்றியமையே மாகிய எம்பால் கொணராயாகலின், நீ தெளிவாகப் பண்பில்லாயாயினை எ. று.

பண்பு, அவரவர் இயல்புக் கேற்ப உலக நடை அறிந்து ஒழுகுதல். ''பண்பெனப் படுவது பாடறிந்தொழுகுதல்,[2]'' என்றார் பிறரும். தாரா தோயே என்றமையின், தன்மைச் சொல் வருவிக்கப் பட்டது. ''இன்றியமையே மாகிய'' என்றது கூற்றெச்சம்.

---

1. தொல். பொ. 46. 2. கலி 133.

அன்பில கடிய கழறிக் கூறும் இலக்கண முடையன் அல்ல ளுகலானும், ஒருகால் தலைவனிடத்துப் புறத்தொழுக்கம் உளதாய வழி, அதனை மறைத்து, அவன் குணம் பாடுதலையே இயல்பாக உடையனுகலானும் பாணனை நோக்கி, அன்பில கடிய கழறி என்றும், தலைவன் வந்திருத்தலை அறியாது, அவன் குணங்களைப் புகழ்ந்து கூறுகின்ரு ளுகலின், பண்பிலை மன்ற என்றும் கூறினுள்.

139 அம்ம வாழி கொண்க வெம்வயின்
மாணல மருட்டு நின்னினும்
பாண னல்லோர் நலஞ்சிதைக் கும்மே.

இஃது ஆற்ருமை வாயிலாகப் புகுந்திருந்த தலைமகற்குப் பாணன் வந்துழித் தலைமகள் சொல்லியது.

உரை: கொண்க, கேட்பாயாக. எம்மிடத்து எமது மாட்சி யுற்ற நலத்தைக் கலங்கச் செய்யும் நின்னினும், நினக்கு வாயிலாகும் பாணன், மகளிர் நலங்களை மிகச் சிதைக்கின்ருன், காண் எ. று.

மருட்டுதல், பிரிவின்கண் தொலைதலும் புணர்வின் கண் விளங்கி மிகுதலும் ஆகிய செயல்களால் கலக்க முறுதல். இடையற வின்றி மேன்மேலும் பெருகி விளங்குதற் குரிய மாண்புடைமை பற்றி தலைவியது நலம் மாணலம் எனப்பட்டது. இன், உறழ்ச்சி. நல்லோர், மகளிர்; ஈண்டுப் பெண்மை நலம் ஒன்றேயுடைய பரத்தையர் மேற்று. புறத்தொழுக்கத்தால் பிரிவு நிகழ்த்தி நலம் கலங்கச் செய்தலின், மாணலம் மருட்டும் நின்னினும் என்ருள். பாணன் நின்மாட்டு இலவாகிய குணங்களைக் கூறி, நின்னை மிக உள்குவித்தலால் மகளிர் மேனிநலம் கெடச் செய்கின்ருன் என்பாள் நலம் சிதைக்கும்மே என்றும், பிறர் நலத்துக்குக் கேடு சூழ்வார் ஆக்கமுருராதலின், அதற்கு அஞ்சி வாழி யென்றும் கூறினுள்.

நலம் கலங்குதலாவது, பிரிவு நினைந்து வருந்துதலால், மேனி வாடுதல். நலம் சிதைத்தலாவது, தலைவன் பிரிந்த காலைப் பாணன் போந்து, அவனுடைய உயர் குணங்களையும் காதன்மை யினையும் ப்ாரித்துக் கூறுதலால், நல்லோர் பலரும் நின்பிரிவால் நிகழும் வருத்தமும் அதுவே ஏதுவாகப் பசலை பாய்ந்து மேனி ஒளிகெடுதலுமாகிய இன்னலைப் பலகாலும் எய்தி நினைந்து அழகு கெடுதல். பிரிவின்கண் நிகழும் வருத்தம் பாணனல் மிகுதலால், பாணன் சிதைக்கும் எனக் குறித்தாள்.

இப்பாட்டுப் பாணற்கு உரைப்பதன்று; ஆயினும், பாணன் முன்னிற்ப, அவன் காணத் தலைமகற்குத் தலைமகள் அப்பாணன் செய்கையினையே எடுத்தோதுகின்ருள்; ஒருவாற்ருல் அவற்கு அஃது உரைத்தவாறேயாகலின், இப்பத்தின்கண் இது கோர்க்கப் பட்டுளது எனக் கொள்க. (139)

140. காண்மதி பாணநீ யுரைத்தற் குரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தென
இறைகே ழெல்வளை நீங்கிய நிலையே.

இது, பாணன் தூதாகிச் செல்லவேண்டுங் குறிப்பினளாகிய தலைமகள் அவற்குத் தன் மெலிவு காட்டிச் சொல்லியது.

உரை: பாணனே, தலைமகன் உள்வழி நாடிச் சென்று உரைக்கும் உரிமையினை நீ உடையை யாகலின், துறை பொருந்திய எம் கொண்கன் பிரிந்தானுக, எம்முடைய சந்து பொருந்தி விளங்கும் வளைகள் நெகிழ்ந்து நீங்கும் இம்மெலிவினைக் காண்பாயாக எ. று.

பிரிந்தென என்னும் காரணப் பொருட்டாய வினையெச்சம் நீங்கிய என்னும் எச்சவினை கொண்டது. இறை, சந்து. கெழு, கேழ் என நின்றது. தலைமகன் பொருள் வினைக்கட் பிரிந்து நீட்டித்தானுக அவன்பால் பாணனைத் தூதுவிடக் கருதினு ளாகலின், நீ உரைத்தற் குரியை என அவன் செயலை நினைப்பித்து,

தூது சென்று கூறுங்கால், என் நிலைமையினை உள்ள வாறே உரைத்தற்கு, வளை நீங்கிய என் நிலையினை நன்கு கண்டு செல்க என்பாள், காண்மதி பாண என்றாள். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை. கூறியது கூறலும், தான் வகுத்துக் கூறலும் என வரும் இருவகைத் தூதுநெறிக்கண், உரைத்தற் குரியை என்றது, கூறியது கூறலையே உணர்த்திற்றேனும், காண்மதி பாண என்றது தான் வகுத்துக் கூறலையே விதந்தவாறு. இனி, நச்சினார்க்கினியர், உரைத்தற்குரியை என்றது, ''பரத்தை யிற் பிரிந்தவழி நின் வார்த்தையே கேட்பன் என்பது தோன்றப் பாணற்குத் தலைவி கூறியது[1]'' என்பர். இளம்பூரணர் ''தூது விடக் கூறிய தென்பர்[2]''

பரத்தையிற் பிரிவின்கண் பாணன் பெரும் பான்மையும் தலைமகளை வாயில் நேர்வித்தற்கும், தலைமகன் காதன்மை கூறுதற்கும் உரியனாவன்; வாயில் நேர்விப்பான் கூறுதலும், தலைமகன் காதன்மை கூறலும், தூதின்பாற் படுமாயினும், ஒரோ வழித் தலைமகன் விடுப்ப வாராது, தானே வருதலும் அவன்பால் உண்மையின், ஒருவர் விடுப்ப வருவதே தூதின் இயல்பு என அறிக. (140)

---

1. தொல். பொ. 147. 2. ஷை. ஷை. 45.

5

ஞாழற் பத்து

இது, வேழப்பத்து, கள்வன்பத்து என்றாற் போலப் பாட்டுத் தோறும் ஞாழலாகிய கருப்பொருளையே சிறப்பித்துக் கூறும் திற முடைமை பற்றி, ஞாழற்பத்து என்னும் பெயரதாயிற்று. ஞாழல் என்பது கொன்றை வகைகளுள் ஒன்று. இதனைப் புலிநகம் என்றும் புலிநகக்கொன்றை யென்றும் வழங்குவர். வடமொழியாளர் இதனைச் சிதைத்துப் பலினி என மொழிவர். கடல் சார்ந்த நிலப் பகுதியில் நுண்மணல் பரந்த கானலிடத்தே இந்த ஞாழல் வளமாக வளரும். இதன்காய் நுனி வளைந்து புலிநகம் போறலின் இது புலிநகக்கொன்றை எனப்படுகிறது. இயற்கைக் காட்சியில் தோய்ந்து திளைத்த சங்ககாலச் சான்றோர் இது நெய்தற் குரிய மரவகை யென்றே வரையறுத் துள்ளனர். "நெய்தற்கு மரம் புன்னையும் ஞாழலும் கண்டலும்[1]" என உரைகாரர் கூறுவது காண்க. ஞாழல் மரம் அடிபருத்து உயர்ந்து வளரும் இயல் பிற்று; இதன் அடிப்பகுதி பொருக்குகளையுடைய தோல் மூடி யிருக்கும்; "பொரியரை ஞாழல்[2]" என்பர். சங்ககாலத்துத் தமிழ்மகளிர் இதன் பூவின்பால் பேரன்பு கொண்டு இதன் தழையினையும் பூவினையும் கொய்து தழையுடை தொடுத்து

---

1. தொல். பொ. 18. 2 சீவக. 515.

அணிந்து இன்புற்றனர். ''ஞாழல் மலரின் மகளிர், ஒண்டழை யயரும் துறைவன்[1]'' என்பதும், ''கானல் ஞாழற் கவின்பெறு தழையள்[2]'' என்பதும் காண்க. ஞாழற்பூ, கொத்துக் கொத்தாய்த் தம்மிற் செறிந்திருக்கும்; அரும்புகள் பசுமை நிறமும் பூக்கள் பொன்னிறமும் உடையன; பூக்களின் இதழ் சிறிதாய் வெண் கடுகு போல் உள்ளன; அதனால், இவற்றைப் ''பசுநனை ஞாழல்[3]'' ''பொன்னினர் ஞாழல்[4]'' ''ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்[5]'' என்று சான்றோர் குறிப்பது காண்க. ஞாழல் மரத்தின் கிளைகளும் கொம்புகளும் கருநிற முடைய வாதலின், ''செவ்வீ ஞாழற் கருங்கோட்டு இருஞ்சினை[6]'' எனப்படுகின்றன. கழிக்கான விடத்து எக்கரில் கடற்காற்றின் கடுமையினைத் தாங்கிநிற்க வேண்டுதலின், ஞாழலின் கிளையும் கொம்பும் வன்மையுடைய வாகும். புன்னையும் செருந்தியும் நெருங்கவுள்ள கானற்சோலையில் ஞாழலும் உடன்நின்று மணம் கமழும் பூ விரிந்து தண்ணிய நிழலும் நறுவிய மணமும் நல்குதலால், நுண்ணிய தூய பால் போன்ற மணல் பரந்த நிழலிடத்தே அழகு திகழும் இளமகளிர் கூடியிருந்து மாலை தொடுத்துத் தலையிற் சூடிக் கொள்வதும், தழை தொடுத்து இடையில் அணிசெய்து கொள்வதும் பண்டை நாளைப் பண்புடைச் செயல்களாகும். ''ஊர்க்கால் நிவந்த பொதும்பொருள் நீர்க்கால், கொழுநிழல் ஞாழல் முதிரிணர் கொண்டு, கழும முடித்துக் கண்கூடு கூழை[7]'' எனச் சான்றோர் மகிழ்ந்து பாடுகின்றனர். கழிக்கரையில் நிற்கும் தாழையின் நார் கொண்டு கயிறு திரித்து, அக்கயிற்றால் ஊசல் பண்ணி, ஞாழலின் கிளையிற் கட்டி மகளிர் ஊசலாடி உளங் களிகூர்வது நெய்தலில் நிகழும் இன்பக்காட்சிகளுள் ஒன்று. ''ஞாழல் ஓங்குசினைத் தொடுத்த, தாழை வீழ்கயிற்றூசால் தூங்கிக் கொண்டல் இடுமணல் குரவை[8]'' அயர்வது புலவர் பாடும் புகழ் பெற்றுளது.

---

1. ஐங். 147. 2. ஷை. ஷை. 191. 3. குறுந். 81.
4. ஐங். 169. 5. குறுந். 50. 6. அகம். 240.
7. கலி. 56. 8. அகம். 20.

இந்த ஞாழலினத்தைச் சேர்ந்த மரங்கள் சில மேனாட்டுப் பிரான்சு, சுவிட்சர்லாந்து, தென்சருமனி, வட இத்தாலி ஆகிய நாடுகளில் உள்ளன. ஏனை நாடுகளில் இவை அழகுக்காக மனைப்புறங்களில் வளர்க்கப்படுகின்றன. கி. பி. பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் மேனாட்டவருட் சிலர் இவற்றை வடகிழக்கு அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றனர். ஒருவகை ஞாழலை வேறு மரங்களோடு ஒட்ட வைத்துப் பொன்மை, நீலங்கலந்த பொன்மை, இதழ் விளிம்பு மட்டிற் சிவந்த நிறம் உடைய மூன்று வகைப் பூக்களைப் பூக்குமாறு செயற்கை முறையில் ஆக்கியுள்ளனர். ஞாழலின் பட்டை நீங்கிய உட்பகுதி உறுதியமைந்தது; இழைப்பு வேலையில் மிக்க நயமும் ஒளியும் கொண்டு திகழ்வதனால், இதன் மதிப்பு மிகவும் உயர்ந்து நிற்கிறது. ஞாழலின் விதை மிளகுபோல் உருவும் கைப்புச் சுவையும் கொண்டுளது. வேர்ப்புறத்தைக் குழிமுயல்கள் விரும்பியுண்கின்றன என்பர். (140)

141. எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண்டுளி வீசிப்
பயலை செய்தன பனிபடு துறையே.

இது வரைவு இடை வைத்துப் பிரிந்துழி, ஆற்றாளாகின்ற தலைமகள் அவன் வரைவதற்குப் பிரியவும் நீ ஆற்றாயாகின்றது என்னை என்ற தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: துறை பயலை செய்தன என்றது யாம் ஆற்றியிருப்பேமாயினும் ஆற்றாமையே மிகா நின்றது என்றவாறு.

உரை: நீரால் கொணரப்பட்ட மணல் பரந்த நிலத்தின்கண் நின்ற ஞாழலின் பூ செருந்திப்பூவுடன் மணம் கமழ, குளிர்ந்த நீர்த்துறைகள் துவலையாகிய தண்ணிய துளிகளை வீசிப் பசலை நோய் செய்தனவாகலின், யான் ஆற்றியிருக்குமாறு என்னை எ. று.

ஞாழலும் செருந்தியும் முதலிற் கூறும் சினையறிகிளவியாய்ப் பூவைக்குறித்து நின்றன. பசலை பயலை என வந்தது. துவலை, தூவ விழும் நீர்; பெருந்துளி; திவலை, சிறுதுளி. நீர்த்துறை யிடத்து இருந்தும் விளையாடியும் பூக்கொய்தும் நீராடியும் இன்புறும் இடம் பலவாதல்பற்றி, துறை செய்தன எனப் பன்மையில் முடித்தார். துறை, வீசி, செய்தன என இயைக்க. செய்தெனெச்சம், இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நிற்கும் இயைபினுல் முடிந்த தென்க.

பூவின் மணம் ஒருபுடையிற் கமழ, நீர்த்திவலைகள் காற்றிற் பரந்து குளிர்செய்யக் காமக்குறிப்பு நிகழ்தலின், துறைகள் தன்னைப் பிரிந்த தலைமகனை நினைப்பித்து வருத்தம் உறுவித்தன என்பாள், பயலை செய்தன பனிபடு துறையே என்ருள். இதனைத் துறைமேல் வைத்துக் கூறியது, தான் ஆற்றி யிருத்தற்கு முயலினும், ஆற்ருமை கையிகந்து நிற்றல் உணர்த்தற்கு. பயலை செய்தன என்பது பசலை பாய்தல்.

“இது வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் துறை இன்ப முடைத்தாகலான் வருத்திற் றெனத் தலைவி கூறியது” என்றும், “இது சுரத்தருமை முதலியனவின்றி நெய்தற்குட் பாலை வந்தது[1]” என்றும் நச்சினுர்க்கினியர் கூறுவர். (141)

142. எக்கர் ஞாழ லிறங்கிணர்ப் படுசினைப்
புள்ளிறை கூருந் துறைவனை
உள்ளேன் ருேழி படீஇயரென் கண்ணே.

இது, வரையாது வந்தொழுகும் தலைமகன், இரவுக்குறிக்கட் சிறைப்புறத்தானுக, “நின்கண் துயிறற்பொருட்டு நீ அவனை மறத்தல்வேண்டும்” என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

---

1. தொல். பொ. 9.

ப. உரை: ஞாழல் இறங்கிணர்ப் படுசினை வருந்தப் புள் இறைகூரும் என்றது தான் வரையாது நமக்கு வரும் நோயறியாது தான் வேண்டும் இன்பமே முடிப்பான் என்றவாறு.

உரை: தோழி, எக்கரின்கண் நின்ற ஞாழலின் தாழ்ந்த பூங்கொத்துக்கள் பொருந்திய சினையின்கண் பறவைகள் வந்து தங்குந் துறையினையுடைய தலைமகனை நீ கூறியவாறு நினையா தொழிகுவேன்; இனி, என் கண்கள் உறங்குக எ. று.

இறங்குதல், தாழத் தொங்குதல். இணர்ப்படுசினை, பூங் கொத்துக்களை யுடைய கிளைகள். இறை கூர்தல், ஒரு சொல்லாய் இறுத்தல் என்னும் பொருளது; இறுத்தல், தங்குதல். புன்னைத் "தடவுநிலை மாச்சினைப், புள்ளிறை கூரும் மெல்லம் புலம்ப[1]" என்று பிறரும் வழங்குப. உள்ளிய விடத்து, வரையாது ஒழுகும் அவனுடைய ஒழுக்கத்தால் பல்வேறு எண்ணங்கள் தோன்றி மனத்தைக்கலக்கி வருத்துதலின் உறங்கேனாயினேன் என்பாள், உள்ளேன் தோழி படீஇயர் என் கண்ணே என்றாள். "புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை, உள்ளேன் தோழி படீஇய ரென் கண்ணே[2]" என்றார் பிறரும். உள்ளேன் என்றது அழிவில் கூட்டத்தாங்கு நெஞ்சழிதல். படீஇயர் என் கண் என்றது கண் துயில் மறுத்தல்.

ஞாழலின் இணர்ப்படு சினையின்கண் புள்ளினம் இறை கூர்தலால், அது வருந்துவது இயல்பாதல் போலத் தலைமகன் வரைதலை நினையாது நீட்டித்துத் தங்குதலால் யான் படர் மிகுந்து உறக்கமின்றி வருந்துவேனாயினேன் எனத் தலைவி கூறினாள் என்க. (142)

143 எக்கர் ஞாழற் புள்ளிமி ழகன் றுறை
இனிய செய்து நின்றுபின்
முனிவு செய்தவிவள் தடமென்றோளே.

---

1. அகம். 10. 2. குறுந். 243.

இது, புறத்துத் தங்கி வந்த தலைவற்குத் தோழி சொல்லியது.

ப. உரை: இனிய செய்து .... தடமென்றோள் என்றது, அக்காலத்து நினக்கு இனிமை செய்து பின் முனிவைச் செய்தன ஆதலால், இஃது இத்தோள்களின் தவறல்லது நின் தவறன்று என்பதாம். ஞாழற்கண்ணே புள்ளிமிழ் அகன்றுறை என்றது, இவ்வூர் அகன்றுறையார் அலர் தூற்றுவர் என்பதாம்.

உரை: எக்கர்க்கண் நின்ற ஞாழலின்கண் தங்கிய புட்கள் அதன்கண் இருந்து ஒலியினைச் செய்யும் அகன்ற துறையில் இவளுடைய பெரிய மெல்லியவாகிய தோள்கள் களவின்கண் ஒழுகிய காலத்து நினக்கு இனியவற்றைச் செய்து பின்னர் அஃதொழிந்து நினக்கு வெறுப்பை விளைப்பனவாயின, எ. று.

இனிய செய்து என்றும் பின் முனிவு செய்த என்றும் கூறவே இனிய செய்தது முன்னதாகிய களவுக்காலத்தென்பது பெற்றும். இனிய செய்தலாவது, புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய் வளர்ந்து நெஞ்சம் பிணித்தல். முனிவு செய்தலாவது அப் பிணிப்பின் நீங்கி இன்பத்தை மறத்தல்.

பெருமையும் மென்மையுமுடைய வாயினும் அவனைப் பிணித்தலைச் செய்யாது, வெறுப்பான் மெலிந்தனவாகலின் உயர் சொற் கிளவியால் தடமென்றோளே என்றாள்; இது குறிப்பு மொழி. தோல்களின் தவறு கூறுவாள் போன்று, தலைவன் தவற்றினையும், உள்ளுறையால் அதனால்யெழும் அலரையும் கூறியதனால், பிறன் கண் தோன்றிய சிறுமைபொருளாக வியப்புப் பிறந்தவாறு காண்க.

நின் றுயில் துனிவு செய்த என்ற பாடத்துக்கு, இவளுடைய தடமென்றோள், கூட்டத்தால் இனியவற்றைச் செய்த நின் மார்பிடை உறங்கும் துயிலின்கண், நீ புறத்துத் தங்கினமையால் முனிவினைப் பயப்பவாயின என்று உரைக்க. கூடிய விடத்து

இனிமையைச் செய்த நின் நன்றியை மறவாளாயினும் அவள் தோள், அந்நன்றியைக் கொன்று நின் துயிலை முனிவுசெய்தன என அவன் புறத்தொழுக்கம் தோன்ற உணர்வுடையதுபோல் தோண்மேல் ஏற்றிக் கூறியவாறு. கூட்டத்தால் என்பது முதலாயின குறிப்பெச்சமாம். (143)

144. எக்கர் ஞாழ லிணர்படு பொதும்பர்த்
தனிக்குரு குறங்குந்துறைவற்
கினிப்பசந் தன்றென் மாமைக் கவினே.

இது தலைமகன் வரைந்து கோடலை நினையாது, களவொழுக்கமே விரும்பி ஒழுகாநின்ருன் என்பது அறிந்து வேறுபட்ட தலைமகள், ''அவன் கூறியவாற்ருல் இனிக் கடிதின் வரைவன், நீ ஆற்ரு யாகா தொழிய வேண்டும்'' என்று தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: எக்கர் ஞாழல் ......உறங்கும் என்றது, இனிக் காலம் வந்தவிடத்தும் வரைந்து கொண்டு ஒன்றுபட்டு ஒழுக நினையாது தனித்து உறைதலே விரும்புவாள் எ. று.

இனிப் பசந்தன்று என்றது, அவன் வரைவேன் என்று கூறிய வார்த்தையை மெய்யென்று கொண்டு கூறுதலால் இப்போது காண் என் மாமைக்கவின் பசந்தது என்றவாறு.

உரை: எக்கரில் நின்ற ஞாழலின் பூங்கொத்துக்கள் பொருந்திய சோலையின்கண், துணையிற் பிரிந்து தனிமையுற்ற குருகு உறக்கங் கொள்ளும் துறைவன் பொருட்டு, இதுகாறும் பசலை பாய்ந்து கவின் குன்ருதிருந்த என் மாந்தளிரின் தன்மையினை யுடைய அழகு, இப்பொழுது காண், பசப்பெய்துவதாயிற்று, எ. று.

ஆகவே, இப்பெற்றியோன் கூறிய மொழியை மெய்யென்று கோடல் ஆகா தென்பாள், இனிப் பசந்தன்று என்ருள். இனி,

வரைந்து கோடலை நினையாது களவொழுக்கமே விரும்பி யுறைவதால் எழும் அலர்க்கு அஞ்சித் தன் மேனி நலங்கெடுதற்கு இரங்குவாள், என் மாமைக்கவினே என்ருள் என்றுமாம். (144)

145 எக்கர் ஞாழற் சிறியிலைப் பெருஞ்சினை
ஓதம் வாங்குந் துறைவன்
மாயோள் பசலை நீக்கின னினியே.

இது வரைவு மறுத்த தமர் உடம்படுமாற்ருல் சான்ருேரைத் தலைமகன் விடுத்தது அறிந்த தோழி தலைமகள் கேட்குமாற்ருற் சொல்லியது.

ப. உரை: ஞாழர் சினையை ஓதம் வளைக்கும் துறைவன் என்றது தன் வழி வாராத சுற்றத்தாரைத் தன்வழி ஆக்குகின்ருள் என்றதாம்.

உரை: எக்கர் ஞாழலின் சிறிய இலைகளையுடைய பெரிய கிளையைக் கடல்நீர் பெருகிப் போந்து வளைக்கும் துறைவன் இப்பொழுது மாமை நிறத்தினையுடைய தலைமகள் உற்ற பசலை நோயினை நீக்குவா னுயினன் எ. று.

ஓதம், கடற்பெருக்கு. வாங்குதல், வளைத்தல்; மாயோள் மாமைநிற முடையவள்; "விழவொலி கூந்தல் மாஅயோள் [1]" எனப் பிறரும் கூறுவது காண்க. தன்னெடு கூடாத ஞாழலின் சிறிய இலையையுடைய பெருஞ் சினையைக் கூடும்படி ஓதம் வளைக்கும் என்றதனுல், எளிதின் மகட்கொடை நேராத தலைவியின் தமரைச் சான்ருேரை விடுத்து நேர்விக்கின்ருன் என்பது பெற்ரும். ஆகவே, தமர் உடம்படுதலும், இவள் தலைவனைக் கூடிப் பசலை நீங்குவதும் இனி விரைவில் நிகழும் என்பாள், பசலை நீக்கினன் என இறந்த காலத்தாற் கூறினுள். "இறந்த காலம் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள என்மனுர் புலவர் [2]" என்ப. (145)

---

1. ஐங். 306. 2. தொல். சொல். 243.

146. எக்கர் ஞாழ லரும்புமுதி ரவிழிணர்
நறிய கமழுந் துறைவற்
கினிய மன்றவென் மாமைக் கவினே

இது, வரைவு கடாவவும் வரையாது ஒழுகுகின்றுழி, '' நம்மை எவ்வகை நினைத்தார் கொல்லோ '', என்று ஐயுற்றிருந்த தலைமகள் வரைவு தலைவந்துழித் தோழிக்குச் சொல்லியது.

ப. உரை அரும்புமுதிர் .... துறைவன் என்றது அவன் அன்பு முறையாலே முதிர்ந்து வெளிப்பட்ட திறம் கூறியவாறு.

உரை: எக்கர் ஞாழலின் அரும்பு முற்றி மலர்ந்த பூங் கொத்துக்கள் நறுமணம் கமழும் துறைவன் பொருட்டு என் மாமைக்கவின் தெளிவாக இனிமை யுடையவாயின, காண் எ. று.

மாமைக்கவின், மாமையினால் உளவாகும் அழகுகள்; உறுப்புத் தோறும் நிறத்தாலும், ஒளியாலும் தனித்தனிச் சிறத்தலின் பன்மையாற் கூறினர்.

அரும்பு முற்றிய வழியே அதன் இதழ்கள் முறுக்கவிழ்ந்து விரியுமாகலின் அரும்புமுதிர் அவிழ்இணர் என்றும், இணரிலுள்ள அரும்புகள் மலர்ந்தவழி நறுமணம் வெளிப்பட்டு இனிது கமழ்வது பற்றி, நறிய கமழும் என்றும் கூறினர். பல்லாற்றானும் வரைவு கடாவவும் வரையானாய்க் களவே விரும்பி ஒழுகினமையின், குன்றற் பாலதாய நலம் குன்றாத சிறப்புக் கருதி, என் மாமைக் கவினே என்று எடுத்து, குன்றிற்றாயின் அது தமரது ஆராய்ச்சிக் கிடனாய்ப் பலரறிய அலராய் அவனைக் காண்டற் கரிய இற் செறிப்பினைப் பயக்குமாகலின், அது செய்யாத நன்மையை வியந்து, இனிய மன்ற என் மாமைக்கவினே என்றாள். '' அரும்பு முதிர்ந்து மலர்ந்து நறுமணம் கமழ்ந்தாற் '' போலத் தலைவன் உள்ளத்து அன்பு வளர்ந்து பெருகி வரைவொடு வருமாறு செய்தது காண் என உள்ளுறையால் உவந்து கூறினாளாம்.

துறைவர்க்கு என்பது பாடமாயின், வரைவு தலைவந்துழிக் கொண்ட மகிழ்ச்சி மிகுதியால், தன் காதன்மை தோன்றப் பன்மை வாய்பாட்டாற் கூறியவாறு என்க. (146)

147. எக்கர் ஞாழன் மலரின் மகளிர்
ஒண்டழை யயருந் துறைவன்
தண்டழை விலையென நல்கினன் நாடே.

இது, சுற்றத்தார் வேண்டிய கொடுத்துத் தலைமகன் வரைவு மாட்சிமைப்படுத்தமை அறிந்த தோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை: ஞாழல் மலரில்லாத மகளிர் அதன் தழையை விரும்பும் துறைவன் என்றது, உலகை வழங்க வேண்டும் உள்ளத் தன் அஃது இன்மையான் நாட்டை வழங்கினுன் என்பதாம்.

உரை: எக்கரிடத்து நின்ற ஞாழன் மரத்தில் மலரின்மை கண்ட மகளிர் அதன் குழையைக் கொய்து ஒள்ளிய தழை தொடுத்து அணிந்து மகிழும் துறையினையுடைய தலைமகன் நீ உடுக்கும் தழையுடைக்கு விலையாக நாடுகளை நல்கினன், காண் எ. று.

ஞாழலிடத்து மலருள்வழி அதனைக் கொய்து குழலிற் சூடிக் கொள்வது மகளிர் இயல்பு ; "ஞாழல் முதிரிணர் கொண்டு, கழும முடித்துக் கண்கூடு கூழை[1]" என்பது காண்க. அஃது இல்வழி, அதன் தழையைக் கொய்து தழையுடை தொடுத்தணிவது மரபாதலின், மலரிற் மகளிர் ஒண்டழை அயரும் என்றூர். "கானல் ஞாழற் கவின்பெறு தழையள்[2]" எனப் பிறுண்டுக் கூறப்படுவது காண்க. இது பற்றியே பழையவுரைகாரர் மலரின் மகளிர் என்றதற்கு "மலரில்லாத மகளிர்" என உரை கூறினுர் போலும்.

நல்கினன் நாடே என்றது தலைமகன் வரைவு மாட்சிமைப் படுத்துவான், தமருக்குப் பரிசம் அளித்தவாறு. தண்டழையின் பொருட்டுத் தான் தாளாண்மையால் வென்ற நாடுகளை நல்கு

1. கலி. 56. 2. ஐங். 191.

வான், அவள் பொருட்டுத் தன் இன்னுயிரையும் நல்குவன் என்பதுபட நின்று அவன் காதன்மை மிகுதி யுணர நின்றது.

மலரிஃன என்ற பாடத்துக்கு ஞாழலின் பூக்களைத் தம் தழையின்கண் தொடுத்தணியும் துறைவன் என்க. எனவே, தான் விரும்பிய வரைவு மாட்சிமைப்படுத்தற்குத் தான் தாளாற்றி வென்ற நாடனைத்தும் நல்கினன் என்பது தோன்றத் தன்நாடு என்னுது வாளாதே, நாடே என்ருள் என்பதாம். (147)

148. எக்கர் ஞாழ லிகந்துபடு பெருஞ்சினை
வீயினிது கமழுந் துறைவனை
நீயினிது முயங்குமதி காத லோயே.

இது, களவொழுக்கத்தின் விளைவறியாது அஞ்சிய வருத்தம் நீங்கக் கரணவகையான் வதுவை முடித்த பின்பு தலைமகனைப் பள்ளியிடத்து உய்க்கும் தோழி சொல்லியது.

ப. உரை: எக்கர் ஞாழல் .... கமழும் துறைவன் என்றது அவன் அன்பு இதன்மேல் இல்லை என வளர்ந்து பயன்பட்ட திறம் கூறியவாறு.

உரை: அன்புடையாய், எக்கர் ஞாழலின் நிலைகடந்து ஓங்கும் பெரிய சினையின்கட் பூத்த பூக்கள் இனிதாகிய நறுமணங் கமழும் துறைவனை, நீ நன்கு முயங்கி இன்புறுக எ. று.

இகத்தல் வரம்புக்கு மேற்பட மிகுதல். இனிமை, மிகுதிப் பொருட்டு. நிலைகடந் தோங்குத லாவது ஞாழலின் இடத்துக்குத் தக வளராது வளத்தால் மிகவோங்கி, இனி வளர்ச்சியில்லை யென்னுமாறு வளர்தல். மதி, முன்னிலையசை.

இதுகாறும் களவொழுக்கத்தின் விளைவறியாது மிக்க காதலால் வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் விரைந்து வரையான் கொல்லோ என நினைந்து வருந்தி யிருந்தாளாகலின், இனி

அவ்வருத்தம் ஒழிந்தது என்பாள், நீ இனிது முயங்குமதி என்றும், காதலோய் என்றும் கூறினுள்.

இஃது "அற்ற மழிவுரைப்பினும்[1]" என்பதற்கு உதாரணம் எனக் கொள்வர் நச்சினுர்க்கினியர். (148)

149. எக்கர் ஞாழற் பூவி னன்ன
சுணங்குவள ரிளமுலை மடந்தைக்
கணங்குவளர்த் தகறல் வல்லா தீமோ.

இது, வரைந்தெய்திய தலைமகன், தலைவியோடு பள்ளியிடத்து இருந்துழித் தோழி வாழ்த்தியது.

உரை: எக்கர் ஞாழலின் பூப்போலத் தேமல் வளர்கின்ற இளமையான முலையினையுடைய மடந்தையாகிய இவளுக்கு வருத்தம் விளைவித்துப் பிரிதல் மாட்டீராகுக, எ. று.

மாதர் நல்லார்க்கு வனப்பு மிகுவிப்பது சுணங் கென்பதும், அது ஞாழலின் பூப்போல்வ தென்பதும் "அணங்கென வுருத்த சுணங்கணி யாகத்து, ஈர்க்கிடைப் போகா வேரிள வனமுலை[2]" என்றும், "சிறுவீ ஞாழல் தேன்தோய் ஒள்ளிணர், நேரிழை மகளிர் வார்மண லிழைத்த, வண்டற் பாவை வனமுலை முற்றத்து, ஒண்பொறிச் சுணங்கின் ஐதுபடத் தாஅம், கண்டல் வேலிக் காமர் சிறுகுடி[3]" என்றும் வருவனவற்ருலறிக.

வல்லாதீ முன்னிலை வினையின் ஈறு நீண்டது. மோ, முன்னிலையசை. சுணங்கு வளர்இளமுலை மடந்தை என்றது தலைவியின் வனப்பு மிகுதி கூறிப் பிரியலாகாமைக்கு ஏது கூறிய வாறு. களவுக்காலத்து இருவகைக் குறியினும், வரைவிடை வைத்துப் பிரிதல் பயின்று வல்லோ யாயினையாகலின் நின்னல தில்லா இவளை இனிப் பிரியின், அஃது இவட்குப் பெரியதோர் வருத்தம் உறுவிக்கும் என்பாள், அணங்கு வளர்த்து அகறல்

1. தொல். பொ. 150. 2. பொரு. 356. 3. நற். 191.

வல்லாதீமோ என்ருள். எனவே, பிரியின் வரும் ஏதம் கூறி ஞளாம். இன்னணம், பிரியாமைக் கேதுவும், பிரிவுழி யெய்தும் ஏதமும் கூறி ஓம்படுத்தது, 'ஒம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்[1]'' என்றதனுல் தோழிக் கமைந்தது. அணங்குவளர்த் தகறல் வல்லாதீமோ என்றது, அழிவில் கூட்டம் எய்திய பின்னர் அவன் பிரிவாற்ருமை.

வல்லாதீமே என்பது பாடமாயின், முன்னிலே முன்னர் நின்ற ஏகாரம், மகர மூர்ந்து வந்ததாம். ''முன்னிலே முன்னர் ஈயும் ஏயும், அந்நிலே மரபின் மெய்யூர்ந்து வருமே[2]'' என்பது விதி. (149)

150. எக்கர் ஞாழ னறுமலர்ப் பெருஞ்சினேப்
புணரி திளேக்குந் துறைவன்
புணர்வி னின்ஞ னரும்புணர் வினனே.

இது, முன்பொருகாற் பிரிந்து வந்த தலேமகன் பின்னும் பிரிந்துழி, அவனே முயங்காளாக, தோழி, '' நீ இவ்வாறு செய்தற்குக் காரணம் என்,'' என்று வினவிய வழி, தலேமகள் தோழிக்குத் தலேமகன் கேட்பச் சொல்லியது.

ப. உரை : நறுமலர்ப் பெருஞ்சினே வருந்த வந்து திரை திளேக்கும் என்றது ஓர் இடத்தாஞய் ஒழுகாது வந்தும் பெயர்ந்தும் நம்மை வருத்த முறுத்துவான் எ. று.

உரை : எக்கர் ஞாழலின் நறிய மலர்கள் பொருந்திய பெரிய கிளேயைக் கடலின் திரைகள் வந்து கலக்கும் துறைவன் புணர்ச்சியி லும் துன்பமே விளேவித்தலின் இன்று நம்மைப் புணரினும் புணர்வில்லாதவனே யாவன் ; ஆகலின், நீ அவனே வினவுவதிற் பயஞென்று மில்லே எ. று.

ஆகலின் முதலாயின எஞ்சி நின்றன. அரும்புணர் வினனே என்புழி அருமை, ''அருங்கேடன்[3]'' என்புழிப் போல இன்மை

1. தொ. பொ. 114. 2. ஷை சொல். 440. 3. குறள். 210.

குறித்து நின்றது. புணர்வின்கண், அவனைக் காணுந்தோறும், அவன் செய்த பிரிவே நினைக்கப்படுதலின், வருத்தம் தோன்றுதலால், புணர்வின் இன்னுன் என்றும், கூடியவழியும் அவன் உள்ளத்திற் பரத்தையிற் பிரிவுபற்றிய நினைவே நிகழ்தலால், கூட்டத்தான் எய்தும் இன்பம் பிறவாமையின், அரும்புணர் வினனே என்றும் கூறினுள். இது முனிவு மெய்ந்நிறுத்தல்.

நீ இவ்வாறு செய்தற்குக் காரணம் என்னென்று வினவிய தோழிக்குத் தலைமகள் எக்கரிடத்து நின்ற ஞாழலின் பெருஞ் சினையைக் கடலலை போந்தும் பெயர்ந்தும் வருத்தும் துறைவனுதலின், மனைக்கண்ணிருந்து கற்புப் பெருமை பிறங்கும் நம்மைத் தன் புணர்வாலும் பரத்தையிற் பிரிந்து சேறலாலும் துன்புறுத்தும் இயல்பினனுகலின், அவற்குப் புணர்வும் பிரிவும் இரண்டும் ஒன்றேயென விடையிறுத்தவாறு.

புணர்வின் அன்னுன் என்ற பாடத்துக்கு அரும்புணர் வினனுகலின், அவன் இது பொழுது புணரினும், அவ்வியல்பினனுய்ப் பிரிதல் கைவிடா னுகலின் அவனைக் கூடலும் கூடாமையே என்றுரைக்க. (150)

———

6

வெள்ளாங்குருகுப் பத்து

இஃது எக்கர் ஞாழற் பத்தைப்போல் வெள்ளாங்குருகின் செய்தியைப் பாட்டுத்தோறும் பொதுவாகக் கொண்டிருத்தல்பற்றி இவ்வாறு பெயர் பெறுவதாயிற்று.

வெள்ளாங்குருகு நீர்ப்பறவையினத்துள் ஒன்று. இது வயிற்றுப்புறம் வெண்மை நிறமும், முதுகுப்புறம் சாம்பல்நிறமும் உடையது. ''துறைபோ கறுவைத் தூமடியன்ன, நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங்குருகு[1]'' எனச் சான்றோர் கூறுவது காண்க. நீர்நிலைகளின் கரைகளில் வளர்ந்திருக்கும் புதர்களில் கூடமைத்து வாழ்வது இதன் இயல்பு. இதனை உள்ளான்குருகு என்பதும் உண்டு. இதன் ஆணைவிடப் பெண் வேறு சில வண்ணங்களுடன் அழகு மிக்கு இருக்கும். வெள்ளாங்குருகுகளின் இனத்தை நன்கு கண்டறிந்தவர்க்கே யன்றிப் பிறர்க்குப் பெண்குருகு வெள்ளாங் குருகின் இனம் என்பது எளிதில் தெரியாது பெடைக்குருகின் வாலில் இருபத்தாறு முதல் இருபத்தெட்டு இறகுகளும், சேவலின் வாலில் பதினன்கு முதல் பதினறு இறகுகளும் இருக்கும். நிலத்தில் இருக்கும்போது இதன் வால் மேலும் கீழும் அசைந்து

1. நற். 70

கொண்டே இருப்பதுபற்றி இது வாலாட்டி (Wagtails) யெனவும் வழங்கும். இதன் கால்களில் அன்னம், வாத்து முதலியவற்றிற்கு உள்ளது போல விரல்கட் கிடையே தோல் இல்லையாயினும், இது நீரில் நன்கு நீந்திச்செல்லும் நீர்மையுடையது. நிலத்தில் நடக்கும் போதும் விரைந்து செல்லும் இதன் நிறம் விளங்கித் தோன்றுகிறது.

வெள்ளாங்குருகின் இனத்தில் ஆணினும் பெண் குருகுகளின் தொகையே மிக்குளது என உயிர்நூல் அறிஞர் கண்டுரைக்கின்றனர். அதனால் இவற்றிடையே வியத்தகு நிகழ்ச்சியொன்று காணப்படுகிறது. பெடைக்குருகு கருக்கொள்ளும் செவ்வி எய்தியதும் தன் மேனியைப் பொற்பு மிகுவித்து ஆண்குருகுகளின் மனம் கவரத் தொடங்கும். தன் கருத்துக்கினிய ஆணைக் கண்டதும் அதனைத் தன்பாற் ஈடுபடுத்தற்கு முயலும்; அம்முயற்சியில் அஃது ஏனைக் குருகுகளுடன் அரும்போர் உடற்றும்; முடிவில் தான் துணையெனக் கொண்ட குருகுடன் கூடி மூன்று முதல் நான்கு முட்டைகளை இடும். இட்ட முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் செயலை ஆண்குருகுகளை மேற்கொள்ள வைத்துப் பெடைக்குருகு பறந்துபோய் விடுகிறது. பின்னர் அது வேறோர் ஆண்குருகைப்பற்றித் தனக்குத் துணையாக்கி, அதற்கொரு மூன்று நான்கு முட்டைகளை யிட்டுத் தந்து அடைகாத்துப் பொரிக்கச் செய்து நீங்கிவிடும். இவ்வாறே பெண்குருகு கூடமைப்பதும் காதற் சேவலைத் தேடிக் கூடி முட்டை யிடுவதும் நீங்குவதுமாகிய இச்செய்கையினையே மேற்கொண்டு வாழ்கிறது.

கூட்டிடைத் தங்கி முட்டைகளை அடைகாக்கும் செயலை மேற்கொள்ளும் வெள்ளாங்குருகின் சேவல் இருபத்தொரு நாட்கள் அடைகாத்துக் குஞ்சுகள் பொரித்தவுடன் அவை தாமாக இரை தேடி யுண்ணும் செவ்வி பெறும் வகையில் உணவு தந்து ஓம்பும் தாய்மைப் பணியை ஒருசிறிதும் தாழ்வின்றி ஆற்றுகின்றது. வெள்ளாங்குருகின் குஞ்சு சிவந்து நீண்ட காலும் சிறிது நீண்ட மூக்கும் கொண்டு, கொக்கு நாரை முதலியவற்றின் புனிற்றுப் புலவு தீராத இளங்குஞ்சு போலத் தோன்றுவதனால், பொதுவாகக்

காண்பார்க்கு அவற்றிடையே வேறுபாடு காண்பது அரிது. நாள் முதிரமுதிர வேற்றுமை விளக்கம் எய்துகிறது.

நிலவுலகில் எவ்வெப்போது மழைக்காலம் எங்கெங்கு சிறந்து நிலவுகிறதோ அப்போது அங்கே இவைகள் சென்று சேர்ந்து விடும். இவற்றிற்கு யாதும் ஊர்; எந்நாடும் தம்நாடே. ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகட்குச் செல்வதும் திரும்ப வருவதும் இயல்பு. இமயத்தில் ஆருயிரம் ஏழாயிரம் அடிவரையில் இவை காணப்படுகின்றன. அதற்கு மேல் உள்ள நீர்நிலைகளில் வெள்ளாங்குருகுகள் செல்வதில்லை.

கருஞ்சேறுகளில் காணப்படும் சிறுசிறு புழு பூச்சிகளையும் சின்னஞ்சிறு மீன்களையும் பிடித்துண்பது இக்குருகுகளின் இயல்பு. ஊனுண்போர், இக்குருகுகளின் ஊனைமிக்க விருப்பத்தோடு உண்ணுவர். நாம், இனி, இக்குருகு பொருளாக வரும் பாட்டுக் களைக் காணலாம்.

151. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப நக்க கண்போ னெய்தல்
கட்கமழ் பானுத் துறைவற்கு
நெக்க நெஞ்சம் நேர்கல் லேனே.

இது வாயில் வேண்டிய தோழிக்குத் தலைமகள் வாயில் மறுப்பாள் சொல்லியது.

ப. உரை: வெள்ளாங்குருகின் பிள்ளை .... துறைவன் என்றது பரத்தை யொருத்தியொடு ஒழுகுகின்ற ஒழுக்கம் இடை யற்றதாகச் சென்ற வாயில்கள் நெருங்க அவள் நெஞ்சு நெகிழ்ந்து கூறிய காதல் மாற்றம் பரந்து செல்கின்ற துறைவன் என்பதாம். வெள்ளாங்குருகு என்றது பரத்தையாகவும், பிள்ளை என்றது பரத்தையோடு தலைமகனிடை யுளதாகிய ஒழுக்கமாகவும், காணிய சென்ற மடநடை நாரை என்றது வாயில்களாகவும் கொள்க.

இவை வருகின்ற பாட்டு ஒன்பதுக்கும் ஒக்கும் மிதித்தது அவளை நெருங்குதலாகவும், நக்க நெய்தல் அவள் நெஞ்சாகவும், கட்கமழ்பு ஆனுமை அவள் அவர்க்குக் கூறிய மாற்றம் எல்லாருக் கும் புலப்படுதலாகவும் இப்பாட்டிற்குக் கொள்க.

உரை: வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தனது பார்ப்பென நினைத்து அதனைக் காண்டற்குச் சென்ற மடப்பம் பொருந்திய நடையினை யுடைய நாரை, தன் காலால் மிதிப்ப, அதனால் இதழ் விரிந்த, கண்ணைப்போலும் நெய்தல்மலர்கள் தேன் நாறுதல் அமையாத துறைவன் பொருட்டு என்நெஞ்சு உடைந்தொழிந்த மையால் யான் அவற்கு வாயில் நேர்தலை ஆற்றேனாயினேன் எ. று.

பிள்ளை, பறப்பனவற்றின் இளமைக்கும் பெயராம். ''அவற்றுட், பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை[1]" என்பது மரபியல் செத்து எனற்குரிய வினையெச்சம் செத்தென என வந்தது. ''வினையெஞ்சு கிளவியும் வேறுபல்குறிய[2]'' என ஆசிரியர் கூறுதல் காண்க. காணிய, செய்யிய வென்னும் வினையெச்சம். கண்ணிற்கு உவமமாதற்குரிய நெய்தலுக்கு, அக் கண்தன்னையே உவமித்தது ஒருவகையுவமமாம். ''பொருளே யுவமம் செய்தனர் மொழியினும், மருளறு சிறப்பினஃதுவம மாகும்[3]'' என்பது விதி. கண்போல் நெய்தல் என்றால், கண்ணிற்கும் நெய்தற்கும் சிறப்புடைமை மயங்கி வாராது பின்னும் அக்கண்ணிற்கே சிறப்பாம் என்பது கருத்து. ''கண்போல் நெய்தல் போர்விற் பூக்கும்[4]'' என்றார் பிறரும். நகுதல், முறுக் கவிழ்ந்து இதழ் விரித்தல். இயற்கையே நெகிழாது, செயற்கை யால் நெகிழ்ந்தமை தோன்ற மிதிப்ப நக்க நெய்தல் என்றாள். நெய்தல் கட்கமழுமாறு, ''கட்கமழ் நெய்தல் ஊதி[5]'' என வருதலால் அறிக. நேர்கல்லேனே என்பது முதன்மேல் நின்ற சினைவினை.

---

1. தொல். பொ. 559.   2. ஷி. சொல். 457.
3. ஷி. ஷி. 284.   4. நற். 8.   5. முருகு. 74.

தனக்கு உரித்தல்லாத வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தனக்கு உரித்தாகக் கருதி நாரை தன் பிள்ளையைக் கைவிட்டுக் காணச் சென்றாற் போலத் தலைமகன் தனக்குரிய என்னைக் கை விட்டுப் பரத்தையை நாடிச் சென்றொழுகுகின்றான் எனத் தலைவி உள்ளுறுத் துரைக்கின்றாள். இஃது உவம மருங்கில் தோன்றும் துனியுறுகிளவி.

இனி, நாரை மிதிப்ப நக்க நெய்தல் கட்கமழ்பு ஆனுவாறு போலத் தலைவன் விடுத்த வாயில்களால் நெருக்குண்டு யான் வாயில் நேரக்கருதினும், என் நெஞ்சு அன்புற்று வாயில் நேர்தலை உடன்படாதாயிற் றென்பது ,உள்ளுறையாலும் வற்புறுத்தின ளாயிற்று.

தலைவனது பரத்தமை யொழுக்கத்துப் பண்பில் செய்தியை உள்ளுறையால் வற்புறுத்தினமையின், என் நெஞ்சு அவன் புறத் தொழுக்கத்தால் உடைந்தொழிந்ததென்பாள், நெக்க நெஞ்சம் என்றும், என் பெண்மையால் யான் வாயில் நேரக் கருதினும் என் நெஞ்சு அதற்கு உடன்படா தாயிற் றென்பாள் நெஞ்சம் நேர்கல் லேன் என்றும் கூறினாள். நெஞ்சம் நெக்கு உடைந்தமையின் நேர்கல்லே னாயினேன் எனக்கொள்க. "இனமீ னார்ந்த வெண் குருகு மிதித்த, வறுநீர் நெய்தல் போல, வாழாளாதல் சூழா தோயே[1]" என்றும், "பெறின் என்னும் பெற்றக்கால் என்னும் உறினென்னும், உள்ளம் உடைந்துக்கக் கால்[2]" என்றும் சான்றோர் கூறுதல் காண்க. குலமகளாய தன்னினும் பொதுமகளாய பரத்தை வேறுதலை நோக்காது தலைமகன் பரத்தைபாற் சென்ற தனை, வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தனது பார்ப்பெனக் கருதி நாரை காணிய சென்றது என உள்ளுறுத்தாள். இதனை ஏனை வரு மிடங்களிலும் உரைத்துக்கொள்க.

நெக்க நெஞ்சம் நேர்கல்லேன் என்றது அழிவில் கூட்டத்து அவன்பிரி வாற்றாமை. கட்கமழ்ந் தானுத்துறைவற் கென்றும் பாடம்.

---

1. நற். 183. 2. குறள் 1270.

"இது வாயில் வேண்டிய தோழிக்குத் தலைவி வாயில் மறுத்தது[1]" என்பர் நச்சினார்க்கினியர். (151)

152. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கைபறு பிரற்றுங் கானலம் புலம்பந்
துறைவன் வரையு மென்ப
அறவன் போலு மருளுமா ரதுவே.

இது தலைமகள் வாயில் மறுத்துழி, "இவன் நின்மேல் தொடர்ச்சியிற் குறைவிலன், அருளுமுடையன்; ஆதலால், நீ இவனோடு புலத்தல் தகாது என நெருங்கி வாயில் நேர்விக்கும் தோழிக்கு அவள் சொல்லியது.

ப உரை: துறைவன் வரையும் .... அதுவே என்றது அப் பரத்தையைத் தனக்கு இற்பரத்தையாக வரைவான் என்று கூறுகின்றாராகலின், நீ கூறுகின்ற படியே, அறமுடையன் போலும் அருளும் அதுவே' என இகழ்ந்து கூறியவாறு. கையறுபு இரற்றும் கானலம்புலம்பந் துறைவன் என்றது பரத்தையரிடத்துச் சென்ற வாயில்கள் கூற்றேயாய்ப் பிறிது மாற்றமின்றிச் செல்கின்ற துறைவன் என்றவாறு.

உரை: வெள்ளாங்குருகின் பார்ப்பினைத் தனதெனக் கருதி அதனைக் காண்டற்குச் சென்ற மடநடையினையுடைய நாரை செயலற்று ஒலித்தலைச் செய்யும் கானலைச் சேர்ந்த கடல்நிலத் தலைவன் அப்பரத்தையை வரைகுவன் எனப் பலரும் கூறுப வாகலின், அவன் அறமுடையன் காண்; அஃது அவற்கு அருளுமாம் எ. று.

அருளுமார் அது என்புழி, ஆர், அசைநிலை. "அசைநிலைக் கிளவி ஆகுவழி யறிதல்[2]" என்ற சூத்திரத்து, "ஆகுவழி யறிதல்

1. தொல். பொ. 12. 2. ஷை. சொ. 271

என்றதனுல், அசைநிலையாங்கால் உம்மை முன்னரும், உம்மீற்று வினை முன்னரு மல்லது வாராமை யறிக'' என்பர் சேனுவரையர். இது, தோழி கூறியதனைக் கொண்டு கூறியது, கானலம் புலம்பந் துறைவன் என்புழிச் சாரியை அல்வழிக்கண் வந்தது.

தலைவனது புறத்தொழுக்கம்பற்றிப் புலந்து வாயில் மறுத்தாளாகலின், அவ்வொழுக்கத்திடை அவன் செய்கை இது என்பாள், வரையும் என்ப என்ருள். தன்னெடு தொடர்பு பெற்ருரைத் கைவிடுதல் அறமாகாதெனக் கருதி, அத்தொடர்பு மிக இற்பரத்தையாக வரைதலின், நீ அவனை அறவன் எனக் கூறியது ஒக்கும் என்பாள், அறவன் போலும் என்ருள். போலும், ஈண்டு ஒருவகைச் சொல்லணியாக வந்தது.

''நறுந்தா துண்டு நயனில்காலை, வறும்பூத் துறக்கும் வண்டு'' போலப் பொதுமகளாய பரத்தையின் நலன் நுகர்ந்த பின் கைவிடலின்றித் தனக்கே உரிமை செய்து கோடல் தோன்ற வரையும் என்ப என்ற தலைவி, அச்செயல் தக்கதென உடன்பட்டாள் போல அறவன் போலும் என்றும், முதற்கண் எம்பால் செய்த அன்பு இப்போது முதிர்ந்து பரத்தையர் பலர்க்கும் தலையளி செய்தற்குரிய அருளாய் நின்ற தென்பாள் அருளுமாரதுவே என்றும் கூறினுள் எனக் கொள்க.

வரையும் என்ப என்றது புறஞ்சொல் மாணுக்கிளவியாகலின், அறவன் போலு முதலாயின வெகுளிக் குறிப்பினவாம். ஆகவே, அவன் தன்னைப் பிரிந்து ஒழுகுதல் அறமும் ஆகாது, அருளுமாகாது என்பது அவள் கருத்தாம் என அறிக. எனவே, அப்பெற்றியோன் பொருட்டு வாயில் வேண்டுவது என்னை யென வாயில் மறுத்தவாறுப. (152)

153. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
உளர வொழிந்த தூவி குவவுமணற்
போர்விற் பெறூஉந் துறைவன் கேண்மை
நன்னெடுங் கூந்தல் நாடுமோ மற்றே.

இது பரத்தையிற் பிரிந்து வாயில் வேண்டிய தலைமகன் கேட்குமாற்றால் வாயிலாய்ப் புகுந்தார்க்குத் தோழி கூறியது.

ப. உரை : நாரை உளர ஒழிந்த தூவி...... துறைவன் என்றது இவன் கூறிவிட்ட வாயில்கள் மாற்றம் பரத்தை பெறும் துறைவன் எ. று.

உரை : வெள்ளாங்குருகின் பார்ப்பினைத் தன்னுடைய பார்ப்பு எனக் கருதிக் காண்டற்குச் சென்ற மடப்பம் பொருந்திய நடையை யுடைய நாரை அலைப்ப வீழ்ந்த அதன் தூவி, காற்றால் திரண் டுயர்ந்த மணற்குவியற்கட் பெறப்படும் துறைவனது நேயம், நல்லவாய் நீண்ட கூந்தலையுடைய தலைமகளை நாடுமோ? நாடா தாகலின், நாடுவதாக நீங்கள் வாயில் வேண்டுவது என்னை. எ. று.

உளர்தல், அலகினாற் கோதி அலைத்தல். போர்வு, குவியல். இது பெரும்பாலும் வைக்கோற் போர்வுக்கு வழங்கும். குவவு, திரட்சி. உடையானது நாட்டம் உடைமைமேல் நின்றது. ஓகாரம் எதிர்மறை.

பரத்தையிற் பிரிந்தொழுகுவோன் அவர் சேரியின்கண் புணர்வும் பிரிவும் நிகழ்த்தி அவரவர்பால் வாயில் வேண்டி விடுவதும் பெறுவதும் செய்கின்றமை உள்ளுறுத்துக் கூறுதலின்' நம்பால் வாயில் வேண்டற்குரிய கேண்மை நெஞ்சில் தோன்றுதற்கு இடமின்மையின், அவன்பொருட்டு வாயில் வேண்டுவ தென்னை என்பாள், கேண்மை நாடுமோ என மறுத்தாள். தலைவி தன்னைப் பிறள்போல் கூறும் குறிப்பால் நன்னெடுங் கூந்தல் என்றாள். தலைமகற்குச் சிறந்த உரிமையுடைமைபற்றிக் கூந்தலை விதந் தோதினாள் ; '' இவள் ஒலிமென் கூந்தல் உரியவால் நினக்கே [1]'' என்று பிறரும் கூறுவது காண்க.

இனி, நாணுமோ மற்றே என்ற பாடத்துக்கு, நாணுமன்றோ என உரைக்க. ஓ, மற்று, ஏ, அசை. தன்னை யின்றியமையாத தலைமகளைத் துறந்து பரத்தை மாட்டொழுகிய தவற்றினால் அவளைச்

1. குறுந். 225.

சார்வுழி நாணுதல் ஒருதலை யாகலின், நாணுமோ என்ருள் என்க. (153)

154. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானற் சேக்குந் துறைவனொ
டியானெவன் செய்கோ பொய்க்குமிவ் வூரே.

இது, தோழி வாயில் வேண்டி நொருங்கியவழி வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

ப.உரை : துறைவனொடு யான் எவன் செய்கோ என்றது' அவனொடு யான் ஒழுகும் ஒழுக்கம் என் என்று வெறுத்துக் கூறிய வாறு. பொய்க்கும் இவ்வூர் என்றது தலைமகள் குணம் கூறுகின்ற தோழியை எனக் கொள்க. நாரை கானற் சேக்கும் என்றது, வாயிலாய்ச் சென்ருர் அவன்மாட்டுத் தங்குதல் நோக்கி எனக் கொள்க.

உரை : வெள்ளாங்குருகின் பார்ப்பினைத் தனதெனக் கருதிக் காண்டற்குச் சென்ற மடநடைநாரை கானலின் கண் தங்கும் துறைவனோடு யான் யாதனைச் செய்குவேன், இவ்வூரினர் பொய் கூறுகின்ரு ராகலின், எ. று.

தலைமகனது புறத்தொழுக்கம் பொருது வருந்தியிருப்பாளை, ஆற்றுவிக்கும் முகத்தால் தோழி அவன் குணம் கூறினளாகச் சிவப்புற்ற தலைமகள் அவனை அயலார் போலப் பிரித்து, இவ்வூரே என ஊர்மேல் வைத்துக் கூறினள். ''இமைப்பிற் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே, ஏதிலர் என்னுமிவ் வூர்[1]'' என்ருர் சான்ரேரும்.

தலைமகனது புறத்தொழுக்கத்தால் தன்பால் அன்பிலன் என்று கொண்டு, அப் பெற்றியானுடன் கூடிச் செய்யும் நல்லறம்

1. குறள். 1129.

நன்றாகா தென்றும், அது செய்தற்கு உசாத்துணையாகும் தோழியும் பொய் கூறுவாளாகியவழி, தான் கருதும் அறம் எவ்வாற்ருனும் பயன் தாராது என்பாள், யான் எவன் செய்கோ என்றும் கூறினள்.

யான் எவன் செய்கோ என அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும் வினுவாய்பாட்டாற் கூறியது, தோழி வாயில் வேண்டி நெருங்கியவழித் தலைமகட் குண்டாய வெகுளிச் சிறப்புணர்த்திய வாறு. வாயின் மறுத்தற்கண் வெகுளி சிறந்த தாயினும், அறத்திற் சென்ற உணர்வு திரியாமைக் கூறல் கற்புக்கு இலக்கணம் என அறிக. ஆகவே இது, ''கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின், அலமரல் பெருகிய காமத்து மிகுதி[1]'' க்கண் வாயின் மறுத்தவாறு. யானெவன் செய்கோ என்றது அல்மரல். பரத்தையர் சேரியுள் ளும் புறத்தொழுக்கம் உடையனுய்க் காதற்பரத்தைபால் வாயில் விட்டு ஒழுகுகின்ருன் என்று உள்ளுறுத்து உரைத்தற் கேற்ப நாரை கானற் சேக்கும் என்றதனுல் வாயிலாய்ச் சென்ருர் அப் பரத்தைமாட்டுத் தங்குவர் என்ருள் என்க. (154)

155 வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்பத் ததைந்த நெய்தல் கழிய
ஓதமொடு பெயருந் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே

இது, பலவழியாலும் வாயில் நேராளாகிய தலைமகள் மகப் பேற்றிற் குரித்தாகிய காலம் கழிய ஒழுகுகின்ருய் என நெருங்கிய தோழிக்குச் சொல்லியது.

ப. உரை : பதைப்ப .. துறைவன் என்றது வாயில்கள் கூறப் பரத்தை எய்திய இரக்கத்தினைத் தன் தண்ணளியால் தீர்ப்பான் எ.று.

---

1. தொல். பொ. 147.

உரை : வெள்ளாங்குருகின் பார்ப்பைத் தனதாகக் கருதிக் காண்டற்குச் சென்ற நாரை இறகடித்து அசைதலால் நெருங்கிய நெய்தல்கள் கழியிடத்துப் பெருகும் அலைகளோடு நீங்கும் துறைவனுக்குக் களவின்கண் யான் பைஞ்சாய்ப் பாவை பெற்றுளேனாகலின், அஃது அமையும் எ.று.

பதைத்தல், மெய்சிலிர்த்து இறகடித்து அசைதல் ததைதல், நெருங்குதல். கழிய ஓதம், கழியிடத்துப் பெருகும் அலை, பைஞ் சாய்ப்பாவை, விளையாட்டின்கண் மகளிர் பசிய தண்டான்கோரை யாற் செய்துவைக்கும் பாவை. ''பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவை தந்தனைத்தற்கோ[1]'' என்றும், "வண்டலாயமொடு பண்டு தானாடிய ஈனுப் பாவை[2]'' என்றும் பிறரும் கூறுவர். இங்ஙனம் தாம் செய்துவைத்த பாவையைத் தம் மகளாகக் கருதி மகளிர் விளையாடுதலை, ''தாழிக் குவளை வாடுமலர் சூட்டி, தருமணற் கிடந்த பாவை யென்மருமகளே என முயங்கின எழுமே[3]'' எனவரும் தாயர் பாட்டாலுணர்க. அஃது அமையும் என்பது கூற்றெச்சம்.

மகப்பேற்றிற் குரிய காலமாயினும் அதனை நினையாது தலைமகன் என்னைத் தனிமையுற விடுத்துப் புறத்தொழுகுகின்றானாகை, யான் களவுக்காலத்தே ஓரை ஆடியவழி வைத்துப் பேணிய பாவை தன்னையே கொண்டு அமைவேனாகலின், அதுகுறித்து வாயில் வேண்டுவது என் என்பாள், பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென் யானே என்றாள்.

''கொடுமை யொழுக்கம் தோழிக் குரியவை, வடுவறு சிறப்பின் கற்பில் திரியாமை, காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும், ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்[4]" வரும் கூற்று வகையில், ''இது பல்லாற்றானும் வாயில் நேராத தலைவியை மகப்பேற்றிற் குரிய காலம் கழிய ஒழுகா நின்றாய் என நெருங்கிய

1. கலி. 76. 2. நற். 127
3. அகம். 165. 4. தொல். பொ. 147.

தோழிக்கு யான் களவின்கண் மகப்பெற்றேன் என (த்தலைவனை)க் காய்ந்து கூறியது'' என்பர் நச்சினார்க்கினியர்.

பறைப்பத்ததைந்த நெய்தல் என்ற பாடத்திற்கு உதிர்தலால் நிறைந்த நெய்தல் என்றுரைக்க; ''ஊநந்து கரை பறைந்த என் உடையும் நோக்கி[1]'' என்றார் போல. (155)

156. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப வொழிந்த செம்மறுத் தூவி
தென்கழிப் பரக்குந் துறைவன்
எனக்கோ காதலன் அனைக்கோ வேறே.

இது, பரத்தையிடத்து வாயில்விட் டொழுகுகின்ற தலைமகனது வாயிலாய் வந்தார்க்குத் தோழி கூறியது.

ப. உரை : எனக்கோ காதலன் அனைக்கோ வேறே என்றது, இவள் மேல் அவன் காதலன் என்று நீயிர் கூறுகின்ற மாற்றம் மெய்யென்பது எனக்கும் ஒக்கும்; இவள் மனத்திற்கு ஒவ்வாது என்பதாம். அன்னை என்றது தலைமகளை, செம்மறுத் தூவி தெண் கழிப் பரக்கும் என்றது அப்பரத்தைக்குக் கூறிவிட்ட மாற்றம் எவ் விடத்தும் பரந்து செல்கின்ற துறைவன் எ.று.

உரை : வெள்ளாங்குருகின் பார்ப்பைத் தன் பார்ப்பெனக் கருதி, அதனைக் காண்டற்குச் சென்ற மடநடையையுடைய நாரை தன் இறகுகளைக் கோத உதிர்ந்த செவ்விய வரிகளையுடைய இறகு தெளிந்த கழியின்கட் சென்று பரவும் துறைவன் தலைவிபால் பேரன்பினன் என்பது எனக்கு மெய்யென்றே தோன்றுகின்றது; ஆயினும் என் அன்னையாகிய தலைமகட்கு வேறாகவுளது, என் செய்வேன் எ.று.

அன்னை என்றது தலைமகளை. தலைமகளையும் தன்னையும் பிரித்தலின் ஓகாரம் பிரிநிலை. ''வேறென் கிளவி இருதிணைச் சொற்கும்

---

1. புறம். 376.

ஓரன்ன வுரிமை[1]" யுடையதாகலின், அனேக்கோ வேறு என்ருள். செம்மறுத் தூவி, சிவந்த நிறமுடைய வரிகளையுடைய தூவி ; ''கவிரிதழன்ன தூவி[2]'' என்றும் பிறரும் கூறுவர். இவ்வாற்ருல் நாரை ''செவ்வரி நாரை[3]'' எனவும் வழங்குகிறது.

தலைமகன் தலைவிபால் பேரன்பினன் என்பது யான் நன்கறிந்த தொன்ருகலின் அவன் செய்வனவும் நீவிர் கூறுவனவும் எனக்கு உடன்பாடே என்பாள், எனக்கோ காதலன் என்றும், உள்ளுறை யாற் கூறிய புறத்தொழுக்கத்தால் தலைமகள் புலந்து நிற்றல் இனிது விளங்குதலால் நீவிர் கூறும் நன்மை யாவும் அவட்கு வேருய்த் தோன்றுவவாயின என்பாள், அன்னைக்கோ வேறே என்றும் கூறினுள்.

வெள்ளாங்குருகின் பிள்ளையைக் காணச் சென்ற நாரை பதைப்ப உதிர்ந்த தூவி தெண்கழிப் பரக்கும் என்றதனுல், பரத்தையர் சேரிக்கண் தலைவன் பொருட்டு வாயில்கள் பரத்தையர் மனைக்குச் சென்று அவன் விடுமாற்றம் உரைத்தொழுகுதலால் எழும் அலர் இவ்வூர் முற்றும் பரவிவிட்ட தென்று உள்ளுறை கொள்ளப்படும். (156)

157. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கள்லே யிருந்து மாலே சேக்கும்
தெண்கடற் சேர்ப்பனேடு வாரான்
தான்வந் தனனெங் காத லோனே.

இது, பரத்தையிற் பிரிந்து வாயில் வேண்டி ஒழுகின்ற தலைமகன் தன் புதல்வன் வாயிலாக வருமெனக் கேட்டு அஞ்சிய தலைமகள் அவன் விளையாடி தனித்து வந்துழிச் சொல்லியது.

ப. உரை : காதலன் என்றது என்மேல் என் புதல்வன் காதலன் என்பதறிந்தேன், அவனேடு வாராது தனித்து வருதலான்

1. தொல். சொல். 222. 2. குறுந். 103. 3. புறம். 351.

எ.று. நாரை காலை யிருந்து மாலை சேக்கும் துறைவன் என்றது பரத்தையிடத்து விட்ட வாயில்கள் செவ்வி பெருது பகலெல்லாம் இருந்து இரவின்கண்ணும் அங்கே துயில்கின்ரு ரென்பதாம்.

உரை: வெள்ளாங்குருகின் பார்ப்பைத் தனதாகக் கருதி அதனைக் காண்டற்குச் சென்ற மடநடையையுடைய நாரை காலை தொடங்கி மாலைமுற்றும் ஆண்டே தங்கும் தெளிந்த கடனிலத் தலைவனெடு வாராது எம் காதலன்புடைய புதல்வன்தான் தனித்து வந்தான்காண் எ.று.

காதலன், புதல்வன். முற்றும் என்பது எஞ்சி நின்றது. சேர்ப்பனெடு வாரான் என்பதே அமையுமாயினும், தான் வந்தனன் என மிகுத்துக் கூறியது, இனிப்புதல்வன் வாயிலாகத் தலைமகள் மனைக்கண் வருவதற்கில்லை என்பது புலப்படுத்தற்கு. புதல்வன் வாயிலாகப் புக்கவழி மறுத்தலாகாமையின், சேர்ப்பனேடு வாரான் என்று கூறினுள்.

காணியச் சென்ற நாரை காலையிலிருந்து மாலை சேக்கும் என்றது, பரத்தையிற் பிரிந்த தலைவன் பகலும் இரவும் பரத்தையர் மனைக்கண்ணே உறைகுவான் என்பது விளக்குதலின், சேர்ப்ப னேடு வாரான் என வாளாது கூறினுள்.

"இது வாயில் வேண்டி யொழுகுகின்ருன் புதல்வன் வாயிலாக வரும் எனக் கேட்டு அஞ்சிய தலைவி அவன் விளையாடித் தனித்து வந்துழிக் கூறியது[1]" என நச்சினுர்க்கினியர் கூறுவர்.

(157)

158 வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானலம் பெருந்துறைத் துணையோடு கொட்குந்
தண்ணந் துறைவன் கண்டிகும்
அம்மா மேனியெந் தோழியது துயரே.

---

1. தொ. பொ. 147.

இது, பரத்தை புலந்துழிப் புலவி நீக்குவானாய் அஃது இடமாக வந்தவை அறிந்த தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.

ப. உரை : கண்டிகும் அம்மா மேனி எம் தோழியது துயரே என்றது எம்மிடத்துத் துயரமில்லை, எம் தோழியாகிய பரத்தைத் தலைவிபால் துயரம் கண்டேம்; நீ கடிதிற் சென்று அவள் வருத்தம் தீர்ப்பாயாக எ.று. நாரை ..... கொட்கும் என்றது நினக்கு வாயிலாகச் சென்றார் அவள் கருத்தறிந்து மகிழ்ந்து ஒழுகுகின்றார் என்பதாம்.

உரை : வெள்ளாங்குருகின் பார்ப்பினைத் தனதாகக் கருதிக் காண்டற்குச் சென்ற மடநடை நாரை அஃது அண்மை கண்டு கானலின் பெரிய துறைக்கண் தன் பெடையுடன் திரியும் குளிர்ந்த துறைவனே, அழகிய மாந்தளிர் போலும் மேனியினையுடைய எங்கள் தோழியாகிய பரத்தையது துயரைக் கண்டு அதனைத் தீர்த்து வருக, எம்மினும் அவள் ஆற்றாமை மிகவுடையளாயினாள். காண் எ.று.

தண்ணந் துறைவன், விரிக்கும் வழி விரிந்தல்[1]. அம்மா மேனி யென்றது இப்பொருட்டாதல், ''அம்மாமேனி நிறை தொடிக் குறுமகள்[2]'' என வருதலா லறிக. இகும் முன்னிலை யசைச் சொல்.

பரத்தை புலந்தவழி, தலைமகன் தன் மனையகம் போதருதலும் அவள் புலவி தீர்தற்கு ஒரு வாயிலாமாகலின், அக்கருத்தினால் வந்தான் என்பதனை உணர்ந்த தோழி வாயில் மறுப்பாளாய், நின் செயலால் அவள் கொண்ட புலவி மிக்க துயரத்துக் கிடனாய் ஆற்றாமை பயந்தமையின், கடிதிற் சென்று அதனைத் தீர்த்து வருக என்பாள், அம்மா மேனி யெம் தோழியது துயர் கண்டிகும் என்றாள். எம்மினும் முதலாயின குறிப்பெச்சம். தலைமகனாகிய நீ நின் மனையகம் புகுந்தது கேட்டு ஆற்றாளாய் மேனி வேறுபட்டாள் என்பாள் குறிப்பு மொழியால், அம்மா மேனி என்றும்,

---

1. தொல். சொ. 403. 2. நற். 134.

அவளுற்ற துயரம் யாம் உற்றதே போல், எமக்கும் வருத்த முறுவிக்கு மாகலின், எம்மை இதுபோது தலையளி செய்யும் நீ அவட்கு அது செய்தலும் எமக்கு ஒத்ததே என்பாள், எம் தோழி யது துயர் என்றும் கூறினள். எம்மை வாயில் வேண்டுமாற்ருல் அது வேண்டாய் போலக் கூறினும், நின் காட்சியே அவள் துயர்தணி மருந்தாம் என்றற்கு, கண்டிகும் என்ருள் என்றுமாம்.

கற்பொழுக்கத்தின் கண், பரத்தை பால் இரக்கங் காட்டிப் பாராட்டிக் கூறியவழியும் தலைவிபால் புலவிக் குறிப்பு நிகழ்தல் இயல்பென அறிக.

வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தனதெனக் கருதிக் காண்டற்குச் சென்ற நாரை அஃது அன்மை கண்டு தன் துணை நாரையோடு கூடித் திரிவது போலப் பரத்தையர் சேரிக்கண் தலைவி புலந்தாளெனக் கேட்டு இவன் போதரும் நீ, யாம் வாயில் நேரின் புலவாமை அறிந்து மீண்டும் பரத்தையோடே கூடி யொழுகுவாய் என உள்ளுறையால் தலைவன் பரத்தமையை விளக்கி வாயில் மறுத்தவாறு காண்க.

என் தோழியது துயரே என்ற பாடம், ''ஒன்றித்தோன்றும் தோழி மேன[1]''என்பதனுல் தோழி மாட்டு அமைந்தது என்க. (158)

159. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பசிதின வல்கும் பனிநீர்ச் சேர்ப்ப
நின்னொன் றிரக்குவெ னல்லேன்
தந்தனை சென்மோ கொண்டலிவ ணலனே.

இது, மருமற்பொருட்டு உண்டிக்காலத்து வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

1. தொல். பொ. 39.

ப. உரை : நீ கொண்ட இவள் நலன் தந்தனை செல் எனக் கூட்டுக. நாரை........சேர்ப்ப என்றது நின் பரத்தை மனைக்கண் வாயிலாய்ச் சென்றோர் நின்னைப் பார்த்திருந்து பசிப்பர்; அவருடன் அருந்தக் கடிதின் அவள் மனைக்கண் செல்வாய் என்பதாம்

உரை : வெள்ளாங்குருகின் பார்ப்பினைத் தனதாகக் கருதிக் காண்டற்குச் சென்ற மடநடை நாரை பசி வருத்த வருந்தி யிருக்கும் குளிர்ந்த நீரையுடைய கடனிலத் தலைவனே, நினக்கே உரிய தொன்றனை இரக்கின்றேனல்லேன் ; நீ கவர்ந்துகொண்ட இவளது நலத்தைத் தந்து செல்வாயாக, எ.று.

பசிதின என்புழித் தின்றல் இலக்கணையாய் வருத்துதல் குறித்து நின்றது. ''பசிதின வருந்தும்[1]'' என்றாற் போல. இவள்நலன் என்றது இவட்குரிய நலமென நின்றமையின் நின் ஞென்று என்றது நினக்குரிய தொன்று என்றவாறு. நலம், கோடற்கும் தருதற்கும் உரியதன்றாயினும், ''வஞ்சியன்ன என் நலம் தந்து சென்மே[2]'' எனப் பிறரும் கூறுதலால் புலனெறி வழக்க மாதல் அறிக.

நினக்கேயுரிய தொன்றனை இரப்பேனாயின், நீ தாழ்த்தல் தகும் ; இவள்பாற் கவர்ந்துகொண்ட நலனை இரக்கின்றேன்; ஆகலின், அதன்கண் தாழ்தல் ஆகாது என்றற்கு, நின்ஞென்று இரக்குவெனல்லேன் என்றும், தந்தனை சென்மோ என்றும் கூறினாள்.

இனி, நின்பரத்தை புலந்தாளென்பது கேட்டு நீ விடுப்ப அவள்பால் வாயிலாய்ச் சென்றோர் புலவாமை கண்டு நின்னைப் பார்த்திருந்து பசிப்பர்; அவருடன் இருந்துண்ணக் கடிதின் அவள் மனைக்கட் செல்வாய் என உள்ளுறையாற் கூறுகின்றா ளாகலின், ''இங்ஙனம் செல்வதே கருத்தாய்ப் போந்தனை யாகலின் நின்னை ஈண்டே நிறுத்தும் கருத்தினே னல்லேன் ; நின் புறத்தொழுக்கத் தால் பொருது வருந்தி வேறுபட்டுத் தன் நலத்தை நின் பொருட்டே

1. ஐங். 305. 2. அகம். 396.

இவள் இழந்தன ளாகலின், அதனை நின்னையன்றித் தருவாரில்லை''
யென்பாள், நின்னென் றிரக்குவெனல்லேன் ; தந்தனை சென்மோ
கொண்ட இவள் நலனே என்றாள். இஃது உறுப்புநல னழிதல். (159)

160. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
நொந்ததன் றலையு நோய்மிகுந் துறைவ
பண்டையின் மிகப்பெரி தினைஇ
முயங்குமதி பெரும மயங்கினள் பெரிதே.

இது, புலந்த காதற் பரத்தை புலவி தீராது தலைமகன் வாயில் வேண்டி வந்தான் என்றது அறிந்த தலைமகள் வாயில் மறுத்தது.

ப. உரை : பண்டையின் என்றது பண்டும் நீ புலவி தீர்த்து முயங்கும் இயல்யுடைய எ.று. நாரை.........துறைவ என்றது நின் ஆற்றாமைக்குப் பிரிந்து வாயிலாய்ச் சென்றவர்கள் அவள் வருத்தம் கண்டு மிகவும் வருந்துகின்றார்கள் என்பதாம்.

உரை : வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தனதாகக் கருதிக் காண்டற்குச் சென்ற மடநடையினையுடைய நாரை அன்மை கண்டு வருந்தியதன்மேலும் வருத்த மிகும் துறைவனே, நின் காதற்பரத்தையது புலவியைத் தீராமையின் முன்னையினும் மிக வருந்தி மயங்கினளாகலின், பெரும, நீ விரைந்து சென்று பண்டே போல் அவளைக்கூடுவாயாக எ.று.

துறைவ, பண்டையின் மிகப்பெரிது இனைஇ மயங்கினளாகலின் பெரும, விரைந்து சென்று முயங்குமதி எனக்கூட்டி முடிக்க. பண்டையின் என்பது பின்னரும் கூட்டப்பட்டது. படவே, ''பண்டும் நீ புலவி தீர்த்து முயங்கும் இயல்புடையை'' என்றவாறும். பெருமைகளுள் முன்னது வருத்தமிகுதியும், பின்னது மயக்க மிகுதியும் சுட்டிநின்றன. '' மகிழ்ந்ததன் றலையும் நறவுண்டாங்கு[1]'' என்றாற் போல, நொந்ததன் றலையும் நோய்மிகும் என்றது, நோய்மிகுதி உணரநின்றது.

1. குறுந். 165.

காமம் புலவிக்குக் காரணமாதலும், அப் புலவியும் தீராதவழித் துனியும் மயக்கமும் உறுதலும் இயல்பாதலின், அப் பெருமயக்கத் திற்குக் காரணமாகிய கையிகந்த காமம் கூடி முயங்கப் பெறினல்லது நீங்காமை பற்றி, முயங்குமதி என்றும், அம்முயக்கத்திடைச் சிறிது நெறி மாறினும் புலவி தீராமை யெய்தும் என்றற்குப் பண்டை யின் முயங்குமதி என்றும் கூறினுள்.

பரத்தை கொண்ட புலவி தீரும்வகை கருதித் தன் மனையகம் வந்துளான் என்பதை உணர்ந்து வாயில் மறுக்கின்ரு ளாகலின், அவ்வாறு வருதலின், காமம் சிறக்கும் வகை அவ்வப்பொழுது களில் தோன்றிய சிறுதுனி பற்றிய புலவிகளை ஏற்றவகையால் தீருமாறு தீர்த்துக் கூடி முயங்கும் இயல்புடைய நீ, இன்று அவள் கொண்ட புலவி பண்டு நிகழ்ந்தவற்றினும் மிக்கதாகலின், அவ் வியல்பில் திரியாது கூடுதலின்றி ஈண்டு வருதல் கூடாதென்றற்கு, பண்டையின் மிகப்பெரிது இனைஇ என்றும், ஈண்டு வருதலும் அவள் புலவி தீர்க்கும் வாயிலாம் எனக் கருதுவதனை அவள் அறிந்தாலன்றி அப்புலவி தீராதாக, அறியாமையால் அவள் பெரு மயக்க முற்றனள் என்பாள், மயங்கினள் பெரிதே என்றும் கூறினுள். கூறவே, பரத்தையின் ஆற்ருமை கூறித் தலைமகற்கு வாயில் மறுத்தவாருயிற்று. (160)

7

சிறுவெண் காக்கைப் பத்து[1]

இதுவும் மேலன போல நெய்தல் நிலக் கருப்பொருள்களுட் சிறந்த நீர்ப்பறவைகளுள் ஒன்றைச் சிறப்பாகப் பாட்டுத்தோறும் எடுத்தோதுவதுபற்றி இப்பெயரைப் பெறுவதாயிற்று.

சிறுவெண்காக்கை யென்பது நீர்க்கோழி முதலியவற்றைப் போல நீர்நிலைகளில் மீன்பிடித்து உண்ணும் நீர்மையுடைய புள்ளினமாகும். இதன் உடல் முற்றும் காக்கை போலக் கறுத்துக் கழுத்தின் கீழ்ப்புறம் மாத்திரம் சிறிது வெளுத்திருப்பது பற்றிச் சிறுவெண் காக்கை எனப்படுகிறது. இக் காக்கை நம்நாட்டிலேயன்றிக் கிழக்கிலுள்ள மலையம் (Malaya), சுமத்திரை, சாவகம் முதலிய நாடுகளிலும் மிகுந்துளது. இதன் தொகை நம் தமிழகத்தில் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை ஆகிய நான்கு திங்களிலும் கடற்கரையிலும் பெரிய நீர்நிலைகளிலும் மிகுதியாகக் காணப்படும்; பிற காலங்களில் வேறுநாடுகட்குச் சென்றுவிடும்.

நீர்நிலைகளின் கரையிலும், கடற்கானலிலும், கழிமருங்கிலும் நிற்கும் புன்னை கருவை முதலிய மரங்களில் பற்பல நாழிக்கணக்கில் உட்கார்ந்திருக்கும். பறக்குமாறு எழுப்பினாலும், காக்கைகள் போல நெடுந்தொலைவு பறப்பதில்லை. தாமாகப் பறந்து செல்லத் தொடங்கின், மிக விரைவாக நெடுந்தொலைவிலுள்ள நாடுகட்குப்

---

1. Little Cormorant.

பறந்து செல்லும் பான்மை இவற்றிற்கு உண்டு இதன் இனத்துள் ஆணும் பெண்ணும் வடிவிலாதல் நிறத்திலாதல் ஒருவேற்றுமையும் காணப்படுவதில்லை. சினையீனும் வேட்கை யெழுங் காலத்தில் இவற்றின் ஆரவாரம் மிக்குத் தோன்றும்.

இவ் வெண்காக்கைகள் சிறுசிறு அயிரைமீன்களைப் பிடித்துண்ணும் பெற்றிய வாயினும், சில காலங்களில் தவளைகளையும் இவை உண்கின்றன. இவை தண்ணீரில் இருக்குங்கால் தலையும் வாலின் ஒரு சிறு பகுதியும் வெளியில் தோன்ற மூழ்கியிருப்பது இயல்பு. நீர்க்குள் மூழ்கி நெடிதிருந்து அங்கே வாழும் மீன்களைப் பிடிப்பதில் இவை சிர்த்த குறியுடையவாகும். நீர்க்குள் மூழ்கிப் பிடித்த மீனை நிலக்காக்கை போலத் தலையை மேலே நிமிர்த்து அசைத்து அசைத்து விழுங்கும். சில சமயங்களில் முள்ளுடைமையால் நீர்க்குள் மறைந்திருக்கும் கெடிற்று மீனைப் பிடித்து மேலே கொணர்ந்து காற்றில் உயரமாகத் தூக்கி யெறிந்து உண்பதும் உண்டு. ஆழமில்லாத நீர்நிலையில் மீன்களும் மிகச்சிலவே இருக்குமாயின், இக்காக்கைகள் கூட்டமாக நீரில் நடந்து மீன்களை ஒருசேரக் கூடுமாறு செய்து பிடித்துண்பதும் இவற்றின் இயல்பு.

மீன்வேட்டுவர் இவற்றைப் பிடித்துத் தமது தொழிலுக்குத் துணைசெய்யுமாறு பழக்கிக் கொள்வதும் உண்டு. ஆங்கில நாட்டில் இந்த வழக்காறு உண்டு. ஆசியாவின் கீழ்க்கடற்பகுதியில் வாழும் பரதவர் இவற்றை நன்கு பயிற்றி மீன்பிடித்து வருமாறு செய்கின்றனர்.

நீர்நிலைகளிற் நிற்கும் மிக உயரமில்லாத மரங்களில் இக்காக்கைகள் கூடமைப்பது வழக்கம். ஒரு மரத்தில் நாற்பது ஐம்பது கூடுகள் காணப்படும். முறைக்கு நான்கு அல்லது ஐந்து முட்டைகள் இடுவது இவற்றின் செயற்பண்பு. அம் முட்டைகள் வெண்மை கலந்த நீலமும் பசுமையும் கொண்ட நிறமுடையவை; அவற்றின் மேல் வெண்மையான பொடி பரந்திருக்கும்.

இவற்றின் இயல்புகள்! நமக்கு ஏன் இயற்கையாகத் தெரியவில்லை? நம்நாட்டுக் கல்விமுறை, நம்மைச் சூழவுள்ள மரம், செடி,

கொடி, புல், பூடு, பறவை, விலங்கு முதலியவற்றையும் அவற்றின் இயல்புகளையும் கண்டறிந்து நமது நாட்டுக்கே உரிய நினைவும் செயலும் உடையராக்காது வெளி நாட்டினின்றும் போந்து வாழ்க்கை நடத்தும் மக்களினத்தவரைப்போல மாற்றி விட்டது; அதனால் சங்ககாலச் சான்றோர் பாட்டுக்கள் கூறும் மாவும் புள்ளும் மரமும் செடியும் ஊரும் நாடும் ஒழுகலாறும் பிறவும் இந்நாளைய நமக்கு மிக்க வியப்பாக இருக்கின்றன; நம் முன்னோர்களான சங்கச் சான்றோர்களின் பெயர்களைக் கண்டு பெருமிதம் கொள்ள வேண்டிய நமது உள்ளம், எள்ளி நகையாடுமளவுக்கு இழிந்துவிட்ட தெனின் வேறு கூறுவது என்னை? இன்றுள்ள கல்வித்துறைத் தலைவர்களும் கல்வியாளர்களும் தமிழ்ச்சிறுவர்களைப் பிறர்க்கே யுழைத்து ஏழையாகும் பேதைகளாக்கும் நெறியில் தம்மை யறியாமலே கல்வி நெறியை வகுத்து வந்துள்ளனர். தமிழ் நாட்டுக்குரிய பண்பாடு, பொருளறிவு, சமுதாய வரலாற்றறிவு முதலிய நெறிகளில் தமிழ்ச்சிறுவர் உள்ளமும் உரையும் இயங்கு மாறு செய்யும் நாளே தமிழ்மக்களைத் தமிழ்நாட்டுக்கு உரிய தமிழ் மக்களாக்கும் நன்னாளாகும். அக்காலத்தே சங்க இலக்கியங்களின் இயற்கை அறிவு நலமும் பிறவும் பேரறிவும் பேரின்பமும் நல்கிப் பீடுபெறச் செய்யும் என்பது ஒருதலை. இவர்கள் மனத்தே "ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம்; ஒரு சொல் கேளீர்; சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற நன்புலவன் நல்லுரை இன்னும் ஏறி இடம்பெற வில்லை. இது நிற்க, இனி இச் சிறுவெண் காக்கை பொருளாகவரும் பாட்டுக்களைக் காண்போம். (160)

161. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
கருங்கோட்டுப் புன்னைத் தங்குந் துறை
வற்குப்
பயந்து நுத லழியச் சாஅய்
நயந்த நெஞ்சம் நோய்ப்பா லஃதே.

இஃது ஒருவழித் தணந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் ஆற்றளாய்ச் சொல்லியது.

ப. உரை: சிறுவெண்காக்கை .... தங்கும் என்றது வரைதற்கு வேண்டுவன முயலாது தன் மனேக்கண்ணே தங்குவான் எ. று.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறிய வெண்மை யான கழுத்தையுடைய நீர்க்காக்கை கரிய கொம்புகளேயுடைய புன்னேமரத்தின்கண் தங்கும் துறையினேயுடைய தலேவன்பொருட்டு நெற்றி பசப்பெய்தி ஒளிகெடுதலால் மெலிவுற்று அவனே விரும்பிய நெஞ்சம் வருந்தும் பான்மைத்தாயிற்று, காண், எ. று

கடற்கரைக் கண்ணதாகிய காக்கை என்ற சார்பிஞல் நீர்க் காக்கையாதல் பெறப்பட்டது. "பெருங்கடற்பரப்பின் இரும்புறம் தோயச், சிறுவெண்காக்கை பலவுடஞடும் துறை[1]" எனவும், "சிறுவெண் காக்கை செவ்வாய்ப் பெருந்தோடு, எறிதிரைத் திவலே யீர்ம்புறம் நனேப்ப, பனிபுலந் துறையும் பல்பூங் கானல்[2]" எனவும் பிறரும் கூறுதல் காண்க. புன்னேயின் கோடு கரிதாதல், "கருங்கோட்டுப் புன்னேக் குடக்குவாங்கு பெருஞ்சினே[3]" என்பதஞலும் அறிக. பசந்து எனற்பாலது எதுகையின்பங் குறித்துப் பயந்து என நின்றது.

பசந்தவழி இடையீடின்றி நுதல் ஒளிகெடுதலின், பயந்து நுத லழிய என்ருர். தலேமகள் பிரிவால் நுதல் ஒளிகெட்டது ஒருமருங்கு வருத்த, பிரிவாற்ருமையால் நெஞ்சம் மெலிந்து அவனே நினேந்து வருந்துவ தாயினமையின், நோய்பாலஃதே என்று கூறிஞள். பயந்து நுதலழிய என்றது பசலேபாய்தல். நோய்ப்பாலஃதே யென்றது துன்பத்துப் புலம்பல். விரைந்து தன்னே வரைந்துகோடற்கு முய லாது வைத்துத் தன் மனேக்கண்ணே தலேமகன் தங்கினன் என்று உள்ளுறுத்து உரைத்தலின் நயந்த நெஞ்சம் நோய்ப்பா லஃதே யென்று தன்னுறு விழுமத்தையே விதந்து கூறிஞள் எனக்கொள்க.

சிறுவெண்காக்கை தனக்கு வேண்டியது முயலாது புன்னேயின் கருங்கோட்டின்கண் தங்குவது போல, வரைதற்கு வேண்டுவன

1. நற். 231. 2. குறுந். 334. 3. நற். 167.

முயலாது தன் மனைக்கண்ணே தங்கினான் என்று உள்ளுறை கொள்க. இதுவே பழையவுரைகாரர்க்கும் கருத்து. (161)

162 பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீ ரிருங்கழி யிரைதேர்ந் துண்டு
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்குந்
துறைவன் சொல்லோ பிறவா யினவே.

இதுவுமது

ப. உரை: துறைவன் சொல்லோ பிறவாயின என்றது இன்ன நாளுள் வரைவல் என்ற சொற்கள் வேறாயின எ. று.

சிறுவெண்காக்கை .... சேக்கும் என்றது வரைவிற்கு வேண்டுவன முயலாது தன் கருமம் செய்து மனைக்கண்ணே தங்குவான் எ. று.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறுவெண் காக்கை நீந்துமளவு பெருகிய நீரையுடைய பெரிய கழியின்கண் இரையாகிய சிறு மீன்களை நாடி யுண்டு பூக்கள் மணம் கமழும் சோலையில் தங்கும் துறைவனுடைய சொற்களோ தமக்குரிய பான்மையின் வேறாயின எ. று.

வேறாதலாவது ''பிரியேன், பிரியின் தரியேன்'' என்று கூறிப் பின்பு பிரிந்து வரையாது ஒழுகுதல். சொல்லும் செயலும் ஒவ்வாமையின் பிறவாயின எனப்பட்டன. ஓகாரம் பிரிநிலை.

தான் வற்புறுத்தியவாறு விரைய வந்து இடையறா இன்பம் புணர்ப்பன் என்று கருதியிருந்தாட்கு அவன் பிரிவு நெஞ்சழிவு விளைத்தமையின், துறைவன் சொல்லோ பிறவாயின என்றாள்.

''பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை, நீத்து நீர் இருங்கழி யிரைதேர்ந் துண்டு, பூக்கமழ் பொதும்பிற் சேக்கும் துறைவனொடு[1]'' என்றார் பிறரும்.

---

1. குறுந். 313.

சிறுவெண்காக்கை கழிக்கண் சிறுமீனை யுண்டு பொதும்பரில் தங்கும் என்றது இயற்கைப் புணர்ச்சிக்கண் எம் நலனுகர்ந்து, வரைதற்கு வேண்டுவன முயலாது தன் பாட்டில் தன் மனைக் கண்ணே தங்கினுன் என்பது உள்ளுறை. துறைவன் சொல்லோ பிறவாயின என்றது பொய்யாக் கோடல். (162)

163. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழித் துவலை யொலியிற் றுஞ்சும்
துறைவன் றுறந்தெனத் துறந்தென்
இறையேர் முன்கை நீங்கிய வளையே.

இதுவுமது

ப. உரை: சிறுவெண்காக்கை ………… துஞ்சும் என்றது ஆண்டுத் தனக்கு இனியவாகக் கூறுவார் மாற்றம் கேட்டு முயற்சி யின்றித் தங்குவான் என்பதாம்.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறுவெண்காக்கை கரிய கழியின்கண் எழும் துவலையொலி கேட்டுக் கண்ணுறங்கும் துறையினையுடைய தலைவன் என்னைப் பிரிந்தானுக, என்னுடைய இறை பொருந்திய அழகிய முன்கையில் அணிந்த வளைகள் என்னைத் துறந்து நீங்கின எ. று.

துவலையொலி, அலைகள் கரையொடு பொருங்கால் நீர்த்திவலை உடைதலால் எழும் ஓசை. இவ்வொலி கேட்டுப் புள்ளும் மாவும் பிறவும் உறங்கும் என்றல் மரபு. ''யாமத்து உடைதிரை யொலியில் துஞ்சும் மலிகடற், சில்குடிப் பாக்கம்[1]'' எனப் பிறரும் கூறினர். இறை, சந்து. இறையோர் வளை, முன்கை வளை என இயையும். துறைவன் துறந்தானுக, என் முன்கை வளை நீங்கின எனினும் அமையும்.

துறைவன் பிரிவினல் நிகழ்ந்த வருத்தம் காரணமாகத் தன் உடம்பும் உயிரும் வாடியக் காலும், இவை என் உற்றன என்று

1. நற். 159.

கூறலல்லது தலைமகன் உள்வழிச் சென்று சேர்தல் அவளுக்கு இயல்பன்மையின், வளைமேலேற்றி, இறையோர் முன்கை நீங்கிய வளையே என்றாள். முன்கையிற் கிடந்து அழகு செய்த வளைதாமும் துறந்து நீங்கின எனவே, ''என்னோடு உடனிருந்து துணைமை நல்கும் மகளிர் பலரும் வேறுபட்டு நோக்குதலைச் சொல்லவும் வேண்டுமோ'' என்றாளாம். இஃது உடம்புநனி சுருங்கல்.

தலைமகன் தன்பால் பெருங்காதலன் என்பதனை நன்கறிந்தா ளாயினும், அவன் பிரிந்து சென்று விரைய வாராமைக்குக் காரணம் நினைந்து முடிவில் பிறர் கூறும் இனிய சொற்களைக் கேட்டு வரைவின்கண் முயறலையின்றி அமைந்தான் போலும் என எண்ணினு ளாகலின் அதனை சிறுவெண்காக்கையின் செயன் மேல் வைத்துக் கூறினாள். (163)

164 பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி மருங்கி னயிரை யாரும்
தண்ணந் துறைவன் றகுதி
நம்மோ டமையா தலர்பயந் தன்றே.

இது தலைமகனுக்குப் புறத்தொழுக்கம் உளதாகியவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: சிறுவெண் காக்கை இருங்கழி மருங்கின் அயிரை ஆரும் என்றது, பரத்தையருள்ளும் புல்லியாரை விரும்புவான் எ. று துறைவன் தகுதி நம்மோடு அமையாது அலர் பயந்தன்றே என்றது அவன் தகுதியுடைமை நமக்குத் தீங்கு செய்தலே யன்றித் தனக்கும் அலர் பயந்தது என்பதாம்.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறுவெண்காக்கை பெரிய கழிக்கண் இருந்து அயிரைமீன்களை உண்ணும் தண்ணிய துறைவனது தகுதி நம்மாட்டு அமைந்தொழியாது பரத்தையர் மாட்டும் சென்று அலர் பயப்பதாயிற்று, காண் எ. று.

இருங்கழி, கரிய கழியுமாம். "இருஞ்சேற் றகன் வயல்[1]" என்புழிப் போல, இருமை கருமை குறித்த தெனினுமாம். அயிரை, ஒருவகைமீன். இவற்றை இக்காலத்து அசரை என மருவி வழங்குவர். "அயிரைக் கொழுமீன் ஆர்கைய மரந்தொறும் குழா அலின்.......... வெண்குருகு ஒப்பும்[2]" எனப் பிறரும் கூறுவர். தகுதி, குலமகளிரையும், பரத்தை மகளிரையும் சீர் தூக்கிக் குல மகளிரே மகப்பயந்து பயன்படும் மாண்புடைய ராதலே உணர்ந் தொழுகுதல்; ஈண்டு அஃது எதிர்மறைக் குறிப்பு மொழியாய் நின்றது.

தன் புறத்தொழுக்கத்தால் தன்னை இன்றியமைமையேனுகிய எனக்கு வருத்தம் செய்வது, அவற்குத் தகுதியாய்த் தோன்றினும், பிறர்க்கும் அது நிகழ ஒழுகுகின்ருன் என்றற்கு நம்மோடு அமையாது என்றும், அவ்வொழுக்கத்தால் ஊரெங்கும் அலராயிற் றென்பாள் அலர் பயந்தன்றே என்றும் கூறினுள். பரத்தையர் பாலும் ஒன்றியமையாது ஒழுகுதலே உள்ளுறையாற் கூறுகின்ருள். இது புறஞ்சொல் மாணுக்கிளவி. இனி, மனத்தற்குரிய ஆடவ ரின்மையின் பரத்தைமையும் பெண்மையால் பிறர் துணையின்றி வாழாத மென்மையுமுடையராகிய பரத்தையர் மனைக்குச் சென்று தங்கி அவர் வேண்டுவன உதவி யொழுகுவது தலைமகனது தலைமைக்குத் தகுதி எனத் தோழி முதலாயினேர் கூறலின், துறைவன் தகுதி என்றும், அத்தகுதி கழிபேரருளாய்ப் பலர்பாலும் பரந்து பட்டது என்பாள் நம்மோடு அமையாது என்றும், அதனுல் பரத்யைர் சேரிக்கண் எழுந்த அலர் ஊரெங்கும் சூழ்ந்து கொண்ட தென்பாள் அலர்பயந்தன்றே என்றும் கூறினுள் என்று உரைத்தலு மொன்று.

பெரிய கழியிடத்து உறையும் வெண்காக்கை சிறியவாகிய அயிரைமீனை உண்ணும் பெருமனைக்கண் இருந்து நல்லறம் புரியும் தகவுடைய தலைமகன் என்றதனுல், சிற்றினமாகிய பரத்தையரைக் கூடி யொழுகுதல் கூடாதென உள்ளுறுத்தவாறு.

---

1. முருகு. 72. 2. பதிற். 29.

இருங்கரை மருங்கின் என்ற பாடத்தால் பொருட்சிறப் பின்மையின்' இருங்கழி மருங்கின் என்ற பாடமே சிறந்தமை யுணர்க. (164)

165 பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
அறுகழிச் சிறுமீ ஞர மாந்தும்
துறைவன் சொல்லிய சொல்லென்
இறையே ரெல்வளை கொண்டுநின் றதுவே.

இதுவுமது

ப. உரை: துறைவன் சொல்லிய சொல் என் இறையேர் எல்வளை கொண்டுநின்றதுவே என்றது வளையைக் கொண்டு நின்றது இப்புறத்தொழுக்கம் அன்று; முற்காலத்துத் தெளிவிப்பான் சூளுற்ற சொல் எ. று.

உரை: பெரிய கடற்கரைக்கண்ணதாகிய சிறுவெண்காக்கை நீர் அற்ற கழிக்கண் வாழும் சிறுமீன்களை நிரம்ப உண்ணும் துறைவன் முன்னர் நம்மைத் தெளிவிப்பான் சூளுற்றுச் சொல்லிய சொல் இறை பொருந்திய அழகு விளங்கும் வளையைக் கவர்ந்து கொண்டது எ. று.

எனவே, வளை நெகிழ்தற்கு அவன் புறத்தொழுக்கம் காரண மன்று என்றவாறும். இது கூற்றெச்சம். கூ.ற்று வகையால் புறத்தொழுக்கம் இன்மை கூறப்படினும், கருத்து வகையான் அதன் உண்மை உணர்ந்து கொள்க. சொல்லிய சொல் என்ற தனல் சொல் நிகழ்ச்சிக்குரிய காலமும் ஏதுவும் பெய்துரைக்கப் பட்டன. கொண்டு நின்றது என்பது ஒருசொல் நீர்மைத்தாய்க் கொண்டது என்னும் பொருட்டு. சூளுற்ற சொல்லாவது, "நிற்றுறந் தமைகுவ ஞயின் எற்றுறந்து, இரவலர் வாரா வைகல், பலவாகுக யான் செலவுறு தகவே[1]" என்ருற் போலும் தெளிவாகப்படுத்திய சொல் என அறிக. வளை நெகிழ்ந்தமையைச் சொல் கவர்ந்து கொண்டது என்றது, சொல் பொய்த்தவுடன் வளை கழன்ருேடினமையால் என்க.

1. குறுந். 137.

அவன் முன்பு தெளித்த சொல் என் நெஞ்சிற் கிடத்தலின், அவன்பாற் புறத்தொழுக்கம் தோன்றியதும் அது பொய்த்தமை யுணர்ந்து அவற்கு வரும் ஏதப்பாட்டிற்கு அஞ்சினேன் என்பாள், சொல்லிய சொல் என் இறையோர் எல்வளை கொண்டு நின்றதுவே என்றாள். இவ்வாறு, பொய்ச்சூள் புரிந்தொழுகுதலைப் புறத்தொழுக்கத்துப் பரத்தையர் மாட்டும் செய்கின்றான் என்பது தோன்ற உள்ளுறையும் கூறுகின்றாள்.

சிறுவெண்காக்கை நீர் குறைந்த கழிக்கண் உள்ள சிறுமீனை அருந்தும் துறைவன் என்றதனால், நீர்மை குன்றிய பரத்தையர் சேரியுள்ளும் பொய்ச்சூள் புரிந்து புல்லியாரை நயந்து ஒழுகுகின்றான் என்றாளாம். (165)

166. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
வரிவெண் டாலி வலைசெத்து வெரூஉம்
மெல்லம் புலம்பற் றேறி
நல்ல வாயின நல்லோள் கண்ணே.

இது வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் பசப்பிற்கு வருந்திய தோழி அவனை இயற்பழித்துக் கூறியது.

ப. உரை: நல்ல வாயின நல்லோள் கண் என்றது கண் பசந்தன எ. று.

சிறுவெண்காக்கை திரையால் கரையில் ஏற்றப்பட்ட பலகறைகளை வலைச்சுற்றிற் கோத்த பலகறையென வெரூஉம் என்றது நாம் வரைதல் வேண்டிக் கடாவிய சொற்களைத் தனக்கு வருத்தம் செய்வனவாகக் கொண்டு வெருவுகின்றான் என்பதாம்.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறுவெண் காக்கை வரி பொருந்திய வெள்ளிய பலகறைகளை வலை எனக் கருதி அஞ்சும் மெல்லிய கடற்கரையினையுடைய தலைமகன் சொற்களைத்

தெளிந்ததனுல், என் தலைமகளின் கண்கள் பசந்து நலமிழந்தன எ. று.

தாலி யென்றது கரையிடை எறியப்பட்ட பலகறைகளை. அவற்றை வலைச்சுற்றிற் கோத்தனவாம் எனக் கருதி யஞ்சுதல் பற்றி வலை செத்து வெரூஉம் என்ருர். மெல்லம் புலம்பன் ''மெல்லம் புலம்பன் வந்தமாறே[1]'' என்றது காண்க. நல்ல வாயின என்றது எதிர்மறைக் குறிப்புமொழி. நல்லோள் கண்கள் பசந்து நலமிழந்தன என்னின் விளையும் சொல்முரணை விலக்குதற்கு நல்லவாயின என்ருர். இனி, கண்கள் பசந்தன என்னுது குறிப்பு மொழியாற் கூறியது. புலம்பன் சொல் தேறியிருக்கும் நன்மை யுடையாட்குப் பிறிது படக்கூறல் நன்றன்று என்றற்கும், நல்லார்க்கு நன்மை விளைத்தலின்றிப் பிறிது செய்கின்ருன் எனத் தலைமகனை இயற்பழிக்கும் தன் கருத்து முடித்தற்கும் என்க.

தான் தெளித்த சொல்லைத் தேறி யிருந்தார்பால் தவறின்ருக, தலைமகன் அதனைத் தேருது ஒழுகுகின்ருன் எனப் பழித்தற்குக் காரணம் உள்ளுறையால் உரைக்கின்றமையின், மெல்லம் புலம் பனைத் தேறி நல்லவாயின நல்லோள் கண்ணே என்ருள்.

சிறுவெண்காக்கை வரிவெண்டாலிகளை வலைச்சுற்றிற் கோத்த பலகறை யென வெரூஉம் என்றதனுல், நாம் வரைவுகடாவிக் கூறிய சொற்களைத் தனக்கு வருத்தம் சூழ்ந்தனவாகக் கருதி அஞ்சுகின்ருன் என உள்ளுறை கொள்க. (166)

167. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி யினக்கெடி ருருந் துறைவன்
நல்குவன் போலக் கூறி
நல்கா னுயினும் தொல்கே ளன்னே.

இது பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் விட வாயிலாய் வந்தார்க்கு அவன் கொடுமை கூறித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் சொல்லியது.

---

1. ஐங். 120.

ப. உரை: தொல்கேளன் என்றது நமக்குப் பண்டு கேளாகிய தன்மையினையுடையான் எ. று.

சிறுவெண்காக்கை .. .. ஆரும் துறைவன் என்றது, பரத்தையர் பலரையும் தனக்கு வரும் வருத்தம் அறியாது நுகர்வான் என்பதாம்.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறுவெண் காக்கை இருங்கழியிடத்து வாழும் இனமாகிய கெடிற்று மீன்களை யுண்ணும் துறைவன் நமக்குத் தலையளி செய்வதாகக் கூறிப் பின் அது செய்யாது ஒழிந்தானாயினும், அவன் நமக்குப் பண்டே கேளாகிய தன்மையுடையன் என அறிக எ. று.

இனக்கெடிறு, கெடிற்றுமீன் கூட்டம். கெடிற்றுமீனை இக் காலத்தார் கெளுத்தி என வழங்குவர். கேளன்னே என்றது விரிக்கும் வழி விரித்தல்.

நல்குவன் போலக் கூறி நல்கா னாயினன் என்றது தோழி கூற்றைக் கொண்டு கூறியது. அதன் கருத்து, தலைமகன் சொல்லும் செயலும் வேறுபட்டனன் என இயற்பழித்தவாறு. ''வினை வேறு செயல் வேறுபட்டார் தொடர்பு கனவினும்[1]'' இன்னாதாகலின், அது விடற்பாற்று என்றாள் என உட்கொண்டு, தலைமகள், அவன் அத்தன்மையனாயினும் அவனிடை நமக்கு உள தாகிய நட்புப் பிறவிதோறும் தொடர்ந்து வருவ தாகலின், அவன் நம்மை மறப்பினும் நாம் மறக்குவே மல்லேம் என்பாள் தொல்கேளன்னே என்றாள். ''அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின் வழிவந்த கேண்மை யவர்[2]'' என்றதனால், கேண்மையில் தொன்மையுடையார் பிரியாமையும், ''இம்மை மாறி மறுமை யாயினும், நீ யாகியர் எம் கணவனை, யாமாகியர் நின் நெஞ்சு நேர்பவளே[3]'' எனச் சான்றோர் கூறுமாற்றால் அப்பெற்றியார் பிரியா வேட்கையர் என்பதும் அறிக. தான் இயற்பட மொழிதற்

1. குறள் 819. 2: ௸. 801. 3. குறுந். .49.

குரிய காரணத்தை உள்ளுறுத்து உரைத்தமையின், தோல் கேளன்னே என வாளாது கூறினள்.

பெருங்கடற் கரையதாகிய வெண்காக்கை ஆண்டுள்ள நன் மீன்களை உண்டற்கு அமையினும் கழிக்கண் வாழும் கெடிற்று மீனை உண்ணும் துறைவனுதலால், தலைமகன் தன் தலைமைக் கேற்ப நமக்கே தலையளி செய்து ஒழுகற்பால னுயினும் சேரிக்கண் வாழும் சிறப்பில்லாத பரத்தையரை நுகர்ந்து ஒழுகுகின்ருன் எ. று. (167)

168. பெருங்கடற் கரையது சிறுவெண்காக்கை
துறைபடி யம்பி யகமணை யீனும்
தண்ணந் துறைவன் நல்கின்
ஒண்ணுத லரிவை பாலா ரும்மே

இது நொதுமலர் வரைவு வேண்டி விடுத்தமை அறிந்த தலைமகள் ஆற்ருளாய்ப் பசியட நிற்புழி இதற்குக் காரணம் என்னென்று செவிலி வினவத் தோழி அறத்தொடு நின்றது.

ப. உரை: துறைபடி அம்பி அகம் அணை ஈனும் என்றது யாவர்க்கும் எவ்விடத்தும் தீங்கு வாராத துறைவன் என அவன் சிறப்புக் கூறியவாறு.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறுவெண்காக்கை துறையின்கண் தங்கும் தோணியினகத்தே கூடு அமைத்து முட்டையிட்டு வாழும் குளிர்ந்த துறைவன் வரைந்து கொண்டு தன் தண்ணளியைச் செய்வானுயின், ஒள்ளிய நெற்றியையுடைய அரிவையாவாள் பாலுண்டு பழங்கண் தீர்வாள் எ. று.

அம்பி, தோணி; படகு என்றும் கூறுப. இது துறைக்கண் நீர் தோய நிற்றலின், துறைபடி அம்பி எனப்பட்டது. தண்ணந் துறைவன் என்றது விரிக்கும் வழி விரித்தல். அணை, கூடு; காக்கையின் கூடு மெல்லிய பஞ்சணை போறலின், அணை எனப்

பட்டது. அம்பியகம் என்புழி எச்சவும்மையை விரித்து, மரத்தினும், புதலினும், பாறைமருங்கினுமே யன்றித் துறைபடியம்பியின் அகத்தினும் கூடமைத்து வாழும் இயல்பிற் றுதலின், துறைபடி யம்பியகத்தும் அணை ஈனும் என்றார் என்க; ''கணங்கொள் உமணர் உயங்குவயின் ஒழித்த, பண்ணழி பழம்பார் வெண்குரு கீனும் தண்ணந் துறைவன்[1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க.

இனி, அகம் மணை யீனும் என்று கொண்டு துறைபடி அம்பியின் அகத்தே யுள்ள மரக்கட்டையின் கண்முட்டையிட்டு வாழும் என்றும், ஊன்தடி போலும் குஞ்சுபொரித்து வாழும் என்றும் கூறுவர். அகமனை என்று கொண்டு கூடுஎன்றே உரைத் தலுமாம். நல்கின் என்றது, இதுகாறும் அவன் நல்காமை உணர நின்றது. தண்ணளியாகிய செயப்படுபொருள் வருவிக்கப்படடது.

நொதுமலர் வரைவு வேண்டி விடுத்தமை கண்டு ஆற்றுளாகிய தலைமகள், இனியான் ''உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்'' எனக் கொண்டு, உண்டி மறுத்து உடம்பு நனி சுருங்கி நுதல்பசந்து வேறுபட்டுத்தோன்றவே, செவிலி அதனை நோக்கி மருண்டு வினவினளாக, அறத்தொடுநிற்றலையன்றி வேறே செய்யத்தகுவதொன்றும் இன்மையான், தண்ணந்துறைவன் நல்கின் பாலாரும்மே என்றாள். ஒண்ணுதலரிவை என்றது குறிப்பு மொழி; தலைமகள் பசியான் மெலிந்து நுதலொளி இழந்து நிற்கும் நிலை உணர நின்றது. ''அன்னாய் வாழிவேண்டன்னை நின்மகள் பாலும்உண்ணாள் பழங்கண் கொண்டு நனிபசந் தனள் என வினவுதி[2]'' எனப் பிறாண்டும் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்குமாறு காண்க.

துறைபடி யம்பி என்றும், தண்ணந் துறைவன் என்றும் துறையினை மிகுத்துக் கூறியதனால், புனலாட்டின் கண் தலைவனைத் தலைப்பெய்து கூடினமையும், நல்கின் என்றதனால் தலைவன் கள வொழுக்கமே விரும்பி ஒழுகுகின்றமையும் கூறியவாறும். ஆகவே,

---

1. நற். 138.   2. அகம். 48.

இஃது ஏதீடும் உண்மைசெப்பலும் உடன்புணர்ந்த அறத்தொடு நிலைப்பகுதியாயிற்று. பாலாரும்மே என்றது பசியட நிற்றல்.

''நாற்றமுந் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்து, ''முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப் புரைதீர்கிளவி தாயிடைப் புகுப்பினும்'' என்புழி இதனைக் காட்டி, "இது நொதுமலர் வரைவுழி, பசியட நின்றுழி, இதற்குக்காரணம் என்னென்ற செவிலிக்குத்தோழி கூறியது'' என்று நச்சினார்க்கினியர் கூறுவர்.

பாலார்கம்மே என்பது பாடமாயின், அறத்தொடு நிற்கும் வகையால் தலைமகள் தோழிக்குக் கூறுவாளாய், அரிவையே, துறைவன் நல்கின்யாம் பால் ஆர்தல் கூடும் என்றதாக உரைக்க. (168)

169. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
பொன்னிணர் ஞாழன் முனையிற் பொதியவிழ்
புன்னையம் பூஞ்சினைச் சேக்குந் துறைவன்
நெஞ்சத் துண்மை யறிந்தும்
என்செயப் பசக்குந் தோழியென் கண்ணே.

இது, காதற்பரத்தையை விட்டு மற்றொருத்தியுடன் ஒழுகா நின்ற தலைமகன் வாயில் வேண்டி விடுத்துழி வாயில் நேர்தல் வேண்டி நின்கண் பசந்தன காண் என்று முகம்புகும் தோழிக்குத் தலைமகள் கூறியது.

ப. உரை: சிறுவெண்காக்கை ஞாழலை வெறுப்பின் புன்னைச் சினையிற் சேக்கும் என்றது, பரத்தையர் மனையில் ஒன்று வெறுப்பின் ஒன்றின்கண் தங்குதலை யுடையான் என்பதாம்.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறுவெண் காக்கை பொன்போலும் பூங்கொத்துக்களை யுடைய ஞாழலை

1. தொல். பொ. 114.

வெறுப்பின், அரும்பவிழும் புன்னையின் பெரிய கிளையின்கண் தங்கும் துறைவன் என் நெஞ்சத்து உளனுதலை யறிந்து வைத்தும், தோழி என் கண்கள் யாது செய்தற்பொருட்டுப் பசந்தனவோ, அறியேன், எ. று.

எனவே, அவன் நெஞ்சத்து உளனுதலை அறிந்தும், அவன் என்பால் அன்பிலன் போல ஒழுகுதலை அறிந்து பசந்தனவாமே யன்றி, அவற்கு வாயில் நேர்தல் வேண்டி அது செய்தன வல்ல, காண் என்றவாறும். உண்மை, உளனும் தன்மை. ஞாழலின் இணர் பொன்னிறமுடைமை, "பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும், கானலம் பெருந்துறை[1]" என்பதனுலும் அறிக. அரும்பு, பொதி போறலின், பொதி எனப்பட்டது.

உள்ளுறையால், தலைமகன் நெஞ்சத்துத் தன்பால் அன்பின்மை கூறுதலின், தான் அவனை மறவா அன்புடையளாதலை, நெஞ்சத்து உண்மை அறிந்தும் என்றும், அறிய வேண்டுவ தொன்றனை அறிந்த பின்னரும், ஒருவர் அறியாதார் செய்வதனையே செய்யின், அஃது அறியப்பட்டதன்கண் நிகழ்த்தும் ஆராய்ச்சி யாகு மாகலின், என்செயப் பசக்கும் என்றும் கூறினுள். அவ்வாராய்ச்சியால், அவனது புறத்தொழுக்கமே தோன்றி மீண்டும் வருத்தம் பயந் தமையின் பசக்கும் என்ருள். அறிந்தும் அறியாதது போல் பசந்தது என்றமையின், உம்மை எதிர்மறை யெனவுணர்க. இஃது ஒருவாற்ருன் வேற்றுமைக்கிளவி யாயினும், அலமரல் பெருகிய காமத்து மிகுதிக்கண் வாயில் மறுத்தலின் அமையும் என்க.

காக்கை ஞாழல்மரத்தை வெறுப்பின், புன்னையின் சினைக்கட் சென்று தங்கும் என்றதனுல், அவன் பரத்தையர் மனைக்கண் ஒன்றை வெறுப்பின் மற்ருென்றின்கண் தங்கி யொழுகுவான் என உள்ளுறை கொள்க. (169)

---

1. அகம். 70.

170 பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி நெய்தல் சிதைக்கும் துறைவன்
நல்ல னென்றி யாயிற்
பல்லித ழுண்கண் பசத்தன்மற் றெவனோ

இது, தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகியவழி வேறுபட்ட தலைமகள், ''அவற்கு அவ்வாறு நிகழ்ச்சியில்லை; நம்மேல் அன்புடையன்,'' என்ற தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: சிறுவெண்காக்கை இருங்கழி நெய்தல் சிதைக்கும் என்றது தான் பற்றிய பரத்தையருடைய நலம் சிதைப்பான் என்பதாம்.

உரை: பெரிய கடற்கரைக் கண்ணதாகிய சிறுவெண்காக்கை, கரிய கழியிடத்து மலர்ந்த நெய்தலைச் சிதைக்கும் துறையினையுடைய தலைமகனை நல்லன் என்று கூறுகின்றனை; நல்லனாயின், பலவாகிய இதழ்களையுடைய பூப்போலும் என்னுடைய உண்கண் பசலை பாய்தல் யாது கருதியோ, கூறுக எ. று.

இருங்கழி என்புழி இருமை, கருமை; ''இருஞ்சேற்று அள்ளல்[1]'' என்றாற் போல. நன்மை, புறத்தொழுக்கம் இன்மையும், தலைமகள் பால் அன்புடைமையுமாம். என்றி, இகரவீற்று முன்னிலை முற்றுவினை. நல்லன் என்றது தோழி கூற்றினைக் கொண்டு கூறியது. ஆயின் என்றது, நல்ல னாகாமை தெளிவு என்பதுபட நின்றது. பல்லிதழ், அடையொடு புணர்ந்த சினையிற் கூறும் முதலறி கிளவியாய்த் தாமரை குவளை முதலியவற்றிற்கு ஆயிற்று. ''பல்லிதழ் மழைக்கட் பாலகன்[2]'' என்புழி, பல்லிதழென்றார், பல இதழினையுடைய பூவை, ஆகுபெயரான்'' என்பர் அதன் உரைகாரர். பல்லிதழ் என்றவிடத்துப் பல என்பது, ''தொடர லிறுதி தம்முன் தாம்வரின், லகரம் றகரவொற் றாதலும் உரித்தே[3]'' என்புழி லகரம் றகரமாம் என்னாது ''றகர ஒற்றாகும்'' என்றதனால்,

1. அகம். 290. 2. பு. வெ. மாலை. 269.
3. தொல். எழுத்து. 214.

தம்முன் பிற வந்த வி'டத்தும் சிறுபான்மை இவ்விதி எய்தும் எனக்கொண்டு பல்லிதழ் என நின்று, ''குரிய தன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும், அறியத் தோன்றிய நெறியியல் என்ப[1]'' என்ற விடத்து ''நெறியியல்'' என்ற இலேசினுல் அமைந்தது.

''பல்லித முண்கண் அழப் பிரிந்தோரே[2]'' என்றும், ''பல்லித முண்கணும் பரந்தவாற் பனியே[3]'' என்றும், ''பல்லித முண்கண்ணும் தோளும் புகழ்பாட[4]'' என்றும் வருமிடங்களிலும் இதுவே கூறிக் கொள்க.

உள்ளுறையால், புறத்தொழுக்கத்தும் மகளிர் நலம் சிதைத் தலேயே செய்கையாக வுடையானே நல்லன் என்றல் ஆகா தென்பாள், நல்லன் என்றி எனத் தோழி கூற்றைக் கொண்டு கூறினுள். நல்லன் என்பதே துணிபாயின் அந்நன்மைப்பயனே எய்துதற்குரிய என் கண்கள் இன்ப ஒளி பெருது பசந்தமையின், நின் துணிபு பொருந்தாது என்று மறுப்பாள், ஆயின் பல்லித முண்கண் பசத்தல் மற்று எவனே என்று கூறினுள். இது பசலே பாய்தல்.

காக்கை பெரிய கழிக்கண் மலர்ந்த நெய்தலேச் சிதைக்கும் என்றதனுல், புறத்தே தான் பற்றி ஒழுகும் பரத்தையரிடத்தும் இப்பெற்றியே ஒழுகி அவர்தம் நலத்தைச் சிதைப்பான் என உள்ளுறை காண்க, காக்கையும் நெய்தலும் நெய்தனிலத்து அவளறிவன வாகலின், இவ்வுள்ளுறை ''அவளறிகிளவி[5]'' யாய்த் துனியுறுகிளவி தோற்றி நின்றது. ''இனிதுறு கிளவியும் துனியுறுகிளவியும், உவம மருங்கில் தோன்றும் என்ப[6]''.

---

1. தொல். எழுத்து. 160. 2. ஐங். 334. 3. நற். 155.
4. கலி. 112. 5. தொல். பொ. 301. 6. ஷெ. ஷெ. 303.

8

தொண்டிப்பத்து

இப்பத்தில் வரும் பாட்டுக்கள் தோறும் தொண்டி என்னும் நகரமே சிறப்பித்துக் கூறப்படுவது பற்றி இப்பகுதி தொண்டிப் பத்து என்ற பெயர் பெறுவதாயிற்று.

சங்க காலத்தில் மேலைக்கடற்கரைப்பகுதி சேரநாடு என விளங்கிற்று; சேரர் தமிழர்களாதலின், அங்கே செந்தமிழே நிலவிற்று. அந்நாளில், பாண்டிநாட்டுக்கு மதுரையும், சோழ நாட்டுக்கு உறையூரும், தொண்டை நாட்டுக்குக் காஞ்சியும் போலச் சேரநாட்டுக்கு வஞ்சி தலைநகரமாய் விளங்கிற்று. கொற்கை பாண்டிநாட்டுக்கும், காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டுக்கும், பவத்திரி தொண்டை நாட்டுக்கும், கடற்கரை நகரமாய் இருந்தது போலச் சேரநாட்டுக்கு முசிறியும் கருவூரும் தொண்டியும் கடற்கரை நகரங்களாகச் சிறந்து நின்றன. மேலும் சேரநாடு, குட்டநாடு பொறைநாடு குடநாடு என்று பல உண்ணாடுகளைக் கொண்டிருந்தது. அவற்றுள், தொடக்கத்தில் குடநாடு குட்டநாடு என்ற இருபிரிவுகளே இருந்தன. குட்ட நாட்டின் வடகீழ்ப்பகுதி பூழிநாடாகப் பிரிந்த போது குடநாடு, பாயல்நாடு, பொறைநாடு, ஏறைநாடு எனப் பலநாடுகளாகப்

பிரிந்தது. [1]சேரநாட்டின் வடபகுதி குடநாடு எனவும், தென்பகுதி குட்டநாடு எனவும் விளங்கினமையின், குடநாட்டுக்குத் தொண்டி நகரமும் குட்டநாட்டுக்கு வஞ்சியும் சிறப்புற்றன. பின்னர், குட நாட்டுப் பிரிவுகளுள் ஒன்ருன பொறை நாட்டுக்கும் தொண்டியே தலைநகரமாயிற்று. இஃது இப்போது குறும்பொறை நாட்டுப் பகுதியில் ஒரு சிற்றூராய்க் காட்சியளிக்கின்றது. சிலர், இப்போது கடலுண்டி என வழங்கும் பகுதியே பண்டைத் தொண்டியாகலாம் எனக் கருதுகின்றனர். இதன் பழம் பெயர் மண்ணூர் என்று அங்குள்ள கல்வெட்டு[2] கூறுவதை அவர் அறியாமையாலும், இவ்வூரையும் அவர்கள் நேரிற் சென்று காணுமையாலும் தொண்டி எனத் தவருகக் கூறிவிட்டனர் என அறிதல் வேண்டும்.

தொண்டிநகர் கடற்கரையில் இருந்தமையின், மேலைநாட்டு யவனர்கட்கு[3] அது நன்கு தெரிந்திருந்தது. பெரிப்புளுஸ் ஆசிரியர்[4] பிளினி, தாலமி முதலிய யவன அறிஞர் குறிப்புகளில் இத் தொண்டி நகரம் குறிக்கப்படுகிறது. கிழக்கில் மலையும் வடக்கிலும் தெற்கிலும் நன்செய் வயல்களும் மேற்கில் கடற்கரை கானலும் கொண்டு விளங்கும் இத்தொண்டி இன்றும் தொன்மை சிறப்மைப் புலப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. மலைப்பகுதி யின் குறிஞ்சிவளமும் அண்மையில் மருத வளமும் நெய்தல் நலமும் கொண்டமை பற்றி, இந்நகர வேந்தனைப் பண்டைச் சான்ருேர், "நாடன் என்கோ ஊரன் என்கோ, பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ, யாங்ஙனம் மொழிகோ[5]" என்று சிறப்பித்துள்ளனர். இதன் இயல்பினை, "குலையிறைஞ்சிய கோட்டாழை, அகன்வயல் மலைவேலி, நிலவுமணல் வியன் கானல், தெண்கழிமிசைச் சுடர்ப் பூவின், தண்தொண்டி[6]" என்று குறுங்கோழியூர்கிழார் உரைக்கும் குறிப்பு இன்றும் மெய்ம்மையுற்று விளங்குகிறது.

---

1. பாயல் நாடு வயநாடு எனவும், ஏறைநாடு ஏர்நாடு எனவும், பொறை நாட்டின் பகுதியான குறும்பொறைநாடு, குறும்பர்நாடு எனவும் இப்போது மருவி வழங்குகின்றன. இவற்றின் விரிந்த குறிப்புக்சள் இந்நூல் உரைகாரரது பண்டைநாளைச் சேரர் என்ற நூலில் விளக்கப்பட்டுள்ளன.
2. S. I. I. Vol. V. No. 782. 3. Ionians.
4. Author of the Periplus of the Erythraen Sea.
5. புறம். 49. 6. ஷை. 17.

பண்டையில் குடக்கோ வேந்தர்க்கும், இடையில் இரும்பொறை வழியினர்க்கும், பின்னர் கோதை மன்னர்க்கும் உரிமையுற்றிருந்த தொண்டி நகரம், இவர்கட்குப் பின்னர்ப் போந்த கடம்பர், பங்களர் முதலியோர்களால் வளமிழந்து மெலிவுற்றது. வடவாரியரும் மேலைநாட்டுப் பல்வேறு யவனரும் சோனகரும் பிறரும் வந்து கலந்து மேலைக்கடற்கரையில் வாழ்ந்த தமிழினத்தைக் கேரளராகத் திரித்து, அவரது தாய்மொழியாகிய தமிழையும் கேரளமொழியாகத் திரித்தனர். இத்திரிபின் பயனாகப் பண்டைச் சேரமன்னர்க் குரிய தொண்டியும், வஞ்சியும், முசிறியும், கருவூரும், நறவூரும், மாந்தையும், மரந்தையும் சிற்றூர்களாய்ச் சிறப்பிழந்து போயின. கடுகு சிறுத்தாலும் அதன் காரம் குன்றுவதில்லை என்பது போல இவ்வூர்கள் பண்டைப் பெருமை குன்றிலும் இயற்கை அழகு இன்றும் குன்றாமல் இருப்பது இன்பம் தருகிறது. இதன் பண்டைய சிறப்பின் சிற்சில பகுதிகளை இனிவரும் பாட்டுக்களிற் காணலாம்.

இப்பத்தின்கண் வருகின்ற பாட்டுக்கள் பத்தும் அந்தாதித் தொடையில் அமைந்தவை. இந்நூல் தொகுக்கப் பெற்றகாலத்தில், இவ்வந்தாதி பத்தும் தமிழகத்தில் சிறப்பாக நிலவினமையின், இவற்றைச் சான்றோர் ஒருசேர மேற்கொண்டு தொகுத்துவிட்டனர் என்று கருதலாம். ஆசிரியர் அம்மூவனார் பாடிய ஏனைப் பாட்டுக்களைப் போலவே அவராற் செய்யப்பெற்ற இத் தொண்டி நகரந்தாதியும் அமைந்திருத்தலின், இத்தொகை நூற்கண்கோத்துக் கொண்டது பொருத்தமாகவே உளது. சேர வேந்தர்க்கே யுரிய பதிற்றுப்பத்து என்னும் தொகைநூலுள், சேரமான் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய அந்தாதி சேர்க்கப்பட்டிருப்பதும் ஈண்டு நினைவுகூரத் தக்கது.

171\. திரையிமிழ் இன்னிசை யளைஇ யயலது
முழவிமி ழின்னிசை மறுகுதொ றிசைக்கும்
தொண்டி யன்ன பணைத்தோள்
ஒண்டொடி யரிவையென் நெஞ்சுகொண்
டோளே.

இஃது இயற்கைப்புணர்ச்சி நீங்கும் தலைமகன் ஆயத்தோடு செல்லும் தலைமகளைக் கண்டு சொல்லியது.

ப. உரை: திரையின் ஒலியொடு கலந்து முழவு ஒலிக்கும் என்றது, உடன்செல்கின்ற ஆயத்தார் மகிழ்ச்சியரவமும், உழை யராய் எதிர்வருகின்றார் மகிழ்ச்சியரவமும் கூறியவாறு.

உரை: கடற்றிரைகள் முழங்கும் இனிய ஓசையொடு கலந்து அயலதாகிய முழவு முழங்கும் இனிய ஓசை தெருக்கடோறும் ஒலிக்கும் தொண்டி யென்னும் நகரத்தையொக்கும் பருத்த தோள் களையும், ஒள்ளிய தொடியினையுமுடைய அரிவையாகிய இவள், உரனுடைய என் நெஞ்சினைக் கவர்ந்துகொண்டா ளாகலின், இனி இவளை மீளத்தலைப்பெய்து அதனைப் பெறுவது அரிதுபோலும், எ. று.

இனி முதலாயின குறிப்பெச்சம். வெறுப்பும் இடையறவு மின்றி, எஞ்ஞான்றும் இசைத்தலின், இன்னிசை எனப்பட்டன. கடற்கரைநகர மாதலின், அயலது முழவிமி ழின்னிசை மறுகு என்றார். தொண்டி அன்ன அரிவை என்றும், பணைத்தோள் என்றும் இயைதலின் அடுத்துவர உவமம் அன்று. என்நெஞ்சு என எடுத்துக் கூறினமை யான், உரனுடைமை வருவிக்கப்பட்டது; திரையொலியும் முழவொலியும் கலந்து தெருக்கடோறும் இசைக்கும் என்றது தொண்டிநகரின் தனிச்சிறப்பினை யுணர்த்திற்று ''வளை கடல் முழவின் தொண்டி[1]'' எனப் பிற சான்றோரும் கூறுவது காண்க. இடையறவின்றி ஒலிக்கும் கடலொலியும் காலமறிந்து இசைக்கும் முழவொலியும் தம்மிற் கலந்து மறுகுதொறும் இசைக்கும் என்றது, இடையறவின்றிப் பிறவிதோறும் தொடர்ந்து வரும் கேண்மையொடு இன்று இயற்கைப்புணர்ச்சியால் அமைந்த கேண்மை கலந்து என் நெஞ்சகம் புகுந்து நினைக்குந்தோறும் இவளது நினைவு இன்பம் செய்கிறதென்பான், நெஞ்சுகொண்டேளே என்றும், புணர்ச்சிக்கு இடமும் பற்றுக்கோடு மாகலின், தோளையும்

1. பதிற். 88.

தொடியையும் சிறப்பித்துப் பணைத்தோள் ஓண்டொடி அரிவை என்றும் கூறினான்.

ஆயவெள்ளம் புடைசூழ்ந்துவர, உழையர் கூட்டம் எதிர் கொள்வான் மிக்குவர, இடையே தாரகை நடுவண் தண்மதி போலச் செல்வாளைத் தலைப்பெய்த அருமை தோன்றத் தொண்டி யன்ன என்றும், நிறை, பொறை, தேற்றம், சால்பு முதலியவற்றை இழந்து பிணிப்புண்ட யானை போலச் செயலற்று நிற்குமாறு தோன்ற, நெஞ்சு கொண்டோளே என்றும் கூறினான். ''கதுப் பயல் விளங்கும் சிறுநுதல், புதுக்கோள் யானையிற் பிணித்தற்றால் எம்மே[1]'' என்றார் பிறரும்.

இது, ''மெய்தொட்டுப் பயிறல்[2]'' என்ற சூத்திரத்து, ''பிரிந்த வழிக் கலங்கலும்'' என்புழிக் கலக்கத்தின்பாற் படுவது. (171)

172. ஒண்டொடி யரிவை கொண்டனள் நெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத் தொண்டி யாங்கண்
உரவுக் கடலொலித் திரையென
இரவி னானும் துயிலறி யேனே.

இது ''கண் துயில்கின்றிலை, இதற்குக் காரணம் என்?'' என்று வினவிய பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

ப. உரை: உரவுக்கடல் ஒலித்திரை யென இரவிலும் துயி லறியேன் என்றது தன் வலியழிவு கூறியவாறு.

உரை: ஒள்ளிய தொடி யணிந்த அரிவையாவாள் என் நெஞ்சினைக் கவர்ந்துகொண்டாளாகலின், வண்டுகள் ஒலிக்கும் குளிர்ந்த துறையினையுடைய தொண்டிநகரத்துப்பரந்த கடலிடத்தே எழுந்தொலிக்கும் திரைகளைப் போல இரவின்கண்ணும் உறக்கம் கொள்ளேனாயினேன் எ. று.

---

1. குறுந். 129. 2. தொல். பொ. 102.

உரவு, பரத்தல். ''உரவுநீர் மாகொன்ற, வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டு விரும்பார்கொல்[1]'' என்பதனுலும் இது பொருளாதல் அறிக கையாறெய்திய தலைமக்கள் தாம் கண்டுயிலாமையைக் கடலொடு சார்த்தியும் உவமித்தும் கூறுதல் மரபு. ''யாரணங் குற்றனை கடலேயூழி, சிறுதலை வெள்ளைத்தோடுபரந் தன்ன' மீனுர் குருகின் கானலம் பெருந்துறை, வெள்வீத் தாழைத் திரையிலை, நள்ளென் கங்குலுங் கேட்குநின் குரலே[2]'' என வருமாறு, காண்க.

நெஞ்சம் தன்வயமின்றி அவள்வயம் நின்று கூட்டம் எய்துங் கொல்லோ, எய்தாதுகொல்லோ என இருபாற்பட்டுக் காரண வாராய்ச்சி புரியுமாற்ருல் அமைதி பெருமையின், இரவினுனும் துயிலறியேனே என்றும், துயின்றவிடத்தும், நனவுபோலக் கனவு தோன்றி அவள் நினைவே நிலைபெறுவித்தலின், ''துயில்கிலேனே'' என்னுது துயிலறுயேனே என்றும் கூறினுன். துயிறற்குரிய காலத்து துயிலாமை நலம்பயவாதாகலின், இரவினுனும் என்ருன். எனவே,பகற்போதில் செயலற்றமையும் பெறப்பட்டதாம்.

உரவுக்கடல் ஒலித் திரை யென என்றதனுல், எழுந்தெழுந் தடங்கும் திரைகளைப் போலக் கூடுதற்குரிய காரணம் புலனுய விடத்து எழுச்சியும், கூடாமை நினைந்த வழித் தளர்ச்சியும் தோன்றி இடையருக் கலக்கம் எய்து வித்தமை பெறப்பட்டது. படவே அதன் பயனுகக்கண்டுயிலாமை உற்ருற்குத் துயிலின்மை இயல்பே எனப் பாங்கன் துணிந்து அமைவானுவது பயன் என அறிக. இது பிரிந்தவழிக் கலங்கற்கண்'' கண்துயில் மறுத்தல். இஃது '' இன் பத்தை வெறுத்தல்[3]'' என்ற சூத்திரத்துக் கலக்கமும் நலத்தக நாடின் அதுவே. என்னுது கலக்க மென்பதனை வேறு பெயர்த் தமையான் தலைமகற்கும் ஏற்ற வகையானே கொள்ளப்படும் என்பதனுல் அமைந்தது.

இனி, இதனை ''வேட்கை யொருதலை யுள்ளுதல்[4]'' என்புழி ''ஆக்கஞ் செப்பல்'' என்பதற்கு உதாரணமாக்குவர் இளம்பூரணர்.

---

1. கலி. 27. 2 குறுந். 163. 3. தொல். பொ. 270.
4. பொ. 97.

உரவுக்கட லொலித்திரை போல என்றும் பாடமுண்டு; அதனுற் பொருட்சிறப்பின்று, (172)

173. இரவி ஞனு மின்றுயி லறியாது
அரவுறு துயர மெய்துப தொண்டித்
தண்ணறு நெய்தல் நாறும்
பின்னிருங் கூந்த லணங்குற்ருேரே.

இது, தலைமகன் குறிவழிச் சென்று தலைமகளைக் கண்ட பாங்கன் தன்னுள்ளே சொல்லியது.

ப. உரை: தொண்டித் தண்ணறு நெய்தல் போல் நாறும் கூந்தல் என்றது, சேய்மைக்கண்ணே நாறுதல் நோக்கி.

உரை: தொண்டிநகரத்து நீர்த்துறைக்கண் மலர்ந்த குளிர்ந்த நறுவிய நெய்தலின் மணம் கமழும் பின்னலிடப்பட்ட கரிய கூந்தலையுடைய இவளால் வருத்தப்பட்டோர் இரவின் கண்ணும் இனிய துயில் பெருது அருமணி யிழந்த நாகத்தின் மிக்க துயரத்தை யெய்தி வருந்துவர்; இதனையறியாது தலைவனை இகழ்ந்த என் அறியாமை இருந்தவாறு என் எ. று.

இன்றுயில் என்ருர், மனத்தெளிவு பயந்து உடற்கு வலியும் உயிர்க்கு இன்பமும் பயக்கும் சிறப்பு நோக்கி, அணங்குற்ருேர் என்பதனுல் நெஞ்சு வலி யிழந்தமை பெறப்பட்டமையின், அதற் கேற்ப அருமணியென்பது வருவித் துரைக்கப்பட்டது. குறிவழிச் சென்று கண்டபாங்கன் சேய்மைக்கண்ணே நின்று நோக்கிக் கூறும் கூற்ருதல் பற்றித் தொண்டித் துறைக்கண் மலர்ந்த நெய்தல் சேய்மையில் மணங்கமழ்கின்றது என்ற பழையவுரையின் நயத்தை ஓர்ந்துணர்க. பின்னிருங் கூந்தல், பின்னலிடப்பட்ட கரிய கூந்தல். பின், பின்னல். அணங்கு, வருத்தம். தன்பால் நிகழ்ந்த நிகழ்ச்சி ஏதுவாகப் பிறத்தலும் பிற பொருள் ஏதுவாகப் பிறத்தலும் என இருவகைத்தாய வருத்தத்துள், பின்வகையைச் சார்ந்த தாகலின், அணங்கு எனப்பட்டது.

பண்டு தலைமகனைக் கூடிய விடம் அவனைக் கண்டாலன்ன இன்பம் பயக்கும் என்னும் கருத்தால், பொழிலிடைப் புகுந்தவள் தலைமகனைத் தலைப்பெய்யும் நினைவால் நிற்கின்றாளை, அவன் கூறிய குறிவழிச் சென்ற பாங்கன் சேய்மைக்கண்ணே அவள் கூந்தல் மணங்கமழக் கண்டு பின்னின்று வியப்பெய்தினானாகலின், பின்னிருங் கூந்தல் என்றும், இப்பெற்றியாளைக் கண்ட தலைமகன் தன்வயம் இழந்து மெலிதலில் வியப்பில்லை எனக் கருதினமையின், அணங்குற்றோர் என்றும், இரவினானும் துயிலறியேன்[1] எனத் தலைமகன் கூறியது உண்மையாதல் விளங்குதலின், தனது உடன்பாடு பலப்பட, இரவினானும் இன்துயிலறியாது என்றும், தான் உயிர் வாழ்தற்கு உறுதி என ஓம்பிய மணியினை இழந்த நாகம் உறுதுயர் எய்தி உலமருவது போலத் தலைமகன் நயனும், நாணும், பண்பும் ஆகிய தலைமைப்பண்புகளை இழந்து அலமருகின்றமையின், அரவுறுதுயரம் எய்துப என்றும் கூறினான். ''நயனும் நண்பும் நாணும் நன்குடைமையும், பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும், நும்முடையேன் மன்னே[2] என்பதனால் நயனுடைமை முதலியன இழந்தவாறு காண்க.

இனி, அணங்குற்றோர் என்றும், எய்துப என்றும் தலைமகனைப் பன்மைவாய்பாட்டாற் கூறியது, இவளால் அணங்குற்றும் தன் ஆண்மை இழவாது போந்த அவனது திட்பத்தை வியத்தற்கென அறிக.

இனி, ''மெய்தொட்டுப் பயிறல்[3]'' என்ற சூத்திரத்துக் ''குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்'' என்புழிப் ''பெட்பினும்'' என்பதன்கண், இதனைக் காட்டி அமைப்பர் இளம்பூரணர். (173)

174. அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கினள் நுணங்கிழைப்
பொங்கரி பரந்த வுண்கண்
அங்கலிழ் மேனி யசைஇய வெமக்கே.

---

1. ஐங் 172. 2. நற். 160. 3. தொல். பொ. 99.

இது, குறிவழிச் சென்று தலைமகளைக் கண்டு வந்த பாங்கன் அவள் நின்றுழி நின்றாள் என்று கூறியவழி, ஆண்டுச் செல்லக் கருதிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

உரை: தெய்வம் உறைதலையுடைய குளிர்ந்த துறை பொருந்திய தொண்டிநகர் போன்ற, மணம் கமழும் பொழிலின் கண், மெலிவு பொருந்திய எமக்கு, நுண்ணிய இழையினையும், மிக்க செவ்வரி பரந்த கண்ணினையும். அழகொழுகும் மேனியையு முடையாள் இனிக் கூடுதற் குரிய இடம் இஃதெனக் குறித்தன ளாகலின், யான் சென்று அவளைத் தலைப்பெய்தல் தவறுமற் கைகூடும் எ. று.

தொண்டி யன்ன மேனி என இயையும்; பொழிற்கேற்பின் பொருள் சிறவாமை யறிக. துறைகளில் அணங்குகள் உறையும் என்பது உலகுரை; "துறையெவன் அணங்கும் யாமுற்ற நோயே [1]" என்றார் பிறரும். அகத்தும் "நிலைத்துறைக் கடவுள் [2]" என்ப. உலகுரை, ஐதிகவளவை; "ஐதிக மென்பது உலகுரை இம்மரத், தெய்திய தோர்பேய் உண்டெனத் தெளிதல் [3]" என்பர் சீத்தலைச் சாத்தனார். குறி, பகலினும் இரவினும் தலைமக்கள் தம்முள் தலைப்பெய்தற்குக் குறித்துக் கொள்ளும் இடம். அங்கலிழ் மேனி, அழகொழுகும் மேனி. "அங்கலிழ் ஆகம்[4]" என்புழிப் போல; "அங்கலிழ் மேனிப் பாஅய பசப்பே [5]" எனப் பிறரும் கூறுப.

இயற்கைப் புணர்ச்சிக்கண் தான் அவளைத் தலைப்பெய்து கூடி இன்புற்ற இடமாகலின் மணங்கமழ் பொழில் என்றான். "மணங்கமழ் கானல் இயைந்த நம் கேண்மை [6]" என்றார் பிறரும். பண்டு தான் கூறியவிடத்தே வந்தாள் எனக் கேட்டவன், அவள் ஆண்டு வருதல் தான் சென்று கூடல் கருதிய தென்றும் மேலும் அது தான் சென்று அவளை எய்துதற்கு இடம் குறித்த தென்றும்

---

1. ஐங். 53. 2. அகம். 156. 3. மணி. 27 : 49-50.
4. ஐங். 106. 5. குறுந். 143. 6. நற். 203.

கருதினுன் ஆகலின், குறி என்றும், அதுவும் குறிப்பாற் களஞ் சுட்டியதாகலின், குறி நல்கினள் என்றும் கூறினுன். அசைஇய எமக்கே எனத் தன் பாங்கனையும் உளப்படுத்தான், தானுற்ற மெலிவு நோக்கி அவனும் வருந்துகின்ருனுகலின். இதனுல், தலைமகன்பால் உடம்பு நனி சுருங்கல் என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

பண்டு கூடிய விடத்தே மீட்டும் போந்தமை குறிப்பாற் களஞ்சுட்டிய தாகலின். ''குறி'' எனப் படுவதாயிற்று. ''களஞ் சுட்டுக் கிளவி கிழவிய தாகும்[1]'' என்பது விதி. இதன்கண் ''சுட்டுக் கிளவி'' என்றதனுல், கூற்ருனன்றிக் குறிப்பால் குறியிடம் கூறஸ் பெறப்படும் என்பர்.

அசையியல் எமக்கே என்பது பாடமாயின், அசைதலைப் பொருந்திய எமக்கு என்பது பொருளாகக் கொள்க. அசைஇய என்பது ஏடெழுதினேரால் இவ்வாறு வலிந்து பொருள் கொள்ளத் தக்க நிலையில் ''அசையியல்'' எனப் பிழைக்கப்பட்ட தெனக் கோடல் சீரிது. நுணங்கிடை: என்றும் பாடமுண்டு.

''மெய் தொட்டுப் பயிறல்[2]'' என்ற சூத்திரத்துச் ''சொல்ல வட் சார்த்தலிற் புல்லிய வகையினும்'' என்பதன் உரையில், ''களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்[3]'' என்பதனுல் தலைவியாற் குறிப் பெற்றும் தோழியை இரக்கும் என உரைத்து, இதனை எடுத்துக்காட்டுவர் நச்சினுர்க்கினியர். ''பண்பிற் பெயர்ப்பினும்[4]'' என்ற சூத்திரத்து, ''அவட்பெற்று மலியினும்'' என்ற பகுதிக்கண் ''உள்ளப்புணர்ச்சியா னின்றி இயற்கை இடையீடு பட்டுழிப் பின் தலைமகள் குறியிடம் கூறியவழி அதனைப் பாங்கற் குரைத்தற்கு'' இதனைக் காட்டி, இவ்வாறு ''சிறுபான்மை வரும்'' என்பர் இளம்பூரணர். (174)

175. எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோள்
நன்னுத லரிவையொடு மென்மெல வியலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே

---

1. தொல் பொ. 120. 2. ஷை ஷை. 102. 3. ஷை ஷை 120.
4. ஷை ஷை 100.

இது, பாங்கற் கூட்டம் கூடி நீங்கும் தலைமகன் இனி வருமிடத்து நின் தோழியொடு வரல் வேண்டு மெனத் தலை மகட்குச் சொல்லியது.

உரை: இதுபோது எம்மை நயந்து போந்து நின் நலனைத் தந்தருளினை யாயினும், மடந்தையே, இனி எல்லாச் சிறப்பினையு முடைய தொண்டிநகர் போலும் நின்னுடைய பலவாகிய குணங்களைக் கைக்கொண்டு பெரிய தோளையும் நல்ல நெற்றியையு முடைய அரிவையாகிய தோழியொடு மெல்ல நடந்து வருக. எ. று.

இதுபோது, அருளினையாயின், இனி பண்பு பல கொண்டு அரிவையொடு மென்மெல இயலி வந்திசின் என இயைக்க. சிறப்பும்மை வருவிக்கப்பட்டது. தலைவன் பெறக் கருதிய தோழியிற் கூட்டத்திற்குச் சிறந்தாளாகலின், அத்தோழியை உயர்பின் வழித்தாகிய ஒடுக் கொடுத்துப் பிரித்தார். வந்திசின் என்பது வருதல் வேண்டும் என்பதுபட வந்த முற்றுவினைத் திரிசொல். பண்பு பெண்மைக்குரிய நற்குண நற்செய்கைகள். ''பண் பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்[1]'' என்ப வாயினும், ''பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்[2]'' எனப் பண்பினையும் பாடறிந் தொழுகலையும் வேறு வைத்துக் கூறுதலு முண்மையின், குணமும் தொழிலுமாய்ப் பிரிந்து பல்வேறு வகைப்பட்டுப் பரந்துநிற்கும் இயல்பினதாகிய பண்பினுள் பாடறிந் தொழுகல் ஒன்றும் எனக் கொள்க எமக்கு நயந்தருளினை என்பது பாங்கற்கூட்டம்.

பாங்கற்கூட்டம் பெற்றவன் தோழியர் கூட்டம் பெற நினைந்து, இயற்கைப்புணர்ச்சிய திறுதிக்கண் தான் அவளை ஆயத்துய்த்த காலை அவள் கண்ணுற் குறித்த சிறப்புப்பற்றிப் பணைத்தோள் நன்னுதல் அரிவையொடு என்றும், ஆயினும் என்றதனல் அவளது துணைமை தமது ஒழுக்கத்திற்கு இன்றியமையாது என்றும் கூறினன். நகிலது பெருமையும், இடையது நுட்பமும் கண்டு, தன் பெருநயப்புத் தோன்ற, மென்மெல இயலி

1. கலி. 133. 2. நற். 160.

என்ருன். ''சிலம்புநகச் சின்மெல் லொதுக்கமொடு மென்மெல இயலிநின் னணிமாண் சிறுபுறங் காண்கம் சிறுநனி, ஏகென ஏகல்[1]'' என வருதலாலும் இப்பொருண்மை உணர்க. ஐம் பொறிகளாலும் ஆரத் துய்க்கும் பெரும் போகமுடைமையின், அவட்கு ஐவகைவளமும் ஒருங்கு பெற விளங்கும் தொண்டியை உவமித்தான். ஐவகை வளம், குறிஞ்சி முதலிய ஐவகை நிலத்தும் பெறகுரியவளம். ''நாடனென்கோ ஊரனென்கோ[2]'' என்றதனுலும் இவ்வுண்மை துணியப்படும். கூட்ட மெய்திய காலத்து அவட்குத் தன் தன்மை யென்பது ஒன்றின்றி, உள்ளம் சிதைந்து, நாணழிந்து நிறை துறந்தமை தானறிய மெய்ப் பட்டமையின், பண்பு பல கொண்டு வந்திசின் என்ருன். ''புகு முகம் புரிதல்'' என்ற சூத்திரத்து, ''சிதைவு பிறக்கின்மை'' எனவே, அச்சிதைவு தலைமகன் உணரும் என்பது பெற்ரும். தொண்டி யன்ன நீ வந்திசின் என்றதனேடு அமையாது, வாழி என்றதனல், தொண்டு எல்லா வளமும் பெற்று ஓங்குதல் போல, நீயும் நின் பலவாகிய குணங்களோடு விளக்கமுறுக எனக் கருதினுனும். இது ''நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைத்[3]'' தற்கண் நிற்பவை நினைத்துக் கூறியது. நிகழ்பவை நினைத்துக் கூறியது வந்திசின் பண்புபல கொண்டே என்பது. ''குலத்தின் திரியாக் கொள்கையும் கொள்கையொடு, நலத்தின் திரியா நாட்டமு முடையோய், கண்டதன் அளவையிற் கலங்குதி யெனினும், மண்டிணி கிடக்கை மாநிலம் உண்டெனக் கருதி யுணரலென் யானே[4]'' என்பதனுலும் இப்பொருண்மை உணரப் படும்.

''பண்பிற் பெயர்ப்பினும்[5]'' என்ற சூத்திரத்து அவட்பெற்று மலிதற்கு இதனைக்காட்டி, ''இஃது அவட்பெற்று மலியும் தலைவன் கூறியது'' என இளம்பூரணரும் நச்சினுர்க்கினியரும் கூறினர். மேலும், நச்சினுர்க்கினியர், மெய்தொட்டுப் பயிறல்[6]'' என்ற

---

1. அகம். 261. 2. புறம். 49. 3. தொல். பொ. 99.
4. இளம். மேற். சூ. 99. 5. தொல். பொ. 100.
6. ஷை. ஷை. 102.

சூத்திரத்து, ''குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்'' என்புழி, ''குற்றங் காட்டிய'' என்றதனால் அமைத்து. ''இது பாங்கற் கூட்டம் கூடி நீங்கும் தலைமகன் நீ வருமிடத்து நின் தோழியொடு வரல் வேண்டும் எனத் தலைவிக்குக் கூறியது'' என்றார். (175)

176. பண்பும் பாயலும் கொண்டனள் தொண்டித்
தண்கமழ் புதுமலர் நாறும் ஒண்டொடி
ஐதமைந் தகன்ற வல்குற்
கொய்தளிர் மேனி கூறுமதி தவறே

இது, தலைமகளும் தோழியும் ஒருங்கு நின்றுழிச் சென்ற தலைமகன், ''இவள் என்னை இவை கோடற்குக் காரணம் என்?'' என்று தோழியை வினவியது.

ப. உரை: கொண்டனள் என்றது தலைவியை எனக்கொள்க.

உரை: தொண்டி நகர்க்கண், குளிர்ச்சி பொருந்திய புது மலரின் மணம் வீசும் ஒள்ளிய தொடியினையும், மெல்லிய காஞ்சி பொருந்தி அகன்ற அல்குலினையும், கொய்யப்பட்ட தளிர் போலும் மேனியினையுமுடையாய், எனக்குரிய பண்பினையும் உறக்கத்தினையும் நின் தோழி கவர்ந்து கொண்டு என்பால் அவை இலவாக்கினள்; ஆகலின், அவ்வாறு கோடற்கு யான் செய்த தவறு யாது? கூறுக எ. று.

பண்பு, பெருமையும் உரனும் என்ற இருவகைக்கும் உரிய நற்குண நற்செய்கைகள். பாயல், உறக்கம்; ''படலின் பாயல் வௌவியோளே[1]'' என்று பிறரும் கூறுப. பண்பும் பாயலும் கொள்ளப்பட்டன எனவே, அவன் தன்பால் அவையில என்பது கூறினானாயிற்று. ஐதமைந்து அகன்ற அல்குல் என்பது இப் பொருட்டாதல், ''அகன்ற அல்குல் ஐதமை நுசுப்பு[2]'' எனவும், ''ஐதகல் அல்குல் கவின்பெறப் புனைந்த, பல்குழைத் தொடலை[3]'',

1. ஐங். 195. 2. நற். 101. 3. அகம். 345.

எனவும் வருவனவற்ருல் அறிக. மதி, முன்னிலையசை. தொடியும் அல்குலும் மேனியும் உடையாய், நாறும் மேனியுடையாய் என இயையும்.

உள்மெலிவு நிகழ்ந்தவிடத்தும், அதனைப் புறத்தே தோன்ருவகை மறைத்தல் ஆண்மைப் பண்புகளுள் ஒன்ருக, அவ்வாறன்றித் தோழியிடைச் சென்று குறையுறுதல் பற்றி பண்பும், அவ் வுள்ள மெலிவால் உறக்கமின்மையின் பாயலும் கூறி இவற்றைக் கொண்டனள் என்ருன். கொடுப்பக் கொள்வழி, கொண்டனள் என்றல் ஆகாமையின், கவர்ந்து கொண்டமை தோன்றக் கொண்டனள் என வாளாது கூறி, கூறுமதி தவறே என்றதனுல் அப்பொருண்மை எய்த வைத்தான். பண்பும் பாயலும் தனக்கே உரியவாயினும், அவள் விரும்பியவழி அவை கொள்ளப்படுதலும் படாமையும் உடைய என்பதுபடப் பண்பும் பாயலும் கொண்டனள் என்றதனுல் தான் அவள் வரைப்பினனுயதும் பெறப்படும். படவே, தன்பால் குற்றம் நிகழின், அதனைக் காட்டித் திருத்தி அவற்றை மீட்டும் பெறுவித்தல் முறை என்றற்குக் கூறுமதி தவறே என்ருன்.

மதியுடம்படுத்தல் வேண்டித் தோழியைக் குறையுறுகின்ருனுகலின், அவளை, தொடியும் அல்குலும் மேனியுமுடையாய் எனச் சிறப்பித்தான்.

ஒருவர் வரைப்பினராய் ஒருவர் நின்று பணிபுரியுமிடத்து, அவர்பால் தவறில் வழி, அவர் அவருடைய பண்பும் பாயலும் கெடப் பணிபுரிவித்தல் ஆகாது என்பதொரு நயம் தோன்றியவாறு காண்க.

இதனுல், தலைமகள்முன் நின்று தான் குறையிரத்தற்கு இடம் காட்டித் தன் குறையைத் தோழி உணர்தற்கு இயைபுபடக் குறையுறுமாற்றை ஈண்டு விளங்கக் கூறினுன் என அறிக.

ஆசிரியர் நச்சினுர்க்கினியரும், ''மெய்தொட்டுப் பயிறல்[1]'' என்ற சூத்திரத்துத் தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக்

---

1. தொல், பொ. 102.

கூறலும் என்பதற்கு உதாரணமாகக் காட்டினர். வெளிப்படையும் குறிப்புமாகிய அக்கூற்றுவகை இரண்டனுள் இது வெளிப்படக் கூறியது. (176)

177. தவறில ராயினும் பனிப்ப மன்ற
இவறுதிரை திளைக்கும் இடுமணல்
நெடுங்கோட்டு
முண்டக நறுமலர் கமழும்
தொண்டி யன்னோள் தோளுற் றோரே.

இது தலைமகளும் தோழியும் ஒருங்கு நின்றுழி, ''இவள் என்னை வருத்துதற்குச் செய்த தவறு என்?'' என்று வினவிய தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது.

ப. உரை:[1] தோளுற்றோர் என்றது தோளை எதிர்ப்பட்டோர் எ. று. நீரரு நிலத்து முண்டக நறுமலர் கமழும் தொண்டி அன்னோள் என்றது இவள் நாம் அணுகி நுகர்தற்கரியள் எ. று. இதன் இறைச்சி... ....

உரை: ஒன்றனை யொன்று மேற்பட் டெழும் அலை பொரு தலால் கொழித்திடப்பட்ட மணல் பரந்த உயர்ந்த கரையினை யுடைய துறைக்கண் நீர்முள்ளியின் நறிய மலர்களின் மணம் கமழும் சிறப்பினையுடைய தொண்டிநகர் போல்வாளது தோளை எதிர்ப்பட்டோர் தவறு ஒன்றும் செய்திலராயினும் தெளிவாக நடுக்கமுற்று வருந்துவர்; ஆகலின், யான் கூறுமா றென்னை? எ. று.

இவறுதல், ஒன்றனை யொன்று மேற்பட்டெழுதல். இவறன்மை யென்பதற்குப் பரிமேலழகர் கூறும் உரை[2] காண்க. இவறு திரை திளைக்கும் இடுமணல் நெடுங்கோடு என்றதற்கு, நீரருமை

1. இப் பழையவுரைப் பகுதியில் சிலசொற்கள் விடுபட்டும் முறை வேறுபட்டும் உள்ளன.

2. குறள் 438. உரை.

யால் அலைவந்து கலக்க அதனல் அலைப்புண்டு கரை கெடாதவாறு புதுமணல் இடப்பட்டு உயர்ந்த கரையினையுடைய துறை என்று உரைப்பினும் அமையும். தோளுற்ருேர் என்றது தோளைக் கூடினேர் என்று பொருள்கோடல் அமையாது என்றற்குப் பழைய உரைகாரர் ''தோளை எதிர்ப்பட்டோர்'' என்று கூறுவது காண்க. பனித்தல், பண்பும் பாயலும் இழந்து வருந்துதல்.

தலைமகன் தோழியை மதியுடம்படுக்கும் கருத்தினுல் அவளும் தலைவியும் ஒருங்கு நின்ற விடத்துப் போந்து, பண்பும் பாயலும் இழந்து தான் பனிக்குமாறு கூறினமையின், தோளுற்ருேர் என்று தலைவனது தலைப்பெய்தியுடைமை தான் உணர்ந்தவாறு தோழி புலப்படுத்தினுள் என அறிக. தான் எய்திய வருத்தத்துக்கு ஏது வாகத் தான் செய்த தவறு யாது என்று வினவிய தலைவற்கு, தவறில்வழியும் பனித்தல் தோளுற்ருேர் இயல்பாகலின், தவற்றின் உண்மையின்மைகள் ஆராய்தல் வேண்டா என்பாள், தவறில ராயினும் பனிப்ப என்றும், தவறிலார் பனித்தல் யாங்ஙனம் எனக் கடாவெழுந்து சொற்பல்காமை நோக்கி, மன்ற என்றும் கூறினுள். ''கூறுமதி தவறே[1]'' என வேண்டி நின்ருற்கு அஃது உண்டென்றேனும், இன்றென்றேனும் கூருது, தவறில ராயினும் பனிப்ப மன்ற என முடிந்தது முடித்தலாகப் பொது வாய்பாட்டாற் கூறினமையின், ''நின்பால் தவறிலை யாயினும் தவறு உண்டு போலும் எனக் கருதிப் பனித்தல் நின் மாட்டே அமைந்தது'' என்ருளாம். இதனல், தோழி மாட்டு நகை தோன்றிற்றென அறிக. கொளற்கருமையும் பெருகிய திருவுடைமையும் பற்றிக் கண்டோர் பனித்தல் இயல்பே என்றற்கு அவ்விரண்டுமுடைய தொண்டிநகரை உவமித்தாள்.

இதன் இறைச்சிப் பொருள் பழையவுரைப்பகுதியில் சிதைந்து விட்டது. நீர் இடையருது சூழ்ந்த மணற்கோட்டில் நிற்கும் முண் டகம் மலர்ந்து நறுமணம் கமழ்வதுபோல, அரிய காவலமைந்த கடிமனைக்கண் பெருநலம் திகழத் தலைமகள் விளக்கமுறுவதும், அந் நறுமணம் கண்டோர் உள்ளத்தைக் கவற்றினும், கொள்ளற்

1. ஐங். 176.

கரிதாயது போல, இவள் நலத்தால் நீ பனித்து வருந்தினும் கொள்ளற் கரியள் எனத் தோழி உள்ளுறையால் அருமைசெய்து அயர்வித்தமை காண்க. இது சேட்படை. முண்டகம் நெய்தல் நிலக் கருப்பொருள். பாட்டிடை வந்த கருப்பொருளே இறைச்சி என்பதும் வழக்கு. ''இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுட் கிளக்கும் இயற்பெயர்க்கிளவி[1]'' என்றும், ''அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்[2]'' என்றும் ஆசிரியர் கூறுவது காண்க. ஆயினும், பாட்டிடைப் பொருட்கு ஒத்துமுடியும் பொருள் உள்ளுறையுவமம் எனவும், அப்பொருட்குப் புறமாய் வேறுபடக் காண்பது இறைச்சி எனவும் வேறுபாடு தெரிந்துகொள்க. நறு மணம் கமழும் நெடுங்கோட்டு முண்டகம் ஒருகால் நெருங்கினும் முள்ளுடைமையால் கொளற்கு அரிதாமாறு போல உடனுறையி னும் என்னல் இவளை உடன்படுவித்தல் இயலாது எனத் தோழி கூறியதாக இறைச்சி பெறப்படுமாறு காண்க. (177)

178. தோளும் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் தொண்டி யன்ன
எற்கண்டு நயந்துநீ நல்காக் காலே.

இது, தலைமகன் தோழியை இரந்து குறையுறுவான் சொல்லியது.

உரை: செவ்விய முறைமையினையுடைய, குட்டுவன் என்னும் சேரமன்னற் குரிய தொண்டிநகர் போலும் என்னை, என் குறை மிக்க நிலையினைக் கண்டும் நீ விரும்பி அருளாயாயின், இவளுடைய தோளும் கூந்தலும் பாராட்டி வாழும் இல்வாழ்க்கை எனக்கு இயலுமோ? இயலாது காண் எ. று.

இரந்து குறையுறுதற்கண் இரத்தல் என்பது குறையுடையார் செய்யும் செய்கை செய்தொழுகுவது. குறையுறுதல் என்பது

1. தொல். சொல். 198. 2. ஷை. ஷை. 231.

இக்குறை இன்றியமையான் என்பது படப் பசைந் தொழுகுவது. இவை செய்தொழுகல் உயர்ந்த தலைமகற்கு இலக்கணமென வறிக. ''புணர்ந்த பின்றை ஆங்ஙனம் ஒழுகாது, பணிந்த மொழி யால் தோழி தேஎத்து, இரந்துகுறை யுறுதலும் கிழவோன் மேற்றே[1]'' என்பது விதி. மற்று, அசைநிலை. செவ்வியகோல் போறலின், முறைமை, செங்கோல் எனப்பட்டது. தொண்டி, குட்டுவற் குரித்தாதல், ''வெண்கோட் டியானை விறற்போர்க் குட்டுவன், தெண்டிரைப் பரப்பின் தொண்டி[2]'' என்பதனுலுமறிக. சேரநாடு, குட்டநாடு குடநாடு பொறைநாடு எனப் பல நாடு களாகப் பிரிந்து தனித்தனியே சேரர் குடியில் தோன்றிய அரசர்களால் ஆட்சி செய்யப்படினும், அவருள் வழிமுறைத் தோற்றத்தால் உரியவன் முடிவேந்தனுக, ஏனையோர் அவன் வழியரசாய் ஆட்சி புரிவர்; குட்டுவன் முடிவேந்தனுயின், குடக்கோவும், இரும்பொறையும் வழியரசாவர்; குடக்கோ முடிக்குரியனுயின் குட்டுவர் கோவும் பொறையர் கோவும் வழியரச ராவர். தந்தைக்குப்பின் அவன் முதன்மகன், அவற்குப்பின் அவன் முதன்மகன் அரசுக்குரியனுக வரும் முறை[3] தமிழர் அரசு முறை யன்று; அது வடவர் அரசுமுறை. இம்முறை தெரியாமல் தென் னுட்டு வரலாறு காண்போர் பலர் தடுமாறுகின்றனர். நிற்க, இந்நூலாசிரியர் காலத்தில் குட்டுவன் சேரமானுய் மணிமுடியும் எழுமுடி கெழீஇய திருவும் உடையனுய் விளங்கினமையின், பொறைநாட்டுத் தொண்டியைச் செங்கோற் குட்டுவன் தொண்டி என்று சிறப்பித்தார் என அறிக. எற்கண்டு என்றது ஆற்றலால் அவனது குறைமிக்க நிலைமை உணர நின்றது.

இல்லிருந்து நல்லறம் புரியுமிடத்துத் தலைமகளைக் கூடுந் தொறும் ''அறிதோ றறியாமை[4]'' போலப் புத்தின்பம் தோன்றக் கண்டு மகிழ்வான் அவள் நலம்பாராட்டல் இயல்பாகலின், தோளும் கூந்தலும் பல பாராட்டி என்ருன். கூட்டத்திற் கூந்தலினும் தோள் சிறந்தமையின், தோளை முற்கூறினுன்.

---

1. இறை. அ. பொ. 5. 2. அகம். 290.
3. Primogeniture. 4. குறள். 1110.

'' உவவினி வாழிய நெஞ்சே மையற, வைகுசுடர் விளங்கும் வான்ரேய் வியனகர்ச் சுணங்கணி வனமுலே நலம்பா ராட்டித் தாழிருங் கூந்தல் நங் காதலி, நீளமை வனப்பின் தோளுமா ரணங்தே[1]'' என்பதனுலு மறிக. தலேமகளைக் கூடி வாழும் வாழ்க்கையை யின்றித் தான் அமையாமை தோன்ற நிற்றலின், எற்கண்டு என்றும், அவளைத் தான் பெறற்கண் அவட்குச் சிறந்தாளாய தோழியின் உடம்பாடில்வழி, பெறலரிது என்பான் நயந்து என்றும், நல்காக்காலே என்றும் கூறினுன். வாழ்தல் ஒல்லுமோ என்றதனுல், நீ நல்காக்கால் யான் உயிர் வாழ்தலும் கூடுமோ என்பது குறிப்பால் தோன்றக் கூறினமை பெற்ரும்.

பரிவுற்று மெலியும் என்னைக் கண்டும் என்றது தலேமகன்கண் தோன்றிய துன்பத்துப் புலம்பல். வாழ்தல் ஒல்லுமோ என்றது, '' நலத்தக நாடின் கலக்கமும் அதுவே[2]'' என்புழிப் பெற்ற கலக்கம்.

இனி, '' மெய்தொட்டுப் பயிறல்[3]'' என்ற சூத்திரத்து, '' அறிந்தோ ளயர்ப்பின் அவ்வழி மருங்கிற் கேடும் பீடும் கூறலும் '' என்புழி இதனை அடக்குவர் நச்சினுர்க்கினியர். அவர் கருத்துப்படி தோளும் கூந்தலும் பாராட்டுதல் நல்கியவழி எய்தும் பீடும், வாழ்தல் ஒல்லுமோ என்றது நல்காவழி எய்தும் கேடும் எனக் கொள்க. இளம்பூரணர் தோழியைக் குறையுறும் பகுதிக்கு உதாரணமாக்குவர்[4]'' (178)

179 நல்குமதி வாழியோ நளிநீர்ச் சேர்ப்ப
அலவன் தாக்கத் துறையிருப் பிறழும்
இன்னெலித் தொண்டி யற்றே
நின்னல தில்லா விவள்சிறு நுதலே.

இது, குறியிடத்து வந்து நீங்கும் தலேமகனைத் தோழி எதிர்ப் பட்டு வரைவுகடாயது.

1. அகம். 87. 2. தொல். பொ. 270.
3. தொல். பொ. 102. 4. ஷை. ஷை. 99.

ப. உரை: அலவன் தாக்கத் துறை இருப் பிறழும் என்றது இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாகிய ஞான்று இவள் உயிர் வாழாள் என்பதாம்.

உரை: பெரிய கடற்கரையையுடைய சேர்ப்பனே, நின்னை இன்றியமையாத இவளது சிறிய நுதல், கரைக்கண் வாழும் அலவன் தாக்குதலால் துறைக்கண் வாழும் இருமீன் புரளும் இனிய ஒலியினையுடைய தொண்டிநகர் போல்வதாகலின், நீ அதன் ஒளி கெடாமை அருள்வாயாக எ. று.

நளி, பெருமை. துறையிரு என்றதற் கேற்பக் கரை வாழலவன் என்பது பெய்துரைக்கப்பட்டது. பிறழும் ஒலி, பிற ழுதலால் எழும் ஒலி யென்க. நின்னலதில்லா என்பது ''நாணு நட்பும் இல்லோர்த் தேரின், யானல தில்லையிவ் வுலகத்தானே'' என்புழிப் போல, அல்லதில் என்னும் வாய்பாட்டின்கண் வந்தது.

குறியாவது, ''தலைமகன் தோழியை இரந்து குறையுற்றுப் பின்னின்ற விடத்து, அவனை ஆற்றுவிக்கும் சில சொற் சொல்லி ஆற்றுவித்துத் தலைமகனைக் குறி நயப்பித்த வாற்றான் நின்ற தோழியைப் பின்னும் தலைமகன் எதிர்ப்படும்; எதிர்ப்பட்டானை இன்னவிடத்து வா என்று குறிப்பினா லுணர்த்தும்[1]'' இடம். இவ்விடத்து இவர் இரவினும் பகலினும் வந்து கூடுவர். ''குறியெனப் படுவது இரவினும் பகலினும் அறியத்தோற்றும் ஆற்ற தென்ப[2]'' ஈண்டு ஆற்றதென்றது அவன் வருதற்குரிய நெறியிடம் என்றற்கு. இவற்றுள், இரவுக்குறி மனையகத்தே ஒருசார் என்றும், பகற்குறி மனையின் புறத்தே மகளிர் சென்று பயிலும் எல்லைக்கண் உள்ளதோர் இடம் என்றும் கூறுப.

வரைவுகடாதலாவது, வரைதல் வேண்டுமென நினைக்குமாறு தலைவனை முடுகுதல். இதுவும் குறிப்பினால் வரைவுகடாதலும், வெளிப்படையால் வரைவுகடாதலும் என இருவகைப்படும். இவற்றுள், குறிப்பால் வரைவு கடாவுவன, ''பொழுதும் ஆறும்

1. தொல். பொ. 120. 2. ஷி. ஷி. 131-2

காப்புமென்று இவற்றின், வழுவி ளுகிய குற்றம் காட்டலுங், தன்னை யழிதலும் அவனூறஞ்சலும், இரவினும் பகலினும் நீவர லென்றலும், கிழவோன் தன்னை வாரல் என்றலும், நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும், புரைபட வந்த அன்னவை பிறவும், வரைதல் வேட்கைப் பொருள என்ப[1] என ஆசிரியர் கூறுவர். ''காமம் மிக்க கழிபடர் கிளவியும், காப்புச்சிறை மிக்க கையறு கிளவியும், ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவியும், இரவினும் பகலினும் நீவரு கென்றலும், கிழவோன் றன்னை வார லென்றலும், தன்னுட் கையா றெய்திடு கிளவியும், அன்ன மரபிற் பிறவுந் தொகைஇ, தன்னை யழிந்த கிளவி யெல்லாம், வரைதல் வேட்கைப் பொருள என்ப[2]'' என இறையனு ரகப் பொருள் உடையாரும் கூறினர். ஆசிரியர் தொல்காப்பியனுர், ''வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல், மரீஇய மருங்கின் உரித்தென மொழிப[3]'' என்றது வெளிப்படையால் வரைவுகடாதல் என உரைப்பர் இளம்பூரணர். இவர் கருதுமாறு வேட்கை மறுத்தல் என்றது ''வேட்கைப் பொருளாற் கூறுதலை மறுத்துப் பட்டாங்குக் கூறுதல்'' என்பது; ''மாமலை நாட வரைந்தனை கொண்மோ[4]'' என்ருற்போல. களவொழுக்கத்தை நீட்டிப்பின் விளையும் ஏதம் ஆய்ந்து தலைமகனை விரைந்து வரைந்து கொள்ளு மாறு ஊக்குவது அறிவும் அறமும் அன்பும் உருவாகக் கொண்ட தோழிக்குக் கடன். அக்கடனை ஆற்றுமிடத்துத் தனது நிலை தலைமகனது தலைமைநிலையை நோக்கத் தாழ்ந்ததாகலின், அவனது உள்ளம் வரைந்து கோடற்குச் செல்லுமாறு வெளிப்படையாக முடுகுதல் நேர்மையாகாமையின் தொடக்கத்தில் குறிப்பாகவும், பின்னர் வெளிப்படையாகவும் செய்வள். அது பற்றியே வரைவு கடாதல் இருவகைத்தாயிற்று. குறிப்பாகத் தோழி கூறுவதைத் தலைமகன் உணர்வானுயினும், காமஞ் சிறப்பது கருதித் தலைமகன் வரைதலை நீட்டிப்பன்; நீட்டித்தல் அவனது தலைமையின் மாண்பு என அறிக.

---

1. தொல். பொ. 210.   2. இ. அ. பொ. சூ. 30.

3. தொல். பொ. 218.   4. ஐங். 289.

உள்ளுறையால் தலைமகளது ஆற்றாமை மிகுதி கூறுகின்றமை யின் நல்குமதி என்றும், நல்கியவழி அவ்விருவரும் துய்ப்ப நிற்கும் இன்பத்தின் சிறப்பு நோக்கி, வாழியோ என்றும், உற்றார் உறாதார் ஆகிய இருதிறத்தார்க்கும் ஒப்ப வழங்கும் தண்ணளியுடைமை கருதி, நளிநீர்ச் சேர்ப்ப என்றும், இன்னொலி யால் விளக்கமுறும் தொண்டியற்றே என்றமையின், இவளது நுதலும் தன் நல்லொளியால் விளக்க முறுதலின்றிப் பசந்தது என்றும் தனக்குற்ற வருத்தம் கூறித் தேற்றுதற்குறிய தாயரும் தன்னையரும் தோழியரும் பிறரும் உடையளாயினும், அவரால் தீர்க்கப்படாது நின்னை இன்றியமையா ளாயினள், என்றற்கு நின்னல தில்லா இவள் என்றும், ஒளியிழந்து பசந்து தோன்று தலின் சிறுநுதல் என்றும் கூறினள். நுதல் சிறிதாயினும், பசந்து வருத்த முறுவித்தலிற் பெரிதாமென்பது குறிப்பு. "சிறுநுதல் பசந்து பெருந் தோள் சாஅய்[1]" என்றார் பிறரும்.

நின்னல தில்லா இவள் என்றது அழிவில் கூட்டத்து அற னளித் துரைத்தல். சிறுநுதல் தொண்டி யற்றாகலின், நல்குமதி என்றது ஆங்குநெஞ்சழிதல்; வரையாது நீட்டித்தவழி, இச் சிறு நுதலும் பசலையால் ஒளிகெட்டுப் புறத்தார்க்கு இவ்வொழுக்கத்தைப் புலப்படுக்கு மென அஞ்சி நெஞ்சழிந் துரைக்கின்றமையின். நல்குதல் வரைதலாதலின், இது வரைதல் வேட்கைப் பொருளதாம் என அறிக.

அலவன் தாக்குதலால் துறைக்கண் வாழும் இறால் மீன் பிறழும் என்றது இவள் நுதல் பசத்தலால், புறத்தார்க்கு இவ் வொழுக்கமுண்மை புலனும்; ஆகிய வழி இவள் பெருநாணின ளாதலின் உயிர்வாழாள் என்றவாறு. இதுவே பழையவுரை காரர்க்கும் கருத்தாதல் காண்க. (179)

180. சிறுநனி வரைந்தனை கொண்மோ பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுரு கிருக்கும்
துறைகெழு தொண்டி யன்னவிவ ளலனே.

---

1. அகம். 307.

இது, தாழ்த்து வரையக் கருதிய தலைமகனைத் தோழி நெருங்கிக் கடிதின் வரைய வேண்டுமெனச் சொல்லியது.

ப. உரை: வலைவர் தந்த கொழுமீன் வல்சிக் கண்ணே பறத்தல் கெட்ட முதுகுருகு இருக்கும் என்றது நொதுமலர்க்கு மகட் பேச வந்திருக்கின்ற சான்றோர் உளர் எ. று.

இவைபத்தும் சொல்வகையால் தொடர்ச்சி பெறுதலே யன்றிக் கிளவிவகையால் தொடர்ச்சியுடையவாறும் அறிக.

உரை: பரதவர் கடலினின்றும் கொணர்ந்த கொழுவிய மீனாகிய உணவின்பொருட்டுப் பறத்தல்வலி யிழந்த முதிர்ந்த குருகு தங்கியிருக்கும் துறை பொருந்திய தொண்டிநகர் போலும் இவளை மிகக் குறுகியபோதின்கண் வரைந்து இவளது நலத்தை நுகர்வாயாக எ. று.

சிறுநனி, மிகக் குறுகிய போது "சிறுநனி நீ துஞ்சி ஏற்பினும்[1]" என்பதனாலும் இப்பொருண்மை துணியப்படும். தானும் உணவாதலன்றி எனை நெல் முதலியன பெறுதற்கும் பொருளாதலின், மீனை கொழுமீன் வல்சி என்றார். நெல் முதலிய உணவுப் பொருளினும் மீனுணவு உடலோம்புவார்க்குச் சிறந்தது என்பவாகலின், கொழுமீன் வல்சி என்றாரெனினுமாம். "இருஞ்சேற் றள்ளல் நாட்புலம் போகிய கொழுமீன் வல்சிப் புன்றலைச் சிருஅர்[2]" என்று சான்றோர் விதந்தோதுதல் காண்க. பறைதபு முதுகுருகு என்றது, பறத்தல் வலி யிழந்து முதுமையால் தளர்வுற்ற நாரையை. பறை, பறத்தல். "பறைவலந் தப்பிய பைதல் நாரை" "பறைதபு நாரை[3]" என்று சான்றோர் வழங்குமாறு காண்க.

தலைமகன் தாழ்த்து வரையக் கருதினான் என்பது உணர்ந்த தோழி, உள்ளுறையால் நொதுமலர் வரைவு குறித்து விடுத்த சான்றோர் வரவினை உணர்த்தினமையின், வெளிப்படையால் சிறிது தாழ்க்கினும் ஏதம் பெரிதாம் என்றற்கு சிறுநனி என்றும்,

1. கலி. 12. 2. அகம். 290. 3. குறுந். 125, 128.

காவலருமையும் இற்செறிப்பும் மிக்கிருத்தலின் கொண்டுதலைக் கழிதல் முதலிய முயற்சிகள் பயன்படா என்றற்கு, வரைந்தனை கொண்மோ என்றும், காமஞ் சிறத்தற்பொருட்டு விரைந்த வரை வினைக் கருதிற்றிலை யெனினும், தாழ்த்தவழி இவள் நலம் கெடுதல் ஒருதலை யென யாப்புறுத்தற்கு, வரைந்தனை என்று ஒழியாது கொண்மோ என்றும் கூறினாள். இது ''புரைபட வந்த[1]'' தாயினும் வரைதற் பொருட்டாதலின் அமையும் என வுணர்க.

பரதவர் கொணர்ந்த கொழுமீன் வல்சியின் பொருட்டுப் பறை தபு நாரை தங்கியிருக்குமாறு போல; தலைமகள் வைகிய எம்மனை யிடத்து வேற்றுவரைவு குறித்துச் சான்றோர் வந்துளர் என்பது உள்ளுறை. பழைய உரைகாரர்க்கும் இதுவே கருத்தாதல் காண்க.

முதுமை கண்டு இரங்கிக் கொழுமீன் வல்சியினை வலைவர் எறியார் என்பதனை அறிந்துவைத்தும் குருகு அவ்வல்சிப் பொருட்டு இருந்ததாக, நீ வரைதல் வேண்டி முயலாமை என்னை என இப் பாட்டின் பொருட்புறத்தே இறைச்சி தோன்றுமாறு காண்க.

சிறுநணி யென்றும் பாடமுண்டு; ஆயினும், ''நின் அணிமாண் சிறுபுறம் காண்கம் சிறுநனி, ஏகென ஏகல்நாணி[2]'' என்றும், ''பிரிந்தோர் உள்ளுபு நினைதல், சிறுநனி ஆன்றிகம் என்றி தோழி[3]'' என்றும், ''பெரிதமர்ந்தியைந்த கேண்மை சிறுநனி, அரிய போலக் காண்குவென்[4]'' என்றும் சான்றோர் பயில வழங்குதலின், சிறுநனி என்ற பாடமே சீரிதென அறிக. (180)

---

1. தொல். பொ. 210. 2. அகம். 261.
3. அகம். 301 4. நற். 259.

19

நெய்தற் பத்து

இப்பத்தின்கண் வரும் பாட்டுத்தோறும் நெய்தலாகிய கருப் பொருள் சிறந்து நிற்றலின், இஃது இப்பெயரினைப் பெறுவ தாயிற்று.

நெய்தல், நீர்ப்பூ வகையுள் ஒன்று. பெரும்பாலும் இது கடற்கரைப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் மிக்கு இருப்பதால், அந்நிலப்பகுதி இதனுல் நெய்தல் என்ற பெயர் எய்திற்று. கடலும் கடல் சார்ந்த பகுதியும் ''பெருமணல் உலகம்[1]'' என்று குறிக்கப் படினும், சான்றேர் பலரும் பெருமணல் உலகம் என்னுது நெய் தலையே சிறப்பாக எடுத்து நெய்தல் என்று வழங்கியிருப்பதொன்றே இதன் நலத்துக்குப் போதிய சான்ருகும்.

இந்நெய்தல், தாமரை ஆம்பல் முதலியவற்றைப் போலக் கொடியும் இலையும் உடையது. பெரும்பாலும் இது கழிக்கரை களில் பெருகக் காணப்படினும், முல்லை மருதம் குறிஞ்சி முதலிய பகுதிகளிலும் நீர்நிலை மருங்கில் காணப்படுவது உண்டு. இதன் இலை, யானைக்கன்றின் காதுபோலும் வடிவினையுடைய தாதல் கண்ட சான்றேர், ''இரும்பிடி .... நெய்தற் பாசடை புரையும் அஞ்செவிப் பைதலங் குழவி தழீஇ .... வைகும்[2]'' என்றனர்.

---

1. தொல். பொ. 5. 2. நற். 47.

''நெய்தல் முகிழ்த்துணையவாம் குடிமி[1]'' என்றலின், இதன் அரும்பு பண்டைய பள்ளிச் சிறுவரின் குடுமிபோல் இருக்குமெனத் தெரிகிறது. நெய்தற்பூவின் இதழ் மேற்புறத்து அடிப்பகுதிமுற்றும் கறுத்து மகளிர் கண்போல் இருக்கும். ''நீனறு நெய்தலிற் பொலிந்த உண்கண்[2]'' என்றும் ''கண்ணே ரொப்பின் கமழ்நறு நெய்தல்[3]'' என்றும் அறிஞர் உரைப்பது காண்க. இதன் நிறத்தை வியந்த பண்டைச் சான்ரேர், ''மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தல்[4]'' என்றும், ''மணிநிற நெய்தல்[5]'' என்றும் பாராட்டியுள்ளனர். இதன்கொடி நீண்டு ஆம்பற்றண்டு போல உள்ளே புழையுடையது.

நெய்தலின் நிறமும் நீலமலரின் நிறமும் ஒக்குமாயினும், நீலத்தின் இதழ் முழுதும் நீலநிறங் கொண்டிருப்பது வேறுபாடு. அன்றியும் நீலம் காலேயில் மலர்வது; நெய்தல் வைகறையில் மலர்வது; ''வைகறை மலரும் நெய்தல்[6]'' என இந்நூலே கூறுவது காண்க. தாமரை போல மாலேயில் இதழ்குவிவதும் இந்நெய்தற்கு இயல்பு. நெய்தற்பூவின் இதழ், வடிவில் வேல் போல இருக்கும். நெய்தலின் பூவையே தனிப்பட வைத்துத் தொடுத்தணிவது பண்டையோர் வழக்கன்று. இதனுடன் வேறு பல நிறமுடைய பூக்களேயும் தழைகளேயும் விரவி உடை போலத் தொடுத்தணிதல் இளமகளிர் செயல்வகையாகும். மகளிர் இவற்றைக் கூந்தற் பின்னலிற் சூடிக் கொள்வதும், ஆடவர் செருந்தி முதலிய மலர்களோடு சேரத் தொடுத்துத் தாராக அணிவதும் வழக்கம். விளேயாட்டு மகளிர் தாம் இழைக்கும் மணற்சிறுவீட்டில் இந்நெய்தற் பூக்களேச் சொரிந்து கோலஞ் செய்து இன்புறுவர். இதனே மதுரை மருதன் இளங்கண்ணனூர் என்னும் சான்ரேர், ''ஒண்ணுதல் மகளிர் ஓங்குகழிக் குற்ற கண்ணே ரொப்பின் கமழ்நறு நெய்தல், அகல்வரிச் சிறுமனே அணியும் துறைவ[7]'' என்று புகழ்ந்தோதுகின்ருர். இவ்வாறு

---

1. சிறுபஞ்ச. 30. 2. புறம். 144. 3. நற். 283.
4. பதிற். 30. 5. ஐங். 96. 6. ஐங். 188.
7. நற். 283.

புலவர் பலரும் பாராட்டிப்பாடும் புகழ்பெற்ற இந்நெய்தலின் சிறப்பு, சங்க இலக்கியங்களில் பரந்து கிடத்தலை நோக்காது, நீலோற்பலம் என வடவர் கூறும் நீலமலரையும் இதனையும் ஒன்றாகச் சிலர் கருதுகின்றனர். ''பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்[1]'' என்பதனைக் கண்டேனும் அவர்கள் இரண்டும் வேறுவேறு வகையின என்று தெளிவார்களாக.

181. நெய்த லுண்கண் நேரிறைப் பணைத்தோள்
பொய்த லாடிய பொய்யா மகளிர்
குப்பை வெண்மணற் குரவை நிறூஉந்
துறைகெழு கொண்கன் நல்கின்
உறைவினி தம்மவிவ் வழுங்க லூரே.

இஃது இக்களவொழுக்கம் நெடிது செல்லின் இவ்வூர்க்கண் அலர் பிறக்குமென்று அஞ்சியிருந்த தலைவி, ''தலைமகன் வரைந்து கொள்ளத் துணிந்தான்'' என்று கூறிய தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: இது சிறைப்புறம். மகளிர் குப்பை வெண்மணற் குரவை நிறூஉம் துறைகெழு கொண்கன் என்றது மகளிர் தம் காதலரொடு ஆடும் இவ்வூரிடத்துத் தனித்தல் அரிது என்பதாம்.

உரை: நெய்தல்மலர் போலும் மையுண்ட கண்களையும், நுண்ணிய இறை பொருந்திய வளையணிந்த பருத்த தோளையு முடையராய்ப் பொய்தல் ஆடிய இளமகளிர் குவிந்த வெண்மணற் கண் குரவை அயரும் துறை பொருந்திய கொண்கன் நம்மை வரையு முகத்தால் தண்ணளி புரிவானாயின், அலராகிய ஆரவாரத்தையுடைய இவ்வூர் உறைதற்கு இனிதாகும், காண் எ. று.

நெய்தல், மகளிர் கண்ணிற்கு உவமையாதல் மேலே கூறினும். பொய்தல், இளஞ்சிறார் பெரிதும் பயின்று விளையாடும் விளையாட்டு

---

1. ஐங். 2.

வகை. ''பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்[1]'' ''பொய்தல் மகளிர் கண்காண இகுத்தந்து[2]'' மீன் முள்ளன்ன வெண்கான் மாமலர், பொய்தல் மகளிர் விழவணிக் கூட்டும்" ''பொய்தலாடிப் பொலிகென வந்து[3]'' என்று சான்றோர் கூறுவர். ''மையாட லாடு மழபுலவர் மாறெழுந்து, பொய்யாட லாடும் புணர்ப்பி னவர்[4]'' என்பதற்கும், ''பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ, எய்திய பலர்க் கீத்த பயம் பயக்கிற்பதோ[5]'' என்பதற்கும் முறையே பரிமேலழகரும் நச்சினார்க்கினியரும் உரைத்த உரைகளால், இது காமக் குறிப்பில்லாத நோன்பாகிய விளையாட்டென்பது தெரிகின்றது. அதனால் பொய்தலாடும் இளைய மகளிர் மறை புலப்படாமல் நிறுத்தும் நிறையின்றி, அறிந்ததனை அறிந்தாங் குரைக்கும் வாய்மையுடைமை பற்றி, பொய்யாமகளிர் என்றார் எனவுணர்க. இவர்களை ''மறையெனல் அறியா மாயமில் ஆயம்[6]'' என்றார் பிறரும். குரவை, மங்கையர் எழுவர் கைகோத்தாடும் விளையாட்டு வகை. ''குரவை யென்பது எழுவர் மங்கையர், செந்நிலை மண்டிலக் கடகக் கைகோத்து, அந்நிலைக் கொட்பநின்றாடலாகும்[7],' என்பதனாலும் அறியப்படும். மணலின்கட் குரவை யயர்தல், ''கொண்ட லிடுமணற் குரவை முனையின்[8]'' என்பதனால் வலியுறும். இனிது என்புழி ஆக்கம் விகாரத்தால் தொக்கது. இதற்கு ஏது கொண்கன் நல்கின் என்பது. ''ஆக்கம் தானே காரண முதற்றே'' 'ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே[9]'' என்பன விதி. குறிப்புவினை இயற்கைப் பொருட்கண் நின்றவழி ஏது வேண்டாமையின் ஆக்கம் சிறுபான்மை வாராமையும் உண்டென்பர் சேனாவரையர். நச்சினார்க்கினியர், வாராவழித் தொக்கதெனவே படும் என்பர். இவற்றுள் நல்லது கொள்க. அழுங்கல் ஓசை; ஈண்டு, அலர் மேற்று. அம்ம, உரையசை.

---

1. நற். 166. 2. அகம் 26, 156. 3. பரி. 11.
4. கலி. 59. 5. புறம். 243. 6. அகம். 20
7. சிலப். அடி. மேற். 8. அகம். 20.
9. தொல். சொல். 432.

கண்டதும் காதல் கொண்டு காமம் கையிகப்பக் கூடிச்சின்னுள் கழிந்ததும் கைந்நெகிழ்தொழியும் கந்தருவம் போலாது, கண்டதும் காட்சி வாயிலாகக் கருத்திடை முளைக்கும் காதல், இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம் தோழியிற்கூட்டங்களால் வளர்ந்து பெருகி இடையீடுகளாலும், ஒருவழித்தணப்பு வரை பொருட் பிரிவு முதலியவற்ருலும் முறுகி முதிர்ந்து ஒருவர் ஒருவரை யின்றி உயிர் வாழ்தலமையாத நிலையை எய்துவிப்பது களவொழுக்க மாகிய காதலறத்தின் இயல்பு. அந்நிலைமை எய்துங்காறும் தம் தலைமைப் பண்பால் கடல்போற் பெருகும் காதல்வெள்ளத்தைக் கைகடவாத வாறு நிறுத்து நெறிப்படுத்து மாற்ருல் தலைமக்கள் மேன்மை எய்துகின்றனர். கீழ்மக்களல்லராகலின், களவுக் காலத்தே தம்மில் தாம் தமித்துக் கூடுமிடத்து மெய்யுறு புணர்ச்சி எய்துவ தல்லது மகப்பேற்றுக்குரிய புணர்ச்சி எய்துவ திலர். ஒருவரை யொருவர் இன்றியமையாத காமச்சிறப்பு எய்தியதும், சான்ருேர் வாயிலா னுதல் உடன் போக்கினுலாதல் வரைந்து கொள்வர். காமம் சிறப்பது குறித்துத் தலைமகன் வரைவின்கண் விரையாது களவே விரும்பி ஒழுகினமையின் நல்கானுயினன் என வருந்தி யிருந் தாட்குத் தோழி அவன் வரைதலைத் துணிந்தான் என்பதை உணர்ந்து கூறுதலின், கொண்கன் நல்கின் என்றும், வருந்தி யிருக்கும் பொழுதெல்லாம் அலர் எழுமோ என அஞ்சியிருந்தா ளாகலின், இவ்வழுங்கலூர் என்றும், தோழி கூற்ருல் அவ்வச்சம் நீங்கி எழுந்த அலர் இன்னும் எத்துணை எழினும் எழுக எனத் துணிந்தனள் என்பது தோன்ற உறைவு இனிது என்றும் கூறினுள். உறைவு இனிதாகாமைக் குரிய ஏதுவினை அழுங்கலூர் என்றது உட்கொண்டு நிற்றல் காண்க.

பொய்தல்மகளிர் அயரும் குரவைக்கண் காமக்குறிப்பின்மை யின் அக்குறிப்பினை யுடைய காதலர் கூடியாடுதல் அதனுற் பெறப்படாமையின் பழையவுரை குறிக்கும் பொருள் சிறக்கவில்லை. பொய்தலாடிய மகளிர் பின்னும் மணற்கண் குரவையாடும் துறைவ னுகலின், களவின்கட் கூடி நமக்குத் தலையளி செய்த அவன் பின்பு வரைவுவழிக் கூடுதலை விரும்பினுன் என்ருள் என்க. (181)

182. நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழு மார்பன்
அருந்திறற் கடவு ளல்லன்
பெருந்துறைக் கண்டிவ ளணங்கி யோனே.

இது தலைமகள் மெலிவு கண்டு தெய்வத்தா லாயிற்று எனத் தமர் நினைந்துழித் தோழி அறத்தொடு நின்றது.

ப. உரை: நெய்தலும் செருந்தியும் விரவிக் கூறியது அவனது செல்வச் சிறப்புக் கூறியவாறு. பெருந்துறைக் கண்டு இவள் அணங்கியோன் என்றது புனல்தரு புணர்ச்சி.

உரை: பெரிய துறைக்கண்ணே இவளைக் கண்டு வருத்தம் உறுவித்தவன் தடுத்தற்கரிய வலியினையுடைய கடவுளல்லன்; நெய்தலின் மணமிக்க மலரைச் செருந்தி மலரொடு விரவி அழகுறத் தொடுக்கப்பட்ட நறிய மாலையின் மணம் கமழும் மார்பினையுடைய மகனுவான் எ. று.

நெய்தல் மலர் நீல நிறத்தினையும், செருந்திமலர் பொன் னிறத்தினையும் உடைமையால், மணியும் பொன்னும் விரவியது போல் அழகுறுதலின், நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக் கைபுனை நறுந்தார் என்ருர். நெய்தல் நீலநிறமுடைமை "நீனிற நெய்தல் நிரையிதழ் பொருந்த[1]" என்றும், "மணிநிற நெய்தல்[2]" என்றும் வருவனவற்ருலும், செருந்தி, பொன்னிறத்ததாதல், "பொன்னடர்ந் தன்னஒள்ளிணர்ச்செருந்தி[3]" என வருதலாலும் உணரப்படும். "தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக்கிளவி, உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்[4]" என்றமையின், அணங்கியோன் என உயர்திணை வாய்பாட்டாற் கூறினுர். "ஆவோ வாகும்[5]" என்றதனுல், அணங்கியோன் எனப்பட்டது. செருந்தியொடு என்புழி ஒருவினையொடு உயர்பின் வழிவந்தது. உயர்பு பொன்

1. நற். 382 2. ஐங். 96. 3. அகம். 280.
4. தொல். சொல். 4 5. ஷ 211

னெனச் சிறந்து பொலிதல். தெய்வமெனத் தமர் கருதியதனை மறுத்து மகன் எனத் துணியக் கூறுதலின் கடவுளல்லன் என்ருர். ''தன்மை சுட்டலு முரித்தென மொழிப, அன்மைக் கிளவி வேறிடத் தான[1]'' என்பது விதி.

நீர்த்துறைக்கண் அணங்கு உறையும் என்னும் உலகுரையால் தம் மகள் நீராடியவிடத்து அணங்குற்ருல் ஆதல் வேண்டும் எனத் தலைமகள் மேனி மெலிவு கண்டு தமர் நினைந்து கூறியதனைக் கொண்டு கூறுதலின், பெருந்துறைக்கண்டு இவள் அணங்கியோன் என்றும், பெருந்துறைக்கண் வெண்மணற் பரப்பில் யாம் விளையாடி நின்றேமாக, நெய்தற் பூக் கொண்டு நும்மகள் தன்பாவைக் கணியத் தந்து நீங்கினு ேனோர் நறுந்தார் கமழும் மார்பன் உளன்; இஃது அறிவறியாக் காலத்து நிகழினும், அறிவதறியும் இக் காலத்துக் ''கொண்டார்க் குரியர் பெண்டிர் என்பதும், உற்ருர்க் குரியர் பொற்ருெடி மகளிர் என்பதும்'' நினைந்து, அவனை வழிபடாதொழிதல் குலத்துக்கு வடுவாமெனக் கருதி வேறு பட்டாளாக, அதனை யறியாது, பெருந்துறைக் கடவுளால் ஆயிற் றெனப் பிழைபடக் கருதினிர் என்பாள், அருந்திறற் கடவுளல்லன் என்றும், அவன் கடவுள் என்பதனை மறுத்து மக்களினத்து மகன் என்றற்கு ஏதுக் கூறுவாள், கடவுளாயின், கைசெய்யப்படா இயற்கை வனப்பும், இயற்கை மணமும் உடையனும்; அவன் அன்ன னல்லன் என்பாள், கைபுனை நறுந்தார் கமழும் மார்பன் என்றும் கூறினுள்.

பொன்னெனச் சிறந்து நெய்தலினும் மிக்குப் பொலியும் செருந்தியினை உயர்பின் வழித்தாய ஒருவினையொடுக் கொடுத்துப் பிரித்தாங்கு, முற்கூருது பிற்கூறியதனுல், அவன் தந்தது நெய்தற்பூ என அறிக. எனவே, இதனுல் பூத்தரு புணர்ச்சி யாகிய ஏதீடு கூறிய வாறும், மார்பன் எனச் சிறப்பித்தமையால், அவன் மார்பு கூடிய தாகிய உண்மை செப்பிய வாறுமாம். பல ராடு துறைக்கண் இவளொருத்தியை வரைந்து அணங்கிற்று என்றல் நிரம்பாது என்றற்கு பெருந்துறை என்றும், இவள் உற்ற

1. தொல். சொல். 25.

மெலிவு தீர்த்தற்குத் தம்மால் இயன்றன எல்லாம் முயன்றும் தீராமை கண்டு மயங்கினர் என்றற்கு, அருந்திறற் கடவுள் என்றும், ''கைபுனைந்தியற்றுக் கவின்பெறு வனப்[1]'' புடைமை கடவுட்கு இயல்பாகலின், அன்ன னல்லாத தலைமகனை கைபுனை நறுந்தார் கமழும் மார்பன் என்றும் எடுத்துக் கூறினாள். இஃது ஒருவகையால் ஏத்தலுமாம். ஆகவே, இவ் வறத்தொடுநிலை ஏதீடும், உண்மை செப்பலும், ஏத்தலும் விரவி நின்றவாறு என உணர்க

இனி, ''நாற்றமும் தோற்றமும்[2]'' என்ற சூத்திரத்துக் களம் பெறக் காட்டினும் என்புழி, இதனைக்காட்டி இது வேலனை முன் னிலையாகக் கூறியதென்பர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். வெறியா ட்டயரும் வெவ்வாய் வேலனை முன்னிலையாகக் கூறிய தாயின், அவன் முருகென் றுதல், கழங்கிற் றெளிக என்றுதல் கூறுத லின்றி, பெருந்துறைக் கடவுள் எனப் பிறழ்து கூற லின் மையின், அது பொருளன்று என்பர். (182)

183. கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
குறும்பொறை நாடன் நல்வய லூரன்
தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
கடும்பகல் வருதி கையறு மாலை
கொடுங்கழி நெய்தலுங் கூம்பக்
காலை வரினும் களைஞரோ விலரே.

இது, வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்று ளாகிய தலை மகள் மாலைக்குச் சொல்லியது.

ப.உரை : பண்டையிற் கடும்பகல் வருதி என்றது, பண்டு வரும் காலத்திலே வந்தாற் போலப் பிறர்க்குத் தோன்றக் கடும் பகற் கண்ணே வாரா நின்றாய் எ.று.

---

1. முருகு. 17 2. தொல் பொ. 112.

உரை : கையறுவிக்கும் மாலைப் பொழுதே, கூட்டமான அருவிகள் பாயும் கானம் பொருந்திய நாடனும், சிறிய குன்றுகளை யுடைய நாடனும், நல்ல வயல்கள் பொருந்திய ஊரனும், தண்ணிய கடனிலத்தையுடைய சேர்ப்பனுமாகிய தலைமகன், பிரிதலால் நெறிபிறழ்தல் அமையு மாயினும் பண்டே போல் இன்றும் கடும் பகற் கண்ணே வாரா நின்ருய்; அஃது ஒழிந்து வளைந்த கழிக்கட் பூத்த நெய்தல் இதழ் குவியக் காலை வரினும் வருக ; வரின் நின்னை விலக்குவார் இலர். எ.று.

கான்கெழு நாடன், குறும்பொறை நாடன், நல்வயலூரான், கடற் சேர்ப்பன் என்றது, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நானில வளமு முடையன் என்றற்கு. ''நாட னென்கோ ஊர னென்கோ, பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்ப னென்கோ[1]'' என்ருர் பிறரும். வளமில்லாத நிலமாகலின், பாலையைக் கூருராயினுர். பிரிந்தென என்றது, செய்தென வென்னும் வினையெச்சம் ; இது, ''முடிக்குஞ் சொல்லான் உணர்த்தப்படும் தொழிற்குத் தன் முதனிலைத்தொழில் காரணம் என்பதுபட வரும்[2]'' என்ப வாகலின், பிரிதலால் என்று உரைக்கப்பட்டது. ''மெல்லம் புலம்பன் பிரிந்தெனப் பல்லித ழுண்கண் பாடொல் லாவே[3]'' என்று பிறருங் கூறுதல் காண்க. வெய்யிலின் வெம்மை திகழும் காலமாகலின், கடும்பகல் என்ருர். கையறுமாலை கையறு விக்கும் மாலை; பிறவினைப் பொருட்டு ; ''கையற்ற கங்குலான்[4]'' என்ருர்போல. ஓகாரம், பிரிநிலை. உம்மை, முதலது இசை நிறையும், பின்னது எதிர் மறையு மாம். முன்னதைச் சிறப்பு எனினு மாம், நெய்தற்கு அது சிறந்தமையின். நெய்தற் குரியது அன்மையின், மாலை கூறியது திணைமயக்கம் ''திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே[5]'' என்பது விதி.

தனியவரை முனிவு செய்யும் இயல்பிற் ருகலின், கையறுமாலை என்றும், வைகறைக்கண் மலரும் நெய்தல் மாலையிற் கூம்புதல்

---

1. புறம். 49. 2. தொல். சொல். சேஞ 228. 3. குறுந். 5
4. கலி. 123. 5. தொல். பொ: 12

இயல்பாதல் பற்றிக் கொடுங்கழி நெய்தலுங் கூம்ப என்றும் கூறினுள். ''வாலிழை மகளிர் உயிர்பொதி யவிழ்க்கும், காலை யாவ தறியார் மாலை யென்மனுர் மயங்கி யோரே[1]'' என்றும், ''நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுகக் கல்சேர் மண்டிலம்[2]'' என்றும் சான்ருேர் கூறுமா றறிக.

இயற்கைப்புணர்ச்சிக்கண், தான் அவனைத் தனித்துக் கூடியது நினைந்து குறும்பொறை நாடன் என்றும், கூடியோன் பிரிந்துழித் தான் பிரிவாற்றி அவன் சொல் தேறியிருந்தமை நினைந்து கான்கெழு நாடன் என்றும், கூட்டமெய்துமிடத் தெல்லாம் ''முலையொடு முனிந்தான் போலவும், தோளொடு துவண்டான் போலவும்'' இன்பம் சிறக்குமாறு ஒழுகிய திறம் நினைந்து நல்வய லூரன் என்றும், இவ்வாறு ஒழுகியோனது பிரிவாற்ருது தான் அலமரும் வண்ணம் பிரிந்ததனுல் கலங்கி மெலிந்தமையின், தண்கடற் சேர்ப்பன் என்றும் கூறினுள். கூறவே, அன்பொடு புணர்ந்த ஐந்திணை இன்பவொழுக்கம் சிறக்க ஒழுகியோன் இதுபோது அது கழிந்து துன்பம் சிறக்க ஒழுகுகின்ருன் என்பது கூறினுளாம்.

இனி, மாலையே, பண்டெல்லாம் வந்தது போல நின்முறை பிழையாது இன்றும் வந்தனை; நின்னைப் போல் அவரும் பண்டெல்லாம் எனக்கு இன்பமே சிறக்குமாறு ஒழுகியது போல முறை பிழையாது இன்று வந்து ஒழுகுவாராயின் அஃது அமையும். அது மாறி, துன்பம் சிறக்க ஒழுகுகின்ருர் என்றற்கு, கடும்பகல் வருதி என்றும், நெறிபிழையாரே நெறிவழீஇயினுரை அந்நெறிக்கண் நிறுத்தும் நீர்மையராவர் என்னும் முறைமையால், தலைமகன் தன் பிரிவால் நெறிபிழைத்தான் என்பாள், பிரிந்தென என்றும், அந் நீர்மை பிழைத்தமையின் அவர் இனி நெறிவழுவினும் நின்னை நிறுத்தும் கடப்பாடிலர் என்பாள், காலை வரினும் களைஞரோ இலர் என்ருள். இனிக் காலை மாலைகளில் அரும்பி மலரும் காமநோயைத் தீர்க்கும் கடப்பாடுடையோன், அவற்றைப்போல் ஒருநிலையே செம்மையனுயின் தீர்த்தல் தகும்; பண்டெல்லாம் பிரியாதொழுகி,

---

1. கலி 119. 2 நற். 187.

இன்று பிரிந்துறைவோன் செம்மைநிலை வழிஇயினமையின், நின்னால் எய்தும் இவ்வருத்தம் காலையே தோன்றினும் விலக்கு வாரில்லை என்றாள் என்றுமாம்.

காலையில் மலர்தற் குரிய நெய்தல் மலராது கூம்புமாறு காலை வரினும் என்றது, தன் வரவு பிழைத்தலேயன்றி, தன் வரவு கண்டு பயப்பா டெய்தும் பிறவும் பிழைக்குமாறு செய்தல் அறனன்றென்பது முடித்தற்கு. வரினும் என்புழி உம்மை, வாராமை முடிக்கு முகத்தால் அவளது ஆற்றாமையின் சிறப்புணர நின்றது. இது துன்பத்துப் புலம்பல்.

''வரைவிடை வைத்த காலத்து வருந்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினும், உரையெனத் தோழிக்கு உரைத் தற் கண்ணும், தானே கூறுங் காலமு முளவே[1]'' என்றவிடத்து, ''வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்'' என்புழித் ''தொகுத்த மொழியின் வகுத்தனர் கோடல்'' என்ற தந்திர வுத்தியால் இது தலைவி தானே கூறும் கூற்றா யமைந்தது.

இனிக் ''கடும்பகல் வருந்திக் கையறு மாறு மாலை நெய்தலும் கூம்பக் காலை வரினும் களைஞரோ விலரே'' என்ற பாடத்துக்குக் கடும்பகல் முற்றும் வருந்திச் செயலற்று இனையும்படி நெய்தல் கூம்ப, மாலைப்பொழுது, காலை வருவதாயினும், எம்மைத் துயரி னின்றும் விலக்குவாரோ இலர் என்பது பொருளாகக் கொள்க. கொள்ளின், இதனைக் காட்டி, ''பருவ வரவின்கண் மாலைப்பொழுது கண்டு ஆற்றாளாய தலைவி தோழிக்குக் கூறியது; நெய்தற்கண் மாலை வந்தது[2]'' என்று நச்சினார்க்கினியர் கூறுவது பொருந்து மென உணர்க. (183)

184 நெய்த லிருங்கழி நெய்தல் நீக்கி
மீனுண் குருகினங் கான லல்கும்
கடலணிந் தன்றவ ரூரே
கடலினும் பெரிதெமக் கவருடை நட்பே.

---

1. தொல். பொ. 112. 2. ஷை. 12.

இது, வாயில் வேண்டி வந்தார், தலைமகன் அன்பு உடைமை கூறியவழி வாயின் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

ப. உரை: நெய்தல் நீக்கி மீனுண் குருகினம் கானலில் அல்கும் என்றது பொதுமகளிரிடத்து ஊடல் நீக்கி இன்பம் நுகர்ந்து ஆண்டுத் தங்குவான் என்பதாம்.

உரை: நெய்தல் நிலத்திலுள்ள பெரிய கழியிற் பூத்த நெய்தலை நீக்கி, அதன் அருகில் மேயும் மீனையுண்ணும் குருகு தன் இனத்தோடுக் கூடிக் கானலின்கண் தங்கும் கடலால் அழகு பெற்றது அவருடைய ஊர்; அவரது நட்பு எமக்கு அக்கடலினும் பெரிதா யிருந்தது, காண் எ. று.

நெய்தல், முதலிற் கூறும் சினையறி கிளவி யாய ஆகுபெயர். மீனுண்குருகு மீன்குத்திப் பறவை. இனம், கூட்டம். கடல் என்புழி, மூன்றனுருபு தொக்கது. சுட்டும் ஆக்கமும் வருவிக்கப் பட்டன. ''கறைமிட றணியலும் அணிந்தன்று[1]'' என்றார் பிறரும்.

உள்ளுறையால் தலைமகனது புறத்தொழுக்கம் பொருது வாயில் மறுக்கும் தலைமகள், காதலர் ''காதல் தானும் கடலினும் பெரிதே[2]'' என்ற வாயில்களின் கூற்றினைத் தழீஇ மேற்கொண்டு, அந் நட்புக் கடலினும் பெரிதாதற்கு அவரூர் கடலணிந் திருக்கும் சார்புடைமையே யன்றி எம்பாற் கொண்ட அன்புடைமை அன் றென்பாள், கடலணிந் தன்றவர் ஊரே என்றும், கடல் அவர் ஊரிற் பெரிதாயினும் ஊர்க்குப் பயன்படாது அணிமாத்திரையாயது போல் அவரது நட்பு எமக்குப் பயப் பாடின்றி யாம் மேனி வேறுபடுமாறு செய்த தென்பாள், கடலினும் பெரிது என உறழ்ந்து கூறினள். ஆகவே, அணிந்தன்று பெரிது என்பன பயப்பாடின் மையும் அன்பின்மையும் தோன்ற நின்றவாறு காண்க. இனி இறப்பப் பெரிதாயவிடத்து ஒருவர் பாங்கில் நில்லாது எல்லார்க்கும்

---

1. புறம். 1. 2. நற். 166.

பரந்து நிற்கும் பண்பு பெறுதலின், அவர் நட்பு எம்பால் அகப்பட்டு நில்லாது, பரத்தையர் பலர்க்கும் பரந்து பயன்படுவ தாயிற் றென்றுமாம்.

ஆகவே, அவனுடைய ஊர் கடலணிந்த தாகலின், அதன்கண் வாழ்வாராய பரத்தையர், கழிப்பூக் குற்றும் கானல் அல்கிக் குரவை யயர்ந்தும், அவனெடு கூடி மகிழ்வாராக, யாம் கடலினும் பெரிதாய நட்புடையேம் என வாயில்களாற் கூறப்படும் கூற்று மாத்திரையே பெற்றேமல்லது பிறிதில்லை; இஃதன்ரே அவ னுடைய அன்புடைமை யிருந்தவாறு என அவனது அன்பின்மை சுட்டி வெளிப்படையாக வாயில் மறுத்தவாறு உணர்க. இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்ருமை.

நெய்தலை நீக்கி மீனுண்ட குருகு தன் இனத்தோடு கூடிக் கானற்கண் தங்கும் என்றது, தன் மனையின் நீங்கிப் பரத்தையர் சேரிக்கண் இன்பநுகர்ந்த தலைமகன், அவர் கூட்டத்தில் தோய்ந்து ஆண்டே தங்குகின்ரு ஞதலின் அவன்பொருட்டு வாயில் வேண்டு வது என்னை எனக் குறிப்பாய் வாயில் மறுத்தவாறு.

மீனுண் குருகு இனங்கானல் அல்கும் என்பது பாடமாயின் மீனுண்ட குருகு இளைய மரங்கள் செறிந்த கானற் சோலைக்கண் தங்கும் என உரைத்து, கானலில் உள்ள மரஞ்செடிகளின் இளமை கானற் கேற்றப்பட்டதாக உரைக்க. (184)

185. அலங்கிதழ் நெய்தற் கொற்கை முன்றுறை
இலங்குமுத் துறைக்கு மெயிறுகெழு
துயர்வாய்
அரம்போ ழவ்வளைக் குறுமகள்
நரம்பார்த் தன்ன தீங்கிள வியளே.

இஃது ஆயமகளிருள் நின்ஞல் நயக்கப்பட்டாள் யாவள் என வினவிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

உரை : அசைகின்ற இதழ்கள் பொருந்திய நெய்தல் நிறைந்த கொற்கை நகரின் முன்றுறைக்கண் பெறப்படும் விளங்குகின்ற முத்துப் போலும் பற்கள் பொருந்திய சிவந்த வாயினையும், அறத்தாற் போழப்பட்ட அழகிய வளையினையுமுடைய இளையவள் யாழிசை போலும் தீவிய சொற்களை யுடையளாவாள் எ.று.

அலங்கிதழ், அசைகின்ற இதழ். "அலங்குகுலைக் காந்தள்[1]" என்றும், "அலங்குசினை[2]" என்றும் வருதல் காண்க. கொற்கை, தண்ணான்பொருநை (தாம்பிரபரணி) கடலொடு கலக்குமிடத்தே இருந்த நகரம்; இப்போது சிற்றூராய் உளது. தொண்டை நாட்டுக்குப் பவத்திரியும், சோழ நாட்டுக்குப் பூம்புகாரும், சேர நாட்டுக்கு முசிறியும் போலப் பாண்டி நாட்டுக்குக் கொற்கை சிறந்த கடற்கரை நகரமாய்ச் சங்ககாலத்தே விளக்கமுற் றிருந்தது. பிளினி முதலிய மேனாட்டு யவனர்களின் குறிப்புக்களில் இந்நகரமும் காணப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் போதிய அளவு கிடைப்பதற்கு முன் நம் நாட்டின் வரலாறு எழுதிய ஆங்கிலப்புலவர் கேட்போர் நகைக்கும் முறையில் செய்திகள் சில குறித்துள்ளனர் ; பாண்டிநாட்டு வேந்தர்கள் தொடக்கத்தில் கொற்கையையே தலைநகராகக் கொண்டிருந்தனரென்றும், பின்பே மதுரை அவர்கட்குத் தலைநகராயிற் றென்றும் அவர்கள் குறித்துள்ளனர்[3]. நல்ல காலமாக இதுபோன்ற செய்திகள் பல ஆங்கிலத்திலேயே இருந்து போயின. தமிழில் எழுதியிருந்தால் இளஞ் சிறுவர் பலரும் அக்கூற்றை எள்ளி நகையாடியிருப்பர். சங்க இலக்கிய காலத்தேயே கொற்கையும் மதுரையும் பாண்டி நாட்டுக்குத் தலைநகரங்களாக இருந்தன என்பதை, 'பேரிசை கொற்கைப் பொருநன் வென்வேல், கடும் பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன், மலைபுரை நெடுநகர்க் கூடல்[4]" என வரும் அகப்பாட்டே கூறுகின்றது ; இஃது அவர்கட்குத் தெரியா

1. நற். 359 2. அகம் 236.
3. V. Smith's Early History of India 4th Edn. p. 468 ; Iyengar's History of the Tamils p. 242.
4. அகம் 296.

மையால் பின் வந்த அறிஞர் அவர்கள் கூற்றை மறுப்பாராயினர்[1].

சங்ககாலப் பாண்டியர்க்குப்பின் பாண்டிநாடு களப்பிரராட்சியில் சீரழிந்து இடைக்கால பாண்டியராட்சியில் தலைதூக்கிற்று; இவருள் முன்னோன் பாண்டியன் கடுங்கோ[2]; இவன் குடநாட்டு வேந்தர் குடியில் தோன்றிய கடுங்கோக்களின் வழியினன். அதனால் கொற்கையைச் சூழ்ந்த நாடு குடநாடு என்றும், கடுங்கோமண்டலம் என்றும் பெயர் பெறுவதாயிற்று. அப்பகுதியிலுள்ள கல்வெட்டுக்கள் கடுங்கோ மண்டலமான குடநாட்டுக் கொற்கை[3] என்றும், கிரேக்கர் குறிப்புக்கள் "முத்துப்படு பெருந்துறை[4]" என்றும், கூறுகின்றன. பின்வந்த சோழர் காலக் கல்வெட்டுக்கள், கொற்கையை இராசராசப் பாண்டி மண்டலத்துக் குடநாட்டுக் கொற்கை[5] என்றும் உத்தம சோழ வளநாட்டுக் குடநாட்டுக் கொற்கையான மதுராந்தக நல்லூர்[6] என்றும் குறிக்கின்றன. இக்கல்வெட்டுக்களால் கொற்கை நகரமே ஒருகால் மதுராந்தக நல்லூர் என்றும், பிறிதொருகால் மதுரோதய நல்லூர்[7] என்றும் பெயர் பெற்றமை தெரிகிறது.

கொற்கை நகரம், சங்க காலத்தே முத்துக்குப் பெயர் சிறந்து விளங்கிற்று. "மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும் கொற்கையம் பெருந்துறை முத்து[8]" எனவும், "வினை நவில் யானை விறற்போர்ப் பாண்டியர், புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்றுறை, அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து[9]" எனவும் "ஈண்டுநீர் முத்துபடு பரப்பின் கொற்கை முன்றுறை[10]" எனவும்

---

1. K. A. N. Sastry's Pandya Kingdom p. 15.
2. Ep. Indi Vol. xvii. p. 191.
3. Annual report of the Madras Epigraphy No. 391 of 1929—30
4. K. A. N. Sastri's Foreign Notices of South India p. 68
5. A.R.No. 464 of 1929-30. 6. A.R.No. 408 of 1929-30.
7. A. R. No. 425 of 1929-30. 8. அகம். 27.
9. அகம். 201. 10. நற். 23.

சான்றோர் பாராட்டிக் கூறுவர். மேனாட்டு யவனர் குறிப்பிலும் இச்செய்தி சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது[1]. கடலில் முத்துக் குளிப் போர்க்குச் சுருமீன்கள்[2] பெருந்தீங்கு செய்தொழுகினமையின், அவற்றை விளக்கிக் கடலழுவம் புகுந்து வலம்புரி முத்துக்கொணர் வது கொற்கை நகரத்தே பேராரவாரமாக இருக்கும் என்பாராய், ''இலங்கிரும் பரப்பின் எரிசுரு நீக்கி, வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர், ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக், கலிகெழு கொற்கை எதிர்கொள இழிதரும்[3]'' என்று சேந்தன் கண்ணனார் சிறப்பித்துரைக்கின்றார். இவ்வாறு இருபது இருபத்து மூன்று நூற்றாண்டுகட்கு முன்னே விளங்கிய முத்துக் குளிக்கும் தொழில் இரண்டு மூன்று நூற்றாண்டுகட்கு முன் நிலவிய நாயக்க மன்னர் ஆட்சி வரையில் சிறந்த அளவில் இருந்திருக்கிறது. இத்தொழிலால் பாண்டிநாட் டரசிற்கு நல்ல வருவாயும் இருந்தது. முத்துக்குளிப்பார்க்கு விதிக்கப்பட்டிருந்த வரி சலாபத் தேவை எனப்படும் என்றும், இதனைக் குடநாட்டுள் வாழ்பவர் செலுத்த வேண்டும் என்றும், அந்நாளைய அரசு ஆணையிட்டுளது[4] என ஆற்றூர்க் கல்வெட்டு அழகாகக் கூறுகிறது.

குறுமகள், இளம்பெண். உறைக்கும் என்பது ''ஆறுறவை யும் அன்ன பிறவும்[5]'' என்பதனால் அமைந்து ''தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே[6]'' என்பதனால் உவமப்பொருள் தருவ தாயிற்று. நரம்பு, யாழ் நரம்பு. இன்சொல்லுக்கு நரம்பின் இசையைக் கூறுதல் மரபு; ''வடிப்புறு நரம்பின் தீவிய மொழிந்தே[7]'' என்று பிறரும் கூறுதல் காண்க.

இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைமகன், தலைமகளின் மெய் தொட்டுப் பயின்றும், இடம்பெற்றுத் தழுவியும், இடையூறு கிளந்தும், நீடுநினைந் திரங்கியும் கூடுதல் உறுத்தகாலை, அவள் கூட்டத்திற்கு உடம்படுமுகத்தால் முறுவலித்தமை தன் உள்ளத்து

1. Rev. Caldwell. Int. 99. 2. Shark. 3. அகம். 350
4. A. R. No. 432 of 1929–30. 5. தொல். பொ. 286.
6. தொல். பொ. 292. 7. அகம். 142.

நீங்காது நின்று திகழ்தலின், எயிறுகெழு துவர்வாய் என்றும், உறுதல் முதலிய நான்கு புணர்ச்சியும் பெற்று, செவிப்புணர்ச்சி விரைவிற் பெருது பெயர்த்துப் பெற்று மகிழ்ந்த சிறப்புத் தோன்ற, தீங்கிளவியளே என்றும் கூறினன். இதனுல் களவுக் காலத்து மெய்யுறு புணர்ச்சி யென்பது மெய்தொடுதல் முதலிய ஐந்துமே யென அறிக. ''கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள[1]'' எனச் சான்ருேர் கூறுவது காண்க. பிற்காலத்தவரால் இவ்வேறுபாடு பகுத்துக் காட்டப்படாமற் போனது தமிழினத்தின் தவக்குறை.

இது ''மெய்தொட்டுப் பயிறல்[2]'' என்ற சூத்திரத்துத் ''தண்டாது இரப்பினும்'' என்றதற்கு இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் தவிரா திரப்பினும் எனக்கொண்டு அதன்பால் அமைக்கப்படும். (185)

186 நாரை நல்லினம் கடுப்ப மகளிர்
நீர்வார் கூந்த லுளருந் துறைவ
பொங்குகழி நெய்த லுறைப்ப வித்துறைப்
பல்கால் வரூஉந் தேரெனச்
செல்லா தீமோ வென்றனள் யாயே.

இது, பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனைத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

ப. உரை : நாரையினம் கடுப்ப மகளிர் நீர்வார் கூந்தல் உளரும் துறைவ என்றது தம்மிடத்துக் குற்றம் நீக்கும் மகளிரை யுடைய துறைவ எ. று.

உரை : நாரையினது நல்ல கூட்டத்தை யொப்ப மகளிர் நீர் ஒழுகுங் கூந்தலைப் புலர்த்தும் துறைவனே, நீர் மிகுந்துள்ள கழி களில் நெய்தல்கள் நீர்த்துளிகளைச் சொரியும் இத்துறைக்கண்,

1. குறள் 1101. 2. தொல். பொ. 102.

''பல காலும் தேர் வாராநின்றது'' எனக்கூறி, ''இனிப் புறத்தே செல்லற்க'' என்று எம்முடைய தாய் இற்செறித்தனள், ஆகலின், நீ ஏற்ற தொன்றனைச் செய்வாயாக எ. று.

வார்தல், ஒழுகுதல் உறைத்தல், துளித்தல். பொங்குகழி என்புழி, இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது, செல்லாதீமோ என்றது ஏவற்பொருண்மைக்கண் வந்த எதிர்மறை முற்றுவினைத் திரிசொல். நீ ஏற்ற தொன்றனைச் செய்க என்பது கூற்றெச்சம். நாரை நல்லினம் கடுப்ப என்றார். தம் சிறகுகள் நீரால் நனைந்தவழி, புலர்தற்பொருட்டு உதறி நாரை வயிற்றில் அடித்துக் கோடற் போல, ஓரை மகளிர் தம் கூந்தல் நனைந்தவழி, புலரத் துவட்டித்தம் வயிறலைத்துக் கொண்டு ஏகுதல் பற்றி, ''நீரலைக் கலைஇய கூழை வடியாச் சாஅய் அவ்வயி றலைப்ப உடனியைந்து, ஓரை மகளிரும் ஊரெய்தினரே [1]'' என்று பிறரும் கூறுமாற்றால் அறிக.

இத்துறைக்கண் தேரொன்று பலகால் வருஉம் என்றது, மேல் செல்லா தீமோ என மறுத்தற்கு ஏதுக் கூறியவாறு. ஆகவே, வருவது நின் தேர் என யாய் அறிந்தனளாகலின், நீ நினக்கு ஆவது செய்க என்று கூறினள் என்றவாரும்.

நீராடியதனால் நாரைகளைப் போல மகளிர் தம் கூந்தலின் ஈரம் கெடப் புலர்த்தும் துறைவ என்றது நின்னோடு உண்டாகிய நட்பினால் இவட்கு வருத்தம் உண்டாகாதவாறு வரைந்து கொள்க எனக் குறிப்பாய் வரைவு கடாயவாறு.

களவின்கண், தலைமகன் தேரூர்ந்து வருதல் அமையும் என்பது ''தேரும் யானையும் குதிரையும் பிறவும், ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப [2]'' என்பதனால் அறிக. (186)

---

1. நற். 398. 2. தொல். பொ. 212.

187\. நொதும லாளர் கொள்ளா ரிவையே
எம்மொடு வந்து கடலாடு மகளிரும்
நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்
உடலகம் கொள்வோரின்மையின்
தொடலைக் குற்ற சிலபூ வினரே.

இது, தோழி கையுறை மறுத்தது. கையுறை யாவது குறையுறுவார் செல்லுமாறுபோலத் தலைமகன்கைக்கொண்டு செல்லும் தழையும், கண்ணியும், பவழக்கொடியும், முத்தும் பிறவுமாம்.

உரை: பெரும, எம்முடன் போந்து கடலாடும் மகளிர் நெய்தலே தலைமைப்பட விரவித் தொடுத்த இப்பகைத்தழையினை மணற்கண் நிறுவியாடும் பாவைக்கும் புனையார்; வேறு பூக்கள் விரவாமல் முற்றும் நெய்தலே தொடுந்து அணிந்து கொள்வோரும் இலராகலின், தொடலை தொடுப்போரும் இதனிற் சில பூவே கொள்வர்; ஆகலின், இதனை யாம் ஏற்பின் நொதுமலாளரும் ஆராய்தற் கிடனும் எ. று.

நொதுமல், பகைமையும் கேண்மையுமில்லாத நடுவு நிலைமை. கொள்ளாமை, ஏலாமை. பகைத்தழை, நிறத்தால் வேறுபட்ட மலர்களாலும் குழையாலும் தொடுக்கப்பட்ட தழையுடை; நீலநிறமுடைய நெய்தலே தொடுப்பின் அழகு பிறவாமை கருதி, செருந்தியே, புன்னையே, அடும்பே என்று பல வேறு பூக்களையும் பச்சிலைகளையும் விரவித் தொடுத்தலின், பகைத்தழை எனப்பட்டது. பொன்னிறமும் வெண்ணிறமும் பசுமைநிறமும் கொண்ட பல பூக்களும் பச்சிலையும் விரவிக் கிடப்பினும் இடையே மணிபோற் கிடந்து மிளிர்தலின், நெய்தலம் பகைத்தழை என்றார். ''கொடுங் கழை நிவந்த நெடுங்கால் நெய்தல், அம்பகை நெறித்தழை யணி பெறத் தைஇ[1]'' என்றார் பிறரும். ''நெய்தல் நறுமலர் செருந்தி யொடு விரைஇ[2]'' என்றும், ''அடும்பி னுய்மலர் விரைஇ நெய்தல், நெடுந்தொடை நீர்வார் வேய்ந்த கூந்தல்[3]'' என்றும் "பாசடைக்

1\. நற். 96 2. ஐங். 182 3. குறுந் 401

கலித்த கணைக்கால் நெய்தல் பூவுடல் நெறிதரு தொடலை'' என்றும் வருவனவற்ருல் செருந்தி முதலாயினவற்றை நெய்தலொடு விரவித்தொடுத்தல் அறிக. நெய்தலம் பகைத்தழை, விரிக்கும் வழி விரித்தல். உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது.

உடலகம், முழுதும் உடலகம் கொள்வோர் இலர் என்றதனுல், தொடலை கொள்வோர் உளர் என்பது எய்தவே, அதனை விலக்கி ஒருமருங்கு தழீஇ யுரைப்பாள், தொடலைக் குற்ற சில பூவினர் என்றும், இவ்வாறு, எம்மோடு ஆடும் மகளிராலும், தொடலை தொடுப்போராலும் விலக்கப்பட்டதனை யாம் ஏற்பின், அயலார் கண்டு இவர்கட்கு இவை ஆயினவாறு என்னையென ஆராய்வர் என மறுப்பாள், நொதுமலாளர் கொள்ளார் இவையே என்றும் கூறினுள். கொள்ளாமை, ''கொள்ளார் அறிவுடையார்[2]'' என்ருர் போல. காதலராய மகளிரும், தாயரும் ஏற்பினும் என்பது பட வரும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது.

''நாற்றமும் தோற்றமும்[3]'' என்ற சூத்திரத்துப் ''பாங்குற வந்த நாலெட்டு வகையும்'' என்புழி ''வகை'' என்றதனுல் அமைத்து இது கையுறை மறுத்தது என்பர் நச்சினுர்க்கினியர்.

(187)

188. இருங்கழிச் சேயிரு வினப்புள் ளாரும்
கொற்கைக் கோமான் கொற்கையம்
பெருந்துறை
வைகறை மலரும் நெய்தல் போலத்
தகைபெரி துடைய காதலி கண்ணே.

இது, விருந்து வாயிலாகப் புகுந்த தலைமகன் தலைவியது இல்வாழ்க்கைச் சிறப்புக் கண்டு மகிழ்ந்து சொல்லியது.

ப. உரை: விடியற்காலை மலரும் நெய்தலைக் கண்ணிற்கு உவமையாகக் கூறிற்று, வந்த பொழுதே மலர்ந்த சிறப்பு நோக்கி

1. நற். 138. 2. குறள். 404. 3. தொல். பொ. 114.

எனக் கொள்க. இருங்கழிச் சேயிரு இனப்புள் ஆரும் என்றது விருந்தினர் நுகர்ச்சி கூறியவாறு எனக் கொள்க.

உரை: கூட்டமாகிய குருகுகள் கரிய கழிக்கண் வாழும் செம்மையான இருமீன்களை யுண்ணும் கொற்கை வேந்தனது கொற்கை என்னும் ஊரின் பெரிய துறையில் வைகறைப் போதின் கண் மலர்தலைச் செய்யும் நெய்தல் போல எம் காதலியின் கண்கள் அழகு மிகவுடையவாயின எ. று.

செம்மை யுடைமையின் சேயிரு என்றார். ''தெண்கழிச் சேயிரு[1]'' என்புழியும் இதுவே கூறிக்கொள்க. கொற்கைக் கோமான் என்றது, பாண்டி வேந்தர்க்குரிய சிறப்புப் பெயருள் ஒன்று. ''கொற்கை வேந்தன்[2]'' என்று பிற்காலக் கல்வெட்டுக் களும் பாண்டி வேந்தரைக் கூறுகின்றன. வைகறை, விடியற் காலம். ''விடியல் புலரி வைகறை யென்பன ஒருபொருட்கிளவி[3]'' என்பர் சிவஞான முனிவர். நெய்தல், விடியற்காலத்து மலர்தலை ''வைகறைக் கட்கமழ் நெய்தல்[4]'' என்றும், ''மென்மெலத் தெறு கதிர் இன்றுயிர் பசுவாய் திறக்கும் பேதை நெய்தல்[5]'' என்றும் சான்றோர் கூறுவர். தகை, அழகு. அஃதாவது மலர்ச்சியும் குளிர்ச்சியு முடைமை.

தன்னை நோக்கி வரும் விருந்தைச் சேய்மைக்கட் கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி விருந்துடன்பட்டவழி நன்றுற்றலும் என விருந்தோம்பற் குரிய அறநெறி மூன்றனுள் முதற்கண்ண தாகிய முகத்தான் அமர்ந்து நோக்குதலைச் செய்பவள், தான் விருந்து வாயிலாகப்புக, தன்னைச் சேய்மைக்கட் கண்ட அப்பொழுதே முக மலர்ந்து இனிது நோக்கி னுள் என்பான், தகைபெரி துடைய காதலி கண்ணே என்றும், வந்த விருந்து மலராத முக நோக்கு முன் குழையும் மென்மை யுடைமை பற்றிச் சேய்மையிற் கண்ட துணையேமலரும் சிறப்பினை

---

1. ஐங். 196. 2. T.A.S. Vol. I, Part VI, p. 97.
3. தொல். மு. சூ. விருத்தி 4. முருகு. 73-4 5. நற். 275.

யாப்புறுத்தற்கு ஞாயிற்றின் வரவினைச் செய்மையி னுணர்ந்து வைகறை மலரும் நெய்தலை உவமித்தும் கூறினன். இஃது அன்பு தொக நிற்றல். கொற்கைப் பெருந்துறைக்கண் புள்ளினம் சேயிரு உண்ணும் என்பதனல் தலைமகளது விருந்தோம்பும் மாண்பினைச் சிறப்பித்தமையின், காதலியின் கண்ணை விதந்தோதிப் பாராட்டினன்.

இஃது "அருந்தொழில் முடித்த செம்மற்காலை, விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்[1]" என்பதனல் அமையும். (188)

189. புன்னை நுண்டா துறைத்தரு நெய்தல்
பொன்படு மணியிற் பொற்பத் தோன்றும்
மெல்லம் புலம்பன் வந்தென
நல்ல வாயின தோழியென் கண்ணே.

இது வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வரைவான் வந்துழிக் கண்டு உவகையோடு வந்த தோழி, "நின் கண் மலர்ச்சிக்குக் காரணம் என்?" என்று வினவிய தலைவிக்குச் சொல்லியது.

ப. உரை: புன்னை நுண்டாது உறைத்தரும் நெய்தல் பொன்படு மணியின் பொற்பத் தோன்றும் என்றது, நின் குடிப் பிறப்புப் பண்டையினும் சிறத்தற்குக் காரணமாயிற் றென்று அவன் வரைவு கூறியவாரும்.

உரை: தோழி, புன்னை மலரின் நுண்ணிய துகள் படிந்து கிடக்கும் நெய்தல் பொன்னிடைப் படுத்த நீலமணி போல விளங்கித் தோன்றும் மெல்லிய கடற்கரையையுடைய தலைவன் வரைதற் பொருட்டு வருதலால் என் கண்கள் நல்லவாய் மலர்ச்சி யுற்றன, காண் எ. று.

தாது, துகள். உறைத்தரும் நெய்தல், உதிர்ந்து கிடப்ப விளக்கும் நெய்தல். புன்னைத் தாது பொன்னிறமும், நெய்தல்

1. தொல். பொ. 146

மணி நிறமு டைமையின், அதன் தாது படிந்த நெய்தலே பொன் படு மணியின் பொற்பத் தோன்றும் என்ருர். ''மணியேர் நெய் தல் மாமலர் நிறைய, பொன்னேர் நுண்டாது புன்னேத் தாஅம்[1]'' எனச் சான்ருேர் கூறுதல் காண்க. வந்தென நல்லவாயின என்றதனுல், வரைதற்பொருட்டு வந்தா னென்பது பெற்ரும்.

வரைவிடை வைத்துத் தலேமகன் பிரிந்ததனுல், ஆற்ருமை தோன்றித் தலேவியை வருத்தப் பேதுற் றிருந்தாட்கு அவன் வரைவொடு வந்தமை காண இன்பம் மீக்கூர்ந் தமையின், அதனேத் தலேமகட்கு அறிவிப்பாள், மெல்லம் புலம்பன் வந்தென என்று அவன் வரவும், வரைவு பற்றிய வேட்கை தலேவி யுள்ளத்தே உடனெழுவது கண்டு, நல்ல வாயின என்று அவன் வரைவொடு வந்தமையும் தோழி உணர்த்திஞள். திருமணச் செய்தி தெரிவித்தலின் என்கண் நல்ல வாயின எனத் தலேவி கூற்றைத் தான் கொண்டு கூறிஞள் என அறிக.

வரைவால் தலேமகளின் குடிப்பிறப்புப் பண்டையினும் சிறப் புறுவதனுலும், வரைவு கண்ணிய வரவால் அவளது மேனி வேறுபாடு நீங்கிப் பொலிவுறுதலிஞலும், என்மனம் உவகை மிகுந்தது எனறற்கு இவ்வாறு கூறிஞள் என்றுமாம். புன்னே நுண்டாது படிதலால் நெய்தல் பொன்படு மணியின் தோன்றும் என்றது, தலேமகன் வரைவொடு வந்தமையின் அவன் தொடர்பால் நின் குடிச் சிறப்புறும் என உள்ளுறுத்தவாறு. (189

190 தண்ணறு நெய்தல் தளேயவிழ் வான்பூ
வெண்ணெ லரிநர் மாற்றின ரறுக்கும்
மெல்லம் புலம்பன் மன்றவெம்
பல்லிதழ் முண்கண் பனிசெய் தோனே.

இது, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

---

1. நற். 78.

ப. உரை: அரிவோர் நெய்தற்பூவை நீக்கி வெண்ணெல் அரியும் என்றது, தனக்கு அடுத்தது செய்தலன்றிப் பிறர்க்கு வருத்தம் செய்யான் எனத் தலைமகன் குணம் கூறியவாறும்.

உரை: எம்முடைய பலவாகிய இதழ்களையுடைய பூப்போலும் மையுண்ட கண்கள் நீர் வார்ந்து வருந்துவித்தவன், வெள்ளிய நெல்லறியும் உழவர் குளிர்ந்த நறுவிய நெய்தலின் முறுக்கவிழ்ந்த அழகிய பூவை நீக்கி அந்நெற் பயிரையே அறுக்கும் மெல்லிய கடற்கரையை யுடையோனுவன், தெளிவாக எ. று.

நெய்தற்குச் சிறந்தமையின், தண்ணறு நெய்தல் தளையவிழ் வான்பூ எனச் சிறப்பித்தார். நெல்வயலிடத்து நெய்தலும் உடன் தோன்றி மலர்தல் இயற்கை. ''வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும், அரியலங் கழனி ஆர்க்காடு[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க. வெண்ணெல் நெல்வகை. வான்பூ. அழகிய பூ. மாற்றினர், முற்றெச்சம். பல்லிதழ், தாமரை குவளை முதலிய பூ. தலைவி யுறுப்பினைத் தனதாக உளப்படுத்திக் கூறல் வழுவாயினும், ''தாயத்தின் அடையா வீயச் செல்லா, வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா, எம்மென வரூஉம் கிழமைத் தோற்றம் அல்லா வாயினும் புல்லுவ வுளவே[2]'' என்பதனுல் அமையும் என்க. பனி, வருத்தம்.

தலைமகள் மேனி வேறுபட்டுக் கண் பனித்து நிற்றலைக் கண்ட தாயர், அதற் கேது சூழ்வார் வெறி முதலாயின எடுத்தற்கு எண்ணியது உணர்ந்து அறத்தொடு நிற்கின்ருளாகலின், மெல்லம் புலம்பன் என்றும், அவன் மக்களினத்து மகனே யன்றித் தெய்வ மல்லன் என்பாள், மன்ற என்றும், உள்ளுறையால் அவனது காதல் மாண்பு கூறுகின்றமையின், இவள் இவ்வாறு பனிப்பச் செய்தோன் யாவன் என ஆராயும் தாயர் கூற்றினையே கொண்டு பல்லிதழ் உண்கண் பனிசெய் தோனே என்றும் கூறினுள்.

---

1. நற். 190. 2. தொல். பொ. 221

உண்கண் பனிசெய்தான் எனச் செவிலி முதலாயினுர் பழி தூற்றக் கண்டு பொருத வுள்ளத்தளாய தோழி, கட்டினும் கழங்கினும் ஆராய்ந்து வேலனைக் கொண்டு வெறியயாக் கருதும் தாயர் செயலை அறிந்து அதனை விலக்கி அறத்தொடு நிற்பாள், இவட்கு இவ்வேறுபாடு எய்துவித்தோன் மெல்லம் புலம்பன் என்று வெளிப் பட மொழிந்து. சொற்பல்காமைப் பொருட்டு, நெல்லரிவோர் வயலிடையே பெருகி மலர்ந்திருக்கும் நெய்தலை மாற்றி வெண்ணெல்லையே அறுத்துக் கொள்ளும் மென்புலத் தலைவனுகலின், இவளையே வரைந்து கொள்ளும் துணிவுடையனுவன் என உள்ளுறையால் வற்புறுத்தினுள். (190)

20

வளைப்பத்து

பாட்டுத்தோறும் வளையாகிய கருப்பொருளே சிறந்துவரத் தொகுக்கப் பெற்றிருத்தலின்; இப்பத்து இப்பெயரை யுடைய தாயிற்று.

வளை என்பது நீர்நிலைகளிற் காணப்படும் ஏரல், நந்து, சிப்பி, பலகறை, கிளிஞ்சல், சங்கு ஆகியவற்றிற்குப் பொதுவாக வழங்கும் பெயராயினும், சங்குக்குச் சிறப்பாகவும் அது வழங்கும். இது நூற்றுக்கு மேற்பட்ட அளவில் வகைப்படும் எனவும், இவற்றைப் பற்றிய ஆராய்ச்சி ஒருவகைக் கலையாம் (Conchology) எனவும் அறிஞர் உரைக்கின்றனர். இதன் பொதுவான ஆராய்ச்சியே கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் (கி. பி. 1795ல்) தான் தொடங்கிற்று. இதுகாறும் நிகழ்ந்துள்ள ஆராய்ச்சியால், இவற்றில் முப்பதினாயிரம் வகை உண்டு என்பது தெரிய வந்துள்ளது. நிலத்திற் காணப்படும் வளையினம் தொடக்கத்தில் கடலில் வாழ்ந்திருந்து பின்னர் நிலத்திற் பரவிப் படர்ந்திருக்க வேண்டும் என்பது உயிர்நூலறிஞர் துணிபு.

இவற்றின் ஓடுகள் முதலில் சிறு வட்டமாகத் தோன்றி நாளடைவில் சுழிவடிவில் பெருகுகின்றன. ஓடுகளின் ஆக்கத்தை ஆராய்ந்தபோது அதன்கண் கடலுப்பும் சுண்ணும்புமே பெருக வுள்ளன என்பது தெரிந்தது. இன்றும் தமிழ்நாட்டில் வளையினத் தின் ஓடுகளைச் சுட்டுச் சுண்ணும்பு இறக்கும் செயல் நடைபெற்று வருவது கண்கூடு. இடைக்காலத்தும் இச்சுண்ணும்பு பயன்பட்ட திறத்தைக் கம்பர் ''சங்கவெண் சுதையுடைத் தவள மாளிகை''[1] என்றதனுல் இனிது அறியலாம்.

வளைகட்குள் ஆண் பெண் வேறுபாடு உண்டு. வேனிற்காலத் தில் நீர்நிலையிடத்து வெம்மை மிகுகிறபோது இவை தம்மிற் கூடி முட்டையிடத் தொடங்கும். அக்காலத்தே மீந்தோல்[2] போன்ற சவ்வினுல் அமைந்த பை யொன்றை நீரில் நீளவிடும்; அப்பைக் குள்ளே தான் முட்டைகள் இருக்கின்றன. கடல் வளை ஒன்றின் பைக்குள் இருந்த முட்டைகளை எண்ணினேர், ஒரு பையில் 1,50,000 முட்டைமுதல் 6,00,000 முட்டைகள் வரை இருக்கின்றன என்று கண்டுள்ளனர்.

இவ்வளைகள் நீர் சூழ்ந்த நிலவுலகு முற்றும் பரவி உள்ளன. தென்துருவத்து அண்டார்ட்டிக் கடல் முதல் வடதுருவத்தைச் சார்ந்த பிரான்சு ஜோசப்லாந்து[3] கிரீன்லாந்து வரையில் இவற்றின் உண்மை காணப்பட்டிருக்கிறது. நிலத்திற் காணப் படும் வளைகள் கடல் மட்டத்துக்கு மேல் 18000 அடி உயரம் வரையில் உள்ளன. கடல்வளைகளைக் காண முயன்ருேர் கடலகத் தில் 14,225 அடி ஆழத்தில் வாழும் வளைகளைக் கண்டிருக்கின்றனர்.

பெருங்கடலில் வாழும் வளைகளின் அடிப்பகுதி கடல்நீரி னின்றும் பிரிக்க முடியாதவாறு ஒருவகைப் பசையால் ஒட்டிக் கொண்டிருத்தலால், பேரலைகள் மலைபோல் எழுந்து தம்மில் மோதிக் கொள்ளினும் இவை சிறிதும் ஊறு எய்துவதில்லை.

---

1. கம். இராமா. பால. மிதிலை.
2. Epidermis 3. France Joseph Land.

வளைகள் பெரும்பாலும் கடற்பாசிகளையும் கடற்பூடுகளையும் உண்டு வாழ்கின்றன. இவ்வளைகளின் ஓடுகள் பலவேறு நிறம் பெற்றும், நீண்ட முள்போன்ற கோடுகள் (கொம்புகள்) வளரப் பெற்றும், இடம்சுழித்தும், வலம்சுழித்தும் காணப்படும்; ஆயினும் அவற்றால் இவை பெறும் பயன் இன்னதென இதுகாறும் கண்டறியப்படவில்லை. கோடுடைமை பற்றியே சில வளைகளைத் தமிழ் நூல்கள் "கோடு" என்று குறிக்கின்றன. "கோடுநரல் பௌவம்[1]" "கோடீ ரிலங்குவளை[2]" என வருதல் காண்க. இடஞ்சுழித்தவற்றினும் வலஞ்சுழித்தவை அரியவாதலின், அவை வலம்புரி என்று குறிக்கப்படுகின்றன. "வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த் துறை[3]" எனவும், "அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து, பழையர் மகளிர் பனித்துறை பரவ[4]" எனவும் வருவனவும் காண்க.

உயிர்நூல் அறிவுத் துறையில் இவ்வளைகளைப்பற்றிய ஆராய்ச்சி இன்னும் முற்றுப்பெறவில்லை; இவற்றைப் பற்றிய அறிவு அனைத்தும் இனிமேலும் பல்லாண்டுகள் ஆராய வேண்டிய நிலையில் உள்ளன. ஆயினும், இவ்வளைகளைப்பற்றிய குறிப்புக்கள் நம் தமிழ்த் தொகை நூல்களில் கிடைப்பது பாராட்டத்தக்கது. இவ்வளைகளையே சிறந்த பொருளாகக் கொண்டு இப்பத்துப் பாட்டுக்களும் இயன்றுள்ளன வாகலின் இனி அவற்றைக் காணலாம்.

இவ்வளைகள் இடும் முட்டைகள் பலவும் கேடின்றிப் பொரித்து வளருமாயின், கடலுலகமே யன்றி நிலவுலகும் இடம் காணாது என்றோ, யாதோ, இவற்றைக் கருவிலேயே உண்டு அழிக்கும் உயிரினம் பெருக வுள்ளன. கடலில் வாழும் பெருமீன்களும் திமிங்கிலங்களும் கடற்பறவைகளும் இவற்றை வேட்டுண்டு வாழ்கின்றன. நிலத்திலும் இவற்றுக்குக் கேடுசெய்யும் வகையில் பறவைகளும் நண்டுகளும் இருக்கின்றன. வெயில் வெம்மையும்

---

1. பதிற். 46. 2. குறுந். 11. 3. நற். 172.
4. அகம். 201.

ஓரளவு இவற்றுக்குக் கேடு செய்கிறது. "என்பி லதனை வெயில் போலக் காயுமே[1]" என்ற திருவள்ளுவனரது பேருரை இதற்கும் பொருந்துகிறது. இவ்வளையினத்துச் சிலவற்றை மேனாட்டவரும் பிறரும் உணவாகக் கொள்ளுகின்றனர். 1922ல் லண்டன் நகரத்து பில்லிங்ஸ் கேட் சந்தையில் 4100 டன் நிறையுள்ள வளைகள் உணவுக்காக வந்துள்ளன என்று கணக்கிட்டுள்ளனர். கடல்மீன் திமிங்கிலம் முதலியவற்றைப் பிடிப்பதற்காகவும் இவைகள் மக்களால் கொல்லப்படுகின்றன.

இவ்வளைகளுள் முத்துண்டாதல் ஒரு சிறப்பியல்பு. மழை பெய்யுங்கால் இவ்வளையினம் நீர்மட்டத்துக்கு வந்து தமது ஓட்டைத் திறந்து மழையை நோக்குமெனவும், மழைத்துளி ஒன்று ஓட்டிற்குள் வீழ்ந்ததும் ஓட்டை மூடிக்கொண்டு கடற்குட் சென்று விடுமெனவும், அத் துளியே பின்னர் முத்தாகுமெனவும் கூறுவதொரு கொள்கை பழந்தமிழ் நூல்களில் காணப்படுகிறது. "மிசைப்பெய்தநீர் கடற்பரந்து முத்தாகுந்து[2]" எனக் கருவூர்க் கதப்பிள்ளை என்பார் குறிக்கின்றார். முத்துப் பிறக்கும் திறத்தை ஆராய்ந்த போது, இவ்வளைகளின் உடற்குள் வேற்றுப்பொருள் ஏதேனும் புகுந்துவிடின், அதன் உடலிலிருந்து ஒருவகைப் பசை நீர் ஊறி அதனை வளைத்துக் கொள்ளும்; அதுவே நாள் முதிரப் பெருகி முற்றி முத்தாகும். அவ்வாறுதற்கு ஐந்தாண்டு முதல் ஏழாண்டுகள் செல்லும் என்று கூறுவர். இவ்வளைகளை ஊறின்றி வளரவிட்டால் இருபத்தைந்து ஆண்டுகள் இவை உயிர் வாழும். ஒரு வளை தோன்றி இரண்டு மூன்று ஆண்டு கழிந்தபின் தான் முத்துண்டாதற்குரிய பசைநீர் ஊறும் செவ்வி அதற்கு உண்டாகிறது. இவ்வியல்பினால் நிலத்திலுள்ள வளைகளிடத்தும் முத்துக்கள் தோன்றுகின்றன. பெருமலையிடத்து நீர்நிலைகளிடத்தே பிறந்த முத்துக்கள் நீர்ப்பெருக்கால் ஆற்றிடை வரன்றிக் கொணரப் படும். அதுகண்ட பழந்தமிழ்ச் சான்றோர் ஆறுகளில் முத்துக்களைக் கூறியது கற்பனை யன்று என்பது இனிது விளங்கும்.

---

1. குறள். 77. 2. புறம். 380.

இம்முத்துக்களில் நன்கு உருண்டு திரண்டுள்ள முத்தே சிறந்ததாகும். சொட்டையும் சொள்ளையுமாக இருப்பன சிறப்புடைய வல்ல. உடற்குட்புகும் வேற்றுப்பொருள் மயிர் நுனியினும் நுண்ணிதாயிருப்பினும் அது வளையின் உடற்குள் புகுந்து விடின் முத்துண்டாம் என்னும் இதனைக் கிறித்துவுக்கு 2200 ஆண்டுகட்கு முன்பே கண்டவர் சீனர்கள் என்று மேனாட்டவர் கூறுகின்றனர். சீனர்கட்கு முன்பே நம் தமிழகம் முத்துக்குப் பெயர் சிறந்திருந்த தென்பது உண்மையே ; ஆயினும் தமிழகத்தின் தொன்மையினை மேனாட்டவர்க்கு எடுத்துக் காட்டும் அளவில் தமிழ் நூலறிவு அந்நாளில் இல்லாமையே சீனரது தொன்மை இத்துறையில் சிறப்பாகக் குறிக்கப்படுவதற்குக் காரணம் என்பதை அறிஞர் உணர்தல் வேண்டும். பின்னர் அச்சீனரோடு சப்பானியரும் கூடி முத்து ஆராய்ச்சியில் தலைப்பட்டனர். சப்பான் பல்கலைக்கழக உயிர்நூற் பேராசிரியர், மிட்சுக்குறி[1] என்பார் கண்ட முறைபற்றி 1891ல் மிகிமோடோ[2] என்பார், வளையின் உடற்குள் செயற்கையாக ஒரு சிறு பொருளைப் புகுத்தி முத்து விளைவிக்கும் திறத்தைக் கண்டார். பின்னர் அது பெருகி வளம் பெறுவதாயிற்று. முத்துக்களின் இயல்புகளை நன்கு ஆராய்ந்து குணம் குற்றம் கண்டு பெருகிய அளவில் தமிழ்ச்சான்றோர் நூல்களில் குறித்திருப்பதை நோக்கின், அவர்களும் ஒரு காலத்தில் முத்தாராய்ச்சியில் சிறந்தமை தெளிவாகும். கொற்கை முதலிய நகரத்தவர் முத்துக் குளித்த செயல் பிறிதோர் இடத்தில் கூறப் பட்டுளது.

கடல் வளைகளுள் மலேயா நாட்டுக் கடற்பகுதியில் காணப் படுபவை ஓட்டின் விளிம்பு கருத்திருக்கின்றன. அவற்றைப் பண்டா வளை[3] என்பர். ஆஸ்திரேலிய, நியூகினிய நாடுகளிலும் அவற்றை அடுத்துள்ள துருத்தி (தீவு)களிலும் இவை அகப்படு கின்றன. ஆயினும் இவற்றுள் முத்து விளைப்பன சிலவே ; கிழக்கு

---

1. Dr. Mitsukuri, Professor of Zoology, Imperial University, Japan.
2. Mikimoto.
3. Banda Shell.

பாலினீசியாவிலும் காம்பியர் தீவிலும் அவற்றை அடுத்துள்ள பகுதிகளிலும் சில வகை வளேகள் உள்ளன ; அவை நல்ல ஓடும் முத்தும் உடையன. அவை சீனு, இலங்கை, அந்தமான், மால தீவு ஆகிய இடங்களிலும் வாழ்கின்றன. மடகாஸ்கர் பகுதியில் உள்ளவை மடகாஸ்கர் வளே எனப்படும் இவ்வாறே பம்பாய் வளே, எகிப்திய வளே, பனுமா வளே எனப் பலவகையாக வகுக்கப் பட்டுள்ளன, டாக்டர் ஜேம்சன் என்பார் இவற்றை ஆராய்ந்து முப்பத்திரண்டு வகை கண்டிருக்கின்ருர். இதுகாறும் கிடைத்துள்ள வளேகளுள் ஒருஅடி சுற்றளவும் ஆறுபவுண்டு நிறையுமுள்ள வளேயே மிகப்பெரிதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் ஜேம்சன் கண்ட வகைகளுள் மாற்கரிதி பேரை வல்கறி[1] என்பது ஒன்று. இவ்வளேகட்கு ஒருவகையான பற்க ளுண்டாம். இவை, இலங்கை, தமிழகம், பாரசீகவளேகுடா, செங்கடல் ஆகியவற்றில் இருக்கின்றன இவற்றுள் சில சூயஸ் கால்வாய் வெட்டின பின்பு மத்திய தரைக்கடற்குள் புகுந்துள்ளன. மலேயா ஆஸ்திரேலியா நியூகினியா ஆகிய இடங்களில் இவை முத்துக்காகவும் ஓட்டுக்காகவும் கடற்குள் மூழ்கி எடுக்கப்படுகின் றன. சப்பான் பகுதி வளேகளும் இந்த வல்கறி வகையைச் சேர்ந்தவையே.

வளேகளின் ஓடுகள் பலவகையில் பயன்படுகின்றன. ஆப்பிரிக்கா விலுள்ள பழங்குடி மக்களிடையே இவை நாணயமாக வழங்கு கின்றன. பசிபிக் கடற் றுருத்திகளில் வாழும் மக்களில் அரசர்களும் தலேவர்களும் இவற்றை மாலேயாகக் கோத்து அணிந்துகொள் கின்றனர். மத்திய தரைக்கடற் கரைகளிலும் ஆப்பிரிக்காவின் கீழைநாடுகளிலும் இவ்வளேகள் ஊதுகருவிகளாகவும், நீருந்த உதவும் குவளேகளாகவும் வள்ளங்களாகவும் பயன்படுகின்றன. சீனசப்பான் பொருள்களின் பூச்சு வேலேக்கும் சுவர்களில் வெள்ளே தீற்றுதற்கும் உணவுத் தட்டுக்களே அழகு செய்தற்கும் இவை நல்ல பயன்தருகின்றன. தென்கடற் பகுதியினர் இவற்ருல் தூண்டில் முட்கள் செய்கின்றனர்

---

1. Margarati fera Vulgaris.

இத் தொகைநூற் பாட்டுக்கள் எழுந்த காலத்து மக்கள் வாழ்வில் வளை மிகச்சிறந்த இடம்பெற்றுள்ளது. தோளிலணியும் தொடியும் முன்கையி லணியும் வளையும் இவற்றினுல் ஆகியவை. வளையிடத்துப் பிறந்த முத்துப் பண்டைத் தமிழகத்துச் செல்வ வகையுள் சிறந்த தொன்ருகத் திகழ்ந்தது. மேலைநாட்டு யவனர் களும் சோனர்களும் கீழைநாட்டுச் சாவகரும் அருமணரும்[1] தமிழகத்தை முத்துவிளை நாடு என்றே கருதினர். தமிழ் நாட்டினர் இவ்வளைகளை ஊதுகருவியாகவும் சிருர்கட்குப் பாலூட்டும் பாலாடையாகவும் பயன்படுத்தியுள்ளனர். தமிழகத்தில் எங்கும் எவரும் இவற்றை உண்டதாக யாதொரு குறிப்பும் இலக்கியங் களிலாதல் கல்வெட்டுக்களிலாதல் வேற்றுநாட்டுக் குறிப்புக்களி லாதல் இது வரையிற் காணப்படவே இல்லை.

மற்று, இவற்றை உண்பவர்க்கு இவற்ருல் ஈரல்நோய் உண்டாகிற தென்றும், நன்கு தூய்மை செய்யப்படாத ஊன் மக்கட்குப் பெருந்தீங்கு செய்யும் என்றும் மேனுட்டவர் கண்டு, விற்பனைக்குச் செல்லு முன்பே அதனைச் செவ்வையாக ஆராய்கின் றனர். இவை மிக்குள்ள நீர் நிலப்பகுதிகளில் மேயும் ஆடுமாடு கட்கும் இவற்ருல் ஈரல்நோய் உண்டாகிறதாம். நில வளைகளுள் ஒருவகை இனத்தால் கரும்பு முதலிய பயிர்கட்கு மிக்க தீங்கு உண்டாகிற தென்று அறிஞர் கண்டுரைக்கின்றனர். (190)

191. கடற்கோடு செறிந்த வளையார் முன்கைக்
கழிப்பூத் தொடர்ந்த விரும்பல் கூந்தல்
கானல் ஞாழற் கவின்பெறு தழையள்
வரையர மகளிரி னரியளென்
நிறையரு நெஞ்சம் கொண்டொளித் தோளே.

இது, நின்னுற் காணப்பட்டவள் எவ்விடத்து எத்தன்மையள் என்று வினவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது.

---

1. Burmans,

உரை : கடற்கரைக்கண் திரையால் கொணரப்பட்டுச் செறிவுற்ற சங்கினுற் சமைந்த வளை யணிந்த முன்கையினையும், கழிக்கட் பூத்த மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை அணிந்த கரிய பலவாகிய கூந்தலினையும், கானலில் நின்ற ஞாழலின் தழையாற் செய்த அழகிய தழையுடையினையும் உடையளாய், நிறையால் கோடற்கு அரிதாகிய என் நெஞ்சினைக் கொண்டு மறைந்தவள் சூரரமகளிரைப் போல் பெறுதற் கரியளாவாள் எ. று.

கடற்கோடு, கடற்கரை. கோடு, சங்குமாம். கழிப் பூவின் தொடர்ச்சி அதனையுடைய கூந்தற்கு அடையாயிற்று. நிறையால் பிறர் கொளற்கு அரிதாகிய திண்மையுடைமையின், நிறையரு நெஞ்சம் எனப்பட்டது. நிறுப்ப நில்லாது ஓடும் இயல்பிற்றென்றற்கு நிறையரு நெஞ்சம் என்றூர் எனின், அப்பெற்றியதனைக் கோடலும் கவர்தலும் அருமை யாகாமையின், அது பொருளன்மை அறிக. முன்கையும் கூந்தலும் தழையு முடையள் என்றது தலைமகள் இயலும், கடலும் கழியும் கானலும் கூறியது இடமும் சுட்டி நின்றன.

இயற்கைப்புணர்ச்சிக்கண் தான் அவளை எதிர்ப்பட்டுக் கூடு முன் அவளிடைத் தோன்றிய புணர்ச்சி வேட்கையை மூன்ரு மவத்தைக்கண், “அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்[1]” முதலிய மெய்ப்பாடுகளால் உணர்த்திய சிறப்புடைமையின், முதற்கண் வளையார் முன்கை என்றும், மெய்யும் மெய்யும் தீண்டியவழி வேறுபட்டுக் காட்டிய தலைமை குறித்து, இரும்பல் கூந்தல் என்றும், உள்ளத்து நிகழ்ந்த நெகிழ்ச்சியினை உடம்பொடு தொடர்புபட்டதாய் நெகிழ்ந்து காட்டும் சிறப்பின்மை குறித்துத் தழையினை, கவின்பெறு தழையள் என இறுதிக்கண்ணும் கூறினுன். கூற்றுவகையால் கடைப்பட்ட தாயினும், உருவநலம் பாராட்டிக் கவின்பெறுதழை எனப்பட்டது என்க. புணர்ச்சிபெற்று

1. தொல். பொ. 263.

நீங்குங்கால், அவள் ஆயவெள்ளம் வழிபட நின்றது கண்டு, ''இவளைக் கூடினேன் என்பது மாயமோ'' என எண்ணி நிற்கையில், அவள் மறைதலும், தன் நினைவும் சொல்லும் செயலும் அவள்பாலே அமைந்தொழிய, வேறே செயலற்று, இவள் தெய்வமகள் போலும் என அருமை கருதி மயங்கினமை யின், வரையர மகளிரின் அரியள் என்று கூறினான். பிறரும், ''நெடுவரைக் கவா அன், சூரரமகளிரின் பெறற்கரி யோளே[1]'' என்பர். பிறரால் உணரவும் கவரவும் கூடாத நெஞ்சினைக் கூடும்வகை உணர்ந்து தன்பாலே அமைவித்தனள் என்றான்: அப்பெற்றியாரைத் ''தெய்வத்தோடு ஒப்பக் கொளல்[2]'' என்னும் முறைமைபற்றி வரையரமகளிரோடு உவமித்தான் எனினுமாம். தன்வரை நில்லாது அவள் வரை நின்று ஒழுகுதலால், கவர்ந்து கொண்டாள் என்றான். இனி, நிறுப்ப நில்லா என் நெஞ்சினைத் தன்வயமாக்கி, மீள என்பால் வாராவகைப் பிணித்துக் கொண்டாள் என்றற்கு, நிறையரு நெஞ்சம் கவர்ந்து கொண்டாள் என்றான் எனினுமாம். இது துன்பத்துப்புலம்பல்; என்னை, தானே வருந்துவதாகக் கூறுகின்றா னாகலின். (191)

192. கோடுபுலங் கொட்பக் கடலெழுந்து முழங்கப்
பாடிமிழ் பனித்துறை யோடுகல முகைக்கும்
துறைவன் பிரிந்தென நெகிழ்ந்தன
வீங்கின மாதோ தோழியென் வளையே.

இது, வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வந்துழித் தலைவி முனிந்து கூறுவாள் போலத் தன் மெலிவு நீங்கினமை தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: கோடு புலம் கொட்பக் கடலெழுந்து முழங்கப், பாடு இமிழ் பனித்துறை ஓடுகலம் உகைக்கும் என்றது, நொதுமலர் அகல நம் சுற்றத்தார் மகிழ அலர் கூறும் அயலார் சிதைய அவர் தேர் வந்தது என்பதாம்.

---

1. அகம். 162. 2. குறள். 702.

உரை: தோழி, சங்குகள் கரைக்கண் போந்து உலவ கடற்கண் திரைகள் எழுந்து முழக்கஞ் செய்ய, ஒலித்தலையுடைய குளிர்ந்த துறையின்கண் ஓடுதற்குரிய கலங்களை நீரில் செலுத்தும் துறைவன் முன்னர்ப் பிரிந்ததனால் நெகிழ்ந்து நீங்கிய என் வளைகள் அவன் வரவால் முன் கைக்கட் கிடந்து வீங்கின, காண் எ. று.

புலம், கரை. பாடு, ஓசை. ''பாடிமிழ் பனிக்கடல்[1]'' என்றும், ''பாடி னருவி[2]'' என்றும் சான்றோர் கூறுவர். காற்றால் உந்தப்பட்டு அலைகளிடையே உயர்ந்தும் தாழ்ந்தும் செல்லுதல் நோக்கிக் கலத்தின் செலவை ஓடுதல் என்ப. ''நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி[3]'' எனச் சான்றோரும, ''கடலோடும் நாவாயும் ஓடா நிலத்து[4]'' என்று திருவள்ளுவனாரும், ''ஓடும் திமில் கொண்டு[5]'' என்று இளங்கோவடிகளும் கூறுப. ''ஓடம்[6]'' என்னும் வழக்கும் இதுபற்றி வந்தது எனக்கொள்க. நெகிழ்தல், உடல் வாடிச் சுருங்குதலால் வளைகழன்று நீங்குதல். வீங்குதல், உடல் பூரித்துத் தடித்தலால், தன்னிலையிற் பெருகி விரிந்து காட்டுதல். புரிந்தென நெகிழ்ந்தன என்றதனால், வீங்கினதற் கேதுவாகிய வரவு வருவிக்கப்பட்டது. உள்ளுறையால் வரவு கூறினமையின், வீங்கினதற்கு ஏது வெளிப்படையாகக் கூறிற்றிலர் எனினும் அமையும்.

இதன்கண், துறைவன் பிரிந்தென நெகிழ்ந்தன என்று பிரிவிடை நிகழ்ந்தது நினைத்தலின் முனிவால் மெலிந்தவாறும், வீங்கின மாதோ தோழி என்வளையே என்று வரவு கண்டு கூறுதலின் மெலிவு நீங்கியவாறும் அறிக. வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்த காலத்துத் தான் மேனி வேறுபட்டு உடம்பு சுருங்கி யிருந்ததனை நெகிழ்ந்து காட்டிய நிலை நெஞ்சில் நின்று நிலவுதலின், துறைவன் பிரிந்தென நெகிழ்ந்தன என்றும், அவன் வரவால் துயர்கெட்டு மேனி தளிர்த்து ஆக்கம் பெற்றிருத்தலைத்

---

1. நற் 91. 2. அகம். 378. 3. புறம் 66.
4. குறள். 496. 5. சிலப். 7 : 19. 6. அகம். 101

தோழிக்குக் காட்டி மகிழ்கின்ருளாகலின், வீங்கின மாதோ தோழி என் வளையே என்றும் கூறினுள்.

கோடு புலம்கொட்பக் கடல் எழுந்து முழங்கப் பாடிமிழ் பனித் துறை ஓடுகலம் உகைக்கும் என்றவிடத்து, கோடு நொதுமலராக வும், கடல்சுற்றத்தாராகவும், துறை அயலாராகவும், கலம் தலைவன் தேராகவும் உள்ளுறை கொள்க. (192)

193. வலம்புரி யுழுத வார்மண லடைகரை
இலங்குகதிர் முத்த மிருள்கெட விமைக்கும்
துறைகெழு கொண்கநீ தந்த
அறைபுனல் வால்வளை நல்லவோ தாமே.

இது வரையாது வந்தொழுகும் தலைமகன், தலைமகட்கு வளை கொண்டு வந்து கொடுத்துழி, ''பண்டை வளைகளைப் போலாவாய் மெலிந்துழி நீங்கா நலனுடையவோ இவை'' எனத் தலைமகள் மெலிவு சொல்லித் தோழி வரைவு கடாயது.

ப. உரை: முத்தம் இருள் நீங்க இமைக்கும் துறைவனுகலின் இவட்கு வருகின்ற தீங்கைக் கடிதின் நீக்கி வரைந்து கொள வேண்டும் என்பதாம்.

உரை: வலம்புரிச் சங்குகள் ஊர்ந்து செல்லுவதால் உழப் பட்ட நீண்ட மணல் பரந்த கடற்கரைக்கண் விளங்குகின்ற கதிர்களையுடைய முத்துக்கள் இருள் நீங்குமாறு ஒளிரும் துறை பொருந்திய தலைவ, நீ தந்த, ஒலிக்கின்ற நீரிற் பிறந்த வெள்ளிய வளைகள், பண்டு இவள் அணிந்திருந்த வளைகள் போலாது மெலிந்துழி நீங்காத நலன் உடையவோ? கூறுக. எ. று.

வலம்புரிச் சங்குகள் மணலில் ஊர்ந்து சுவடுபடச் செல்லுவது உழுவது போறலின், வலம்புரி யுழுத வார்மணல் எனப்பட்டது. ''துறைமேய் வலம்புரி தோய்ந்து மணல் உழுத தோற்றம்[1]''

---

1. சிலப். 7 : 8

என்றார் இளங்கோவடிகள். அறைபுனல் வால்வளை, ஒலிக்கின்ற நீரோட்டம் அமைந்த வெள்ளிய வளை என்றுமாம். நீரோட்டம், நன்கு கடைச்ச லிடப்பட்ட வளையில் தோன்றும் ஒளிநலம். அறைதல், இயற்கையடையாகும். தாம் என்பது கட்டுரைச் சுவை பட நின்றது.

தலைமகன் பிரியுந்தோறும் தலைமகள் வேறுபட்டு உடம்பு சுருங்கியவழி நெகிழ்ந்தோடல் வளைகட்கு இயல்பாயினும், பிரிவுழி எய்தும் வேறுபாடு புலப்படுத்து வரைவுகடாவும் குறிப்பின ளாகலின், நீதந்த....வால்வளை நல்லவோ என்றாள். நன்மை, மேனி மெலிவுறினும் நீங்கா நிலைமை. நீங்கியவழிப் பிறர்க்குப் புலனாகி அலர் பயக்கும் நீர்மையால், நீங்காமையை நன்மை என்று குறித்தாள். ஒன்று நின்றே ஏனையது முடிக்கும் என்னும் முறைமையால், பண்டு அணிந்திருந்த வளைகளின் தீமையைக் குறிப்பால் எய்துவித்தாள்.

நின் துறைக்கண், இலங்குகதிர் முத்தம் இருள் கெட இமைத்தல் போல, நின் வரைவால் இவள் மேனி வேறுபாடு கண்டு அலர் கூறுவாரால் உளதாகும் வருத்தம் நீங்குமென உள்ளுறையால் அலரச்சம் கூறித் தோழி குறிப்பால் வரைவு கடாய வாறு. (193)

194. கடற்கோ டறுத்த வரம்போ ழவ்வளை
ஒண்டொடி மடவரற் கண்டிகும் கொண்க
நன்னுத லின்று மாஅல் செய்தெனக்
கொன்னொன்று கடுத்தன ளன்னையது
நிலையே.

இது, பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டு மனைக்கண் நிகழ்ந்தது கூறிச் செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

உரை: கொண்க, கடற்சங்கினை அறுத்து அரத்தால் போழ்ந்து செய்யப்பட்ட அழகிய வளையினையும், ஒள்ளிய தொடியினையுமுடைய

மடப்பம் பொருந்திய தலைமகளைக் காண்பாயாக: அவளுடைய நல்ல நெற்றி இன்று ஒளி மழுங்கி வேறுபட்டதனால், இதற்குக் காரணம் ஒன்றுண்டு என அன்னை ஐயுற்றனள்; அது மனைக்கண் நிகழும் நிலைமை யாகலின், நீ நினக்கு ஏற்றது செய்க எ. று.

கண்டிகும், முன்னிலை வினைமுற்று; இகும், முன்னிலை அசை. விளக்கம் மிகுந்த ஒளி மழுங்கியதனை மால்செய்தென என்றார். கொன், அச்சப்பொருட்டு. கடுத்தனள் என்பது கடி என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த முற்றுவினை; "கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது[1]" என்றாற் போல. கடி, இப் பொருட்டாதல், "ஐயமுங் கரிப்பும் ஆகலு முரித்தே[2]" என்பதனால் அறிக. நீ நினக்கு ஏற்றது செய்க என்றது குறிப் பெச்சம்.

பகற்குறிக்கண், தலைமகளைக் கூடி நீங்குகின்றானை எதிர்ப் பட்டுக் கூறுதலின், மடவரற் கண்டிகும் என்றும், குறிவழி வந்து ஒழுகும் ஒழுக்கத்திற்கு ஆற்றது தீமையும், காவல் மிகுதியும் பிறவும் இடையீடாமென எண்ணி வேறுபட்டது காரணமாக இவள் நுதல் ஒளி சிறிது வேறுபட்டாள் என்பாள், நன்னுதல் இன்று மால் செய்தென என்றும், இதனை அன்னை உணர்ந்து ஐயுற்று நோக்கினு ளாகலின், இனி இற்செறிப்பு மிகும் என்பாள், கொன்னொன்று கடுத்தனள் அன்னை என்றும், அதனால் கூடுதல் அரிதாகலின் நீ நினக்கு ஏற்றது செய்க என்று கூறுவாள், அது நிலையே என்றும் கூறினாள். ஏற்றதாவது விரைய வரைந்து கோடல். நுதல் இன்று மால் செய்தென என்றது பசலைபாய்தல். கடுத்தனள் என்றது, தாயறிவு கூறல். அது நிலையே என்றது அச்சம் காரணமாகத் தோன்றிய திளைப்புவினை மறுத்தல். (194)

195. வளைபடு முத்தம் பரதவர் பகரும்
கடல்கெழு கொண்கன் காதன் மடமகள்
கெடலருந் துயர நல்கிப்
படலின் பாயல் வெளவி யோளே.

---

1. குறள். 693. 2. தொல்.பொ. 379,

இது வரைவிட வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் தனித்துறைவு ஆற்ருனய்ச் சொல்லியது.

ப. உரை: பெறுதற்கரிய முத்தைப் பரதவர் விற்கும் கடல் கெழு கொண்கன் என்றது, அவர்கள் தாராதார் அல்லர்; யாம் அவர்களுக்கு வேண்டுவன கொடுத்துக் கொள்ள மாட்டாது வருந்துகின்ரேம் என்பதாம்[1].

உரை: சங்கினிடத்தே பிறக்கும் முத்துக்களைக் கொணர்ந்து பரதவர் ஏனை நிலத்து வாழ்வார்க்கு விற்கும் கடல் பொருந்திய கொண்கனுடைய அன்பு மிக்க மகள் நீங்குதற்கரிய துயரத்தைத் தந்து, கண்படுதலாகிய இனிய துயிலைக் கவர்ந்துகொண்டா ளாகலின், யான் ஆற்றுமாறு என்? எ. று.

பகர்தல் ஏனை உணவுப்பொருள் கருதியாகலின், அவை கிடைக்கும் ஏனைநிலங்கள் என்பது வருவிக்கப்பட்டது. பகரும் என்னும் பெயரெச்சம் ஏதுப்பொருள் கொண்டு முடிந்தது. துயரத்தின் பயனுன துன்பவுணர்ச்சி கணிகமாய் மனத்திடை நிகழ்வதொன்ருகலின் அதனை மாறி நினைக்குமிடத்துக் கெடும் இயல்பிற்ருக, பொருள்மேல் மனம் வைத்துப் பிரிந்த போதும், கெடாது நின்று வருத்துதலின், கெடலருந் துயரம் எனப்பட்டது. படலின் பாயல் என்பதற்கு "இன்துயில்[2]" என்றதற்குக் கூறிய தனைக் கூறிக்கொள்க.

உயிரினும் சிறப்பப் பெற்ரேரால் தலைமகள் பேணப்படும் இயல்பினைக் களவின்கண் ஒழுகி அறிந்துளா னுகலின், காதல் மடமகள் என்றும், பொருட்கொடை எதிர்ந்து அதற்கு நேரென மகட்கொடை யாற்றும் பெற்ரேர் மாண்பறியாது வேண்டப்படாத துயரம் நல்கி, வேண்டிநிற்கும் உறக்கத்தை வலிந்து கவர்ந்தமை யின், மடமகள் என்றும், தன்னிற் றீர்ந்து சேய்மையிற் பிரிந்துழி

1. இவ்வுரைக்குத் துணைசெய்த சீகாழி கோவிந்தசாமி ரெட்டியார் கையெழுத்துப் பிரதியில் இப்பழையவுரை காணப்படவில்லை.
2. ஐங். 173.

யும், தன் பிரிவாணுகிய துயரம், நெஞ்சில் நின்று வருத்துதலின், கெடலருந் துயரம் என்றும், இதுகாறும் கண்டறியாது, இவளொடு தொடர்பு பெற்ற பின்பே காணுதலின், நல்கி என்றும், துயருற்ருற்கு உறக்கமின்மை இயல்பாகலின், படலின் பாயல் வௌவியோளே என்றும் கூறினன். உறக்கத்தின்கண் தாம் பிரிந்த காதலரைக் கனவிடைக் காணும் காட்சியின்ப முடைமை யாலும், துயராற் கலக்குற்ற நெஞ்சம் துயிலிற்குப் பின் தெளிந்து மேல் செய்யக்கடவனவற்றைத் தெளிதலாலும், படலின் பாயல் என்றும், தான் அறியாவகையில் நீங்கினமையின், வௌவியோளே என்றும் கூறினன் என்க.

வளையீன்ற முத்தினைத் தந்து பரதவர் வேண்டுவ கொள்வர் என்றது, இவள் எமக்குத் துயரம் நல்கிப் பாயலைக் கொண்டாள் என்றற்கு ஏதுவாயிற்று. வேண்டுவன கொடுப்பக் கொண்டு தாம் அரிதிற் பெற்றதனைக் கொடுக்கும் பெற்றியர் அவள் தமராக, அவள் யாம் வேண்டாதது கொடுத்து வேண்டிற்றுக் கொண்டாள் என்பதொரு நயம் தோன்றுதல் காண்க. வேண்டாதது கெடலருந் துயரம்: வேண்டிற்று, படலின் பாயல். இதனல், தலைமகன்கண் கண்டுயில் மறுத்தல் என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. இஃது ஒருவகையால், பெற்ருேரைப் பழிச்சியதுமாம்.

வளைபடு முத்தம் பரதவர் பகரும் கடல்கெழு கொண்கன் என்றதனுல் தலைமகளைப் பெறல் எளிமையும், கெடலரும் துயரம் நல்கிப் படலின் பாயல் வௌவியோளே என்றதனுல் பிரிவருமை யும் தோன்றக் கூறினமையின், பெறலெளிமை பொருள்வயின் உள்ளத்தைத்துரப்ப, பிரிவருமை மீளலுறுத்த, இடையே செய்வினை விரைய முடியாமை வருத்தத் தலைமகன் ஆற்ருது கூறு வாணுயினன் என உணர்க. ''புறந்தாழ் பிருண்ட கூந்தற் போதின், நிறம்பெறும் ஈரிதழ்ப் பொலிந்த உண்கண் உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம், செல்லல் தீர்கஞ் செல்வா மென்னும் செய்வினை முடியா தெவ்வம் செய்தல், எய்யாமையோ டிளிவுதலைத் தருமென, உறுதி தூக்கத் தூங்கி அறிவே, சிறுநனி

விரையல் என்னும் ஆயிடை, ஒளிறேந்து மருப்பிற் களிறு மாறுபற்றிய, தேய்புரிப் பழங்கயிறுபோல, வீவது கொல்லென் வருந்திய உடம்பே[1]'' என்று தலைமகன் நினைத்து வருந்துமாறு காண்க.

''மரபுநிலை திரியா மாட்சிய வாகி, விரவும் பொருளும் விரவு மென்ப[2]'' என்புழி, ''வரைவிடை வைத்துப் பிரிந்தோன் தலைவியை நினைந்து வருந்திக் கூறியது'' என்பர் நச்சினார்க்கினியர்.

இனிப் படலின்பாயல் வறுவியோளே என்ற பாடத்துக்கு, பாயல் இல்லை யாக்கினள் என்பது பொருளாயினும் மேற்காட்டிய நயம் தோன்றற்கு இடனின்றாதல் காண்க. (195)

196. கோடீ ரெல்வளைக் கொழும்பல் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதியாயின்
தெண்கழிச் சேயிருப் படூஉம்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ.

இது, குறைமறுக்கப்பட்ட தலைமகன் பின்னும் குறை வேண்டியவழித் தோழி சொல்லியது.

ப.உரை: தெண்கழிச் சேயிருப் படூஉம் சேர்ப்ப என்றது, நினைத்தன அகப்படுத்தும் துறைவன் எ. று.

உரை: சங்கினை அறுத்துச் செய்த வளையினையும், கொழுவிய பலவாகிய கூந்தலினையும், நுண்ணிய தொடியினையுமுடைய மடவரலாகிய இவளைக் கூடுதல் வேண்டினையாயின், தெளிந்த நீரினையுடைய கழிக்கண் வேண்டுவோர் கொள்ளுமாறு செவ்விய இருமீன்கள் அகப்படும் குளிர்ந்த கடனிலத் தலைவனே, வேறு வகையின்மையின் வரைந்து கோடலைச் செய்வாயாக.

வளை, சங்கினை அறுத்துச் செய்யப்படும் என்பதனை, ''வேளாப்பார்ப்பான் வாளரம் துமித்த வளை களைந்தொழிந்த

1. நற். 284. தொல்.பொ. 45.

கொழுந்து[1]'' என்று கூறுமாற்ருன் அறிக. ''கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த, பீடுகெழு குரிசில்[2]'' என்ருர் பிறரும். இருண்டு செறிந்திருத்தலின், கொழும்பல் கூந்தல் எனப்பட்டது. தொடி, வளை முதலியவற்றிற்கு முன்னணிவது. வளை சங்கினுலாயது; தொடி, வளையாலும் மருப்பாலு மாயது என உணர்க. வளையும், கூந்தலும், தொடியும் உடைய மடவரல் என இயையும். வளையும் தொடியும் கூந்தலும் என்ஞது, வளையும் கூந்தலும் சேரக் கூறியது, சிலவும் பலவுமாம் இயைபு கருதி யென அறிக. ''சில்வளை விறலி[3]'' என்ருர் பிறரும். ஒவ்வொரு கைக்கும் ஒவ்வொரு தொடியே அணியப்படு மாகலின், அதனைப் பிரித்துக் கூறினர்.

ஒருகால் குறைமறுக்கப்பட்டவன், வரைந்து கோடலைத் தெருளாது, பின்னும் குறையிரந்து நிற்றலின், மடவரல் வேண்டுதி யாயின் என்றும், குறையுற்றுக் கூடுதல் பெறினும் அது பின்னர்ப் பிரிவுக்கும், அலர்க்கும் பிறவற்றிற்கும் அஞ்சப்பட்டுக் கூடாமையே போல் வருத்தம் செய்யுமாகலின், வரைந்தனை கொண்மோ என்றும், உள்ளுறையால் வரைதற்குரிய முறைமையும் கூறினள்.

தெண்கழியிடத்து வேண்டுவோர் கொள்ளுமாறு இருமீன்கள் அகப்படும் துறைவ என்றதனல், நீ வேண்டி வரின் தமர் மகட் கொடை நேர்வ ராதலின் வரைந்து கொள்க என்ருளாம்.

கொழுமணிக் கூந்தல் என்பது பாடமாயின், கொழுவிய மணி போலும் கரிய கூந்தல் என்று பொருள் கொள்க. ''மணியேசும் இருங்கூந்தல்[4]'' எனவும், ''மணிமரு ளைம்பால்[5]'' எனவும் சான்ருேர் கூறுதல் காண்க.

இனி, ''நாற்றமும் தோற்றமும்[6]'' என்ற சூத்திரத்து ''உலகுரைத் தொழிப்பினும்'' என்பதற்கு இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் இதனை எடுத்துக்காட்டுவர்.

---

1. அகம் 24. 2. குறுந். 31 3. புறம். 103.
4. கலி. 77. 5. நற். 245. 6. தொல்.பொ. 114.

197. இலங்குவளை தெளிர்ப்ப வலவ னூட்டி
முகம்புதை கதுப்பின ளிறைஞ்சிநின் ரூேளே
புலபுகொண் மாலை மறைய
நலங்கே ழாகக நல்குவ ளெனக்கே.

இது, தலைமகன் இடத்தலைப்பாட்டின்கண் தலைவியது நிலைமை கண்டு சொல்லியது.

உரை: விளங்குகின்ற வளைகள் ஒலிக்க அலவனைக் காலால் அலைத்து, முகத்தை மறைக்கும் கூந்தலையுடையளாய்த் தலை குனிந்து நின்றவள் தனிமை கொள்ளும் மாலைப் பொழுது மறைதலும், நன்மை பொருந்திய தன் மார்பினை எனக்கு நல்குவள் எ. று.

தெளிர்த்தல், ஒலித்தல். அலவன், நண்டு. ஆட்டுதல், அலைத்தல். கதுப்பின ளென்னும் முற்றெச்சம் இறைஞ்சி நின்ரூேள் என்னும் வினைப்பெயர் கொண்டது. தனிமையுற்ருர்க்கு ஏற்ற காலமாகலின், புலம்புகொள் மாலை எனப்பட்டது. செயவெனெச்சம், இது நிகழாநிற்க இது நிகழும் எனும் உடனிகழ்ச்சிப் பொருட்டு.

அலவ னூட்டுதல் மகளிர் விளையாட்டு வகை. "திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்[1]" என்றும், "பெருநீர் அழுவத் தெந்தை தந்த, கொழுமீ னுணங்கற் படுபுள் ஓப்பி, எக்கர்ப் புன்னையின் இன்னிழல் அசைஇச், செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி, ஞாழல் ஓங்குசினைத் தொடுத்த தாழை வீழ்கயிற்று ஊசல் தூங்கிக், கொண்ட லிடுமணற் குரவை முனையின், வெண்டலைப் புணரி யாயமொ டாடி, மணிப்பூம் பைந்தழை தைஇ அணித்தகப் பல்பூங் கானல் அல்கினம் வருதல்[2]" என்றும் வருவனவற்ருல் அறிக. அலவனை அலைக்குங்கால், உடல் குலுங்கக் கையும் அசைதலின் வளை ஒலிப்பது பற்றி இலங்குவளை தெளிர்ப்ப என்ருர். "சில விலங்கெல்வளை ஞெகிழ,

---

1. அகம் 280. 2. ஷை. 20

அலவன் ஆட்டுவோள்[1]" என்றார் பிறரும் அளையிடையமர்ந்து அலவனைக் கையால் அலைத்தலும் உண்மையின் இவ்வாறு கூறினான் என்றலும் ஒன்று.

செய்மைக்கண் வருமிடத்து அவளது உண்மை உணர்த்து தலின், இலங்குவளை தெளிர்ப்ப என்றும், அவள் தன்னை நினைந்து நிற்கும் நினைவினை, நோக்குவார்க்கு முகம் உணர்த்தாமைப் பொருட்டுக் கூந்தல் நெகிழ்ந்து முகம் புதையச் சரிந்து கிடந்தமையின், முகம்புதை கதுப்பினள் என்றும் கூறினான். உள்ள நிகழ்ச்சியை முகம் முன்னம் உணர்த்தும் முதுக்குறை வுடைய தென்பது, ''முன்னம் முகம்போல முன்னுரைப்பதில்[2]'' என்பதனால் அறிக. இயற்கையே நாண்மிக வுடையள் ஆகலின், இறைஞ்சி நின்றோள் என்றான். ''நாணடச் சாய்ந்த நலங்கிளர் எருத்தின்[3]'' என்றார் பிறரும். மாலை மறைதலும் தமித்துக் கூடலுறுவார்க்குக் கூட்டம் இடையீடின்றி இனிது எய்துமாகலின், புலம்புகொள் மாலை மறைய என்றும், இயற்கைப்புணர்ச்சிக்கண் தான் தலைப்பெய்த விடத்து, இவ்வண்ணமே எதிர்பட்டா ளாகலின், அவ்வியைபினால் இனிக் கூட்ட மெய்துதல் ஒருதலை யெனத் தெளிந்து கூறுகின்ற னாகலின், நலங்கே ழாகம் நல்குவள் எனக்கே என்றும் கூறினான்.

இனி, ''இலங்குவளை . தெளிர்ப்ப அலவனாட்டி'' யது, பூக்கொய்தல் முதலிய விளையாட்டினைச் செய்யாமை குறித்து ஆயத்தார் ஆராயாமைப் பொருட் டென்றும், புறத்தே அலவனை அலைத்து நின்ற ளாயினும், அகத்தே தன்னை நினைந்து நின்றமை யின். இறைஞ்சி நின்றாள் என்றும் கூறுவர்.

கதுப்பினள் ஆயத்து நின்றோளே என்ற பாடத்துக்குக் கதுப்பினளாய் ஆயத்திடை நின்றாளாயினும், மாலை மறைதலும் ஆகம் நல்குவள் என உரைக்க. ஆயினும் இது பொருள் சிறவாமை உணர்க.

---

1. நற். 363. 2. நான்மணி 3. பொருந.

நெய்தற்கண் புணர்தல் கூறினமையின், இது திணைமயக்கம். ''திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே[1]'' என்பது விதி. இனி, ''மெய்தொட்டுப் பயிறல்[2]'' என்ற சூத்திரத்துக் கூடுத லுறுதல் தனியே வந்ததற்கு இதனைக் காட்டுவர் நச்சினார்க்கினியர். இடந் தலைப்பாட்டின்கண் தலைமக்கள் தாமே கூடுத லுண்டேனும், பெருநாணினளாய தலைமகள்பால் தலைமகன், மெய்தொட்டுப் பயிறல் முதலாயின வின்றிக் கூடுத லுறுதல் அமையாமையாலும், அவை செய்யப்பட்டன என்றற்கு இதன்கண் சொற் குறிப்பு ஒன்றேனும் இன்மையாலும், திணைமயக்கத்துக்கு உதாரணம் காட்டியவழி ''இஃது இடந்தலைப்பாட்டின் கண் தலைவியது நிலை கண்டு கூறியது'' என்றே கூறி இருத்தலாலும் அது கருத்தன்மை யறிக. (197)

198. வளையணி முன்கை வாலெயிற் றமர்நகை
இளைய ராடும் தளையவிழ் கானற்
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தோ ளண்ணற் கண்டிகும் யாமே.

இது, பரத்தையர் மனைக்கட் பன்னாள் தங்கிப் பின்பு ஆற்றாமையே வாயிலாக வந்த தலைமகனை எதிர்ப்பட்ட தோழி தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை: குறுந்துறை வினவி நின்ற நெடுந்தோள் அண்ணல் என்று களவுக்காலத்து நிகழ்ந்ததனைக் கூறிற்று, தலைமகள் புலவி நீங்குதற்கும் யான் நெடுநாட் பிரிந்தமை கூறுகின்றவாறு என்று அவன் வருந்துதற்கும் எனக் கொள்க.

உரை: வளை யணிந்த முன்கையையும், வெள்ளிய பற்கள் விளங்கும் முறுவலையு முடைய இளமகளி ராடும் முறுக்கவிழும் மலர்களையுடைய கானலிடத்துக் குறுந்துறை யாண்டுளது என வினவி நின்ற நெடிய தோள்களையுடைய அண்ணலை யாம் காண்பாம், வருக எ. று.

---

1 தொல். பொ. 12. 2. ஷை. ஷை. 102.

அமர்நகை, விருப்பந் தரும் நகை என்றுமாம். இளையராடும் குறுந்துறை, தளையவிழ் கானற் குறுந்துறை யென இயையும். இடத்துநிகழ் பொருட்குரிய அடை இடத்தின்மேல் நின்றது. இளையராடும் துறையாதல் பற்றிக் குறுந்துறை எனப்பட்டது. வினவி நின்ற அண்ணல் என்க.

பரத்தையர் மனைக்கண் பன்னாள் தங்கி அவர் கூட்டமே நினைந்து ஒழுகினன் என்பதனைக் குறிப்பால், வளையணி முன்கை வாலெயிற்று அமர்நகை இளையராடும் தளையவிழ் கானல் குறுந் துறை வினவி நின்ற என்றும், அது காரணமாகத் தலைமகள் புலக்குமென்று அஞ்சி, களவின்கண் யாம் புனலிடை வீழ்ந்து கெடப் புக, குறுந்துறை வினவி நின்று நம்மை யெடுத்த உயர்ந்த தோளை எண்ணிப் புலவாதொழிதல் வேண்டும் என்பாள், நெடுந் தோள் அண்ணல் என்றும் கூறினள். நம்பால் நிகழ்ந்த மெலிவு கண்டு வாராது, தன் ஆற்றாமையே வாயிலாகப் புகுந்தானை நேர்தலே நாம் செயற்பாற்று என்றற்குக், கண்டிகும் யாமே என்றும் கூறினள். "இளையராடும் தளையவிழ் கானற் குறுந் துறை வினவி" நின்றது களவின்கண் மதியுடம் படுத்தற்கு; "ஊரும் பேரும் கெடுதியும் பிறவும், நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித் தோழியைக்[1]" குறையுறுவான் கூறியதனை நினைந்து கூறிய தென்க. இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை.

இனி, "நாற்றமும் தோற்றமும்[2]" என்ற சூத்திரத்து, "குறைந்தவட் படரினும் என்றது, மேல் தலைவனது புணர்ச்சி யுண்மை யறிந்து தாழ்ந்து நின்ற தோழி, தானும் குறையுற்றுத் தலைவிமாட்டுச் செல்லுதற்கண்ணும் கூற்று நிகழும்" என்றும், "இக்கிளவி இரந்து பின்னின்ற தலைவன் உள்ளப்புணர்ச்சி உள் வழியும், குறையுற்று மெய்யுறு புணர்ச்சி வேண்டித் தலைவிமாட்டுச் செல்லும் காலத்தும் ஒக்கும்" என்றும் கூறி இதனை உதாரணம் காட்டுவர் இளம்பூரணர்; இவ்வாறே நச்சினார்க்கினியரும் கொள்வர். இதற்கும் பொருள் ஒக்குமாறு உணர்க.

---

1. தொல். பொ. 112.   2. ஷை. ஷை. 114.

இனி, வளையறை முன்கை என்ற பாடத்துக்கு வளை ஒலிக்கும் முன்கை என்று உரைக்க. வாலெயிற் றின்னகை என்றும், விருந்தென வினவி நின்ற நெடுந்தோள் அண்ணல் என்றும், நெடுந்தேர் அண்ணல் என்றும் வரும் பாடங்கட்கு முறையே, வாலிய எயிறு விளங்கும் இனிய முறுவல் என்றும், '' புதியேன் மிக, இப்புனத்திற்கு யான் தனிப் போந்தனன் '' என ஊரும் பேரும் நெறியும் வினவி நின்ற நெடுந்தோள் அண்ணல் என்றும் தேரூர்ந்து வருதலும் களவின்கண் உரித்தாகலின், நெடிய தேரை யுடைய அண்ணல் என்றும் பொருள் உரைத்துக் கொள்க. துறை இரண்டற்கும் பொருள் ஒக்கும் என்க. (198)

199. கானலம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வானுயர் நெடுமண லேறி யானது
காண்கம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோ னெறிகட லூடே.

இது, தலைமகன் ஒருவழித் தணந்துழி ஆற்ருளாகிய தலைமகளை ஆற்றுவிக்கும் தோழி சொல்லியது.

உரை: தோழி, நம் முன்கைக்கண் செறிந்து நின்ற வளைகள் நெகிழ்ந்தோடுவித்த தலைமகனது அலை யெறியும் கடல் நாட்டினைக் கானற் பெருந்துறைக்கண் முழங்குகின்ற அலைகள் போந்து அலைக்கும் வானுற உயர்ந்த நெடிய மணற்றிடர்மேல் ஏறி ஆண்டே அமைந்தொழியாது அவனது வரவினைக் காண்பாம், வருக எ. று.

கானலம் பெருந்துறை என்புழி அம்முச்சாரியை விரிக்கும்வழி விரித்தல். வானுயர் நெடுமணல், மிக உயர்ந்த மணற்குன்று என்றவாறு நெய்தல்நிலத் தலைமகனுகலின் நெகிழ்த்தோன் எறிகடல் நாடு என்ருர்.

குறிவழிப் பிழையாது போந்து நலன் நுகர்ந்து சென்றவன் தணத்தலால் மேனி மெலிந்து வளை நெகிழ நின்றமையின்

செறிவளை நெகிழ்த்தோன் என்றும், அவனது நாடு காண்டலும் அவனைக் கண்டாற் போலும் இன்பம் பயக்கு மாகலின் எறிகடல் நாடு என்றும், நெடுமணற் குன்றேறி நின்றவழி ஆண்டுத்தோன்றும் இயற்கைக்காட்சி நெஞ்சின்கண் நிலவும் வருத்தம் கெடத் தன் இயற்கையின்பம் பயந்து நெஞ்சைப் பிணிக்குமாகலின் வானுயர் நெடுமணல் ஏறி ஆனுது என்றும், உயரிய மணற்குன்ற மாகலின் அவனது கடல்நாட்டினை முடியக் காண்டல் கூடும் என்பாள், காண்கம் வம்மோ என்றும் கூறினுள். ''குன்றின் தோன்றும் குவவுமண லேறிக் கண்டனம் வருகம் சென்மோ[1]'' என்ருர் பிறரும், ''ஒருதலை யுரிமை வேண்டியும்[2]'' என்றவிடத்து, ''ஒன்றித் தோன்றும் தோழி மேன'' என்றதனுல், தோழிமாட்டுப் போக்கும் வரவும் தோன்றும் எனக் கொள்க. செறிவளை நெகிழ்த் தோன் என்றது உடம்புநனி சுருங்கல்.

இனி, ''நாற்றமும் தோற்றமும்[3]'' என்ற சூத்திரத்து, வேண்டாப் பிரிவின்கண் நிகழும் கூற்றுக்களுள் இது தலைவியை ஆற்றுவித்தது என்பர் இளம்பூரணர்.

நெடுவரையேறி என்பது பாடமாயினும், நெடிய மலைமே லேறி அவனது எறிகடல் நாட்டினைக் காண்கம்வம்மோ என உரைக்க. நெய்தல் நிலத்தே வரைகள் உளவாயினும் அவை நெய்த லாகுமேயன்றிக் குறிஞ்சி எனக் கொள்ளற்க; ''நில னொருங்கு மயங்குதல் இன்று என மொழிப[4]'' என்பது பொருளிலக்கணம். (199)

200. இலங்குவீங் கெல்வளை யாய்நுதல் கவினப்
பொலந்தேர்க் கொண்கன் வந்தன னினியே
விலங்கரி நெடுங்கண் ஞெகிழ்மதி
நலங்கவர் பசலையை நகுகம் யாமே

---

1. நற். 235 2. தொல்.பொ. 225.
3. தொல்.பொ. 112 4. ஷை.ஷை. 12.

இஃது உடன்போக்குத் துணிந்தவழி அதற்கு இரவின் கண் தலைமகன் வந்தது அறிந்த தோழி தலைமகளைப் பாயல் உணர்த்திச் சொல்லியது.

உரை: விளக்கமுற நெகிழ்ந்து இலங்குகின்ற வளையினையுடையாய், நின் ஒளி நுணுகிய நெற்றி அழகெய்துமாறு பொற்றேரினையுடைய கொண்கன் இப்பொழுது உடன்கொண்டு சேறற்கு வந்துளானாகலின், விலங்குதலையுடைய அரி பரந்த நெடிய கண்கள் துயில் நீங்கித் தெளிவாயாக; அதனால் நம் நலம் கவர்ந்த பசலையின் கேடு கண்டுயாம் மகிழலாம் எ.று.

வீங்கு என்னும் முதனிலைத் தனிவினை வினையெச்சப்பொருட்டு; "வரிப்புனைப் பந்து[1]" என்றாற் போல. ஆய்நுதல் என்புழி ஆய்தல் சுருங்குதல்; பசலையால் ஒளி சுருங்கினமையின் ஆய் நுதல் எனப்பட்டது. இனி, எல் வளையாய் எனவும், நுதல்கவின எனவும் கொள்ளினும் அமையும். கவின என்னும் பெயரடியாகப் பிறந்த வினையெச்சம் வந்தனன் என்னும் காரணவினை கொண்டது. பொன் என்பது, செய்யுளாகலின், பொலம் என வந்தது.[2] ஞெகிழ்தல் ஈண்டுத் துயிலெழுதல். நகுகம், பன்மைத் தன்மை. நகை, எள்ளல் பற்றிப் பிறப்பது. கண்ணின் வெள்விழியில் மேலும் கீழுமாகச் சிவந்த நுண்ணிய கொடிபோல் பரந்திருக்கும் வரிகளை விலங்கரி என்ப; நெடுவிழியின் குறுக்கே நிற்றலின் விலங்கரி எனக் கூறப்பட்டன.

வரைவு நீட்டித்தலால், இற்செறிப்பு முதலியவற்றால் மேனி வேறுபட்டு நுதல் பசந்து வாடி யிருந்தா ளாகலின், ஆய்நுதல் என்றும், அழிவில் கூட்டத்தா னன்றி அப்பசப்பு நீங்காமை உட்கொண்டு உடன்போக்கு நினைந்திருந்தாளாகலின் ஆய்நுதல் கவின என்றும், போக்கின்கண் தமர் எதிர்ந்து தகையாவாறு விரைபரி பூட்டிய தேரொடு தலைமகன் வந்துளான் என்றற்குப் பொலந்தேர்க் கொண்கன் வந்தனன் என்றும், அவன் இப்பொழுதே

1. முருகு. 68 2. தொல்.பொ. 356.

வந்தானுயினும் நீ தாழ்த்தல் கூடாதென்றற்கு இனியே விலங்கரி நெடுங்கண் ஞெகிழ்மதி என்றும், தலைமகன் பிரிவாலும் வரைவு நீட்டித்தமையாலும் நுதல் ஒளி கரப்பப் படர்ந்து மாமைக்கவின் கெட இருந்தமையின் நலங் கவர் பசலை என்றும், தலைவனுெடு உடன்போகியவழி எய்தும் அழிவில் கூட்டத்தால் பசலை படர்தல் இல்லை யென்பாள் நகுகம் யாம் என்றும் தோழி கூறினுள்.

போக்குடன்பட்ட தலைமகன் இரவின்கண் வந்தமை அறிந்ததும், தோழி தலைமகளைத் துயிலுணர்த்துவாள் அவள் விரைந்தெழின் வளையொலியால் தாயர் முதலாயினுர் கண்விழிப்ப ரென்பது அறிவித்தற்கு எல்வளை எனவும், அவ்வாறு எழுவாட்குத் தலைமகன் போக்கு நினைந்து வந்தமை உணர்த்தற்குப் பொலந் தேர்க் கொண்கன் வந்தனன் எனவும், நெறிபற்றிக் தலைமகன்பால் விரைந்து அடைய வேண்டுதலின் ''எழுக'' என்னுது நெடுங்கண் ஞெகிழ்மதி எனவும், பசலை பரந்தமை நோக்கி அலர் கூறும் அயற்பெண்டிர் தலைமடங்குவதனைக் குறிப்பு மொழியால் நலங்கவர் பசலையை நகுகம் யாமே எனவும் தோழி சில சொற்களால் விளங்க வுணர்த்தும் திறம் காண்க.

நுதல் கவின்பெற என்றும், நெடுந்தேர்க் கொண்கனும் என்றும், நெடுங்கண் அனந்தல் தீர்மதி என்றும் பாடமுண்டு. அவற்றிற்கு முறையே நுதல் தான் இழந்த அழகைப் பெற என்றும், நெடிய தேரையுடைய தலைமகனும் என்றும், உம்மையால் அவன் போக்கு உடன்படா திருந்தமையும், கண்களாற் பெறும் துயில் நீங்குக என்றும் உரைக்க. நலங்கிளர் பசலை என்ற பாடமும் குறிப்புமொழியாய் நலங் கவர்ந்த பசலை என்றே பொருள் படும் என்க.

ஆசிரியர் நச்சினுர்க்கினியர் நெடுங்கண் அனந்தர் தீர்மதி என்றே பாடங்கொண்டு, ''தலைவரும் விழுமநிலையெடுத் துரைப்பினும்'' என்புழிப் ''போக்கற் கண்ணும்'' என்றதற்கு

1. தொல்.பொ. 39.

இதனைக் காட்டி, ''கண்கள் அனந்தல் தீர்மதி என்றதனுலே உடன்கொண்டு போவதற்கு வந்தான் எனப் பாயலுணர்த்திக் கூறிற்று'' என்ருர். இது நெய்தற்கண் பாலை வந்தது.

இது காறும் உரை கூறிப் போந்த நெய்தற் பாட்டுக்கள் நூறும், தாய்க்குரைத்த பத்து முதல் வளைப்பத்து ஈருகப் பத்துப் பத்துக்களாக வகுக்கப் பெற்றிருப்பது கண்டோம். இவற்றுள் தாய்க்குரைத்த பத்து, தோழிக்குரைத்த பத்து, கிழவற்குரைத்த பத்து, பாணற்குரைத்த பத்து என்ற நான்கும் உரிப்பொருளைச் சார்ந்த கேட்போர் பொருளாகவும், ஞாழற்பத்து, வெள்ளாங் குருகுப் பத்து, சிறுவெண் காக்கைப்பத்து, தொண்டிப்பத்து, நெய்தற்பத்து, வளைப்பத்து என்ற ஆறும் நெய்தற் கருப்பொருள் பொருளாகவும் தொகுக்கப் பெற்றுள்ளன. முதலிற் கருவும், கருவின் உரியும் ''முறை சிறந்தன [1]'' என்பதனுல் உரிப்பொருட் குரிய தாயர் முதலியோரை முற்பட நிறுத்தியும், ஏனைக் கருப் பொருளைப் பிற்பட நிறுத்தியும் இந்நெய்தற் பகுதியைப் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் தொகுத்துள்ளார். (200)

இரண்டாவது

ஆசிரியர் அம்மூவனுர் பாடிய நெய்தல் முற்றும்.

---

1. தொல்.பொ. 3.

இரண்டாவது தொகுதி

குறிஞ்சி & பாலை

ஆசிரியர் கபிலர் பாடிய

குறிஞ்சி

தமிழகத்துப் பொருள் நூல் மரபு வகுத்த நிலப்பாகுபாட்டுள் குறிஞ்சி என்பது ஒன்று; இதன்கண் மலைகளும் அவற்றைச் சார்ந்த நிலப்பகுதிகளும் அடங்கும். ''சேயோன் மேய மைவரை யுலகம்[1]'' என ஆசிரியர் தொல்காப்பியனுர் குறிப்பது இக் குறிஞ்சியே. முகில் தவழும் முடிகொண்டு விளங்கும் மலை நாடாகிய குறிஞ்சியை அவர் மைவரை யுலகம் என்று உரைக் கின்ருர்.

இக்குறிஞ்சியில் வாழ்பவர் குறவர் எனப்படுவர். மலைமுகடு களிலும் சரிவுகளிலும், மலையைச் சார்ந்த பகுதிகளிலும் விளையும் ஐவனநெல்லும் மூங்கிலரிசியும் இவர்கட்குப் பண்டைநாளில் சிறந்த உணவுப்பொருள்கள். வளவிய இடங்களில் நிற்கும் சந்தனம் தேக்கு முதலிய மரங்களை வெட்டி ஆங்குள்ள காடுகளை யழித்து நிலத்தை உழுது தினைவிதைத்தலும் வள்ளி முதலிய கிழங்குகளைப் பயிர் செய்தலும் அவர்களுடைய உழவுவினை; தேன் அழித்தலும் வேட்டையாடுதலும் அவர்கள் தொழிலாதல் பற்றி அவர்கள் வேட்டுவர் என்றும் கூறப்படுவர். மலைகளிற் காணப்படும் குறிஞ்சி, சந்தனம், தேக்கு, திமிசு, வேங்கை முதலிய மரங்கள் இவர்கள்

---

1. தொல்.பொ. 5.

வாழ்வில் பயன்படுகின்றன. புலியும் யானையும் கரடியும் பன்றியும் பிறவும் இந்நிலப்பகுதியில் வாழும் விலங்குகள்; கிளிவகைகளும் மயில்களும் பிறவும் இங்கே தோன்றும் புள்ளினங்கள்; மலைச்சுனைகளும், அருவிகளும், ஆறுகளும் மலைவாழ்பவர்க்கு நீர் நிலைகள்; காந்தளும் வேங்கையும் சுனைக்குவளையும் பிறவும் இம்மக்கள் விரும்பும் பூக்கள். குறிஞ்சிநிலத்தவர் உறையும் இடங்களில் குறிஞ்சியாழின் இனிய இசை கேட்கப்படும்; தொண்டகம், முருகியம் முதலிய பறைகளின் முழக்கமும் உடன்நிலவுகின்றது. ஊர்கள் குன்றக்குடி, சிறுகுடி யெனவும், கல்லடைக்குறிச்சி[1], வேல்குறிச்சி[2] எனவும் பெயர் பெற்றுள்ளன. சுனைகுடைதலும் அருவியாடுதலும் இம்மக்களது நீர் விளையாட்டு; இவர்கட்கு வழிபடுகடவுள் முருகன். அவன் இளஞாயிறு போலும் செந்நிறம் உடையனாகலின், அவனைச் சேயோன் என்றும் சேய் என்றும் கூறுவர்; தொல்காப்பியரும் அவ்வியல்பு தோன்றவே, ''சேயோன் மேய மைவரை யுலகம்'' என்று குறித்துள்ளார்.

அகப்பொருள் நெறிக்கண் புலனெறி வழக்கம் செய்த சான்றோர் இப்பகுதிக்குக் கூதிர்க்காலமாகிய பெரும்பொழுதையும், நள்ளிரவு கொண்ட இடையாமமாகிய சிறுபொழுதையும் வகுத்துள்ளனர். ''குறிஞ்சி கூதிர்யாமம் என்மனார் புலவர்'' என்பது தொல்காப்பியம். கூதிர் என்றது ஐப்பதியும் கார்த்திகையுமாகிய இருதிங்களுமாகும். அன்பின் ஐந்திணை ஒழுக்கத்துள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகிய காதலொழுக்கம் இக்குறிஞ்சிக்குரியதென அமைத்துள்ளனர். தலைமைப் பண்புகளே உருவாக அமைந்த கட்டிளங் காளையொருவனும், அவ்வியல்பிற் குன்றாது கற்பும் பொற்புமே வடிவாய் அமைந்த இளநங்கை ஒருத்தியும் ஒருவரை ஒருவர் தனித்துக் கண்டு காதலுறவு கொள்வது இவ்வொழுக்கத்தின் விழுப்பமாகும். இவ்வொழுக்கத்துக்குக் கூதிர்க்காலம் சிறந்தமையை விளக்கப் புகுந்த நச்சினார்க்கினியர், ''இருள்தூங்கித் துளிமிகுதலின் சேறல் அரிதாகலானும், பானாட் கங்குலின் பரந்துடன் வழங்காதுமாவும் புள்ளும் துணையுடன் இன்புற்று வதிதலின் காமக்குறிப்புக்கழியப்

---

1. A.R. 90 of 1907. 2. A.R. 124 of 1907.

பெருகுதலானும், காவல்மிகுதி நோக்காது வரும் தலைவனைக் குறிக்கண் எதிர்ப்பட்டுப் புணருங்கால் இன்பம் 'பெருகுதலின் இந்நிலத்துக்குக் கூதிர்க்காலம் சிறந்தது எனப்படும்'' என்பர்.

இக்குறிஞ்சித்திணை பொருளாக இந்நூற்கண் காணப்படும் நூறுபாட்டுக்களையும் பாடியவர் கபிலர் என்னும் புலவர் பெருமகனுவர். இவையே யன்றி, அகம், புறம், பதிற்றுப்பத்து, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களிலும், பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் இவர் பாடியன உண்டு.

கபிலர், பாண்டிநாட்டு மதுரைநகர்க்குக் கிழக்கில் உள்ள வாதவூரில் பிறந்தவர் என்று வழிவழியாக ஒரு செய்தி நிலவுகிறது. இவரைப் ''புலனழுக் கற்ற அந்தணாளன்'' எனச் சங்ககாலச் சான்றோர் பாராட்டிக் கூறுவர்; இவரே தம்மை, ''யானே பரிசிலன் மன்னும் அந்தணன்'' என்று தெரிவிக்கின்றார். வாதவூரை அவ்வூர்க் கல்வெட்டுக்கள், தென்பறம்பு நாட்டு வாதவூர் என்று குறிக்கின்றன. பறம்புநாடு அந்நாளில் வேள்பாரிக்கு உரியதாயிருந்தது. கபிலர் அவன்பால் நெருங்கிய நட்புற்று அவன் இறந்தபின் அவன் மக்களைத் திருக்கோவலூர்க்குக் கொண்டு சென்று, அவ்வூரிலிருந்து மலாடு என்ற பகுதியை ஆண்ட மலையமான் திருமுடிக்காரியின் மைந்தர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அதற்கிடையே சேரநாடு சென்று அங்கே இருந்து ஆட்சிசெய்த செல்வக் கடுங்கோவாழியாதனைச் செந்தமிழால் சிறக்கப் பாடினார்; அவன் அவரதுபுலமை நலம் கண்டு வியந்து, ''சிறுபுறம் என நூறாயிரம் காணம் பொன் கொடுத்து நன்று என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான்.'' நன்று என்பது பிற்காலத்தே நணா என மருவித் திருஞானசம்பந்தர் திருநணா என்று பாடும் சிறப்புற்றது; அதனைச் சூழ்ந்த பகுதி கபிலர்க்குக் கொடுக்கப்பட்டதென்பதற்குச் சான்றாக, அங்கே கபிலக்குறிச்சி என்றோர் ஊரும் இன்றும் உளது. முடிவில், திருக்கோவலூரில் பாரிமகளிரை மணஞ்செய்துதந்து தமது நட்புக்கடனை ஆற்றி அவ்வூரருகில் ஒடும் பெண்ணையாற்றின் துருத்தியில் வடக்கிருந்து உயிர் நீத்தார்; அவ்விடத்தே இப்போது

ஒரு பெரிய கற்பாறைதான் உளது. எஞ்சிய மரமும் செடிகளும் மண்ணும் பிறவும் ஆற்றில் கரைந்தொழிந்தன. திருக்கோவலூர்க் கல்வெட்டொன்று இச்செய்தியைச் சிறப்பித்து,

"மொய்வைத் தியலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை
அலைபுன லழுவத் தந்தரிட் சம்செல
மினல்புகு விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகும் கபிலக் கல்லது [1]"

என்று இசைக்கின்றது.

கபிலர், வேள்பாரி இறந்தபின்னர், செல்வக்கடுங்கோ வாழியாதனைச் சென்று கண்டபோது, 'மலர்ந்த மார்பின் மாவண் பாரி, முழவுமண் புலர இரவலர் இனைய, வாராச் சேட்புலம் படர்ந்தான் அளிக்கென, இரக்குவாரேன்" என்றுகூறி, "ஈத்தொறும் மாவள்ளியன் என நுவலும் நின் நல்லிசை தர வந்தனன்" என்று உரைத்துள்ளனர். பாரி பிரிந்தமை ஆற்றாது இவர் வருந்திப் பாடிய பாட்டுக்களும், அவன் பெண்மக்களை மணஞ்செய்து கொடுத்தற்காக அவர் செய்த முயற்சியும் புறநானூற்றின்கண் உள்ளன. தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து தனித்தொழுகிய வையாவிக்கோப்[2] பெரும்பேகனை அவன் இருந்த ஆய்க்குடிக்கண் சென்று கண்டு அவள் பொருட்டுத் தகுவன கூறி

---

1. S. I. I. Vol. vii. No. 863.

2. வையாவி என்பது ஆவியர் என்னும் குடிவகையின் ஒரு கிளை. ஆவிநாடு, பழனித் தாலூகாவில் அமராவதி ஆற்றின் கீழ்க்கரையையும் திண்டுக்கல்லுக்குச் சிறிது மேற்கிலுள்ள குன்றையும் எல்லையாகக் கொண்டது; ஆவியர் வாழ்ந்த ஆவிகுடி ஆவிநன்குடி எனப்படும். ஆவிநன்குடி பிற்காலத்தே பழனி யாயிற்று; ஆவிகுடி ஆயக்குடி என மருவிவிட்டது. பழனியை வையாபுரி என்பது வையாவிபுரி என்பதன் சிதைவு. பழனியிலுள்ள சிற்றேரியை வையாவி என்று இன்றும் வழங்குகின்றனர்.

அவன் மனத்தை அவளொடு கூடி வாழும் வாழ்க்கைக்கண் ஒன்று படுவித்த இக்கபிலரது சிறப்பு நினைக்குந்தோறும் இன்பம் தருவதொன்று.

சேரநாட்டு வடபகுதியான ஆரியநாட்டின்கண் வாழ்ந்த பிரகத்தன் என்னும் ஆரியவரசன் செல்வக்கடுங்கோவின் சிறந்த துணையால் கபிலரைக் கண்டு, 'தமிழ்' எனச் சிறப்பித்துக் கூறப்படும் அகப்பொருள் நலத்தை அறிய விழைந்தானாக, அவன்பொருட்டுக் கபிலர் குறிஞ்சிப் பாட்டு என்ற இனிய நெடும் பாட்டைப் பாடித்தமிழ் ஒழுக்கத்தின் தனிமாண்பினைப் புலப் படுத்தினார். இவருடைய வரலாறு புலமைநலம் ஆகிய இயல்பு களை விளக்கித் தனியே நூல்கள் பல எழுதப்பட்டுள்ளனவாகலின் ஈண்டு விரித்தல் வேண்டாததொன்று, ஔவையார் திருவள்ளுவர் முதலியோர் பெயர்களோடு இணைத்து இவரைப்பற்றியும் பொய்க் கதைகள் பல கூறுவதுண்டு. இக்கபிலர் வேறு, பதினோராந் திருமுறையிற் கூறப்படும் கபிலதேவர் வேறு; இருவரையும் ஒருவராகக் கருதுபவரும் உண்டு.

இவராற் சிறப்பிக்கப் பெற்ற தலைவர்கள் பலர்; மேலே கூறிய சிலர் போக நள்ளி முதலிய பலருடைய குறிப்புக்கள் இவருடைய பாட்டுக்களிற் காணப்படும்.

கபிலர் பாடிய பாட்டுக்கள் பலவற்றுள்ளும் குறிஞ்சித் திணைப் பாட்டுக்களே பெரும்பாலன. வேறு சிலவும் குறிஞ்சியைச் சார்ந்தனவாகவே இருத்தலால் இவரைக் குறிஞ்சிப்புலவர் என்பது தவறாகாது. குறிஞ்சிக் காட்சிகளில் இவர் பேரீடுபாடு உடையவ ராதலால், அவ்வப்போது கண்ட காட்சிகளைத் தாம் பாடும் பாட்டுக்களில் சொல்லோவியம் செய்து நம்மை இன்புறுத்து கின்றார். வாழையும் பலாவும் கனிந்து தேனொழுக நிற்கும் மலைச் சாரலில், தேன் நிறைந்த சுனையை அடைந்து, அது மயக்கந் தரும் என்பதை "அறியாது உண்ட கடுவன் அயலது,-கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது, நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து (கள்மயக்க

முற்று) கண்படுக்கும்[1]'' என்பதும், மலைச்சாரலில் அருவி யொலிக்க, மலர்ந்த பூக்களிடத்தே வண்டினம் பாட, மந்தியினம் பார்த்திருக்க மயிலாடுவது கண்ட கபிலர், மயிலை ஒரு விறலி யாகவும், அருவி முதலியவற்றை ஆடற் கேற்ப முழங்கும் இன்னியமாகவும் தொடுத்து, ''ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின், கோடை யவ்வளி குழலிசை யாகப், பாடின் அருவிப் பனிநீர் இன்னிசை, தோடமை குழலின் துதைகுரலாகக், கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொகு' மலைப்பூஞ் சாரல் வண்டுயாழாக, இன்பல் இமிழ் இசை கேட்டுக் கலிசிறந்து, மந்தி நல்லவை மருள்வன நோக்கக், கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில், விழவுக்கள விறலியின் தோன்றும்[2]'' என்பதும் படித்து இன்புறற்பாலனவாகும். இவரது குறிஞ்சிக்காட்சியில், யானை யொன்று எதிரே தோன்றி புலியொடு பொருது அதனைக் கொன்று குருதி படிந்த கோட்டுடன் போந்து தன் பிடியொடு கூடி, வாழைகள் நிறைந்த மலைச்சாரலில் வண்டினம் பாடக் கேட்டு இனிது உறங்குகிறது[3]. பிறிதோரிடத்தே அருவி நீரிற் பாய்ந்த மந்திவயான்று ஆங்கு மிதந்த பலாப்பழத்தைப் புணையாகக் கொண்டு நீந்திச் சென்று துறையடைவது கண்டு மகிழ்கின்றோம்[4].

இக் குறிஞ்சிநிலத்தில் வாழ்பவர் செயலையும் நம் கபிலர் ஆங்காங்கு நமக்குக் காட்டுவதில் தவறுவதிலர். தன் குட்டியொடு கூடியிருந்த பெண்பன்றியை வேட்டுவரும் அவருடைய நாய்களும் அணுகாதவாறு பொருது வெருட்டி விட்டு, தனது அப்பெண் பன்றியும் குட்டியும் வேறிடம் பெயர்வித்த ஆண்பன்றி, சிதைந் தோடிய வேட்டுவர் மீளத் திரும்பிவரும் குறுவழியில் நின்று கொண்டிருக்கிறது; அதனைக் கானவன் காணுகின்றான். அதன் செயல், பகைவர் வருதற்குரிய குறுவழியில் விலங்கி நின்று மேல்வரும் படைமறவரோடு அஞ்சாது எதிர்நின்று போருடற்றும் தன் தலைவன் செயலை ஒத்திருப்பது கண்டு வியந்து அதனைக் கொல்லாமல் விடுத்துச் செல்கின்றான்[5]. ஒருகால் கபிலர் கானவ

1. அகம் 2. 2. ஷை. 82. 3. ஷை. 332.
4. ஷை. 382. 5. ஷை. 248.

ஞெருவன் எறிந்த கவண்கல் வழியே தமது கட்பார்வையைச் செலுத்துகின்றார். ''வன்கைக் கானவன் கடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல் உடுவுறு கனையிற் போகிச், சாரல் வேங்கை விரியிணர் சிதறித் தேன்சிதையூஉப் பலவின் பழத்துள் தங்கும்[1]'' காட்சி அவரை இன்புறுத்துகிறது. வேட்டுவர் தலைவன் தன் மார்பில் அணிந்த மாலை பூக்கள் உதிர்ந்து வெறிதே கிடந்தசைய வந்து நின்றான். அதனை நோக்கிய கபிலர், ''பூச்சோர் மாலை, ஏற்றிமில் கயிற்றின் எழில்வந்து துயல்வர[2]'' என அக் காட்சியை நம் மனக்கிழியில் எழுதி விடுகின்றார். இவ்வாறு சொல் நிகழு மிடமெல்லாம் இனிய குறிஞ்சிக்காட்சிகளைக் காட்டும் கபிலர், அவர்களின் நினைவும் சொல்லும் செயலும் எங்ஙனம் இயலுகின்றன என்பதை ஈடும் எடுப்பு மில்லாத இன்சொற்களால் காட்டுகின்றார். அவற்றை இனிவரும் பாட்டுக்களிற் காணலாம்.

---

1. அகம். 292. 2. ஷை. 248.

21

அன்னாய் வாழிப்பத்து

இப் பகுதிக்கண் வரும் ஒவ்வொரு பாட்டும் ''அன்னாய் வாழி'' யென்ற தொடராலே தொடங்கும் சிறப்புப்பற்றி இஃது இப்பெயர் பெறுவதாயிற்று.

201. அன்னாய் வாழிவேண் டன்னை யன்னை
தானு மலைந்தா னெமக்குந் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
என்ன மரங்கொலவர் சார லவ்வே.

இது, நொதுமலர் வரைவின்கட் செவிலி கேட்கு மாற்றால் தலைமகள் தோழிக்கு அறத்தொடுநிலை குறித்துக் கூறியது.

உரை: அன்னாய், இதனை விரும்பிக்கேள் தலைமகனுடைய மலைச்சாரலிலுள்ளவை எத்தன்மை வாய்ந்த மரங்கள் கொல்லோ கூறுக; அவை அணிவதற் குரிய பூவையுடைமையான், எம் தலைவனும் அணிந்து கொண்டான்; எமக்கும் அங்ஙன மாயினதோடு அமையாது தழையாகவும் உதவின; அவை பொன் போலும் பூக்களையும் நீலமணி போலும் அரும்புகளையு முடைய வாகும் எ.று.

''அன்னை வாழி வேண்டு அன்னை[1]'' என்றாற் போல, ஈண்டு அன்னாய் வாழி வேண்டு என வந்தது. ''ஐ ஆயாகும்[2]'' என்றதனால், அன்னை, அன்னாய் என வந்தது. இனிவருமிடங் களிலும் இதுவே கூறிக்கொள்க. ''அன்னை என்னை என்றலும் உளவே[3]'' என்பதனால், தலைவனை என்னை என்றாள்; இது சொல்லினும் எழுத்தினும் தோன்றா மரபிற்றாயினும், 'தொன்னெறி முறைமை'' பற்றிக் கொள்ளப்படும். என்ன மரங்கொல் என்றது வேங்கை மரத்தைக் கருதிநின்றது. வேங்கை மரம் பொன்னிற மலரும் மணிபோன்ற அரும்பும் உடைத்தாதல், ''மன்ற வேங்கை மணநாட் பூத்த, மணியே ரரும் பின் பொன்வீ தாஅய்[4]'' என்பதனால் அறிக.

என்னை தானும் மலைந்தான் எமக்கும் தழையாயின என்றதனால் தலைவன் பூத்தரு புணர்ச்சி கொண்டதும், தழை யுதவியதும் பெற்றாம். தலைமகள் வேங்கைப் பொழிலகத்தே தலைமகனைத் தலைக்கூடினமை வெளிப்படுப்பாள் போன்று ஏத்தல் என்னும் அறத்தொடுநிலை குறிக்கின்றா ளாகலின், பொன்வீ மணியரும்பின, என்ன மரங்கொல் என்றாள். அறத்தொடுநிலைக்கண் தோற்று வாயாகத் தலைமகனை வேறுபட நிறுத்தித் தானும் மலைந்தான் என ஒருமைவாய்பாட்டாற் கூறியவள், தழையேற்பித்து உயிரொன்றிய கேள்வ னயினமை உணர்த்தற்கு அவர் எனப்பன்மை வாய்பாட்டாற் கூறினாள்.

'' நாற்றமும் தோற்றமும்[5]'' என்ற சூத்திரத்து ''முன்னிய அறனெனப் படுதல் என்று இருவகைப் புரைதீர் கிளவித் தாயிடைப் புகுப்பினும்'' என்ற விடத்து நிகழும் அறத்தொடுநிலையில், இது தழையும் கண்ணியும் தந்தான் என்பதுபடக் கூறியது என இளம்பூரணரும், ''தோழி தழை தந்தான் என அறத்தொடு நின்றது[6]'' என நச்சினார்க்கினியரும் கூறுவர். (201)

---

1. ஐங். 101. 2. தொல். பொ. 123. 3. ஷை.ஷை. 246.
4. அகம். 232. 5. தொல். பொ. 112 6. ஷை. ஷை. 207.

202. அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாட னூர்ந்த மாவே.

இது, தலைமகன் வரைதல் வேண்டித் தானே வருகின்றமை கண்ட தோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குக் காட்டிச் சொல்லியது,

உரை: அன்னாய், இதனை விரும்பிக்கேள்: நம்மூர்க்கண் வாழும் பார்ப்பனச் சிறுவர்களைப் போல மலைநாடனாகிய தலைவன் ஊர்ந்து போந்த குதிரையும் குடுமி பொருந்திய தலையையுடையன, காண் எ.று.

''அன்னையென்னையென்றலும்உளவே[1] '' என்பதனால் தோழி தலைவியை அன்னாய் என்றது அமைவதாயிற்று. குடுமித் தலைய என்புழிக் குடுமி, குதிரையின் தலையில் இரு காதுகட்கும் இடையே நெற்றியில் விழும் உளைமயிர். ''மானுளை யன்ன குடுமித், தோல் மிசைக்கிடந்த புல்லண லோனே[2]'' என்று பிறரும் கூறுதல் காண்க.

வரைதல் வேண்டித் தலைமகன் தானே வருகின்றதனைத் தோழி நேரே கண்டமை தோன்ற, நாடன் ஊர்ந்த மா என்றாள். குதிரையினது நெற்றிமயிர் சிலவாய மயிர் பொருந்திய குடுமியை யொத்தலினாலும், முன் குடுமியையுடையராதல் பார்ப்பனமாக்கட்கு ஆசாரவிதியாகலினாலும், அதனை யுடைய பார்ப்பனங்குறுமகவை உவமித்துக் கூறினாள்.

திருக்குடந்தைச் சவையப்பநாயனை வைது பாடிய காளமேகப் புலவர் அவன் முன் குடுமி யுடையனாதலைச் சுட்டி, ''சொருக்

1. தொல். பொ. 246 2. புறம். 310.

கவிழ்ந்த முன், குடுமிச் சோழியா[1]'' என்று உரைப்பதனுல், பிற்காலத்துப் இவ் வழக்காறு இருந்தமை தெளிவாம். (202)

203. அன்னுய் வாழிவேண் டன்னை நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட்
டுவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழி நீரே.

இஃது, உடன்போய் மீண்ட தலைமகள் நீ சென்ற நாட்டு நீர் இனியவல்ல; நீ எங்ஙனம் நுகர்ந்தாய் எனக் கேட்ட தோழிக்குச் சொல்லியது.

ப.உரை : மானுண்டு கழித்த கலங்கற் சின்னீர் அருந்தக் கூடா வாயினும். அருந்தினேனுக்குத் தேன் மயங்கு பாலினும் இனியவாயின என்றது அவன் நாட்டு நீர்நலமும் அன்புடைமையும் உணர்த்தியவாறு. உவலை, தாழ்வு ; கீழ்மையுமாம்.

உரை : அன்னுய், இதனை விரும்பிக்கேள்: அவர் நாட்டிலிள்ள இலைகள் உதிர்ந்து மட்கிய பள்ளத்தின் அடியில் மாவினம் உண்டு கலக்கிக் கழித்த கலங்கற் சின்னீர், நம் பூந்துடவைக்கண் பெறப் படும் தேன் கலந்த பாலினும் இனிமையுடையவாகும், காண் எ.று.

தம் பொருளாகிய ஆனிரைகட்குரிய உணவுப் பொருள்களைத் தொகுத்துவைத்தற்கும், தம் உணவுக்கு வேண்டிய காய்கறிகளைப் படைத்துக் கோடற்கும் மனைப் புறத்தே அமைத்துள்ள தோட்டக் கால் படப்பை எனப் படும். இக்காலத்தும் வைக்கோற் படப்பை என வழங்குவர். படப்பை, படைப்பை என்பதன் மரூஉ. [படப்பை யிலுள்ள மரங்களில் கட்டப்பட்ட தேன், படப்பைத்தேன் எனப்பட் டது. மயங்குதல், கலத்தல். பண்டையோர் பாலில் கலந்துண்டது

1. த. நா. ச. 217. இன்றும் சில வைதிகப் பார்ப்பனரிடத்தே இஃது இருந்துவருவதைத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற் காவிரி யின் வடகரை ஊர்களில் காணலாம்.

தேனேயன்றி இன்று வழங்கும் சருக்கரை யன்று; ''பாலொடு தேன் கலந்தற்று[1]'' என்பது காண்க. உவலைக்கூவல், தாழ்வான பள்ளம். மா, எருமை முதலிய விலங்குகள்; இது ''னகரம் ஒற்றும் ஆவும் மாவும்[2]'' என்பதனுல் மான் என வந்தது. உண்ண என்பது உண்டு எனத்திரிந்தது. ''வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய[3]'' என்பது காண்க. கலுழி, கலங்கல்.

ஈக்களை வாட்டியும் ஆன்களை மயக்கியும் ஈட்டிய தேனையும் பாலையும் கலந்துண்டலினும், தம்மிடத்து உளவாகிய பொருள் சிறிதெனினும், அறவோர்க்கு அளித்தல் முதலிய நல்லறத்திற் பகுத்தளித்து எஞ்சியது உண்டல் ஏற்றமுடைத் தாகலின், தேன் மயங்கு பாலினும் இனிய என்ருள்; ''உற்ருர்க் குரியர் பொற்ருெடி மகளிர்'' என்பவாகலினுலும், கற்புடைய மகள் ''கொண்ட கொழு நன்குடி வறன் உற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்[4]'' என்பவாகலினுலும், நீ கொடுக்கும் தேன் மயங்குபால் உயர்ந்ததாயினும் எனக்கு இனிதாயிற்றன்று என்றும், அவர் நாட்டில் நீர் அரிதாயினும், அவ் வரிய நீர் தானும் மானுண்டு எஞ்சிய கலுழி நீர் எனினும் உண்டற்கு இனிதெனக் குறிப்பால் உயர்த்தியும் கூறினுள். மானுண்டு எஞ்சிய கலுழி நீர் எனவே, அஃது உண்டற்கேற்றது அன்மை பெறப்படும். ''வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில், குளவி மொய்த்த அழுகற் சின்னீர், வளையுடைக் கையள் எம்மொடு உணீஇயர், வருகதில் அம்ம தானே[5]'' எனத் தலைமகன் நினைந்துரைக்குமாறு காண்க.

''எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே[6]'' என்பதன் உரையில், இதனைக் காட்டி, ''இஃது உடன்போய் மீண்ட தலைவி நீ சென்ற நாட்டு நீர் இனியவல்லவே, எங்ஙனம் நுகர்ந்தாய் என்ற தோழிக்குக் கூறியது'' என்பர் நச்சினுர்க்கினியர். (203)

---

1. குறள். 1121. 2. தொல். எழுத்து. 231.
3. தொல். சொல். 457. 4. நற். 110. 5. குறுந். 56.
6. தொல். பொ. 42.

204. அன்னாய் வாழிவேண் டன்னையஃ தெவன்கொல்
வரையர மகளிரி னிரையுடன் குழீஇப்
பெயர்வுழிப் பெயர்வுழித் தவிராது நோக்கி
நல்ல ணல்ல ளென்ப
தீயேன் றில்ல மலைகிழ வோற்கே.

இது வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத் தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: நல்லள் நல்லள் என்பது அலர் அறிவுறீஇயது.

உரை: அன்னாய், யான் கூறுகின்ற இதனை விரும்பிக்கேள்: வரையின்கண் வந்து ஆடும் சூரரமகளிரைப் போல் பிற மகளி ரெல்லாம் தம்மிற் கூடிக்கொண்டு யாம் இயங்குமிடமெல்லாம் ஒழியாது நோக்கி நல்லள் நல்லள் எனப் பலகாலும் என்னைக் கூருநிற்பர். அப்பெற்றியேன், மலைநாடனாகிய தலைமகற்குமட்டில் தீயேனா யிராநின்றேன்; அஃது என்னையோ, கூறுக எ.று.

அஃது என்னும் சுட்டு "மகளிரால் நல்லள் எனப்படும் யான் தலைமகற்குத் தீயேனாயினேன்" என்பது குறித்துநின்றது. "முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே[1]" என்பவாகலின், சுட்டு முன்னர்க் கூறப்பட்டது. பெயர்வுழி பெயர்வுழி என்றும், நல்லள் நல்லள் என்றும் நின்ற அடுக்கு ஒருசொல் பலகாலும் நிகழ்தலை உணர்த்தலின், "பொருளொடுபுணர்தல்". தன்னை நல்லள் என்போரும் மிக்க உருவும் திருவுமுடையரே என்றற்கு வரையரமகளிரின் என்றாள். மகளிர் குழீஇய விடத்துப் பெரும் பான்மையும் அலரெடுத் துரைத்தலும், புறங்கூறுதலும் நிகழு மாயினும், இவர் குழுவில் அது நிகழ்தலின்றித் தலைமகள் நலமே இயம்பப்பெற்றமை, மகளிரின் நிரையுடன் குழீஇ என்றதனாற் பெற்றும். ஏதிலார்க்கு நல்லளாய்த் தோன்றும் யான் தலைமகற்கு அப்பெற்றிய எல்லே னாயினேன் என்பது ஒழிய நின்றமையின், தில்ல, ஒழியிசைக்கண் வந்தது.

---

1. தொல். சொல். இளம். 39.

பெயரும் இடந்தோறும் என்பாற் கிடக்கும் பெண்மைக்குண மும் பெருங்கவினும் கண்ட மகளிர், அத்துணைச் சிறப்பினைத் தாம் பெற்றிலாமை குறித்துப் பொருது புறங்கூறற்பால ராயினும், அது செய்யாது புகழ்ந்து பாராட்டுகின்றன ரென்பாள் நல்லள் நல்லள் என்ப என்றும், அவ்வாறே என் நலம் பாராட்டும் பான்மைய னாகிய தலைமகன், அது செய்தற்கு விரைய வந்து கூடானாயினன் என்பாள், மலைகிழவோற்குத் தீயேன் தில்ல என்றும் கூறினாள். ஏனைமகளிர்க்குப் புலனாகி, அவராற் சிறப்பிக்கப்படும் எனது நலம் அவற்குத் தீமையாய்த் தோன்றி அவர் என்னை மறக்கச் செய்தது என்பாள் தீயேன் என்றும், அத்தீமைக்குக் காரணம் தனக்குப் புலனாகாமையின், எவன்கொல் என்றும் கூறுகின்றாள். (204)

205. அன்னாய் வாழிவேண் டன்னையென் றோழி
நனிநா ணுடைய ணின்னு மஞ்சும்
ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
மலர்ந்த மார்பிற் பாயல்
துஞ்சிய வெய்யள் நோகோ யானே.

இது, நொதுமலர் வரைவு வேண்டி விட்டுழித் தலைமகட்கு உளதாகிய வருத்தம் நோக்கி, 'இவள் இவ்வாறு ஆதற்குக் காரணம் என்னை?'' என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

உரை: அன்னாய், யான் கூறுகின்ற இதனை விரும்பிக்கேள்: என் தோழியாவாள் மிக்க நாணமுடையளாய்த் தாயாகிய நின்னையும் மிக அஞ்சும் நீர்மையளே யாயினும், மிக்குற்றொழுகும் வெண்மையான அருவிகள் நிறைந்த உயர்ந்த மலைநாடனுடைய அகன்ற மார்பின்கண் கிடந்து பெறும் இனிய உறக்கத்தைப் பெறுதற்கு விரும்பினளாகலான், யான் வருந்துதலல்லது பிறி தொன்றும் செய்யகில்லேனாயினேன் எ.று.

மகளிர்க்கு இயற்கையாக அமைந்த நாணம் அச்சங்களின் அளவினும் இவள்பால் அவை மிக்குள்ளன என்பது கருத்தாதலின்

நனி யென்றது பின்னும் கூட்டப்பட்டது. ஒலிவெள்ளருவி என்ற விடத்து ஒலித்தல் மிகுதிப் பொருட்டு ; ''ஒலிவெள்ளருவி ஒலியில் துஞ்சும்[1]'' என்ருற்போல. மலர்ந்த மார்பு என்புழி மலர்தல் விரிதல். ''மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே[2]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. வெய்யள், வேண்டற் பொருட்டாய வெம்மை என்னும் உரிச்சொல் லடியாகப் பிறந்த வினைக்குறிப்பு முற்று. நோகோ யானே என்றது தன்பால் வேறு செயலின்மை தோன்ற நின்றது.

அவட்கு உளதாகிய வேறுபாட்டுக்குரிய காரணத்தை அவளறிய நீ என்னைக் கேட்பினும் பொருது இறந்துபடும் அத்துணைப் பெருநாணமுடையள் என்பாள், நனி நாணுடையள் என்றும், தனக்குற்ற வேறுபாட்டை நீ அறிதற்குப் பெரிதும் அஞ்சுகின்ருள் என்பாள், நின்னும் நனியஞ்சும் என்றும் தோழி கூறினுள். நற்ருயினும் களவின்கண் அருமறை அறிதற்கண் செவிலி சிறந்த தாயாயினும் அவள்பாலும் அதனைப் புலப்படுத்தற்கு அஞ்சுகின்ருள் என்பதுபட நிற்றலின், உம்மை சிறப்பு ; ''ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின் தாயெனப்படுவோள் செவிலியாகும்[3]'' என ஆசிரியர் உரைப்பது காண்க.

பஞ்சியும் மலரும் பரப்பிய மெல்லணையில் கிடப்பினும், மகளிர்க்குக் காதலன் மார்பிற் கிடந்து உறங்குதலில் வேட்கை மிக்கிருக்கு மென்பது பற்றி, மலர்ந்த மார்பில் துஞ்சிய வெய்யள் என்ருள். '' இன்றுயில் மார்பிற் சென்ற வென் நெஞ்சே[4]'' என்றும் ''மகிழ்நன் மார்பே வெய்யையால் நீ[5]'' என்றும் பிறரும் கூறுதல் காண்க. ஒலிவெள்ளருவி ஓங்குமலை நாடன் என்றது புனல்தரு புணர்ச்சி கூறியவாறு. ஓங்குமலை நாடன் என்பது ஏத்தல்; ஒலி வெள்ளருவி என்பது குறிப்பால் ஏதீடும், துஞ்சிய வெய்யள் என்றது வேட்கையுரைத்தலுமாம்.

நனிநாணுடைமையும் பேரச்சமுடைமையும் அவள் தான் உற்றது உரைக்க லாகாவகைத் தடுத்தலால், அவள் பொருது

---

1. நற். 77. 2. அகம் 314. 3. தொல்.பொ. 124.
4. அகம். 40. 5. குறுந். 73.

கலக்குற்று வேறுபடுவது கண்டு யான் ஆற்றேனுயினேன் என்பாள், நோகோ யானே என்று தோழி கூறினுள். நொதுமலர் வரைவு வேண்டி விட்டமையின் பெருநாணும், அதனுல் உளதாகும் ஏதம் பற்றி அச்சமும் உடைமையால் மேனி வருந்திக் காட்டினுள் என்று செவிலிக்கு விடையிறுத்தவாறு. நாடன் மார்பில் துஞ்ச விரும்புதலை நாணாலும் அச்சத்தாலும் பிறர்க்கு உணர்த்தலாகாமை கூறி அறத்தொடு நின்றவாறு; ''நோயலைக்கலங்கிய மதனழி பொழுதின், காமஞ் செப்பல் ஆண்மகற்கமையும், யாமே பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்க, அவனே ………. என்ன மகன்கொல் தோழி[1]'' எனத் தலைவி கூறுமாற்ருலும் இக்கருத்து உணரப்படும்.

''முன்னிலை அறனெனப்படுதல் என்று இருவகைப்புரைதீர் கிளவித் தாயிடைப் புகுப்பினும்[2]'' என்ற விடத்து நிகழும் அறத்தொடுநிலை வகையில் இது தோழி தலைவியது வேட்கை கூறியது என்பர் இளம்பூரணர். (205)

206. அன்னுய் வாழிவேண்டன்னை யுவக்காண்
மாரிக் குளத்துக் காப்பா ளன்னன்
தூவலி னனைந்த தொடலை யொள்வாட்
பாசி சூழ்ந்த பெருங்கழல்
தண்பனி வைகிய வரிக்கச் சினனே.

இஃது இரவுக்குறிக்கண் தலைமகன் வந்து குறியிடத்து நின்றமை அறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

உரை: அன்னுய், யான் கூறுகின்ற இதனை விரும்பிக்கேள் மழை பெய்ய நிறைந்த குளத்தின் கரைக்கண் நின்ற காவலாளனை ஒப்பான் ஒருவன், மழைநீரால் நனைந்த தூக்கிட்ட ஒள்ளிய வாளைத் தூக்கிப் பாசிகள் சூழ்ந்த பெரிய கழலணிந்து, தண்ணிய பனியால் இறுகிய வரிந்து கட்டப்பட்ட கச்சுடையனுய் வாராநின்ருன்; உங்கே அவனைக் காண்பாயாக எ.று.

---

1. நற். 94. 2. தொல்.பொ. 112.

உவக்காண், என்பது ஒட்டிநின்ற சுட்டிடைச்சொல் என்பர் பரிமேலழகர்[1], இடைவிடா மழையால். நீர் நிறைந்த குளம் என்றற்கு மாரிக்குளம் என்ருர். கரை உடைந்து ஏதம் விளேவியாமைப் பொருட்டுப் பண்டை நாளில் குளங்கட்குக் காவலர்களை நிறுவுவது மரபு; ''தொழின்மழை பொழிந்த பானுட் கங்குல், எறிதிரைத் திவலே தூஉஞ் சிறுகோட்டுப் பெருங்குளங் காவலன் போல[2]'' என்று சான்ருேர் குறித்தல் காண்க. காப்பாள், காப்பு, காவல்; ''வாய் காவாது பரந்து பட்ட, வியன் பாசறைக் காப்பாள[3]'' எனப் பிறரும் கூறுப. தூவல், மழைத்துளி. தூக்கிட்டுத் தோளிடைக் கோத்துப்பக்கத்தே தொங்கும் வாளேத் தொடலே வாள் என்ருர். ''கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத் தொடலே வாளர்[4]'' என்று சான்ருேர் கூறுவதனுல் தொடலே வாளின் இயல்பு உணரப்படும். குளங்காவல் புரியுமிடத்துக் கரை யிடை உடைப்புத்தோன்றின் கல்லும் மரமும் துணித்து உடனே அடைத்தற்கு ஏற்புடைமையின், தொடலே வாள் வேண்டப்பட்டது. உயிர் கொடுத்துப் புகழ் கொள்ளும் மறமாண்புடைய ஆடவர் கழல் அணிதல் மரபு.

காப்பாளன்னன், வாளேத்தூக்கி, கழல்யாத்துக் கச்சினனுய் வாரா நின்ருன் என ஒருசொற் பெய்து முடிக்க.

இரவுக்குறிக்கண் வருவான் வழியில் உளவாகும் ஏதங் கருதி வாளும், வினேசெய்யும் தொழிலராய ஆடவர்க் கியல்பாகலின் கழலும், செலவு மேற்கொண்டமையின் கச்சும் உடையனுகலின், அவற்றை அணிந்து தோன்றும் காப்பாளோடு உவமித்துக் காப்பாளன்னன் என்ருள். வினேயில்வழி வாளே உறையிற் பெய்து தூக்கிட்டிருத்தலினுலும், மழைக்கண் நனேந்துளானுகலினுலும், தூவலின் நனேந்த தொடலே ஒள்வாள் என்றும், நெறியிடை நின்ற நீர்க்கண் படர்ந்த பாசி வருமவன் கழலிற் பிணேந்து அறுபட்டமை யின், பாசி சூழ்ந்த பெருங்கழல் என்றும் கூறினுள். மழையால் நீர் நிறைந்து நிற்கும் குளத்தின் கரையைக் காத்தற்பொருட்டுச்

---

1. குறள். 1185. 2. அகம். 252. 3. புறம் 22.
4. மதுரை. 635-6.

செல்லும் காவலனை யொப்பான் என்றதனால், இவனும் தன்பால் காதல் சிறந்திருக்கும் காதலியின் உயிர்க்காவற் பொருட்டு மழையால் நனைந்து வருகின்றான் எனத் தலைவியின் பொருட்டு வந்தமையும், அவள் அவனை இன்றியமையாமையும் குறிப்பால் உணரக் கூறினாளாயிற்று.

இனி, மாரிக் குன்றத்துக் காப்பாளன்னன் என்றும், பாசி தூர்ந்த என்றும் பாடமுண்டு. மழையால் நனைந்த குன்றம் போலும் தோற்றத்தையுடைய காப்பாள் என்றும், பாசிகள் சூழ்ந்து அடையப்பட்ட அரும்புகளை யுடைய கழல் என்றும் முறையே பொருள் உரைத்துக்கொள்க. அதனால் சிறப்புடைய பொருட்பேறு இன்மை உணர்க. தோழி தலைவியை அன்னை என்றல் அமையும் என்றற்கு நச்சினார்க்கினியர் இதனைக் காட்டுவர்[1]. (206)

207. அன்னாய் வாழிவேண் டன்னை நன்றும்
உணங்குவ கொல்லோநின் றினையே
யுவக்காண்
நிணம்பொதி வழுக்கிற் றோன்றுமவர்
மணிநெடுங் குன்றம் மழைதலை வைத்தே.

இது, 'மழை யின்மையால் தினை யுணங்கும்; விளையமாட்டா; புனங்காப்பச் சென்று அவரை எதிர்படலாம்' என்று எண்ணியிருந்த இது கூடாதாயிற்று என வெறுத்திருந்த தலைமகட்குத் தோழி சொல்லியது.

உரை: அன்னாய், இதனை விரும்பிக்கேள்; அவர்தம் நீலமணி போலும் நெடிய குன்றம் மேகங்கள் தன் முடியிலே படியக் கொண்டு, நிணம் மிக்க ஊன்தடி மேல் பொதிந்து மூடிய வழுக்குப் போலத் தோன்றுதலைக் காண்பாயாக; அதனால், நின் தினை பெரிதும் உணங்கமாட்டா; 'உணங்கு மாகலின் அவரை எதிர்ப்பட லாகாது' என எண்ணி வருந்துதல் ஒழிக எ.று.

---

1. தொல். பொ. 246.

கொல், அசைநிலை. ஓகாரம் எதிர்மறை. நன்றும் உணங்குவ கொல்லோ என்றது, சிறுபான்மை உணங்கினும் மழை வந்தபின் அவை பெரிதும் தழைக்கும் என்பது உணர நின்றது. வழுக்கு, கொழுவிய ஊன்றடிமேல் வெண்ணெய் போலப் படிந்து தோன்றுவது இதனை ஊன் என்றும் கூறுவர். மணியுடைமையே யன்றி மணியின் நிறமும் உடைமைபற்றி மணிநெடுங்குன்றம் என்ருர். மணிநிற மால்வரை எனப் பிருண்டும்[1] கூறுப. ஏனை வருமிடங்களினும் கூறிக் கொள்க.

யான் காக்கும் இத்தினை மழையின்மையால் உணங்கா நின்றன வாகலின், தினைக் காவலொழிந்து மீள மனைக்குச்சென்று செறிப்புண்டு தலைமகனை எதிர்ப்படும் திறத்தை இழப்பேமாயினேம் எனத் தலைமகள் வருந்திக் கூறியதனைக் கொண்டெடுத்து மொழிதலின், தோழி, நின் தினை உணங்குவ அல்ல என்ருள். உணங்கின போலத் தோன்றினும், அங்கே மலைமுடியில் மழை முகில் படிதலின், இனி வரும் மழையால் பெரிதும் தழைத்தல் ஒருதலை என்றற்கு நன்றும் என்று சிறப்பித்தாள் அணிமையில் தோன்றுதல் பற்றி மணிநெடுங் குன்று என்றவள், அதன் முடியில் படிந்து தோன்றும் வெண்மையும் கருமையுங் கலந்த கார்முகிலைக் காட்டி, மழைதலை வைத்துத் தோன்றும் என்று உரைத்தாள். வெயிற்படாமல் நிழலிடைப் பொதிந்து வைத்த நிணமிக்க ஊன் வெள்ளிய வழுக்குப் படிந்து தீநாற்றம் கமழ்ந்து தோன்றுமாறு போல, மணிக்குன்று கார்முகில் படிந்து மழைக்காற்று வீச நின்றது என்றும், எனவே இனி மழைவருதல் ஒருதலை என்றும் வற்புறுத்திய வாருயிற்று. வழுக்கினைக் கூறியது, கூதிர்காலத்து மழைமுகில் என்றற்கு.

மழைமுகிலை முடியில் தாங்கித் தோன்றும் நெடுங்குன்றம் வழுக்குத் தோன்றிய நிணம்போலத் தோன்றிஞற்போல, உணங்கித் தோன்றிய தினை, தலைமகனை எதிர்படல் அருமைபோல நினக்குக் காட்டிற்று என்றும், அவர் நெடுங்குன்றம் மழைமுகிலை முடிமேற் கொண்டு மழைவரவினை வற்புறுத்துவதனுல், நின் காதலர் நின்பால்

---

1. ஐங். 208.

நிறைந்த காதல் கொண்டு ஒழுகுவராதலின், எவ்வழியும் நீ அவரைத் தலைப்பட்டு இன்புறுதல் ஒருதலை என்றும் உள்ளுறுத் துரைத்தவாறு.

உணங்கல கொல்லோ என்றும், மழை தலைவைத் தவர் மணிநெடுங்குன்றே என்றும் பாடமுண்டு. உணங்கல கொல்லோ என்பதற்குக் கொல்லும் ஓவும் அசைநிலை எனக் கொள்க. (207)

208 அன்னாய் வாழிவேண் டன்னை கானவர்
கிழங்ககழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன்மலி புதுவீத் தாஅமவர் நாட்டு
மணிநிற மால்வரை மறைதோ
றணிமலர் நெடுங்க ணார்ந்தன பனியே.

இது, செவிலிக்கு அறத்தொடு நின்ற தோழி அவளால் வரைவு மாட்சிமைப்பட்ட பின்பு இவள் இவ்வாறு பட்ட வருத்த மெல்லாம் நின்னின் தீர்ந்தன என்பது குறிப்பாய்த் தோன்ற அவட்குச் சொல்லியது.

ப.உரை: கிழங்கு அகழ்குழி நிறைய வேங்கைமலர் பரக்கும் என்றது கொள்வார்க்குப் பயன்பட்டுத் தமக்கு வந்த குறையைத் தம்புகழ் நிறைக்கும் பெருமையுடையள் என்பதாம்.

உரை: அன்னாய், குறவர் கிழங்கு எடுத்தற்பொருட்டுக் கல்லிய நெடிய குழிகள் நிறைய வேங்கையின் பொன் போலும் புதிய பூக்கள் சென்று படியும் அவருடைய நாட்டின்கண் நிற்கும் நீலமணியின் நிறங்கொண்ட பெரியமலை மறையுந்தொறும் அழகிய பூக்கள் போலும் நீண்ட கண்கள் நீர்சொரிந்தன எ.று.

குறிஞ்சிநில மக்களைக் கானவர் என்பதும் வழக்கு. மலை நாட்டவர் வள்ளிக்கிழங்கு பயிர்செய்பவ ராதலின், அதற்கென்று வகுத்த குழியைக் கிழங்குஅகழ் நெடுங்குழி என்றார். வேங்கையின் பூ பொன்னிறத்தது. "வேங்கைச் சேணெடும் பொங்கர்ப் பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள்[1]" என்று சான்றோர்

1. அகம். 52.

குறிப்பது காண்க. மலைநாடுகளில் பகற் போதில் மழைமுகில் படிந்து மலைமுகடு தோன்றாதவாறு மறைப்பது இயல்பு. காதலர்க் குரிய இடமும் பொருளும் காணின். அவை அவரைக் கண்டாற் போலும் இன்பம் செய்வதுபற்றி மறைந்தவழித் துன்பம் உண்டாவதாயிற்று என உணர்க. ''உள்ளா ராயினும் உளனே அவர் நாட்டு,....நெடும் பெருங் குன்றத்துப் பாடின் னருவி சூடி, வான்றோய் சிமையம் தோன்றலானே[1]'' என்று பிறரும் உரைப்பது காண்க.

மணிநிற மால்வரையைக் காணுந்தோறும், அதனை உடைய தன் காதலனைக் கண்டாற்போலத் தேறி இன்புற்றாள் என்றற்கு மால்வரை மறைதோறு அணிமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே என்று கூறினாள். ' அவர் நாட்டுக் குன்றம் நோக்கினென் தோழி, பண்டை யற்றே கண்டிசின் நுதலே[2]'' என்று தலைவி கூறுதல் காண்க. துன்பத்தின் நீங்கியோர், மகிழுங்கால், அத்துன்பநிலை கூறி மகிழ்வராகலின், ஈண்டும் வரைவு மாட்சிமைப்பட்டமையால் மகிழ்ச்சியுறும் தோழி, அது நிகழ்வதன் முன் தலைவி வருந்திய செயலினை, மால்வரை மறைதோறு, அணிமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே என்றாள். '' விரவும் பொருளும் விரவும் என்ப[3]'' என்பதனால் நிகழ்ந்தது கூறி இன்புறுதல் கொள்க.

கானவர் கிழங்கு அகழ்தற்பொருட்டு எடுத்த குழி நிறைய வேங்கையின் மலர்கள் பரக்கும் என்றது, தலைமகனது நட்பின் பொருட்டு இவள் எய்திய வருத்தமெல்லாம் நின் முயற்சியால் வரைவு மாட்சிமைப்படுதலின் இன்பமாய் நிறைவதாயிற்று என உள்ளுறை கொள்க. (208)

209. அன்னாய் வாழிவேண் டன்னை நீமற்
றியானவர் மறத்தல் வேண்டுதி யாயின்
கொண்ட லவரைப் பூவி னன்ன
வெண்டலை மாமழை சூடித்
தோன்றலா னாதவர் மணிநெடுங் குன்றே.

---

1. அகம். 378. 2. குறுந். 249. 3. தொல். பொ. 45.

இது வரைவிடை வைத்துப் பிரிவின்கண் அவனை நினைவுவிடாது ஆற்ருளாகிய வழி, 'சிறிது மறந்து ஆற்ற வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

ப. உரை: வெண்டலை மாமழை சூடித் தோன்றல் ஆனது என்றது, மழை பெய்தற்குக் கால்விழ்ந்த இருட்சியால் மறையப் பெருது விளங்கித் தோன்றுதலை நோக்கி எனக் கொள்க.

உரை: அன்னய், யான் கூறுகின்ற இதனை விரும்பிக்கேள்: யான் அவரைச் சிறிது மறந்து அமைதல் வேண்டும் என்று கூறுகின்றனை யாயினும், கீழ்க்காற்று வீசுதலால் மலரும் அவரைப் பூவைப் போல வெண்மையான உச்சியினையுடைய பெரிய முகில் தவழும் முடியையுடையதாய் மணிநிறங் கொண்ட குன்றம் தோன்றுதல் அமையாது; ஆகலின், யான் அவரை மறக்குமாறு யாது? கூறுக எ. று.

என்றது, நீ கூறினும் யான் மறக்கவொண்ணுதவாறு மணி நெடுங்குன்றம் தோன்றி அவர் வரவு நினைப்பித்தலின், யான் மறக்ககில்லேன் என்றவாரும்.

கொண்டல், கீழ்க்காற்று. அது வீசும் பனிக்காலத்தில் அவரை பூக்குமாகலின், கொண்டல் அவரை என்ருர். ''பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால், கொழுங்கொடி அவரை பூக்கும், அரும் பனி அற்சிரம் வாரா தோரே[1]'' என்றும், ''அவரைப் பைம்பூப் பயில அகல்வயல், கதிர்வார் காய்நெல் கட்கினிது இறைஞ்சச், சிதர்சினை தூங்கும் அற்சிரம்[2]'' என்றும் வருதல் காண்க. அற்சிரம்,பனிக்காலம்.

செய்தற்குக் கூடாத ஒன்றினைச் செய்தல் வேண்டும் எனப் பணிக்கின்ருய் என மறுக்கும் குறிப்புத் தோன்ற அன்னய் வாழி வேண்டு அன்னை எனத் தலைவி தோழிக்குக் கூறுகின்ருள். யான் அவரை மறத்தல் வேண்டும் என்று நீ கூறுவதனை உடன்படு கின்றேன் என்பாள், நீ மற்று யான் அவர் மறத்தல் வேண்டுதி

---

1. குறுந். 82. 2. அகம். 294.

என்று அவள் கூறியதனையே கொண்டெடுத்து மொழிந்தாள். கூற்றவண் இன்மையின் கொண்டெடுத்து மொழியும் கூற்றன்மையின் குறிப்பு வேறு என்பதுபட ஆயின் என்றும், அவ்வாறு மறத்தல் கைகூடுவது அவர் மணிநெடுங்குன்று தோன்ருது மறையினன்ரே? மற்று, அது மறையாது தோன்ருநிற்கின்றது, காண் என்பாள், தோன்றல் ஆனது என்றும், வெண்டலை மாமழை கூடி அதனை மறைத்தற்கு முயன்றும், அவர் குன்றம் தனது நெடுமையால் மறையாது என்பாள், நெடுங்குன்று என்றும் கூறினள்; என்றது, மறத்தல் வேண்டும் என நீ எனக்கு உரைப்பது, மணிநெடுங் குன்றத்தைத் தோன்ருதவாறு மறைக்க முயல்வது போலும் என்ருளாம்.

மறுத்தல் வேண்டும் என்ற பாடத்துக்கு யான் அவர் வரின், கொள்ளாது மறுத்தல் வேண்டும் என்பாயாயின் என்று கூறிக் கொள்க. (209)

210. அன்னய் வாழிவேண் டன்னைநம் படப்பைப்
புலவுச்சேர் துறுக லேறி யவர்நாட்டுப்
பூக்கெழு குன்ற நோக்கி நின்று
மணிபுரை வயங்கிழை நிலைபெறத்
தணிதற்கு முரித்தவ ளுற்ற நோயே.

இது, காப்புமிகுதிக்கண் தலைமகள் மெலிவுகண்டுதெய்வத்தினுயிற் றென்று வெறியெடுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

ப. உரை: புலவுச்சேர் துறுகல் என்றது, யாவும் தெய்வத் தினன் ஆயின என்று மறி முதலாயின கொன்று புலவு நாறும் நம் குன்று என்பதாம்.

உரை: அன்னய், இதனை விரும்பிக்கேள்: நம் படப்பைக் கண் மறி முதலியவற்றைக் கோறலால் புலால் கமழும் துறு கல்லின்மேல் ஏறி, அவர் நாட்டின்கண் உள்ள பூக்கள் பொருந்திய

குன்றத்தை நோக்கி' நீலமணிபோல விளங்கும் இழையை யணிந்த இவள் நிற்கும் நிலை பெறின் இவளுற்ற நோய் தணிதற்கும் உரியதாகும் எ.று.

என்றது, குன்றம் நோக்குந்தோறும் அது தனக்குரிய தலைவனை நினைப்பித்து அவனைக் கண்டாற் போல்வதோர் மகிழ்ச்சி எய்து வித்தலின், காப்புமிகுதியால் அது பெருது வருந்துகின்ருள்; அவள் அக்குன்றம் நோக்குமாறு காப்பு நெகிழ்விப்பின், மெலிவு நீங்கி நோய் தணிவள் என்பதாம். எனவே, குன்றின் சாரலில் அதன் தலைவனெடு இவள் தலைப்பெய்தி யுடைமை கூறி அறத்தொடு நின்ருளாம்.

படப்பை, தோட்டத்தின் ஒரு கூறு. படப்பைக்கண் துறுகல் உண்மை, "துறுகல் நண்ணிய கறியிவர் படப்பைக் குறியிறைக் குரம்பை நம்மனை[1]" என்பதனுல் அறிக. படப்பைக்கண் குன்றவர் கூடி வேலை நட்டு நெடுவேளைப் பரவுங்கால், மறி முதலாயிவற்றைத் துறுகன்மேல் நிறுத்திக் கொல்பவாதலின், புலவுச்சேர் துறுகல் என்ருர். நிற்ப எனற்பாலது நின்று எனத் திரிந்தது; "வானின்றுலகம் வழங்கி வருதலால்[2]" என்ருற்போல தலைமகட்கு உண்டாகிய மெலிவைப் புலப்படுத்திய சிறப்புத் தோன்ற வயங்கிழை என்ருர். மறி முதலியவற்றின் உயிர் காக்கப் படுதலே யன்றி இவளது நோய் தணிதற்கும் என நிற்றலின், உம்மை எச்சப்பொருட்டு; "மறியுயிர் வழங்கா அளவைச் சென்று யாம் செலவரத் துணிந்து[3]" எனப் பிருண்டும் தோழி கூறுமாறு காண்க.

நீ நினைக்குமாறே வெறியெடுத்தலால் இவள் உற்றநோய் ஒருகால் தணிதலேயன்றி அவர் நாட்டுக் குன்றம் நோக்கி நிற்பினும் தணியும் என்பதுபட நின்றது எனினுமாம். இழைமணி போல் வயங்குதல், "மணியுரு விழந்த அணியழி தோற்றம் கண்டே கடிந்தனம் செலவே[4]" என்று பிறர் கூறுமாற்ருனும் உணர்க.

1. அகம். 272. 2. குறள். 11. 3. அகம். 242.
4. அகம். 5.

தலைமகள் இற்செறிப்புண்டு காப்புமிகுதியால் தலைமகனை எதிர்ப்பட இயலாது வருந்துதலை உட்கொண்டு செவிலி அயிராமைப் பொருட்டு நம் படப்பை என்றும், வழிபாட்டுக்கு ஆகாது யாம் ஏறி விளையாடுதற்குரிய துறுகல் என்பாள், புலவுச்சேர் துறுகல் என்றும், ஏறி நின்று நோக்குவ தொன்றே வேண்டுவது, அது நீ எடுக்கும் வெறிக்கு இடையூறன்று என்பாள், நோக்கி நிற்ப என்றும், மணியுரு விழந்து கையினும் தோளினும் நில்லாது இழைகள் கழன்று ஓடுமாறு மெலிவுற்ற தலைமகட்கு அது நோய்தணி மருந்தாம் என்பாள், வயங்கிழை நிலைபெறத் தணிதற்கும் உரித்து அவள் உற்ற நோய் என்றும் கூறினள், அவர்நாட்டுப் பூக்கெழு குன்றம் என்றுது, தலைமகட்குத் தலைவனொடு உளதாகிய பூத்தரு புணர்ச்சி புலப்படுத்தவாறு. இஃது ஏதீடு.

குன்றம் நோக்கி நிற்பவே, அது நோய்தணிதற்கு உரித்து என்றதனால், செவிலி தலைமக்களிடை நட்புண்மை யுணர்ந்து நற்றாய் முதலியோர்க்கு அறத்தொடு நிற்பாளாவது பயன். இது வேட்கையுரைத்தல். (210)

22

அன்னாய்ப்பத்து

இப்பகுதிக்கண் வரும் பாட்டுக்கள் இறுதியில் அன்னாய் என்னும் சொற்கொண்டு முடிதலின், இஃது இப்பெயர்த் தாயிற்று.

முன்னது பாட்டின் முதற்கண் நின்ற தொடர்பற்றிப் பெயர் கொண்டாற்போல, இது பாட்டின் இறுதிக்கண் நின்ற சொற் பற்றிப் பெயர்கொண்டது.

அன்னை என்பது, ''ஐ ஆயாகும்'' என்றதனால் அன்னாய் என நின்றது.

211. நெய்யொடு மயக்கிய வுழுந்துநூற் றன்ன
வயலையஞ் சிலம்பின் றலையது
செயலையம் பகைத்தழை வாடு மன்னாய்.

இது, தலைமகன் ஆற்றாமை கண்டு கையுறை ஏற்ற தோழி தலைமகள் தழை ஏற்க வேண்டிக் கூறியது.

உரை: அன்னாய், நெய்பெய்து துவைக்கப்பட்ட உழுந்தின் மணிபோன்ற வயலைக்கொடி படர்ந்த மலைமுடியின்கண் தழைத்த அசோகின் தளிரால் தொடுக்கப்பட்ட பகைத்தழை இனி வாடுமாகலின், ஏற்றருள்க எ. று.

உழுந்துநூறு என்றது, உழுத்தின் காயை உலர்த்தித் துவைத்து எடுத்து நூறப்பட்டது. நூறப்பட்டது நூறு. மணியினை நெய் பெய்து மயக்கியவழி நிறமும் ஒளியும் பெறுதலின், நெய்யொடு மயக்கிய உழுந்து நூறு என்றும், வயலை படர்ந்த நிலம் நெய்யொடு மயக்கிய உழுந்தினைப் பரப்பியது போறலின், நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன என்றும் கூறினர், வயலைக்கொடி செந்நிறத்த தாகலின், செறிந்து விளங்கும் அதன் கரிய இலைகளும் வெள்ளிய பூக்களும் கொள்ளப்படும். இவை தம்மில் விரவிப் படர்ந்து தோன்றும் காட்சிக்கு நெய் பெய்து பரப்பிய உழுந்தின் நூறு உவமமாயிற்று.

வயலைக்கொடி படர்ந்த சிலம்பின் உச்சியின் கண்ணதாய செயலைத்தழை நாம் பெறற் கரிதாயினும், பெற்ற வழி அணியாது விடின், அது வாடிப் பயனின்றாம் ஆதலால் ஏற்றருள்க என்பாள், செயலையம் பகைத்தழை வாடும் என்றாள். பகைத்தழை என்றற்கு மேலே கூறினும்[1]. சிலம்பின் தலையிடத்ததாய்ப் பெறுதற்கு அரிதுமாய தழையை எளிதிற் பெறத் தந்தமையால், இஃது ஏற்கற்பால தென்றாளுமாம். அரிதிற் பெறற்பாற்றாய தழையை யாம் தேடி வருந்தாவகையில் தானே எளிதில் தந்தான் என்ற தனால், வரைவு வேண்டியவழித் தமர் மறுத்தல் முதலிய அருமை செய்து அலைப்பினும், வென்றி பெற முயன்று வரைந்துகொள்ளும் தாளாண்மையன் என்று தலைவனது உரனுடைமை சுட்டியவாறு. அன்றியும் வயலைச் சிலம்பின் தலையதாகிய செயலைத்தழை என்றதனால், நாம் பேணி வளர்க்கும் வயலை, தன் அடிக்கண் வளர நின்றமையின் செயலையின் தழையை வாடவிடுதல் நமக்கு அறமன்று எனத் தோழி கூறினாளாயிற்று.

''மறைந்தவ ளருகத் தன்னொடும் அவளொடும் முன்னமுன் தளைஇப் பின்னிலை நிகழும், பல்வேறு மருங்கின்[2]'' என்பதற்கு இதனை எடுத்துக்காட்டுவர் இளம்பூரணர்.

உழுந்து தூற்றன்ன என்ற பாடத்துக்கு உழுந்தினது தூறு போன்ற வயலைக்கொடியின் தூறுகள் நிறைந்த சிலம்பு

---

1. இந்நூல் பக்கம். 58. 2. தொல். பொ. 112.

என்றுரைப்பினும், நெய்யொடு மயக்கிய என்பது இயையாமை காண்க. (211)

212. சாத்த மரத்த பூழிலெழுபுகை
கூட்டுவிரை கமழு நாடன்
அறவற் கெவனோ நாமகள் வன்னாய்.

இது, வரைவு எதிர்கொள்ளார் தமர் அவண் மறுத்த வழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

ப. உரை: சாந்தமரத்தின் இடைநிலத்து உளவாகிய அகில் சுடுபுகை அச் சந்தனப்பூ நாற்றத்தோடு கமழும் நாடன் என்றது தனக்கு வந்த வருத்தம் பாராது தனக்குத் துணையாயினார் நலத்தொடுங் கூடி எல்லார்க்கும் பயன்பட ஒழுகும் ஒழுக்கத்தை உடையான் என்பதாம்.

உரை: அன்னாய், சந்தனமரத்தின் இடைநிலத் துளவாகிய அகிலைச் சுடுதலால் எழும் புகை அச்சந்தனப்பூவின் நாற்றத்தோடு கூடி மணம் கமழும் நாடன் அறவோனாகலின், நாம் அவன் பொருட்டு மகட்கொடை மறுத்தல் என்னையோ? கூறுக எ.று.

பூழில், அகில். 'சாந்தம் பூழிலொடு பொங்கு நிரை சுமந்து[1]'' என வருதல் காண்க. அறவன், வாய்மை ஆகிய நல்லற முடையன்; ''ஒண்செங் காந்தள் அவிழும் நாடன் அறவனாயினும்[2]'' என்றார் பிறரும். அகல்வு, ஈண்டு மறுத்தற்கண் வந்தது.

நாடன் தங்கட்கு உண்டாய இடையூறுகளைக் களைந்து தனது நட்பினைத் தந்தனன் எனக் குறிப்பால் ஏதீடு கூறி அறத்தொடு நிற்கின்றாளாகலின், தோழி தலைவனை அறவன் என்றும், அறவோர்க்கு அளித்தல் முறைமையாக மறுத்தல் முறையன்று என்பாள் நாம் அகல்வு எவனோ என்றும் கூறினாள்

---

1. பதிற். 87. 2. குறுந். 284.

சந்தனச் சோலை யிடையே எரிக்கப்பட்ட அகிற்புகை சந்தனத்தின் மணம் கலந்து கமழும் நாடன் என்றது. மலைச் சாரலில் மதகளிறு வென்று வந்தவன் அது கண்டு வெருவிய எம்மைத் தலையளித்த உரவோனுவன் என உள்ளுறையால் ஏதீடு கூறினுள் என்றவாறு. (212)

213. நறுவடிமா அத்து மூக்கிறு புதிர்ந்த
ஈர்ந்தண் பெருவடுப் பாலையிற் குறவர்
உறைவீ ழாலியிற் றெருக்குஞ் சாரல்
மீமிசை நன்னுட் டவர்வரின்
யானுயிர் வாழ்தல் கூடு மன்னுய்.

இது, வரைவொடு வருதலைத் துணிந்தான் என்பது தோழி கூறக்கேட்ட தலைமகள் சொல்லியது.

ப. உரை: மாவின் மூக்கிற்று உதிர்ந்த வடுக்களை ஆலி போலத் தொகுக்கும் நாட்டையுடையார் என்றது, விரும்புவன வற்றுக்குத் தாமாக முயலாது பெற்றுழிப் பேணும் இயல்புடையார் எ. று.

உரை: அன்னுய், நறிப வடுக்கள் நிறைந்த மாமரத்தின் காம்பு அற்று உதிர்ந்த, மிகக் குளிர்ந்த, பெரிய வடுக்களைப் பாலைநிலத்து இயங்கும் குறவர் மழையொடு வீழும் ஆலி போலத் தொகுக்கும் சாரலையுடைய மிக உயர்ந்த நல்ல நாட்டினை யுடையவர் வரைவொடு வருதல் துணிந்தாலன்றி யான் உயிர் வாழ்தல் கூடாது எ. று.

மாவின் வடு, மாவின் முற்ருத காய். இது வடியென்றும் வழங்கும். " நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்[1]" என்பது காண்க. மூக்கு, காம்பு; "பெண்ணைத் தேனுடையழிபழம் ... . மூக்கிறுபு, அள்ளல் இருஞ்சேர் ருழப்பட்டென[2]" எனப் பிறரும் கூறுதல் க்ாண்க. மீமிசை. "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்[3]" என்பதனல் அமைந்தது. பாலையாவது முல்லையும்

1. ஐங். 61. 2. நற். 372. 3. தொல். சொல். 460.

குறிஞ்சியும் காலத்தால் இயல்பழிந்து வேறுபட்ட நிலம்; ''முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவம் கொள்ளும்[1]'' என்பது காண்க. நன்னாட்டவர் வரின், யான் உயிர்வாழ்தல் கூடும் என்றது தலைமகன் வரைவொடு வருதல் அறிந்தமை உணர நின்றது.

உள்ளுறையால் தலைவனது காதல் மாண்பினைக் கூறுகின்ருளாதலின், அவன் வரைவு துணிந்தமை கேட்டு யான் உயிர் வாழ்தல் கூடும் என்ருள்.

மாவி னின்றும் தாமாக உதிர்ந்த மாவடுக்களைக் குறவர் ஆலிபோலத் தொகுத்துக் கொள்ளும் நாட்டவராதலின், என்னின் நீங்கித் தானகச் சென்று வீழ்ந்த நெஞ்சினைப் பெரும்பேருக ஏற்றுக்கொள்வர் என்பது உள்ளுறை. (213)

214 சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழம்
இருங்கல் விடரளை வீழ்ந்தென வெற்பிற்
பெருந்தே னிருஅல் கீறு நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லு மன்னய்.

இது, தலைமகன் ஒருவழித் தணப்பல் என்று கூறியவதனை அவன் சிறைப்புறத்தானகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

ப. உரை: பலவின்பழம் பிறர்க்குப் பயன்படாது கல்லளையில் வீழ்கின்றுழி அவ்விடத்து உளதாகிய தேனிருலினையும் சிதைக்கும் என்றது. தன்னற் பெற்ற நலம் எங்கள் இயற்கை நலத்தினையும் சிதைக்கின்றது என்பதாம். இது கேட்டுக் கடிதின் வரைவானவது பயன்.

உரை: அன்னய், மலைச்சாரலில் நின்ற பலாமரத்தினது கொழுவிய துணர்களின் இடையே பழுத்த நறிய பழம் பெரிய

---

1. சிலப். 11:64–6.

கற்களின் பிளப்பிடை உளதாகிய அளையின் கண் விழ்ந்ததாகப் பாறையிற் கட்டப்பட்ட தேனடை சிதைந்து தேன் சொரியும் நாடன், பெரியவாய் மதர்த்துக் குளிர்ந்த நின்னுடைய கண்கள் நீர் சொரியத் தன் விழுப்பம் அமைந்த நல்ல நாட்டுக்குச் செல்லுவா னுயினன் எ. று.

சாரலிடத்தே கொழுவிய துணரிடையே விளைந்த நறுவிய பழம் யார்க்கும் பயன்படாவகையில் ஒழிந்தமை உணர்த்தற்கு இருங்கள் விடரளை வீழ்ந்தென என்றார். ''மாச்சினைச் சிறந்த கோண்முதிர் நறும்பழம், விடரளை வீழ்ந்துக் காங்குச் சேணும் சென்றுக் கன்றே[1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. ஏனை மரங்களிற் காணப்படும் தேனடையினும் மலைத்தேனடையில் தேன் மிக்கிருத்தல் பற்றிப் பெருந்தேன் எனப்பட்டது. பேரமர்க்கண், மழைக்கண் என இயையும். மதர்த்துக் காதிற் குழையொடு பொரும் கண் என்பது பற்றிப் பேரமர்க்கண் என்றார் என்றலும் ஒன்று. சீர், செல்வத்தால் உளதாகும் விழுப்பம்.

தலைமகன் சிறைப்புறத்தான் ஆயினமை அறிந்து அவன் கேட்குமாறு கூறுதலின், கவ்விய கை சிறிது நெகிழினும் ஆற்றுத பெருமென்மைய ளாகிய நீ, கண்கள் நீர்சொரியப் பிரிவது நன்றன்று என்பாள், பேரமர் மழைக்கண் கலிழ என்றும், தான் உள்வழித் தன் உயிர்போல் உடனிருத்தற்குரிய நின்னைப் பிரிந்து தன்னூர்க்குச் செல்கின்றான் என்றற்குத் தன் சீருடை நன் னாட்டுக்குச் செல்லும் என்றும் கூறினாள். தலைவன் செல்லும் ஊரைச் சீருடை நன்னாடு என்று சிறப்பித்தாள், அவன் பிரிவால் தலைவி பசப்பும் மெலிவும் எய்திச் சீரும் நன்மையும் இழந்து வருந்துவள் என்பதை உள்ளுறைக்கண் கூறுதலின். பலவின் நறும் பழம் விடரளையில் வீழ்வது தேன் இறாலைச் சிதைக்கும் என்றதனால், தலைமகன் பிரிவு தலைமகளது மேனிநலம் சிதைவிக்கும் என உள்ளுறை கொள்க. பழைய வுரைகாரர்க்கும் இதுவே கருத்தாதல் அறிக. (214)

---

1. நற். 116.

215\. கட்டளை யன்ன மணிநிறத் தும்பி
இட்டிய குயின்ற துறைவயிற் செலீஇயர்
தட்டைத் தண்ணுமைப் பின்ன ரியவர்
தீங்குழ லாம்பலி னினிய விமிரும்
புதன்மலர் மாலையும் பிரிவோர்
அதனினும் கொடிய செய்குவ ரன்னாய்.

இஃது இரவுக்குறி நயந்த தலைமகள் பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது.

உரை : அன்னாய், தட்டையும் தண்ணுமையுமாகிய கருவிகளின் பின் வாச்சியக்காரர் இசைக்கும் தீவிய குழலாகிய ஆம்பலினும் இனியவாய்ப் பொன்னுரை கல்போலும் நீல மணியின் நிறத்தை யுடைய தும்பிகள் ஒலிக்கும் புதல்கள் மலரும் மாலைக்காலத்திற் பிரியாமையைக் கருதாது பிரிவோர் அம்மாலையினும் வருத்துவன வற்றைச் செய்வாராகலின், சிறியவாய் நெருங்கிய துறைக்கண் நீ செல்வாயாக எ.று.

பொன் உரைத்த கட்டளைக்கல் போல வரிகள் கிடந்த சிறகுகளை உடையவாதல் பற்றித் தும்பியைக் கட்டளை யன்ன தும்பி யென்றும், அக்கட்டளைக்கல்லின் நிறத்தினும் தும்பியின் நிறம் நீலம் கலந்துள்ளமை பற்றிக், கட்டளை யன்ன என்றதோடு ஒழியாது மணிநிறத்தும்பி என்றும் கூறினர். "அம்ம வாழியோ மணிச்சிறைத் தும்பி[1]" என்றும், "நறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப்பொன்னுரை கல்லின் நன்னிறம் பெறூஉம்[2]" என்றும், "காந்த ளூதிய மணிநிறத் தும்பி[3]" என்றும் கூறுப பிறரும். "முதலும் சினையுமென் றுயிரு பொருட்கும். நுதலிய மரபின் உரியவை யுரிய[4]" என்றதனால்,. கட்டளையுவமை தும்பிக்கும், மணியுவமை நிறத்துக்கும் உரிய வாக்கிக் கொள்க. தட்டையாவது "மூங்கிலைக் கணுக்கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி.[5]" இட்டிய

1\. குறுந். 392. 2. நற். 25. 3. ஷை. 17.
4\. தொல். பொ. 281. 5. குறிஞ். 43. உரை.

என்றது சிறுமை உணர்த்தும் சொல்; ''ஆகாறு அளவு இட்டிது ஆயினும்[1]'' என்றாற் போல.

புணர்ந்தோர் பூ மகிழ்ந்தணியப் பிரிந்தோர் வருந்த வருத்தும் இயல்பிற்றாகலின், மாலைப்போது பிரிவுக்கு ஆகாமை தோன்ற, மாலையும் பிரிவோர் என்றும், நாம் நயந்து குறித்த இரவுக்குறி ஒழித்துப் பகற்குறி வேண்டி வந்துழி, நாம் கூடேமாயின், இரவின்கண் உறக்கமின்மை முதலியவற்றைச் செய்து வருத்துவர் என்பாள், அதனினும் கொடிய செய்குவர் என்றாள். தும்பி இமிரும் புதன்மலர் மாலையும் பிரிவோர் என்றது இன்பத்தை வெறுத்தல். (215)

216. குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
நெடும்புதற் கானத்து மடப்பிடி யீன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழ லொளிக்கும் நாடற்குக்
கொய்திடு தளிரின் வாடிநின்
மெய்பிறி தாத லெவன்கொ லன்னாய்.

இது, வரைவு நீட ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி கூறியது.

ப. உரை: புலியேற்றை பிடி யீன்ற குழவியைக் கொள்ள வேண்டிக் காலம் பார்த்து மறைந்திருக்கும் நாடன் என்றது, தன் வஞ்சனையாலே நின் பெண்மையை வௌவுகின்றான் என்பதாம்.

உரை: அன்னாய்' குறுகிய முன்கால்களையுடைய பெரிய புலியின் கொலைத்தொழிலில் வல்ல ஆண், நெடிய புதர்கள் நிறைந்த கானத்தில் மடப்பம் பொருந்திய பிடியானை யீன்ற அசைந்த நடையினையுடைய கன்றினைக் கோடற்பொருட்டுப் பலாமரத்தின் பழங்கள் நாலுகின்ற கொழுவிய நிழலில் ஒளித்திருக்கும் நாடன் பொருட்டு, நீ கொய்திடப்பட்ட தளிர்போல் வாட்ட முற்று மேனி வேறுபடுதல் என்னையோ, கூறுக எ. று,

---

1. குறள். 478.

புலியின் ஆணை ஏற்றை என்றார்; ''ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென மொழிப''[1]; குறுங்கை யிரும்புலிக் கோள்வல் ஏற்றை, பூநுத லிரும்பிடி புலம்பத் தாக்கித், தாழ்நீர் நனந்தலைப் பெருங்களி றடூஉம்[2]'' என வருதல் காண்க. பின்கால்களினும் முன்கால் குறுகி யிருத்தல்பற்றிக் குறுங்கை எனப்பட்டது. ''குறுங்கை யிரும்புலி பொருஉம்நாட[3]'' எனப் பிறாண்டும் கூறுப. இளம்பிடியின் கன்று உடல் வளவி தாதலின், மடப்பிடி யீன்ற குழவி என்று சிறப்பித்தார். யானை யினத்துக்கு இயல்பாதல் தோன்ற நடுங்குநடைக் குழவி என்றார். நடுங்குதல், அசைதல். பலவின் பழம் கருதி மடப்பிடி கன்றொடு வருமென எண்ணி அப்பலாவின் கொழுவிய நீழற்கண் புலி ஒடுங்கு மென அறிக.

கொய்திட்ட தளிர் மரத்திற் பிரிக்கப்பட்டமையால் பசை குன்றி வாடுதல் போல, தமரிற் பிரித்துத் தானும் வரையாது நீட்டித்துத் தங்குகின்றான் எனச் சிறைப்புறத்தானை தலைமகன் கேட்க உரைத்தலின், கொய்திடு தளிரின் வாடி என்றும், மெய் வேறுபட்டவழிப் பிறர் அலர் கூறிப் பழிப்ப ரென்பது தோன்ற மெய் பிரிதாதல் என்றும் தோழி கூறினாள்.

மெய் பிறிதாதல் என்றது உண்டியிற் குறைதல், உடம்புநனி சுருங்கல் முதலியனவாம். தான் வரைவு நீட்டித்தலால் நீ மெய் வேறுபட்டு வருந்துதலை அறிந்து விரைந்து போந்து வரையானைத் தனக்கு வேண்டிய நலமே விரும்பி யொழுகுவான் ஒருநன்மையும் புரியானாகலின், அவனை நினைந்து நிற்றலிற் பயனின்று என்பாள் எவன்கொல் என்றாள்.

புலியேற்றை மடப்பிடியின் கன்றினைக் கோடற்குப் பலவின் கொழுநிழற்கண் ஒளித்திருக்கும் என்றதனால், தலைமகன் நின் பெண்மைநலம் கவர்தலைக் கருதிக் களவே விரும்பி யொழுகு கின்றான் என உள்ளுறுத்து உரைத்தா ளாயிற்று. இது உவம மருங்கில் தோன்றும் துனியுறு கிளவி. பழைய வுரைகாரர்க்கும் இதுவே கருத்தாதல் அறிக.

---

1. தொல். பொ. 604. 2. நற். 36. 3. ஐங். 266.

''நாற்றமும் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்து, ''செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினும், என்பு நெகப்பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ, அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும், என்புழி, அன்புதலை அடுத்த வன்புறையாவது தலைவன் இன்றி யமையான் என ஆற்றுவித்தல்'' என்று கூறி, அதற்கு இதனை மேற்கோளாகக் காட்டுவர் இளம்பூரணர். (216)

217. பெருவரை வேங்கைப் பொன்மருள் நறுவீ
மானினப் பெருங்கிளை மேய லாரும்
கானக நாடன் வரவுமிவண்
மேனி பசப்ப தெவன்கொ லன்னாய்.

இது, வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் மீட்சி உணர்ந்த தோழி ஆற்றாளாகிய தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை: இவண் என்றது இவ்விடத்து எ. று. :வேங்கைப் பூவை மானினம் ஆரும் என்றது, அவன் மனைப் பெருஞ்செல்வம் நின் கிளையாகிய நாங்களும் நின்னோடு நுகர்வேம் என்பதாம்.

உரை: அன்னாய், பெரிய மலைக்கண் நின்ற வேங்கை மரத்தின் பொன்போலும் நறுவிய பூக்களை மானினங்களின் பெரிய சுற்றம் பலவும் மேய்ந்துண்ணும் கானத்தையுடைய நாடன் இவ் விடத்து வந்தானாகவும், நீ நின் மேனி பசலை பாய்ந்து நிற்றல் என்னை எ. று.

பொன்மருள் நறுவீ என்றவிடத்து மருள் உவமவுருபு; ''வேங்கைப் பொன்மருள் நறுவீ கல்மிசைத் தாஅம்[2]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. மானினம் என்றதனோடு பெருங்கிளை யென மிகுத்தது, மான்திரளே யன்றி ஏனை அதன் இனமாய விலங்குகளையும் அகப்படுத்து நின்றது. ''பசித்த ஆயத்துப் பயனிரை தருமார், பூவாட் கோவலர் கொய்துகட் டழித்த வேங்கை[3]'' என்பது காண்க. மேயலாரும் என்றது ஒரு சொல்லாய்

1. தொல். பொ. 112. 2. நற். 257. 3. புறம். 224.

மேயும் என்பதுபட வந்தது. வரவும், உம்மீற்று விரைவுப்பொருட் கண் வந்த வினையெச்சம். இவண் என்னுது, இவள் என்று கொள்ளின், தோழி செவிலிக்கு உரைப்பதாய் அகப்பொருள் நெறிக்கு மாறுபடும் என அறிக.

நாடன் வரின் மகிழ்ந்து உவக்கும் பான்மையை ஆகிய நீ பசந்து மெலிதல் ஆகாது என்பாள், மேனி பசப்பது எவன்கொல் என்றாள். இதனால் தலைவி ஆற்றாளாயினமையும், கானக நாடன் வரவும் இவண் என்றதனால் தலைவன் வந்தமையும் கூறினாளாம். மேனி பசப்பதெவன் என்றது பசலைபாய்தல். வரவும் என்றது அவன் வாராத காலத்தின் நீட்டம் உணர நின்றது.

வேங்கைமி பொன்மருள் பூவினை மாவினத்தின் பெருங்கிளை மேயும் என்றது, தலைமகன் வரவால் வரைவு மாட்சிமைப்படுதல் கண்டு நின் கிளையேமாகிய யாங்கள் இன்புறுநின்றேம் எனத் தோழி கூறியவாறு. இஃது இனிதுறு கிளவி. (217)

218. நுண்ணேர் புருவத்த கண்ணு மாடும்
மயிர்வார் முன்கை வளையுஞ் செறூஉம்
களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தெழுபுலி
எழுதரு மழையிற் குழுமும்
பெருங்கன் னாடன் வருங்கொ லன்னாய்.

இது, தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி, அதுகேட்டு, ''இஃது என்னாங் கொல்'' என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி தனக்கு நற்குறி செய்யக் கண்டு ''கடிதின் வந்து வரைவான்'' எனச் சொல்லியது.

ப. உரை : தன்னாற் கொள்ளப்பட்ட களிறு தப்பினதற்குப் புலி கதம் சிறந்து குழுமும் என்றது, நினைத்தவற்றிற்குக் குறை வரின் அதற்கு வெகுண்டு முடிப்பான் எ. று.

உரை : அன்னாய், நுண்ணியவாய் அழகு பொருந்திய என் புருவத்தையுடைய கண் துடித்தலினாலும், மயிர் ஒழுகிய முன்

கைக்கண் அணிந்த வளைகள் நெகிழாது செறிதலினாலும், களிற்றினைக் கொள்ளுமிடத்து வழுவியதனால் சினம் மிக்கு எழுந்த புலி, எழுகின்ற மேகங்களைப் போல முழங்கும் பெரிய மலைநாடன் வருவா னாகலின் நீ வருந்துதல் ஒழிவாயாக எ. று.

மகளிர்க்கு இடக்கண் துடித்தல் நன்னிமித்த மாதலின், கண்ணும் ஆடும் என்றார் ; "பல்லியும் பாங்கொத்து இசைத்தன, நல்லெழி லுண்கணும் ஆடுமா லிடனே[1]" என்றும், "பூங்கண் இடமாடுங் கனவுந் திருந்தின, ஓங்கிய குன்றம் இறந்தாரை யாம் நினைப்ப, வீங்கிய மென்றோள் கவினிப் பிணிதீரப், பாங்கத்துப் பல்லி படும்[2]" என்றும் சான்றோர் கூறுதல் காண்க. கண்ணுறுப்புப் புருவத்தையும் உளப்படுத்தி நிற்றலின் புருவத்த கண் என்றார். கண்ணாடுதலாவது, புருவம் துடித்தல். வளைசெறிதலும் நன்னிமித்தமே யாம்; சுரிவளை பொலிந்த தோளும் செற்றும், வருவர்கொல் வாழி தோழி[3]" எனச் சான்றோர் உரைப்பது காண்க. வருங்கொல் என்புழிக்கொல் என்பது அசைநிலை.

களிறு கோடலிற் பிழைபட்ட புலி சினஞ்சிறந்து முழங்கும் என்பது, "களிற்றிரை பிழைத்தலின் கயவாய் வேங்கை, காய்சினம் சிறந்து குழுமலின் வெரீஇ, இரும்பிடி யிரியும்[4]" என்பதனாலும் அறிக. தமர் வரைவு மறுத்தமை அறிந்து கண் கலுழ்ந்து மேனி மெலிந்து ஆற்றாளாகிய தலைமகட்கு, உள்ளுறையால் தலைவனது ஆண்மை நலம் கூறி ஆற்றுவிக்கின்ற தோழி, தன் கண் துடித்துக் காட்டினமையும், வளை செறிந்தமையும் ஆகிய நன் நிமித்தம் தோன்றுவது கூறுவாள், கண்ணும் ஆடும், வளையும் செறூஉம் என்றும், இவ்வாற்றால் தலைமகன் போந்து வரைந்து கோடல் ஒருதலை என்பாள் பெருங்கல் நாடன் வரும் என்றும் கூறினாள்.

இனி, "நாற்றமும் தோற்றமும்[5]" என்ற சூத்திரத்து, "அவன் வரைவு மறுப்பினும்" என்புழி இதனைக் காட்டி இது தமர் வரைவு மறுத்துழி ஆற்றாத தலைவிக்குத் தோழி தீய குறி

1. கலி. 10. 2. ஐங். எழு. 71. 3. குறுந். 260.
4. அகம் 221. 5. தொல். பொ. 114.

நீங்கித் தனக்கு நற்குறி செய்யக் கண்டு 'கடிதின் வரைவர்' எனக் கூறியது என்பர் நச்சினர்க்கினியர். (218)

219. கருங்கால் வேங்கை மாத்தகட் டொள்வீ
இருங்கல் வியலறை வரிப்பத் தாஅம்
நன்மலை நாடன் பிரிந்தென
ஒண்ணுதல் பசப்ப தெவன்கொ லன்னய்

இது, வரைவிடைப் பிரிந்த அணிமைக்கண்ணே ஆற்ருளாகிய தலைமகட்குத் தோழி கூறியது.

ப. உரை: வேங்கைமலர் அகலறையிலே பரக்கும் நாடன் என்றது, நம் பொல்லா ஒழுக்கம் மறைய நல்லொழுக்கம் நமக்கு உதவும் நன்மையை யுடையான் என்பதாம்.

உரை: அன்னய், கரிய காலினையுடைய வேங்கையின் கரிய புறவிதழையுடைய ஒள்ளிய பூக்கள் பெரிய மலையின் அகன்ற பக்கமலையின்கண் உதிர்ந்து பரந்து அழகு செய்யும் நல்ல மலை நாட்டினையுடையவன் பிரிந்தானக, பிரிந்த அணிமைக்கண்ணே நீ ஒள்ளிய நுதல் பசந்து காட்டுதல் என்னையோ, கூறுக எ.று

வேங்கைமரத்தைக் கருங்கால் வேங்கை என்பது பெருவழக்கு. "சுரும்புண விரிந்த கருங்கால் வேங்கை[1]" என்பர். தகடு, இதழ்; "கருந்தகட்டு உளைப்பூ மருது[2]" என்பதனல் அறிக. "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை, மாத்தகட்டு ஒள்வி[3]" எனப் பிருண்டும் இவரே கூறுதல் காண்க வியலறை, அகன்ற கற்பாறை.

வரவிடைவைத்துப் பிரிந்தோன் தன் செய்வினை முற்றி வருதற்குள், அவன் தெளித்த சொல்லைத் தேறி இராது பிரிவுள்ளி மேனி வேறுபடுதல் நன்றன்று என்பாள், ஒண்ணுதல் பசப்பது எவன்கொல் என்ருள். நன்று, புறத்தார்க்குப்புலனகி அலராகாமை. நுதல் பசப்ப என்றது, பசலைபாய்தல்.

---

1. நற். 168. 2. முருகு. 27-8. 3. புறம். 202.

வேங்கையின் மலர் வியலறைக்கண் பரக்கும் என்றது, நீ பசப்பது புறத்தார்க்குப் புலனாகி ஊரெங்கும் அலராய் விடும் எனத் தோழி உள்ளுறுத்து உரைத்தவாறு காண்க. பழைய வுரைகாரர் இவ்வுள்ளுறையைத் தலைமகன் மேலேற்றி, வேங்கையின் ஒள்வீ வியலறைக்கண் பரப்பதுபோலத் தான் நின்னை வரையு மாற்றால் தன் பெருமை நலம் ஊரறியச் செய்வன் என்ற கருத்துப் பட உரைத்தார்.

இது வரைவிடை வைத்துப் பிரிந்துழித் தலைவி ஆற்றாமை கண்டு தோழி கூறியது; இது குறிஞ்சியுட்பாலை என்பர் நச்சினார்க்கினியர் [1]. (219)

220. அலங்குமழை பொழிந்த வகன்க ணருவி
ஆடுகழை யடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவள்
மயங்கிதழ் மழைக்கண் கலிழு மன்னாய்

இது நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

ப. உரை: அலங்குமழை பொழிந்த அகன் கண் அருவி ஆடுகழை அடுக்கத்து இழிதரும் நாடன் என்றது, இவள்மேல் வைத்த தண்ணளி நம்மிடத்தும் வந்து இடையறாது ஒழுகும் எ.று.

உரை: அன்னாய், அசைகின்ற மழை பொழிய வந்த அகன்ற இடத்தையுடைய அருவி, ஒலிக்கின்ற மூங்கில் வளர்ந்த மலைப் பக்கத்தே ஒழுகும் நாடனுடைய பெரிய மலைபோன்ற, திரு வீற்றிருந்த வெற்றி பொருந்திய, அகன்ற மார்பை முயங்காது கழிந்த நாட்களில் அதனையே நினைந்து இவள் இணையொத்த மலரிதழ் போலும் குளிர்ந்த கண்கள் நீர் சொரியா நிற்கும், காண் எ. று.

---

1. தொல். பொ. 9.

மழை முகில் காற்றில் மிதந்து வருவதாகலின், அலங்குமழை எனப்பட்டது. பொழிந்த என்னும் பெயரெஞ்சு கிளவி காரியத்தின் மேனின்றது. பெருவரையன்ன மார்பு, திருவிறல் மார்பு, வியன் மார்பு என இயையும். உயர்வு அகலம் திண்மை முதலிய பேரியல்புகளால் சிறந்த மலைகளை விறன்மலை[1], விறல் வரை[2] என்பது பற்றி, அவ்வியல்புகளால் ஒத்த தலைமகன் மார்பினைப் பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு என்று சிறப்பித்தார்; தலைமக்கள் மார்பு திருவீற்றிருக்கும் சிறப்புக்கருதி இவ்வாறு கூறினர் என்றலும் ஒன்று. திருத்தக்கதேவர், "திருவீற்றிருந்த மார்பன் சேவடி சேர்ந்த யாங்கள்[3]" என்பது காண்க. மயங்கிதழ், இணையொத்த மலர்இதழ் போன்ற கண்ணிமை மேற்று; "மயங்கிதழ் மழைக்கண் பயந்த தூதே[4]" என்று பிற சான்றோரும் கூறுவர்.

தலைமகனோடு தொடர்புண்டாய திறத்தைச் சுட்டி, அகன்கண் அருவி இழிதரும் நடான் என்றும், அவற்கே தலைவி உரியளாய்க் களவொழுக்கம் பூண்டமை விளங்க முயங்காது கழிந்த நாள் இவள் கண் கலிழும் என்றும் கூறினள். முயங்குந்தோறும் புத்தின்பம் பயந்து, பாயலாய்ப் பயன் நல்கிய சாயல் மார்பாகலின், வியன் மார்பு என்றாள். நாடனது வியன்மார்பு முயங்காது கழியும் நாள் பேதுற்றுக்கண் கலுழும் இவள், நொதுமலர் வரைந்த வழி உயிர் வாழாள் என்பதுபட நிற்றலின், இஃது உண்மை செப்பல்.

மழைபொழியத் தோன்றிய அகன்ற அருவிகள் அடுக்கத்திடை இழியும் நாடன் என்றது, தலைவன் புரிந்த தலையளியால் உயிர் வாழ்கின்றாள் என்றும், எனவே நொதுமலர்க்கு வரைவுடன்படின் உயிர்வாழாள் என்றும் உள்ளுறுத்தவாறு.

இஃது, எளித்தல் ஏத்தல் என்ற அறத்தொடுநிலைப் பகுதிகளுள் உண்மை செப்பலாம் என்பர் இளம்பூரணர்[5]. "நாற்றமும் தோற்றமும்" என்ற சூத்திரத்து "அவன் வரைவு மறுப்பினும்[6]" என்றதற்கு இதனைக் காட்டுவர் நச்சினார்க்கினியர். (220)

1. அகம். 382. 2. ஷை. 179. 3. சீவக. 1930.
4. நற். 5. 5. தொல். பொ. 112. 6. ஷை. 207.

23

அம்ம வாழிப்பத்து

இதன்கண் வரும் பாட்டுக்கள் பத்தும் ''அம்ம வாழி'' என்று தொடங்கும் சிறப்பு நோக்கி, இஃது இப்பெயர்த்தாயிற்று.

221. அம்ம வாழி தோழி காதலர்
பாவை யன்னவென் ஞுய்கவின் தொலேய
நன்மா மேனி பசப்பச்
செல்வ லென்பதம் மலேகெழு நாட்டே.

இஃது, ஒருவழித் தணந்து வரைதற்கு வேண்டுவன முடித்து வருவல் என்று தலேமகன் கூறக் கேட்ட தலேமகள் அவன் சிறைப் புறத்தாஞய்க் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

ப. உரை. கடிதின் வரைதல் பயன்.

உரை: தோழி, கேட்பாயாக: பாவை போலும் என் அழகு கெடவும், நல்ல மாமைநிறம் கொண்ட என் மேனி பசலே பாயவும், காதலர் தம் மலே பொருந்திய நாட்டிற்குச் செல்வேன் என்று கூறுகின்றனர்; ஆகலின் யாம் செயற்பாலது என் எ. று.

அம்ம வாழி தோழி யென்றது தலேவியது ஆற்ருமை தோன்ற நின்றது. பாவை யன்ன என் ஆய்கவின் என்பது மகளிர் உருநலம் பற்றி வழங்கும் வழக்கு.

தன் கவினையும் மேனியையும் விதந்தோதியது, அவற்றின் தொலைவு குறித்து வருந்துகின்றமையின், மாயாத என் ஆய்கவின் மாய்ந்து கெடவும், கெடாத என்மேனி பசலை பாய்ந்து கெடவும் பிரியத்துணிந்தார் என்பாள், பாவை யன்ன என் ஆய்கவின் தொலைய என்றாள். பாவையின் இயல்பினைக் "கால் பொருது இடிப்பினும் கதழுறை கடுகினும், உருமுடன்று எறியினும் ஊறுபல தோன்றினும், பெருநிலம் கிளரினும் திருநல வுருவின், மாயா இயற்கைப் பாவை[1]" என்பதனால் அறிக. காதலர் தம்மால் அன்பு செய்யப்பட்டார் வருந்துவனவற்றைச் செய்யாராக, இவர் செய்யத் துணிந்தார் என்பாள், காதலர் என்று பன்மையிலும், செல்வல் என்ப என்று ஒருமையிலும், சென்ற விடத்துக் கவின் தொலைதலும் மேனி பசத்தலும் ஒரு தலையாகலின், யான் ஆற்றகில்லேன் என்றும் கூறினாள்.

"இட்டுப் பிரிவிரங்கினும்[2]" என்பதற்கு இதனை எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர். (221)

222. அம்ம வாழி தோழி நம்மூர்
நளிந்துவந் துறையு நறுந்தண் மார்பன்
இன்னினி வாரா மாறுகொல்
சின்னிரை யோதியென் னுதல்பசப் பதுவே

இது, குறி இரண்டன்கண்ணும் வந்து ஒழுகும் தலைமகன் இடையிட்டு வந்து சிறைப்புறத்து நின்றுழி நின் நுதல் பசத்தற்குக் காரணம் என்னை என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: நம்மூர்க்கண் செறிந்து வந்துறையும் நறிய குளிர்ந்த மார்பினையுடைய தலைமகன் இப்பொழுது வாராமையால், சிலவாய் நிரையுற்ற கூந்தலையுடைய என் நுதல் பசலை பாய்வதாயிற்று எ. று.

---

1. நற். 201. 2. தொல். பொ. 109.

நளிந்து, செறிவுப் பொருளில் வரும் உரிச்சொல் அடியாகப் பிறந்த வினையெச்சம் ''நளிந்து பலர் வழங்காச் செப்பம் துணியின்[1]'' என்றும், ''நளிந்தனை வருதல் உடன்றனளாகி[2]'', என்றும் வழங்குவர்.

இனி, காலப்பெயர்; ''இனியணி யென்னும் காலையும் இடனும்[3]''என்று ஆசிரியர் குறிப்பது காண்க. இன்னினி என்பது ''தம்மியல் கிளப்பின் தம்முன் தாம் வரூஉம் எண்ணின் தொகுதி[4]'' போல்வதோர் மரூஉமுடிபு. இனி இனி என்பது, ''வல்லெழுத்து மிகினு மான மில்லை, ஒல்வழி யறிதல் வழக்கத் தான[5]'' என்பதனுள் ''வழக்கத்தான'' என்றதனால் இகரம் கெடுத்து, ''குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டல்[6]'' என்றதனால் இன்னினி என முடித்துக் காட்டலும் ஒன்று. மாறு; ஏதுப் பொருள் படுவதோர் இடைச்சொல் என்பர்[7].

இருவகைக் குறிக்கண்ணும் வந்து கூடி இன்பம் துய்ப்பித்தா னாகலின், நளிந்து வந்து உறையும் நறுந்தண் மார்பன் என்றும், இப்பெற்றியோன் இடையிட்டு வருதலோடு இதுபோழ்து போந்து சிறைப்புறத்தானாதலை அறிந்து அவற்குத் தன் ஆற்றாமை உணர்த்துவாள், இன்னினி வாரா மாறு கொல் என்றும் கூறினாள். சின்னிரை யோதி என்பதனை விளியாக்கினுமாம். நுதல் பசப்பது என்றது பசலைபாய்தல். (222)

223. அம்ம வாழி தோழி நம்மலை
வரையா மிழியக் கோட னீடக்
காதலர்ப் பிரிந்தோர் கையற நலியும்
தண்பனி வடந்தை யற்சிரம்
முந்துவந் தனர்நங் காத லோரே.

---

1. மலைபடு. 197. 2. பதிற். 52:16. 3. தொல். எழுத்து. 236.
4. ஷை. ஷை. 482. 5. ஷை. ஷை. 246. 6. ஷை. ஷை. 160.
7. புறம். 4 உரை.

இது, வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வருகின்றமை அறிந்த தோழி தலைமகட்கு மகிழ்ந்து சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: நம் மலைப்பக்கத்தே நீர் மிக்கு ஒழுக, செங்காந்தளின் நீண்ட இதழ்கள் மலரக் காதலரைப் பிரிந்த மகளிரும் ஆடவரும் செயலற்று வருந்தப் போந்து வருத்தும் மிக்க குளிர்ச்சியினையுடைய வாடைக்காற்று அலைக்கும் முன்பனிப் பருவம் வருதற்கு முன்பே நம் காதலர் வந்தனர்; ஆகலின், யாம் அவ்வாடையால் துன்பம் எய்துவே மல்லேம் எ. று.

ஆம், நீர். கோடல், செங்காந்தள். வடந்தை, வாடைக்காற்று; ''வடந்தை தூக்கும் வருபனி யற்சிரம்[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க. அற்சிரம், முன்பனி. இஃது அச்சிரம் எனவும் வழங்கும்; ''அரிதின் தோன்றும் அச்சிரக் காலையும்[2]'' என வரும். அக், காலத்தில் காதலர்ப் பிரிந்த மகளிர் கையற்று வருந்துவர் என்பது ''அகன்றுறை மகளிர் அணிதுறந்து நடுங்க, அற்சிரம் வந்தன்று[3]'' என்பதனுல் அறிக. வடந்தை அற்சிரம் செய்யும் வருத்தம் தலை மகட்கு எய்தாது என்பாள், முந்து வந்தனர் நம் காதலோரே என்ருள்.

இனி, ''நாற்றமும் தோற்றமும்[4]'' என்ற சூத்திரத்துப் ''பாங்குற வந்த நாலெட்டு வகையும்'' என்ற விடத்து ''வகை'' யாற் கொள்வன எனக்கொண்டு ''இது வரை விடைப் பிரிந் தோன் குறித்த பருவத்திற்கு முன் வருகின்றமை அறிந்த தோழி தலைவிக்குக் கூறியது'' என்பர் நச்சிஞர்க்கினியர். (223)

224. அம்ம வாழி தோழி நம்மலை
மணிநிறங் கொண்ட மாமலை வெற்பின்
துணிநீ ரருவி நம்மோ டாடல்
எளிய மன்னு லவர்க்கினி
அரிய வாகுதன் மருண்டனென் யானே.

---

1. அகம். 378. 2. சிலப். 14 : 105, 3. ஷை. 217.
4. தொல். பொ. 114

இஃது இற்செறிப் புணர்ந்த தலைமகள் ஆற்றாளாய்த் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக; நம்முடைய மலையாகிய நீல மணியின் நிறத்தையுடைய பக்கமலையின்கண் ஒழுகும் தெளிந்த நீரினையுடைய அருவியில் பண்டெல்லாம் நம்மோடு கூடியாடுதல் அவர்க்கு எளிதாயிருந்தது; இப்பொழுது அஃது அரிதாகுதல் குறித்து யான் மறுகு கின்றேன் எ. று.

இனி என்றதற் கேற்பப் பண்டெல்லாம் என்பது வருவிக்கப் பட்டது. துணிநீர், தெளிந்தநீர்; ''துணிநீர் இலஞ்சி[1]'' என்றாற் போல. அருவியாடுதல் எளிதாயிருந்தது ஒழிந்து அரிதாயிற்று என்பது பட நிற்றலின், மன் ஒழியிசை. ''ஆர்கலி வெற்பன் மார்பு புணையாகக் கோடுயர் நெடுவரைக் கவாஅன் பகலே, பாடின் னருவி ஆடுதல் இனிதே[2]'' எனப் பிறரும் அருவியாடல் விருப்ப முணர்த்தியவாறு அறிக.

அருவியாடல் முதலிய செயல்களால் தம் ஒழுக்கம் தமரால் உணரப்பட்டமையும். அதனால் அவர் இற்செறித்தமையும் குறிப்பா லுணர்த்துவாள், இனி அரிய வாகுதல் மருண்டனேன் யானே என்று கூறினாள். தலைமகன் சிறைப்புறத்தானாகலின், ஆடல் எளிமன்னால் அவர்க்கு என்றாள். இது முட்டுவயிற் கழறல் (224)

225. அம்ம வாழி தோழி பைஞ்சுனைப்
பாசடை நிவந்த பனிமலர்க் குவளை
உள்ளகங் கமழுங் கூந்தன் மெல்லியல்
ஏர்திக ழொண்ணுதல் பசத்தல்
ஓரார் கொல்லோ காத லோரே.

இது, மெலிவு கூறி வரைவுகடாவக் கேட்ட தலைமகன் தான் வரைதற் பொருட்டால் ஒருவழித்தணந்து நீட்டித் தானாக. ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.

1. அகம் 236. 2. குறுந். 353.

உரை : தோழி, கேட்பாயாக : பசிய சுனைக்கண் பசுமையான இலைகளி னிடையே உயர்ந்து விளங்கும் குளிர்ந்த மலராகிய குவளையின் மணம் உள்ளே கமழும் கூந்தலும் மெல்லிய இயலுமுடைய நினது அழகு திகழும் ஒள்ளிய நுதல் பசலை பாய்ந்து ஒளிகெடுதலை நம் காதலர் அறியார் கொல்லோ, நன்கு அறிவாராகலின் நீட்டியாது விரையவருவர், காண் எ. று.

மகளிர் கூந்தலினுள் மணம் எழும் என்றும், அது குவளைப் பூவின் மணம் போல்வதென்றும் கூறுவர். "குடவரைச் சுனைய மாயிதழ்க் குவளை, வண்டுபடு வான் போது கமழும் அஞ்சிலோதி[1]" எனவும், "குவளைக்குறுந்தாள் நாண்மலர் நாறும், நறுமென் கூந்தல்[2]" எனவும் சான்றோர் ஓதுமாறு காண்க. மெல்லியல், விளி கொல், அசைநிலை. ஓகாரம் எதிர்மறை.

தலைவன் வரைவு நீட்டித்தமை கண்டு ஆற்ருமையால் தலைவி கூந்தல் அவிழ்ந்து உடம்பு நனிசுருங்கி மெலிந்து காட்டினமை தோன்ற, குவளை உள்ளகம் கமழும் கூந்தல் மெல்லியல் என்றும் ஒளி திகழும் நுதல் பசந்தமைக்கு வருந்துவளாய், ஏர்திகழ் ஒண்ணுதல் பசத்தல் என்றும், நினது ஆற்ருமை மிக்க இந்நிலையினைத் தலைவர் அறியாரல்லர்; நன்கு அறிவர் என்பாள், ஓரார்கொல்லோ என்றும், அறிவராகலின் அவர் சிறிதும் தாழாது வருவர், அத்துணைப் பெருங்காத லுடையார் என்பாள், காதலோர் என்றும் தோழி கூறினுள். மெல்லியல் என்றது உடம்பு நனி சுருங்கல். ஒண்ணுதல் பசத்தல் என்றது பசலைபாய்தல்.

ஓரார் கொன்னங் காதலோர் என்ற பாடத்துக்கு அறியார் போலும், அறிவராயின் நீட்டியாது வருவர் காண் நம் காதலர் என வுரைக்க. அதனல் தலைமகன் பால் தோழி அறியாமை காட்டி வழுப்படுமாறு அறிக. (225)

1, குறுந். 30. 2. குறுந். 270.

226 அம்ம வாழி தோழி நம்மலை
நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள்
கொங்குண் வண்டிற் பெயர்ப்புபுற மாறிநின்
வன்புடை விறற்கவின் கொண்ட
அன்பி லாளன் வந்தன னினியே.

இது, வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் நீட்டித்து வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: நம்முடைய மலையிடத்து நறிய குளிர்ந்த பக்க மலையில் மண நாறும் பூவின் குலைகளையுடைய காந்தளின் தேனை யுண்ணும் வண்டைப்போல் நம்மின் நீங்கி நின் வலிமையினையுடைய மிக்குற்ற அழகினைக் கவர்ந்து கொண்ட அன்பிலியாகிய தலைமகன் இப்பொழுது வந்தனன், காண்பாயாக எ. று.

சிலம்பு, மலை: ஈண்டு மலைச்சிலம்பு என்றதனால், ஒரு மலையை யடுத்துச் சேர இருக்கும் பக்கமலை யெனக் கொள்க. காந்தள், மலைநிலத்துக்குச் சிறப்பாக உரிய தாகலின், சிலம்பின் நாறு குலைக்காந்தள் என்றார். காந்தட்பூ குலைகுலையாக இருப்பது பற்றிக் குலைக்காந்தள் என்பது பெருவழக்கு. "சிலம்புடன் கமழும் அலங்கு குலைக் காந்தள்[1]" "காந்தள், கமழ்குலை யவிழ்ந்த நயவருஞ் சாரல்[2]" என வருவன காண்க. "பூவில் தேனை உண்டபின் வேறு பூத்தேர்ந்து நீங்குதல் வண்டின் இயல்பு.[3]" விறற்கவின் ஈண்டு மிகுதிப் பொருட்டு.

குலைகளாகிய பூவினையுடைய காந்தளின் தேனை உண்ட வண்டைப் போலத் தலைவனும் நாணம் சாயல் முதலிய பெண்மைக் குணங்களையுடைய தலைவியின் நலனை நுகர்ந்து, கொங்குண்டபின் அவ்வண்டு அக்காந்தளைப் பிரிந்து புறமாறுதல் போல் அவளைப் பிரிந்து நீட்டித்தான் என நிரனிறையாகக் கொள்க. புறம் மாறு தல், இடம்பெயர்தல். புறமாறி என்றது தலைவன்பாற் பரத்தமை

---

1. குறுந். 239. 2. நற் 313. 3. ஐங். 90.

பட உரைத்தவாறு. தலைவன் பிரிந்தவிடத்துத் தலைவி தன் ஆற்ருமை ஏதுவாக உடம்புமெலிந்து மேனிநலம் இழந்தாளாகலின், அதுபற்றி இரங்குவாள், வன்புடை விறற்கவின் என்றும், தலைமகன் அதனைக் கருதாது பிரிந்தும் நீட்டித்தும் வந்தமையின் அவனை அன்பிலாளன் என்றும் கூறினுள். ''ஒன்றித் தோன்றும் தோழி மேன'' என்றதனல், இது தோழி அழிவில் கூட்டத்து முனிவு மெய்ந்நிறுத்தல். (226)

227. அம்ம வாழி தோழி நாளும்
நன்னுதல் பசப்பவு நறுந்தோண் ஞெகிழவும்
ஆற்றலம் யாமென மதிப்பக் கூறி
நப்பிரிந் துறைந்தோர் மன்றநீ
விட்டனை யோவவ ருற்ற சூளே.

இஃது, ஒருவழித் தணந்து வந்த தலைமகன் சிறைப்புறத்தா ஞகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: நும்மைப் பிரிந்து தனித் துறைதல் யாம் ஆற்றேம் என நம் மனங்கொளச் சொல்லிப் பின்னர் நாடோறும் நம்முடைய நல்ல நுதல் பசப்பெய்தவும், நறிய தோள் மெலிவெய்தவும் நம்மைப் பிரிந்து நீட்டித்து வந்தோர் தெளிவாக அன்பில ராதலின், அவர் நம்மோடு உற்ற சூளினை நீ கொள்ளாதொழிந்தனையோ, கூறுக எ. று.

என்றது அச்சூள் கொள்ளற்பால தன்று என்பதாம்.

பிரிவாற்ருமையால் உளவாகும் மெலிவினைப் புலப்படுத்தற்கண் நுதலும் தோளும் சிறந்து நிற்றலின் அவற்றை எடுத்தோதினுர். ''மென்ருேள் நெகிழவும் திருநுதல் பசப்பவும், பொன்போல் விறற்கவின் தொலைத்த குன்ற நாடன்[1]'' எனப் பிருண்டும் உரைத்தல் காண்க. பசப்பவும் ஞெகிழவும் என அடுக்கிநின்ற எச்சவினைகள் பிரிந்து என்பதனோடு முடிந்தன. மதிப்பக் கூறல்

1. ஐங். 230.

மனங்கொளச் சொல்லுதல். ஆற்றலம் யாம் என்றது, தலைமகன் கூற்றினைக் கொண்டெடுத்து மொழிந்தது. இனி, ஆற்றலம் யாம் என்ற இதனைத் தோழி கூற்றாக வைத்துத் தமது கூற்றினையே எடுத்தோதியதாகக் கொள்ளலும் ஒன்று; அப்பொருட்குத் தொக்கு நின்ற சிறப்பும்மையை விரித்துக்கொள்க.

தலைவன் பிரிந்தவிடத்துத் தலைமகள் வேறுபடுதல், "நன்னுதல் பசப்பவும் பெருந்தோள் நெகிழவும், உண்ணா வுயக்கமொடு உயிர்செலச் சாஅய், இன்னமாகவும் இங்குநத் துறந்தோர் அறவ ரல்லர்[1]" எனப் பிறரும் கூறுமாற்றானறிக. தம்மாட்டு அன்பு செய்தார்க்குளவாகும் பசப்பும் மெலிவுங் கருதாது பிரிவோர் அறவரல்லர் என்பாள், குறிப்பால் மன்ற என்றும், அப்பெற்றி யோர் தெளித்த சூளினைத் தேறி யிருத்தலில் பயனின்று ஆகலின், விட்டனையோ அவர் உற்ற சூளே என்றும் கூறினாள். நீவிர் வருந்த யாம் பிரியேம், பிரியின், ஆற்றேம் என்று கூறிப் பின்னர்ப் பிரிந்து சென்றதே யன்றிப் பிரிவாற்றி உறைந்தோர் பொய்யர் ஆகலின், அவர் செய்யும் சூளுறவும் மெய்யெனக் கோடற்பாற்று அன்று என்றற்கு மன்ற விட்டனையோ என்றாள். (227)

228 அம்ம வாழி தோழி நம்மூர்
நிரந்திலங் கருவிய நெடுமலை நாடன்
இரந்து குறையுறு அன் பெயரின்
என்னா வதுகொனம் மின்னுயிர் நிலையே.

இது. தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி அவர் கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி அறத்தொடு நின்றது.

ப. உரை: நிரந்து இலங்கு அருவிய நெடுமலை நாடன் என்றது சேர்ந்தாருடன் இடையறாத நட்பையுடையன் எ. று.

---

1. அகம். 85.

உரை: தோழி, கேட்பாயாக: இடையறவு படாது ஒழுகும் அருவிகளையுடைய நெடிய மலைநாடன் நம்மூர்க்கண் வந்து நம் தமர்பால் வேண்டிய குறை பெருனாய் மீள்வானாயின், நம்முடைய இனிய உயிர் நிலைபெறுவது எவ்வாறும் எ. று.

நிரத்திலங்குதல், இடையருது ஒழுகுதல். ''நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்[1]'' என்றாற் போல. அருவிக்கு இலங்குதல் நீர்ஒழுக்கம் என அறிக. ''இலங்கு வெள்ளருவி[2]'' எனவும், ''வாளிலங் கருவி தாஅய்[3]'', எனவும் வரும். அருவிய, பெயரெச்சக்குறிப்பு. குறை, இன்றி அமையாத காரியம். உறுதல், ஈண்டுப் பெறுதல் என்னும் பொருட்டு.

நம் இனிய உயிர் நிற்றற்குக் காரணம் மலைநாடனது நட்பாகலின், அவன் நம்மைப் பெருது பெயரின் அவன் நட்பை யிழந்து நாம் உயிர் வாழ்தல் கூடாது என்பாள், என்னுவதுகொல் நம் இன்னுயிர்நிலை என்ருள். இவ்வாறு வருத்தம் மிக்கவழித் தலைவி, இன்னும் வாராராயின், '' என்னும் தோழி நம் இன்னுயிர் நிலையே[4]'' என்பது உண்மையின், ஈண்டுத் தோழி கூறினுள்.

உடம்பின்கண் உயிர் வேற்றுமையின்றி அதன்வழி நின்று அதனுல் வரும் துன்பங்களை நுகர்ந்தவிடத்தும் வெருது உடனிருந்து இன்ப நல்கும் பண்பு நோக்கி இன்னுயிர் என்ருள். ''துன்பம் உழத்தொறும் காதற்று உயிர்[5]'' என்று சான்ருேரும் கூறுதல் காண்க.

நிரந்து என்பதற்கு மேவி என்ற பொருள் கொள்ளின், நம் மூர்க்கண் மேவி விளங்கும் அருவிகளையுடைய நெடுமலை நாடன் என்பது பொருளாம். ஆகவே நின்மேல் வைத்த தண்ணளியால் இவ்வூர்க்கட் போந்து ஒழுகிய தலைமகன் என அவனைக் குறிப்பாற் சிறப்பித் தாளாம். நிரந்து, மேவியென்னும் பொருட்டாதல், ''விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்[6]'' என்பதற்கு ஆசிரியர் மணக்குடவர் கூறிய உரையான் அறிக. (228)

1. குறள். 648. 2. நற். 257. 3. அகம். 278.
4. குறுந். 319. 5. குறள். 940. 6. ஷ. 648.

229. அம்ம வாழி தோழி நாமழப்
பன்னாள் பிரிந்த வறனி லாளன்
வந்தன னேமற் றிரவிற்
பொன்போல் விறற்கவின் கொள்ளுநின்
னுதலே

இது, வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டான் என்பது கேட்டுத் தலைமகட்கு எய்திய கவினைத் தோழி தான் அறியாதாள் போன்று அவளை வினயது.

உரை: தோழி, இதனைக் கேட்பாயாக: நாம் புலம்பி அழ அதனை நினையாது பன்னாட்காறும் பிரிந்துறைந்த அறனில்லானாகிய தலைமகன் வந்தான்கொல்லோ, நின்நுதல் இராக்காலத்தே பொன் போலச் செறிந்த அழகினைக் கொள்ளுவ தாயிற்றாகலான் எ. று.

அறனிலாளன், அறனின்மையை ஆள்பவன்; அறவோர்பாற் காணப்படும் செந்தண்மைக் குரிய சொல்லும் செயலும் இல்லாரை அறனிலாளர் என்ப. களவின் கண் "திருநுதற் குறுமகள்" ஒருத்தியின் "அணிநலம் வௌவிய" ஒருவன், பின்பு, அவளைக் கைவிட்டு யான் அறியேன் என்று சூள்செய்து கேட்டானாக, அவனைச் சான்றோர், "அறனிலாளன்[1]" என்று வெறுத்துக் கூறியது காண்க. அகப்பொருள் நெறிக்கண், ஒரோவழிச் செவிலியும் தோழியும் தலைமகளும் தலைவனை அறனிலாளன் எனப் பழித்தல் உண்டு. உடன்போக்கின் கண், தலைமகளை வளர்த் தெடுத்த தன்னை அறியாது தலைமகன் கொண்டு சென்றது அறனின்மை என்பது பற்றி, "அறனிலாளனொடு இறந்தனள்[2]" என்றும், "அறனிலாளன் தோண்ட[3]" என்றும் செவிலி கூறுவள், களவினால் தன்னை இன்றி அமையாளாகிய தலைவி வருந்தப் பிரிந்தமை குறித்து "அறனிலாளர் கண்ட பொழுதின்[4]" என்றும், "அறனிலாளன் புகழ[5]" என்றும் கூறுப. ஓகாரம் எதிர்மறை.

---

1. அகம். 256. 2. ஷ. 219. 3. ஷ, 207.
4. ஐங். 118. 5. நற். 275.

தன்னைக் காதலித்தார் புலம்புற்று வருந்தப் பிரிதலும், பிரிந்து நீட்டித்தலும் காதலர்க்கு அறமாகா வாகலின், அவற்றைச் செய்தமை குறித்துத் தலைமகனை அறனிலாளன் என்றாள். ''வருதும் என்ற நாளும் பொய்த்தன, வரியேருண்கண் நீரும் நில்லா, தண்கார்க் கீன்ற பைங்கொடி முல்லை, வைவாய் வான் முகை யவிழ்ந்த கோதை, பெய்வனப் பிழந்த கதுப்பு முள்ளார், அருள்கண் மாறலோ மாறுக வந்தில், அறனஞ் சலரே யாயிழை நமரெனச், சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும்[1]'' என்றார் பிறரும். புணர்ந்த மகளிர்பால் மெய்ப்பட்டுத் தோன்றும் நுதற் கவின் தலைமகள்பால் நிகழக் கண்டமையான், வந்தனனோ என்று வினவினாள்.

தன்னை இன்றியமையேமாகிய நாம் ஆற்றாதுஅழஅழப்பிரிந்து சென்றதேயன்றி ஆங்கே நீட்டித்துத் தங்கினமை தலைமகற்கு அறமாகாது என்பாள், நாமழப் பன்னாள் பிரிந்த அறனிலாளன் என்றும், நின் நுதல் கொள்ளும் கவின் தலைமகன் வரவைத் தெரிவித்தலின், வந்தனன் என்பது அறிவேனாயினும், நின்னிற் பிரியாது உறையும் யான் அறியாதொழிந்தமையான் இரவுப் போதில் வந்திருத்தல் வேண்டுமெனக் கருதுகின்றேன் என்பாள், வந்தனனோ மற்று இரவின் என்றும் தோழி கூறினாள். ஈண்டுத் தலைமகன் அருள் கண்மாறி அறனிலனாயினான் எனத் தோழி கூறல் வழுவாயினும், ''மங்கல மொழியும் வைஇய மொழியும், மாறி லாண்மையிற் சொல்லிய மொழியும், கூறியன் மருங்கிற் கொள்ளு மென்ப[2]'' என்பதனால் அமைந்தது. (229)

230 அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல னாகிப் பெரிதுநின்
மென்றோ ணெகிழவுந் திருநுதல் பசப்பவும்
பொன்போல் விறற்கவின் றொலைத்த
குன்ற நாடற் கயவர்நன் மணனே.

1. அகம். 144. 2. தொல்.பொ. 244.

இது, தலைமகன் வரைவு வேண்டித் தமரை விடுத்துழி மறுப்பர் கொல்லோ என்று அச்ச முறுகின்ற தலைவிக்குத் தோழி சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: பண்டு நாம் தினைக் காவற்குச் சென்றவிடத்தும் நம்மோடு கூடிக் சிறிய தினையைக் காவல் செய்வானாகிக் கூட்டம் பெற்றும், பின் வரைதற் பொருட்டு நின் மெல்லிய தோள் மெலிந்து வளை நெகிழவும், அழகிய நுதல் பசப் பெய்தவும் பிரிந்து சென்று, அதனாற் பொன்போற் செறிந்த அழகினைத் தொலைத் தழித்த குன்றினையுடைய நாடற்கு நமர் நல்ல மணத்தைச் செய்வராகலின், நீ நம் தமர் மறுப்பர்கொல்லோ என்று அஞ்சுதல் ஒழிக எ. று.

மென்றோள் நெகிழவும் என்புழி இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மே னின்றது. 'மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்,' "இன்பமும் பொருளும் அறனு மென்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டம்" எனச் சிறப்பிக்கப்பெறும் களவுவழிப் பிறந்து, "கரணமொடு புணரக், கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக், கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வ" தாகலின், நன்மணன் என்றார். இல்லிருந்து நல்லறம் புரிந்து "சிறந்தது பயிற்றும்" சிறப்பிற்றாதலின், நன்மணன் என்றா ரெனினுமாம்.

இயற்கைப் புணர்ச்சி பெற்ற தலைமகன் தோழியை மதியுடம் படுப்பான் ஊரும் பேரும் கெடுதியும் வினாய் வந்த போது அன்றித் தோழி அவனை அறியாளாகலின், அறிந்தகாலத்தை நினைவுறுத்து வாள் போன்று, சிறுதினைக் காவலனாகி என்றும், பின்னர் அவன் அவளால் வரைவு முடுக்கப்பட்டுப் பிரிந்தவழித் தலைவி ஆற்றாளா யினமையால் மென்றோள் நெகிழவும் திருநுதல் பசப்பவும் என்றும், வரைவு இடை வைத்துப் பிரிந்தோன் குறித்த பொழுதின் கண் வாராது நீட்டித்தலால் தலைவி உடம்பு சுருங்கி மேனி வேறுபட்டுக் காட்டினமையின், பொன்போல் விறற்கவின் தொலைத்த குன்ற நாடன் என்றும் கூறினாள்; இதனாற் பயன், தலைவி தமரால்

மணன் அயர்தற்குரியவள், தன்னைக் களவிற் கூடி மகிழ்வித்தும், ஒருவழித் தணந்து உளம் நெகிழ்வித்தும் ஒழுகின குன்ற நாடனே என்று தேறி அச்சம் நீங்குவள் என்பதாம்.

இதன்கண் சிறுதினைக் காவலனாகி என்றது தோழியிற்புணர்வு. மென்றோள் நெகிழவுந் திருநுதல் பசப்பவும், பொன்போல் விறற் கவின் தொலைத்த குன்றநாடன் என்றது வரைவிடை வைத்த பிரிவு. இதனை, ''வெளிப்படை தானே கற்பினோ டொப்பினும், ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக, வரையாது பிரிதல் கிழவோர்க்கில்லை[1]'' என்ற சூத்திரத்துள், ''மூன்றுமென முற்றும்மை கொடாது கூறினமையின் ஏனைப் பிரிவுகளின் வரையாது பிரியப்பெறும்'' என்று கொண்டு, ''அவை வரைதற்குப் பொருள் வயிற் பிரிதலும், வேந்தற் குற்றுழிப் பிரிதலும், காவற்குப் பிரிதலுமென மூன்றுமாம்'' என்றும் கூறி அடக்குக.

''நாற்றமும் தோற்றமும்[2]'' என்ற சூத்திரத்து, ''ஆங்கதன் தன்மையின் வன்புறை'' என்பதற்கு இதனை மேற்கோளாக்குவர் இளம்பூரணர். (230)

---

1. தொல். பொ. 141. 2. ஷை. ஷை. 112.

24

தெய்யோப்பத்து

இஃது ஒவ்வொரு பாட்டிலும் ஈற்றில் தெய்யோ என்னும் இடைச்சொல் வரத் தொடுத்த பகுதியாகலின், இப்பெயர்த் தாயிற்று.

தெய்ய என்னும் இடைச்சொல் தொல்காப்பியத்துட்காணப் படாதாயினும், பின்வந்த தொகைநூல்களிற் காணப்படுவதுபற்றித் தொல்காப்பிய வுரைகாரர்களால், "கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும் கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே[1]" என்ற விதியின் கீழ்க் காட்டப்படுகின்றது. "உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்[2]" "தங்கினி ராயின் தவறோ தெய்ய[3]" "ஒண்டொடி ஞெமுக்கா தீமோ தெய்ய[4]" "அம்பல் வாய்த்த தெய்ய[5]" "பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய[6]" "தங்கின் எவனோ தெய்ய[7]" எனத் தொகைநூல்களில் வருவது காண்க. இத் தெய்ய என்பது சிறுபான்மை தெய்யோ என இப்பத்தின்கண் வரும் பாட்டுத்தோறும் வருகிறது; வேறு தொகை நூல்களில் இவ்வாறு வாராமை குறித்து, இப்பத்துத் தெய்யோப்பத்து எனப் பட்டது போலும்.

---

1. தொல். சொல். 298. 2. குறுந். 81. 3. ஷை. 345.
4. அகம். 60. 5. ஷை. 100. 6. நற். 35.
7. ஷை. 67.

231. யாங்குவல் லுநையோ வோங்கல் வெற்ப
இரும்பல் கூந்தற் றிருந்திழை யரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவே தெய்யோ.

இஃது ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

உரை: உயர்ந்த மலையையுடையாய், கரிய பலவாகிய கூந்தலையும் திருந்திய இழைகளையு முடைய அரிவை யாவாள் தேமலோடு கூடிய மாமைநிறம் தேய, அவ்விடத்துப் பசலை இடையீடின்றிப் பரவப் பிரிதல் எவ்வாறு வல்லையாயினையோ? கூறுக எ.று.

மகளிரின் கரிதாய்த் திரண்ட கூந்தலை இரும்பல் கூந்தல் என்பது வழக்கு; ''இரும்பல் கூந்தல் கொடிச்சி[1]'' என இந் நூலுள்ளும். ''இரும்பல் கூந்தற் சேயிழை மடந்தை[2]'' எனப் பிறநூலுள்ளும் வருதல் காண்க. இதுவே, ''இரும்பல் ஒலிவருங் கூந்தல்[3]'' என்றும், ''பல்லிருங் கூந்தல்[4]'' என்றும் வழங்கும். திதலை, தேமல்; இது மகளிர் மார்பு வயிறு அல்குல் ஆகிய இடங்களிற் படர்வது. ''திதலை மென்முலை[5]'' எனவும் ''திதலை யவ்வயிறு[6]'' எனவும், ''திதலை யல்குல்[7]'' எனவும் சான்றோர் குறிப்பர். மாமை, மாந்தளிர் நிறத்தின் தன்மை; நோயின்றியன்ற இளமகளிர் மாமைநிறமும் திதலையும் கொண்டிருப்பர்; நோயின் றியன்ற யாக்கையர் மாவின், அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும் பொன்னுரை கடுக்கும் திதலையர்[8]'' என்பதனால் திதலையும் மாமையும் சேர்ந்து இலகும் சிறப்பு விளங்கும். பசலை தோன்ற மாமை கெடுவது, ''பசலை யுணீஇயர் வேண்டும் திதலை யல்குலென் மாமைக்கவினே[9]'' என்பதனாலும் அறியப்படும். தெய்யோ என்பது, ''தம்மீறு திரிதலும்[10]'' என்பதனால் திரிந்து வந்த தெய்ய என்னும் இடைச் சொல்; அசைநிலை.

---

1. ஐங். 281. 2. அகம். 373. 3. நற். 6.
4. குறுந். 19. 5. நற். 380. 6. அகம். 86.
7. அகம். 119. 8. முருகு. 143–5. 9. குறுந். 27.
10. தொல். சொல்: இளம். 246.

விளக்கற்றம் பார்க்கும் இருள்போலத் தலைவன் பிரிவற்றம் பார்த்துப் பசலை பாய்தலின் பசலை பாயப் பிரிவு என்றும், ஒளிமுன் நின்ற பொருள் அது நீங்கியவழித் தன் பொலிவழிதல் போலத் தலைவன் பிரிந்த விடத்துத் தலைவியின் மாமையொளி தேய்தல் பற்றித் திதலை மாமை தேய என்றும் கூறினாள். தேய்தல், ''அல்லவை தேய அறம் பெருகும்[1]'' என்புழிப் போலத் தன் பகையாய பசலை பாய்தலின் தனக்கு நிலையின்றி மெலிதல் என்க. ஒத்த அன்புடையார் இருவருள் ஒருவர் பிரிந்தவழி மற்றவர் ஆற்றாராய் வருந்த, அப்பிரிந்தவர் தாமும் ஆற்றாராய் மீளுதலன்றி மேலும் பிரிந்து சேறல் செய்யாராக, நீ அதனைச் செய்தமை யானும், பண்டெல்லாம், இது செய்யாமை தோன்ற ஒழுகினமை யானும்,இச் செயற்கு வேண்டும் வன்மை நீ பிறிதோரிடத்துப் பிறிதோராற்றாற் பெற்றாயாதல் வேண்டுமென்பால், யாங்கு வல்லு நையோ என்றாள். இது பொருட் பயம்பட வந்த அறக்கழிவுடைய வழக்கு. ''ஈங்குவனை நெகிழப் பிரிதல், யாங்கு வல்லுநையோ ஈங்கிவட் டுறந்தே[2]'' எனப் பிறாண்டும் வருதல் காண்க.

திதலை மாமை தேய என்றது உடம்பு நனி சுருங்கல். பசலை பாய என்றது பசலை பாய்தல். பிரிவு, யாங்கு வல்லுநையோ என்றது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை. (231)

232 போதார் கூந்த லியலணி யழுங்க
ஏதி லாளனை நீபிரிந் ததற்கே
அழலவிர் மணிப்பூ ணனையப்
பெயலா னுவென் கண்ணே தெய்யோ.

இஃது ஒருவழித் தணந்து வந்த தலைமகன், ''நான் பிரிந்த நாட்கண் நீவிர் என்செய்தீர்'' எனக் கேட்கத் தோழி கூறியது.

உரை: பூக்கள் நிறைந்த கூந்தலையுடைய என் தோழியின் இயலும் அணியும் வருந்த ஏதிலாளனாகிய நீ பிரிந்ததன் பொருட்டு என் கண்கள், அழல் போல் விளங்கும் மணிபதித்த மார்பின் அணிகள் நனையுமாறு நீர் உகுத்தலை அமையாவாயின எ.று.

---

1. குறள். 96. 2. ஐங். 285,

போதார் கூந்தல் என்றது தலைமகளை. இயலணி, உம்மைத் தொகை. அன்பிலனைப் பிரிந்தான் எனத் தலைவனை ஏதிலாளன் என்றது, அவன்வயிற் பரத்தைமையும் தன்வயின் உரிமையும் தோன்றுதற்கு. ''ஏதிலாளர் இவண் வரின், போதிற் பொம்ம லோதியும் புனையல், எம்மும் தொடாஅல் என்குவ மன்னே [1]'' என்று பிறண்டுத் தலைவி கூறுதல் காண்க. ஐ, சாரியை. சிவந்த மணிகள் இழைத்த பூண்களாதலின், அவற்றின் ஒளியை விதந்து அழலவிர் மணிப்பூண் என்றார்; ''அழலவிர் வயங்கிழை [2]'' என்றார் பிறரும். அழுங்க, நனையப் பெயலான என இயைத்தலும் ஒன்று.

தலைமகள் இயலும் அணியும் இழந்து வருந்த, அது கண்டு ஆற்றாத யான் கண்ணீர் சொரிய, நீ அன்பில்லாது அகன்றனை என்பாள் ஏதிலாளனை நீ பிரிந்ததற்கே என்றாள். இயல் அழுங்கு தலாவது, ''புறஞ்செயச் சிதைத்தல், புலம்பித் தோன்றல், கலங்கி மொழிதல், கையற வுரைத்தல் [3]'' முதலியனவும், கண்டுயில் மறுத்தலும். கனவொடு மயங்கலும் பிறவும் செய்தொழுகுதல். அணி யழுங்குதலாவது பூவும் சாந்தும் பூணும் துகிலும் வெறுத்தலும், தொடியும் வளையும் நெகிழ நிற்றலும் பிறவும் செய்தொழுகுதல். இயலணி என்றது தலைவியை எனக் கருதுவாருமுளர்.

ஏதி லாட்டியை நீ பிரிந்ததற்கே என்ற பாடத்துக்கு, காதலி யெனக் கருதாது ஏதிலாட்டியாகக் கருதி நீ பிரிந்ததன் பொருட்டு என்று உரைக்க. (232)

233. வருவை யல்லை வாடைநனி கொடிதே
அருவரை மருங்கி னாய்மணி வரன்றி
ஒல்லென விழிதரு மருவிநின்
கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ.

இஃது ஒருவழித் தணந்து வரைய வேண்டும் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

---

1. குறுந். 191. 2. கலி. 137. 3. தொல். பொ. 266.

ப. உரை: ஆய்மணி வரன்றி ஒல்லென இழிதரும் அருவி நின் கல்லுடை நாட்டு என்றது செல்லின் வரைதற்கு வேணடுவன கொண்டு வருவாயாக என்று உணர்த்தியவாறு.

உரை: அரிய மலைப்பக்கத்தே நுண்ணிய மணிகளைக் கவர்ந்து கொண்டு, ஒல்லென்னும் ஓசையிட்டு இழியும் அருவிகளையுடைய நின் மலைநாட்டிற்குச் செல்லுதல் ஒழிக; சென்றவழி நீ விரைந்து வருவாயல்லை; அதனால் முன்பனிப் பருவத்தைச் செய்யும் வாடைக் காற்றுப் போந்து தனித்தாரைப் பனிப்பித்து வருத்துமாகலான் எ. று.

அருவரை, உயரிய மலை; வருவையல்லை யென்பது, விரைய வரைகுவல் எனத் தலைவன் கூறியதனை எடுத்து மறுத்துரைக்குமாறு தோன்ற நின்றது. ஆய்மணி, அழகிய மணிவகை. ''ஆய்மணி பொதியவிழ்ந் தாங்கு[1]'' என்ப. மணிகள் கல்லிடைப் பிறப்பன வாகலின் கல்லுடை நாடு என்றார். ''கற்பா லுமிழ்ந்த மணி[2]'' என்று தேவரும் கூறுவர்.

''வருவை யல்லை'' என்றவள் நின் வாராமையேயன்றி, முன்பனிப்பருவம் எய்தித் தனித்தாரை வருத்துமாக அவ் வருத்தத்தை இவள் ஆற்றாள் என்பாள், வாடை நனிகொடிதே என்றும், எனவே இந்நிலையில் நீ பிரிதல் ஆகாது என்பாள் செல்லல் என்றும் தோழி கூறினாள்.

கல்லுடை நாட்டுச் செல்லல் என மறுக்கும் தோழி, ஆய்மணி வரன்றி ஒல்லென இழிதரும் அருவி என்றது, இதனின் மேலும் தலைமகன் பிரிவானேல், அவனை நீ செல்லின் வரைதற்கு வேண்டுவன கொண்டு வருவாயாக என்றற்கு. பழைய வுரை காரர்க்கும் இது கருத்தாதல் அறிக. (233)

234. மின்னவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்
நன்னுதல் பசத்த லாவது துன்னிக்
கனவிற் காணு மிவளே
நனவிற் காணுநின் மார்பே தெய்யோ.

---

1. நற். 239. 2. சீவக. 4.

இஃது, இடைவிடாது வந்து ஒழுகாநின்றே களவுநீடாமல் வரைதற்கு முயல்கின்ற தலைமகன், தலைமகள் வேறுபாடு கண்டு இதற்குக் காரணம் என் னென்று வினவிய வழி, நின்னைக் கனவிற் கண்டு விழித்துக் காணாளாய் வந்தது எனத் தோழி சொல்லி வரைவு முடுக்கியது.

உரை : மின்போல் ஒளியிட்டு விளங்கும் இழைகள் நெகிழுமாறு மெலிந்து நல்ல நுதலும் பசந்து காட்டுதற்குக் காரணமாவது, கனவின்கண் நின் மார்பினை நெருங்கி முயங்கிக் கண்டவள் துயிலுணர்ந்து நனவில் அது காணாளாயினமையே எ. று.

நாளும் தலைப்பெய்து ஒழுகுமிடத்துத் தலைவிபால் மெலிவு தோன்றி மெய்ப்பட்டமை கண்டு இதற்குக் காரணம் என்னை எனத் தலைமகன் வினவினா னாகலின், வயங்கிழை ஞெகிழச் சாஅய் நன்னுதல் பசந்தாள் என்றும், அதற்குக் காரணம், நனவிற் காணாள் நின் மார்பு என்றும் கூறினாள். பசத்தல், ஈண்டுக் காரணத்தின் மேற்று.

கனவிற் கண்டது நனவின் எய்துதல், தேவர்க் காயினும் இசைதல் செல்லா தெனினும், அதனை அறியாத இவள் நனவிற் காணாமையே காரணமாக உடல் மெலிந்து நுதல் பசந்து வேறுபட்டாள் என்பதாம். வயங்கிழை நெகிழச் சாஅய் என்றது உடம்பு நனிசுருங்கல். நன்னுதல் பசத்த லாவது என்றது பசலை பாய்தல். கனவிற் காணும் இவளே என்றது கனவொடு மயங்கல். நனவிற் காணாள் என்றது கண்துயில் மறுத்தல். நெகிழ்ந்து நீங்கும் இழைகள் பொருட்டும், பசந்து ஒளிமழுங்கும் நுதலின் பொருட்டும் இரங்குவாள், மின்னவிர் வயங்கிழை என்றும், நன்னுதல் என்றும் கூறினாள். "கேட்டிசின் வாழி தோழி யல்கற், பொய்வ லாளன் மெய்யுற மரீஇ, வாய்த்தகைப் பொய்க்கனா மருட்டற்றெழுந்து அமளி தைவந் தனனே[1]" எனத் தலைமகள் கனவொடு மயங்கி நனவின் அரற்றியவாறு காண்க.

---

1. குறுந். 30.

வேறுபாட்டுக்குத் தோழி காரணம் கூறவே, நனவினும் பிரிவின்றிக் கூட்டம் பெறுமாறு வரைவாயாக என்றா ளாதலும் பெறப்பட்டது (234)

235 கையற வீழ்ந்த மையில் வானமொடு
அரிதே காதலர்ப் பொழுதே யதனால்
தெரியிழை தெளிர்ப்ப முயங்கிப்
பிரியல மென்கமோ வெழுகமோ தெய்யோ.

இஃது உடனபோக்கு நேர்வித்த பின்பு தலைமகன் உடன் கொண்டு போவான் இடையாமத்து வந்துழித் தலைமகட்குத் தோழி சொல்லியது.

உரை : ஒரு பக்கத்தே முற்றவும் சென்று ஒடுங்கினமையால், முகிலினமே யில்லாத வானமும், காதலரைக் கூடும்பொழுதும் பெறல் அரிதாகலின், இவை எய்தப்பெற்ற இப்பொழுதின்கண் ஆய்ந்த இழைகள் ஒலிக்கக் காதலரை முயங்கி, இனி யாம் நின்னைப் பிரியேம் என்று கூறுவேமோ, அது பற்றி உடன் போதற்கு எழுவேமா, கூறுக எ. று.

கை, பக்கம். அற வீழ்தல். முற்றவும் திரண்டு சென்று ஒடுங்குதல். மை, முகில்; "மையற விளங்கிய மணிநிற விசும்பில்[1]" என்று பிறரும் கூறுப. எஞ்ஞான்றும் இயங்கா நிற்கும் காற்றின் வழிப்படுவதனால், வானம் முகிலின்றிக் காணப் படுவது அருமையாகலின் அரிது என்றார். காதலர்ப் பொழுது, காதலரைக் கூடற்கு வாய்க்கும் பொழுது. அரிது காதலர்ப்பொழுது என்றது அப்பொழுது வாய்த்துழித் தாழாது பயன்கோடல் அறிவுடைமை என்றவாறு.

வானம் முகிலின மின்றி யிருத்தலும், களவின்கண் புறத்தார்க்குப் புலனாகி அலராதற்கு அஞ்சித் தலைமகன் பிரிந்து ஒழுகுவதால் இடை யீடின்றிய கூட்டமும் ஓரொரு காலன்றி அரிதாகலின், வானமொடு அரிதே காதலர்ப்பொழுதே என்றாள்.

---

1. நற். 231.

உடன்போக்குத் துணிந்தார்க்கு மையுறைவானம் ஆகாமையின், மையில் வானமொடு என்ருள். தலைமகள் தான் உடன்கொண்டு போவான் வந்தானெடு செல்லின் இடையருக் கூட்டம் பெற்று மகிழலாம் என்றும், ஈண்டை இருப்பின் பிரியாத காலமும் முயக்கமும் பெறல் அரிதென்றும் கூறுவாள், பிரியலம் என்கமோ என்றும், பிரியலம் என்றவழி, தலைமகன் உடன்போக்குத் துணியின், தாமும் அதற்கு உடம்பட வேண்டுதலின் எழுகமோ என்றும் கூறினுள். மையில்வானமும், காதலர்ப் பொழுதும் பெறல் அரிது எனக் கூறித் தலைமகளைப் போக் குடன் படுத்துதலான், இது ''தலைவரு விழுமநிலை யெடுத்து[1]'' உரைத்தல். (235)

236. அன்னையு மறிந்தன ளலரு மாயின்று
நன்மனை நெடுநகர் புலம்புகொள வறுதரும்
இன்னு வாடையு மலையும்
நும்மூர்ச் செல்க மெழுகமோ தெய்யோ.

இது களவோழுக்கம் வெளிப்பட்டமையும் தம் மெலிவும் உணர்த்தித் தோழி உடன்போக்கு நயந்தாள் போன்று வரைவு கடாயது.

உரை : நாம் கொண்டுள்ள களவொழுக்கத்தினை அன்னையும் அறிந்தனள் ; அயலாரும் அறிந்து அலர் தூற்றுவாராயினர் ; நல்ல மனைக்கண் நின்ற நெடிய இல்லின்கண் தனித்து வருந்தப் போதரும் கொடிய வாடைக் காற்றும் அலைப்பதாயிற்று ; அதனுல் யாம் இவற்றை எய்தாவகை நும் மூர்க்குச் செல்வேமாய் எழுவேமோ, கூறுக எ.று.

காப்பு மிகுதியும் அலரும் காட்டி, இனி வரைவல்லது வேறு செய்தியில்லை யென்பது படத்தலைவற்கு உரைக்கலுறுகின்றமையின், அன்னை யறிவும் அலரும் எடுத்தோதப் பட்டன. ஊர் நடுவே காப்பமைந்த இடத்தே அமைந்த பேரில்லம் என்பது பற்றி, நன்மனை நெடுநகர் என்ருர் ; ''நன்மனை நெடுநகர்க் காவல ரறியாமை[2]''

1. நற். 231. 2. அகம். 22.

எனப் பிறரும் குறிப்பது காண்க. உறுதரல், மெய்யைத் தீண்டுதல்; ''வேந்தன்கண் ஊறெய்தி உள்ளப்படும்[1]'' என்ருற்போல. தனித்து உறையும் மகளிர்க்கு வெம்மை மிகுதலின் இன்ஞ வாடை என்ருர். உடன்போக்குக்கு ஒவ்வாத நிலேயில் அதனை ஒருப்படுமாறு தோன்றக் கூறியது நகையாடிக் கூறுவது என்க.

அன்னே யறிவும் அலரும் இற்செறிப்பிற்குக் காரண மாதலாற் பின்னே யாம் நின்னைக் கூடல் அரிதாம்; கூட்டம் இன்றித் தனித்து உறையின், வாடைக் காற்றுப் போந்து ஆற்ருெணுத் துன்பம் பயக்கும். இங்கு, இற்செறிப்பும் வாடையின் பனிப்பும் பெற்றுக் கூட்டமின்றி வருந்துதலினும் நின்ெனுடு கூடிக் கடத்தற்கரிய சுரம் பல கடந்தேனும் நும்மூர்க் கேகுதல் நன்று என்பாள், நும்மூர்ச் செல்கம் எழுகமோ என்ருள். ஆகவே, போக்கொருப் படுப்பாள் போன்று கூறினும், அன்னே யறிவும், அயலவர் அலர் கூறலும், நெடுநகர் புலம்புகொள என்று தனிமை கூறு முகத்தால் மேனி மெலிவும் கூறினமையால், வரைவு கடாவுவதே கருத்தென அறிக. இவை, ''பொழுதும் ஆறும்[2]'' என்ற சூத்திரத்துப் ''புரைபட வந்த அன்னவை பிறவும், வரைதல் வேட்கைப் பொருள என்ப'' என்றதனுற் கொள்ளப்படும். அன்னேயும் அறிந்தனள் அலரும் ஆயின்று என்றது முட்டுவயிற் கழறல். நன்மனே நெடுநகர் புலம்புகொள இருத்தல் அவன் புணர்வு மறுத்தல்; என்னே, தமரையும் அலரையு மஞ்சி, வரைவு கடாதற் கருத்தால், அவன் புணர்ச்சியை விலக்கி எழுந்த உள்ளத்தளா யிருக்கின்ரு ளாகலின். இன்ஞ வாடையும் அலேயும் என்றது துன்பத்துப் புலம்பல். இவை தோழி குறிப்பாயினும், ''ஒன்றித் தோன்றும் தோழி மேன[3]'' என்னும் இலக்கணத்தால் தலேமகள் குறிப்பெனவே கொள்க.

''நாற்றமும் தோற்றமும்[4]'' என்ற சூத்திரத்து 'எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்'' நிகழும் கூற்றுக்கு இதனே மேற்கோளாகக் காட்டுவர் இளம்பூரணர். தோழி தானே படைத்து

1. குறள். 665 2. தொல். பொ. 210.
3. ஷை. ஷை. 39. 4. ஷை. ஷை. 112.

மொழியும் பகுதிகளுள் ''நல்வகை யுடைய நயத்திற் கூறிப் படைக்கவும் பெறுமே[1]'' என்றதற்கு இதனை எடுத்தோதுவர் நச்சினார்க்கினியர். (236)

237. காமங் கடவ வுள்ள மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவ மாயின்
ஓங்கித் தோன்று முயர்வரைக்
கியாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ.

இஃது அல்லகுறிப்பட்டு நீங்கிய தலைமகனை வந்திலனாகக் கொண்டு அவன் பின்பு வந்துழி அவற்குத் தோழி சொல்லியது.

உரை: எம்மிடை யெழுந்த காதல் செலுத்துதலால் மனம் வருந்தி யாமே போந்து நின்னைக் காண்பதோர் காலமும் எய்து மாயின், பிழைப்பின்றிச் சேறற்பொருட்டு இஃதோ உயர்ந்து தோன்றும் மலைக்கு நும்மூர் எவ்விடத்ததோ, கூறுக எ.று

விகாரத்தால் தொக்க ஏயும் உம்மையும் தலைமகள் தானே சென்று தலைமகனைச் சேர்தல் இலக்கணம் அன்று என்பது உணர நின்றன. என்னை, ''உடம்பு முயிரும் வாடியக் காலும், என்னுற் றனகொல் இவையெனின் அல்லது, கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை[2]'' என்றார் ஆகலின். கடவல், செலுத்தல் இனைதல், வருந்துதல். ''ஓங்கித் தோன்றும் உயர்வரை'' என்புழி ஒரு பொருட்கண் வந்த இருசொற்கள், ''ஒருபொருள் இருசொற் பிரிவில வரையார்[3]'' என்ற சூத்திரத்து 'வரையார்'' என்றதனால் பிரிந்து நிற்றல் கொள்க. ''சேணிடை, ஓங்கித் தோன்றும் உயர்வரை, வான்றோய் வெற்பன்[4]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. இதற்குப் பிறவாறும் உரைப்பர்.

இயற்கைப்புணர்ச்சி பெற்ற தலைமகன் வரைவு மேற் கொள்ளாது காமக்காதல் சிறத்தற் பொருட்டுக் குறிவழி ஒழுகுவானாக, தலைவி காமம் சிறந்து நிற்குமாறு தோன்ற, காமம்

1. தொல். பொ. 237 2. ஷை. ஷை. 203.
3. தொல். சொல். 460. 4. அகம். 42.

கடவ என்றும், காமக்கூட்டம் தானும் இடையருது நிகழ்தலின்றிப் பிரிவால் இடையீடுபடுதலின் உள்ளம் இனேப்ப என்றும், யாம் காமம் சிறந்தும், நின் பிரிவாலும், ஆற்றிடை யுளவாகும் ஏதங்களே ஆய்தலாலும் மனம் வருந்தியும் நிற்ப, நீ அவற்ஹை ஓராது அன்பின்றி வாராதொழிந்தனே; ஆயினும், நின்னே இன்றியமையாமையின் யாம் ஆற்றுமாறு பிறிதில்லே மாகலின் என்பாள் யாம் வந்து காண்பதோர் பருவ மாயின் என்றும் கூறினுள். ''அருங்கடி யன்னே காவ னீவிப், பெருங்கடை யிறந்து மன்றம் போகிப், பகலே பலருங் காண வாய்விட்டு அகல்வயற் படப்பை யவனூர் வினவிச் சென்மோ வாழி தோழி[1]'' எனப் பிருண்டும் வருதல் காண்க. ஈண்டுக் காட்டிய நற்றிணேப்பாட்டு, ''ஒருசிறை நெஞ்சமொடு உசாவுங் காலே, உரிய தாகலு முண்டெென மொழிப[2]'' என்ற சூத்திரத்து உம்மையால் தோழியொடு உசாவுங் காலத்து உண்டெென அமைந்தது.

வரைக்கண்ண தாயின் பிறரை வினவாது நேரே நெறிபற்றி வருதல் கூடுமாயினும் வருவ லென்றவன் வாராது பொய்த்தமையால் தெருளாதாள் போன்று வரைக்கு யாங்கு எனப்படுவது நும்மூர் என்றும், சொல் திறம்பினேர் வாழுமூர் யாவரானும் இழித்துக் கூறப்படும் இயல்பு நோக்கி, யாங்கு எனப்படுவது என்றும் வினவினுள். பலரறிய ஓங்கித் தோன்றுதலின் வரைக்கு என்ருள் என்க. காமம் கடவ என்றது காதல்கைம்மிகல்; உள்ளம் இனேப்ப என்றது ஏதம் ஆய்தல்.

''நாற்றமும் தோற்றமும்[3]'' என்ற சூத்திரத்து ''நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ, அனேநிலே வகையான் வரைதல் வேண்டினும்[4]'' என்ற விடத்து, இதனேக் காட்டி, இஃது ஊர்பற்றி வந்தது என்பர் இளம்பூரணர். இனி நச்சினர்க்கினியர் இஃது ஊரை இறப்பக் கூறியது என்பர். (237)

---

1. நற். 365. 2. தொல். பொ. 204.
3. ஷை. ஷை. 112. 4. ஷை. ஷை. 114.

238. வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினுங்
குரூஉமயிர்ப் புருவை யாசையி னல்கும்
மாஅ லருவித் தண்பெருஞ் சிலம்ப
நீயிவண் வரூஉங் காலை
மேவரு மாதோவிவ ளலனே தெய்யோ.

இது வரையாது வந்தொழுகும் தலைமகனுக்கு ''இவள் கவின் நீ வந்தகாலத்து வருதலால் நீ போன காலத்து அதன் தொலைவு உனக்கு அறியப்படாது எனத் தோழி சொல்லி வரைவுகடாயது.

உரை: நீண்ட கொம்பும் வலியுமுடைய ஆட்டுக்கிடாய் தூராது பொய்ப்பினும் நல்ல நிறமுற்ற மயிரினையுடைய பெண்யாடு பின்னரேனும் அது வருதல்கூடும் என்னும் ஆசையாலே தங்கும் பெரிய அருவிகளையுடைய குளிர்ந்த பெரிய சிலம்பினை யுடையாய், இவளது கவின் நீ இங்கு வருங்காலை வருதலால், நீ செல்லுங்காலத்து அது கெடுதலை அறியாயாயினை எ. று.

நீ செல்லுங்காலத்து என்பன குறிப்பெச்சம். புருவை, ஆடு. இஃது இன்றும் பாண்டி நாட்டு மக்கள் வழக்கில் இருக்கிறது. ''செந்நிலப் புறவின் புன்மயிர்ப் புருவை, பாடின் தெண்மணித் தோடு தலைப்பெயர[1]'' என்றார் பிறரும்; ''புருவைப்பன்றி வருதிற நோக்கி[2]'' எனவரும் பாட்டிற்குப் பழைய வுரைகாரர் இளமை யென்று கூறுதலால், இதற்கு நிறமுற்ற மயிரினையுடைய இளமை பொருந்திய ஆடு அது வரும் திசையை ஆர்வத்துடன் நோக்கி நிற்கும் என்று உரைப்பினுமாம். அது பொருளாயின், ஆசை என்பது திசையென்னும் பொருட்டு. ஆயினும், விருப்பம் என்ற பொருளே தொல்காப்பியர் காலமுதலே ''காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கி[3]'' எனப் பயில வழங்கி வருதலின், முன்னதே சிறப்புடைத்து எனக் கொள்க. தலைவியது நலம் தலைமகன் வர வருதலும் பிரியப் பிரிதலுமுடைய தென்பது, ''வந்தனனேமற்று இரவில் பொன்போல் விறற்கவின் கொள்ளு நின்நுதலே[4]'' என

1. நற். 321. 2. அகம். 88. 3. தொல். பொ. 107
4. ஐங். 229.

உடன்பாட்டாலும், ''பசலை நம் காதலர், தொடுவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பரத்தலானே[1]'' என மறைமுகத்தாலும் சான்றோர் புலப்படுத்துவது காண்க.

தலைவியது நலம் தொலைவது கூறித் தலைவனை வரைவுகடாவும் கருத்தினளான தோழி, தலைவன் தலைமகளது நலம்பாராட்டக் கேட்டு, இந்நலம் நீ போந்து காணும் போது சிறந்து தோன்றுமாயினும், பிரிந்தவழித் தானும் தொலைந்து போகிறது என்பாள், நீ இவண் வருஉங்காலை மேவரு மாதோ இவள் நலன் என்றாள். எனவே, வாராக்காலை இவள் நலம் தொலைந்து காட்டும் என்று கூறி, அதனை அயலார் அறியின் ஏதமா மாகலின், நீ வரைந்து கோடலே தக்கது என வரைவு கடாயவாறும்,

வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும் பின் அது வரக்கூடு மென்னும் ஆசையாலே புருவை தங்கும் என்றது, நீ நின் வரவுகளில் குறித்த வண்ணமே வாராது மாறி நீட்டித்தாலும் ''நின்னைக் காணலாம் என்னும் ஆசையாலே இவள் உயிர் வாழா நின்றாள்'' என உள்ளுறுத்து உரைத்தவாறு உணர்க. இஃது இன்றியமையாமை கூறி வரைவு கடாதல், நீயவண் வருஉங் காலை என்பதுபாட மாயின், நீ அக்குறியிடத்து வருங்கால் என உரைக்க. (238)

239. சுரும்புணக் களித்த புகர்முக வேழம்
இரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉ நின்
குன்றுகெழு நன்னாட்டுச் சென்ற பின்றை
நேரிறைப் பணைத்தோ ணெகிழ
வாரா யாயின் வாழேந் தெய்யோ.

இது வரைவிடை வைத்துப் பிரிவல் என்ற தலைமகற்குத்தோழி கூறியது,

ப.உரை. மதவேழம் துறுகல்லைப் பிடியென்று தழுவும் நாட னுதலால் நினக்குத் தகுதியில்லாதாள் ஒருத்தியைத் தகுதியுடையா ளென்று நீ வரையவும் கூடும் என நகையாடிக் கூறியது.

---

1. குறுந். 399.

உரை : சுரும்புண்ணுமாறு பெருகும் மதக்களிப் பினையும் புள்ளி யுற்ற பட்டம் அணிந்த முகத்தினையுமுடைய யானை, கரிய சருச்சரை பொருந்திய துறுகல்லைப் பிடியானை எனக் கருதிச் சென்று தழுவும் குன்று பொருந்திய நின் நல்ல நாட்டுக்குச் சென்றபின் இவளுடைய நேரியவாய் இறை பொருந்திய தொடி பெரிய தோள்களிலிருந்து நெகிழுமாறு நீ வாராயாயின் யாம் உயிர் வாழேம் எ.று.

யானைகள் பொழியும் மதநீரை வண்டுகள் உண்டல் இயல் பாகலின், சுரும்புணக் களித்த என்றார், ''வரிஞிமிறார்க்கும் வாய் புகுகடா அத்துப் பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்[1]'' என்றார் பிறரும்' ''சுரும்புணக்களித்த'' என்றவிடத்து உண என்றதனைப் பெயராக்கி, சுரும்புகள் தாம் பலவகை உணவும் உள் வழிக் அவ்வக்காலத்து ஆண்டுச் சென்று ஏறியும் இழிந்தும் சுழன்றும் மெய் வருந்தாது அவையெல்லாம் ஒருகாலத்தே ஒரு வழி உண்ணும் உணவு[2]'' கிடைக்க உண்டு களித்த என உரைத்தலும் ஒன்று. துறுகல் பிடியானை போலத் தோன்றுதலின், வேழம் இரும்பிணர்த் துறுகல் பிடிசெத்துத் தழுஉம் என்றார். ''உதுக்காண், பிடிதுஞ்சு வன்ன அறைமேல நுங்கின், தடிகண் புரையுங் குறுஞ்சுனை[3]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. துறுகல் பிணருடைமை, ''இரும்பிணர்த் துறுகல்[4]'' எனப் பிறர் கூறலாலும் அறிக. இறை, ஆகுபெயர். இஃது இப்பொருட்டாதல், வீங்கிறை வடுக்கொள ''வீழுநர்ப் புணர்ந்தவர்[5]'' என்பதன் உரையால் உணர்க.

வரைவிடை வைத்துப் பிரிவல் என்ற தலைமகற்குப் பிரிவு உடன்படுவாள், நீ சென்று விரைந்து வாராயாயின், என்றாள். சென்றவிடத்தும், விரைந்து வாராவிடத்து மாகிய ஈரிடத்தும், தலைமகள், அவன் பிரிவுள்ளி உடல்மெலிதல் ஒருதலை யாகலின், சென்ற பின்றை, நேரிறைப் பணைத்தோள் நெகிழ, வாராயாயின் என்றாள். வாரா தொழிதற் குரிய ஏதுவினை உள்ளுறுத்து

1. அகம். 78. 2. சிலப். 2:28 அடி. உரை.
3. கலி. 108. 4. அகம். 57. 5. கலி. 66.

உரைத்தலின், வாரா யாயின் வாழேம் என்றது விரைந்து வரைவொடு வருதல் வேண்டும் எனத் தலைமகனை முடுக்கியவாறு.

மதவேழம் தகுதியில்லாத துறுகல்லை இரும்பிணா ருடைமை பற்றிப் பிடியெனக்கருதித் தழுவும் நாடனாதலின், நின் தலைமைக்குத் தகுதியில்லாத வேறு ஒருத்தியைப் பெண்மை நல முடைமை பற்றிக் கருதி நீவரையவும் கூடும் என உள்ளுறை கொள்க. பழைய வுரையும் இதுவே கூறிற்று. நேரிறைப் பணைத்தோள் நெகிழ என்றது உடம்பு நனிசுருங்கல்.

வேழத்தின் மதநீர், சுரும்பினம் வருத்தமின்றிப் பலவகை உணவும் ஒருகாலத்து ஒருவழிப் பெற்றுண்ணும் உணவாகும் என்றதனால், நின்பாலுள்ள பொருள் சுற்றத்தார் பலரும் ஒருங்கிருந்து உவந்துண்ணும் அளவிற்றாகவும் நீ வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிகின்றவாறு என்னை என இறைச்சி தோன்றுமாறு காண்க. (239)

240 அறியே மல்லே மறிந்தன மாதோ
பொறிவரிச் சிறைய வண்டின மொய்ப்பச்
சாந்த நாறு நறியோள்
கூந்த னாறுநின் மார்பே தெய்யோ.

இது, தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதானமை அறிந்து தலைமகள் புலந்தவழி அவன் அதனை இல்லைஎன்று மறைத்தானாகத் தோழி சொல்லியது.

உரை: பொறியும் வரியும் பொருந்திய சிறகுகளை யுடைய வண்டின் கூட்டங்கள் மொய்ப்பச் சந்தனத்தின் மணம் வீசும் நறியவளது கூந்தலின் மணத்தை நின் மார்பு கமழுதலால் நினக்குப் புறத்தொழுக்கம் உண்மையை யாம் அறியே மென எண்ணற்க, நன்கறிவேம் எ,று.

தன்பால் புறத்தொழுக்கம் இல்லையெனத் தலைமகன் கூறினானாக, அவன் கூற்றை மறுத்து அவ்வொழுக்கம் அவன்பால்

உண்மையினை எடுத்துக் கூறுதலின், அறியே மல்லேம் என்று ஒழியாது, அறிந்தனம் என்றும், அதற்கு ஏது இஃது என்பாள், நறியோள் கூந்தல் நாறும் நின் மார்பு என்றும் கூறினள். ''பிறர் கூந்தல் மலர்நாறும் மார்பனை ஈங்கு எம்மில் வருவதை[1]'' என்று பிறரும் உரைப்பது காண்க. நின்னைக் கூடிய பரத்தை நின் மார்பில் இன்றுயில் பெறுதலின், அவளது கூந்தல் மார்பிற் படிதலால் நின் மார்பு நறுமணம் கமழ்வதாயிற்று என்றற்கு, நறியோளுடைய கூந்தல் மணம் நின்மார்பு நாறுகின்றது என்றாள்.

பொறிவரிச் சிறைய வண்டினம் மொய்ப்பச் சாந்தம் நாறும் நறியோள் எனப் பரத்தையைக் கூறியது, ஆடவராகிய வண்டினம் சூழ்வரத் தன்னை மிகவும் வியந்து பாணரும் பிறரும் புகழ்ந்து பாடும் நலமுடையாள் எனப் புகழ்வாள் போல் இகழ்ந்து கூறிய வாறு; பரத்தையை ஏத்தினும், ''உள்ளத்து ஊடல் உண்டென மொழிப[2]'' ஆகலின், இதுவும் புலவியென உணர்க.

''திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே[3]'' என்ற சூத்திர வுரையில் இப்பாட்டுக் குறிஞ்சிக்கண் மருதம் மயங்கிற்றெனக் கொண்டு, ''இது புறத்தொழுக்கம் இன்று என்றாற்குத் தோழி கூறியது'' என்றும், ''இரந்து குறையுற்ற கிழவனை[4]'' என்ற விடத்து, ''வாய்மை கூறலும்'' என்றதற்கு இதனைக் காட்டி, இது வாய்மை கூறியது என்றும் கூறுவர் நச்சினார்க்கினியர்:(240)

———

1. கலி. 13. 2. தொல். பொ. 233. 3. ஷை. ஷை. 12.
4. ஷை. ஷை. 237.

25

வெறிப்பத்து

வெறி பொருளாக வரும் பாட்டுக்கள் பத்துக் கொண்ட பகுதியாகலின், இது வெறிப்பத்து என்னும் பெயர் பெறுவதாயிற்று.

வெறி யென்பது மணம் என்னும் பொருள் படுவதொரு பழந் தமிழ்ச் சொல். வெறிமலர், வெறிகமழ் பொழில் என்றெல்லாம் சான்ரோர் செய்யுட்களில் இச்சொல் பெரிதும் வழங்கும். சொல் வடிவே நோக்கின் இது, மிகுதிப்பொருளில், வெறுக்கை, வெறுத்த கேள்வி எனவரும் பெயரும் வினையுமாகிய சொற்களின் முதனிலை யாகிய வெறு என்னும் உரிச்சொல் லடியாகப் பிறந்தமை தோன்றும். ஆகவே, அழகும் ஒளியும் இளமை நலமும் திகழும் செடிகொடிகளின் பூக்களிடைச் சிறந்து நிற்கும் மிகுமணம் வெறி யென்ற சொல்லால் வழங்கப்படுவதாயிற்று.

கருமுகில் தவழும் மலையகத்தே இரவுப்போதில் இருளும் குளிரும் செய்யும் இன்னல் பொருது ஒடுங்கி உறையும் தனக்கு நாட்காலையில் அழகிய ஒளி செய்து போதரும் ஞாயிற்றால் இருள் நீக்கமும் உள்ளக்கிளர்ச்சியும் உடலூக்கமும் கிளர்ந்தெழுவது கண்டு அதனையே முழுமுதற் பொருளாகப் பரவினன் தமிழ் முதன் மகன். ஞாயிறு தோன்றும் நாட்காலையில் மலையணைந்த காடுகள் இளமைத் தளிர் பரப்பிப் பூக்கள் மலர்ந்து எங்கும் இன்ப மணம்

திகழ்வதும், மாவும் புள்ளும் தத்தம் தொழில் புரிவதும், மக்கள் அறிவுவிளக்கமும் தெளிவும் பெறுவதும் ஓர்ந்து இவற்றிற்கு உள்ளீடு, இளமை, அழகு, மணம், அறிவு முதலிய நலங்களே என்பதைக் கண்டான். ஞாயிறு, காலையில் தோன்றுவதும், மாலையில் மாய்வதும் கண்டு, தோற்றமும் ஈறும் இன்றி என்றும் ஒருபடித்தாய் நிலவுவதாய், ஞாயிற்றுக்கும் அதற்கும் இடமாகிய வானத்துக்கும் கடலுக்கும் கடல்சூழ்ந்த நிலவுலகத்துக்கும் எல்லா வற்றிற்கும் முழுமுதலாய் உள்ளதொரு பொருள் உண்டு எனத் தெளிந்தான். தனக்கும் தான் பெறும் நிலங்கட்கும் முதல் அதுவே யெனக் கொண்டு, செல்வக்காலை அல்லற்காலை யாகிய இரு போதினும் அதனை நினைந்து வழிபடலானான்.

அழகு திகழும் தளிரிடத்துத் தோன்றும் இளமையும் மலர்க ளிடையே தோன்றும் மணமும் மாவும் புள்ளுமாகிய பிறவுயிர் களிடத்தே தோன்றும் கிளர்ச்சியும், நாட்காலையில் நெடுங்கடலும் வானும் தொடுமிடத்தே எழும் ஞாயிற்றின் எழுச்சியில் விளங்கும் ஒளியும் அழகும் அம்முதற் பொருளால் அருளப்படுவன என்பது அவற்குப் புலனாயிற்று. அப்புலனெறியே கண்ட போது அழகும் இளமையும் மணமும் ஒளியும் தெளிவும் ''நன்பக லமையமும் இரவும் போல, வேறுவேறு இயலவாகி'' நிலவுவது விளங்கவே, இவற்றிற்கு முழுமுதலாகும் முதற்பொருள், மாறா அழகும் மாறா இளமையும் மாறாத மணமும் மாறாத ஒளியும் தெளிவு முடைய தென்பது தெரிந்தது. மாறாத அழகு முதலிய நலங்களெல்லா வற்றையும் ஒருங்கே ஒருசேரத் தொகுத்து உணர்த்தவல்ல தொரு சொல்லைத் தேர்ந்தான். அது, முருகு என்னும் சொல்லாகும். அதனால் அம் முழுமுதற் பொருளை முருகு என்று பெயரிட்டு வழிபடலானான். இம்முருகினைக் காண்டற்கு ''மாக்கடல் நிவந் தெழுதரு செஞ்ஞாயிறு'' முதற்பொரு ளாயினமையின், முருகின் நிறமும் செஞ்ஞாயிற்றின் செம்மைநிறம் எனக் கொண்டு, அதனைச் சேயோன், என வழங்கினான். சேயோன், செம்மை நிற முடையவன்.

நிலவுலகின் உயர்நிலையாகிய மலைமுடியில் வாழ்ந்த முன்னோ னாகிய முதன்மகன் சேயோனாகிய முருகினை முழுமுதற் பொருளா

கக்கண்டு வழிபடத் தொடங்கவே, மலையுறையும் குறிஞ்சி நில மக்கட்கு அவனே வழிபடுகடவுளானுன். இது தொல்காப்பியர் காலத்துப் பல்லாயிரமாண்டுகட்கு முன்பே நிலவிய கொள்கை யாதலின், இதனை உணர்த்தப் புகுந்த போது அவர் ''சேயோன் மேயமைவரை யுலகம்'' என்று தெரிவித்தார். தொடக்கத்தில் முருகினது உண்மை காட்டிய செஞ்ஞாயிற்றின் தீவிய ஒளியில் இளந்தளிரும் மணமலரும் மலர்த்தேனும் சிறந்து தோன்றி முதன் மகன் உள்ளத்தை முருகன்கண் தோய்விக்கவே அவற்றையே அம்முருகிற்கு முதற்கண் கையுறையாகப் பெய்து வணங்கினுன். அக் கையுறைக்குப் பலி யென்பது பெயர். தளிரைத் தளிர்ப்பலி எனவும், பூவைப் பூப்பலி எனவும் பண்டையோர் வழங்கினர். பின்னர்த் தன்பால் இளமையும் வளமையும் ஒளியும் தெளிவும் உண்டாக்கிய பூவும் தேனும் உண்பொருளும் பிறவும் முருகிற்குப் பலியாகப் படைக்கப்பட்டன. ஊனுணவும் ஒருவகையில் தன் உடற்கு ஆக்கம் தருவது கண்டு அதனையும் பலியிடலானுன். அஃது உயிர்ப்பலி என வழங்கிற்று.

முருகனை வழிபடும் இடத்தே நறுமணம் மிக்க பூவும் தளிரும் புகையும் மிக்கு எங்கும் இனிய மணமே நிலவும்; ஆகலின் அதனை வெறிக்களம் என முன்னோர் வழங்கினர். இவ்வழிபாடு வெறி என்றும், வெறியயர்தல் என்றும் பெயர்பெறுவதாயிற்று. வெறிக் களத்தே வழிபடப்பெறும் முருகினையும் ஒரோவழி வெறி என்றும் சான்றோர் குறிப்பர். ''வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்[1]'' என்பதனுல், வெறிக்களம் வெறிமனை என்றும் குறிக்கப்படுவதை அறிகின்ரேம் ''சால்வ தலைவ எனப் பேஎ விழவினுள், வேலன் ஏத்தும் வெறியும் உளவே[2]'' என்று கூறுவதனுல், வெறி முருக வேள் வழிபாட்டுக்குப் பெயராதல் தெளியப்படும்,

முருகனை நோக்கி வெறியயரும் இடத்தில் மக்கள் பலரும் ஒருங்கு கூடி வழிபடுவராதலின், அவ்வழிபாடு ஒழுங்காக நிகழ்தற்கு ஒருவன் முன்னணியில் நிற்பன். அவன் முருகனது வேற்டையைக் கையிலேந்தி யிருப்பது மரபு; அதனுல் அவனை

1. நற். 43. 2. பரி. 5:14-5.

வேலன் என்றும், அவன் வெறி அயரும் முறை முற்றும் அறிந்திருப்பதுபற்றி, ''வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்[1]'' என்றும் ஆசிரியர் குறித்துரைக்கின்ருர்.

பருந்து ஒன்று வானத்திற் பறக்க எழுங்கால் அதன் எழுச்சியை, ''நெடுவிளிப் பருந்தின் வெறி[2]'' எனச் சான்ரேர் கூறுவர்; அதுவே வெறிக் களத்துக்கும் பெயராகக் கூறப்படுதலின், வெறியயர்களமும் பருந்தின் வட்டம் போல முழு வட்டமாக இருக்குமெனக் கருதலாம். களத்தின் நடுவே வேற்படையை நட்டு அதனைச் சுற்றி வட்டமாக அமைத்த இடத்தை வெறிமனை யெனக் கூறுவதும் உண்டு. வெறியயர் களமெல்லாம் வழிகள் சில வந்து கூடும் சந்திகட்கு அருகில் அமைக்கப்படுகின்றன; அவ்விடத்தை நூலோர் ''செல்லாற்றுக் கவலை[3]'' என்பர்.

வெறியயரக் கருதுவோர் முதற்கண் அதனை வேலற்கு உணர்த்துவர்; அவன் மேலே குறித்த ''செல்லாற்றுக் கவலையில்'' இடம் கண்டு, வெறிக்களம் அமைப்பன். நன்கு அமைந்த களத்தின்கண் ''வேலை நடுவிற் கொண்ட வெறிமனையில் புதுமணல் பரப்பிச் செந்நெல்லின் வெண்பொரியும்[4]'' பல்வகைப் பூக்களும் சொரிந்து அழகுறுத்துவன். மேலே பந்தர் அமைத்துப் ''பசுந் தழையும் கடம்பின் மலரும்[5]'' வேறுபல ''நறுமணங் கமழும் பூக்களும்[6]'' கொண்டு இனிய காட்சியமையச் செய்து, மறி யறுத்து அதன் குருதி கலந்த செந்தினையை வெறிமனையில் தூவி, பல்வேறு இயங்கள் இயம்ப மணி இயக்கி நறும்புகை எடுத்துப் பூப்பலி இடுவன். மகளிரும் பிறரும் குறிஞ்சிப் பண்ணிற் பாட்டுக்கள் பாடுவர்.

இவ்வெறியின் வேருக முருகவேட்குக் குன்றவர் கூடி விழா அயர்தலும், அக்காலையில் அவர்கள் தம்மிற் கூடிக் குரவைக் கூத்து ஆடுவதும் உண்டு. இவ்விழவும் குரவையும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் குறமகளிர் முன்னணியில் நிற்பர். இவை மழை

---

1. தொல். பொ. 60. 2. அகம். 299. 3. குறுந். 263.
4. குறுந். 53. 5. அகம். 98. 6. அகம். 114.

வேண்டும் போதினும் வேண்டாப் போதினும் குன்றவர்களால் நிகழ்த்தப் பெறுகின்றன. இக்காலத்தும் மேற்குமலையில் வாழும் தொல்குடி மக்களிடையே இவ்விழாவும் குரவையும் நடைபெறுகின் றன. காலக்கழிவால் சில நிகழ்ச்சிகள் வேறுபட்டன வாயினும், பல கூறுகள் பழந்தமிழ் நூல்கள் காட்டும் முறையில் அமைந்துள்ளன. அவற்றைத் திரு. நாகமையர், தரிஸ்டர், கோபாலன் நாயர் முதலியோர் எழுதிய பழங்குடிமக்கள் இயல்பு கூறும் நூல்களிற் காணலாம்.

வெறியயர்வது மாத்திரம் பெரும்பாலும் வேலனாலே நிகழ் கின்றது. இளமையும் வனப்புமுடைய மகளிர் உடல்நலம் குன்றுவராயின், அது நீங்குதற் பொருட்டு அவர்களுடைய பெற்றோர் வேலனைக் கொண்டு வெறி அயர்வர். மருந்தாலும் பிறவற்றாலும் நீங்காத நோய் இவ்வெறியால் நீங்கும் என்பது கொள்கை. இளநங்கையொருத்தி நலம் குறைந்தா ளெனின், அவளுடைய தாய்கட்கும் கழங்கும் கொண்டு அவள் நலக்குறைவுக் குரிய காரணத்தை ஆராய்வள். அவற்றை ஆராய்ந்து கூறுவோர் பெரும்பாலும் முதுமகளிரே யாவர். வேலனும் சிறுபான்மை கழங்குகொண்டு நோய்க்காரணம் அறிதல் உண்டு. ''அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன், கிளவியின் தணியின் நன்றுமன்[1]'' எனச் சான்றோர் கூறவது காண்க. வேலனைக் கொண்டு மகளுற்ற மெலிவுக்குக் காரணம் ஆராயின், அவன் ''வெறியயர்தலால் இந் நோய் தீரும்'' என்பான். அவ் வெறியயர்களத்தில் வேலன் முருகன் பெயரை வாழ்த்தித் தன் மேல் முருகவேள் வந்துற்றதாக ஆடுவன்; ஆடுதற் கேற்பப் பல்வகை இயங்களும் இயம்பும். வெறியயருமிடத்துக் கூடியிருக்கும் குன்றவர்களுள் ஆடவரும் மகளிரும் சேர்ந்து முருகன் புகழைப் பாடிக் குரவைக் கூத்தும் ஆடுவர்; இவ்வண்ணம் வெறியயர்தல் கொட்டும் பாட்டும் கூத்தும் கலந்து நிகழ்வது பற்றி, இதனை வெறியாடல் என்றும் சான்றோர் குறிக்கின்றனர்.

வெறியாடும் வேலன் மகட்குண்டாகிய நோய் முருகனால் உண்டாயிற் றென்று உரைத்து நோய்க்கு மருந்தாக முருகனுக்

1. நற். 282.

குரிய பூக்களைத் தந்து அவள் கூந்தலில் முடிக்கச் செய்வன். ''வேலன் வந்தெனப் பின்னுவிடு முச்சி அளிப்பாறுதே[1]'' என வருதல் காண்க.

உடல்நலங் குன்றி மேனி வேறுபடும் இளமகளிர் பொருட்டு வெறியாடுமிடத்து அவர்களை நீராட்டி ஒப்பனைசெய்து வெறியயர் களத்தே நிறுத்தி வேலன் முருகனை வழிபட்டுப் பல்வகை இயங்கள் இயம்ப, பறை முழங்க, முருகனது வேலைக் கையிலேந்திக் களத்தில் ஆடுவன். அக்காலை அங்கே நிற்கும் மகளிர் சிலர் உடல்நடுங்கி மருண்டு ஆடுவதும் செய்வர். அதனை ''வெறியுறுநுடக்கம்[2]'' என்பர். மகளிர் எய்தும் மேனி வேறுபாடு வெறியாட்டால் தீரும் என்ற கருத்தில், ''வெறியென உணர்ந்த உள்ளமொடு மறியறுத்து அன்னை அயரும் முருகு[3]'' ''வெறியென உயங்கும் அளியள் அன்னையை[4]'' ''அறியா தயர்ந்த அன்னைக்கு வெறியென வேலன் உரைக்கும் என்ப[5]'' ''வெறியென வுணர்ந்த வேலன்[6]'' என்று சான்றோர் கூறுவது பெரும்பான்மை.

இவ்வெறியாட்டின்கண் வேலன் செய்யும் வழிபாடு காந்தள் என்றும் வழங்கியுளது. இதனை ஆசிரியர் ''வெறியாட் டயர்ந்த காந்தள்[7]'' என்பது காண்க. இக்காந்தள் என்னும் சொல் பிற்காலத்தில் கந்தழி யெனத் தவருக ஏடெழுதினோரால் எழுதப்பட்டு விட்டதென்றும், அதனை ஆராய்ந்து காணுது உரைகாரர்கள் கந்தழி யென்றே கொண்டு தத்தமக்குத் தோன்றியவாறு உரைத்தன ரென்றும் நன்கு பொருந்துமாறு பேராசிரியர் நாவலர், ச. சோம சுந்தர பாரதியவர்கள் கூறுகின்றார்.

இவ்வெறியே பொருளாக அழகிய பாட்டுக்கள் பாடியது பற்றிச் சங்ககாலச் சான்றோர் ஒருவர் வெறிபாடிய காமக்காணியார் என்று சிறப்பித் துரைக்கப் பெறுகின்றார். அம்முறையே, இங்கே

---

1. நற். 51 2. பதிற். 51. 3. நற். 47.
4. நற். 173. 5. நற். 273. 6. குறுந். 360.
7. தொல். பொ. 60.

தொடுக்கப்பட்டுள்ள பாட்டுக்களில் வெறியே சிறப்பாகப் பாடப் பெறுவதைக் காணலாம்.

241. நாமுறு துயர நோக்கி யன்னை
வேலற் றந்தா ளாயினவ் வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல செறியெயிற் றோயே.

இஃது, இற்செறித்தவழித் தலைமகட்கு எய்திய மெலிவு கண்டு இஃது எற்றினா னயிற்று என்று வேலனைக் கேட்பத் துணிந்துழி, அறத்தொடுநிலை துணிந்த தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

உரை: நெருங்கிய பற்களையுடையோய், நாம் எய்தியுள்ள துயரத்தை நம் அன்னை கண்டு, அதற்குக் காரணம் அறிவாளாய் வெறியெடுத்தற்கு வேலனைத் தருவித்துள்ளாள்; ஆயினும், அவ் வேலன், மணம் கமழும் நாடனொடு நம்மிடை உளதாகிய நட்பினை அறிவான் கொல்லோ? அறியான் கொல்லோ? எ. று

தலைமகட் குளதாகிய உடல்மெலிவு வேறு காரணங்களால் தோன்றிய தன்று என்பது தோன்ற நாமுறு துயரம் எனல் வேண்டிற்று. மெலிவுக்கு ஏதுவாகியது பற்றித் துயரம் என்றார். அவ்வேலன் என்ற சுட்டு, வேலன் எல்லாவற்றிற்கும் வெறியல்லது வேறே காரணமுண்மை அறியாதவன் என்பது பட நின்றது. தில்ல, அசைநிலை. செறியெயிற்றோய் என்றது செவிலியை.

தலைமகனோடு பயின்று ஒழுகாவாறு இற்செறிக்கப்பட்டமை யால், தான் அவனொடு தலைப்பெயல் ஆகாமையின், கண்படை யின்றியும், உடம்பு நனிசுருங்கியும் மேனி வேறுபட்டுக் காட்டினமையின், நாம் உறுதுயரம் நோக்கி என்றும், அது கண்ட தாய், ''கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப், பொய்வல் பெண்டிற் பிறப்புளர் பிரீஇ, முருகன் ஆரணங் கென்றலின் அது செத்து, ஓவத்தன்ன வினைபுனை நல்லிற், பாவை யன்ன பலராய் மாண்கவின், பண்டையிற் சிறக்கவென் மகட்கு எனப் பரைஇக்,

கூடுகொள் இன்னியும் கறங்கக் களன் இழைத்து, ஆடணி நயந்த அகன் பெரும் பந்தர், வெண்போழ் கடம்பொடு சூடி இன்சீர், ஐதமை பாணி யிரீஇக் கைபெயராச், செல்வன் பெரும்பெயர் ஏத்தி வேலன்[1]'' வெறியயர்கின்ருன் என்பாள், வேலன் தந்தா ளாயினும் என்றும் கூறிஞள். அவ்வேலன் நமக்கும் நாடற்கு முள்ள கேண்மையை அறிந்து பலரும் அறிய உரைப்பனேல், அஃது அலராய் நம்மை வருத்தும் என்று அறியாது, ''அறிவர் உறுவிய அல்லல் கண்டு அருளி, வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே, செறிதொடி உற்ற செல்லலும் பிறிது எனக் கான்கெழு நாடன் கேட்பின்[2]'' தலைமகள் உயிர்வாழ்தல் அதனினும் அரிது என்று கூறுவாள், நாடன் கேண்மை அறியுமோ என்று மொழிந்தாள். வேலன் அறிந்து உரைப்பினும் அறியாது உரைப்பினும் இரு வழியும் நம் துயரம் நீங்குமாறில்லை என்ருளாம்.

''மறைந்தவற் காண்டல்[3]'' என்ற சூத்திரத்து ''வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்'' தலைவிக்குக் கூற்று நிகழும் என்பதற்கு இதனைக் காட்டுவர் இளம்பூரணர். (241)

242 அறியா மையின் வெறியென மயங்கி
அன்னையு மருந்துய ருழந்தன ளதனுல்
எய்யாது விடுதலோ கொடிதே நிரையிதழ்
ஆய்மல ருண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே.

இது, தலைமகள் அறத்தொடுநிலை நயப்ப வேண்டித் தோழி அவட்குச் சொல்லியது.

உரை: நிரல்பட நின்ற இதழ்களையுடைய மலர்கள் பல வற்றுள்ளும் ஆய்ந்து கொண்ட மலர்போலும் மையுண்ட கண்கள் பசப்பெய்துமாறு சேய்மைக்கண் தோன்றும் மலையினை யுடைய நாடன் தன் பிரிவாற் செய்த நோயினை, அறியாமை யால், வெறியயர்ந்து தீர்ப்பான், முயன்று, அன்னையும் மிக்க

1. அகம். 98. 2. ஷை. 98, 3. தொல்.பொ. 109.

துயருழந்து வருந்தினுள்; ஆகலின், அவன் செய்த நோயினை அவள் அறியாதொழிதல் நன்றன் ருகலான், அதனை அறிவித்தல் வேண்டும் எ. று.

அறிதற்குரிய கேண்மையைப் பின்னர்க் கூறலின் அறியாமை யின் என்றும், வெறி அயர்ந்தவழித் தீர்தற்குரிய நோயினை வெறி என்றும் கூறினர். அறத்தொடுநிலை வகையால் அறிவித்தா லன்றி அறிதற்கு அருமைபற்றி அன்னை எய்திய துயர் அருந்துய ராயிற்று. எய்யாமை அறியாமை,[1]'' ஈண்டுப் பிறவினைமேல் நின்றது. நன்று அல்லது கொடிதாகலின், கொடிது என்ருர். சேய்மலை நாடனுகிய தலைமகன் கூடிப் பிரிந்தமையால் உண்டாதல் பற்றி நாடன் செய்த நோய் எனல் வேண்டிற்று, ''அரிமதருண் கண் பசப்ப நோய் செய்யும் பெருமான்[2]'' எனப்பிருண்டும் கூறுவது காண்க.

சேய்மலை நாடன் பிரிந்ததனுல் தலைமகள் கண்கள் பசந்து மேனி வேறுபட்டாளாகலின், ஆய்மலர் உண்கண் பசப்ப என்றும், அது நாடன் காரணமாக உண்டாயிற்று என்று அறிவாளேல் வெறி விரும்பா ளென்பாள், அறியாமையின் வெறியென மயங்கி என்றும், ஆராய்கின்றவர் உண்மை யறிந்தாலன்றி அதனைப் பயனுடைய செயல் எனக் கொள்ளாராகலின், அவள், கட்டினும் கழங்கினும் வெறியினும், பிறவற்றினும் முயன்றது வாளா முயற்சித் துன்பமே தந்தமையின், அன்னையும் அருந்துயர் உழந்தனள் என்றும், இனி நாமேயாதல் அறத்தொடு நிலைவகை யால் உணர்த்தாவிடின், அவள் அத்துயரத்தைப் பொருள் என்பாள், எய்யாது விடுதலோ கொடிதே என்றும் கூறினுள். வெறி முதலியவற்ருல் உண்மை அறிய முயன்றவள், அதனை அறியாமையால் மயங்கினுளாகலின், அன்னையும் அருந்துயர் உழந்தனள் என்ரு ளென்றும், முன்னர் அறியாமையினுல் அருந்துயர் உழந்தவள், பின்னரும் அறியாமையினுல் வருந்தல் நன்றன் ருகலின், கொடிது என்ருள் என்றுமாம்.

---

1. தொல். சொல். 342 2. கலி. 82.

ஆகவே, நாம் அறிவித்தலே கடன் என்பது குறிப்பெச்சம்; "அன்னைக்கு, அறிவிப்பேங்கொல் அறியலங்கொல்லென, இருபாற் பட்ட சூழ்ச்சி யொருபாற், சேர்தல் நன்று[1]" ஆகலின். அன்னை அறியாமையின் வெறியென மயங்கி அருந்துயருழத்தலை, "சிறந் திவள், பசந்தனள் என்பதுணராய் பன்னுள், எவ்வ நெஞ்சமொடு, தெய்வம் பேணி வருந்தல் வாழி வேண்டு அன்னை[2]" என்பதனுல் உணர்க.

அதனுல் அறியாது விடுதலோ கொடிதே என்றும் பாடமுண்டு.

"கலவள ராயினும்[3]" என்ற சூத்திரத்துக் "கட்டினும் கழங் கினும் வெறியென இருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" என்பதற்கு இதனைக் காட்டி, "இது வெறியென அன்னை மயங்கினமை கூறிற்று" என்பர் நச்சினுர்க்கினியர். (242)

243. கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
அறியா வேலன் வெறியெனக் கூறும்
அதுமனங் கொள்குவை யனையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே.

இது, தாயுழை அறியாமை கூறித் தோழி வெறி விலக்கியது.

ப. உரை: அறியா வேலன் யாது கேட்பினும் வெறியெனக் கூறும்; அவனை இதற்கும் கேட்க மனங்கொள்ளாநின்ருய் எ. று.

உரை: அன்னுய், இவளுடைய புதுமலர் போலும் குளிர்ந்த கண்கள் தனிமையுற்றுக் கலுழ்தற் கேதுவாகிய நோய்க்குக் காரணம், மிளகு வளரும் மலையின்கண் உறையும் கடவுளைப் பரவி வெறியயர்த லல்லது பிறிதியாதும் அறியாத வேலனைக் கேட்டு, அவன் வெறியென்று கூறும் இயல்பின ஞகலின், வெறியெடுத்தல் வேண்டும் என்ருனக, நீ அவன் சொல்வதையே மனத்திற் கொள்ளா நின்ருய்; இவள் உற்ற நோய்க்கு மருந்து வெறியன்று எனத் தெளிவாயாக எ. று.

1. அகம். 52 2. நற். 351. 3. தொல். பொ. 115.

கறி. மிளகு. கறிவளர் சிலம்பிற் கடவுள், முருகவேள். கழங்கின்கண் கடவுளைப் பரவி இவட்கு உற்ற நோய் முருகனு லாயது என்றும், அது வெறியெடுத்தால் நீங்கும் என்றும் கூறுவ னுகலின், கடவுட் பேணி வேலன் வெறியெனக் கூறும் என்ருர். ''அறியா தயர்ந்த அன்னைக்கு வெறியென வேலன் உரைக்கும் என்ப[1] எனப் பிறரும் கூறுதல் காண்க. அது, வெறி. அது மனங் கொள்குவை என்றது குறிப்பால், அது கொள்ளற்கு உரித்தன்று என்பது தோன்ற நின்றது. ''அன்னையும் அதுவென உணரும்[2]'' எனப் பிறரும் கூறுதல் காண்க.

வேலனைப் படிமத்தான் என்று கூறி, ''செவ்வேள் வேலைத் தான் ஏந்தி நிற்றலின் வேலன் என்ருர்'' என்பர் நச்சினுர்க்கினியர்.

வேலன், வெறியெனக் கூறுத லொழிய, அதனுல் இவட்கு உண்டாய நோய் தீர்க்கும் மருந்து அறியான் என்பாள், அறியா வேலன் என்றும், அவன் தன் கூற்றைப் பிறர் ஏற்க வேண்டும் என்பதற்காகவே முதற்கண் கடவுளைப் பரவுகின்ருன் என்பதற்குக் கடவுட் பேணி என்றும் கூறினுள். அவன் மருந்தறியான் என்பது ''வெறியென உணர்ந்த வேலன் நோய்மருந்து அறியான் ஆகுதல் அன்னை காணிய[3]'' என வருதலால் அறியப்படும். யாது வினவினும் அது முருகனுல் விளைந்தது எனக் கூறுவ தொன்றை யன்றி வேலன் இவள் நோய் தீரும் மருந்துவகை அறியானுக, அதனை அறியாது நீ இவள் நோயையும் அவனிடம் கூறி அவன் கூறுமாறு வெறியயரக் கருதுகின்றனை; அதனுற் பயன் யாதும் இல்லை என்று தோழி வெறி விலக்கியவாரும்.

வெறியெனக் கூறுமது மனங்கொள்குவை எனவே, யாம் குறிப்பாலும் வெளிப்படையாலும் உணர்த்துவனவற்றையாதல், அறிவிலார்பால் ஒன்று கேட்டறிதல் அறிவுடைமை அன்றென்பதை யாதல் நின் மனத்துட் கொள்ளாயாயினை யெனச் செவிலிமேல் அறியாமை கூறியவாறு அறிக. மழைக்கண் புலம்பிய நோய்க்கு என்பது இன்பத்தை வெறுத்தலும், பசலைபாய்தலுமாம்.

---

1. நற். 273. 2. குறுந். 111. 3. ஷை. 360.

எளித்தல், ஏத்தல் என்ற அறத்தொடுநிலைப் பகுதிகளுள் இது வேட்கையுரைத்தல் என்பர் இளம்பூரணர். வேட்கை யுரைத்தலாவது "தலைவியைத் தலைவற்குக் கொடுக்க வேண்டும் என்பதுபடக் கூறுதல் என்பர்[1]" "நாற்றமும் தோற்றமும்" என்ற சூத்திரத்துக் "களம் பெறக் காட்டினும்[2]" என்புழி இதனைக் காட்டி இது தாயறியாமை கூறி வெறி விலக்கியது என்பர் நச்சினார்க்கினியர். (243)

244. அம்ம வாழி தோழி பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடா னாயின்
எவன்பயஞ் செய்யுமோ வேலற்கவ் வெறியே.

இது, வெறியாடல் துணிந்துழி விலக்க லுறும் தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: வெறியாட லுறும் வேலனுக்கு அவ்வெறி என்ன பயனைச் செய்வதாகும், பலவாகிய மலர்கள் பொருந்திய நறுவிய குளிர்ந்த சோலைகள் நிறைந்த நாடுகளை யுடைய நெடிய புகழோனாகிய தலைமகனது குன்றத்தைப் பாடா தொழிவானாயின் எ. று.

குன்றம் பாடுதலாவது, "கொடிச்சியர் கூப்பி வரை தொழு கைபோல், எடுத்த நறவின் குலையலங் காந்தள், தொடுத்ததேன் சோரத் தயங்குந்தன் னூற்றார், இடுக்கண் தவிர்ப்பான்மலை[3]" என்று பாடுவது போல்வது. வெறியாட்டினும் குரவைக்கூத்தினும் குன்றவர் தம்முடைய தலைவனுடைய குன்றத்தைப் பாடுவது வாழ்த்துவகையாகலின், குன்றம் பாடா னாயின் என்றார்.

வேலன் வெறி யயருங்கால் முதற்கண் தலைமகனது குன்றத்தைப் பாடுதலால், தான் கூறுவன வாயாதல் பெறுகின்றான் என்றும், அது செய்யானாயின், அவன் கூற்றுப் பொய்யாகி ஒரு

1. தொல். பொ. 112. 2. ஷை. ஷை. 114. 3. கலி. 40

பயனையும் எனக்கேயுமன்றி அவற்கும் செய்யா தொழியும் என்றும் கூறுவாள். குன்றம் பாடானுயின், எவன் பயஞ் செய்யுமோ என்ருள் தனக்குப் பயன்படுதல் தலைமகன் உறுபெயர் கேட்டு மகிழ்வெய்துதல்; வேலற்குப் பயன் வெறியாடல் வாய்த்தமை குறித்து மகிழ்வும் பொருளும் பெறுதல். இஃது உறுபெயர் கேட்டல்.

''நாற்றமும் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்துக் ''களம் பெறக் காட்டினும்'' என்புழித் தலைவியை முன்னிலையாக்கிக் கூறுதற்கு இதனையே இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் காட்டினர். (244)

245 பொய்யா மரபி னூர்முது வேலன்
கழங்குமெய்ப் படுத்துக் கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயின்
கெழுதகை கொல்லிவ ளணங்கி யோற்கே.

இது தலைமகன் சிறைப்புறத்தானுக வெறி அறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.

ப. உரை: கன்னம் என்பது நோய் தணித்தற்குப் பண்ணிக் கொடுக்கும் படிமம். கெழுதகை என்பது உரிமை. இவளை அணங்கியோற்கு வெறியாட்டு உரிமையன்று என்பதாம்.

உரை : பொய்த்தல் இல்லாத மரபினையும் ஊர்க்கண் வாழும் முதுமையுமுடைய வேலன், கழங்கு நிறுத்தி, அதன்கண் தான் வழிபடுதெய்வம் வரப் பண்ணிப், பின்னர் அதற்குக் கன்னத்தை அணிந்து, வெறி யாடி, இவளை அணங்கியோன் முருகனுவான் என்று மொழிவானுயின், இவளை மெய்யாற் கூடித் தன் ஒழுக்கத்தால் மெலியச் செய்த தலைமகற்கு அவ்வெறியாட்டு உரித்தாங்கொல்லோ? கூறுக எ. று.

1. தொல். பொ. 112.

வேலன் வெறியாடிக் கூறுவன உண்மை என்ப வாகலின், பொய்யா மரபின் என்றும், அவன் ஊருக்கு ஒருவனய் முதுகுடியில் தோன்றி வருபவ னுகலின், ஊர் முதுவேலன் என்றும் கூறினர். கழங்கு, கழற்காய். இவற்றைக் கொண்டு வேலன் குறிகூறுமாறு; தன் தலையில் ஆடை கட்டி, சிறிய பைகள் நாலவிட்ட பல கிளைகளை உடைய வளைந்த கொம்பொன்றினுல், கழற்காய்களை முருகன் முன்வைத்து அள்ளி யெடுக்குங்கால் கண்டு கூறும் ஒருவகைக் குறி. இதனை, ''அறுவை தோயும் ஒரு பெருங் குடுமிச், சிறுபை நாற்றிய பல்கிளைக் கொடுங்கோல் ஆகுவ தறியும் முதுவாய் வேல, கூறுக மாதோநின் கழங்கின் திட்பம்[1]'' என்பதனுல் அறிக. முருகு, முருகன். கன்னம் என்பது, நோய் தணிதற்குப் பண்ணிக் கொடுக்கும் மந்திரத்தகடு உள்ளே வைத்துக் கட்டிய தாயத்தை[2]. இது பொன்னுலும் செய்யப்படும் என்பது, ''பொன்செய் கன்னம் பொலிய[3]'' என்பதனுலும் அறியலாம். கழங்குமெய்ப்படுத்தலாவது இது தெய்வத்தா னுயிற்ருே பிறிதொன்றினு னுயிற்ருே எனத் தெய்வம் பராவி அக்கழற்காய்களை எண்ணிப் பார்த்தல் என்றும், கழற்காய்களைத் தொகுத்து அவற்றிற்கு மஞ்சட் காப்புக் கட்டி. ''இம் மையல் தீருங்காறும் இக்காப்பினை அணிந்திருக்க'' எனக் கட்டுவது கன்னம் என்றும் கூறுப. கெழுதகை, உரிமை. ''யாமெம் காமம் தாங்கவும் தாந்தம், கெழுதகைமையின் அழுதன தோழி[4]'' என்பதனுலும் அறிக

அன்னை வேண்ட வேலன் அயரும் வெறியாட்டின்கண் நம் குடிக்கு அலரும், தலைமகற்குப் பழியும் எய்தக் கூறுவனே என்று அஞ்சின ளாகலின். பொய்யா மரபின் ஊர்முது வேலன் என்றும் அவன் முருகென மொழிவனுயின், அஃது அவனது பொய்யா மரபினெடு மாறுபடுதலின், கெழுதகை கொல் இவள் அணங்கி யோற்கே என்றும் கூறினுள். மொழியுமாயின் என்றது மொழியா மையும் உணர நின்றது. எதிர்மறை ஓகாரம் விகாரத்தால் தொக்கது. இது கூறியதாற் பயன், அன்னை வேண்ட வெறி யாடலுறும் வேலன், பொய்யா மரபின னுகலின், தான் கழங்கு

---

1. அகம். 195. 2. Talisman. 3. அகம். 137.
4. குறுந். 241.

மெய்ப்படுத்தும் கன்னம் தூக்கியும் வெறி எடுத்து இவள் அணங்கியோன் இன்னனென உண்மை கூறிவிடின் அது நினக்குப் பழியும் எங்குடிக்கு ஏதமும் பயக்கு மாகலின் நீ விரைந்து வரைந்து கொள்வாயாக எனச் சிறைப்புறம் நின்ற தலைமகன் கேட்ப வரைவு கடாயவாறும். (245)

246. வெறிசெறிந் தனனே வேலன் கறிய
கன்முகை வயப்புலி கழங்குமெய்ப் படூஉப்
புன்புலம் வித்திய புனவர் புணர்த்த[1]
மெய்ம்மை யன்ன பெண்பாற் புணர்ந்து
மன்றிற் பையு டீரும்
குன்ற நாட னுறீஇய நோயே.

இது வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாய் நின்றுழி அவன் கேட்குமாற்றால் வெறி நிகழா நின்றமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை : பயிர் விளைப்பார் விலங்குகள் நலியாமைக்குக் கழலைக் கண்ணாக வுறுத்திப் பொய்மை வகையாற் பண்ணி வைத்த பெண்பாற் புலியைப் புணர்ந்து புலிப்போத்துப் படப்பை நடுவே துயரம் தீருமென்றது. வரைந்து கொள நினையாது இக்களவிற் புணர்கின்ற மாயப்புணர்ச்சியானே இன்பம் முடிய நுகர்கின்றான் என்பதாம்.

உரை : மலையிடத்தே புன்செய்க் கொல்லையில் தினைப்பயிரை விதைத்த குறவர் விலங்குகள் போந்து அழிக்காதவாறு கழங்கினைக் கண்ணாகப் பொருத்தி மெய்யான பெண்புலி போலச் செய்தமைத்த பொய்ப்புலியை, மிளகுக்கொடி படரும் கல்முழைஞ்சினுள் வாழும் வலிய புலியின் ஏறு போந்து கூடிப்புனத்திடையே அமைத்த மன்றிற் கிடந்து தன் வருத்தம் நீங்கும் குன்றத்தையுடைய நாடனாகிய தலைமகனால் உண்டாகிய நோயின்பொருட்டு வேலன் வெறி

1. இந்த அடி, சீர்காழி திரு. கோவிந்தசாமி ரெட்டியார் கையெழுத்துப் படியில் காணப்பட்டது.

அயர்தற்கு உரியவற்றை ஒழுங்காகச் செய்யலுற்ருன். இஃது என்ஞகுமோ? எ.று.

கறி, மிளகுக்கொடி. கழங்கு, கழற்காய். மெய்யென்ஞ ராயினும் மெய்ம்மைத் தோற்றத்தைத் தருதற்குக் கண் சிறந்த மையின், கண்ணே கொள்ளப்பட்டது. புன்புலம், ஈண்டுத் திணை வித்திய புன்செய்; ''புன்புல மயக்கத்து விளைந்தன திணையே[1]'' என்பது காண்க. புனவர், குன்றவர். ''இதைமுயல் புனவன்[2]'' என வழங்குவதறிக. பொய்யாகப் புணர்த்தமை அறியாமையின் வயப்புலி எய்திய வருத்தம் பையுள் எனப்பட்டது. புலத்தின் இடையே பரண் நிறுத்துதற்பொருட்டும் விளைந்தவிடத்துத் திணைக் கதிர்களைத் தொகுத்தற்பொருட்டும் விடப்பட்ட நடுவிடம் மன்று என உணர்க. நோய் என்றவிடத்துப் பொருட்டுப் பொருளதாகிய குவ்வுருபு தொக்கது.

தலைமகன் சிறைப்புறத்தா ஞனமை அறிந்து அவன் கேட்பக் கூறுகின்ரு ளாதலின், குன்ற நாடன் உறீஇய நோய் என்றும், நோயால் விளைந்த மேனி மெலிவு கண்டு ஆராய்ந்து வெறி யெடுத்தற்கு ஆவன செய்யுமாறு உணர்த்துவாள், வேலன் மேலேற்றி வெறி செறித்தனனே வேலன் என்றும் கூறினுள். பிருண்டு, ''அணங்கறி கழங்கின் கோட்டம் காட்டி வெறியென வுணர்ந்த உள்ளமொடு மறியறுத்து, அன்னை அயரும் முருகு[3]'' என்று பிறரும் கூறுதல் காண்க

உள்ளுறையால் தலைமகன் வரைதலை மேற்கொள்ளாது களவின்கண் பெறும் இன்பத்தையே நயந்தொழுகுதலை உணர்த்தி னமையின், வேறு தன்ஞல் செயற்பாலது இன்மை தோன்ற இஃது என்ஞகுமோ என்பது குறிப்பிற்பெற மொழிந்தாள்.

கன்முழைகயில் வாழும் வயப்புலி புனவர் பொய்யாகப் புணர்த்த பெண்புலியைக் கூடிப் பையுள் தீரும் என்றதஞல், உயர்குடி மகஞய தலைமகன் களவின்கண் தலைப்பெய்து பெறும் இன்ப

1. ஐங் 260. 2. அகம். 140. 3. நற். 47.

மொன்றே நுகர்ந்து அமைகின்ருன் என்ருளாம். பழையவுரைக் காரர்க்கும் இதுவே கருத்தாதல் காண்க.

கழங்குகட்படூஉ என்றும், உறீஇய நோய்க்கே என்றும் பாட முண்டு. (246)

247. அன்னே தத்த தாகுவ தறிவென்
பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயின்
அருவரை நாடன் பெயர்கொலோ வதுவே.

இது, வெறிவிலக்கலுறும் தோழி தமர்கேட்பத் தலைமகளை வினவுவாளாய்ச் சொல்லியது.

உரை: அன்னை வெறியயர்தற் பொருட்டு வேலனைக் கொணர்ந்தமையும், அவன் எடுக்கும் வெறியால் விளையும் பயனையும் யான் நன்கு அறிவேனுகலின், அழகிய மனையிடத்தே வெறியாடிக் கன்னத்தை அணிந்து ''இவளை அணங்கியோன் முருகன்'' என அவ்வேலன் கூறுவானுயின், அம்முருகு என்னும் பெயர் அரிய மலைநாடனது பெயர் ஆகுமோ? கூறுக எ. று.

எனவே, அஃது அருவரைநாடன் பெயரன்ருகலின், அவ் வெறியாட்டுப் பயனில் செயலாம் என வெறிவிலக்கியவாறும்.

தந்தது, வேலனைத் தருவித்தது. ஆகுவது, வெறியயர்தல்; 'நுதல் பசந்த படர்மலி அருநோய், அணங்கென உணரக் கூறி வேலன், இன்னியம் கறங்கப் பாடி, பன்மலர் சிதறிப்[1]'' பரவு வதனை ஆகுவது என்ருர் எனினுமாம்.

வெறியயரும் வேலன், ''எம்மிறை அணங்கலின் வந்தன்று இந்நோய்[2]'' என்பது ஒருதலையாகலின், முருகென மொழியு மாயின் என்றும், இவட்கு இந்நோய் செய்தான் அருவரை நாட னுகலின், அவனை முருகு எனல் பொருந்தாதென்பாள், அது அருவரை நாடன் பெயர் கொலோ என்றும் கூறினுள்.

---

1. நற், 322. 2. அகம். 388.

தமர் கேட்பின் இவட்கு இம் மெலிவு தெய்வத்தாலுயிற்றன்று என வெறிவிலக்குதல் பயன் (247)

248. பெய்ம்மணன் முற்றங் கவின்பெற வியற்றி
மலைவான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினு னறிகுவ தென்றால்
நன்று லம்ம நின்றவிவ ணலனே.

இது, தலைமகள் வேறுபாடு கழங்கினுல் தெரியும் என்று வேலன் கூறியவழி அதனைப் பொய்யென இகழ்ந்த தோழி வெறி விலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றது.

உரை: மலையையும் வானையும் வென்றுகொண்ட சினத்தை யுடைய முருகனது வேலை ஏந்திய வேலன் புது மணல் இடப்பட்ட முற்றம் அழகுபெற அமைத்துக் கழங்கு மெய்ப்படுத்துக் காண வல்ல தொன்று என்றால், இவள்பால் நின்ற கற்புநலம் நன்று, காண்; என்றது, இவளது கற்பின் மாண்பு கழங்கினுல் அளத்தற் குரியதன்று எ. று.

ஏகாரம், தேற்றம். சிறப்பும் தெய்வவழிபாடும் நிகழுங்காலங் களில் பழமணல் மாற்றிப் புதுமணல் பெய்து அழகுசெய்தல் மரபாதலின், பெய்ம்மணன் முற்றம் கவின் பெற என்றார்; ''பெய்ம்மணல் முற்றம் கடிகொண்டு மெய்ம்மலி கழங்கின் வேலற் றந்தே[1]'' என்பது காண்க. சிறப்புக் குறித்துச் செய்யப் படுதலின், இயற்றி என்றும், வேலன் ஏந்திய வேல் செவ் வேளினது வேலாகலின், மலைவான் கொண்ட சினைஇய வேல் என்றும் கூறப்பட்டன. மலை என்றது குருகுபெயர்குன்றம். வான் என்றது வானவர் தலைவனாகிய இந்திரன் முதலியோரை. ஆகுபெயர். ''நாவலந் தண்பொழில் வடபொழில் ஆயிடைக், குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து, மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை[2]'' என்றும், ''ஓங்குவிறற்சேஎய், ஆராவுடம்பின்நீ யமர்ந்து விளையாடிய, போரால் வறுங்கைக்குப்

1. நற். 268. 2. பரி. 5.

புரந்தரனுடைய, அல்லலி னனலன்றன் மெய்யிற் பிரித்துச், செல்வ வாரணங் கொடுத்தோன் வானத்து, வளங்கெழு செல்வன்றன் மெய்யிற் பிரித்துத், திகழ்பொறிப் பீலி யணிமயில் கொடுத்தோன், திருந்துகோன் ஞமன்றன் மெய்யிற் பிரிவித், திருங்கண் வெளியாட்டெழின்மறி கொடுத்தோன்[1]'' என்றும் வருவனவற்ருல் உணர்க. ''மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்[2]'' என்புழிப்போல, மேகங்கள் சூழ்ந்துகொண்ட மலையைச் சினந்தழித்த வேல் என்றுமாம். மலைவான் என்பதை வானீற்று வினையெச்சமாகக் கொண்டு உரைகூறுவதுமுண்டு. அறிகுவது என்பது, அறிந்து செய்யும் மறியறுத்தல் வெறியாடல் முதலிய வற்ருல் தலைவி மேனிவேறுபாடு நீங்குவது குறித்து நின்றது. ஆல், அசை; அம்ம, உரையசை. நலன், குறிப்பு மொழியாய்த் தலைமகளது வேறுபாடு தோற்றுவித்தது.

வேலன் தாங்கி நிற்கும் வேல் மலையைக் கிழித்து வானத்துக்குக் காப்பு வழங்கும் அத்துணை வன்மையும் வினைத் திறமும் உடையதாயினும் இவளது கற்பின் திண்மைமுன் செல்லாது என்பாள் மலைவான் கொண்ட சினைஇய வேலன் என்ருள். இவட்குற்ற வேறுபாட்டை வேலன் எடுக்கும் கழங்கும் வெறியும் தீர்க்கும் வன்மையும் தகுதியு முடையவல்ல என்பது தோன்றக் கழங்கினுன் அறிகுவது என்ருல் என்றும், இவற்ரு லெல்லாம் நீங்காமல் இவளது மெய்ப்பட்டு நிற்கும் வேறுபாடு தலைமகன்பால் கொண்ட தொடர்புவழித் தோன்றித் திகழும் கற்பறம் என்றற்கு நின்ற இவள் நலம் என்றும், எனவே, இவற்றைக் கைவிட்டுத் தலைமகன் வரின் அவற்கு மகட்கொடை நேர்வது நன்று என்றும் தோழி உரைத்தவாரும். நன்ருல் என்றும் அம்ம என்றும் கூறியது வெறி முதலியவற்றின் பயனின் மையைச் சுட்டி நின்றன.

''களவல ராயினும்[3]'' என்ற சூத்திரத்துக் ''கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக்

1. பரி. 5, 54-62. 2. புறம். 143. 3. தொல். பொ. 115.

கண்ணும்'' என்பதற்கு இதனைக் காட்டி, இது வேலன் கழங்கு பார்த்தமை கூறிற்று என்பர் நச்சினார்க்கினியர்.

249 பெய்ம்மணல் வரைப்பிற் கழங்குபடுத் தன்னைக்கு
முருகென மொழியும் வேலன் மற்றவன்
வாழிய விலங்கு மருவிச்
சூர்மலை நாடனை யறியா தோனே.

இது, வேலன் கூறிய மாற்றத்தை மெய்யெனக் கொண்ட தாய் கேட்பத் தலைமகட்குத் தோழி கூறியது.

உரை: விளங்குகின்ற அருவிகளையுடைய அச்சம் பொருந்திய மலைநாடனை அறியானாய், புதுமணல் பரப்பிய விடத்தே கழங்கு வைத்து, ''இவட்கு உண்டாய மெலிவின் காரணம் முருகன்'' என வேலன் அன்னைக்கு மொழிந்தானாக, அன்னையும் அதனை மெய்யெனக் கொண்டு அமைந்தாளாகலின், அவ்வேலன் வாழ்வானாக எ. று.

வெறியெடுத்தற்கு முன்னர் நிகழ்த்தும் ஆராய்ச்சியாய கழங்கு வைத்துக் காண்டல் மனைக்கண் நிகழ்தலின், அது பற்றி ஒப்பனை செய்யப்பட்ட மனையகம் என்றற்கு, பெய்ம்மணல் வரைப்பு என்றார். ''முன்னர்ப் பெய்ம்மணல் முற்றம்[1]'' என்றதும் இக்கருத்துப் பற்றியே என்க. முருகென மொழிதல் வேலற்கு இயல்பு என்பது தோன்ற, மொழியும் என்றார். மொழியும் என்றது. ''நிகழுங் காலத்துமெய்ந்நிலைப் பொதுச்சொல்[2]'' லாகலின் இறந்தகாலம் கொள்ளப்பட்டது. சூர், அச்சம். சூர்மலைநாடன் என்பதற்கு அச்சம் தரும் தெய்வத்தையுடைய மலைநாடன் எனினுமாம். ''வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும், சூர்மலை நாடன்[3]'' என்றார் பிறரும்.

வேலன் இவட்கு நோய்செய்த மலைநாடனை யறியாது அறிவான் போலக் கழங்குபடுத்து முருகு என மொழிந்தானாக

1. ஐங. 248. 2. தொல். சொல். 242 3. குறுந். 105.

அன்னை அதனை மெய்யெனக் கொண்டாள்; இஃதன்றோ அவள் அறியாமை இருந்தவாறு எனத் தாயுழை அறியாமையும் வேலனது பொய்ம்மையும் கூறி இகழ்ந்தவாறு. நாடன் செய்த நோயினை அவனது மலைக்கண் உறையும் அச்சந்தரும் தெய்வம் தந்ததாகப் பிறழ உணர்ந்து கொண்டு வேலன் உரைத்தனன் என்றுமாம். சூர்மலை நாடனைக் கூறித் தலைமகள் குடிக்குப் பழியும் அலரும் விளையாவகை முருகு என மொழிந்தா னாகலின், அவன் வாழிய என்றாள். நோய் செய்தானை விடுத்து, அது செய்யாத முருகனைக் கூறிய குற்றத்திற்கு இரங்குவாள், அவன் வாழிய என்றாள் எனினுமாம். இலங்கும் அருவிச் சூர்மலை நாடன் என்றது அறத்தொடு நிலைப் பகுதியாய ஏதீடு உணர்த்தியவாறும். (249)

250. பொய்படு பறியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி மடமயி லாலுநம்
மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோன்
ஆண்டகை விறல்வே ளல்லனிவள்
பூண்டாங் கிளமுலை யணங்கி யோனே.

இது தலைமகட்கு வந்த நோய் முருகனால் வந்தமை இக் கழங்கு கூறிற்றென்று வேலன் சொன்னான் என்பது கேட்ட தோழி அக்கழங்கிற்கு உரைப்பாளாய்ச் செவிலி கேட்குமாற்றால் அறத் தொடுநிலை குறித்துச் சொல்லியது

உரை: பொய்ம்மையிற்பட்டு மெய்ம்மையை அறியமாட்டாது ஒழிந்த கழங்கே, இவளுடைய பூணாரம் தாங்கிய இளமுலை வருந்தப் புல்லி நட்புற்றவன், மணிகள் நிறைந்த மலைச்சாரற் காட்டின்கண் மடப்பம் பொருந்திய மயில்கள் மகிழ்ந்து ஆலும், விரிந்த வள்ளிக் கொடிகள் நிறைந்த கானத்துக்கு உரியனாகிய ஓர் ஆண்டகை யாகும்; வெற்றியினையுடைய கடவுளாகிய செவ்வேள் அல்லன் என அறிவாயாக எ. று.

கழங்கே, அணங்கியோன், கிழவோனாகிய ஆண்டகை, வேளல்லன் என அறிக எனச் சில சொற்பெய்து முடிக்க. அணங்கி

யோன் வேள் அல்லன், கிழவோனுகிய ஆண்டகை என முடிப்பினு மாம். கட்சி, காடு; ''வேங்கை வீயுகும் ஓங்குமலைக் கட்சி மயிலறி பறியா மன்னோ[1]'' ''நனவுறு கட்சியின் நன்மயி லால, மலையுடன் வெரூஉம் மாக்கல் வெற்பன்[2]'' எனச் சான்றோர் வழங்குதல் காண்க. வள்ளியங்கானம், வள்ளிக்கொடிகள் காடு போல் படர்ந்துள்ளமை பற்றி இவ்வாறு கூறப்பட்டது; வாடா வள்ளியங் காடு படர்ந்தோரே[3]'' என்றார் பிறரும். இனி, வள்ளி மலையைச் சார்ந்த காடு என்றுமாம். இப்பகுதி முதல் இராசராசன் காலத்தும் அவற்கு முன்பும் ''சயங்கொண்ட சோழமண்டலத்துப் பெரும்பாணப்பாடி நாட்டுத் துய்ய நாட்டு வள்ளிமலைப் பற்று[4]'' என்று கல்வெட்டுக்களில் வழங்கிவந்துள்ளது.

வேலனைப் பொய்யா வாய்மையன் என்று கருதி அவனைத் தருவித்து அவன் கழங்கு கொண்டு உரைப்பனவற்றை மதித்துப் பேணுவது மரபாதலின், ஈண்டு அவனது கழங்குரை பொய்த்தமை கண்டுவியந்து கூறுவாளாய்ப் பொய்படுபு அறியாக்கழங்கே என்றும், கழங்கினால் அறிந்து கட்டுரைத்தற்குப் பொருளாவோன் இன்னான் என்பாள், மணிவரைக் கட்சி மடமயில் ஆலும் மலர்ந்த வள்ளியங் கானங்கிழவோன் என்றும், அவனே தலைமகளைக் களவிற் கூடி நட்புச் செய்து இப்போது இவட்கு இம்மெலிவை எய்துவித்தவன் என்பாள், பூண்தாங்கு இளமுலை அணங்கியோன் என்றும், அவன் மக்களினத்தில் உள்ள ஆடவன் என்றற்கு ஆண்டகை என்றும், அவனைத் தெய்வமாகிய முருகவேள் என்பது குற்றம் என மறுப்பாளாய், விறல்வேள் அல்லன் என்றும் உரைத்தாள். வேலன் அதனைத் தன் கூற்றாக மொழியாது கழங்கு கூறுவதாக மொழிதலின், கழங்கினை நோக்கித் தோழி இது கூறினாள் என்க. மணிவரைக் கட்சியில் மயிலாடுவது கண்டு தலைமகளைத் தலைமகன் எதிர்ப்பட்டுக் கூடி நட்புச் செய்தான் என்பது குறிப்பாய்த் தோன்ற மணிவரைக் கட்சி மடமயிலாலும் என்றாள்; இஃது உண்மை செப்பல் என்னும் அறத்தொடு நிலை.

---

1. நற். 13. 2. அகம். 392. 3. குறுந். 216.
4. A. R. No. 96. of 1921.

''நாற்றமும் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்து ''அவள் விலங்குறினும் களம்பெறக் காட்டினும்'' என்ற விடத்துக் களம் பெறக் காட்டிய வழிக்கழங்கினை முன்னிலையாகக் கூறுவதற்கு இவனைக் காட்டுவர் இளம்பூரணர்; கழங்கு பார்த்துழிக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர்[2]

மடமயிலாயம் என்றும், வரைதரு வள்ளியங்கானம் என்றும் பாடமுண்டு. (250)

---

1. தொல். பொ. 112 2. ஷை. ஷை. 114.

26

குன்றக்குறவன் பத்து

இதன்கண் வரும் பாட்டுக்கள் பத்தும் குன்றக்குறவன் என்ற தொடரால் தொடங்கி நடத்தலின், அச் சிறப்புக் குறித்து இஃது இப்பெயர்த் தாயிற்று.

251. குன்றக் குறவ ஞர்ப்பி னெழிலி
நுண்ப லழிதுளி பொழியு நாட
நெடுவரைப் படப்பை நும்மூர்க்
கடுவர லருவி காணினு மழுமே.

இது வரையாது வந்தொழுகும் தலைமகற்கு வரைவு வேட்ட தோழி கூறியது.

ப. உரை : நும்மூர்க் கடுவரல் அருவி காணினும் அழும் என்றது, அது நின் மலையினின்றும் வீழ்கின்ற அருவி என்று கொண்டு அதற்கு நின் கொடுமை கூறி இவள் அழும் எ. று.

குறவன் உழவு முதலாகிய வினைக்கு ஆர்ப்பின் அதற்கு இன்றியமையாத நீரை நுண்மழை பொழியும் நாடனாகி வைத்தும் எம் வேட்கை அறிந்து அதற்குத் தக ஒழுகுகின்றிலை என்பதாம்.

உரை : குன்றத்துக்கண் வாழும் குறவன் தன் தமர் உடன் சூழ, மழைவேண்டிக் கடவுளைப் பரவுங்கால் ஆரவாரிப் பானுயின், அம் மழை நுண்ணிய பலவாகிய மிக்க பெயலைப் பொழியும் நாடனே, நெடிய வரையைச் சார்ந்த தோட்டங்களையுடைய நும் மூர்க்கட் செல்லும் விரைந்த செலவினையுடைய அருவியைக் காணினும், அது நின் மலையினின்றும் வீழ்கின்ற அருவி யென்று கொண்டு அழாநிற்பள் எ. று.

மழை வேண்டுங்காலத்துப் பெய்வித்தற்கும் வேண்டாக்காலத்து ஒழித்தற்கும் குறவர் கடவுளைப் பேணுதல் மரபென்பது, ''மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய் மாரி யான்று மழைமேக் குயர்கெனக், கடவுட் பேணிய குறவர் மாக்கள்[1]'' என்ற இவரது புறச்செய்யு ளான் அறிக. அழிதுளி என்பது, ஈண்டு, ''அழிபசி[2]'' என்புழிப் போல மிக்க பெயல் என்னும் பொருட்டு. விளைபுலங்களில் மழை நீர் நிரம்புதற் பொருட்டுச் செய்து வைத்த காலும் வரம்பும் விளைபயனும் கெடப் பொழிதலின், அழிதுளி என்ருர் என்க. ''அகலிரு விசும்பகம் புதையப் பாஅய்ப், பகலுடன் கரந்த பல் கதிர் வானம், இருங்களிற் றினநிரை குளிர்ப்ப வீசிப், பெரும் பெயல் அழிதுழி பொழித லானுது[3]'' எனச் சான்ருேர் கூறுத லானும் உணர்க. கடுவரல் விரைந்த செலவு; ''கடுவரற் கான்யாறு[4]'' என்ருற்போல.

இடையரு நீரொழுக்க முடைய அருவிகளையுடைய மலைநாட னுயினும் என் மாட்டுத் தன் தண்ணளியை இடையருது செய்வா னல்லன் என வருந்துகின்ருள் என்பாள், கடுவரல் அருவி காணினும் அழுமே என்ருள்.

குறவன் தனக்கு இன்றியமையாத தினை நீரின்மையால் வாடுதல் கண்டு, அவ்வாட்டங்கெடக் கடவுட் பேணி ஆர்த்த விடத்து, எழிலி நுண்பல் அழிதுளி பெய்வது போல, நினக்குத் துப்பாகிய இவள் நலம், அலர் முதலியவற்ருல் வாடுதல் கண்டு யாம் நின்னை வேண்டியவிடத்து, நீ அவ்வலர் கூறுவார் வாயடங்க

---

1. புறம். 143. 2. குறள். 226. 3. அகம். 214.
4. ௸. 18

வரைந்துகொள்க என உள்ளுறுத்து உரைத்தவாறு உணர்க. நின் மலையிற் குறவன் ஆர்ப்பினைச் செய்து வேண்டும் மழை பெற்றுத் தன் விளைபயனை நுகர்தல் போல, இவளும் தன் நலங்கெடாது நின் அருளைப்பெற்று இடையரு இன்பம் நுகர்வாளாதல் வேண்டும் என்ப தொரு நயமும் தோன்றியவாறு காண்க. காணினும் அழுமே என்றது துன்பத்துப் புலம்பல். (251)

252. குன்றக் குறவன் புல்வேய் குரம்பை
மஞ்சா டிளமழை மறைக்கு நாடன்
புரையோன் வாழி தோழி விரைபெயல்
அரும்பனி யளைஇய கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்துவந் தனனே.

இது வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வந்தானாக உவந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை: குறவனது புல்வேய் குரம்பைப் பொல்லாங்கினை இளமழை மறைக்கும் நாடன் என்றது பிரிவின்கண் தங்கட்கு வந்த துன்பத்தை இவன் மறைத்தது நோக்கிக் கூறியவாறு.

உரை: தோழி, குன்றத்துக்கண் வாழும் குறவனுடைய புல்லால் வேயப்பட்ட வீட்டினைப் புகைமுகிலாய் அசையும் இளமழை தாழ்ந்து கண்ணுக்குத் தோன்றுவகை மறைக்கும் நாடன், விரைந்த மழையையும், பொறுத்தற் கரிய பனியையும் கலந்து வீசும் கூதிர்ப் பருவத்துப் பெரிய தண்ணிய வாடைக்காற்று வருவதன் முன்னே தான் வந்தா னாகலின், அவன் உயர்ந்தோனாய் வாழ்வானாக எ. று.

புல்வேய் குரம்பை, புல்லைக் கூரையாக வேய்ந்த வீடு. புல் லென்றது, மலைகளில் நீண்டு வளர்ந்திருக்கும் பைஞ்சாய்க் கோரைப்புல்; இது மஞ்சம்புல் என்றும் எருவைப் புல்லென்றும் வழங்கும்; ''எருவை நீடிய பெருவரைச் சிறுகுடி[1]'' என்பதனால்

1. நற். 156.

அறிக. பனை தெங்கு முதலியனவும் புல்லென்னும் இனத்தைச் சேர்ந்தவையாகலின், அவற்றின் ஓலை வேய்ந்த வீடும் புல்வேய் குரம்பை எனப்படும். செல்வ ரல்லாத மிக்க எளியராகிய மக்கள் புல்வேய் குரம்பையில் வாழ்வர்; அது பற்றியே சான்றோர், ''படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை நல்கூர் சீறூர் [1]'' என்றும், ''சிறப்பும் சீருமின்றிச் சீறூர், நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை [2]''என்றும் உரைப்பது காண்க. புகைபோல் திரண்டு செல்லும் வெண்முகில் மஞ்சு எனவும், கரும்புகைபோல் பரந்து சிறுசிறு மழைத்துளியைச் சிதறிச் செல்லும் மழைமுகில் இளமழை எனவும் வழக்கிலும் நூல்களிலும் காணப்படும். இவை மழைக் காலத் திறுதியில் தோன்றிப் பனிப்பருவத்திற் பெருகிப் பரவி நிற்கும்; ''புகைபுரை அம்மஞ் சூர [3]'' என்றும், ''ஆடியல் இள மழைப் பின்றை, வாடையும் கண்டிரோ வந்து நின்றதுவே [4]'' என்றும் வருவன காண்க. காற்றில் மிக நொய்தாய் மிதந்து அசைந்து செல்லுதல் பற்றி, இதனை ஆடியல் இளமழை என்று கூறுவர். ''ஆடியல் இளமழை சூடித்தோன்றும், பழந்தூங்கு விடரகம் [5]'' என்றூர் பிறரும். ''இளவாடை [6]'' என வழங்குவ துண்மையின், ''பெருந்தண் வாடை'' என்றூர்; தட்பமிகுதி தோன்ற, நாடன் வந்தனன் ஆகலின், புரையோன், வாழி எனக் கூட்டி முடிக்க.

''பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப [7]'' என்ற விடத்து, ''உரித்து என்றதனால் கூதிர் பெற்ற யாமமும் முன்பனி பெற்று வரும் எனக் கொள்க;'' எனவே, பனியும் கூறப்பட்டது. கூதிர்க்கண், ''இருள் தூங்கித் துளி மிகுதலில் சேறல் அரிதாக லானும், பானாட் கங்குலிற் பரந்துடன் வழங்காது, மாவும் புள்ளும் துணையுடன் இன்புற்று வதிதலின் காமக் குறிப்புக் கழியவே பெருகுதலானும் [8]'' முந்து வந்தனன் என்றும், இவ்வாறு காலத்தின் சிறப்பும், காதலியாகிய நினக்குத் தான் வாராதொழியின் உளதாகும் வருத்தமும் ஒப்ப நோக்கிப்

1. அகம். 87. 2. ஷை. 369 3. ஷை. 97.
4. நற், 229. 5. அகம். 271. 6. நற். 364.
7. தொல். பொ. 7. 8. தொல். பொ. 6. உரை.

போந்தவன் பெரிதும் நயனுடையான் ஆகலின், புரையோன் என்றும், வாழி என்றும் கூறினள். ''புரைய மன்ற புரையோர் கேண்மை[1]'' என்பது காண்க.

குறவனுடைய புல் வேய்ந்த குரம்பையின் புன்மை புலனகா வாறு இளமழை மறைக்கும் நாடன் என்றது, தன் பிரிவின்கண் தலைமகட்கு உண்டாகிய மெலிவு பிறர்க்குப் புலனகாவாறு குறித்த பருவம் வருமுன்பே வந்து தலைமகன் மறைத்த சிறப்பு நோக்கி என்க. இஃது அறனளித் துரைத்தல்.

மன்ருடு இனமழை என்றும் பாடமுண்டு. ''கிழவோட்கு உவமம் ஈரிடத்து உரித்தே[2]'' என்பதன் உரையில் இதனைக் காட்டி, ''இக் குறிஞ்சிப் பாட்டினுள் வறுமை கூர்ந்த புல்வேய் குரம்பையை மழை புறமறைத்தாற் போல வாடை செய்யும் நோயைத் தீர்க்க வந்தா னென்று உள்ளுறை உவமம் செய்தவாறு கண்டுகொள்க'' என்பர் பேராசிரியர். மேலும், அவர், இதன் கண், பெருந்தண் வாடையின் முந்து வந்தோன் என்பது பிரிவன் ருகலின் ஈரிடம் என்ற (பாடம் கோட)லே வலிதென்பது என்பர். (252)

253. குன்றக் குறவன் சாந்த நறும்புகை
தேங்கமழ் சிலம்பின் வரையகங் கமழும்
கானக நாடன் வரையின்
மன்றலு முடையள்கொ ரேழி யாயே.

இது வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வரைவொடு புகுதராநின்ருன் என்பது தோழி கூறக் கேட்ட தலைமகள் அவட்குச் சொல்லியது.

ப. உரை: தேன் நாறுகின்ற மலைக்கண்ணே குறவன் சாந்த நறும்புகை கமழும் என்றது நம்மனைக்கண்ணே செய்கின்ற சிறப்புக்கு மேலே மணவினையால் அவர் செய்யும் சிறப்பு மிகும் .... வண்ணம் விளைப்பாள் கொல் எ. று.

1. நற். 1. 2. தொல். பொ. 304.

உரை : தோழி, குன்றத்துக்கண் வாழும் குறவன் எழுப்பிய சந்தனக்கட்டையின் நறிய புகை தேன் நாறுகின்ற சிலம்பின் பக்கமலையகத்தே மணம் வீசுங் காடுகளையுடைய நாடன் போந்து வரைந்து கொள்வா னாயின். நம் அன்னை தன் மனையின் கண்ணும் ஒரு வதுவைச்சிறப்புச் செய்தலை உடையளாவளோ? கூறுக எ. று.

என்றது, கானகநாடன் போந்து நம்மை வரைந்து கொள்ளுங்கால், நம் அன்னை வேறும் ஒரு மணவினையால் அவர் செய்யுஞ் சிறப்பினும் மிக்க சிறப்புச் செய்தலை உடைய ளாவளோ? அன்றி, தன் மனைக்கட் செய்யும் சிறப்பினால் அவர் சிறப்பு மிகுமாறு செய்வளோ ? யாதோ ? யான் அறியேன் என்பதாம்.

சாந்த நறும்புகை, சந்தனக் கட்டைகளை எரித்தலால் எழும் புகை. பாரியது பறம்பைப் பாடுங்கால், இந் நூலாசிரியர், இக் கருத்தே தோன்ற, ''குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி, ஆர மாதலின் அம்புகை யயலது, சாரல் வேங்கைப் பூஞ்சினை கமழும் பறம்பு [1]'' என்பது காண்க.

தலைமகன் வரைவொடு வந்தமை தோழி கூறக்கேட்டு மகிழ்ந்த உள்ளத்தளாய்த் தலைவி கூறுதலின், கானக நாடன் வரையின் என்றும், வரைவுக்கு உடன்படுதலோடு அமையாது மண நிகழ்ச்சியை இங்கே நிகழ்த்துதற்கும் விருப்ப முடையளாவள் என்பது தோன்ற, மன்றலும் உடையள் கொல் என்றும் கூறினாள்.

நம் அன்னை எனக்கு வதுவை நன்மணம் தன் அகத்தே நடைபெறவித்தலை விரும்பி, கானகநாடன் வரைந்து கொண்ட காலையும், அவனின் மிக்க சிறப்புச் செய்யும் கருத்தின ளாயினள் என்பாள், மன்றலும் உடையள்கொல் தோழி யாயே என்றாள். ''எம்மனை முந்துறத் தருமோ, தன்மனை உய்க்குமோ, யாதவன் குறிப்பே [2]'' என்றும், ''நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும், எம் மனை வதுவை நன்மணம் கழிகெனச் சொல்லின் எவனோ [3]''

---

1. புறம். 108. 2. அகம். 195. 3. ஐங். 399.

என்றும் வருவனவற்ருல், நற்ருய் தன் மகட்கு வதுவைச் சிறப்புத் தன்னகத்தே நிகழ்த்தும் விருப்ப முடையளாதல் பெறப்படும்.

தேங்கமழ் சிலம்பின் வரையக மெல்லாம் குறவன் சுட மெழுந்த சந்தனநறும்புகையின் மணம் கமழும் நாடனுதலால், நம் மனைக்கட் செய்யப்படும் சிறப்புக்களினும் மணவினையால் தான் செய்யும் சிறப்பு மிகச் செய்வன் என்றவாரும். (253)

254. குன்றக் குறவனுர மறுத்தென
நறும்புகை சூழ்ந்து காந்த ணுறும்
வண்டிமிர் சுடர்நுதற் குறுமகள்
கொண்டனர் செல்வர்தங் குன்றுகெழு
நாட்டே.

இஃது உடன்போக்கு உடன்பட வேண்டிய தோழி தலைமகட்குச் சொல்லியது.

உரை : குன்றத்துக்கண் வாழும் குறவன் சந்தன மரத்தை அறுத்துச் சுட்டானுக, அதனுடைய நறுவிய புகை சூழ்ந்து காந்தள் மலர்களோடு மணம் கமழும், வண்டுகள் ஒலிக்கும் ஒளி பொருந்திய நுதலினையுடைய இளையமகளே, நின்னைத் தம் குன்றுகள் பொருந்திய நாட்டிற்கு உடன்கொண்டு செல்லத் துணிந்தனராகலின் நீ நாணுது அதற்கு உடன்பட்டு எழுவாயாக எ. று.

சந்தனத்தின் புகையும் காந்தள் மலரின் மணமும் ஒருங்கு கமழ்தல் தோன்ற நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும் என்ருர். நறும்புகை சூழ்ந்து நாறும், காந்தள் நாறும் என இயைக்க. இனி, சூழ்ந்து என்பதனைச் சூழ என்பதன் திரிபு எனக் கொண்டு, நறும்புகை சூழ, காந்தள் நாறும் நுதல் என இயைத்தலும் ஒன்று. நுதல் காந்தள் நாறும் என்பதைப் பிறரும், "காந்தள் மென்பிணி முகையவிழ்ந் தலர்ந்த, தண்கமழ் புதுமலர் நாறும் நறு நுதற்கே[1]" என்பது காண்க. மலரின் மணம் கமழும் நுதலாதலின், அதனை வண்டு மொய்த்து அரற்றுவ தாயிற்று என்பார்

1. அகம். 238.

வண்டிமிர் சுடர்நுதல் என்றும், இயற்கை யறிவின் செவ்விய ஒளி திகழ்வதுபற்றிச் சுடர் நுதல் என்றும் கூறினர்; ''அறிவும் அருமையும் பெண்பாலான[1]'' என்பர் ஆசிரியர்.

உடன்போக்குத் துணிந்தவன் செல்லுதல் ஒருதலை யாகலின் செல்வர் என்றாள். நின் தமர் மகட்கொடை மறுத்தமையின், வேறே செயல்வகை இன்மையான் காதலர் தம்மோடு கொண்டு தலைக்கழிதலைத் துணிந்து வந்தன ரென்பதற்கு கொண்டனர் செல்வர்தம் குன்றுகெழு நாட்டே என்றாள். உள்ளுரையால் விளைவு கூறித் தேற்றுகின்றா ளாகலின், நாணழிவு நினைந்து வருந்தற்க என்பது குறிப்பாற் பெறவைத்தாள்.

குன்றக்குறவன் சந்தன மரத்தை அறுத்துக் கொணர்ந்து சுடுதலால் எழுந்த புகை காந்தளின் மணத்தை நாற வண்டுகள் ஆரவாரிக்கும் என்றது, தலை மகன் நின்னை இவணின்று உடன் கொண்டு சென்று தன் மனைக்கண் வதுவை நன்மணம் அயரும் சிறப்பைத் தமர் கேட்டு மகிழ்வ ரென உடன்படுத்தியவாறும்.

(254)

255. குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர்ப் புரையுஞ் சாயலள்
ஐய ளரும்பிய முலையள்
செய்ய வாயினண் மார்பினள் சுணங்கே.

இது நின்னாற் காணப்பட்டவள் எத்தன்மையள் என்ற பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

உரை: குன்றத்துக்கண் வாழும் குறவனுடைய அன்புடைய மகள், வரைக்கட் போந்தாடும் அரமகளிர் போலும் சாயலும், அழகும், மலரரும்பு போலும் முலையும், சிவந்த வாயும், தேமல் படர்ந்த மார்பும் உடையள்; ஆகலின், நீ அவளைக் காணின் என்னைக் கழறி யுரையாய் எ.று.

---

1. தொல்.பொ. 209.

குடிப்பிறப்பும் தலைமையும் தோன்றக் குன்றக் குறவன் காதல் மடமகள் என்ருர். மடமகள், சாயலள், ஐயள், முலையள், வாயினள், மார்பினள் ஆவள் என முடிக்க. ஐ, அழகு. ஏனை மகளிர் கண்டு வியக்கத்தக்க அழகுடைமை பற்றி ஐயள் என்ருர். காமச்செவ்வி எய்திய மகளிர்க்கு மார்பின்கண் பரந்து தோன்றும் தேமல் சுணங்கு எனப்பட்டது. அரும்பு போல்வதனை அதன் வினைப்படுத்து அரும்பிய முலையள் என்ருர். ஆகலின் முதலியன குறிப்பெச்சம்.

குன்றக் குறவன் மகள் தன்ஞல் காதலிக்கப்படும் மடப்பமும் காமச்செவ்வியு முடையள் என்பது தோன்றக் காதல் மடமகள் என்றும், இயற்கைப் புணர்ச்சி பெற்றவிடத்து, அவள் தன் ஆயவெள்ளம் வழிபடச் சென்று சேரக் கண்டு அவளுடைய அருமையும், ஆயவெள்ளத்தின் மிகுதியையும் நோக்கிப் பெற லரியள் என எண்ணி மயங்கின ளுகலின் வரையர மகளிர்ப் புரையும் சாயலள் என்றும் கூறினுன்.

அருமைக்கு வரையர மகளிரைக் கூறுதல் மரபு; பிறரும், ''கெடாஅ நல்லிசைத் தென்னன் தொடாஅ, நீரிழி மருங்கிற் கல்லளைக் கலந்த அவ்வரையர மகளிரின் அரியள்[1]'' என்பது காண்க. சாயற்கு மயிலைக் கூருமையும் இக்கருத்தே பற்றியென அறிக.

முலையும் வாயும் மார்பும் கூறியது, தன் பெருவேட்கையை உணர்த்தற்கு. வரையர மகளிர் போலும் சாயலள் என்றது வரையரமகளிர் விளையாட்டயரும் மலைப்பக்கமென இடமும், அரும்பிய முலையள், செய்ய வாயினள், மார்பினள் சுணங்கே என்றது இயலும் கூறியவாறு. இயற்கைப் புணர்ச்சி எதிர்ப் பாட்டின்கண், தான் அவளை மக்களினத்து மகளோ, தெய்வ மகளோ என ஐயுற்றுத் தெளிந்தாஞகலின், முதற்கண் குறவன் காதன் மடமகள் என்றும், தெய்வமகளோ என மயங்குதற்குக் காரணமாயிருந்த சாயலைப் பின்னர், வரையர மகளிர்ப் புரையுஞ் சாயலள் என்றும் கூறினுன் எனக்கொள்க. (255)

1. அகம். 342.

256 குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ளெயிற்றள்
இளைய ளாயினு மாரணங் கினளே.

இது நீ கூறுகின்றவள் நின்னை வருத்தும் பருவத்தளல்லள் என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

உரை: குன்றத்துக்கண் வாழும் குறவனது அன்புடைய மடப்பம் பொருந்திய மகள் வண்டுகள் மொய்க்கும் கூந்தலையும் குளிர்ந்த தழையையு முடைய கொடிச்சியாவாள்; அவள் வளை அணிந்து முளைபோல் ஒளிவிடும் பற்களையுடைய இளையவ ளாயினும் :கண்டார்க்குத் தடுத்தற்கரிய வருத்தத்தைச் செய்யும் அணங்கேயாவள் எ. று.

''கொடிச்சி, குறிஞ்சிநிலத்து மகளிர்க்குப் பெயர்; ''தேனுறு கதுப்பின் கொடிச்சியர் தந்தை[1]'' என்றும், ''குறவர் மகளிரேம் குன்றுகெழு கொடிச்சியேம்[2]'' என்றும் கூறுதல் காண்க. முளைவாள் எயிற்றள் என்ற விடத்து முளை கூர்மையும், வாள் ஒளியும் குறித்தன. வளையும் எயிறும் இளமை விளங்க நின்றன. அணங்குபோல் கண்டார்க்கு வருத்தம் செய்வது பற்றி அணங்கினள் என்றார். ''ஆயும் அறிவின ரல்லார்க்கு அணங்கு என்ப[3]'' என்பதனால் இது பொருளாதல் தெளிக. உம்மை, தெரிநிலை; ஏகாரம், தேற்றம்.

கூந்தல் முடித்தல், தழையறிந் தணிதல், மொழி நிரம்புதல் முதலியன இல்லாத இளம்பருவத்தள் எனத் தலைமகளது இளமை கூறித் தன்னை மறுத்த தோழிக்கு, ''நன்மல ராய்ந்தணியுங் கூந்தலும், மேதக்க தழையணியும் மதுகையும் உடையளாயினளே'' வருத்தும் பருவத்த ளல்லள் எனல் ஆகாதென்பான், வண்டுபடு கூந்தல் தண்டழைக் கொடிச்சி என்றான். மேலும், முளைவாள் எயிறும், இளமையுமுடையள் என்று தோழி கூறியதனையே

1. அகம். 58. 2. நற். 276. 3. குறள். 918

கொண்டு, அப்பெற்றிய ளாயினும், தனக்கு உரித்தல்லாத அணங்குதற் றன்மை மிக்குடையளாய்த் தன்னுற் காணப்பட்டாரை வருத்துமாறு வல்லளாயினள் என்பான், இளைய ளாயினும் ஆரணங்கினளே என்ருன்.

இது வருத்தும் பருவத்தளல்லள் என்ற தோழிக்குக் கூறியது என்பர் நச்சினர்க்கினியர்;[1] இனி, இளம்பூரணர், "பண்பிற் பெயர்ப்பினும்[2]" என்பதற்கு இதனைக் காட்டினராக, "இஃது இளையள் எனப் பெயர்த்துழித் தலைவன் கூறியது[3]" என்ருர் நச்சினர்க்கினியர். (256)

257. குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமகள்
சேயரி நெடுங்கண் கலிழச்
சேயதாற் றெய்யநீ பிரியு நாடே

இது வரைவிடை வைத்துப் பிரிவல் என்ற தலைமகற்குத் தோழி உடன்படாது கூறியது.

உரை: குன்றத்து வாழும் குறவன் தான் கடவுளை இரந்து வழிபட்டுப் பெற்ற, விளங்குகின்ற வளை அணிந்த இளையவளாகிய இவளுடைய சிவந்த அரி பரந்த நீண்ட கண்கள் நீர் சொரியுமாறு, நீ பிரிந்து செல்லும் நாடு சேய்மைக்கண்ண தாகலின், இவள் நின் பிரிவை ஆற்ருள் என்பதறிக எ. று.

குறவரிடையே பெண்மக்கட்பேறு அரிதாகலின், அவ்வருமை தோன்றக் கடவுட் பேணி இரந்தனன் பெற்ற குறுமகள் என்ருர். ஆடவருள் ஆண்மை வளம் மிக்குற்ருர்க்குப் பெண்மகப்பேறு அரிதாம் என்பது இன்றைய விஞ்ஞான நெறியில்[4] கண்டது. பிரிவின்கண் ஆற்ருமையை முற்படக் காட்டுதலின், நெடுங்கண் கலிழ என்று எடுத்துரைத்தார். வரைவிடைவைத்த பிரிவு

1. தொல். பொ. 21. 3. ஷை. ஷை. 100. 3. ஷை. ஷை. 103.
4. Dr. Mark Henry Frank: Eugenics and Sex Relations for Men and Women. P. 103–5.

சேய்மைக்கண் செல்லும் செலவின் மேலதாதல் அறமன்மையின், சேயதென அதனை ஏதுவாக்கிக் கூறினர். தெய்ய, அசைநிலை.

தந்தை தவம் செய்து பெற்றுத் துன்ப மறியாமை வளர்த்தான் என்பாள், குன்றக் குறவன் கடவுட் பேணி, இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள் என்றும், எனவே, அவள் சிறிது துன்பம் எய்தினும் பொருள் என்றற்குச் சேயரி நெடுங்கண் கலிழ என்றும், நீ பிரிந்து செல்லின் விரைவின் மீளுதல் ஆகா தாகலின் இவள் ஆற்ருது இறந்து படுவாள் என்பாள், சேயதால் தெய்ய நீ பிரியும் நாடே என்றும் கூறினள். சேயரி நெடுங்கண் கலிழ என்றது துன்பத்துப் புலம்பல்.

ஆயரி நெடுங்கண் என்றும் பாடமுண்டு. (257)

258 குன்றக் குறவன் காதன் மடமகள்
அணிமயி லன்ன வசைநடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையு மாயின்
கொடுத்தனெ மாயினுே நன்றே
கெடுத லாஞது நன்னுத றுயரே.

இது வரைவு வேண்டிவிட மறுத்துழித் தோழி தமர்க் குரைப்பாளாய்ச் சொல்லியது; வரையாது வந்தொழுகும் தலைமகற்குத் தோழி அவன் மலைகாண்டலே பற்ருகத் தாங்கள் உயிர் வாழ்கின்றமை தோன்றச் சொல்லிய தூஉமாம் [1].

உரை: குன்றக் குறவனுடைய அன்புடைய மடமகளாகிய அழகிய மயில் போன்ற, அசைந்த நடையினையுடைய கொடிச் சியைப் பெரிய மலைநாடன் வரைந்து கொள்வா ஞயின், அவற்கு நாம் மகட்கொடை நேர்ந்தேமாயின் நன்ரும்; இன்றேல், நல்ல

---

1 இது வரைவு வேண்டிவிட மறுத்தவழித் தமர்க்குரைப்பாளாய் வரையாது வந்தொழுகும் தலைமகற்குத் தோழி அவன் மலைகாண்டலே பற்ருகத் தாங்கள் உயிர் வாழ்கின்றமை தோன்றச் சொல்லியது என அச்சுப் படியிற் காணப்படுகிறது.

நெற்றியையுடைய இவளுடைய துயர் கெடாது மிகுமாகலான் எ. று.

கொடி போலும் மகளிர்க்கு நடையில் அசைவு இயல்பாய் அமைந்து அழகு செய்தலால், அசைநடைக் கொடிச்சி என்ருர். ''அஞ்சிலோதி அசையியற் கொடிச்சி[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க. ஓகாரம் அசைநிலை.

காதல் மாட்சிமைப் படுவது குறித்துத் தலைமகன் களவே விரும்பி வரையாது ஒழுகினுைக, தலைமகள் நுதல் பசந்து மேனி வேறுபட்டு எய்திய துயரத்தை, நன்னுதல் துயர் என்றும், தலைமகனது பெருமையும் தகுதியும் தோன்ற, பெருவரை நாடன் வரையும் ஆயின் என்றும், அவன் வரைவு வேண்டி விட்டவழி அவனது பெருமையும் இவளது துயரும் நோக்காது தமர் மகட் கொடை மறுப்பது நன்றன்று என்பாள், கொடுத்தனெ மாயினோே நன்று என்றும், மறுப்பின், இவள் துயர் கெடுவதின்றி இவட்கு இறந்துபாடு எய்துவிப்பது ஒருதலை என்பாள் கெடுதல் ஆனது என்றும் கூறினாள். ''சான்றோர் வருந்திய வருத்தமும் நுமது வான்றோய் வன்ன குடிமையும் நோக்கித் திருமணி வரன்றும் குன்றங் கொண்டு இவள் வருமுலை யாகம் வழங்கினோே நன்றே[2]'' என்று பிறரும் கூறுவது காண்க.

இரண்டாவதாய் நிற்கும் துறை பொருளாயின், தலைமகன் விரைந்து வரைதல் வேண்டும் என்றற்கு வரையுமாயின் என்றும், தமர் மகட்கொடை மருது நேர்வர் என்பது தோன்றக் கொடுத்தனெ மாயினோே நன்று என்றும், வரைவு நீட்டித்தலால் தலைவியது துயர் கெடாது மிகுவதாயிற்று என்றற்குக் கெடுதலானது நன்னுதல் துயர் என்றும் கூறியவாருகக் கொள்க. வரையாதொழுகும் தலைவனைப் பெருவரை நாடன் எனச் சிறப்பித்தது, நாடனது வரை தன் பெருமையால் தலைவிக்குக் காட்சி தந்து அதுவே பற்றுக்கோடாக வாழச் செய்த மாண்பு பாராட்டி என்க.

---

1. குறுந். 214. 2. தொல். பொ. 114. நச்சி. மேற்.

இன்னு மாருது நன்னுதல் துயரே எனறும் பாடமுண்டு. தலைமகன் வரைவு வேண்டி விட்டமை கண்ட பின்னும் துயர் அமையாது என்றும், மாருது என்ற பாடத்துக்குத் துயர் நீங்கா தாயிற்று என்றும் உரைக்க.

இனி, ''நாற்றமும் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்து ''அவள் வரைவு மறுப்பினும்'' என்புழி நிகழும் கூற்றுக்கு இதனைக் காட்டுவர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். (258)

259. குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுட் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த வீர்நறுங் கையள்
மலர்ந்த காந்த ளாறிக்
கலிழ்ந்த கண்ணளெம் மணங்கி யோளே.

இது வரையத் துணிந்த தலைமகன் வரைவு முடித்தற்குத் தலைமகள் வருந்துகின்ற வருத்தம் தோழி காட்டக் கண்டு இனி அது கடிதின் முடியுமென உவந்த உள்ளத்தனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

உரை : குன்றக் குறவனுடைய அன்புற்ற மடமகள் மன்றத்து நின்ற வேங்கைமலருட் சிலவற்றைக் கொண்டு மலையின்கண் உறையும் கடவுட்கு எடுத்த கோயிலில் எழுந்தருளும் முதற் பொருளாகிய இறைவனை வழிபட்டு இனிய பலியிட்டுக் குளிர்ந்த நறிய கையினையும், மலர்ந்த காந்தளின் மணம் வீசும் நீர் சொரிந்த கண்ணையு முடையளாய் எம்மை வேட்கை மிக்கு வருந்தச் செய்தாள் ; ஆகலின் இவளை இனி விரைவில் வரைந்து கோடல் இயலும், காண் எ. று.

மடமகள் வழுத்திக் கையளாய்க் கண்களால் அணங்கினாள் என இயைக்க. ஊர்நடுவே அமைந்த மன்றத்தின்கண் நிற்பது

1. தொல். பொ. 112.

பற்றி வேங்கை மரத்தை மன்ற வேங்கை என்றார். கடவுட் குலம், கோயில். இது தேவகுலம் எனவும் வழங்கும்; ''ஊரானோர் தேவகுலம்'' என்றாற்போல. முதல் என்றது கோயிலின்கண் எழுந்தருளும் முதற்பொருளாகிய மலைக்கடவுள். தேனாகிய பலி தேம்பலி எனப்பட்டது. வேங்கைப்பூ, பூப்பலியும், குறவர் ஈட்டிய தேன் தேம்பலியுமாயின. தேன் சொரிந்து பூ விட்டு வழிபட்டமையின் கையை ஈர் நறுங்கை என்றார். கூந்தற்குக் காந்தள் மணம் இயற்கை; ''காந்தள் நாறும் குறு மகள்[1]'' என்றமை காண்க.

மனமுருகி வழிபட்டமையின், கண்கள் நீர் சொரிந்தமை பற்றிக் கலிழ்ந்த கண்ணள் என்றார்.

குறவரது கடவுள் மலையில் உறையும் என்பது, ''அணங்கொடு நின்றது மலைவான் கொள்கெனக் கடவுள் ஓங்குவரை பேண்மார்[2]'' என்பதனாலும் அறிக.

பிரியேன் எனச் சூளுறவு செய்தவன், பிரிந்து தன்னை ஆற்றாமையால் மெலியச் செய்தமையான், அவற்குத் தீங்குவரு மென்று அஞ்சிக் கடவுளைப் பரவுகின்றா ளாகலின், கடவுட் குலமுதல் வழுத்தித் தேம்பலிச் செய்த ஈர்நறுங்கையள், மலர்ந்த காந்தள் நாறிக் கலிழ்ந்த கண்ணள் என்றாள். கற்புடைய மகளிர் பிற தெய்வம் தொழும் கடப்பாட்டின ரல்லராயினும், பிரியேன் என்றவன் பிரிந்த கொடுமை பற்றி ''மன்ற மராஅத்த பேமுதிர் கடவுள், கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதுங் கொடிய ரல்லர் எங்குன்றுகெழு நாடர்[3]'' என வேண்டுதலின் அமைந்ததாம். அன்றி, வரையாது வைத்துப் பிரிந்தவன் குறித்த காலத்தில் வந்தெய்தி விரைவில் வரைதல் வேண்டுமெனக் கடவுட்குப் பலியிட்டுப் பரவினள் எனினுமாம். ''யாமும், வல்லே வருக வரைந்த நாளென, நல்லிறை மெல்விரல் கூப்பி, இல்லுறை கடவுட் கோக்குதும் பலியே[4]'' என்றார் பிறரும். தலைப்பெய்த விடத்தன்றி மற்றைய போதுகளில், அவள் நினைவு தன் மனத்தே

1. ஐங். 254. 2. நற். 165. 3. குறுந். 87.
4. அகம். 282.

தோன்றி வேட்கை மிகுவித்து வருத்துதலின், அணங்கியோள் என்றும், என்பொருட்டு இயன்ற காதலாள் கடவுட் குலமுதல் வழுத்தி வழிபடும் அவள் உடன்போக்கு வலிப்பினும் உடன்படுவா ளென்றும், அதனல் தான் அவளை வரைதல் விரைவின் முடியு மென்றும் மகிழ்கின்ருன் என்பதாம். (259)

260. குன்றக் குறவன் காதன் மடமகள்
மென்ருேட் கொடிச்சியைப் பெறற்கரிது
தில்ல
பைம்புறப் படுகிளி யோப்பலள்
புன்புல மயக்கத்து விளைத்தன தினையே.

இது பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி இனிப்புனம் காவற்கு வாரேம் எனக்கூறி வரைவு கடாயது.

ப உரை: விளைந்தன என்றது முற்றின என்றவாறு[1].

உரை: புன்செய்க்கண் உழுது புழுதி செய்யப்பட்ட நிலத்து வித்திய தினை முற்றினமையான், அதனை அறுத்து மனைக்கட் சேர்ப்ப ராகலின், பசிய புறத்தையுடைய கிளிகளை ஒப்புதல் செய்யாள்; ஆகவே, குன்றக் குறவனுடைய அன்புமிக்க மடமக ளாகிய, மெல்லிய தோள்களையுடைய கொடிச்சியை இனிப் பெறுதற்கு அரிது, காண் எ. று.

தினை விளைந்தன; கிளி ஒப்பலள்; ஆகலின், பெறற்கரிது தில்ல எனக் கூட்டி வினைமுடிவு செய்க. புன்புலமயக்கம், காடு கெடுத்து நிலங்கண்டு புழுதியுற உழுது பண்படுத்திய புன்செய் நிலம்; "கானவர் கரிபுன மயக்கிய அகன்கட் கொல்லை[2]" என்பது காண்க. பசுமை நிறம் உடைமை பற்றிக் கிளியைப் பைம்புறப் படுகிளி என்ருர். படுதல், ஈண்டுத் தினைப்புனத்தே தோன்றிக் கதிர்களை மேய்தல். தில்ல, அசைநிலை. இதுகாறும் பெற்றுப்

1. இஃது அச்சுப்படியில் இல்லை. 2. தொல். பொ. 112.

போந்த கூட்டம் இனிக் கழிந்தது என்பதுபட நிற்றலின், ஒழியிசை யுமாம்.

தினை விளைந்து முற்றுதவழி கிளி கடிவேமாய் நின்னைத் தலைப் பெய்வேமாக, நீயும் அவளைப் பெற்று மகிழ்வாயாயினை; அவள் இனி இப்புனம் வாராள் என்பாள், பைம்புறப் படுகிளி யோப்பலள் புன்பல மயக்கத்து விளைந்தன தினையே என்றும், எனவே குறிப் பால் யாம் கிளி கடிந்து பேணிய தினை முற்றிப் பயன் தந்தாங்கு நீ இவளைத் தலைபெய்து கொண்ட நின்நட்பு வரைவால் சிறப் பெய்துதல் வேண்டும் என்று கூறினாளாம். தினைவிளைவினால் தலை மகன் பெறுதற்கு அரிதா யொழிந்த கூட்டத்திற்கு இரங்குவாள், மென்றோள் கொடிச்சி என்றாள்.

''நாற்றமும் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்துக் ''காதல் மிகுதி யுளப்படப் பிறவும்'' என்புழிப் பிறவும் என்ற இலேசினால் இதனை அதன்கண் அமைப்பர் இளம்பூரணர். ''இது, புனங் காவல் இனி இன்று என்பது'' என்பர் நச்சினார்க்கினியர். (260)

1. தொல். பொ. 114.

27

கேழற்பத்து

கேழல் என்பது காட்டுப்பன்றி. குறிஞ்சி நிலத்தில் வாழும் விலங்குகளுள் இது பொருளாக இப்பகுதிக்கண் வரும் பாட்டுக்கள் அமைந்திருப்பது பற்றி இப்பத்து இப்பெயரினைப் பெறுவதாயிற்று. மக்கள் வாழும் இடங்களில் ஒருசிலரால் வளர்க்கப்பெறும் பன்றி யினத்தைச் சேர்ந்தது கேழல்.

ஒரு காலத்தில் இப்பன்றிகள் யாவும் காடுகளில் வாழ்ந்து வந்தன. 5000 ஆண்டுகட்கு முன்பே மக்கள் பன்றிகளைப் பிடித்து வளர்க்கும் பழக்கம் சீனவில் உண்டாகியிருக்கிறது. மேனாட்ட வர்க்கு கி. மு. 1500 ஆண்டு அளவில் பன்றியாகிய இவ்விலங் குண்மையே தெரிய வந்தது.

பன்றியினத்திற் பல்வேறு வகைகள் இருந்துள்ளன; அவை பெரும்பாலும் மக்களால் அழிப்புண்டு ஒழிந்தன. இப்போது இரு வகை பன்றிகளே நிலவுலகில் வாழ்கின்றன. நம் நாடுகளில் வாழ்ந்தனவும் வாழ்வனவும் ஒரு வகை [1]. அமெரிக்கப் பன்றி வெள்வாய் [2] என்றும் மிடற்றணி [3] என்றும் இருவகையாகும்.

---

1. The peccaries of America. 2. White lieped.
3. Collard peceary.

இவை இரண்டனுள் வெள்வாய்ப் பன்றி கொடுமையுடையது; மிகக்கூரிய கோடுகொண்டு மக்களுக்குப் பெருந்தீங்கு செய்ய வல்லது. சில போதுகளில் இவை வேட்டை நாய்களையே தாக்கி நார் நாராய்க் கிழித்தெறிந்து விடுவதும் உண்டு. ஏனை மிடற்றுப் பன்றி அத்துணைக் கொடுமையுடையதன்று. இருவகையும், பழ வகைகளையும் கிழங்குகளையும் தின்று உயிர் வாழ்வன. பிற விலங்குகள் செய்துள்ள வளைகளிலும் மரப்பொந்துகளிலும் இவை உறைகின்றன.

அமெரிக்கப் பன்றியின் இனமல்லாத ஏனைப்பன்றிகள் அமெரிக்க நாடுகளின் வேறான ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா, ஆத்திரேலியா என்ற இந்த நாடுகளில் வாழ்கின்றன. நம் நாட்டுக் கேழல் இந்த இனத்தைச் சேர்ந்தவை. இவை நம் நாட்டுக் காடுகளிலும் ஏனை ஐரோப்பாவிலும், வட ஆப்பிரிக்கப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. கிழக்கிந்தியத் தீவுகளில் ஒரு வகைப் பன்றிகள் உண்டு. அவற்றிற்கு நான்கு கோடுகள் கலைமான் கொம்புபோல் வளைந்து தோன்றுகின்றன; அவற்றின் காலும் மெல்லியவாய் நீண்டிருக்கும். ஆணுக்கு நான்கு கோடு உண்டு. அதனால் அவற்றைக் கலைப்பன்றி[1]'' என வழங்கு கின்றனர். அவை நன்கு நீந்தவும் வல்லன; ஒரு தீவுக்கும் மற்றொரு தீவுக்கும் இடையில் உள்ள கடற்பகுதியை மிக எளிதில் அவை நீந்திச் செல்கின்றன.

ஆப்பிரிக்காவில் சகாராவின் தென் பகுதியில் சில கேழற் பன்றிகள் வாழ்கின்றன. அவற்றுள் சில மிக நல்லனவாகும். ஒருசில கொடியனவும் உண்டு. நீண்ட வாலும் பருத்த உடலும் உடைய அவை பெரிய பெரிய கோடுகளைக் கொண்டுள்ளன. பிற விலங்குகள் குடைந்து விட்டுச் சென்ற மண்ணளைகளில் இப் பன்றிகள் புகுந்து வாழும். இந்தப் பன்றி மண்ணளைக்குள் புகும் போது தன் முகத்தை வாயிற் புறமாக வைத்துப் பின்புறமாகவே அளைக்குள் செல்லும்; அவ்வாறு செய்வது, பகையுயிர் ஏதேனும் தன்னைத் தொடர்ந்து வரின் அதனை எளிதில் தாக்குதற்காகவே

1. Pig Deer.

யாம். சென்ற 1904-ம் ஆண்டு இத்தகைய பன்றியினத்தில் மிகப் பெரிய ஒன்று ஆப்பிரிக்காவில் காணப்பட்டது.

மேனுடுகளின் சில பகுதிகளில் இக் கேழலினம் மறைந்து போயின பிரிட்டன் தீவுகளில் இவை நானூறு ஆண்டுகட்கு முன்பே மறைந்து போயின. ஐரோப்பாவில் சதுப்புநிலப்பகுதி களில் ஒருசில அருமையாய்க் காணப்படுகின்றன.

ஒரு காலத்தில் பிரிட்டன்தீவுகளில் கேழல்களே வேட்டை யாடும் உரிமை ஒருசிலர்க்கே இருந்தது. பன்றி வேட்டை யாடுதலேப் பாராட்டி மேனுட்டுப் பாவலர் பாட்டுக்கள் பல பாடி யுள்ளனர். கிருத்துவ விழாவில் பன்றியின் தலேக்கு நன்மதிப்பு உண்டு; அவ்விழாவில் பன்றியின் தலேவன் பொருளாகப் பெருமிதமான செயற் சிறப்பும் பாராட்டும் நடைபெறுமாம். போர்வீரர் மறத்துக்குப் பன்றி நல்ல எடுத்துக்காட்டாதலு முண்டு. கேழல் வேட்டம் புரிவோர் குதிரை யூர்ந்தும் வேட்டை நாய்களேத் துணைகொண்டும் செல்வர். இனி நம் நாட்டுக் கேழற் பன்றிகளேக் காண்பாம்.

நம்நாட்டு மலேக்காடுகளில் இக்கேழல் தன் னிச்சையில் வளர்ந்து கொழுத்து உடல்வளத்திலும் மெய் வன்மையிலும் உருவமைப்பிலும் சிறிது வேறுபட்டுள்ளது. அதன் கீழ்வாயில் முன்னே இருபற்கள் கோடுபோல் மேல்வாய்க்குமேல் வெளியே நீண்டு மிக்க கூர்மையும் பெருவன்மையும் கொண்டுள்ளன. அதன் உடல்மயிர் கரியநிறமும் வன்மையும் உடையது. பிடரி மயிர், ஏனே உடற் பகுதிகளில் உள்ளவற்றினும் வலிமிகுந்து இருப்பூசிபோல் நிமிர்ந்து நிற்கும்.

ஊர்ப்புறங்களில் வாழும் பன்றிகளினும் காட்டுப் பன்றியாகிய கேழல்கள் உடல் வன்மையிலும் விரைந்த செலவிலும் மேன்மை யும் சிறப்பும் உடையவை. மூன்றடி உயரமும் நாலரையடி நீளமும் உடையனவும் இவற்றுள் உண்டு. இவை எருமை போலச் சேற்றுநிலத்திலும் புல்லும் புதலும் நிறைந்த நீர்ப்

பாங்குகளிலும் வாழும் இயல்பின. பகற்போதில் ஞாயிற்றின் வெம்மையை விரும்பாது இருட்செறிவுகளில் வீழ்ந்து கிடந்து இருட்போதுகளில் இரை தேடி யுண்பது இவற்றின் பண்பு. இவற்றுள் முதுமையுற்றவை மட்டில் தனித்து உறையும்; ஏனை யவை கூட்டத்தில் இருக்கும்.

பன்றியின் பெண் ஒருகாலத்தில் ஆறுமுதல் பத்துக் குட்டிகளை ஈனும் என்ப. பெண்ணினும் ஆணே கொடுமை மிகுந்த தெனினும், புனிறு தீராக் காலையில் பெண்பன்றியின் வெம்மையும் கொடுமை யும் சிறந்து தோன்றுகின்றன. கேழற்குட்டிகள் மிக்க மென்மை யுடையவை யாதலின், அவற்றை நாடி உண்டற்கு பகையுயிர்கள் பல வேட்டையாடுகின்றன. ஒரு பன்றி பல குட்டிகளை ஈன்ற தாயினும் முடிவில் எஞ்சி நிற்பன ஒன்று இரண்டே. பன்றிக் குருளையின் உடலில் மெல்லிய வரிகள் பல காணப்படும்.

நம் தமிழகத்தில் கேழல்கள் குறிஞ்சி முல்லையாகிய இரு பகுதிகளிலும் மிகுதியாக இருந்துள்ளன. பாலைப்பகுதியில் மிக அருமையாக உளது. இதன் கரிய நிறமும் பிடரிமயிரும் கண்ட சான்றோர் ''இரும்பிணர் எருத்தின் இருன்துணிந் தன்ன ஏனம்[1]'' என்று குறிக்கின்றார். இது பெரும்பாலும் இரவுப்போதில் இரை' தேடித் திரிவதாகலின், இதன் கட்பார்வையை வியந்து ''கடுங்கட் கேழல்[2]'' என்றும், இதனுடைய வளைந்த பல் யானைக்கோடு போலத் தோன்றுவது பற்றி மருப்பு என்றும் கூறுவர்; ''வளைமருப்பு ஏனம்[3]'' என்றும் ''கேழல் வளை மருப்பு[4]'' என்றும் ''வளை வெண் மருப்பின் கேழல்[5]'' என்றும் பண்டையோர் வழங்குவது காண்க. கேழற் பன்றியின் கரிய முகத்தில் வெண்ணிறம் கொண்டு வளைந்து தோன்றும் மருப்பை, அகத்திப் பூவோடும் இளம்பிறையோடும் உவமஞ்செய்து இன்புறுவது தமிழ்ப்புலமைச் செல்வத்தின் செயல்வகையுள் ஒன்று: ''புகழா வாகைப் பூவின் அன்ன வளைமருப் பேனம்[6]'' எனவும் ''இளம்

1. மலைபடு. 246-7. 2. புறம். 190. 3. பெரும்பாண். 110
4. அகம். 223. 5. ஐங். 265. 6. பெரும்பாண். 109-10.

பிறை யன்ன கோட்ட கேழல்[1]'' எனவும் வருவனவற்றுல் அறிக.

குறிஞ்சி நிலத்தில் வாழும் புனவர்கட்கு இக்கேழல்கள் ஒருவகையில் உதவியாகவும் பல வழிகளில் பகையாகவும் இருந்துள்ளன. தினைப்புனங்கள் தினை விதைப்பதற்கு முன் கரம்புபட்டுக் காந்தளும் கோரைப்புல்லும் செறிந்திருக்கும்; புதுப்பெயல் பொழிந்ததும், இக்கேழல் அப்புனத்துள் புகுந்து காந்தள் முதலியவற்றின் கிழங்குகளை அகழ்ந்து உண்ணும்; அதனுல் புனக்கொல்லை முழுதும் நன்கு உழுதது போல் புழுதியாய் விடும்; அது காணும் புனவர், வேர் அறுந்து வாடிக்கிடக்கும் காந்தள் முதலியவற்றைக் களைந்து விட்டுத் தினை விதைத்தற் குரிய காலம் எய்தியதும் உழாமலேயே அத்தினையை விதைத்து விடுவர்; தினையும் அவ்வழியே நன்கு வளர்ந்து விளைந்து சிறக்கும். ''மலர்ந்த காந்தள், கொழுங்கிழங்கு மிளிரக்கிண்டிக் கிளையொடு கடுங்கட் கேழல் உழுத பூழி, நன்னுள் வருபதம் நோக்கிக் குறவர், உழாது வித்திய சிறுதினை[2]'' என்றும், ''கிழங்ககழ் கேழல் உழுத சிலம்பில், தலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்[3]'' என்றும் அறிஞர் அறிவிப்பது காண்க.

தான் கிழங்கு அகழ்ந்து செய்த பூழியில் புனவர் வித்தி விளைக்கும் தினையைக் காணும் போது தனக்கு அதனை உண்டற்கு உரிமையுண்டு என்று கருதினுற் போல, இரவுப்போதில் அது தன் கிளைசூழ வந்து தினையை மேய்ந்தழிப்பது உண்டு; ''மென்றினை மேய்ந்த தறுகட் பன்றி[4]'' ''நன்பொன் னன்ன புனிறுதீர் ஏனல், கேழல் மாந்தும்[5]'' எனச் சான்ரேர் குறிப்பன காண்க. இவ்வாறு தாம் விளைக்கும் தினைக்கு ஊறு செய்து அழிப்பது பற்றிக் கானவர் இப்பன்றியை வேட்டம் புரிந்து கொல்லுதலை மேற்கொண்டனர். தொகை நூல்களில் பன்றியை உணவு குறித்து வேட்டை யாடுவது அருகியே உளது. பன்றியை வீழ்த்தற்குப் பெருங்கற்களின் இடையே பொறி யமைத்து

1. ஐங். 264. 2. புறம். 168. 3. ஐங். 270.
4. ஷை. 261. 5. ஷை. 263.

வைப்பதும் உண்டு. இதனை "விளைபுனம் நிழத்தல் அஞ்சிப் புழை தொறும் மாட்டிய இருங்கல் அரும்பொறி உடைய ஆறே[1]" என்றும், "தினையுண் கேழல் இரியப் புனவன் சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்[2]" என்றும் வருவனவற்றால் அறியலாம். காட்டுயானைகளைப் பிடிப்பதற்குச் செய்வதுபோல், இவற்றையும் வரும் வழியில் குழிகள் அமைத்து அவற்றுள் வீழ்வித்துக் கொல்வது பண்டு குறவர் கொண்டிருந்த தொரு நெறி. "சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின், வீழ்முகக் கேழல் அட்ட பூசல்[3]" என மாங்குடி மருதனார் குறிக்கின்றார். நீர்நிலை கட்கு நீர் அருந்த வருங்கால் ஆங்கே ஒளிந்திருந்து இவற்றைத் தாக்கியும் கொல்வதுண்டு; "வான்மடி பொழுதில் நீர்நசைஇக் குழித்த அகழ்சூழ் பயம்பின் அகத்தொளித் தொடுங்கிப், புகழா வாகைப் பூவின் அன்ன, வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கும் அரைநாள் வேட்டம்[4]" என்பதனால் இது தெளியப்படும்.

இக்கேழல்களைச் செந்நாய்க்கூட்டமும் புலியும் மிகவும் விரும்பிக் கொன்று தின்கின்றன. "செந்நாய் கேழலைக் கொன்று குருதி சொரிய ஈர்த்தேகும் எனவும் அக்குருதியைக் கழுகினம் இருந்து அருந்துமெனவும்[5]" புலியேறு கேழலைத் தாக்கி வீழ்த்துங்கால் அது வலத்தில் வீழாது இடப்பக்கத்தே விழுமாயின், "புலி அன்று உண்ணாது கழியு மெனவும்[6]" "செந்நாய் தன் பிணவின் பொருட்டு இக்கேழலை வேட்டம் புரியுமெனவும்[7]" சான்றோர் பலவகையில் பாடியுள்ளனர். இப்போது கேழற் பன்றியின் ஊனை மக்களிற் பலர் உண்கின்றனர்.

உலகிலுள்ள கொடிய விலங்குகளில் நம்நாட்டுக் கேழற் பன்றியே தலையாயது என்று உயிர் நூலறிஞர் உரைக்கின்றனர். பகையினத்தால் மிகம்பெரும் புண்பட்ட போதிலும் வாய்த்த விடத்து மக்களையும் குதிரைகளையும் பெரிய களிற்றியானைகளையும் ஒரு சிறிதும் தயக்கமின்றித் தாக்கும் தறுகண்மையால் இக்

---

1. மலை படு. 193-5. 2. நற். 119. 3. மதுரை. 294-5.
4. பெரும்பாண். 105-11. 5. அகம். 111. 6. புறம். 190.
7. ஐங். 323.

கேழல்கள் சிறந்து விளங்குகின்றன. பெருங்குதிரை யொன்று சிக்கிக் கொள்ளின் அதனை ஒரே குத்தில் இரண்டாய்ப் பிளந் தெறிந்துவிடும் இப்பன்றி விரைவாக ஓடக்கூடியதே ; ஆயினும் நெடுந்தொலைவு இதனால் ஓட இயலுவதில்லை.

200 ஆண்டுகட்குமுன் ஐரோப்பியர் நம்நாட்டில் வந்து இடம் பெற்றபோது இக்கேழற் பன்றியை வேட்டையாடத் தொடங்கினர். தொடக்கத்தில் கரடிகளை வேட்டையாடி வந்தோர், அவற்றின் தொகை குறைந்து போகவே இப்பன்றிகளை வேட்டையாடத் தொடங்கினர். மேனாட்டார் குதிரை யூர்ந்து வேட்டை நாய்கள் துணை செய்ய இக்கேழல்களை வேட்டையாடுவர். அவர்கள் எறியூசி கொண்டு முதலில் வேட்டையாடினர் ; அதன்பின் ஐந்தடி நீள முடைய எறிவேல் கொண்டு வேட்டையாடுவாராயினர். பிரிட்டன் நாட்டில் நடக்கும் நரி வேட்டைபோலவே இவர்கள் இவ்வேட்டை யாடச் செய்தனர். இப்பன்றி வேட்டைக்கெனக் கழகங்கள் நிறுவிப் போட்டிப் பந்தயங்கள் நடத்தினர். அவற்றுள் 1869-ம் ஆண்டு நடந்த பன்றிவேட்டையே சிறந்ததாகப் பாராட்டிக் கூறு கின்றனர்.

1800 ஆண்டுகட்குமுன் கானவன் ஒருவன் பன்றி வேட்டம் புரியச் சென்றவன், அப்பன்றியின் மறமாண்பு கண்டு வியந்த திறத்தை இந்நூலாசிரியரான கபிலர் கூறுவது ஈண்டு நினைவு கூர்வது நன்று ; அதனை இக் குறிஞ்சிப்பகுதி முன்னுரைக்கண் காண்க. இனி இக்கேழற் பன்றி பொருளாக இப்பகுதிக்கண் வரும் பாட்டுக்களைக் காண்பாம்.

261. மென்றினை மேய்ந்த தறுகட் பன்றி
வன்க லடுக்கத்துத் துஞ்சு நாடன்
எந்தை யறித லஞ்சிக்கொல்
அதுவே தெய்ய வாரா மையே.

இஃது, அல்லகுறிப் பட்டுத் தலைமகன் நீங்கினமை அறியாதாள் போன்று தோழி பிற்றை ஞான்று அவன் சிறைப்புறத்தானாய் நிற்பத் தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை: தினைமேய்ந்த பன்றி கல்லடுக்கத்துத் துஞ்சும் நாடன் என்றது, தான் வேண்டின இன்பம் நுகர்ந்து இனிது கண்படுவதல்லது வரைதற்கு வேண்டுவன முயலாதான் எ. று.

உரை: மெல்லிய தினையை மேய்ந்த மறம் பொருந்திய பன்றி, வலிய கற்கள் நிறைந்த மலைப்பக்கத்தே உறங்கும் நாடனாகிய தலைமகன் வாராதனது, நம் தந்தை அறிவன் என்று அஞ்சியே போலும்; பிறிது காரணம் இன்மையின், அதுவேயாம் எ. று.

தினையின் தாளும் விளையும் செவ்வியிலுள்ள தினையும் மிக்க மென்மையுடைமை பற்றி மென்றினை என்றும், மக்களுடைய ஆரவாரத்துக்கும் அச்சுறுத்தலுக்கும் பின்னிடாது கருதியதைச் செய்தே முடிக்கும் உறைப்புக் கேழலின் சிறந்த பண்பாதலின், தறுகட்பன்றி என்றும் சிறப்பித்தார். நாடன் வாராமை அஞ்சிக் கொல் என முன்னும் கூட்டிக் கொள்க. வாராமை அதுவே என்றது துணிந்துரைத்தல். கொல், ஐயம். தெய்ய, அசைநிலை. கேழல் தினைமேய்தலை, ''தினையுண் கேழல் இரிய'' எனப் பிறர் கூறுதலானும் அறிக.

தலைமகன் சிறைப்புறத்தானாதலை அறிந்து அவன் கேட்ப உரைக்கின்றமையின், அவன் வாராமைக்குக் காரணம் ஆராய்வாள் போன்று, தந்தையின் வலியும் கொடுமையும் அறிந்து, வரின் தனக்கு ஏதமாம் என்று உணர்ந்து அஞ்சியே தலைமகன் வாராதாயினான் எனப்படைத்துமொழிவாள், எந்தை அறிதல் அஞ்சிக்கொல் என்றவள், மேலும் அதுவே தெய்ய வாராமையே என்று கூறினாள். இவ்வாறு ஒரு காரணம் படைத்துக் கொண்டு கூறுதலால், அஃது உண்மை யென வற்புறுத்துவாள் போன்று, ஐயமும் தெளிவும் முறையே தொடுத்துக் கூறினாள். அல்ல குறிப்பட்டுத் தலைமகன் நீங்கினான் என்பதனை அறிந்துவைத்தும், அறியாதாள் போன்று, வரைவு கடாவும் கருதினளாய்க் கூறுதலின், அதுவே தெய்ய என்றாள்.

1. நற். 119.

அறிந்தது ஒன்றனை அறியாதாள் போன்று தோழி கூறுதல் வழுவாயினும், வரைவுகடாதற்கண் அமையும் என்க; என்னை: ''இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி, நிரம்ப நீக்கி நிறுத்த லன்றியும், வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும், நல்வகை யுடைய நயத்திற் கூறியும், பல்வகை யானும் படைக்கவும் பெறுமே[1]'' என்ப வாகலின். இது வந்த கிழவனை மாயஞ் செப்பியது.

புனங்காப்போர்க்கு அஞ்சாது தான் கருதிய மென்றினையைத் தன் தறுகண்மையால் வயிறுர மேய்ந்த பன்றி வன்கல் லடுக்கத்து இனிது உறங்கும் நாட னாயினும், நின் தந்தைக்கு அஞ்சிய அச்சத்தால் கருதிய கூட்டமும் பெறாது தன்மனைக்கண் ஒடுங்கினன் என உள்ளுறைக் கண் துனியுறு கிளவி தோன்றக் கூறுமாறு காண்க. பழைய வுரைகாரர்க்கும் இதுவே கருத்தாதல் அறிக.

அதுவே மன்ற என்றும் பாடம். வாராமைக்கு ஏது அச்சம் என்று தோழி கூறுவது படைத்து மொழியே யன்றி உண்மை யன்று ஆதலின், தெய்ய என்ற பாடமே சிறைப்புடைத்தாதல் அறிக. மன்ற என்பது தேற்றப் பொருட்டு.

''மறைந்தவற் காண்டல்'' என்ற சூத்திரத்து ''அச்சம் நீடினும் என்பதற்கு இதனை உதாரணமாக்குவர் தொல்காப்பிய உரைகாரர்[2]'' (261)

262 சிறுதினை மேய்ந்த தறுகட் பன்றி
துறுக லடுக்கத்துத் துணையொடு வதியும்
இலங்குமலை நாடன் வரூஉம்
மருந்து மறியுங்கொ ரோழியவன் விருப்பே.

இது, வரைந்துகொள்ள நினைக்கிலன் என வேறுபட்ட தலைமகள், அவன் நின்மேல் விருப்பமுடையன், நீ நோகின்றது என்னை? என்ற தோழிக்குச் சொல்லியது.

1. தொல். பொ. 237. 2. இளம். தொல். பொ. 109.
நச்சி. தொல். பொ. 111.

ப உரை: சிறுதினை மேய்ந்த தறுகட்பன்றி துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும் நாடன் என்றது, களவொழுக் கத்தான் வரும் சிற்றின்ப மின்றியே வரைந்துகொண்டு நின்னெடு ஒழுகுவான் எனத் தோழி கூறியவதனைத் தலைமகள் கொண்டு கூறிற்று எனக் கொள்க.

உரை: தோழி, சிறியவாகிய தினையை மேய்ந்த தறு கண்மையையுடைய பன்றி, நெருங்கிய கற்கள் நிறைந்த மலைப் பக்கத்தில் தன் துணைப்பன்றியொடு தங்கும் விளங்குகின்ற மலை நாடன் வருதற்குக் காரண மாகிய அவனது அருள், யானுற்ற நோய்க்கு மருந்தாகலின், அத்தன்மையை அவனது அருளுள்ளம் அறியுங் கொல்லோ எ. று.

பன்றி துணையொடு வதியும் மலை, இலங்கும் மலை என இயையும். தினை மேய்ந்த பன்றி அடுக்கத்து வதிதல், "சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல், துறுகட் கண்ணிக் கானவர் உழுத, குலவுக்குரல் ஏனல் மாந்தினாங்கர், விடரளைப் பள்ளி வேங்கை யஞ்சாது, கழைவளர் சாரல் துஞ்சும் நாடன்[1]" என்பதனாலும் அறியப்படும்.

வரூஉம் மருந்து என்பது "நின்முகம் காணும் மருந்தினேன் என்னுமால்[2]" என்புழிப் போலக் காரணகாரியப் பொருள் தந்து வினைப்பெயர் கொண்டது. விருப்பு ஆகுபெயர். காரணகாரியங் கள் தம்முள் வேறல்ல வாகலின் "காட்சியை மருந்தென்றான்" என்பர் சேனாவரையர்; அங்ஙனமே வரவினை மருந்தென்றார் எனி னும் ஒக்கும் என்க. மருந்து ஈண்டு மருந்தாந்தன்மை. 'வறிதால் இகுளையென் யாக்கை, இனி, அவர் வரினும் நோய்மருந்தல்லர், வாராது அவண ராகுக காதலர்[3]" என்புழியும் வரவு மருந்தென வழங்கப்படுமாறு உணர்க.

அவன் வராமை குறித்து மெலிந்து வருந்துகின்றவள், தோழி "நின்மேல் அன்புடையனாகலின் நீ மெலிகின்றது என்னை" என

1. நற். 386. 2. குறிஞ். கலி. 24. 3. நற். 64.

அவன் விருப்பமுடைமை உணர வுரைத்த சொற்களான் மகிழ்கின்ருளாகலின், மருந்தும் அறியுங்கொல் என்றும், ''அவன் விருப்பம் உணர்த்தும் நின் சொற்கள் யான் ஆற்றியிருத்தற்கு மருந்தானுற் போல அவன் வரைந்து கொள்ளுதலேயும் செய்யுமாயின் நன்றென்பாள், வரூஉம் மருந்தும் அறியுங்கொல் என்றும், அவள் வந்தாலன்றித் தன் மெலிவு தீராது என்பாள் அவன் வரவினேயே மருந்து என்றும் கூறினுள். அவனது விருப்பமுடைமை தன் வரைப்பட்ட என்னேத் தன் வாராமையால் வருத்துதலின் நோயாதலே யன்றி, வரலால் அது தீரும் மருந்துமாதலே அறியுங்கொலோ என்பதுபட நிற்றலின், உம்மை எச்சப்பொருட்டு.

''மறைந்தவற் காண்டல்[1]'' என்பதன் உரையில், பிரிந்த வழிக் கலங்கியதற்குச் செய்யுள் காட்டலுற்றவர், ''உறங்காமையும். உண்ணுமையும் கோலஞ் செய்யாமையும் சொல்லுதல்'' என வுரைத்து, ''இவ்வழி நீ வருந்தாதி, நின்மாட்டு அன்பு பெரிதுடையன்'' எனத் தோழி ஆற்றுவித்தவழி ஆற்ருமையால் தலேவி கூறியதற்கு இதனேக் காட்டுவர் இளம்பூரணர். (262)

263. நன்பொ னன்ன புனிறுதீ ரேனல்
கட்டளே யன்ன கேழன் மாந்தும்
குன்றுகெழு நாடன் ருனும்
வந்தனன் வந்தன்று தோழியென் னலனே.

இது, வரைவிடைவைத்துப் பிரிந்த தலேமகன் மீண்டமை அறிந்த தலேமகள், ''நீ தொலேந்த நலம் இன்று எய்திய காரணம் என்னே ?'' என்ற தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: பொன் போன்ற தினேயைக் கேழல் மாந்தும் நாடன் என்றது தன் நாட்டு வாழும் விலங்குகளும் தமக்கு வேண்டுவன குறைவின்றிப் பெற்று இன்பம் நுகரும் நாடன் எ.று.

---

1. தொல். பொ. 109.

உரை: தோழி, நல்ல பொன்னை யொத்த ஈன்றணிமை தீர்ந்த தினையைப் பொன்னுரை காணுங் கட்டளைக் கற்போலும் நிறமுடைய பன்றி மேய்ந்து உண்ணும் குன்றுகள் பொருந்திய நாடனும் வந்தா னாகலின் என் நலனும் வந்து எய்துவதாயிற்று எ. று.

பொன்னுக்கு நன்மை ஓடுதலின்மை. புனிறுதீர் ஏனல் என்றது முற்றின தினையை. "புனிறுதீர் பெருங்குரல் நற்கோட் சிறுதினை [1]" எனப் பிறரும் கூறுப பழுத்து முதிர்ந்த தினையை நன் பொன் அன்ன ஏனல் என்றதற் கேற்ப அதனிடைப் புகுந்த கரிய நிறத்தை யுடைய கேழலைக் கட்டளை யன்ன கேழல் என்றார். பொன்னும் கட்டளையும் நிறம்பற்றி வந்த உவமம். "புனவன் துடவைப் பொன்போற் சிறுதினை [2]" என்றும், "பரூஉமயிர்ப்பன்றி பொன் னுரை கட்டளை கடுப்பக் கான்வரக், கிளையமல் சிறுதினை விளைகுரல் மேய்ந்து, கண்ணினிது படுக்கும் நன்மலை நாடன் [3]" என்றும் சான்றோர் கூறுதல் அறிக.

நாடன் தானும் என்றது படுத்தலோசையால், தலைமகன் பிரிந்து நீட்டித்தமையும் தலைமகளது ஆற்றுமை மிகுதியும் உணர்த் திற்று; என்னை, நெஞ்சின் மிக்கது வாய் சோர்ந்து சொல்லாய் நிகழு மாகலின். எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. அவன் வர வருதலும் பிரியத் தொலைதலும் என் நலத்துக்கு இயல் பென்பாள், நாடன் தானும் வந்தனன் வந்தன்று தோழி என் நலனே என்றாள். "நீ இவண் வருஉங்காலை, மேவரு மாதோ இவள் நலனே தெய்யோ [4]" என்று முன்னரும் கூறியவாறு காண்க. (263)

264. இளம்பிறை யன்ன கோட்ட கேழல்
களங்கனி யன்ன பெண்பாற் புணரும்
அயந்திகழ் சிலம்ப கண்டிகும்
பயந்தன மாதோநீ நயந்தோள் கண்ணே.

---

1. குறிஞ்சி. 37-8. 2. குறுந். 133. 3. அக. 178.
4. ஐங். 238.

இது வரையாது வந்தொழுகும் தலைமகனைப் பகற்குறிக் கண்ணே எதிர்ப்பட்டுத் தோழி வரைவுகடாயது.

ப. உரை : கேழல் பிணவைப் புணரும் என்றது .... அறி வில்லாதன ஒழுகும் ஒழுக்கமும் நின்மாட்டுக் கண்டிலேம் எ. று.

உரை கலை முதிராத பிறைத்திங்கள்போல் வளைந்த மருப் பினையுடைய பன்றி களங்கனிபோற் கரிய பெண்பன்றியோடு கூடிச் சென்று அருந்தும் நீர் மிக்க சிலம்பினையுடையாய், நீ விரும்பும் இவளுடைய கண்கள் பசலை பூத்திருத்தலைக் காண்பாயாக எ. று.

பன்றியின் கோடு இளம்பிறை போலும் வடிவும் நிறமும் உடைமை பற்றி இளம்பிறை யன்ன கோட்ட கேழல் என்றார். ''பிறையுறழ் மருப்பின் கருங்கட்பன்றி [1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. களங்கனி, களாவின்பழம்; இது கருநிறமுடையது; ''களங்கனியைக்காரெனச் செய்தாரும் இல் [2]'' என்ப. அயம் நீர்; ''அருவி ஆர்க்கும் அயந்திகழ் சிலம்பு [3]'' என்பதனாலும் அறிக. புனர்ந்து சென்று அருந்தும் அயம் எனற்பாலது, புணரும் அயம் என நின்றது. எதுகை நோக்கிப் பசந்தன எனற்பாலது பயந்தன என்றாயிற்று.

நீ வரைந்து கொள்ளாது குறிவழி யெய்திக் கூட்டம் தருகுவை; ஆயினும் நின் பிரிவு நினைந்து இரங்கியும் ஏதம் ஆய்ந்து மேனி மெலிந்து வேறுபட்டுக் கண் பசந்தும் தலைமகள் வருந்துகின்றா ளாகலின், பயந்தன மாதோ நீ நயந்தோள் கண்ணே என்றும், நின்னால் விரும்பப்பட்டாள் இவ்வேறுபாடு எய்த, அதனை நீ அறியாதிருத்தல் ஆகாது என்பாள், நீ நயந்தோள் கண்ணே என்றும் கூறினாள். இது தலைவனைப் பேதைமை யூட்டியது. பயந்தன மாதோ என்றது பசலைபாய்தல். இனி, இவ்வேறுபாடு தமர் அறியின் இவளை இற்செறிப்பா ராகலின் நீ வரைந்து கொள்வதே கடன் என வரைவு கடாயவாறும்.

---

1. அகம். 322. 2. நாலடி. 103. 3. நற். 365.

கேழற் பன்றி வேண்டுவதாகிய நீரைத் தன் பெண்பன்றி யோடு கூடிச் சென்று அருந்துவது போல, நீயும் நினக்கு வேண்டுவதாகிய இன்பத்தை நின் காதலியை வதுவையிற் கூடி நுகர்தல் வேண்டும் எனத் தோழி குறிப்பால் வரைவு கடாயினு ளாயிற்று. இவ்வுள்ளுறைப் பொருள் பழைய வுரையில் சிதைந்து விட்டது. (264)

265. புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பிற் கேழற் புரக்கும்
குன்றுகெழு நாடன் மறந்தனன்
பொன்போற் புதல்வனோ டென்னீத்தோனே.

இது, பரத்தையிடத்தானாகத் தலைமகன் விடுத்த வாயின் மாக்கட்குத் தலைமகள் சொல்லியது.

ப. உரை : புலியாற் கொல்லப்பட்ட தன் பிணவின் குட்டி யைத் தந்தையாகிய கேழல் புரக்கும் நாடன் என்றது பரத்தையர் காரணமாக யான் இறந்தால் தன் புதல்வனைத் தானே வளர்க்கத் துணிந்து என்னை நீத்தான் என்பதாம்.

உரை : புலியாற் கொல்லப்பட்ட பெண் பன்றியின் அழகிய வரிகள் பொருந்திய குட்டியை வளைந்த வெண்மையான கோட்டினை யுடைய ஆண் பன்றி காக்கும் குன்றுகள் பொருந்திய நாடன் எம்மிடை வருதலை மறந்து பொன்போலும் மகனையும் அவற்குத் தாயாகிய என்னையும் நீத்தொழிந்தா னாகலின் அவன் பொருட்டு நீவிர் வாயில் வேண்டுவது என்னை ? எ. று.

புலிகொல் பெண்பால் என்னும் தடுமாறு தொழிற்பெயர் பூவரிக் குருளை கேழல் புரக்கும் என்ற ''மெய்யறி பனுவலின் வேற்றுமை தெரியப்பட்டது[1]''. மறந்தனன், முற்றெச்சம்; பெறற் கருமை பற்றிப் புதல்வனைப் பொன்னோடு உவமித்தல் பண்டையோர் மரபு. ''தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும் பொன்போற்

1. தொல். சொல். 56.

புதல்வன் [1]'' என்று பிறரும் கூறுவர். பொன் பெறற்கருமை குறித்து வருதலை ''வாடிய மேனியர் பொன்நிறை சுருங்கார் [2]'' என்ற விடத்துப் பொன்னிறை என்றதற்குப் பெறுதற்கரிய நிறை என்று நச்சினார்க்கினியர் உறை கூறுவதனால் அறிக

மறந்திலனாயின், புதல்வனையும் தன்னையும் நீத்தொழுகான்; ஆகலின், மறந்தனன் என்றும், உடற்கு நன்கலனாய் அணிசெய்யும் பொன்போல் மனைமாட்சிக்கு நன்கலனாய் விளங்குதலின் மகனைப் பொன்போற் புதல்வன் என்றும், தன் குலம் விளக்கும் சால்புடைய மகன் தன்னினும் உயர்ந்தோனாதல் பற்றிப் புதல்வனோடு என்றும், தன் பிரிவால் மிக்க துன்பமுற்று வருந்தும் என் வருத்தமும் நோக்கிற்றிலன் என்பாள், என் நீத்தோனே என்றும் கூறினாள். இது களவுக்காலத்துப்போல் அன்றிக் கற்புக்காலத்துப் பிரிவாதலின், புறத்தார்க்குப் புலனாகாமை மறைக்கப்படா தாகலான், ஆற்றாது வாயில்கட்குக் கூறுவா ளாயினாள். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை. புலியால் கொல்லப்பட்ட பெண் பாற்பன்றியிடத்துக் கொண்ட காதலால் கேழல் அஃது ஈன்ற குட்டிகளைப் புரக்கும் நாடனாயினும், தலைமகன் தன் பரத்தைமையால் வீழ்த்தப்பட்ட என்பால் அன்பிலனாதலோடு யான் ஈன்ற என்மகன் பாலும் அன்பிலனாய்ப் பிரிந்தேகினான் எனத் துனியுறு கிளவியைத் தலைவி உள்ளுறுத் துரைத்தாள்.

இது வாயில்களுக்குத் தலைவி கூறியது என்பர் நச்சினார்க்கினியர்.

புலிகொள் பெண்பால் என்ற பாடத்துக்குப் புலியாற்கொன்று கொண்டு போகப்பட்ட பெண்பன்றி என உரைக்க. (265)

266 சிறுக்கட் பன்றிப் பெருஞ்சின வொருத்த
லொடு
குறுக்கை யிரும்புலி பொரூஉ நாட
நனிநா ணுடைய மன்ற
பனிப்பயந் தனநீ நயந்தோள் கண்ணே.

---

1. புறம். 9. 2. சீவக. 2380.

இது, நொதுமலர் வரைவு பிறந்துழித் தலைமகட்கு உளதாகிய வேறுபாடு தோழி கூறித் தலைமகனை வரைவு கடாயது.

ப. உரை: பன்றியொருத்தலொடு புலி பொரும் என்றது நினக்கு நிகரல்லாதார் வந்து தலைப்படவும் அதனை நீக்காது இடங் கொடுத்து ஒழுகா நின்றாய் என்பதாம்.

உரை: சிறிய கண்களையுடைய பன்றியின் மிக்க சினம் பொருந்திய ஆணோடு குறுகிய முன்கால்களையுடைய பெரிய புலி பொருகின்ற நாடனே, நீ விரும்பிய இவளுடைய கண்கள் தெளிவாக மிக்க நாணுடையவையாகலின், பசந்து நீர் சொரிவன வாயின எ. று.

சிறுக்கண், குறுக்கை என்பன வலிக்கும் வழி வலித்தல். இப்பண்பு தொகுமொழிகள் ''புணரியல் நிலையிடை உணரத் தோன்றா'' வாயினும், தொடைநோக்கி வலித்தமை கொள்க. ''வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்[1]'' என்ற புற னடையால் அமைத்தலும் ஒன்று. ஒருத்தல், ஆண்பாற் பெயர். ''ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும் ...... யாத்த ஆண்பாற் பெயரென மொழிப[2]'' என ஆசிரியர் கூறுதல் காண்க. பன்றியிற் புலி சிறந்ததாயினும், ஈண்டுப் பன்றியின் வன்மை தோன்றப் பெருஞ்சின வொருத்தல் என்றும், புலியின்பால் அஃதுசிறவாமை தோன்றக் குறுக்கையிரும்புலி யென்றும் கூறினார்.

நீ நயந்தோள் நொதுமலர் வரைவு பிறந்தமையினாலும், தன்னுறு வேட்கையைத் தானே கூறலாகாமையினாலும், நாண மிகுதியால் ஆற்றாளாயினள் என்பாள், அதனைக் கண்மே லேற்றி, நனி நாணுடைய மன்ற, பனிப்பயந்தன நீ நயந்தோள் கண்ணே என்று கூறினாள். ''தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல், எண்ணுங்காலைக் கிழத்திக் கில்லை. பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப், பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப[3]'' என்பதனால்

1. தொல். எழுத்து. 483. 2. தொல். பொ. 555.
3. ஷை. ஷை. 118.

அதனைத் தோழியுணர்ந்து கூறினள். நொதுமலர் வரைவு பிறந்தமை கண்டு ஆற்ருது கண் கலுழ்ந்து வேறுபடுதலைக் கண்டும் நீ வரையாதொழுகுதல் நாணுடைமையன்று என்பாள், குறிப்பால் நாணுடைய என்றும், மேனி வேறுபாடு நோக்கி அயலார் கூறுவன வற்ருல் நாணி வருந்துகின்ற தலைமகள் வேற்றுவரைவு முற்று மாயின் உயிர்வாழாள் என்றற்கு நனி நாணுடைய மன்ற என்றும் கூறினள் என்க. தலைமகளின் நாணுடைமையை விதந்து கூறியது. நாண்கெட வரின் உயிர்வாழாள் என்றற்கு. இவ்வாறு நாணுடை மையும், மேனி வேறுபாடும் கூறித் தோழி வரைவு கடாதல், ''புரைபட வந்த அன்னவை'' என்புழி யடங்கும்.

எளிதில் தன்னல் வீழ்த்தப்படுதற்குரிய பன்றி யொருத்தலொடு இரும்புலி நாணது பொரும் என்றது, வேற்றுவரைவு வருதல் கண்டும் நாணது களவே விரும்பி ஒழுகுவாயாயினை எனத் தோழி உள்ளுறுத்தவாறு; பழையவுரைக்காரர்க்கும் இதுவே கருத்தாதல் அறிக. பனிப் பயந்தன என்றது பசலைபாய்தல்.

நனிநாணுடையை என்று பாடமாயின் அஃது எதிர் மறைக் குறிப்பு மொழியாய் மிகவும் நாணுடையையல்லை என்பது பட நின்றதாம். நனிநாணுடைமையம் என்றும் நணிநாணுடையம் என்றும் பாடமுண்டு. (266)

267. சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தல்
துறுக லடுக்கத்து வில்லோர் மாற்றி
ஐவனங் கவருங் குன்ற நாடன்
வண்டுபடு கூந்தலைப் பேணிப்
பண்பில சொல்லும் தேறுதல் செத்தே.

இது, தலைமகளைத் தலைவன் வரைவலெனத் தெளித்தான் என்று அவள் கூறக் கேட்ட தோழி அவன் சிறைப்புறத்தானகச் சொல்லியது.

---

1. தொல். பொ. 210.

ப. உரை : பண்பில சொல்லும் என்றது பொய்ம்மொழி களைச் சொல்லும் எ. று. தேறுதல் செத்தே என்றது தான் சொன்ன சொற்களை இவள் மெய்யாகக் கொள்ளும் என்பது கருதி எ. று.

பன்றி யொருத்தல் காவலரை யோட்டி ஐவனநெல் கவரும் என்றது களவினிற் காவலரை வென்று பெறும் இன்பமே விரும்புவான் எ. று.

உரை: சிறிய கண்களையுடைய பன்றியின் மிக்க சினத்தை யுடைய ஆண், துறுகற்கள் நிறைந்த மலைப்பக்கத்து வில்லேந்தும் குறவரை வெருட்டி, அவராற்காக்கப்படும் ஐவனநெல்லைக் கவரும் குன்றுகளையுடைய நாடன், வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய இவளை விரும்பி, இவள், தான் கூறுவனவற்றைப் பண்புடையவை எனத் தெளிந்து கொள்வாள் என்பது கருதிப் பண்பிலவாய சொற்களைச் சொல்லுவானாயினன் எ. று.

துறுகல் அடுக்கத்து மேலும் இடையிலும் ஒளித்திருந்து நெல் கவர வரும் கேழலைத் தாக்குவது பற்றி, துறுகல் அடுக்கத்தை விதந்தோதினர். வில்லோர் அம்புக்கு இலக்காகாது விலகுதலால் அவர் தளர்ந்தொழியச் செய்வதனை ஈண்டு மாற்றுதல் என்றார். ஐவனம் ஒரு வகை நெல்; இதனை வெதிர்நெல் என்பது வழக்கு. மலைச்சாரற் காடுகளைத் தீயிட்டுக் கொளுத்திச் செய்த புன்செய்க் கொல்லையில் ''ஐவனநெல் கானவர்களால் விளைவிக்கப்பெறு கிறது[1]''. அவர்கட்கு இந்த ''ஐவனமும் உண்வுப்பொரு ளாகும்[2]''. ஐவனம் விளையுங்கால் கானவர் இரவில் காட்டு விலங்குகள் வந்து அழிக்காவண்ணம் காவல்புரிவர்; அப்போது ''இரவுமுற்றும் தீ எரிக்கப்படும்[3]''.

பண்பு, மெய்ம்மைப் பண்பு; அஃதாவது சொல்லும் செயலும் ஒத்தொழுகும் பண்பாடு. வரைவல் என்று சொல்லி வரையாது ஒழுகுகின்றானாகலின், அவனைப் பண்பில சொல்லும் என்றும்,

---

1. புறம். 159. 2. நற். 373. 3. புறம். 172.

தலைமகளும் அவன் மேற்கொண்ட ஆராக் காதலால், ''அவன் வரம்பிறத்தல் அறம் தனக்கு இன்மையின்'' அவன் கூறியவற்றை ஆராய்தலின்றி ஏற்று ஒழுகும் இயல்பினள் என்பதைத் தலைமகன் நன்குணர்ந்துளான் என்பாள். தேறுதல் செத்தே என்றும் கூறினாள். பொய் கூறுரெனத் தம்மைத் தெளிந்தார்மாட்டுத் தலைமகன் அதனைக் கூறி யொழுகுதல் அறனன்று என்றாளாம். இதனாற் பயன் தலைமகன் தெருண்டு வரைவானாவது.

பன்றியொருத்தல் காவலரை மாற்றி ஐவனநெல்லைக்கவரும் நாடனாகலின் தலைமகன் தலைமகள்பால் இனிய சொற்களைச் சொல்லி மாற்றி அவள் நலன் நுகர்ந்தொழுகுதலைச் செய் கின்றானே யன்றி வரைந்துகோடலை நினைக்கின்றிலன் எனத் தோழி குறிப்பாய் வரைவுகடாயினாள் எனக் கொள்க. (267)

268. தாஅ யிழந்த தழுவரிக் குருளையொடு
வளமலி சிறுதினை யுணீஇய கானவர்
வரையோங் குயர்சிமைக் கேழலுறங்கும்
நன்மலை நாடன் பிரிதல்
என்பயக் கும்மோ நம்விட்டுத் துறந்தே.

இஃது, ''அவன் குறிப்பிருந்தவாற்றால் நம்மைப் பிரிந்து வந்தல்லது வரையமாட்டான் போன்றிருந்தது'' என்று தலைமகள் கூறக்கேட்ட தோழி தலைமகன் சிறைப்புறத்தானாக அவட்குச் சொல்லியது.

ப. உரை: தாயிழந்த குருளையோடே தினையை உண்டு கேழல் உறங்குகின்ற இத்தன்மையையுடைய நாடனாதலால் இவ்வாறு நிகழ்தல் கூடாது என்பதாம்.

உரை: தாயை இழந்த பருத்த வரிகளையுடைய பன்றிக் குட்டியுடன் வளம்மிக விளைந்த சிறுதினையை உண்ணக் கருதிக்

---

1. தொல். பொ. 120.

கானவர் வாழும் மலையினது உயர்ந்த உச்சிக்கண் பகற்போதில் ஆண்பன்றி உறங்கும் நல்ல மலைநாடன் நம்மைத் துறந்து செல்லுவானாயின், அஃது அவற்கு எப்பயனைத் தருமோ? அறியேன் எ. று.

தழுவரி, நெருங்கிய வரிகள். குருளை, குட்டி; "நாயே பன்றி புலி முயல் நான்கும், ஆயுங் காலைக் குருளை என்ப[1]" என ஆசிரியர் கூறுதல் காண்க. கேழல், குருளையொடு உணீஇய, உறங்கும் என இயையும். நாடன் நம் விட்டுத் துறந்து பிரிதல் என்பயக்கும்மோ எனக் கூட்டி இயைக்க. விடுதல், தனிப்ப விடுதல். துறத்தல், உள்ளத்தே பிரிதற்குரிய துணிவு கொளல். பிரிதல், மெய்யால் நீங்குதல். ஓகாரம், எதிர்மறை. கேழல் இரவுப்போதில் இரைதேடி மேயும் இயல்பிற்றாகலின், உறங்குற் குரிய பகற்போது வருவிக்கப்பட்டது.

தழுவரிக் குருளை யென்றற்குத் தாயை யிழந்தமையால் தந்தையைத் தழுவிச் செல்லும் வரி பொருந்திய குருளை யெனினு மாம். நம்மைத் துறந்துநன்மலை நாடன் பிரிதல் என்றது, "அவன் குறிப்பிருந்தவாற்றால் நம்மைப் பிரிந்தல்லது வரையமாட்டான் போன்று இருந்தது" எனத் தலைமகள் கூறியதனைக் கொண்டு கூறியதாம். தன்னையின்றியமையாத நம்மைத் துறந்து பிரிதலால், அவன் பெறலாகும் பயன் ஒன்றும் இல்லை என்பாள், என் பயக்கும்மோ என்றாள்.

வளம் மலிந்த தினையைக் குருளையுடன் உண்ணக் கருதிக் கேழல் உயிர்சிமைக்கண் உறங்கும் என்றது, நலம் முதிர்ந்த நின்னை வரைந்து கோடலை எண்ணி நின்பாற் பிறந்த காதலுடன் பிரிந்துறைதலைத் தலைமகன் கருதுகின்றான் என்று தோழி கூறிய வாறு. இவ்வண்ணம் பிரிந்தானாயின், நாம் நலம் துறந்து கெடுவ தன்றி வேறுபயன் இன்று என்பாள் என் பயக்கும்மோ என்றாள். இனிக் கேழல் குருளையைத் தன் உடன் கொண்டு சென்று தினையுண்பான் உறங்கும் நாடனாகவும், நின்னையும் தன் உடன்

1. தொல். பொ, 561.

கொண்டு வரைந்து கோடலை எண்ணாது இவண் விடுத்துப் பிரிதலைக் கருதுவது என்னை என்றற்கு என் பயக்கும்மோ என்றாள் என்றுமாம். பழையவுரைகாரர், சிறுதினை யுணீஇக் கேழல் உறங்கும் என்று பாடங்கொண்டமையின், "தினையையுண்டு கேழல் உறங்குகின்ற இத்தன்மையையுடைய நாடனாதலால் இவ்வாறு நிகழ்தல் கூடா தென்பதாம்" என்பாராயினர்.

வளமலை சிறுதினை உணீஇ யுறங்கும் என்றும் பாடம் உண்டு. உணீஇய வுயங்கும் என்ற பாடத்துக்கு ஒருபால் பிணவின் பிரிவு வருத்த ஒருபால் கானவர்காவல் வருத்தக் கேழல் குருளையொடு தினையுண்டற்கு வருந்தும் என்றது. ஒருபால் நலந்தொலைவும் ஒருபால் இற்செறிப்பும் வருத்த இடையே தலைவி தலைவன் தந்த காதலொடு அழிவில் கூட்டம் பெறுதற்கு வருந்தி யுறைகின்றாள் எனத் தோழி சிறைப்புறத்தானாகிய தலைமகனைக் குறிப்பால் வரைவு முடுகியவாறாகக் கொள்க.

கேழல் தன் குருளையை உடன்கொண்டு சென்று தினையுண்பான் உயர்சிமைக்கண் உறங்கும் நாடனாகலின் நின்னை உடன்கொண்டு சென்று வரைந்து கொள்வான் எண்ணாது, அவன் பிரிதலைக் கருதுவது பயனின்றென்றாள் என்றுமாம். (268)

269. கேழ லுழுதெனக் கிளர்ந்த வெருவை
விளைந்த செறுவிற் றோன்று நாடன்
வாரா தவணுறை நீடி னேர்வளை
இணையீ ரோதி நீயழத்
துணைநனி யிழக்குவென் மடமை யானே.

இது, குறைநயப்பக் கூறி தலைமகளைக் கூட்டிய தோழி, அவன் இடையிட்டு வந்து சிறைப்புறத்து நின்றுழித் தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை: துணைநனி இழக்குவென் மடமையான் என்றது நீ எனக்குத் துணையாதலை இழப்பேன் யான், அவனைத் தேறி முன்

செய்த மடமையான் எ. று. இறந்துபடுவேன் என்பதாம். நீ அழ வாராது அவண் உறை நீடின் எனக் கூட்டுக.

கேழல் உழுததாக எருவை நெல் விளைந்த செறுப் போலத் தோன்றும் என்றது வேட்கை நலியத் தனக்கு வந்த வருத்தத் தானே தலைசாய்த்து நல்லாரைப் போல ஒழுகிய துணையே யுள்ளது என்பதாம்.

உரை: பன்றி யுழுததாக ஓங்கி யெழுந்த கோரை நெல் விளை வயல்போலப் பொலிந்து தோன்றும் நாட்டினை யுடையோன் அழகிய வளையும், கடையொத்த நெய்ப்பினையுடைய கூந்தலு முடையாய், நீ புலம்பியழ, இவண் வாராது அவன் பிரிந் துறைதலையே நீட்டிப்பா னுயின், அவன் குறைநயப்பக் கூறிய வற்றைத் தெளியாது நின்னை அவனுடு தலைக்கூட்டிய யான் என் மடமையால் நினக்குத் துணையாதலை இழப்பேனுவேன் எ. று.

எருவை, பஞ்சாய்க் கோரை. 'எருவை நறும்பூ நீடிய பெருவரை[1]'' என்றூர் பிறரும். நீ, யழ, அவனுறை, நீடின் எனக் கூட்டுக. பன்றிகள், காந்தள் வள்ளி முதலியவற்றின் கிழங்குகளை உண்டற்பொருட்டுக் கிளைத்தமண் நன்கு உழுதது போறலின், கேழல் உழுதென என்றும், அதனுல் புழுதி படிந்து எருவைக்கோரை வளம்பட வளர்தல் கண்டு, கிளர்ந்த எருவை என்றும் கூறினூர். விளைந்த செறு, விளைந்த நெல்வயல் உறை, உறைதல்; முதனிலைத் தொழிற்பெயர். ஓதி, நாடன் நீடின் நீ அழ. மடமையான் துணை நனி இழக்குவென் என முடிக்க. துணை. துணையாந்தன்மை. துணையாந்தன்மை இழத்தலாவது துணையா யிருக்கும் திறமின்றி இறந்துபடுவேன் என்றவாறு.

அவன் பிரிவாற்ருது, தலைமகள் வளைநெகிழ்ந்து, கூந்தல் சரிந்து வேறுபட்டமையால் அவளை நேர்வளை இணையீரோதி என்ருள். நாடன் வாராது அவணுறைதல் நீடுமாயின், உடம்பு நனி சுருங்கி வேறுபட்டு நீ ஆற்ருமையாற் பிறிதுபடுதற் காற்ருது

1. நற். 261.

யான் உயிர் இறப்பேன் என்பாள், துணைநனி யிழக்குவென் என்ருள். தோழியிற் கூட்டத்துக் குறை நயந்தபோது அவன் கூறியவற்றை நன்கு ஆராயாது அவனெடு தலைக்கூட்டிய கேண்மை, தோழியாகிய தான் ஆய்ந்தாந்து கொள்ளாத தொன்ருய்த் தான் "சாம் துயரந் தருவதாயிற் ருகலின்[1]" அச்செயற்குக் காரணமாய தன் அறியாமைக்கு இரங்கித் துணைநனி இழக்குவென் மடமையானே என்ருள்

இனி, கேழல் உழுததனுல் கிளர்ந்தெழுந்த எருவைப்புல் விளைந்த நெல்லைப்போலத் தோன்றும் நாடன் என்றதனுல், தலைவனெடு உளதாகிய தொடர்பினுல் தலைவி மேனிக்கண் தோன்றிய வேறுபாட்டை இளமைக்கதிர்ப்புப் போலும் எனத் தோழி மறைத்து ஒழுகியவாறு கூறினுளாம். ஆகவே, தலைமகன் பிரிந்து உறைதற்கண் நீட்டித்தால் தலைவியது வேறுபாடு புறத்தார்க்குப் புலனுகிக் களவை வெளிப்படுத்தும் எனவும், அதனுல் தான் இறந்துபடுதல் ஒருதலை யெனவும் கூறுவாள், நீயழத் துணைநனி இழக்குவென் என்றும், இவ்வளவிற்கும் காரணம் இதுவென்பாள் மடமையானே என்றும் கூறினுள் எனினும் அமையும். (269)

270\. கிழங்ககழ் கேழ லுழுத சிலம்பில்
தலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்
புல்லென் குன்றத்துப் புலம்புகொள் நெடுவரை
காணினுங் கலிழுநோய் செத்துத்
தாம்வந் தனர்நங் காத லோரே.

இது, வரைவு காரணமாக நெட்டிடை கழிந்து பொருள்வயிற் ரோகிய தலைமகன் வந்தமை அறிந்த தோழி உவந்த உள்ளத் தளாய்த் தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை : கிழங்ககழ் கேழல் உழுத புழுதிக்கண்ணே வித்த விளைந்த பயிர் கானவர் கொய்யும் சிறப்புடையதேனும், அவன்

1. குறள். 792.

அவ்விடத்து உறையாமையின் தனக்குப் புல்லென்று தோன்றுதலால் புல்லென் குன்றம் எனவும், புலம்புகொள் நெடுவரை எனவும் இழித்துக் கூறப்பட்டதெனக் கொள்க.

உரை: கிழங்குகளை அகழ்ந்து எடுக்கும் பன்றிகள் தம் கோடுகளால் உழுத புழுதி நிறைந்த சிலம்பில், கானவர் விதைப்ப விளைந்த முதல் விளைவினைக் கொய்து கொண்டு நீங்குதலால் புல்லென்று தோன்றும் குன்றத்து, அன்னோர் கூட்டத்தையின்றித் தனித்த தோற்றத்தைக் கொண்ட நெடிய பக்க மலையைக் கண்டாலும் கலுழ்தற்குக் காரணமான நோயைக் கருதி நம் காதலர் தாம் மேற்கொண்ட வினைமுடித்து வந்தன ராகலின் நீ மகிழ்வாயாக எ. று.

காந்தள், வள்ளி, கோரை முதலியவற்றின் கிழங்குகளை அகழ்ந்துண்டல், கேழல்கட்கு இயல்பாகலின், மலைப்பக்கம் கிழங் ககழ் கேழல் உழுத சிலம்பு எனப்பட்டது. கிழங்கு ஈண்டு இஞ்சிக் கிழங்கு என்பாரும் உளர்; அதனைக் கேழல்கள் அகழ்ந்துண்டல் மரபன்மை யறிக. தலைவிளைவு, முதல் விளைச்சல். விளைவின் முன்னர்ச் சிலம்பின்கண் வித்திய தினைப்பைங்கூழ் பச்செனத் தோன்றிக் காண்பார்க்கு அழகுசெய்தலாற் பொலிந்து தோன்றும் குன்றம், அது முற்றியதனல் கானவர் கொய்து பெயர்ந்த பின் அப்பொலிவு குன்றுதலின், புல்லென் குன்ற மென்றும் விளைவு முற்றுதவிடத்து அதனைக் கவர்வான் வரும் விலங்குகளாலும், புட்களாலும், அவற்றைக் கடிதற்குப் போந்து காவல் செய்யும் கானவர் குழுவானும் விளங்கிய குன்றம், அவ்விளக்கமின்மையின் புலம்புகொள் நெடுவரை என்றும் கூறப்பட்டது. கலிழும் நோய், கலிழ்தற்குக் காரணமாகிய நோய்.

தினைவிளையும் மாவும் புள்ளும் மக்கட்கூட்டமும் கொண்டு இனிய காட்சி வழங்கிற் றுயினும், தலைமகன் பிரிவின்கண் குன்றமும் நெடுவரையும் தலைமகள் நினைவில் தலைவன் நினைவை, யெழுப்பி வருத்தினமை பற்றிப் புல்லென் குன்றம் என்றும், புலம்புகொள் நெடுவரை என்றும் தோழி கூறினள். அதனைக்

காணுங்கால், பண்டு தான் மேற்கொண்டிருந்த புனங்காவலும், தலைமகனை எதிர்ப்பட்டு நட்புற்றமையும், புணர்வின் இன்பமும், பிரிவுத்துன்பமும் ஒன்றன்பின் ஒன்ருய்த் தோன்றித் தலைவி யுள்ளத்தை அலைத்தமை குறித்து, காணினும் கலிழும் என்றும், அத்துன்பம் தலைமகன் வரவானன்றித் தீராமை உணர்ந்து அவன் வந்தனன் என்றற்கு, நோய் செத்துத் தாம் வந்தனர் என்றும், ஈண்டு யாம் உற்ற துன்பத்தை ஆண்டு அவர்தாம் உணர்தற்கு ஏது, அவர்பால் நம்மிடை யுளதாகிய காதல் என்பாள், நம் காதலோர் என்றும் கூறினுள். இது, துன்பத்துப் புலம்பல். உள்ளுறையால் தலைமகனது வரவு வரைவு கண்ணிய தென்று குறித்தமையின், வாளாது வந்தனர் என்ருளென்க.

சிலம்பில் விளைந்த தலைவிளைவைக் கானவர் கொய்து கொண்டு பெயர்வர் என்றது, தலைமகனைத் தலைப்பட்டுக் கூடியதன் தலை விளைவாகிய வரைவினை நீ தலைமகன் வரைவால் பெறுவா யாயினை என்றவாறு, பின் விளைவன மணமும் மனையறமும் மகப்பேறும் முதலாயினவாம். (270)

28

குரக்குப்பத்து

பாட்டுத்தோறும் குரங்காகிய கருப்பொருளே சிறந்து வரத் தொகுக்கப் பெற்றமையின், குரக்குப்பத்து என்னும் பெயர்த் தாயிற்று.

உலகிலுள்ள உயிர்வகைகளுள் மக்களுயிர் உயர்ந்து விளங்கு வதுபோல அஃறிணை உயிர்வகைகளிள், முகத்திற் கண்கொண்டு பொருள்களை நேரே முற்ற நோக்கும் பெற்றிமையால் உயர்ந்தது குரங்கு. ''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி'' மேன்மையுற்று வளர்ந்து போந்த உயிரினத்துள் மக்களுயிர், குரங்குயிராய் இருந்தே இந்நிலை பெய்திற்று என்பது ஒருசார் ஆராய்ச்சியாளர் கொள்கை.

குரக்கினத்துள் ஆண் கடுவன் என்றும், பெண்மந்தி என்றும், குட்டி பறழ் என்றும் பார்ப்பென்றும் தமிழ்நூல்களில் வழங்கும். குரங்கினத்துள் பலவகையுண்டு. இவை பொதுவாக வாலுடையன வாலில்லாதன என இருவகையாம். வாலில்லாதன கொரில்லா, சிம்பஞ்சி என வகைப்படும், அவற்றுள் சிம்பஞ்சி ஆப்பிரிக்காவின் மேலைப்பகுதியிலும் நடுப்பகுதியிலும் வாழ்கிறது; நன்கு வளர்ந்த கடுவன் ஐந்தடி உயரம் இருக்கும்; பழங்கள் விதைக்கொட்டைகள்

பசுந்தழைகள் இதற்கு உணவு. கொரில்லா ஆறடி உயரம் வளரும். இஃது ஆப்பிரிக்காவின் வெப்பமான பகுதியிலுள்ள காடுகளிள் உளது; உணவுக்காக அடிக்கடி இடம்விட்டு இடஞ் செல்லும் இயல்புடையது; நடக்கும்போது கைகளை ஊன்றி நான்கு கால் விலங்கு போலவே செல்லும்; ஆயினும் கையை முடக்கிப் புறங்கையை ஊன்றிச் செல்லுகிறது. கொரில்லாக்கள் மரத்தில் ஏருமல் தரையிலேயே வாழ்கின்றன. ஓராங்குட்டான் சுமத்திரை போரணியோ தீவுகளில் சதுப்புநிலக் காடுகளில் உளது. ஒராங் குட்டான் என்னும் மலேயா மொழிக்குக் காட்டு மனிதன் என்பது பொருள்; ஏனையவற்றைப் போலின்றி இவற்றின் கைகால்கள் காட்டுமரங்களில் வாழ்தற் கேற்ப அமைந்துள்ளன. ஒராங் குட்டான் முப்பதாண்டுகள் வாழ்கிறது. கிப்பன் குரங்குகள் கிழக் காசியக் காடுகளில் உள்ளன. வாலில்லாத இனத்துள் இவை உருவில் சிறியவை. நன்கு வளர்ந்தது மூன்றடி உயரமிருக்கிறது. இவை பறவைகளையும் பழவகை தழைவகைகளையும் உண்கின்றன.

ஏனைய பலவும் வாலுடையனவே. நிலவுலகில் வெம்மையான நிலப்பகுதிகளில்தான் குரக்கினம் காணப்படுகிறது. சிலவகைக் குரங்குகள் மிக்க குளிரையும் தாங்கி உயிர் வாழக் கூடினவாகும். அவை இமயமலைப் பகுதியிலும், திபேத்து, சீனநாட்டு வடமேற்குப் பகுதி ஆகிய இடங்களிலும் வாழ்கின்றன. ஐரோப்பாவில் சிபிரால்டர் பகுதியில் ஒருவகைக் குரக்கினம் உண்டு. ஆத்திரேலி யாவில் குரங்கே கிடையாது. மடகாசிகர், நியூகினியா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய இப்பகுதிகளிலும் குரக்கினம் இல்லை.

குரங்குகள் யாவும் மரஞ்செறிந்த காடுகளில் மரங்களையே இடமாகக் கொண்டு வாழ்வன என்பது நாடறிந்த செய்தி. ‘‘குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பில்லை’’ என்பது பழமொழி; ஆயினும், ஆப்பிரிக்காவில் பாபூன் என்னும் ஒருவகைக் குரக்கினம் இவ்விதிக்கு விலக்காக உளது. மருதம் நெய்தல் பாலை என்ற இந்த நிலப்பகுதிகளில் இவை கூட்டம் கூட்டமாய் வாழ்கின்றன. தரையிலேயே இவற்றின் வாழ்வுமுழுவதும் பெரும்பாலும் கழிகிறது. குரங்குகளின் வாய்க்குள் இருமருங்கிலும் இரு பைகள் உண்டு.

உண்ணும் உணவை முதலில் விரைவாக எடுத்துக் கடித்துப் பைக்குள் அடக்கிக் கொண்டு பின்னர் ஓரிடத்தே ஆர அமர்ந்து உண்பது அவற்றிற்கு வழக்கும். ஒருசிலவற்றிற்கு இப்பைகள் இருப்பதில்லை, அமரிக்கநாட்டுக் குரங்குகட்கு இப்பைகள் அறவே கிடையா. மேலும் அமெரிக்கச் குரங்குகட்கு வேறொரு சிறப்பியல்பும் உண்டு குரங்குகளின் வாலின் கீழ் எருவாய்ப் பகுதியில் சிவந்த உறுதியான இருதோற்பட்டையுண்டு; அதனால் அவை எவ்விடத்திலும் நன்கு உட்கார இயலுகிறது. இப்பட்டை அமரிக்கக் குரங்குகட்கு இல்லை. அன்றியும் தென்னமரிக்காவிலுள்ள ஒருவகைக் குரங்குகள் தம் வாலைக் கைபோல் பயன்படுத்துகின்றன. வாலினால் மரக்கிளையைப் பற்றிக்கொண்டு கைகால்களைத் தொங்க விட்டு ஊசலாடும் இயல்பு அவற்றிற்கு நன்கு வாய்த்துள்ளது; சிறுகிளைகளை ஈர்த்துக் கிழிப்பதும், வேரூன்றிய செடிகளை வேரோடு பற்றிப் பிடுங்குவதும் இவற்றிற்கு வாலினாலே ஆகின்றன. அமரிக்கக் குரங்குகளின் மூக்குத் துளைகட்கு இடைவெளி ஏனை எந் நாட்டுக் குரங்குகட்கும் இல்லாத அளவில் அகன்றுள்ளது.

அமரிக்கநாட்டுப் பிரேசில் பகுதியில் தான் பலவேறு வகைக் குரக்கினங்கள் உள்ளன. இவை வடக்கே மெக்சிகோ நாடு வரையிலும் காணப்படும். அதற்குமேல் குளிர்மிகுதலின் குரங்குகள் இருப்பதில்லை. இவ்வினங்களில் சிலம்பிக்குரங்கு வகை ஒன்று; அஃது அமைதியாகவும் எளிதில் மக்களோடு பழகுவதாகவும் உளது; குளிர்மிக்க நாடுகளில் வாழக் கூடிய வாய்ப்பும் அதற்கு இயல்பாக அமைந்திருக்கிறது. பூனைக்குரங்கு என்ற இனம், தசை செறிந்த வட்டமான முகமும் அகன்ற கண்ணும் மயிர் அடர்ந்து பருத்து நீண்ட வாலும் உடையது. இக்குரங்கு இரவுப் போதுகளில் வெளிப்பட்டுச் சிறு சிறு பூச்சிகளையும் பறவைகளையும் தேடி யுண்டு, பகற் போதுகளில் பெருமரப் பொந்துகளில் ஒடுங்கி உறையும். இவற்றின் வேறாக நரிபோல் ஊளையிடும் நரிக்குரங்கு களும், பறவைபோல் கூவும் சிறுகுரங்குகளும், கைகால்களில் அணில்போல் கூரிய விரல் படைத்த அணிற் குரங்குகளும் தென்னமரிக்காவில் உண்டு.

வெம்மை நிலங்களில் வாழ்வதற்குரிய குரக்கினம் குளிர் நாடாகிய ஐரோப்பாவைச் சேர்ந்த சிபிரால்டரில் வாழ்வது ஆராய்ச்சியாளர்க்கு வியப்புத் தருகிறது. ஒரு காலத்தில் ஆப்பிரிக்காவும் ஐரோப்பாவும் கடலாற் பிரிக்கப்படாமல் நில மாகவே தொடர்புற்றிருந்தன வாகலான், அக்காலத்தில் இக் குரக்கினம் இங்கே போந்து தங்கியிருக்கலாம் என்பது ஒருசார் ஆசிரியர் கொள்கை. பண்டை நாளைய சுபானியர்களில் எவரேனும் இதனை அண்மையிலுள்ள ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வந்திருக்கலாம் என்பது வேறொரு சாரார் கொள்கை. இக் குரங்குகள் இப்பகுதியிருந்து எப்போது வேரோடு தொலைந்து மறைகின்றனவோ அப்போது பிரித்தானியர் இப்பகுதியினின்றும் போய்விடுவர் என்ற கொள்கை அங்கே இன்றைய மக்களிடையே நிலவுகிறது. பிரித்தானியருக்கும் இப்பகுதியிலுள்ள குரக் கினத்துக்கும் யாது தொடர்போ!

நம் நாடு வெம்மை செம்மையுற அமைந்த நாடாகலின், இங்கே குரங்குகள் பல்கி யிருப்பதில் வியப்பில்லை. குரக்கினத்தைச் சிறப்பித்தே சீர்த்த காவியம் பாடிக்களிக்கின்ற நாடு நமது; இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போரை உரைக்கும் இக்காவியத்தில் அனுமனும் அனுமனைச் சேர்ந்த குரக்கினம் இல்லை யாயின், காவியமேது? நம்நாட்டுக் குரங்குகளில் செங்குரங்கு கருங்குரங்கு என இருவகை உண்டு. முகஞ் சிவந்தது செங்குரங்கு, கரியது கருங்குரங்கு. கருங்குரங்கினை முசுக்கலை எனவும், ஊக மெனவும் வழங்குவர். செங்குரங்கைக் குரங்கென்றே பொதுவாக வழங்குவது இயல்பு.

இக்குரங்குகள் ஒன்றோடொன்று அன்புசெய்து கலந்து வாழும் திறம் அறிஞர்கள் நன்கு அறிந்தது. அதனால் இவை எப்போதும் கூட்டமாய் வாழ்கின்றன. தாம் வாழும் இடத்தில் போதிய உணவு கிடையாதாயின் இவை வேறு இடங்கட்குத் திரண்டு செல்லும். அங்ஙனம் செல்லுங்கால் முதிர்ந்த குரங்கு இவற்றிற்குத் தலைமை தாங்கி முன்னே செல்லும். இளங்குரங்குகளில் எவை யேனும் ஒழுங்கு தவறிச் சிதறிச் செல்லுமாயின், உடனே குரக்குத்

தலைவன் அவற்றைச் சீறித் தாவிப் பற்றிக் கடித்தோ அடித்தோ தக்காங்கு ஒருத்துச் செம்மை நெறியில் நிற்கச் செய்யும். வேறு பகையினம் போந்து இக்கூட்டத்தைத் தாக்குமாயின், பெண்குரங்கு களையும் குட்டிகளையும் ஆண் குரங்குகள் சூழ்ந்து காத்து நின்று பகையினத்தோடு கடும்போர் உடற்றும். அவற்றுள் ஒன்று இறந்துவிடின் ஏனையாவும் ஒன்றுகூடி அதன் பொருட்டுப் புலம்பி வருந்துவது காண்போர் மனத்தை உருக்கும் தன்மைத்து. அது பற்றியே கானவரும் வேட்டுவரும் குரக்கினத்தைக் கொல்ல நினைப்பதில்லை; கொல்லுவதும் இல்லை.

குட்டி ஈன்று அவைகளைப் பேணி வளர்ப்பதிலும், அன்பு செய்வதிலும் அவற்றிற்குத் தீங்குண்டாகாதவாறு காப்பதிலும் குரக்கினம் சிறந்து விளங்குகிறது. குரங்கின் பாற் காணப்படும் தாய்மைப்பண்பு பெரிதும் மதிக்கத் தகுவ தொன்று. தான் ஈன்ற குட்டி தன் முதுகின்மேல் ஏறிக் குதிரைவாதுவன் போல் தன்னைச் செலுத்தத் தான் அதன் குறிப்பின்படி குதிரைபோல் நடந்து அதற்கு இன்ப மூட்டும் தாய்மந்தியின் செயல் காண்போர்க்கு மிக்க இன்பம் தருவதொன்று. குட்டியொன்று இறந்து படின், சில மந்திகள் ஒரிரு நாட்கள் அதனைத் தம் மெய்யில் தழுவிக் கொண்டே கிடந்து வருந்தும்; இவ்வாறு ஒரு தாய்க்குரங்கு உயிர் நீத்த தன் குட்டியை ஆறுநாட்கள் வரைத் தானே சுமந்து வருந்தினதை உயிர்நூலறிஞர் கண்டிருக்கின்றனர். இவ்வாறு வருந்தும் நாட்களில் அது நீர்குடியாமலும் உணவு கொள்ளாமலும் ஏனையவற்றோடு கூடி விளையாடாமலும் இருக்கும்; அதன் துயரைப் போக்குதற்கு அதன் கடுவனும் ஏனைக் குரங்குகளும் எத்தனையோ நன் முயற்சிகளைச் செய்கின்றன. தம் குட்டி இறந்துவிடின், அதனை எறிந்துவிட்டு வேறொன்றின் குட்டியைத் திருடிக்கொண்டு தனது போல அன்பு செய்து ஒழுகும் மந்திகளும் உண்டு.

தினையை உணக்கிய மகளிர் சுனையில் நீராடச் சென்ற செவ்வி நோக்கி "ஒருமந்தி போந்து தினையைக் கவர்ந்துண்பதும்[1]" அருவியிற் பாய்ந்த குரங்கொன்று அங்கே வீழ்ந்து மிதந்த "பலாக்

1. குறுந். 335,

கனியைப் புணையாகக் கொண்டு நீந்துவதும்[1]'' சங்க நூல்களில் காணப்படுகின்றன. மகவுடை மந்திகள் கீழே இருப்பக் கடுவன் பழமரங்களில் ஏறிப் பழங்களை உதிர்ப்ப, அவற்றுள் ஏற்பனவற்றை எடுத்துக் குட்டிக்குத் தந்து தாமும் உண்ணும் அழகிய காட்சி[2] சான்றோர் செய்யுட்களிலும் பிரேசில்நாட்டுக் குறிப்புகளிலும் காட்சி தருகிறது.

பலாவின் முதுகனி யொன்றைப் பெற்ற கடுவன் அதனை உண்பது குறித்துத் தன் ''காதல் மந்தியைக் கையிட் டழைப்பதும்[3]'' தினைக்கொல்லையுட் சென்று தினைக்கதிர் கொய்த கடுவனும் மந்தியும் மலைப்பக்கத்துத் துறுகல் மேல் இருந்து ''ஞெமிடித் தின்பதும்[4]'', காட்டுப் பசுவொன்று கன்றூட்டி யுறங்குவது கண்ட மந்தி தன் சுற்றத்தை வாயடக்கி மெல்லக் குறுகி அதன்மடியைப் பற்றித் தன் பார்ப்பின் கையில் பால்பிழிவதும்[5]'' இனிய இலக்கியக் காட்சிகளாகும்.

ஒரு மந்தியின் கணவன் இறந்ததாக அதன் பிரிவாற்றாது தன் குட்டியை இனத்திடம் தந்து, அதுவரையேறிப் பாய்ந்து உயிர் செகுத்துக்கொண்ட காட்சியைக் கருந்தோட் கரவீரன் என்பார்[6] குறிக்கின்றார். தன் கண்ணுக்கு இனிய காதலனாகிய கடுவனொடு கூடிய இளமந்தி, தன் செயலை ஏனைக் குரக்கினம் அறிதற்கு நாணிச் சுனைநீரில் தன் நிழலை நோக்கித் தலைமயிரைத் திருத்திக் கொள்ளுவதை[7] மருதன் இளநாகனார் வரைந்து காட்டுகின்றார். இவை பொருளாக இந்நூற்கண் வரும் பாட்டுக்களை இனிக் காண்பாம்,

271 அவரை யருந்த மந்தி பகர்வர்
பக்கிற் றோன்று நாடன் வேண்டிற்
பல்பசுப் பெண்டிரும் பெறுகுவன்
தொல்கே ளாகலி னல்குமா லிவட்கே.

---

1. அகம். 382. 2. குறுந். 278. 3. புறம். 158.
4. நற். 22. 5. நற். 57. 6. குறுந். 69.
7. நற். 151.

இது, தலைமகன் வரைவுவேண்டிவிடத் தமர் மறுத்துழிச் செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

ப. உரை: அவரையை நிறையத் தின்ற மந்தி பண்ட வாணிகர் பைபோலத் தோன்றும் நாடன் என்றது ஆண்டு வாழ்வனவும் மேலாம் உணவுகளில் குறைவின்றி வாழும் நாடன் எ. று.

பல் பசுப் பெண்டிரும் என்றது, வரைவெதிர் கொள்ளார் தமர் மறுத்த தீங்கினைத் தங்கள் மேலேற்றி இத்தீங்கு செய்யாது தான் நினைத்தவழி ஒழுகும் குணமுடைய பெண்டிர் பலரையும் பெறுகுவன் அவனே வேண்டின் எனக் கொள்க. பசுப்போற் பெண்டிரும் என்று பாடமோதுமாரு முளர்.

உரை: அவரையை நிறைய உண்ட மந்திகள் பண்டம் பகரும் வணிகருடைய பைபோலத் தோன்றும் நாடன் மகட் கொடை வேண்டுவானாயின், பல பசுப்போலும் இயல்பினையுடைய பெண்டிர் பலரைப் பெற்றோர்மருது தரப்பெறுவனாயினும், அவ்விடத்து, அவன் தானும் பழைமையான உறவினையுடைய னாகலின் இவள் பொருட்டு அவரெல்லார்க்கும் தரற்குரியவற்றை ஒருங்கே நல்குவன் எ. று.

அவரை, அவரைக்கொடி; ஈண்டு ஆகுபெயராய் அதன்காய் மேல் நின்றது. இது குறிஞ்சி முல்லை யாகிய நிலங்களில் வாழ்வார்க்கு உணவுப்பொருள்; "கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே. சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையோடு, இந் நான் கல்லது உணாவும் இல்லை[1]" என்பது காண்க. அவரை முல்லை நிலத்துப் புதல்களிலும், குறிஞ்சியின் தினைப்புனத்து இருவி யிலும் படர்ந்து வளரும்; "புதல பூங்கொடி அவரை[2]" எனவும் "சிறுதினை மறுகால் கொழுங்கொடி யவரை பூக்கும்[3]" எனவும் சான்றோர் கூறுப. அவரையின் இலை மும்மூன்றாக இருக்கும்; இலையும் கொடியும் கொழுவியன; "கோழிலை அவரைக்

---

1. புறம். 335. 2. அகம். 104. 3. குறுந். 82.

கொழுமுகை[1]'' என்பர். இது முல்லை மலரும் கார்காலத்தே பூப்பது. அவரையின் பூ புறம் சிவந்து பவழம் போல்வது; பைந்நனை அவரை பவழங் கோப்ப[2]'' என வரும். இதன் இதழ் வெளிதாகலின், ''அவரைப் பூவின்அன்ன வெண்டலை மாமழை[3]'' என உவமம் செய்ப. அவரையின் சிவந்த பூ வளைந்து தோன்றுவது பற்றிக் கிளியின் வாய்க்கு உவமையாக, ''பைங்கொடி யவரை கிளிவா யொப்பின் பன்மலர்[4]'' என்று சான்றோர் கூறுவர். இதன் காய் வளைந்திருப்பதனால், ''இருவிதொறும் குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை[5]'' என்றனர். இக்காயை மக்களே யன்றிக் கிளிகளும் படிந்துண்பது வழக்கம். ''காய்த்த அவரைப் படுகிளி[6]'' என்பது காண்க. ஈண்டு, இதனைக் குரங்கின் மந்தி தின்று வாயின் இரு மருங்கினும் அடக்கிக் கொண்டிருப்பது கூறப்படுகிறது. ஆர்ந்த என்பது அருந்த என நின்றது. பகர்தல் விற்றல் ஆகலின், விற்பனை செய்யும் வணிகரைப் பகர்வர் என்றார். பக்கு, பை. பக்கழித்துக் கொண்டீ[7]'' எனவரும்.

பசுப்பெண்டிர் பசுவைப் போலும் இயல்புடைய பெண்டிர்; பசு தன்னால் அன்புசெய்யப்பட்ட கன்றின்வழி நின்றொழுகுதல் போலத் தம்மாற் காதலிக்கப்பட்டோர் நினைவுவழி யொழுகும் மகளிரைப் பசுப்பெண்டிர் என்றார். ''மூத்தார் இளையார் பசுப் பெண்டிர்[8]'' ''பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்[9]'' எனவருதல் காண்க.

பசுப்போலும், அறப்பண்புடைய மகளிர் அரியராகலின், அவரைப் பசுப்போல் பெண்டிர் என்றும், அப்பெண்டிரும் பலருளர் என்றற்குப் பன்மைவாப்பாட்டிலும் கூறினாள். நாடன் வேண்டின் என்றது, தலைமகளை யன்றிப் பிறபெண்டிரைத் தலைமகன் வேண்டாமை யுணர நின்றமையின், இது வேட்கை யுரைத்தல். பெண்டிரும் என்புழி நின்ற உம்மையால், தலைமகன்பால் ''பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோடு, உருவு நிறுத்த காமவாயில்,

---

1. அகம். 217. 2. சிறுபாண். 164. 3. ஐங். 209.
4. குறுந். 240. 5. மலைபடு. 109-10. 6. ஐங். 286.
7. கலி. 65. 8. ஆசா. 65, 9. சிலப். 21:53,

நிறையே யருளே யுணர்வொடு திருவென, முறையுறக் கிளந்த ஒப்பினது வகை[1]'' யாவும் அமைந்தமை கூறியவாறுயிற்று. இதனற் பயன், தமர்கேட்டு மகட்கொடை நேர்தற்குரிய தகுதி யுடைமைகண்டு உடன்படுவாராவது; என்னை ''நிரல் அல்லோர்க்குத் தரலோ இல்[2]'' என்னும் கொள்கையின ராகலின். கழிந்த பிறப்பில் தொடர்ந்த கேண்மையால் இப்பிறப்பில் களவுவழி வந்த கேண்மையன் என்பாள் தொல் கேள் என்றும், இவள் பொருட்டு நீவிர் வேண்டுவன முற்றும் தரவல்ல திருவினன் என்றற்கு நல்குமால் இவட்கே என்றும் கூறினுள். இஃது உண்மை செப்பல். தொல்கேள் இப்பொருட்டாதல், ''பழங் கேண்மை கண்டறியாதேன் போல் கரக்கிற் பென்மற் கொலோ[3]'' என்பதனுல் அறிக.

இனி, நாடன் வேண்டின் பெண்டிரும் பெறுகுவன் என்றது தலைமகள் அவனையல்லது பிறரை வேண்டாள் என்றும், இவள் பொருட்டு அவன் யாவும் நல்கும் என்றது, அவனையன்றிப் பிறர்க்கெனின் உயிர் வாழாள் என்றும் குறிப்பால் தோழி கூறினுளாம். இதற்குப் பிறவாறும் உரைப்ப.

அவரையை யுண்ட மந்தி வணிகரது பக்குப் போலத் தோன்றும் நாட ஞகலின், தமர் அவனது கேண்மைச் சிறப்பை அறியாது ஏனோர் போலக் கருதி மகட்கொடை மறுத்தார் எனத் தோழி உள்ளுறுத் துறைத்தவாறு அறிக.

பசுப்போற் பெண்டிரும் பெறுகுவன் என்ற பாடத்துக்குப் பசுத்திரளைப் பெறுவதுபோலப் பெண்டிர்பலரைத்தன் ஆண்மை யால் பெறுகுவன் என வுரைக்க. இதனற் பொருள் சிறவாமை யறிக. (271)

272. கருவிரன் மந்திக் கல்லா வன்பறழ்
அருவரைத் தீந்தே னெடுப்பி யயல
துருகெழு நெடுஞ்சிமைப் பாயு நாடன்
இரவின வருத லறியான்
வரும்வரு மென்ப டோழி யாயே

---

1. தொல். பொ. 273. 2. புறம். 345. 3. கலி. 39.

இஃது, அல்லகுறிப்பட்டு நீங்கும் தலைமகன் சிறைப்புறத் தானாக முன்னைநாள் நிகழ்ந்ததனைத் தோழிக்குச் சொல்லுவாள் போன்று தலைமகள் சொல்லியது.

ப. உரை: மந்திக்கு ஒருமகவாகிய பார்ப்பு மலைக்கண் பெருந்தேன் இருலைக் கிளர்த்து எழுப்பி ஈக்கு வெருவி அதன் அயற் சிகரத்திலே பாயும் என்றது, தான் நுகரக் கருதி வந்து நம்மை உணர்த்திச் சுற்றத்தார் பலரும் உணர்ந்த அதற்கு வெருவிப் பெயர்வான் எ. று.

உரை: தோழி, கரிய விரலையுடைய மந்தியின் நல்லறி வில்லாத வலிய குட்டி, ஏறுதற்கரிய வரையிடத்துத் தீவியதேனை அழிப்பான் தேனீக்களை எழுப்பி, அவை கொட்டுதற் கஞ்சி அயலதாகிய உட்குப் பொருந்திய நெடிய உச்சிக் கண் பாய்ந் தோடும் நாடன் இரவுக்குறிக்கண் வருதலை அறியானாக, அவனை வருகின்றான் வருகின்றான் என யாய்பன்முறையும் கூறாநிற்பள், காண் எ. று.

முகம் போலாது மந்தியின் விரல் கருத்திருத்தலின், கருவிரல் மந்தி எனப்பட்டது. இது செய்யின் இது விளையும் என்னும் நல்லுணர்வு பெறாத இளமைச் செவ்வி தோன்றக் கல்லா வன்பறழ் என்றார்; கல்வியின் பயன் அதுவாகலின். ''கல்லா வன்பார்ப்பு[1]'' எனப் பிறாண்டும் கூறுப. குரங்கிற் குரிய தொழிலை அறியாமை பற்றி இவ்வாறு கூறினா ரென்றலு மொன்று; ஆயினும் கல்லா மையைக் குரங்கினத்துக்கே பொதுவாகக் கூறுதல் மரபு. ''கல்லாக் கடுவன்[2]'' என்றும், ''கல்லா மந்தி[3]'' என்றும் நூலோர் நுவல்வது நோக்குக. பறழ், குட்டி. தாயாகிய மந்தி விலக்கவும் விலகாது தேனை அழித்தற்கு ஓடும் பேதைமைத்தடிப் புடைமைபற்றி வன்பறழ் என்றார் என்க. ஏறுதற் கருமையின் அருவரை எனப்பட்டது. தேனீக்கள் அடைவைக்கும் இடமும் அதுவே என அறிக. உரு, உட்கு. நெடுஞ்சிமையின் உரு வுடைமை நோக்காது பாயும் எனவே, ஈக்கள் கொட்டுதற்கு அஞ்சினமை பெறப்படும். வாரான் என்றது வருதல் அறியான்

1. ஐங். 280. 2. அகம். 252. 3. ௸. 378.

என்றது, வருவதிலன், ஒருகால் வரினும் பிறர் அறியாவகை வருமாறு தெரிந்திலன் என்பதுபட நின்றது.

முன்னை யிரவில் தான் அல்லகுறிப்பட்டு உழந்த அல்லலைக் குறிப்பாலுணர்த்துவாள், இரவின் வருத லறியான் என்றும், வாராதானை வந்தான் என்று யாய் மருண்டு கூறுகின்றாள் என்பாள், வரும் வரும் என்பள் யாய் என்றும் கூறினாள். அடுக்கு வன்புறை குறித்து நின்றது.

மந்தி விலக்குவது இரவுக்குறி விலக்கிய குறிப்பாகவும், வன் பறழ் தலைவனாகவும், தேனீ சுற்றத்தாராகவும், பறழ் நெடுஞ் சிமையிற் பாய்ந்தது தலைவன் பெயர்ந்துசென்றதாகவும் உள்ளுறை யுவமம் கொள்க. யாய் வரும்வரும் என்பள் என்றது தாய் அறிந்தமை கூறி இரவுக்குறி மறுத்து வரைவு கடாவியவாறு.

நெடுஞ்சினை என்பது பாடமாயின், மலையின் சிமையம் அதற்குச் சினையாகும் இயைபு குறித்துச் சினை எனப்பட்டது என்க. (272)

273. அத்தச் செயலைத் துப்புற ழொண்டளிர்
புன்றலை மந்தி வன்பற ழாரும்
நன்மலை நாட நீசெலின்
நின்னயந் துறைவி யென்னினுங் கலிழ்மே,

இது, வரைவிடைவைத்துப் பிரியும் தலைமகள் நின் துணைவியை உடம்படுவித்தேன், இனி நீயே இதற்கு உடன்படாது கலிழ்கின்றாய் என்றாற்குத் தோழி கூறியது.

ப. உரை: பிரிவு உடம்பட்டாளே யாயினும் நீ பிரிந்துழி ஆற்றாள் என்பதாம்.

அசோகத்தளிரை மந்திப்பார்ப்பு அருந்தும் என்றது இளமை கழிவதற்கு முன்னே வரைதல் வேண்டும் என்பதாம்.

உரை வழிக்கண்நின்ற அசோகினது பவளம் போலும் ஒள்ளிய தளிர்களைப் புல்லிய தலையினையுடைய மந்தியின் வலிய குட்டி

உண்ணும் நல்ல மலைநாடனே, நீ பிரிந்து செல்லின் நின்னை விரும்பி நின் பிரிவுடனபட்டு ஈண்டு உறைபவள் பின்னர் ஆற்ருது என்னினும் மிகக் கலுழ்ந்து வருந்துவள், காண் எ.று.

பெருவழிகளில் நெல்லிமரங்களை வழிக்கரையில் நிரல்படவளர்ப்பது பண்டைத்தமிழர் மரபு, வழிக்கரையில் நிற்பதுபற்றிச்செயலை அத்தச்செயலை எனப்பட்டது; ''அத்த நெல்லி[1]'' எனவும், ''அத்தப் பலவு[2]'' எனவும் சான்ருேர் உரைப்பது காண்க செயலையின் தளிர் செந்நிறத்த தாதலின், துப்புறழ் ஒண்டளிர் என்ருர்; பிறரும், ''ஊட்டி யன்ன ஒண்டளிர்ச் செயலை[3]'' ''அழலேர் செயலை[4]'' என்று கூறுவர். இளந்தளிர்களை உண்டல் குரங்குகட்கு இயல்பு; 'முறிமேய் கடுவன்[5]''குளவி மேய்ந்த மந்தி[6]'' எனப் பின்னரும் கூறுப மந்தியின் தலைமயிர் சிலிர்த்துத் துய் போறலின், புன்றலை மந்தி என்ருர்; எனைச் சான்ருேரும் ''புன்றலை மந்தி[7]'' ''துய்த்தலை மந்தி[8]'' என்று குறிப்பர். உறைவி, உறைபவள்; ''உவர்நீங்கு கற்பின் எம் உயிர் உடம்படுவி[9]'' என்ருற்போல,

தலைமகள் நின் பிரிவுடன்பட்டா ளாயினும் நீ பிரிந்துழி ஆற்ரு ளென்பதாம். நின்னைச் சிறிது பிரியினும், ஆற்ருது நின்னையே நினைந்து வாய்வெருவி வருந்துமவள் நீபிரிதற்கு உடன் படாள்; மற்று நின் வரம்பிகத்தல் தன் கடனன்று என்னும் கற்புடைமையால் உடம்பட்டாளாதல் வேண்டு மென்பாள், நின் நயந் துறைவி என்றும், தன் இளமையால் என்னினும் விரைந்து உடன்பட்டாளாகலான், பிரிவின்கண் என்னினும் ஆற்ருளாவள் என்றற்கு என்னினும் கலிழ்மே என்றும் கூறினுள்.

மந்தியின் வன்பறழ் செயலையின் தளிர் முற்றி நிறம் மாறு முன்பே உண்டாற் போல, நீயும் இவள் இளமை கழிந்து காமச் செவ்வி மாறுமுன்பே வரைந்து கோடல் வேண்டும் என்பது உள்ளுறை; ''இளமை கழிந்த பின்றை வளமை, காமம் தருதலும் இன்றே[10]'' என்று சான்ருேர் கூறுதல் காண்க. (273)

---

1. அகம். 241. 2. ஐங். 351. 3. அகம். 68.
4. ஷை. 188. 5. ஐங். 276. 6. ஷை. 279.
7. நற். 379. 8. ஷை. 57. 9. அகம். 136. 10. நற் 126.

274. மந்திக் கணவன் கல்லாக் கடுவன்
ஒண்கேழ் வயப்புலி குழுமலின் விரைந்துடன்
குன்றுய ரடுக்கங் கொள்ளும் நாடன்
சென்றனன் வாழி தோழியென்
மென்ரோட் கவினும் பாயலுங் கொண்டே.

இது, வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

ப உரை: மந்திக் கணவனுகிய கல்லாக் கடுவன் புலிமுழக்கிற்கு அஞ்சி வரையகத்துப் பாயும் நாடன் என்றது, நமக்கு உரியனாய் ஒழுகுகின்றவன் யாம் எம்மைப் பாதுகாத்து உரைக்கின்ற உரைக்கு அஞ்சிச் சென்ருன் என்பதாம்.

உரை: தோழி, மந்திக்குக் கணவனாய் மேல் விளைவதறியும் கல்வி யில்லாத கடுவன், ஒள்ளிய நிறம் பொருந்திய வலியுடைய புலி முழங்குதலால் வெருவி யோடிக் குன்றின் கண் உயர்ந்த மலைப்பக்கத்தை அடையும் நாடன், என் மெல்லிய தோளழகும், அதனைச் செறிய எய்தும் உறக்கமும் என்னிடத்தே இலவாகச் செய்து, தான் என்னைப் பிரிந்து சென்ருன்; அவன் வாழ்வானாக எ. று.

குழுமல், முழக்குதல், ''கயவாய் வேங்கை காய்சினம் சிறந்து குழுமலின் வெரீஇ[1]'' என்றும், ''கொடுவரிச் செங்கண் இரும்புலி குழுமுஞ் சாரல்'' என்றும் வருவன வற்ரு லுணர்க. பாயல், உறக்கம்.

தலைமகன் பிரிவினல் வருந்துபவள், புறத்தார்க்குப் புலப் படுத்தும் தோள்மெலிவும், அதற்குக் காரணமாய ஆற்ருமையும் கண்டு அஞ்சி யிரங்குவாள், மென்ரோட் கவினும் பாயலும் கொண்டே என்றும், தன்னை யின்றி அமையாத இவள் தோள் மெலிந்து கண்ணுறக்கம் இன்றி வருந்தி நிற்கத் தான் சென்று இனிதிருக்கின்ருன் என்பாள் சென்றனன் என்றும், தன்

1. அகம். 221.

பொருட்டுப் பிறர் வருந்தா நிற்ப அது காணுது இன்புறுவோர்க்கு எய்தும் பழி அவற்கு வாராமை குறித்து வாழி என்றும் கூறினுள்.

கல்லாக் கடுவன் புலி குழுமல் கேட்டு அஞ்சிக் குன்றுயர் அடுக்கம் கொள்ளும் என்றது, வேற்றுவரைவு வருமென யாம் படைத்து மொழிந்தமை கேட்டு அஞ்சி வரைபொருட்குச் சென்ருன் எனத் தலைமகன் செலவுக்குரிய காரணத்தை உள்ளுறுத்து உரைத்தவாறு.

அவன் கவினும் பாயலும் கொண்டு சென்ருனுயினும் வரை பொருள் முற்றி விரைந்து வருவானுக என்னும் விழைவு தோன்ற வாழி என்ருள் என்றுமாம். (274)

275. குரங்கின் றலைவன் குருஉமயிர்க் கடுவன்
சூரலஞ் சிறுகோற் கொண்டு வியலறை
மாரி மொக்குள் புடைக்கு நாட
யாநின் னயந்தன மெனினுமெம்
ஆய்நலம் வாடுமோ வருளுதி யெனினே.

இது, வரையாது வந்தொழுகும் தலைமகன் இடையிட்டு வருதலால் எதிர்ப்பாடு பெருத தோழி குறியிடத்து எதிர்ப்பட்டு அவன் கொடுமை கூறி நெருங்கிச் சொல்லியது.

ப. உரை: நின் நயந்த எம் நலம் வாடுதல் ஒருதலை யன்றே; அங்ஙன மாயினும் நின்னை யாங்கள் நயந்ததனை வெருளாது அருளப்பெறின் எம் நலம் வாடுமோ? எ. று.

குரங்கின் தலைவனுகிய கடுவன் சூரற்கோலைக் கொண்டு தானே அழிகின்ற மாரிமொக்குளைப் புடைத்து அழிக்கும் நாட என்றது நின்னை நயந்த எங்கள் நலம் நீ வரையாமலே அழிகின்றது; இதனை நீ இவ்விடையிட்ட ஒழுக்கத்தாலே அழியா நின்ருய் என்பதாம்.

உரை: குரங்கின் தலைவனுகிய நிறம் பொருந்திய மயிரினை யுடைய கடுவன் சூரலின் சிறிய கோலைக் கொண்டு அகன்ற

மலைப்பக்கத்தே யுள்ள மழை நீராகிய மொக்குளைப் புடைக்கும் நாடனே, யாம் நின்னை விரும்பினேமாகலின், நலந்தொலைவு எய்தக்கடவே மாயினும் இடையறு ஒழுக்கத்தான் நீ எமக்கு அருளுவையாயின், எங்கள் அழகிய நலம் வாடாதன்றோ? எ. று.

தன்னை நயந்தாரைத் தான் நயந்து தலையளி செய்தல் தலைமகனுக்குக் கடனாக, நீ அது செய்யாதொழிந்தனை என்பாள், யாம் நின் நயந்தனம் என்றும், அந்நயப்பால் யாம் நலம் வாடக் கடவேம் என்பது ஒருதலை யன்று என்பாள், எனினும் என்றும் கூறினாள். கூறவே, அவள் நலம் வாடுதற்குக் காரணம் அவனது அருளாமை என்றும், அவ் வாட்டந்தானும் அழிவில் கூட்டத்தால் அருளுவையாயின் இன்றாம் என்றற்கு, ஆய்நலம் வாடுமோ அருளுதியெனின் என்றும் கூறினாளாயிற்று, நயந்தனம் எனத் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தமையும் படத் தோழி கூறுதலின், அருளுதி யெனின் என அவள் நெருங்கி யுரைப்பது அமையும் என அறிக. யாம் நின் நயந்தன மெனினும் என்றது தன்னை யழிதல்; ஆய்நலம் வாடுமோ என்றது, வாட்டம் புறத்தார்க்குப் புலனாகி அலர் விளைக்கும் என நலத்தின் மேல் வைத்துத் தீமை கூறல். இவை புரைபட வந்தன வாயினும் வரைதல் வேட்கைப் பொருள வாகலின் அமைந்தன. (275)

276 மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
தண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்க லிளமழை புடைக்கு நாட
நயவா யாயினும் வரைந்தனை சென்மோ
கண்முகை வேங்கை மலரும்
நன்மலை நாடன் பெண்டெனப் படுத்தே.

இது, வரையாது வந்தொழுகும் தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

ப. உரை: மேல் கருக்கொண்டு முற்றிப் பயன்படுவ தாய இளமுகிலைக் கடுவன் நறைக்கொடி கொண்டு புடைக்கும் நாட

என்றது, வரைந்து மகப்பெறுதற்கு உரியளாகிய இவளை இம் மறைந்த ஒழுக்கத்தாலே கொலை சூழ்கின்றாய் என்பதாம்.

கல்முகை வேங்கை மலரும் நாட என்றதனால் வரைதற்குரிய பருவமும் கூறியவா றாயிற்று.

உரை: மந்தியின் காதலனாய்த் தளிர்களையுண்ணும் கடுவன் தண்ணிதாய் மணம் கமழும் நறைக்கொடி கொண்டு அகன்ற மலைப்பக்கத்துப் படியும் இளமுகிலைப் புடைக்கும் நாடனே, கல் லிடையே அரும்பிய முகைகளையுடைய வேங்கை மலரும் நல்ல மலைநாடனுக்குரிய பெண்டு எனப்படுமாறு வரைந்து கொண்டு செல்வாயாக எ. று.

நறைக்கொடி நறவங்கொடி எனறும் வழங்கும். முறியெனப் பொதுப்படக் கூறியதனால், செயலை, குளவி முதலிய தளிர்களைக் கொள்க. ''கறிவளர் அடுக்கத் தாங்கண் முறி யருந்து, குரங்கு ஒருங்கிருக்கும்[1]'' என்ப. பொங்கல் என்பது மிகுதிப் பொருட்டா யினும், ஈண்டுத் திரள்திரளாய் எழுதலை யுணர்த்திற்று; ''பெய்து புலந்திறந்த பொங்கல் வெண்மழை,[2]'' எனப் பிறருங் கூறுதல் காண்க. கண்முகை வேங்கை மலரும் யென்பதற்குக் கல்முழைஞ்சினுள் நின்ற வேங்கை மலரும் எனினுமாம். முகை, முழைஞ்சு. ''கன்முகை வயப்புலி[3]'' எனப்பிறருண்டுங் கூறியவாற்று னறிக. பெண்டு, மனைவி. ''ஊரார் பெண்டென மொழிய என்னை[4]'' என்றார் பிறரும்.

நின்னை யின்றியமையாது விரும்பும் இவளைத் தலைவனாகிய நீ வரைந்து கோடலைச் செய்யாது நீட்டிக்கின்றா யாகலின், நயவா யாயினும் என்றும், நின்முயக்கின்பம் இன்றேனும், நின் பெண்டு எனப்படுதல் பெறின், இவள் இறந்து படாது உயிர் வாழ்வாள் என்பாள், நன்மலை நாடன் பெண்டு எனப்படுத்தே என்றும் கூறினாள்,

---

1. குறுந். 288. 2. அகம். 217. 3. ஐங். 246.
4. ஷை. 113.

மேன்மேற் படிந்து குளிர்ந்து மழைபெயற் குரிய இளமுகிலைக் கடுவன் நறைக்கொடி கொண்டு அலைக்கும் நாடஎன்றது வரைந்து கூடி மகப்பெறுதற் குரியளாகிய இவளைக் களவையே நீட்டித்து அலைக்கின்ருய் என்பதாம். (276)

277. குறவர் முன்றின் மாதீண்டு துறுகற்
கல்லா மந்தி கடுவனெ டுகளும்
குன்ற நாட நின் மொழிவ லென்றும்
பயப்ப நீத்த லென்னிவள்
கயத்துவளர் குவளையி னமர்த்த கண்ணே.

இது, வரையாது வந்தொழுகும் தலைமகன் புணர்ந்து நீங்குழி எதிர்ப்பட்ட தோழி வரைவு கடாயது.

ப. உரை: குறவர் முன்றிலில் மா தீண்டு துறுகற்கண்ணே நாணது மந்தி கடுவனேடு உகளும் நாட என்றது சுற்றத்தார் நடுவே இவ்வொழுக்கம் புலனுகிய ஞான்று விளையும் ஏதத்திற்கு நாணுதோய் என்பதாம்.

உரை: குறவர் இன்முன் நிறுத்திய மாதீண்டு துறுகல்லில் கல்லா மந்தி தன் கடுவனேடு தாவியாடும் குன்றங்களையுடைய நாடனே, நின்னை ஒன்று வினவுவல்: குளங்களில் வளரும் குவளை மலரைப் போல அமர்த்த இவளுடைய கண்கள் பசலை பாயும்படி இன்றை இல்லையாயினும் என்றேனும் பிரிந்து சேறல் யாது கருதியோ? கூறுக எ. று.

மாதீண்டு துறுகல், ஆதீண்டு குற்றி போல மாவினம் தினவு தீர்த்துக் கோடற் பொருட்டு நிறுத்தப்படுவது. மந்தி கடுவனேடு உகளுதலை விதந்து "அள்ளிலைப் பலவின் கனிகவர் கைய, கல்லா மந்தி கடுவனேடுகளும், கடுந்திற லணங்கின் நெடும் பெருங் குன்றம்[1]" எனப் பிறரும் கூறுதல் காண்க. பயத்தல், பசத்தல். அமர்த்தல், மாறுபடுதல். மேவற் பொருட்டாகிய அமர்தல், அமர்த்தலென நின்றது எனவும் கூறுப.

1. அகம். 388.

நாடோறும் தலைமகனைக் குறியிடத்தே எதிர்ப்பட்டுக் கூடுதலும் பின்னர்ப் பிரிதலும் செய்தொழுகும் இக்களவினை விலக்கி வரைந்து கொண்டு, என்றும் பிரிவறியாத பேரின்பத்தில் திளைக்க வேண்டும் என்னும் விழைவினால் தலைமகனை வரைவு கடாவுவான் சொல்லாடு கின்றாளாகலின், நின் மொழிவல் என்று முகம்புகுந்தாள். நாடோறும் குறியிடத் தெய்திக் கூடுதலின் ஒழியாத பெருங்காதல் உடையை என்றற்கு என்றும் என்றும். இவ்வண்ணம் இடையறவு இன்றிக் கூடுதலை விரும்பும் நீ, கூடியபின் பிரிவது கூடாது என்பாள் நீத்தல் என் என்றும், நின் பிரிவால் இவள் கண் பசந்து வேறுபடுதலை அறிதல் வேண்டும் என்றற்கு, பயப்பநீத்தல் என் என்றும் கூறினாள் இருதலையும் காதற்காமம் சிறப்பது குறித்துத் தலைமகன் புணர்வும் பிரிவும் நிகழ்த்தி யொழுகுகின்றான் என்பதைத் தோழி அறிந்துளா ளாயினும், தலைமகள்பால் அது சிறந்தமை யுணர்த்தி வரைவுகடாவும் கருத்தின ளாகலின் என் என்று கடாவினாள் என அறிக. கயத்துவளர் குவளை என்றது, குவளைக்குக் கயம் இன்றியமையாதவாறு போல நீ இவட்கு இன்றியமையா யாயினை எனக் காதற்சிறப்பும், கயத்தின் நீங்கிய வழிக் குவளை பசந்து சாம்புவது போல நின்னின் நீங்கியவழி இவள் கண் பசந்து வேறுபடுவளெனப் பயப்பதற்கு ஏதுவும் சுட்டி நின்றது.

பசலை பாய்ந்து மேனி வேறுபட்டளாயின், அதனைத் தமர் அறிந்து இற்செறிப்பு முதலிய இடையீடு செய்வராகலின், பயப்ப நீத்தல் என் என வெளிப்படையாலும் இடையூறு கூறி வரைவு கடாயவாறும் கொள்க. குறவர் முன்றிலில் கல்லா மந்தி ஏதம் நினையாது கடுவனோடு உகளும் என்றது மனையின் அகத்தும் புறத்தும் அமைந்த குறியிடத்தே கூட்டத்துக்கு உண்டாகும் ஏதம் நினையாது இன்றியமையாக் காதலால் கூடி யொழுகுகின்றாள் என உள்ளுறையால் இருவகைக் குறியையும் விலக்கிக் குறிப்பால் வரைவுகாடாவிய வாறு. இரவுக்குறி இல்லகத்ததெனவும் பகற்குறி புறம் எனவும் ஆசிரியர் கூறுப [1]. (277)

---

1. தொல். பொ. 131-2.

278. சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென விலஞ்சி
மீனெறி தூண்டிலி னிவக்கு நாடன்
உற்றோர் மறவா நோய்தந்து
கண்டோர் தண்டா நலங்கொண் டனனே.

இது, வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ப.உரை: குரங்கு தன்மேல் இருந்துழி வளைந்து, அது பாய்ந்து போவுழி நிமிர்கின்ற மூங்கிற்கோல் மீனெறி தூண்டில் போல ஓங்கும் நாடன் என்றது, தன் நெஞ்சத்து அன்புளதாகிய காலத்து வளைத்து வளைத்தொழுகி அன்பற்ற காலத்துப் பணிவின்றித் தலைமை செய்து நம் நலம் கொண்ட தன் கொடுமை தோன்ற ஒழுகுகின்றான் என்பதாம்.

உரை: மலைக்கண்ணுள்ள மூங்கிலின் கணுவிடத் தெழுந்த கோலின் மேலிருந்து குரங்கினது வலிய குட்டி பாய்ந்ததாக, அக் கோல் குளத்தின்கண் மீன் பிடிப்பதற்கு வைத்த தூண்டிலைப் போலத் தாழ்ந்திருந்து நிமிரும் நாடன் தன்னைச் சார்ந்தோர்க்கு என்றும் மறக்கலாகாத நோய் தந்து, கண்கொள்ளாக் கவின்மிக்க அவரது நலத்தைக் கவர்ந்துகொண்டனன்; அவர்தாமும் தம் நலமிழந்து வருந்துவாராயினர், காண் எ.று.

வெதிர், வெதிரம் என நின்றது இலஞ்சி ,நீர்நிலை. மீனெறி தூண்டில், மீனைக் கரையிடத்துத் தூக்கி யெறியும் கழைக்கோல். தாழ்ந்திருந்த மூங்கில் நிமிர்வதனை மீனெறி தூண்டிற் குவமித்தல், ''ஏனல் காவலர் கவணொலி வெரீஇக், கான யானை கைவிடு பசுங் கழை, மீனெறி தூண்டிலின் நிவக்கும், கானக நாட[1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க.

தன்னைக் கூடிய காதலன் பிரிவு இடை வைத்து வரையாது ஒழுகுதலின், தலைமகள் அவனையே நினைந்து வருந்துகின்றாளாகளின்,

1. குறுந். 54.

உற்றோர் மறவா நோய் தந்து என்றும், அதனால் அவள் தன் மேனி வேறுபட்டு, நலம் கெடுதற்கிரங்கி, கண்டோர் தண்டா நலம் கொண்டனன் என்றும் கூறினாள். தண்டாநலம் என்றது, கழிந்த தற்கு இரங்கிக் கூறியது. நலங்கொண்டு நோய் தருதல் காதலர்க்கு அறமன்று எனத் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமை யும் தோன்றக் கூறியது, நோய் பயக்கும் நலக்கேடு கூட்டத்துக்கு இடையூறு பயக்குமெனக் குறிப்பால் வரைவுகடாயது.

வெதிரத்துக் கோல் மீனெறி தூண்டிலின் நிவக்குமாயினும் அது தூண்டில் போல் பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாதாக, தலைமகன் வரையா தொழுகும் ஒழுக்கம் எனக்குத் தீங்காயினவாறு என்னை என இறைச்சி தோன்றுதல் காண்க. ''இறைச்சி தானே பொருட்புறத்ததுவே'' என்றும் ''இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாருளவே[1]'' என்றும் ஆசிரியர் கூறுப. (278)

279. கல்லிவ ரிற்றி புல்லுவன வேறிக்
குளவி மேய்ந்த மந்தி துணையொடு
வரைமிசை யுகளு நாட நீவரிற்
கல்லகத் ததுவெம் மூரே
அம்பற் சேரி யலராங் கட்டே.

இது, இரவுக்குறி வேண்டும் தலைமகனைத் தோழி வர வருமை கூறி மறுத்தது.

ப.உரை: எம்மூர் என்றது சூழ்ந்த மலைகளின் நடுவகத்தது எம்மூர் எ. று.

இற்றிமேற் படர்ந்த குளவித்தளிரை மேய்ந்து வரையகத்திலே மந்தி கடுவனோடு உகளும் நாடனாதலான் இதற்கு முன்பு இவள் நின்னோடு நுகர்ந்ததே கொண்டு இனி இவள் நின் பதிக்கண் வாழ்தல் வேண்டும் என்பதாம்.

உரை: கற்களின் மேலோடும் இற்றி மரத்தின் வேரையும், வேறு பற்றுவனவற்றையும் பற்றிச் சென்று, அவ்விற்றிமேற்

1. தொல்.பொ. 229–30

படர்ந்த குளவித்தளிரை மேய்ந்த மந்தி, தன் துணைக்குரங்கோடு கூடி மலையின்மேல் தாவி யாடுகின்ற நாடனே, கற்கள் சூழ்ந்த மலைகளின் நடுவகத்த தாகிய எமது ஊர், அம்பல் மொழியும் சேரியும் அலர்விளைப்பார் உறையும் இடமும் உடையது; ஆகவே நீ வருதல் நன்றன்று எ. று.

இற்றி, ஒருவகை மரம். இக்காலத்தார் இதனை இத்தி என வழங்குப. இதன்வேர் கற்களின்மேற் பரவியிருத்தலின், அதனைப் பற்றி யேறிச் சென்று மந்தி குளவித்தளிரை மேய்ந்ததெனக் கொள்க. "புல்வீழிற்றுக் கல்லிவர் வெள்வேர், வரையிழி யருவியிற் றோன்றும் நாடன்[1]" எனப் பிறண்டும் இவரே கூறுமாறு உணர்க. குளவி, காட்டுமல்லிகை. குளவி; மிக்க மணமுடைய பூவையுடையது. இது புதல் புதலாக அரிய இடங்களில் வளர்ந்திருக்கும். "குளவித் தண்புதல்[2]" என்றும், "நீரிழி மருங்கின் ஆரிடத் தமன்ற குளவி[3]" என்றும் சான்றோர் கண்டுரைப்பது காண்க. எளிதில் சென்றடைதற்குரிய இடத்தில் இருத்தலின் மந்தி இற்றி வேரைப் பற்றிச் சென்று குளவியை மேய்வதாயிற் றென அறிக. ஊர்க்குப் புறமாய்ச் சேர இருப்பது சேரி. ஊரகம் அலரும், புறமாய சேரி அம்பலும் உடைய என்பது கருத்து.

நீ வரின் என்றது நீ வாராதொழிதல் நன்றென்பது பட நின்றது. எம்மூர் மலைகள் சூழ்ந்த நடுவகத்த தாகலின், செவ்விய நெறியின்றிக் கொடிய விலங்குகள் இயங்கும் படுவழிகளை யுடைத் தென்பாள், கல்லகத்தது எம்மூரே என்றும், எம்மூரிலுள்ளார் இயல் பாகவே அம்பலும் அலரும் கூறுவராகலின், நீ வரின், அது பெருங் கௌவையாம் என்பாள், அம்பற் சேரி யலராங் கட்டே என்றும் கூறினாள். இவை ஏதமாய்தல் "அம்பலென்பது சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்வது; இன்னதின் கண்ண தென்பது அயலறிய லாகா தென்பது. அலரென்பது இன்னானோடு இன்னா ளிடையது போலும் பட்டது என விளங்கச் சொல்லி நிற்பது. அம்பலென்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலறுமென நிற்பது; அலரென்பது அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட

1. குறுந். 106 2. அகம். 182 3. ஷை. 272.

மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமை[1]'' என்பர். இற்றியின் வேரையும் வீழ்தையும் பற்றி ஏறிய மந்தியும் கடுவனும் ஆண்டுப்படர்ந்த குளவியின் தளிரை மேய்ந்து இன்புறும் என்றது, களவு நெறி பற்றிக் காதலன்பு வாழ்வில் தலைப்பட்ட நீவிர் இருவரும் இனிக் கற்புவழி மணந்து இல்லிருந்து நுகரும் நல்லின்பத்தை எய்துதல் வேண்டும் எனக் குறிப்பாய் வரைவு கடாவியவாறு. (279)

280. கருவிரன் மந்திக் கல்லா விளம்பார்ப்
பிருவெதி ரீர்ங்கழை யேறிச் சிறுகோல்
மதிபுடைப் பதுபோற் றோன்று நாட
வரைந்தனை நீயெனக் கேட்டியான்
உரைத்தனெ னல்லெனோ வஃதென்
யாய்க்கே.

இது, புணர்ந்துடன் போகிய தலைமகன் தலைமகளைக் கரண வகையான் வரைந்தானாக, எதிர்சென்ற தோழிக்கு ''இனி, யான் இவளை வரைந்தமை நுமர்க்கு உணர்த்த வேண்டும்'' என்றானாக அவள் சொல்லியது.

ப. உரை: குரங்கின் இளம்பார்ப்பு இருவெதிர்ங்கழை ஏறி மதிபுடைப்பது போல் தோன்றும் நாடஎன்றது தீங்குசெய்வாயைப் போலத் தோன்றுவ தல்லது உண்மைவகையாற் செய்யாய் என்பதாம்.

உரை: கரிய விரலையுடைய மந்தியின் கல்லாத இளைய குட்டி பெரிய மூங்கிலின் பசிய கழைமேலேறிச் சிறு கோலைக் கொண்டு மதியத்தைப் புடைப்பது போலும் தோற்றத்தைச் செய்யும் நாடனே, நீ இவளைக் கரணவகையான் வரைந்தனை யெனக் கேட்ட யான் விரைந்து அதனை யாய்க்கு உரைத்தேன், காண் எ. று.

மந்தியின் குட்டியைப் பறழ் என்பதே யன்றிப் பார்ப்பு என்பதும் உண்டு; ''மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்,

---

1. இறை. அ. பொ. 22. உரை.

அவையும் அன்ன அப்பாலான[1]'' என ஆசிரியர் கூறுவர். வெதிர், மூங்கில்வகை. இதன் நுனிப்பகுதி ஈண்டுக் கோல் எனக் குறிக்கப் படுகிறது. நெடிதுயர்ந்து தோன்றும் வெதிர்ங்கோல் வானத்தைத் தொடுவது போலத் தோன்றுதலின், அதன் நுனிக்கண் தங்கிய பார்ப்பு, வானத்திற் காணப்படும் மதியைப் புடைப்பது போலக் காட்சி தருவது பற்றி, மதி புடைப்பது போல் தோன்றும் என்ருர்.

நீ வரைந்தனை என்றது பிறர் கூறிய கூற்றைக் கொண் டெடுத்து மொழிந்தது. தலைமகன் தன் வாய்மை குன்ருது தலைவியைக் கரணவகையால் மணந்தான் என்று பிறர் கூறக் கேட்டேன் என்பாள் கேட்டு என்றவள், தன் உள்ளம் நிறைந் தெழுந்த உவகையால் மேலே சொல்லாடாது கண்ணினும் முகத் தினும் விளங்கக் காட்டினுளாகலான், பின்னர்த் தான் தலைமகற்கு விடை யிறுக்கும் வாயிலாக, அவன் வரைந்த செய்தியை அஃது என்றும், அதனை விளங்க உரைத்தமை தோன்ற உரைத்தனெ னல்லெனே என்றும் கூறினுள்.

இருவெதிர் ஈர்ங்கழை யேறி அதன்மிசை இனிதிருக்கும் குரங்கின் பார்ப்பு, மதியைப் புடைத்து வருத்துவது போலத் தோன்றும் நாடன் என்றது, களவுவழி யொழுகி உடன்போக்கின் முடிவில் கரணவகையால் மணந்து இன்புறும் நீ, மதிபோல் உயர்ந்த எம் குடிக்குத் தீங்கு செய்வாய் போல என் யாய்க்குத் தோன்ருநின் றனை எனத் தாயர் முதலியோர் கொண்ட கருத்தினைத் தோழி உள்ளுறுத்து உரைத்தவாறு.

இனி, ''தலைவரும் விழுமநிலை[2]'' என்ற சூத்திரத்து ''இயல் புற நாடின்'' என்றதனுல், ''தலைவன் கரணவகையால் வரைந் தானுக எதிர்சென்ற தோழிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு உணர்த்தல் வேண்டும் என்ருற்கு அவள் உணர்த்தினேன் என்றது என்பர் நச்சினுர்க்கினியர். (280)

---

1. தொல். பொ. 567. 2. ஷை. 39.

29

கிள்ளைப்பத்து

கிள்ளை பொருளாக வரும் பாட்டுக்கள் பத்தின் தொகுதி யாகலின் இது கிள்ளைப் பத்து எனப்பட்டது.

புள்ளினத்துள் கிள்ளையினம் பெரிது. இது வகையால் ஆருகப் பிரியினும் விரித்து நோக்குங்கால் ஐஞ்ஞூறு இனமாகக் காணப்படு கிறது. வெம்மை நிலப் பகுதிகளிலும் அவற்றைச் சார்ந்த நிலங் களிலும் கிள்ளைகள் வாழ்கின்றன. மலேயா, ஆத்திரேலியா, அமரிக்கா ஆகிய நாடுகளில் இவை மிக்கிருப்பினும் ஏனை எல்லா வற்றினும் தென்னமரிக்காவில்தான் மிகுதியும் பல்கி யிருக்கின்றன. நம் நாட்டில் கிள்ளையினம் குறைவே. ஆப்பிரிக்காவில் நம் நாட்டினும் மிகக் குறைவு. ஐரோப்பாவில் கிள்ளையினமே கிடையாது. வட அமரிக்காவின் தென்பகுதியில் சில இடங்களில் ஒருவகைக் கிள்ளை வாழ்கின்றது. கிள்ளைகள் அறுபது முதல் எண்பது ஆண்டுகள் உயிர் வாழும் உரன் படைத்தவை.

கிள்ளைகள் யாவும் பொதுவாக மரங்களில் வாழ்வன; ஆதலான் அதற் கேற்பவே அவற்றிற்குக் கால்களும் வாயலகு களும் அமைந்துள்ளன. கால்கள் ஒருவகை உறுதியான செதிள் களால் மூடப்பட்டிருக்கின்றன. சில கிள்ளைகட்குக் கால்கள் குறுகி யும் சிலவற்றிற்கு நீண்டும் இருப்ப துண்டு. கிளியின் வாயலகு சிறியது; ஆயினும் வன்மை வாய்ந்து நுனி வளைந்திருக்கும். சில

கிளிகளின் மேலலகு நெளிக்கவும் விரிக்கவும் தக்க வகையில் உளது. கிளிகள் மரமேறுங்கால் அவற்றின் கால்களினும் வாயலகே பெரிதும் பயன்படும். நம் நாட்டில் காணப்படுவன பலவும் சிறு கிளியினம். பெருங்கிளி யினமும் கிள்ளையினத்துள் உண்டு. அவற்றின் வாயலகு வியக்கத்தக்க பெருவன்மை யுடையது. இப் பெருங்கிளிகள் பிரேசில் நாட்டில் மாக்கா[1] என்ற பெயரால் வாழ்கின்றன. ஒருவன் சம்மட்டி கொண்டு உடைக்கக் கூடிய சில கொட்டைகளைப் பெருங்கிளியின் அலகு மிக எளிதில் உடைத்து மாவாக்கி விடுகிறது பெருமரங்களைத் துளைத்துக் கூடமைப்பது அவற்றின் இயல்பு அத்தொழிற்கு அவற்றின் வாயலகு பெருங் கருவியா யுளது. அவற்றின் முட்டைகள் வெண்மை நிறமுடையன. பெருங்கிளியினம் இரண்டு மூன்று முட்டைகட்குமேல் இடுவதில்லை. தாயும் தந்தையுமாகிய இரண்டுமே ஒன்று மாற்றி ஒன்றிருந்து அம்முட்டைகளை அடைகாக்கும்.

கிளிகள் யாவும் பழவகைகளையும் கொட்டைகளையும் உணவாகக் கொள்கின்றன. தாம் உண்ட வுணவில் செரித்தும் செரிக்காமலும் இருக்கும் உணவை வெளிக்கொணர்ந்து பார்ப்புகட்கு அளிப்பது கிள்ளையினத்தின் சிறப்புப் பண்பாகும்.

கிளிகள் பலவும் கூட்டம் கூட்டமாக ஆரவாரம் செய்து கொண்டு வாழும். வெள்ளிடைகளிலும் வெயில் பரந்த தோட்டங் களிலும் இவை விருப்பத்தோடு தங்கும். நியூசீலாந்தில் ஒருவகை கிளியினம் ஆடுகளின் குண்டிக்காலயச் சூழ்ந்துள்ள நிணத்தைக் குடைந்து உண்கின்றன என்றும், அதனால் அந்நாட்டிற் பல ஆடுகள் இறந்தொழிகின்றன என்றும், அந்நாட்டிற்கு ஆடுகள் வந்து சேர்ந்தபின்பே அக்கிளிகட்கு கொடிய பழக்கம் உண்டாயிற் றென்றும் அந்நாட்டவர் உரைக்கின்றனர். அவை ஏனைக் கிள்ளையினம் போலாது இடைப்பனிக்காலத்தே பனிமூடிய மலை முடியிலும் பனிப்பாறைகளிலும் கூடமைக்கின்றன; அதனால் அவ் வினத்தை மலைக்கிள்ளை என்று பெயர் குறிக்கின்றனர்.

---

1. Macaw.

நியூகினியாவில் வாழும் கிளிகள் இரண்டரையடி நீளமுள்ளன. அமரிக்காவில் வாழ்வன பொதுவாக மூன்றடி நீளமாகும். இடை அமரிக்காவில் உள்ளவை மூன்றடி நீளமிருப்பினும், அவற்றின் வால்மட்டில் இரண்டடி நீளம் உளது. அங்கே காணப்படும் பச்சைக் கிளியும் நீலக்கிளியும் ஆப்பிரிக்காவில் வாழும் காதற் கிளியும்[1] ஐந்து அங்குல நீளமேயுள்ளன. நியூகினியாவில் குறுங் கிள்ளை [2] என்றோர் இனமுண்டு. அஃது இரண்டு அங்குல நீளமே யாகும்.

ஆப்பிரிக்காவில் சாம்பல்நிற முடைய கிளிகள் வாழ்கின்றன. அவற்றின் வால் நீண்டு சிவந்துள்ளது. பொதுவாகக் கிள்ளையினம் யாவும் பசுமைநிற முடையவே; எனினும், பொன்மை, நீலம், சிவப்பு, வெண்மை, கருமை ஆகிய நிறமுடையனவும் உள்ளன. சில கிள்ளையினம் இந்நிறங்களுட் பல விரவியும் உள்ளன; அமெரிக்காவிலுள்ள மாக்காக்கிளி [3] பெருவனப் புடையதாகக் கருதப்படுகிறது. வனப்பிலே யன்றி ஆரவாரம் செய்வதிலும் பெருமை அவற்றிற்கே யாகும். ஆத்திரேலியப் பகுதியிலுள்ள கிள்ளை செம்மை கலந்த நீலநிறமான தலையும், நீலமும் பசுமையும் பொருந்திய இறகும், சிவந்த குஞ்சியும் [4] கொண்டுள்ளன. இவற்றின் வேருக் கொண்டையுடைய கிளிகளும் அங்கே வாழ் கின்றன. அவற்றின் காலும் அலகும் மிகவும் குறுகியிருக்கின்றன. இவை பெரும்பாலும் வெண்மைநிற முடையவை யெனினும் முதுகிலும் வாலிலும் செந்நிறமோ பொன்நிறமோ பொருந்தி யிருக்கின்றன. சில கிள்ளையினத்துக்கு வயிற்றுப்பகுதி சிவந்தும் முதுகு சாம்பல் நிறம் பெற்றுமுள்ளன. சில தலைமட்டில் சிவந்து உடல் முழுவதும் சாம்பல் நிறமே பரவியிருப்பது உண்டு. சில கிளிகள் உடல் முழுவதும் கருமைநிறம் பெற்று வாற்பகுதி சிவந்து தோன்றும். கருங்கிள்ளைகளுட் சில வெண்கருமை நிறம் கொண்டு இருகன்னமும் சிவந்துள்ளன. கிள்ளைகளுள் இந்த இனமே உடல் பருத்தவையாகும்; அலகின் வன்மையிலும் சிறந்தவை. ஆத்திரேலியாவின் தென்பகுதியில் வாழும் வெள்ளைக்கிளிகள் மிக்க

---

1. Love birds. 2. Pigmy parrots.
3. Macaws of America. 4. Cap.

அழகுடையன. அவை அலகின் கீழும் மார்பிலும் இறகடியிலும் சிவந்து விளங்கும். அந்நாட்டிலே ஐவண்ணக் கிளிகள் சிறந்து உள்ளன. இக்கிளியின் மேனியில் பசுமை, நீலம், வெண்மஞ்சள், கருமை ஆகிய வண்ணங்கள் விரவியிருக்கின்றன அதன் உடல் நீளத்தில் வால் செம்பாதி; அஃது ஏழரை அங்குலம்.

கிளிவகை பலவும் பிடித்துப் பழக்குதற் கேற்ற பண்பாடுடையவை. பச்சைக்கிளி, சாம்பற்கிளி, மாக்காக்கிளி எனவரும் இக்கிள்ளைகள் பேசப்பழகும் இயல்புடைமையால் பன்னூருண்டுகட்கு முன்பே மக்கள் இவற்றைப் பிடித்துக் கூட்டில் வைத்துப் பேச்சுக் கற்றுங் கொடுத்து அவை மிழற்றும் மழலை கேட்டு இன்புற்றனர். வேள்பாரியின் பறம்பினைத் தமிழ்வேந்தர் முற்றிக் கொண்ட போது அங்குள்ள கிளிகள் வேற்றுப்புலங்கட்குச் சென்று நெற்கதிர்களைக் கொணர்ந்தன என ஔவையாரும், நக்கீரனும் கூறுகின்றனர். பண்டைத் தமிழ் நன்மக்களோடு நெருங்கிப் பழகியதனால், உரோமானியர் இக்கிளிகளைக் கொண்டு சென்று வளர்த்தனர். அந்நாளை யவனப் பெண்கள், ''வெல்க சீசர்'' என்று சொல்லுமாறு பயிற்றி யிருந்தார்களென வரலாறு கூறுகிறது. எய்தன்[1] என்னும் ஒரு பாண்பெருமகன் பேணி வளர்த்த கிளி அவர் பாடிய பாட்டைப் பாடுமாம். விவிலிய நூலில் உள்ள 104ஆம் சங்கீதத்தை 1802ஆம் ஆண்டில் ஒரு கிளி பாடிற்றென மேனாட்டார் குறித்துள்ளனர். இதை நோக்க, ''பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசைகேட்டு வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட் சொல்லும் மிழலையாமே[2]'' எனத் திருஞானசம்பந்தர் சொல்வது எத்துணை இன்பமாகவுளது காண்மின். இக்கிள்ளை பொருளாக வைத்துப் பிற்காலப் புலவர் கிள்ளைவிடு தூது பாடித் தாம் இன்புறுவதுடன் உலகு இன்புறக் கண்டு உவகை மீதூர்ந்தனர்.

281. வெள்ள வரம்பி னூழி போகியும்
கிள்ளை வாழிய பலவே யொள்ளிழை
இரும்பல் கூந்தற் கொடிச்சி
பெருந்தோட் காவல் காட்டி யவ்வே.

---

1. Hyden 2. திருஞான. 132-1.

இஃது, ஆயத்தோடு விளையாட்டு விருப்பினுற் பொழிலகம் புகுந்த தலைவியை எதிர்ப்பட்டு ஒழுகுகின்ற தலைமகன் அவள் புனங்காவற் குரியளாய் நின்றது கண்டு மகிழ்ந்து சொல்லியது.

உரை: ஒள்ளிய இழையினையும் கரிய பலவாகிய கூந்தலையு முடைய கொடிச்சி பெரிய தோளாற் புரியும் புனங்காவலை மேற்கொண்டாள் என்பதைக் காட்டினவாகலின், பலவாய் வந்து படியுங் கிளிகள் வெள்ளமென்னும் பேரெண்ணை வரம்பாக வுடைய ஊழியாகிய காலம் முடியினும் முடியாது நெடிது வாழுமாக எ. று.

வெள்ளம், நூருயிரம் என்னும் பேரெண்ணுக்கு மேலே கூறப் படும்; தாமரை, வெள்ளம் ஆம்பல் எனப்படும் கழிபே ரெண்களுள் இடையாயது. ''ஐயம் பல்லென வரூஉம் இறுதி'' யையுடைய எண்ணுப்பெயர். ஊழி போகியும் போகாது வாழ்க என்றற்குப் போகியும் என்ருர். கிள்ளைகள் இனிது பேணப்படின் 60 முதல் 80 ஆண்டுகள்வாழ்கின்றன என உயிர்நூலறிஞர் கூறுவர். காலத்துக்கு எஞ்ஞான்றும் கழிவது தொழிலே யன்றி நிற்பதன்மையின் போகியும் எனல் வேண்டிற்று மகளிர்க்குத் தோள் பெருத்தல் இலக்கண மாகலின், பெருந்தோள் என்றும், தட்டை யொலித்தற்கும் கவண் எறிதற்கும் தோளாற்றல் சிறப்ப வேண்டி யிருத்தலின், அது கொண்டு செய்யும் காவற்ரெழிலைப் பெருந்தோட் காவல் என்றும் சிறப்பித்தார். காட்டிய, அன்பெருது வந்த அகர வீற்றுப் பலவறி சொல்.

கவணும் தட்டையும் கொண்டு புனத்திற் படியும் கிளிகளை ஓப்புங்காலத்து, அவை கதுமென எழுதலால், அவள் புனங்காவற் குரியளாய் நின்றது உணர்ந்து ஆண்டுச் சென்று அவளைக் கண்டானுகலின். பெருந்தோட்காவல் காட்டியவ்வே யென்றும், கருவியால் ஒப்பினளாயினும், மொழியால் இனமெனக் காட்டுத லின், கிளிகள் மீட்டும் போந்து படிந்து அவள் புகழ்விளக்குதலின், கிள்ளை வாழிய பலவே என்றும், அது குறித்து அக்கிளிகட்குத் தன் நன்றியை அறிவிக்கு முகத்தால் வாழ்த்துதலால், வெள்ள

1. தொல். எழுத்து. 393.

வரம்பின் ஊழி போகியும் என்றும் கூறினன். ''நன்றே செய்த உதவி[1]'' எனப் பிருண்டும் கூறுதல் காண்க. வாழிய பலவே என்பதற்குப் பல்லூழி காலம் வாழ்க எனினுமாம். தான் எதிர்ப் பட்டுக் கூடுதற்கண், தனக்கு இன்பம் தந்து மகிழ்வித்த பெருமை நோக்கி, பெருந்தோள் என்று விதந்தோதினன் என்றலும் ஒன்று.

''மெய்தொட்டுப் பயிறல்[2]'' என்ற சூத்திரத்துச் ''சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி'' என்புழிச் சொல்லிய என்றதனல் அமையும் கிள்ளை வாழ்த்துக்கு இதனைக் காட்டினர் நச்சினார்க் கினியர். (281)

282. சாரற் புனத்த பெருங்குரற் சிறுதினைப்
பேரமர் மழைகட் கொடிச்சி கடியவும்
சோலைச் சிறுகிளி யுண்ணும் நாட
ஆரிருள் பெருகின வாரல்
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே.

இஃது, இரவுக்குறி நேர்ந்த தோழி தலைமகன் வந்து புணர்ந்து நீங்குழி அவனை எதிர்ப்பட்டுச் சொல்லியது.

ப உரை: கொடிச்சி கடியவும் சோலைச் சிறுகிளி தினையை உண்ணும் நாட என்றது காவலர் காத்தொழுகவும் களவொழுக்கத் தையே விரும்பா நின்றாய் என்பதாம் எ. று.

உரை: மலைச்சாரலில் அமைந்த புனத்தகத்தே விதைக்கப்பட்டனவாகிய பெரிய கதிர்களையுடைய சிறுதினையைப் பெரிய மதர்த்த கதிர்களையுடைய சிறுதினையைப் பெரிய மதர்த்த கண்களையுடைய கொடிச்சியாகிய குறமகள் கடியவும், சோலைகளில் வாழும் சிறிய கிளிகள் ஒவாமல் அத்தினையை யுண்டலைச் செய்யும் நாடனே, நிறைந்த இருள் பெருகின வாகலினலும், நீ வரும் வழிகளும் கோட்டினையுடைய மாவாகிய யானை முதலிய கொடிய விலங்குகள் இயங்கும் காட்டிடத்தனவாகலினலும் நீ வாரா தொழிவாயாக எ. று.

---

1. ஐங் 288. 2. தொல். பொ. 102.

கொடிச்சி கடியவும், சிறுகிளி தினை உண்ணும் நாட என இயைக்க. சாரற்புனம், சாரலிடத்தே யுள்ள புனக்கொல்லை. குரல், கதிர். சிறுதினை என்றவிடத்துச் சிறுமை, தினையரிசியைச் சிறப்பித்தது. உண்ணும், உண்ணுதலைச் செய்யும். தட்டையும் கவனும் கொண்டு ஓப்பிய வழியும் சோலைக்கிளிகள் தம் சிறுமை யால் ஓவாமல் உண்ணுதலையே விடாது செய்கின்றன என்றற்குச் சிறுகிளி உண்ணும் என்றார். வாரல், அல்லீற்று எதிர்மறை வியங்கோள்வினைமுற்று.

பெருமையும் குளிர்ச்சியு முடையவாயினும் நோய் செய்யும் தன்மையு முடைமையான் மாறுபடுதலின், பேரமர் மழைக்கண் எனப்பட்டது. கோட்டுமா, கோடுகளையுடைய மாக்கட்குப் பொது வாயினும், தலைமையும் பெருமையும் பற்றிக் களிற்றின்மேல் நின்றது.

உள்ளுறையால் தான் பகற்குறி மறுத்து வரைவுகடாவினமை யும் தலைமகன் அதனைத் தெருளாது இரவுக்குறி வருகென்ற தாகக் கொண்டு வந்தமையும் குறிக்கின்று ளாகலின், வெளிப்படையாக வாரல் எனத் தோழி கூறினாள். ஆரிருள் என்றது இரவின்கண் வருதலின் அருமையும், கோட்டுமா என்றது விலங்குகளின் கொடு மையும், காட்டக நெறி யென்றது நெறியின் இன்னாமையும் சிறப்பித்து நின்றன. எனவே, இஃது இருள் பெருகியதோடு நெறியும் கோட்டுமா வழங்கும் காட்டகத்தது என்றது இரவுக்குறி யருமையும், நெறியது ஏதமும் கூறி மறுத்தவாறு. ஆகவே, ''பொழுதும் ஆறும் காப்பும் என்றிவற்றின், வழுவினாகிய குற்றங் காட்டலின்,'' இது வரைதல் வேட்கைப் பொருட்டே என அறிக.

கொடிச்சி கடியவும் கடியாது சிறுகிளி சிறுதினை உண்ணும் நாட னாதலின், யான் பகற்குறி விலக்கவும் விலகாது இரவுக் குறிக்கண் வந்து கூடுதலை விரும்புகின்றாய் என உள்ளுறை காண்க.

இனி, ''நாற்றமும் தோற்றமும்[1]'' என்ற சூத்திரத்து ''ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்'' என்றதற்கு இதனைக் காட்டி இஃது ஆறின்னாமை கூறியது என்பர் இளம்பூரணர்.

---

1. தொல். பொ. 112.

சாரற் புறத்த என்றும், உன்னும் என்றும் பாடமுண்டு. (282)

283. வன்கட் கானவன் மென்சொன் மடமகள்
புன்புல மயக்கத் துழுத வேனல்
பைம்புறச் சிறுகிளி கடியு நாட
பெரிய கூறி நீப்பினும்
பொய்வலைப் படூஉம் பெண்டுதவப் பலவே.

இது, தோழி வாயின்மறுக்கவும் தலைமகன் ஆற்ருமை கண்டு தலைமகள் வாயில் நேர அவன் பள்ளியிடத்தாணுயிருந்துழிப் புக்க தோழி கூறியது.

ப. உரை: பெரிய கூறி நீப்பினும் பொய்வலைப்படூஉம் பெண்டு தவப்பலவே என்றது தம் தமராயுள்ளார் நின் குறை பலவும் கூறி நீப்பினும் நின் பொய்வலைப்படூஉம் பெண்டிர் பலர் எ. று. இவளும் அவருள் ஒருத்தி என்பதாம்.

தினைப்புனத்துப் பலவாய்ப் படிகின்ற கிளிகளை ஒருத்தி தன்ருற் காக்க முடியா தாயினும் அவற்றை அவள் கடிய முயலும் நாட என்றது நின்னேடு இன்ப நுகர்ச்சி விரும்பும் மகளிரை யாங்கள் விலக்க முயல்கின்றது முடியா தென்பதாம்.

உரை: வன்கண்மை மிக்க கானவன் புன்செய் நிலத்தே உழுது வித்திய ஏனலின்கட் படியும் பசிய புறத்தையுடைய சிறு கிளிகளை, அவனுடைய மெல்லிய சொல்லும் மடமையுமுடைய மகள் ஓப்பும் நாடனே, தமராயினுர் நின்மாட்டுப் பெருங்குறைகள் கண்டு பலபடக்கூறி விலக்கினும் விலகாது, நின் பொய்ம்மொழி யாகிய வலையின்கட் படும் பெண்டிர் மிகப்பலர் எ. று.

உழுத ஏனல், உழுது வித்தி விளைத்த ஏனல். ஏனல், தினை. தினை விளையுங் காலத்தை ஏனற்பருவம் என இக்காலத்தும் கொண்கான நாட்டவர் வழங்குவர். "புன்புல மயக்கம்[1]" காண்க. பெரிய கூறி என்புழிப் பெரிய என்றது பொறுத்தற் கரிய

1. ஐங். 260.

பெரிய குற்றங்கள் என்பதுபட நின்றது. இனி, பலவாய குற்றங்களை விரியக் கூறி நீப்பினும் என்றுமாம். ''பெரிய வோதினும் சிறிய வுணரா ... . பாடின் மன்னர்[1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. பொய்புனைந் துரைக்கும் இன்சொல்லை, பொய்வலை என்றார். பெண்டு, வேந்து, அரசு என்றாற்போல உயர்திணைப் பொருண்மைக்கண் வந்த அஃறிணைச் சொல்லாதலின், தவப்பலவே என அஃறிணை முடிபு பெற்றது; ''துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே[2]'' என்றாற்போல. தவ, உரிச்சொல். கானவன் உழுத ஏனற்கண், மடமகள் கிளிகடியும் நாட, தமர் கூறி நீப்பினும், வலைப்படும் பெண்டு தவப்பல என இயையும்.

கேட்போர் மனத்தில் ஒரு சிறிதும் அன்பு தோன்றாத வகையில் பொறுத்தற்கரிய பெரிய குற்றங்களைப் படைத்து மொழிந்து நீக்கினும் என்பாள், பெரிய கூறி நீப்பினும் என்றும், பின்னர் நீ போந்து பொய்யே சொல்லினும், அச்சொல்லைக் கேட்டு மறுத்து நீங்கும் வன்மையுடைய மகளிர் எவரும் இலர் என்பாள், பொய் வலைப் படூஉம் பெண்டு தவப்பலவே என்றும் கூறினள். கூறுதலாவது ஈண்டுத் தலைவனது புறத்தொழுக்கத்தை இடத்தொடும் காலத்தொடும் படுத்துச் சான்றுகாட்டிக் கூறிட்டு மொழிதல்: அஃதாவது இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னார் அறிய இவ்வண்ணம் நிகழ்ந்த தென மொழிதல்.

பைம்புறச் சிறுகிளி, பசுமையான நிறம் பொருந்திய சிறிய கிளி. ''பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே[3]'' என்றார் பிறரும்.

தந்தை உழுத ஏனற்கண் படியும் கிளிகளை அவன் மடமகள் கடியவும், அவளது சொல்லின் மென்மை நயந்து கிளிகள் படிதலால் அவள் மாட்டாளாயினவாறு போல, யாங்கள் நின்னை மறுத்தேமாயினும், நின் மார்பு தரும் இன்பம் நயந்து கூடும் மகளிரை விலக்கும் வன்மையிலே மாயினேம் எனத் தோழி உள்ளுறுத் துரைத்தாள் எனக் கொள்க.

---

1. புறம். 375. 2. ஷ. 3. நற். 13.

"பெரிய கூறி நீப்பினும்" "எள்ளின் இளிவாமென்றெண்ணி" அவன்திறமே உள்ளி உறைகின்றாளாகலின், தலைவி வாயில் நேர்ந்து கூடினாள் என்பதாம். இது புரையறம்தெளிதல்.

இனி, பெரிய கூறி நீ நீப்பினும் என்று பாடம் கொண்டு அதற்கேற்பப் பொருள் உரைப்பதுமுண்டு. அது பொருளாயின், பிரிவென்பதே இனி நிகழாதெனத் துணியுமளவு பெரிய சூளுறவுகளைச் சொல்லிப் பின் அவை பொய்ப்ப நீ பிரிந்தாயாயினும் என்பாள், பெரிய கூறி நீ நீப்பினும் என்றாள் என்றும், நீ போந்து கூறும் இன்சொல் வலையில் அகப்படாது நீங்கும் மகளிர் இலர் என்றற்குப் பொய் வலைப்படூஉம் மகளிர் பலர் என்றாள் என்றும் உரைக்க; "இல்வழங்கு மடமயில் பிணிக்கிம், சொல்வலை வேட்டுவனாயினன் முன்னே[1]" என்பது காண்க. இது தலைவன் ஆற்றாமை வாயிலாகப் புணர்ந்துழிப் பள்ளியிடத்துச் சென்ற தோழி சொல்லியது என்பர் நச்சினார்க்கினியர்[2]. (283)

284. அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள்புனங் கண்டும்
பிரிதல் தேற்றாப் பேரன் பினவே.

இது தினையரிந்துழிக் கிளியை நோக்கிக் கூறுவாள்போற் சிறைப்புறமாக ஓம்படுத்தது.

உரை: குன்றத்தின்கண் வாழும் குறவர் வித்திய கொய்யப்படும் தினையின் பசிய தாளாகிய இருவி நிற்கும் நீண்ட தினைப் புனத்தைக் கண்டு சிவந்த வாயையுடைய பசிய கிளிகள் அப் புனத்தைப் பிரிதலைத் தெளியாத மிக்க அன்பினையுடையவாகலான், அவை அளிக்கத்தக்கனவாம் எ. று.

இருவி, தினையை அறிந்து கொண்டவழி நிலத்தில் நிற்கும் அரிதாள். தினைப்புனம் முழுதும் இருவியே நின்று காட்சி தருதலின் இருவி நீள்புனம் என்றார். பண்டு தினையுதவியது பற்றிப் புனத்தின்

1. புறம். 252. 2. தொல். பொ. 12.

பால் உண்டான அன்பு இப்பொழுது அத்தினை யில்லையாயினும் பிரியாவாறு பிணித்தலின், பிரிதல் தேற்ருப் பேரன்பின என்ருர். உறின் நட்டு அறின் ஒருவுவது அன்புடையார் செயலன்றென்பது பற்றிப் பேரன்பு கூறப்பட்டது. பிரிதல் தேற்ரு என்பது, ' ' உய்த்தல் தேற்ருனயின் ' ' என்ருற் போல்வது.

வறும்புனங் கண்டு ஆற்ருது மிழற்றித் திரிவது பற்றி, செவ்வாய்ப் பைங்கிளி என்றும், அதற் கெய்திய வருத்தம் கண்டு உள்ளம் இரங்குதலின், அளிய தாமே என்றும், வேறு புனங்கட்குச் செல்லாது அலமருவதுபற்றி இருவி நீள்புனம் கண்டும் பிரிதல் தேற்ரு என்றும், அதற்கு ஏது இது வென்பாள், பேரன்பின என்றும் கூறினுள்.

தாம் பண்டு போந்து உணவுண்டு இனிது வாழ்தற் கேதுவா யிருந்த தினை இதுபோது இல்லையாயினும், கிள்ளை அதன் இருவி கண்டு பிரியாப் பேரன்புடையவாதல் போலப் பண்டு இவண் போந்து கூடி இன்ப நுகர்தற் கேதுவாயிருந்த இவள் இளமை நலம் புதல்வர்ப் பயந்து முதுமை யெய்துதலாற் குறையினும், பிரியாப் பேரன்புடையையாய் வாழ்வாயாக என ஓம்படுத்த வாறறிக. சுட்டென்னும் உள்ளுறை யுவமம். (284)

285. பின்னிருங் கூந்த னன்னுதற் குறமகள்
மென்றினை நுவணை யுண்டு தட்டையின்
ஐவனச் சிறுகிளி கடியுநாட
வீங்குவளை நெகிழப் பிரிதல்
யாங்குவல் லுநையோ வீங்கிவட் டுறந்தே.

இஃது, ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

ப. உரை: குறமகள் தினைப்பிண்டியை யுண்டு ஐவனச் சிறுகிளி கடியும் நாட என்றது, நின்னேடு இக்காலத்து இன்பம்

நுகர்ந்து பின்பு நின் மனைச்செல்வமும் பிறமகளி ரொழியத் தானே நுகரும் வேட்கையுடையாளைப் பிரிந்து ஒழுகுகின்ருய் என்பதாம்.

உரை: பின்னப்படும் கரிய கூந்தலையும், நல்ல நெற்றியையு முடைய குறமகள், மெல்லிய தினையின் மாவை யுண்டு, தட்டையினுல் ஐவன நெல்லின்கட் படியும் சிறுகிளிகளை யோப்பும் நாடனே, இங்கு இவளுடைய பெரிய வளைகள் நெகிழ்ந்தோடும் படி இவளைத் துறந்து பிரிதலைச்செய்ய நீ எவ்வாறு வல்லையாயினையோ, அறியேன் எ. று.

நுவணை, தினைமா; "மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்[1]" என்ப பிறரும். ஐவனத்தின் கதிர் கவரும் கிளியை ஐவனச் சிறுகிளி யென்ஃருர். ஐவனம், மலைநெல். தட்டை, கிளி கடியும் கருவி. துறந்து பிரிதல் யாங்கு வல்லுநை யாயினையோ என ஆக்கங்கொடுத்து முடிக்க. வினையினெச்சம் வினைப்பெயரொடு முடிதல், "வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும், நினையத் தோன்றிய முடிபாகும்மே, ஆவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே[2]" என்புழி "நினையத் தோன்றிய" என்றதனுல் அமையும். செய்யுளாகலின் ஆக்கம் எஞ்சி நின்றது.

பிரிந்தவழி இவள் ஆற்ருமையால் மிக்க துன்புறுவாளாக, அத்துன்ப மெய்த இவளைப் பிரிதல் மிக்க வன்கண்மையுடையார்க் கன்றிக் கூடாத செயலென்பாள். யாங்கு வல்லுநையோ என்ருள். "வீங்குவளை நெகிழப்பிரிதல்" என்றது உடம் நனி சுருங்கல். எனவே, இவளை ஆற்றுவிக்கும் திறமும் திண்மையு மின்றி யான் பெரிதும் வருந்தா நின்றேன் என்ருளாயிற்று.

ஒருவழித் தணத்தல் என்பது காதல் வாழ்வின் இடையே கடமை காரணமாக நிகழும் பிரிவு. காதற்காமம் தோன்றிய விடத்து அது கணந்தோறும் கடல்போற் பெருகி, அறிவு நிறை பொறை முதலிய ஆண்மைநலம் அனைத்தையும் அடிப்படுத்தித் தான் ஓங்கிநிற்கும்; "வான்தோய் வற்றே காமம்[3]" "இன்பம்

1. பதிற். 30. 2. தொல். சொல். 432. 3. குறுந். 102.

கடல்மற்றுக் காமம்[1]'' எனவும், ''பொறை யென்வரைத்தன்றிப் பூநுதல் ஈத்த நிறையழி காமநோய் நீந்தி அறையுற்ற உப்பியல் பாவை உறை யுற்றதுபோல, உக்குவிடும் என் உயிர்[2]'' எனவும் சான்ஞேர் உரைப்பது காண்க. இத்துணை ஆற்றல் இதற்கு இலதாயின் உலகில் உயிர்வாழ்க்கை நிலை பெருது என்பதும் அறிக. இப்பெற்றித்தாய காதற்காமம் தோன்றிப் பெருகுங்கால் கடமையுணர்வு கெடாது நிலவல் வேண்டுதலின் இரண்டற்கும் இடையற வின்றிப் போர் நிகழும்; அப்போரில் காமத்தை அடிப் படுத்திக் கடமை வெற்றிபெறத் திகழும் காளையர் மக்கட்பண்பால் உயர்ந்து தலைமக்களாவர்: களவின்கண் வரைவிடை வைத்து நிகழும் பிரிவுகள் யாவும் காமத்தை அடக்கி அறநெறிப்படுத்தி மேம்படும் கட்டாண்மைக் கடமை யுணர்வுகளின் வெற்றிச் செயல்கள் என விளங்க உணர்தல் வேண்டும் என்பது அகப் பொருளுரைக்கும் அறம்.

குறமகள் தினைமாவை யுண்டு தட்டையினல் ஐவன நெல்லைக் கவரும் கிளிகளைக் கடிவள் என்றதனுல் நின்னுல் துறக்கப்பட்ட இவள், நின் பிரிவுத்துன்பத்தை உட்கொண்டு, தன் நிறையினுல் பிறரறியாவண்ணம் தன் மறையினைக் காத்தொழுகினுள் என உள்ளுறையால் தலைமகள் ஆற்றியிருந்தமை கூறியவாறு. (285)

286. சிறுதினை கொய்த விருவி வெண்காற்
காய்த்த வவரைப் படுகிளி கடியுங்
யாணா ராகிய நன்மலை நாடன்
புகரின்று நயந்தனன் போலும்
கவருந் தோழியென் மாமைக் கவினே.

இஃது, உடன்போக்குத் துணிந்த தலைமகன் அஃதொழிந்து தானே வரைவிடை வைத்துப் பிரிய நினைந்ததனைக் குறிப்பினுன் உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது; தலைமகன் வரை விடைவைத்துப் பிரிவல் என்றவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியதூஉமாம்.

---

1. குறள். 1166. 2. கலி. 138.

ப. உரை : புகர் என்றது உடன்போதலே. திணையிற் கடிந்த கிளியைத் திணை யரிகாற்கண் விளைந்த அவரைக்கண்ணும் கடியும நாடன் என்றது, வரையாது ஒழுகுதலின்றி உடன்போதலையும் நம்மை விலக்கா நின்ருன் என்பதாம்.

உரை: தோழி, சிறுதினைகள் கொய்யப்பட்ட அரிதாளாகிய வெள்ளிய காலில் வளர்ந்து காய்த்த அவரையின்கட் படியும் கிளிகளை ஒப்பும் புதுவருவாயினையுடைய நல்ல மலைநாடன் இன்று புகரை விரும்பினுன் போலும், என்மாவைக்கவின் விளர்ப்பதும் தளிர்ப்பதுமாய்த் தடுமாறுமாகலான் எ. று.

தினை யரிந்தபின் அதன் தாள் நின்ற நிலத்தை உழாது அதனிடையே அவரையை விதைப்பது மரபு; கொய்வார் நடந்த நடையே உழவாகவும், ஆங்கு நிலத்திடை நின்ற ஈரமே நீர்வளமாகவும் கொண்டு அவரை வேரூன்றி வளர்ந்து பயன்தரும்; ''சிறுதினை மறுகால் கொழுங்கொடி அவரை பூக்கும்[1]'' என்றும், ''இருவிதொறும் குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை[2]'' என்றும் சான்ருேர் கூறுவது காண்க. இவ்வண்ணமே மருத நிலத்தவர், நெல்லரிதாளில், உழுந்து பயறு முதலியவற்றை வித்திப் பயன்பெறுவர் என அறிக. யாணர், புதுமை; ஈண்டுப் புதுவருவாய் மேற்று. கவர்த்தல், ஈண்டு ஒருபாற்படாது தடுமாறுதல்: ''பல்வேறு கவர் பொருள் நாட்டத் தானும்[3]'' என்ருற்போல. மாமைக்கவின், மாந்தளிர் போலும் நிறம் திகழும் அழகு. புகர் என்பது குற்றம்; ''புகரறு சிறப்பு[4]'' என்ருற்போல. களவொழுக்கத்தின்கண் தலைமகன் வரைதற்பொருட்டுத் தன் தலைமைப் பண்பினின்றும் தலைப்பிரியாத நெறியிற் செய்யும் வினைவகைகளுள் உடன்போக்கு அடங்காமைபற்றி இது புகர்நெறியாம் என்ற கருத்தால் இவ்வாறு ஆசிரியர் கபிலர் கூறுகின்ருர் போலும். பெரும்பாலும் மகட்கொடை மறுத்தவழித் தலைமகளது தலையாய கற்பினைக் காத்தற்பொருட்டாய இது, தலைமக்கள் தகுதிக்குப் புகராயினும் அறமாதலின் அமையும் எனக் கொண்டு மேற்கோடலால்,

1. குறுந். 82. 2. மலைபடு. 109-10.
3 தொல். பொ. 114 4. மதுரை. 765.

பண்டைத் தமிழ்ச்சான்றோர் பொருணெறிக்கண் இதனையும் அன்பொழுக்கத்து அறநெறியாக இலக்கணம் அமைத்திருப்பது ஈண்டு நினைவுகூர்தற்பாலது. "ஒருதலை யுரிமை வேண்டியும் மகடூஉப், பிரிதல் அச்சம் உண்மை யானும், ஆம்பலும் அலரும் களவுவெளிப் படுக்கும் என்று, அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும், நோக்கொடு வந்த இடையூறு பொருளினும், போக்கும் வரைவும் மனைவிக்கண் தோன்றும்[1]" என ஆசிரியர் உரைப்பது காண்க.

புகரென்றது உடன்போதலை யென்பது பழையவுரை. இடையிட்டொழுகுங் களவே விரும்பாது உடன்போக்கினைத் துணிந்தான் என்பாள் புகர் இன்று நயந்தனன் என்றும், அது துணிந்தவன் பின்னர் அதனை ஒழிந்து வரைவிடை வைத்த பிரிவு நினைந்தமையின், நயந்தனன் போலும் எனக் குறிப்பால் நயவாமை யுணரவும், பிரிந்த வழித் தன் மாமைக்கவின் பசலை பாய்ந்து வேறுபடு மென்பாள், கவரும் தோழி என் மாமைக்கவினே என்றும் கூறினாள். உடன் போக்குத் துணியக் கேட்டவழி மகிழ்ச்சியால் நுதலொளியும் மாமைக்கவினும் சிறக்கப் பெற்றவள், அவன் பிரிய நினைந்தமை யுணர்ந்தவழிக் கெடுதல் குறித்துத் தன் மாமைக்கவினை விதந்து கூறினாள். இனி, அவன் உடன்போக்குத் துணிந்தவழித் தந்த மாமைக்கவினை, அஃது ஒழிந்த விடத்துக் கவர்ந்து கொள்வா னெனக் கூறினா ளெனவுமாம். என் மாமைக் கவின் உடலெங்கும் பரவி விளங்குகின்றமையின், அது கெடும் வகைப்பிரிவாகிய குற்றம் செய்ய விரும்பினன் போலும் என்றுமாம். உரை இரண்டற்கும் ஒக்கும்.

புகரின் றுய்ந்தனன் என்ற பாடத்துக்கு வரையா தொழுகுதலால் வரும் ஏதத்தின் நீங்குவான் உடன்போக்குத் துணிந்தனன் போலும் என்றும், வரைதற்பொருட்டுப் பிரியத் துணிந்தனன் போலும் என்றும் உரைக்க.

"நாற்றமும் தோற்றமும்[2]" என்ற சூத்திரத்து, "காதன் மிகுதி யுளப்படப் பிறவும்" என்புழிப் பிறவும் என்றதனுன்

1. தொல். பொ. 225. 2. ஷை. 112.

தலைவனைப் பழித்தலுங் கொள்க என்று கூறி அதற்கு இது தலைவனைப் பழித்ததாகக் கூறுவர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். (286)

287 நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉ நாட
வல்லை மன்ற பொய்த்தல்
வல்லாய் மன்றநீ யல்லது செயலே

இஃது, இன்ன நாளில் வரைவல் எனக்கூறி அந்நாளில் வரையாது பின் அவ்வாறு கூறும் தலைமகற்குத் தோழி கூறியது.

ப. உரை: தமக்கு ஓர் இடையூறும் செய்யாத, நெடுவரைக் கண்ணே வாழும் வருடையைத் தினைமேய்கின்ற கிள்ளை வெரூஉம் நாட என்றது, நீ சொன்ன போழ்தே எம் சுற்றத்தார் வரைவிற்கு இடையூறு செய்யார் என்பது அறியாது வெருவுகின்றாய் என்பதாம்.

உரை: நெடிய மலைமேல் வாழ்வதாய குறுங்கால்களை யுடைய வருடைமானைக் கண்டு தினையை யுண்கின்ற கிளிகள் அஞ்சியோடும் நாடனே, நன்றல்லது செய்தல் வல்லுவையல்லை யாயினும் பொய்கூறுதலில் நீ தெளிவாக வல்லையாயுள்ளா யாகலின், யாம் நினக்குக் கூறுவதென்னை எ. று.

வருடை, ஒருவகை மான். ''செவ்வரைச் செச்சை வருடை மான்மறி, சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப், பெருவரை நீழல் உகளும் நாடன்[1]'' என்று பிறருண்டுங் கூறுவர்.

கூட்டமாய்ப் போந்து தினைப்புனத்திற்குட் படிந்து உண்பது பற்றி, தினைபாய் கிள்ளை யென்றார். மன்ற, தெளிவுப்பொருட்டாய உரிச்சொல். வல்லாய் என்பது வல்லையல்லை யென எதிர்மறைக் கண் வந்தது. ''யாவதும் வல்லா கொல்லோ தாமே[2]'' என்றாற் போல.

---

1. குறுந். 187. 2. ஐங். 333.

இன்ன நாளிற் போந்து வரைவல் எனக் கூறிச் சென்றவன், பின்பு அது செய்யாது நீட்டித்தமையின், வல்லைமன்ற பொய்த்தல் என்றும், பொய்ம்மையில் வல்லுந ராயினுர்க்கு அறமல்லது யாதும் எளிதின் இயலுவதாக, நீ அதனையும் செய்யாது இவண் போந்து இவளை அருளுவதாகிய அறத்தைச் செய்கின்ருய் என்பாளாய், வல்லாய் மன்ற நீ அல்லது செயலே என்றும் கூறினுள். அல்லது வரையாமையாற் கொலைசூழ்தல்; அதனை யொழியப் பொய்ம்மை யின் மிக்கது பிறிதில்லை யாகலின், அல்லது என்ருள்.

இன்ன நாளில் வரைவல் எனக் கூறிய தலைமகன் நாளுற வரையாதொழிவதே யன்றி வாராமையும் செய்யின், தலைமகள் இறந்துபடுவ தன்றி வேறு செய்திறம் இலள் என்பது உணர்ந்து அஞ்சி வந்தமையான், அவனை நீ அல்லது செய்தற்கு வல்லுவை யல்லை என்ருள். இங்ஙனம் தலைமகன் கொண்ட அச்சத்தைப் பிறிதொன்ருகத் திரித்து உள்ளுறையில் குறிப்பாய்ப் பழித்தா ளாகலின், இதனுல் நீ வரைதலும் செய்யாது, வாராமையால் எம்மை இறந்துபா டெய்தவும் விடாது, வறிதே துன்பத்துள் ஆழ்ந்து வருந்தச் செய்வது நன்றன்று என வெளிப்படையாய்த் தலைவன் எய்தக்கடவ இன்பம் "உயர்தற்பொருட்டுத் தோழி உறழ்ந்து கூறியது காண்க. இஃது "உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி, ஐயக் கிளவியாடூஉவிற் குரித்தே[1]" என்புழி "உறழுங் கிளவி" எனப்பொதுப்படக் கூறினமையாற் கொள்ளப்படும்.

"நாற்றமும் தோற்றமும்[2]" என்ற சூத்திரத்துக் "காதல் மிகுதி யுளப்படப் பிறவும்" என்றவிடத்துப் பிறவும் என்ற இலேசி ஞல், இது தலைவனைப் பழித்தது என இளம்பூரணரும், நச்சினுர்க் கினியரும்[3] கொள்வர். (287)

288. நன்றே செய்த வுதவி நன்றுதெரிந்
தியர்மெவன் செய்குவ நெஞ்சே காமர்
மெல்லியற் கொடிச்சி காப்பப்
பல்குர லேனற் பாத்தருங் கிளியே.

---

1. தொல்.பொ. 238. 2. ஷை.ஷை. 112. 3. ஷை.ஷை. 114.

இது, கிளிகள் புனத்தின்கட் படியாநின்றன என்று தலைவியைக் காக்க ஏவியவழி அதனை யறிந்த தலைமகன் உவந்து தன் னெஞ்சிற்குச் சொல்லியது.

உரை: நெஞ்சே, அழகிய மெல்லிய இயல்பினையுடைய குறமகள் காவல் செய்ய, பலவாகிய கதிர்களையுடைய தினைப் புனத்தே பரவிப் படியும் கிளிகள் செய்த உதவி நன்றாகலான், அந்நன்றியினைத் தெளிந்து நாம் செய்யத்தகும் செயல் யாதோ? கூறுக எ. று.

கிளி உதவி நன்று செய்த என முடிப்பினும் அமையும். அது வெனச் சுட்டி யொழியாது நன்று எனப் பெயர்த்தும் கூறியது, செய்யாமற் செய்த பெருநன்றி என்பது யாப்புறுத்தற்கு. பாத்தரல் பரந்துவருதல்.

கிளிகள் ஏனற்கதிர்களைக் கவரும் விருப்பால் புனம் நோக்கிப் பாத்தருதலான், தினை கதிர் கொண்டமையும், தலைமகள் கிளி கடிவாள் அப்புனம் மேவிக் காவல்புரிதலும் சேய்மைக்கண்ணேயே அறிந்தா னாகலின், அதனை உணர்த்திய கிளிமேலேற்றி, நன்றே செய்த உதவி என்றும், அந் நன்றிதானும் பின்னர்த் தெளிந்த விடத்துச் செய்யாமற் செய்த வுதவியாய், படிதற்கு வையகமும் பறத்தற்கு வானகமும் அக்கிளிகட்குக் கொடுப்பினும் ஆற்றாச் சிறப்பிற்றாய் விளங்குதலின், யாம் எவன் செய்குவம் என்றும் கூறினான்.

''பண்பிற் பெயர்ப்பினும்[1]'' என்ற சூத்திரத்து ''அவட்பெற்று மலியினும்'' என்பதனை இரட்டுற மொழிதல் என்பதனால் இதற் கமைத்து, இது பகற்குறிக்கண் கிளி புனத்தின்கண் படிகின்ற தென்று தலைவியைக் காக்க ஏவியதனை அறிந்த தலைவன் அவளைப் பெற்றேம் என மகிழ்ந்து கூறியது என்பர் நச்சினார்க்கினியர். (288)

289. கொடிச்சி யின்குரற் கிளிசெத் தடுக்கத்துப்
பைங்குர லேனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கொண்மே.

---

1. தொல். பொ. 103.

இஃது, இற்செறித்த பின்னர்த் தோழி வரைவுகடாவுழி முதிர்ந்த தினைப்புனம் இவள் காத்தொழிந்தால் வரைவல் என்றாற்கு அவள் சொல்லியது.

உரை: பெரிய மலைநாடனே, கொடிச்சியாகிய தலைமகளின் இனிய குரலோசையைக் கிளியோசை யெனக் கருதி மலையடுக்கத்து வளர்ந்த பசிய கதிர்களையுடைய தினைப்புனைத்தினை யுள்ளிக் கிளிகள் போதரும் என எண்ணித் தமர் இவளை விடுத்துத் தினைப்புனக் காவல் செய்தலையும் நீக்குவார் போன்றுளா ராகலின், நீ விரைய வரைந்து கோடலே தக்கது எ. று.

கிளி, ஆகுபெயர். இன்குரல் கிளிசெத்து ஏனற் படர் தருமெனக் காவலுங் கடியுநர் போல்வர் என இயைக்க. உள்ளுதற் பொருட்டாய படர்தரும் என்றது உள்ளிப் போதரு மென நின்றது. காவலும் என்புழி உம்மை சிறப்பு; எச்சவும்மை யாகக் கொண்டு, தலைமகளைப் புனத்திற்கு ஏவாமையே யன்றிக் காவலும் நீக்குவார் போன்று உள்ளார் என்றுமாம். தலைமகளைத் தினைக்கட் படியும் கிளி கடியுமாறு ஏவுதல், "வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடியச் செல்கென் றோளே யன்னை"[1] என வருதலாலறிக. முதிர்ந்த தினைப்புனம் இவள் காத்தொழிந்தால் வரைவல் என்ற தலைமகற்கு, இவளை ஏவியவழி, இவள் குரலைக் கேட்டுக் கிளிகள் தம் இனமெனக் கருதித் திரண்டு போந்து புனத்தின்கட் படிதல் கண்டு, இவள் காவலை நீக்குவா ராயின ரென்பாள், காவலுங் கடியுநர் போல்வர் என்றும், அது நோக்கித் தாழ்க்காது விரைந்து வரைதலே செயல் வேண்டுவது என்றற்கு வரைந்தனை கொண்மே என்றும் கூறினள். தினைகாவல் செய்யு மாறு ஏவாவழி, தினைக்கதிர்களைக் கிளிகள் கவர்ந்துகொள்ளு மென்ற அச்சமும், ஏவிய வழியும் அவை போந்து அது செய்தல் குறித்து அவலமும் தோன்றித் தமர் மனத்தை அலைத்தலின், புனவர் காவல் கடிவாராயினர் என்றவாறு. கொடிச்சியின் இனிய ஓசையைத் தம் ஓசையெனக் கருதி மலையடுக்கத்து விளைந்த பசிய கதிர்களையுடைய தினைப்புனத்துப் படருங் கிளிகளை ஓப்பிக்

1. குறுந். 141.

காவல் செய்தலையும் விடுத்தார் போன்றுளர் தமர் என்று உரைப்பின், எனவென் இடைச்சொல் நின்றுவற்றுதல் காண்க. மலைந்தனை கொண்மோ என்ற பாடத்துக்கு, கரணவகையான் வதுவை சூடிக்கொள்வாயாக என்றுரைக்க. மகளிர்க்கு மாலை என்றும் பெயராகலின், அதற் கேற்ப மலைந்தனை கொண்மோ என்றுளென்க. ''பூப்புனை மாலைபுனையு மாதரும் தோற்புனை வின்னாண் டொடர்கைக்கட்டியும், கோச்சேரன் பெயருங் கோதை யென்ருகும்[1]'' என்பதனல் மகளிர்க்கு மாலை யென்பதும் பெய ராயிற்று.

''நாற்றமும் தோற்றமும்[2]'' என்ற சூத்திரத்து ''காதல் மிகுதி யுளப்படப் பிறவும்'' என்புழிவரும் பிறவும் என்ற இலேசினல் இதனை அமைப்பர் இளம்பூரணர். ''வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல் மரீஇய மருங்கின் உரித்தென மொழிப[3]'' என்பதனுள் அடக்குவர் நச்சினர்க்கினியர். (289)

290. அறம்புரி செங்கோன் மன்னனிற் ருனனி
சிறந்தனள் போலுங் கிள்ளை பிறங்கிய
பூக்கமழ் கூந்தற் கொடிச்சி
நோக்கவும் படுமவ ளோப்பவும் படுமே.

இது, காவல்மிகுதியான் இரவுக்குறி மறுக்கப்பட்டு நீங்கிய தலைமகன் வந்துழி அவன் கேட்டு வெறுப்புத் தீர்தற் பொருட்டால் தினைப்புனம் காவல் தொடங்கா நின்ருள் என்பது தோன்றத் தோழி கூறியது.

உரை: அறத்தைச் செய்கின்ற செங்கோன்மையை யுடைய மன்னனைப் போலப் பூக்களின் மணம் கமழும் கூந்தலை யுடைய கொடிச்சியாகிய தலைமகள் மிகவுயர்ந்தாள்; கிள்ளைகளும் உயர்ந்தன, அவளால் உவந்து நோக்கப்படுதலே யன்றி விரைந்து கடியவும் படுமாகலான் எ. று.

செவ்விய கோல் போறலின் அரசன் நீதி செங்கோல் எனப் படுவது மரபு. அஃது அளியும் தெறலும் என இருவகையின்

1. திவா. கக. 2. தொல். பொ. 112. 3. ஷை. ஷை. 208.

இயன்று அறப்பயன் விளேத்தலின் அறம்புரி செங்கோல் எனப் படுவதாயிற்று. நல்லது செய்வோரை நயந்து அருள் செய்வது அளி; அல்லது செய்வோரைக் கடிந்து ஒறுப்பது தெறல். போலும் உரையசை பிறங்குதல் உயர்தல். சிறந்தனள் பிறங்கிய என்பன துணிவும் விரைவும் பற்றி இறந்தகாலத்து வந்தன. அவளென்புழி ஆலுருபு தொக்கது. தான், அசை. மன்னனில் கொடிச்சி நனி சிறந்தனள், கிள்ளே பிறங்கிய, அவள் நோக்கவும் ஒப்பவும் படு மாகலான் என இயையும்.

அறம்புரிதற்கண் செங்கோன்மை நல்லது செய்தலினும் அல்லது தோன்றின் அதனே விரையாது மடியாது ஆராய்ந்து கடிதல் முறையாகலின், புனத்துக்கு அல்லது செய்யும் கிள்ளேயை விரைந்து கடியும் செயல்முறை பற்றித் தலேவியை நனிசிறந்தனள் என்ருள். ''அல்லது கடியுமிடத்தும் அது செய்தாரைக் கடிதோச்சி மெல்ல எறிதல் செங்கோன்மை யாயினும்'' கடிதோச்சுமிடத்துக் கண் சிவந்து அச்சம் விளேத்தல் போலாது, தலேவியால் உவந்து நோக்கப்படுமாறு தோன்ற, கிள்ளே அவள் நோக்கவும் படும் என்றும். அதனுல் செய்தற்குரியது செய்யப்படாது கழிதலின்று என்றற்கு ஒப்பவும்படும் என்றும், இவ்வாறு தெறுமிடத்தும் அகத்தாலேயன்றி முகத்தாலும் அளியுற நோக்கப் படுதல் செங்கோன்மன்னன் குடைநிழல் வாழ்வார்க்கும் இல்லாத சிறப்பா தலின் கிள்ளே பிறங்கிய என்றும் கூறினுள். தலேவியால் கடியப் படும் கிள்ளேயும் அவள் புனங்காவல் புரியுங்கால் பிறங்குகின்றன எனின், தலேமகள் கூட்டம் பெறுதல் ஒருதலே யென்பது தானே பெறப்பட்டது.

தானனி என்றும், சிறந்தன என்றும் பாடமுண்டு. ''மன்ன னென்றது தலேமகனே" யென்ற பழையவுரைக் குறிப்புச் சில ஏடுகளில் இல்லே. (290)

---

1. குறள். 562.

30

மஞ்ஞைப்பத்து

இதன்கண் வரும் பத்துப்பாட்டுக்களினும் மயிலாகிய கருப் பொருளே சிறந்து வருதலின், இப்பகுதி இப்பெயர்த்தாயிற்று.

மஞ்ஞை என்பது மயில்களைக் குறிக்கும் பழந்தமிழ்ச்சொல். இம்மயில்கள் காட்டில் வாழும் கோழியினத்தைச் சேர்ந்தவை. ஆயினும், ஏனைக் கோழிகட்கு இல்லாத நெடிய தோகை இருப்பது தான் இம்மயிற்குச் சிறப்பு. மயிலின் ஆணைச் சேவல் எனவும், பெண்ணைப் பெடை பேடை எனவும் இக்காலத்தே வழங்குகின்றனர். மயிற்சேவலைப் போத்து என வழங்குதலும் உண்டு என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார்[1]. அவர் காலத்தில் ஆண் மயிலைச் சேவல் என்னும் வழக்காறு கிடையாது; அது பற்றியே அவர், "சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும், மாயிருந் தூவி மயிலலங் கடையே[2]" என்று ஓதுவாராயினர்.

மயிற்போத்துக்குத் தோகை யுண்டு. அதனை அது விசிறிபோல் விரித்தலும் சுருக்குதலும் செய்யும். மயிற்றோகையில் இடை யிடையே கண்போல் அழகிய பொறியுண்டு; கண்போறலின் அவற்றைக் கண்ணென்றே எல்லா நாட்டாரும் குறிக்கின்றனர். மயிலின் ஆணுக்குத்தான் நீண்ட தோகையும் தலையில் சிறு விசிறி

---

1. மரபு. 44. 2. ஷை. 49.

போன்ற மெல்லிய கொண்டையும் உண்டு. ஒரு மயிற்போத்துக்குரிய தோகை முழுவளர்ச்சி பெற மூன்று ஆண்டுகளாகும்.

மயில்கள் இந்திய நாடு முதல் கிழக்கேயுள்ள கிழக்கிந்தியத் தீவுகள் முடிய வுள்ள நிலப்பகுதியில் காடுகளில் பெருகி வாழ்கின்றன. நாட்டிலேயன்றி உயரிய மலைகளிலும் இம்மயில்கள் காணப்படும். மழைக்காலத்தில் மலைமுகடுகளிலிந்து கீழ்நிலத்துக்கு இறங்கிவிடுவது மயில்களின் இயல்பு. காட்டில் விளைந்து உதிரும் புல் மணிகளும் கிழங்குவகைகளும் சிறுசிறு பழங்களும் புழு பூச்சிகளும் இவற்றிற்கு உணவாவன.

நம் நாட்டுப் பண்டைய உயிர்நூல் அறிஞர்களுள் அமிசதேவர் என்பார், மயில்களை அறுவகையாக வகுத்து அவற்றை மயூரம், பாரி, நீலகண்டி, பாம்புணி, சிகாவளம், கேகயம் என்று எடுத்தோதுகின்ருர். இவற்றுள், மயூரம் பசுமைநிறமும் நீண்ட கழுத்தும் கால்களும் உடையவை; பாரி வகை, மிக்க உயரமும் அகன்ற கொண்டையும் கொண்டுள்ளன; மேனி முழுவதும் பன்னிறம் பரந்திருக்கும். கருநீனிறக் கழுத்தும் உடல் சிறுத்தும் கால்குறுகியும் இருப்பன நீலகண்டி; இவை ஆடும் போது ஒரு காலை யூன்றிச் சுழன்றுசுழன்று குதித்தாடுவது சிறப்பு. பாம்புகளைத் துரத்திக் கொன்று தின்பவை பாம்புணிமயில் என்று பெயர் பெறுவன; இவை மக்களைக் கண்டால் சினங்கொண்டு குத்தும். சிகாவளம் நீண்டகழுத்தும் நெடிய அலகும் உடையவை. பெண்கள் ஆடும் நடனத்தைக் கண்டால் தானும் அவ்வாறே ஆடும் இயல்புடையது இச்சிகாவளம். கேகயம் ''கே'' ''கா'' என்று அகவுவதால் இப்பெயர் பெறுகிறது. வெயில் வெம்மையைத் தாங்கும் வன்மையில்லாமையால் இவை எப்போதும் நீர் நிலைகளின் கரைகளிலும் இருண்டு குளிர்ந்திருக்கும் புதர்களிலும் விரும்பியுறைகின்றன. இவ்வினத்துள் பெடைக்கும் ஓரளவு தோகையுண்டு; ஆனல் கொண்டை மட்டும் கிடையாது; பிறந்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகட்குப் பின்பே இவை சினையீனும் செவ்வியைப் பெறுகின்றன என அமிசதேவர் கூறுகின்ருர்.

இந்தோசீனவில் ஒருவகை மயில் உண்டு. அதன் தோகை ஏழடி நீளமாகும். அஃது இருள்படச் செறிந்த பெருங்காடுகளில்

தான் காணப்படுகிறது ஏனை மயில்களை விட அதுமிகவும் பெரியது. பெருங்காடுகளின் நடுவே சம நிலம் கண்டு ஒரு பகுதியை வரைந்து கொண்டு, அதன் கண் கல்லும் முள்ளும் சிறிதும் இல்லாதவாறு தூய்மை செய்து அவ்விடத்தே நின்று தன் நீண்ட தோகையை விரித்து ஆடும். இளவேனிற் காலத்தில் பூம்புதல்களும் மரங்களும் புதுத்தளிரும் பசுந்தழையும் கொண்டு இனியகாட்சி வழங்கும் போது, வானத்தில் வெயில் வெம்மையைத் தணிப்பது குறித்து இளமழை தவழுங்கால் இம்மயில்களின் கூத்துக் காணப் படுகிறது. அக்காலை அதன் ஆட்டத்திலும் தோகை விரிப்பின் தோற்றத்திலும் ஈடுபட்டுப் பெடை மயில் வேட்கை மிக்கு அதனை நெருங்கும். தன் பெடையின் மனதைக் கவர்தற்பொருட்டுத் தோகையை விரித்து ஆடும் இதன் காட்சி காண்பார் கண்கட்குப் பெருவிருந்தாய் இன்பம் செய்யும்.

பெடையின் பொருட்டு மயிற்போத்துக்கள் பிற மயில்களோடு போர் செய்வதும் இயல்பு. அக்காலை மயிர் சிலிர்த்துக்கொண்டு தன் அலகாலும் கால் விரலாலும் ஒன்றையொன்று தாக்கிக் கடும் போர் செய்யும். பெடை மயில் பத்து முதல் பதினான்குவரை முட்டையிடும். முட்டையின் உள்ளிருக்கும் நீர் பன்னிற வண்ணங் கொண்டு உளது. அந்நிறங்களே பின்னர் அதன் மேனியில் விரிந்து காட்சிதரும். மயிற் குஞ்சுகள் இளமையில் தோற்றத்தால் ஆண்பெண் வேற்றுமை தெரியாதவாறு மென்சிறை மூடிக் கிடக்கின்றன.

மிகப்பழங் காலத்தேயே மக்கள் மயில்களைப் பிடித்து மனைகளில் வைத்து வளர்க்கலுற்றனர். இம்மயில்களிடத்தே யவனர்களுக்குப் பேரீடுபாடு உண்டு. அவர்கள் பண்டை நாளில் அழகுக்காகவும் உணவுக்காகவும் இம்மயில்களை நம்நாட்டினின்று கொண்டுபோயி னர். பின்னர் அவர்கள் அவற்றை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றனர். அதற்குமுன் ஐரோப்பியருக்கு இம்மயில் தெரியாது.

நம் நாட்டிலும் இலங்கை மலேயா கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய இந்நாடுகளில் நீர்வள மிக்க பகுதியில் உள்ள காடுகளில் ஒருவகைப் புள்ளினம் மயில்போல் காட்சி தருகின்றது. ஆயினும்

மயில்போல் மக்கள் மனம் விரும்பத்தக்க மாண்பும் வனப்பும் அவற்றின்பால் இல்லை.

இம்மயில்களை நம் பண்டைத் தமிழ்ச்சான்றோர் நன்கு ஆராய்ந்துள்ளனர். இவற்றை இந்நாளைய உயிர் நூல் அறிஞர் போலவே கோழியினத்தோடு சேர்த்தே எண்ணினர். மலைக்காடு களில் இவை காணப்படும் இயைபு கண்டுரைக்கும் அறிஞர், "பொறிப்புற மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக் கோழி வயப்பெடை இரிய[1]" எனக்கோழிகளிடையேவைத்துக் கூறுவது கொண்டு அறியலாம். மயிலினங்கள் பெரும்பாலும் மலையும் மலை யடுக்கங்களுமாகிய குறிஞ்சிநிலக் காடுகளிலும் கற்பாறைகளிலும் காட்சி வழங்குகின்றன. "மலைய மயில் அகவ மலைமாசு கழியக் கதழும் அருவி யிழியும்[2]" "மால்வரைச் சிலம்பின் மகிழ் சிறந்தாலும் பீலி மஞ்ஞை[3]" "கலைதாய உயர்சிமையத்து மயில் அகவும் மலிபொங்கர்[4]" "கன்மிசை மயிலால[5]" என வருவன பலவும் இதற்கு ஏற்ற சான்றாகும்.

மலைகளிலே சிறப்ப வாழ்வனவாயினும் ஏனை முல்லை மருதம் முதலிய நிலப்பகுதிகளிலும் மயில்கள் காணப்படுகின்றன. "கான மஞ்ஞைக் கணம்[6]" "கானமஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை, அயிரியாற் றடைகரை வயிரின் நரலும்[7]" என்று சான்றோர் குறிப்பர். மருதவயற்புறத்து நிற்கும் சோலைகளும் மயில்கட்குச் சீர்த்த இடமாகின்றன. "செந்நெல் உண்ட பைந்தோட்டு மஞ்ஞை, செறிவளை மகளிர் ஓப்பலின் பறந்தெழுந்து துறைநணி மருதத்திருக்கும்[8]" "கழனி யுழவர் தண்ணுமை இசைப்பின், பழன மஞ்ஞை மழைசெத்து ஆலும்[9]" என்பன காண்க.

இங்ஙனம், குறிஞ்சி முல்லை மருதம் என்ற நிலப்பகுதிகளில் காணக் கூடிய மஞ்ஞையினம் நீண்ட தோகையும் குறுகிய சிறகுகளு முடையவை; ஆதலால் இவை நெடுந்தொலைவு பறந்து

---

1. முருகு. 309-11. 2. பரி. 6:6-7.
3. பெரும்பாண். 330-1 4. மதுரை. 332-3.
5. கலி. 27. 6 புறம். 127. 7. அகம். 177.
8. புறம். 344. 9. பதிற். 90.

செல்லும் இயல்பினவல்ல. கோழிபோல் பெரும்பாலும் நடையில் சிறந்தன எனினும் இவை பெருமரங்களில் எப்போதும் காட்சி தருகின்றன. குறிஞ்சி முல்லைக்காடுகளிலும் மருதப் பூம் பொழில் களிலும் இவை மரங்களில் வைத்தே குறிக்கப் படுவதைப் பார்க்கலாம். மலைகளில் பெருங்கற்களின் முகட்டில் காணப்படும் மயில்கள், வேங்கை, மராஅம், குருந்து, காஞ்சி, மருது முதலிய மரங்களிலே உள்ளன. 'வேங்கையின் சினையில் வீற்றிருக்கும் மயில் அதன்கண் ஏறிப் பூக்கொய்யும் மகளிர்போலத் தோன்று கிறது[1]'' மலைவேங்கையில் இருந்த மயில் மராமரத்தின் உச்சியில் தங்குவதும்[2]'' ''குருந்தமரத்தில் இருந்து குலவுவதும்[3]'' மருத வயற் புறம் வந்த மயில்கள் காஞ்சியிலும் மருத மரத்திலும் இருந்து இனிய காட்சி வழங்குவது முண்டு, ''முடக்காஞ்சிச் செம்மருதின் மடக்கண்ண மயில் ஆல[4]'' எனச் சான்றோர் உரைப்பது காண்க.

மயில்கள் கோழிகளைப் போலவே ''வைகறைப் போதிலும் அந்திமாலையிலும்[5]'' கூவும்; மயிற்கூவலை அகவுதல் என்பது வழக்கு. அதன்குரல் அரித்த ஓசையுடைமை பற்றி, ''ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல்[6]'' எனப்படும்; இசைத் தமிழ்த்துறையில் காணப்படும் திறவகையில் இதுவும் ஒன்றாகப் பரிபாடல் குறிக் கின்றது; எனவே, மயில் எடுக்கும் ஓசையிலும் இசைக்குரிய இனிமைப்பண்பு கண்டுளது பண்டைய இசைப்புலமை என்பது காண்க. எனினும், இயற்றமிழ்ச் சான்றோர் குயிலோசையிற் போல மயிலோசையிலும் அன்பின் ஐந்திணைக்குரிய நெறியில் பொருள் நலங்கண்டு, ''தோகை ஆர்குரல் மணந்து தணந் தோரை, நீடன்மின் வாரும் என்பவர் சொற்போன்றனவே[7]'' என்று வியந்து பாடுகின்றனர்.

இனி, மயிலின் தலையில் அழகிய சிறு கொண்டை உளது அன்றே! அது வாகையின் பூப்போல இருப்பது நோக்கி, ''குமரி வாகைக் கோலுடை நறுவீ, மடமாத் தோகைக் குடுமியின்

---

1. குறுந். 26. 2. கலி. 36. 3. அகம். 85, 242, 272, 378.
4. பொருந. 189-92. 5. மதுரை. 675. குறுந். 391.
பரி. 17 : 19. 7. ஷை. 14 : 8-9

தோன்றும்[1]'', ''வாகையொண்பூப்புரையும் முச்சிய தோகை[2]'' என வருவன காண்க. மயிலின் கழுத்துக் காயாம்பூவின் நிறமுடையது. ''புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை, மென்மயில் எருத்தின் தோன்றும்[3]'' என ஔவையார் குறிக்கின்றார். நொச்சி இலையின் கொத்துப் போல்வது மயிலின் காலடி என்பது யாவரும் நன்கறிந்த தொன்று. இதனையே சான்றோர் விதந்து, ''மயிலடி இலைய மாக்குரல் நொச்சி[4]'' எனப் பாடினர்.

மயிலுக்குள்ள சிறப்பெல்லாம் அதனுடைய அழகிய கண் பொருந்திய நீண்ட தோகையேயாகும். தோகை என்னும் சொல் பொதுவாக நெல்லின் தோட்டுக்கும்[5] நாய் வாலுக்கும்[6] வழங்குமாயினும் சிறப்பாக மயிலுக்கே உரியதாகும்; ஆதலால், மயிலைத் தோகை யென்றே பண்டையோர் பெரிதும் வழங்கினர். பண்டு தமிழகத்துக்கும் மேலை யவன நாட்டுக்கும் நடந்த வணிகப்பொருள்களுள் ஒன்றாகிய மயில் யவனர்களால் தொகி[7] என்றே அவர்கள் குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. வானமாமலையிலிருந்து மேலைக் கடற்கரைப்பகுதியில் வீழ்ந்தோடும் வானியாற்றின் கரைமருங்கு நின்ற சோலைகளில் மயில்கள் மிக வாழ்ந்தமைபற்றி அங்கிருந்த பேரூர் தோகைக்கா[8] என்று பெயர்பெற்று விளங்கிற்று. வானியாறு இப்போது சிராவதி யென்றும், தோகைக்கா ஜோக்[9] என்றும் வழங்குகின்றன

இத்தோகையை மயில் விரிக்கவும் சுருக்கவும் கூடும். மயிலின் வனப்பு அது தன் தோகையை விரித்துக்கொண்டு ஆடும்போது தான் விளங்கித் தோன்றும். ''மிசைபடு சாந்தாற்றி போல எழிலி, இசைபடு பக்கம் இருபாலும் கோலி, விடுபொறி மஞ்ஞை பெயர்புடன் ஆட, விரல் செறி தூம்பின் விடுதுளைக் கேற்ப, முரல்குரல் தும்பி அவிழ்மலர் ஊத, யாணர் வண்டினம் யாழிசைப் பிறக்கப் பாணி முழவிசை அருவிநீர் ததும்ப, ஒருங்கு பரந்தவை எல்லாம்

1. குறுந். 347. 2. பரி. 14. 7–8. 3. குறுந். 183.
4. நற். 115, 305; குறுந். 138. 5. அகம். 13. 6. ஷை. 122.
7. Togi. 8. அகம். 15. 9. Joag of Joag Falls.

ஒலிக்கும், இரங்கும் முரசினன் குன்று[1]'' என்று நல்லச்சுதனுர் பரிந்து பாடுவது காண்க.

மயில்கள் தோகையை விரித்துக்கொண்டு அங்குமிங்கும் அசைந்து நடந்து இயலும் இக்காட்சி காண்பார்க்கு மிக்க இன்பம் தருவதொன்று. நின்ருங்கு நில்லாது நடந்து கொண்டே யிருப்பது மயில் ஆடுவது போலத் தோன்றலின், யாவரும் ''மயில் ஆடுகிறது' என்றே கூறுவர். வானத்தில் மழை முகில் எழுந்து பரக்கும் போதும், மழை பொழிந்த பின்னரும் மயில்களுக்கு ஆடற்கண்' விருப்ப முண்டாகிறது. ஒரோவழித் தன் காதற் பெடையின் கருத்தை ஈர்ப்பதற்கு இந்தக் களியாட்டத்தை மயிற்போத்து மேற்கொள்ளு கிறது; ''வான்தளி பொழிந்த காண்பின் காலை, அணிகிலர் கலா வம் ஐதுவிரித் தியலும், மணிபுரை எருத்தின் மஞ்ஞை[2]'' எனச் சான்ருேர் கூறுவது காண்க.

நீண்ட தோகையைத் தாங்கிக்கொண்டு மயில் அசைந்த நடை யிட்டுச் செல்வது நல்லியல்பு படைத்த இளமங்கையரின் இனிய நடையொத்திருக்கும். இது பற்றியே, ''கலவ மஞ்ஞையிற் காண்வர இயலி[3]'' ''மயில்கண் டன்ன மடநடை மகளிர்[4]'' ''மடமயி லன்ன என் நடைமெலி பேதை[5]'' என அறிஞர் பலரும் அறிந்துரைக்கின்றனர்.

இம்மயில்களைக் கானவர் வலைவைத்துப் பிடிப்பர். அக்காலை அதனைக் காண்பார்க்கு மிக்க வருத்தம் உண்டாகும். ''ஓரி முருங்கப் பீலிசாய, மயில் வலைப்படுவதை[6]'' முன்னையோர் நன்கு கூறியுள்ளனர். மயில்கள் பாம்புகளைக் காணில் விடாது தொடர்ந்து சென்று கொல்லும்; அவற்றுள்ளும் கொடு நஞ்சு படைத்த நாகத் தைக் காணின், ''அதனைப் படம்விரிக்கப் பண்ணிக் குத்திக் கொல்வதில் மயில் பெருங்கிளர்ச்சி கொள்கிறது[7]'' ''பாகற்கொடி யில் பழுத்திருக்கும் சிவந்த கனிகளை யுண்பதில் அவற்றிற்கு விருப்பம் மிகுதியுமுண்டு[8]'' என்பர். செல்வர் மனைகளில் இம்

1. பரி. 20:30-8. 2. நற். 264.
3. புறம். 133. 4. முருகு. 205. 5. அகம். 63.
6. குறுந். 244. 7. அகம். 108. 8. ஷை. 177.

மயில்களை வளர்ப்பது பெருவழக்காக இருந்தது. இப்போது இவற்றின் தொகை குறைந்து வருவது யாவரும் அறிந்த தொன்று.

291. மயில்க ளாலக் குடிஞை யிரட்டும்
துறுகல் லடுக்கத் ததுவே பணைத்தோள்
ஆய்தழை நுடங்கு மல்குற்
காதலி யுறையு நனிநல் லூரே.

இது, வரைவிடைவைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது.

ப. உரை: மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும் என்றது தான் அயரும் வதுவைச் சிறப்புக் கூறியவாறு.

உரை: பருத்த தோள்களையும் மெல்லிய தழையணிந்து நுடங்கும் அல்குலையுமுடைய எம் காதலி உறையும் மிக்க நன்மை பொருந்திய ஊர், மயில்கள் ஆடக் குடிஞைப் புள்ளாகிய பேராந்தை முதலியவைகள் ஒலி செய்யும் துறுகற்கள் நிறைந்த மலைப் பக்கத்தது, காண் எ. று.

ஆலுதல், ஆடுதல். குடிஞை, பேராந்தை; மக்கள் வழங்குதல் அரிதாகவுள்ள மலைப்பாறைகளிலும் பாலை நிலங்களிலும் வாழ்வது. இதன் குரல் குறுந்தடி கொண்டு அறையப்படும் சிறுபறை யோசை போல் இருப்பது பற்றி, ''உருள்துடி மகுளியிற் பொருள் தெரிந் திசைக்கும் கடுங்குரற் குடிஞை[1]'' என்றும், ''விரலூன்று படுகண் ஆகுளிகடுப்பக், குடிஞை யிரட்டும் நெடுமலை யடுக்கத்து[2]'' என்றும் சான்றோர் கூறுப. இதனால், மயிலினது ஆடற்கேற்பக் குடிஞையின் குரல் சிறுபறை கொட்டுவது போல இசைக்கும் என்பதாயிற்று. நல்லூர் துறுகல் அடுக்கத்தது என இயையும்.

பிரிந்து மீள்கின்ற தலைமகற்குச் சேய்மைக்கண் தோன்றுவது துறுகல் லடுக்க மாகலின், அதனையே எடுத்து ஓதலுற்றவன், மயில்கள் ஆலுவது கண்டு பின்னர்க் குடிஞை இரட்டுவது கேட்டலின், அம்முறையே மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்

1. அகம். 69. 2. மலைபடு. 140-1.

என்ருன். ஒலியினும் ஒளி விரைந்து செல்வதாகலின், இது முறையாயிற் றென அறிக.

பிரிந்த காலேயில் தலேமகளே இரவுக்குறிக்கண் தலேப்பெய்து கண்டமை நினேவுக்கு வருதலால், கருமுகில் பரந்த இருவிசும்பின் கண் மீனும் மதியமும் தோன்ரு வகையிற் பேரிருள் நிறைந்த நள்ளிரவில், வேல் கோலாக, பேராந்தைகள் அலறக் கல்லதர் கடந்து சென்று குறியிடத் தெதிர்ப்பட்டுக் தலேமகளேக் கூடிய செய்தியை மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும் துறுகல் அடுக்கத் ததுவே என்றும், கூடியவழித் தன்னே ஆர்வத்தோடு தழுவி வரவேற்ற அவள் தோளேச் சிறப்பித்துப் பணேத்தோள் என்றும் கூறினுன். களவின்கண் இன்பம் மிகுமாறு ஒழுகியஞான்று, தன்மேற் கொண்ட காதலால் தன் குறிப்பின்வழி ஒழுகியவள் உறையும் ஊராகலின், நல்லூர் என்றும், அன்னவள் இனிக் கற்பின்வழி நின்று இல்லிலிருந்து புரியும் நல்லறத்திற்குத் துணே யாகும் மிகுநலம் குறித்து, நனிநல்லூர் என்றும் கூறினுனும். இனித் தன் காதலி யுறையும் ஊராகலின், நல்லூர் என்றும், அவளேத் தன் வாழ்க்கைத்துணேயாக வரைந்து இன்புறும் வேட்கை மிகுதலால், நனிநல்லூர் என்றும் கூறினுன் எனினு மாம். (291)

292. மயில்க ளாலப் பெருந்தே னிமிரத்
தண்மழை தலேஇய மாமலே நாட
நின்னினுஞ் சிறந்தன ளெமக்கே நீநயந்து
நன்மனே யருங்கடி யயர
எந்நலஞ் சிறப்பயா மினிப்பெற் ரேேமே.

இது, பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவை முடித்தவனே இல்லத்துக் கொண்டு புகுந்துழித் தலேமகள் உவந்து சொல்லியது.

ப. உரை: மழைப்பருவம் வேண்டி யிருக்கின்ற மயில்கள் ஆலத் தேன்கள் இமிர மழை பெய்யும் நாட என்றது யாங்கள் கருதி யிருக்கின்ற பெரும்பொருளே உவப்ப முடித்தனே எ. று.

உரை: மயில்கள் ஆலப் பெரிய வண்டினம் ஒலி செய்யக் குளிர்ந்த மேகங்கள் மழைபெய்யப்பட்ட பெரிய மலை நாடனே, நீ விரும்பி நம் மனைக்கட் கொணர்ந்து பெறுதற்கரிய பெரும்பொருள் வதுவை செய்தலால் எமது நலமும் மிகுதலின், இப்போழ்து யாம் தங்கையாகப் பெற்ற இவள் எமக்கு நின்னினும் சிறப்புடைய ளாயினள் எ. று.

பெருந்தேன், பெரிய வண்டினம். தேனென்னும் சொல் தேனுண்ணும் வண்டிற்கும் பொதுவாகிய பெயராகலின், ஈண்டு இமிர என்னும் முடிக்குஞ் சொல்லால் பொதுமை நீங்கினமை அறிக. ''பெருந்தேன் இழைக்கும் நாடன்[1]'' என இச்சொல் தேனைக் குறிப்பது காண்க. அருங்கடி ஈண்டுப் பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவை. பெற்றோள், ''செயப்படுபொருளைச் செய்ததுபோல[2]'' உரைக்கும் வாய்ப்பாடு; ''இல்வாழ்வான் என்பான்[3]'' என்றாற்போல.

''பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவை'' என்பது, முன்னர் எய்திய வதுவை மனைவிக்குப் பின்னர் உலகியல் அமைதி குறித்தும், மகப்பேறு குறித்தும் முறையாற் செய்துகொள்ளப்படும் பெரிய பொருளாகிய வதுவையாகும்; அஃதாவது இரண்டாம் மனைவி.

உலகியலில், மக்கள், இளமையில் பெற்றோரைச் சார்ந்தும் முதுமையில் மக்களைச் சார்ந்தும் வாழும் திறத்தால் ஏனை உயிரினங்களினும் வேறுபடும் சிறப்புடையர்; ஏனை உயிரினங்கள் யாவும் இளமை கழிந்ததும் பெற்ற உயிரோடு ஒருபற்று மின்றி மீளாப்பிரிவுற்று நீங்கும். இவ்வகையில் முதுமைக்காலத்துப் பற்றுக்கோடாம் வகையில், மக்கட்பேறு பொருட்பேறு போல் இன்றியமையாதாயிற்று. திருவள்ளுவரும் ''தம்பொருள் என்ப தம் மக்கள்[4]'' என்றும், முதுமைக்கண் தம்மைப் பெற்றோர்க்குத் தாம் பற்றுக்கோடாதல் கடன் என்பது அறிந்தொழுகும் மக்கட் பேற்றின் மாண்பினை, ''பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறி

---

1. குறுந். 3. 2. தொல். சொல்.
3. குறள். 41. 4. ஷ. 63.

வறிந்த மக்கட்பேறு அல்ல பிற[1]'' என்றும் உரைத்தருளுவது காண்க. தன்வாழ்க்கைத்துணையாகிய தலைமகள்பால் மக்கட்பேறு இல்லையாயின், அது குறித்து வேறொருத்தியைப் பின் முறையாக வதுவை செய்து கோடல் உலகியல் அமைதியாயிற்று. மக்கட் பேறெய்தியபின் வேறொருத்தி மனையாட்டியாதல் தமிழ்மரபன்று; பிறர் உளராயின், அவர் அனைவரும் இற்பரத்தையர் எனப்படுவர். அவர் பெறும் மக்கள் முதுமைப்பற்றுக்கோடாம் கடப்பாடுடைய ரல்லர் என்பது தமிழ்நூன் முடிபு. இற்பரத்தையர் பொதுமகளி ராகாது ஒருவற்கே உரிமையானவர் என்பது பற்றிப் பிற்காலத்தார் அவர்களை உரிமைமகளிர் என்று குறிப்பாராயினர்.

நல்லறம் புரியும் இல்ல மாகலின், நன்மனை என்றும், பெரும் பொருளாகிய மக்கட்பேறு கருதியதும், பயில நிகழாது மிக அருகியது மாகிய வதுவையாகலின், அருங்கடி என்றும், இப் பின்முறை வதுவை பெருங்குலக்கிழத்தியுடன் தானும் ஓருயிர்க் கீருடம்பாய் ஒன்றுபட்டு ஒழுகுதலால் எய்த லாகும் சிறப்பு நோக்கி, எம்நலம் சிறப்ப என்றும், பிரிதலும் கூடுதலும் பொருந்திய நின் கேண்மையினும், என்றும் பிரிதலில்லாத கேண்மை யுடையளாவாள் இவள் என்பாள், நின்னினும் சிறந்தனள் எமக்கே என்றும் கூறினாள். இதனாற் பயன் தலைவன் இப்பெற்றியாளைக் கைவிட்டுப் பரத்தைமை செய்தொழுகுவது நினைந்து, பரத்தைமையைக் கை யொழித்துப் பிரியாக் காதல னாவது. இது ''பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவைத் தொன்முறை மனைவி எதிர்ப்பாட்டின்[2]'' கண் நிகழ்த்தும் கூற்று. அஃதாவது, அப் புதுமணமகளைத் தொன்முறை மனைவி விளக்கு முதலிய மங்கலங்களைக் கொண்டு எதிரேற்றுக் கொள்வாள் மகிழ்ந்து கூறுவதாம்.

மயில் ஆலுவதும், தேன் இமிருவதும், மழை பெய்வதும், பெரும்பொருள் வதுவைக் காலத்து மக்கள் மகிழ்ச்சி மிக்குக் குரவை யாடலும் இன்னியம் பல இசைத்தலும் பெரும்பொருள் வதுவை கொண்ட மகட்கும் பிறர்க்கும் தலைமகள் அருள் செய்வதும் சுட்டி நின்றன.

---

1. குறள். 61. 2. தொல். பொ. 172.

நின்னினும் சிறந்தனள் எமக்கே என்றது, பிரிவாற்ருமை. அருங்கடி யயர, எந்நலம் சிறப்ப என்றது அருண்மிக வுடைமை. (292)

293 சிலம்புகமழ் காந்த ணறுங்குலை யன்ன
நலம்பெறு கையினென் கண்புதைத் தோயே
பாய லின்றுணை யாகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை
நீயல துளரோவென் னெஞ்சமர்ந் தோரே.

இது, பகற்குறியிடம் புக்க தலைமகன் தலைவி பின்ளுக மறைய வந்து கண் புதைத்துழிச் சொல்லியது.

ப. உரை: நீயலது உளரோ என் நெஞ்சமர்ந் தோரே என்றது, நீ யல்லது பிறர் உளராயினன்றே நான் கூறுவது அறிதல் வேண்டிக் கண் புதைக்கற்பாலது; அஃது இல்லாதவழிப் புதைப்பது என்? என்று அவள் பேதைமை யுணர்த்தியதாம்.

உரை: சிலம்பின்கண் மணம் விசுகின்ற காந்தளினது நறிய பூங்குலை போலும் அழகு பெற்ற கைகளால் என் கண்களைப் புதைத்தோய், உறக்கத்திற்கு இனிய துணைவியாகிய பருத்த தோள்களையும், மயில் போலும் மாட்சிமையுமுடைய மடந்தை யாகிய நின்னைத் தவிர என் நெஞ்சத்தமர்ந்த காதலர் வேறுளரோ? இலரன்றே எ. று.

காந்தள் குறிஞ்சிநிலப் பூவாகலின், சிலம்பு கமழ் காந்தள் எனப்பட்டது. "நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள்[1]" என்பது காண்க. காந்தள் எனப் பொதுப்படக் கூறியவதனுல், சிறப்புடைய செங்காந்தட்பூக் கொள்ளப்பட்டது. இதன் பூக்கள் குலைகுலையாய்த் தோன்றுமென்பது, "குருதிப்பூவின் குலைக்காந் தட்டே[2]" என்றும், "மலைச் செங்காந்தள்[3]" என்றும் சான்ருேர் குறிப்பது காண்க.

---

1. ஐங். 226. 2. குறுந். 1. நற். 173.

காதலர் இருவர் ஒருவரை யொருவர் எதிர் நோக்கி நின்று கூடுமிடத்து, அவ்வெதிர் நோக்கி நின்றாரைப் போதந்து கூடுவோர் அவரறியாமைப் போந்து கண் புதைத்துக் கூடி மகிழ்தலை, ''நின்றோ ளெய்திக் கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப் பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித் தொடிக்கை தைவரத் தோய்ந் தன்று கொல்லோ[1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க.

மகளிர் கைக்குக் காந்தளை உவமை கூறல் மரபு; ''கைபோற் பூத்த கமழ்குலைக் காந்தள்[2]'' என்று சான்றோர் உரைப்பர். பாயல் இன்துணை, உடன் கிடந்து உறங்குதற்கு இனிய துணை; ''இவள் பழனவூரன் பாயல் இன்துணையே[3]'' எனப் பிறரும் கூறுவர். காதலன் தன் கூந்தலிற் கிடந்து உறங்குதலை மகளிரும் விரும்புவர்; ''பயிலிருங் கதுப்பின் பாயலும் உள்ளார்[4]'' எனப் பிரிவிடை வருந்தும் ஒருத்தி கூறுதல் காண்க. மாட்சி, சாயல்; தோகைக்கு மாட்சி அதுவாகலின். தனக்குப் பின்னே போந்து தன் இருகைகளாலும் கண்ணைப் புதைத்தவுடன், அவற்றை மெல்ல நீக்கித் தன் கையில் பற்றிக் கொண்டு பேசுதலின், காந்தள் நறுங்குலை யன்ன கை என்றும், அதனால் தனக்கு மிக்க இன்ப முண்டாதலின், நலம்பெறு கை என்றும், ஏனை அறிவு ஆண்மை வினைகட்குத் துணையாவாரின் நீக்குதற்குப் பாயல் இன் துணை என்றும், கண்ணகத்தேயன்றி என் நெஞ்சகத்தும் நின்னை யன்றிப் பிறர் எவரும் இலராதலை அறிந்திலை போலும் என்றற்கு நீயலது உளரோ என் நெஞ்சமர்ந்தோர் என்றும், களவின் கண் தலைமகனிடத்தே பரத்தமை ஒழுக்கம் நிகழ்வதின்மையின் கண் புதைத்தோய் என்று எடுத்து மொழிந்து, வன்புறை தோன்ற நீயலது உளரோ என்றும் கூறினான்.

''வேளா ணெதிரும் விருப்பின்கண்[5]'' நிகழும் கூற்று. குறி வழிக் கண்டு கூறுதல் என்று கூறி, அவ்வழித் தலைவிக்குக் கூறியதாக இதனைக் காட்டி, இது தலைவி கண்புதைத்தவழித் தலைவன் கூறியது என்பர் இளம்பூரணர்.

---

1. அகம். 9. 2, பரி. 19: 76 3. ஐங். 96.
4. குறுந். 254. 5. தொல். பொ. 105.

''கரணத்தின் அமைந்து முடிந்தகாலை[1]''என்னும் சூத்திரத்து ''எண்ணருஞ் சிறப்பின் கிழவோன் மேன'' என்புழிச் ''சிறப்பின்'' என்றதனால் இதனைக்காட்டி யமைப்பர் நச்சினார்க்கினியர். (293)

294 எரிமருள் வேங்கை யிருந்த தோகை
இழையணி மடந்தையிற் றோன்று நாட
இனிதுசெய் தனையா லெந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே.

இது, வதுவை செல்லா நின்றுழித் தலைமகற்குத் தோழி சொல்லியது.

ப. உரை: இனிது செய்தனையால் என்றது வதுவையில் தலைவிக்கு மலரணியக் கண்ட தோழி ''இவ்வாறு ஆம்படி அன்றே சூட்டினை'' எனச் சொல்லியவாரும்.

மலர்ந்த வேங்கைக்கண் இருந்த தோகை இழையணி மடந் தையின் தோன்றும் நாட என்றது, நீ வரையா தொழுகுகின்ற ஞான்றும் நின் தமர் பொன்னணிந்த இன்று போலச் சிறப்ப ஒழுகினாய் என்பதாம்.

உரை: நெருப்புப் போலும் மலர்களையுடைய வேங்கை மரத்தின்கண் இருந்த மயில் கலன்களை யணிந்த மகளிர் போலத் தோன்றும் நாடனே. நன்மனைக்கண் வதுவை நிகழும் இப்பொழுது இவளுடைய பின்ன லுற்ற கரிய கூந்தற்கண் மலரை யணிந்தனை; இதனைப் பண்டே செய்தனை யாயினும் இப்பொழுது இனிதே செய்தனை யாகலின், எந்தையே நீ நெடிது வாழ்க எ. று.

வேங்கையின்பூ நெருப்புப் போலும் நிறமுடைமை பற்றி எரிமருள் வேங்கை என்றார்; பிறரும் ''எரியகைந் தன்ன வீததை யிணர வேங்கையம் படுசினை[2]'' என்றும், ''அழற்சினை வேங்கை[3]'' என்றும் கூறுதல் காண்க. உயரிய மரஞ்செடிகள் அடர்ந்த பெரு

1. தொல். பொ. 146. 2. நற். 379. 3. அகம். 398.

மலைகளில் வாழும் இயல்பின வாதலின், அங்கே பருத்து உயர்ந்து நிற்கும் வேங்கை மரங்களில் மயில்கள் காணப்படுவது கொண்டு, வேங்கைக்கண் இருக்கும் மயிலை விதந்து கூறினர். பிறண்டும் ''விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை[1]''என்றும், பிறரும், ''நன்னாள் பூத்த நாகிள வேங்கை, நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை[2]'' என்றும் கூறுவர். அந்நிலையில் அம்மயில்களின் தோற்றம் வயங்கிழை அணிந்த மகளிர் போல இருக்கும் என்பார், தோகை இழையணி மடந்தையின் தோன்றும் என்றார். பிறிதோர் இடத்தும், ''வேங்கைப் பெருஞ்சினைத் தோகை பூக்கொய் மகளிரின் தோன்றும்[3]'' என்பது காண்க. நாட, அணிந்தோய், இனிது செய்தனை ; நுந்தை வாழியர் என இயைக்க.

''பெற்றோர் பெட்கும் பிணையை யாகென'' முதுமகளிர் வாழ்த்த, ''பேரிற் கிழத்தி ஆகுக எனத் தமர்தர[4]'' அவரும் பிறரும் அறியத் தலைமகன் தலைமகள் கூந்தலில் மலர் சூட்டித் தன் பெண்டெனப் படுத்தல் கண்டு மகிழ்பவள், பின்னிருங் கூந்தல் மலரணிந்தோய் என்றும், பண்டுகளவின்கண் இது செய்தா யாயினும் ஆண்டு அது நினக்கும் இவட்கும் இனிது; ஈண்டு நுமக்கே யன்றித் தமர்க்கும் பிறர்க்கும் இனிதாயிற் றென்பாள், இனிது செய்தனையால் என்றும், இவ்வகையால் இங்கேகால் கொள்ளும் அன்பும் அறமும் நும்வாழ்க்கையின் பண்பும் பயனு மாய் நெடிது வாழ்க என்றற்கு எந்தை வாழியர் என்றும் கூறினாள். அன்பானும் அறத்தானும் சிறந்த தலைமகன் அருள் நிழலில் வாழ்பவ ளாதலின், வழிபாட்டு முறை பற்றி எந்தை என்றாள். ''இனிது செய்தனையால் எந்தை வாழிய, பனிவார் கண்ணள் பலபுலந் துறையும், ஆய்தொடி யரிவை கூந்தற், போதுகுர லணிய வேய்தந் தோயே[5]'' எனப் பிறண்டும் தோழி கூறுவது காண்க.

''பெறற்கரும் பெரும் பொருள் முடிந்தபின்[6]'' என்ற சூத்திரத்து, ''அற்றமழி வுரைப்பினும்'' என்புழி நிகழும்

1. ஐங். 297. 2. அகம். 85. 3. ஐங். 297.
4. அகம். 86. 5. அகம். 104. 6. தொல். பொ. 148.

கூற்றுக்கு இதனை உதாரணமாக்குவர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்.

நுந்தை வாழியர் என்றும் பாடமுண்டு; அதற்குத் தலைமகனைத் தலைக்கூடிய ஞான்று தோன்றிய அன்பிற் குன்றாது அறத்தாற்றின்கண் ஒழுகிய தலைமகனது சான்றாண்மை கண்டு வியக்கின்றவள், அதற்கு ஏதுவாகிய அவன் தந்தையை விதந்து நுந்தை வாழியர் என்றாள் எனக் கொள்க. (294)

295. வருவது கொல்லோ தானே வாரா
தவணுறை மேவலி னமைவது கொல்லோ
புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை
இருவி யிருந்த குருவி வருந்துறப்
பந்தாடு மகளிரிற் படர்தரும்
குன்றுகெழு நாடனொடு சென்றவென்
னெஞ்சே.

இது, தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்துழி, உடன்சென்ற நெஞ்சினைத் தலைமகள் நினைந்து கூறியது.

ப. உரை: புனவர் கொள்ளிக்கு அஞ்சித் தன் புகலிலே செல்லும் மயில் புனம் கொய்த பின்பு அரிதாளிலே இருந்த குருவி எழுவது விழுவதாய் வருந்துறச் சிறகை விரித்து ஆடிச் செல்லும் நாடன் என்றது, பின்பு வரைந்து கொள்ளக் கருதாதே அலரஞ்சித் தன் மனைவயிற் சென்றவன் இக்காலத்து யானும் என் ஆயத்தாரும் வருந்துறப் பிரிந்தான் என்பதாம்.

உரை: புனத்தில் வாழ்வாரது நெருப்புக் கொள்ளிக்கு அஞ்சித் தனக்குரிய புகலிடம் நோக்கிச் செல்லும் மயில், புனங் கொய்த பின்பு அரிதாளிலே இருந்த குருவி வருந்தச்சிறகை விரித்துப் பந்தாடும் மகளிரைப் போல, அசைந்தாடிச் செல்லுங் குன்றுகள் பொருந்திய நாடனொடு சென்ற எனது நெஞ்சம் வருவதாகுமோ, அன்றி வாராது அவ்விடத்தே உறைதலை விரும்பி அமையுமோ? யாதோ? அறிகிலேன் எ. று.

உறை, உறைதல்; முதனிலைத் தொழிற்பெயர். மேவல், விரும்புதல். வரற்பாலது வாராதாயின் அதற்கு ஏதுவேண்டுதலின், அவணுறை மேவலின் என்பாராயினர். புனவர், தினைப்புன முடையோர்; மருதநிலத்துக் காணியாளர் போல. புகல், புகலிடம் நாடன் இன்னுயிர்க் காதல ளுகலின், ஒருவினை ஒடு உயர்பின் வழித்தாயிற்று. புனவர் கொள்ளி யாவது புன்புலத்தை மயக்கித் தினை முதலிய வித்திப் பயன்பெறுதற்பொருட்டுப் புலத்தில் நின்ற காட்டைக் குறவர் தீயிட்டுக் கொளுத்தும் நெருப்பு. புகல், விரும்பி யுறையுமிடம். தினையரிதாளில் தழைத்த பயிரின்கண் தோன்றும் புல்லிய கதிர்களையும் புழுபூச்சிகளையும் மேய்ந்துண்ணும் சிறுபுள்ளினத்தை, இருவி யிருந்த குருவி என்றார். துள்ளியும் தொடர்ந்தும் ஓடும் பந்தின்வழி அதனை யாடும் மகளிர் அசைந் தோடி ஆடுதலின், தன் புகலிடம் நோக்கி நீண்ட தோகை அசைந்து செல்லும் இயைபு நோக்கி, பந்தாடு மகளிரின் என்றார். தானே என்றது கட்டுரைச் சுவைபட வந்தது.

தலைமகளும் ''ஆயமொடு கெழீஇப், பந்துவழிப் படர்குவ[1]'' ளாகலின், பந்தாடு மகளிரைக் கூறினள், தான் பந்தாடும் பான்மைய ளாயினும் அஃதொழிந்து நெஞ்சழிந்து நின்றமையின். வருவது கொல்லோ, வாராது அவணுறை மேவலின் அமைவது கொல்லோ என்றது. ஆங்கு நெஞ்சழிதல். வருவது கொல்லோ என எண்ணினவள், வாராமைக்குரிய ஏதுக்கள் யாவையென ஆராய்ந்து, ஒருகால் தலைவர் அருளாமையால் இவண் வந்து என் வேறுபாடு நோக்கி மருண்டு அவர்பாலே சென்று சேர்ந்ததோ, அன்றி அவர்பால் என் உயிரையும் உடன்கொண்டு சேறற் குரிய நெறி ஆராய்கின்றதோ என எண்ணி, அவற்றை மறுத்து, ''குன்றநாடன் குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன், கெடுநா மொழியலன் அன்பினன்[2]'' எனத் துணிந்து அவன்பாலே இருந்து அவன் மேவன செய்து இன்புறுகின்ற தாகல் வேண்டும் என்பாள், அவணுறை மேவலின் வாராது அமைவது கொல்லோ என்றாள். ''தொன்னலம் இழந்த வென் பொன்னிற நோக்கி, யேதி லாட்டி யிவளெனப் போயின்று கொல்லோ[3]'' என வேறுபாடு நோக்கி

---

1. அகம். 153. 2. ஷை. 352. 3. நற் 56.

மருண்டமையும், நாணினை நீக்கி உயிரோடு உடன் சென்று, காணப் புணர்ப்பதுகொல் நெஞ்சு'' என உயிர் கொண்டு போதலைச் சூழ்ந்தமையும் தலைவி நினைக்குமாறு காண்க. இது, ''கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை'' என்றமையான், தன் னெஞ்சம் சென்று சேர்தல், ''ஒருசிறை நெஞ்சமொடு சாவுங்காலை, யுரிய தாகலும் உண்டென மொழிப[2]'' என்பதனால் அமையும்.

''மறைந்தவர் காண்டல்[3]'' என்ற சூத்திரத்துப் ''பிரிந்தவழிக், கலங்கினும்'' என்றதற்கு இதனைக் காட்டுவர் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும். (295)

296 கொடிச்சி காக்கும் பெருங்குர லேனல்
அடுக்கன் மஞ்ஞை கவரு நாட
நடுநாட் கங்குலும் வருதி
கடுமா தாக்கி னறியேன் யானே.

இஃது, இரவுக் குறிவருகின்ற தலைமகற்குத்தோழி ஆற்றருமை கூறி மறுத்தது.

ப. உரை: அறியேன் யான் என்றது இதனால் விளைவன யான் அறியேன் என்பதாம்.

குறத்தி காக்கும் தினையை மஞ்ஞை கவரும் நாட என்றது நின் நாட்டுக்குத் தக்க களவின் நுகர்ச்சியே விரும்புகின்றாய் என்பதாம்.

உரை: கொடிச்சியாகிய தலைமகள் காக்கும் பெரிய கதிர்களையுடைய தினையை மலைப்பக்கத்தே வாழும் மயில்கள் கவரும் நாடனே, கங்குல் நடுநாளாகிய நள்ளிரவில் வருகின்றனை யாகலின், வரும் நெறியின்கண் அச்சம் பொருந்திய விலங்குகள் நின்னைத் தாக்கின். யாது விளையுமோ அறிகிலேனாகலின், இனி இரவுக்குறி வருதலைத் தவிர்க எ. று.

---

1. ஐந். எழு. 32. 2. தொல். பொ. 204.
3. தொல். பொ. இளம். 109. நச்சி. 111.

கடுத்தல், அச்சப் பொருட்டாய கடியென்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த வினை. கடுமா, யானை, புலிமுதலியன. தினைக்கதிரை மயிலுண்டல், ''புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக் கடியுண் கடவுட் கிட்ட சில்குரல் அறியா துண்ட மஞ்ஞை[1]'' என்பதனாலும் அறிக. உம்மை, பகற்குறிக்கண் வந்தமையும் தழுவி நிற்றலின் எச்சப்பொருட்டு; வரவருமை யுணர்த்தலின் சிறப்பும்மை யுமாம்.

இரவுக்குறி வந்தானை அன்புடன் தழீஇக்கொண்டு இனி வாராவகை விலக்குகின்றாளாகலின், நடுநாட் கங்குலும் வருதி யென்றும், வரும் நெறி கடுமா வழங்கும் கொடுமை யுடையதெனத் தான் ஏதம் ஆய்ந்து வருந்துமாறு தோன்ற, கடுமா தாக்கின் என்றும், உடனே இறந்துபடுதலை யன்றி வேறு செய்திறம் அறியேன் என்றற்கு அறியேன் யான் என்றும் கூறினாள். கடுமா தாக்கின் என்றது ஏதமாய்தல். அறியேன் யான் என்றது கலக்கம் இனி, கடுமா தாக்கின் அதனை நீ கொன்று வேறல் ஒருதலை யாயினும், அது செய்யும் முழக்கத்தால் தமர் நின் வர வறிவரேல் பெருந்தீங்கு விளையும்; ''தாம் செத்து உலகாள்வார் இல்லை, அது போல இவ்வொழுக்கம் ஒழுகற் பாலீரல்லீர்'' எனத் தோழி மறுத்தா ளென்றுமாம்.

கொடிச்சி காக்க விளங்கும் தினைக்குரலைப் பல இடையீடுகட் கிடையே மஞ்ஞை கவரும் என்றதனால், தாயர் தந்தையரது காவலில் சிறக்கும் தலைமகளது கூட்டத்தை இடையீடின்றிப் பெறுதற்கு நீ விரைந்து வரைதல் வேண்டுமெனக் குறிப்பால் தோழி வரைவு கடாயினாள் எனக் கொள்க. பழைய வுரைகாரர்க்கும் இதுவே கருத்தாதல் அறிக. (296)

297. விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாட
பிரியினும் பிரிவ தன்றே
நின்னொடு மேய மடந்தை நட்பே.

---

1. குறுந். 105.

இஃது, ஒருவழித் தணந்து வரைய வேண்டு மென்ற தலைமகற்குத் தோழி கூறியது.

ப. உரை: மலர்ந்த வேங்கைச் சினைக்கண் இருந்த தோகை மலர் கொய்யும் மகளிரைப் போலத் தோன்றும் நாட என்றது, நீ மனத்தால் எங்கட்கு நல்லது புரியா யெனினும் நன்மை செய்கின் ருய்போலத் தோன்றுகின்ருய் என்பதாம்.

உரை: பூத்து விரிந்த மலர்களையுடைய வேங்கை மரத்தின் பெரிய கிளைகளிடத்தே தங்கிய மயில் பூக்கொய்யும் மகளிர்போலத் தோன்றும் நாடனே, நீ பிரிவாயாயினும் நின்னொடு பொருந்திய மடந்தையின் நட்புப் பிரிவென்ப தொன்று உண்டென உட் கொள்ளும் இயல்புடைய தன்று என அறிக எ. று.

பூவின் விரிந்த பண்பினை வேங்கைமேல் ஏற்றி விரிந்தவேங்கை என்ருர். ''விரியிணர் வேங்கை[1]'' எனவும், ''வேங்கை விரியிண ரூதி[2]'' எனவும் சான்ருேர் உரைப்பது காண்க. வேங்கைக்கண் இருந்த மயில் பூக்கொய் மகளிர் போலத் தோன்றுதலை, "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை, மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை, பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்[3]'' என வெள்ளி வீதியார் பாட்டினும் வருதல் காண்க.

பிரிந்து சேறல் வேண்டு மென்னும் எண்ணம் நிகழ்தற்கு நின் நெஞ்சு இடம் தரினும் என்பாள், பிரியினும் என்ருள். இனிப் பிரிவது அன்றே என்புழி ஏகாரம் எதிர்மறையாகக் கொண்டு பிரிவதாம் எனவும், எனவே, மடந்தையது நட்பு நீ பிரியக் கருதி னும் பிரிந்ததாகவே கொண்டு அவட்குப் பெருந்துயரைச் செய்யும் எனவும் உரைப்பினும் ஆம். நீ பிரிவா யாயினும் மடந்தையின் நட்புப் பிரிவை உட்கொள்ளும் இயல்புடைத்தன்று என்றதனுல், அந்நட்புக் கந்தாக அவள் உயிர் வாழ்கின்ரு ளென்றும், அப் பெற்றியாளைப் பிரிந்து உறைதல் நன்றன் றென்றும் கூ றினுளாம்.

வேங்கைப் பெருஞ்சினைக்கண் தோகை வாளாது இருப்பினும் பூக்கொய்யும் மகளிர் போலத் தோன்ரு நிற்கும் என்றது, நீ

1. அகம். 38. 2. ஷை. 132. 3. குறுந். 26.

வரைவு கருதிப் பிரிதலை நினைந்தாய் ஆயினும் அஃது எமது உயிரைக் கொல்லும் செயல்போல எமக்குத் துயர்விளையா நிற்கிறது என உள்ளுறையால் செலவழுங்குவித்தவாறு.

பிரியா யன்றே என்பது பாடமாயின், நீ மெய்யாற் பிரியினும் மனத்தாற் பிரியாயன்ரே என்றவாறென்க. (297)

298. மழைவர வறியா மஞ்ஞை யாலும்
அடுக்க னல்லூ ரசைநடைக் கொடிச்சி
தானெம் மருளா ளாயினும்
யாந்தன் னுள்ளுபு மறந்தறி யேமே.

இது, தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குணர்த்திய வழி அவள் நாணத்தினல் மறைத்தொழுகியவதனைக் கூறக்கேட்ட தலைமகன் சொல்லியது.

ப. உரை: மழையினது வரவை அறிந்து மஞ்ஞை ஆலும் என்றது, யான் நின்னிடத்து வருகின்ற வரவினை யறிந்து இதற்கு அவள் மகிழாநிற்கும்; நீ கூறுகின்றது பொய் என்பதாம்.

உரை: மழைவரவினை யறிந்து மயில்கள் ஆலுகின்ற மலைப் பக்கத்ததாகிய நல்லூர்க்கண் வாழும் அசைந்த நடையினையுடைய கொடிச்சியாகிய தலைமகள் எமக்குத் தன் அருளைச் செய்யா ளாயினும், யாம் அவளையே நினைந்து ஒருபோதும் மறந்தறியேம் எ. று.

மழை, மழைமுகில். அறியா, செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். கருமுகிற் கூட்டம் எழுந்து வானத்திற் பரந்து வருவது காணின் தோகைமயில், அதுபோது வரும் குளிர்காற்ருல் உள்ளம் கிளர்ந்து தன் தோகையை விரித்து ஆடுவது இயல்பாதலால், மழை வரவறியா மஞ்ஞை ஆல என்ருர். அடுக்கல், பெருங்கற்கள் நிறைந்த குன்று.

தலைமகற்கும் தனக்கும் இயற்கைப்புணர்ச்சி வகையால் உண்டாகிய உறவினைத் தோழி அறிதற்கு நாணி வெளிப்படை யாகத் தலைவி குறைநேராளாகவே தோழி குறைமறுத்தமை

பொருது தான் எம் அருளா ளாயினும் என்ருன். அருளா ளாயினும் என்றது, அருளாமைக்குரிய காரணம் யாதும் என்பால் இல்லை யென்பது பட நின்றது. அருளப்படுதற் குரிய தன் பெருங் காதலைத் தோழிக்கு உணர்த்தும் கருத்தால் யாம் தன்னுள்ளுபு மறந்தறியேம் என்ருன். உள்ளுறையால் தலைவிக்கும் தனக்கும் முன்பே உளதாகிய உறவினைக் குறிப்பால் உரைத்தமையான், வெளிப்படையாக என்பால் உள்ளுதலும் மறத்தலும் இலவாயின என்ருன். உள்ளுதல், மறந்த தொன்றினை நினைவு கூர்தல். ''உள்ளினே னென்றேன் மற்று என் மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக்க னள்[1]'' என்பதனுல் அறிக.

இதன்கண் முன்னது பண்பிற் பெயர்த்துழிக் கூறுதலும், பின்னது பரிவுற்று மெலிதலுமாம்; என்னை: ''பண்பிற் பெயர்ப்பி னும் பிரிவுற்று மெலியினும், அன்புற்று நகினும், அவட்பெற்று மயிலினும் ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக் கியல்பே[2]'' என்ப வாகலின்.

மழைவரவு அறிந்து மயில்கள் ஆலுமாறு போல யான் வந்தன னென்பதை நின் தலைவி அறிந்தால் அருள் வந்த சொல்லும் செயலுமுடைய ளாவள், காண் என உள்ளுறை கூறியவாறு காண்க.

இது குறி பிழைத்தவழித் தோழிக்குச் சொல்லியது[3] என்பர். ''பண்பிற் பெயர்ப்பினும்'' என்ற சூத்திரத்துப் பரிவுற்று மெலிதற்கு மேற்கோளாகக் காட்டுவர் இயம்பூரணர், நச்சினுர்க் கினியர். (298)

299. குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அஞ்சி லோதி யசைநடைக் கொடிச்சி
கண்போன் மலர்தலு மரிதிவள்
தன்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே.

---

1. குறள். 1316. 2. தொல். பொ. 103.
3. இளம். தொல். பொ. 105. 4. தொல். பொ. 103.

இஃது, இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்கிய நிலைமைக் கண் தலைமகள் ஆயவெள்ளத்தோடு கூடி நிற்க கண்ட தலைமகன் மகிழ்ந்த உள்ளத்தனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

ப. உரை : குன்றநாடன் என்றது அந்நிலத்துக்கு உரிய னாகிய முருகனை.

உரை: குன்றுகளையுடைய நாடன் குன்றுகளின் சாரலிலுள்ள பசிய சுனைக்கட் பூத்த அகன்ற வாயையுடைய குவளைமலர் தானும், அழகிய சிலவாகிய கூந்தலையும் அசைந்த நடையினை முடைய கொடிச்சியாகிய தலைமகளின் கண்போல மலர்தல் அரிது; இவளைப்போலும் சாயலைப் பெறுதல் மயிலுக்கும் அரிது எ. று.

குன்ற நாடன், முருகன்; கவாஅன், மலைப்பக்கம் குன்றத்துக் கவாஅன் எனப் பெயர்த்தும் கூறியதனால், குன்றநாடன் என்றது வாளா பெயராய் நின்றது. ஏனைத்தாமரையும் ஆம்பலும் போலக் குவியாது விரிய மலர்ந்து நிற்கும் அகவிதழ் உடைமையின், பகுவாய்க்குவளை என்றார். சாயல், மென்மை. குவளை கண்போல மலர்தலும், மயில் சாயல் பெறுதலும் பொதுவியல் பாகலின், இரண்டையும் எடுத்தோதினார். இஃது ஓரீஇக் கூறிய வெளிப் படை யுவமம். தலைமகளின் கண்களையும், சாயலையும் உயர்த்திக் கூறுவது கருத்தாகலின் பட்டாங்கு உவமம் கூறும், "உவமத் தன்மையும் உரித்தென மொழிப, பயனிலை புரிந்த வழக்கத் தான [1]" என்புழி அடங்காதாயிற்று.

குன்றுகள் நிறைந்த குறிஞ்சிக் கடவுளாகிய முருகன் சிறப்புற விரும்பும் குன்றம் என்றற்குக் குன்றநாடன் குன்றம் என்றும், அவன் தோன்றி வளர்தற்கு இடமாய்ச் சிறந்த சுனை என்றற்கு குன்றத்துக் கவாஅன் பைஞ்சுனை என்றும் உயர்த்துக் கூறியது, தான் வேண்டிய உயர்வுமுடித்தற்கு. முருகற்குரிய சுனையாயினும், ஆண்டுப்பூத்த குவளைதானும் இவளது கண்போல மலரும் மாயினும்காதற் குறிப்பை யுணர்த்தும் கவினுடையது அன்மையின்

1. தொல். பொ. 309.

நிகராதல் இய்லே யென்பான், கண்போல் மலர்தலும் அரிது என்ருன். ''காணிற்குவளே கவிழ்ந்து நிலன் நோக்கும் மாணிழை நோக்கொவ்வேம் என்று[1]'' என்று சான்ருேர் கூறுதல் காண்க. செவ்வேள் விரும்பி யூரும் சிறப்புப் பெற்றதாகலின், அவன் குன்றத்து வாழும் மயிற்கு இவளது சாயல் பெறுவது இயலு மாயினும், புணர்ச்சிக்குரிய மென்மை சான்ற சாயல் பெறல் அரிது என்றற்கு இவள் தன்போற் சாயல் மஞ்ஞைக்கும் அரிது என்ருன். இஃது அவட் பெற்று மலிதல்.

மெய்தொட்டுப் பயிறல்[2]'' என்ற விடத்து, ''தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்'' என்புழி இஃது இருவரும் உள்வழி வந்த தலைவன், தலைவியின் தன்மை கூறவே, இவள்கண்ணது இவன் வேட்கை என்று தோழி குறிப்பான் உணரக் கூறியது என்பர் நச்சினுர்க்கினியர்.

300. கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அஞ்சிறை விரிக்கும் பெருங்கல்
வந்தன னெதிர்ந்தனர் கொடையே
அந்தீங் கிளவி பொலிகநின் சிறப்பே.

இது, தலைமகன் ருனே வரைவு வேண்டிவிடச் சுற்றத்தார் கொடை நேர்ந்தமை தலைமகட்குத் தோழி சொல்லியது.

ப. உரை : கொடிச்சி கூந்தல் போறல் வேண்டி மஞ்ஞை சிறகை விரிக்கும் வெற்பன் என்றது நின் மகிழ்ச்சிக்குத் தக நின் தமர் மகிழ்ச்சி கூர்ந்தார் என்பதாம்.

உரை : கொடிச்சி யாகிய குறமகளின் கூந்தல் போலுமாறு மயில் தன் அழகிய சிறகுகளை விரித்து ஆடும் பெரிய கற்கள் நிறைந்த மலையையுடையனுகிய தலைமகன், தானே மகட்கொடை வேண்டி வந்தானுக, நமர் அது நேர்ந்தன ராகலின், அழகிய இனிய சொற்களையுடையாய், இனி நின் சிறப்பு மேம்படுமாக எ.று.

---

1. குறள். 1114.   2. தொல். பொ. 102.

கொடிச்சியின் சாயல் தன்னெடு நிகர்த்தல் கண்டு அமையாது மயில் அவளது கூந்தல் போலுமாறு தன் தோகைக்கண் உள்ள சிறகை விரித்துத் தோன்றும் என்பாள், தோகை அஞ்சிறை விரிக்கும் என்ருர். கொடை எதிர்ந்தனர் என்றது மகட்கொடை வேண்டி வந்த தலைமகனுக்குத் தலைமகளை நேர்ந்தார் என்பதாம். சிறப்பு, ''கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும் பிறவு மாகிய மாண்புகள்[1]''.

எதிர்ந்தனர் கொடையே என்றது தலைமகள் ஏக்கற்றிருந்தமை யுணர நின்றது. இனி, இல்லறம் புரிந்து மக்களொடு துவன்றிச் சிறந்தது பயிற்றல் சிறப்பாகலின், பொலிக நின் சிறப்பே என்ருள் என்றும், நீ அவன் பிரிவால் இழந்த நலம் பெற்று ஏனை அலர் கூறுவார் வாயடங்க வதுவை நன்மணம் பெற்று வாழ்க்கைச் சிறப்பு எய்துவா யாக என்ரு ளென்றுமாம். (300)

ஆசிரியர் கபிலர் பாடிய குறிஞ்சி முற்றும்

1. தொல். பொ. 152.

ஆசிரியர் ஓதலாந்தையார் பாடிய

பாலை

அகனைந்திணைக்கண் வரும் திணைகளுள் பாலை என்பது ஒன்று. பாலையாவது நீர்வளமின்றி வெயில் வெம்மை மிக்கு நிலவும் நிலப்பகுதி. இச்சொல்லைக் கேட்கும் போது வடஇந்தியாவிலுள்ள தார் பாலைவனமும், ஆப்பிரிக்காவிலுள்ள சகாரா பாலைவனமும் நினைவுக்கு வரும். அத்தகைய கொடுமை மிக்க நிலப்பகுதி நம் தமிழகத்தில் யாண்டும் இல்லை. இங்கே பாலையெனப்படுவது ஏனை நிலங்களில் உள்ளது போல நீர்நிலவளமின்றி, கல்லும் முள்ளும் முரம்பும் பரற்கற்களும் மணலும் பொருந்தியுள்ள நிலப்பகுதி யெனக் கொள்ளல் வேண்டும். இதன் இயல்பு குறிக்கப் போந்த இளங்கோவடிகள், ''முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுயருறுத்துப், பாலை யென்பதோர் படிவம் கொள்ளும்[1]'' என்று உரைத்துள்ளனர். இதனையே, ''வான மூர்ந்த வயங்கொளி மண்டிலம், நெருப்பெனச் சிவந்த உருப்பவி ரங்காட்டு, இலையில மலர்ந்த முகையில் இலவம்[2]'' என முல்லை முறைமை திரிந்து பாலையாயின வாறும், ''சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில், ஏறுபெற்றுதிர்வனப்போல் வரைபிளந்து இயங்குநர் ஆறுகெட விலங்கிய அழலவிர் ஆரிடை[3]'' எனக் குறிஞ்சி முறைமை

1. சிலப், 11:64-7. 2. அகம். 11. 3. கலி. 2.

பாலையாயினவாறும் காண்க என அடியார்க்குநல்லார் விளக்கி யுரைப்பது பாலையின் வரலாற்றைத் தெரிவிக்கிறது.

தமிழகத்து நிலப்பகுதியைக் குறிஞ்சி முதலாக வகுத்துக் கொண்ட பண்டைநாளைத் தமிழறிஞர் பாலைக்கு நிலம் வகுக்க வில்லை. அவர்கள் காலத்தில் குறிஞ்சியும் முல்லையும் முறைமை திரிந்து பாலை நிலத்தை உண்டாக்கவில்லை; இயற்கையாகவே பிற நாடுகளில் உள்ளது போலப் பாலைப்பகுதி இருக்கவும் இல்லை. அதனால் ஆசிரியர் தொல்காப்பியர், பொருளிலக்கணம் கூறும் போது ''முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென[1]'' நான்குமே உரைத்தார். ஆயினும், சான்றோர், பாலைநிலம் தோன்றுதற்குரிய இயல்புகள் 'ஆங்காங்கு இருந்தமை கண்டு பொதுவகையில் பாலைத்திணையென ஒன்றை உரைத்துப் போந்தனர். அதுபற்றிப் பாலை பொதுத்திணை என்றும் வழங்கப்படுவதாயிற்று.

நடுவுநிலைத்திணை யாகிய பாலைக்கு நண்பகற்போதும் இள வேனில் முதுவேனிலாகிய இருவகை வேனிலும் உரியனவாம்; ஆயினும், பின்பனிக் காலமும் பாலைக்கு உரியதாகல் உண்டு. அதனால் ஆசிரியர், ''பின்பனிதானும் உரித்தென மொழிப[2]'' என்றனர். இந்நிலத்திலும் எயினர் எயிற்றியர் என்னும் மக்கள் வாழ்ந்தனர். மறவர் மறத்தியர்க்கும் ஆறலைகள்வர்க்கும் பிற கொடியவர்க்கும் இப்பகுதி வாழ்நிலம் என்பர். இப்பகுதியில் விளைபொருள் இல்லாமையால் இம்மக்கள் வழிச்செல்வோரை அலைத்துப் பெறும் பொருளும் ஏனை நிலப்பகுதியிற் புகுந்து சூறையாடிக் கொணரும் பொருளும் ஆகிய இவற்றால் உண்டும் உடுத்தும் வாழ்வர். இங்குள்ள குறுங்காடுகளில் உழைமானும் பிறவும் வாழ்கின்றன. காட்டுக் கோழிகளும், பருந்து கழுகு முதலிய புள்ளினங்களும் பாலையில் காணப்படும். மராமரங்களும், ஓமை, வேல், இலவம், ஈந்து முதலிய மரங்களும் இங்கே உள்ளன. துடி முதலியன எயினர்கட்குரிய பறை; கொலையும் புலையும் ஆறலைத்தலும் சூறையாடலுமே இங்கே நிகழும் தொழில். இப்பாலைக்குரியது செங்கோட்டியாழ் என்றும், பாடுதற்குரிய பண்

1. தொல். பொ. 5. 2. தொல். பொ. 10.

காந்தாரபஞ்சமம் என்றும் அடியார்க்குநல்லார் அறிவிக்கின்ருர். நீர் இல்லாமையே பாலேக்கு இயல்பாகலின் ஈண்டு உள்ள தெல்லாம் வெயிலவன் வெம்மையே யன்றி வேறில்லே. ''அறுநீர்ப் பைஞ்சுனே ஆம் அறப் புலர்தலின், உகுநெல் பொரியும் வெம்மை'[1]' எனச் சான்ருேர் உரைப்பது காணலாம். கவலேக் கிழங்கும் இங்குள்ளோர்க்கு உணவாவ துண்டு, இங்கே கிடைக்கும் பூக்களில் இலவம்பூ சிறப்புடையது. இங்கே வாழும் மக்களுக்கு ஞாயிறும் கொற்றவையும் கடவுளாகும். இப்பாலே இடமாக நிகழும் அகப்பொருள் ஒழுக்கம் பிரிவும் பிரிவுநிமித்தமு மாகும். பிரிவு எனப் பொதுப்படக் கூறியதனுல் களவின்கண் தலேமகன் தலேமகளே உடன்கொண்டு செல்லும் உடன்போக்கும் இதனுள் அடங்கும். பரத்தையிற் பிரிவு தலேமகள் ஊடுதற்கு நிமித்தமாகலின் மருதத்திணேக்கு உரியது. மேலும், அப்பிரிவு சான்ருேர் விதந்து பேசும் உடன்போக்குப் போலச் சீரிய ஒழுக்க மன்று; ஆகலான், அஃது இப்பிரிவின்கண் அடங்காது என அறிக.

பாலே பொருளாக இப்பகுதிக்கண் வரும் நூறு பாட்டுக்களேயும் பாடியவர் ஓதல் ஆந்தையாராவர். இவற்றின் வேருக அவர் பாடியன சில குறுந்தொகையில் உள்ளன.

ஓதல் ஆந்தையார் பிசிராந்தையார் போல ஓதல் என்னும் ஊரினர். இவ்வூர் ஓதலூர் என்ற பெயருடன் மேலேக்கடற்கரைப் பகுதியில் குட்டநாட்டில் உள்ளது. இந்நாளில் மலேயாள மாவட்டத்துப் பொன்னுனி தாலூகாவைச் சேர்ந்த பகுதிக்கண் உளது என்பேமானுல் இனிது விளங்கும். பிசிர்க்குடி பிசிர் என வழங்கினுர்போல ஓதலூர் ஓதல் எனக் குறுகி நின்றது. ஆந்தையார் என்பது இவரது இயற்பெயர். ஆந்தை என்னும் பெயர் தொடக்கத்தில் ஆதனுக்குத் தந்தை என்ற பொருள்படத் தோன்றிப் பின்னர்ப் பலர்க்கு இயற்பெயராய் நிலவுவதாயிற்று. இவரது குட்டநாடு தெற்கிலுள்ள நாஞ்சில்நாடு போல நெல்வளம் சிறந்தது. இக் குட்ட நாட்டில் தான் முடிநாகனுரது முரஞ்சியூரும், கோதம

1. அகம். 1.

ரூது பாலையூரும் உள்ளன. பதிற்றுப்பத்துப் போல இத் தொகை நூலும் சேரமன்னருடைய தொடர்புடையதாகலின், ஓதலாந்தையார் சேரர் தொடர்பு பெற்ற சான்றோருள் ஒருவர் என்பது தெளிவாகிறது.

ஆந்தையார் பாட்டுக்களில் பெரும்பாலன பாலைப் பாட்டுக்களே யாகும். ஒன்று தான் முல்லைக் குரியது குட்டநாட்டை அடுத்துள்ள பகுதி பாலையே; அன்றியும் அதற்குக் கிழக்கில் உள்ள பாலைக்காடும் பிறவும் பாலை நிலப் பகுதிகளாக இருத்தலின், பாலைப் பாட்டுக்களை வரைந்துகொண்டு இவர் விதந்து பாடுவது பொருத்தமேயாகும். இவர் காட்டும் பாலைநிலம் நீர்வளம் ஒன்று தான் குறைந்திருக்கிறதே யன்றி ஏனை நிலவளமும் உயிர்வளமும் குறையவில்லை. இப்பாலைப்பகுதி மலையும் மரங்களும் பொருந்தி வெயில் வெம்மை சிறந்து தோன்றுகிறது. இப்பாலைக் காட்டில் ஓதலாந்தையார் வேனிற்காலத்துக் காட்சியில் நம்மை ஈடுபடுத்துகின்ரூர்.

வெள்ளோத்திரம், ஆல், அரையம், மராமரம், இலவமரம், நுணா, கோங்கு, குரா, பாதிரி புன்கு, மா, இருப்பை, வேம்பு ஆகிய மரங்கள் பல்கியுள்ளன. களிறு வழங்கும் பகுதிகளில் இருப்பைமரங்களின் பூக்கள் உதிர்ந்து, களிற்றியானையின் காலடி தெரியாதபடி மறைந்துவிடுகின்றன. குராமரங்களின் பூவைச் சான்ரேூர் செய்யாப்பாவை யென்று சிறப்பித்துரைக்கின்றனர். பாதிரி மரங்களில் குயில்கள் இருந்து கூவுகின்றன. மராமரத்தின் பூவிதழ்கள் வலம்புரிபோல் சுரிந்துள்ளன.

இளமகளிர் காட்டாற்றின் கரையில் நிற்கும் பாதிரி மரத்தின் நிழலில் தங்கி அதன் பூக்களைக் கொண்டு மாலை தொடுக்கின்றனர்; சில மகளிர் பொன்னிறம் பூத்த கோங்கமும் வேங்கையும் கலந்து ஒருசேரத் தொடுத்து அணிகின்றனர். அதிரற் பூவை அணிபவர் ஒருசிலர். வழிச்செல்வோர் வெள்ளோத்திரத்தின் பூவைச் சூடிக் கொள்வர். வேங்கை மரத்தில் ஏறிப் பூக்கொய்வர் பஞ்சுரப் பண்ணைப் பாடுவர்.

அரையமரத்தின் இலைகள் காற்ருல் அசையும் ஒலிகேட்டு அதனுடைய பழம் உண்ண வரும் புள்ளினம் அஞ்சி நீங்குகின்றன.

நெடிதுயர்ந்து நிற்கும் இலவமரத்தின் பூ காற்றிற் பறந்து உதிர்வது வானத்திலிருந்து இடித்து வீழும் மீன் போன்ற காட்சி தருகிறது சில இலவமரங்கள் பூத்து விளங்கும் தோற்றம் மலைகள் தீப்பிடித்து எரிவதுபோல வுளது.

கோவலர்கள் தாம் மேய்க்கும் ஆனிரையின் பொருட்டுத் தோண்டிய பள்ளங்களை யானைகள் நீர் வேட்கை யுற்றுப் போந்து அவற்றை வளைத்துக் கொள்கின்றன. மூங்கில்கள் தம்மில் இழைந்து தீப்பற்றி எரிவது கண்டு புலியும் அரிமாவும் அஞ்சி ஓடுகின்றன. தன் பிணவு பசித்து வருந்துவது கண்டு ஆற்றாத செந்நாயின் ஆண், காட்டுப்பன்றிகளின் வரவு நோக்கி நிற்கிறது.

தன் பெட்டையைக் கூடி யிருந்து நீங்கும் செந்நாய் மான் பிணை யொன்று தன் மறி (கன்று) யுடன் நிற்பது கண்டு அன்புணர்வால் ஒரு தீங்கும் நினையாது போகிறது. புலிக்குத் தப்பியோடிய ஆண்மான் தன் பிணையொடு கூடித்தன் ஆண்குரலை எடுத்து இசைக்கின்றது.

'இவ்வழியே முல்லை நிலத்துக்குச் செல்வோமாயின், அங்கே கட்டிளமை நலம் கனியும் ஒருவனும் ஒருத்தியும் இல்லிருந்து நல்லறம் புரியும் பெருமனை காணப்படுகிறது. காதலன் யாதோ ஒருகடமை குறித்து வெளியூர் சென்றுள்ளான்; கார்கால வரவில் மீண்டு வருவதாகச் சொல்லி யிருக்கின்றான். கார்காலம் வந்து விட்டது; அதன் அறிகுறியாக அருகில் நின்ற கொன்றைமரம் அழகுறப் பூத்து நிற்கிறது. காடும் தழைத்துக் கார்காலக் காட்சி தருகின்றது. குறித்த பருவம் வந்தும் காதலன் வரவில்லையே, என் செய்வது? என எண்ணமிட்டுத் தோழி ஏக்கமுறுகின்றாள். அது கண்ட அக்கற்புடை நங்கை, தோழியை நோக்கி, ''கானம் கார் எனக் கூறினும் யானோ தேறேன், அவர் பொய் வழங்கலர்[1]'' என்று கூறுகின்றாள். தோழி வியந்து அவளை மகிழ்ந்து நோக்குகிறாள்.

இன்னோ ரன்ன காட்சிகளை இனி வரும் இவருடைய பாட்டுக்களில் காணலாம்.

---

1. குறுந். 21.

31

செலவழுங்குவித்த பத்து.

செலவழுங்குவித்த பத்து எனப்படும் இது செலவு மேற்கொண்ட தலைவனைச் செல்லாவாறு அழுங்குவிப்பது பொருளாக வரும் பாட்டுக்களின் தொகுதி யாகலின், இவ்வாறு பெயர் இது பெறுவ தாயிற்று. அழுங்குதல் மனம் சோர்தல். செலவின்கண் அழுங்கு வது செல்லா தொழிவதன்று; செலவின்கண் செல்லும் தலைமகனது உள்ளத்தை அதன்கண் செல்லாதவாறு தவிர்க்கும் சொற்களைச் சொல்வது. ஈண்டுச் செலவு என்பது தலைமகன் தன் மனையினின்றும் பிரிந்து செல்வது. தலைமக்கள் வாழ்வில் பிரிவு நிகழ்வது ஏன்?

களவுநெறியிற் காதலுற்றுக் கற்பு நெறியில் கடிமணம் புரிந்து கொண்டு இல்லிருந்து அறம் செய்து வரும் காதலர் இருவரிடையே இன்பமே நிலவுகிறது; அவருடைய நினைவும் சொல்லும் செயலும் இன்பமாகவே இலங்குகின்றன. இவ்வின்பத்துக்குப் பொருள் அறனும் ஆக்கமுமாகும். அப்பொருளும், ஆற்றுநீர்ப் பெருக்குப் போல் வரவும் நிலைபேறும் உடையதாகல் வேண்டும். அவ் வுடைமைக்குக் காலமும் இடமும் அறிந்து செய்யும் வினை சிறந்த ஏதுவாகும். பொருளின் ஆக்கம் வினையை யின்றி அமையாது. எனவே, செல்வ வாழ்வுக்குப் பொருளும் வினையும் ஏதுவும் பயனுமாய் இயைந்துள்ளமை தெளிவாகும். இவ்விரண்டையும் செய்வது மனையறம் புரியும் மக்கட்கு நலமாம். ‘நல்லவை யெல்லாம்

கடன் என்ப.' கடமை யடிப்படையில் புகழ் நிலைபேறு கொள்கிறது. இவ்வாற்றால் புகழ் புரிந்த இல்வாழ்க்கைக்குப் பொருளும் வினையும் இன்றியமையாதன வாகின்றன.

பொருளும் வினையும் பயக்கும் பயனை வைத்து நுகரும் இடம் மனை; பொருளும் வினையும் உள்ள இடம் மனைக்குப் புறம்பேயாகும். புகழ் பெறுதல் வேண்டி மனை வாழ்வில் இருப்போர் பொருளும் வினையும் குறித்து மனையின் நீங்கிச் செல்ல வேண்டியவராவர். பொருள் என்றது உணவுப்பொருள் முதல் கல்விப்பொருள் ஈறாகப் பல வேறுவகைப் பொருளைக் குறிக்கும்; வினையென்பது பொருளைச் செய்தற்குரிய தொழில் முதல் நாடுகாத்தற்குச் செய்யும் போர்த் தொழில் ஈறாக எல்லாத் தொழிலையும் உளப்படுத்தி நிற்கும். பொருளைச் செய்த லாவது, நாட்டில் விளையும் பொருளை மிகுமாறு வளப்படுத்தலும், மிக்க பொருளைக் குறைந்த நாடுகட்குக் கொண்டு சேறலும், இல்பொருளை உள்ள நாடுகளினின்று கொணர்தலும் செய்தொழுகுதல். நாட்டிடையே முறைசெய்து அறம் வளர்த்தலும் குறைகடிந்து நிறைவு செய்தலும் இவ்வினைவகையே யாகும்.

இவை யில்வழி மனைவாழ்வும் நாட்டின் பொதுவாழ்வும் நலமெய்தாமையின், இவை குறித்து மனையின் நீங்கிச் செலவு மேற்கோடல் இளமை முதுமை யாகிய இரு காலத்தும் ஆடவர்க்குக் கடனாகும்; மிக்க இளமையும் மிக்க முதுமையும் பொருள் வினைகளைச் செய்தற்கு ஆகாமையின், இடை நின்ற இளமை வளமுடையோர் இவை குறித்துப் பிரிந்தொழுகுவதே இங்கே செலவு என்று குறிக்கப்படுகிறது.

இளமைக்கண் அகவளர்ச்சியினும் புறவளர்ச்சி சிறந்து அழகும் வனப்பும் கொண்டு திகழும். செடி கொடிகட்குத் தளிரும் மலரும் தோன்றும் செவ்வி போல மக்களினத்துக்கு இளமைச் செவ்வி அமைந்துளது. மலரிடத்துத் தோன்றும் மணமும் அழகும் அதன் இனப்பெருக்கத்தைக் குறிக்கொண் டிருப்பது போல இளமைக்கண் தோன்றும் அழகும் காமமும் மக்கள் இனப்பெருக்கத்துக்கு இன்றியமையாதனவாகும். ஏனை யுயிர்கள், இனப்பெருக்கம் கருதித்தோன்றும் மணம் அழகு

முதலியவற்றைத் தம்வரை நிறுத்தி நெறிப்படுத்தும் வன்மை யுடைய வல்ல; மக்களினம் ஒன்றுதான் அவ்வன்மைகைவரப் பெற்றது. அதனுல் அழகு மணம் பரப்பிக் காதலின்பம் நல்கும் காமச்செல்வி மக்கள்பால் வன்மை கொண்டு வயங்குகிறது. மக்களது அறிவு காமக்காதலைத் தன்வழி நிற்கச் செய்து ஒழுகு மிடத்து இன்பமும் பொருளும் அறமும் பெற்றுச் சிறக்கின்றது; மாறுபட்ட விடத்துத் துன்பமும் வறுமையும் தொலையாப் பழியும் கொண்டு துயருறுகிறது.

மக்கள் அறிவைத் தன்னடிப் படுத்திக் கொள்ளும் வன்மை காதற் காமத்துக்கு இல்லையாயின் இனப்பெருக்கம் குன்றும்; ஆயினும், காதற்காமத்தின் வன்மை வணக்க வணங்கி நெறியின் இயங்கும் நீர்மையது. அதன் அவ்வன்மை யுணர்ந்து, மக்கள் அறிவு வன்மையால் அதனை வணக்கி வாழ்வதால் வாழ்வு வளம் பெறுகின்றனர்.

மக்கள் அறிவு உயிர்வளர்ச்சியையும், காதற்காமம் உடல் வளர்ச்சியையும் சார்ந்தவை. கல்வி கேள்வி சூழ்நிலைகளால் உயிர்வளச்சியும் உணவுவகையால் உடல்வளர்ச்சியும் உண்டா கின்றன. உடல்வளர்ச்சியின் உயிர்வளர்ச்சி ஒத்தும் உயர்ந்தும் இருக்குமாயின், உயிரறிவு காதற்காமவுணர்ச்சியைத் தன்வரை நிறுத்தி இன்பமும் சிறப்பும் எய்துகிறது. இந்நிலையில் வளரும் அறிவுக்கும் காதற்காமத்துக்கும் இளமையுள்ளம் போர்க்கள மாகிறது. இங்கே பொருள்வினை பற்றிய கடமை யொருபாலும், காதற்காமம் தரும் உணர்ச்சி ஒருபாலும் உயிரறிவை ஈர்க்கும். கடமைவழிச் செல்லும் உயிரறிவு பெருமையும் தலைமையும் பெறுகிறது. உடல்வன்மையை நோக்க, இளமைக்கண் போதிய உலகியற் பயிற்சி யின்மையால் உயிரறிவு, கல்விகேள்விகளின் துணையின்றிக் காதற்காமத்தின் வன்மையை அடக்கி வணக்கும் திண்மையின்றிச் சாய்ந்தொழிவது பெரும்பான்மை. அதனுல், இளமையை நெறிப்படச் செலுத்திப் பெருமை பெறும் சான்ருேர் உலகில் மிகச்சிலரே உள்ளனர். இக்கருத்தை யுட்கொண்டு திருவள்ளுவர், ‘‘செயற்கரிய செய்வார் பெரியர்’’ என்று தெருட்டி யுரைப்பது நினைவுகூரத்தக்கது.

மக்களுள் தலைமைப் பண்புகளெல்லாம் ஒருங்கு படைத்த ஒருவனும் ஒருத்தியுமாகிய இருவரை[1] நாட்டிக்கொண்டு அவர் உள்ளத்தே காதற்காமமும் கல்விகேள்விகளின் துணையை நன்கு பெற்ற உயிரறிவும் ஆற்றும் போர்வகையினை அகனைந்திணை யொழுக்கம் என்ற பெயரால் பண்டைத் தமிழாசிரியன்மார் புலனெறி வழக்கம் செய்துள்ளனர்.

தலைமைப்பண்புடைய தலைமகன் ஒருவன் மனைவாழ்க்கையில் மேலே கூறிய பொருள்வினை குறித்து மனையின் நீங்கிப் பிரிந்து செல்லவேண்டிய கடமை யுடையனாகின்றான். அவற்றின்மேற் சென்ற உள்ளத்தைக் காதற்காமம் தாக்கி அவன் மேற்கொண்ட பிரிவைக் கையொழியுமாறு முயல்கிறது. அவ்வாறே தலைமகள் உள்ளத்தையும் தலைமகன் பிரிவுக்கு உடன்படாதவாறு செய்ய முற்படுகிறது. இருவரும் தம்தலைமைப்பண்பால் அதனைவென்று மேன்மையுறுவது பொருளாக நெஞ்சினோடும் தோழியோடும் சொல்லாடுவர். வில்வணக்கம் பகையை வீழ்த்துவது குறிப்பது போல, இருவரிடத்தும் தொடக்கத்தில் காதற்காமக் கிளர்ச்சிக்கு உயிரறிவு வணங்கியது போன்ற சொற்கள் வெளிவரும். தலைவனினும் தலைவிபால் உயிரறிவு மென்மை மிக்கதுபோல் நின்று ஆற்றாமை யுணர்த்தும் சொல்லும் செயலும் தோற்று வித்துத் தலைமகன் உள்ளத்தில் எழும் காமக்கிளர்ச்சியைத் தூண்டி, செலவின் மேற்சென்ற அவனது திண்மையைச் சிதைக்க முயலும். சிதையா வுள்ளம் படைத்த அச்செம்மல், சிதைந்தான் போல் வருந்துமாறு செய்வது செலவழுங்கு வித்தல் எனப்படும். இதுபற்றியே ஆசிரியர், ''செலவிடை அழுங்கல் செல்லாமை யன்று'' என்றும், அவன் ஆற்றத் தகுவனவற்றை நன்கு வற்புறுத்திவிட்டுச் செல்வன் என்பார், "வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்[2]'' என்றும் கூறுவாராயினர்.

301. மால்வெள் ளோத்திரத்து மையில் வாலிணர்
அருஞ்சுரஞ் செல்வோர் சென்னிக் கூட்டும்
அவ்வரை யிறக்குவை யாயின்
மைவரை நாட வருந்துவள் பெரிதே.

---

1. Ideal man and woman 2. தொல். பொ. 185.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்குச் சொல்லியது.

ப. உரை: வெள்ளிலோத்திரத்துக் குளிர்ச்சியையுடைய மலரை ஆற்றின் வெம்மை தீரச் செல்வோர் அணிந்து செல்வர் என்றுழி வெம்மை கூறியவாறாயிற்று.

உரை : கருமுகில் தவழும் மலைநாடனே, பெரிய வெள்ளிய ஓத்திரத்தின் குற்றமில்லாத வெண்மையான பூங்கொத்தினைக் கடத்தற் கரிதாகிய பாலைநிலத்திற் செல்வோர் தம் தலையில் அணிந்து கொள்ளும் அழகிய மலையைக் கடந்து செல்குவையாயின், இவள் பெரிதும் வருந்துவள், காண் எ. று.

ஒத்திரம், வெள்ளிலவு என்றும், வெள்ளிலோத்திரம் என்றும் வழங்கும்; இஃது ஒருவகை மரம்; முரம்பு நிலக்காடுகளில் வளர்வது. ஓத்திரமரம் வழவழப்பான வெண்மையான பட்டை மூடி நெடிது உயர்ந்து வளரும் மரமாதலால் மால் வெள்ளோத்திரம் என்றார். இலவமரத்தின் வகையாதல் பற்றிப் பிற்காலத்தார் இதனை வெள்ளிலோத்திரம் என வழங்குவாராயினர். இதன் பூ வெண்ணிறமும் நறுமணமும் உடையது. இதன் உதிர்ந்த பூக்களை அரைத்துச் சாந்து செய்து அணிவதும், இவற்றால் தொடுக்கப்பட்ட மாலையைச் சிறப்புற அணிந்து கொள்வதும் பண்டை வழக்கு. "வாச முண்ட மாருதம் வண்டு பாட மாடவாய், விச வெள்ளி லோத்திரப் பொதும்பர் பாய்ந்து விம்முமே[1]" என்றும், வெள்ளி லோத்திரத்தின் பூம்பொருக் கரைத்த சாந்தின், காசறு குவளைக்காமரகவிதழ் பயில மாட்டி[2]" என்றும், வெள்ளி லோத்திரம் விளங்கும் வெண்மலர்க், கள்செய் மாலையர்[3]" என்றும் வருவனவற்றா லுணர்க.

மிகவும் வெண்மையாக இருப்பது தோன்ற மையில்வாலிணர் எனப்பட்டது. இதன் பூங்கொத்துக்களை வெயில் வெம்மை தாக்காமைப் பொருட்டு வழிச்சொல்வோர் தலையில் சூடிக்கொள்வது கண்டு, அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும் என்றார்.

---

1. சூளா. இரத. 16. 2. சீவக. 622. 3. சீவக. 2685.

கற்புகாலத்தில் மனையிலிருந்து மாண்புறும் தலைமகன் பொருள் குறித்துப் பிரியும் கடமையுடையனாகித் தன்கருத்தைத் தலைமகட்குத் தெரிவிக்குமாற்றால் தோழிபால் உரைத்தானாக, அவன் பிரிவைத் தலைமகள் ஆற்றாள் என்பது பற்றி அவனைச் செலவழுங் குவிக்கலுற்று, இம்மலை நாட்டில் வாழ்பவர் ஒரு கால் ஆண்டுத் தோன்றும் மலைக்குச் செல்வராயின், இடையில் கிடக்கும் நிலம் சுரமாதலின், அதன் வெம்மைக்கு ஆற்றாது வெள்ளோத் திரத்தைத் தலையிற் சூடிக்கொள்வர் என்பாள், வெள்ளோதிரத்து வாலிணரை அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும் அவ்வரை என்றும், அம்மலைக்கு நீ செல்லினும் பொருத தலைமகள், அவ்வரையை இறந்து செல்குவையாயின் ஆற்றாது மிகவும் வருந்துவளாதலால் நீ மேற்கொண்ட செலவினைத் தவிர்க என்பாள், அவ்வரை இறக்குவை யாயின் வருந்துவள் பெரிதே என்றும் கூறினாள். கண்ணிற் காணத் தோன்றுதலுடைமை பற்றி, அவ்வரை என்றாள் என அறிக.

நீ பிரியக் கருதும் காலம் பனிநாளை முற்கொண்டு நிற்றலின், நின் பிரிவின்கண் எய்தும் பனிநாட்களையும் அதனோடு வரும் வாடையினையும் ஆற்றாது தலைமகள் மிகவும் வருந்துவாள் என்றற்கு மைவரை நாட என்றாள். "தண்ணென ஆடிய இளமழைப் பின்றை வாடையும் கண்டிரோ வந்துநின் றதுவே"[1] எனப் பிருண்டும் தோழி செலவு அழுங்குவித்தமை காண்க. (301

302. அரும்பொருள் செய்வினை தப்பற்கு முரித்தே
பெருந்தோ ளரிவை தகைத்தற்கு முரியள்
செல்லா யாயினோ நன்றே
மெல்லம் புலப்ப விவளழப் பிரிந்தே.

இது பொருள்வயிற் பிரியுந் தலைமகன் பிரிவுடன்படுத்த வேண்டும் என்றானாக அவற்குத் தோழி சொல்லியது.

உரை : மெல்லம் புலம்ப, பெறுதற் கரிய பொருள் செய்தற்கு நீ செய்யும் வினை முற்றுதலின்றித் தவறுதலுமுரித்து; பெரிய

1. நற். 229.

தோளினையுடைய அரிவையாவாள் நின் பிரிவுக்கு உடன்படாது தடுத்தற்கு முரியள் ; ஆகலான், இவள் நின் பிரிவாற்ருது வருந்த நீ பிரிந்து செல்லாதொழியின் நன்ருகும் எ. று.

பொருளினது அருமையும் இன்றியமையாமையும் வற்புறுத்தற்கு அரும்பொருள் என்றும் செய்வினை என்றும் தலைவன் வற்புறுத்தினு னுகலின், அப்பெற்றித் தாயினும், அது கருதியவாறு கைகூடாது ஒழிதற்கும் உரியதென அதனைப் பழித்து, அரும்பொருள் செய்வினை தப்பற்கும் உரித்து என்று கொண் டெடுத்து மொழிந்தாள். ''நல்லவையெல்லாம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு[1] என்று சான்ருேர் கூறுவது காண்க. பேரறிவும் பிரிவாற்றும் மதுகையும் உடையளாதலின் அவட்கு நீ தக்காங்கு உரைத்தல்வேண்டும் என்பான், பெருந்தோள் அரிவை என்ரு னுகலின், அதனையே கொண்டெடுத்து, அப் பேரறிவும் மதுகையுமே கொண்டு பொருளின் நிலை பேறின்மை சுட்டி உடன்படாது மறுக்கவும் வல்லள் என்பாளாய்த் தோழி, பெருந்தோள் அரிவை தகைத்தற்கும் உரியள் என்ருள். இனி, சொல்லின் பிரிவில்லையாம் எனக் கருதிச் சொல்லாது பிரிகுவை யேல், இவள் ஆற்ருது அழுவதே பொருளாகக் கொள்வள்; இவ்வாறு இவள் அழஅழப் பிரிந்து சேறல் நினக்கு நன்றன்று என்பாள், இவள் அழப் பிரிந்து செல்லாயாயினேோ நன்று என்ருள். யாம் தமக்கு ஒல்லேம் என்ற தப்பற்குச் சொல்லா தேகல் வல்லுவோரே[2]'' என்றதனுல் சொல்லாது ஏகலும் உண்டென அறிக.

பிரிவுரைக்கும் தலைமகனை, மெல்லம் புலம்ப என்று தோழி கூறியது, சொல்லாதேகும் வன்கண்மையை மேற்கொண்டு செல்லுதல் வேண்டா எனத் தான் செலவழுங்குவிக்கும் செயலை முடித்தற்கு. (302)

தப்பற்கும் உரியள் என்ற பாடம் பொருட்பேறின்று.

---

1. குறள். 375. 2. குறுந். 79.

303. புதுக்கலத் தன்ன கனிய வாலம்[1]
போகி றடுக்கும் வேனி லருஞ்சுரம்
தண்ணிய வினிய வாக
எம்மொடுஞ் சென்மோ விடலை நீயே.

இது சுரத்தருமை கூறி உடன்செலவு மறுக்கும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

உரை : தலைவ, புதிய மட்கலத்தைப் போலும் நிறம் பொருந்திய பழங்களையுடைய ஆலமரம் தன்னை யடைந்த புள்ளினம் தன்னிற் பிரிந்து செல்லாவகைத் தடுக்கும் வேனிலின் வெப்பம் மிக்க அரிய காடுகள் தண்மையும் இனிமையு முடையவாக நீ எம்மையும் உடன்கொண்டு செல்வாயாக எ. று.

தண்ணிய இனியவாக எம்மொடும் சென்மோ என்ருளாயினும், எம்மொடும் செல்லின், தண்ணியவும் இனியவுமாம் என்பது கருத்தாகக் கொள்க. போகில், பறவை. ''பருத்திப், பொதிவயிற் றிளங்காய் பேடை யூட்டிப், போகில் பிளந்திட்ட பொங்கர் வெண்காழ், நல்கூர் பெண்டிர் அல்குற் கூட்டும்[2]'' என்பதனுலும், ''வேனில் அரையத் திலையொலி வெரீஇப், போகில் புகா வுண்ணுது[3]'' என்று பிருண்டும் கூறுதலாலு மறிக. வேனில் வெப்பத்தால் உழந்த தாம் கனியும் தண்ணிய உறையுளும் பெற்றமையின் ஆலமரத்தினைப் புள்ளினம் நீங்கா துறையு மாயினும், அதற்குக்காரணமாதல் நோக்கி ஆலம் போகில் தடுக்கும் என்ருர். வேனில் வெப்பத்திற் காற்ருது உயங்கிப் போதரும் புள்ளுக்குக் கனியும் நிழலும் தந்து காத்தலின், கனிய ஆலம் போகில் தடுக்கும் என்ரு ரென்று மாம். மோ, முன்னிலை யசை. விடலை, திணைப்பெயர்.

1. ஆலம்பழம் புதுமட்கலம் போலும் என்ற இதனைத் திருத்தக்கதேவர், ''புதுக்கலம் போலும் பூங்கனியாலம்'' (சீவக. 2108) என்று தமது நூலில் அமைத்துப் பாடியிருத்தல் காண்க.
2. அகம். 129. 3. ஐங். 352.

வேனில் வெம்மையும் சுரநெறிகளின் இன்னுமையும் கூறி உடன்செல்லுதல் ஆகாதெனத் தலைமகன் உரைத்தானுக, உள்ளுறையால் அவை இலவாதல் கூறலின், அருஞ்சுரம் தண்ணிய இனிய வாக என்றும், ஆகவே தம்மையும் உடன்கொண்டு செல்லுதல் தீதன்று என்றற்கு எம்மொடும் சென்மோ என்றும் கூறினுள். எனவே, நீ இல்வழி எமக்கு இம்மனை இனிதாகாது என்ரு ளாயிற்று ; பிருண்டும், "பெருங்காடு இன்ன என்றிராயின் இனியவோ பெரும தமியேற்கு மனையே[1]" என வருவது காண்க.

வேனில் வெம்மைக்கு ஆற்ருது வரும் புள்ளின்ங்கட்கு ஆலம் தண்ணிய நிழலும் இனிய கனியும் உதவுமாறு போல எமக்கு நின் கூட்டத்தாலும் உடனுறைவாலும் சுரம் இனியவும் தண்ணியவுமாம் என உள்ளுறை கொள்க. வெஞ்சுரத்து அரிய வழிகளைச் செல்வதற்கு மகளிர் ஆற்ருராகலின், இதனுல் தலைமகன் செல வழுங்குதல் பயனுயிற்று. (303)

304. கல்லாக் கோவலர் கோலிற் ருெட்ட
ஆனீர்ப் பத்தல் யானை வெளவும்
கல்லதர்க் கவலை செல்லின் மெல்லியற்
புயனெடுங் கூந்தல் புலம்பும்
வயமான் ருேன்றல் வல்லா தீமே.

இது பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

ப. உரை: வல்லாதீமே என்றது எல்லாம் வல்லாயாயினும் இது மாட்டாயாதற்கு மேற்பட்ட தலைமை யில்லை எ. று.

உரை: வலிமிக்க குதிரையினையுடைய தலைவனே, கல்வி யில்லாத கோவலர்கள் தம் கைக்கோலால் தோண்டிய ஆனீர் நிறைந்த பள்ளத்தை யானைகள் வெளவும் கற்கள் பொருந்திய கவர்த்த வழியை நீ சென்ருல், மெல்லிய இயல்பினையுடைய இவள் புலம்புற்று வருந்துவா ளாகலின் நீ செல்லுதல் வல்லையல்லை யாகுக, எ.று.

---

1. குறுந். 124.

கல்வி, தொழிற் குரிய பயிற்சி மேற்று. ஏறுடை யினநிறை கட்கு நீர் பெறுதல் வேண்டிப் பள்ளங்கள் தோண்டுதல் கோவலர்க்கு மரபாகலின், கோவலர் கோலில் தொட்ட ஆனீர்ப்பத்தல் என்ருர். ஆனீர், ஆனிரைக்குரிய நீர். பத்தல், பள்ளம். கல்லாக் கோவல ராதலின கணிச்சி கொண்டு தோண்டற் குரிய பத்தலைக் கோல் கொண்டு தோண்டுவா ராயினர் என அறிக.

வன்னில மாதலால் எளிதில் தோண்டக் கூடாமை பற்றிக் கோவலர் நீர் வறண்ட பள்ளங்களினிடத்தே இக் குழிகளைத் தோண்டுதலின், தொட்ட பத்தல் என்றும், அதுவும் ஆனீரைகட்காக எடுத்த தென்றற்கு ஆனீர்ப் பத்தல் என்றும், வெயில் வெம்மை யால் வேட்கை மிக்கு வரும் களிற்றினம் நீர் அருமை குறித்துப் பிறவினங்களை வெருட்டிவிட்டுத் தாமே சூழ்ந்திருந்து உண்டலின் யானை வெளவும் என்றும் கூறினர். “நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய, கொடுவாய்ப் பத்தல்[1]” எனவும், “பயநிரைக் கெடுத்த மணிநீர்ப் பத்தல்[2]” எனவும், “ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல், யானையினநிரை கவரும்[3]” எனவும் சான்றோர் கூறுவது காண்க.

குதிரை இவர்ந்து செல்வது பற்றி வயமான் தோன்றல் என்றும், அதற்கும் செலவு அரிய வழி என்றற்கு, கல்லதர்க் கவலை என்றும், நின் செலவைத் தலைமகட்கு யான் சொல்லப் புகின் அவள் என்னைப் பார்த்தலும் செய்யாள் என்றற்கு, புயல் நெடுங் கூந்தல் என்றும்' பிரிந்தால் சிறிதும் ஆற்ருது வேறுபடும் திறத்தை உள்ளுறைக்கண் கூறலின், மெல்லியல் என்றும், மெல்லியோர் புலம்ப ஒரு செயலை வல்லுநர் செய்வது வன்மை யாகாது என்பால் வல்லாதீமே என்றும் கூறினுள்.

கோவலர் நிரைகளின் பொருட்டுத் தோண்டிய பத்தலை யானை வெளவும் என்றமையான், நீ நுகர்தற் குரித்தாய்ச் சிறந்த இவள் நலம் பசலை யுணப்பட்டுக் கழியும் என்ருளாம். “கன்றும் உண்ணுது கலத்தினும் படாது, நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு, எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது, பசலை

---

1. அகம். 155. 2. நற். 92. 3. ஷை. 240.

புணரிஇய வேண்டும், திதலை யல்குலெம் மாமைக் கவினே[1]"
என்று பிரண்டு வெளிப்படக் கூறப்படுவது காண்க.

கூவல் தோண்டிய என்றும் பாடமுண்டு; கல்லாக் கோவலர் என்றது நோக்க இப்பாடம் பொருட் சிறப்பெய்தாமை உணர்க. (304)

305. களிறு பிடிதழீஇப் பிறபுலம் படராது
பசிதின வருந்தும் பைதறு குன்றத்துச்
சுடர்தொடிக் குறுமக ளினைய
எனைப்பயஞ் செய்யுமோ விடலைநின் செலவே.

இஃது உடன்போக் கொழித்துத் தனித்துச் செல்வல் என்ற தலைமகற்குத் தோழி கூறியது.

ப. உரை: களிறுபிடி... வருந்தும் என்றது நீ அவற்றைக் கண்டால் செல்லாய் என்பதாம்.

உரை: தலைவ, களிற்றியானை தன் பிடியானையைத் தழுவி, வேனில் வெப்பம் தெறுதலால் உணவொன்றும் பெறலாகாமையின், அது பெறலாகும் வேறு புலங்களை முன்னிச் செல்லுதலும் செய்யாது, பசிப்பிணி வருத்த வருந்தி உயங்கும், பசுமையற்ற குன்றத்துக்கு, ஒளிவிடும் வளை யணிந்த இளையவளாகிய இவள் நின் பிரிவாற்றாது அழுது புலம்ப, இவளை நீங்கிச் செல்லும் நின் செலவு யாது பயனைச்செய்யும்? கூறுக, எ. று.

களிறு வேனில் வெம்மைக்கு ஆற்று தாயினும், தான் தழுவி நிற்கும் பிடியானை உடன்வர மாட்டாமையின், அதனைத் தனிப்ப விடுத்துச் சேறற்கு அஞ்சிப் பிற புலம் படராது என்றும், தோன்றி நிலவும் சிறுபொழுதையன்றிப் பிரிவுத்துன்பம் போல் நினைவின் கண் நின்று நினைத்தொறும் துன்பம் பயவாமையின், அதனை ஆற்றியிருக்கு மென்பாள், பசிதின வருந்தும் என்றும், வெம்மை யால் பசுமையின்றிப் புற்கள் கரிந்தமையின், பைதறு குன்றம் என்றும் கூறுப. பைது, பசுமை.

---

1. குறுந். 27.

தனக்கு உரியார் அழுது புலம்பத் தான் பிரிந்து சென்று செய்யும் பொருள் நன்ருகாது என்பாள், எனைப் பயம் செய்யுமோ என்றும், பிரிந்தவழித் தலைமகட் குளவாகும் மேனி வேறுபாடும் அவலமும் நோக்கி இரங்குவாள் குறிப்புமொழியால். சுடர்த் தொடி என்றும், அவளிடத்து நுகரப்படும் இன்பம் சிறத்தற் கேதுவாகிய இளமை நில்லாது கழியும் என்பாள், குறுமகள் என்றும் கூறினுள், வெளிப்பட மொழிதல் செந்நெறியன்மையின்.

பிடி தழீஇய களிறு உணவின்றிப் பசியால் வருந்திவாயினும் தன்கட் பிரிவு நிகழாவாறு முயலும் என்றது, அத்துணை அன்பினை யுணர்த்தும் குன்றத்துக்குச் செல்லின், நீயும் இவளை நினைந்து அன்பு நெருக்குதலால் வருந்துவை யாதலின் நீ செய்யும் வினை பயன் தாராது எனச் செலவழுங்குவித்தவாறு. (305)

306. வெல்போர்க் குரிசில்நீ வியன்சுர னிறப்பின்
பல்கா ழல்கு லவ்வரி வாடக்
குழலினு மினைகுவள் பெரிதே
விழவொலி கூந்தன் மாஅ யோளே.

இது பிரியும் தலைமகற்குத் தோழி தலைமகள் பிரிவாற்ருமை கூறியது.

உரை: வெல்லுகின்ற போரையுடைய தலைவ ணுகிய நீ அகன்ற காட்டிடத்தைக் கடந்து செல்லின், பலவாகிய மணிகள் கோத்த மேகலை யணிந்த அல்குலிடத்து அழகிய வரிகள் வாட்டம் எய்த நின் பிரிவாற்ருமையால் மணவிழாவிற் போல நறுமணம் கமழும் கூந்தலையும் மாமைநிறத்தையு முடைய இவள் குழல் ஒலிப்பது போல் மிகவும் அழாநிற்பள் எ. று.

நிகழும் போர் எல்லாவற்றினும் வெற்றியே பெறுவதுபற்றி வெல்போர்க் குரிசில் என்ப. "வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ[1]" என்ருற்போல. வியன் சுரன், விரிந்த பாலைநிலத்து வழி. காழ், மணிகள்; முத்து வடமுமாம். வளவிய மகளிருடைய

1. முருகு. 258.

வயிற்றிலும் குறங்கிலும் விளங்கும் வரிகள் ஆங்குக் கிடந்து அழகு செய்தலின் அவ்வரி எனப்படும். இன்பக்காலத்து எழில் செய்யும் இவை துன்பக்காலத்து மேனி வாட்டத்தால் தோல்சுருங்கும் போதுமறையும். அல்குல்[1], இடைக்கும் முழந்தாளுக்கும் இடையிலுள்ள உடற்பகுதி. ஈண்டு அணியப்படும் மேகலை அல்குல் எனப்பட்டது. அல்குலிடத்து மேகலை அணிப வாகலின் பல்காழல்குல் எனப்பட்டது. ''பல்காசு நிரைத்த சில்காழல்குல்[2]'' என்றார் பிறரும். ''அல்கு லவ்வரி வாடத் துறந்தோர்[3]'' என்றும், ''திதலை யல்குல் அவ்வரி வாடவும், அத்தம ரழுவ நத்துறந் தருளார்[4]'' என்றும் சான்றோர் கூறுதலால் அல்குலிடத்து வரியுண்மையும், அது பிரிவு நிகழ்ந்துழி வாட்டமெய்தலும் அறிக. மகளிர் அழுகுரற்குக் குழலை யுவமித்தல் மரபு. ''குழல் இனைவது போல அழுதனள் பெரிதே[5]'' என்ப; குழல் எனப் பொதுப்படக் கூறினும் அழுகையொலிக்குச் சிறந்த ஆம்பற்குழல் கொள்ளப் படும்; ''இயவரூதும், ஆம்பலங் குழலினேங்கிக் கலங்கஞுருறு வோள்[6]'' என்பது காண்க.

விழவொலி கூந்தல், விழாக்காலத்திற் போல நறுமணம் தழைத்துக் கமழும் கூந்தல். விழா, ஈண்டுச் சிறப்புடைய திருமணத்தின்மேற்று. ''வதுவை மகளிர் கூந்தல் கமழ்கொள[7]'' ''வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால்[8]'' என்றும், பல்வகைப் பூக்கள் மலர்ந்து மணம் கமழும் கானத்தை, ''மணமனை கமழும் கானம்[9]'' என்றும் உரைப்பது காண்க. மாயோள், மாமைநிற முடையவள்.

---

1. பழந்தமிழ் நூல்கள் கிடைப்பது அருமையாயினமையின், இடைக் காலத்தார் இதற்குப் பிழைபொருள் கற்பித்துப் பேதுற்றனர். இது பெரும்பாலும் மகளிர்க்குரைக்கப் படுமாயினும் சிறுபான்மை ஆடவர்க்கும் வழங்கும். ''கொள்வீர் அல்குல் ஓர் கோவணம்'' (ஞானசம். 54:3) என்பது காண்க.

2. முருகு. 16. 3. குறுந. 180. 4. அகம். 183.
5. புறம். 143. 6. நற். 113. 7. அகம். 378.
8. மலைபடு 30. 9. அகம். 107.

நீ செல்வுழியெல்லாம் ஊறின்றி வென்றி யெய்தும் பேராண்மை யுடையை யென்பதை அறிந்துள ளாயினும், நின் பிரிவாற்றும் மதுகை யிலள் என்றற்கு, வெல்போர்க் குரிசில் என்ருள். உண்டியிற் குறைந்து உடம்பு நனி சுருங்கி வேறுபடுவள் என்றற்கு அல்குல் அவ்வரி வாட என்றும், கேட்கும் மாவும் புள்ளும் மனங்கரைந்து உருகுமாறு இசைக்கும் குழலொலியினும் இவளது அழுகை யொலி, கேட்பார்க்கு அவள்பால் இரக்கமே யன்றிப் பிரிவும் நின்பால் பழியும் தோற்றுவிக்கும் என்பாள், குழலினும் இனைகுவள் என்றும், நீ மீளுங்காறும் தன் கூந்தலிற் பூச்சூடாள் என்பது குறிப்பித்து விழவொலி கூந்தல் என்றும் எண்ணிக் கூறினுள். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்ருமை.

இதனுள் குழலினும் இரங்குவள் என்று பிரிந்தவள் இரங்குதற் பொருள்படத் தோழி தலைவரும் விழுமம் தலைவற்குக் கூறினுள் என்பர் நச்சினுர்க்கினியர்[1]. (306)

307. ஞெலிகழை முழங்கழல் வயமா வெரூஉம்
குன்றுடை யருஞ்சுரஞ் செலவயர்ந் தனையே
நன்றில கொண்கநின் பொருளே
பாவை யன்னநின் றுணைப்பிரிந்து வருமே.

இது பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் அதன் சிறப்புக் கூறியவழித் தோழி அதனை இழித்துக் கூறியது.

உரை: மூங்கிலாற் கடையப்பட்ட கழையிடத்து எழுந்த முழங்குகின்ற நெருப்பினை வலியினையுடைய புலிகள் அஞ்சியோடும் அரிய காடுகள் பலவும் கடந்து பொருள் செய்வான் சேறல் மேற் கொண்டனை; கொண்கனே. பாவைபோலும் நின்னுடைய துணைவி யைப் பிரிந்து செயின் அல்லது வாராதாகலான், நின் பொருள்பால் அறம் இல்லை, காண்; அவளொடு கூடிச் செய்வதே பொருளாக லின், நீ செலவொழிக, எ. று.

---

1. தொல். பொ. 39.

ஞெலிகழையும் முழங்கழலும் வினைத்தொகை. வெயில் வெம்மை யால் மூங்கில்கள் தம்மில் இழையப் பிறந்த அழல் மலையெங்கும் பரந்து முழங்குதலின் ஞெலிகழை முழங்கழல் எனப்பட்டது; பிறரும், ''கனைகதிர் தெறுதலின் கடுத்தெழுந்த காம்புத்தீ, மலை பரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்கழல்[1]'' என்பது காண்க. பொருள் நன்றில, துணைப்பிரிந்து வருமாகலான் என இயையும். அவளொடு கூடி என்பது முதலாயின குறிப்பெச்சம். மழை பெய்து குளம் நிறைந்தது என்றாற்போலப் பிரிந்து என்றது காரணப் பொருளில் வந்தது

துணைவியொடு கூடி அறத்தாற்றிற் செய்யும் பொருள் போலாது, அவள் துன்புற்று வருந்தச் செய்யப்படுதலின், நன்றில கொண்க நின் பொருளே என்றும், நன்றும் தீதுமாகிய இருவழி யானும் செய்யப்பட்டு நிலைபேறின்றிக் கழியும் பொருள் போலாது, திருநல வுருவின்மாயா இயற்கைய ளென்பாள், பாவை யன்ன நின் துணை யென்றும் கூறினாள். பாவை அன்ன இயல்பு, ''கால்பொரு திடிப்பினும் கதழுறை கடுகினும், உருமுடன் றெரியினும் ஊறு பல தோன்றினும், பெருநிலம் கிளரினும் திருநல வுருவின், மாயா வியற்கைப் பாவை[2]'' என்பதனால் அறிக.

''கடம் இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ, வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள், தடமென்றோள் பிரியாமை பொருளாயின் அல்லதை[3]'' என்றும், ''வருவிருந் தோம்பித் தன்னகர் விழையக்கூடின், இன்னுறல் வியன்மார்ப அதுமன் நும் பொருளே[4]'' என்றும் வருதல் கொண்டு துணைவி யொடு கூடிச் செய்தல் பொருளாதல் கொள்க.

ஞெலிகழை யிடத்துப் பிறந்த முழங்கழல் கண்டு வயமா வெரூஉம் என்றது. அன்பொடு புணர்ந்த நும் இன்பவாழ்வில் தோன்றிய இப்பொருட்பிரிவு கண்டு யாம் அஞ்சுகின்றேம் என்ற வாறு. (307)

1. கலி. 150. 2. நற். 201.
3. கலி. 2. 4. கலி. 8.

308. பல்லிருங் கூந்தன் மெல்லிய லோள்வயின்
பிரியா யாயினு நன்றே விரியிணர்க்
காலெறு ழொள்வீ தாஅய
முருகமர் மாமலைப் பிரிந்தெனப் பிரிமே.

இது, ''பிரிவல்'' என்ற தலைமகற்குத் தோழி, ''பிரியா தொழியப் பெறின் நன்று ; பிரிவை யாயின் இம் மாமலை இப் பருவத்து எங்களை விட்டுப் பிரிந்தாற் பிரிக'' எனச் சொல்லியது.

உரை : பலவாகிய கரிய கூந்தலையும் மெல்லிய இயல்பினையு முடைய தலைமகளைப் பிரியா தொழிகுவையாயின் நன்று ; பிரிவதே பொருளாயின், விரிந்த கொத்துக்கள் பொருந்திய வலிய காலை யுடைய எறுழமரத்தின் ஒள்ளிய பூக்கள் பரந்த முருகன் விரும்பும் இப்பெரிய மலையிடத்து இப்பருவத்தே எங்களை விட்டுப் பிரிக எ. று.

கரிய நீண்ட மயிர்த்திரளாதல் பற்றிக் கூந்தல் பல்லிருங் கூந்தல் எனச் சிறப்பிக்கப்பட்டது. ''பல்லிருங் கூந்தல் பசப்பு நீவிடின்[1]'' எனப்பிறரும் கூறுதல் காண்க. உம்மை, எச்சப் பொருட்டு. கால் எனப் பொதுப்படக் கூறினமையின் வன்மை கொள்ளப்பட்டது. கால், அடிப்பகுதி. ''கருங்கால் வேங்கை[2]'' ''செங்காற் பலவு[3]'' என்றாற்போல. எறுழ், எறுழமரம் ; இதன் பூ நெருப்புப் போலும் நிறமுடைமை பற்றி ''எரிபுரை எறுழம்[4]'' எனச் சான்றோர் சிறப்பித்துரைக்கின்றனர். ஒள்வீ தாஅய மலை, முருகமர் மலை என இயையும். பிரியின் எனற்பாலது பிரிந்தென எனத் திரிந்தது. ''வினையெஞ்சு கிளவியும் வேறு பல் குறிய[5]'' என்பது தொல்காப்பியம். பிரிமே என்பது ''அட்டி லோலை தொட்டனை நின்மே[6]'' என்றாற்போல முன்னிலைக்கண் வந்தது. முருகமர் மலை யென்றார், முருகன் மலையுறை கடவுளாதலின். எறுழ் வீ தாஅய முருகு அமர்மலை என இயைத்து எறழம்பூவின் மணங்கமழும் மலை யென்றுமாம்.

---

1. ஐங். 429. 2. அகம். 345. 3. நற். 232.
4. குறிஞ். 66. 5. தொல்.சொல்.நச்சி. 457. 6. நற். 300.

செலவுக் கருத்துணர்ந்து அழுங்குவிக்கும் செயலினளாதலின் தோழி செல்லா யாயினும் நன்று என்றாள். செல்லாவழிப் பிரிவும், அது வாயிலாகத் தலைமகட்கு வருத்தமும் இல்லையாதலின் மெல்லியலோள் வயின் செல்லாயாயின் நன்றே என்பா ளாயினள். பிரிதலே பொருளாயின், இம்மலையிடத்து இவ்வேனிற் பருவம் நீங்காவாறு செய்து அதன்கண்ணே எம்மை இருத்திச் செல்க என்பாள், பிரிந்தென இம்மாமலைப் பிரிமே என்றாள். எறுழம் பூப்பது வேனிற்பருவத்தே யாகலின், அதன் ஒள்வீ தாய மலை எனக் கூறியது, மலையிடத்து வேனிற்பருவம் நின்றமை குறித்தவா றாயிற்று. வேனிற்பருவம் நிலைபெறின்றிக் கழிவதாகலின், அதன் கண் தலைமகளை நீங்காவாறு இருத்திப் பிரிவது கூடாமையின், தோழி பிரிமே என்றது, செல்லற்க என்று செலவழுங்குவித்ததாம்.

ஒள்வீ தாய மாமலை யென்று ஒழியாது முருகமர் மாமலை என்றது, அன்பின்றிப் பிரிந்தார் மலை பூத்தல் கூடாதென்றும், பிரியேன் என்று சொல்லி மணந்து பின் பிரிவாரை முருகக்கடவுள் தெறும் என்றும் கொண்டு தலைமகள் வேறுபட்டு வருந்துவள் என்பது சுட்டி நின்றது. (308)

309. வேனிற் றிங்கள் வெஞ்சுர மிறந்து
செலவயர்ந் தனையால் நீயே நன்றும்
நின்னயந் துறைவி கடுஞ்சூற் சிறுவன்
முறுவல் காண்டலி னினிதோ
இறுவரை நாடநீ யிறந்துசெய் பொருளே.

இது பொருள்வயிற் பிரிவல் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

உரை: முறிந்த மலைப்பக்கத்தையுடைய நாடனே, நீ வேனிற் பருவத்தின்கண் வெவ்விய சுரத்தைக் கடந்து பொருள்வயிற் பிரியக் கருதினை யாயின், நீ பிரிந்து செய்யும் அப்பொருள், நின்னைப் பெரிதும் விரும்பி யுறையும் இவளுடைய முதற்சூலில் தோன்றிப் பிறந்த சிறுவனுடைய இளநகையைக் காண்டலாற் பெறலாகும் இன்பத்தினும் இனிதாமோ, கூறுக, எ. று.

திங்கள், ஈண்டுப் பருவத்தின் மேற்று; கோடைத் திங்களும் பனிப்போள்[1]'' என்புழிப் போல. வேனிற்றிங்களில் சுரம் ''காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலைதேம்பிக் கூவல்மாறி நீரும் நிழலும் இன்றி நிலம் பயந்துறந்து புள்ளும் மாவும்'' புலம்புறக் கிடத்தலின் வெஞ்சுரம் என்ருர். நன்று என்னும் உரிச்சொல் மிகுதிப்பொருட்டு; 'நன்று பெரிதாகும்[2]'' கடுஞ்சூல், தலைச்சூல்; ''கடுஞ்சூல் மகளிர்[3]'' புதுமைப் பொருட்டாய கடி யென்னும் உரிச்சொல் திரிந்து கடுஞ்சூல் என வந்தது. இறுவரை, கற்கள் முறிந்து சரிந்து கிடக்கும் பக்கத்தை யுடைய மலை. ''இருங்கல் லிகுப்பத்து இறுவரை[4]'' என்பது காண்க. சரிவின்றி நெட்டாக உயர்ந்திருக்கும் மலையும் இறு வரை எனப்படும்; ''இறுவரை புரையு மாறு இருகரை யேமத்து[5]'' என்பதன் உரைகாண்க.

மகன் பிறந்த பின்னும் கணவன்பால் அன்பு பெருகி நிற்கும் கற்புக்கடனை வியந்து நன்றும் நின் நயந்துறைவி என்று தலைமகளை விதந்து கூறினுள். தலைச்சூலிற் பிறந்த முதல் மகன்பால் பெற்ருேர்க்குப் பேரன்பு நிகழ்தல் கண்டு கடுஞ்சூற் சிறுவன் என்றும், மக்களின் சொற்கேட்டல் செவிக்கின்பமும், மெய்தீண்டல் உடற்கின்பமும் தருதல் போல இளநகை காண்டல் கட்கின்பம் பயத்தலின் முறுவல் காண்டலின் என்றும், நீ இறந்துசெய்யும் பொருள், நினக்கே யாகாது, நின் பெற்ருேரை நோக்கி, நின் நல்வினையாலே அவர்பாற் சேறலின், நினக்கேயாய் நின் மகன் செய்யும் பொருள்போல் நீ செய்யும் பொருள் சிறந்த தன்மையின், பொருள் முறுவல் காண்டலின் இனிதோ என்றும் கூறினுள். ''தம்பொரு ளென்ப தம் மக்கள், அவர்பொருள் தந்தம் வினை யான் வரும்[6]'' என்பதனுல் மக்கள் சிறந்த பொருளாதல் அறிக. இருமையும் பயத்தற் சிறப்புடைய ஏனைச் செல்வம்போல, மக்கட் செல்வமும் ''இம்மை யுலகத் திசையொடும் விளங்கி, மறுமை யுலகமும் மறுவின் றெய்துப, செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச், சிறுவர்ப் பயந்த செம்மலோ ரெனப் பல்லோர் கூறிய

---

1. நற். 312. 2. மலைபடு. 367. 3. பரி. 7-40.
4. தொல். சொல். 343. 5. மதுரை. 609. 6. குறள். 63.

பழமொழி யெல்லாம் வாயே யாகுதல்[1]'' யாவரும் அறிந்ததொன் ருகலின், இது பயவுவமம். (309)

310. பொலம்பசும் பாண்டிற் காசுநிரை யல்குல்
இலங்குவளை மென்றோ ளிழைநிலை நெகிழப்
பிரிதல் வல்லுவை யாயின்
அரிதே விடலையிவ ளாய்நுதற் கவினே.

இது பிரிகின்ற தலைமகற்குத் தோழி நீ நினைக்கின்ற கருமம் முடித்தாயாயினும், இவள் நலம் மீட்டற் கரிது எனச் சொல்லிச் செலவழுங்குவித்தது.

உரை: தலைவ, பொன்னுற் செய்யப்பட்ட பசிய பாண்டிலைச் சுற்றி மணிகள் கோத்தணிந்த அல்குலையும், விளங்குகின்ற வளைகளையும் மெல்லிய தோள்களையுமுடைய இவள் அவ்வணிகள் நின்ற நிலையின் நெகிழ்ந்து நீங்க, நீ பிரிந்து செய்யும் வினையை முடித்தல் வல்லையாயினும், நின் பிரிவால் இவளிடத்து நீங்கிக் கெடும் சிறு நுதலின் அழகு பெறற்கரிது, காண், எ. று.

பாண்டில், பொன்னுல் வட்டமாகச் செய்யப்படுவதோர் அணி வகை. இதனைச் சுற்றி மணிகள் கோத்து மேகலையோ டணிதல் பண்டை மரபாகலின், பொலம்பசும் பாண்டிற் காசுநிரை யல்குல் என்ருர். இதனைப் ''பொன்செய் பாண்டிற் பொலங்கலம்[2]'' எனப் பிருண்டும் கூறுவர். ''பவழக் காசொடு பன்மணி விரைஇத், திகழக் கோத்த செம்பொற் பாண்டில்[3]'' என இக்கருத்தைக் கொங்குவேளிர் விளக்கிக் காட்டுவர். பிரிந்தவழி மேற்கொண்ட பொருள்வினைகளை முடித்தல்லது மீளாமை தலைமகற்குத் தலைமைப் பண்பாதலின், பிரிந்து வினைமுடித்தலைப் பிரிதல் என்றே கூறினர். ஆயின் என்புழிச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மகளிர்க்கு நுதல் சிறுத்தல் சிறப்பாதலின், ஆய்நுதல் எனப்பட்டது. ''நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகி[4]'' என்பது காண்க.

1. அகம். 66. 2. ஐங். 316. 3. பெருங். ii. 19:142–3.
4. கலி. 108.

பிரிந்தவழி யெய்தும் மெலிவினுல், வளையும் இழையும் நெகிழ்தல் ஒருதலையாகலின், நிலைநெகிழ என்றும், காதலாற் பிணிப்புண்டு ஈருடலும் ஓருயிருமாய் நிற்பார் ஒருவரினெருவர் பிரிதல் அருமை தோன்றப் பிரிதல் வல்லுவை யாயின் என்றும், அரிதிற் பிரிதலும், பிரிந்து வினைமுடித்தலும் வல்லா யாயினும், இவள் நுதற்கவினை மீட்கும் வன்மை யுடையை யல்லை என்பாள், கவின்மேல் ஏற்றி அரிது என்றும் கூறினள். ''நின் அளிபெற நந்தும் இவள் ஆய்நுதற் கவினே[1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. (310)

---

1. கலி. 53.

32

செலவுப் பத்து

இதன்கண்வரும் பாட்டுக்கள் பத்தும் தலைமகன் தலைமகளின் நீங்கிச் சென்றவிடத்து அச்சென்றமை பொருளாக வந்தவற்றின் தொகுதி யாகலின், இஃது இப்பெயர் எய்துவதாயிற்று.

கற்புநெறி நின்றொழுகும் பொற்புடை மனைவாழ்வின்கண் கடமை பற்றிப் பொருள் வினை குறித்துத் தலைமகன் தலைமகளின் நீங்கிப் பிரிந்தேக வேண்டிய நிலை உண்டாவது இயற்கை. அக்காலை அவனது உள்ளம் கடமையும் காதலும் தம்மிற் பொருது நிற்கும் போர்க்களமாகும். போர்முடிவு கடமையின் வெற்றியாக முடியும். தலைமகன் உள்ளம் கடமைவழிச் செல்லும்.

செலவு ஒருப்பட்டவன் தன் கருத்தை முதற்கண் தோழிக்குச் சொல்லித் தலைமகட்கு உணர்த்துவிப்பன்; தானும் பள்ளியிடத்த னாகிய போதும் பிறண்டும் குறிப்பினால் தன் பிரிவுக்கருத்தைப் புலப்படுத்துவன். சிறப்புடைய வாழ்வு கடமை வழி நின்றால் இல்வாழ்வின் பயன் இனிது எய்தும் என்பதைத் தோழி நன்கு அறிவாளாயினும் தலைமகட்குத் துணையாய் நின்று அவள் எய்தும் பிரிவுத்துன்பத்தை உடனிருந்து அறிந்து ஆற்றுவிக்கும் கடமை யுடைமையால் தலைவனைச் செலவழுங்குவிப்பள். அவளால் தலைவனது உள்ளம் கடமைவழி இயங்குதற்கு உறுதிபெறுவது

பெரும்பான்மை. தலைவியும் ஒரோவழி அவனைச் செலவழுங்குவித்தலும் செய்வள். இவ்வாற்றால் தலைமகன் உள்ளம் செலவின்கண் உறுதியும் காதலின் மாண்பும் நன்கு உணர்ந்து கொள்ளும். உறுதியுள்ளம் படைத்த தலைவன் முடிவில் பிரிந்தே போவன்; பிரியுங்கால் தலைவியது ஆற்றாமைக் கஞ்சிச் சொல்லாதே பிரிவதும் உண்டு.

ஒன்றியிருக்கும் உயிர்ப்பொருள் இரண்டு ஒன்றினொன்று பிரிந்தவழி, ஒவ்வொன்றும் பிரிவாற்றாது துடிப்பதும் வருந்துவதும் இயல்பு. அவ்வியற்கைநெறியே பிரிவின்கண் தலைவியது உள்ளம் பிரிவாற்றாது துடித்து வருந்தும். அவ்வருத்தத்தின்கண் அவள் தலைமகன் சென்றது பொருளாகச் சில சொல்லுவள்; அவட்குத் துணைநின்று ஆற்றுவிக்கும் தோழியும் சில சொல்லுவள்; அவற்றை இப்பகுதிக்கண் காணலாம்.

களவின்கண், தலைமகட்குத் தன்பால் உண்டாகிய காதல், தன்னை இன்றியமையாத அளவிற் பெருகி முறுகுமாறு ஒழுகிய தலைமகன், அந்நிலை எய்தியது உணர்ந்ததும், அவளை வரைந்து கொள்ளத் துணிந்து, அவள் பெற்றோர்பால் சான்றோரை மகட்கொடை வேண்டி விடுவன் இதற்கிடையே வேறுசிலர் மகட்கொடை வேண்டுதலும் உண்டு. தான் விடுத்த சான்றோர்க்கு மகட்கொடை மறுப்பினும், அயலார்க்கு மகட்கொடை நேர்வது போல் தோன்றினும், தலைமகள் பெருங்கற்பின ளாதலின் ஆற்றாது உயிர்விடுவ ளாதலால், அவளைப் பெற்றோர் அறியா வகையிற் கொண்டுதலைக்கழிவது முண்டு. அஃதொழிய வேறு வழியின்மை காணும் தோழியும் தலைமகளும் அதற்கு உடன்படுவர். குறித்த நாள் இரவில், தோழி கையடைசெய்யத் தலைமகன் தலைமகளைத் தன்னுடன் கொண்டு போவன். இஃது உடன் போக்கு என்று வழங்கும். இஃது அறக்கழிவுடைய செயலாயினும், தலைமகளது கற்பறம் பேணும் நெறியில் இன்றியமையாமைபற்றிச் சான்றோர் உடன்போக்கினை ஒழுக்காருகவே கொண்டுள்ளனர். "இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின், சிறந்தானை வழிபடீஇச் சென்றனள், அறம் தலைப்பிரியா ஆறு மற்று அதுவே"[1] எனச்

1. கலி. 9.

சான்றோர் உரைப்பது காண்க. உடன்போக்கு, ''அறம் தலைப் பிரியா ஆறு'' என்பது பற்றியே ஆசிரியர் தொல்காப்பியனாரும், உடன்போக்கில் நிகழ்வனவற்றை மேற்கொண்டு இலக்கணம் அமைப்பாராயினர். அவரது கருத்தை அறியும் நுண்ணறிவு இன்மையால், ஆராய்ச்சியாளர் சிலர், இவ்வுடன் போக்கு நெறியை இகழ்ந்துரைத்துத் தமது வெண்மை விளங்க நின்றதும் உண்டு. இவ்வண்ணம் உடன்போக்கு என்னும் செலவு பிறந்த வழி, அச்செலவின்கண் நிகழ்ந்தவற்றைச் சொல்லும் பாட்டுக் களும் இப்பத்தின்கண் உள்ளன.

311. வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்
ஆரிடைச் செல்வோ ராறுநனி வெருஉம்
காடிறந் தனரே காதலர்
நீடுவர் கொல்லென நினையுமென் னெஞ்சே.

இஃது, ஆற்றது அருமை நினைந்து நீ ஆற்றுயாதல் வேண்டா, அவர் அவ்வழி முடியச் சென்றார் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உரை: காட்டிடை நின்ற வேங்கைமரத்தில் ஏறிப் பூக்கொய் வோர், பஞ்சுரம் என்னும் பண்ணினைப் பாடுவாராயினும், அரிய நெறியின்கட் செல்வோர் அது கேட்பினும், அவ்வழியிடைச் செல்லுதற்கு அஞ்சும் காட்டினை, நம் காதலர் முற்றவுங் கடந்து சென்றனராதலால், என் நெஞ்சம், அவர் விரைய வாராது நீட்டிப்பர் கொல்லோ என நினையாநின்றது எ. று.

வேங்கைப்பூவைக் குறிஞ்சிநில மகளிர் பெரிதும் விரும்பி அணிவர்; அதனால் அவர்கள் வேங்கைமரத்தில் ஏறிப் பூக்கொய்வர்; அக்காலை அவர்கள் பேராரவாரம் செய்வது மரபு; ''கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர், நறும்பூக் கொய்யும் பூசல்[1]'' எனவும், ''கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப், பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள் இன்னா இசைய பூசல் பயிற்றலின்[2]''

1. மதுரை. 296–7. 2. அகம். 52.

எனவும் சான்றோர் உரைப்பது காண்க. இவ்வாறு குறமகளிர் வேங்கை கொய்யுங்கால் பஞ்சுரம் என்னும் பாலைப் பண்ணைப் பாடுவது பற்றி வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும் என்றார். பாலையில் வாழும் புருக்களும் இப்பஞ்சுரமே இசைக்கும் என்பாராய், ''வெஞ்சுரம் செல்வோர் வினைவழி யஞ்சப், பஞ்சுர வோசையிற் பையெனப் பயிரும், வெஞ்சிறைச் செங்கால் நுண் பொறிப் புறவே'' என்று பிறரும் கூறுதல் காண்க.

தலைமகன் செல்லுதற்குரிய சுரத்தின் வெம்மையையும் கொடுமையையும் நினைந்து வருந்திய தலைமகள் ஆற்றியிருப்பள் எனத் தோழி, சுரத்தை இனிது கடந்து சென்று சேர்ந்தார் என்றாளாக, அது கேட்டு மகிழ்வாளாய்த் தலைவி, அவள் கூற்றையே கொண்டெடுத்து, காடு இறந்தனரோ காதலர் என்றாள். அதனால் உவகை கொண்ட தோழியை நோக்கி, யான் மகிழ்ந்தேனாயினும், சுரத்தின் கொடுமையைப் பொருளாக நினையாவாறு அவர் உள்ளத்தைப் பிணித்து நிற்கும் வினையின் அருமைநோக்கி, விரைய முடியாது நீட்டிப்பரோ என அஞ்சுகின்றேன் என்பாள், நீடுவர் கொல் என நினையும் என் நெஞ்சு என்றும் கூறினாள் (311)

312 அறஞ்சா லியரோ வறஞ்சா லியரோ
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற வருவிக்
கோள்வ லென்னையை மறைத்த குன்றே.

இஃது, உடன்போயின தலைமகள் மீண்டு வந்துழி, ''நின் ஐயன்மார், பின் துரந்து வந்தவிடத்து நிகழ்ந்தது என்னை?'' என்ற தோழிக்கு, நிகழ்ந்தது கூறித் தலைமகன் மறைதற்கு உதவி செய்த மலையை வாழ்த்தியது.

உரை: ஒளியினால் வனப்பு மிகவுடைய அருவிகளையுடைத்தாய், உடன்போக்கின்கண் எம்மைத் தொடர்ந்துபோந்த தமர் அறியா

1. பெருங். iii 1 : 190-2.

வாறு வலிமிக்களன் தலைவனை மறைத்து உதவிய குன்றம். எங்கும் வறம் உண்டாயினும், நீர் வறங் கூராத அறம் நிறைந்து மிக ஓங்குவதாக எ. று.

சாலியர், நிறைக என்னும் பொருட்டாய வியங்கோள் முற்று. அறம், மாரிக்கண் மிகப்பெற்றுக் கோடைக்கண் அருவியாகப் பெருகி வீழும் நீர்வள முடைமை. வறம், ஈண்டுக் கடுங்கோடை மேற்று. அருவிக் குன்று என இயையும். கருவரைக்கண் ஒளிதிகழ்ந்து வீழ்தலின் வாள்வனப்புற்ற அருவி என்றார். ''வரைதாழ்பு வாணிறங் கொண்ட அருவித்து[1]'' என்று பிறரும் கூறுவர். கோள்வல் என்னை என்புழிக் கோள், கடைப்பிடி; என்னை, தலைவன்.

தாம் பூண்ட ஒழுக்கம் கெடாவகை மறைதற்கு இடந்தந்து உதவினமையின், அடுக்கு, காதற்சிறப்பு உணர நின்றது. தமருடைய வன்கண்மையும் தலைவனது மறமாண்பும், போர் நிகழின் வரும் ஏதமும் எண்ணிப்பெருங்கலக்குற்று வருந்தின தலைவி, இடைநின்று தலைவனை மறைத்துப் போருண்டாகாதவாறு தடுத்த குன்றினது சிறப்பும் தன் ஆராமையும் தோன்ற அறஞ் சாலியரோ அறஞ்சாலியரோ என அடுக்கிக் கூறினள். ''மணலிடு மருங்கின் இரும்புறம் பொருந்தி, அமர்வரின் அஞ்சேன் பெயர்க்கு வென், நுமர்வரின் மறைகுவன் மாஅயோளே[2]'' என்று தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்துக் கூறினனாகலின், கோள்வல் என்னை என்றாள். இது, ''வீளைப் பருந்தின் கோள்வல் சேவல்[3]'' என்புழிப்போலத் தான் கருதியது கருதியாங்குத் தப்பாது கொள்ளும் வன்மை உணர்த்திற்று. தலைமகளுடைய தமரொடு பொருவதாயின், தலைமகற்கு ஏதம் நிகழுமோ எனக் கவன்று தலைமகன் இறந்துபடுமாகலின், அவள் அவ்வாறு கவலாதவாறு மறைந்தானாகலின், அஃது அவன் தலைமைக்கு இழுக்காகாமையான் மறைத்தகுன்று என்றாள்; ''அமரிடை யறுதர நீக்கி நீர், எமரிடை யுறுதர ஒளித்த காடே[4]'' எனப்பிறருண்டும் தலைவி கூறுதல் காண்க.

---

1. கலி, 42. 2. நற். 362. 3. அகம். 33.
4. நற். 48.

"எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே[1]" என்பதன் உரையில் இதனைக் காட்டி, "நின் ஐயன்மார் வந்துழி நிகழ்ந்தது என் என்ற தோழிக்குத் தலைவி தலைவனை மறைத்த மலையை வாழ்த்தியது" என்பர் நச்சினார்க்கினியர்; இது தமர் வந்துற்ற வழிக் கூறியது என்பர் இளம்பூரணர்.

வாள்வயப்புற்ற என்றும், கோள்வரும் என்னையை என்றும் பாடமுண்டு. (312)

313. தெறுவ தம்ம நும்மகள் விருப்பே
உறுதுய ரவலமொ டுயிர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படரடக் கலங்க
நாடிடை விலங்கிய வைப்பின்
காடிறந் தனளங் காத லோளே.

இது, தலைமகள் புணர்ந்துடன் போகியவழிச் செவிலி ஆற்றாமை கண்ட நற்றாய் அவட்குச் சொல்லியது.

ப. உரை: தெறுவது என்றது யான் அவள்மேல் வைத்த காதல் என்னால் தெறப்படுவது எ. று.

உரை: மிக்க துயரம் காரணமாகத் தோன்றும் அவலத்தால் உயிர் நீங்குமாறு மெலிந்து பாழ்படும் என்னெஞ்சம், தன்னை நினைத்தலால் வருத்தம் மிக்குக் கலக்க மெய்த, நம்மாற் காதலிக்கப் பட்ட அவள், நாடுகள் பல இடையிட்ட இடத்தினையுடைய காடுகளைக் கடந்து சென்றன ளாகலின், அவள்மேற் சென்ற என் காதல் துன்புறுத்துவ தாயிற்று, காண் எ. று.

தெறுவது, துன்பம் செய்வது; "தெறுவ தம்ம இத்திணைப் பிறத் தல்லே[2]" என்று பிறரும் கூறுவது காண்க. விருப்பு, ஈண்டுக் காதல் மேற்று. இன்ப ஒளியின்றித் துன்பவிருள் படிந்து நினைத்தற் றொழிற்கு இடமாகாது செயலற்று வருந்தும் நெஞ்சு, பாழ்படு நெஞ்சம் எனப்பட்டது. இடை விலங்கிய வைப்பு ஈண்டுத்

1. தொல். பொ. 42. 2. குறுந். 45.

தலைமக்கள் நாட்டின் இடையே இனிது சென்று சேர்தற் கியலா வாறு குறுக்கே மாருய்க் காடு பரந்து கிடக்கும் இடம். அவலம், பிறர் புலனுக்குத் தோன்றி நிற்கும் வருத்தம். இதுகாதல் செய்து ஓம்பிய தலைமகளை இழந்தது பொருளாகப் பிறந்த துயரின்வழித் தோன்றுதலின், உறுதுயர் அவலம் என்ருர்; "இளிவே இழவே அசைவே வறுமையென விளிவில் கொள்கை அழுகை நான்கே[1]" என்று ஆசிரியர் கூறுவது காண்க. ஒடு, ஆனுருபின் பொருட்டு. இதனை "அன்ன பிறவும் அதன்பால என்மனுர்[2]" என்பதனுல் அமைப்பர்.

தன்ஞற் காதலிக்கப்படும் பொருள் நெஞ்சின்கண் நின்று இன்பந்தர நுகர்ந்தவள், அது நீங்கிய வழி, வைப்புழி மறந்த வறியோன் போல வாடுகின்ரு ளாகலின் பாழ்படு நெஞ்சம் என்றும், அவள் ஆடிடமும் பயில்பொருளும் காண்டொறும் உள்ளத்தில் துயர்மிகுதலின் படரடக் கலங்க என்றும், இல் இகவா இளம்பருவத்தே நம் அன்பினை நெகிழ்த்துச் சென்றவள், வேற்று நாட் டகவயின் செல்லின் நம் அன்பினை அறவே மறந்தொழிவள் என்பாள், நாடிடை விலங்கிய வைப்பின் காடிறந்தனள் என்றும், அன்னவள் நம்மாட்டு அன்பில ளாயினும், நாம் அவள்மாட்டுச் செய்த அன்பு பெரிதாய் அவளது பிரிவாற்ருது நம்மை வருத்துவ தாயிற்று என்பாள், தெறுவது அம்ம நும்மகள் விருப்பே என்றும் கூறினுள். கற்பின்கண் தானும் செவிலியும் ஒத்து ஒழுகுதலின், நம் காதலோளே என்றும், களவின்கண் தன்னினும் செவிலி தலைமகட்குச் சிறந்தாளாய் ஒழுகுதலின், நும்மகள் விருப்பே என்றும் கூறினுள். "ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின் தாய் எனப்படுவோள் செவிலியாகும்[3]" என்பது விதி. இது, "தன்னும் அவளும்[4]" என்ற சூத்திரத்து, "ஆகிய கிளவியும் அவ்வழி யுரிய" என்பதனை மொழிமாற்றி, "அவ்வழி யாகிய கிளவியு முரிய" என்று கொண்டு, நற்ருய் தலைமகளின் அன் பின்மை கூறியதாகக் கொள்க. "களவல ராயினும்[5]" என்ற சூத்திரத்துப் "பிரிவி னெச்சத்தும்" என்புழி இதனைக் காட்டி,

1. தொல். பொ. 253. 2. ஷை, சொல். நச். 75.
3. தொல். பொ. 124. 4. ஷை. ஷை. 36. 5. ஷை. ஷை. 115.

''இது பின்செல்லாது வருந்தி யிருந்த செவிலியைக் கண்ட நற்றாய் கூறியது'' என்றும், இது நற்றாய் கூற்றாய்ச் ''செவிலி மேன'' ஆயிற் றென்றும் கூறுவர் நச்சினார்க்கினியர். (313)

314. அவிர்தொடி கொட்பக் கழுதுபுக வயரக்
கருங்கட் காக்கையொடு கழுகுவிசும் பகவச்
சிறுகண் யானை யாள்வீழ்த்துத் திரிதரும்
நீளிடை யருஞ்சுர மென்பநம்
தோளிடை முனிநர் சென்ற வாறே.

இது, தலைமகன் பிரிந்துழி அவனுடன் போய் மீண்டார் வழியது அருமை தங்களிற் கூறக்கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, விளங்குகின்ற தொடியினை யணிந்த பேய் மகள், ஆறலைக்கப்பட்ட இடத்தின்கண் இறந்தோர் கருந்தலை தேடித்திரிய, அவள் ஊர்ந்து போந்த கழுது அவர்தம் நிணமாகிய உணவுதேடியுண்ண, எஞ்சியவற்றை உண்ணும் கரிய கண்களை யுடைய காக்கையும் கழுகும் விசும்பின்கண் கத்தித்திரிய, சிறிய, கண்களையுடைய யானை, எதிர்ப்பட்ட மறவரைக் கொன்று திரியும் நீண்ட இடத்தினையுடைய கடத்தற்கரிய காடு என்று கூறுவர் நம் தோளிடத்து விருப்பமின்றிச் சென்றோரது நெறியினை; அது கேட்டு என் நெஞ்சம் கவலாநின்றது எ. று.

அது கேட்டு என்பது முதலாயின குறிப்பெச்சம். அவிர்தொடி, அவிர்தொடியையுடைய பேய்மகள்; அன்மொழித்தொகை. தொடி, யானைத் தந்தத்தாற் செய்யப்பெற்ற பூண்; இதனை மகளிர் தாம் அணிந்த வளை நெகிழாவகை முன்கையில் அணிப. பேய்மகள் இறந்தார் தலையை யுண்பவள்; ''விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப், பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு, கணநரி யோடு கழுதுகளம் படுப்ப[1]'' என்றும், ''உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள், குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரல்,

1. புறம். 369.

கண்தொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை, ஒண்டொடித் தடக்கையின் ஏந்தி[1]'' என்றும், வருவனவற்ருலும், அவள் கழுதூர்ந்து வருதல், ''கவைத்தலைப் பேய்மகள் கழுத்தூர்ந்து இயங்க[2]'' என்று வருதலாலும் உணர்க. ''கழுது, பேயில் ஒருசாதி யென்பர்'' நச்சினுர்க்கினியர்.

பேய்மகளிரைச் சவந்தின் பெண்டிர் என்று பிற்காலத்தார் கூறுப. அவர்கள், இக்காலத்தே மலைப்புறங்களில் வாழும் தடவர், இறவுளர், முதுவர், காடர் என்பார் போல, சங்க காலத்தில் மக்களினம் வழங்காத பாலை நிலங்களில் வாழ்ந்த மக்கள்; பிணந்தின்னும் இயல்பினராய்[3]'' இருந்தமையின் அவர்களைப் பேய்மகளிர், கழுது, கூளி எனப் பல திறமாகக் கூறினர். அவர் கூட்டம் காலப் போக்கில் அழிந்துபோயிற்றென அறிக. பாரத ராமாயணங்களிலும் ஒரு சில பழம் புராணங்களிலும் காணப்படும் அரக்கரினம் இக்கூட்டத்தினரையே யாம். இவர்கள் தென்கடல் நாட்டுக்குத் தெற்கிலும் மேற்கே ஆப்பிரிக்கா முதல் கிழக்கே ஆத்திரேலியா வரையில் இருந்த நிலப்பகுதிகளிலும் ஒருகாலத்தில் வாழ்ந்தனர். அந்நாடுகளிற் பெரும்பாலன கடற்குள் மூழ்கினமையின் அவர் கூட்டம் பெரிதும் மறைந்தொழிந்தது. எஞ்சி நின்ற ஒருசிலர் நன்மக்கள் வாழ்வில் பழகிப் பிணந்தின்னலைக் கைவிட்டனர்.

முனிநர் என்புழி முனிதல் வெறுத்தல். புகவு, ''குறியதன் இறுதிச் சினைகெட வுகரம், அறிய வருதல் செய்யுளுள் உரித்தே[4]'' என்பதனுற் செய்யுள், முடிபு எய்திய பெயர்ச்சொல். இதன் சொன்னிலை புகா என்பது; ''புகாஅக் காலை[5]'' என்றும், ''புகாப் புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்[6]'' என்றும் சான்ருேர் கூறுதல் அறிக. யானை ஆள்வீழ்த்துத் திரிதல், ''நீளிடை, ஆட்கொள் யானை யதர்பார்த்தல்கும்[7]'' எனப் பிறரும் கூறினர். ஆள், பாகனுமாம். கருங்கண், சிறுகண் என்பன வாளாது இயற்கை அடையாய் நின்றன; அன்றி, ஈரமின்மையும், ''அறிந்தறிந்தும்

1. முருகு. 51-4 2. பதிற். 13. 3. Canibals.
4. தொல். எழுத்து. 234 5. ஷை. பொ. 107
6. நற். 90. 7. அகம். 325.

பாகனையே கொல்லும்[1] '' சிறுமையும் முறையே யுடைமை உணர நின்றன எனினுமாம்.

பேய்மகளிரும் கழுதும் காக்கையும் கழுகும் இயங்கும் சுரம் எவர்க்கும் விருப்பத்தைத் தாராதாகலின், அதனை விரும்பிச் சென்றார் நம் தலைவர் எனின், அவர்க்கு நம்மிடை இன்பம் இல்லை என்பது இனிது விளங்கும் என்றற்குச் சுரத்தின் கொடுமையை எடுத்து மொழிந்தாள்.

நம் தோளிடைப் பெறலாகும் இன்பத்தினை வெறுத்திளராயின், நீளிடை யருஞ்சுரம் செல்லார் என்னும் கருத்துத்தோன்ற, தோளிடை முனிநர் சென்றவாறே என்றாள். ''மலையுடை யருஞ் சுரம் என்பநம், முலையிடை முனிநர் சென்ற வாறே[2]'' என்றார் பிறரும். (314)

315 பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கட்
பூசல் கேளார் சேய ரென்ப
இழைநெகிழ் செல்ல லுறீஇக்
கழைமுதிர் சோலைக் காடிறந் தோரே.

இது, தலைமகன் சொல்லாது பிரிந்துழித் தலைமகள் வேறுபாடு கண்ட தோழி இரங்கிச் சொல்லியது.

ப. உரை: பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கட் பூசல் என்றது, அவர்போகின்ற காலத்து விலக்காத வகைத் துயின்றீர் எனக் கண்ணொடு புலந்து கூறுகின்ற பூசல்.

உரை: தன்னால் துறக்கப்பட்டோர்க்குத் தன் பிரிவால் இழைகள் நெகிழ்ந்தோடவல்ல துயரத்தை உறுவித்து மூங்கில்கள் நிறைந்த சோலைகளையுடைய காடுகளைக் கடந்து, மிக்க சேய்மையிற் சென்றுள்ளோ ராகிய காதலர் பிரிந்த பொழுது அயர்ந்து உறக்கங் கொண்டமை பொருட்டுக் குளிர்ந்த மலர்போல் நீண்ட நின் கண்களால் விளைகின்ற ஆகுலத்தைக் கேளார்; கேட்பாரெனக் கலங்குதலாற் பயன் என் எ. று.

---

1. நாலடி. 213. 2. குறுந். 39.

பாயல், உறக்கம், பனிமலர், குளிர்ந்த தாமரை; நீலம், குவளை, நெய்தல் முதலிய நீர்ப்பூக்கட்கும் பொதுப்பெயர். நெடிய கண்கள் பசத்தலால் அலர் தோன்றி வருத்துவதும் அதனுல் தலைமகள் ஆற்ருமை மிகுவதும் குறித்து நெடுங்கட் பூசல் என்ருர். ''வாடுதோட் பூசல்'' எனத் திருவள்ளுவனாரும்[1], ''இருந்தணை மீது பொருந்துழிக் கிடக்கை, வருந்துதோட் பூசல்களையும் மருந்தென, உள்ளுதொறும் படூஉம் பல்லி[2]'' என்று பிறரும் கூறுதல் காண்க. பூசல் ஆகுபெயர். என்ப அசைநிலை. இறந்தோர் என்றமையான், சொல்லிப் பிரியும் அன்பு நிலையைக் கடந்து தலைமகன் சொல்லாது பிரிந்தனன் என்பது பெற்ரும்.

தலைமகன் பிரிவன் என்ற குறிப்புணராது கண்கள் அயர்ந்து உறங்கினமை தோன்றப் பாயல் கொண்ட என்றும், பிரிவுணர்ந்து ஆற்ருமையால் கண்கள் பசந்து நீர்சொரிந்து வருந்தினமையின், பனிமலர் நெடுங்கண் என்றும், அதனுல் அலர் பிறப்ப ஆற்ருது வருந்தினமை விளங்க, நெடுங்கட் பூசல் என்றும், கண்பசந்ததோடு, தொடியும் வளையும் நெகுழுமாறு மேனி வாடியவழிப் பிறந்த தோட்பூசலை இழைநெகிழ் செல்லல் உறீஇ என்றும், இவ்வண்ணம் நின் கண்ணும் தோளும் செய்யும் பூசல், காடிறந்து சென்ற காதலர் செவிப்புலம் சென்று சேரா என்பாள், கேளார் என்றும், எனவே, அன்பின்றிச் சொல்லாது பிரிந்தார் பொருட்டு, ஆற்ருது வருந்துதலைக் கைவிட்டு விரையத்தாம் மேற்கொண்ட வினை முற்றி மீள்வாராக என வேண்டுதலேசெயற்பாலது எனத் தோழி கூறினுள் என்று உணர்க, ''இழைநெகிழ் செல்லல் உறீஇ'' என்றது உடம்புநனிசுருங்கலும், அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்ருமை யுமாம். (315)

316. பொன்செய் பாண்டிற் பொலங்கல நந்தத்
தேரக லல்கு லவ்வரி வாட
இறந்தோர் மன்ற தாமே பிறங்குமலைப்
புல்லரை யோமை நீடிய
புலிவழங் கதர கானத் தானே.

---

1. குறள். 1237. 2. அகம். 351.

இது தலைமகள் மெலிவிற்கு நொந்து தலைமகன் பிரிவின்கண் தோழி கூறியது.

உரை: உயர்ந்த மலைப்பக்கத்தே புல்லென்ற அரையினை யுடைய ஓமைமரங்கள் நிறைந்த, புலிகள் இயங்கா நிற்கும் கானத்தின்கண், பொன்னாற் செய்யப்பட்ட பாண்டி லாகிய பொன்னணி நெகிழ்ந்தொழிய, தேர்த்தட்டுப் போலும் அகன்ற அல்குலின்கட் கிடந்த அழகிய வரிகள் வாட்ட மெய்த, நம்மைத் தெளிவாகப் பிரிந்து சென்று ராகலான், நாம் ஆற்றுமாறு என்னையோ? அறியேன் எ. று.

பாண்டிலைச் சுற்றிக் கோக்கப்படும் பொற்காசுகள் ஈண்டுப் பொலங்கலம் எனப்பட்டன. பொற்கலம் பொலங்கலம் என வந்தது. அல்குற்குத் தேர்த்தட்டு, தலையகன்று அடிசுருங்கித் தோன்றுவது பற்றி வந்த மெய்யுவமம். இறந்தார் என்பது "ஆ வோ வாகும்[1]" என்பதனால் இறந்தோர் என வந்தது. பாண்டிற் பொலங்கலம் என்பதனைப் பொலம்பசும் பாண்டில் என்புழிக் கூறினும். ஓமை மரத்தின் அடிப்பகுதி பொலிவின்றிப் பொருக்குகளையுடையதாய் நிற்றலின், புல்லரை யோமை யெனப்பட்டது.

மேலே செதில்கள் பல கொண்டு பொருக்குகள் நிறைந்து இருத்தலால், "இருங்கழி முதலை மேந்தோல் அன்ன கருங்கால் ஓமை[2]" எனவும், அதன் உட்பட்டை சிவந்திருப்பதுபற்றி, "பொரியரை யோமைப் பெரும்பொளிச் சேயரை[3]" எனவும் சான்றோர் குறிப்பது காண்க. புலிவழங் கதர கானத் தானே என்றது, வழியருமை நினைந்து கூறுதல். பிரிவாற்றாது மெலி வாட்குப் பிரிவுக்கேதுவாகிய பொருள் மிக்குத் தோன்றுதலின், பொலங்கலம் நந்த என்றாள். தேரகல் அல்குல் அவ்வரி வாட என்றது, அவன் பிரிவாற்றாமையான் உடம்பு நனி சுருங்கல்.

தலைமகன் பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகட்கு ஆற்றுந் திறமாவன கூறுதற் குரிய தோழி, நீர் செல்லும் வழிச் சாய்ந்து நீரின் செலவுக்கடுமை ஆற்றும் புல்லினம் போல, உயிர்த் துணை

---

1. தொல். சொல். 2. அகம். 3. 3. ஷை. 397.

யாகிய தலைமகள் எய்தும் துன்பத்தையே தானும் எய்தி உழந்து ஆற்றுவிப்பாளாய், பொலங்கலம் நந்த, அல்குல் அவ்வரி வாட இறந்தோர் மன்ற தாமே என்றாள். மனையின்கண் இருந்து பிரிந் தொழுகும் எல்லை கடந்து, நாடு மலை காடு முதலியவற்றை இடை யிட்டு நெடிது பிரிதல் பற்றிப் பிரிந்தோர் என்னாது இறந்தோர் என்றாள். இறத்தல், எல்லை கடத்தல். பிரிந்தவன் விரைய வாராது நீட்டித்தலின், நம்மைத் துறந்ததேயன்றி மறந்து விட்டனர் போலும் என்பாள் குறிப்பால், இறந்தோர் மன்றதாமே என்றாள். காதலர்க்கு நம்மினும் பொருளே காதல் என்பாள், பொன்செய் பாண்டிற் பொலங்கலம் நந்த என்றாள் என்றுமாம். (316)

317. சூழ்கம் வம்மோ தோழி பாழ்பட்டுப்
பைதற வெந்த பாலை வெங்காட்
டருஞ்சுர மிறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்ச நீடிய பொருளே.

இது, தலைமகன் பிரிந்து நீட்டித்துழி, நெஞ்சினைத் தூதுவிட்ட தலைமகள் அது வாராது தாழ்த்துழித் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, பாழெய்திப் பசுமை யில்லையாய் வெந்து கரிந்து பாழாகிய வெவ்விய காட்டி னிடத்ததாகிய அரிய சுரத்தைக் கடந்து சென்ற காதலர்பால், தூதுசென்ற என் நெஞ்சம், விரைய வாராது நீட்டித்தலின் பொருள் தெரிந்திலது; ஆகலின், அதனை ஆராய்வோம், வருக எ. று.

பைது, பசுமை. பாழ்பட்டுப் பைதற வெந்த பாலை என்றது, வேனில் வெப்பத்தால் வழங்குநரும் வழங்குநவும் இன்றிப் பாழ் பட்டு, ஓரறிவுயிராகிய புல்லும் நிலைகெட்டு வெந்து கரிந்து பரல் மிக்க காடாய்த் தோன்றும் பாலையென்பதாம். பாலை நிலத்திற் காணப்படும் மரங்களுள் பாலைமரம் சிறந்தமைபற்றி நெடுஞ்சுரம் பாலை எனப்படும் என்பதும் ஒன்று. நீடிய பொருள், விரைந்து மீளாமைக்குக் காரணம்.

தலைமகன்பால் தூதுசென்ற நெஞ்சம் தன்னிடமே வந்து சேர்தற்பாலதாகவும் வாராமைக்குக் காரணமொன்று உளதாகல் வேண்டுமாகலின், சூழ்கம் வம்மோ எனத் தோழியை அழைத்தாள். ஆராய்ச்சி யெல்லாம் தான் தேர்ந்து கொண்ட இனத்தோடே எண்ணிச் செய்தற்கு உரியவாகலின் சூழ்ச்சித் துணையாகிய தோழியைத் தோழி என்றாள். தலைமகனை நினைந்த நெஞ்சத்தில் அந்நினைவு விடாது நிகழ்தலின், சென்ற நெஞ்சம் என்றும், நீடிய பொருளே யென்றும் கூறினாள். இஃது, ''உறுப்புடையது போல் உணர்வுடையதுபோல், மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்[1]'' என்புழி அடங்கும். பிரிவுத் துன்பத்தாற் பேதுறும் மகளிர்க்குத் துணையாவது அவர் நெஞ்சல்ல தின்மையின், அது பற்றி இது கூறுவாளாயினள் என்றுமாம். ''துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய நெஞ்சம் துணையல் வழி[2]'' என்ப வாகலின்.

''அவனறி வாற்ற அறியு மாகலின்[3]'' என்ற சூத்திரத்துப் ''பல்வேறு நிலை'' என்றதனால், இது நெஞ்சினைத் தூதுவிட்டுக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர். (317)

318 ஆய்நலம் பசப்ப வரும்படர் நலிய
வேய்மருள் பணைத்தோள் வில்லிசை நெகிழ
நசைநனி கொன்றோர் மன்ற விசைநிமிர்ந்
தோடெரி நடந்த வைப்பிற்
கோடுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

இது, நம்மைப் பிரியார் என்று கருதியிருந்த தலைமகள் அவன் பிரிந்துழி இரங்கிச் சொல்லியது.

உரை: ஓசை மிக்குப் பலவிடத்தும் பரவிச்செல்லும் தீ எரித்த இடத்தினை யுடைய முடிகளால் உயர்ந்து செறிந்த மலையினைக் கடந்து சென்ற தலைவர், அழகிய என் நலம் கெட்டுப் பசலை பாயவும், அவர்மேல் உளதாகிய நினைவு வருத்தலால்,

---

1. தொல். பொ. 196. 2. குறள். 1299. 3. தொல். பொ. 147.

மூங்கில் போலும் பருத்த தோளிடத்து அணிந்த ஒளியுமிழும் மணிகள் நெகிழ்ந்து நீங்கவும் பிரிந்து, நம் மனத்தெழும் விருப்பத்தைப் பெரிதும் அழித்தொழிந்தனர், காண் எ. று.

ஆய்கவின்[1] என்றாற் போல ஆய்நலம் அழகின்மேல் நின்றது. ஆய்தல், ஈண்டு மெலிவின் மேலதாயின் பசப்ப என்பது வேண்டா கூறலாம். அரும்படர். மிக்க துன்பம்; மிக்கவழித் துன்பம் பொறுத்தற் கரிதாகலின், அரும்படர் எனப்பட்டது. பணைத்தோள், பெரியதோள்; தோள் பெருத்தல் மகளிர்க்கு இலக்கணம் என அறிக; "அகல் அல்குல் தோள்கண் என மூவழிப் பெருகி[2]" எனப் பிறரும் கூறுப. நசை கொன்றார் என்பது, நன்றி கொன்றார் என்றாற்போல நின்றது. இசை, தீயின் முழக்கம்; "முழங்கழல்[3]" என்பது காண்க. விசை நிமிர்ந்து எனக் கொண்டு, விரைவு மிகுந்து என்று உரைப்பினும் அமையும். நின்று எரியாது காற்றின் வழிப் படர்ந்து செல்வதுபற்றி ஓடெரி எனவும், எதிர்ப்பட்ட எதனையும் விடாது வெதுப்பிச் சேறலின் நடந்த எனவும் கூறினார்; "கனையெரி நடந்த கல்காய் கானம்[4]" என்பது காண்க. வைப்பினையும் மலையினையும் இறந்தோர் என்க. வைப்பு, பாலை நிலம்.

பசையற வெதுப்பும் தீ நடந்த வைப்பினையும் கோடுயர் மலையினையும் கடந்து சென்றார்க்கு நம்பால் நசையற மறந்து சேறல் அரிதன்று என்றற்கு, ஓடெரி நடந்த வைப்பு என்றும், தன்னாற் காதலிக்கப் பட்ட யாம் நலமிழந்து, படர் மிகுந்து, இழை நெகிழ்ந்து வருந்துதலை அறிந்து வாராமையின், தலைமகன் தன் அன்பினை முற்றும் மறந்தொழிந்தான் என இரங்குவாள், நசை நனி கொன்றார் என்றும், இனிப் பிரியார் எனத்தான் கருதுமாறு ஒழுகியவன், கடத்தற்கரிய கானம் கடந்து, தன்னால் ஆற்றுதற் கரிய துன்பமும் தந்தமையான், "கொன்றோர்" என்றதனோ டமையாது மன்ற என்றும் கூறினாள். அன்பு மறவா ராயின், தன்னால் அன்பு செய்யப்பட்டவர்க்கு எய்தும் துன்பத்தைத்

1. ஐங். 362. 2. கலி. 108. 3. ஐங். 320.
4. அகம். 105.

துடைத்தலைக் கருதாது அவர் பிரிவே கருதிச் செல்லார் என்பதாம். ஆய்நலம் பசப்ப, என்பது, பசலைபாய்தல். அரும்படர் மெலிய என்றது, துன்பத்துப் புலம்பல். பணைத்தோள் வில்லிழை நெகிழ என்றது, உடம்பு நனி சுருங்கல். (318)

319 கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்
மண்புரை பெருகிய மரமுளி கானம்
இறந்தன ரோநங் காதலர்
மறந்தன ரோதில் மறவா நம்மே.

இது, தலைமகன் பிரிந்துழி அவன் உணர்த்தாது பிரிந்தமை கூறிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உரை : தோழி, கண்ணொளியோடே மாறுபட விளங்குகின்ற வெயில் மிகுந்து வருத்தும் இடத்தினையுடைத்தாய், மண் மேடுகள் பெருகிய, மரங்கள் கரிந்து உலர்ந்த கானத்தை நம் காதலர் கடந்து சென்றனர் கொல்லோ? தம்மை மறவா துறையும் நம்மை மறந்தார் கொல்லோ? மறந்தாரே யாவர், காண் எ. று.

கண்ணளவாய் நில்லாது இறப்பவும் மிக்குத் திகழ்தல் பற்றிக் கண்பொர விளங்கிய கதிர் என்றார். ''கண்பொர விளங்கிய விண்பொரு வியன்குடை[1]'' என்று பிறரும் கூறுவர். வைப்பு, ஊர்களாயின், மண்புரை யென்றது, மண்ணாற் கூறை வேய்ந்த வீடுகள் மேற்றாம். மண்புரை, மண்மேடுகள்; மட்குன்றங்களுமாம். வெப்ப மிகுதியால் மரங்கள் அழிந்தமையின் மண் நிறைந்த மேடுகளும் குன்றுகளுமே நிற்றலான், மண்புரை பெருகிய மரமுளி கானம் என்றார். முளிதல், உலர்தல், ''உருகெழு ஞாயிற்று ஒண்கதிர் மிசைந்த, முளிபுற் கானம்[2]'' என்பதனால் அறிக. தில், அசைநிலை.

கண்ணாற் காண்டற்கும் மெய்யால் நடத்தற்கும் அரிய கானத்தைக் கடந்து தலைமகன் சென்றான் என்பது தோழி முதலாயினரால் அறிந்ததும், தலைமகள் ஆற்றாளாயினமையின்,

1. புறம். 35. 2. புறம். 160.

அவர் கூற்றையே கொண்டெடுத்துக் கானம் இறந்தனரோ நம் காதலர் என்ருள்; என்றவள், நம் காதலர் என்றது நம்பால் காதலுடையர் எனவும், நமது காதலையுடைய ரெனவும் இரு பொருள்பட நிற்றலின், காதலர் நமது காதலை உடைய ராகலின், நாம் அவரை மறவே மாயினேம் என்பாள், மறவா நம்மே என்றும், ஆராயுமிடத்து அவர் தமது காதலை நம்பாற் செலுத்துகின்ரு ரில்லை என்பது அவர் நமக்குச் சொல்லாது பிரிந்தமையே நன்கு உணர்த்தாநிற்கு மாகலின், நம்மை மறவாமைக் குரிய காதல் அவர் மனத்து இன்றென்பாள், மறந்தாரே யாவர் என்றும் கூறினுள். ''எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க, அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள், நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்[1]'' எனத் தலைவி வருந்திக் கூறுமாறு காண்க. மறவா நம்மே என்றது, ஒராற்ருல் தன்வயின் உரிமையும், மறந்தனரோ என்றது அவன்வயிற் பரத்தைமையும் சுட்டி நிற்றல் காண்க. (319)

320. முள்ளரை யிலவத் தொள்ளிணர் வான்பூ
முழங்கழ லசைவளி யெடுப்ப வானத்
துருமுப்படு கனலி னிருநிலத் துறைக்கும்
கவலை யருஞ்சுரம் போயினர்
தவலி லருநோய் தலைத்தந் தோரே.

இது, தலைமகன் பிரிந்துழிச் சுரத்து வெம்மை நினைந்து தலைமகள் சொல்லியது.

உரை: முட்கள் பொருந்திய அடிமரத்தினையுடைய இலவ மரத்தின் ஒள்ளிய கொத்திடை மலர்ந்த வெண்மையான பூக்கள், முழங்குகின்ற நெருப்பினை அலைத்தற்கெழுந்த காற்று எடுத்து வீசுதலால், விசும்பிலே இடியின்கட் பிறக்கும் நெருப்புப்போலப் பெரிய நிலத்தின்கண் உதிரும் கவர்த்த வழிகளையுடைய அரிய காட்டைக் கடந்து சென்ருராயினும், நமக்குக் கெடாத பொறுத்தற் கரிய நோயினைத் தந்தனர், காண். எ. று.

---

1. சிலப். 7: 32

அரையில் முள்ளுடைய இலவமரத்தை முள்ளிலவு என்பர். ''முளிகொடி வலந்த முள்ளரை இலவம்[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க. அழலெழும்போது சூழவுள்ள காற்று வெம்மையுற்று மேலேசெல்வதால், புறத்தேயுள்ள காற்று ஆண்டுப் போந்து தானும் வெம்மையுற்று நீங்கும்; இவ்வாற்ருல் அசைவளி தோன்றுவதும் அழல் எங்கும் பரவுவதும்பற்றி, முழங்கழல் அசைவளி எடுப்ப என்றும், அக்காற்ருல் உதிரும் இலவம்பூ ஒளியாலும் நிறத்தாலும் தீச்சுடரை ஒத்தலின், உருமுப்படு கனலின் உறைக்கும் என்றும் கூறினர். ''நீளரை யிலவத்து ஊழ்கழி பன்மலர், விழவுதலைக் கொண்ட பழவிறல் மூதூர், நெய்யுமிழ் சுடரின் கால்பொரச் சில்சி வைகுறு மீனின் தோன்றும்[2]'' எனப் பிறரும் கூறுவது காண்க. கவலை, கிளைவழி, தவல், கெடுதல்.

தலைமகன் சென்ற சுரம் அருஞ்சுரம் என்றதனுல், தலைமகள் உள்ளத்தில் ஆற்றுதற்கரிய நோய் உண்டாக, உண்மைநெறி ஈதென உணராவாறு மயக்கும் பல தலையான வழிகள் பொருந்தியது அச் சுரம் என்ற சொல் அந்நோயை மிகுவித்தமையின் தவலில் அருநோய் என்ருள்.

அசைவளி எடுப்ப உதிரும் இலவத்தின் ஒள்ளிணர் வான்பூ உருமுப்படு கனல் போலத் தோன்றும் என்றது, பொருள்நசை கடவுதலால் தலைமகன் செலவால் உளதாகிய பிரிவு, பொறுத்தற் கரிய பெருந்துயராய் என்னை வருத்துகின்றது எனத் தலைமகள் கருதிக் கூறுவதை உணர்த்துமாறு அறிக. (320)

———

1. நற். 105. 2. அகம். 17.

33

இடைச்சுரப் பத்து

தலைமகன் செயல்வகைகளுள் இடைச்சுரத்து நிகழ்வன பொருளாக வரும் பாட்டுக்கள் பத்தின் தொகுதியாகலின் இஃது இப் பெயரினைப் பெறுவதாயிற்று.

காதல் வாழ்க்கையில் தலைமகன் தலைமகளைப் பிரிந்து செல்லுங்கால், பிரிவுக்கு ஏதுவாகிய கடமை பின்னின்று அவன் நெஞ்சினைச் செலுத்தினும், காதலின் உருவாகி நிற்கும் தலைமகளின் வடிவும் பண்பும் செயலும் மொழிகளும் அவன் நெஞ்சின்கண் இடையறுது நின்று நினைவெல்லாம் அவையேயாக நிலவுவிக்கும். ஒரோவழிக் காதல் நினைவு மீதூர்ந்து மேற்கொண்ட செலவைக் கைவிட்டு மீளுமாறு தூண்டக் கூடிய அளவு பெருகுவதும் உண்டு. ஆயினும் தலைவன் தனது தலைமைப்பண்பால் கடமைவழியே நிற்பன். சென்றவன், வினைசெய்யிடத்தை அடைந்ததும், வினையின்கண் தோய்ந்து செயற்குரிய வற்றையே நினைவிற்கொண்டு முடிப்பன். வினை முடிவில் மனைக்கு மீளவேண்டிய செவ்வி தோன்றியதும், அவன் நினைவு முற்றும் காதலிபாற் பதிந்துவிடும்.

சுரத்திடைச் செல்லுங்கால் ஆண்டுத் தோன்றும் இயற்கைக் காட்சிகளும் அவன் உள்ளத்தில் காதலியின் குணஞ்செயல்களை நினைவுறுத்தும். அந்நினைவு வழி நின்று நெஞ்சொடு பிணங்கிச் சில

சொற்களைத் தனக்குள்ளே சொல்லிக்கொள்வதும் உண்டு. தன்னோடு உடன் வருபவர்களுள் நெருங்கிய தோழர்பால் தன் நினைவினைச் சொல்லித் தெளிவுறுவதும் தலைமகனுக்கு இயல்பு.

வாழ்வுவகை பலவற்றுள்ளும் காதல்வாழ்வு போல இளமைக் கண் கடமையொடு கடும்போர் நிகழ்த்தும் செவ்வி வேறின்மையின், தலைமகன் உள்ளம், பிரிவின்கண்ணும், பிரிந்து செல்லும் இடைச் சுரத்தின்கண்ணும் கொள்ளும் நினைவுகளை எடுத்துப் புலனெறி வழக்கம் செய்து மக்கள் மனவுணர்வைப் பண்டைச் சான்றோர், பண்படுத்தியுள்ளனர். இப்பகுதிக்கண், தலைமகளைப் பிரிந்து செல்லும் தலைமகன் உள்ளத்தில், இயற்கைக்காட்சிகள் சில, அவனை அவளை நினைக்குமாறு தூண்டுதலால், அவன் நினைக்கும் திறங்களும் அந்நினைவால் அவன் எய்தும் பயன்களும், தன்னொடு வரும் தோழர்பால் அவன் உரைப்பனவும், வினைமுற்றி மீண்டு மனையடைந்தபின் மனையோர்பால்தான் இடைச்சுரத்துக் கொண்ட நினைவுகளைச் சொல்லி இன்புறுவனவும் பிறவும் காணப்படும்.

இவ்வண்ணம், தலைமகனது உள்ளம் காதலின் வன்மையை வென்று கடமைவழி நின்று வினைமுற்றுதற்கு அவனுக்குத் துணை செய்யும் உணர்வுகள் பலவாகும். அவற்றை, ஆசிரியர் தொல் காப்பியனார், "நாளது சின்மையும் இளமையது அருமையும், தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும், இன்மையது இளிவும் உடைமையதுயர்ச்சியும், அன்பினது அகலமும் அகற்சிய தருமை யும், ஒன்றுப் பொருள்வயின் ஊக்கிய பகுதியும்[1]" என வகுத்து எடுத்துக் கூறியிருக்கின்றார். இவற்றைத் தூக்கித் தகுவனவற்றைத் தேர்ந்து மேற்கொள்ளும் வகையால் தலைமகன் மாண்பு சிறப் புறுகின்றது.

இடைச்சுரம் என்பது கடைக்கண் என்பது போலப் பின் முன்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை; இது விரியுங்கால், சுரத்திடை எனவரும்.

---

1. தொல். பொ. 41.

321. உலறுதலைப் பருந்தி னுளிவாய்ப் பேடை
அலறுதலை யோமை யங்கவட் டேறிப்
புலம்புகொள விளிக்கு நிலங்காய் கானத்து
மொழிபெயர் பன்மலை யிறப்பினும்
ஒழிதல் செல்லா தொண்டொடி குணனே.

இது, பிரிந்து போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகள் குணம் நினைந்து இரங்கிச் சொல்லியது.

ப. உரை: மொழிபெயர் பன்மலை இறப்பினும் என்றது பின்னும் செல்லும் வழியை நோக்கி எ. று.

உரை: காய்ந்த தலையினையுடைய பருந்தின் உளிபோற் கூரியதாய வாயினையுடைய பேடை, இலையின்றி உலர்ந்து விரிந்து தோன்றும் ஓமைமரத்தின் அழகிய கவைக்கிளையின்கண் இருந்து துயருற்று இசைக்கும், வறண்ட கானத்தையும் வேற்று மொழி பேசும் மக்கள் வாழும் மலைபல வுடைய நாடுகளையும் கடந்து செல்லினும், ஒள்ளிய தொடியையுடையாளின் காதல் கெழுமிய குணம் நினைவின்கண் தோன்றி வருத்துகிறது; இனிச் செய்யுமாறு என்னோ? எ. று.

மிக்க வெயிலால் தெறப்பட்டுக் காய்ந்தது போலத் தோன்றுதலின், உலறுதலைப் பருந்து என்றும், அதன் வாயலகு மிகக் கூரிதா யிருத்தலின், உளிவாய்ப் பேடை என்றும் குறித்தார். நுனி சிறிது வளைந்திருப்பது பற்றி "வளைவாய்ப் பருந்து[1]" என்பது வழக்கம். ஓமை மரத்தின் உயர்ந்து விரிந்த கிளைகள் வெயில் வெம்மையால் தழையுதிர்ந்து காணப்படுவதால் அலறுதலை ஓமை என்றார்; இளங்கோவடிகள், "அலறுதலை மராமும் உலறுதலை யோமையும்[2]" என்றாராக, அலறுதலை யென்றதற்கு விரிந்த தலையென அரும்பதவுரைகாரரும், உலறுதலை என்றதற்கு உலறுதல் தலைமுளிதல் என அடியார்க்கு நல்லாரும் பொருள் உரைத்தனர். கவடு, கிளை. தனித்திருந்து இசைக்கும் பருந்தின் குரல் துன்புற்றுப் புலம்புவது போறலின், புலம்புகொள இசைக்கும்

1. அகம். 79. 2. சிலப். 11 : 75.

என்ருர். "மொழிபெயர் தேஎம்[1]" என்ருர்போல வேற்றுமொழி வழங்கும் மக்கள் வாழும் நாட்டிடத்து மலைகள் மொழிபெயர் பன்மலை எனப்பட்டன. பருந்திற்கும் பேடைக்கும் இடைநிற்பன வற்றை "தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின் எச்சொல் லாயினும் இடை,நிலை வரையார்[2]" என்னும் சூத்திரத்து இலேசிஞல் அமைக்க.

பசுந்தழை போர்த்த காடும் பைந்தமிழ் வழங்கும் மலைகளும் இன்றி உலறுதலைப் பருந்தும் அலறுதலை ஓமையும் உள்ள காடுகளும் வேறுமொழி வழங்கும் மக்களுமே காணப்படுதலால், காதலியை மறந்திருந்த தலைமகனது உள்ளத்தில் தன் துணைப் பருந்தினைப் பிரிந்து தனித்து உறையும் பெடைப்பருந்தின் புலம்புகுரல், அப்பெற்றியளாய் வருந்தும் தலைமகளது ஆற்ருமை வடிவை மனக்கண்ணில் தோற்றுவித்தலின், ஒண்டொடி குணனே என்றும், காடும் மலையும் நாடும் பிறவும் கடந்து நெடுஞ்சேண் போந்தவழியும் காதலியின் குணமும் செயலும் நெஞ்சில் தோன்றியதுபற்றி ஒழிதல் செல்லாது என்றும் கூறினன். (321)

322. நெடுங்கழை முளிய வேனி னீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயின முன்னே யினியே
ஒண்ணுத லரிவையை யுள்ளுதொறும்
தண்ணிய வாயின சுரத்திடை யாறே.

இஃது, இடைச்சுரத்துக்கண் தலைமகன் தலைமகள் குணம் நினைத்தலின் தனக்குற்ற வெம்மை நீங்கியது கண்டு சொல்லியது.

உரை: ஒள்ளிய நுதலினையுடைய அரிவையாவாளைப் பிரிந்து செல்லத் துணிந்த காலத்துச் சுரத்திடையே யுள்ள வழிகள், நீண்ட மூங்கில்கள் உலறுமாறு வேனில் நீடுதலால் மிக்க கதிர் களையுடைய ஞாயிறு கற்களும் பிளவெய்துமாறு காய்தலின், முன்பு வெய்யவாய்த் தோன்றின; அவளைப் பிரிந்து இச்சுரத்திடை

1. அகம். 67. 2. தொல். சொல். 237.

எய்தும் இப்பொழுது அவை அவளை நினைக்குந்தோறும் குளிர்ச்சியைப் பயந்து தண்ணியவா யிராநின்றன எ. று.

வெயில் மிக்கவழி மூங்கில் பசுமை யிழந்து உலர்ந்து கெடுவது இயல்பாதலின், நெடுங்கழை முளிய வேனில் நீடி என்றார். நீடி என்னும் செய்தெனெச்சம் காரணப் பொருட்டு. ஞாயிற்றின் வெம்மை மிகுதி விளங்கக் கடுங்கதிர் ஞாயிறு என்றும், கடுங்கதிர் தெறுதலால் கற்பாறைகளும் வலியிழந்து பிளந்து விடுமாறு தோன்றக் கல் பகத்தெறுதலின் என்றும் கூறினார். வேனிற்கும் ஞாயிற்றுக்கும் ஒற்றுமையுண்மையின் வேனில் நீடி ஞாயிறு தெறுதலின் என இயைத்து, முடித்தலும் ஒன்று. முன்னே என்றது, மனையின்கண் இருந்த பிரிவு நினைந்த காலத்தைச்சுட்டி நின்றது.

பிரிவுள்ளியவிடத்துத் தலைமகளின் காதலும் ஆற்றாமையும் எழுந்து ஒருபுடை வருத்த, பொருள்வயின் எழுந்த ஊக்கம் ஒருபால் ஈர்ப்ப, நடுநின்ற தலைமகன், வேனில் நீட்டமும், வெயிலவன் வெம்மையும், ஆற்றது அருமையும் உள்ளவாறு கண்டு உணர்ந்தானாகலின் வெய்ய வாயின முன்னே என்றும், பிரிந்து போந்தவன் சுரத்திடைக் காட்சிகள் அவளை நினைப்பிக்க நினைந்துழி, அந்நினைவு அவ்வெம்மை முதலாயினவற்றை மறைத்துத் தலைமகளுடைய அரும்பண்புகளைக் காட்டி இன்பத்தால் அவன் உள்ளத்தைக் குளிர்ப்பித்தமையின், ஒண்ணுதல் அரிவையை உள்ளுதொறும் என்றும் கூறினான். இவற்றுள், மெய் முதலிய கருவிகளின் உறுதல் முதலிய புலனுணர்ச்சிகள் உள்ளம் ஒன்றாவிடத்து நிகழா; சுரத்திடையே நிலவும் வேனில் வெம்மையும் ஞாயிற்றின் கடுமையும் தலைமகன் மெய்ப்பட்ட போதும், அவன் உள்ளம் தலைமகளின் காதலன்பில் தோய்ந்த இன்புற்றமையின் அவற்குப் புலனாகா தொழியவே தண்ணியவாயின என்றான். இவற்றுள் முன்னது அகற்சியது அருமையும், பின்னது அன்பினது அகலமும் ஒன்றாப் பொருள் வயின் ஊக்கிய பகுதிகளாம்.

''கரணத்தி னமைந்து முடிந்த காலை[1]'' என்ற சூத்திரத்து ''மீட்டுவரவு ஆய்ந்த வகையின் கண்ணும்'' என்பதற்கு இதனைக் காட்டி, ''இஃது இடைச்சுரத்துத் தலைவி குணம் நினைந்து இரங்கியது[2]'' என்பர் நச்சினார்க்கினியர்; இளம்பூரணர், இஃது இடைச்சுரத்துக் கூறியது என்று ஒழிவர். (322)

323. வெள்ளெயிற்றுச் செந்நாய் வயவுறு
பிணவிற்குக்
கள்ளியங் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ்சுரக் கவலை நீந்தி
வந்த நெஞ்சநீ நயந்தோள் பண்பே.

இஃது, இடைச்சுரத்துத் தலைமகள் குணம் நினைந்த தலைமகன் ''அவள் பண்பு வந்தன'' என உவந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

உரை: நெஞ்சே, நீ காதலிக்கும் தலைமகளுடைய பண்புகள், கூரிய பற்களையுடைய செந்நாய், வயவுநோய் கொண்டு வருந்தும் தன் பெண்ணாய் பொருட்டுக் கள்ளி நிறைந்த சுரத்திடையே பன்றியின் வரவினை நோக்கியிருக்கும் கொடிய காட்டின்கண் கவர்த்த வழிகள் பலவும் கடந்து வந்தன, காண் எ. று.

வள்ளெயிறு என்றவிடத்து வள், கூர்மை, செந்நாய், காட்டில் வாழும் நாய்வகை. இது காடுகளில் கூட்டம் கூட்டமாய் வாழும் இயல்பிற்று; நாட்டில் வாழும் நாய் போலாது தன் பெண்ணாயிடத்து மிக்க அன்பு செய்யும் பெற்றிமையுடையது. இதனை அம்சதேவர் விருகம், கோகம், ஈபாமிருகம் என மூவகைப்படுத்துவர் இந்நாய்வகை மூன்று முதல் நான்கு திங்களில் கருமுதிரும் என்பர். வயவு, வயாநோய்; ''வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்[3]'' என்ப. கடம், கள்ளியும் முள்ளியும் பரற்கற்களும் நிறைந்த பாலை நிலம். கேழல், காட்டுப்பன்றி. செந்நாய் தன் பெண்ணாயின் பொருட்டுப் பன்றியை வேட்டுண்ணும் திறத்தைப் பிற

1. தொல். பொ. 146. 2. ஷை. ஷை. 48. 2. தொல். சொல். 371.

சான்றோரும். ''மென்புலிற் றம்பிணவு பசித்தெனப் பைங்கண், செந்நா யேற்றை கேழல் தாக்க[1]'' என்பது காண்க. வந்த, அன் பெருதுநின்ற அகரவீற்றுப் பலவறி சொல். பண்பு, உருவும் நிறமும் குணமும் செயலும் பிறவுமாகிய மாண்புகள்.

செந்நாயேற்றை தன்பிணவின் பசிக்கு உணவு வேண்டிப் பன்றியின் வரவுநோக்கி இருத்தலைக் கண்டவிடத்துத் தலைமகன் நெஞ்சம் தலைமகளை நினைத்தலும், அவளுடைய குணம் செயல்கள் மனக்கண்ணில் தோன்றக் கண்டு மகிழ்வான், நெஞ்சமே, நீ நயந்தோள் பண்பு ஈண்டும் வந்தன, காண் என்றான். வெவ்விய சுரநெறியையும் கடந்து நம்பாற் கொண்ட பெருங்காதலால் இவண் வந்தன என்றது அன்பினது அகலம் சுட்டி நின்றது. ''சேயர்என்னுது அன்புமிகக் கடைஇ, எய்த வந்தனவால் தாமே, நெய்தல் கூம்புவிடு நிகர்மல ரன்ன, ஏந்தெழில் மழைக்கண் எங் காதலி குணனே[2]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. (323)

324. எரிகவர்ந் துண்ட வென்றூழ் நீளிடைச்
சிறிதுகண் படுப்பினுங் காண்குவென் மன்ற
நள்ளென் கங்கு னளிமனை நெடுநகர்
வேங்கை வென்ற சுணங்கின்
தேம்பாய் கூந்தன் மாஅ யோளே.

இது, பிரிந்து வந்த தலைமகன் தலைமகளை நலம்பாராட்டக் கண்ட தோழி, ''இவள் குணத்தினை மறந்து அமைந்தவாறு யாது?'' என வினவினாட்கு அவன் சொல்லியது.

உரை: காட்டுத்தீ எழுந்து பகலே யன்றி இரவுப் போதினும் எரித்துச் செல்ல, பகற்போதில் வெயில் மிக்கு வருத்தும் நீண்ட சுரத்திடையே, யான் சிறிது கண்ணயர்வே னாயினும், அச் சிறு பொழுதின்கண், நள்ளென்னும் கங்குல் யாமத்துப் பெரிய மனை யகத்து நின்ற நெடிய பேரகத்தே நிறத்தால் வேங்கை மலர்போல வீறுபெற்ற சுணங்கினையும், தேன்சொரியுங் கூந்தலையும் மாமை

1. அகம். 21. 2. அகம். 83.

நிறத்தினையுமுடைய தலைமகளைத் தெளிவாகக் கண்டு அமைந்தேன்; ஆகலின், இவள் குணத்தினை யான் மறக்கு மாறில்லை எ. று.

காட்டின்கண் நிற்கும் மூங்கில்கள் காற்றால் தம்மில் இழையப் பிறக்கும் தீ, அயலிடம் பரந்து எதிர்ப்பட்ட பொருள்களை எரித்துக் கொண்டு செல்லுதலின், எரிகவர்ந்துண்ட என்றார். இனி, வெயில் வெம்மையால் கரிந்து கிடக்கும் தழைகளையும் புற்களையும் விலங்கினம் மேயாமையின் கானவர் தீ யிட்டுக் கொளுத்தி விடுதலும் உண்டு; அவை வெந்து சாம்பராய்க் கழியின் கோடை மழையால் புதுப்புல்லும் புதுத்தளிரும் தோன்றி ஆனிரைகட்கு மேயல் ஆகும் என்பது கருத்து. இவ்வாறு தோன்றிய தீ, இரவும் பகலும் அவியாது எரிந்துகொண்டே செல்லுமாதலால் இரவிற் காட்டுத் தீயின் வெம்மையும் பகற்போதில் ஞாயிற்றின் வெம்மையும் சுரத்தின்கண் நிலவுதலின், மக்கட்கு நல்லுறக்கம் எய்தாமையின், சிறிது கண்படுதலையே விதந்து கூறினர். மகளிர் சுணங்கிற்கு வேங்கைமலர் உவமையாதலை, ''வேங்கை ஊழுறு நறுவீ கடுப்பக் கேழ்கொள, ஆகத் தரும்பிய மாசறு சுணங்கினள் [1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. நள்ளென்கங்குல், நள்ளிரவு. தேன் என்றது தேம் என நின்றது [2].

காட்டுத்தீயால் வெந்தொழிந்ததன் மேலும் வெயில் மிக்குத் தெறும் நீளிடை எனினுமாம். வெப்ப மிகுதியால் தலைமக்கள் நெடிதுறங்கா ராகலின், அது தோன்றச் சிறிது கண்படுப்பினும் என்றான். அல்லதூஉம், வினைமேற்சென்றார்க்கு அது முற்றுங் காறும் நெடிய வுறக்கம் வாராதாகலின், இவ்வாறு கூறினன் எனினுமாம். உறங்கும்பொழுது அவளைக் கனவின்கட் கண்டும் கூடியும் மகிழ்ந்தேன் என்பான், காண்குவென் மன்ற என்றான். இறந்தகாலத்தாற் கூறற்பாலதனை எதிர்காலத்தாற் கூறியது தெளிவுபற்றி. வேங்கை வென்ற சுணங்கின், தேம்பாய் கூந்தல் மாஅயோளே என்றது அவள் நலம் பாராட்டியது.

''இன்பத்தை வெறுத்தல் [3]'' என்னும் சூத்திரத்து, ''நலத்தக நாடின் கலக்கமும் அதுவே'' என்புழிக் கலக்கத்தை வேறு

1. அகம். 174. 2. தொல். எழுத்து. 341. 3. டை.பொ. 270.

பெயர்த்து வைத்த இலேசினுல் தலைமகற்கும் இம் மெய்ப்பாடுகள் எய்த வைத்தமையின், சிறிது கண்படுப்பினும் காண்குவென் மன்ற என்றது கனவொடு மயங்கல். 'நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல, இன்றுயில் எடுப்புதி கனவே, எள்ளார் அம்ம துணைப்பிரிந்தோரே[1]'' எனச் சான்ருேர் கூறுவது காண்க.

''கரணத்தி னமைந்து[2]'' என்ற சூத்திரத்து ''எண்ணருஞ் சிறப்பின்கி ழவோன் மேன'' என்புழிச் 'சிறப்பின்' என்றதனுல் இதனை அமைப்பர் நச்சினுர்க்கினியர். (324)

325. வேனி லரையத் திலையொலி வெரீஇப்
போகில்புக வுண்ணுது பிரிதுபுலம் படரும்
வெம்பலை யருஞ்சுரம் நலியா
தெம்வெங் காதலி பண்புதுணைப் பெற்றே

இது, பிரிந்து வந்த தலைமகன் '' சுரத்தின் வெம்மை எங்ஙனம் ஆற்றினீர் ?'' என்ற தோழிக்குச் சொல்லியது

உரை: வேனிற் காலத்து எழுந்த சூரைக் காற்ருல் அலைப்புண்ட அரசமரத்தின் இலைகள் அசைதலால் உண்டாகிய ஓசையை அஞ்சிப் பறவைகள் தாம் இரை தேடி உண்டலைச் செய்யாது வேற்றுநிலங்களை உள்ளிச்செல்லும் வெப்பம் பொருந்திய அரிய சுரம், எம்மால் விரும்பப்பட்ட காதலியின் குணங்களை துணையாகப் பெற்று யாம் சென்றே மாகலின் எம்மை வருத்தா தாயிற்று எ. று.

அரையம், இக்காலத்தே இஃது அரசமரம் எனமருவி வழங்கும் ; முன்னுளில் அரை யென்றே நின்று பின்பு புணரியல் நிலையிடைப் பெற்ற அம்முச் சாரியையை இறுதியாகக் கொண்டு வழங்குவதாயிற்று ; '' பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும், நினையுங்காலை அம்மொடு சிவணும்[3]'' என்பது காண்க. இங்கே கூறிய ஆவிரை, ஆவிரமென நின்று ஆவாரம் என மருவிவிட்டது.

1. குறுந். 147. 2. தொல்.பொ. 146. 3. ஷி. எழு. இளம். 284.

இந்த அரையம் பனிக்காலத்து இலைமுதிர்ந்து வேனில் தொடக்கத்தில் இலையுதிர்ந்து முதுவேனிற் காலத்துப் புதுத்தளிர் ஈன்று பொலிவுறும். இப்பாட்டு இளவேனிற் காலம் என்பது போதர வேனில் அரையத்து இலையொலி என்றார். அரையத்தின் முதிர்ந்த இலை காற்றில் அலைப்புண்டு செய்யும் ஒலி, படைவரவு போலவும் விலங்கின் கூட்டம் வருவது போலவும் இருத்தலால் புள்ளினம் அஞ்சுவன வாயின. போகில். புள்ளினம் உயர்ந்த மரக்கிளையில் கூடமைத்து வாழ்தல் பற்றிப் புள்ளினைப் போகில் என்பது காரணப் பெயர். புகா உணவு ; ஈண்டுப் புகவு என நின்று அரையத்தின் கனிமேல தாயிற்று. வெங்காதலி என்ற விடத்து வெம்மை வேண்டற் பொருட்டு. வெம்பல், வெப்பம். ஐ, சாரியை. ''வெயில் வீற்றிருந்த வெம்பலை யஞ்சுரம்''[1] என்றார் பிறரும்.

உள்ளம் துணையாகப் பிரிந்து செல்லும் தலைமகன், தலைமகளின் உருவும் நிறனும் நலனுமாகிய பண்புகளை நினைந்து மனக்கண்ணிற் கண்டு மகிழ்ந்து சென்றான் என்பது தோன்ற, எம் வெங்காதலி பண்பு துணைபெற்று என்றும், அதனால் உளதாகிய இன்பத்தால் உளங்குளிர்ந்து சென்றமையால் புறத்தே கிடந்த அருஞ்சுரம் எம் நெஞ்சினை வருத்தும் வெம்மையாகிய மதுகை இழந்தது என்பான் அருஞ்சுரம் நலியாது என்றும் கூறினான். வெம்பலை யென்றது சுரத்தின் அருமையைச் சிறப்பித்த தாயினும், பிரிந்து செல்லும் தலைமகன் உள்ளத்திற் புகுந்து வருத்தமாட்டாதாயிற்று என்பது முடித்தற்கு. வெம்பலை அருஞ்சுரம் என்ற இஃது அன்புதொக நிற்றல். (325)

326. அழலவிர் நனந்தலை நிழலிடம் பெறாது
மடமா னம்பிணை மறியொடு திரங்க
நீர்மருங் கறுத்த நிறம்பா வியவின்
இன்னா மன்ற சுரமே
இனிய மன்றயா னொழிந்தோள் பண்பே

---

1. நற். 84.

இஃது, இடைச்சுரத்து வெம்மை ஆற்ருனுகிய தலைமகன் தலைமகள் குணம் நினைந்து நொந்து சொல்லியது.

உரை: வெப்பம் மிக்க சுரத்தின்கண், நிழலுள்ள இடம் பெறலாகாமையினுல், மடமை பொருந்திய மானின் அழகிய பிணை தன் மறியோடு கூடி வருந்த, மழைநீரால் பக்கம் அலைக்கப்பட்டு இறப்பவும் சிறிதாய வழியினையுடைய சுரம் தெளிவாகத் துன்பம் தருவனவே; ஆயினும் யான் பிரிந்து நீங்கியவள் பண்புகள் மாத்திரம் இன்பந்தருவனவாம் எ. று.

சுரத்தின் வெம்மைமிகுதி தோன்ற, அழலவிர் நனந்தலை என்ருர். "அழல் திகழ் நனந்தலை[1]" எனப் பிறரும் கூறுவர். நனந்தலை, விரிந்த இடம்; ஈண்டுச் சுரத்தின் நடுவிடம். பசுமை யுள்ள முல்லைநிலத்துட் புகாது மடமையால் தன் மறியுடன் வெவ்விய சுரத்தில் இயங்குவது பற்றி, மடமான் அம்பிணை மறி யொடு திரங்க என்ருர். திரங்குதல், வெம்மையால் வாடுதல். மழைநீரால் அலைத்துச் சுருக்கப்பட்ட வழி என்றற்கு நீர் மருங்கு அறுத்த நிரம்பா இயவு என்ருர். ஒருவர் கால்வைத்து நடத்தற் குரிய அளவுதானும் அகலமில்லாத வழி நிரம்பா இயவு எனப் பட்டது. "அரித்தெழுந்து தோன்றி வழிநீர் அறுத்த சுரம்[2]" எனப் பிறரும் கூறுதல் காண்க.

மடமான்பிணை மறியுடன் தனித்து நிழலிடம் பெருது வருந்துவது, காணும் தலைமகனைத் தன் பிரிவாற்ருது தனிமை யுற்று வருந்தும் தலைமகளை நினைப்பித்து வருத்த, நீரால் அறுக்கப் பட்டுச் சிறிதாய வழி அவன் இனிது செல்லாவாறு இடையூறு செய்வது கண்டு வருந்துகின்றமையின், இன்ன மன்ற சுரமே என்றும், அந்நிலையில் தலைமகளின் பண்பு தோன்றி அவன் உள்ளத்துக்கு உவகையும் ஊக்கமும் நல்கி இன்பம் செய்தலின், இனிய மன்ற யான் ஒழிந்தோள் பண்பே என்றும் கூறினுன். "திறன்மாண்டு திருந்துக மாதோ நும் செலவு[3]" எனத் தலை மகள் உரைத்த சொல்லை நினைந்து ஊக்கம் கொண்டான் என அறிக. (326)

---

1. அகம். 169. 2. திணை. ஐம். 11. 3. அகம். 299.

327. பொறிவரித் தடக்கை வேத லஞ்சிச்
சிறுகண் யானை நிலந்தொடல் செல்லா
வெயின்முளி சோலைய வேயுயர் சுரனே
அன்ன வாரிடை யானும்
தண்மை செய்தவித் தகையோள் பண்பே.

இது, பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின்கண் தலைமகள் குணம் நினைந்து இரங்கிச் சொல்லியது.

உரை : பொறிகளையும் வரிகளையுமுடைய பெரிய கை வேதற் கஞ்சிச் சிறிய கண்களையுடைய யானைகள் நிலத்தைத் தொட வியலாத வெயிலால் உலர்ந்த சோலைகளை யுடையன மூங்கில் உயரமாக வளர்ந்த சுரங்கள்; இப்பெற்றியவாய செல்லுதற்கரிய நெறியிடத்தும் இவ்வழகுடையாளின் பண்புகள் வெப்பம் தோன்றா வாறு தட்பம் செய்தன எ.று.

நீண்ட பெரிய கையாயினும் நிலத்தின் வெம்மைக்கு ஆற்றாது என்பார், பொறிவரித் தடக்கை என்றும், சிறு கண்ணையுடையதாயி னும், நிலத்திற் படாதவாறு ஓம்புதல் தோன்றச் சிறுகண் யானை என்றும் சிறப்பித்தார். ஒருபால் யானை நிலம்தொடல் செல்லாத வெம்மை நிலமும், ஒருபால் வெயிலால் உலர்ந்த சோலையும் உடைய சுர நெறிகள் என்றுமாம். ஆரிடை, செல்லுதற்கரிய இடம். ஆன், இடப்பொருட்டு; " ஆன்வந்தியையும் வினைநிலை யானும்[1]" என்றார்போல. தொடல்செல்லா என்பது ஒரு சொல்லாய்ப் பெயரெச்சமாய் வெயிலொடு முடிந்தது. உம்மை, சுரத்தின் செலவருமை உணர நின்றமையின் சிறப்பு.

தலைமகளின் அழகிய உருக்கண்ணில் தோன்றுதலின், இவ் வெனச் சுட்டியும், தன்னாற் காதலிக்கப்பட்டார்க்கு வருத்தம் தோன்றியவிடத்து ஆர்வலர் தோன்றி ஆவன புரிதல் தகுதியின் பாற்படுதலின் இவள் என ஒழியாது இத்தகையோள் என்றும் கூறினான். (327)

---

1. தொல். சொல். 234.

328. நுண்மழை தளித்தென நறுமலர் தாஅய்த்
தண்ணிய வாயினும் வெய்ய மன்ற
மடவர லின்றுணை யொழியக்
கடமுதிர் சோலைய காடிறந் தேற்கே.

இது, ''மழை வீழ்தலாற் சுரம் தண்ணென்றது; இனி வருத்தமின்றிப் போகலாம்'' என்ற உழையரை நோக்கித் தலைமகன் சொல்லியது.

உரை: மடப்பம் பொருந்திய இனிய துணைவியைப் பிரிந்து சுரத்தையும் அதனைச் சூழ்ந்த மரச்செறிவுகளையுமுடைய காட்டினைக் கடந்து போந்த எனக்கு, நுண்ணிய துளிமழை பெய்தமையால் நறிய மலர்கள் உதிர்ந்து பரந்து தண்ணியவாய்த் தோன்றினும், அவை வெய்யவாகவே இராநின்றன எ. று.

தளி, மழைத்துளி. தளித்தல் ஈண்டுப் பெய்தல் என நின்றது. மடவரல், மடப்பம்; அழகுமாம். கடம், பாலை நிலம். சோலைய காடு என்றவிடத்துச் சோலைய என்றது பெயரெச்சக் குறிப்பு.

மழை தளித்தென நறுமலர் தாஅய்த் தண்ணிய என்றது, உழையர் கூற்றினைக் கொண்டு கூறியது. தலைமகன் உள்ளம், ''ஆண்மை வாங்கக் காமம் தட்பக், கவைபடு நெஞ்சம் கட்கண் அசைய[1]'' ''களிறுமாறு பற்றிய தேய்புரிப் பழங்கயிறு போல[2]'' வருந்துவது கண்ட உழையர், கடத்தின் வெம்மையால் ஆற்றுறுயினன் போலும் எனக் கருதி நுண்மழை தளித்தென நறுமலர் தாஅய்த் தண்ணிய என்றாராக, இம் மழைப்பெயலைக் காணின், தலைமகள், தான் பிரியுங்கால் குறித்த பருவமெனக் கருதித் தன்னை எதிர்நோக்கி என்னுகுவளோ என நினைந்து, வருத்தம் மீதூர்ந்தமையின், தலைமகன், வெய்ய மன்ற என்றும், அவளுடைய இளமையும் இனிய துணைமையும் நோக்கத் தான் பிரிந்துபோதரல் கூடாது என்பான் போல மடவரல் இன்துணை ஒழியக் கடமுதிர் சோலைய காடு இறந்தேற்கே என்றும் கூறினன். (328)

1. அகம். 339. 2. நற். 284.

329 ஆள்வழக் கற்ற பாழ்படு நனந்தலை
வெம்முனை யருஞ்சுர நீந்தி நம்மொடு
மறுதரு வதுகொ ருனே செறிதொடி
கழிந்துகு நிலைய வாக
ஒழிந்தோள் கொண்டவென் னுரங்கெழு
நெஞ்சே.

இஃது, இடைச்சுரத்தின்கண் மீளலுறும் நெஞ்சினை நொந்து தலைமகன் உழையர்க்குச் சொல்லியது.

உரை: தோளிடைச் செறிந்துநின்ற வளைகள் நெகிழ்ந்து நீங்கும் நிலைமையினை எய்த, மனையில் தவிர்ந்துறையும் தலைமகளாற் கொள்ளப்பட்ட என் திண்மை பொருந்திய நெஞ்சம், மக்கள் வழங்குத லில்லாத பாழ்பட்ட இடத்தினையுடைய வெவ்விய ஆறலைப்போர் புலமாகிய அரிய காட்டினைக் கடந்து நம்மொடு வாராது மீளுதலைக் கருதுங்கொல்லோ, இஃது என் எ. று.

ஆள், மக்கள். "ஆள் வழக்கற்ற சுரத்திடைக் கதிர்தெற[1]" என்ருர் பிறரும். வெம்முனை ஆறலைப்போர் உறையும் வெவ்விய புலம்; "வெம்முனை யருஞ்சுரம் முன்னியோர்க்கே[2]" என்று பிறரும் வழங்குப. மறுதருவது, மீளுறுவது. "சென்ற தேஎத்துச் செய்வினை முற்றி, மறுதரல் உள்ளத்தர் எனினும்[3]" என்பதனுல் அறிக. இது மறுத்தரல் என்றும் வருவதுண்டு. "பின்னிய தொடர் நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்துநீ, மன்னிய புணர்ச்சியான் மறுத்தரல் ஒல்வதோ[4]" என்பது காண்க. மறு தருவது கொல் என்றமையின் அதற்கேற்ப வாராது என்பது வருவிக்கப்பட்டது.

தான் பிரிந்தவிடத்துத் தலைமகள் தன் பிரிவுள்ளி உடம்பு மெலிந்து வருந்துகின்ருள் என நினைந்து ஆற்ருளுகலின், செறிதொடி கழிந்துகு நிலைய வாக என்றும், ஆள் வழங்குதலற்றுப்

1. அகம். 51. 2. நற். 424. 3. அகம். 333.
4. கலி. 15.

பாழ்பட்ட இடத்தினையுடைய வெம்முனை அருஞ்சுரம் நீந்தி மேற் சேறற்கு வேண்டிய திண்மையுடையது என்பான், என் உரங்கெழு நெஞ்சு என்றும், செய்வினை யொன்று தொடங்கின் இடையில் மடங்க லாகாமையின், மடங்கி மீளலுறுதலை மறுதருவது என்றும், தலைமகளின் காதல் பற்றிய நினைவு மிகுந்து வருத்துதலால் வினை மேற்சென்ற நெஞ்சு செலவு தவிர்ந்து மீளத் துணியுமோ என்று தலைமகன் ஐயுறுவது தோன்ற மறுதருவது கொல் என்றும் உழையர்க்குக் கூறினன். ''உள்ளம் பிணிக்கொண்டோள்வயின் நெஞ்சம், செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும்[1]'' என வருவது காண்க.

''கரணத்தின் அமைந்து முடிந்த காலை[2]'' என்ற சூத்திரத்து, ''மீட்டுவரவாய்ந்த வகையின் கண்ணும்'' என்புழி இதனைக் காட்டி இது மீளலுறும் நெஞ்சினை நொந்து தலைவன் உழையர்க்குக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர். (329)

330. வெந்துக ளாகிய வெயிற்கட நீந்தி
வந்தன மாயினு மொழிகினிச் செலவே
அழுத கண்ண ளாய்நலஞ் சிதையக்
கதிர்தெறு வெஞ்சுர நினைக்கும்
அவிர்கோ லாய்தொடி யுள்ளத்துப் படரே.

இது, பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின்கண் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

உரை: விளக்கமும் திரட்சியும் பொருந்திய ஆராய்ந்து கொள்ளப்படும் தொடியினையுடையாளது மனத்துளதாகிய நினைவு, கண்களில் நீர் சோரவும், ஒப்பனை செய்யப்பட்ட மேனிநலம் கெட்டொழியவும், வெயில்தெறும் கொடிய சுரத்தின்கண் நமது செலவின் மேற்றாய் அவளை வருத்துமாகலின், வெவ்விய துகள் மிக்க வெயில் காயும் காட்டினைக் கடந்து வந்துளேம் எனினும், நெஞ்சே, மேலே செல்லுதலை இனி ஒழிவாயாக எ. று.

---

1. நற். 284. 2. தொல். பொ. 146.

வெந்துகள், வெயில் வெம்மையால் கல்லும் மண்ணும் கட்டுடைந்து ஆகிய நுண்ணிய பொடி; ஆதலால், அப்பொடி வெந்துகள் எனப்பட்டது. வெயிற்றுகள்[1] என்றதும் இதுவே. மிக நுண்ணிதாயினும் வெம்மை செய்தலில் நீங்காமையின் வெந்துகள் என்ருர். கடம், பாலைநிலம். கடத்திடை நிலவும் காற்றும் நீரலைபோல் அலையலையாய்ப் போந்து மோதும் இயல் பிற்ருதலின், அதனை எதிர்த்துச் செல்லும் செலவினை நீந்தி என உரைத்தார். கடலகமும் இவ்வாறு காற்று மோதும் சுரம் போறலின், கடற் செலவைக் குறிக்கும்போதும் சான்ருேர், "திமில்மேற் கொண்டு திரைச்சுரம் நீந்தி[2]" என்பது காண்க. ஆய்நலம், ஆயத்தாரால் ஆய்ந்து செய்யப்பட்ட அழகு. நன்கு கடைதலால் ஒளியும், ஆயத்தார் நன்றென ஆராய்ந்து கொள்ளப் பட்டமையால் சிறப்புமுடைய தொடி, அவிர்கோல் ஆய்தொடி எனப்பட்டது; "இலங்குகோல் ஆய்தொடி நெகிழ[3]" என்ருர் பிறரும். படர், உள்ளுதல்[4]. படர், நினைக்கும்; இனி, செலவு ஒழிக என முடிக்க.

பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின்கண் நெஞ்சொடு கூறி இரங்குகின்ரு ஞகலின், வெயிற்கடம் நீந்தி வந்தனம் என்ருன். உம்மை, கடத்தற்கரிய சுரத்தினை நீந்திப் போந்தவன் இனிச் செயற்பாலது மேற்கொண்ட செலவேயாயினும் ஒழிதல் நன் றென்பான் போல, ஒழிக இனிச் செலவே என்ருன். இஃது அகற்சிய தருமை. தான் கண்ட சுரத்தின் வெம்மையைத் தலை மகள் உள்ளியவிடத்து ஆற்ருது வருத்தமுற்றுக் கலுழ்வாள் என்பான், அழுத கண்ணள் என்ருன்; பிரிவின்கண், தலைமகள் ஆற்ருது கண்ணீர் சொரிந்தது அவன் கருத்தில் நன்கு பதிந்து கிடத்தலின் இவ்வாறு கூறினன் என்றுமாம். அக்காலை, அவளை ஆற்றுவிப்பான் கூறியவற்றுள், "நோய் முந்து உறுத்து நொது மல் மொழியல் நின் ஆய்நலம் மறப்பனே மற்றே[5]" என்றது நினைவின்கண் தோன்றுதலின், ஆய்நலம் சிதைய என்றும், நலம் சிதைய நினைக்குமாயின், யான் மறந்தவாரு மாகலின், செலவினைத்

1. பதிற். 20, 2, நற். 111. 3. அகம். 171.
4. தொல். பொ. 340. 5. அகம். 39.

தவிர்வதே இனிச் செயற்பாலது என்றலின், நினைக்கும் என்றும் கூறினான். இவ்வாறு செலவின்கண் இடைச்சுரத்து வெம்மை கண்டு இதனைத் தலைமகள் நினைக்கின் ஆய்நலம் சிதைந்து வருந்துவள் என்பது பற்றிக் கதிர்தெறு வெஞ்சுரம் நினைக்கு மாகலின், இனிச் செலவு ஒழிக என அழுங்கினானாயினும், அழுங்கும் நெஞ்சினைத் தேற்றிக் கொண்டு சென்று வினைமுடித் தல்லது மீளான் என அறிக. ''செலவிடையழுங்கல் செல்லாமை யன்று'' என ஆசிரியர் கூறுவது காண்க. கதிர்தெறு வெஞ்சுரம் என்றது, உற்றாரை வருத்துவதே யன்றிச் சேய்மைக்கண் இருந்து நினைத்தாரையும் நெஞ்சினைச் சுட்டு வருத்தும் என வெம்மை மிகுதி யுணர்த்தி நின்றது[1]''

1. இக்கருத்தையே வாங்கி, ''எரிசுடர்க் கடவுளும், கருதின் வேம் உள்ளமும் கானில்வேம் கண்களும்'' (பால. தாடகை. 6.) எனக் கம்பரும் கூறுவது காண்க.

34

தலைவி இரங்குபத்து

உலகில் காணப்படும் உயிர்ப்பொருள் அனைத்தும் உணவுண்டு உடல்வளர்த்தலும் இனம் பெருக்குதலும் என்ற இரண்டையுமே தொழிலாகக் கொண்டுள்ளன. உடல்வளர்ச்சி, இனம் பெருக்கும் வளம் குன்றியதும் தளர்ச்சியுற்று வீழ்ந்தொழிகிறது. எனவே, உலகில் நிலவும் உயிர்வாழ்வு முற்றும் பொதுவகையாக நோக்கு மிடத்து இனம் பெருக்குதலைக் குறிக்கொண்டு நிற்பது உணரப் படும். உலகில் தோன்றும் போது, உயிர், உடம்போடு உடன் தோன்றினும், நீங்கும் போது தான் நின்ற உடம்பை விட்டுத் தனித்து நீங்கிவிடுகிறது. ''குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே, உடம்போடு உயிரிடை நட்பு[1]'' எனத் திருவள்ளுவரும் கூறுவர். இதனால் உடம்போடு கூடி நிற்கும்போது உடல் வளர்ச்சிக்கும் இனம் பெருக்குதற்கும் துணையாயிருந்து பின்னர் நீங்குவது உயிரின் பொதுத்தொழிலாதல் தெரியும். இனம் பெருக்குதலாவது, உயிரொன்று உடம்பொடு கூடி வேறு உயிர் கள் உலகில் தோன்றுதற்கு இடமாகிய உடம்பை உதவுவது என்பது.

மேலும், உண்ணுங்காலும் இனம் பெருக்குங்காலும் உயிர்கள் ஒருவகை அமைதி பெறுகின்றன. அந்த அமைதி இன்பம் என்று

1. குறள்.

வழங்கும், இந்த இன்பம் அவ்விருவகைத் தொழிற்கும் கூலியன்ருயினும், ஊதியமாக இருப்பது உணரத்தக்கது. இவ்வாற்ருல், உலகில் உயிர்கள், உடலோம்பல் இனம்பெருக்கல் என்ற இரண்டாலும் இன்பம் பெறுவது பயன் என்பது விளங்கும்.

மக்களுயிர் ஒழிய ஏனை உயிர்வகை பலவும் இந்தக் குறிக்கோளிலேயே உலகில் வாழ்கின்றன. மக்களுயிர் மாத்திரமே இந்தக் குறிக்கோளுக்கு மேலாக, இவ்வுலகில் பெறப்படும் இன்பம், அறிவொடுகலந்து நிலைபேறு உடையதாக இருத்தல் வேண்டும் என்றும், அதற்குத் துணையாவன அறமும் பொருளும் என்றும் அறிந்து, அறிவால் அறநெறியிற் பொருள் செய்து பேரின்பம் எய்துவதே வாழ்க்கையின் குறிக் கோளாகக் கொண்டுள்ளது. அதற்கேற்பவே, மக்களுயிர்க்கு உண்மையறிவும் மொழிவன்மையும் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

மக்களுயிர் தான் பெறக் கருதும் பேரின்பத்துக்கு அறமும் பொருளும் துணையாவதை அறிந்து அவற்றின் வழி ஒழுகுங்கால் முடிவிலேயன்றி இடையிலும் இன்பம் பெறுகிறது. இடையில் பெறப்படும் இன்பம் இவ்வுலகிலும், முடிவில் பெறப்படும் பேரின்பம் உடம்போடு கூடுதலற்ற வீட்டுலகிலும் உள்ளன. உடம்போடு கூடியிருக்குங்கால் எய்தும் இன்பம் உடம்பளவாய் உலக வாழ்வோடே நின்று போவது; ஆயினும், இது மக்கள் உயிரை முடிவிற் பெறலாகும் பேரின்பப் பேற்றுக்கு ஊக்குகிறது. ஏனை உயிர்கள் இந்த இன்பத்தோடே அமைந்து விடுகின்றன.

இவற்றை நோக்கின், இவ்வுலகில் உடம்பொடு வாழ்தற்கண் நிகழும் இன்பநாட்டம், எல்லா உயிரிடத்தும் பொதுவாகக் காணப் படுவது உண்மையாகப் புலனுகிறது. இது பற்றியே ஆசிரியர், ''எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது, தான் அமர்ந்து வரூஉம் மேவற்ருகும்[1]'' என்றது பொருத்தமாதல் தெளியப்படும்.

இனி உடலுக்கு ஆக்கமாகும் உணவு வாயிலாக வரும் இன்பத்தினும், இன்பநாட்ட முடைய உயிர்கட்கு அவ்வுடலின்

1. தொல். பொ. 223.

சிறந்த பணியாகிய வேறு உடம்பு படைக்கும் பணிவாயிலாக வரும் இன்பம் பெரிதாகும். ஆதலால் மக்களுயி ரொழிந்த ஏனை உயிர்கள் இந்த இன்பத்தோடே அமைந்தொழிகின்றன. மக்கள் உடலோம்பும் பணியிலும் உடம்பு தரும் பணியில் இன்பம் பெரிதாதல் கண்டு, அந்த அளவில் அமையாது, அதன் இயல்பினை ஆராய்ந்து உடம்பு தரு பணி வாயிலாக இன்பம் எய்துமிடத்து, உடம்புக்கு உணவு தரும் பணி நல்கும் இன்பம் மிகவும் சிறிதாய்ப் புறக்கணிக்கப்படுவதைக் கண்டது. உணவுக்கே வாழ்வெல்லாம் செலவிடும் உயிர், உடம்புதரு பணியில் ஈடுபாடு குன்றி இனம் சுருங்கி முடிவில் வேரோடு மறைந் தொழிந்தமை தெரிந்தது. உணவுப்பணியை ஒழுங்குபடுத்தி உடம்புதரு பணியையும் நெறிப் படுத்திச் சென்றால் இவ்விரண்டிலும் எய்தும் இன்பத்தால் பேரின்பம் எய்துதல் கூடும் என்பது விளங்கவே மக்களுயிர், அறமும் ஒழுக்கமும் கண்டு அந்நெறியில் உணவுப்பணியும் உடம்புதரு பணியும் மேற்கொண்டு ஒழுகிவருவதாயிற்று.

இவ்வுடம்புதருபணி உடம்பொடு கூடிய ஓர் உயிரால் தன்னந் தனியே பெரும்பாலும் நடப்பதில்லை. ஒருசில உயிர்களே [1] அது செய்கின்றன. ஏனைய யாவும் வேறோர் உடம்பொடு கூடியே அதனைச் செய்கின்றன, ஓர் உடம்பு வித்துறையும் இடமாகவும், ஒருடம்பு அவ்வித்து வளரும் விளைநிலமாகவும் உள்ளன, வித்துடை யுடம்பு ஆணுடம்பு என்னும், விளைநிலமாகும் உடம்பு பெண்ணுடம்பு என்றும் வழங்கும்.

இவ்வுலகில் உயிர்க்கு இடமாகும் வகையில் உடம்பு, தன்னைப் போல் பிறிதோர் உயிர்க்கு இடமாகும் உடம்பு தருபணியிற் குறிக் கொண்டிருப்பதால் அதற்குரிய, உடற்கூறுகள் நிறையுங்காறும், உயிரைத் தன் வரை நிறுத்தித் தன்னைப் பேணுவதிலேயே ஒன்று விக்கும். வித்தும் வித்து வளரும் கருநிலமும் வளர்ச்சி நிரம்பியதும் ஆணுடம்பு பெண்ணையும் பெண்ணுடம்பு ஆணையும் அவாவத் தொடங்கும். நிறைவு என்பது கமம் என்னும் சொல்லாற் குறிக்கப்படும்; ''கமஞ்சூல் [2]'' என்று சான்றோரும், ''கமம் நிறைந்

1. Asexual. 2. முருகு. 7.

தியலும்[1]" எனத் தொல்காப்பியனாரும் கூறுவர். அவ் வியைபினால், உடம்புக்குரியவித்து நிறைவு வழிச் சிறக்கும் அவாக் காமம் என வழங்கும். ஆணும் பெண்ணும் ஒன்றையொன்று வேட்டு உடம்பு தரு பணியில் ஈடுபடும்போது அது காமக்கூட்டம் என்றும், அதற்கு முன்னணியாகத் தோன்றும் உயிர்த் தொடர்பு காதல் என்றும் வழங்கும். உயிரொன்றிய காமக் கூட்டத்தைத் தமிழ்ச்சான்றோர் காதற்காமம் என்று குறித்தனர். "காதற்காமம் காமத்துச் சிறந்தது[2]" என்பது காண்க.

நிலைத்திணை உயிர்கட்கு இக்காமக்கூட்டத்தை வண்டினமும் ஒருசில புள்ளினமும் காற்றும் விளைவிக்கின்றன ஏனை இயங்குதிணை யுயிர்கள் வேட்கைவழி நின்று பெறுகின்றன. மக்களினமும் இவ்வகையில் ஒன்றே ஆயினும், காமக்கூட்டத்துக்குப்பின் ஏனை உயிர்கள் ஆண் பெண்பற்றின்றி நீங்கிவிடுவதும், மக்களுயிர் பிரிவின்றி வாழ்க்கையியல் முடியுங்காறும் பிணிப்புண் டிருப்பதும் வேற்றுமையாகும்.

மக்களுயிர் ஒன்று தவிர ஏனையுயிர்கட்கு ஓரொரு காலத்தே உடம்புதரு வித்துக்கள் நிறைவுபெறும்; அக்காலத்தே தான் அவற்றிற்கு வேட்கை ஓங்கி நிற்கும். பிற காலங்களில் அவை ஆணும் பெண்ணும் உடனுறையினும் வேட்கை வயப்படுவதில்லை. மக்களுயிரின் வேட்கை உடம்புதரு குறிப்போடு உயிரொன்றிய கேண்மையால் "சிறந்தது பயிற்றும்" சிறப்புக்குறிப்பும் ஒருங் குடையது என அறிஞர் கூறுப. அதனால் மக்களுயிரின் வேட்கை ஏனையவற்றின் வேறுபட்டு இயலுகிறது[3].

மக்கள்வாழ்க்கையின் குறிக்கோள் பேரின்பப் பேருகலின், காமக்கூட்டத்துக்கு முன்னர் உண்டாகும் காதற்றொடர்பு, பின்னரும் கடைபோக நின்று உணவுப்பணியும் உடம்புதரு பணி யும் செய்து, அவ்வுடம்பு கொண்டு பெறலாகும் பேரின்பத்துக்குத் துணையாகும். "காமம் சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ் சான்ற

1. தொல். சொல். 355. 2. பரி, 9 : 14.
3. Eugenics and Sex Relations by Dr. M.H. Frank M.D. Ph.D. — p. 446.

மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே[1]'' என ஆசிரியர் உரைப்பது காண்க.

இந்நிலையில், ஆணும் பெண்ணுமாய்க் கூடி உடம்பு தருபணியில் ஈடுபடும் உயிரினத்துள், பெண்ணுயிர் பிறிதோர் உடம்பைத் தனக்குள் தோற்றுவித்து வளர்த்து வருவதும் பின்பு அதனைக் கருவுயிர்த்துப் புறத்தே வளர்த்து வருவதுமாகிய பெரும்பணியை மேற்கொள்ளுகிறது; தம்பால் தோன்றிய உயிர் தன் உணவுக்குரிய பணியைத் தானே செய்யக்கூடிய வன்மை பெறும்வரை உணவு தந்து ஓம்புதலைக் கடனாகக் கொள்ளும்; அதற்கிடையே அதன் உடம்பையும் தன்னுயிரும் உடம்பும் போலக் கருதும் கருத்தும் காதலும் பெண்ணுயிர்மாட்டு அமைந்துள்ளன. தற்பேணற்குரிய வன்மை வந்தபின் ஒன்றினொன்று பற்றின்றி நீங்கி விடுவது அஃறிணையுயிர்களின் இயல்பு. அதுவரை அதனிடத்தமைந்திருந்த காதல் தாய்மை எனப்படும். படவே பெண்ணுடம்பில் காதற் காமத்துக்கு அடிப்படை தாய்மைப் பண்பாதலும் விளங்கும்.

இனி, மக்களினத்துத் தாய்மைப்பண்பு, தான் ஈன்ற மக்களின் வாழ்நாள் முழுவதும் நின்று நிலவும். அவர்களிடத்தில் உண்மையறிவு ஓங்கிநிற்பதால். தாய்மையின் மாண்பு கண்டு உணவுக்குரிய புறப்பணியில் பெண்ணுயிரை விடுவதில்லை. ஆணுயிரே அப்பணியில் முன்னிற்கும் ; பெண்ணுயிர் உணவுப்பணியில் சிறிதும் உடம்பு தருபணியில் பெரிதும் ஈடுபடும்.

இம் மக்களினத்தில் தலைமக்கள் என்பார், உயர்நிலை மக்கட்குரிய நன்மாண்புகள் அத்தனையும் திரண்டு உருவெடுத்தாற் போலும் ஆடவரும் பெண்டிரு மாவர். உடம்புதரு பணிக்குரிய காதற்காமத் தொடர்பும், சிறந்தது பயிற்றற் குரிய உயிர்த் தொடர்பும் ஒருங்குடையர். ஈண்டைத் தலைமகள் தலைமைப்பண்பும் கட்டிளமையும் கொண்டு உடம்புதரு பணிக்கு ஏதுவாகிய தாய்மையுணர்வு தலைசிறந்து அப்பணியை ஆற்றுதற்கண் பெருவிதுப்புற்

---

1. தொல். பொ. 192.

றிருக்கின்ருள் ; அதற்கு இன்றியமையாத காதலனுகிய தலைமகன் பிரிந்திருக்கின்ருன். தாய்மைப் பணிக்கு முதலாகிய அவளது உடம்பு, உயிரைத் தன்னடிப்படுத்தித் தன் பணியை முற்றுவித்துக் கொள்வது குறித்து இடையீடின்றி நரப்புக்கால்தோறும் வேட்கைத் தீயைப் பரப்பி வெதுப்புகின்றது ; தனக்கு ஆக்கமும் அரணுமாகும் ஊணுறக்கங் களையும் அவள் உடம்பு வெறுத்து ஒதுக்குகின்றது. ஆயினும், தலைமகளாதலின், அவள் அறிவு அறைபோகின்ருளில்லை. ''செறிவும் நிறையும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும்[1]'' சிறக்க வுடையள் ; தலைமகற்குரிய அறவாழ்வு பொருள்வாழ்வு இன்பவாழ்வு ஆகிய எல்லாவற்றிற்கும் துணைவியாகலின், உடலின் இயற்கை விதுப்பினை அடக்கி அமைகின்ருள் ; மற்று, உடம்பு வழிப்பட்ட அவளது உள்ளம் பற்றுக்கோடில்லாத பூங்கொடி போல் துவண்டு அடிக்கடி வந்து தாக்கும் காமக்காற்ருல் அலைந்த வண்ணம் இருக்கியது. அந்நிலையில் அவள் இரங்கிக் கூறுவன பொருளாக வந்த பாட்டுக்கள் பத்தின் தொகுதி யாகலான், இது தலைவி இரங்குபத்து என்று பெயர் பெறுவதாயிற்று.

331. அம்ம வாழி தோழி யவிழிணர்க்
கருங்கான் மராஅத்து வைகுசினை வான்பூ
அருஞ்சுரஞ் செல்லுந ரொழிந்தோ ருள்ள
இனிய கமழும் வெற்பின்
இன்னு தென்பவவர் சென்ற வாறே.

இது, தலைமகன் பிரிந்துழி, ''செல்லும் வழியிடத்து மலையில் உளதாகிய நாற்றத்தால் நம்மை நினைந்து முடியச் செல்லார், மீள்வரோ'' எனக் கேட்ட தோழிக்கு, ''அவர் முடியச் சென்ருர்'' என்பது அறிந்து இரங்கித் தலைவி கூறியது.

ப. உரை : சென்ற சுரம் பிரிந்தார் தத்தம் துணைவியரை நினையும்படி வெறிகமழும் மலரை யுடைத்தாகலும் செலற்கருமை யால் இன்னுமை யுடைமையும் தலைவி இரங்குதற்குக் காரணமாயின எ. று.

1. தொல். பொ. 209.

உரை : தோழி, கேட்பாயாக : முறுக்குடைந்த பூங்கொத்துக் கிளையுடைய கரிய அடியினையுடைய வெண் கடம்புமரத்தின்கண் உள்ள சினைகளிற் பூத்த வெண்மலர்கள் செல்லுதற்கரிய சுரத்தைக் கடந்து செல்லுவோர் கண்டு தாம் பிரிந்து போந்த துணைவியரை நினைந்து அழுங்குமாறு இனிய மணம் நாறும் மலையிடத்து நம் தலைவர் சென்ற நெறி துன்பந்தரும் இயல்பினதென்று பலருங் கூறுவர், காண் எ. று.

மலர்ந்த பூக்களையுடைய கொத்து, அவிழ்இணர் எனப்பட்டது. "அரும்புமுதிர் அவிழிணர்[1]" என்றது காண்க. வைகுசினை, தாழ்ந்த கிளை. வெண்கடம்பின் அடி கரிய நிறமுடைமை பற்றிக் கருங்கால் மராஅம் என்றார்; பிறரும், கருங்கால் மராஅத்து வா அன் மெல்லிணர்[2]" என்றும், அதன் பூவின் வெண்மையை, "வாலிய சுதை விரிந்தன்ன பல்பூ மராஅம்[3]" என்றும் கூறுவர். இதன் பூவினிடத்து எழும் மணம் மகளிர் கூந்தலிடத்து எழும் மணம் போறலின், அருஞ்சுரம் செல்லுநர் உள்ள இனிய கமழும் என்றார். "அவிழிணர்த் தேம்பாய் மரா அம் கமழும் கூந்தல்[4]" என்று சான்றோர் கூறுதல் காண்க.

தலைமகன் பிரிவின்கண் தலைவி எய்திய வேறுபாடு கண்டோர், மராமரத்தின் இயல்பு கூறி, "ஆங்குச் செல்லும் தலைமகன் அது கண்டு நின்னை நினைந்து மீளுவன்" என்றும், அதற்கு அப்பா லுள்ள நெறியும் இன்னா தாகலின், அவன் மேலே செல்லான் என்றும் கூறினாராக, மராத்து வான்பூ இனிய மணம் கமழ்ந்து நம் காதலரை நம்மை மறவாவாறு நினைப்பிப்பது நன்று என்பாள். மராஅத்து வைகுசினை வான்பூ அருஞ்சுரம் செல்வோர் ஒழிந்தோர் உள்ள இனிய கமழும் வெற்பு என்றும், ஆயினும் அப்பால் செல்லற்குரிய வழி இன்னா தென்றலின், மேற்கொண்டு செல்லாது நம் நினைவும் வழி யின்னாமையும் காரணமாக வினைமுடியாது மீள் வராயின் வினையாண்மை இலர் என்பது பட்டு இளிவாம் என்று அஞ்சுகின்றேன் என்பாள், இன்னாது என்ப அவர் சென்ற ஆறே என்றும் கூறினாள். தலைமகன் வினைமேற் சென்றவிடத்து அவன்

1. ஐங். 146. 2. அகம். 127. 3. ஷ. 211. 4. நற். 20.

அதனை முடித்து மீளுதலையே தலைமகள் விரும்புவள் என அறிக; பிறண்டும், '' நோய்நாம் உழக்குவ மாயினும் தாம்தம் செய்வினை முடிக்க தோழி[1]'' எனத் தலைவி கூறுவது காண்க ஆறு இன்னா மையும் தலைவி இரங்குதற் கேதுவாகலின், இன்னாது என்ப அவர் சென்ற ஆறே என்றார்; '' அஞ்சுவரு மரபின் வெஞ்சுர மிறந்தோர் நோயிலர் பெயர்தல் அறியின், ஆழல மன்னோ தோழி என் கண்ணே[2]'' என்பதும் உண்டு.

வெஞ்சினை வான்பூ என்பது பாடமாயின் விரும்பப்படும் சினைகளிடத்து மலர்ந்த வெள்ளிய பூ என்றுரைக்க. விருப்பம், மலர்மிகுதியால் செல்வார் மணநுகர்தற்கும், கோடற்கும் விரும்புதல். (331)

332 அம்ம வாழி தோழி யென்னதூஉம்
அறனில மன்ற தாமே விறன்மிசைக்
குன்றுகெழு கானத்த பண்பின் மாக்கணம்
கொடிதே காதலிப் பிரிதல்
செல்ல லைய வென்னா தவ்வே.

இது, பிரிந்த தலைமகன் சுரத்திடைக் கழியச் சென்றான் என்பது கேட்ட தலைமகள் அங்குள்ள மாக்களை நொந்து தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி கேட்பாயாக: சிறந்த உச்சிகளையுடைய குன்றுகள் பொருந்திய கானகத்தின் கண்ணவாகிய நற்பண் பில்லாத மாக்களின் கூட்டம் எத்துணையும் அறமில்லாதனவேயாம்; '' ஐய, காதலியைப் பிரிதல் கொடிதாகலின், இனிச் செல்லற்க '' என்று கூறாதொழிந்தன வாகலான் எ. று.

விறல், ஈண்டு உயர்ச்சிமேல் நின்றது. மிசை, உச்சி. கானத்த, கானம் என்னும் பெயரடியாக வந்த பெயரெச்சக்குறிப்பு. கானத்த மாக்கணம், பண்பின் மாக்கணம் என இயையும். அன்பு பண்பும் அறம் பயனுமாதலின், அன்பில்லாமைபற்றி அறனில

1. அகம். 155. 2. ஷை. 375.

வாகிய மாக்கணத்தை அன்பில் மாக்கணம் என்றார். மாக்கணம் அறனில மன்ற என்றது மேற்கோள்; செல்லல் ஐய என்னு தவ்வே என்றது ஏது, கொடிதே காதலிப் பிரிதல் செல்லல் என்றது மான்கணம் கூறல் வேண்டுமெனக் கருதி யுரைக்கும் கூற்று.

எஞ்ஞான்றும் தம் துணையைப் பிரியாதுறையும் மாக்கணம், அப்பண்பு குறித்துப் பிரிந்து போதரும் தலைமகற்கும் பிரிதல் கொடி தென்னுமையின், பண்பின் மாக்கணம் என்றும், தன்னைக் கூடி னோர வருத்த மெய்தப் பிரிந்தாரைத் தெருட்டுமாறு கூறுதல் பண்புடையார்க்கு அறமாகலின், அறனில மன்ற என்றும் கூறினாள். (332)

333. அம்ம வாழி தோழி யாவதும்
வல்லா கொல்லோ தாமே யவண
கல்லுடை நன்னாட்டுப் புள்ளினப் பெருந்தோ
டியாஅந் துணைபுணர்ந் துறைதும்
யாங்குப்பிரிந் துறைதி யென்னு தவ்வே.

இது, பிரிந்த தலைமகன் "சுரத்திடைச் சென்றான்" என்பது கேட்ட தலைமகள் அங்குள்ள புட்களை நொந்து தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக: அவ்விடத்தவாகிய மலைகளை யுடைய நல்ல நாட்டின்கண் பெருந்தொகையாகவுள்ள பறவைகள், நம் தலைவரை நோக்கி, "ஐய, யாம் எம் துணையிற் பிரியாது கூடியுறைகின்றேம் காண், மேலும், யாம் பிரிதல் வல்லுவேமு மல்லேம்; அற்றாக, நீ எவ்வாறு பிரிதலைச் செய்து போந்தனை கொல்லோ" என்று கூறி அவர் செலவினைத் தடுக்கா தொழிந்தன வாகலான், அவை சிறிதும் வன்மையுடைய வல்ல போலும் எ. று.

யாவதும், யாதும்; "கல்லதர் அத்தம் கடக்க யாவதும் வல்லுந கொல்லோ[1]" என்றாற் போல இது "பகுதிப் பொருள் விகுதி" என்று அடியார்க்குநல்லார் கூறுவர். நல்லியல் பிழந்து பாலை

1. சிலப் 16 : 57.

யாகிய நாட்டின் வழியாகச் சென்றமையின், அதனைக் கல்லுடை நாடு என்றும், மாவும் புள்ளும் வாழ்தலின் நன்னாடு என்றும் சிறப்பித்தார். தோடு, தொகுதி; கூட்டமுமாம். "வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு[1]" என்று பிறரும் கூறுதல் காண்க. ஆற்றாமை மிக்கவிடத்துச் "செல்லா மரபின வற்றொடு கெழீஇச் செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்[2]" தலைமக்கள் கூற்று நிகழ்த்துவ துண்மையின், இக்கூற்று அமையுமென அறிக.

பசுந்தழை போர்த்த மரமும் செடியுமின்றி வெறுங் கற்களே நிறைந்த தாயினும், புள்ளினம் துணையிற் பிரியாது இனிது உறையும் நாடாதல் பற்றி, கல்லுடை நன்னாட்டுப் புள்ளினம் என்றும், பிரிந்தவழி எய்தும் துன்பத்தின் கொடுமை யறிந்து, யாம் துணையிற் பிரிந்துறைதல் மாட்டேமாக, நீ பிரிந்துறைதல் மிக்க வன்மையின் பாற்படு மென்றற்கு, யாங்குப் பிரிந்துறைதி என்றும், பிரிதல் என்னும் இன்னாச்சொல்லை வாயாற் கூறமாட்டா வாயினும், தாம் துணை புணர்ந்துறைதலைத் தானும் கூறாமையின் யாவதும் வல்லா கொல்லோ என்றும் கூறினாள்.

கல்லுடை நன்னாட்டுப் புள்ளினத்துள், "புணர்ந்தீர் புணர் மினோ என இணர்மிசைச் செங்கண் இருங்குயில் எதிர்குரல் பயிற்றும்[3]" எனவும், பூங்குயில் கவறுபெயர்த்தன்ன நில்லா வாழ்க்கையிட்டு, அகற லோம்புமின் அறிவுடையீர் எனக், கை யறத் துறப்போர்க் கழறுவ[4]" எனவும், மயில்கள், "ஆர்குரல் மணந்து தணந்தோரை நீடன்மின் வாரும் என்பவர் சொற் போன்றனவே[5]" எனவும் கூறுமென்றலின், புள்ளினப் பெருந் தோடு இவ்வாறு கூவித் தடுக்க வல்லுந வாகவும், "புணர்ந்தோர் பிரிதல் சூழ்தலின் அரியது முண்டோ[6]" என்று மருண்டு ஒன்றும் சொல்ல மாட்டாவாயின போலும் என்பாள், யாவதும் வல்லா கொல்லோ என்றாள் என்றுமாம்.

"அவனறி வாற்ற வறியு மாகலின்[7]" என்ற சூத்திரத்துப் 'பல்வேறு நிலை" என்றதனால் இது புள்ளை நொந்து கூறியது என்பர் நச்சினார்க்கினியர்.

---

1. அகம். 18. 2. தொல்.பொ. 196. 3. நற். 224. 4. ௸. 243
5. பரி. 14 : 8-9. 6. நற். 79. 7. தொல். பொ. 147.

இனி, வல்லார் கொல்லோ என்றும், பிரிந்துறைதி யென்னு மாறே என்றும் பாடமாயின், புள்ளினப் பெருந்தோடு, ''யாம் துணைபுணர்ந் துறைதும் யாங்குப் பிரிந்துறைதி'' என்று கூறிச் செல்லுவாரைத் தடுக்கும் நெறியையுங் கடந்து சென்ருராகலின், அவர் யாதொன்றனையும் செய்தல் வல்லுநர் போலும் என்றுரைக்க; அதுபோது, இது தலைமகன் பிரிந்துழித் தலைமகள் செல்லும் வழி யிடத்துப் புள்ளினம் பிரிவருமை கூறித் தகைக்கு மாகலின் அவர் முடியச் செல்லாது மீள்வரோ என்ற தலைமகட்குத் தோழி, அவர் முடியச் சென்ருராகலின், யாதனையும் செய்ய வல்லுநரே யெனத் தலைமகன் இயற்பழித் துரைத்ததாகக் கொள்க. தன்னின் இறப்ப இழிந்த புள்ளினம், துணையிற் பிரிந்துறைய மாட்டா வாதலை உரைப்பக் கேட்டுவைத்தும் மனமிரங்காது தாம் கருதிய பிரிவே பொருளாகப் போயினமையின் அவர் அன்பிலார்க் குரிய செயல் யாவும் செய்வர் என்பாள், யாவதும் வல்லார் கொல்லோ என்று கூறினுள் என்றுமாம். (333)

334. அம்ம வாழி தோழி சிறியிலை
நெல்லி நீடிய கல்காய் கடத்திடைப்
பேதை நெஞ்சம் பின்செலச் சென்ருேர்
கல்லினும் வலியர் மன்ற
பல்லித முண்க ணழப்பிரிந் தோரே.

இது, பிரிவு நீட ஆற்ருளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: பல்லிதழ் உண்கண் அழப்பிரிந்தோர் என்றது தாம் குறித்த எல்லைக்கண் வாராது நீட்டித்தார் என்பதாம்.

உரை: தோழி, கேட்பாயாக: சிறிய இலைகளையுடைய நெல்லி மரங்கள் மிக்க மலையுருகக் காயும் வெயில் தெறும் காட்டிடையே அறியாமையினையுடைய என் நெஞ்சம் தன்பின் தொடர்ந்துவரப் பிரிந்து சென்றவர், பலவாகிய இதழ்களையுடைய மலர் போலும் மையுண்ட கண்கள் கலுழ்ந்து நீருகுப்பப் பிரிந்தா ராகலான், அவர் கல்லினும் வன்மையுடையா ராவர் எ. று.

நெல்லிமரத்தின் உயர்ச்சியும் பெருமையும் நோக்க இலைமிகச் சிறிதாய் இருத்தலின் சிறியிலை நெல்லி என்றார்; ஏனைச் சான்றோர் களும், ''சிறியிலை நெல்லித் தீங்கனி[1]'' என்றும், ''சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்[2]'' என்றும் கூறுப. வெயில் வெம்மையாற் கல்லும் நெருப்புப்போற் சுடுவது பற்றிச் சுரத்தைக் கல்காய் கடம் என்றார்; ''கல்காய் கானம்[3]'' என்று பிறரும் கூறுவர். பல்லிதழ், பல இதழ்களையுடைய பூ. சென்றோர் வலியர் மன்ற, அழப் பிரிந்தா ராகலான் என எடுத்தோத்தும் ஏதுவுமாய் இயைக்க.

பேதை நெஞ்சம் என்றாள், நாணுமையும் தலைமகனது மனப் பான்மையை நாடாமையும் உடைமையின்; ''நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும், பேணுமை பேதை தொழில்[4]'' என்ப வாகலின், ஒருவர் மாட்டு ஒருவர் ஒன்று வேண்டிப் பின்சென்றவழி, அவர்மாட்டு இரங்கி அதனை அருளாராயின், அவரைக் கன்னெஞ்ச ரென்னும் வழக்குப்பற்றிக், கல்லினும் வலியர் என்றும், நினைப் பெல்லாம் தலைவன் செலவின்மேல் நிற்றலின், பின்செலச் சென்றோர் என்றும் கூறினாள்.

இனி, கல்லுருகக் காயும் கடத்திடைச் சென்றும், அவர் நெஞ்சம் உருகாமை என்னோ வென ஒரு நயந்தோன்றுதல் காண்க. (334)

335. அம்ம வாழி தோழி நம்வயின்
நேய்த்தோ ரன்ன செவிய வெருவை
கற்புடை மருங்கிற் கடுமுடை பார்க்கும்
காடுநனி கடிய வென்ப
நீடியிவன் வருநர் சென்ற வாறே.

இது, தலைமகன் சென்ற சுரத்தினிடத்துக் கொடுமை பிறர் கூறக் கேட்ட தலைமகள் ஆற்ருது தோழிக்குச் சொல்லியது.

---

1. புறம். 91. 2. அகம். 291. ஷை. 105.
4. குறள். 833.

உரை: தோழி, கேட்பாயாக: குருதி போலச் சிவந்த செவியினையுடைய கழுகுகள் கற்களின் மருங்கே கிடக்கும் மிக்க முடைநாற்றத்தையுடைய ஊன் துண்டங்களைப் பார்க்கும் காடுகள் மிக்க அச்சம் பொருந்தினவாம் என்று நம்மிடத்துக் கூறுகிற்ப ராகலின், விரைய வாராது நீட்டித்து வருதற்பாலராய் நம் காதலர் சென்ற வழிகள் அக்காடுகளிடத்தன வாதலால், யான் வருந்துவே னுயினேன் எ. று.

நெய்த்தோர், குருதி, எருவை, கழுகு; அதன் கழுத்து வெளுத்து இருகவுளிலும் கோழிக் கொண்டைபோலச் சிவந்த தசைகள் வளர்ந்து தொங்குதலின், அவற்றைச் செவியென்று குறித்துச் செஞ்செவி எருவை யென்பது வழக்கு. ''பொறித்த போலும் வானிற எருத்தின் அணிந்த போலும் செஞ்செவி எருவை[1]'' என்பது காண்க. அதுபற்றியே நெய்த்தோரன்ன செவிய எருவை என்ருர். புலி முதலிய விலங்குகள் பிறவுயிர்களைக் கொன்று தின்று கழித்த பிணங்கள் கற்களின் இடையே கிடந்து மிக்க முடைநாற்றத்தைப் பரப்புதலின், அவற்றைக் கடுமுடை என்ருர். ''புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை[2]'' என்பர். இவற்றைத் தேடி யுண்டு வாழ்வது எருவையின் செய்தியாகலின், எருவை கடுமுடை பார்க்கும் என்ருர். ''படுமுடை நசைஇய வாழ்க்கைச் செஞ்செவி, எருவைச் சேவல்[3]'' எனச் சான்ருேர் உரைப்பர். கடி, அச்சம்.

உயிர்க்கொலை வேட்டுத் திரியும் விலங்குகளும் ஆறலைகள் வரும் வாழும் இடம் என்பது தோன்ற எருவை கடுமுடை பார்க்கும் காடு என்றும், அதனுல் அக் காட்டுவழி செல்வோர்க்குத் தீங்கு பயப்பது என்று பிறர் சொல்லக் கேட்டு உள்ளத்தே அச்சமுற்றுத் தலைவி வருந்துமாறு புலப்படக் காடு நனிகடிய என்ப என்றும், தலைமகன் விரைந்து மீளுதல் வேண்டுமென விழைந்து கூறுதலால் நீடி இவண் வருநர் சென்ற ஆறு என்றும் கூறினுள். (335)

---

1. அகம். 193.
2. ஷை. 97.
3. ஷை. 161.

336. அம்ம வாழி தோழி நம்வயின்
பிரியலர் போலப் புணர்ந்தோர் மன்ற
நின்றதில் பொருட்பிணி முற்றிய
என்றூழ் நீடிய சுரனிறந் தோரே.

இது, பிரிவதற்கு முன்பு தங்களிடம் அவன் ஒழுகிய திறம் நினைந்து தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக; நிலையுதலில்லாத பொருள் வயிற் பிரிந்து செய்யும் வினையை முடித்தற்கு வெயில் கடுகிச் சுடும் காட்டினைக் கடந்து சென்ற நங் காதலர், பண்டு நம்மைக் கூடிய போழ்து பிரியார் போலக் கூடி மகிழ்வித்தனர், காண்; அவர் செயல் இருந்தவாறு என்? எ. று.

பிரியலர், என்றும் பிரியாத இயல்பினர், புணர்ந்தார் எனற் பாறது "ஆ ஓவாகும்[1]" என்றதனால் புணர்ந்தோர் என நின்றது. நின்றது, நிலையுதல் என்னும் தொழில்மேல் நின்ற வினைப்பெயர். "நின்றதில் பொருட்பிணிச் சென்றிவண் தருமார் செல்ப என்ப[2]" எனப் பிற சான்றோரும் கூறுதல் காண்க. பொருள்வேட்கையாற் பிணிப்புண்டு செய்யும் நினைவும் சொல்லும் செயலும் பொருட்பிணி என வழங்கும்'; ஏனைச் சான்றோரும், "பல்லித முண்கண் கலிழ, நில்லாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரெ[3]" என்றும், "ஓதல் காவல் பகைதணி வினையே, வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென், றங்க வாறே யவ்வயிற் பிரிவே[4]" என்றும் கூறுவனவற்றா லறிக. "இனிப் பொருட்பிணி என்பது, பொருளிலனாய்ப் பிரிவதன்று; தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பொருளெல்லாம் கிடந்தது மன், அது கொடு துய்ப்பது ஆண்மைத்தன்மை அன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியுமென்பது; அல்லதூஉம், தேவர்காரியமும் பிதிரர்காரியமும் தனது தாளாற்றலாற் படைத்த பொருளாற் செய்வன, தனக்குப்

1. தொல். சொல். 2. அகம். 27. 3. நற். 241.
4. இறை. அ. பொ. 35.

பயன்படுவன ; என்னை, தாயப் பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறுர் ஆதலான் ; அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியு மென்பது[1]'' என்பர் களவியல் உரைகாரர். முற்றிய, செய்யிய வென்னும் வாய்பாடு. என்றூழ், வெயில்; வேனிலுமாம். ''என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்[2]'' என்றார் பிறரும்.

முன்னர்க் கூடியவிடத்து "மெல்லியல் அரிவை நின் நல்லகம் புலம்ப, நிற்றுறந் தமைகுவ ளுயின் எற்றுறந்து இரவலர் வாரா வைகல், பலவாகுக யான் செலவுறு தகவே[3]'' என்று கூறினு னுகலின், பிரியலர் போலப் புணர்ந்தோர் என்று கூறினாள். இது ''நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்[4]'' என்பதனால் அமையும்.

பண்டு, நிலையுதல் இல்லாத இளமையாற் பிணிப்புண்டு பிரி வென்பது ஒன்று உண்டு என்ற நினைவே தோன்றாதவாறு கூடியவர், இன்று அதுவே இயல்பாகவுடைய பொருளாற் பிணிப் புண்டு அதனை முற்றுவிப்பது கருதிச் சென்றது எனக்கு வியப்புத் தருகிறது என்பாள், நின்றதில் பொருட்பிணி முற்றிய சுரன் இறந்தோர் என்றும், நீடுதல் இல்லாத பொருள் குறித்து வெயில் வெம்மை நீடிய சுரன் இறந்து போதல் நேரிதன்று எனத் தான் கருதியது முடித்தற்கு, என்றூழ் நீடிய சுரன் என்றும் கூறினாள். (336)

337. அம்ம வாழி தோழி நம்வயின்
மெய்யுற விரும்பிய கைகவர் முயக்கினும்
இனிய மன்ற தாமே
பனியிருங் குன்றங் சென்றோர்க்குப்
பொருளே.

இது, தலைமகன் பொருள்வயிற் பிரிந்துழித் தன் முயக்கினும், அவற்குப் பிற்காலத்துப் பொருள் சிறந்ததெனத் தலைவி இரங்கித் தோழிக்குச் சொல்லியது.

1. இறை. அ. பொ. உரை. 35. 2. நற். 43.
3. குறுந். 137. 4. தொல். பொ. 43.

உரை : தோழி, கேட்பாயாக; குளிர்ந்த பெரிய குன்றத்தைக் கடந்து பொருள்வயிற் பிரிந்த நம் காதலர்க்கு அப்பொருள்கள் நம்பால் மெய்யுற விரும்பிய கையாற் சேர முயங்கும் முயக்கத்தினும் இன்பம் மிகத் தருவனவாகும் ; இன்றேல், அவர் பிரிவாரல்ல ராகலான் எ. று.

கைகவர்முயக்கு, கைகட் கிடையே அகப்படுத்தி மார்புறத் தழுவிக் கொளல் ; கவர்தல், விருப்பமிகுதி ; ''கவர்வு விருப்பாகும் ;[1]'' ''மெய்புகு வன்ன கைகவர் முயக்கு[2]'' என்று பிறரும் கூறுவர். பனிமுகில் தவழும் குன்றம் பனியிருங் குன்றம் எனப் பட்டது. குன்றம் சென்ருர், குன்றத்தைக் கடந்து சென்றவர். சென்ரோர்க்கு முயக்கினும் பொருள் இனிய மன்ற என இயையும். இன், உறழ்ச்சி.

கைகவர் முயக்கம் பற்றிக் கூறும்போது ''கழிபெருங் காமத்து, இன்புறு நுகர்ச்சியிற் சிறந்ததொன்று இல்லெனத்[3]'' தலைமகன் கூறியது கேட்டுப் பயின்றுளாள் ஆகலின், இப்பொழுது தலைவனது பிரிவால் அது வாயன்மை விளங்குதலின், இனிய மன்ற தாமே பனியிருங் குன்றம் சென்ரோர்க்குப் பொருள் எனத் தலைவி கூறினுள். பிரிந்து உறைதற்கு இனிதன்மை தோன்றப் பனியிருங் குன்றம் எனச் சிறப்பித்தாள். ''பனிமீக் கூரும் பைதற்பானுள், பல்படை நிவந்த வறுமையிற் சேக்கைப், பருகு வன்ன காதலொடு திருகி, மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்து, ஓருயிர் மாக்களும் புலம்புவர் மாதோ[4]'' என்று பிருண்டும் தலைவி கூறுதல் காண்க. (337)

338. அம்ம வாழி தோழி சாரல்
இலையில மலர்ந்த வோங்குநிலை யிலவம்
மலையுறு தீயிற் சுரமுதற் ரோன்றும்
பிரிவருங் காலையும் பிரிதல்
அரிதுவல் லுநர்நங் காத லோரே.

---

1. தொல். சொல். 357. 2. அகம். 379. 3. ஷை. 361.
4. அகம். 305.

இது, தலைமகன் பிரிந்துழி, "இக்காலத்தே பிரிந்தார்" எனத் தலைமகள் இரங்கிச் சொல்லியது.

ப. உரை: இலையின்றி மலர்ந்த இலவம் மலையுறு தீயின் தோன்றும் என்றது, அன்பின்றி பிரிந்தான் எனத் தலைவனது பிரிவைத் தான் ஆற்ருளாயினமை உரைத்தவாறு.

உரை: தோழி, கேட்பாயாக. நம் காதலர், மலைச்சாரற் கண் இலை யுதிர்ந்து மலர்ந்து உயர்ந்து தோன்றும் நிலையினை யுடைய இலவமரம், அம்மலைக்கண் தோன்றும் தீயைப் போல் சுரத்தின்கண் தோன்றும் பிரிதற்கரிய காலத்தினும் அரிதிற் பிரிதலில் வல்லுந ராயினர், காண் எ. று.

இலவமரம் மலருங்காலத்து அதன் இலைகள் உதிர்ந்து வீழ்தல் இயல்பாகலின், இலையில மலர்ந்த இலவம் என்ருர். "இலையில மலர்ந்த முகையில் இலவம்[1]" என்றும், "அருவி யான்ற வுயர் சிமை மருங்கில், பெருவிழா விளக்கம் போலப் பலவுடன், இலையில மலர்ந்த விலவமொடு, நிலையுயர் பிறங்கல்[2]" என்றும் வருதல் காண்க. முதல், ஏழனுருபின் பொருட்டு. மரமும் செடியும் புதுத் தளிர் ஈன்று நறுமலர் பூத்து இனிய காட்சி வழங்கிச் சிறக்கும் வேனிற்பொழுது காதலர்க்கு அக்காதல் பெருகி முறுகிக் கூடி யின்புறும் காலமாதலின், அதனைப் பிரிவருங்காலை என்றும், அக்காலத்தே பிரிதல் என்பது மிகவும் அரிய செயலாதல் தோன்ற, அரிது பிரிதல் என்றும், காதல் பெருகியவழிக் கல்வியும் அறிவும் வலி யிழந்து ஒழிதல் ஒருதலையாக, தலைமகன்பால் பெருகிய காதலை அடக்கித் தன் பிரிவுக்கு உடன்படுத்தும் வன்கண்மை மிகுந்துளது என்பாள், வல்லுநர் நம் காதலோர் என்றும் கூறினுள்.

இலை சிறிதுமின்றி உதிர்ந்த போழ்தும் இலவம் மலர்ந்து மலையிடை விளங்கும் தீப்போல் தோன்றும் என்றது, நம்பால் அன்பு சிறிது மின்ருயினும் தலைமகன் உள்ளம் பொருள் செய்யும் வேட்கை மிக்கு விளங்குகின்றது என இரங்கியவாறு. பழைய வுரைகாரர்க்கும் இதுவே கருத்தாதல் காண்க. (338)

---

1. அகம் 11. 2. ஷை. 185.

339. அம்ம வாழி தோழி சிறியிலைக்
குறிஞ்சினை வேம்பி னறும்பழ முணீஇய
வாவ லுகக்கு மாலையும்
இன்றுகொல் காதலர் சென்ற நாட்டே.

இது, தலைமகன் குறித்த பருவ வரவின்கண் மாலைப்பொழுது கண்டு ஆற்ருளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: குறுஞ்சினை வேம்பின் ஒண்பழத்தை உண்டற்கு வாவல் உகக்கும் என்றது, அன்பின்றிப் பிரிந்த அவரது கூட்டத்தை யாம் விரும்பா நின்றேம் என்றவாறு.

உரை: தோழி, கேட்பாயாக: சிறிய இலைகலையும் குறுகிய சினைகளையுமுடைய வேம்பின் இனிய பழத்தை உண்டற்கு வாவல் கள் உயரப் படரும் மாலைக்காலம் காதலை யுடைய நம் தலைவர் சென்ற நாட்டின்கண் இல்லைபோலும்; உளதாயின், இது நாம் குறித்த பருவமெனக் கொண்டு வாராதொழியா ராகலான் எ. று.

வாவல், வௌவால். உகத்தல், உயர்தல். ''உகப்பே உயர்வே[1]''. நாடு என்புழி ஏழனுருபு தொக்கது. '' ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின், மெய்யுருபு தொகா இறுதி யான[2]'' என்பர். காதலர், நம்காதலை யுடையவர். ''வேம்பி னொண்பழம் முனைஇ யிருப்பைத் தேம்பால் செற்ற தீம்பழன் நசைஇ, வைகுபனி யுழந்த வாவல்[3]'' என்று பிறரும் கூறுதலால், வாவல் வேம்பின் பழம் உண்டல் கொள்க. தான் குறித்த பருவமே யன்றி, அப்பருவத்திற் குரிய சிறுபொழுதாய மாலையுமென நின்றமையின் உம்மை எச்சவும்மை.

காதற்காமக்கூட்டம் தனிமையில் சிறக்கும் இயல்பிற்ருதலின், தனிமைக் குரிய மாலைப்போது வரின் வேட்கை எழுந்து வெதுப்பு வது காமத்துக்கு இயற்கை; ''காலை அரும்பிப் பகலெல்லாம்

---

1. தொல். சொல். 2. ஷை. ஷை. 3. நற். 279.

போதாகி மாலை மலரும் இந்நோய்[1]'' எனச் சான்ருேரும் கூறுப. மாலைப்போதில் தான் எய்தி வருந்தும் வருத்தம் பிரிந்துறையும் தலைமகற்கும் உளதாயின் நீட்டியாது மீள்வன் என்ற கருத்தால் மாலையும் இன்றுகொல் சென்ற நாட்டே என்றும், தலைமகன்பால் உளதாகிய காதல் தன் உள்ளத்தில் கிடந்து வருத்துவதுபோல அவன் உள்ளத்துக் கிடக்கும் காதல் மாலைப்போதில் தோன்றி அவனை வருத்து மெனவும் அதனுல் அவன் விரைந்து வருவன் எனவும் கருதிக் காதலர் என்றும் கூறினுள், ''புன்கண் மாலையம் புலம்பும் இன்று கொல் தோழி யவர் சென்ற நாட்டே[2]'' என்று பிருண்டும் கூறுதல் காண்க.

வேம்பின் நறும்பழம் உண்டற்கு வாவல் உகக்கும் மாலை என்றதனுல், மாலைப்போதில் தலைமகன் கூட்டத்தைத் தலைவி நினைத்தற்கு ஏதுக் கூறியவாருயிற்று. பழையவுரைகாரர், காதலர் என்றது எதிர்மறைக் குறிப்பு மொழியாகக் கொண்டு அன்பின்றிப் பிரிந்தோர்பால் இன்பம் பெறக் கருதித் தலைவி வருந்துதற்கு உள்ளுறை கொண்டார். ''எமிய மாக ஈங்குத் துறந்தோர் தமியராக இனிய கொல்லோ .... தலைவரம் பறியாது வருந்துமென் நெஞ்சே[3]'' என்று பிறரும் கூறுதல் காண்க. இது பாலைத்திணைக்கண் மாலை வந்த திணைமயக்கம். (339)

340. அம்ம வாழி தோழி காதலர்
உள்ளார் கொன்னு மருளற் றனங்கொல்
விட்டுச் சென்றனர் நம்மே
தட்டைத் தீயி னூரல ரெழவே.

இது, தலைமகன் பிரிந்துழிக் கடிதின் வருவரென ஆற்றியிருந்த தலைவி அவன் நீட்டித்துழி ஆற்ருது தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, கேட்பாயாக! காதலர் நம்மை ஆற்றி யிருத்தற் குரியன கூறிப் பிரிந்து சென்ரு ராக, ஊர்க்கண் மூங்கிற் காட்டிற் பிறந்த தீப்போல, அலர் எழுந்தமையின் நாம் ஆற்றே

---

1. குறள். 2. குறுந். 330. 3. குறுந். 172.

மாதலை நினையார்கொல்லோ? அன்றி, அவர் நினைத்தருளுதற் குரிய தகுதியினை நாம் இழந்தேமோ, கூறுக எ. று.

தட்டை, மூங்கில். தட்டையென்னும் கிளிகடி கருவியும் மூங்கிலாற் செய்யப்படுவது பற்றியே அப்பெயர் பெறுவதாயிற்று என அறிக. ''அமையறுத் தியற்றிய வெவ்வாய்த் தட்டை[1]'' எனவும், ''வெதிர்புனை தட்டையேன்[2]'' எனவும் சான்றோர் உரைப்பது காண்க.

ஆற்றி யிருத்தற் குரியன, செய்பொருட் சிறப்புக் கூறுதலும் இன்ன பருவத்து வருவல் எனத் தெளிப்பனவும் பிறவுமாம். ''அலரிற் றோன்றும் காமத்தின் சிறப்பே[3]'' என்றும், ''களவும் கற்பும் அலர்வரைவின்றே[4]'' என்றும் கூறுபவாகலின், ஊரல ரெழவே என்பது அமைந்தது.

அலரெழுந்தவழித் தான் ஆற்றாது வருந்துதலை அறியின், தலைமகன் தன்னை விட்டுச் செல்லுதல் இல்லையா மாகலின், உள்ளார் கொல்லோ என்றும், ஒருகால் அவர் நம்மையும் உடன் கொண்டு சேறற்குக் கருதினாராயினும், அவரால் அவ்வாறு அருளப்படுதற் குரிய தகுதி நம்பால் இல்லைபோலும் என வருந்துவாள், அருளற்றனம் கொல் என்றும், விட்டுச் சென்றனர் நம்மே என்றும் கூறினாள். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை. காதலர் நம்மை உள்ளாதொழியா ரெனவும், நாமும் அவரது அருள் நிரம்பப் பெற்றுள்ளே மெனவும் கருதி அவர் கடிதின் வருவர் என ஆற்றியிருப்பே மாகவும், ஊரவர் எழுப்பும் அலரா லன்றோ யாம் பெரிதும் ஆற்றே மாயினேம் என்பாள், தட்டைத் தீயின் ஊர் அலரெழவே என்றாள். இது புறஞ்சொல் மாணாக் கிளவி. (340)

---

1. அகம். 338. 2. நற். 147. 3. தொல், பொ. 163
4. ஷை. ஷை. 165.

35

இளவேனிற் பத்து

இஃது இளவேனிற் பருவவரவினையே பொருளாகக் கொண்ட பாட்டுக்களின் தொகுதி யாகலின், இப்பெயர்த்தாயிற்று. இளவேனில், பின்பனிக்குப் பின்னர்த்தாய சித்திரையும் வைகாசியும் கூடிய காலம்.

தலைமக்களது காதல்வாழ்வில் தலைமகன் பொருள்வினை குறித்துத் தலைவியினின்றும் பிரிந்து செல்லும் கடமையு முடைய னாகலின், பிரியுங்கால் இன்ன காலத்தில் மீள்வன் எனத் தான் மீண்டுவரும் காலத்தைக் குறிப்பது இயல்பு. யாவர் எத்தொழிலைச் செய்யினும் அத்தொழிற்குக் காலமும் இடமும் இன்றியமையாத தொழிற்கூறுகளாகும். வினைக்குரிய இடத்தையும் அதனை முடித்தற்கு வேண்டும் காலத்தையும் முதற்கண் எண்ணுவது வினையாளரின் தலையாய செயல். இவற்றை நன்கு எண்ணித் துணிந்த பின்னரே வினைசெய்ய முற்படுவர் தலைமக்கள்; அப் பொழுதே தலைமகனும் தான் மேற்கொண்ட வினை பற்றிய பிரிவுக்குறிப்பைத் தலைவிக்குப் புலப்படுத்துவன்.

வினை நிகழ்ச்சிக்குரிய இடமும் காலமும், வினை இனிது முடிதற்கே யன்றித் அதனைத் தலைமகன் முடித்தற்கும் தலைமகள் ஆற்றியிருத்தற்கும் துணையும் பற்றுக்கோடுமாகும்.

தலைமகன் பிரியக் கருதுமிடத்து, அவனது அழிவில் கூட்டத்தால் இன்புற்றிருந்த தலைமகட்கு அவனது பிரிவு மிக்க துன்பத்தைச் செய்யும். அதனை ஆற்றியிருத்தல் வேண்டின் வினைமுற்றுதற்குரிய கூறுகளில் தலைமகள் பயின்றறிந்த தொன்று காணப்படுமாயின் அது நோக்கி அவள் ஆற்றியிருத்தல் இயலும். வினை செயல் வயில் சிறப்பாக நிற்பன காலமும் இடமுமே. இடத்தினும் காலம் தலைமகள் பயின்றறிந்த தொன்று; ஆகலின், தலைமகன் தன் பிரிவின்கண் அதனையே வற்புறுத்துவன். மேலும், காதற் காம வாழ்க்கையில் நிகழும் இன்பம் காலத்தின் மேலதாகலின், தலைமகள், தலைமகனது பிரிவுக்கு வேண்டும் காலத்தையே நோக்குவள். அதனாலும், பிரியக் கருதுவோன் தன் பிரிவுக்கு வேண்டும் காலவளவை வினைமுற்றி மீளுங் காலத்தை எடுத்துரைக்கு முகத்தால் உணர்த்துகின்றான்.

பெரும்பொழுது சிறுபொழுதென இருவகையின் இயலும் காலத்துள், பொருள்வினைகட்குப் பெரும்பொழுது சிறந்தமையால் அதுவே அவனால் வற்புறுத்தப்படுகிறது. பெரும்பொழுது பருவம் எனவும் வழங்கும். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப் பெரும்பொழுது அறுவகைப்படும். பாலைத் திணைக்கு இருவகை வேனிலும் பின்பனியும் உரியவாகும். ஆயினும் இளவேனிலே விதந்து கூறப்படுகிறது.

ஈண்டுத் தலைமகன் இளவேனிற் பருவத்து மீள்வதாக வற்புறுத்திப் பிரிந்துள்ளான். தலைவி அப்பருவவரவை நோக்கி வாழ்ந்து வருகின்றாள். வேனிற் பருவவரவும் வினைமுற்றி மீளும் தலைவன் வரவும் உடனிகழ வேண்டுமெனத் தலைவியது வேட்கை யுள்ளம் விழைகின்றது. கருதியவாறு முடியாது மேற்கொண்ட வினை அப்பருவத்தின் இடையே முடிகிறது. பருவவரவுடன் தலைமகன் மீட்சி உடனிகழாமையால் தலைமகள் வருந்துகின்றாள். அவள் வருந்துவது பொருளாக வரும் பாட்டுக்கள் பத்து இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. தலைவன் தான் குறித்த பருவவரவில் வரத் தாழ்க்கினும் அது கழியுமுன் வந்து கூடுவன் என அறிக.

341 அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற்பெடை யின்குர லகவ
அயிர்க்கேழ் நுண்ணற னுடங்கும் பொழுதே

இது, தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக் கண்ட தலைமகள் சொல்லியது.

உரை: குயிலின்பெட்டை தன் இனிய குரலெடுத்துப் பாட, அயிரின் நிறமுற்ற நுண்ணிய மணல் காற்ருல் அசைவுற்றுக் குவியும் பெரும் பொழுதாகிய இளவேனில் வந்ததே யன்றி அப் பருவத்தே வருவல் என்று குறித்துச் சென்ற நம் காதலர் வாரா ராயினர்; யான் எங்ஙனம் ஆற்றுவேன் எ. று.

அயிர், நுண்மணல். குயில் கூவுதலை அகவுதல் என்றல் மரபு. ''நுகர்குயில் அகவுங் குரல்கேட் போர்க்கே[1]'' எனச் சான்ருேர் கூறுதலான் அறிக. குயிலின் குரல் கூறவே அதனேடு இயைபுடைய ''தாதும் தளிரும் மேதகத் துவன்றிப் பல்பூஞ் சோலைப் பன்மலர் நாற்றமொடு செவ்விதின் தென்றல்'' வந்து அசைதலும் பெற்ரும். அதனுல் அயிர் மணல் அசைவுற்று நுடங்குதலின், அயிர்க்கேழ் நுண்மணல் நுடங்கும்பொழுது என்ருர். கேழ், நிறப்பண்பு குறிக்கும் உரிச்சொற் றிரிபு.

இப்பருவத்தே வருவல் என்று குறித்த தலைமகன் வாராது, அவனுற் குறிக்கப்பெற்ற பருவம் வருதலாற் பயனின்று என்பாள், அவரோ வாரார் தான் வந்தன்றே என்ருள். ''செவ்வி வேனில் வந்தன்று அம்ம தானே, வாரார்தோழி நம் காதலோரே[2]'' என்ருர் பிறரும். வேனில் வரவு கண்டதும் தலைமகன் வரவை உடன்நினைந்து நெஞ்சின்கண் அவன் திருவுருவைக் காண்டலின், அவர் என்று சுட்டி ஒழிந்தாள். பருவவரவோடு அவன் வரவும் உடனிகழாமையாற் புலந்து அவரென்ருள் என்று மாம்; ''காதல் அவர் இலராக நீ நோவது பேதைமை[3]'' என்ருற்போல.

(341)

1. அகம். 97. 2. ஷை. 277. 3. குறள். 1242.

342. அவரோ வாரார் தான்வந் தன்றே
சுரும்புகளித் தாலு மிருஞ்சினைக்
கருங்கா னுணவங் கமழும் பொழுதே

இதுவுமது.

உரை: வண்டினம் தேன் நுகர்ந்து ஒலிசெய்யும் பெரிய கிளைகளையும் கரிய அடியினையுமுடைய நுணா மரத்தின் பூக்கள் மலர்ந்து மணங் கமழும் வேனிற் பருவம் வந்ததேயன்றி அப் பருவத்தே வருவல் என்று தெளித்துச் சென்ற அவர் வந்திலர், காண் எ. று.

களித்தல், கள்ளுண்டு மகிழ்தல்; ''களித்தானைக் காரணங் காட்டுதல்[1]'' என்புழிப் போல. ஆலும்பொழுது, கமழும் பொழுது எனத் தனித்தனிக் கூட்டி யுரைக்க. நுணவம், செய்யுண் முடி பெய்திச் சாரியை பெற்றது; ''கருங்கான் மராஅ நுணாவோ டலர[2]'' என்ப வாகலின், நுணா, பெயராதலறிக. ''கருங்கால் நுணவின் பெருஞ்சினை வான்பூ[3]'' என்றார் பிறரும்.

வண்டு தேனுண்டு களித்தாடும் பொழுது வந்ததேயன்றி என் நலனுகர்ந்து மகிழ்கொள்ளும் தலைவர் வந்திலர் என்றும், சுரும்பு படிந்து தேனுண்ண நுணவம் மலர்ந்து மணம் கமழும் பொழுது வந்தெய்திற்றே யன்றி, யான் படிந்து இன்புறுமாறு மலர்ந்து விளங்கும் அவரது மார்பினைப் பெறும் பருவம் எய்திற் றன்று என இரங்கியவாறும்.

தலைமகன் மார்பைக் கூடி மகிழ்தலைப் ''பலர்படிந்துண்ணும் நின் பரத்தை மார்பு[4]'' என்றும் அவனது விரிந்த மார்பை ''மலர்ந்த மார்பு[5]'' என்றும் உரைப்பது காண்க. ''யாணர் வேளில்மன் இது, மாணலம் நுகரும் துணையுடை யோக்கே[6]'' என்று சான்றோர் குறிப்பது காண்க. (342)

1. குறள். 629. 2. திணை. ஐம்பது. 16. 3. அகம். 345.
4. ஐங். 84. 5. ஷை. 51. அகம். 341.

343. அவரோ வாரார் தான்வந் தன்றே
திணிநிலைக் கோங்கம் பயந்த
அணிமிகு கொழுமுகை யுடையும் பொழுதே

இதுவுமது.

ப. உரை : கோங்கின் அணிமிகு கொழுமுகை உடையும் பொழுது என்றது, தலைவன் குறித்த பருவ வரவு கண்டு நெஞ்சு நெகிழ்ந்திருந்தவாறு உணர்த்தியது.

உரை : திணிந்த நிலையினையுடைய கோங்கமரம் அரும்பிய அழகு மிக்க கொழுவிய முகை முறுக்கவிழ்ந்து மலரும் வேனிற் பருவம் வந்தெய்திற்றே யன்றி அப்பருவம் குறித்துச் சென்ற காதலர் வந்திலர் காண் எ. று.

திணி, செறிவு. சூறைக் காற்றும் நீரின்மையும் வெயில் வெம்மையும் தாங்கி வளர்ந்து நிற்றலின், திணி நிலைக் கோங்கம் என்றும், தேனும் மணமும் செறிந்திருத்தலின், கொழுமுகை என்றும் கூறினர். ''திணிநிலைக் கடம்பு[1]'' எனப் பிறரும் வழங்குப. கோங்கின் கொழுவிய முகை மலர்ந்து மணம் கமழ்ந்து கழியும் பொழுது வந்தது என்றதனால், என் மேனி கெழுமிய நலங் கெட்டுப் பசலை பாய்ந்து கழியும் நிலை எய்துவ தாயிற்று என உள்ளுறுத்துரைத்தாளாம். (343)

344. அவரோ வாரார் தான்வந் தன்றே
நறும்பூங் குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே.

இதுவுமது.

உரை : நறிய பூக்களையுடைய குராமரம் காய்த்த பாவையைக் கொய்யும் பருவமாகிய இளவேனில் வந்ததேயன்றி அப்பருவத்தின் கண் வருவல் எனக் குறித்துச் சென்ற அவர் வந்திலரே எ. று.

பாவை போறலின், குராவின்பூ, பாவை எனப்பட்டது; ''ஈன்றாய் நீ பாவை இருங்குரவே[2]'' என்றார் பிறரும். பாவை

1. குறிஞ்சி. 176. 2. திணைமா. 150 : 65.

செய்துவைத்தலும் உண்மையின் செய்யாப் பாவை வெளிப்படை. ''செய்யுறு பாவை[1]'' என வருவது காண்க. குரவம், நுணவம் என்புழிப் போலச் செய்யுண்முடி பெய்தி அம்முச் சாரியை பெற்றதாம். தலைவிபால் தாய்மையுணர்வு தழைந்து வேட்கையால் முறுகி நிற்றலின், குரவம் பூத்த என்னுது குரவம் பயந்த செய்யாப் பாவை என்ருள் என அறிக. (344)

345. அவரோ வாரார் தான்வந் தன்றே
புதுப்பூ வதிரல் தாஅய்க்
கதுப்பற லணியுங் காமர் பொழுதே

இதுவுமது.

உரை : புதிய பூக்களையுடைய புனலிக்கொடி பரவிப் படர்ந்து மகளிர் கூந்தல் போலும் மணற்பரப்பினை அழகு செய்யும் அழகிய வேனிற்பருவம் வந்ததே யன்றி அப்பருவத்தின்கண் வருவல் என்ற அவர் வந்திலர் காண் எ. று.

கதுப்பறல், முகமலர் என்புழிப் போல உவமத் தொகை. அறல், மணல். ஈண்டு அது அம்மணல் பரந்த இடத்தின் மேற்று. அணிதல், கருமணல்மேற் பரந்து தன் வெள்ளிய மலர்களால் கண்டார்க்குக் கூந்தன்மேற் சூடியது போல் அழகுறத் தோன்றலின், அதிரல் தாஅய்க் கதுப்பறல் அணியும் என்ருர். ''புன்காற் பாதிரி அரிநிறத் திரள்வீ, நுண்கொடி அதிரலொடு நுணங்கறல் வரிப்ப[2]'' எனப் பிறரும் கூறுவர். தாஅய் என்பதனைத் திரித்து, அதிரலின் புதிய பூக்களை மகளிர் தம் கூந்தலிற் சூடும் அழகிய பொழுதெனக் கூறுதலுமாம்; ''மாக்கொடி யதிரற் பூவொடு பாதிரித், தூத்தகட் டெதிர்மலர் வேய்ந்த கூந்தல்[3]'' என்பது காண்க. (345)

346. அவரோ வாரார் தான்வந் தன்றே
அஞ்சினைப் பாதிரி யலர்ந்தெனச்
செங்க ணிருங்குயி லறையும் பொழுதே.

---

1. குறுந். 195. 2. அகம். 237. 3. நற். 52.

இதுவுமது.

உரை : அழகிய கிளைகளையுடைய பாதிரிமரம் மலர்ந்ததாகச் சிவந்த கண்களையுடைய கருங்குயில் கூவும் இளவேனிற்பருவம் வந்து எய்திற்றே யன்றி அப்பருவத்தில் வருவல் எனத் தெளித்துச் சென்ற காதலர் வந்தாரிலர், இதற்கு என் செய்வேன் எ. று.

இளவேனிற் பருவத்துக் குயில், புணர்ந்தீர் பிரியன்மின் என்ப போலக் கூவிக் கேட்போர் மனத்து வேட்கை எழச் செய்தலின், இருங்குயில் அறையும்பொழுது என்றாள்; ''செங்கண் இருங்குயில் நயவரக் கூஉம் இன்னிள வேனிலும்[1]'' என்றார் பிறரும். (346)

347. அவரோ வாரார் தான்வந் தன்றே
எழிற்றகை யிளமுலை பொலியப்
பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே.

இதுவுமது.

உரை : அழகும் பெருமையும் பொருந்திய இளமையான முலையகம் பொலிவெய்துமாறு பொரி போலும் பூக்களையுடைய புன்கமரத்தின் தளிர்களை யணியும் வேனிற் பருவம் வந்ததே யன்றி அப்பருவத்தின்கண் வருதும் எனத் தெளித்துச் சென்ற தலைவர் வந்திலர் எ. று.

முடி, இளந்தளிர். புன்கின் பூ பொரி போல் இருத்தலால் பொரிப்பூம் புன்கு என்றார். பிறரும் ''பொரியெனப் புன்கு அவிழ் அகன்துறை[2]'' என்பர். புன்கின் இளந்தளிரை மார்பகம் குளிரு மாறு அணிபவாகலின், முறிதிமிர் பொழுது என்றார்; ''பொரிப் பூம் புன்கின் எழிற்றகை ஒண்முறி, சுணங்கனி வனமுலை அணங்கு கொளத்திமிரி, நிழல்காண் டோறும் நெடிய வைகி[3]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. எழிற்றகை, எழிலும் தகையுமென விரியும். தகை, அழகு. (347)

---

1. அகம். 229. 2. ஷை. 116. 3. நற். 9.

348 அவரோ வாரார் தான்வந் தன்றே
வலஞ்சுரி மராஅம் வேய்ந்துநம்
மணங்கமழ் தண்பொழின் மலரும் பொழுதே.

இதுவுமது.

உரை : வலமாகச் சுழித்த பூக்களையுடைய மராமரம் மலர்ந்து நறுமணம் கமழும் நம்முடைய தண்ணிய சோலையில் பூக்கள் மலரும் இளவேனிற் பருவம் வந்தெய்தியும், அப் பருவ வரவில் வருவல் எனக் குறித்த அவர் வாராதொழிந்தனர், காண் எ.று.

மராஅம், வெண்கடம்பு. இதன் பூ வலமாகச் சுழிந்திருத்தலின், வலஞ்சுரி எனப்பட்டது. ''நெடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி, வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு[1]'' என்றும், ''வலஞ்சுரி மராஅத்துச் சுரங்கமழ் புதுவீ[2]'' என்றும் வருதல் காண்க. வெண்கடம்பின் மலர்கள் சோலையிடை மலர்ந்த மரங்களிடை உயர்ந்து கிளைபரப்பிப் பூத்து விளங்குதலால் மராஅம் வேய்ந்து என்றார். சோலை மலர்ந்ததன் மேலும் மராஅம் மலர் வேய்ந்து பொலியும் பருவம் எனவே, பிரிவுற்ற மகளிர்தம் காதலர் வரவு கண்டு மகிழ்வதே யன்றி அவரது கூட்டம் பெற்று மகிழ்சிறக்கும் பருவம் என்றாளாம்; ஆகவே அப்பருவத்தே தலைமக்கள் பிழையாது போதரல் வேண்டும் என்பது தோன்ற அவரோ வாரார் என்றாள், (348)

34 . அவரோ வாரார் தான்வந் தன்றே
பொரிகான் மாஞ்சினை புதைய
எரிகா லிளந்தளி ரீனும் பொழுதே.

இதுவுமது.

உரை : பொரிந்த அடியினையுடைய மாமரம் தன் கிளைகள் மறையுமாறு எரிபோலும் இளந்தளிர்களை விட்டுத் திகழும் இள

1. ஐங். 383. 2. அகம். 83.

வேனில் வந்ததேயன்றி, அப்பருவத்து வருதும் என உரைத்துச் சென்ற தலைவரோ வந்திலர் எ.று.

மாமரத்தின் அடியும் பொரிந்தார் போல இருப்பது பற்றியே பொரிகால் மா என்றார்; இவ்வாறே இருப்பையும் இருத்தலின், ''பொரிகால் பொருட்டரை இருப்பை[1]'' என்று கூறுகின்றனர்.

மாவின் தளிர் தீக்கொழுந்து போல நிறமும் ஒளியும் கொண்டு தோன்றுதலின், எரிகால் இளந்தளிர்[2] என்றும், முதலொடு கருப் பொருட்கு முதலுஞ் சினையுமாகிய ஒற்றுமை யுண்மையின், ஈனும் பொழுது என்றும் கூறினார்.

மாமரம் இளந்தளிர் ஈன்று மாமைநிறம் கொண்டு விளங்குதல் கண்டு, தான் அஃது இன்றிப் பசலை பாய்ந்து உள்ளமை கருதி இரங்கியவாரும். மாவின் கரிய சினை தோன்றாவாறு இளந் தளிர் தோன்றி மறைக்கும் என்றதனால், தலைமகளின் மாமை தோன்றாதவாறு தலைமகன் பிரிவால் எழுந்த பசலை பாய்ந்து அழிக்கும் என்றவாரும்.

350. அவரோ வாரார் தான்வந் தன்றே
வேம்பி னொண்பூ வுறைப்பத்
தேம்படு கிளவியவர்த் தெளிக்கும் பொழுதே.

இதுவுமது.

உரை: வேம்பினுடைய ஒள்ளிய பூக்கள் உதிர்ந்து படிய, இனிமை யுற்ற சொற்களையுடைய தம் துணைவியரைத் தெளிவிக்கும் வேனிற்பருவம் வந்தெய்தியும், அப்பருவத்தே வருதும் எனத் தெளிவித்துச் சென்ற அவர் வந்திலர் எ. று.

வேம்பு வேனிற்காலத்து மலர்வது; ''கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர், என்னை யின்றியும் கழிவது கொல்லோ[3]'' என்று

1. அகம். 95.
2. மாவின்தளிர் எரிபோல் அவிர்தல் கண்ட நம்பியாரூரார், ''சீதப் புனலுண் டெரியைக் காலும் சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே'' என்றது காண்க. 3. தொல். பொ. 247.

சான்ரோர் குறிப்பது காண்க. உறைத்தல், மழைத்துளி போல் உதிர்தல். இயல்பாதல் பற்றித் தெளிக்கும் என நிகழ்காலம் வந்தது. பிரிவு நயந்த தலைமகன், தன்பிரிவால் தலைமகள் மெலியாமைத் தேறியிருத்தற்பொருட்டு யாம் மீளலுறும் பருவம் இதுவெனத் தெளிய வற்புறுக்கும் பருவமாகலின், தெளிக்கும் பொழுது என்றார். '' அந்தளிர் மாஅத்த லங்கன் மீமிசைச் செங்க ணிருங்குயில் நயவரக் கூஉம் இன்னிள வேனிலும் வாரார், இன்னே வருதும் எனத் தெளித் தோரே[1]'' என்றும், '' முற்று வேனில் முன்னி வந்தோரே[2]'' என்றும் கூறுவர் பிறரும். தான் கருதிய பிரிவினைத் தலைமகட்கு உணர்த்துவான், தலைவன், அவளது நலம் பாராட்டியும் நறுநுதல் நீவியும் மகிழ்விப்ப மகிழ்ந்து அவளும் சொல்லாடுதலின் தேம்படு கிளவியவர் என்றும் கூறினாள். '' நறுநுதல் நீவி '' நலம்பாராட்டல். '' நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி, நின்னிற் பிரியலெ னஞ்சலோம் பென்னும் நன்னர் மொழியும் நீமொழிந் தனையே[3]'' என்றதனால் அறிக.

தேம்படு கிளவி யவர் தெளிக்கும் பொழுது என்பது பாட மாயின், தேம்படி கிளவிகளால் அவர் தெளிய வற்புறுத்தும் பொழுது என உரைக்க. (350)

---

1. அகம். 229. 2. நற். 86. 3. கலி. 21.

36

வரவுரைத்த பத்து

இது, வினை பொருள் முதலியவற்றைக் கருதிப் பிரிந்துசென்ற தலைமகன் மீண்டு வந்தமை பொருளாகத் தொடுத்த பாட்டுக்களின் தொகுதியாகலின், இப்பெயர்த்தாயிற்று.

பொருள்வினைக ளாகிய கடமை குறித்துப் பிரிந்த தலைமகன் மீண்டு வருவது உணர்ந்து தோழி கூறுவதும், வந்ததற்கு உரிய காரணம் கண்டு அத்தோழியே கூறுவதும், வந்த தலைமகன் தன் வரவுபற்றிக் கூறுவதும், இடைச்சுரத்து நிகழ்ந்தவற்றை அவன் கூறுவதும் என வரவு பொருளாகப் பல சொற்கள் கூறுதற்கு இடமுண்டு. மேற்கொண்ட வினை முடிந்த பின்னன்றித் தலைமகன் மீளுதல் இல்லை யாதலின், வினை முடியு முன்பே வந்தான் என்பது போலும் கருத்துத் தோன்றத் தோழி கூறினுளாயினும், அது தலைவியை மகிழ்வித்தற்கு அவள் படைத்துக் கூறுவதாகக் கொள்ளற்பாற்றே யன்றி உண்மையாகக் கோடல் ஆகாது. "வினைக்குறை தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு[1]" என்ப வாகலின், வினை குறைபட மீளுதல் தலைமகற்கு இயல்பன்றென அறிக. அவனே, "செய்வினை முடியாது எவ்வம் செய்தல், எய்யா மையோடு இளிவுதலைத் தரும்என[2]" உறுதி கோள்வதும், முடித்த

1. குறள், 612. 2. நற். 284.

பின், தன் காதலியை நினைந்து, ''உள்ளிய வினைமுடித் தன்ன இனியோள்[1]'' என மகிழ்வதும் காண்க.

351. அந்தப் பலவின் வெயிறின் சிறுகாய்
அருஞ்சுரஞ் செல்வோ ரருத்தினர் கழியும்
காடுபின் னொழிய வந்தனர் தீர்கினிப்
பல்லித ழுண்கண் மடந்தைநின்
நல்லெழி லல்கல் வாடிய நிலையே.

இது, பிரிந்த தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

உரை: நெறிக்கண் நின்ற பலாவின் வெயிலால் வெதுப்பப் பெற்ற சிறிய காயைச் செல்லுதற் கரிய சுரத்தின்கட் செல்வோர் அருந்தி நீங்கும் காடுகள் பிற்படுமாறு நம் காதலர் வந்தனராகலின், பலவாகிய இதழ்களையுடைய மலர்போலும் மையுண்ட கண்ணை யுடைய மடந்தையே, நீ இப்பொழுது நின்னுடைய நல்ல அழகு நாளும் வாடி வருந்தி நின்ற நிலையினை இனி விடுவாயாக எ. று.

வெயில் தின்னுத லாவது, வெயிலின் வெப்பமிகுதியால் வெம்பிக் கழிதல். தின்றல், இலக்கணை. பலவின்காய் வெப்பத்தாற் சுளைப்பயன் குன்றி யழிதலின், சிறுகாய் என்றார். தீர்தல், விடுதல். ''தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருட் டாகும்[2]'' என்ப வாகலின், அல்கலும் என்ற உம்மை விகாரத்தால் தொக்கது. ''நம் உயிர் வெங்காதலி திருமுகத் தலமரும் கண் நினைந்து அல்கலும் பெருமர வள்ளியிற் பிணிக்கும்[3]'' என்று பிறரும் கூறுதல் காண்க. தீர்க இனி என்றவிடத்து அகரம் விகாரத்தால் தொக்கது. மடந்தை, விளி.

தலைமகன் பிரிவின்கண் அவன் செல்லுதற்குரிய சுரத்தின் கொடுமை கூறப்பட்ட தாயினும், தோழி அதனை இப்பொழுது பெயர்த்தும் கூறியது, தலைமகன் வரவு உணர்ந்து கூறும்

---

1. நற். 3. 2. தொல். சொல். 318. 3. நற். 269.

கூற்றுக்குத் தோற்றுவா யாயிற்று. அத்தப் பலவு, உண்டற் குரிய அளவு பெருக்காத சிறுகாயாயினும் சுரஞ்செல்வோர்க்கு உணவாய் அவரது செலவினை ஊக்கும் என்று தோழி கூறியது, பிரிந்தவிடத்து நினது நினைவு உடனுறைவின் பயன்தாரா தாயினும் வினைமுற்றி மீளுதற்கு ஊக்கினமையின், காதலர் காடு பின் ஒழிய வந்தனர் என்றாள். அச் சொல்லைக் கேட்டதும் தலைமகள் உளம் மகிழ்ந்து கண் மலர்ந்து குளிர நோக்கினமையின், அதனை வியந்து பல்லிதழ் உண்கண் மடந்தை என்றும், தலைமகன் பிரிவின்கண் தன்னை ஒப்பனை செய்தலும் பூச்சூடலும் இன்றி அவனையே நினைந்து மேனி மெலிந்திருந்தமையின், இனி அந் நிலையின் நீங்கித் தலைமகன் கூட்டத்தால் பேரழகு திகழ இன்புறு வாய் என்பாள், நல்லெழில் அல்கல் வாடிய நிலை இனி தீர்க என்றும் கூறினாள். கை செய்து பிறப்பிக்கும் செயற்கையழகின்றி இயற்கையே நல்லெழில் சிறந்து விளங்குமாறு தோன்ற நல் லெழில் என்றாள்.

நல்லெழில் அல்குல் என்பது பாடமாயின், நல்லெழில் உயர உயரவேண்டுமிடம் உயர்ந்தும் தாழவேண்டுமிடத்து தாழ்ந்தும் இருத்தல் எனவும், அல்குல், அல்குலிடத்து அழகிய வரி எனவும் உரைக்க; ''தேரக லல்குல் அவ்வரி வாட[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க. (351)

352. விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுக லன்ன விழுப்பினர்ப்
பெருங்கை யானை யிருஞ்சின முறைக்கும்
வெஞ்சுர மரிய வென்னார்
வந்தனர் தோழியெங் காதலோரே.

இதுவுமது.

ப. உரை: வெஞ்சுரம் அறிய என்னார் வந்தனர் என்றது. இன்று இடையிலே தங்காது வந்தனர் எ.று.

---

1. ஐங். 316.

உரை: விழுமிய அம்பு தொடுத்தலையுடைய வீரர் தம் வில்லிடைத்தொடுத்துவிட, எதிர் நின்று உயிர்கொடுத்து வீழ்ந்த வீரர் பொருட்டு நடப்பட்ட பெயரும் பீடுமெழுதிய நடுகல்லை யொக்கும் விழுமிய சருச்சரை பொருந்திய பெரிய கையினையுடைய யானை, பெரிய சினம் மிக்குத் திரியும் வெவ்விய காடுகள் கடத்தற் கரியன எனக் கருதித் தாழ்க்காது விரைந்து வந்தனர் நம் காதலர் எ. று.

வில்லிடைத் தொடுக்கப்படுதலின், அம்பு, தொடை எனவும், குறித்தார்மேற் பிழையாது சென்று தாக்குதலால், விழுத்தொடையெனவும் குறிக்கப்பட்டது. தொடை இப்பொருட்டாதல், "தொடை மடி களைந்த சிலையுடைய மறவர்[1]" எனவும், "கடுமா மறவர் கதழ்தொடை மறப்ப[2]" எனவும் வழங்குதல் காண்க. போரேற்று எதிர்நின்று பொருது வீழ்ந்த மறவர்க்குக் கல் நடுப வென்பது, "என்னைமுன் நில்லன்மின் தெவ்விர், பலர் என்னை முன்னின்று கல் நின்றவர்[3]" என்பதனு லுணர்க. நடுகல்லிற் பெயரும் பீடும் எழுதுதல் முறையாகலின், எழுத்துடை நடுகல் எனப்பட்டது; "பேரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்[4]" என்றும், "அணிமயிர் பீலிசூட்டிப் பெயர்பொறித்து இனி நட்டனரே கல்லும்[5]" என்றும் கூறுப. "விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர், எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும், அருஞ்சுரக்கவலை[6]" என்றார் பிறரும். பிணர், சருச்சரை. "இரும்பிணர்த் துறுகல்[7]" என்றது காண்க. உறைக்கும், உறு என்னும் மிகுதிப்பொருட்டாய உரிச்சொல் அடியாகப் பிறந்த பெயரெச்சவினை. "உப்புறைப்ப என்றாற் போலக் கொள்க[8]" என்பர், நச்சினார்க்கினியர். நடுகல் அன்ன பெருங்கை என்றது, செயலற்று இருக்குமாறு தோன்ற நின்றது.

சுரத்தின் வெம்மையும் கடத்தற்கருமையும் தோன்ற, வெம்மை மிகுதியால் செயலற்ற யானையும் சினம் சிறக்கும் என்றாள். வினை முற்றின ராயினும் சுரத்தின் வெம்மையும் அருமையும்

1. பதிற். 60. 2. ஷை. 28. 3. குறள். 771.
4. அகம். 131. 5. புறம். 264. 6. அகம் 53
7. ஐங். 239. 8. பெரும்பாண். 379. உரை.

நோக்கித் தாழ்த்து வருதற் குரியர் காதலர் என்பாள், வெஞ்சுரம் அரிய என்றும், அதனைப் பொருளாகக் கொள்ளாது விரைந்து வந்தனர் என்றற்கு அரிய என்னூர் வந்தனர் என்றும், அதற்குக் காரணம் அவர் உள்ளத்தில் நம்பால் பெருகி நிற்கும் காதல் என்பாள், நம் காதலோர் என்றும் கூறினாள். (352)

353. எரிக்கொடிக் கவைஇய செவ்வரை போலச்
சுடர்ப்பூண் விளங்கு மேந்தெழி லகலம்
நீயினிது முயங்க வந்தனர்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே.

இதுவுமது.

உரை: நெருப்புக்கொடி சூழ்ந்த சிவந்த மலையைப் போல ஒளிவிடும் பூணாரம் கிடந்து திகழும் உயர்ந்த அழகிய தன் மார்பினை நீ இனிது முயங்கும்வண்ணம் மிகப் பெரிய சோலைகளை யுடைய மலைகளைக் கடந்து சென்ற நம் காதலர் மீண்டு வந்தனர், காண் எ. று.

எரிக்கொடி, மலையில் கொடிபோல் தொடர்புற்று நின்றெரியும் தீயொழுங்கு. சோதிக்கொடி என்னும் ஒருவகைக் கொடி என்றும் கூறுப. கவைஇய, கவவு என்னும் உரிச்சொல் லடியாக வந்த வினைத்திரிசொல். எரிக்கொடி சுடர்ப்பூணுக்கும் செவ்வரை அகலத்துக்கும் உவமை. எரிக்கொடி கவைஇய செவ்வரையை இரவுப்போதில் காண்பார் இவ்வுவமையின் அழகை இன்புறுவர். மலை இறந்தோர், அகலம் நீ முயங்க வந்தனர் என இயையும்.

காதலன் மார்பை முயங்குதலில் ஆரா வேட்கை யுடையளாய், "ஆர்கலி வெற்பன் மார்புநயந் துறையும் யானே, யன்றியும் உளர்கொல்[1]" என வருந்தின ளாதலின், நீ இனிது முயங்க வந்தனர் என்றாள்; "யாம் முயங்குதொறும் முயங்குதொறும் முயங்க முகந்து கொண்டு, அடக்குவ மன்னோ தோழி சாரல் நாடன் சாயன்

1. நற். 104.

மார்பே[1]'' எனவும், ''வேட்டோர்க்கு அமிழ்தத் தன்ன மார்பு[2]'' எனவும் மகளிர் தெரிவிப்பது காண்க.

இனிது முயங்க வந்தனர் என்றது இனிப் பிரிவில்லை யாமாறு வினைமுற்றி மீண்டனர் என்றவாறு. (353)

354. ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நா யேற்றை
மறியுடை மான்பிணை கொள்ளாது கழியும்
அரிய சுரன் வந்தனரே
தெரியிழை யரிவைநின் பண்புதர வந்தே.

இதுவுமது.

உரை : நம் காதலர் குளிர்ந்த பெண்ணுயைக் கூடிய செந் நாயின் ஆண், கன்றையுடைய பெண்மானைக் கொள்ளுதலின்றி நீங்கும் அரிய காட்டினைக் கடந்து, ஆராய்ந்தணிந்த இழைகளை யுடைய அரிவையாகிய நின் குணங்கள் நினைவிடைத் தோன்றுத லால் விரைந்து போந்தனர் எ. று.

ஈரம், அன்பு. நிறைந்த அன்புடைய பிணவு என்பார், ஈர்ம் பிணவு என்றார். காதற்காமத் தொடர்புடைய ஆணுக்குப் பெண் வெம்மைக்காலத்தில் தண்மையும், தட்பக்காலத்து வெம்மையும் தந்து இன்புறுத்துவது பற்றிப் பிணவை ஈர்ம்பிணவு என்றார் என்றுமாம். ''வேனிலானே தண்ணியள் பனியே, அலங்கு வெயிற் பொதிந்த தாமரை உள்ளகத் தன்ன சிறுவெம்மையளே[3]'' என்று சான்றோர் உரைப்பது காண்க. ''ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம் ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப[4]'' ஆகலின், செந்நாயேற்றை என்றார். மறி, மான்கன்று. மறியுடைமை மான்பிணையைக் கொள்ளாமைக்கு ஏதுஎன வுணர்க. நின் பண்பு தர வந்தனர் என இயையும். காதற் பிணவினைக் கூடினமையால் செந்நா யேற்றைமான்பிணையைக் கொள்ளாது கழிதலைக் கண்ட காதலர், நின் பண்புகளை அப்பிணவு காட்டக் கண்டு ஆற்றாராய்ப்

1. அகம். 328. 2. ௸. 332. 3. குறுந். 376.
4. தொல் பொ.

போந்தனர் என்பாள், நின் பண்புதர விரைந்தே என்றும், கொள்ளற்பாற்றாய மாண்பினையைக் கொள்ளாது கழியும் அருள் மேவுதற்குக் காரணமா யிருந்தமையின், ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நாய் என்றும் கூறினாள்.

அவர் தாமே வருவாராயினும், நின் பண்புகள் தோன்றி அவர் உள்ளத்தை விரைந்து ஈர்த்தமையின், சுரத்தின் அருமை நோக்காது விரைந்து வந்தார் என்றற்கு, நின் பண்புதர விரைந்து என்றும், அரிய சுரன் என்றும் விதந்து கூறினாள். பிறாண்டும் தலைமகனே. ''ஒள்ளெரி மேய்ந்த சுரத்திடை, உள்ளம் வாங்கத் தந்த நின் குணனே [1]'' என்பது காண்க. (354)

355 திருந்திழை யரிவை நின்னல முள்ளி
அருஞ்செயற் பொருட்பிணி பெருந்திரு
வுறுகெனச்
சொல்லாது பெயர்தந் தேனே பல்பொறிச்
சிறுகண் யானை திரிதரும்
நெறிவிலங் கதர கானத் தானே.

இது, நினைந்த வெல்லையளவும் பொருண் முற்றி நில்லாது பெற்ற பொருள்கொண்டு தலைவியை நினைந்து மீண்ட தலைமகன் அவட்குச் சொல்லியது.

ப. உரை : பொருட்பிணி பெருந்திரு உறுக என்றது, மேல் உளதாகும் பொருட்பிணி திருவுறுவதாக எனக் குறிப்பின் வெகுண்டு உரைத்தது. சொல்லாது பெயர்தந்தேனே என்றது உடன்சென்றோர் விலக்குவ ரெனச் சொல்லாது மீண்டேன் எ. று.

உரை : திருந்திய இழைகளை யணிந்த அரிவையே, பலவாகிய பொறிகளையும் சிறிய கண்களையுமுடைய யானை திரியும் நெறியின் கட் குறுக்கிடும் சிறுவழிகளை யுடைய கானத்தின்கண், யான் நின் னலத்தை நினைந்து அரிய செயல்வகை யாகிய பொருட்பேறு

1. ஐங். 356.

பெருந்திரு வுறுக என விடுத்து உடன்போந்தோர் ஒருவரிடத்தும் கூருது பெயர்ந்து மீண்டேன் எ. று.

திருந்திழை, அழகிய இழைகள். அரிவை, விளி. காதல் வாழ்வில் ஒருபால் இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும் ஈர்ப்ப, ஒருபால் காதலியினுடைய அன்பினது அகலமும் அகற்சியது அருமையும் ஒன்ருது பிணித்துத் தடுக்க, பின்னைய இரண்டின்பாற் செல்லாது பொருளே கருதிச் செல்லும் செயல் அருமை பற்றி அருஞ்செயற்பொருள் என்றும், பொருட்பேறு பயக்கும் அவா, இன்பம் விழையாது பொருளீட்டமே விழையுமாறு உள்ளத்தைப் பிணித்தலின், பொருளைப் பொருட்பிணி என்றும் கூறினர். பெருந்திருவுறுக என்றது வேண்டா என விலக்குதற் பொருளில் வந்த குறிப்புமொழி[1]. சுரத்தின்கண் நெடிது செல்லும் நெறியில் சிறுசிறு வழிகள் குறுக்கிட்டுப் போதலுண்மையின் அதனை, நெறி விலங்கு அதர் என்ப.

இல்லிருந்து அறஞ்செய்து பெறும் இன்பம் வேண்டி அறிவு துணையாக மிகுபொருள் நல்கும் பொருட்பற்றை வென்று வந்தானுகலின், தலைவியது அறிவுநலத்தை இழைநலத்தால் வியந்து திருந்திழை அரிவை என்றும், அறிவின் வெற்றிக்குத் தலைவியின் "கற்பும் காமமும்[2]" ஆகிய மாண்பு உள்ளத்தில் தோன்றித் துணைபுரிந்தமையின், நின் நலம் உள்ளி என்றும் குறித்தான். பொருள் செய்வான் பிரிந்தவிடத்து மிகுபொருள் எய்தி மேன்மேலும் உள்ளத்தைப் பிணித்துத் தன்பால் ஈர்த்தமையின் அதனைப் பொருட்பிணி என்றும், பெற்றது கொண்டு அமைந்து "அரிதுபெறு சிறப்பின் காமத்தியற்கையை[3]" நினைந்து பெயர்தரக் கருதிய போது, எளிதில் பெயரவிடாமையின் அதனை அருஞ்செயற் பொருட் பிணி என்றும், பின்னர் வேண்டப் படுவதாகலின், இகழ்ந்து

1. இச்சொற்ருெடரின் நலங்கண்டு வியந்த திருத்தக்கதேவர், "எரிமாலை வேனுதியின் இறக்கிக் காமன் அடுகணையால், திருமாலை வெம் முலைமேல் திளைக்கும் தேவர் திருவுறுக. வருமாலை எண்வினையும் அகற்றி இன்பக்கட லாக்கித் தரும்மாலை யல்லதுயான் தலையிற்ருழ்ந்து பணிவேனே" (சீவக. 961) என்று பாடுவது ஈண்டு நோக்கத் தக்கது. 2. தொல் பொ. 152. 3. அகம். 353.

நீங்கும் குறிப்பு இன்றுமாறு பெருந்திரு வுறுக என்றும், உடன் வந்த பாங்கர்க்குச் சொல்லியவழி, அவர் பொருட்பிணிக்குத் துணையாய்ப் பெற்றது கொண்டு அமையும் உள்ளத்தைச் சிதைத்துப் பேதுறுவிப்பர் என்பது பற்றிச் சொல்லாது பெயர் தந்தேன் என்றும் கூறினன் [1].

ஏனைப் பொருளினும் தலைமகள் நலம் சிறப்புடைத்தாதல், ''உரனுடை யுள்ளத்தை செய்பொருண் முற்றிய, வளமையா னாகும் பொருளிது வென்பாய், இளமையும் காமமும் நின்பாணி நில்லா [2]'' என்றும், ''வருவிருந் தோம்பித், தன்னகர் விழையக் கூடின், இன்னுறல் வியன் மார்ப அதுமனும் பொருளே [3]'' என்றும் சான்றோர் கூறுதலால் அறிக.

செல்லாது பெயர்தந்தேனே என்ற பாடத்துக்கு மேற்செல்லாது பெற்ற பொருள்கொண்டு மீண்டேன் என்று உரைக்க (355)

356 உள்ளுதற் கினிய மன்ற செல்வர்
யானை பிணித்த பொன்புனை கயிற்றின்
ஒள்ளெரி மேய்ந்த சுரத்திடை
உள்ளம் வாங்கத் தந்தநின் குணனே.

இது, வினைமுற்றி மீண்டு வந்த தலைமகன் தலைவிக்கு அவள் குணம் புகழ்ந்து கூறியது.

உரை: செல்வமுடையோர் தம் யானைகளைப் பிணித்த பொன்னால் செய்யப்பட்ட கயிற்றைப் போல, ஒள்ளிய நெருப்புத் தொடர்ந்து சென்ற காட்டின்கண், வினைமேற்சென்ற நெஞ்சினை மடங்கி மீளும்வகைத் தந்த நின் குணங்கள் நினைத்தற்கு இனிவா யிராநின்றன, காண் எ. று.

பொன்புனை கயிறு கொண்டு பிணித்தல் பிறர்க் காகாமையின், செல்வர் என்றார். ஒள்ளெரி என்றார், உலர்ந்த மரஞ்செடி கொடி களையே பற்றி ஒழுங்குறத் தொடர்ந்து நின்று எரிவது பற்றி,

---

1. தொல். பொ. நச்சி. 45. 2. கலி. 12. 3. ஷை. 8.

செல்வர் மனைகளில் கந்திற் பிணிப்புண்டு நிற்கும் யானையின் காலைச் சூழ்ந்து அது நிற்கும் இடத்துக்கும் கந்துக்கும் இடையே கிடந்து ஒளிசெய்யும் பொற்கயிறு போல ஓரிடத்தே சூழ்ந்தெரியும் காட்டுத்தீக் கொடிபோல் தொடர்ந்தோடிப் பிறிதோரிடத்தில் சூழ்ந்து நின்று எரிவது பற்றி யானை பிணித்த பொற்கயிறு உவமையாயிற்று. வாங்குதல், மீளுதல்.

எரிமேயும் சுரத்தின்கண், அதனால் வளைப்புண்ட பொருள் புலர்ந்து அதற்கே இரையாவது போலப் பொருள் வேட்கையாற் பிணிப்புண்ட உள்ளம், ''நாளது செலவும் மூப்பினது வரவும், அரிதுபெறு சிறப்பின் காமத்தியற்கையும்[1]'' நினையாது அதற்கே இரையாகிக் கழியும் என அஞ்சிப் பொருள்முற்றியபின் அவ் வுள்ளத்தை மீட்கவேண்டுதலின், ஒள்ளெரி மேய்ந்த சுரத்திடை உள்ளம் வாங்க என்றும், அவ்வாறு வாங்கிய உள்ளத்தைப் பொருள்வேட்கைவிடாது செயலறுவித்தலின், அக்காலை நெஞ்சின் கண் தோன்றிச் சுரத்தின் வெம்மையும் பொருளின் அருமையும் காட்டாது தலைமகளின் உருநலனும் செயல்மாண்பும் காட்டி இன்பம் செய்து மனைவயிற் கொணர்ந்தமையின், தந்த நின்குணன் என்றும், ''கெடுங்காலை கைவிடுவார் கேண்மை உள்ளினும் உள்ளம் சுடுவது[2]'' போலாது, கெடுங்காலைக் கைகொடுத்து இன்பத்தில் இனிதுறையச் செய்தலின் உள்ளுதொறும் இன்பம் செய்கின்றன என்பான், உள்ளுதற் கினிய மன்ற என்றும் கூறினான். ''மகிழணி முறுவல் மாண்ட சேக்கை, நம்மொடு நன்மொழி நவிலும், பொம்மலோதிப் புனை யிழை குணனே[3]'' என்று பிறரும் கூறுதல் காண்க.

இனி, எஞ்ஞான்றும் தன் நெஞ்சிடைக் கிடந்து உள்ளுதொறும் தோன்றி இனிமை செய்தலே யன்றி, ஒள்ளெரி மேய்ந்த சுர மாயினும், அதன் வெம்மையை அவள் குணங்கள் தம் இனிமைப் பண்பினால் தோன்றுவாறு மறைத்து வினைமுற்றுதற் கேதுவாயின மையின் உள்ளுதற் கினிய மன்ற என்றான் என்றுமாம். (356)

---

1. அகம். 353. 2. குறள். 799. 3. அகம். 353.

357. குரவ மலர மரவம் பூப்பச்
சுரனணி கொண்ட கானங் காணூஉ
அழுங்குக செய்பொருட் செலவென
விரும்பிநின்
அங்கலிழ் மாமை கவின
வந்தனர் தோழிநங் காத லோரே.

இது, பொருள்வயிற் பிரிந்து ஆண்டு உறைகின்ற தலைமகன் குறித்த பருவவரவு கண்டு கடிதின் மீண்டு வந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

ப. உரை : அழுங்குக செய்பொருட் செலவு என்றது மேல் உளதாகும் பொருட்பிணிச் செலவும் இனிக் கெடுவதாக எ. று.

உரை : தோழி, குரவமும் கடம்பும் பூத்து விளங்குதலால் அழகு திகழும் சுரமாகிய கானத்தைக் கண்டு, அது, தான் வருவலெனக் குறித்துப் போந்த பருவ மாதல் அறிந்து மேல் உளதாகும் பொருள்வயிற் செலவும் இனி ஒழிக என உட்கொண்டு, நம் காதலர் நின்னை விரும்பி நின் அழகொழுகும் மாமைநிறம் வனப்பு மிக வந்தெய்தினர், காண் எ. று.

குரவம், மரவம் என்பன நுணவம் போலச் செய்யுண் முடிபெய்தி அம்முச் சாரியை பெற்றன. இவற்றின் சொன்னிலை குரா மரா என்பன. சுரம் குரவமும் மரவமும் பூத்து அழகுற்றுக் கானம்போல் இனிய காட்சி வழங்குதலின் சுரன் அணிகொண்ட கானம் என்றார். குரவம் முதலியன வேனிற் பருவ வரவில் மலருவன என அறிக. "மராஅத்து வேனில் அஞ்சினை கமழும்[1]" என்றும், "குரவு மலர்ந்து அற்சிரம் நீங்கிய அரும்பத வேனில்[2]" என்றும் சான்றோர் கூறுவது காண்க. காதலர். கானம் காணூஉ விரும்பி, மாமை கவின வந்தனர் என இயையும்.

பிரியுங்கால் குரவமும் மரவமும் மலரும் வேனிற் பருவவரவில் மீண்டு வருவதாகத் தலைமகன் வற்புறுத்தினமைபின், சுரன்

1. குறுந். 22. 2. அகம். 97.

அணிகொண்ட கானம் காணூஉ என்றும், பொருள்வயிற் பிரிந்தவன் மேலும் பொருளே விரும்பி ஆண்டு உறைந்தமையின் அதனைத் தவிர்த்து மீளுவது தோன்ற அழுங்குக செய்பொருட் செலவு என என்றும் நின்பால் உளதாகிய காதல் மீளுதலையே ஊக்கினமையின், விரும்பி என்றும் தோழி கூறினள். பிறுண்டும், ''காமர் வேனில், வெயிலவர் புரையும் வீததை மராஅத்துக், குயிலிடுபூசல் எம்மொடு கேட்ப, வருவேம் என்ற பருவம்[1]'' என்பதனால் வேனிலில் வரவு கூறுமாறு காண்க. (357)

358. கோடுயர் பன்மலை யிறந்தன ராயினும்
நீடவிடுமோ மற்றே நீடுநினைந்து
துடைத்தொறுந் துடைத்தொறுந் கலங்கி
உடைத்தெழு வெள்ள மாகிய கண்ணே.

இது, தலைமகள் ஆற்றுமை கண்டு பிரிந்த தலைமகன் வந்தன னாகத் தோழி சொல்லியது.

உரை: காதலர், சிகரங்களால் உயர்ந்த பலவாகிய மலை களைக் கடந்து சென்றா ராயினும், நீ நீள நினைந்து வருந்துதலால் துடைக்குந்தொறும் நில்லாது, அணையை உடைத்தெழும் நீர்ப் பெருக்குப்போல் சொரியும் நின் கண்ணீர், அவரை விரைய மீள்வித்தலன்றி நீட்டித்தலைச் செய்யவிடாது, காண் எ. று.

கோடு, சிகரம். மற்று, வினைமாற்று. ஓகாரம், எதிர்மறை. நீடுநினைதல், காதலர் விரைந்து வருவர் கொல்லோ, வாராது தாழ்ப்பர் கொல்லோ என ஐயுற்றுக் கலங்குதல். வினையெச்சம் காரணப்பொருட்டு. அடுக்குக் கண்ணீர் மிகுதி யுணர்த்தித் தலைவியது ஆற்றுமையைப் புலப்படுத்திற்று. நீரைத் துடைத்தவழி அது நில்லாது பெருகுமாயினும், மேன்மேலும் துடைப்பதை யன்றி ஒழுக விடுவது இல்லையாதலால் துடைத்தொறும் துடைத்தொறும் என்றார்; ''செறுத்தோறு உடைப்பினும் தீம்புன லோடு ஊடார், மறுத்தும் சிறைசெய்வர்[2]'' என்பது காண்க.

1. அகம். 317. 2. நாலடி. 222.

தலைமகன்பால் உளதாகிய பெருங்காதலால் அவனையே நினைந்து நெஞ்சு கலங்கித் தலைவி நெடிது வருந்தினமையின் நீடு நினைந்து என்றும், அதனால் அவள் அழுது சொரிந்த கண்ணீர்ப் பெருக்கை, உடைத்தெழு வெள்ளம் ஆகிய கண் என்றும், அதனைக் காதலர் எண்ணாது பொருளிடத்தே உறைந்தாராயினும், "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்[1]" செல்வத்தைத் தேய்ப்பது போலப் பொருள்மேற் சென்ற அவரது உள்ளத்தை மாற்றுவதாயிற்று என்பாள், நீட விடுமோ என்றும் கூறினாள். கோடுயர் பன்மலை இறந்தன ராயினும் என்று தலைவன் சென்ற வழியினது அருமை கூறினாள், அவ்வருமை கருதாது பொருளாற் பிணிப்புண்டு சென்ற தலைமகனது திண்மை உணர்த்தற்கு. இறந்தன ராயினும் என்றது, உள்ளம் கொண்ட பொருட்பிணி நின் காதற் கண்ணீர் முன் நிற்றல் ஆற்றாது என்றவாறு. பொருள் வினை பற்றிப் பிரிந்து சென்றவன் அவை முற்றியவழி யல்லது மீளுதல் இல்லை யாகலின், இது தோழியின் புனைந்துரையின் பாற்படும்; பொருள் செய்வினை முற்றி மீண்டான் என்பதே கருத்தாகக் கொள்க. தன் காதலியின் நினைவு வினைமுடிவில் தோன்றுவது தான் தலைமகன் தலைமைக்கு இயல்பு; முற்றாது இடையில் மடங்குவது தலைமையன் றாகலின் அதனைச் சான்றோர் புலனெறி வழக்கம் செய்யார் என அறிக.

இது, தலைவன் மீண்டான் என்றது என்பர் நச்சினார்க்கினியர்[2].

(358)

359. அரும்பொருள் வேட்கைய மாகி நிற்றுறந்து
பெருங்க லதரிடைப் பிரிந்த காலைத்
தவநனி நெடிய வாயின வினியே
அணியிழை யுள்ளியாம் வருதலின்
நணிய வாயின சுரத்திடை யாறே.

இது, மீண்டு வந்த தலைமகன் அவளைப் பிரிகின்ற காலத்துச் சுரத்துச் சேய்மையும் வருகின்ற காலத்து அதன் அணிமையும் கூறியது.

---

1. குறள். 555. 2. தொல். பொ. 45. உரை.

உரை : முன்னர் யாம் பெறுதற் கரிய பொருள்மேல் வேட்கை யுடையேமாய் நின்னைப் பிரிந்து சென்ற போழ்து சுரத்திடையுள்ள நெறிகள் மிகமிக நெடியவாய்த் தோன்றின; இப்போழ்து அழகிய இழைகளையுடைய நின்னை நினைந்து வருதலின் அவை மிக்க அணிமையுடையவாய்த் தோன்றுநின்றன, எ. று.

மனையின்நீங்கி நெடிது சென்று பெறும் இயல்பிற்றுதலின், அரும்பொருள் எனப்பட்டது. வேட்கையம், தனித் தன்மைப் பன்மை. பெருங்கல் அதர், பெரிய பெரிய கற்களின் இடையே செல்லும் வழி. தவநனி மீமிசை போல ஒருபொருட் பன்மொழி; "ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே[1]" என்றுராகலின், நெடிய வாயின நணிய வாயின என்றார். ஆறு, பிரிந்தகாலை நெடியவாயின, உள்ளி வருதலின் நணியவாயின என்க.

பொருளது அருமையும் இன்றியமையாமையும் பற்றி எழுந்த வேட்கை உள்ளத்தைக் கவர்ந்து கொண்டமையின், ஆண்டு நின்ற நின் காதல் துறக்கப்பட்டது என்பான், அரும்பொருள் வேட்கைய மாகி நின்துறந்து என்றான். உள்ளத்தில் நிலவாவாறு நீக்கினமை யின் துறத்தலாயிற்று. ஆகி என்னும் செய்தனெச்சம் காரணப் பொருட்டு. மெய்யாற் பிரிந்தமையின், பிரிந்தகாலை என்றான். அப்பொழுது தோன்றாத கல்லதர்ப்பெருமை மனையின்கண் இருந்து நினைத்தவழி விளங்கித் தோன்றுதலால், பெருங்கல் அதரிடை என்றும், முன்னர்ப் பொருள்வேட்கை ஒருபுடை நிற்ப, அகற்சியது அருமையும் சுரத்தின் வெம்மையும், நெறியின் கொடுமையும் பிறவும் நின்று நெஞ்சினை அலைத்தமையின், தவநனி நெடிய வாயின என்றும், இப்போழ்து அவளையன்றிப் பிறிதொன்றனையும் நினையாது வருதலின், நணிய ஆயின என்றும் கூறினன். தவநனி நெடிய வாயின என்புழி ஒருபொருட் பன்மொழி தலைமகனது பிரிவருமை உணர்த்திற்று. (359)

---

1. தொல். சொல். 432.

360 எரிகவர்ந் துண்ட வென்றூழ் நீளிடை
அரிய வாயினு மெளிய வன்றே
அவவுறு நெஞ்சங் கவவுநனி விரும்பிக்
கடுமான் றிண்டேர் கடைஇ
நெடுமா னேக்கிநின் னுள்ளியாம் வரவே.

இது, வினைமுற்றி மீண்டுவந்த தலைமகன் "சுரத்தருமை நோக்காது வந்தவாறு என்னை?" என வினவிய தலைமகட்குச் சொல்லியது.

உரை: தன்மாட் டெழுந்த வெப்பத்தால் எதிர்ப்பட்ட பொருள்களைப் பற்றி அழித்த தீயும் வெயிலும் மிக்குறும் நெடிய இடைச்சுரம் கடத்தற்கு அரிய வாயினும், மான்போலும் நீண்ட கண்களை யுடையாய், அவா மிக்க என் நெஞ்சம் நின் முயக்கத்தை மிக விரும்புதலால் விரைந்த செலவினையுடைய குதிரைகள் பூட்டப் பட்ட திண்ணிய தேரைச் செலுத்தி யான் நின்னையே நினைந்து போதருதலின் எளியவாயின எ. று.

என்றூழ், வெயில். "எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடை[1]" என்றது காண்க. என்றூழ் நீளிடை அரிய என்றது தலைவி கூற்றைக் கொண்டெடுத்து மொழிந்தது. அன்றே, குறிப்புச் சொல்.[2] அவவு, அவாவென்பதன் செய்யுண்முடிபு; வேட்கைப் பெருக்கம் என்பது பொருள். கவ்வு, அகத்திடுதல். ஈண்டு முயங்குதல் மேற்று. "கவவு அகத்திடுமே[3]" என்பது விதி. "நம்முணுங் கவவுக்கை விடப்பெறும் பொருட்டிறத்து, அவவுக்கை விடுதல் அதுமனும் பொருளே[4]" என்றூர் பிறரும். விரும்பி என்னும் செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. நெடுமான் நோக்கி என்றவிடத்து, நெடுமை நோக்கத்தைச் சிறப்பித்து நின்றது.

மேற்கொண்ட வினையால் ஒடுங்கி யிருந்த காதல், வினைமுற்றி யதும் உள்ளத்தில் எழுந்து, தலைமகளைக் காண்டல் வேட்கையை

1. ஐங். 324. 2. தொல். சொல். 284. 3. ஷை. ஷை. 357.
4. கலி. 14.

ஊக்குதலால் அவாமிகுதலின், அவவுறு நெஞ்சம் என்றும், அவாவின் வெம்மை காதலியின் முயக்கத்தாலன்றித் தணியாமை யின் கவவு நனி விரும்பி என்றும் கூறினன். "நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும் தீயாண்டுப் பெற்ருள் இவள்[1]" என்பது காண்க. நீளிடை யாதலின், அதனை விரைந்து கடத்தல் வேண்டிக் கடுமான் என்றும், நெறியின் அருமைக்கு சலியாத தேர் என்றற்குத் திண்டேர் என்றும், தன்னை நோக்கி வழிமேல் விழிவைத்து நிற்பதுபற்றி நெடுமான் நோக்கி என்றும், தன் னுள்ளம் முழுதும் தலைவியின் உருநலமும் குணநலமும் நிறைந்து கொண்டமையின் வழியருமை புலப்படா தாயிற்று என்பான், அரிய வாயினும் எளிய வன்றே என்றும் கூறினன். பிருண்டும், 'இறப் பருங்குன்றம் இறந்த யாமே, குறுநடை பலவுள் ளலமே[2]" என்பது காண்க.

"கரணத்தின் அமைந்து முடிந்த காலை[3]" என்ற சூத்திரத்துக் "காமக்கிழத்தி மனையோள் என்றிவர், ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்" என்புழி, "அஃதாவது வழி வந்தவாறு என்னை எனவும் வருத்தமுற்றீர் எனவும் இந் நிகரன பல கூறுதல்" என்று கூறி, இதனை எடுத்துக்காட்டுவர் இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும்.

---

1. குறள். 1104. 2. குறுந். 209. தொல். பொ. 144.

37

முன்னிலைப்பத்து

இது தலைமக்கள் ஒருவரையொருவர் முன்னிலைப்படுத்தும், தோழி அவர்களை முன்னிலைப்படுத்தும் கூறும் பொருளுடைப் பாட்டுக்களின் தொகுதியாகலின் இப்பெயர்த்தாயிற்று.

முன்னிலை யென்பது அறத்தொடுநிலைப் பகுதிக்கு இனமானது. களவின்கண் தோழி கூற்று நிகழ்த்தும் இடம் குறித்த ஆசிரியர், ''அவள் விலங்குறினும், களம்பெறக் காட்டினும், பிறன் வரை வாயினும் அவன் வரைவு மறுப்பினும், முன்னிலை அறன் எனப் படுதல் என்று, இருவகைப் புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும் [1]'' என்று குறித்தாராக, அதற்கு உரைகண்ட இளம்பூரணர், முன் னிலை வகையானுதல் அறத்தொடுநிலை வகையானுதல் இவ்விரு வகையானும் தலைவற்கும் தலைவிக்கும் தனக்கும் குற்றம் தீர்ந்த கிளவியைத் தாய்மாட்டுப் புகுத விடுத்தல்'' என்று உரைத்து, ''புகுவிடுத்தலாவது, நிரம்பச் சொல்லாது தோற்றுவாய் செய்தல்'' என விளக்கம் செய்தனர். இதற்கு அவர் காட்டிய முன்னிலைக் கிளவிக்கண் கழங்கு, தலைவி, வேலன், முருகு முதலிய பொருள் களைக் காணலாம். இவரது உரையையும் எடுத்துக்காட்டுக்களையும் நோக்குமிடத்து, முன்னிலை யென்பது அன்பின் ஐந்திணைக்கண்

1. தொல். பொ. 112.

ஒருவரை யொருவர் முன்னிலைப்படுத்துக் குற்றமில்லாத கருத்துக்களை நிரம்பச் சொல்லாது குறிப்பாய் உரைக்கும் உரைவகையாதல் உணரப்படும். இவ்வியல்புடைய கூற்றுக்களைத் தம்பாற் கொண்ட பாட்டுக்களை இம்முன்னிலைப்பத்தின்கண் தொகுத்துள்ளனர் என்பது இதனால் உணர்தல் வேண்டும்.

361. உயர்கரைக் கான்யாற் றவிர்மண
லகன்றுறை
வேனிற் பாதிரி விரிமலர் குவைஇத்
தொடலை தைஇய மடவரன் மகளே
கண்ணினுங் கதவநின் முலையே
முலையினுங் கதவநின் றடமென் றோளே.

இது, புணர்ந்துடன் போகிய தலைமகன் இடைச்சுரத்துக்கண் விளையாட்டுவகையால் பூத்தொடுக்கின்ற தலைமகளைக் கண்டு புகழ, அவள் அதற்கு நாணிக் கண்புதைத்தவழிச் சொல்லியது.

உரை: உயர்ந்த கரைகளையுடைய கான்யாற்றின் விளங்குகின்ற மணல் பரந்த அகன்ற துறைக்கண் வேனிற் பருவத்து மலரும் பாதிரியின் விரிந்த மலர்களைக் குவித்து மாலை தொடுக்கும் மடப்பம் பொருந்திய பெண்ணே, நின் கண்ணினும் முலைகள் சினமுடையவாயும், அவற்றினும் நின் பெரிய மெல்லிய தோள்கள் சினமுடையவாயும் இரா நின்றன, காண் எ. று.

கடுவரவும் நீர்மிகுதியும் உடைமையான் கான்யாறு ஆழ்ந்து கிடத்தலின், உயர்கரைக் கான்யாறு என்றும், '' மாவும் மாக்களும் வழங்கும் துறையாதல்பற்றி அகன்றுறை யென்றும், வேனிற் பருவத்தில் மலர்வதாகலின் வேனிற் பாதிரி யென்றும் கூறினர். பாதிரி, வேனிலில் மலர்வது என்பதை, '' வேனிற் பாதிரிக் கூனி மாமலர் [1]'' என்று சான்றோர் குறிப்பது காண்க. பாதிரி அதிரல் மரவம் ஆகியவற்றின் பூக்களை மாலை தொடுத்து மகளிர் அணிந்து கொள்வது இயல்பாதலின் ஈண்டு அதனை எடுத்தோதினர்.

1. அகம். 257.

குவைஇ என்றதனால், கான்யாற்று அவிர் மணலில் பாதிரிப்பூ உதிர்ந்து கிடந்தமை பெற்றும். "புன்காற் பாதிரி அரிநிறத் திரள்வீ, நுண்கொடி யதிரலொடு நுணங்கறல் வரிப்ப[1]" என வருதல் காண்க. பாதிரிப்பூவால் மாலைதொடுத்து அணிவதைக் காணப் பாதிரிக் கருந்தகட் டொள்வீ, வேனில் அதிரலொடு விரைஇக் காண்வரச், சில்லைங் கூந்தல் அழுத்தி[2]" என்று சான்றோர் குறிக்குமாற்றாலும் அறியலாம். மடவரல் இளமை, அழகு. தொடலை, மாலை. கதம், சினம்; கதமுடையவற்றைக் கதவ என்ப; "ஒல்லார் கதவ முயறலும் முயல்ப[3] எனவரும்.

விளையாட்டுவகையால் பூத்தொடுக்கின்றாளைப் புனைந்துரை வகையால் புகழ்கின்றா னாகலின், தொடலை தைஇய மடவரல் மகளே யென்றும், அது கேட்டவள் நாணிக் கண்புதைத்தவழித் தான் கூர்ந்து நோக்கின் வேல்போன்ற தன் கட்பார்வை தலைமகன் மார்பிற்பட்டு நோய் செய்யும் என அஞ்சித் தன் கைகளால் தலைவி தன் கண்களைப் புதைத்துக்கொண்டாள் என மேற்கொண்டு நின் கண் செய்யும் இடையூற்றினும் புதையாது ஒழிந்த முலைகள் பேரிடையூறு செய்வன என்பான் கண்ணினும் கதவ நின் முலையே என்றும், அவற்றோடு இயைபுடையவாய்ப் புணர்ச்சிக்கண் தனது நெஞ்சினைச் செலுத்தி வெதுப்புதலின் முலையினும் கதவ நின் தடமென்தோளே யென்றும் கூறினான். "கடைமணி சிவந்தநின் கண்ணே கதவவல்ல ... நின் கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே[4]" என்றும் பிறரும் கூறுதல் காண்க.

"ஒன்றாத் தமரினும்[5]" என்ற சூத்திரத்து, "அப்பாற்பட்ட ஒருதிறத்தானும்" என்றதனானே, தலைவியிடத்துத் தலைவன் கூறுவன பலவும் கொள்க" என்று உரைத்து இப்பாட்டைக் காட்டி, இஃது "உடன்போயவழித் தலைவன் புகழ்ச்சிக்கு நாணித் தலைவி கண்புதைத்துழி அவன் கூறியது" என்பர் நச்சினார்க்கினியர். இது புணர்தற் பொருளாயினும் கருப்பொருளாற் பாலையாயிற்று என்பர் இளம்பூரணர்.[6]"

---

1. அகம். 237. 2. ஷை. 261. 3. ஷை. 356.
4. நற். 39. 5. தொல். பொ. 41. 6.ஷை. ஷை. 24.

உடன் போக்கின்கண் உயிரினும் சிறந்த நாணும், கற்பும், தலைமகன் காதலும் துணையாக வருதலின் நாண் நீங்குதல் பொருளாகத் தலைமகன் தலைவியை இதனால் முன்னிலையாக்கிக் கூறினான் என அறிக. இனிவரும் பாட்டுக்களும் இவ்வாறு முன்னிலைக் கிளவியாதலைக் கண்டுகொள்க. (361)

362. பதுக்கைத் தாய வொதுக்கருங் கவலைச்
சிறுகண் யானை யுறுபகை நினையாது
யாங்குவந் தனையோ பூந்தார் மார்ப
அருள்புரி நெஞ்ச முய்த்தர
இருள்பொர நின்ற விரவி னானே.

இது, சேணிடைப் பிரிந்த தலைமகன் இடைநிலத்துத் தங்காது இரவின்கண் வந்துழித் தோழி சொல்லியது.

உரை: பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை யணிந்த மார்பனே, பதுக்கைகளையுடையதான செல்லுதற்கரிய கவர்த்த வழியின்கண் திரியும் சிறிய கண்களையுடைய யானையாகிய மிக்க பகைக்கு அஞ்சாது, எமக்கு அருள்செய்யும் வண்ணம், நின் நெஞ்சு நின்னைச் செலுத்த இருள் அடர்ந்து, வழிச்செல்வாரைத் தடுக்கின்ற இரவின்கண் எவ்வாறு வந்தாய் கொல்லோ? என் உள்ளம் வருந்துகிறது எ. று.

பதுக்கை, கற்குவியல்; ஆறலைப்போரால் கொல்லப்பட்டார் மேற் குவிக்கப்படும் கற்குவியல் என்பர்; "வடிநவில் அம்பின் ஏவலாடவர், ஆளழித்துயர்த்த அஞ்சுவரு பதுக்கை[1]" என்றும், "கொடுவிற் கானவர் கணையிடத் தொலைந்தோர், படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை[2]" என்றும் சான்றோர் கூறுதலால் அறிக. ஒதுங்கல், செல்லுதல்; "அடியறிந்து ஒதுங்கா ஆரிருள்[3]" என்றும் "ஒதுக்கரும் வெஞ்சுரம்[4]" என்றும் வருவன காண்க. உய்த்தல், செலுத்தல். இருள்மிக்க இரவு என்றற்கு இருள் பொர நின்ற இரவு என்றார்.

1. அகம். 215. 2. ஷை. 231. 3. நற். 156.
4. ஷை. 177.

கற்பின்கண்ணே பொருள்வினை குறித்துச் சேணிடைப் பிரிந்து மீண்டு போதரும் தலைமகனை விலக்கும் உரிமை தோழிக்கு இல்லை யாயினும், இருள்கூர் இரவுப்போதின் கண்இடை நிலத்துத்தங்காது வந்தமைபற்றி ஏதம் ஆய்ந்து அவற்கு முன்னிலைக் கிளவியாற் கூறுகின்றா ளாகலின், தலைமகன் வரும் வழியின் ஏதங்களைக் குறிப்பாளாய், கொலைவினையராகிய ஆறலைப்போர் மிக்க வழி என்பாள், பதுக்கைத் தாய ஓதுக்கருங் கவலை என்றும், இரவில் காட்டில் திரியும் யானை மக்கட்குப் பெரும்பகை யாகலான், யானை உறுபகை நினையாது என்றும் கூறினாள்; ' இரவின் வரல்வேண்டா, யானை யுடைய சுரம்[1]'' என்றார் பிறரும். நினைந்தவழி எத்திறத் தோரும் ஊக்கம் குன்றுவர் என்பாள் நினையாது என்றும், நின்னைப் பிரிந்துறையும் தலைமகள் எய்திய மெலிவுணர்ந்து நிறைந்த காதல் செலுத்தக் கடுகி வருகின்றாய் என்பாள், அருள்புரி நெஞ்சம் துரப்ப என்றும். நெறியறியாவகை மறைத்தலின் இரவுக்காலத்தை இருள் பொர நின்ற இரவு என்றும், நெறியின் கொடுமையும், இடையில் உளவாகும் ஏதமும் கருதி, நின் பேரருளுக்கு அஞ்சுகின்றேம் என்பாள், யாங்கு வந்தனையோ என்றும் கூறினாள்.

கற்பின்கண் இவ்வாறு ஒரோவழித் தலைமகன்பால் மிக்க காமத்து மிடலுடைச் செயல் தோன்றின் அது, கழி காமமாய்த் தீங்குவிளையாமைக் குறிக்கொண்டு கூறலின், தோழிக்கு இம் முன்னிலைக்கிளவி அமைவதாயிற்று. '' உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின், உரிய தாகும் தோழிகண் உரனே[2]'' என ஆசிரியர் உரைப்பது காண்க. கழிகாமம் தீங்கு பயத்தலை, '' காமம் வெகுளி மயக்கம் இவைமூன் றன் நாமம் கெடக் கெடும் நோய்[3]'' என்றும், '' சினமே காமம் கழிகண் ணோட்டம் , அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை தெறல்கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து, அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்[4]'' என்றும் சான்றோர் தெருட்டுமாறு காண்க.

'' பெறற்கரும் பெரும்பொருள்[5]'' என்ற சூத்திரத்துப் '' பிரியுங்காலை எதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்படப்

---

1. திணைமொழி. குறிஞ்சி. 1. 2. தொல். பொ. 239.
3. குறள். 360. 4. பதிற். 22. 5. தொல். பொ. 150.

பிறவும் என்புழிப் பிறவும் என்றதனுல் இதனை அமைத்து, இது சேணிடைப் பிரிந்து இரவின் வந்துழிக் கூறியது என்பர் நச்சினுர்க்கினியர். (362)

363. சிலைவிற் பகழிச் செந்துவ ராடைக்
கொலைவி லெயினர் தங்கைநின் முலைய
சுணங்கென நினைதி நீயே
அணங்கென நினையுமென் னணங்குறு
நெஞ்சே.

இது, புணர்ந்துடன் செல்கின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகளை நலம்பாராட்டியது.

உரை: சிலைமரத்தாற் செய்யப்பட்ட வில்லிடைத் தொடுக்கும் அம்பினையும், சிவந்த ஆடையினையும், கொலைத் தொழிற் குரிய வில்லினையு முடைய வேட்டுவர்க்குத் தங்கையே, நின் முலைக் கண்ணவாகிய தேமலை நீ சுணங்கென நினைக்கின்றனை; மற்று, நோய் மிக்க என் நெஞ்சம் அதனை வருத்தம் தரும் அணங்கு என நினையாநின்றது காண் எ. று.

சிலைவில் சிலையென்னும் மரத்தாற் செய்யப்பட்ட வில்; "அரிமான் இடித்தன்ன அஞ்சிலை வல்வில்[1]" என்றும், "சிலைமாண் வல்வில்[2]" என்றும் சான்ருேர் உரைப்பது காண்க. சிலைத்தல், ஒலித்தலுமாம். கொலைவில் என்றவிடத்து உடையவன் தொழில் வினைமேல் ஏற்றப்பட்டது. செந்துவராடை யென்றது, செம்மை யாகிய நிறப்பண்பின் மிகுதி யுணர நின்றது. "துவர்செய் ஆடைச் செந்தொடை மறவர்[3]" என்று பிறரும் கூறினர்.

சுணங்கு நினக்கு அழகு தருவதாயினும் எனக்கு வருத்தம் தருவதாயிற்று என்பதாம். அணங்கு தருவதனை அணங்கென்ருன். "அணங்கென உருத்த சுணங்கணி ஆகத்து ஈர்க்கிடை போகா வேரிள வனமுலை[4]" என்ருர் பிறரும். முலைக்கு நலம் சுணங்கொடு

1. கலி. 15. 2. அகம். 69. 3. நற். 33.
4. பொருந. 35-6.

திகழ்த லாகலின், அணங்கென நினையும் என்றது நலம் பாராட்டிய வாறு.

இஃது. உடன்போகின்றான், பெருநாணத்தால் வருந்தும் தலைமகளது மெலிவு நீக்கும் கருத்தால் முன்னிலைப்படுத்தித் தன் பெருநயப்பால் தெளிவித்தவாறு எனக் கொள்க.

இஃது உடன்போகின்றான் நலம்பாராட்டிய கூற்றும் என்டர் நச்சினார்க்கினியர்.[1] ''செந்துவராடை'' என்னும் பாட்டினுள் கொலைவில் எயினர் தங்கை யெனப் புணர்தற் பொருண்மை வந்த தாயினும் பாலைக்குரிய மக்கட்பெயர் கூறுதலின் பாலையாயிற்று என்பர் இளம்பூரணர்[2]. (363)

364 முளமா வல்சி யெயினர் தங்கை
இளமா வெயிற்றிக்கு நின்னிலை யறியச்
சொல்லினெ னிரக்கு மளவை
வெள்வேல் விடலை விரையா தீமே.

இஃது உடன்போக்கு நயந்த தலைமகன் அதனைத் தோழிக்கு உணர்த்த அவள் முடிப்பாளாய்ச் சொல்லியது.

உரை: வெள்ளிய வேலையுடைய தலைவ, முள்ளையுடைய மாவாகிய பன்றியினை உணவாக வுடைய வேட்டுவர்க்குத் தங்கை யாகிய இளமையும் அழகுமுடைய எயிற்றிக்கு நின் உடன்போக்குக் குறிப்பை விளங்க உரைத்து உடன்படுமாறு இரந்துகொண்டு யான் வரும் அளவும் விரையாது நிற்பாயாக, எ. று.

முளமா முள்ளையுடைய மாவாகிய பன்றி; இது முளவுமா எனவும் வழங்கும். "கானவ னெய்த முளவுமான் கொழுங்குறை[3]'' என்று பிறரும் கூறுப. ஈண்டு நின் நிலை என்றது, உடன்போக்கு நயந்துள்ள நின் மன நிலையை என்றவாறு. சொல்லினென், முற்றெச்சம். இரத்தல், இணங்கப்பெறுதல். விரையாதீமே என்றது விரைந்து செய்தற்குரியது என்பதுபட நின்றது.

---

1. தொல். பொ. 22. 2. ஷை. ஷை. 24. 3. நற். 85.

வெளிப்படை குறிப்பு என்ற இருவகையாலும் பன்முறை வரைவு கடாயவழியும் களவே விரும்பி யொழுகியவன், தோழியின் குறிப்பின்றியே உடன்போக்கு நயந்து அவள்பால் உணர்த்தினு ஞகலின், அவள் தலைமகளது குறிப்பறிந்து போக்குடன்படுத்த விரைகின்றமைபற்றி, இளமா எயிற்றிக்கு நின்னிலை அறியச் சொல்லினென் இரக்குமளவை என்றாள். இளையளாதலின், அவட்கு அறியச் சொல்லவேண்டும் என்பாள், அறியச் சொல்லினென் என்றாள். இதுகாறும் களவே விரும்பி யொழுகிய நீ, இது துணிந்தது அவட்கு மருட்கை விளைவிக்குமாகலின், நின்னிலை அறியச் சொல்ல வேண்டுவது கடன் என்றுமாம். ''தந்தை தன்னையர் உடனிருப்பச் சான்றோர்சூழ நிகழும் வதுவை நன் மணம்[1]'' கருதியிருந்தாள், இவ்வுடன்போக்குக்கு இசைதல் எளிதின் இயலுவதன்று என்பது தோன்ற இரக்கும் அளவை என்றும், நின்பாற் காணப்படும் விரைவு அவள்பால் இல்லை யாகலின், யான் இரக்குமளவை அமைதல்வேண்டும் என்பாள், விரையாதீமே என்றும் கூறினாள்.

இனி உடன்போக்கின்கண் நெறியிடை உளவாகும் ஏதமும், உடன்போகியவழி யுண்டாகும் அலரும் கூறித் தலைமகள் நாணிய வழித் தகுவன கூறி உடன்படுவிக்க வேண்டுதலின், இரக்குமளவும் என்றும், குறிவழியும் ஒருவழித் தணந்தும் ஒழுகுகின்றா ஞகலின் விரையாதீமே என்றும் தோழி இரந்துநின்றாள் என்றுமாம்.

இது, தோழிபால் தோன்றவேண்டிய உடன்போக்கினைத் தலைமகன் தானே நயந்து முற்படக்கூறுதலின், தோழி முன்னிலைக் கிளவியால் போக்குடன்படுதல் கூறுவதாயிற்று.

இது கொண்டுபோங்காலத்துக் கொண்டுடன் போக்கு ஒருப் படுத்துவல் என்றது என்பர் நச்சினார்க்கினியர்[2]. இளம்பூரணர், இந்நிலையறிய என்று பாடங்கொண்டு, பிரியுங்காலத்துத் தலைமகட்கு உணர்த்துகின்றேன் எனத் தோழி தலைமகற்குரைத்தற்கு இதனைக் காட்டி, இது விலக்கிற்று என்பர்[3]. (364)

---

2. கலி. 39. 2. தொல். பொ. 22. 3. ஷை. ஷை. 42.

365. கணமா தொலைச்சித் தன்னையர் தந்த
நிணவூன் வல்சிப் படுபுள் ளோப்பும்
நலமா ணெயிற்றி போலப் பலமிக
நன்னலம் நயவர வுடையை
என்னோற் றனையோ மாவின் றளிரே.

இது, வரைவிடைவைத்துப் பிரிந்து மீள்கின்றான் இடைச் சுரத்துக் குழைத்த மாவின் தளிர் கண்டு சொல்லியது.

உரை : கூட்டமாகிய மாக்களைத் தொலைத்துத் தன்னையர் கொணர்ந்த நிணமாகிய தசையுணவைக் கவர்தற்குப் போதரும் பறவைகளைக் கடியும் பெண்மை நலம் சிறந்த எயிற்றியைப் போல, மாவின் தளிரே, பலவாய் மிக்க நலம் யாவரும் விரும்புமாறு உடையை; ஆதலின் அதற்கு எத்தவம் செய்தனையோ, கூறுக எ. று.

கூட்டம் கூட்டமாக வாழும் மானினம் கணமா எனப்பட்டது. தன்னையர் தனக்கு முற்றோன்றியோர்; தலைமையுடையோருமாம். ஐ, தலைமை. வல்சி, உணவு. நிணத்தோடு கூடிய ஊனே உணவாதற்கு ஏற்றதாகலின், நிணவூன்வல்சி என விதந்து கூறினர். எயிற்றிக்கு நலமாவது மாமைக்கவினும் கண்டாரால் விரும்பப்படும் நற்குணமுடைமையுமாம். நன்னலம் என்றது, நிறப்பொலிவும் மென்மையும் நோக்கி, நயவரவு, விருப்பம்.

எயிற்றிபோல நலம்பலவும் நயவரப்பெறுதல் அரிதென்பான், நன்னலம் நயவர வுடையை என்றும், உலகத்துப் பெறற்கரிய பொருள் ஒன்றனைக் கருதியவாறே பெறுதல் தவமுடையார்க்கு அல்லது இன்மையின் என் நோற்றனையோ என்றும் கூறினான். ''வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம் ஈண்டு முயலப் படும்[1]'' என்பது காண்க. மகளிர் மேனி மாந்தளிர் போறலின், இவ்வாறு கூறினான்; ''நறுவடிப், பைங்கண் மாஅத்து அந்தளிரன்ன, நன்மா மேனி[2]'' என்பதனாலும் அறிக. இது, ''பொருளே உவமம் செய்தனர் மொழியினும், மருளறு சிறப்பினஃ துவமமாகும்[3]'' என்றதனால் அமையும்.

---

1. குறள். 265. 2. குறுந். 331. 3. தொல்.பொ. 284.

இது வரைவிடை வைத்துப் போகின்ருன் மாவினை நோக்கிக் கூறியது என்பர் நச்சினர்க்கினியர்[1]. இது முன்னிலையாதற் கில்லாத மாவினை முன்னிலைப்படுத்திற்று. (365)

366. அன்னாய் வாழிவேண் டன்னையென் றோழி
பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை
கொன்னே கடவுதி யாயி னென்ன தூஉம்
அறிய வாகுமோ மற்றே
முறியிணர்க் கோங்கம் பயந்த மாறே.

இது, தலைமகளை நோக்கி, இவ் வேறுபாடு எற்றினன் ஆயிற்று என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

ப. உரை: இது முன்னாள் அவன் தந்த கோங்கம்பூவால் விளைந்தது எனப் பூத்தருபுணர்ச்சி கூறியவா ருயிற்று. இது கருப் பொருளாற் பாலை.

உரை: அன்னாய், வாழ்வாயாக. யான் கூறுவதனை விரும்பிக் கேள். என் தோழி மிகவும் பசப்பெய்தி வேறுபடுகின்ருளாகலின், இதற்குக் காரணம் என்னை யென நீ சினத்தால் கண்சிவந்து அச்சுறுத்தி வினவுகின்ருய்; ஆராயுமிடத்து, அது தளிரும் பூங் கொத்துக்களு முடைய கோங்கின்பூவைக் கொடுத்தமையால் ஆயினமையின், பிறரால் எத்துணையும் அறியப்படாது, காண் எ. று

தோழி என்றது தலைமகளை. கண்ணை, முற்றெச்சம். கொன்னைச்சொல் அச்சப்பொருட்டு. ஏகாரம் எதிர்மறை. மாறு, ஏதுப்பொருள் படுவதோர் இடைச்சொல்; இதனை "அதனி னியறல்[2]" என்னும் சூத்திரத்து "அன்ன பிறவும்" என்றதனுற் கொள்வர் தெய்வச்சிலையார், முறி, தளிர். கோங்கம், பாலைக்குரிய கருப்பொருள். முதல், கரு, உரி என்ற பொருள்வகை மூன்றனுள், திணையுணர்தற்கண் முதலிற் கருவும் கருவின் உரியும் சிறந்தன

1. தொல். பொ. 22. 2. தொல். சொல். 71.

வாகலின் ஈண்டுக் கருப்பொருள்பற்றி இது பாலையிற் கோக்கப்பட்டுள்ளது. ''முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே நுவலுங் காலை முறைசிறந் தனவே[1]'' என்பதனுள், நுவலுங்காலை என்றதனால் இஃது அமையும் என அறிக.

இதன்கண், பசந்தனள் பெரிது என்றது செவிலி கூறிய முன்னிலைக்கிளவி. அதற்கு அறத்தொடு நிலைவகையால் விடை கூறுகின்றாளாகலின் அன்னாய் வாழி வேண்டு அன்னை என முகம் புகுந்தாள். இளமை வளர்ச்சிக் கண் பிறக்கும் வளமை வேறுபாட்டினும், தலைவியது பசப்பு மிக்குத் தோன்றுதல் பற்றி, என் தோழி பசந்தனள் பெரிது என்ற செவிலி கூற்றைக் கொண்டெடுத்து மொழிந்தாள். பிறாண்டும்; '' அன்னாய் வாழிவேண் டன்னை நின் மகள், பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு, நனிபசந் தனளென வினவுதி[2]'' என்பது காண்க. தலைமகள் எய்திய வேறுபாட்டுக் குரிய காரணம் விளங்காமையான் சினங்கொள்கின்றனை என்பாள், சிவந்த கண்ணை என்றும், என்னை அச்சுறுத்திக் கேட்பதிற் பயனின்று, '' அதன்திறம் யானும் தெற்றென உணரேன் '' என்பாள் கொன்னே கடவுதி என்றும் கூறினாள்.

அஃது ஆராய்ந்தல்லது கூறலாகாது என்றற்கு ஆயின் என்றும், அறியாப் பருவத்தே நிகந்தவதனை அறியும் பருவமாய இப்பொழுது நினைந்து வேறுபடுகின்றாளாகலின், அது சிறிதும் எளிதில் அறியலாகாது என்பாள் என்னதூஉம் அறிய வாகுமோ என்றும். அந்நிகழ்ச்சி இஃது எனத் தான் அறிந்தவாற்றால் கூறுவான் தொடங்கி முறியிணர்க் கோங்கம் பயந்தமாறே என்றும் கூறினாள். இதுபற்றியே பழையவுரைகாரரும், முன்னாள் அவன் தந்த கோங்கம்பூவால் விளைந்த பூத்தருபுணர்ச்சி[3] என்றார் (366)

1. தொல். பொ. 3. 2. அகம். 48.

3. பூத்தருபுணர்ச்சியாவது இன்னது எனத்தோழி கூற்றில் வைத்துக் களவியலுரை (சூ. 14. உரை) கூறுமாறு; ''எம்மைக் கழைக் கற்றைக் குழவிப்பிராயத்து மாழை கலந்த ஏழை நீர்மையாரோடு நாட்கோலம் செய்து விளையாடி வம்மின் என்று போக்கினாய்; போக்கினவழி, யாம் போய் ஒரு வெண்மணல் பரந்த தண்மலர்ப்

367. பொரியரைக் கோங்கின் பொன்மருள் பசுவீ
விரியிணர் வேங்கையொடு வேறுபட மிலைச்சி
விரவுமல ரணிந்த வேனிற் கான்யாற்றுத்
தேரொடு குறுக வந்தோன்
பேரோடு புணர்ந்தன் றன்னையிவ ளுயிரே.

இது, நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

ப. உரை : கான்யாற்றுத் தேரொடு குறுக வந்தோன் என்றது, கான்யாற்று யாங்கள் அழுந்துழிக் குறுக வந்தோன் எ.று. எனவே புனல்தரு புணர்ச்சி கூறியவாறாயிற்று.

பேரோடு புணர்ந்தன்று இவளுயிர் என்றது அன்று தோன்றிய இன்னான் தந்த உயிர் என அவன் பேரொடு பட்டது இவள் உயிர் எ. று. இது காலத்தாற் பாலை.

உரை : அன்னாய், பொரித்த அடியினையுடைய கோங்கின் பொன்போலும் பூக்கள் விரிந்த கொத்துக்களையுடைய வேங்கைப் பூவோடு வேறுபட அணிந்து, பலவாய் விரவிய மலர்களாற் பொலிந்த வேனிற்பருவத்தில் கான்யாற்றின் மருங்கே தேர் ஏறிக் குறுக வந்தோனுடைய பெயரோடு இவளுடைய உயிர் ஒன்று படுவதாயிற்று எ. று.

என்றது, ''அன்றுதொட்டு அன்னான் தந்த உயிர் என அவன் பேரோடுபட்டது இவள் உயிர் என்பதாம்.''

ஆல், ஓமை, கொன்றை, யா, வேங்கை, வேம்பு முதலிய மரங்களின் இனத்தைச் சேர்ந்த தாகலின், கோங்கினையும் பொரி

பொழிலிடை விளையாடிநின்றேமாக. ஒரு தோன்றல் ஒரு சுனைக் குவளைப் பூக்கொண்டு அவ்வழியே போதந்தான்; போதர நின்மகள் அவனைநோக்கி அப்பூவினை என் பாவைக்கு அணியத்தம்மின் என்றாள். அவனும் பிரிது நினையாது கொடுத்து நீங்கினான்; இஃது அறிவது அறியாக் காலத்து நிகழ்ந்தது'' என்பது.

யரைக்கோங்கு என்றூர்; ''பொரியரை ஆலம்[1]'' ''யாஅத்துப் பொரியரை முழுமுதல்[2]'' ''பொரியரை வேம்பு[3]'' ''பொரியரை யோமை[4]'' ''பொரியரை வேங்கை[5]'' ''பொரியரை ஞெமிர்ந்த புழற்காய்க்கொன்றை[6]'' என்று சான்றேர் குறிப்பது காண்க. கோங்கின்பூ பொன்போல் இருப்பது. ''புரிநிற நீள்பொன் அணிந்த கோங்கம்[7]'' என்றூர் பிறரும். அதனுல், ''பொன்செய் கன்னம் பொலிய வெள்ளி, நுண்கோல் அறை குறைந்து உதிர்வன போல, அரவ வண்டினம் ஊதுதொறும் குரவத்து, ஓங்குசினை நறுவீ கோங்கலர் உறைப்ப[8]'' என்பாராயினர். வேங்கைப்பூவும் பொன்னிறத்த தாகலின், வேறுபட மிலேச்சி என்றூர். விரவுமலர், வேறு வேறு நிறமுடைய மலர்; அவை மரவம், பாதிரி முதலியன. கான்யாறு வேனிற் காலத்துத் தெளிந்திருப்பது பற்றி வேனிற் கான்யாறு என விதந்து கூறினுர். மக்கட்குஇடப்படும் பெயரெல் லாம் உயிர்மேலதாகலின், உயிரொடு உண்டாகிய கலப்பைப் பேரொடு புணர்ந்தன்று என்றூர். புணர்ந்தன்று, இறந்கால முற்றுவினை.

கோங்கு, வேங்கை முதலியவற்றின் பூக்களைக் கொய்து மாலே தொடுத்து விளையாடுகையில் கான்யாற்று நீர் கொணர்ந்த வேறு பூக்களை எடுத்தற்கு முயன்றபோது தலைமகள் நீரிடை வீழ்ந்து அழுந்தினளாக, அக்காலைத் தலைமகன் வந்து உயிர்தந்து உதவி ஞன் என்பாள், விரவுமலர் அணிந்த வேனிற் கான்யாற்றுக் குறுக வந்தோன் என்றூள். தேரொடு வந்தான் என்றூள், முன்பு அறியாத ஒரு செல்வத்தோன்றல் என்றற்கு. நீரின்கண் வீழ்ந்தாளைத் தானும் நீருட் குளித்துத் தன் மார்பிடைப் புல்லிக்கொண்டு எழுந்தான் என்பது தோன்ற, குறுக என்று குறித்தாள். இவ்வாறு உயிர் தந்து உதவினுற்குத் தன்னுயிரைத் தந்தாள் என்பாள், வந்தோன் பேரொடு புணர்ந்தன்று இவள் உயிர் என்றூள் என்க. பிறுண்டும், ''காமர் கடும் புனல் கலந்தெம்மோடு ஆடுவாள்

1. அகம். 287. 2. குறுந். 255. 3. நற். 3.
4. அகம். 397. 5. ஷை. 365. 6. நற். 141.
7. திணைமா. 150 : 63. 8. அகம். 317.

தாமரைக் கண்புதைத்தஞ்சித் தளர்ந்து அதனேடு ஒழுகலான், நீணகை நறுந்தண்டார் தயங்கப் பாய்ந்து அருளினல், பூணகம் உறத்தழீஇப் போதந்தான் அகனகலம், வருமுலே புணர்ந்தன என்பதனல் என் தோழீ, அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையளே'" என்று உரைப்பது காண்க. இக்கருத்துப் பற்றியே, பழையவுரைகாரரும் இது "புனல்தரு புணர்ச்சி கூறியவா ருயிற்று" என்ருர். அவன் தந்தது இவளுயிர்; அவனுடையது இவள் உயிர் என உடையானும் உடைமையுமாய் இயைந் தொழிந்தது என்றற்குப் பேரொடு புணர்ந்தன்று இவள் உயிர் என்றும், எனவே, பிறர்க்கு இவளது உயிர் உரித்தாதற்கு இட மில்லே என்றும் உரைத்தா ளாயிற்று. (367)

368 எரிப்பூ விலவத் தூழ்கழி பன்மலர்
பொரிப்பூம் புன்கின் புகர்நிழல் வரிக்கும்
தண்பத வேனி லின்ப நுகர்ச்சி
எம்மொடு கொண்மோ பெருமநின்
அம்மெலோதி யழிவில ளெனினே.

இது, வேனிற்காலத்து நும்மொடு விளேயாட்டு நுகர வருவல் என்று பருவங்குறித்துப் பிரியலுற்ற தலேமகற்குத் தோழி கூறியது.

ப உரை: அம்மெல் ஓதி அழிவிலள் எனின் இன்ப நுகர்ச்சி எம்மொடு கொண்மோ என்றது, நீ வருந்துணேயும் இவள் ஆற்றி யுள்ளாயின் எம்மொடு நுகர்ச்சி கொள்வீராமின் என மறுத்தவாறு.

உரை: பெரும, எரிபோலும் நிறத்திணேக்கொண்ட பூவிணேயுடைய இலவமரத்தினின்றும் உதிர்ந்த பலவாகிய மலர்கள் பொரிபோலும் பூக்களேயுடைய புன்கமரத்தின் புள்ளிபொருந்திய நிழற்கண் கிடந்து அழகுறுத்தும் குளிர்ந்த செவ்வியையுடைய வேனிற்காலத்து விளேயாட்டின்கட் பெறும் இன்பநுகர்ச்சி, அழகும் மென்மையுமுற்ற கூந்தலே யுடைய இவள் நின் பிரிவாற்றி மேனி நலன் அழிவின்றி யிருப்பளாயின் எம்மொடு கொள்க எ. று.

1. கலி. 39.

இலவமரத்தின் செம்பூ நெருப்புப்போலத் தோன்றுவதுபற்றி எரிப்பூ இலவம் என்ருர்; பிறரும் "இலவத்து அழல் அகைந் தன்ன அலங்குசினை யொண்பூ[1]" என்பர். புன்கமரத்தின் பூ வெள்ளிய பொரிபோறலின் "பொரிப்பூம் புன்கு" என்பர்; ' பொரியெனப் புன்கவிழ் அகன்றுறை[2]" "பொரிப்பூம் புன்கின் எழிற்றகை யொண்முறி[3]" எனச் சான்ருேர் குறிப்பர். இலை நெருக்கம் இன்மையின், புகர் நிழல் எனப்பட்டது, புன்கின் புள்ளி பொருந்திய நீழல் கருமையும் வெண்மையும் பொருந்தியிருத்தலால் இடையிடையே இலவம்பூ உதிர்ந்து கிடப்பது பன்னிறங்களால் நீழலிடம் ஒப்பனை செய்யப்பட்டது போறலின், வரிக்கும் என்ருர். வேனிற்காலத்து இன்பநுகர்ச்சிக்குத் தண்பதம் இன்றியமை யாமையின், தண்பத வேனில் இன்பநுகர்ச்சி என்றல் வேண்டிற்று. வேனில் இன்பம், வேனிற்காலத்துத் தண்ணிய பொழிலிடத்தே சுற்றம் சூழ இருந்துண்டு மகிழும் வேனில்விழா. ஆருட்டும் வேனில்விழாவும் சேர நாட்டில் மிக்க சிறப்புடன் நிகழ்வன; அவற்றை நேரிற் கண்ட பரணர், செங்குட்டுவனைப் பாடுமிடத்து, "நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும், மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவு" என்று ஆருட்டையும், "பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கை[4]" என்று வேனில் விழாவையும் குறிக் கின்ருர். இவ்வேனில் இன்பத்தைப் பேரூர்க்கு அணிமையில் காஞ்சியாற்றின் கரையில் சுற்றமொடு கூடி நுகர்ந்த சிறப்பைப் பதிற்றுப்பத்துச் சிறப்பிக்கின்றது. சேரநாட்டின ராதலின் ஆந்தையார் அதனை ஈண்டுக் குறிக்கின்ருர்.

பிரியக் கருதும் தலைமகன் வேனிற் பருவத்து இன்பநுகர்ச்சிக்கு வருவல் எனத் தான் மீண்டுவரும் பருவத்தைக் குறித்தா ஞகலின், அதனைத் தோழி இலவத்தின் பன்மலர் புன்கின் புகர்நிழல் வரிக்கும் தண்பத வேனில் இன்ப நுகர்ச்சி என்று சிறப்பித்தாள். இன்பக் காலத்திற் காதலர் பிரியாதுறைதலை மகளிர் பெரிதும் விரும்புப. கார்த்திகை விழாவிற் காதலர் வருதல் வேண்டும் எனத் தலைமகள் விரும்புதலை, " மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப், பழவிறல்

1. அகம். 245. 2. ஷை. 116. 3. நற். 9.
4. பதிற். 48.

மூதூர்ப் பலருடன் துவன்றிய, விழவுடன் அயர வருகதில் அம்ம[1]''
என நக்கீரர் பாடுவது காண்க.

இவ்வண்ணம் வேனில் இன்பத்தைச் சிறப்பித்தவள், அதனை வற்புறுத்திப் பிரிவையாயின், தலைமகள் நின் பிரிவாற்ருது மேனி நலம் இழந்து அழிவள் என்பாள். அம்மெல் ஓதி அழிவிலள் எனின் என்றும், எனவே, அழிதல் ஒருதலை யென்றும், பின்பு நீ மீண்டு போந்து பெறக்கருதும் இன்பநுகர்ச்சிக்கு இடமில்லையாம் என்றும் கூறுவாள், வேறுவாய்ப்பாட்டால் அழிவிலள் எனின் எம்மொடு கொண்மோ என்றும் கூறினுள்.

எனவே, வேனிற்காலத்து இன்பநுகர்ச்சியினைப் பெறுதற்கு நீ மீண்டு வருந்துணையும் இவள் உயிர்வாழாளாகலின், நீ அது பெறுதல் ஆகாது எனச் செலவு மறுத்தவாரும். (368)

369. வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழில்
முளைநிறை முறுவ லொருத்தியொடு நெருநல்
குறிநீ செய்தனை யென்ப வலரே
குரவ நீள்சினை யுறையும்
பருவ மாக்குயிற் கவ்வையிற் பெரிதே.

இது, பரத்தை யொருத்தியுடன் பொழிலகத்துத் தங்கி வந்த தலைமகன், தலைமகள் வினவியவழி, ''யாரையும் அறியேன்'' என்ருனுக, அவள் கூறியது.

ப. உரை: இது பாலைக்கு உரித்தாகிய வேனிற்கண் நிகழும் குரவும் குயிலும் கூறுதலாற் பாலையாயிற்று.

உரை: வளவிய மலர்கள் நிறைந்திருத்தலின் வண்டுகள் படியும் நறிய பொழிலின்கண் முளைபோலும் நிரைபட நின்ற பற்களையுடைய ஒருத்தியோடு நீ குறிசெய் தொழுகினை யென்று கூறுப. அதன்வழி எழுந்த அலர் குரவ மரத்தின் நீண்ட கிளையின் கண் வதியும் வேனிற்பருவத்துக் கூவும் இயல்பிற்ருய குயில் செய்யும் ஓசையினும் பெரிதாயிராநின்றது எ. று.

---

1. அகம். 141.

வளர்மலர் ததைதல் கூறவே வண்டு மொய்த்தல் பெறப் படுதலின், வண்டுபடு பொழில் என்ருர். ததைதல், நெருங்குதல். படுதல், ஈண்டு மொய்த்தல். முளைநிரை முறுவல் என்றது, முளை போலும் முறுவல், நிரைமுறுவல் என இயையும். ''முளைநிரை முறுவலார்[1]'' என்று பிறரும் கூறுப. முறுவல், பல். குறி, ஈண்டுப் பரத்தை மார்பில் தலைவனுடைய சாந்தும் பூணும் செய்யும் குறி. ''நின் சாந்தினுற் குறிகொண்டாள், நின் மார்பின் பூணினுற் குறிகொண்டாள்[2]'' என்பது காண்க. வேனிற்பருவத் தில் குரவமரத்தின் பூஞ்சினையி லிருந்து குயில் கூவுவது இயல்பு. ''கொழுந்து முந்துறீஇக் குரவரும் பினவே, புணர்ந்தீர் புணர் மினே வென இணர்மிசைச் செங்கண் இருங்குயில் எதிர்குரல் பயிற்றும்[3]'' என்று சான்ருேர் உரைப்பது காண்க.

''யாறுங் குளனும் காவு மாடிப், பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப[4]'' என்பவாகலின், வண்டுபடு நறும் பொழில் கூறினுள்.

தலைமகன் அறியேன் என்புழி, குறிசெய்த இடம் முதலாயின யாவும் விளங்க அறிந்து அலர் கூறுவோர் பலர் என்பாள், குறிநீ செய்தனை யென்ப என்றும், நீ கூருதொழியினும் யான் அவளை அறிவேன் என்பாள், முளைநிரை முறுவல் ஒருத்தி என்றும் கூறினுள். ''கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே[5]'' என்பத னுல், தலைமகன் பொழில்விளையாட்டு அலர்க்கு ஏதுவாதலின், அலர் .... மாக்குயிற் கவ்வையிற் பெரிதே என்ருள்.

இஃது ஊடற் பொருண்மைத் தேனும் வேனிற்காலத்து நிகழும் குயிற் குரலை உவமித்தலின் பாலைத் திணையாயிற்று என்று இளம்பூரணரும், இது பாலைக்கண் மருதம் நிகழ்ந்தது என நச்சினுர்க்கினியரும்[6] கூறுவர். (369)

---

1. கலி. 15 2. ஷை. 79. 3. நற். 224.
4. தொல் பொ. 191. 5. தொல். பொ. 164.
6. ஷை. ஷை. நச்சி. 12. இளம். 52. மேற்கோள்.

370. வண்சினைக் கோங்கின் றண்கமழ் படலை
இருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப
நீநயந் துறையப் பட்டோள்
யாவ ளோவெம் மறையா தீமே

இது, பரத்தை யொருத்திக்குப் பூவணிந்தான் என்பது கேட்ட தலைமகள், அஃது இல்லை என்று மறைக்கும்[1] தலைமகற்குக் கூறியது.

ப. உரை: இது பாலைக்குரிய கருப்பொருளாகிய கோங்கு கூறினமையால் பாலையாயிற்று.

உரை: வளவிய கிளைகளையுடைய கோங்கின் தண்ணிதாய் மணங்கமழும் மாலையினைக் கரிய சிறகுகளை யுடைய வண்டுகளின் பெரிய தொகுதிகள் மொய்த்துநிற்ப, நின்னால் அணிந்து விரும்பப் பட்டவள் யாவள் என்பதனை மறையாது எனக்கு உரைப்பாயாக எ. று.

படலை, மாலை. புதுப்பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை என்றற்குத் தண்கமழ் மாலை என்றார். பெருந்திரளான வண்டுகளைக் குறித்தற்குப் பெருங்கிளை என்ப. ''தேன்செய் பெருங்கிளை[2]'' என்று பிறரும் கூறுவது காண்க. உறையப்பட்டோள், உறைதற்கு ஏதுவாய்க் காதலிக்கப்பட்டவள். மறையாதீமே, முன்னிலை முற்று வினைத்திரிசொல்.

பலர் காணப் பரத்தையொருத்திக்கு மாலை அணிந்து மகிழ்வித் தனை யாகலின், நீ என்னை மறைத்த லாகாது என்பதை உள்ளுறுத்து, இருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப என்றும், அவள் பெருநல முடைய ளாதலின், அவளை யான் காண்டற்கு விரும்புகின்றேன் என்பான், யாவளோ எம் மறையா தீமே என்றும் கூறினாள். தன்வயின் உரிமை தோன்றக் கூறுதலின் தனித்தன்மைப் பன்மையால் யாம் என்றாள். (370)

———

1. மறுக்கும் என்றும் பாடம். 2. நற். 202,

38

மகட்போக்கியவழித் தாய் இரங்கு பத்து

உடன்போக்கின்கண் தலைமகள் தலைமகனோடு புணர்ந்து உடனேகியவழித் தாய், மகள் பிரிவாற்றாது இரங்கிக் கூறும் பகுதியாகலின், இஃது இப்பெயர்த்தாயிற்று. இப்பத்தின்கண் முதல் இரண்டு பாட்டுக்கள் சில ஏடுகளில் இல்லை என்பர்.

அகனைந்திணைக் காதற்காம வாழ்க்கையில் தலைமைப் பண்புடைய ஒருவனும் ஒருத்தியும் சிறந்து நிற்ப ராயினும், தலைமகட்குத் தோழி போலச் செவிலியும் ஓரளவு சிறப்புடைய ளாவள். தாய் எனப் பொதுப்படக் கூறினமையின் செவிலி நற்றாய் என்ற இருவரும் உரியரே; ஆயினும், களவுக்குச் செவிலியே சிறந்து விளங்குகின்றாள். அவள் தலைவியை ஈன்ற நற்றாய்க்குத் தோழியாய்த் தலைவியைப் பிறந்த நாள்முதல் வளர்த்த பெருமையுடையவள். தலைமகள்பால் காணப்படும் கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும் பிறவுமாகிய மாண்புகட்குச் செவிலியும் உரிய ளாவள். அதனால் அவட்குத் தலைவிபாலும் தலைவிக்கு அவள்பா லும் நெருங்கிய அன்புண்டு. காமம் சிறத்தலால் தலைவி தலை மகனோடு உடன்போகியவழி அவளது பிரிவு செவிலிக்கு மிக்க வருத்தத்தை விளைத்து விடுகிறது. தலைமகளைத் தேடி ஊரெங்கும் நாடெங்கும் திரியும் செவிலியரும் உளர்.

இனி, தலைமகளது காதல் வாழ்வைக் குறித்துரைக்கும் அகப் பொருணூல் அவளது கற்புமாண்பை எடுத்துரைக்கிறது; அவ ளுடைய அறிவு செறிவு அருமை முதலியவற்றை அறிவிக்கிறது. அவற்றின் விளக்கத்துக்கு அடிகோலிய இளமைச் செவ்வியையும் எடுத்தோதும் கடமை ஆசிரியர்கட்கு வருகிறது. அவர்கள் அதனைக் காட்டற்குச் செவிலியையும் தாயையும் வாயிலாகக் கொள்வர். ஆதலால் அகப்பொருணூலில் தாயர்க்குச் சிறந்த இடம் உண்மை பெறப்படும்.

உடன்போகியவழித் தலைவியின் செவிலிக்குப் பெருந்துயரம் உண்டாகிறது; அவளது உள்ளத்தில் தலைமகளுடைய குணஞ் செயல்கள் புலனாகின்றன; நெஞ்சக்கிழியில் தலைவியது குழவிப் பருவம் முதல் தவழ்ந்து மொழிபயின்று தளர்நடைகொண்டு வளர்ந்ததும் பிறவும் தோன்றுகின்றன. தலைவியின் உணவும் உடையும் உரையும் விளையாட்டும் உருக்கொண்டு நிற்கின்றன. மனக்கண்ணிற் காணும் செவிலியின் சிறந்த அறிவு அவற்றைச் செவ்வையாக உருப்படுத்தி வெளியிடுகிறது.

தலைமகட்குச் சிறுபருவத்தே பாலுணவு தரப்படுகிறது. பாலில் தேன் கலந்து பொன்வள்ளத்திற் பெய்து தாயர் உண்பிக்கின்றனர். சிறிது உண்டதும் அஃது அவட்குத் தெவிட்டவும் அவள் உண்ண மறுத்து இங்குமங்கும் ஓடுகின்றாள்; அவள் பின்னே சென்று, "கூந்தல் உளரி மொழிமை[1]" கூறித் தாயர் ஊட்டுகின்றனர். தலைவி சிறிது வளர்ந்தபின் பாலில் பொரியை ஊறவைத்துத் தேன் கலந்து கொடுக்கின்றனர்[2]. பாலுணவை, ஒன்று தாய்க்குரியது, ஒன்று தந்தைக் குரியது, ஒன்று எனக்குரியது எனக் கூறுபாடு செய்து என்பாடு உண்டனை; தந்தைபாடு உண்க எனச் சொல்லி உண்பித்தல்[3] ஒருவகை. உண்டலை மறுத்து ஓடுங்கால் அச்சுறுத் தலும் ஒரோவழி உண்டு.

இளமகளிர்க்குப் பொதுவாக உடுக்கும் உடையின்மேல் சிறப்பாக வயலைப் பிணையலும் அல்குலும் (மேகலை) புனைவர்.

---

1. அகம். 207.   2. குறுந். 356.   3. அகம். 219.

முன்கையில் வளையும் காலில் அரிபெய்த சிலம்பும் அணியப்படுகின் றன. தலைமயிரை நெய்பெய்து வாரிப் பூவைத்துப் பின்னிவிடுவர்.

மனைமுன்றிலில் இட்ட மணற்பந்தரிலும், படப்பையிலுள்ள நொச்சிவேலியின் நீழலிலும் விளையாடும் தலைமகட்கு மனைப்புறத் திலுள்ள தெற்றியும் மனைநடுவண் படர்ந்துள்ள வயலைப் பந்தரும் விளையாட்டிடமாம். பந்து கழங்கு பாவை முதலியன தலைவியின் விளையாட்டுப் பொருள்கள். தன்னொத்த ஆயமகளிர் புடைசூழ இருந்து விளையாடுவது தலைவியது பேரியல்பு [1].

ஆண்டு சில கழிந்ததும் இவ்விளையாட்டுக்களோடு தாழியில் வயலை குவளை முதலியன வைத்து வளர்ப்பதும், கிள்ளை வளர்த்த லும், பாவைக்குப் பலியூட்டலும் விளையாட்டாகின்றன [2]. பொழில் களில் பூக்கொய்தலும் நீர் நிலைகளிற் படிந்தாடலும் கடற்கரையில் புணரியாடல் அலவனாட்டல் முதலியனவும் பின்னர் உண்டாகின் றன.

தலைவி தன் காதலனோடு உடன்போகியவழி இவை யாவும் செவிலியின் உள்ளத்தில் எழுகின்றன. அவள் செய்த தவறுகள் மறைந்துகெட, அவளது மென்மைப் பண்பு மேலோங்கி நிற்கிறது. அவள் சென்ற வெவ்விய சுரம் நினைவில் தோன்றுகிறது. வெஞ் சுரத்து வெயில் வெம்மையால் நீர்நிலைகள் வற்றிவிடுவதால், ஆண்டுக்கிடக்கும் கலங்கல்நீர் சுவையில் உவர்ப்பா யிருப்பதும், அதனை வழிச்செல்வோர் வேட்கைமிகுதியால் உண்பதும் நினைக் கின்றாள். தலைமகள் அதனை உண்ணற்கு எத்துணை வருத்தம் கொண்டாளோ என எண்ணி ஏங்குகிறாள்; அப்போது அவள் தன் இளமையில் பாலுண்ணாது மறுத்த சொல்லும் வெறுத்த உள்ளமும் கொண்டு ஒழுகியது [3] நெஞ்சில் தோன்றி துயர் செய்கிறது [4]. அவள் சென்றவழி மாமலை விலங்கிய சுரம் என்பது அறிந்து, ''பந்துவழி யோடினும் நனிநொந்து வெம்புபவள், வெவ்விய சுர நெறியை எவ்வாறு நடந்து சென்றாளோ என எண்ணிக் கண்ணீர் சொரிவாள். முன்பெல்லாம் பாலுண்ணாமலும் பந்தாடாமலும்

1. குறுந். 396. 2. அகம். 369. 3. அகம். 107.
4. குறுந். 356.

விளையாடாயமோடு மேவித்திரிந்தவள், இப்போது நடத்தற்கரிய வெங்கானம் அவனோடு செல்வது எளிது என உணர்ந்தாள் போலும்[1]'' என வருந்துகின்றாள்.

தலைமகளது களவொழுக்கம் பற்றி ஊரில் எழுந்த அலரை நினைக்கின்றாள். இவள் களவை, அவள்தாய் உவப்பதோ வெறுத்துத் தகுவன செய்வதோ செய்க என விடாமல் அம்பற் பெண்டிர் எனக்கு வந்து உரைத்தனர்; அதனைக் கேட்கின் இவள் நாணுவள் என யானும் ஒன்றும் உரையே னாயினேன்; அவளும் அதனைக் கரந்தே உறைந்தா ளாயினும், ''அன்னை அறியின் இவணுறை வாழ்க்கை எளிதாகல் இல்லை'' எனக் கருதி இளையோனாகிய அவனுடன் சென்றொழிந்தாள்[2] என அலரெழுந்த காலை அவள் ஒழுகியதிறம் நினைந்து வருந்துகின்றாள். பின்னர் ஒருவாறு தேறி, மடந்தைக்கும் காளைக்கும் உண்டாகிய நட்பு இவ்வுடன் போக்கால் உண்மையாயிற்று;[3] இது போதும், என எண்ணி அமைபவள், அவனும் அவளும் செல்லும் நெறியில் உள்ள சீறூர்க் கண் அவர்களை வரவேற்றுச் செல்விருந்தாற்றித் துச்சில் இருத்தும் மனைகெழு பெண்டாகுக யான்[4] என விழைவது அவளது மன மாண்பை வெளிப்படுத்துகின்றது.

அதுவே சார்பாக அவளது திருமணம் செவிலியின் நினைவுக்கு வருகிறது. மனைக்குப் பூவலூட்டிப் புதுமணல் பரப்பி எங்கணும் மாலை சூட்டித்[5] தமர் திருமணம் செய்ய முற்படுவதும், ஆயத்தாரும் தாயரும் ஒருபால் நின்று காணச் சான்றோர் முன்னே நிற்ப[6], அவளுடைய கையைத் தலைமகன் பற்றும் மணவினையை நினைக்கின் றாள்; நெஞ்சு கலங்குகிறது; கண்ணீர் ஆறாய்ப் பெருகுகிறது.

இனி, தலைவியை ஈன்ற நற்றாயும் இவ்வாறு வருந்துகின்றாள். தலைமகளுடைய ஆயமகளிரையும் ஏனை விளையாட்டுப் பொருள்களை யும் காணுந்தோறும், அவட்கு அவை ஆறாத்துயரத்தைச் செய்யும்[7]. அவள் பெரும்பாலும் மனையின் நீங்காத மாண்புடைச் செல்வி

1. குறுந். 396. 2. அகம். 203. 3. குறுந். 157.
4. அகம். 203. 5. அகம். 195. 6. ஷை. 385.
7. நற். 305.

யாதலின், மனையின் அகத்தும் புறத்தும் மகள் விளையாடிய நினைவு தோன்றி வருத்த வருந்திப் பிறர்க்கும் காட்டி, ''ஒரு மகளுடையேன்; அவளும் காளையொருவனுடன் அருஞ்சுரம் நெருநல் சென்றாள்; அவள் ஆடிய தெற்றியும் நொச்சியும் கண்டு உள்ளினும் உள்ளம் வேகும்[1] என்று வருந்துகிறாள். தலைமகள் சென்ற சுரத்தின் கொடுமையைப் பிறர் கூறக் கேட்பின், ''என்மகள் எனது அன்பு இயைவதாயின், அவள் செல்லும் வழி வம்பலரைத் தாங்கும் நன்மக்கள் வாழும் ஊர்களை உடையதாகுக[2]'' என்றும், ''ஞாயிறு காயாது மரநிழல் பொருந்தி மணல் பரந்து மழை பெய்து குளிர்ந்திருப்பதாக[3]'' என்றும் விழைகின்றாள்.

தன்மனைக்கண் உள்ள செல்வத்தை நோக்கும் நற்றாய், அதனைப் பொருளென எண்ணாது தலைமகள் கழிந்தது அவட்கு மிக்க வருத்தத்தைச் செய்கிறது. சீரும் சிறப்பும் இன்றி வறுமையில் அவள் கிடந்து வருந்துவளோ என்ற வாட்டம் ஒருபால் அவள் உள்ளத்தை உருக்குகிறது[4]. அவள் வளர்த்த வயலைக்கொடியைக் கண்டு, ''ஆர நீரூட்டிப் புரப்பவர், யார் மற்றுப் பெருகுவை, அளியை நீயே[5]'' என ஒருபால் அவலமுறுவாள். ஒருகால் அவள் தவறு செய்தாளாக அதற்காக அவளை ஒறுத்த தன் கையை நோக்கி, ''அவளை அலைத்த என்கை கடுநவைப் படுக[6]'' என நொந்துகொள்வள். மகள் நீங்கியதும் தன் உயிர் நீங்கவில்லை யென வருந்தி, உயிர் கொள்ளா தொழிந்த கூற்றை வெகுண்டு, ''மாயிருந் தாழி கவிப்பத் தாவின்று கழிக எற் கொள்ளாக் கூற்றே[7]'' என்றும், கூறுவள்.

அவள் பிரிவை நினைக்கும் போது தலைமகன் நினைவும் உடன் தோன்றுகிறது. மகள்பாற் செல்லும் அன்பு அவன்பால் சினமாகிறது. தணிந்த பருவத்திற் செல்லாது வெதிர்நெல் விளையும் வேனில் வெங்காலத்தில் கொண்டு தலைக் கழிந்தானே[8] எனக் கொதிக்கின்றாள். மகட்குத் தாயாகிய என்னைப் போலவே என்

---

1. நற். 179. 2. அகம். 15. 3. குறுந். 378.
4. அகம். 369. 5. அகம். 383. 6. அகம். 145.
7. நற். 271. 8. அகம். 397.

மகளைக் "கொண்டுடன்போக வலித்த வன்கட் காளையை ஈன்ற தாய் பெருவிதுப்புறுக[1]" என வெதும்புகின்ருள்.

உடன்போகிய தலைமகட்குத் தலைவன் மனையில் திருமணம் நடக்கும் செய்தி வரக் கேட்டதும் அவள் வடிவுமுற்றும் ஆர்வமாய் விடுகிறது. அம்மட நல்லாளை ஈன்றமை பற்றி என்பால் அருளா ளுயினும், அவளைப் பன்னுள் கூந்தல் வாரி நுசுப்பிற் சுமந்து ஓம்பிய உதவியுடையேன் எனச் சொல்லி, வேலனை வருவித்து "வேலனே, உன் கழங்கு நோக்கிச் சொல்: எனக்கு மகளைக் காணுமையால் கண்ணுறக்கம் இல்லை; யான் இனிது உறங்க அவன் அவளை இங்கே கொணர்வானுயின், அவளை என்மனை முந்துறக் கொணர்வானு? தன்மனைக்கு உய்ப்பானு, அவன் குறிப்பு யாது?[2]" என்று கேட்கின்ருள்.

திருமணம் நினைவிலெழுதலும், திருமணத்தில் தாயாகிய தான் தலைவியின் மடமை பாராட்டி, அவன் தாய் அவனது செம்மல் கண்டு அதற்குரிய சிறப்புச் செய்ய நிகழும் மனைவினை தோன்றி வருத்துகிறது[3]. திருமணத்துக்கு முன்னணியாக நடைபெறும் சிலம்புகழி நன்மணம் தன் மனைக்கண் நிகழாமையைப் பன்முறை யும் எண்ணிச்[4] "சிலம்பு கழீஇய செல்வம் பிறருணக் கழிந்தது[5]" எனக் கையற்று வருந்துவள். இனி வரும் பாட்டுக்களிலும் இன் னேரன்ன கருத்துக்களைக் காணலாம்.

371. மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல
அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய கானே.

இது, தலைமகள் புணர்ந்துடன் போகியவழி நற்ருய் "உடன் போக்கு அறநெறி" என்று மகிழ்ந்து கூறி அங்ஙனம் கூட்டிய நல்வினையைத் தன்னெஞ்சிற்கு விளக்கிப் புலம்பியது.

---

1. நற். 293. 2. அகம். 195. 3. அகம். 397.
4. அகம். 315, 321, 369. 5. நற். 279.

உரை : மள்ளர்கள் செய்யும் முழக்கத்துக்குத் தக மயில் ஆலும் நெடிதா யுயர்ந்த குன்றத்தில் ஒலிக்கின்ற முகில் மழை பெய்தலால் அதனைச் சார்ந்த சுரம் வெம்மையே யின்றி இனிமை யுடைத்தாகுக, தலைமகனோடு உடன்போகுதலாகிய இஃது அற நெறியே எனத் தெளிந்து சென்ற என்னுடைய பிறைபோலும் நெற்றியினையுடைய இளைய மகள் போகிய கான மாதலான் எ. று.

மள்ளர், சுரத்தின்கண் வாழும் மறவர். அவரது பறை முழக்கிற் கேற்ப மயில் தோகையை விரித்தாடும் என்றாராயினும், மயில் ஆடுதற் கேற்ப மள்ளர் பறைகொட்டுவ ரென்பது கருத்தாகக் கொள்க. ஆலுதல், ஆடுதல். ஆலுதல் அகவுத லாயின், மள்ளர் கொட்டில் என்றதற்கு மள்ளரது படைக்கொட்டிலின் மேலிருந்து மயில் அகவும் என்று உரைக்க. பெயல் கருதி முழங்கும் கருமுகிலைப் படுமழை என்ப ; "படுமழை உருமின் முழங்கும்[1]" என்பது காண்க. சுரம் மழைதலைஇ இனிய வாகுக என்று இயையும். தில், விழைவுப்பொருட்டு. இது, தலைமகனுடன் கொண்டுதலைக் கழியும் இவ்வொழுக்கம். கான், கானம். "சுரன் அணி கொண்ட கானம்[2]" என்றது காண்க. தேற்றேகாரம் விகாரத்தால் தொக்கது.

காதலன் கருத்தின்வழி யொழுகும் கற்பு மேம்பட்டாள் என மகளது செயல்மாண்பினை உள்ளுறுத்து உரைத்தலின், கற்புடைப் பெண்டிர் இருந்த நாட்டில் மழை வறங்கூராது என்பதுபற்றிச் சுரம் நனி இனியவாகுக தில்ல என்றாள். மள்ளர் கொட்டுக்குத் தக மயில் ஆலும் என்றது, தலைமகன் வேட்டதனையே தலைமகளும் வேட்டொழுகுகின்றாள் என்றவாறு ; இந்நெறிமை அவள்பால் இல்லையாயின் உடன்போக்கு நிகழாது என அறிக.

தலைமகள் உடன்போதற்குக் காரணம் பல்லாற்றானும் ஆராய்ந்தாட்கு, முன்னை நல்வினை கூட்டத் தலைமகனோடு உடன் சென்று கற்புப் பூண்டு அவனோடு நிகழ்த்தும் ஒழுக்கமே இருமை யும் பயத்தற் சிறப்புடைய நல்லறம் என உணர்ந்தாள் என்பது

1. அகம். 389. 2. ஐங். 357.

விளங்கினமையின், அறநெறி இதுவெனத் தெளிந்த என்றும், அங்ஙனம் உணரும் முதுக்குறைவுடைய ளாயினும் சுரத்தின் கொடுமையை ஆற்றும் மதுகையிலள் என்பாள், பிறைநுதற் குறு மகள் என்றும், அறநெறி யுணர்ந்து அதனைக் கடைப்பிடித்துச் செல்வார்க்கு நோய்தருவன இல்லை யெனினும், தாய்மையால் சுரத்தின் கொடுமை நோக்கி இரங்குகின்றாளாகலின், சுரம் நனி இனிய வாகுக என்றும் கூறினள். ''இறந்தகற்பினட்கு எவ்வம் படரன்மின், சிறந்தானை வழிபடீஇச் சென்றனள், அறந்தலைப் பிரியா ஆறுமற் றதுவே[1]'' என்றும், ''புணர்ந்துடன் போதல் பொருளென, உணர்ந்தேன் மன்ற அவர் உணரா வூங்கே[2]'' என்றும் கூறினர் பிறரும். தேற்றேகாரம் விகாரத்தால் தொக்கது. வேனிலால் வெவ்விதாய சுரம் இனிதாதற் பொருட்டுக் குன்றம் படுமழை தலைஇச், சுரநனி இனிய வாகுக என்றது வாழ்த்துமாம்; ''ஞாயிறு காயாது மரநிழற் பட்டு, மலைமுதற் சிறுநெறி மணல் மிகத் தாஅய்த் தண்மழை தலையின் றாக நந்நீத்துச், சுடர்வாய் நெடுவேற் காளையொடு, மடமா வரிவை போகிய சுரனே[3]'' என்று பிறரும் கூறுவது காண்க.

இதனுள் ''அறநெறி இதுவெனத் தெளிந்த என் மகள்'' என்று தாய் கூறவே, உடன்போக்குத் தருமமென்று மகிழ்ந்து கூறி அங்ஙனம் கூட்டிய நல்வினையைத் தன் நெஞ்சிற்கு விளக்கிப் புலம்பியவாறு காண்க என்பர் நச்சினார்க்கினியர்.[4] (371)

372. என்னு முள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையொ
டழுங்கன் மூதூ ரலரெழச்
செழும்பல் குன்ற மிறந்தவென் மகளே.

இது, தலைமகள் உடன்போகியவழி நற்றாய் தன் ஒழுக்கத்தால் ஊர் அலரெடுத்து உரைத்தலை நினையாது சென்றவள் என்னையும் உள்ளினள்கொல்லோ வெனக் கவன்றுரைத்தது.

---

1. கலி. 9. 2. குறுந். 297. 3. ஷை. 378.
4. தொல். பொ. 36.

உரை : தன்னை நெஞ்சு கொள்ளுமாறு தருவன கூறித் தெளிவித்துக் கொண்டு தலைக்கழிந்த வஞ்சினத்தையுடைய காளை போல்வானுடன், யான் அழுங்குதற் கிடனாகிய இப்பழையவூரார் அலர் கூற, அதனை நினைத்தலும் செய்யாது செழித்த பலவாகிய குன்றங்களைக் கடந்து சென்ற என் மகள் தான் போகியவழியில் என்னையும் நினைந்தாள் கொல்லோ, அறியேன் எ. று.

நெஞ்சுண்டல், மனத்துட் கோடல். வஞ்சினம், கடுஞ்சூள். "எஞ்சா வஞ்சினம் நெஞ்சுணக் கூறி[1]" என்றார் பிறரும். காளை போல்வானைக் காளை யென்றார்; இது திணைநிலைப்பெயர். உள்ளாமை யுணரநின்றமையின், உம்மை எதிர்மறை. அழுங்கன் மூதூர் பேரொலியினையுடைய மூதூர் எனினுமாம்; "உறைவினி தம்மவிவ் வழுங்க லூரே[2]" என்றார் பிறரும்.

மிக்க இளமையும் மடப்பமு முடையவளாய்த் தோழியர் தாயர் ஆகிய இவரைப் பிரியாதிருந்தாள், பிரிவச்ச மின்றிப் போக்குடன்பட வேண்டுதலின், தன்னை நெஞ்சுணத் தேற்றிய என்றும், அங்ஙனம் தேற்றத் தேறியவள் ஊரார் கூறும் அலர்க்குச் சிறிதும் உட்காது சென்றதனை நினைந்து வியப்பாளாய், அழுங்கல் மூதூர் அலரெழ என்றும், அவ்வலருரைக்கு நாணி யாம் ஈண்டு இருந்து வருந்தா நிற்ப, அழுங்கல் இயல்பாக வுடைய மூதூர் எடுத்த அலரைப் பொருளாகக் கொள்ளாமையின், அவ்வூரொடு அதன்கண் உறையும் எம்மையும் துறந்தொழிந்தாள் போலும் என்பாள், செழும்பல் குன்றம் இறந்த என்மகள் என்றும், எதனை நினையாளாயினும் ஈன்று புறந்தந்த தன்னை மறத்தற்கு ஏது ஒன்றும் காணாளாய், என்னை நினைந்தாள் கொல்லோ வென்று தன் ஆராக் காதலால் அலமருகின்றாளாகலின், என்னும் உள்ளினள் கொல்லோ என்றும் கூறினாள்.

அன்னை அறியின் தனக்கு இம்மனையில் உறைதல் துன்பமாம் எனக்கருதி நீங்கினாளாகலின், ஈண்டு உறையும் அன்னையாகிய தன்னை அவள் துறந்தாலன்றி உடன்போக்குக்கு உள்ளம் செல்லா தென்பது பற்றி இவ்வாறு நினைந்தாள் என்றுமாம். "அன்னை யறியின் இவணுறை வாழ்க்கை எனக்கெளி தாகல் இல்லெனக்

1. நற். 214. 2. ஐங். 181.

கழற்கால் மின்னொளிர் நெடுவேல் இளையோன் முன்னுறப் பன்மலை யருஞ்சுரம் போகிய தனக்கு'[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க.

உம்மை காதற்சிறப்புணர நின்றமையின் சிறப்புமாம். ஆகவே, நற்றாய் மாட்டு நினைதல் என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. ''இஃது என்னை நினைப்பாளோ என்றது'' என்பர் நச்சினார்க்கினியர்[2]. இது தலைமகள் கொடுமை நினைந்து கூறிய தென்பர் இளம்பூரணர்[3]. (372)

373. நினைத்தொறுங் கலிழு மிடும்பை யெய்துக
புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை
மான்பிணை யணைதர வாண்குரல் விளிக்கும்
வெஞ்சுர மென்மக ளுய்த்த
வம்பமை வல்வில் விடலை தாயே.

இது, தலைமகளைத் தலைமகன் கொண்டுகழிந்த கொடுமை நினைந்து நற்றாய் சொல்லியது.

ப. உரை: இவட்காக யான் பட்ட துயரம் அவன் தாயும் படவேண்டும் எ. று.

உரை: புலியாற் கொள்ளப்படுதலிற் பிழைத்த கவைத்த கொம்புகளையுடைய முதிய கலைமான் தன் பிணைமான் தன்னை யடையுமாறு ஆண்குரலை யெடுத்தழைக்கும் வெவ்விய சுரத்தின் கண், என்மகள் செல்லுமாறு செய்த புதிய மூங்கிலாற் செய்யப் பட்ட வலிய வில்லினையுடைய விடலைக்குத் தாயாகியவள் நினைக்குந் தோறும் என்மேல் கண்ணீர் வாரும் துன்பத்தினை எய்துவாளாக எ. று.

நினைக்குந்தோறும் நெஞ்சு கலங்கிக் கண்ணீர் சொரியப் பெருகும் துன்பம் நினைத்தொறும் கலிழும் இடும்பை எனப்பட்டது.

1. அகம். 203. 2. தொல். பொ. 36. 3. ஷை.ஷை. 39.

கவைக்கோடு, கிளைத்த கோம்புகள். புலி முழக்கம் கேட்டு அஞ்சிச் சிதறி யோடிய பிணைக்குத் தான் உய்ந்தமை தெரிவித்து அழைக்குமாறு தோன்ற, மான்பிணை அனைதர ஆண்குரல் விளிக்கும் என்றார். ஆண்மை தோற்றுவிக்கும் குரல் ஆண்குரல் எனப்பட்டது. அது கேட்டு மானினம் ஒருங்கு திரளும் என அறிக. ''கெடுமான் இனநிரை தரீஇய கலையே, கதிர்மாய் மாலை ஆண் குரல் விளிக்கும்[1]'' எனப் பிறரும் கூறுப. அம்புக்குக் கடுமையும் சிறப்பும் அதனைச் செலுத்தும் வில்லின் வன்மைமேல் நிற்றலின், வம்பமை வல்வில் என்றார். வம்பு, புதுமை.

தன் மகளது போக்கினை நினையுந்தொறும், சுரத்திடை விலங்கு புள் வெயில் வெம்மை முதலியவற்றாலும், தேடிப் பின்சென்ற தந்தை தன்னையர் என்று இவராலும் அவள் தீங்கெய்துகின் றனளோ என்னும் ஐயமும் கலக்கமும் தோன்றி மனத்தை அலைத்தலின், நினைத்தொறும் கலிழும் இடும்பை யென்றாள்.

தலைமகளின் தந்தை தன்னையர் பெருஞ்சினங்கொண்டு சேறலின் அவரால் தீங்கு விளையு மென அஞ்சினாள்; ''அவரும் தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண் சேந்து, ஒருபக லெல்லாம் உருத்தெழுந்து ஆறி இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று தெருமந்து சாய்த்தார் தலை[2]'' என்பது காண்க.

இது ''நன்மை தீமை அச்சம் சார்தலென் றன்னவை பிறவும்'' என்புழிக் கூறிய அச்சம். இதன்கண் நற்றாய் மாட்டுப் பொறாமை யென்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. ''விழவுத்தலைக் கொண்ட பழவிறன் மூதூர்ப் பூங்க ணுயம் காண்டொறும் எம்போற், பெரு விதுப்புறுக மாதோ எம்மிற், பொம்ம லோதியைத் தன்மொழிக் கொளீஇக், கொண்டுடன் போக வலித்த, வன்கட் காளையை யீன்ற தாயே[3]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. (373)

374 பல்லூழ் நினைப்பினு நல்லென்னூழ
மீளி முன்பிற் காளை காப்ப
முடியகம் புகாஅக் கூந்தலள்
கடுவனு மறியாக் காடிறந் தோளே.

---

1. அகம். 199. 2. கலி. 39. 3. நற். 293.

இது, தலைமகள் உடன்போயவழி அவள் இளமை நினைந்து இரங்கித் தாய் கூறியது.

உரை : பலமுறை ஆராயினும் இவ்வுடன்போக்கு நன் முறையே யென்று கருதி, மீளிபோலும் வலியினையுடைய காளை போல்வான் காவல் செய்ய, முடியிடுதற்குரிய நீட்சி பெறாத கூந்தலையுடையவளாகிய என்மகள், குரங்குகளாலும் புகுந்தறியப் படாத காட்டினைக் கடந்து சென்றனள்; அவளது அறிவிருந்தவாறு என்? எ. று.

பல்லூழ், பன்முறை; "பல்லூழ் நொடித் தெனச் சிவந்த மெல்விரல்[1]". நல்லென் ஊழ, நல்ல எனப்படும் ஊழ்; நல்லூழ் என்றவாறு; என்றென்பது எஞ்சி நின்றது. இவ்வூழ் இருவருக்கும் ஒத்தலின் பொதுப்படக் கூறினர். மீளி முன்பின் காளை, கூற்றை யொத்த வலியினையுடைய காளை. மீளி, கூற்று. பெண்மைச்செவ்வி எய்துங் காலத்து மகளிர்க்குக் கூந்தல் நன்கு முடித்தற்குரிய வளர்ச்சி பெறும் என்பது பற்றி முடியகம் புகா அக்கூந்தல் என்றார்; "தலைமுடி சான்ற தண்டழையுடையை, அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்[2]" என இற்செறிக்கு மாற்றாலும் இஃது அறியப்படும். கடுவனும் அறியாக் காடு என்றது, "மந்தியு மறியா மரம்பயிலடுக்கம்[3]" என்றாற்போல; உம்மை, சிறப்பு.

எம்முறையான் ஆராயினும், மகளிர் உற்றார்க்கே உரிய ரென்னும் நன்முறையே பெறப்படுதலின், பல்லூழ் நினைப்பினும் நல்லென்னூழ என்றும், கூந்தலும் நன்கு வளராத இளமை யுடையவ ளென்றற்கு, முடியகம் புகாஅக் கூந்தலள் என்றும் கூறினாள். இது, தன்மை யென்னும் மெய்ப்பாடாம். இனி, காடிறந்தோள் செயல் என ஒரு சொல் வருவித்து நல்லவென்ற முறையினவாம், ஆயினும், அவள் முடியகம் புகாக் கூந்தலளென ஆக்கம் வருவித்து உரைப்பினும் அமையும். பன்மை வாய் பாட்டாற் கூறியது, அறிவறிதலும் அஞ்சாது சேறலும் நோக்கி

---

1. அகம். 176. 3. ஷை. 7. 3. முருகு. 42.

என்க. தன் மகள் காடு இறந்தமைக் குரிய காரணத்தைப் பன்முறை நோக்கி அவளது அறிவு விளங்கக் கண்டு அமைந்தாளாயினும், முடியகம் புகாக் கூந்தலள் என அவளது இளமைச் செவ்வி நினைவின்கண் நிலவுதல் பற்றி, "இளமை நினைந்து கூறியது" எனத் துறை கூறிற்று. பிறாண்டும், மகள் கூந்தல் முடியகம் புகாமை நினைந்து, "சந்துவளர் வணர்குரல் வாரி வகைவகுத்து, யான்போது துணைப்பத் தகரம் மண்ணாள், தன்னோ ரன்ன தகைவெங் காதலன், வெறிகமழ் பன்மலர் புனையப் பின்னு விடச், சிறுபுறம் புதைய நெறிபு தாழ்ந்தனகொல்[1]" எனத் தாய் வருந்திக் கூறுமாறு காண்க. (374)

375. இதுவென் பாவை பாவை யிதுவென
அலமரு நோக்கி னலம்வரு சுடர்நுதற்
பைங்கிளி யெடுத்த பைங்கிளி யென்றிவை
காண்டொறுங் காண்டொறுங் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணோளே.

இது, சேரியும் அயலும் தேடிக் காணாது வந்தாரைக் கண்டு தலைமகள் தாய் சொல்லியது.

உரை: இப்பாவை என் பாவைபோல்வாள் வைத்தாடும் பாவையாகும் என்றும், இக்கிளி சுழன்ற நோக்கத்தையுடைய அழகுமிக்க ஒளி பொருந்திய நெற்றியினையுடைய பசிய கிள்ளை போல்வாள் வளர்த்த பசிய கிளி என்றும் கூறி, யான் இவற்றைக் காணுந்தோறும் கலங்கி வருந்த என் அழகிய கண்களையுடைய மகள் பிரிந்து சென்றனள் போலும் எ. று.

முதற்கண் நின்ற பாவையும் பைங்கிளியும் தலைமகளைக் குறிப்பன. அலமரல், சுழலுதல். நலம், அழகு. என்றிவை, என்ற இவை, அகரம் விகாரத்தால் தொக்கது. காணும் கண் கலங்கி நீர்சொரிவது பற்றி கலங்க எனப் பொதுப்படக் கூறினர். பூங்கண், பூப்போலும் கண்; "பூ வென் ஒருபெயர் ஆயியல்

1. அகம். 117.

பின்றே, ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே[1]'' என்றமையின், மெல்லெழுத்துப் பெற்று முடிந்தது; ''பூங்கண் ஆயம்[2]'' எனப் பிறரும் கூறுதல் காண்க.

தலைமகனெடு களவுநெறிக்கண் ஒழுகுங்கால் தன் செயல் மனையவர்க்குப் புலனுகுமோ எனக் கணந்தோறும் அஞ்சி அலமந்து ஒழுகினு ளாகலின், அவளது பார்வையை, அலமரு நோக்கு என்றும், தலைமகன் கூட்டத்தால் தலைவியின் சுடர்நுதல் அழகு மிக்குத் திகழ்ந்தமை தோன்ற, நலம் வரு சுடர்நுதல் என்றும் கூறுகின்ருள்.

தன் அன்புடைய மகளைப் பிரிந்தவள் அவள் விரும்பித் போற்றிய பாவையும் கிள்ளையும் காணுந்தோறும் அவள் நினைவெழுந்து வருத்துதலின், காண்டொறும் காண்டொறும் கலங்க என்றும், தேடிச் சென்ருர் அவள் நிலையறிந்து வருவரென்று எண்ணியிருந்தவள். அங்ஙனம் வாராமையால் நீங்கினளோ என்றும் கூறினுள். பயிலிடமும், பயில்பொருளும் தனித்தனி நோக்குந் தோறும் வருத்துதலின், காண்டொறும் காண்டொறும் என அடுக்கிக் கூறினுள். இதனுல் தாய்பால் அரற்று என்னும் மெய்ப்பாடு தோன்றுதல் காண்க.

தலைவி பலியிட்டுப் பரவியது பாவை; பாலூட்டி வளர்த்தது கிள்ளை; பாவை பலிபெருமையும் கிள்ளை பாலுண்ணுமையும் கண்டு வருந்தியவாறு: ''செந்தார்க் கிள்ளையும் தீம்பால் உண்ணு, கேழ் கொளச் காழ்புணர்ந்தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப், பாவையும் பலியெனப் பெருஅ நோய் பொர, இவைகண் டினைவதன் றலையும் நினைவிலேன்[3]'' எனத் தாய் கலங்கி மொழிவது காண்க.

இது தேடிக்காணுது வந்தாரைக் கண்டு புலம்பியது என்பர் நச்சினுர்க்கினியர்[4]. இது சேரியோரை வினயது என்பர் இளம்பூரணர்[5].

---

1. தொல். எழுத்து. 268.   2. நற். 90.   3. அகம். 369.
4. தொல்.பொ. 36.   5. ஷை. ஷை. 40.

இனி, ''இதுவென் பாவைக் கினியநன் பாவை, யிதுவென் பைங்கிளி எடுத்த பைங்கிளி, யிதுவென் பூவைக்கினியசொற் பூவை யென், றலம்வரு நோக்கினலம்வருஞ் சுடர்நுதல், காண்டொறுங் காண்டொறுங் கலங்கி, நீங்கினளோவென் பூங்க ணேளே'' என்பது பாடமாயின், [1] நன்பாவை யென்றும், பைங்கிளி யென்றும், சொற் பூவை யென்றும், காண்டொறுங் காண்டொறுங் கலங்க, சுடர் நுதலையுடையளாகிய பூங்கணேள் நீங்கினளோ வென்றும் செய்தெ னெச்சத்தைத் திரித்து முடித்துரைக்க. (375)

376. நாடொறுங் கலிழு மென்னினு மிடைநின்று
காடுபடு தீயிற் கனலியர் மாதோ
நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்
பூப்புரை யுண்கண் மடவரற்
போக்கிய புணர்த்த வறனில் பாலே.

இது, தலைமகள் போயவழி நற்றாய் விதியை வெகுண்டு சொல்லியது.

உரை: நல்ல செய்வினை அமைந்த நெடிய மனைக்கண் உறையும் நமர் கல்லென்று கலங்கி வருந்தப் பூப்போலும் மை யுண்ட கண்களையுடைய மடப்பம் பொருந்திய மகள் போதற்கு ஊக்கிய அறப்பண்பில்லாத தீவினைப்பால், நாடோறும் யான் கலுழ்ந்து வருந்துமாறு போலக் காட்டிடையே நின்று அதன்கண் தோன்றிய தீயிடைப்பட்டு எரிந்தொழியுமாக எ. று.

இடை, சுரத்தின் இடைநிலம். கனலுதல், ஈண்டு வெந்து கெடுதல். நல்வினை, நல்லவேலைப்பாடு. இனி, நல்வினைப் பயனாக விளையும் செல்வமும் இன்பமும் பொருந்திய நுகர்ச்சிக் கமைந்த பெருமனை என்றற்கு நல்வினை நெடுநகர் என்றுமாம். நகர், வீடு, ஈண்டு ஆகுபெயரால் நகர்க்கண் உறையும் தமர்மேல் நின்றது. புணர்த்தல், நினைக்கப் பண்ணிச் செயலிடை ஒன்றுவித்தல். அறன், ஈண்டு அருளறம் குறித்து நின்றது.

---

1. சீர்காழி கோவிந்தசாமிரெட்டியார் பிரதியில் இதுவே காணப்படுகிறது

தலைமகளை விடாது தொடர்ந்து சேறற்கண் தன்னெஞ்சும் பாலும் ஒத்தமையின், என்னினும் என்றும், சிறிதும் எஞ்சாமல் வெந்து நீறுபட்டழிதல் குறிப்பாதலின் காடுபடு தீ என்றும் கூறினாள்.

செல்வ நெடுமனைக்கண் இனிதிருந்த தன்மகள் அதனின் நீங்கி வெஞ்சுரத்துச் சேறற்குக் காரணம் ஊழ் என ஓர்ந்து உரைப்பாள். போக்கிய புணர்த்த என்றும், அறமல்லவை ஒன்றும் செய்தறி யார்க்கு அவற்றைச் செய்தார்க்கு எய்தற் பாலதாய துன்பத்தை எய்துவித்தல், பால்வரை தெய்வத்திற்குப் பாங்கன்று என்பாள், அறனில் பாலே என்றும், அதனால் அதனை ஆற்ற ஒறுத்தல் ஆவதே யென்னும் கருத்தால், காடுபடு தீயிற் கனலியர் மாதோ என்றும் கூறினாள். கூறவே, தாய்மாட்டு உயிர்ப்பென்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. நல்வினைப் பயனாகப் பெற்ற நெடுமனை வாழ்க்கை யில் இராது தீவினைப் பயனாக வெஞ்சுரம் நடந்து வருந்தச் செய்தல் பற்றி ஊழ்வினைப்பாலை, அறனில் பால் என்னும் நயம் காண்க.

''இது தீவினையை வெகுண்டு புலம்பியவாறு காண்க. பால், பழவினை'' என்பர் நச்சினார்க்கினியர்[1]. (376)

377. நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை
இயம்புணர் தூம்பி னுயிர்க்கு மத்தம்
சென்றனண் மன்றவென் மகளே
பந்தும் பாவையுங் கழங்குமெமக் கொழித்தே.

இது, தலைமகள் உடன்போயவழி அவள் பந்து முதலாகிய கண்ட நற்றாய் கலங்கிச் சொல்லியது.

உரை: நீர்வேட்கை மீதூர்ந்து வருந்தும் யானை வங்கியம் என்னும் இசைக்கருவியின் தூம்புபோலத் துதிக்கையினை யுயர்த்திப் பிளிறும் வழியின்கண், என்மகள் பந்தும், பாவையும் கழங்கும் முதலாகப் பல விளையாட்டுப் பொருள்களையும் யான் கண்டு வருந்துமாறு விட்டு வைத்துச் சென்றனள் எ. று.

---

1. தொல். பொ. 35.

உயவல், வருத்தம். ஊக்கிய யானை யென்க. "நீர் நசைக் கூக்கிய உயவல் யானை[1]" எனப் பிறரும் கூறுப. நீர்நசைக்கு ஊக்கிய யானை என்பதற்கு நீர்வேட்கையான் அது பெறுதலைமேற் கொண்ட யானை எனினுமாம். "உடலு நர் உட்க வீங்கிக் கடலென, வான்நீர்க்கு ஊக்கும் தானை[2]" என்பதனால் அறிக.

நீர்வேட்கை மிக்கு அதனைப் பெறுதலைக் கருதி உள்ளம் எழுந்த தாயினும். உடல்தளர்ந்து செல்ல மாட்டாமையின் வருந்துமாறு தோன்ற உயவல் யானை என்றார். பல்வகை இயங்களின் இடையே இசைக்கப்படுவது பற்றி நெடுவங்கியும் ஈண்டு, இயம்புணர் தூம்பு எனப்பட்டது. "பாடின் தெண்கிணை கறங்கக் .. குறுநெடுந் தூம் பொடு முழவுப்புணர்ந் திசைப்பத் ...தேரை யொலியின் மாணச் சீரமைத்துச் சில்லரி கறங்கும் சிறுபல்லியம்[3]" என்பது காண்க. தூம்பு யானையின் கைபோலும் என்பதை "ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை, தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்[4]" என்று பிறரும் கூறுவர்.

விளையாட்டுப் பொருள்களை விரும்பிப் போற்றும் இளமை கழிந்து அறிவறியும் செவ்வி யெய்தித் தன் கடன் அறிந்து உடன் போக்குத் துணிந்தனளாகலின், சென்றனள் மன்ற என்மகளே என்றும், தன்மகள் பேணிய பொருள்களைத் தான் காண்டொறும் வருத்தம் மிகுதலின், பந்தும் பாவையுங் கழங்கும் எமக்கு ஒழித்தே என்றும் கூறினள். பிறரும், "உள்ளின் உள்ளம் வேமே உண்கண் மணிவாழ் பாவை நடைகற் றன்ன என், அணி மயிற் குறுமகள் ஆடிய, மணியேர் நொச்சியும் தெற்றியும் கண்டே[5]" எனவும் கூறுதல் காண்க.

"பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியும், ஆயமும் ஒன்றும் இவைநினையாள் பால்போலும், ஆய்ந்த மொழியினாள் செல்லுங்கொல் காதலன்பின், காய்ந்து கதிர்தெறூஉங் காடு[6]" எனவும் கூறுதல் காண்க. (377)

---

1. நற். 171. 2. புறம். 17. 3. அகம். 301.
4. ஷை. 111. 5. நற். 184. 5. ஐந்திணை. 33.

378\. செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவ லுகக்கு மாலையாம் புலம்பப்
போகிய வவட்கோ நோவேன் றேமொழித்
துணையிலள் கலிழு நெஞ்சின்
இணையே ருண்க ணிவட்குநோ வதுவே.

இது, தலைமகள் உடன்போயவழி அவள் தோழி ஆற்ருமை கண்ட நற்ருய் சொல்லியது.

உரை : செல்லுதற்கு முயன்று பரப்பிய சிறகுகளை யுடைய வாவல் விரும்பிச் செல்லும் மாலைக்காலத்து, யாம் புலம்பெய்து மாறு எம்மைப் பிரிந்து சென்ற மகளை நினைந்து அழுவேனல்லேன்; இனிய மொழியினையுடைய துணைவியை யின்றி வருந்தி இனையும் நெஞ்சினேடு இணையொத்த மையுண்ட கண்களையுடைய தோழி யாகிய இவள் பொருட்டே புலம்பு வேனுயினேன் எ. று.

பகற்காலத்துச் சேறலாகாமையின், செல்லிய முயலிப்பாய சிறகர் என்றும், மாலைப்பொழுதே வாவற்கு இரை தேர்தற்குரிய காலமாகலின், வாவல் உகக்கும் மாலை என்றும் கூறினர். ''பையுள்மாலைப் பழுமரம் படரிய, நொவ்வுப்பறை வாவல்[1]'' என்ப. அவள், இவள் என நின்ற சுட்டுக்கள் முறையே தலை மகளையும் தோழியையும் குறித்தன; செய்யுளாதலின் சுட்டு முற்பட வந்தது. ஓகாரம் சிறப்பு. நோவேன், குறிப்பால் நோதலின் மிகுதி யுணர்த்திற்று, ''என்மகள் கழிந்ததற்கு அழிந்தன்ருே விலன்[2]'' என்ருற்போல. தேமொழித்துணை, தீவிய மொழி வழங்கும் துணைவி.

பகற்போதில் பரந்த உலகின்கண் காணப்படும் நிகழ்ச்சிகளில் விரிந்து நிற்கும் மனமும் கண்ணும் மாலைப்போதில் சுருங்கி மனை யகத்தே ஒடுங்கி நிற்றலான், அக்காலத்தே பிரிந்தோரது பிரிவு பெரிதும் வருத்துமாதலின், மாலை யாம் புலம்பப் போகிய அவள் என்ருள். ''நின்தோழி திருநகர் வரைப்பகம் புலம்ப

1\. தொல். பொ. 114. நச்சி. 2. அகம். 55.

அவனொடு பெருமலை யிறந்தது நோவேன்[1]'' எனத் தாய் பிருண்டும் கூறுவது காண்க.

உடனிருந்து உடன்வளர்ந்து உடன்விளையாடி இன்மொழி வழங்கி இன்புறுத்திய தோழியாகிய தலைவியைப் பிரிந்து யாரொடும் சொல்லாடாது தனித்திருந்து வருந்துதலின், தேமொழித் துணை யிலள் கலிழும் என்றும், தன்னினும் தோழி எய்தும் வருத்தம் பெரிதாதல் காண்டலின், இணையேர் உன்கண் இவட்கு நோவதுவே என்றும் கூறினுள்.

தானுறு துயரத்தினும் பிறர் துயரம் துடைத்தல் தகவுடைத் தென்னும் முறைமையால் இவட்கு நோவதுவே என்ருள் எனினு மாம். இஃது அருள் என்னும் மெய்ப்பாடு. இது தோழி தேஎத்துப் புலம்பல் என்பர் நச்சினர்க்கினியர்.[2] (378)

379. தன்னம ராயமொடு நன்மண நுகர்ச்சியின்
இனிதாங் கொல்லோ தனக்கே பனிவரை
இனக்களிறு வழங்குஞ் சோலை
வயக்குறு வெள்வே லவற்புணர்ந்து செலவே.

இது, புணர்ந்துடன் போகியவழித் தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட நற்ருய், ''அதனை முன்னே அறிவித்து நாம் மனம் புணர்த்த ஒழுகாது போயினள்'' என நொந்து சொல்லியது.

உரை: குளிர்ந்த மலைக்கண்ணே கூட்டமாகிய யானைகள் இயங்கும் சோலைகளின் வழியே விளக்கம் மிக்க வென்றி தரும் வேலையுடையவனேடு புணர்ந்துடன் சேறல் தன்னல் விரும்பப் பட்ட ஆயமகளிர் சூழ நாம் புணர்க்கும் நன்மணத்திடைப் பெற லாகும் இன்பநுகர்ச்சியினும் இனிதாகுங் கொல்லோ எ. று.

செலவு, நுகர்ச்சியின் இனிதாங் கொல்லோ எனக் கூட்டுக. அமர்தல், விரும்புதல். இன், ஒப்புப்பொருட்டு; உறழ்ச்சியுமாம்.

1. அகம். 63. 2. தொல். பொ. 36.

தனக்கென்றது, தலைமகட்கு. புணர்ந்தென்னும் செய்தெனெச்சம் செலவென்னும் வினைப்பெயரிடத்து வினை கொண்டது. கொல், ஐயம். ஓகாரம், அசைநிலை. வடித்துக் கூரிதாக்கி நெய் தடவப் பெற்றுண்மையின், வெள்வேல் எனப்பட்டது.

தலைமகட்குத் தலைமகனோடு உளதாகிய நட்பினை முன்னே தனக்கு அறிவித்துத் தான் மணம் புணர்த்த ஒழுகாது போயினு ளென்னுங் கருத்தால், பெற்றோரும் உடன் பயின்ற ஆயத்தோறும் ஒருங்கு கூடி நுகர்விக்கும் இன்பத்தினும், அவரல்லாத புதுவோர் புணர்க்கும் இன்பம் சிறப்புடைத்தன்று என்பாள், இனிதாங் கொல்லோ என்றாள்.

"தன்னோ ரன்ன ஆயமும் மயிலியல், என்னோ ரன்ன தாயரும் காண ... பொன்னுடை நெடுநகர்ப் புரையோர் அயர, நன்மாண் விழவின் தகரம் மண்ணி, யாம் பல புணர்ப்பச் சொல்லாள்" என்று பிறரும் கூறுதல் காண்க. மணத்திடைப் பெறும் நுகர்ச்சியே இனிதென்னும் கருத்தின ளாதலின், நன்மணம் என்றாள். நன் மண நுகர்ச்சி போலப் புணர்ந்துடன் போகிய செலவும் இனிதாயின் போதல் வேண்டா; போதலால் ஈண்டைய மணநுகர்ச்சியினும் ஆண்டைய இனிமை பெரிதாம் போலும் என்பது எய்துதல் கண்டு, இனிதாம் கொல் என்றாள் என்க. (379)

380\. அத்த நீளிடை யவனொடு போகிய
முத்தேர் வெண்பன் முகிழ்நகை மடவரல்
தாய ரென்னும் பெயரே வல்லா
றெடுத்தேன் மன்ற யானே
கொடுத்தோர் மன்றவவ ளாயத் தோரே.

இது, தலைமகள் உடன்போகியவழித் தெருட்டுவார்க்குச் செவிலித்தாய் கூறியது.

உரை : நீண்ட வழியினையுடைய சுரத்தின்கண் அவனொடு புணர்ந்துடன் போகிய முத்துப் போன்ற வெள்ளிய பற்களையும்,

1\. அகம். 385.

முகிழ்த்த நகையினையுமுடைய மடவரலாகிய தலைமகட்குத் தாயர் என்னும் பெயரை யான் என்னால் வல்ல வகையாற் பெற்றேன்; எனினும், அவளை அவற்கு உரியளாகக் கொடுக்கும் பேறு பெற்றவர் அவள் ஆயத்தோரே யாகலின், யான் அப்பெயர் பெற்றும் பெறேனே யாயினேன் எ. று.

அத்தம், வழி. பிறநிலங்களிற் போலாது பாலை நிலத்து வழி பொழில்களாலும் பிறவற்றாலும் மறைப்புண்ணாது வெறிதே நெடித்துத் தோன்றுவது பற்றி, அத்த நீளிடை எனப்பட்டது. வல்லாறு, ஈண்டு இன்பப்பயன் தாராமை சுட்டி நின்றது. மன்ற, தேற்றப்பொருட்டு. ஆயத்தோர் என்றது தோழியை; இது முன்னிலைப்புறமொழி. "அதுவென் உருபுகெடக் குகரம் வருமே[1]" என்றதனால் நான்கனுருபு விரிந்தது.

"தாயெனப் படுவோள் செவிலியாகும்[2]" என்றதனால், தாயர் என்னும் பெயரே என்றும், தாயாவாள் தலைமகளின் அரு மறை அறிந்து அறத்தொடுநிலை வகையால் மணம்புணர்த்தும் மாண்பின ளாகத் தான் அது பெருமையால் வருந்துகின்றமையின், வல்லாறு எடுத்தேன் என்றும், உண்மைத் தாயர்போல் அவள் மறையுறவு அறிந்து அவனிடைப் படுத்து மேம்பாடு எய்தினோர் ஆயத்தோ ராகலின், அவரே தாயர் எனப்படற்கு உரியோ ரென்பாள், கொடுத்தோர் மன்ற அவள் ஆயத்தோர் என்றும் கூறினாள். இது பொறாமை யென்னும் மெய்ப்பாடு.

இது செவிலி தெருட்டுவார்க்குக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர்[3]. (380)

———

1. தொல். சொல். 94. 2. ஷை. ஷை. 124. 3. ஷை.ஷை. 42.

39

உடன்போக்கின்கண் இடைச்சுரத்து உரைத்த பத்து

இது கொண்டுதலைக் கழிந்தவழி இடைச்சுரத்துக் கண்டோரும் தேடிச் செல்லும் தாயரும், கொண்டுதலைக் கழியும் தலைமக்களு’ மாகிய பலரும் நிகழ்த்தும் கூற்றுக்களின் தொகுதியாகலின், இப் பெயர்த்தாயிற்று.

381. பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து
செங்கான் மராஅத்த வரிநிழ லிருந்தோர்
யார்கொ லளியர் தாமே வார்சிறைக்
குறுங்கான் மகன்றி லன்ன
உடன்புணர் கொள்கைக் காத லோரே

இஃது உடன்போக்கின்கண் இடைசுரத்துக் கண்டார் சொல்லியது.

உரை: நெல்லியின் பசிய காய்களைப் பலவின் கனியோடு உண்டு, சிவந்த அடிமரத்தையுடைய செங்கடம்பு மரத்தின் இடையிட்ட நிழலின்கண் மேவியிருந்தோர், நீண்ட சிறகுகளையும் குறுகிய கால்களையுமுடைய மகன்றிற் பறவை போலப் பிரிவதாகிய

கொள்கைமிக்க காதலையுடைய ராகலின், இவர்கள் யாவர் கொலோ, அளிக்கத்தக்கோராய் இராநின்ருர் எ. று.

பசிய காய்களையுடைய நெல்லியின் கனிகள் பலவற்றை உண்டு எனினுமாம். சுரத்திடைச் செல்வோர் நெல்லிக்கனியை உண்டல் மரபு. ''சேய்நாட்டுச் சுவைக்காய் நெல்லிப் போக்கரும் பொங்கர் வீழ்கடைத் திரள்காய் ஒருங்குடன் தின்று[1]'' எனப் பிறரும் கூறுதல்காண்க. வரிநிழல், இலைச்செறிவின்றி இடையிட்டு விளங்கும் நிழல். மகன்றில், ஒன்றை யொன்று பிரிந்துழி உயிர் வாழாத பேரன்புடைய நீரில் வாழும் பறவை வகை. ''நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப், பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு[2]'' என்ருர் பிறரும்.

ஒருவரை யொருவர் இன்றியமையாச் சிறப்பினராய்ப் புணர்ந் துடன் போகிய கொள்கையினையு முடையராய்த் தோன்றுதலின், மகன்றில் அன்ன, உடன்புணர் கொள்கைக் காதலலோரே என்றும், இவர் செல்லும் நெறி வெவ்விய சுரமும் கொடிய விலங்கு வழங்கு வது மாகலின், அந்நலனின்மை கருதி, யார்கொல் அளியர் என்றும் கூறினர்; ''பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி, வழுவினகிய குற்றங் காட்டலும்[3]'' கண்டோர்க் கியல்பாகலின், ''யார்கொல் அளியர் தாமே ... . வெய்பயில் அழுவம் முன்னியோரே[4]'' என்று பிறரும் கூறுப.

382. புள்ளொலிக் கமர்த்த கண்ணள் வெள்வேல்
நிருந்துகழற் காளையொ டருஞ்சுரங் கழிவோள்
எல்லிடை யசைந்த கல்லென் சீறூர்ப்
புனையிழை மகளிர்ப் பயந்த
மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே.

இது, தலைமகள் இடைச்சுரத்தினது ஊரின்கண் எல்லிடைத் தங்கியவழி அவ்வூர்ப் பெண்டிர் பார்த்து இரங்குதல் கண்டோர் சொல்லியது.

---

1. நற். 271. 2. குறுந். 57. 3. தொல். பொ. 40.
4. குறுந். 7.

உரை : புள்ளினம் செய்த ஒலியான் அஞ்சி மருண்ட கண்களை யுடையளாய்; வெள்ளிய வேலையும் அழகிய கழலையு முடைய காளை போல்வானோடு புணர்ந்து, செல்லுதற் கரிய சுரத்தின்கண் செல்லும் இவள், இரவின்கண் தங்குதலால் கல்லென்னும் ஓசை மிக்க இச் சிறிய ஊர்க்கண் ணுள்ள திருந்திய இழை யணிந்த மகளிரைப் பயந்த பெருமனைக் கிழத்தியர்க்கு இவளைக் காணப் பெரிதும் வருத்த முண்டாவ தாயிற்று எ. று.

மூன்றாவதன் பொருட்கண் நான்காவது வந்து மயங்கிற்று. அமர்த்தல், மருளுதல். "சிவந்தொளி மழுங்கி அமர்த்தன கொல்லோ[1]" என்பதனால் உணர்க. அசைதல், தங்குதல். புனை யிழை மகளிர், பிறர் துணையின்றித் தாமே இழையணிந்து கொள்ளும் வளர்ச்சி பெறாத இளம்பெண்கள். மனைகெழு பெண்டிர், இல்லுறையும் நல்லியல் மகளிர். "நுனைகுழைத் தலமரும் நொச்சி, மனைகெழு பெண்டியான் ஆகுக மன்னே[2]" என்றார் பிறரும். "அசைநிலைக் கிளவி யாகுவழி அறிதல்[3]" என்றதனால் ஆர் அசைநிலை.

தான் பயிலாதவிடத்துச் சென்ற காலை, ஆண்டுப் புள்ளினம் ஒலித்தாலும் இளமகளிர்க்கு வியப்பும் அச்சமும் தோன்றி மருட்சி யுண்டாக்கு மாகலின், புள்ளொலிக்கு அமர்த்த கண்ணள் என்றனர்; "வரிப்புறப் புறவின் புலம்புகொள் தெள்விளி, உருப்பவிர்அமையத்து அமர்ப்பனள் நோக்கி[4]" என்று பிறரும் கூறுதல் காண்க. தலைமக்களின் உருவும் திருவும் ஒப்பும் உயர்வும் கண்ட ஊரவர்க்கு வியப்பும் மகிழ்ச்சியும் மிகுதலின் ஆரவாரம் எழுந்தமைபற்றிக் கல்லென் சீறூர் என்றனர்.

இவர் ஒழுக்கங் கண்ட பெற்றோர் தாம் பயந்த மகளிர், ஒருகால் அதனை மேற் கொள்வ ரென்னும் அச்சமும், பெறற்கரிய தாய் தந்தையரையும், தன் ஐயர் ஆயத்தோர் முதலிய பிறரையும் பிரிந்து போக்குத் துணிந்தாளைக் கண்டு அவர் ஆற்றாராதலின், அவரைத் தேற்றுதற்கண் ணுளதாகிய முயற்சித் துன்பமும் மிக்கு வருந்துகின்றனர் என்பார், நோவுமார் பெரிதே என்றார். (382)

1. நற். 66. 2. அகம். 203. 3. தொல். சொல். 271.
4. நற்.. 305.

383 கோட்சுரும் பரற்றும் நாட்சுரத் தமன்ற
நெடுங்கான் மரா அத்துக் குறுஞ்சினை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற
மள்ள னுள்ளம் மகிழ்கூரந் தன்றே
பஞ்சாய்ப் பாவைக்குந் தனக்கும்
அஞ்சாய்க் கூந்த லாய்வது கண்டே.

இஃது உடன்போகிய தலைமகன் வளைத்த கொம்பிற் பூக் கொண்டு தனக்கும் பாவைக்கும் வகுக்கக் கண்டார் கூறியது.

உரை : சுரத்தின்கண், நெருங்க வுள்ள நெடிய அடிப் பகுதியையுடைய மராமரத்தின், தேன் கொள்ளும் இயல்பினை யுடைய சுரும்புகள் ஒலிக்கின்ற, குறுகிய கிளையைத் தாழ்த்தி, அழகிய மெல்லிய கூந்தலையுடைய தன் காதலி, அதன்கண் நாட்காலையில் வலமாகச் சுழித்து மலர்ந்த வெள்ளிய பூக்களைக் கொய்தற்பொருட்டுச் செலவு சிறிது தவிர்ந்து நின்ற காளை, அவள் அப்பூக்களைத் தனக்கும் தன் பஞ்சாய்ப்பாவைக்கும் என வகுப்பது கண்டு மகிழ்ச்சி மிகுகின்றது, காண்மின் எ. று.

கோள், கொள்ளுதல். அமலுதல், நெருங்குதல். மராஅம், ஈண்டு வெண்கடம்பு. இதன் பூவிதழ் வலமாகச் சுழித்திருப்பது பற்றி வலஞ்சுரி வாலிணர் என்றார். வெண்ணிறப்பூ என்றற்கு வாலிணர் எனப்பட்டது. ‘வலஞ்சுரி மராஅத்துச் சுரங்கமழ் புதுவீ[1]’’ என்றும், ‘‘வாலிய சுதை விரிந்தன்ன பல்பூ மராஅம்[2]’’ என்றும் சான்றோர் குறிப்பது காண்க. குறுஞ்சினை பற்றிக் கொய்தற்குச் சினையைத் தாழ்த்தி நின்ற மள்ளன் என இயைப் பினும் அமையும். பஞ்சாய்ப்பாவை, கோரையாற் செய்யப்பட்ட பாவை. சாயல், மென்மை. அஞ்சாய்க் கூந்தல் எனக் கொண்டு அழகிய ஐம்பாலாகிய கூந்தல் என்றுமாம். மஞ்சாய்க் கூந்தல் எனக் கொண்டு, பஞ்சு போல் அழகிய கூந்தல் என்றலு மொன்று. கூந்தலையுடைய காதலி சினைபற்றிக் கொய்தற்கு நின்ற மள்ளன் உள்ளம் கண்டு மகிழ்கூர்ந்தன்று என முடிக்க.

---

1. அகம் 83. 2. ஷை. 12.

கடம்பின் நறுமணம் கமழும் பூவைக் கண்டாட்கு அதனை அணிந்துகோடற்கு விருப்பம் சேறலின் தாழ நின்ற குறுஞ் சினையைப் பற்றினளாக, அவள் வேட்கை கண்ட மள்ளன் தன் செலவு தவிர்ந்தான் என்பார், குறிஞ்சினை பற்றிக் கொய்தற்கு நின்ற என்றார். பிறுண்டும், "நின் பொம்ம லோதி பொதுள வாரி அரும்பற மலர்ந்த ஆய்பூ மராஅத்துச் சுரும்புசூழ் அலரி வேய்ந்தநின், தேம்பாய் கூந்தல் குறும்பல மொசிக்கும் வண்டு கடிந் தோம்பல் தேற்ருய் .... பணைத்தோள் விளங்க வீசி வல்லுவை மன்னுல் நடையே[1]" எனத் தலைவன் உரைப்பது காண்க.

தம்மாற் காதலிக்கப் பட்டார் செயல் காணுந்தோறும் காதலர்க்கு உள்ளம் மகிழ்சிறத்தல் இயல்பாகலின் ஆய்வது கண்டு மள்ளன் உள்ளம் மகிழ்கூர்ந் தன்றே என்ருர். (383)

384. சேட்புல முன்னிய வசைநடை யந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவ லெம்மூர்
தாய்நயந் தெடுத்த வாய்நலங் கவின
ஆரிடை யிறந்தன ளென்மின்
நேரிறை முன்கையென் னுயத் தோர்க்கே.

இஃது உடன்போகிய தலைமகள் ஆண்டு எதிர்வரும் அந்தணர்க்குச் சொல்லியது.

உரை: சேய்த்தாய நிலத்தை எண்ணி அசைந்த நடையினை யுடையீராய்ச் செல்லுகின்ற அந்தணர்களே, உங்களை யொன்று இரந்து கூறுகிறேன்; எம்மூர்க்குச் செல்லின், நேரிய இறை பொருந்திய முன்கையினையுடைய என் தோழியர்க்கு "நுங்கள் தோழியாவாள் தன் தாய் பேணி வளர்த்த அழகிய நலம் வனப்பு மிக, செல்லுதற் கரிய சுரங்களைக் கடந்து சென்றனள்" எனக் கூறுவீர்களாக எ. று.

எஞ்ஞான்றும் புகழும் பூசையும் பெறுதற் குரிய நாடு நோக்கிச் செல்லும் இயல்பினராயும், ஊர்தி யின்றி நடந்து செல்லும்

1. அகம். 257.

படிவத்தராயும் இருத்தலின், சேட்புலம் முன்னிய வசைநடை யந்தணிர் என்றார். அந்தணர் பிறபுலம் சேறும் இயல்பினராதல், "வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீர்[1]" என்றும், நடந்து செல்லும் படிவத்தராதல், ஆசிரியர் மரபியலில் ஏனை யரசர்க்கு "நடை நவில் புரவியும் களிறும் தேரும்[2]" கூறியது போல, ஊர்தி கூறாமையாலும் "குடையார் நிழல் உறிசேர் கரகத்தொடு குன்றிடத்து, நடையான் மெலிந்து வருகின்ற அந்தணிர்[3]" என்று கூறுதலாலும் அறிக.

மகளது நலம் பேணுதலிலேயே தாயின் கண்ணும் கருத்தும் ஒன்றி நிற்றலின், தன் நலத்தைத் தாய் நயந்தெடுத்த ஆய்நலம் என்றாள். "ஆயமும் அயலும் மருளத் தாயோம் பாய்நலம்[4]" எனப் பிறரும் கூறுதல் காண்க.

இஃது, "எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே[5]" என்றதனால், தலைவி கூற்றாயிற்று. அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் முதலாயினாரைப் பணிந்து கூறல் வேண்டும் என்பது கற்புநெறி யாதலின், இரந்தனென் மொழிவல் என்றும், எஞ்ஞான்றும் தன் நலமே குறிக்கொண்டு பேணிய சிறப்புடைமை கருதியும், தலை மகனொடு கூடாதவழி நலங் குன்றும் என அஞ்சிப் போக்குடன் பட்டுத் துணைசெய்தனர் ஆகலினாலும், தாய் நயந்தெடுத்த வாய் நலம் என்றும், நேரிறை முன்கை என் ஆயத்தோர்க்கு என்றும் கூறினாள்.

தலைமகன் தலைமகட்கு ஒழுக்கங் கற்பித்தல். "அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும் ஒழுக்கங் காட்டிய குறிப்பினும்[6]" என்பதனால் உணர்க. தாய் நயந்தெடுத்த நல மென்புழி உடைமையும், ஆயத்தோர்க்கு என்புழி அருளலும், இரந்தனென் என்புழித் தன்மையு மாகிய மெய்ப்பாடுகள் தோன்றின.

---

1. கலி. 9. 2. தொல். பொ. 626.
3. இறை. சூ. 23. மேற்கோள். 4. அகம். 146.
5. தொல். பொ. 42. 6. ஷை. ஷை. 146.

இஃது யான் போகின்றது ஆயத்திற்கு உரைமின் என்றது என்பர் நச்சினர்க்கினியர்.[1] இஃது இடைச்சுரத்துச் செல்கின்ருள் தன் பதி செல்வாரைக் கண்டு கூறியது என்பர் இளம்பூரணர் [2]
(384)

385. கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறிக்
கோள்வல் வேங்கை மலைபிறக் கொழிய
வேறுபல் லருஞ்சுரமிறந்தன ளவளெனக்
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்கள்
நற்ருே ளயந்துபா ராட்டி
எற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே.

இது, வரைவு மறுத்துழி உடன்போய தலைமகள் இடைச் சுரத்துக் கண்டாரை, ''யான் போகின்ற படியை யாய்க்கு நீர் கூறவேண்டும்'' எனச் சொல்லியது.

உரை: நெறியிற் செல்லும் மாந்தர்களே, என்னுடைய நல்ல தோள்களை விரும்பிப் பாராட்டி வளர்த்து, யான் தலைமகனேடு கூடி என் நலத்தைக் கவினுறுவித்துக் கொள்ளா வகை இற் செறித்து வைத்த அறிவியல்பில்லாத என் தாயைக் காணின் அவட்குத் தறுகண்மையுடைய காளையாகிய தன் காதலனேடு நெடிய தேர்மீதேறிக், கொலைவல்ல வேங்கைகள் மிக்க மலைகள் பிற்பட முன்னுக உள்ள பலவாய் வேறுபட்ட செல்லுதற் கரிய சுரங்களைக் கடந்து நின்மகள் சென்றனள், என உரைப்பீர்களாக எ. று.

கடுங்கண், தறுகண். பகைமை கருதித் தீமை செய்வாரைக் கண்ணேடாது ஒறுத்தற் குரிய தறுகண் கடுங்கண் எனவும், அருள் கருதி அடிபணிவார்க்கு உதவும் தறுகண் மென்கண் எனவுமாம். இதனைச் சேர்ந்தோர் '' புன்கண் அஞ்சும் பண்பின் மென்கண்[3]'' என்பர் நல்வேட்டனர்; ஊராண்மை என்பர் திரு

1. தொல். பொ. 42. 2. ஷை. ஷை. 46. 3. நற். 210.

வள்ளுவர்.[1] நெடுந்தொலைவு செல்லுதற் குரிய வன்மை யுடையது என்றற்கு நெடுந்தேர் என்றார். கால் வலிய தேர் என்பது கருத்து.[2] கோள், கொலை. மாக்கள், அண்மைவிளி. கெடுத்திருந்த யாய், காணாமையால் வருந்தும் தாய் என்று கூறினுமாம்; "கெடுத்துத் தொடு நன்கலம் எடுத்துக்கொண்டாங்கு[3]" என்றாற் போல.

போக்குடன்பட்டுத் தலைவனோடு செல்லும் தலைவி, செல்லும் நெறியிடைத், தனக்கு ஏதம் உளவாம் என எண்ணி வருந்தும் தாய்க்குத் தன்னோடு போதரும் காதலன் திறலை, கடுங்கண் காளை என்றும், நடந்து சேறலின்றி வலிய தேரூர்ந்து செல்லுமாறு விளங்க, நெடுந்தேர் ஏறி என்றும், தீங்கு செய்யும் விலங்குகள் உறையும் மலைநிலத்தையும் பிற நிலங்களையும் இனிது கடந்து சென்று சேர்ந்த திறம் தோன்ற, கோள்வல் வேங்கை மலைபிறக் கொழிய என்றும், அருஞ்சுரம் இறந்தனள் என்றும் கூறினாள்.

குழவிப்பருவம் தொடங்கி அவள் நலமே பேணி வளர்த்தன ளாகலின், நற்றோள் நயந்து பாராட்டி என்றும், தலைமகனோடு களவின்கண் ஒழுகியவிடத்து அவள் மேனி வேறுபாடும் அலரெழுந் தமையும் கண்டு இற்செறித்தனள் எனினும், அச்செயல் தான் தலைவனோடு தலைப்பெயற்குத் தடையாயினமையின் எற்கெடுத்த இருந்த என்றும், பிறர்க்கு நோய் சூழ்வார் தாயராயினும் தீயரே யாகலின், அறனில் யாய் என்றும், தான் தலைமகனிடம் தலையளி பெறுதலினின்று தகைந்தன ளாயினும், தன் நற்றோளை நயந்து பாராட்டிய நன்றி கருதித் தன்னைக் குறித்து அவள் தேடி வருந்தாவகைக் கூறுமின் என்றும் கூறினாள். தான் வேண்டுவ தொன்றனை வேண்டியவாறு செய்தல் பற்றி வாழியோ என்றாள்.

நற்றோள் நயந்து பாராட்டிய தாய் தன்னை இற்செறித்து ஓம்பியது ஊரவர் கூறும் அலர் அஞ்சியும் தன் நலங்கருதியுமே என்பது நினைந்து, அது தாய்மையின் அறம் என்று உணர்ந்தன ளாயினும், தலைமகற்கு வரைவு மறுத்த கொடுமையை நோக்க வேறுதலால், வெறுத்த உள்ளத்த ளாதலின், தன் தாயை அறனில்

1. குறள். 773. 2. ஷை. 496. 3. நற்.

யாய் என்ருள் எனவுமாம். "வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன் தொடா, கொல்லை குரல்வாங்கி ஈனு மலைவாழ்நர், அல்ல புரிந் தொழுகலான்[1]" எனத் தலைவி தமர் வரைவு மறுத்தமைக்கு வருந்திக் கூறுமாறு காண்க.

இன்று யான் தேரேறி வருத்தமின்றிப் போகின்றமை யாய்க்கு உரைமின் என்றது என்பர் நச்சினுர்க்கினியர்[2]. இஃது இடைச் சுரத்து ஆயத்தார்க்குச் சொல்லிவிட்டது என்பர் இளம்பூரணர்[3]. உடன்போக்கில் தேரேறிப்போதல் உண்டென்பதற்கு இதனைக் காட்டுவர் நச்சினுர்க்கினியர்[4]. சுரத்திடையவளே என்றும் பாடம்.

386. புன்கண் யானையொடு புலிவழங் கத்தம்
நயந்த காதலற் புணர்ந்துசென் றனளே
நெடுஞ்சுவர் நல்லின் மருண்ட
இடும்பை யுறுவிநின் கடுஞ்சூன் மகளே.

இது, புணர்ந்துடன் போகிய தலைமகளை இடைச்சுரத்துக் கண்டார் அவள் தாய்க்குச் சென்று கூறியது.

உரை: நெடிய சுவர் சூழ்ந்த நல்ல இல்லின்கண் மயங்கி ஒடுங்குதற் கேதுவாகிய துன்பம் உறுபவளே, நின் முதற்சூலில் தோன்றிய மகளாகிய தலைமகள், தன்னை விரும்பிய காதலனுடன் கூடிச் சிறிய கண்களையுடைய யானைகளும் புலிகளும் இயங்குகின்ற வழிகளைக் கடந்து சென்றனள்; ஆகலின், நீ வருந்துதல் ஒழிக எ. று.

புன்கண் என்றவிடத்துப் புன்மை, சிறுமை மேற்று; புன்கண் என்றே கொண்டு வேனில் வெம்மையால் நீரும் நிழலிடமும் பெருது எய்தும் மிடிமை யென்று உரைப்பினும் அமையும்; "பொருள் வேண்டும் புன்கண்மை ஈண்டில்லை[5]" என்ருற்போல. ஒடு, எண்ணுப்பொருட்டு. பகற்போதில் யானையும் இரவில் புலியும் வழங்குதலின் இரண்டையும் சேரக் கூறினுர், எப்போதும் சேறல் அருமை புலப்படுத்தற்கு. நெடுஞ்சுவர் நல்லில் என்றவிடத்து

1. கலி. 39. 2. தொல். பொ. 42. 3. ஷி. ஷி. 45.
4. ஷி. ஷி. 212. 5. கலி. 61.

நெடுஞ்சுவர் காவலருமையும் நன்மை செல்வமுடைமையும் குறித்து நின்றன. மருளுதல், ஈண்டுக் கையற்று வருந்தல். இடும்பை மகட்பிரிவை ஆற்ருமையாற் பிறந்த துன்பம். இடும்பையுறுவி, இடும்பை யெய்தி வருந்தும் தாய். கடுஞ்சூல் தலைச்சூல்; ''கடுஞ்சூற் சிறுவன்[1]'' என்றமை காண்க.

நின் மனைப்பெருமையும் செல்வநன்மையும் நினக்கு இன்பம் தருவது போல, நின் மகட்கும் தரும் எனக்கருதி மருளுகின்றனை; தானும் நின்னைப்போல் மனைவாழ்வு செய்யும் மாண்புடை நெஞ்சத் தால் இவற்றை உள்ளாது கழிந்தாள் என்பதைத் தெருளாது வருந்துதல் வேண்டா என்பார், நெடுஞ்சுவர் நல்லில் மருண்டனை என்றும்; மருட்சி காரணமாக நீ துன்புறுகின்றனை என்றற்கு மருண்ட இடும்பை உறுவி என்றும், கற்புடைப் பெருமடந்தை யாயினும், தலைப்படு காதற் காமப்பயனைகப் பெற்ற தலைச்சூல் மகளாதல் பற்றி நினக்கு இம்மருட்சி கைம்மிக்கு வருத்துகிறது என்பார் நின் கடுஞ்சூல் மகள் என்றும் கூறினர். இனி, அவள் சென்ற நெறியின் கொடுமையினை எண்ணிக் கலங்குகின்ருயாயின், யாம் அவ்வழியினின்று வருகின்றேம்; அவள் சென்றவழி எப்போதும் மக்கள் வழங்குதற் காகாத கொடுமையுடைத்தாயினும், அதனையும் அவள் கடந்து சென்ருெழிந்தாள் என்றற்கு, புன்கண் யானையொடு புலிவழங்கு அத்தம் சென்றனள் என்றும், அவளும் அவள் காதல னும் ஒருவரை யொருவர் இன்றிஅமையாக் காதலாற் பிணிப்புண் டிருக்கின்றனர் என்பார் நயந்த காதலற் புணர்ந்து சென்றனள் என்றும் விளக்கினர். காதலனது காதலின்பத்தில் மகள் களித்துச் செல்ல, மகட்கு தாய் மருண்ட மனத்தொடு மனையின்கண் இடும்பையுற்று இனைதல் இன்னுது எனத்தெருட்டியவாறு.

இது, ''தாநிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்[2]'' என்றதனுல், தடுத்தலும், நெறியின் கொடுமை கூறிப் புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்தெதிர் கூறி விடுத்தலு மாம்.

(386)

1. ஐங். 309. 2. தொல். பொ. 40.

387. அறம்புரி யருமறை நவின்ற நாவின்
திறம்புரி கொள்கை யந்தணிர் தொழுவலென்
றெண்டொடி வினவும் பேதையம் பெண்டே
கண்டென மம்ம சுரத்திடை யவளே
இன்றுணை யினிது பாராட்டக்
குன்றுயர் பிறங்கன் மலையிறந் தோளே.

இது, பின்சென்ற செவிலியால் வினவப்பட்ட அந்தணர் அவட்குச் சொல்லியது.

உரை: அறத்தைச் சொல்லுகின்ற அரிய மறைகளை ஓதிப் பயின்ற நாவினையும் அது விதிக்கும் செயல்வகை தெரிந்தாற்றும் ஒழுக்கத்தையு முடைய அந்தணர்களே, தொழுகின்றேன்' என்று சொல்லி, ஒள்ளிய தொடி யணிந்த என் மகள் சென்றாளைக் கண்டீரோ என வினவும் பேதைமையுடைய மனைகெழு பெண்டே, யாம் அவளைச் சுரத்திடையே கண்டேம்: இன்னும் கேட்பாயாக: இனிய துணைவனான காதலன் மகிழ்ந்து நல்பாராட்டி வரக் குன்றுகள் செறிந்த உயர்ந்த மலைகளைக் கடந்து சென்றாள்; ஆகலான், நீ அவளைப் பின்சென்று வருந்தவேண்டா, மீள்க எ. று.

அறமாவது வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உயர்ந்த அறிவுடை நன்மக்கள், வாழ்க்கைக்கு உறுதியும் நன்மையும் பயப்பன இவையென அறிந்து, விதித்தும் விலக்கியும் உரைக்கும் நன்மொழி. அந்நெறியில், மக்கட்கு உறுதி என அவர்கள் கண்டவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள் வீடு, இவ்வுலகில் பெறப்படுவ தன்று; இவ்வுலக வாழ்க்கைக்கு மன்னியவை ஏனை மூன்றுமே. அம் மூன்றனுள் அரிதாகிய அறத்தை விரும்பி உரைப்பது பற்றி மறை அறம்புரி அருமறை எனப்பட்டது. உலகில் வாழும் உயிர்ப்பொருள் உயிரில்பொருள் எல்லாவற்றிற்கும் தோற்றமும் முடிவும் இவ்வுலகமே அன்றி இதன்மேல் வேறொன்று மில்லை என எல்லாராலும் எளிதில் உரைக்கப்படும் கருத்தை மறுத்து உயிர்ப்பொருளின் வேறாய் உயர்ந்த பேருயிராகிய

இறைவன் உண்டென்றும், இவ்வுலகு உயிர் பொருட்கெல்லாம் வேருய்த் துன்பமே இல்லாத இன்ப அருளுலகு ஒன்று உண்டென்றும் வற்புறுத்துவது பற்றி அந்த அறநூல் மறை என்று வழங்கப் பட்டது.

ஏனைப் பொருள் இன்பநுகர்ச்சிகட்கு நெறிகாட்டி வீடுபேருகிய இறையருள் இன்ப வுலகவாழ்வுக்கு உரிமை செய்யும் அருமைபற்றி அறநூலாகிய மறையைத் தமிழ்ச் சான்ருேர் அறம்புரி அருமறை என்று குறிக்கின்றனர். ''நான்மறைக் குறித்தன்று அருளாகாமை யின் அறங்குறித்தன்று பொருளாகுதலின்[1]'' என்றும், ''எழுதாக் கற்பின் நின் சொல் லுள்ளும், பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின் மருந்தும் உண்டோ[2]'' என்றும் சான்ருேர் கூறுதலின், அருமறைக் கண் பொருளும் இன்பமும் கூறப்படாமை தெளியப்படும். இஃது எழுதப்படாமல் ஒருவர்பின் ஒருவராக நாவால் நவிலப்பட்டு வந்தமையின், மறவாமைப் பொருட்டு எப்போதும் நவில்வது மறை யோர் மரபு. அதுபற்றியே, அருமறை நவின்ற நாவின் அந்தணர் என்ருர். திறம், அறத்தின் கூறு. மனையின்கண் வாழ்வாங்கு வாழ்ந்து அறம் காட்டும் வீடுபேறு குறித்துத் துறந்தோறும், இளமையி லேயே அறப்பயன் விழைந்து துறந்தோரும் என அறவோர் இரு வகையராதலின், இருதிறத்தோர்க்கும் ஓரன்ன ஒழுக்கம் பொருந்தா மையான், அறத்துறையில் திறம்பல தோன்றினமையின், அவற்றைத் திறம் என்றும், அவற்றுள் தம் தகுதிக்கும் சால்புக்கும் ஏற்றது மேற்கொண்டு ஒழுகும் கொள்கை திறம்புரி கொள்கையாம் என்றும் அறிக. கொள்கை, ஒழுக்கம். ''குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின்[3]'' எனத் திருவள்ளுவர் கூறுவது காண்க. அறவோர் என்னுது அந்தணர் என்ருர். ''எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதலான்.[4]'' அந்தணர் என்பது அந்தணிர் என விளியேற்றது; ''அருவும் ஆரும் ஈரொடு சிவணும்[5]'' என்பது விளிமரபு. ஒண்டொடி ஈண்டுத் தலைவியைக் குறித்தது. அம்ம, கேட்பாயாக எனவரும் இடைச்சொல். சொல்லி என்பது

1. புறம். 362. 2. குறுந். 156. 3. குறள்.
4. ஷ. 5. தொல். சொல்.

சொல்லெச்சம். பெண்டு, பெண்ணென்னும் பொருள்பட வழங்கும் பொதுச்சொல். இனிது, நலம்.

பிறங்கல், ஈண்டுச் செறிதல். ஒண்டொடி வினவும் பெண்டே, சுரத்திடைக் கண்டனெம்; அவள், இன்றுணை பாராட்ட, மலை இறந்தாள் என இயையும். ஆகலான் என்பது முதலாயின குறிப்பெச்சம்.

மகள் நிலையை உள்ளவாறு அறியும் விருப்பினளாதலின், தலைமகளைத் தேடிப் பின்சென்ற செவிலி, நினைவிலும் நாவிலும் அறம் நிலவும் கொள்கையினரான அந்தணர்களை, அறம்புரி அரு மறை நவின்ற நாவின், திறம்புரி கொள்கை அந்தணிர் என்றாள். தன் துன்பநிலை கண்டு இரங்கி வேறு அறங்களைச் சொல்லிக் கழியாது கண்டது கண்டாங்குக் கூறல் வேண்டும் என்றற்கு அவரது நாவினைச் சிறப்பித்தாள் என அறிக. விருப்பு வெறுப் பின்றி எல்லாரையும் ஒப்பக் கருதி உறுதி கூறும் ஒழுக்கத்தவ ராதலால், தன்மகளைக் கண்டிருப்பர் என்று எண்ணினு ளாதலின், திறம்புரி கொள்கை அந்தணிர் என்று விளம்பினாள். அந்தணரை ஓம்பல் இல்வாழ்வோர்க்குக் கடனாதல் பற்றித் தொழுதல் கொண்டு கூறப்பட்டது. தொழுவல் என்றது முகமன். ஒண் டொடியாகிய தலைமகள் தன் காதலனுடன் கொண்டுதலைக் கழிந்தது கூறி அவளைக் கண்டீரோ என வினாவினாட்கு விடை யிறுக்கின்றா ராகலின், அவள் கூற்றினையே கொண்டெடுத்து ஒண்டொடி வினவும் பெண்டே என்றும், கொண்டுதலைக்கழிதல் கற்புக் காக்கும் பொற்புடைய அறமாதலை அறியாது ஏதம் கொண்டு வருந்துமாறு தோன்றப் பேதையம் பெண்டே என்றும், அஃது அவள் வினாவுக்குச் செவ்வனிறை யாகாமையின், கண்ட னெம் சுரத்திடை என்றும், அது கேட்டதும் உளம்மகிழ்ந்து அவளது நலமறிய எழுந்த வேட்கையை முகக்குறிப்பால் உணர்ந்து மேலும் கூறலுறுதலின் அம்ம என்றும், அவள் தனக்குரிய உயிர்த் துணைவனோடே செல்கின்றா ளென்பார், இன்றுணை என்றும், வழி யினது அருமை தோன்றுவாறு காதலன் அவளது நலம்பாராட்டிச் செல்வதால் மகிழ்ச்சி மிக்குச் செல்கின்றாள் என்றற்கு இனிது பாராட்ட என்றும், அதனால் நெறியிடை நின்ற குன்றும் மலையும்

அவட்கு அயர்ச்சி விளைவியாவாக, அவள் சுரத்தை இனிது கடந்துபோனாள் என்பது விளங்கக் குன்றுயர் பிறங்கல் மலையிறந் தோளே என்றும் கூறினர். “சிறந்தானை வழிபடீஇச் சென்றனள், அறந்தலைப் பிரியா ஆறு மற்று அதுவே[1]” எனச் சான்றோர் கொண்டுதலைக் கழிதலை அறம் என்பதும், “வான்தளி பொழிந்த காண்பின் காலை அணிகிளர் கலாவம் ஐதுவிரித் தியலும், மணி புரை யெருத்தின் மஞ்ஞை போலநின், வீபெய் கூந்தல் வீசுவளி யுளர, எகுதி மடந்தை[2]” என இன்றுணை இனிது பாராட்டுவதும், “கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பின், பிடிமிடை களிற்றின் தோன்றும், குறு நெடுந் துணைய குன்றமும் உடைத்தே[3]” எனக் குன்றுயர் பிறங்கல் மலை காட்டித் தலைவன் அயர்ச்சி போக்குவதும் காண்க.

இது செவிலி வினையவழிக் கூறியது என்பர் இளம்பூரணர்[4]; வரவின்கட் கூறியது என்பர் நச்சினார்க்கினியர்[5], (387)

388. நெருப்பவிர் கனலி யுருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாஅத்து வரிநிழ லசைஇச்
சிறுவரை யிறப்பிற் காண்குவை
செறிதொடிப்
பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய சுரனே.

இது, தேடிச் சென்ற செவிலிக்கு இடைச்சுரத்துக் கண்டார் அவளைக் கண்ட திறம் கூறியது.

உரை: நெருங்கிய தொடியினையும் பொன்போலும் அழகிய மேனியினையுமுடைய மடந்தையுடன் வென்றி தரும் வேலேந்திய விடலையாவான் முன்னிச் சென்ற சுரத்தை, நெருப்பு விளங்கும் ஞாயிற்றின் வெப்பம் தணியுமளவும் கரிய அடியினையுடைய யா

1. கலி. 9. 2. நற். 264. 3. அகம். 99.
4. தொல். பொ. 43. 5. ஷை. ஷை. 40.

மரத்தின் செறியாத நிழலின்கண் தங்கிச் சிறுமலைகளைக் கடந்து செல்லின் காண்பாய் எ. று.

ஞாயிற்றின் மிக்க ஒளி நெருப்பாய்த் தாக்குதலின் நெருப்பவிர் கனலி என்றார். கனலி, ஞாயிறு. உருப்பு, வெம்மை. "நெருப் பெனச் சிவந்த உருப்பவிர் மண்டிலம்[1]" என்பர் பிறரும். வெம்மையைச் சினமென்றது இலக்கணை. யா மரத்தின் அடி கருமைநிற முடைத்தாதலின், கருங்கால் யா என்றார்; "கவை யொண் தளிர கருங்கால் யாஅத்து வேனில் வெற்பு[2]" என்பது காண்க. அசைதல், தங்குதல். "ஒல்குநிலைக் கடுக்கை யல்கு நிழல் அசைஇ[3]" என்றார் போல. ஒடு, ஒருவினையொடு.

தலைமகளைப் பின்தொடர்ந்து சுரத்திடை நடந்து மெலிந்து வரும் செவிலியின் துயர்நிலை கண்டு கழிவிரக்கமுற்று எதிரே கிடந்த சுரத்தின் வெம்மையை ஆற்றாளென்பது பற்றி, ஆண்டுத் தோன்றிய யாமரத்தைக் காட்டி, அதன் நீழலில் வெயில்வெப்பம் தணியுமளவும் தங்குமாறு பணிக்கின்றமையின். நெருப்பவிர் கனலி உருப்புச் சினம் தணியக் கருங்கால் யாத்து வரிநிழல் அசைஇ என்றும், நெடிதுயர்ந்து கிளைபரப்பி நிழல் செய்து நிற்கும் நீர்மை நோக்கி, கருங்கால் யாத்து வரிநிழல் என்றும் கூறினர். இதனால் புணர்ந்துடன் போகிய நின் மகளும் வெயில்வெம்மை நோக்கி யாநிழல் தங்கிச் சென்றனர் எனக் குறித்தவா றாயிற்று. சிறுவரை என்றார், மலைவு தோன்றாமைப் பொருட்டு. அசைஇ இறப்பின் காண்குவை என்றது, தங்காது செல்குவை யாயின், ஆற்றாது வரையை இறத்தலும் காண்டலும் இல்லையாம் என்றவாறு. தொடியின் செறிவும் மேனியின் பொலிவும் எடுத்தோதினர், காதலன் புணர்ந்துடன் வருதலால் வழிநடைத் தளர்ச்சியின்மையும் உள்ளக்கிளர்ச்சியுடைமையும் தலைவிபால் விளங்கித் தோன்றின மையின், மடந்தையை முன்னுய்த்துத் தலைமகன் அவள்பின் சேற லின், மடந்தையொடு என்றார். "நின் அணிமாண் சிறுபுறம் காண்கம் சிறுநனி ஏகென ஏகல் நாணி நின்று தலையிறைஞ்சி

1. அகம். 31. 2. ஷை. 187. 3. ஷை. 399.

யோளே அதுகண்டு, யாம்முந்துறுதல் செல்லேம்[1]'' எனத் தலைமகன் உரைப்பதனால், உடன்போக்கில் தலைவியை முன்னுய்த்துச் சேறல் இயல்பாதல் காண்க.

சுரன் காண்குவை என்றது, சுரத்திடை அவர்களைக் காணலாம் என்றற்கு; இது செவிலிக்கு இடைச்சுரத்துக்கண்டோர் நுமக்கு எய்தச் சேறலாம் என்று விடுத்தது என்பர் நச்சினார்க்கினியர்.[2] (388)

389. செய்வினைப் பொலிந்த செறிகழ லோன்றாள்
மையணற் காளையொடு பைய வியலிப்
பாவை யன்னவென் னுய்தொடி மடந்தை
சென்றன ளென்றி ரைய
ஒன்றின வோவவ ளஞ்சிலம் பாடியே.

இது, பின்சென்ற செவிலித்தாய் வினவப்பட்டோர் 'கண்டோம் என்புழிச் சொல்லியது.

உரை : ஐய, என் கண்ணிற் பாவைபோலும் ஆய்ந்து கொண்ட தொடியினை யணிந்த என் மகள், தொழில்வகையாற் பொலிவுறச் செய்யப்பட்ட செறிந்த கழலினையும் வலிய தாளினையும் கரிய தாடியினையுமுடைய காளைபோல்வானோடு மெல்ல நடந்து சென்றனள் என்று கூறுகின்றீர்; அதுபோது அவளுடைய அழகிய சிலம்பணிந்த அடிகள் நிலத்திற் பொருந்தின கொல்லோ எ. று.

மகளிர்க்குச் சிலம்புபோல ஆடவர்க்குக் காலில் கழல் அணிதல் பண்டையோர் இயல்பு. பூத்தொழிலும் அரும்பு போலும் வேலைப் பாடும் உடைமைபற்றிக் கழலைச் செய்வினைப் பொலிந்த செறிகழல் என்றார். ஆண்மக்கட்கு இளமையிற் கிண்கிணியும், காளைப்பருவத்தில் கழலும் அணிதல் வழக்கு; ''கிண்கிணி களைந்த கால் ஒண் கழல் தொட்டு[3]'' என்பது காண்க. மிக்க வேலைப்பாடுடைமை பற்றிப் புனைகழல்[4]'' என்ப; ''கழல் பறைந்தன[5]'' என்றற்கு ''வீரக்கழல் அருப்புத் தொழில் பறைந்தன'' என உரைக்கப்

1. அகம். 261. 2. தொல். பொ. 40. 3. புறம். 77.
4. புறம். 100. 5. ஷை. 4.

படுவது இதற்குச் சான்றுபகரும். இக்கழல் பொன்னாற் செய்யப் படுதலின் ''பொலங்கழல்[1]'' எனப்படும். பகைவரை வென்று அவர் முடிப்பொன்னால் கழல் செய்து போர்மன்னர் அணிந்து கொள்ப. ''முடிபுனைந்த பசும்பொன்னின், அடிபொலியக் கழல் தைஇய வல்லாளனை[2]'' என்பதனாலறிக. கழல், வீரமும் வெற்றி யும் புகழும் குறித்தது; ''சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் கழல்யாப்புக் காரிகை நீர்த்து[3]'' என்பர் திருவள்ளுவர். மை யணல், கரிய தாடிமயிர். ஆண்மைக்குரிய செவ்வி எய்தினமை விளங்க மையணலைக் கூறினார். பாவை, கண்ணிற்பாவை. ஓகாரம், வினாப்பொருட்டு.

தலைமகளைக் கொண்டுதலைக்கழிந்த தலைவனுடைய கட்டாண் மையை வியந்து கண்டோர் செவிலிபாற் கூறினராகலின், அவர் கூற்றைக் கொண்டெடுத்து மொழிவாள், செய்வினைப் பொலிந்த செறிகழல் நோன்றாள் மையணற் காளை என்றும், பரல் நிறைந்த நெறியில் நடந்து சேறல் தலைமகட்கு இயலாதென நினைந்து வருந்துகின்றாளாகலின், பைய இயலி என்றும், தனது ஆராக் காதல் புலப்படக் கண்ணின் பாவை யன்ன என் ஆய்தொடி மடந்தை என்றும் கூறினாள். ''உண்கண் மணிவாழ் பாவை நடை கற்றன்ன என் அணியியற் குறுமகள்[4]'' எனச் செவிலி கூறுதல் காண்க. கண்டோர், தலைமகன் கழலையும் தாளையும் சிறப்பித்தது போலத் தலைவியின் தொடியைக் கூறிச் சிலம்பணிந்த அடியைச் சிறப்பித்துக் கூறாமையின், அவள் அடி நடையால் மெலிந்து தேய்ந்தனவோ என அஞ்சி அலமருகின்றாளாகலின், ஒன்றினவோ அவள் அஞ்சிலம்படியே என்றாள்.

இது செவிலி சுரத்திடை வினையது என்பர் இளம்பூரணர்[5].

(389)

390. நல்லோ ராங்கட் பரந்துகை தொழுது
பல்லூழ் மறுகி வினவு வோயே
திண்டோள் வல்விற் காளையொடு
கண்டனெ மன்ற சுரத்திடை யாமே.

---

1. புறம். 3. 2. ஷை 40. 3. குறள். 777. 4. நற். 184.
5. தொல். பொ. 40.

இது, பின்சென்ற செவிலித்தாய் பலரையும் வினவக் கண்டோர் தாம் கண்டவாறு அவட்குக் கூறியது.

உரை: அறிவரைத் தேடித் திரிந்து அவர்பாற் கைதொழுது பலமுறையும் மருண்டு வினவுதலையுடையோய், திண்ணிய தோள்களையும் வலிய வில்லினையு முடைய காளை போல்வானோடு நின் மகள் செல்ல யாம் இடைச்சுரத்திற் கண்டோம் எ. று.

நற்பண்பு நற்செய்கைகளால் உயர்ந்த அறிவர்களை நல்லோர் என்றார்; நல்லதன் நலம் காட்டி அதனால் உலகு இன்புறக் கண்டு அதனையே காதலித் தொழுகுவது அறிவர் தொழில்; அன்னோர் உலகில் அருகி யிருத்தலின், அவரைத் தேடித் திரிந்தல்லது காண்பது அருமையாகலின் நல்லோர் ஆங்கண் பரந்து என்றார். பரத்தல், தேடித் திரிதல் மேற்று. ''பரந்து கெடுக உலகியற்றியான்[1]'' என்றாற்போல. மறுகுதல், துயர்மிகுதியால் அறிவு கலங்குதல். மன்ற, தேற்றப் பொருட்டாய இடைச்சொல். யாம் என்றது, நேரிற் கண்ணாற் கண்டமை வற்புறுத்தி நின்றது.

நல்லோற்பாற் செல்வார் தொழுது காண்டல் முறையாகலின் பரந்து கைதொழுது என்றும், அருமணி யிழந்த நாகம் போன்று பெறலரும் மகளைப் பிரிந்து அலமருகின்றாளாகலின், மறுகி என்றும், ஒருவர் இருவரோடு அமையாது பலரைக் கண்டு பன்முறையும் கேட்பது பற்றி, பல்லூழ் வினவுவோய் என்றும் அப்பெற்றியாளை மேலும் மறுகாவண்ணம் தெளித்தல் தெள்ளியோர் கடனாகலின், கண்டனெம் மன்ற என்றும், கண்ட இடம் இது என்பார் சுரத்திடை என்றும் கூறினார். (390)

---

1. குறள். 1065.

40

மறுதரவுப்பத்து

இது புணர்ந்துடன் போகிய தலைமக்கள் மீண்டு வருதல் பொருளாகக் தொடுக்கப்பட்ட பாட்டுக்களின் தொகை யாகலின், இப்பெயர்த்தாயிற்று. மறுதரவு, மீளுவது.

391\. மறுவி றூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேல் விடலையொடு
அஞ்சி லோதியை வரக்கரைந் தீமே.

இஃது உடன்போகியதலைமகள் மீடற்பொருட்டுத் தாய் காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்தது.

உரை : குற்றமில்லாத சிறகுகளையுடைய சிறிய கருங் காக்கையே, வெவ்விய சினமும் வெற்றியு முடைய வேலையேந்தும் காளைபோல்வானொடு சென்ற அழகிய சிலவாகிய கூந்தலையுடைய என் மகளை வருமாறு கரைவாயாக; கரையின் அன்புடைய நின் முறைமைக் கேற்ப நின் கிளைக் காக்கைகளோடு இருந்து நீ உண்ணும் வகையில் பசிய ஊன்கலந்து ஆக்கிய பசுமையான

பலியுண வினைப் பொன்னுற் செய்யப்பட்ட கலத்திலிட்டுத் தருகு வேன், காண், எ. று.

சிறுகருங்காக்கை, சிறுமை வடிவும் கருமை நிறமும் குறித்தன. இஃது இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர். அன்புடை மரபு, அன்பு காரணமாக நிலவும் முறைமை. கிளையோ டுண்டல் காக்கைக்கு மரபு; இனத்தின்பால் உள்ள அன்பால் உளதாய மரபாதலின், அன்புடை மரபு என்ருர். "காக்கை கரவா கரைந் துண்ணும்[1]" என்பது காண்க. பசியவூன் பச்சூன் எனப்பட்டது. வல்சி, உணவு விடலையொடு ஒடு, உயர்பின் வழித்தாய ஒரு வினை ஒடு. கரைந்தீமே என்பது, "முயங்கினை சென்றீமோ[2]" என்ருற்போல முன்னிலை முற்றுவினைத் திரிசொல்.

ஏனைப் புட்களைப்போலச் சிறகரின் புறத்தே பல்வகை நிறங்கள் விரவப் பெருமையின், மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை என்றும், பெற்றது இறப்பவும் சிறிதாய காலத்தும் தன் சுற்றம்சூழ உண்டல் மரபாகலின், அன்புடை மரபின் நின்கிளை யென்றும், பலியிட்டுப் பரவுக்கடன் புரிவார் பொற்கலத்தி லிட்டுப் படைத்தல் வழக்காதல் பற்றி, பொலம்புனை கயத்தின் என்றும், காக்கை கரையின் சென்ருர் மீளுவரென்பது வழக்காதலின். வரக் கரைந்தீமே என்றும் கூறினள். "வெண்ணெல் வெஞ்சோறு, எழுகலத் தேந்தினும் சிறிது என் தோழி, ... விருந்துவரக் கரைந்த காக்கை யது பலியெ[3]" என்று சான்ருேர் கூறுவது காண்க.

இது நற்ருய் உடன் போய தலைமகள் பொருட்டுக் காகத் திற்குப் பராய்க்கடன் உரைத்தது என்பர் இளம்பூரணர்.[4] இது நிமித்தத்தொடு படுத்துப் புலம்பியது என்பர் நச்சினுர்க்கினியர்.[5] காளையொடு என்றும் பாடம். (391)

392. வேய்வனப் பிழந்த தோளும் வெயிறெற
ஆய்கவின் றுலைந்த நுதலு நோக்கிப்
பரியல் வாழி தோழி பரியின்
எல்லையி லிடும்பை தரூஉம்
நல்வரை நாடனெடு வந்த மாறே.

---

1. குறள். 527. 2. கலி. 64. 3. குறுந் 210.
4. தொல். பொ. 39. 5. ஷ. ஷ. 36.

இஃது உடன்போய் மீண்டு வந்த தலைமகள் வழிவரல் வருத்தம் கண்டு ஆற்றுளாகிய தோழிக்குச் சொல்லியது

உரை: தோழி, நல்ல மலை சூழ்ந்த நாடனொடு புணர்ந்து உடன்போய் மீண்டு வந்தமையால், மூங்கிலினது வனப்பை இழந்த தோளும், சுரத்தின்கண் வெப்பம் வருத்துதலால் நுண்ணிய மென்மை அமைந்த அழகு கழிந்த நுதலும் நோக்கி வருந்துதல் ஒழிவாயாக; வருந்துவையேல் அஃது முடிவில்லதோர் துன்பத் தினைத் தருமாகலான் எ. று.

தோளும் நுதலும் கவின் இழத்தற்கு ஏது வெயில் தெற என்பதனாற் பெற்றாம். வேய்வனப்பு, வேயொடு நிகர்த்தற்குரிய வனப்பு. "வேயொழுக் கன்ன சாயிறைப் பணைத்தோள் பெருங் கவின்[1]" என்பது காண்க. ஆய்கவின் மிக்க அழகு; ஆயமகளிர் பலராலும் சிறப்பிக்கப் பெறும் அழகு என்றுமாம்; "பாவை யன்ன பலராய் மாண்கவின்[2]" என்று சான்றோர் உரைப்பது காண்க. பரிதல், வருந்துதல்; "இருந்துள்ளி என் பரிதல் நெஞ்சே[3]" என்றாள் போல. பரியல், அல்லீற்று எதிர்மறை வியங்கோள். அஃது எனச் சுட்டுவருவிக்க. வந்தமாறு என்புழி மாறு, ஏதுப் பொருள் பட வருவதோர் இடைச் சொல்லாதலின் எழுவாய் ஆகாமை அறிந்து கொள்க.

தனக்குச் சிறந்தாளாய் உடன் பயின்று ஒழுகினாட்குத் தன்னிடை யுளதாகும் சிறுவேறுபாடும் விரைந்து அறியத் தோன்று மாகலின், தோளும் நுதலும் நோக்கிப் பரியல் என்றும், பரிந்த வழி இவ் வேறுபாட்டிற்குத் தான் காரணம் எனத் தலைமகன் நினைந்து பெரியதோர் வருத்தம் உறுவன் என்றும், அது தன் போலும் மகளிரால் நீக்கப்படுவது அன்று என்றும் கூறுவாள், எல்லையில் இடும்பை தரூஉம் என்றும் கூறினாள். எல்லையில் இடும்பை தரூஉம் என்றதற்கு தாயர் தந்தை தன்னையர் முதல் பலர்க்கும் வருத்தம் மிக விளைவிக்கும் என்றும், பின்னர் அதன் விளைவு வேறாம் என்றும் கருதி இவ்வாறு கூறினாள் என்றுமாம். வாழி, என்றது, தோழியின் அன்புடைமைக்கு மகிழ்ந்தவாறு.

---

1. அகம். 213. 2. ஷ. 98. 3. குறள். 1243.

இது, மீண்டு வந்த தலைவி வழிவரல் வருத்தம் கண்டு வருந்திய தோழிக்குக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர்.[1] (392)

393 துறந்ததற் கொண்டு துயரடச் சாஅய்
அறம்புலந்து பழிக்கும் அண்க ணாட்டி
எவ்வ நெஞ்சிற் கேம மாக
வந்தன ளோநின் மடமகள்
வெந்திறல் வெள்வேல் விடலைமுந் துறவே.

இது, தலைமகள் உடன்போய் மீண்டு வந்துழி அயலோர் அவள் தாய்க்குச் சொல்லியது.

உரை: நின்னைப் பிரிந்து சென்றது ஏதுவாகக் கொண்டு துயரம் வருத்துதலால் உண்மெலிந்து அறநூல்களை வெகுண்டு பழிக்கும் அண்கணாட்டியே, வருத்தத்தால் வருந்தும் நின் நெஞ்சிற்கு இன்பமுண்டாக, வெவ்விய வலியும் வெள்ளிதாய வேலு முடைய விடலையாவான் முன்வர அவன் பின்னே நடந்து நின் மகள் வந்தனள், காண் எ. று.

துறந்தது, ஈன்று புறந்தந்த தாயாகிய தன்னைத்துறந்து காதலனுடன் கொண்டுதலைக்கழிந்தது. சாய்தல், உடம்புமெலிதல். துயரம் உண்ணின்று வெதுப்புதலால் உடல் மெலிந்தமையின், துயரடச் சாய் என்றார். அறம், அறநூல்; அறங்கூறுவோரையுமாம். அண்கணாட்டி, கண்காண இருப்பவள்; ''அண்கணாளனை நகுகம் யாமே[2]'' என்று பிறரும் கூறுதல் காண்க. துயரங்கொண்டு வருந்தும் நெஞ்சு எவ்வ நெஞ்சு எனப்பட்டது. ஏமம், இன்பம்; காப்புமாம். ஓ, வியப்பு.

களவின்கண் ஒழுகுதலும் கொண்டுதலைக்கழிதலும் அறநூலார்க்கு உடன்பாடாதலின், தாய் அறத்தை வெகுண்டு

1. தொல். பொ. நச். 42.   2. அகம். 32.

தூற்றியதைக் கண்டிருந்தா ராதலின், அறம் புலந்து பழிக்கும் அண்கணுட்டி என்றார். அறத்தைப் பழித்தமைக்கு ஏது அவளுடைய மகள் அவளைத் துறந்ததாகலின், துறந்ததற் கொண்டு என்றும், அதனால் ஆருத் துயர் கொண்டு அவலித்தமை தோன்றத் துயரடச் சாஅய் என்றும் அயலோர் உரைப்பாராயினர். எவ்வம் எனப் பெயர்த்தும் கூறினர். இனி இல்லையாமாறு கெடுதல் பற்றி. மகள்வரவு கேட்டு மகிழ்சிறந்து துயர்நீங்குவ ளாகலின், எவ்வ நெஞ்சிற்கு ஏமமாக வந்தனள் என்றும், தலைமகன் மனைக் கண் வதுவை முடித்துக்கொண்டு வருகின்றாள் என்பார், விடலை முந்துற என்றும் கூறினர். ''கொடுப்போர் இன்றியுங் கரணம் உண்டே, புணர்ந்துடன் போகிய காலை யான[1]'' என்பதனால் தலைமகன் தன் மனைக்கண்ணே கொடுப்போரின்றியே வதுவை யயர்தல் இலக்கணமாதல் அறிக. ''மாறாது வருபனி கலுழும் கங்குலின், ஆனாது துயரும் எம் கண்ணினிது படீஇயர், எம்மனை முந்துறத் தருமோ, தன்மனை யுய்க்குமோ யாது அவன் குறிப்பே[2]'' எனச் சான்றோர் கூறியவாற்றானும் அறிக.

அளைகணுட்டி என்றும் பாடமுண்டு. (393)

394. மாண்பில் கொள்கையொடு மயங்குதுயர் செய்த
அன்பி லறனு மருளின்று மன்ற
வெஞ்சுர மிறந்த வஞ்சி லோதிப்
பெருமட மான்பிணை யலைத்த
சிறுநுதற் குறுமகட் காட்டிய வம்மே.

இஃது, உடன் போய தலைமகள் வந்துழித் தாய் சுற்றத் தார்க்குச் சொல்லியது.

உரை: சுற்றத்தீரே, மாண்பில்லாத கொள்கையால் மயங்குதற்கு ஏதுவாகிய துயரத்தினைச் செய்த, அன்பொடு கூடாத

---

1. தொல். பொ. 143. 2. அகம். 194.

அறனும், அவ் வன்பின்வழித் தோன்றிய அருளை யுடையதாயிற்று, வெவ்விய சுரத்தினைக் கடந்து சென்ற அழகிய [1]சிலவாகிய கூந்தலையும் சிறிய நுதலையுமுடைய பெரிய மடப்பம் பொருந்திய மான்பிணையை ஒக்கும் இளையவள் மீண்டு வந்தாளைக் காட்டுவேன், வம்மின் எ. று.

மாண்பாவது, "கொளற்குறி மரபின் கிழவன் கிழத்தியைக் கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே[1]" என்பது. ஒடு, ஆனுருபின் பொருட்டு. உடன் போக்கினை "அறந்தலைப் பிரியா ஆறு[2]" என அறவோர் கூறுதலின் அறன் எனப்பட்டது. அருளின்று, அருள் செய்தது. அஞ்சிலோதி, சிறுநுதற் குறுமகள், மான்பிணை அலைத்த குறுமகள் என இயையும். காட்டிய வம்மே என்றமையின், சுற்றத்தீர் என்பது வருவிக்கப்பட்டது. அலைத்த என்றது உவம வாய்பாடு. அலைத்தல், மருண்ட நோக்கத்தால் மான்பிணையைப் பொருவுதலின், மானினம் தன் இனம் என மருளுவித்தல். வம்மே, வருக என்னும் பொருண்மைக்கண் வந்த முன்னிலை வினைத்திரிசொல்.

களவின்கண் உடன்போக்கு அறமாயினும், அன்பு செய்து பேணிப் புறந்தந்தாரை மறந்து செய்யப்படுதலின், அன்பில் அறனும் என்றும், ஈன்றாரையும் உடன்பயின்றொழுகிய ஆயத்தாரையும் கையிகந்து மறையிற்புணர்ந்து சேறல் மாண்புடைமை அன்று எனக் கருதுகின்றா ளாகலின், மாண்பில் கொள்கை யென்றும், அக்கொள்கையால் பெற்றோர்க்குப் பிரிவாற்றாமை மேலும் அயலவர் கூறும் பழிப்புரை தோன்றி நீங்கரிய துயர் செய்தலின் மயங்குதுயர் என்றும் உரைத்தாள். இப்பெற்றித்தா யினும், பெற்றோர் எய்திய பெருகிய துயரத்தை மாற்றுவான் தலைமகளை மீளச் செய்தமையான், அன்பில் அறனும் அருளின்று மன்ற என்று இசைத்தாள்.

இது தலைவி மீண்டு வந்துழித் தாய் சுற்றத்தார்க்குக் காட்டியது என்பர் நச்சினார்க்கினியர்.[3] (394)

---

1. தொல். பொ. 142. 2. கலி. 9. 3. தொல். பொ. 36.

395. முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரிச்
சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கும்
இன்னு வருஞ்சுரந் தீர்ந்தனம் மென்மெல
ஏகுமதி வாழியோ குறுமகள் போதுகலந்து
கறங்கிசை யருவி வீழும்
பிறங்கிருஞ் சோலைநம் பெருமலை நாட்டே.

இஃது உடன்போய் மீள்கின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது.

உரை: இளையவளே, உலர்ந்த மூங்கிலின்கட் பிறந்து காற்றால் மிக்குப் பெருகிய தீயின் ஒளிவிடும் நெடிய ஒழுங்கு, கற்பிளவுகளினும் மலைமுழைஞ்சுகளினுள்ளும் முழங்கும் கொடுமையினையுடைய செல்லுதற்கரிய காட்டினை நீங்கினேமாகலின், இனி பூக்களோடு கூடி ஒலிக்கின்ற இசையினையுடைய அருவிகள் வீழும் உயரிய சோலைகளையுடைய பெரிய மலைகள் பொருந்திய நம் நாட்டில் மெல்ல நடந்து செல்லுவாயாக எ. று.

முளிவயிர், உலர்ந்த மூங்கில்; "அயிரியாற் றடை கரை வயிரின் நரலும் காடு[1]" எனப் பிறரும் கூறுதல் காண்க. மூங்கில்களை அலைத்துத் தீயைப் பிறப்பித்த தனக்கு அதனை வளர்த்தலும் கடன் எனக் கருதியது போல மோதி மிகுவித்தலின், வளிவளர் கூரெரி என்றார். கொடிபோற் படர்ந்து செல்வது பற்றி நெடுங்கொடி என்றார்; "முளியரிற் பிறந்த வளிவளர் கூரெரிச் சுடர்நிமிர் நெடுங்கொடி விடர்முகை முழங்கும்[2]" எனப் பிறரும் உரைப்பது காண்க. விடர்முகை, உம்மைத்தொகை. இருபெயரொட் டாக்குதலு மொன்று. தீர்தல், விடுதல். "தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.[3]" மதி முன்னிலையசை. பிறங்குதல், உயர்தல். இருஞ்சோலை, இருண்டு கரிதாய்த் தோன்றும் சோலை என்றுமாம்.

---

1. அகம். 117. 2. ஷை. 143. 3. தொல். சொல்.

உலர்ந்த மூங்கில்கள் ஒன்றேடொன்று காற்ருல் அலைப்புண்டு உராய்ந்துழிப் பிறந்து அக்காற்ருல் மிகுதியுற்றுப் பெருகுதலின் முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரி என்றும், ஏனை மரம், செடி, கொடிகளையும் நெடிது தொடர்ந்து சேறலின் சுடர்விடு நெடுங் கொடி யென்றும் கூறினள். இதனை ஆண்டுக் காட்டி விளக்குதற்கு இடம் இன்மையின் ஈண்டுக் கூறினன். வேனிலால் விளைந்த வெம்மையுடன், தீ வேறு எழுந்து துன்பம் செய்தலின் இன்னு அருஞ் சுரம் என்ருன். இதுகாறும் சிறிது விரைந்து வந்தமை தோன்ற, மென்மெல ஏகுமதி என்றும், மெல்லச் செல்லின் பெரு மலை நாட்டின் மாண்பு கண்டு இன்புறலாம் என்பது கருத்து. தண்ணென்ற அருவியும் பெரிய சோலையுமுடைய நாடாகலின் இன்னுமை யின்மையானும், இளையளாயினல் முற்றவும் விரைந்து செல்லின், தளர்வுற்று மெலிவா ளாகலானும். மென்மெல ஏகுமதி என்ருன் என்றுமாம். "நிழல்காண் டோறும் நெடிய வைகி, மணல்காண்டோறும் வண்டல் தைஇ, வருந்தா தேகுமதி வாலெயிற்ரேயே, மாநனை கொழுதி மாங்குயிலாலும், நறுந்தண் பொழில் கானம், குறும்பல் லூரயாம் செல்லு மாறே[1]" என்று பிருண்டும் தலைவன் கூறுதல் காண்க. நம் பெருமலைநாடு எனத் தலைமகளை உளப்படுத் துரைக்கின்ருன். தனது உரிமை அவட்கு இவ்வுடன்போக்கால் எய்திவிட்டமையின், "உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின் பெருமையில் திரியா அன்பின் கண்ணும்[2]" என ஆசிரியர் குறிப்பது காண்க. (395)

396\. புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர் கொய்துநின்
கதுப்பய லணியு மளவைப் பைபயச்
சுரத்திடை யயர்ச்சி யாறுக மடந்தை
கல்கெழு சிறப்பி னம்மூர்
எல்விருந் தாகிப் புகுகம் நாமே.

இதுவுமது.

1\. நற். 9. 2. தொல். பொ. 147.

உரை: மடந்தையே, புலிப்பொறி போலும் வேங்கை மரத்தின் பொன்னிறப் பூங்கொத்துக்களைக் கொய்து நின் கூந்தலயல் யான் அணியுமளவு மெல்லச் சென்று, சுரத்தின்கண் நடந்தமையால் எய்திய அயர்ச்சியைப் போக்கிக் கொள்வாயாக; மேலும், மலைகள் பொருந்திய சிறப்பினையுடைய நம்மூர்க்கு நாம் பகலிற் போதரும் விருந்தினராய்ச் செல்வோம் எ. று.

வேங்கையின்பூ புலிப்பொறி போல்வதனை ''ஓங்கல் மிசைய வேங்கை யொள்வீ, புலிப்பொறி கடுப்பத் தோன்றலின்[1]'' என்று பிறரும் கூறுவர்; இப்பூவை ஆடவரும் மகளிரும் ஒப்ப அணிவர்; ''பூங்கண் வேங்கைப் பொன்னிணர் மிலைந்து, வாங்கமை நோன் சிலை எருத்தத் திரீஇ[2]'' என ஆடவரும், ''வேங்கைத் தண்கமழ் புதுமலர் நாறும் அஞ்சிலோதி[3]'' என மகளிரும் அணிவது காண்க. பைபய, பையப்பைய என்பதன் மரூஉ; ''பைபயத் தணந்தனையாகி யுய்ம்மோ[4]'' என்றமை காண்க. எல்விருந்து, பகலே பலரும் காணச் செல்லும் விருந்து. புகுகம், புகுவேம்.

பகலிற் பலர்காணத் தலைமகள் விருந்தினளாய் வருதலின், அயர்ச்சி போக்குதலும் ஒப்பனை செய்து கோடலும் இன்றியமையாமை பற்றி, வேங்கைப் பொன்னிணர் கொய்து அணியும் அளவை என்றும் பைபய அயர்ச்சி ஆறுக என்றும் கூறினன். நம்மூர் என்பதற்கு ''நம் பெருமலை நாடு[5]'' என்றதற்கு உரைத்ததனை உரைத்துக் கொள்க. எல்விருந் தாகிப் புகுகம் என்றது, அயர்ச்சி ஆறுக என்றதற்குக் காரணம் காட்டியவாறு. தலைமகன் சுரத்தைக் கடந்து போந்துழிப் பூக்கொய்து அணியுங்கால் அவன் மெய் தீண்டுந்தோறும் உடல் குளிர்ப்பெய்துதலாலும், பூவணியுமளவும் செல்லாது நிற்றலாலும் தளர்ச்சி நீங்குதலின், அயர்ச்சியாறுக என்றான்.

மலைகெழு நாடு என்றும் பாடம். (396)

397. கவிழ்மயி ரெருத்திற் செந்தா யேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரனணி வாரா நின்றன ளென்பது
முன்னுற விரைந்தநீ ருரைமின்
இன்னகை முறுவலென் னுயத் தோர்க்கே.

---

1. அகம். 228. 2. ஷ 182. 3· ஷ 365. 4. ஐங். 93.
5. ஐங். 395.

இஃது உடன்போய் மீள்கின்ற தலைமகள் தன்னூர்க்குச் செல்கின்றாரைக் கண்டு கூறியது.

உரை : கீழ்க்கவிழ்ந்துள்ள மயிர் பொருந்திய கழுத்தினை யுடைய செந்நாயினது ஆண், குட்டியையுடைய பன்றியைக் கொள்ளாது நீங்கும் சுரத்தைக் கடந்து அணித்தே வாராநின்றனள் என இனிய நகைவிளங்கும் முறுவலையுடைய என் ஆயத்தோர்க்கு முன்னாக விரைந்து செல்கின்ற நீவிர் உரைப்பீர்களாக எ. று.

எருத்தின்கண் வளர்ந்து கீழே தாழ்ந்த மயிரைக் கவிழ்மயிர் என்றும், அடல்மிக்கது என்றற்குச் செந்நாயேற்றை என்றும் கூறினர். குருளைப்பன்றி, குருளையொடு செல்லும் பன்றி. சுரத்திற்குப் புறத்தே ஊர்க்கு அணித்தாயுள்ள நிலப்பகுதி சுரன் நனி எனப்பட்டது ; ''ஊர் நணித் தந்தனை[1]'' என்றாற் போல. ஆயத்தோர் ஆய மகளிர். ''இன்னகை ஆயத்தாரோடு இன்னும் அற்றோ[2]'' என்பர் பிறரும்.

தலைவி புணர்ந்துடன் போகியகாலை அவளுடைய தமர் போந்து வளைத்தனராகத் தலைமகன் தன் காதலியின் தந்தை தன்னையர் எனக்கருதி அருளுள்ளத்தால் வாளாது கொண்டுசெல்ல விடுத்த திறத்தை உள்ளுறையால் உரைத்தலின், சுரனணி வாராநின்றனள் என்பது என்றாள். தமர் போதரக் கண்ட தலைமகன், தலைவியை நோக்கி, ''நீ விளையாடுக சிறிதே யானே, மழகளி றுரிஞிய பராரை வேங்கை மணலிடு மருங்கின் இரும்புறம் பொருந்தி, அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென், நுமர்வரின் மறைகுவென் மாஅயோளே[3]'' என்பதும், தலைவி, ''வாள்வனப் புற்ற அருவிக் கோள்வல் என்னையை மறைத்த குன்றே அறஞ்சாலியரோ[4]'' என்பதும் காண்க. தலைவி மீளலுறும் செய்தியைத் தன்னையர் முன்னுறச் சென்று அறிவிக்குமாறு விடுத்த அவர் துணைவர்பால் இதனை மொழிகின்றா ளாகலின், முன்னுற விரைந்த நீர் உறைமின் என்றும், தன் வரவு கேட்டு உவகை மிகுந்து தன்னை எதிர் நோக்குவர் என்பதுபற்றி இன்னகை முறுவல் என் ஆயத்தோர்

1. அகம். 254. 2. குறுந். 351. 3. நற். 362. 4. ஐங். 312.

என்றும் கூறினாள். சுரன்நணி வாரா நின்றனள் என்பது, தமர் துணைவர்பால் சொல்லி விடுத்த கூற்று; "கூற்றவன் இன்மை யின்[1]" தலைவி அதனைக் கொண்டெடுத்து மொழிந்தாள்.

செந்நாயின் ஏற்றை குருளை யீன்ற பன்றி யெனக் கருதிக் கொள்ளாது கழியும் என்றது, தன் காதலியை ஈன்ற தந்தையும் தன்னையரும் என்று கருதி இவரொடு என்னைச் செல்லவிடுத்தான் என்றவாறு.

இது மீண்டு வருவாள் ஆயத்தார்க்குக் கூறிவிட்டது என்பர் இளம்பூரணர்[2]. இது மீள்கின்றாளென்று என்வரவு ஆயத்தார்க்குக் கூறுமின் என்றது என்பர் நச்சினார்க்கினியர்[3]. (397)

398. புள்ளு மறியாப் பல்பழம் பழுனி
மடமா னறியாத் தடநீர் நிலைஇச்
சுரநனி யினிய வாகுக வென்று
நினைத்தொறுங் கலிழு மென்னினும்
மிகப்பெரிது புலம்பின்று தோழிநம் மூரே.

இது, தலைமகள் மீண்டுவந்துழி அவட்குத் தோழி கூறியது.

உரை: தோழி நின்னை நினைக்குந்தோறும் நீ செல்லும் சுரம் புள்ளினமும் தேர்ந்தறியாத பலவாகிய பழங்கள் நிரம்பி மடப்பம் பொருந்திய மான்கூட்டமும் கண்டறியாத பெரிய நீர்நிலைகள் நிலை பெறப்பெற்றுச் சேறற்கு இனியவாய் விளங்குமாக என்று வாழ்த்திக் கண்ணீர்விட்டுக் கலங்கும் என்னினும் நம் மூரிலுள்ளார் கழி விரக்கங் கொண்டு புலம்பி நின்றனர், காண் எ. று.

பழுமரந்தோறும் சென்று பழமுண்டு வாழ்தல் புள்ளினங்கட்கு இயல்பாதலின், புள்ளும் என்றவிடத்து உம்மை சிறப்பு. "பழந்தேர் வாழ்க்கைப் பறவைபோல[4]" என்று பிறரும் கூறுப. பழுனி, நிறைந்து; "பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி[5]" என்பது

1. தொல். பொ. 501. 2. ஷி. ஷி. 45. 3. ஷி.ஷி. 42
4. மதுரை. 576. 5. புறம். 113.

காண்க. பழுத்து என்றுமாம். மானினம் நீர்நிலை இல்வழி அஃது உள்வழி நாடிச் சென்று அதன் அருகே வாழுமாதலின், மடமான் அறியாத் தடநீர் என்ருர். தடநீர், பெரிய நீர்நிலை.

செல்வார்க்கு வழியிடை வேண்டுவன உணவும் நீரும் நிழலும் அன்றிப் பிறவன்மையின், பல் பழம் பழுனி, தட நீர் நிலைஇ என்று கூறினுள். வெந்திறல் வெள்வேல் விடலையொடு சென்ருட்கு ஊறுசெய்வன வின்மையின், அவற்றை நினையா ளாயினள் என்க. தலைமகளின் நினைவெழிதற் குரிய செயலும் பொருளும் தோன்றிய விடத்து நினைத்துக் கண்கலுழும் தோழியினும், ஊரவர், அவளுடைய தாயாரையும் ஆயத்தாரையும் காண்டொறும் இரங்கிக் கலுழ்ந்தன ராகலின் என்னினும் மிகப் பெரிது புலம்பின்று நம்மூர் என்ருள்.

தலைமகள் உடன்போகிய நிலையில், ஊரவர் பலரும் போந்து அவளுடைய மாண்புகளையும் பிற நலங்களையும் பாராட்டிக் கூறி வருந்தினமையின், அது கண்டு ''மனைமருண்டிருந்த என்னினும் நனைமகிழ், நன்னராளர் கூடுகொள் இன்னியம், தேரூர் தெருவுல் ததும்பும், ஊரிழந்தன்று தன் வீழ்வுறு பொருளே [1]'' என்று தாயும் கூறுமாறு காண்க.

இது தலைவி மீண்டு வந்துழித் தோழி ஊரதுநிலைமை கூறியது என்பர் நச்சிருர்க்கினியர் [2]. (398)

399. நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச்
சொல்லின் எவனே மற்றே வென்வேல்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே.

இஃது உடன்கொண்டு போன தலைமகன் தலைவியைத் தன் இல்லத்துக்குக் கொண்டுபுக்குழி அவன்ருய் அவட்குச் சிலம்புகழீஇக்

1. அகம். 189. 2. தொல். பொ. 39.

கடன் செய்கின்ருள் எனக் கேட்ட நற்ருய் ஆண்டு நின்றும் வந்தார்க்குச் சொற்றது.

உரை: வெற்றிமிகும் வேலேயும் குற்றமற விளங்கிய கழ லணிந்த காலேயுமுடைய பொய்ம்மொழிதலில் வல்ல காளேயாகிய தலேமகனே ஈன்ற தாய்க்கு, ''நும்முடைய மனேயின்கண் சிலம்பு கழீஇத் திருமணமாகிய கடனே ஆற்றுவை யாயினும் எம்மனேக் கண் வதுவையாகிய நன்மணத்தைச் செய்வாயாக'' என நீவிர் அவட்கு உரைத்தால் வரக்கடவ இழுக்கென்னே? கூறுக எ. று.

சிலம்புகழி என்பது சிலம்பு கழீஇ என நீண்டது; செவி யறிவுறூஉ என்ருற்போல. கழி, முதனிலேத்தொழிற்பெயர்; இஃது ஆகுபெயராற் கழித்தலாகிய திருமணத்தின்மேல் நின்றது. ''சிலம்புகழீஇய செல்வம்[1] என்ருர் பிறரும். மகளிர்க்கு மண மாகாமுன் பெற்ருேர் அணிந்த சிலம்பு கன்னிமைச்சிலம்பு என்றும், மணநிகழ்ச்சிக்கண் கொழுநன் அணியும் சிலம்பு கற்புச்சிலம் பென்றும் கணவன் தரும் சிலம்பையணியும் திருமணம் சிலம்புகழீ இய மணம் என்றும் அறிக. திருமணமும் பெற்ருேர் மகட்குச் செய்து கழித்தற்குரிய கடனுதலின், நன்மணம் கழிக என்று கழித்தல் வாய்பாட்டாற் கூறினுர். சிலம்புகழீஇய திருமணம் நிகழினும், வதுவை நிகழ்ந்த பின்னல்லது சிறப்புடைய உடனுறை வாழ்வு தலேமகட்கு எய்தாமையின், அதனேப் பயப்பிக்கும் வதுவை மணத்தை வதுவை நன்மணம் என்ருர். திருமணத்துக்குச் சென் றிருந்து வந்தாரொடு உரையாடுதலின், இழுக்கு என ஒருசொல் வருவிக்கப்பட்டது. மை, குற்றம். பொய்வல்காளே, பொய் உரைத்துக் கேட்போரை மருட்டவல்ல காளே.

சங்ககாலத் தமிழ்வாழ்வில் சிலம்புகழீ இயும் வதுவையும் எனத் திருமணம் இருகூருகி முன்னது முதற்கண்ணும் பின்னது அதன் பின்னரும் நிகழ்ந்துள்ளன. வதுவை நன்மணத்துக்குச் சிலம்புகழீஇ இன்றியமையா முன்னணிக் கூருதலின் அதனே மகட்பெற்ருேர் தம்மனேக்கண் நிகழ்த்துவதையே பெரிதும் விரும்புவர்; அவருள்ளும்

1. நற். 279.

நற்ருய் அதனைத் தன் மனைக்கண் நிகழ்த்துதற்கே சிறப்பாக வேட்கையுறுவள். "தன்னோ ரன்ன ஆயமும் மயிலியல், என்னோ ரன்ன தாயரும் காண .. பொன்னுடை நெடுநகர்ப் புரையோர் அயர. நன்மாண் விழவில் தகரம் மண்ணி, யாம்பல புணர்ப்பச் செல்லாள், ... தான் அமர் துணைவன் ஊக்கவூங்கி, உள்ளாது கழிந்த சிறுவன் கண்ணி சிலம்புகழீஇ, அறியாத் தேஎத்த தாகுதல் கொடிதே[1]" என்றும், சீரும் சிறப்பு மின்றிச் சீறூர் ஏதில் வறுமனைச் சிலம்புகழீஇ, மேயினள் கொல்லென நோவல் யானே[2]" என்றும், "சிலம்புகழீஇய செல்வம் பிறருணக் கழிந்த என் ஞுயிழை[3]" என்றும் சான்ருேர் உரைப்பது காண்க. இச்சிலம்புகழீ இச்சிறப்பைத் தொல்காப்பியர் கரணம் என்ருர். இதனைச் செய்தற்கு மகட்கொடைக் குரிய தலைமகள் பெற்ருேர் உரியராதலின் புணர்ந் துடன் போகிய காலையில் அவர் இருத்தற்கு இன்மை பற்றி, இதற்கு இடமுண்டோ என நிகழும் ஐயம் அறுத்தற்குக் "கொடுப்போ ரின்றியும் கரண முண்டே, புணர்ந்துடன் போகிய காலை யான[4]" எனத் தெளிவித்தார். இதனுல், சிலம்புகழீ இச் சிறப்புத் தலைமகன் மனைக்கண் நிகழ்ந்தமையின், நும்மனைச் சிலம்புகழீஇ அயரினும் என்ருள் இச்சிலம்பு கழீஇக் கரணத்தை இக்காலத்தும் கன்னி கழித்தல் என வழங்குவர்.

இத்திருமணம் புணர்ந்துடன்போகிய மணமாதல் பற்றிக் கொடுப்போரின்றியே அயர்தல் வேண்டும் என்பாளாயின் என்றற்கு அயரினும் என்றும், பிற்கூருகிய வதுவை வினையையாதல் என் மனைக்கண் அயர்க என்று கேட்டல் வேண்டும் என்பாள், எம்மனை வதுவை நன்மணம் கழிக என என்றும், அவ்வாறு கேட்டல் இழுக் கன்று என்பாள் சொல்லின்எவனோ என்றும் கூறினள். அயரினும் என்ருள் ஆயினும், கழித்தற்பொருளே கூறுக: "சிலம்பு கழீஇய செல்வம் பிறருணக் கழிந்த என் ஆயிழை" என்றவிடத்தும் கழித்தற்பொருளே வருதல் காண்க.

புணர்ந்துடன் போகிய போது தன்னை வளைத்து அமர்விளைத்த தமரை வெருட்டி மேம்பட்டது குறித்து வென்வேல் என்றும்,

---

1. அகம். 385. 2. ஷை. 369. 3. நற். 279. 4. தொல். பொ. 143.

அமரகத்தே தன் மறத்துக்கு மாசு தோன்ருமலும் தமர்க்கும் பிறர்க்கும் ஊறுவிளையா வகையிலும் பொருது விளங்கினமை அறிந்துளா ளாகலின், மையற விளங்கிய கழலடி என்றும், தன் சொல்வன்மையால் பொய்யும் மெய்போலத் தோன்றக் கூறித் தலைவியைக் கொண்டுதலைக் கழிந்தான் என்னும் கருத்தால் பொய்வல் காளை என்றும் கூறினுள். ''அருங்கடி வியனகர்ச் சிலம்பும் கழியாள் கூர்வேல் விடலை பொய்ப்பப் போகி[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க.

இது தலைவன் மீண்டு தலைவியைத் தன் மனைக்கட் கொண்டு வந்துழி அவன்தாய் சிலம்புகழி செய்கின்ருளெனக் கேட்ட நற்ருய் ஆண்டு நின்றும் வந்தார்க்குக் கூறிய தென்பர் நச்சினுர்க்கினியர்[2]. தலைமகன் தன்னகத்தே வதுவைக் கலியாணம் எடுத்துக் கொண் டான் என்பது கேட்ட நற்ருய் ஒழிந்த கல்யாணம் செய்யினும் நம்மகத்தே வதுவைக் கலியாணம் செய்ய நேருங்கொல்லோ காளையைப் பயந்தாள் என்னும்[3] என்பர் களவியல் உரைகாரர்.

(399)

400 மள்ள ரன்ன மரவந் தழீஇ
மகளி ரன்ன வாடுகொடி நுடங்கும்
அரும்பதங் கொண்ட பெரும்பத வேனில்
காதல் புணர்ந்தன ளாகி யாய்கழல்
வெஞ்சின விறல்வேற் காளையொ
டின்றுபுகு தருமென வந்தன்று தூதே.

இஃது உடன்போய் வதுவை அயரப்பட்ட தலைவி, தலைவ ளுேடு இன்று வரும் எனக் கேட்ட செவிலித்தாய் நற்ருய்க்குச் சொல்லியது.

உரை: தாயே, வீரரை யொத்த மரவ மரங்களை மகளிர் போலும் அசைகின்ற கொடிகள் தழுவி நுடங்கும் அரிய உண்

1. அகம். 365. 2. தொல். பொ. 36. 3. இ.அ. பொ. 23.

பொருள்களைக் கொண்ட பெருஞ் செவ்வித்தாகிய வேனிற்பருவத் தின்கண் வதுவை புணர்ந்தனளாய் நம் மகள் ஆய்ந்தணியப்பட்ட கழலும், வெவ்விய சினமும், விறல்மிக்க வேலு முடைய காளை போல்வானுடன் இன்று வருவாள் எனத் தூதர் புகலா நின்றனர், காண் எ. று.

மள்ளரைத் தழீஇய மகளிர் போலக் கொடி மரவம் தழீஇ நுடங்கும் என இயைக்க. மரவம், வெண்கடம்பு. அது தொழி லுவமம். அரும்பதம, பெறுதற்கரிய உண்பொருள். அவை வேனிலிற் பழுக்கும் மா பலா முதலிய இனிய கனிவகைகள். அழகிய தளிரும் நறிய மலரும் இனிய கனிகளும் பெறப்படும் இன்பக்கால மாகலின், அரும்பதம் கொண்ட பெரும்பத வேனில் என்றார். காதல், ஈண்டு அதன் பயனாகிய வதுவைமேற்று. வெற்றி குறித்தும் வீரம் குறித்தும் கழல் வேறுபடுதலின் ஆய் கழல் என்றார். தூது, உயர்திணைப் பொருண்மைக்கண் வந்த அஃறிணைச் சொல்

உள்ளுறையால் நற்றாய் எய்தவிருக்கும் இன்பத்தைக் கூறுத லின், தலைவனை மணம் புரிந்துகொண்டு வரும் தலைமகளைக் காதல் புணர்ந்தன ளாகி என்றும், அது கேட்டு அவளைக் காண்டல் விருப்பால் ஆர்வத்தோடு நற்றாய் தன்னை நோக்குதலின், காளை யொடு இன்று புகுதரும் என்றும், அதனைத் தான் அறிந்த திறம் கூறுவாள் வந்தன்று தூது என்றும் கூறினாள்.

மரவம் தழீஇ ஆடும் கொடி நுடங்கும் அரும்பதம் கொண்டாற் போல மனையிடத்திருந்து மகட்பிரிவால் அசைந்து வருந்தும் நீ இன்பமுற்று மகிழப் போகின்றாய் என உள்ளுறை கொள். (400)

ஆசிரியர் ஓதலாந்தையார் பாடிய பாலை முற்றும்.

மூன்றாவது தொகுதி

முல்லை

ஆசிரியர் பேயனுர் பாடிய

முல்லே

அகனேந்திணேக்கண் ஒன்ருகிய முல்லே முல்லேத்திணே எனவும் வழங்கும். ஆசிரியர் தொல்காப்பியனுர் இதனே ''மாயோன் மேய காடுறை யுலகம்'' என்பர். எனவே பல்வகை மரங்களும் செடி கொடிகளும் புல் வகைகளும் புதர்களும் செறிந்து இருள்படப் பொதுளியுள்ள காடும் காடுசேர்ந்த நிலப்பகுதியும் முல்லே என்ப தாம். இம் முல்லேத் திணேக் குரிய சான்ருேர் செய்யுட்களில் பெரும் பொழுதாகிய காரும் சிறுபொழுதாகிய மாலேப்போதும் இத்திணேநிலேக் குரிய காலமாகக் குறிக்கப்படும். இந் நிலத்தில் வாழும் மக்களே, ஆயர், கோவலர் என்று கூறுவர். அகணேந் திணேக்கென நிலத்தைக் குறிஞ்சி முதலாக வகுத்துக் கொண்டன ராயினும், பாலேயை நிலமாகக் கொள்ளாமை முன்னர்க் கண்டாம்; ஆகவே, சிறப்புடைய நிலம் நான்காதல் பெற்ரும். அவற் றுள்ளும் நிலவளம் சிறந்தவை குறிஞ்சியும் முல்லேயும் மருதமுமே யாகும். நெய்தல் நீர்வளத்தாற் சிறந்தது. இம் மூன்றனுள் முல்லே ஏனேயிரண்டற்கும் இடை நிற்றலின் முல்லே நிலத்து ஆயரை இடையர் என்றும், முல்லே நிலத்து வாழும் ஆனிரைகளின் பாற்பயன் ஏனே எல்லா நிலத்தவர்க்கும் பொதுவாய் பயன்படும் சிறப்புப் பற்றி அதணே நல்கும் ஆயரைப் பொதுவர் என்றும் குறிப்பதுண்டு. ''மாசுண் உடுக்கை மடிவாய் இடையன், சிறு

தலை ஆயமொடு குறுகல் செல்லாப் புலிதுஞ்சு வியன்புலம்[1]'' என்றும், ''பல்லான் பொதுவர் கதழ்விடை கோட்காண்மார்[2]'' என்றும் சான்றோர் உரைப்பது காண்க. இவர்கள் வாழும் ஊர்கள், ஆய்ப்பாடி, மாறன்பாடி எனவும், தெளிச்சேரி நடுவாச்சேரி எனவும், குராப்பள்ளி சிக்கற்பள்ளி எனவும், பாடி, சேரி, பள்ளி என்று முடியும் பெயர்களைப் பெற்றிருக்கும்.

ஆயர்கள், வரகு, கொள் முதிரை முதலியவற்றையும், கவலைக் கிழங்கு முதலிய கிழங்கு வகைகளையும் உண்பர். முல்லைக்காடு களில் மானும் புல்வாயும் முயலும் பெரிதும் வாழ்கின்றன. ஊரகத்தும் புறத்தும் காடுகளிலும் கொன்றை குருந்து முதலிய மரங்களும், முல்லை முதலிய கொடி வகைகளும் காயா முதலிய செடி வகைகளும் களவுப்புதல் முதலிய புதர் வகைகளும் பல்கி யிருக்கும். அவற்றிடையே கானக்கோழிகள் மேயும். ஆனிரை மேய்த்தலும் பாற்பயன் கோடலும் பொதுவாக நிகழும் தொழி லாயினும், முல்லைக் கொல்லைகளை உழுது, வரகு துவரை முதலிய வற்றை விளைவித்தலும் முல்லை நிலத்து முதுமக்களின் தொழில் வகையாம். காட்டாறுகளும் பொய்கைகளும் முல்லைக்கண் நீர் நிலைகள். முல்லை பிடவு தளவு காயா முதலிய பூக்கள் ஆயர் விரும்பிக் கண்ணியும் மாலையும் தொடுத்து அணியும் பூவகை. இந்நில முற்றும் பெரும்பாலும் செம்மண் நிலமாதலின், அந் நிலத்துக்கேற்ப அவர்கள் துவராடை அணிவது இயல்பு; "அந்துவ ராடைப் பொதுவன்[3]'' எனச் சான்றோர் உரைப்பது காண்க. முல்லையாழும் முல்லைப் பண்ணுகிய சாதாரியும் ஏறுகோட் பறையும் இசைத்துறைக் குரியவாய்க் கொள்வர். வேய், ஆம்பல், கொன்றை முதலியவற்ருல் ஆகிய குழலை இசைத்து இனிய இசையின்பம் துய்ப்பர்.

இந்நூற்கண் முல்லைத் திணைக்குரிய பாட்டுக்கள் நூறும் பாடிய ஆசிரியர் பேயனுர் என்பவராவர். அவர் பாடியனவாக இந் நூறுமே யன்றி அகத்திலும் குறுந்தொகையிலும் பாட்டுக்கள் சிலவுள்ளன.

---

1. புறம். 54. 2. கலி. 103. 3. ஷை. 102.

பேயனாரது ஊர் இன்னது எனத்தெரிந்திலது. இடைக்காலக் கல்வெட்டுக்களில் காணப்படும் மக்களுள் உழான் என்னும் பெயருடையார் தொண்டைநாட்டிலும், மன்றாடி யென்னும் பெயருடையார் கொங்கு நாட்டிலும் பெருகியிருப்பது போலப் பேயன் என்ற பெயருடையார் சேர நாட்டில் காணப்படுகின்றனர். திருநெல்வேலியிலுள்ள நெல்லையப்பர் கோயில் கல்வெட்டுக்களில் சேந்தப்பிரான் பேயனான யாதவராயன்[1] என்பான் காணப்படுகின்றான்; அவன் தாழைக்குடி என்னும் ஊரினன்; இதனை ''மலைமண்டலத்துத் தாழைக்குடி'' என்று கல்வெட்டுக் கூறுகிறது. குறும்பர்நாடு வட்டத்திலுள்ள முட்டுங்கல் கல்வெட்டில் பேயனான கண்டன் நீலன் என்றும், ஏர்நாடு வட்டத்து வண்டூர்க் கற்குகைக் கல்வெட்டில் பேயனான தாமத்தன் என்றும் வருவன மேலே கொண்ட கருத்துக்குச் சான்று பகர்கின்றன. இவற்றால் இம் முல்லைப் பாட்டுக்களைப் பாடிய ஆசிரியர் பேயனார் சேர நாட்டினர் எனக் கோடற்கு இடமுண்டாகிறது.

சேரநாட்டில் சிறைக்கல் வட்டத்துப் பையனூரை அப்பகுதியினர் முன்னாளில் பேயனூர் என வழங்கினரென்று அங்குள்ளோர் கூறுதல் ஈண்டுக் கருதத்தக்கது. சேரமான் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனைப் பாடிய கண்ணனார் பெயரால் கண்ணனூர் என்றும், கண்ணன் பாட்டோலை என்றும் ஊர்கள் தோன்றியிருப்பதும், ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைப் பாடிய காக்கைபாடினியார் நச்செள்ளையார் பெயரால் காக்கையூர் என்று ஊர் தோன்றியிருப்பதும் காணுமிடத்து இப்பையனூரான பண்டைப் பேயனூர் இப்பேயனாரைச் சிறப்பித்தற்குத் தோன்றியிருக்கலாம் எனக் கருதுவது மிகையாகாது.

ஆசிரியர் பேயனார் முல்லைத்திணையைப் பாடுவதில் மிக்க சிறப்புடையவர் இவர் பாடியனவாக ஏனைத்தொகை நூல்களுட் காணப்படும் பாட்டுக்களும் முல்லையையே சிறப்பிக்கின்றன. இவர் பிறந்து வளர்ந்து புலமை சிறந்த நிலம் முல்லையாதலின் முல்லைப்பாட்டுக்கள் இவர்க்கு மிக இனியவகையில் அமைந்துள்ளன.

---

1. S. I. I. Vol. V. No. 416; A. R. No. 127 of 1894.

முல்லைத்திணைக்குக் கார்காலமும் மாலைப்போதும் சிறந்த முதற்பொருள்கள் என்பது முன்பே கூறப்பட்டது. இக்காலத்தே கானம் வழங்கும் காட்சியைத் தெரிவித்து அவற்றிடையே தலை மக்களது கற்புவாழ்வை நிறுத்தி, அதன்கண் அவர்பால் நிகழும் நினைவையும் சொல்லையும் எடுத்துக்காட்டி இன்புறுத்தற்கண் இவரது புலமை நலம் இப்பகுதியில் ஈடுபடுகின்றது.

கார்காலத்தில் வானமெங்கும் கார்முகில் பரந்து இருள்படச் செறிந்து பெருமழை பெய்கிறது; மலைமுகட்டிலும் பக்கத்திலும் பெய்தநீர் அருவியாய் வீழ்ந்து புதுநீராய்ப்பெருகிக் கானமெங்கும் பாய்ந்து நிலத்தைக் குளிர்விப்ப, வேனில் வெம்மையால் வெதும்பி வாடிய மரஞ்செடிகள் கார்மழையால் வளம்பெறுகின்றன. பள்ளங்களில் நீர் நிற்கிறது. புல்வகைகள் பசுமையுடன் இனிய காட்சி வழங்குகின்றன. மாலைப்போதில் புதர்தொறும் முல்லை, தளவு, பிடவம், தோன்றி முதலியன பூத்துக்கானத்தை அழகு செய்கின்றன. ''காயா கொன்றை நெய்தல் முல்லை, போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப் பூவணி கொண்டன்றால் புறவே [1]'' என்று இக்காட்சியைச் சொல்லோவியம் செய்கின்றார். ''அப்பூக்களின் தேனையுண்டு வண்டினம் பாடுகின்றது [2]''. ''இருள் மாலைப் போதில் பள்ளங்களிலிருந்து நுணலும் தேரையும் ஒலிக்கின்றன [3]''. ''புற்றின்கண்வாழும் ஈயல்கள் நாள் வெயிற் காலையில் வெளிப் போந்து பறந்து மடிகின்றன [4]''. ''வானம்பாடி மழைத்துளி யுண்டு மகிழ்வதும் களிறுகள் பிடிதழீஇ உலவுவதும் [5]'' ''மயில்கள் தோகையை விரித்து ஆடுவதும் [6]'' ''மானினம் கன்றோடுகூடி உலாவி இன்புறுவதும் [7]'' பிறவும், காண்பார் கண்ணுக்குச் சிறந்த காட்சி நல்குகின்றன. கொன்றை குருந்து முதலிய மரங்கள் பொன்னெனப் பூத்துப் பொலிந்து நிற்பதால், ''கானவர் அவற்றின் பூக்களால் கண்ணி தொடுத்துத் தலையிற் சூடிக் கொள்கின்றனர் [8]''.

---

1. ஐங். 412. 2. ஷை. 416. 3. ஷை. 453. 4. ஷை. 497.
5. ஷை. 416. 6. ஷை. 431. 7. ஷை. 434. 8. ஷை 439.

காதலருடைய காதல் வாழ்வில் புணர்விடைப் பிறக்கும் புத்தின்பமும், பிரிவின்கண் உண்டாகும் பிரிவுத் துன்பமும் ஆசிரியர் பேயனுர் பாட்டில் அழகு பெறுகின்றன. மனைவியொடு கூடி மகிழ்ந்துறையும் காதலன், கார்கவின் கொண்ட கானக் காட்சியைப் ''புள்ளும் மாவும் புணர்ந்து இனிது உகளக், கோட்டவும் கொடியவும் பூப்பல பழுனி மெல்லியல் அரிவை கண்டிகும், மல்லலாகிய மணங் கமழ் புறவே[1]'' என்றும், கானத்தையே முன்னிலைப்படுத்தி, ''பொன்னென மலர்ந்த கொன்றை மணியென, தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு நன்னலம் எய்தினை, புறவே[2]'' என்றும் தலைமகட்குக் காட்டி மகிழ்விக்கின்றுன்.

காதல் வாழ்வில் கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து இன்புற்று உறையும் நலத்தைக் கண்டோர் கூற்றில் வைத்து, ''இனிது மன்ற அவர் கிடக்கை முனிவின்றி, நீனிற வியலகம் கவைஇய, ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே'' என்று பாராட்டுவதும், வினைகுறித்துப் பிரிந்துறையும் காதலன், வினை முடிந்ததும், காதலுணர்வு உண்ணின்று உந்துதலால், பாகனை நோக்கி, கார்மழை தலைஇக் காடு கவின்கொண்டன்று பொழுது பாடுசிறந்து, கடிய கடவுமதி பாக[3]'' என்று உரைப்பதும். கார்ப் பருவத்தில் கானம் தழைத்து அழகு திகழக் கண்ட தலைமகள் காதலன் தன்னை நினைந்து வருந்துவனோ என எண்ணி அதனுல் மேற்கொண்ட வினை தாழ்க்குமோ என்று அஞ்சி உரைப்பதும் இன்பந்தருவனவாம். இவற்றின் நலங்களும் ஏனைய காட்சிகளும் இனிவரும் பாட்டுக்களிற் காணலாம்.

---

1. ஐங். 414. 2. ஷை. 420. 3. ஷை. 484.

41

செவிலி கூற்றுப்பத்து

இது மணஞ்செய்த பின்னர் மணமனை காணச் சென்ற செவிலி அம்மண மக்களின் வாழ்க்கை நலமும், காதலும், பிறவுமாகிய சிறப்புக்கண்டு மகிழ்ந்த உள்ளத்தளாய்ப் போந்து நற்றாய்க்குக் கூறுதலே பொருளாக வந்த பாட்டுக்களின் தொகுதியாகலின் இப்பெயர்த்தாயிற்று.

தலைமகளை ஈன்று புறந்தரும் நெறியில் நற்றாய் சிறந்தவள் எனினும், அவளை வளர்த்து நினைவு சொல் செயல் ஆகிய மூன்றன் பயிற்சியால் தலைமைப் பண்புடையளாய்ச் செய்வதில் செவிலி தலைசிறந்தவளாவள். இளமைப் போதில் நடையும் மொழியும் கற்பித்துத் தலைமகளின் மென்னடையும் இன்மொழியும் கண்டு இன்புற்ற செவிலி, விளையாடும் செவ்வியில் தன் மகளை அவட்கு உயிரொத்த தோழியாக்கி அவளது தலைமைப்பண்புகள் மாண்புறு விப்பள். தலைமகள் பேதைப்பருவம் கடந்து, காமச் செவ்வி நிகழும் பருவமெய்துங்கால், தோழி அவட்கு உடன் விளையாடும் ஆயமகளாதலேயன்றி அறிவும் அறமும் அறிந்துரைக்கும் உயிர்த் துணைவியுமாகலின், அப்போது இருவர் செயல்வகையும் கண் காணித்து வேண்டும் துணையைச் செய்வது செவிலியது கடனாகும்.

இனி, தலைமகள் களவொழுக்கம் மேற்கொண்டு தோழி துணை செய்யக் கற்பறம் வழுவாது ஒழுகுமிடத்து, தாய் தந்தை

தன்னையர் முதலியோர், தலைவியது காதல் நெறி அறியாது, அவள் கருத்துக்கு ஒவ்வாத மணவினையைக் கருதுவராயின், தோழி வாயிலாகத் தலைமகளின் காதலொழுக்கத்தை உணர்ந்து கொள்வதில் முன்னிற்பவள் இச்செவிலியே யாவள். பெரு நாணத்தால் தலைவி தன் காதற் களவொழுக்கத்தை உரைத்தற்கு நாணுவளாகலின் அதனைத் தோழியால் அறியும் செவிலி, தலைவியது கற்பறம் கெடாமை நினைந்து, பெற்ற தாய்க்கு மெல்ல வுணர்த்திச் சிறப்பிப்பது பற்றிச் செவிலியே தலைவியது கற்பைக் காக்கும் சீரிய தாயாய் விளங்குகிருள். இது குறித்தே ஆசிரியர் தொல்காப்பியனுர், ‘‘ தாயெனப்படுவோள் செவிலியாகும் ’’ என்று எடுத்து மொழிகின்ருர்.

இவ்வண்ணம் தலைவிபால் தோன்றிய கற்பறம், அவளுடைய பெற்ருேரது அறியாமையால் கெடாதவாறு பேணிப் பிறங்குவிக்கும் செவிலி, தலைவி கற்புநெறி வழுவாது, தான் காதலித்த தலைமகனைக் கரணமொடு நிகழும் வதுவையிற் கூடி மனையறம் புரிவதைக் காண்பதில் வேட்கை மிகுவள். தலைவியுள்ளத்தில் தான் வித்திய கற்பறம், களவின்கண் முளைத்து வளர்ந்து, கற்பின்கண் மனையற மாய் மாண்புற்று, அறவோர்க்களித்தல், அந்தண ரோம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்து புறந்தருதல் முதலிய செயல் வகைகளால் தழைத்து, அன்பு அரும்பி, அருள் மலர்ந்து, மக்கட் பேருகிய இனிய தீங்கனி பயந்து சிறப்பது செவிலிக்குப் பேரா வியற்கைப் பேருவகையாகிறது.

தலைவி மனையறம் தொடங்கியது முதல் மக்கட் பேற்ருல் அவளது வாழ்வு மாண்புறுவது ஈருக அவ்வப்போது சென்று அவள் மேற்கொண்ட வாழ்வின் பயனும் பண்புமாகிய அன்பு அறம் ஆகியவற்றை நேரிற்கண்டு போந்து தலைவியின் நற்ருய்க்கும் தமர்க்கும் எடுத்துரைத்து அவளது ஒழுகலாற்றின் தலைமையைப் பாராட்டுவள்.

தலைமக்களது கற்பறத்துக்கு உரிய இடம் முல்லை யாதலின், இம் முல்லைப்பாட்டின் தொடக்கத்தே செவிலி நற்ருய்க்குரைக்கும் இப்பகுதியினை ஆசிரியர் பேயனுர் உரைக்கின்ருர்.

401. மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வ னடுவண னுக நன்றும்
இனிது மன்றவவர் கிடக்கை முனிவின்று
நீனிற வியலகங் கவைஇய
ஈனு மும்பரும் பெறலருங் குரைத்தே.

இது, கடிமனைச் சென்று வந்த செவிலி உவந்த வுள்ளத்தளாய் நற்ருய்க்குச் சொல்லியது.

உரை: அன்னுய், தன் மறிக்கன்று இடையிலே கிடப்ப, இருமருங்கும் மானும் பிணையும் கிடந்ததுபோலப் புதல்வன் நடுவிலே விளங்க, அவ்விருவரும் கிடந்த கிடக்கை தெளிவாகப் பெரிதும் இன்பந் தருவதாகும்; இடையறவின்றி நீலநிறமுடைய அகன்ற வானத்தாற் சூழப்பட்ட இவ்வுலகும் இதன் மேலுள்ள தாகிய வானுலகும் ஆகிய இரண்டுலகின் கண்ணும் அவ்வின்பம் பெறுதலரிதாகலான் எ. று.

மறி, மான்கன்று. மான்பிணை உம்மைத்தொகை. மான் என்றது, கலையாகிய ஆணின் மேற்று. "சிறுமறி தழீஇய தெறி நடை மடப்பிணை, வலந்திரி மருப்பினன்ன இரலையொடு, அலங்கு சினைக் குருந்தின் அல்குநிழல் வதிய [1]" எனப் பிறரும் கூறுதல் காண்க. முழுவின்று கவைஇய என இயையும். முனிதல், வெறுத்தல்; ஈண்டு இடையறவுபடுதல், இன்றி என்பது செய்யு ளாகலின் இன்று என நின்றது. வியலகம், வானம். நீலம், கடை குறைந்து நீனிறமென வந்தது. கவைஇய, கவவு என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினை. "கழுஉவிளங்காரம் கவைஇய மார்பு [2]" என்ருர் பிறரும். குரை, அசைநிலை.

கிடக்கை நன்றும் மன்ற இனிது, ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்து ஆகலான் என முடிக்க. ஈன், இவ்விடம். ஆன், ஈன் என்பவை அவ்விடம் இவ்விடம் என்ற சுட்டுப்பொருளில் வருவன.

1. அகம். 304. புறம். 19.

மக்கட் பேற்றினைப்போல் தமக்கு உறுதி பயக்கும் பேறுகள் பிற இன்மையின், சிறப்புடைய புதல்வர்ப் பேற்றாற் சிறந்து, பிரியாக் காதலாற் பிணிப்புண்டு நீக்கமின்றிக் கிடத்தலைக் காணுந் தோறும் செவிலிக்கு இன்பம் மிகுதலின், நன்றும் இனிதுமன்ற அவர் கிடக்கை என்றும், பிரிவு புணர்வுகளால் முறையே துன்பமும் இன்பமும் நல்குவது பற்றி இவ்வுலகில் பெறலரிது என்றற்கு நீனிற வியலகம் கவைஇய ஈனும் என்றும், மேலுலகில் மெய்யுற்றுக் கூடி நுகரும் இன்பம் இல்லாமையின் உம்பரும் பெறலருங் குரைத்து என்றும் கூறினாள். ''தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல், தாமரைக் கண்ணான் உலகு[1]'' என்றார் பிறரும். ''விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும், அரிது பெறு சிறப்பின் புத்தேள்நாடும், இரண்டும் தூக்கின் சீர்சாலாவே[2]'' எனத் தலைமகன் கூறுவதும் ஈண்டு நினைவுகூரத் தக்கது.

''மக்களை யில்லோர்க்குப் பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே[3]'' என்பதனால் புதல்வர்ப்பேறு சிறப்புடைத்தாதல் உணர்க. நீனிற வியலகம் கவைஇய ஈனும் என்றாள், அப்பெற்றித்தாயினும், அவ்வானத்தாற் பயனின்று என்பதற்கு; ''விரிநீர் வியனுலகம்[4]'' என்புழிப்போல.

''நல்லவை யுரைத்தலும் அல்லவை கடிதலும், செவிலிக்கு உரியவாகும் என்ப[5]'' என்பதனுள் உவந்து கூறற்கு இதனைக் காட்டுவர் நச்சினார்க்கினியர். (401)

402. புதல்வற் கவைஇய தாய்புற முயங்கி
நசையினன் வதிந்த கிடக்கை பாணர்
நரம்புளர் முரற்கை போல
இனிதா லம்ம பண்புமா ருடைத்தே

இதுவுமது.

உரை: தன் புதல்வனை அணைத்துக்கிடந்த தாயின் புறத்தைத் தழுவி, அவள் கணவன் விருப்பமுடையனாய் வதிந்து கிடந்த

1. குறள். 1103. 2. குறுந் 101. 3. புறம். 188.
4. குறள். 13. 5. தொல். பொ. 153.

கிடக்கை, பாணர்களின் யாழின் நரம்பிடை எழும் இசைபோல இனிமைத் தாதலேயன்றி நற்பண்பினையும் உடைத்து எ. று.

வதிதல், இருத்தல். படுக்கைக்கண் கால்களை நீட்டி அணை மேற் சாய்ந்து கிடந்தநிலை, வதிந்த கிடக்கை எனப்படுகிறது. முரற்கை, ஈண்டு முரலுதற் பொருட்டாய இசையின் மேற்று; தாளவறுதியுமாம், ''இன்புறு முரற்கை நும்பாட்டு விருப்பாக [1]'' என்றாற்போல. துள்ளலோசையுமையும் முரற்கை என்ப. பண்பு மார் உடைத்தே என்புழி ஆர், அசைநிலை. ''அசைநிலைக்கிளவி யாகுவழி அறிதல் [2]'' என்பர் ஆசிரியர்.

முயக்கத்தை யின்றியமையாத பெருங்காதலனாய் ஒழுகுகின்றான் என்பாள், தாய்புற முயங்கிய நசையினன் என்றும், நரம்புளர் முரற்கை கேட்டார்க் கெல்லாம் இன்பம் பயத்தற்போலக் கண்டார்க்கு இன்பம் பயப்பதுபற்றி முரற்கைபோல என்றும், கேட்டபின்னரும் உள்ளியவிடத்தும் அது தன் இனிமைப்பண்பின் நீங்காமை போல, அவர்தம் கிடக்கை நினைக்குந்தொறும் இன்பம் பயக்கும் பண்பினை உடைத் தென்பாள், பண்புமாருடைத்தே என்றும் கூறினாள். இசைதோன்றும்பொழுதே உடன்தோன்றி, அது நிகழுமிடமெல்லாம் நீங்காது நிலவுதலின் பண்பென்றார். பாணர், நயம்படு முரற்கையின் யாத்த பயன் தெரிந்து ''இன்புறு புணர்ச்சி நுகரும் [3]'' எனப் பிறாண்டுக் கூறுதல் காண்க. (402)

403. புணர்ந்த காதலியிற் புதல்வன் றலையும்
அமர்ந்த வுள்ளம் பெரிதா கின்றே
அகன்பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்
முறுவ லின்னகை பயிற்றிச்
சிறுதே ருருட்டுந் தளர்நடை கண்டே.

இதுவுமது.

உரை: பரந்த பெருஞ் சிறப்பினை யுடைய தந்தையின் பெயரையுடைய தன்மகன், முறுவல் விளங்கும் இனிய புன்னகையைச் செய்து சிறுதே ருருட்டித் தளர்ந்த நடையினனாய்ச்

---

1. மலைபடு. 390. 2. தொல். சொல். 273. 3. ஐங். 407.

செல்லுதல் கண்டு, தலைமகற்குத் தான் காதலித்துப் புணர்ந்த மனைவிமாட்டுளதாகிய அன்புபோல் அம்மகனிடை மேவிய அன்பும் பெரிதாய் இராநின்றது எ. று.

இன், உவமப்பொருட்டு உள்ளம், ஆகுபெயர். தந்தையின் பெயரைத் தன் மகற்கிட்டு வழங்குதல் மரபாகலின், தந்தை பெயரன் என்ருர்; ''முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற, புதல்வற் புல்லிப் பொய்த் துயில் துஞ்சும்[1]'' எனவும், ''மேதக்க எந்தை பெயரனை யாங்கொள்வேம்[2]'' எனவும் வருதல் காண்க. புகழ்பரவி நிலைபெறும் இடம் விரிந்த உலகமாதல் பற்றி, அகன் பெருஞ் சிறப்பின் தந்தை என்றும் கூறினர்.

களவின்கண் தலைமகள்பால் உண்டாகிய காதல் முறுகிப் பெருகி, இடையே தோன்றிய இடையீடுகளாலும் பலவகை முட்டுக்களாலும் தளராது அவனை இன்றியமையாளுய் ஒழுகியது நினைந்தாட்குத் தலைமகனது உள்ளம் தலைவியின் மகன்பால் சென்றது வியப்புத் தந்தமையின், புணர்ந்த காதலியின் புதல்வன் தலையும் அமர்ந்த உள்ளம் பெரிதாகின்று என்றும், தலைவன் குடிக்கு முன்னேளுகிய அவன் தந்தையின் பெயரைத் தாங்கித் தன் குடியை விளக்கம் செய்வது பற்றிப் புதல்வனை, அகன்பெருஞ் சிறப்பின் தந்தைபெயரன் என்றும் கூறினள். ''குடிக்கு விளக் காகிய புதல்வன்[3]'' என்று பிறரும் கூறுவது காண்க.

கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும், தளர் நடை காண்டல் இனிது'' என்பவாகலின், தளர்நடை கண்டே என்ருள். குடிக்கு விளக்காகிய மகன் பிறந்துழியும், மனைக்கு விளக்காகியஅவள் மாண்பு மறவாமையின், புணர்ந்த காதலியின் என்ருள் என்றுமாம். (403)

404. வாளுத லரிவை மகன்முலை யூட்டத்
தான்வள் சிறுபுறங் கவையின னன்றும்
நறும்பூந் தண்புற வணிந்த
குறும்பல் பொறைய நாடுகிழ வோனே.

1. கலி. 57. 2. ஷை. 81. 3. அகம். 184. 4. கலி. 80.

இதுவுமது.

உரை : நறிய பூக்களால் தண்ணிதாய முல்லை நிலத்தால் அழகுபெற்ற குறுகிய பலவாகிய குன்றுகளையுடைய நாட்டுக்குரிய தலைமகன் ஒளிபொருந்திய நுதலினையுடைய அரிவையாகிய தன் மனைவி மகனுக்கு முலையில் பாலூட்டத் தான் அவளது முதுகின் புறத்தே நன்கு தழுவிக் கிடந்தனன் எ. று.

முலை, ஆகுபெயர். சிறுபுறம், முதுகு ; பொறை குன்று. "குறும்பொறை யயலது நெடுந்தாள் வேங்கை[1]" என்று சான்றோர் கூறுதல் காண்க. கிழவோன் என்பதனை "ஆவோ வாகும் பெயருமா ருளவே[2]" என்புழி, "உம்மை யெச்சவும்மை யாகலான், அகரம் ஓகாரமாய்த் திரியும் பெயருமுள" என அமைப்பர் தெய்வச்சிலையார்.

இது மருவுதல் உரைத்தல். தலைமகள் தன் உள்ளத்திற் பெருகிய அன்பால் தான்பெற்ற மகனுக்குப் பாலூட்டுங்கால், மகனது முகப்பொலிவும் முறுவல் இன்னகையும் கண்டு கிளர்ச்சி மிக்கு விளங்குதலின் வாணுதல் அரிவை என்றும், தன் மனைக்கு விளக்காகியதே யன்றித் தன் மகற்குத் தாயாகி மாண்புறுவது கண்ட தலைமகன் பெருகிய காதலால், அவள் சிறுபுறம் தழுவி இன்பம் சிறக்குமாறு தோன்ற, தான் அவள் சிறுபுறம் கவையினன் நன்றும் என்றும் செவிலி கூறினாள். "மெல்ல என் மகன்வயிற் பெயர் தந்தேனே அது கண்டு, யாமும் காதலம் அவற்கெனச் சாஅய்ச், சிறுபுறம் கவையினனாக[3]" எனத் தலைமகள் தலைமகன் தன் சிறுபுறம் தழுவியதைச் சிறப்பித்து உரைத்தல் காண்க. தண்புற வணிந்த குறும்பல் பொறை என்றது தலைவியது கற்புச் சிறப்பும் தலைவனது சலியாக் காதல் மாண்பும் சுட்டி நின்றன.

"நல்லவை யுரைத்தலும் அல்லவை கடிதலும், செவிலிக் குரியவையாகும்[4]" என்பதனுள் இதனை உவந்து கூறிய செவிலி கூற்றுக்கு எடுத்துக் காட்டுவர் நச்சினார்க்கினியர். (404)

---

1. அகம் 368. 2. தொல். பொ. 188. 3. அகம் 26.
4 தொல். பொ. 153.

405. ஒண்சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல
மனைக்குவிளக் காயினள் மன்ற கனைப்பெயற்
பூப்பல வணிந்த வைப்பின்
புறவணி நாடன் புதல்வன் றாயே.

இதுவுமது.

உரை: ஒலிக்கின்ற மழைபெய்தலால், பூக்கள் பலவும் மலர்ந்து அழகுற்ற ஊர்கள் பொருந்திய முல்லைநில நாடனுடைய புதல்வற்குத் தாயாகிய தலைவி, ஒள்ளிய சுடர்விட்டெரியும் பாண்டிலில் ஏற்றப்பட்ட செவ்விய விளக்குப் போல அவன் இல்வாழ்க்கைக்கு உரிய விளக்கமாயினள் எ, று.

ஒண்சுடர், இருளறக்கெடுக்கும் மிக்க ஒளி. பாண்டிற்சுடர், கால் நிறுத்திய விளக்கு. பருத்த திரி எரியும் சுடராதலின், செஞ்சுடர் என்றார். "பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல[1]" என்று பிறரும் கூறுதல் காண்க. கனைபெயல் எனற்பாலது எதுகைநோக்கிக் கனைப்பெயல் என வந்தது. வைப்பு, இடம்: ஈண்டு நறிய பூக்களையுடைய மரமும் செடியும் கொடியுமுடைய முல்லை நிலத்து ஊர்கள் மேற்று. புறவணிந்த நாடுகிழவோனை, புறவணி நாடன் என்றார்.

இல்லின்கட்படும் இருளை யகற்றும் பாண்டில்போல, மனைக்கட்படும் பழி முதலிய மாசுபோக்குதலின் மனைக்கு விளக்காயினள் என்றாள். "மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்[2]" என்றும், "மனைக்கு விளக்கம் மடவார்[3]" என்றும் சான்றோர் கூறுதல் காண்க. பரூஉச் சுடர் கொண்டு காற்றின் அலைப்புக்கு அவியாது நின்று திகழ்வது பற்றி, ஒண் சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் எனச் சிறப்பித்தாள். சுடரெனப் பெயர்த்தும் கூறியது, மகப்பேற்றால் தலைமகள்பால் மேனிநலம் குன்றாமை வற்புறுத்தற்கு. புதல்வன் தாய் என்றது மேலே மனைக்கு விளக்காயினள் என்றதன் ஏதுவை உட்கொண்டு நின்றது. (405)

---

1. நெடுநல். 175. 2. புறம். 314. 2. நான்மணிக். 104.

406. மாத ருண்கண் மகன்விளை யாடக்
காதலித் தழீஇ யினிதிருந் தனனே
தாதார் பிரச மூதும்
போதார் புறவி னாடுகிழ வோனே.

இதுவுமது.

உரை: தேன் நுகரும் வண்டினம் ஒலிக்கும் போது கள் நிறைந்த முல்லைக் காட்டினையுடைய நாட்டுக்குரியோன், காதல் நிறைந்த மையுண்ட கண்களையுடைய மகன் தன் முன் விளையாட்டயர, தான் தன் காதலியைத் தழுவியவண்ணம் அவனை இனிது நோக்கியிருந்தனன் எ. று.

மாதர், காதல். குழவிப்பருவத்தில் பால்வேறுபாடின்றி எல்லாக் குழவிகட்கும் கண்ணில் மையெழுதுதல் மரபாதலின், மாதர் உண்கண் மகன் என்றார். பிரசம், வண்டு. தாது, தேன். பூக்களின் தாது தேர்ந்துண்பது இயல்பாதலின், தாதார் பிரசம் என்றார். ஊதுதல் தேனுண்டு ஆரவாரித்தல்.

மகனது விளையாட்டு எதிர்வின்கண் ஆக்கமாதலின், அதனை எண்ணி நோக்கி இன்புறும் திறத்தை மகன் விளையாட என்றும், அவ்வின்பத்தினைத் தன் மனைவியோடு கூடி நுகர்கின்றான் என அவன் காதலைக் கட்டுரைக்கப் புகுந்தாள், காதலித் தழீஇ இனிது இருந்தனனே என்றும் கூறினாள். வண்டினம் தமக்குரிய தேன் பெற்றுக் களி சிறந்து இசைக்கும் நாடு கிழவோன் என்றது, அவன் எல்லாச்செல்வமும் பெற்று இசைபட வாழ்தல் கூறியவாறு. இது வாழ்க்கை நலம் கூறியது.

காதலின் தழீஇ என்றும், பிரசம் முரலும் என்றும் பாடமுண்டு. ''பின் முறையாக்கிய பெரும் பொருள் வதுவை'''[1] என்பதன் உரையில் இதனைக்காட்டி, ''பரத்தமையிற் பிரிவொழிந்து மனைக்கண் இருந்த தென்பர் நச்சினார்க்கினியர். (406)

---

1. தொல். பொ. 172.

407. நயந்த காதலித் தழீஇப் பாணர்
நயம்படு முரற்கையின் யாத்த பயன்தெரிந்
தின்புறு புணர்ச்சி நுகரும்
மென்புல வைப்பி னுடுகிழ வோனே.

இதுவுமது.

உரை: தான் விரும்பிய காதலியைத் தழுவி உயிர்களை இசையின்பத்திற் படிவிக்கும் யாழின்கண் பாணர் யாத்திசைத்த இசைப்பயனைத் தேர்ந்து நுகரும் இன்பம் போலும் புணர்ச்சியினை நுகருவானுயினன், மென்புலமாகிய முல்லை நிலத்தினையுடைய நாட்டுக்குரியோன் எ. று.

நயந்த காதலி என்றூர், "எல்லாவுயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றுகும்[1]" என விதித்தலின். "தாயுடன் றலைக்கும் காலையும் வாய்விட், டன்ணுய் என்னுங்குழவி போல, இன்ன செயினு மினிது தலையளிப்பினும்" தன்னையின்றி யமையாக் காதலுடைமையின் நயந்த காதலி யென்றூர் எனினுமாம். முரற்கை, ஈண்டு யாழின்மேற்று. யாழ் நரம்பிடை யெழுப்பும் இசைப்பயனுகிய இன்பத்தை யாத்த பயன் என்றும், அது நுண் ணிதின் உணர்ந்து நுகரப்படுமாறு தோன்றத் தெரிந்து என்றும், இசையின்ப நுகர்ச்சிபோலப் புணர்ச்சியின்பம் நுகர்தலின் இன்புறு புணர்ச்சி நுகரும் என்றும் கூறினர். தீத்தொழிலிலே கன்றி இருள்மேவிய உள்ளத்தரும் அது நீங்கி அருள்மேவிய உள்ளத்த ராகும் நயமுடைமையின், நயம்படு முரற்கை என்றூர். "ஆறலை கள்வர் படைவிட அருளின் மாறுதலை பெயர்க்கும் மருவின்பாலை[2]" என்றூர் பிறரும். மென்புலம், புன்புலமாயினும் கார்மழையினுல் மென்மையுற்ற முல்லை நிலம். "மென்புலமுல்லை மலரும் மாலை[3]" என்புழியும் இதுவே கொள்க. கிழவோன், காதலித் தழீஇப் புணர்ச்சி நுகரும் என இயையும். தெரிந்தென்னும் வினையெச்சம் இன்புறு என்புழி உறுதலொடு முடிந்தது.

1. தொல். பொ. 223. 2. பொருந. 21–2. 3. ஐங். 489.

ஒருவரினொருவர் இன்றியமையாக் காதலாற் பிணிப்புண்டிருக்குமாற்றை அறிந்து கூறுதல் தோன்ற நயந்த காதலி என்றும், காதற்காமப் பைங்கூழை வளமுற வளர்க்கும் நீர்மையுடைமை பற்றி, பாணர் நல்கும் இசையின்பத்தை விதந்து பாணர் நயம்படு முரற்கையின் யாத்த பயன் தெரிந்து இன்புறு புணர்ச்சி என்றும், இன்பநுகர்ச்சிக்கண், நுகரப்படும் இன்பமும் நுகர்வோரும் என வேறுபட நில்லாது ஒன்ருய் இயைந்து நிற்பதுபோலப் புணர்ச்சிக்கண் ஒருவர் ஒருவரின் ஒன்றியிருந்து நுகரும் இன்பத் திறத்தை இன்புறு புணர்ச்சி நுகரும் என்றும் கூறினுள். இனி, காதலித் தழீஇப் பயன் தெரிந்து புணர்ச்சி நுகரும் என இயைத்து, காதலியொடு கூடி இசைப்பயன் தெரிந்து பின் புணர்ச்சியின்பம் நுகரும் என மாலைப்போதில் பாணரது இசையின்பமும், இரவில் இன்புறு புணர்ச்சியின்பமும் நுகர்கின்ருன் என்றலு மொன்று. ஊடப் பிறக்கும் காம இன்பத்தினும் கூடப்பிறக்கும் இன்பம் பெரிதாதல் பற்றி இன்புறு புணர்ச்சி என்ருள் எனக்கொள்க. திருவள்ளுவரும், ''ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின் [1]'' என்பது காண்க. (407)

408. பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுத லரிவை முல்லை மலைய
இனிதிருந் தனனே நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு
பொலிந்தே.

இதுவுமது.

உரை : பாணர் முல்லைப் பண்ணைப் பாடவும், ஒளிவிடும் இழையினையும், ஒளி பொருந்திய நுதலினையுமுடைய அரிவையாவாள், முல்லைப்பூச் சூடவும், நெடுந்தகையாகிய தலைமகன் வெறுப்பில்லாத கொள்கையினையுடைய தன் புதல்வனொடு சிறந்து இனிதிருந்தனன் எ. று.

1. குறள். 1330.

முல்லைப்பண், சாதாரிப்பண். கற்புக்குரித்தாகலின், முல்லை மலைய என்றார். "அவிரிழை சுடர முல்லை யலங்கலங் கூந்தல் சோர[1]" என்பத னுரையிலும் ஆசிரியர் நச்சினார்க்கினியர், "முல்லை கற்பிற்குச் சூடினார்" என்றார். பாணர் பாட்டினால் இசையும், மனைவி முல்லை யணிதலால் மனை மாட்சியும் சிறத்தலின், நெடுந்தகை என்றார். ஒரு வினையொடு காதற் சிறப்புடைமை யுணர நின்றது. துனி, வெறுப்பு. "துனிதீர் கொள்கை நம் காதலி இனிதுற[2]" என்றார் பிறரும்.

புறத்தொழுக்கம் இன்றி மனைக்கண் இருந்து அறஞ்செய்து புகழ் வளர்க்கும் திறம்பற்றிப் பாணர் முல்லை பாட என்றும், தலைவிபால் அயரா அன்பும் அழிவில் கூட்டமும் சிறந்து விளங்குமாறு தோன்ற, சுடரிழை வாணுதல் அரிவை முல்லை மலைய என்றும், இருத்தல் முல்லையொழுக்க மாதலின், இனிதிருந்தனன் என்றும், இம்மைக்குரிய இசையும் மறுமைக்குரிய மகப்பேறும் ஒருங்கு பெற்று விளங்குதலின், தலைமகனை நெடுந்தகை என்றும், ஆராக் காதலுடைமையின் எத்துணைப் போழ்து தன்னோடு இருப்பினும் வெறுப்பின்றி இன்பமே மிகுதலின், துனிதீர் கொள்கைத் தன் புதல்வனொடு என்றாள். அல்லதூஉம், புலவிக்கண் எழும் துனியினை நீக்கும் வாயிலாகலின் துனிதீர் கொள்கைப் புதல்வன் என்றாள் என்றுமாம். பிறாண்டும் தலைமகனைச் செவிலி, "விறல்மிகு நெடுந் தகை[3]" என்பது காண்க.

தம் புதல்வனொடு என்பது பாடமாயின், தானவள் என்னும் வேற்றுமையின்றி அவர் தம் உயிர் கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மையைப் புலப்படுத்தியவாறெனக் கொள்க.

"கற்பும் காமமும்[4]" என்பதனுள் இதனைக் காட்டி, இது வாயில்கள் தம்முட் கூறியது என்பர் இளம்பூரணர். (408)

---

1. சீவக. 2542. 2. அகம். 124. 3. ஷை 49.
4. தொல். பொ. 150.

409 புதல்வற் கவைஇயினன் தந்தை மென்மொழிப்
புதல்வன் ருயோ விருவருங் கவையினள்
இனிது மன்றவவர் கிடக்கை
நனியிரும் பரப்பினிவ் வுலகுட னுறுமே.

இதுவுமது.

உரை: தந்தை தன் புதல்வனைப் புல்லிக்கொண்டானுக, மெல்லிய மொழியினையுடைய அப்புதல்வற்குத் தாயாகியாள் அவ் விருவரையும் தழுவிக் கிடந்தனள்; ஆகவே, அவர் கிடந்த கிடக்கை மிக இனிதாயிருந்தது; மேலும், அவ்வின்பத்துக்கு மிக்க பரப்பினை யுடைய இவ்வுலகு முற்றும் ஒப்பதாகும் எ. று.

மென்மொழி, மென்மை ஈண்டு நிரம்பாத மழலைச் சொல்லின் மேற்று. காமக் குறிப்பின்றிக் காதலும் சான்ருண்மையும் விளங்க இருத்தலின், தலைமகன் என்னது தந்தை என்றும், தாய்மையின் வாய்மை தோன்ற புதல்வன் தாய் என்றும் கூறினர். ஐயுருபு விகாரத்தால் தொக்கது. உடன், முழுதும் என்னும் பொருட்டு; ''பழியெனின், உலகுடன் பெறினும் கொள்ளலர்[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க, ஏகாரம் எதிர்மறை யெனக் கொண்டு, உலகு முழுதும் ஒவ்வாது என்றலும் ஒன்று.

கணவன், மனைவி, புதல்வன் என்ற மூவராயது உலக மாகலின், அவர் மூவரும் கிடந்த கிடக்கைக்கு இவ்வுலகு முற்றும் உறுவதாகும் என்ருள். இவ்வெனச் சுட்டியது, வாழ்க்கைக்கு நிலைக்களனும் சிறப்பினை யாப்புறுத்தற்கு. ஈண்டுச் செவிலி கண்ட காட்சியினையே பிருண்டும், ''கண்டிசிற் பாண பண்புடைத் தம்ம, மாலை விரிந்த பசுவெண் ணிலவிற், குறுங்காற் கட்டில் நறும் பூஞ் சேக்கைப், பள்ளி யானையி னுயிரா அசைஇப், புதல்வற் கவை இயினன் விறலவன், புதல்வன் ருயவன் புறங் கவைஇயினளே[2]'' என்று கூறுதல் காண்க. (409)

---

1. புறம். 182. 2. குறுந். 359.

410 மாலை முன்றிற் குறுங்காற் கட்டில்
மனையோள் துணைவி யாகப் புதல்வன்
மார்பி னூரு மகிழ்நகை யின்பப்
பொழுதிற் கொத்தன்று மன்னே
மென்பிணித் தம்ம பாணன தியாழே.

இது, கடிமனைச் சென்ற செவிலி, தலைமகனும் தலைமகளும் புதல்வனொடு பாடல் கேட்டிருந்தமை கண்டு, தன்னுள்ளே உவந்து சொல்லியது.

உரை: மாலைப்போதில் இல்லின் முன்னர்த்தாகிய முற்றத்தின் கண் குறுகிய கால்களையுடைய கட்டிலில் தலைமகன் தன் மனைவி துணையாகத் தன் புதல்வன் மார்பின் மேல் இவர்ந்து ஊர்தலால் எழும் மகிழ்ச்சியோடு கூடிய நகை கொள்ளற்கியைந்த இன்பக் காலத்திற்குப் பாணனது யாழ்செய்த பண்ணிசை ஒத்திருந்தது ; ஆயினும் அதன் பிணிப்பு அத்துணை வன்மை யிலதாயிற்று, காண் எ. று.

மகிழ்நகை, புதல்வன்கண் தோன்றிய இளமை பொருளாகப் பிறந்தது. இளஞ்சிருருடன் இனிதிருந்து மகிழ்தற்கு அமைத்த கட்டிலாதலின், குறுங்காற் கட்டி லாயிற்று. பெயரெச்சம் ஏதுப் பொருட்டு. மென்பிணித்து என்றவிடத்து மென்மை இன்மை யுணர்த்தி நின்றது. இன்பப் பொழுதிற்கு ஒத்ததாயினும், ஒவ்வாதது போலக் கேட்போர் உள்ளத்தை ஈர்த்துப் பிணிக்கும் வன்மையின்றி யொழிந்தது என்பதுபட நிற்றலின், மன் ஒழியிசை. பிணித்தலாவது, ''சிந்தை தோயும் ஐம்பொறிகளும் செவிகளாப் புலன்கள் ஐந்தும் ஓசையாய்'' ஒன்றி நிற்றல். மகிழ்ச்சி காரண மாகத் தோன்றும் நகை, மகிழ்நகை; ''மகிழணி முறுவல்[1]'' என்றாற் போல.

புதல்வனுடைய விளையாட்டுப் பொருளாகப் பிறந்த உவகை யால் மகிழ்ச்சி யெய்துவார்க்குப் பாணனது யாழிசை அவன்

1. அகம். 353.

விளையாட்டிடைக் கூறும் மழலைச் சொற்போல மகிழ்ச்சிப்பயனே விளைத்தலின், ஒத்தன்று என்றும், அவன் மழலைச்சொற்களைக் கேட்குங்கால் யாழிசை நுகரப்படாமையின், மென்பிணித்து என்றும், கொல்களிறு வணக்கும் வன்பிணித்தாகிய யாழ், காலமும் இடமும் வாய்த்தும் தன் இசையால் தலைமக்களின் மனத்தைப் பிணிக்காதொழிந்தது என்பாள், மென்பிணித் தம்ம என்றும் கூறினாள். யாழிசைக்கு யானை வணங்கும் என்பது ''காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல், யாழ்வரைத் தங்கியாங்கு[1]'' என்று சான்றோர் கூறுதல் காண்க. ''குழல் இனிது யாழ் இனிது என்ப தம்மக்கள், மழலைச் சொற்கேளாதவர்[2]'' எனத் திருவள்ளுவனாரும் கூறினர். ''குரும்பை மணிப்பூண் பெருஞ்செங் கிண்கிணிப், பாலார் துவர்வாய்ப் பைம்பூண் புதல்வன், மாலைக் கட்டின் மார்பூர் பிழிய, அவ்வயி றொழுகிய வெவ்வாய் மாணகைச் செயிர்தீர் கொள்கை நம்உயிர் வெங்காதலி[3]'' எனப் பிரண்டுத் தலைவன் தன் புதல்வனது விளையாட்டின்பத்தை விதந்து கூறுதல் காண்க. (410)

1. கலி. 2. 2. குறள். 66. 3. நற். 269.

42

கிழவன் பருவம் பாராட்டுப்பத்து

இது தலைமகன் தலைமகட்குத் தான் குறித்துச் சென்ற கார்ப் பருவ வரவுகாட்டித் தான் அஃது எய்துவதற்கு முன்னரே வந்தமை தோன்ற அவளைப் பாராட்டிக் கூறும் பாடல் தொகுதி யாகலின், இப்பெயர்த்தாயிற்று.

411. ஆர்குர லெழிலி யழிதுளி சிதறிக்
கார்தொடங் கின்றாற் காமர் புறவே
வீழ்தரு புதுப்புன லாடுகநம்
தாழிருங் கூந்தல் வம்மதி விரைந்தே.

இது, பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் அப்பருவத்திற்கு முன்னே வந்து தலைவியொடு கூடிச் செல்லாநின்றுழிப் பருவம் வந்ததாகத் தான் அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றக் கூறுவான் தலைவிக்கு உரைத்தது.

உரை: தாழ்ந்த கரிய கூந்தலையுடையாய், நிறைந்த இடி யொலியினையுடைய மேகம் மிக்க பெயலைப் பெய்தலால், அழகிய முல்லைக்காடு கார்காலம் தொடங்கப் பெறுகின்றது; நாம் விருப்பந் தரும் புதுப்புனலின்கண் விளையாட்டயரலாம்; ஆகலின், விரைந்து வருவாயாக எ. று.

மிக்க பெயலைச் செய்யும் மேகம் இடியொலியுடன் வருதல் இயற்கையாகலின், ஆர்குரல் எழிலி யெனப்பட்டது. ''ஆர்கலி யெழிலி[1]'' என்றும், ''ஆர்குரல் எழிலி[2]'' என்றும் வருமிடங்களி லெல்லாம் இங்ஙனமே யுரைத்துக் கொள்க. அழிதுளி, பெரு மழை, ''அழிபெயல்காலை[3]'' என்ருற்போல. செய்தனெச்சம் காரணப்பொருட்டு. முதியர், இளையர், ஆடவர், பெண்டிர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் ஆகிய பலரும் விரும்புவது பற்றி, வீழ்தரு புதுப்புனல் என்ருர்; ''யாம் வேண்டும் வையைப்புனல்[4]'' என்று பிறரும் கூறுவது காண்க.

தான் குறித்த கார்ப்பருவம் வருமுன்பே வினைமுற்றி வந்துள்ளா ஞகலின், பருவம் கண்ட தலைமகன் கார் தொடங்கின் ருல் புறவே என்றும், கார்ப் பெயலால் பெருகிவரும் புதுநீர் யாவரும் படிந்து ஆடுதற்கு விரும்புமாறு நுரையும் பல்வகை மலரும் சுமந்து வருதலின், வீழ்தரு புதுப்புனல் ஆடுகம் என்றும், தலைமகள் உள்ளத்தெழுந்த புனலாட்டு வேட்கை மீதூர்ந்தமை யின் அவள் உடன்பட்டு நாணித் தலைகவிழ்ந்தாளாக முன்னிலைப் படுத்தற்குத் தாழிருங் கூந்தல் என்றும், புதுப்புனலாடற்கு விரைந்து புறப்படுக என்பான், வம்மதி விரைந்தே என்றும் கூறினுன். ''குறுநுரை சுமந்து நறுமல ருந்திப், பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம்[5]'' என்று தலைவி புதுப்புனலாட்டினை நயந்து உரைக்குமாறு அறிக. கார்ப்பெயல் பொழிந்தவுடன் புதுப்புனல் வரக்கண்டார் அதன்கண் ஆடுதல் பண்டைக்கால மரபாகலின், ஈண்டு அது விதந்து கூறப்பட்டது. (411)

412. காயா கொன்றை நெய்தன் முல்லை
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்ருல் புறவே
பேரமர்க் கண்ணி யாடுகம் விரைந்தே

இதுவுமது,

---

1. ஐங். 428. 2. ஷ. 455. 3. பரி. 10 : 1.
4. ஷ 10 : 40. 5. நற். 68.

ப. உரை : ஆடுகம் விரைந்தே என்றது விளையாட்டு.

உரை : பெரிய அமர்த்த கண்களையுடையாய், காயாவும், கொன்றையும், நெய்தலும், முல்லையும், அரும்பி மலர்ந்த செம் முல்லையும், பிடவமுமாகிய மலர்கள் விரிந்து புறவு பூவணி கொள்வதாயிற் ருகலின் விளையாட்டயர்தற்கு விரைந்து வருக எ. று.

எண்ணோடு யாண்டும் கூட்டப்பட்டது ; ''என்றும் எனவும் ஒடுவும் தோன்றி, ஒன்று வழியுடைய எண்ணினுட் பிரிந்தே[1]'' என்ப வாகலின். பூவணி, பூவால் உளதாகும் அணியென விரியும். தளவம், முல்லைவகை. நெய்தல், நெய்தனிலப் பூவாயினும், ''எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும் வந்த நிலத்தின் பயத்த வாகும்[2]'' என்பதனுல் அமைந்தது. அமர்த்தல், அமர்செய்தல் ; ''பெண்டகையாற் பேர மர்க்கட்டு[3]'' என்புழிப்போல. இது பெயரடியாய வினை ; '' பேரமர் மலர்க்கண்[5]'' என்புழியும், ''பேரமர்க் கண்ணி நிற்பிரிந் துறைநர்[5]'', என்புழியும் இவ்வாறே யுரைத்துக் கொள்க.

கோடும் கொடியும் நிலமும் நீருமாகிய நால்வகை இடத்துப் பூக்களை உடைமை பற்றி, காயா கொன்றை முதலியவாக எடுத்துரைத்தான். காயாவும் கொன்றையும் மரமாதலின் முன் வைத்தும், தளவும் பிடவும் நிலத்தவாக லின் இறுதிக்கண் வைத்தும் உரைக்கப்பட்டன. பூத்த பரத்தையர் பூவணி கோடல் போல் இப்புறவமும் பூவணி கொண்டது என்பான், பூவணி கொண்டன்றால் புறவே என்றும், எனவே, அதன் புது நலத்தை விரைந்து சென்று நுகர்தல் வேண்டுமென்பான். ஆடுகம் விரைந்தே என்றும் கூறினுன். பரத்தையர் பூவணி வதுவை கோடலை, '' பூவணிப் பொலிந்த நின் வதுவையங் கமழ் நாற்றம்[6]'' என்பதனுல் அறிக. தன்பால் பரத்தமை இன்மையின், பூவணி கொண்டன்று புறவு என்றுன் ; இக்குறிப்பை ஆராய்வாள் போல அவன் முகத்தைத் தன் கண்ணைப்பரப்பி அவள் நோக்குவது

---

1. தொல். சொல். 294. 2. தொல். பொ. 19. 3. குறள். 1083.
4. ஐங். 427. 5. ஷை. 496. 6. கலி. 66.

பற்றிப் பேரமர்க்கண்ணி என்று சிறப்பித்தான். பிடவுமலர்ந்து கவினி என்றும் பாடமுண்டு. (412)

413. நின்னுத ஞறு நறுந்தண் புறவின்
நின்னே போல மஞ்ஞை யாலக்
கார்தொடங் கின்ருற் பொழுதே
பேரிய லரிவை நாநயத் தகவே.

இதுவுமது.

உரை: பெரிய இயல்பினையுடைய அரிவையே, நாம் விரும்புமாறு நின்னுடைய நுதல்போல் மணங்கமழும் தண்ணிய முல்லைக் காட்டின்கண் நின்னைப்போலவே மயில்கள் தமது மென் குரலை எடுத்து அகவ, இப்பொழுது கார்ப்பருவத்தைத் தொடங்கா நின்றது எ. று.

மகளிர் நுதல் நறுமணமுடைய தென்பதனுல் நுதல் நாறும் தண்புறவு என்ருர். ''மணநாறும் நறுநுதல் மாரிவீழ் இருங் கூந்தல்[1]'' எனச் சான்ருேர் கூறுவர். மகளிர் நுதல் முல்லையின் நறுமணம் நாறும் என்பர். ''கொய்யகை முல்லை காலொடு மயங்கி, மையிருங் கானம் நாறும் நறுநுதல்[2]'' என்பது காண்க. ஆலுதல், அகவுதல்; ஆடுதலுமாம். பொழுது கார் தொடங்கின்று என்பது நாடு இடம் குறுகியது என்ருர் போல முடிந்தது.

பேரியலாவது, மனைத்தக்கா ளாதற்குரிய மாண்பு. புறவம் நின் நுதல்போல் நாறலினுலும், மயில்கள் நின்னைப்போல் ஆலுதலாலும், இப்பருவம் நினக்கு இயைந்து தோன்றுதலின், நாம் கூடியாடி மகிழ்வெய்தலாம் என்பதாம். ''நின்னே போல மஞ்ஞை யால நின், நன்னுதல் நாறு முல்லை மலர[3]'' எனப் பிருண்டும் தலைவன் கூறுதல் காண்க. (413)

414. புள்ளு மாவும் புணர்ந்தினி துகளக்
கோட்டவும் கொடியவும் பூப்பல பழுனி
மெல்லிய லரிவை கண்டிகும்
மல்ல லாகிய மணங்கமழ் புறவே

1. கலி. 14. 2. அகம். 43. 3. ஐங். 492.

இதுவுமது.

உரை: மெல்லிய இயலையுடைய அரிவையே, புள்ளினமும் மாவினமும் தத்தம் துணையொடு கூடி இன்புற்று மகிழ, கோட்டிடத்தும் கொடியிடத்தும் பூக்கும் பூக்கள் நிறைந்து வளமிக்க மணம் கமழும் புறவினைக் காண்பாயாக எ. று.

புள்ளினத்துக்கு உரிய பழவகையும், மாவகைக்குரிய மேயலும் இனிது பெறப்படுதலின், இனிது உறைகின்றன என்பார், இனிது உகள என்றார். தாய்மைக்குரிய சால்புடைமை பற்றி மெல்லியல் அரிவை எனச் சிறப்பித்தார். பூவும் தழையும் சிறந்து புள்ளும் மாவும் இனிதுறைவதனால் மல்ல லாகிய புறவு எனப்பட்டது.

புறவம் பூ நிறைந்து பொலிதலும், புள்ளும் மாவும் துணையொடு புணர்ந்து மகிழ்வெய்தலும் காண்டற்கு இன்பமாம் என்பான், கண்டிகும் என்றான். (414)

415. இதுவே மடந்தைநா மேவிய பொழுதே
உதுவே மடந்தைநா முள்ளிய புறவே
இனிதுடன் கழிக்கி லிளமை
இனிதா லம்ம இனியவர்ப் புணர்வே

இதுவுமது.

உரை: மடந்தையே, நாம் விரும்பியபொழுதும், கருதிய புறவும் இதுவும் உதவுமாம்; இப்பொழுதை இப்புறவில் இனிது கழிப்பதாயின் இனிய துணைவரைப் புணர்ந்து கழிப்பின் இளமை மிக இனிதாம் எ. று.

இனிது கழித்தலாவது பூக்கொய்தும் புனலாடியும் கழித்தல். விரும்பிய பொழுதும், இடமும் பெற்றவழி இனியரோடுகூடி அப்பொழுதைக் கழிப்பேமாயின் இனிதாம் என்பதும், கழியும் மாலைத்தாகிய இளமை இனியவரோடு கூடுதலாற் கழியின் அஃது இளமையானாகும் பெறற்கரிய சீரியபயன் என்பதும் கூறியவாறு. சிறப்பும்மை விகாரத்தால்தொக்கது. இனி, இனிது என்பதனைப்

புணர்வே யென்புழியுங் கூட்டியுரைத்தலு மொன்று; அதுபோது, இருவழியும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கதென்க. மடந்தை யென மீட்டுங் கூறியது, காதற் சிறப்புணர்த்திற்று. ''எல்லா வுயிர்க்கு மின்ப மென்பது, தான் அமர்ந்து வரூஉ மேவற்றாகும்[1]'' என்பவாகலின்.

பிரிவின்கண் தலைமகன் மீண்டுவருவதாக வற்புறுத்தபொழுது கார்காலமாதலின், அது வருமுன் அவன் வந்தமையான் மகிழ்ச்சி மிகும் தலைமகட்கு, அதனைக்காட்டி, இதுவே மடந்தை நாம் மேவிய பொழுது என்றும், பூத்துக் கவினிய புறவின்கண் பூக்குற்றும் புனலாடியும் விளையாடிப்பெறும் இன்பத்தைத் தலைமகள் மிகவும் விரும்புபவள் ஆதலின், அதனை நினைந்தே கார்காலத்து மீள்வதை முன்பு கருதினனாகலின், உதுவே மடந்தை நாம் உள்ளிய புறவே என்றும், எவ்வகையானும் இடையீடின்றி விரைந்து கழியும் இயல்பிற்றாய இளமையை வறிதே கழியவிடாது இனிது கழித்தல் அறிவுடைமையும் அறமுமாதலின், இளமை இனிதுடன் கழிக்கில் என்றும், இனிது கழித்தற்கு நெறி இனியவர்ப் புணர்வு ஆதலின், இனியவர்ப் புணர்வு என்றும் கூறினான்; ''வைகல் தோறும் இன்பமும் இளமையும், எய்கணை நிழலிற் கழியும்[2]'' என்றும், ''அரிவை தோளிணைத் துஞ்சிக் கழிந்த நாள், இவண் வாழும் நாள்;'' வறிது கழியும் நாள் ''பதடிவைகல்[3]'' என்றும் சான்றோர் கூறுதல் காண்க. திருவள்ளுவர், ''இன்னாது இனனில்லூர் வாழ்தல் அதனினும் இன்னாது இனியார்ப் பிரிவு[3]'' என்பர்.

இதனால் தலைவன் மாட்டுப் புணர்ந்துழி யுண்மை என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. தோன்றவே, இளமையதருமை கூறிப் புணர்ச்சிவலித்தல் பெற்றாம். (415)

416. போதார் நறுந்துகள் கவினிப் புறவில்,
தாதார்ந்து
களிச்சுரும் பரற்றுங் காமர் புதலின்
மடப்பிடி தழீஇய மாவே
சுடர்த்தொடி மடவரற் புணர்ந்தனம் யாமே.

---

1. தொல். பொ. 223. 2. நற். 46. 3. குறள். 323. 4. குறுந். 1158.

இது, பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் பருவத்திற்கு முன்னே வந்து தலைவியொடு கூடிச் செல்லாநின்றுழி அதற்கு இனியனாய்த் தன்னுள்ளே சொல்லுவான் போன்று தலைவி அறியு மாற்றாற் கூறியது.

ப. உரை: புறவில் தாதார்ந்து சுரும்பு அரற்றும் புதல் என்றது தலைவியது மனைமாட்சி வியந்து கூறியவாறு.

உரை: பூம்போதுகளில் நிறைந்த நறுவிய துகல்படிதலால் அழகுற்றுக் காட்டின்கட் பூத்த மலர்களின் தேனுண்டு களித்த வண்டுகள் ஒலிக்கும் அழகிய புதரிடையே களிறுகள் தமக்கு இனிய மடப்பம் பொருந்திய பிடியானைகளைத் தழுவின; அவ்வாறே, யாமும் ஒளி பொருந்திய தொடியினை யணிந்த மடவரலைக் கூடி மகிழ்வேமாயினேம் எ. று.

துகள், மகரந்தத்தூள். பைம்புல் பரந்த நிலத்தில் போதுகளின் பொன்னிறத் துகள் பரந்து பசுங்கம்பலத்தில் பொற்கோலம் இட்டதுபோல் அழகு செய்தலின், போதார் நறுந்துகள் கவினி என்றார் போதின்கண் ஊறும் தேனைப் படிந்துண்ட கருவண்டு பொன்னிறத்துகள் படிந்து அழகுறத் தோன்றுவது பற்றி, நறுந் துகள் கவினி என்றார் என்றுமாம். "நறவின் நறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ், பொன்னுரை கல்லின் நன்னிறம் பெறூஉம்[1]" என்று சான்றோர் உரைப்பது காண்க. களி, கள்ளுண்ட மயக்கம். "மடப்பிடி" என்றதனால், "மா வென்னும் பல பொருளொரு சொல் களிறுக்காயிற்று.[2]" மாமடப்பிடி தழீஇய; யாம் மடவரற் புணர்ந்தனம் என இயையும். மாவே என்றதனை விளியாக்கி யுரைத்தலும் ஒன்று.

வண்டுகள் தேனுண்டு ஒலிக்க, களிறுகள் தமக்கினிய பிடியைத் தழுவி மகிழ்தலைக் கண்ட விடத்துத் தனக்குரிய துணைவிமாட்டு உள்ளம் சேறலின். புணர்ந்தனம் யாமே என்றான். இனி, "உவமப் பொருளின் உற்றதுணரும், தெளிமருங் குளவே திறத்தியலான[3]" என்றதனால், யானை மடப்பிடியைத் தழுவிய புதல், சுரும்புகள்

1. நற். 25. 2. தொல்.சொல். 53. 3. தொல்.பொ. 295.

தமக்கு வேண்டும் தாதுண்டு களித்தற்கு இடமாதல் போலத் தன் காதலி இருந்த மனை, விருந்தினரும் இரவலரும் பிறரும் தமக்கு வேண்டுவன பெற்று மகிழ்ந்து போற்றும் சிறப்பினையுடைத் தெனத் தலைமகள் மனைமாட்சியைத் தலைமகன் உவந்து கூறியவாறு பெற்றும். (416)

417. கார்கலந் தன்றாற் புறவே பலவுடன்
ஏர்பரந் தனவாற் புனமே யேர்கலந்து
தாதார் பிரச மொய்ப்பப்
போதார் கூந்தன் முயங்கின ளெம்மே.

இதுவுமது.

உரை : காடு கார்பருவத்தை எதிரேற்றமையாலும், புனங்கள் பலவாய் அழகு பெற்றமையாலும், தேனுண்ணும் வண்டுகள் மொய்க்கும் பூக்களை யணிந்த கூந்தலையுடையவள் புலத்தகை புரிந்து எம்மைக் கூடி மகிழ்ந்தாள் எ. று.

புறவு, முல்லைக்காடு. கார்மழையால் நிலங்குளிர்ந்து பூக்கள் மலர்ந்து மாவும் புள்ளும் மகிழ்சிறந்து இன்புறுதலின், கார் கலந்தன்றால் புறவே என்றும், வரகு துவரை முதலிய பயிர்கள் தோன்றி முல்லைக் கொல்லைகளில் வளவிய காட்சி வழங்குதலின், பலவுடன் ஏர்பரந்தனவால் புறவே என்றும் கூறினர். புனம், முல்லை நிலத்துப் புன்செய்க் கொல்லைகள். ஏர், உழுவாரது கலப்பையுமாம்; "தேர்பரந்த புலம் ஏர்பரவா[1]" என்றாற்போல. ஏர்கலந் தென்புழி ஏர், புலத்தகை. "நலத்தகை நல்லவர்க்கு ஏஎர்புலத்தகை[2]" என்ப. ஏர் கலந்து முயங்கினள் என இயையும்.

தான் தன் காதலனொடு புணர்ச்சிபெற்று மகிழ்தற்குரிய கார்ப் பருவமும், புனத்தழகும் எய்த நோக்கிய தலைமகட்குக் கூட்டத்தின் மேல் உள்ளம் சேறலின், முயங்கினள் எம்மே என்றும், காதலன் பால் புலத்தற்குரிய தவறு இல்லையாயினும் வேட்கை மிகுதியால்

1. பதிற். 26, 2. குறள். 1305.

புலத்தல் மகளிர்க்கு இயல்பாகலின், ஏர்கலந்து முயங்கினள் என்றும் கூறினன். தாதார் பிரசம் மொய்க்கும்போது என்றது தான் நுகர்ந்த இன்பத்தைத் தலைவன் சுட்டியவாறு. (417)

418 வானம் பாடி வறங்களைந் தானா
தழிதுளி தலைஇய புறவிற் காண்வர
வானர மகளோ நீயே
மாண்முலை யடைய முயங்கி யோயே.

இது, குறித்த பருவத்திற்கு உதவ வாராநின்ற வழிக்கண் உருவுவெளிப்பாடு கண்ட தலைமகன் இல்லத்துப் புகுந்துழித் தலைமகட்குச் சொல்லியது.

உரை: மாண்புற்ற மார்பகம் முற்றவும் பொருந்தப் புல்லியவளே, மழைநீரை உணவாகவுடைய வானம்பாடிப்புள் அஃது இன்மையாற் கொண்ட வறுமை நீக்கி, அதனேடமையாது மிக்க பெயலைச் செய்த மழையை ஏற்றுக்கொண்ட காட்டிடையே காட்சியுறத்தோன்றுதலின், நீ வானரமகளோ, கூறுக எ. று.

வானம்பாடி மழைநீரை உணவாகவுடைய தென்பது, "எந்நாளும், துளிநசைப் புள்ளின்[1]" என்றும், "தற்பாடிய தளியுணவின், புள்[2]" என்றும் வருவனவற்ருலும், அவற்றின் உரையாலும் உணர்க.

மழையில்லாத போதெல்லாம் வானம்பாடிக்கு வறுமைக் காலமாதலின், வறம் களைந்து என்ருர். அழிதுளி, மிக்கமழை. காண்வர என்னும் செயவெனெச்சம் காரணப் பொருட்டு. அடைய முயங்கல், பொருந்தப் புல்லுதல். "வெம்முலை யடைய முயங்கி[3]" என்ருற் போல. முயங்கியோய் என்றது விளி. வானரமகள், மலையுச்சிகளிலும் காடுகளிலும் காணப்படும் வனப்புமிக்க மகளிர். "பொன்படு நெடுங்கோட்டு இமையத் துச்சி, வானர மகளிர்[4]" எனவும், "தென்னன் தொடாஅ நீரிழி மருங்கிற் கல்லளைக் கரந்த

4 புறம். 198. 2. பட்டி. 3-4. 3. ஐங். 39. 4. நற். 356.

அவ்வரையரமகளிர் !'' எனவும் சான்றோர் இம்மகளிரைக் குறித்தல் காண்க.

மனைக்கண் தன்சொல்லைத் தேறியிருப்பவள், கானத்தின்கண் உருவெளிப் பாட்டால் காட்சி தருதலின், வானரமகளோ என்றான். தன்னை நினைந்து வருந்திய வானம் பாடியின் வறுமையைக் களைந்து அமையாது காட்டின் கண்ணும் பெய்து அதனைச் சிறப்பித்த மழைபோல, நின்னை உள்ளி வருந்திப் போதரு வேனுக்கு நெறியிடைத் தோன்றி என் வருத்தம் களைந்து, அதனோடமையாது மனைக்கட் போந்து சுற்றம் தழுவியும் விருந்தோம்பியும் மனையறம் சிறப்பித்தாய் என மனைமாண்பு பாராட்டிய வாறு. (418)

419. உயிர்கலந் தொன்றிய செயிர்தீர் கேண்மைப்
பிரிந்துற லறியா விருந்து கவவி
நம்போ னயவரப் புணர்ந்தன
கண்டிகு மடவரல் புறவின் மாவே.

இஃது இன்பநுகர்ச்சிக் கேற்ற பருவம் வந்துழித் தலைமகளோடு புறவிற் சென்ற தலைமகன் அவ்விடத்து மாக்களை அவட்குக்காட்டிச் சொல்லியது.

உரை: மடவரலே, இக்காட்டில் வாழும் விலங்குகள் உயிரோடு கலந்து ஒற்றுமைப்பட்ட குற்றமில்லாத நட்பினால், பிரிந்து இருத்தலை அறியாத துணைவிலங்கு போந்தவிடத்து அவற்றிற்கு விருந்தயர்ந்து, நம்மைப்போல் விருப்பம்வரப் புணர்ந்தன, காண் எ. று.

புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தல் என்னும் நட்புக் காரணம் மூன்றனுள் உடனுயிர் நீங்கும் நட்புப் பயத்தற் சிறப்பினை யுடைய உணர்ச்சி யொத்தலை உயிர் கலந்தொன்றிய கேண்மை என்றும், உயிரொன்றிய கேண்மையின் பயன், ஒருவர் ஒருவர்பால் நிகழும் குற்றம் கடிந்து குறை தவிர்த்து நன்னெறிக்கண் உய்ப்ப

1. அகம். 342.

தாகலான், அதனைச் செயிர்தீர் கேண்மை என்றும் கூறினர். பிரிந்துறல், பிரிந்திருத்தல். விலங்கினம் ஆணும் பெண்ணுமாய்ப் பிரிவின்றி எங்கும் இணைந்தே செல்லும் இயல்பினவாதலால், பிரிந்துறல் அறியா எனல் வேண்டிற்று. அறியா விருந்து என்றதனை அறியா இருந்து என்று கொள்ளினுமாம். கவவுதல், ஈண்டு ஓம்புதற் பொருட்டு.

பிரிந்துறல் அறியா என்றான், மக்களைப் போல் பெண்ணொடு போகாமையாகிய வரையறை யின்மையின். பிரிந்து சென்றோர் மீண்டு போந்துழி, அவர் பிரிவாற்றியிருந்த துணைவியர் அவர்க்கு விருந்தயர்தல் முறையாகலின், விருந்து கவவி என்றான். ''நேரிறைப் பணைத்தோட் கார் விருந்தாக[1]'' என்றும், ''தேர்தரு விருந்து[2]'' என்றும் வருமிடமெல்லாம் இதனை உரைத்துக் கொள்க விருந்தயர்தல் விதியாதல், ''தேரோன் மலைமறையத் தீங்குழல் வெய்தாக, வாரான் விடுவானோ வாட்கண்ணாய்—காரார், குருந்தோடு முல்லை குலைத்தனகாண் நாமும், விருந்தோடு நிற்றல் விதி[3]'' என்பதனால் அறிக. புணருந்தொறும் புத்தின்பம் சுரந்து விருப்பம் செய்தலின், நயவரப் புணர்ந்தன என்றான். (419)

420. பொன்னென மலர்ந்த கொன்றை
மணியெனத்
தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு
நன்னல மெய்தினை புறவே நின்னைக்
காணிய வருதும் யாமே
வாணுத லரிவையொ டாய்நலம் படர்ந்தே.

இது, குறித்த பருவத்து எய்துவான் அணித்தாக வந்த தலைமகன், பருவத்தால் அணிகொண்ட புறவை நோக்கிச் சொல்லியது.

உரை: கானமே, பொன்போல மலர்ந்த கொன்றையும், நீலமணி போலும் தேன்மிக்க காயாவும், மலர்கள் நிறைந்த

1. ஐங். 468. 2. ஷை. 451. 3. திணை. 150–112.

தோன்றியுமாகிய இவற்ருன் மிக்க அழகெய்தி விளங்குகின்றனை யாகலின், ஒளிபொருந்திய நெற்றியினையுடைய அரிவையாகிய காதலியையும் அவளது அழகிய நலத்தினையும் உள்ளி, நின்னைக் காண்டற்கு, யாம் வருகின்றேம் எ. று.

கொன்றை பொன்னென மலர்தலைப் பிருண்டும் ''குறுங்காற் கொன்றை, அடர்பொன் னென்னச் சுடரிதழ் பகரும்[1]'' என்ருற் போலப் பன்முறையும் கூறுப. ''சிறுகுழி, கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர், பொன்பெய் பேழை மூய்திறந்தன்ன, காரெதிர் புறவு[2]'' எனப் பிறரும் கூறுவர். காயா நீலமணிபோல மலர்தலை, ''பொன்னெனக் கொன்றை மலர மணியெனப், பன்மலர்க் காயாங் குறுஞ்சினை கஞலக், கார்தொடங்கின்றே காலை[3]'' என்றும், ''மணிமருள் பூவை யணிமலர்[4]'' என்றும் பயின்று வரும் சான்ருேர் கூற்றுக்களால் அறிக. தோன்றி, வெண்ணிறமுடைய பூ வகை. பொன்னும் மணியும் வெள்ளியுமுடையாரை நன்னல மெய்தினோர் என்னும் வழக்குப்பற்றிக் கொன்றையும், காயாவும், தோன்றியும் பூத்த புறவினை நன்னலம் எய்தின புறவே என்றது ஒருநயம். கொன்றையும் காயாவும் தோன்றியும் மலர்ந்து கானம் இனிய காட்சி வழங்குதலின், நன்னலம் எய்தினை புறவே என்றும், நலமெய்தியதனைச் சென்று கண்டு நலம் பாராட்டுவது அறிவுடை யோர்க்கு இயல்பாதலின், நின்னைக் காணிய வருதும் யாமே என்றும் கூறினன்.

இன்பநுகர்ச்சிக் குரிய பருவமாகலின், காணிய வருதும்யாமே என்றும், தனியவரை முனிவு செய்யும் தன்மைத் தாகலின், வாணுதல் அரிவையொடு என்றும், புறவினை நோக்கி, நன்னல மெய்திய நின்னை வாணுதல் அரிவையொடு காணிய வருதும் என்றவழி, தலைமகள் உள்ளத்தில் புலவியும் துனியும் பிறக்கு மென்றஞ்சி, அரிவையொடு ஆய்நலம் படர்ந்து என்றும் உரைத்தான். (420)

---

1. ஐங். 430. 2. குறுந். 233. 3. நற். 242.
4. அகம். 134.

43

விரவுப்பத்து

இதன்கண், முல்லைத்திணைக்குரிய ஒழுக்கங்களில் தலைமகன் பிரியாமைக் கேதுவாகிய காதலை உணர்ந்தோர் கூற்றும், பருவ வரவு குறித்தும், பிரியுங்கொல் என்று தலைமகள் ஐயுற்றவழித் தலைமகளைத் தேற்றுதல் குறித்தும் தலைமகன் நிகழ்த்தும் கூற்றும் தோழி கூற்றுமாகப் பலருடைய கூற்றுக்களும் விரவி வருதலின், இப்பெயர்த்தாயிற்று.

421 மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவி னொடுங்குமுய லிரியும்
புன்புல நாடன் மடமகள்
நலங்கிளர் பணைத்தோள் விலங்கின செலவே.

இது, வினை பலவற்றிற்கும் பிரிந்தொழுகும் தலைமகன் பின்பு மனைவயின் நீங்காது ஒழுகுகின்ற காதல் உணர்ந்தோர் சொல்லியது.

ப. உரை: வெண்காழ் என்றது மாலைக்காலத்து முயலெறியும் தடியை.

உரை: புனங்காவலர் தம் கையிலுள்ள குறுந்தடியை மாலைக் காலத்தே நிலத்தே எறிதலால் நறிய பூக்கள் நிறைந்த காட்டின் கண் ஒடுங்கியிருக்கும் முயல்கள் ஓசைகேட்டு அஞ்சி நீங்கியோடும்

புன்புலங்களையுடைய நாடனுடைய மடப்பம் பொருந்திய மகளின் அழகுமிக்க மூங்கில்போலும் தோள்களே தலைமகன் செலவினை மறுத்தொழித்தன எ. று.

காழ்ப்பேறிய குறுந்தடியைக் காழ் என்றது ஆகுபெயர். நன்கு காழ்த்தது கருத்திருக்குமாகலின், வெண்காழ் என இதனைச் சிறப்பித்தார். புன்புலம், புன்செய். ''புன்புல மயக்கத்து விளைந்தன தினையே[1]'' என இந்நூலின்கண்ணும், ''கான வைப்பிற் புன்புலத்தானே[2]'' எனக் குறுந்தொகையின் கண்ணும் சான்றோர் வழங்குதல் காண்க. பணைத்தோள், பருத்ததோள் என்றுமாம்.

அவன் செலவு விலக்குதற்கு அவள் மாட்டுக் கொண்ட காதல் ஏதுவாயினும், முயக்கின்பந்தரும் நலம் குறித்து நலங்கிளர் பணைத் தோள் என்றார். காவலர் வெண்காழை வெறிதே வீசிய வழியும் புதலின்கண் ஒடுங்கியிருந்த முயல் அஞ்சி நீங்கும் எனவே, தலைமகன் பிரிவு கருதியவழி மனைக்கண் உறையும் தலைமகள் பிரிவஞ்சித் தோள் மெலிந்து மேனிநலம் குன்றுவள் என்றவாரும். ''ஏனோர்க் காயின் இடம் வரைவின்றே[3]'' என்றதனால் முல்லைக்குரிய முயலைக் கூறினர். (421)

422. கடும்பரிப் புரவிக் கால்வ னெடுந்தேர்
நெடுங்கொடி முல்லையொடு தளவுமல ருதிர
விரையுபு கடைஇநாம் செல்லின்
நிரைவளை முன்கை வருந்தலோ விலளே

இது, மீள்கின்ற தலைமகன் தன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

உரை: பாக, கால் வலிமைபெற்ற நெடிய தேரின்கட் பூட்டிய மிக்க செலவினையுடைய குதிரைகளை, நீண்ட முல்லைக்கொடியும் செம்முல்லையும் தம் மலர்கள் உதிருமாறு விரையக்கடவிச் செல்வே

1. ஐங். 260. 2. குறுந. 188. 3. தொல். பொ. 302.

மாயின், நிரையே தொடுத்த வளை அணிந்த முன்கையினை யுடையாள் வருந்துதல் இலளாவள் எ. று.

கால்வல் நேடுந்தேர்க் கடும்பரிப் புரவி யென்று இயையும். ''கடலோடா கால்வல் நேடுந்தேர்[1]'' என்றார் பிறரும். கால், உருளையுமாம். கடும்பரி, விரைந்த செலவு. கால்வல் நெடுந்தேர் என்றது, எத்துணைக் கடுகிச் செல்லினும் நெறி மிக்க ஏற்றிழிவுகளை யுடையதாயினும் ஊறுபடாத திண்மையும் வன்மையும் உடைமை தோன்ற நின்றது. நிரைவளை முன்கை, நிரையாக வளையணிந்த முன்கையினை யுடையவள் என விரிதலின், அன்மொழித்தொகை. ''நிரைவளை முன்கை நேரிழை மகளிர்[2]'' என்று பிறரும் குறிப்பர்.

தான் செல்லும் பெருவழி, கார்மழையால் தழைத்து முல்லை முதலியன மலர்ந்து விளங்கும் கானத்தின் இடையே கிடத்தலின், முல்லையொடு தளவுமலர் உதிர என்றான்; ''தளவம் முல்லையொடு தலைஇத் தண்ணென, வெறிகமழ் கொண்ட வீததை புறவின் நெட்டிடை[3]'' என்று பிறரும் கூறுவது காண்க. வினை முற்றிய வழித் தோன்றிய இன்பம் காதலியின் பிரிவு வருத்தத்தை நெஞ்சின்கண் தோற்றுவித்தமையின், விரைந்து சென்று அதனைக் களைதல் வேண்டுமென்ற விழைவுமிகுதியால், விரையுபு கடைஇ நாம் செல்லின் என்றான். செல்லின் என்றது செல்லுதல் வேண்டு மென்பது வற்புறுத்தி நின்றது. காதல் நினைவால் உள்ளம் குழைந்து பாகனோடு உரையாடுதலின், நாம் செல்லின் நிரைவளை முன்கை வருந்தலோவிலள் என்றான். பிருண்டும், ''வீங்குபரி முடுகச் செலவு நாம் அயர்ந்தனமாயின், ... கலங்கின ளுறை வோள் கையறு நிலை ... ... களையுமிடனால் பாக[4]'' என்று தலைமகன் உரைத்தல் காண்க.

முல்லையும் தளவமும் மலர்ந்து யாம் குறித்த பருவ வரவினை யுணர்த்தலின் அவள் ஆற்றாது வருந்துவாளாகலின், அவ்வருத்தம் இன்றாமாறு தேரினை விரைந்து கடாவுக என்பதாம். இதனால்

1. குறள். 496. 2. குறுந். 335. 3. அகம். 254.
4. ஷை. 64.

வினைமுற்றி மீள்வோன் உள்ளத்துக் காதல்மிகுதி நன்கு புலப்படு மாறு காண்க. (422)

423. மாமழை யிடியூஉத் தளிசொரிந் தன்றே
வாணுதல் பசப்பச் செலவயர்ந் தனையே
யாமே நிற்றுறந் தமையலம்
ஆய்மல ருண்கணு நீர்நிறைந் தனவே.

இது, கார்ப்பருவத்தே பிரியக் கருதிய தலைமகற்குத் தோழி தலைமகளின் ஆற்ருமை கூறிச் செலவழுங்கு வித்தது.

ப. உரை: இது கார்ப்பருவத்தே கூறுதலான் முல்லையா யிற்று.

உரை: கரியமேகம் இடித்து மழைபெய்தலைச் செய்யா நின்றது; இந்நிலையில் ஒளிபொருந்திய நுதல் பசலை பாயும் வண்ணம் நீ செலவு மேற்கொள்வாயாயினை; இனி, அழகிய மலர் போலும் மையுண்ட கண்கள் நீர் சுரந்து நிறைந்தனவாகலின், யாம் நின்னைப் பிரிந்து உறைதலை ஆற்றேம் எ. று.

மின்னி யிடித்து மிகுபெயல் பொழிவதாயிற் றென்றற்கு இடியூஉத் தளிசொறிந்தன்று என்ருர். செலவயர்தல், செலவினை மேற்கொள்ளல். "நீயே செய்வினை மருங்கிற் செலவயர்ந்து யாழ நின் கைபுனை வல்வில் ஞாண் உளர்தீயே[1]" என்பது காண்க. தலைமகள்பால் தோழிக்குள்ள உரிமை பற்றி யாம் எனப் பன்மை வந்தது. "ஒன்றித் தோன்றும் தோழி மேன[2]" என்பர் ஆசிரியர். அமையலம் என்றது வாழேம் என்பதுபட நின்றது. உண்கண் நீர் நிறைந்தன என்றது, இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.

வினை செய்தற்குக் கார்ப்பருவம் சிறப்புடைத் தன்மையின், மாமழை இடியூத் தளி சொரிந்தன்று என்றும், நின்னொடு கூடி

1. கலி. 7. 2. தொல். பொ. 39.

இனிது இருத்தற் குரிய இப்பருவத்தே நீ பிரிந்தவழித் தலைமகள் பசலைபாய்ந்து நலம் கெடுதல் ஒருதலையாகலின், வாணுதல் பசப்ப என்றும், நீ பிரியக் கருதினை யென்பது உணர்ந்த மாத்திரையே ஆற்ருளாயினுள், பிரிந்தவழி உயிர்வாழாள் என்பாள், யாமே நிற் றுறந்து அமையலம் என்றும் கூறினுள். பசப்பினுள் ''பாழ்பட்ட முகத்தோடு பைதல் கொண்டமை வாளோ,....... தாமரைப் பொய்கையுள் நீர்நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ[1]'' எனப் பிருண்டும் தோழி செலவழுங்கு வித்தல் காண்க. ''திணை மயக்குறுதலும் கடிநிலையிலவே, நிலனொருங்கு மயங்குதல் இன் றென மொழிப, புலனன் குணர்ந்த புலமையோரே[2]'' என்றதனுல், முல்லைக்கண் பாலை வந்து மயங்கிற்று. (423)

424. புறவணி நாடன் காதன் மடமகள்
ஒண்ணுதல் பசப்ப நீசெலின் தெண்ணீர்ப்
போதவிழ் தாமரை யன்னநின்
காதலம் புதல்வ னழுமினி முலைக்கே.

இதுவுமது.

உரை: காடுகளால் அழகுற்ற நாடனுடைய மடமகள் ஒள்ளிய நுதல் பசப்பெய்தும்வண்ணம் நீ பிரிந்து செல்வாயாயின், தெளிந்த நீர்க்கண் மலர்ந்த தாமரை போலும் நின் அன்புடைய புதல்வன் முலைப்பாலின் பொருட்டு அழுவன் எ. று.

மடமகள் ஒண்ணுதல் பசப்ப நீ செலின், புதல்வன் முலைக்கு அழுவன் என இயையும். முலை, ஆகுபெயர். அம், அல்வழிச் சாரியை. புதல்வரைத் தாமரைப் பூவோடு உவமித்தல், சான்ருேர் மரபு ''திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை, யோம்பினர்த் தழீஇத் தாம் புணர்ந்து முயங்கித், தாதணி தாமரைப் போது பிடித்தாங்குத், தாமு மவரும் ஓராங்கு விளங்க[3]'' என்பது காண்க.

மகளிர் இளமைக்கண் தந்தை தன்னையரையும் பின்னர்க் கொழுநனையும் சார்ந்துறையும் மரபினரேயன்றித் தனித்துறை

1. கலி. 5. 2. தொல். பொ. 12. 3. மதுரை. 461-4.

தகுதிய ரல்லராதலின், கொழுநனுகிய நீ நெஞ்சால் துறந்து பிரிந்து செல்லக் கருதுதலால், நின் மனையோள் என யாம் கூறற்கு இயைபின்று என்பாளாய்ப், புறவணி நாடன் காதல் மடமகள் என்றும், நீ செல்லக் கருதிய துணையே இவள் நுதல் பசப்பதாயிற்று என்றற்கு ஒண்ணுதல் பசப்ப என்றும், பிரிந்தவழி உறுவது கூறிச் செலவழுங்குவிக்கும் குறிப்பால் நீ செலின் ... நின் காதலம் புதல்வன் அழும் இனி முலைக்கே என்றும் கூறினுள். தலைமக்களது தலைமை வாழ்வின் பயன் மகப்பே ருதலின், புதல்வனைக் காதலம் புதல்வன் என்றும், நின் பிரிவால் நின் மனையாள் உயிர்வாழா தொழிதலால் பெரும்பொருட் பேருய் வந்த நின் புதல்வன் வாழ்வும் இடையூறுபடும் என்பாள், முலைக்கு அழும் என்றும் கூறினுள். “மக்களை இல்லோர்க்குப் பயக்குறை யில்லைத் தாம் வாழும்நாளே[1]” எனச் சான்ருேர் உரைப்பது காண்க. தெண்ணீர்ப் போதவிழ் தாமரையை மகற்கு உவமம் கூறினுள். தலைவியைத் தெண்ணீராகவும், மகனைத் தாமரைப் போதாகவும் காட்டி, தாமரைப்போதின் வாழ்வு நீர்மேல் நிற்றல் போல, நின் புதல்வன் வாழ்வு நின் மனையவள் மேல் நிற்கிறதேயன்றி நின் காதல்மேல் இல்லையென்பது குறித்தற்கு.

‘‘பெறற்கரும் பெரும்பொருள்[2]’’ என்ற சூத்திரத்துப் ‘‘பிரியுங்காலை எதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்’’ என்றவிடத்துப் பிறவும் என்பதனுல் இப்பாட்டு ‘‘எதிரது நோக்கிற்று’’ என்பர் நச்சினுர்க்கினியர். (424)

425. புன்புறப் பேடை சேவ லின்புற
மன்ன ரியவரி னிரங்குங் கானம்
வல்லை நெடுந்தேர் கடவின்
அல்ல லருநோ யொழித்தலெமக் கெளிதே.

இது, வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

---

1. புறம். 2. தொல். பொ. 150.

உரை: புல்லிய புறச்சிறகினையுடைய பெடைப்புள் தன் சேவல் மகிழ்வு மிகுமாறு, மன்னர் பாங்கிருக்கும் வாச்சியக்காரர் போல இசைக்கும் காட்டினை, நெடிய தேரினை விரையச் செலுத்திக் கடந்து நீங்கின், நம் பிரிவால் காதலிபால் உளதாகிய பொறுத்தற் கரிய துன்பத்தைத் தீர்த்தல் எமக்கு எளிதாகும் எ. று.

எனவே, விரையச் செலுத்துவாயாக என்றானும். இது குறிப் பெச்சம். புன்புறப் பேடை யென்றது தவிட்டுப் புரு என்னும் ஒரு வகைப்புள். ''புன்புறப் புறவின் கணநிரை[1]'' என்பது காண்க. மாற்றார் படைத் தோற்றத்தினைத் தம் சினமிகுதியால் எடுத்தும் படுத்தும் கோட்டியும் பலபடப் பிறழ நோக்கி யிசைக்கும் இயல்பின ராகலின், மன்னர் இயவர் என்றார். இதனை, ''பேஎ மன்ற பிறழ நோக்கு இயவர்[2]'' என்றதனாலும் அதனுரையாலும் உணர்க. இவ்வுவமையால், இப்புள்ளும் எடுத்தும் படுத்தும் கோட்டியும் பலபடப் பிறழ நோக்கி யிசைத்தல் கொள்க.

மேற்கொண்ட வினைமுற்றி மீண்டுவரும் தலைமகற்குப் புருவின் பெடை தன் சேவலை மகிழ்விப்பான் முரலும் இசை, தன் மனத்தின் கண் தலைமகள் வருந்தும் வருத்தத்தை நினைப்பித்து நோய் செய்த லின், புன்புறப்பேடை சேவல் இன்புற இரங்கும் கானம் என்றும், தேரூர்ந்துவரும் தனக்கு அதன் இசை செவி வழியாக உள்ளத்தை அலைத்தலின், கானத்தை விரைந்து கடத்தற்கண் எழுச்சியையும் காதலியைக் காண்டற்கண் பெருவிதுப்பையும் மிகுவித்தலின், வல்லே நெடுந்தேர் கடவின் என்றும், சென்று இன்புறலாம் என்றலினும், சென்று தலைவியது துன்பத்தை விரைவிற் களையலாம் என்றல் தன் தலைமைக்கு ஒத்திருத்தல் பற்றி, அல்லல் அருநோய் ஒழித்தல் எமக்கு எளிதே என்றும், விரைந்த செலவல்லது மருந்து பிறிதில்லை என்றற்கு அல்லல் அருநோய் என்றும் கூறினான்.

வினைமுற்றி மீள்கின்றானாதலால், தன் பிரிவாற்றாது தலைமகள் வருந்துதலையும், தான் துயருழத்தலையும் உட்கொண்டு கூறுகின்றா னாகலின், அல்லலருநோய் என்றான். (425)

---

1. பதிற். 39. 2. ஷை 78.

426. வென்வேல் வேந்த னருந்தொழி றுறந்தினி
நன்னுதல் யானே செலவொழிந் தனெனே
முரசுபா டதிர வேவி
அரசுபடக் கடக்கு மருஞ்சமத் தானே.

இது, வேந்தற்குத் தானைத் தலைவனாய் ஒழுகும் தலைமகன் பிரிந்து வினைமுடித்து வந்து தலைவியோடு உறைகின்றுழி, ''இன்னும் பிரியுங்கொல்'' என்று கருதிய தலைமகட்குக் கவற்சி தீரச் சொல்லியது.

உரை : நல்ல நெற்றியினையுடையாய், முரசொலி மிக்கெழத் தானையைச் செலுத்திப் பகையரசரை வஞ்சியாது எதிர்சென்று வெல்லும் தடுத்தற்கரிய போர்க்களத்தின்கண் வென்றி தரும் வேலேந்திய அரசன் விலக்குதற்கரிய போர் வினையைத் தவிர்ந்தானாகலின், இப்பொழுதின்கண் யான் வினைமேற் சேறலைத் தவிர்ந்தேன், காண் எ. று.

வென்வேல் வேந்தன் என்றும், அருந்தொழில் என்றும் கூறியது, போர் மேற்கொண்ட வழி வென்றி எய்துவது ஒருதலை யென்றவாறு. அருமை, மாறெதிர்தற் கருமை. தப்பாது வென்றி தரும் வேலையுடையனாகலின், அவனது தொழில் அருந்தொழில் எனப்பட்டது. துறந்து என்றது காரணப்பொருட்டு. போர் மறவர்க்குப் போர் செய்தற்கண் மனவெழுச்சி மிகுதற்கு அறையும் முரசு முழக்கம் முரசுபாடு எனப்பட்டது.

வினைமுடியுமுன் தொழில் துறந்திருத்தல் ஆண்கடன் அன்மை யின், போர்வினை தொடங்குதற்கு முன்பே தவிர்ந்தமை தோன்றத் தொழில் துறந்து என்றும், தவிர்ந்துழி மேற்சேற லின்மையின், யான் மீட்டும் பிரிந்து செல்வேன் எனக் கவலற்க என்பான், யான் செலவொழிந்தனெனே என்றும், துறந்தினிச் செல்வான் கொல்லோ வென மருண்ட குறிப்பினளாகலின் நன்னுதல் என்றும் கூறினான். கேட்ட பகைவர் உள்ளத்திலும் போர்நிகழும் இடத்திலும் அதிர்ச்சி தோன்றுதலின், அதிர ஏவி என்றும், யானை முதலிய விலங்குகளை

யும், தானை மறவரையும் பொருதழித் தலினும் மன்னரொடு பொருதுவேறல் தலையாய மறமாண்பாதலின் அதனையே விதந்து அரசுபடக் கடக்கும் அருஞ்சமம் என்றும் கூறினான். (426)

427. பேரமர் மலர்க்கண் மடந்தை நீயே
காரெதிர் பொழுதென விடலொல் லாயே
போருடை வேந்தன் பாசறை
வாரா னவனெனச் செலவழுங் கினனே.

இது, பிரியுங்கொல் என்று ஐயுற்று உடன்படாமை மேற்கொண்டு ஒழுகுகின்ற தலைமகட்குத் தான் பிரிவு ஒழிந்ததற்குக் காரணம் கூறித் தேற்றியது.

உரை: பெரியவாய் அமர்த்த மலர் போலும் கண்களையுடைய மடந்தையே, இப்பொழுது கார்ப்பருவம் தொடங்கிய அணிமைக் காலமாதலைக் கண்டு நீ பிரிவுக்கு இசையாயாயினை; போரேற்று நின்ற அரசனும் பாசறை இருப்புக்கு அவன்தன் காதலியைப் பிரிந்துவாரானெனக் கருதிச் செலவழுங்கு வானாயினன், காண் எ. று.

தலைமகன் பிரிந்து செல்வன் போலும் என நினைந்து மருண்டு நோக்கிய தலைவி குறிப்பினைப் பேரமர் மலர்க்கண் என்றதனாற் பெறவைத்தார். மடந்தை, ஈண்டுப் பருவப்பெயர். காரெதிர் பொழுது, கார்காலம் தொடங்கிய அணிமைப்போழ்து; "புலன் அணிகொண்ட காரெதிர்காலை[1]" என்று பிறரும் கூறுதல் காண்க. "மன்னுயிர் புரைஇய வலனேர் பிரங்கும் கொண்டல் தண்டளிக் கமஞ்சூல் மாமழை, காரெதிர் பருவம்[2]" என்றதனால் இதன் இயல்புணர்ந்து கொள்க. செலவழுங்கல், ஈண்டுச் செல்லுதலைத் தவிர்த்தல். வேந்தனும் என்றவிடத்து எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவன் என்றது தன்னை.

மேற்கொண்ட வினைமேல் கருத்தைச் செலுத்திய கொழுநற்குக் கார்ப்பருவ வரவுகாட்டிப் பிரிவச்சத்தால் மருண்டு நோக்கினமை

1. அகம். 304. 2. பதிற். 24.

தோன்ற, காரெதிர் பொழுதென விடல் ஒல்லாய் என்றும் தான், தன் காதலி மாட்டுக் கொண்டுள்ள அன்பினைத் துணைவேந்தர் நன்கறிவாரென்பான், வாரான் அவனெனச் செலவழுங்கினனே என்றும், செலவிடை அழுங்குதல் வன்புறை குறித்தமையின், வற்புறுத்துப் பின் பிரிவன் போலும் என ஐயுருமைப் பொருட்டுத் தன் நண்பனுன வேந்தன் வாரான் அவன் எனக் கருதினனென்றும் கூறினன். அவன் என்றது பகை அரசனை என்பாருமுளர். (427)

428. தேர்செல வழுங்கத் திருவிற் கோலி
ஆர்கலி யெழிலி சோர்தொடங் கின்றே
வேந்துவிடு விழுத்தொழி லொழிய
யான்றொடங் கினனு னிற்புறந் தரலே.

இது, பிரியுங்கொல் என்று ஐயுற்ற தலைமகள் ஐயந்தீரத் தலைமகன் சொல்லியது.

உரை : நிறைந்த முழக்கத்தையுடைய மழை முகில் இந்திர வில்லையிட்டுத் தேர் செல்லாவகை மிக்க பெயலைத் தொடங்கிற்றாகலின், வேந்தன் தான் ஏவிய விழுமிய வினையைத் தவிர்த்தலால் நின்னைப் புறந்தருதலாகிய இனிய தொழிலை யான் தொடங்கினேன் எ. று.

ஒழிக்கப்பட்ட தொழிலது விழுப்பத்துக்கேற்பத் தொடங்கப் பட்டதன் இனிமை வருவிக்கப்பட்டது. திருவில், வானவில்; ''மலைமிசைக் குலைஇய வுருகெழு திருவிற், பணைமுழங் கெழிலி [1]'' என்றும், ''திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ [2]'' என்றும் வருவனவற்றாலுணர்க. கோலுதல், வளைத்தல்; ஒண் கதிர் தெருமைச் சிறகரிற் கோலி [3]'' என்றார்போல. சோர், முதனிலைத் தொழிற்பெயர். ஆர்கலி யெழிலி யென்றற்குக் கடல்நீரை முகந்தெழுந்த எழிலி யெனினுமாம். ''வேந்துவிடு தொழிலொடு செலினும் [4]'' என்றார் போலாது விழுத்தொழில் என்றது, தூதினை.

1. அகம். 84. 2. கார். 1. 3. அகம் 208.
4. குறுந். 242.

மறம் மிக்குப் பொருதற்கமைந்த அரசரைச் சந்துசெய்வித்தலின் விழுமியது பிறிதின்மையின், விழுத்தொழில் எனப்பட்டது. "வேந்துவிடு விழுத்தொழிலெய்தி [1]" என்புழியும் இதனையே கூறிக் கொள்க. ஒழிய என்றது காரணப்பொருட்டாய செயவெனெச்சம்.

மிகுமழை பெய்தலால் செலவிற்குரிய தேர்கள் இனிது செல்லாவாறு நெறிகள் சீர்கெட்டிருக்கின்றன என்றற்கு, தேர் செலவழுங்க என்றும், நிறைந்த ஆரவாரத்துடன் மழை இடையறுது பெய்வது தோன்றச் சோர் தொடங்கின்று என்றும். இக்காரணத் தால், வேந்தன் தானும் விடுப்பது கருதிய விழுத்தொழிலைக் கை விட்டான் என்றற்கு வேந்துவிடு விழுத்தொழில் ஒழிய என்றும், புறத்தே வேந்தர்க்கும் அகத்தே நினக்கும் விழுத்தொழில் புரிதற் குரிய யான், வேந்துவிடு விழுத்தொழிலை விட்டவழி நின்னைப் புறந் தருதலாகிய இனிய தொழிலை யான் மேற்கொண்டேன் என்பான், யான் தொடங்கினனல் நிற் புறந்தரலே என்று கூறினன்.

இது ''கரணத்தி னமைந்து முடிந்த காலை [2]'' என்ற சூத்திரத்து, ''வேற்றுநாட் டகல்வயின் விழுமத்தானும்'' என்ற விடத்து விழும வகையுள் ''இஃது ஐயந்தீர்த்தது'' என்பர் நச்சினர்க்கினியர். (428)

429. பல்லிருங் கூந்தற் பசப்பு நீவிடின்
செல்வேந் தில்ல யாமே செற்றார்
வெல்கொடி யரண முருக்கிய
கல்லா யானை வேந்துபகை வெலற்கே.

இது, குறிப்பினுற் பிரிவுணர்ந்து வேறுபட்ட தலைமகள் உடம்படுவாளாக வேந்தற்கு உற்றுழிப் பிரியும் தலைமகன் சொல்லியது

உரை: பலவாகிய கரிய கூந்தலையுடையாய், நீ பசத்தலைக் கைவிடுவாயாயின், பகைவர் வெல்லுதற்கெடுத்த கொடிகளை யுடைய அரணங்களை அழித்த, போர்ப்பயிற்சியில்லாத யானைகளை

1. ஐங். 466. 2. தொல். பொ. 146.

யுடைய வேந்தனது பகையினை வெல்லுதற்பொருட்டு, யாம் வினை வயிற் செல்வேம் எ. று.

கல்வி, போர்ப்பயிற்சி; அஃதாவது போரில் பகைவரைக் கொலை பயிறல்; "சுரும்பார் கண்ணிப் பெரும்புகல் மறவர், கடுங்களி றோட்டலின் காணுந ரிட்ட, நெடுங்கரைக் காழகம் நிலம்பர லுறுப்ப[1]" என்பதன் உரையாலுணர்க. "அமரகத் தாற்றறுக்கும் கல்லா மா[2]" என்றார் பிறரும். நான்கனுருபு. இன்றியமையாமைப் பொருட்டு. விடின் என்பது விடுதல் வேண்டுமென்பதுபட நின்றது. விடாமையின் யாம் செலவழுங்கு கின்றேமென்பது எஞ்சி நிற்றலின், தில், ஒழியிசை.

தலைமகள் உடன்படாது மேனிவேறுபடத் தொடங்கினமையின், பசப்பு நீ விடின் என்றும், "நாளும் நாளும் ஆள்வினை யழுங்க, இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லை யால் புகழ்[3]" என்பது குறித்துக் கவன்று உரைத்தலின், செல்வேம் தில்ல யாமே என்றும், தான் துணைபுரிதற்குச் செல்லும் வேந்தனது வலியை, செற்றார் வெல்கொடி அரணம் முருக்கிய வேந்து என்றும், அத்துணை வலி யுடையனாயினும், யானைப்படை போதிய கல்வியில்லாத தாகலின், தனது துணை இன்றியமையா தென்றற்குக் கல்லா யானை வேந்து என்றும் கூறினான். (429)

430. நெடும்பொறை மிசைய குறுங்காற் கொன்றை
அடர்பொன் னென்னச் சுடரிதழ் பகரும்
கான்கெழு நாடன் மகளே
அழுத லான்றிசின் அழுங்குவல் செலவே.

இது, பிரியுங்கொல் என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தலை மகன் பருவ வரவு கூறி, 'இது காரணத்தாலும் பிரியேன்', எனச் சொல்லியது.

ப. உரை : கொன்றை தான் பொன்னென மலர்ந்த பூக்களைச் சொரியும் என்றது, பருவங்காட்டித் தான் செல்லாமை வற்புறீ இயது.

1. மதுரை. 596–8. 2. குறள். 814. 3. சிற்றட்ட. பாலை.

உரை: நெடிய மலைமேல் நின்ற குறுகிய அடியினையுடைய கொன்றைமரம் பொற்றகடுபோல ஒளிவிடும் இதழ்கள் பொருந்திய மலரைப் பரப்பும் கானம் பொருந்திய நாடன் மகளே, நீ அழுதலினின்றும் அமைவாயாக; யானும் செலவினைத் தவிர்வேன், காண் எ. று.

பொறை, மலை. பொன்னடர் என்பது அடர்பொன் என வந்தது; "அடர்பொன் சிரகத்தால் வாக்கி[1]" என்புழிப்போல. பகர்தல், ஈண்டு உதிர்ந்து பரத்தல். அழுதலான்றிசின், அழுதலினின்றும் அமைவாயாக என்பது. சின், முன்னிலையசை. "இனைதல் ஆனுளாக[2]" என்றாற்போல. அழுதல் ஆனுமை; தொடர்ந்து அழுதல் மேற்றும். "முயங்க லான்றிசின் யானே[3]" என்பது முயங்கற்கண் அமைந்தேன் என்னும் பொருளதாதல் போல. கொன்றை, தொடுத்த மாலைபோற் பூப்பதாகலின், உதிர்வன இதழ்களேயாதல் பற்றிச் சுடர் இதழ் பகரும் என்றார். "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே[4]" என்பதனால் செல்லாமைப் பொருளு முண்டாகலின், தவிர்வேன் என்று பொருள் உரைக்கப்பட்டது.

கொன்றை சுடரிதழ் பகரும் என்றதனாற் கார்ப்பருவ வரவு கூறி, அப்பருவத்தே பிரிதல் பெரியதோ ராற்றுமை பயக்குமாகலின், அழுங்குவல் செலவே யென்றும், இனி அது நினைந்து அழாதே, கொள் என்பான், அழுதலான்றிசின் என்றும் கூறினான். கொன்றை பொன்போல இதழ்களைச் சொரியும் கான்கெழு நாடன் மகளே என்றது, அப்பெற்றியளாகிய நீ அழுதலை மேற்கொண்டு எனக்கு அவலம் நல்குதல்கூடாது என்பதாம். (430)

———

1. கலி. 51. 2. புறம். 144. 3. ஷை. 151.
4. தொல். பொ. 185.

44

புறவணிப் பத்து

காடு பலவகை மலர்கள் பூத்து அழகுதிகழ நின்றமை பொருளாகத் தொக்க பாடற் பகுதியாகலின், இப்பெயர்த் தாயிற்று. முல்லைக் காடாகிய புறவு கார்ப்பருவத்து மழை வரவால் தளிர்த்துப் பூத்து அழகிய காட்சி வழங்குதலின், அக் காட்சியை வியந்து புறவணி என்றும், அவ்வணியைப் பொருளாகக் கொண்ட பாட்டுக்கள் பத்தும் சேர்ந்த இப்பகுதியைப் புறவணிப் பத்து என்றும் பெயர் குறித்துள்ளனர்.

431. நன்றே காதலர் சென்ற வாறே
அணிநிற விரும்பொறை மீமிசை
மணிநிற வுருவின தோகையு முடைத்தே.

இது, ‘‘பிரிவுடன்பட்டு ஆற்ருயாகின்றது என்னை?'' என்று வினவியவழி, அவர் போன சுரம் போகற்கரிது என்று ஆற்றே ணுகின்றேன்'' என்ற தலைமகட்கு, ‘‘வேனிற் காலம் கழிந்தது, கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தா ராகலான், அச்சுரம் நன்று,'' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

உரை: அழகிய நிறம்பொருந்திய பெரிய மலையின் மேலிடம் நீலமணிபோலும் நிறத்தினையும், அழகிய தோகையினையுமுடைய

மயில்களை யுடைத்தாகலின், காதலர் சென்ற நெறி போகற்கு அரிதன்று, நலமுடையது என்று தெளிக எ. று.

போகற்கு அரிதன்று என்பது முதலாயின குறிப்பெச்சம். நன்றே என்றவிடத்து ஏகாரம் தேற்றம். ஏனையிடத்தும் இதுவே உரைத்துக்கொள்க. மீமிசை என்றது, மலையின் மேலிடம் உணர்த்திற்று. மணி, நீலமணி. ''மணிநிற மஞ்ஞை[1]'' எனப் பிறரும் கூறுவர். தோகை, மயில். தோகையும் என்ற எச்ச உம்மையால், தண்ணிய நிழலும் இனிய நீரும் உடைமை கொள்க.

தலைமகள் சென்ற சுரநெறி வெம்மை மிக வுடைமையின், போகற்கு அரிதென்று எண்ணி ஆற்றாளாகிய தலைவி தோழியை நோக்கி, காதலர் சென்ற நெறி நன்றுகொல் என வினவினமை யின், அவள் வினவையே கொண்டெடுத்து நன்றே காதலர் சென்ற ஆறு எனத் தோழி கூறினள். வழியிடைத் தோன்றும் மலைகள், பசிய கானம் போர்த்துக் கார் வரலால் அழகிய காட்சி வழங்குகின்றன என்பாள், அணிநிற இரும்பொறை என்றும், மலையின் மேலிடம் மழைமுகில் தழுவிநிற்றல் கண்டு மயில்கள் தோகையை விரித்து மகிழ்ந்தாடும் காட்சி வழிநடை வருத்தத்தைக் காதலர்க்குத் தோற்றுவியாது இன்புறுத்தும் என்றற்கு மீமிசை மணிநிற உருவின தோகையும் உடைத்து என்றும், எனவே, அவர் சென்ற ஆறு போகற்கு அரிதென்று கவலற்க, நன்றே எனத்தெளிக என்றும் உரைத்தாள். (431)

432. நன்றே காதலர் சென்ற வாறே
சுடுபொன் னன்ன கொன்றை சூடிக்
கடிபுகு வனர்போன் மள்ளரு முடைத்தே.

இதுவுமது.

உரை : நம் தலைவர் சென்ற காட்டுநெறி ஒளிவிடும் பொன் போலும் கொன்றை மலரை யணிந்து கடிமனைபுகும் காவலர்போல

1. அகம். 272.

மள்ளர் பலர் நிறையப் பெற்ற தாகலின் போகற்கரிதன்று, எளிதென்று தெளிக எ. று.

கொன்றையின் புதுப்பூ, பொன்னின் நிறமும் ஒளியும் ஒருங்குடைமையின், சுடுபொன்னன்ன கொன்றை என்றார்; "சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும்[1]" என்பதனால், சுடுபொன் ஒளியும்நிறமும் சிறக்கவுடைமை அறிக. கடி, மணமனை; காவலகமுமாம். மள்ளர், இளம்வீரர். இவர் விழாக்காணும் விருப்பு மிகவுடையராதலின், இவர்கட்குக் கடிபுகுவனர் உவமமாயினர். "வேறு நாட்டு விழவுப்படர் மள்ளர்[2]" என்பது காண்க.

அணியும் தூசும் உயர்ந்தன அணிந்து செல்லுபவாகலின், கொன்றை சூடிய மள்ளரைக் கடிபுகுவனர் போல் என்றாள். மள்ளர் சுரத்திடையே வழங்கும் இயல்பினராதலின், காதலர் சென்ற ஆறு மள்ளரும் உடைத்து என்றாள். "மணவாய்த் தென்றல், சுரஞ்செல் மள்ளர் சுரியல் தூற்றும்[3]" என்றார் பிறரும். மள்ளரும் என்ற உம்மையால், மள்ளர் புறவின்கண் மகளிரொடு உறைதலின், வழிச்செலவு காதலர்க்கு இன்பக்காட்சியே நல்கும் என்றாளாதலும் கொள்ளப்படும். "புறவே, ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன[4]" என்பது காண்க. (432)

433. நன்றே காதலர் சென்ற வாறே
நீர்ப்பட வெழிலி வீசும்
கார்ப்பெயற் கெதிரிய கானமு முடைத்தே.

இதுவுமது.

உரை : நம் காதலர் சென்ற காட்டுநெறி, எங்கும் நீருண்டாக மேகங்கள் வீசும் கார்காலத்து மழையினையேற்று வளமுற்ற கானத்தை யுடைத்தாகலின் போகற் கரிதென்று கவலற்க, இனிதாம் எ. று.

நீர்ப்படுதல், நீர் உண்டாதல். எழிலி, மழைமுகில். கார் வரவை எதிர் நோக்கியிருந்து அது வந்ததும் நீர் நலம் சிறக்கப்

1. குறள். 267. 2. அகம் 180. 3. ஷை 21. 4. பதிற். 13.

பெற்ற காரணத்தைக் கார்ப்பெயற்கு எதிரிய கானம் என்ருர்.

கார்ப்பெயற் கெதிரிய கானமுடைமையின், நீரும் நிழலும் மிக்குச் செல்வார்க்கு வருத்தம் தோற்றுவியாது என்பாள், நன்றே காதலர் சென்ற ஆறே என்ருள். (433)

434. நன்றே காதலர் சென்ற வாறே
மறியுடை மான்பிணை யுகளத்
தண்பெயல் பெயல் பொழிந்த லின்பமு
முடைத்தே.

இதுவுமது.

உரை ; நம் காதலர் சென்றவழி, கன்ருேடு கூடிய மான்பிணை உலாவக் குளிர்ந்த மழை பெய்தமையான் உளதாகிய இன்பத்தினை உடையதாகறின், போகற்கரிதன்று, நன்றே எ. று.

மறி, மான்கன்று. பொழிந்த இன்பம், வழிநடந்த வருத்தம் என்ருற்போலக் காரியப்பெயர் கொண்டது.

மான்பிணை உகள வென்றதனுல் ஆற்றிடை ஏதமின்மைக் கூறியவாறு. (434)

435. நன்றே காதலர் சென்ற வாறே
நிலனணி நெய்தன் மலரப்
பொலனணி கொன்றையும் பிடவமு
முடைத்தே.

இதுவுமது.

உரை : நம் காதலர் சென்றவழி, நிலத்துக்கு அணி செய்யும் நெய்தல்கள் மலரப் பொன்போல் மலரும் கொன்றையும் பிடவமு முடைத்தாகலின், போகற்கரிதன்று இனிதென்று தெளிக எ. று.

நிலத்துக்கு அணியாய நெல்லும் கரும்பும் நின்ற வயலிடத்தே வளர்ந்து இனிய காட்சி வழங்கும் ஏற்றமுடைமைப்பற்றி நெய்தல் நிலனணி நெய்தல் எனப்பட்டது. பொலனணி என்ற விடத்து

அணி, உவமப்பொருட்டு. பொலன், ''பொன்னென்னும் கிளவி யின் செய்யுண்முடிபு[1]''.

நெய்தலால் நிலமும், கொன்றை பிடவங்களால் கானமும் இனிய காட்சி நல்குதலின், நன்றே காதலர் சென்றவாறே என்றாள். (435)

436. நன்றே காதலர் சென்ற வாறே
நன்பொ னன்ன சுடரிணர்க்
கொன்றையொடு மலர்ந்த குருந்துமா
ருடைத்தே

இதுவுமது.

உரை: நம் காதலர் சென்ற நெறி, நல்ல பொன் போல் ஒளிவிடும் பூங்கொத்துக்களையுடைய கொன்றை மரங்களையும் குருந்த மரங்களையு முடைத்தாகலின் போகற்கரிதென்று கவலாது நன்றென்று தெளிவாயாக எ. று.

நன்பொன் என்றவிடத்து நன்மை, ஓட்டறுதல். போகற்கு முதலாயின அவாய் நிலையான் வந்தன. என்று தெளிக என்பன குறிப்பெச்சம்.

கொன்றை போலக் குருந்தும் கார்காலத்து மலர்வதாகலின், குருந்துமா ருடைத்தே என்றாள்; ''காசினன்ன போதீன் கொன்றை, குருந்தோ டலம்வரும் பெருந்தண்காலை[2]'' என்று பிறரும் கூறுதல் காண்க. (436)

437, நன்றே காதலர் சென்றவாறே
ஆலித் தண்மழை தலைஇய
வாலிய மலர்ந்த முல்லையு முடைத்தே.

இதுவுமது.

உரை: ஆலிகளையுடைய தண்ணிய மழை பெய்தலால் வெள்ளியவாய் மலர்ந்த முல்லை மலர்களையுடைத்தாகலின், காதலர் சென்றநெறி போகற்கரிதன்மையின் நன்றென்று ஆற்றியிருப் பாயாக எ. று.

1. தொல். எழுத்து. 356. 2. குறுந். 148.

ஆலி, ஆலங்கட்டி. ''புதுநீர் ஆலி பளிங்கு சொரிவது போல் பாறை வரிப்ப[1]'' என்றார் பிறரும். ஆவிவடிவாய மேகம் விண்ணிடத்து மிகக்குளிர்ப் பெய்தியவழி, நீருருவாய்ப் பின்னர் உறைந்து சிறுகற்போல மாறியவிடத்து ஆலங்கட்டியர் மென்ப. வால், வெண்மை.

இல்லிலிருந்து நல்லறம் புரியும் கற்புடை மகளிருக்குரிய தூய முல்லையும் அவர் சென்ற நெறியின்கண் மலர்ந்து தோன்றி அவர்க்கு இன்பம் செய்தலின், நன்றே காதலர் சென்ற ஆறே என்றாள். (437)

438. நன்றே காதலர் சென்ற வாறே
பைம்புதற் பல்பூ மலர
இன்புறத் தகுந பண்புமா ருடைத்தே.

இதுவுமது.

உரை : பசிய புதர்களின்கட் பலவாய பூக்கள் மலர்வதால் யாவரும் இன்புறுதற்குத் தக்கவாகிய பண்புகளையுடைமையான், நம் காதலர் சென்ற நெறி நன்றென்றுணர்க எ. று.

பண்புகள், மாவும், புள்ளும், மலரும் மிக்குச் செல்வார்க்கினிய செயல்களையுடையவாதல். பைம்புதல், பசுமையான புதர்கள், பொருளின் பண்பு இடத்தின் மேனின்றது. கண்டார் உள்ளத்தில் இன்பம் மிகுதற்கான அழகிய காட்சிகளைத் தனக்கே உரியவாகக் கொண்ட கானம் என்றும், எனவே அவ்வழியே செல்வார்க்குச் செலவருமையும் வருத்தமும் தோன்றா என்றும் கூறினாளாயிற்று.
(438)

439. நன்றே காதலர் சென்ற வாறே
குருந்தங் கண்ணிக் கோவலர்
பெருந்தண் ணிலைய பாக்கமு முடைத்தே.

இதுவுமது.

---

1. அகம். 108.

உரை : நம் காதலர் சென்ற நெறி, குருந்த மலரால் தொடுத்த கண்ணி யணிந்த கோவலர் வதியும் பெருமையுற்ற தண்ணிய நிலையினையுடைய ஊர்களையுடைமையான், சேறற்கு நன்றென் றுணர்க எ. று.

அம், தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண் வந்த சாரியை. கோவலர் குருந்தின்பூவால் தொடுக்கப்பட்ட கண்ணி சூடும் இயல் பினராதலின், குருந்தங் கண்ணிக் கோவலர் என்றார்; ''அவ் வழி வந்த, குருந்தம் பூங்கண்ணிப் பொதுவன்[1]'' என்று பிறரும் கூறுவது காண்க. பாக்கம் என்பது நெய்தனிலத்துக் குரிய தாயி னும் சிறுபாண்மை முல்லைநிலத்து ஊர்கட்கும் உரியதாம். ''சிறு குடிப் பாக்கத்தெம் பெருநக ரானே[2]'' என்பதனாலறிக.

காதலர் சென்ற நெறி முற்றவும் காடும் மலையுமேயாகாது இடையிடையே மக்கள் இருந்து இனிது வாழும் ஊர்களும் உடையதாகலின் நன்றே என்றாள். (439)

440. நன்றே காதலர் சென்ற வாறே
தண்பெயலளித்த பொழுதின்
ஒண்சுடர்த் தோன்றியுந் தளவமு முடைத்தே.

இதுவுமது.

உரை : நம் காதலர் சென்றவழி, குளிர்ந்த மழைபெய்த கார்ப்பருவத்தே மலரும் ஒள்ளிய சுடர் போலும் பூக்களையுடைய தோன்றியும் தளவமு முடைமையான், போகற்கரிதென்று, எளி தென்றறிக எ. று.

தண்பெயல், கார்காலத்து மழை. பொழுது, கார்காலம். தோன்றியும் தளவும் கார்காலத்து மலர்வன. பொழுதும் தோன்றியும் தளவமும் உடைத்து என இயையும். தோன்றிப்பூ ஒள்ளிய சுடர்போறலின். சுடர்த்தோன்றி எனப்பட்டது. தளவம், செம்முல்லை. (440)

---

1. கலி. 111. 2. நற். 169.

45

பாசறைப்பத்து

தலைமக்களது கற்பு வாழ்வில், தலைமகன் பொருள் வேண்டியும், போர்வினை குறித்தும் மனைவியின் நீங்கிப் பிரிந்துறையும் கடமையுடையன். காதலின்பம் ஒன்றே விழைந்து மனைக்கண் மடிந்திருப்போர்க்கு இம்மையிற் புகழும் மறுமைக்கண் இன்பமும் இல்லையாம் என்பது தமிழ் நூல்களின் பொதுமுடிபு; அதனால், தமிழ்த்தலைமகனுக்குப் பொருள்வயிற் பிரிவும் வினைவயிற் பிரிவும் கடமையாயின. பொருட் பிரிவினும் போர்வினைப் பிரிவே பொன்றுப் புகழ் பயப்பதென்பதும், ஒருவன் வாழ்வாங்கு வாழ்ந்து மூத்து முடிவெய்துங்கால் நோய்வாய்ப்பட்டு இறத்தலினும், போரின்கண் பகைவர் படையால் புண்ணுற்று மாய்வது பெரிய தவப்பயன் என்பதும் தமிழகத்து மூத்தோர் கண்ட முதுநெறிகளாகும். ''நோற்றோர் மன்ற தாமே கூற்றம், கோளுற விளியார் பிறர்கொள விளிந்தோர்[1]'' என்று சான்றோர் குறிப்பது காண்க. தமிழர் வாழ்வில் இக்கொள்கை நிலவியிருந்த நாள்காறும், பிற பகுதிகள் வேற்று நாட்டவர் கொடுமைக்கு அடிமையுற்று மடிந்த போதும், தமிழகம் வேற்றவரால் வென்று கொள்ளப்பட்டதென்ற வரலாறே இல்லாது விளங்கிற்று. இடைக்காலத்தே புகுந்த நச்சுக்கருத்துக்கள் தமிழர் ஒருமை நிலையைச் சாதி சமயங்களின்

---

1. அகம். 61.

பெயரால் சிதறிப் பிரிந்து கெடச் செய்தன; தமிழகம், தன் தமிழையே மறந்து துறந்து பிறர்க்கும் பிற மொழிவழக்குகட்கும் முதலிடம் தந்து தமிழ் உணர்விழந்து சழக்கர் தலைமையில் வழுக்கி வீழ்வதாயிற்று ; வறுமையே தமிழ்க்குப் பெருமையாய் போயிற்று.

பண்டைத் தமிழர் வாழ்வில், போர் நிகழ்தற்குரிய காலம் கார்காலம் ஒழிந்த பிற எல்லாக்காலங்களுமாகும். அவற்றுள்ளும் மிக்க குளிரும் மிக்க வெம்மையும் பொருந்திய கூதிர் முதுவேனில் என்ற இரண்டினும், போர் நிகழ்தற்கு இடமுண்டெனினும், முன் பனி, பின்பனி, இளவேனில் என்ற இவையே சிறந்தனவாகக் கருதப்பட்டன. அதனுல், போர் மேற்கொண்ட வேந்தர், கூதிர் வேனில் என்ற இருபோதினும், போர்க்களத்தில் பாசறை அமைத்துப் போர்க்குரிய செவ்வி நோக்கி அமைந்திருப்பதை முறையாகக் கொண்டனர். தலைமகன் பாசறைக்கண் தலைவியது பிரிவை ஆற்றியிருத்தலும், தலைமகள் தலைவன் பிரிவை ஆற்றி மனைக்கண் இருத்தலும் உரிய பொருளாய் முல்லைத்திணைக் குரிய வாயின. பாசறையும், கூதிர்ப் பாசறை வேனிற்பாசறை என இருவகைப்பட்டு வழங்கிற்று. ''கூதிர் வேனில் என்றிரு பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்[1]'' என்று ஆசிரியர் குறிப்பது காண்க. ஈண்டுக் கார்ப்பருவ வரவு கண்டு பாசறைக்கண் இருந்து தலைமகன் நிகழ்த்தும் கூற்றுக்களே பெரிதும் தொகுக்கப்பட் டிருத்தலின், இது வேனிற்பாசறையென உணர்தல் வேண்டும். பாசறை என்னும் சொல், பசுங்காடு படர்ந்த பெரிய பாறைகள் பொருந்திய இடத்தைக் குறிப்பது; ''வேங்கை தந்த வெற்பனி நன்னுள், பொன்னின் அன்ன பூஞ் சினை துழைஇக், கமழ்தா தாடிய கவின்பெறு தோகை, பாசறை மீமிசைக் கணங்கொள்பு ஞாயிற்று, உறுகதிர் இளவெயில் உண்ணும் நாடன்[2]'' எனச் சான்றேர் கூறுவதனுல் அறியலாம். இதனுல், முதன்முதலாகப் போர்வினைக்கண் தானையொடு காலம் நோக்கி யிருக்கும் இருக்கையை மேற்கொண்ட தமிழ் முன்னேன் மேலே காட்டிய பாசறைக்கண் இருந்தது பற்றிப் போர்வினைத்

1. தொல். பொ. 76. 2. நற். 396.

தானை இருக்கும் இருக்கைகள், பிற்காலத்தே பாசறை என வழங்கத் தலைப்பட்டன என்று கோடல் பொருத்தமாகிறது.

போர் மேற்கொண்ட வேந்தர் படையொடு சென்று போரைச் செய்தற்குரிய செவ்வி நோக்கித் தானை இனிது இருத்தற் கேற்ற நிலப்பரப்பிலும் பாசறைகள் பின்னர் அமைக்கப்பட்டன. போர்க் களத்துக்கென நூலோர் இடம் வரையறை செய்யாமையால் பரந்த வயலிடத்தும் போரும் போர்ப்பாசறையும் அமைந்தன. ''காய்த்த கரந்தை மாக்கொடி விளைவயல், வந்திறை கொண் டன்றுதானை[1]'' என்பது காண்க.

பாசறை என்பது பொதுவாக ஓர் இடம்போலக் குறிக்கப் படினும், அது, பாசறை, பாடி, கட்டூர் என முக்கூறுபட்டுத் தோன்றுகிறது. அரசர்களும் அவருடைய அரசியற் சுற்றமும் இருக்கும் இடம் பாசறை; பல்வகைப் படைத்தலைவரும், படைவய வரும், இயவரும் ஆகிய பலரும் இருக்கும் பகுதி பாடி; இப் பாடியைப் பாடிக்கொட்டில், பாடியிருக்கை என்றும் பண்டையோர் வழங்குகின்றனர். ''பன்னூருயிரம் பாடிக்கொட்டில்[2]'' எனவும், ''எண்பதின் இரட்டி எறிப்படைப் பாடி[3]'' எனவும் வழங்குதல் காண்க. கட்டூர் என்பது, போர் நிகழ்ச்சியின் பெருமை காலம் முதலிய நிலைமை நோக்கி வேண்டிடத்துப் பெருக்கி அமைக்கும் பாடியிருக்கை; ''விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇ[4]'' என்பதனுல் இஃது அறியப்படும். இருக்கை, அமைப்பு முதலிய கூறுபாட்டால் இவை வேறுவேறு காணப்படினும் பொதுவகையிற் பாசறை என்றவிடத்து இவையாவும் அடங்கிவிடும். பாசறை நடுவாக, பாடியும் கட்டூரும் இடையிடை அமையப் படைத்திறள் இனிது இயங்குமாறு தெருக்களும், பாசறைக்கு அரணுக இடு முள்ளும் தோற்கிடுகும் வில்லும் வேலும் வேலி யாக நிறுவப் பட்டிருக்கும். பாடியிருக்கையும் கட்டூரும், போர் முடிந்தபின் மறையும் இயல்பின வாயினும் சில இடங்களில் அவை நிலை பெற்று ஊர்களாக மாறிவிட்டன. வானகப்பாடி, பெருங்கட்டூர்

1. பதிற். 40. 2. பெருங். 1, 46, 199. 3. ஷை. 3,4,9.
4. அகம். 212.

என்ற ஊர்கள் இன்றும் நின்று பழைய வரலாற்றை வற்புறுத்து கின்றன.

இரவினும் பகலினும் எப்போதும், காலை மாலை முதலிய சிறு போதுகளை உணர்த்தும் முரசவகைகள் பாசறைக்கண் முழங்கும்; காடு கெடுத்துத் தானைக்கு வழி அமைக்கும் கூளிப்படையினர் ஒருபால் அது செய்தொழுக, இயவர் இயம் இயம்ப, வயவர், வாளும் வேலும் வாய்வடித்து நெய்வழங்குவர்; விற்படையினர் அம்புகளைத் தெரிந்து செம்மை செய்வர்; வீரர் இருக்கை, ''வெறிக் குரவை பெயர்புபொங்க, வாய்காவாது பரந்துபட்ட வியன் பாசறை[1]'' கல்லென்ற ஓசை மிக்கு விளங்கும். வேந்தன் இரவில் கண்படை பெருது செய்வினை ஆராய்ந்த சிந்தையுடன் பாடிமுற்றும் பார்வை இடுவன்.

''எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்'' தலைவர்; ஆயினும், புண்ணுற்று வீழ்ந்த வீரர்க்கு மருந்து நல்கிப் பணி செய்யும் புறத்துறை மகளிர் பாசறை மருத்துவ விடுதியில் இருப்பர். புறத்தோராகிய மகளிர் ஆங்கண் இருந்து மருத்துவப் பணிபுரிவது ''புரைவது என்ப'' எனத் தொல்காப்பியனார் தமக்கு முன்னோர் காலத்திருந்தே வழங்கி வருவ தென்பது தோன்றக் கூறுகின்றார். அப்புறத்தோராகிய மகளிரைப் பாடிமகளிர் எனக் கொங்குவேளிர் குறிப்பிடுகின்றார். அம் மகளிர் அன்பும் அறமும் பொங்கிய உள்ளத்தராய், ''தீங்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ, வாங்குமருப்பு யாழொடு பல்லியங் கறங்க, கைபயப் பெயர்த்து மை இழுது இழுகி, ஐயவி சிதறி ஆம்பல் ஊதி, இசை மணி எறிந்து, காஞ்சிபாடி, நெடுநகர் வரைப்பில் கடிநறை புகைஇ. காக்கம் வம்மோ காதலம் தோழி[2]'' என்று மருத்துவம் செய்வதைச் சான்றோர் பாராட்டிப் பாடியுள்ளார்கள்.

வேந்தர் உறையும் பாசறையில் சட்டை யிட்ட கஞ்சுகிகள், இரவுமுழுதும் உறக்கமின்றிக் காவல் புரிய, தலைவருடன் கூடி வினைவகை ஆராயும் இடத்தில் தமிழறியாத ஆரியரும் யவனரும்

---

1. புறம். 22. 2. ஷை. 281.

காவல்புரிவார்கள் ; சிலர் பருஉச் சுடர் எரியும் பாண்டில் விளக்கு கட்கு நெய் பெய்து இரவு முற்றும் எரியவிட் டிருப்பர்.

இத்தகைய பாசறைக்கண் இருக்கும் தலைமகன் உள்ளத்தில் மேற்கொண்ட வினை முடியுங்காறும், உழுவல் அன்பின் உருவாக விளங்கும் அவன் காதலியின் காதல் நினைவு கனவிடத்தும் தோன்றுவதில்லை. அவன் எண்ணமெல்லாம் வெற்றிக்குரிய வினைவகைகளிலேயே ஈடுபட்டு அழுந்திக்கிடக்கும்; வினை வெற்றி பெற முடிந்ததும் தலைமகன் நினைவி தலைமகளது காதலின்பத்தில் கனைந்து ஓடா நிற்கும். இது கண்ட சான்றோர், "மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடை, மாதர்பால் பெற்ற வலியுளவோ— கூதிரின், வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலான் ஐங்கணை தோற்ற அழிவு[1]" என்று பாராட்டினர். இதனுல் இப் பாசறை இருப்பைப் பாசறைமுல்லை என்றும் பகர்ந்தனர். ஆசிரியர் தொல்காப்பியனுர், "கிழவி நிலையே வினையிடத்து உரையார், வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்[2]" என்று இலக்கணம் கண்டார். "ஒன்ருத் தமரினும்[3]" என்ற சூத்திரத்துப் "பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப், பாகனெடு விரும்பிய வினைத்திற வகையினும்" என்ற பாசறைப்புலம்பல் இப் பாசறைப் பத்தின்கண் குறிக்கப்படுகிறது. வினைமுடிபு குறித்துப் பாசறைக் கண் தனித்திருந்தோன், அது முடியவும், தான் குறித்த கார்ப் பருவம் தோன்றவும் கண்டு தன் காதலிய்ை நினைந்து கூறும் கூற்றுப் பொருளாக எழுந்த பாட்டுக்களின் தொகுதி யாகலின், இப்பத்துப் பாசறைப்பத்து எனப் பெயர்பெறுவதாயிற்று.

441. ஐய வாயின செய்யோள் கிளவி
கார்நா ளுருமொடு கையறப் பிரிந்தென
நோய்நன்கு செய்தன வெமக்கே
யாமுறு துயரமவ ளறியினே நன்றே.

இது, சென்று வினைமுடியாமையின் கார்காலம் வந்தவிடத்து மீளப்பெருத தலைமகன் தலைமகளுழை நின்றும் வந்த தூதர் மாற்றம் கேட்டு இரங்கியது.

---

1. புறம். 1271. 2. தொல். பொ. 186. 3. ஷி. ஷி. 41.

ப. உரை: கார்நாள் உருமொடு நோய் நன்குசெய்தன, செய்யோள் கிளவி எனக் கூட்டுக.

உரை: அவள் செயலின்றி இனையும் வகைப் பிரிந்தேனாக, செம்மையுடைய அவள் விடுத்த மென்மையும் அழகுமுடையவாகிய மாற்றம் கார்ப்பருவத்து இடியோடு கலந்த மழையொடு கூடித் தனித்த எமக்குத் துன்பம் மிகத் தருவனவாயின; அதனால் யாம் எய்தும் துயரத்தை அவள் அறியின் நன்றாகும் எ. று.

செய்யோள் ஐயவாயின கிளவி, உருமொடு நோய் நன்கு செய்தன; துயரம் அவள் அறியின் நன்று எனக் கூட்டி முடிக்க. ஐ, மென்மை, அழகுமாம். செய்யோள், தலைமகள். கிளவி, தூதர்பால் சொல்லிவிட்ட மாற்றம். உரும், இடி. துன்பம் செய்தற்கண் கார்நாள் உரும் சிறத்தலின், ஒடு, ஒருவினை ஒடு. செய்தென வென்னும் வினையெச்சம், ஈண்டுக் காரணப் பொருட்டு.

தான் மேற்கொண்ட வினை குறித்துப் பிரிவுணர்த்திய ஞான்று, பிரிவுத்துன்பம் வருத்தினும் அதனிடையே தன் உள்ளம் தெளிந்து, செய்வினை முடித்த செம்மலொடு போதருக என உடம்பட்டு ஊக்கிய அவள் சிறப்பை நினைந்து கூறலின், செய்யோள் என்றும், குறித்த பருவத்தை வற்புறுத்தி விரைவில் வினைமுற்றி மீளுதல் வேண்டுமென அவள் விடுத்த தூதர் கூறலின், ஐய வாயின கிளவி என்றும், குறித்த காலத்தில் வினைமுடியாமை மேலும், தான் குறித்த கார்ப்பருவம் மழையொடு போந்து வருத்தாநிற்க, தான் பிரிந்தது நினைந்து கையறப் பிரிந்தென என்றும், தலைவியி னின்றும் போந்த தூதரை அவளது ஆற்றாமையை உணர்த்தி வருத்தம் மிகுவித்தமையின், நோய் நன்கு செய்தன எமக்கே என்றும், கார் வந்து இடையீடு செய்தலால் வினைமுடியாமையும், அதனால் தான் எய்தும் வருத்தமும் தலைமகள் அறியின், எம்மொடு பின்னர் அவள் புலத்தற்கு இடனின்றாம் என்பான், யாம் உறு துயரம் அவள் அறியினோ நன்று என்றும் கூறினான். இனி, கார்ப் பருவம் வந்தமையான், வினைமுடியாமைப்பற்றிப் பாசறைக்கண் இருந்து வருந்தும் தலைமகன் தலைமகள் விட்ட தூதரை கேட்டு

ஆற்ரு ஞயினமையின், நோய் நன்கு செய்தன எமக்கே என்றும், கார்மழை போந்து செய்த துன்பத்தின் இடையே தோன்றி அமைதி தருதலின், தலைமகளது தூதுரை ஐயவாயின என்றும் உரைத்தான் என்றலுமொன்று. ''வருத்த மிகுதி சுட்டுங் காலை, உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்[1]'' என்பவாகலின், தலைமகன் பாசறைக்கண் இருந்து வருந்தல் அமையும் என்க.

''ஒன்ருத் தமரினும்[2]'' என்பதன் உரையில் ''இது வினை முடியாமையிற் பருவங் கண்டு மீளப்பெருத தலைவன் தூதர் வார்த்தை கேட்டு வருந்தியது'' என்பர் நச்சினர்க்கினியர்.
(441)

442. பெருஞ்சின வேந்த னருந்தொழி றணியின்
விருந்துநனி பெறுதலு முரியள் மாதோ
இருண்டுதோன்று விசும்பி னுயர்நிலை
யுலகத்
தருந்ததி யனைய கற்பின்
குரும்பை மணிப்பூண் புதல்வன் ருயே.

இது, வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுடியாமை யிற் பாசறைக்கண் இருந்து பருவவரவின்கண் சொல்லியது.

உரை: இருண்டு தோன்றும் விசும்பின்கண் உயர்ந்த நிலையையுடைய தேவருலகில் விளங்கும் அருந்ததி போலும் கற்பினையுடையளாய்க் குரும்பைபோற் செய்யப்பட்ட மணிகள் கோத்த கிண்கிணி யணிந்த புதல்வனுக்குத் தாயாகியவள், வேந்தன் தான் மேற்கொண்ட அரிய வினையை முடித்துப் பகை யிடத்துத் தனது மிக்க சினமும் தணிவானுயின், விருந்தினை மிகப் பெற்று இன்புறுதற் குரியளாவள் எ. று.

வேந்தன் அருந்தொழில் பெருஞ்சினம் தணியின் என மாறுக. பகைவரால் விலக்குதற்கரிய பெரும்போரை மேற்கொண்டமை

1. தொல். பொ. 226.   2. ஷை. ஷை. 41.

தோன்ற அருந்தொழில் என்றும், அதற்கு ஏது, அப்பகைவர்மேல் எழுந்த மிக்க சினம் என்றற்குப் பெருஞ்சினம் என்றும் கூறினர். போர் முடிந்தாலன்றிச் சினம் தணியாமை பற்றித் தணியின் எனல் வேண்டிற்று. பகற்போதில் நீல நிறம் கொண்டு காட்சியளிக்கும் விசும்பு அருந்ததிமீன் விளங்கித் தோன்றும் இரவுப்போதில் இருண்டு தோன்றுதலின், இருண்டு தோன்று விசும்பு என்றும், விசும்பிடத்து உயர்ந்த உலகம் என்பது தோன்ற உயர்நிலை யுலகம் என்றும் கூறுப. வேந்தன் தொழில் முடித்துப் பெருஞ்சினம் தணியின் அருந்ததி அனைய கற்பின் புதல்வன்தாய் விருந்து நனி பெறுதலு முரியள் எனக் கூட்டி வினை முடிவு செய்க.

எல்லா உலகினும் உயர்ந்ததாய் வற்றாத இன்பத்ததாயும் இருத்தலின், உயர்நிலையுலகம் என்றான். ''துயர் நிலை யுலகம் காத்த லின்றிநீ,உயர் நிலை யுலகம் வேட்டனை[1]'' என்றார் பிறரும். இருண்டுதோன்று விசும்பு என்றான், கார்ப்பருவ வரவு கண்டு கூறுதலின். இறைவன் அளித்த கருவினை முனிமகளிர் எழுவருள், ஏனை அறுவர் உண்டு சூல்கொண்டு மகப்பெற்றா ராக, அருந்ததி தன் கொழுநனையல்லது பிறரை இறையெனக் கருதாப் பெருங் கொள்கையால் தெய்வக் கருவாயினும் ஏற்று உண்ண மறுத்த தலையாய கற்பு மாண்பு உடையள்; இதனை ''எழு மகளிருள், கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய, அறுவர் மற்றையோரு மந்நிலை அயின்றனர்[2]'' என்று பரிபாடல் கூறுதல் காண்க. இம்மாண்பு பற்றித் தமிழ்ச் சான்றோரிடையே கற்புப்பெருமை மிக்க மகளிர்க்கு அருந்ததியைக் காட்டல் மரபாயிற்று. ''வடமீன் புரையுங் கற்பின் மடமொழி[3]'' என்றும், ''வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்[4]'' என்றும், ''பெருநல் வானத்து வடவயின் விளங்கும் சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல்[5]'' என்றும் சான்றோர் கூறிப்போந்தமை யறிக. தன்னை யன்றித் தெய்வ முள்ளிட்ட பிறர் எவரையும் பொருளென மனங்கொள்ளாத கற்புச் சிறப்புத் தோன்ற அருந்ததி யனைய கற்பின் என்றும், அக் கற்பு நெறியின் விளைபயனாய்த் தன் குடிக்கு விளக்காய மகனைப்

1. மணி. 25; 112–3 2. பரி. 5 : 43–5. 3. புறம். 122.
4. கலி. 2. 5. பெரும்பாண். 302–3.

பெற்றுத் தந்த பெருஞ்சிறப்பை எண்ணிக் குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே என்றும், வினைமுடியாமையின், அருந்தொழில் தணியின் என்றும் கூறினன். தான் கூடிப்பெறும் இன்பத்தையும் தழுவி நிற்றலின், உம்மை எச்சப்பொருட்டு. மனைக்கு விளக் காகும் கற்புடை மகளிர்க்கு மக்கட்பேறு பெருவிளக்க மாதலின் மகனை ஒப்பனை செய்து அவனுடைய மழலைமொழி கேட்டும் தளர் நடை கண்டும் கொழுநன் பிரிவாற்றி யிருக்கும் பெற்றிமையை நினைந்து குரும்பை மணிப்பூண் புதல்வன்தாய் என்றான். '' தந்தையர் ஒப்பர் மக்கள்[1] '' என்றும், '' செம்மால், வனப் பெல்லாம் நுந்தையை ஒப்பினும் நுந்தை, நிலைப்பாலுள் ஒத்த குறி என்வாய்க் கேட்டு ஒத்தி[2] '' என்றும் வரும் சான்றோர் உரை காண்க. பிறுண்டும், மகளிர் ஆற்றி யிருத்தற்குப் புதல்வன் ஏது வாதல், '' குரும்பை மணிப்பூட் பெருஞ் செங் கிண்கிணிப், பாலார் துவர்வாய்ப் பைம்பூட் புதல்வன், மாலைக் கட்டின் மார்பூர் பிழிய, அவ்வெயி றொழுகிய வெவ்வாய் மாணகைச் செயிர்தீர் கொள்கை நம் உயிர்வெங் காதலி[3] '' என்பதனு லுணர்க. (442)

443 நனிசேய்த் தென்னுது நற்றே ரேறிச்சென்
றிலங்கு நிலவி னிளம்பிறை போலக்
காண்குவெந் தில்லவவள் கவின்பெறு
சுடர்நுதல்
விண்ணுய ரரண்புல வெளவிய
மண்ணுறு முரசின் வேந்துதொழில் விடினே.

இதுவுமது.

உரை: வானளாவி உயர்ந்த அரண்கள் பலவற்றையும் வென்று கொண்ட மார்ச்சனை யமைந்த முரசினையுடைய வேந்தன் தான் மேற்கொண்ட வினையை முடித்து அமைவானாயின், மிக்க சேய்மைக்கண்ணது எனக் கருதாது நல்ல தேரேறிச் சென்று அவளுடைய அழகு பெற்ற ஒளி பொருந்திய நெற்றி விளங்கு கின்ற திங்களின் இளம்பிறை போலத் திகழக் காண்பேம் எ. று.

1. தொல். பொ. கற்பு. 6. 2. கலி. 62. 3. நற். 269.

மணிநீரும், மண்ணும் மலையும், காடும், நகரியும், புரிசையு மென்று பலவகைப் படுதலில், அரண்பல என்றும், அவற்றுள்ளும் புரிசையும், மலையும் சிறந்தன வாகலின் விண்ணுயர் அரண் எனச் சிறப்பித்தும் கூறப்பட்டன.

மனத்துக்கினிய காதலருடன் கூடி இனிதுறையும் மகளிர் நுதல் இன்பக்கிளர்ச்சியால் ஒளிவிட்டுத் திகழ்தல் பற்றிச் சுடர் நுதல் என்றார். ''பிறைத்தகை கொண்டன்று பேதை நுதல்[1]'' என்றார் பிறரும்.

மிக்க சேய்மையில் சென்றுள்ளா னாகலின், நனி சேய்த் தென்னது என்றும், கால்வல் நெடுந்தே ரென்பான், நற்றேர் என்றும், தான் காணுங்கால் பசப்பின்றி ஒளியுற்றுத் திகழ்தலின் தலைவியின் நெற்றியைக், கவின்பெறு சுடர்நுதல் என்றும், வினை முடியாமையின் விடின் என்றும் கூறினான்.

''ஒன்றாத் தமரினும்[2]'' என்ற சூத்திரத்து உரையில் இதனைக் காட்டி, இது வேந்தர்க்கு உற்றுழிப் பிரிந்தோன் தான் குறித்த பருவத்து வினை முடியாமையின் புலம்பியது என்பர் நச்சினார்க் கினியர். (443)

444. பெருந்தோண் மடவரற் காண்குவெந் தில்ல
நீண்மதி லரணம் பாய்ந்தெனந் தொடிபிளந்து
வைந்நுதி மழுகிய தடங்கோட் டியானை
வென்வேல் வேந்தன் பகைதணிந்
தின்னுந் தன்னாட்டு முன்னுதல் பெறினே.

இதுவுமது.

உரை: நீண்ட மதிலாகிய அரணினைத் தாக்கியதனால், தொடி யுடைந்து கூரிய நுனி மழுங்கிய பெரிய கொம்புகளையுடைய யானையையும் வென்றி தரும் வேலையுமுடைய வேந்தன், பகை யிடத்துச் செய்யும் வினைமுடிந்த இப்பொழுதேனும் தன் நாட்டிற்குச்

1. கார். 17. 2. தொல். பொ. 41.

சேறலை நினைப்பானுயின் பெரிய தோள்களையுடைய மடவரலைக் காண்பேம் எ. று.

தோள் பெருத்திருத்தல் மகளிர்க்கு இலக்கணமாதலின் பெருந் தோள் மடவரல் என்ருர். தொடி, யானை மருப்பிற்கிட்ட பூண். செய் தென என்னும் வினையெச்சம் காரணப்பொருட்டு. அரணைத் தாக்கிக் கதவிற் பாய்ந்து கோடுமுறிதலும் நுதி மழுகுதலும், யானைகளின் மறமிகுதி யுணர்த்தின. ''கடிமதற் கதவம் பாய்த லின் தொடிபிளந்து, நுதிமுகமழுகிய மண்ணை வெண்கோட்டுச் சிறுகண் யானை[1]'' என்ருர் பிறரும். பகை, பகையிடத்துச் செய்யும் போர்வினை மேல் நிற்றலின் ஆகுபெயர். உம்மை, இறந்தது தழீஇயது. தணிந்த என்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தால் தொக்கது. வேந்தன் முன்னுதல் பெறின், காண் குவெம் என இயையும். தில், விழைவின்கண் வந்தது.

மேற்கொண்ட வினையது முடிவின்கண் தான் குறித்த பருவ வரவும் காதலியின் காதல் நினைவும் எழுந்து உள்ளத்தில் வேட்கை மிகுவித்தலின், பெருந்தோள் மடவரல் காண்குவெம் தில்ல என்றும், வினைமுற்றிய திறத்தை நீண்மதி லரணம் என்றும், வேந்தன் என்றும், பகையும் தணிந்த தென்பான் பகை தணிந்த இன்னும் என்றும், இனியும் தன் நாட்டுக்கு மீளுதலை நினையாது போர் வேட்கை வேந்தன் உள்ளத்தில் மிக் கிருப்பது தோன்ற முன்னுதல் பெறின் என்றும், பெற்ருலன்றித் தான் அவனின் நீங்கிச் சேறல் துணைமையறம் அன்ருதலின், பெறின் என்றும் கூறினுன். (444)

445. புகழ்சால் சிறப்பிற் காதலி புலம்பத்
துறந்துவந் தனையே யருந்தொழிற் கட்டூர்
நல்லேறு தழீஇ நாகுபெயர் காலை
உள்ளுதொறுங் கலிழு நெஞ்சம்
வல்லே யெம்மையும் வரவிழைத் தனையே.

---

1. அகம். 24.

இது, பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவ வரவின்கண் தலைமகளை நினைந்து நெஞ்சோடு புலந்து சொல்லியது.

உரை : புறத்தோராகிய பகைவர் உட்புகுந்து வினை செய்தற் கரிய தொழில் அமைந்த பாசறைக்கண் ஆமானினம் தமக்குரிய நல்ல ஏற்றினைத் தழுவிச் செல்லும் மாலைப்போதினை நினைக்குந் தோறும் நெக்குருகும் நெஞ்சமே, புகழமைந்த சிறப்பினையுடைய காதலியாவாள் தனிமையுற்று வருந்தப் பிரிந்து போந்தனை; அதுவேயன்றி என்னையும் விரைந்து இவண் போதரச் செய்தனை யாகலின், இப்பொழுது வருந்துவது என்னை? எ. று.

புகழ்சால் சிறப்பாவது, வாழுமூர் கற்பால் தன்னைப் புகழ்வது. கட்டூர், பாசறை. பாசறையிடத்தும் பகைவர் புகுந்து வினைசெய்ப வாகலின், அவர் அது செய்தற் காகாவாறு. அமைத்த பாசறையை அருந்தொழிற் கட்டூர் என்றார்; ''அருந்திறல் அளப்பருங்கட்டூர்[1]'' ''வேறுபுலத் திறுத்த கட்டூர்[2]'' என்று பிறரும் கூறினர். உம்மை, காதல் மிகுதி யுணர்த்தினமையின், சிறப்பு. நாகு. பெண்மைப் பெயர். வாளாது கூறினமையின், சிறப்புடைய ஆனினம் கொள்ளப்பட்டன; ''நல்லேறு நாகுடன் நின்றன, பல்லா னினநிரை[3]'' என்ப வாகலின், நல்லேறு நாகு தழீஇப் பெயரும் காலம் கார்கால மென அறிக. அம்சதேவரும் இதுவே கூறுவர்.

மனையறத்துக் குரிய மாண்பெல்லாம் கொண்டு கற்பால் யாவரும் பரவும் பொற்புடைப் புகழ் நிறைந்தமை பற்றிப் புகழ் சால் சிறப்பு என்றும், அதற்குக் காரணம் அவளது உழுவலன்பின் வழிவந்த பெருங்காத லாதலின், காதலி என்றும், மனையின்கண் தனித்திருந்து வருந்த அவளது காதன்மையை நினையாது வினை மேற்கொண்ட உள்ளத்தால் பிரிந்து வந்தமை விளங்கத் துறந்து வந்தனையே என்றும், நல்லேறு நாகு தழீஇப் பெயரும் காட்சி வினைமுடித்துப் பாசறைக்கண் இருக்கும் தலைமகன் உள்ளத்தில் அவன் காதலியை நினைப்பித்துத் துயர்செய்தலின், நல்லேறு தழீஇ

1. அகம். 44. 2. பதிற். 68. 3. கலி. 113.

நாகுபெயர் காலே என்றும், அதனை உள்ளுதொறும் நெஞ்சம் கலிழும் என்றும் கூறினன். மனையாளது ஆற்ருமைக்கு அஞ்சி ஒழுகுவோன் '' வினையாண்மை வீறு எய்தல் இன்று[1]'' என்பது காட்டி, வினைவயிற் பிரிவை வற்புறுத்திப் பாசறை யிருப்புக்குத் தான் வருதற்குத் தூண்டிய நெஞ்சினை, வல்லே எம்மையும் வர விழைத்தனையே என்று கூறினன்.

இது பகைவயிற் பிரிந்தோன் பருவங்கண்டு தலைவியை நினைந்து நெஞ்சொடு புலம்பியது என்பர் நச்சினர்க்கினியர்.[2]

(445)

446. முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவ மாஅ யோயே
பாசறை யருந்தொழி லுதவிநங்
காத னன்னுட்டுப் போதரும் பொழுதே.

இது, பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவவரவின்கண் உருவு வெளிப்பாடு கண்டு சொல்லியது.

உரை: மாமைநிறத்தை யுடையோய், பாசறையிடத்தே யிருந்து வேந்தற்குச் செய்தற்குரிய அரிய வினைகளைச் செய்து முற்றி, நம் அன்புடைய நல்ல நாட்டுக்குப் பெயர்ந்து செல்லும் காலமாகிய மழை மிக்க கார்ப்பருவம், முல்லையின் மணங் கமழும் கூந்தல் விரைகொள்ளுமாறு நல்லவாய்த் தோன்றுகின்றன, காண் எ. று.

உதவிப் போதரும் பொழுது கமழ்கொள நல்ல காண்குவ என முடிக்க. கற்புக்குச் சிறந்தமை பற்றி முல்லைப்பூ எடுத்தோதப்பட்டது. கற்புடை மகளிரின் கூந்தல் முல்லையின் நறுமணம் கமழும் என்பது பற்றி இவ்வாறு முதற்கண் கூறினர் என்றலுமொன்று. மாயோய், மாமை நிறத்தை யுடையவளே. பாசறையிடத்தே இருந்த வேந்தர் தாம் மேற்கொண்ட வினைக்கூறுகளை

1. குறள். 904. 2. தொல்.பொ. 41.

ஆராய்ப வாதலின், வினைசெய்தற்கு உரிய சூழ்ச்சியும் பகைவரால் விலக்கலாகாத செயல்வகைகளும் ஈண்டு அருந்தொழில் எனப் பட்டன. இப்பாட்டுடைத் தலைமகன் வேந்தர்க்கு உறுதுணையாக வந்தவன் என்பது அறிக.

தான் குறித்த பருவம் வரக் கண்ட தலைவன் உள்ளத்தில் தலைவியது நினைவு பெருகி யெழுதலும் அவளது உரு வெளிப் பட்டுத் தோன்றக்கண்டு தன்னை மறந்து அதனெடு உரையாடு வானய், மாஅயோயே என்றும், தன் காதலியுடன் கலந்து உரை யாடிக் களித்து மகிழும் அன்பு சிறக்கும் நாடாகலின், காதல் நன்னுடு என்றும் கூறினன். மழை பெய்யின், பாசறையிடத்துச் செய்யப்படும் வினை முடியாமையின், பாசறை யருந்தொழில் உதவி என்றதற்குப் பாசறைக்கண் பெய்தவழிச் செய்தற்கு அரிதாகும் வினையினைப் பெய்யாமையால் முடித்தற் குதவி என்று கூறினுமாம். கற்புக்குரிய முல்லையின் மணம் இயல்பாகவே பெற்றவ ளாகலின், முல்லை நாறுங் கூந்தல் என்றும், இனியும் கார்ப்பருவத்தே மலரும் பான்மைத்தாய முல்லை மலர்களை யணிந்து அம் மணம் மிகுவாள் என்பான், கமழ்கொள என்றும் கூறினன்.

“ஒன்ருத் தமரினும்[1]” என்ற சூத்திரவுரையில், வேந்தற் குற்றுழிப் பிரிந்தோன் பருவவரவின்கண் உருவு வெளிப்பட்டுழிப் புலம்பியது; உதவி யென்றலின் வேந்தற்கு உற்றுழி யாயிற்று என்பர் நச்சினர்க்கினியர். (446)

447. பிணிவீடு பெறுக மன்னவன் தொழிலே
பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை
ஆடு சிறைவண் டவிழ்ப்பப்
பாடல் சான்ற காண்கம் வாணுதலே.

இது, வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் அவண் வினை முற்றி மீளும் வேட்கையனுய்ப் பருவவரவின்கண் தலைமகளை நினைத்துச் சொல்லியது.

---

1. தொல். பொ. 41.

உரை : பனியால் வளரும் செம்முல்லையின், சிச்சிலிப் பறவையது வாய்போற் சிவந்த அரும்புகள், அசைகின்ற சிறகு களை யுடைய வண்டினம் மலர்த்த மலர்ந்து, அவை தேனுண்டு பாடுதற்கு அமைந்தன ; அது கார்ப்பருவ நிகழ்ச்சி யாதல் குறித்து நாம் நம் காதலியின் ஒளி பொருந்திய நுதலைக் காண்டற்கு விரும்புவே மாயினேம் ஆகலான், வினையாற் பிணிப்புண்டு நிற்கும் வேந்தன், உள்ளம் வினைமுற்றி விரைய மீளுதலைச் செய்வானாக எ. று.

பிணி என்றதற் கேற்ப வீடு பெறுக எனப்பட்டது. தொழில் பிணி வீடு பெறுதல், வினைமேற் சென்ற உள்ளம் அதனை முடித்து விரைய மீளுதல் என்றவாறு. பிணியென்பதற்கு முன்னர்க் கூறினும். தளவின் முகை சிரலின் வாய் போறல், "சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப, ஈர்ந்தண் தளவம் தகைந்தன[1]" என்பதனாலும் அறிக. தளவின் மலர்ச்சி கார்ப்பருவ வரவுணர்த்தக் கண்டான், இது தான் வருவல் எனத் தலைமகட்குக் குறித்துப் போந்த பருவமாகலானும், தன் சொல் தேறி யிருப்பவள் வரவு தாழ்த்தவிடத்து ஆற்றாது நுதல் பசந்து வேறுபடுவள் என அஞ்சு கின்றா னாகலானும், காண்கம் வாணுதலே என்றும், எனினும், வினை முற்றாதவழி மீளுதல் வினைவலோர்க்கு உடன்பாடு அன்மை யின், பிணிவீடு பெறுக மன்னவன் தொழிலே என்றும் கூறினான். இவ்வாற்றால் இத் தலைமகன் வினைவல பாங்கன் என்பது உணர்க.

(447)

448. தழங்குகுரன் முரசங் காலை யியம்பக்
கடுஞ்சின வேந்தன் றொழிலெதிர்ந் தனனே
மெல்லவன் மருங்கின் முல்லை பூப்பப்
பொங்குபெயற் கனைதுனி காரெதிர்ந் தன்றே
அஞ்சி லோதியை யுள்ளுதொறும்
துஞ்சா தலமர னுமெதிர்ந்தனமே.

---

1. கார். 36.

இது, வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் பருவம் வந்த விடத்தினும் மீளப்பெறாது அரசன் செய்தியும் தன் செய்தியும் கூறி ஆற்றாயது.

உரை: முழங்குகின்ற ஓசையினையுடைய முரசங்கள் காலையில் ஒலித்து அப் பொழுதினையுணர்த்த, மிக்க சினம் பொருந்திய வேந்தன் வினைமுடித்தலைத் தொடங்கினான்; மெல்லிய பள்ளங்களின் அருகே படர்ந்த முல்லைக்கொடிகள் மலர, மிக்கெழுந்த மழை ஒலிக்கின்ற பெயலைச் செய்து கார்ப்பருவம் தொடங்கா நின்றது; அவ்வாற்றால், விரைவில் வினைமுடித்துக் கார்வரவில் காதலியொடு கூடி இனிதிருத்தல் கூடு மெனும் மகிழ்ச்சியால் அழகிய சிலவாகிய கூந்தலை யுடையாளை நினைக்குந்தோறும், நாம் கண்படை கொள்ளாது வினைமேலும் காதலியின் காதல் மேலும் கருத்தைப் போக்கி அலமருதலைக் கொள்வேமாயினேம் எ. று.

அரசர் இருக்குமிடங்களில், அவர் பள்ளி யெழுங்காலை முரசு இயம்பப்படுதல் அக்கால வழக்காதலின், தழங்குகுரன் முரசம் காலை இயம்ப என்றார். பாசறைக்கண் தங்கியவழியும் அஃது உண்டென்பது, ''பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப், படுகண் முரசம் காலை இயம்ப[1]'' என்பதனால் அறிக. ஆழமின்மையின், மெல்லவள் எனப்பட்டன.

பகைவரோடு வினைசெய்கின்ற பொழுது, அவர் மாட்டுக் கண்ணோடாது செய்யவேண்டுதலின், கடுஞ்சின வேந்தன் என்றும், கார்காலம் வினைசெய்தற்கு வாய்ப்புடைய தன்மையின் தொழில் எதிர்ந்தனனே யென்றும், தான் குறித்த பருவவரவு நோக்கித் தலைமகள் ஆற்றாளெனக் கருதி இனைந்தவன் வேந்தன் செய்தி கண்டு உவகை மிகுதலின், துஞ்சாது அலமரல் நாம் எதிர்ந்தனமே யென்றும் கூறினான். இதனால் தலைமகன்கண் கண்டுயிண் மறுத்தல் என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

''ஒன்றாத் தமரினும்'' என்ற சூத்திரவுரையில் ''இது வேந்தற் குற்றுழிப் பிரிந்தோன் பருவம் வந்துழி மீளப்பெறாது அரசன்

1. மதுரைக். 232.

செய்தியும் பருவத்தின் செய்தியும் தன் செய்தியும் கூறிப் புலம்பியது'' என்பர் நச்சினார்க்கினியர். (448)

449. முரம்புகண் ணுடையத் திரியுந் திகிரியொடு
பணைநிலை முனைஇய வயமாப் புணர்ந்து
திண்ணிதின் மாண்டன்று தேரே
ஒண்ணுதற் காண்குவம் வேந்துவினை
விடினே.

இது, பாசறைக்கண் வேந்தனோடு வினைப்பொருட்டாற் போந்திருந்த தலைமகன் அவ்வேந்தன் மாற்றுவேந்தர் தருதிறை கொண்டு மீள்வானாகப் பொருந்துழித் தானும் மீட்சிக்குத் தேர் சமைத்த எல்லைக்கண்ணே, அவ்வரசன் பொருத்தம் தவிர்ந்து மீண்டும் வினைமேற்கொண்டா னாகச் சொல்லியது.

உரை: முரம்புகள் நிறைந்த மேட்டுநிலங்கள் இடம் கெடும் வகை உருண்டு செல்லும் உருளையுடன், பந்திக்கண் நிற்றலை வெறுத்த வலியினையுடைய குதிரைகள் பூட்டித் திண்ணிதாய்த் தேரும் சமைக்கப்பெற்றுளது! வேந்தன் தானும் வினைதவிர்வானாயின் ஒள்ளிய நுதலினையுடையாளை நாம் சென்றெய்திக் காணலாம் எ. று.

எச்சவும்மை வருவிக்கப்பட்டது. சென்று எய்தி யென்பன அவாய்நிலையான் வந்தன. திண்ணிதின் மாண் டன்று தேர் என்றதனால், வேந்தன் மீளக் கருதினமையும், அதற்குக் காரணமாகிய மாற்றரசர் தரும் திறை கோடற்குப் பொருந்தினமையும், வினைவிடினே என்றதனால் அவ்வேந்தன் பொருத்தம் தவிர்ந்தமையும் பெறப்பட்டன. முரம்பு, பரல் நிறைந்த கரம்பு நிலம்; ''முரம்புதலை மணந்த நிரம்பா வியவின்[1]'' என்றும், ''முரம்புகண் ணுடைய ஏகி[2]'' என்றும் வருதலால் உணர்க. பணை, குதிரைப்பந்தி. வலிமிகுதியாற் செலவே விரும்புகின்றமையின் குதிரைகள் பணைநிலையை வெறுப்பவாயின; ''பணைநிலை முனைஇய வினைநவில் புரவி[3]'' என்றும், ''பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி[4]'' என்றும் சான்றோர் கூறுவர். ஒண்ணுதல்,

1. நற். 374. 2. குறுந். 400. 3. அகம். 254. 4. நெடு. 93.

அன்மொழித்தொகை. வினைமுடித்து மீளுதற்கு வேந்தன் சமைந்தமையின், தேர்கள் செவ்வையாகத் பண்ணப்பட்டமையான், மாண்டன்று தேரே என்றும், மீளுதற்கண் குதிரைகள் மிக விரைந்த செலவினவாம் ஆதலின், அதனால், நிலை தளராமை நோக்கித் தேர்கள் பழுது பார்த்துச் செவ்விதின் அமைக்கப் பெற்றமை தோன்றத் திண்ணிதின் மாண்டன்று என்றும், அந்நிலையில் தன் காதலியின் மகிழ்ந்த முகத்தை விரைவிற் காண்டல் கூடும் என்று எழுந்த உள்ளக்கிளர்ச்சி, வேந்தன், மீளவும் வினை மேற்கொள்ளக் கருதினமை யறிந்து வாடுதலின், வேந்து வினை விடின் ஒண்ணுதல் காண்குவம் என்றும் கூறினன்.

இது வேந்தன் திறைகொண்டு மீள்வுழித் தானும் சமைந்த தேரை அமைத்துக்கொண்டு திண்ணிதின் மாண்டன்று தேர் எனப் பாகனொடு கூறியவழி அவ்வேந்தன் திறை வாங்காது வினை மேற் சென்றானாகப் பாகனை நோக்கிக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர். (449)

450. முரசுமா றிரட்டு மருந்தொழில் பகைதணிந்து
நாடுமுன் னியரோ பீடுகெழு வேந்தன்
வெய்ய வுயிர்க்கு நோய் தணியச்
செய்யோ ளிளமுலைப் படீஇய ரெங் கண்ணே.

இது, வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுற்றுமையின் பாசறைக்கண் இருந்து தன் மனக்கருத்து உரைத்தது.

ப. உரை: மாறு இரட்டும் என்றது மாற்றார் முரசொலிக்கு மாறுபட்டெழும் என்றவாறு.

உரை: பெருமை பொருந்திய வேந்தன், முரசங்கள் மாறுபட்டொலிக்கும் விலக்குதற்கரிய போர்தொழிலைச் செய்தற்கு ஏதுவாகிய பகை முடித்துத் தன் நாடு நோக்கி மீளக் கருதுவானாக; அதனால், என் கண்கள், குறித்த பருவவரவு நோக்கி ஆற்றாவாய் வெய்துயிர்த்து வருந்தும் என்நோய் தீர்வான், செய்யாளாகிய அவள் இளமை பொருந்திய மார்பிடைக் கூடி உறக்கம் எய்துக எ. று.

மாறுபட்டொலித்தலாவது, மாற்று வேந்தர் தானையிடை யெழும் முரசொலிக்கு எதிராக, அடல் குறித்த வேந்தன் தானை யிடை முரசம் எடுத்தும் படுத்தும் கோட்டியும் ஒலித்தல். அருந் தொழில், பகைவரால் விலக்கமுடியாத போர்த்தொழில். பகை, பகைமை காரணமாக எழும் சினத்தீ. உயிர்க்கும் என்னும் பெயரெச்சம் காரணப்பெயர் கொண்டது. உயிர்த்தற் கேதுவாய காமநோய் எனவிரியும். வெய்துயிர்த்தல் கூறவே, வாய்வெருவுதல் முதலாயின அடங்கின. கற்புடை மகளிர்க்குப் பொதுவாக வுள்ள செம்மை, இப்பொழுதிற் சிறப்பாக விளங்குமாறு தோன்றச் செய்யோள் என்றார், ''செறிவும் நிறையும் செம்மையும் செப்பும், அறிவும் அருமையும் பெண்பாலான[1]'' என ஆசிரியர் கூறுவது காண்க.

பாசறைக்கண் இருந்து பருவவரவு கண்டு தலைவியை நினைக்கும் உள்ளத்தில் வினைமுடியாமை தோன்றி நோய் விளைத்த தாயினும், வினையே ஆடவர்க்கு உயிராதலின் வினை முற்றியல்லது மீளாத வேந்தனது வினையாண்மையை வியந்து கூறலின், பீடு கெழு வேந்தன் என்றும், போர்வினையிற் கலந்து அதனை உற்றும், வேந்தர் தத்தமக்குரிய முரசினை மாற்றார் முரசுக்கு எதிராக முழக்குப வாதலின், முரசு மாறு இரட்டும் அருந்தொழில் என்றும். பகை தணிந்தா லல்லது போர் அறுதல் இல்லாமை பற்றிப் பகை தணிந்து என்றும், எதிர்த்த வேந்தனது பகை தணியக் கண்டு பிறரும் பணிந்து திறை பகராது மாறுபடுவரேல் போர்வினை நீளு மாதலின், அவரும் அது செய்க எனவும், அது கொண்டு வேந்தன் தன் நாட்டிற்கு மீள்வானாக எனவும் விழையுமாறு தோன்ற, நாடு முன்னியரோ என்றும், குறித்த பருவம் வந்தும், காதலன் வந்திலாமை எண்ணியும் அதுவே பற்றுக்கோடாகத் தன்கண் ணெழுந்த வேட்கை மிக்கும் வருந்தும் தலைவியது வருத்தத்தை வெய்ய வுயிர்க்கும் நோய் என்றும், தன் சொல்வழி இருக்கும் அவளது கற்புநலத்தை வியந்து செய்யோள் எனவும், தனது ஆராக்காதல் மிகுதி தோன்ற, இளமுலைப் படீஇயர் என் கண் என்றும் கூறினான். (450)

---

1. தொல். பொ. 209.

46

பருவங்கண்டு கிழத்தியுரைத்த பத்து

இது தலைமகள் ஆற்றியிருக்குமாறு தலைமகன் தெளிவிப்பான் குறித்துச் சென்ற பருவம் எய்தினமை கண்டு, தலைமகள் தன்னோடும் தோழியரோடும் நிகழ்த்தும் கூற்றுப் பொருளாகவந்த பாட்டின் தொகுதி யாகலின், இப்பத்து இப்பெயர்த்தாயிற்று.

451. கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர்
தேர்தரு விருந்திற் றவிர்குதல் யாவது
மாற்றருந் தானை நோக்கி
ஆற்றவு மிருத்தல் வேந்தனது தொழிலே.

இது, வேந்தர்க்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் குறித்த பருவம் நினைந்து ஆற்றியிருந்த தலைமகள் அப்பருவவரவின் கண் பாசறையினின்றும் வந்தார், அரசன் செய்தி கூறக் கேட்டு ஆற்ருளாய்ச் சொல்லியது.

உரை: நாம் ஈண்டுச்செயலற்று வருந்தப் பிரிந்த நம்தலைவர் தாம் குறித்த கார்ப்பருவம் எய்தினமையால் தேரேறி நம் மனைக் கண் விருந்தாய்ப் போந்து தங்குதல் யாங்ஙனம் கூடும்? பகைவரால் தொலைத்தற்கரிய தானையின் இருப்பு நோக்கிப்

பாசறையிடத்தே பெரிதும் இருத்தல் வேந்தனது செயல் ஆயினமையின் எ. று. எனவே, யான் எங்ஙனம் ஆற்றுவேன் என்பதாம்.

கார்கால நிகழ்ச்சிகட்கு உரிய காலம், கார்செய் காலை எனப்பட்டது; ''ஆர்பெயல் உதவிய கார்செய் காலை[1]'' என்ருற்போல. ஒடுவுருபு ஆனுருபின் பொருட்டு; இஃது உருபுமயக்கம். உடம்பு தருபணியில் விதுபுற்றிருக்கும் உடம்புக்கு கார்காலம் மிக்க வாய்ப்பாதலின் உயிருணர்வைத் தன்னடிப் படுத்தித் தன்வழியே நினைவு மிகுவித்து மயக்குதலால், அறிவொடு பட்ட செயல் அறுதலின், காதலர் பிரிவை, கையறப் பிரிந்தோர் என்ருர். தவிர்தல், தங்குதல் சின்னுள் தங்கிச் செல்லும் இயல்பு தோன்றத் தேர்தரு விருந்து என்ருர். மாற்றுதல், தொலைத்தல்; மாற்றருந் தானை யென்றது பகைவரால் அறைபோகப்படாத தானை யென்றுமாம். பெரிதும் இருத்தலாவது, கார்ப்பருவம் வந்தும் பாசறையிருப்பை மேலும் சின்னுள் மேற்கொண்டிருத்தல். மாற்றருந்தானை நோக்கி ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே என்றது, பாசறையினின்றும் வந்தார் கூற்றைக் கொண்டெடுத்து மொழிந்தது. இருத்தல், வினைமேற் செல்லும் அரசர்க்குரிய அறுவகைத் தொழில்களுள் ஒன்று. அவை, நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்பன. யாம் என்பது முதலாயின குறிப்பெச்சம்.

பிரிந்த காதலன் வற்புறுத்திய பொழுது எய்தக் கண்டு அவன் வாராமையால் ஆற்ருமை மிகுதலின், கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர் என்றும் கார்ப்பருவம் போர்வினைக்கு ஆகாமையின், அக்காலையில் பிரிந்த தலைமகன் மீண்டு போந்து மனைக்கண் தங்கிப் போர்வினைக்குரிய பருவ வரவில் பிரிதல் அமையும் என உழையர் கூறினர்க்கு, அஃது ஆகாது என்பதுபட, தேர்தரு விருந்தின் தவிர்குதல் யாவது என்றும் கூறினுள். கார்வரவால் செய்வினை இடையீடுபடக் கண்டு வேந்தன் மீள்வா னுயின் பாசறை யிருக்கும் தானை முரணவிந்து மாறுதலும் கூடுமாகலின், அது நோக்கி வேந்தன் மீளக் கருதிற்றலன் என்பாள், மாற்றருந்

---

1. அகம். 314.

தானே நோக்கி என்றும், வினை முடியுங்காறும் இருத்தலே வேந்தன் துணிந்துளான் என்பாள், ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழில் என்றும், எனவே, இக் கார்ப்பருவத்தின்கண் யான் எங்ஙனம் ஆற்றுவேன் என்றும் கூறினாள். யான் எங்ஙனம் ஆற்றுவேன் என்பது குறிப்பெச்சம். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை. (451)

452. வறந்த ஞாலம் தளிர்ப்ப வீசிக்
கறங்குர லெழிலி கார்செய் தன்றே
பகைவெங் காதலர் திறைதரு முயற்சி
மென்றோ ளாய்கவின் மறையப்
பொன்புனை பீரத் தலர்செய் தன்றே.

இது. குறித்த பருவத்து வாராது தலைமகன் பகைமேல் முயல்கின்ற முயர்ச்சி கேட்ட தலைமகள் சொல்லியது.

உரை: கோடையால் நீரின்றி யுலர்ந்த நிலம் அது பெற்றுச் செழுமை யெய்துமாறு முழங்குகின்ற ஓசையினை யுடைய மேகம், மழையைப் பெய்து கார்காலத்தைச் செய்வதாயிற்று; அது தாம் குறித்த பருவம் என்று கருதாது பகைதணி வினையை விரும்பிய காதலர், பகை யொழிந்து பணிந்து அவர் தரும் திறை பெறுதற்கு முயலும் முயற்சி, என் மென்றோளின் அழகிய நலம் ஒழியுமாறு பொன்னிறம் கொண்ட பீர்க்கம் பூப்போற் பசலை யெய்துவித்தது எ. று.

குறித்த பருவம் வந்தெய்தியவழியும் தலைமகன் வாராமையானும், வாரமைக் கேதுவாய முயற்சி கேட்டமையானும் ஆற்றேனாயினேன் என்பதாம். வறந்த, வறம் என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம்; "நீரற வறந்த நிரம்பா நீரிடை[1]" எனப் பிறரும் வழங்குதல் காண்க. கோடையால் நீரின்றி வாடிய உயிரினம் தளிர்த்து செழுமை யுறுமாறு கார்மழை நீரைப் பெய்தலின், வறந்த ஞாலம் தளிர்ப்ப வீசி என்றார்; "உயிர் தளிர்ப்பத் தீண்டலால்[2]" என்றாற் போல. கறங்கு குரல் என்பது கறங்குரல்

1. அகம். 53. 2. குறள். 1106.

என விகாரமாயிற்று, ''தழங்குரல் மயிர்க்கண் முரசு[1]'' என்றாற் போல. கார்செய்தலாவது, கார்காலத்து மழையைப் பெய்தல். செற்றார்பால் வெம்மையும், நட்டார்பால் தன்மையும் உடைமை தலைமக்கள் இயல்பாதலின், பகைவெங் காதலர் எனத் தலைமகனைக் குறித்தார். திறைதரு முயற்சியாவது, ''ஒடிவில் தெவ்வர் எதிர் நின்று உரைஇ, இடுக திறையே புரவெதிர்ந் தோர்கென, அம்புடை வலத்தர் உயர்ந்தோர்[2]'' பரவுவது. பீர்க்கம்பூ பொன்னிறத்த தாதலின், பசலைக்கு உவமையாயிற்று; ''பெருநல் ஆய்கவின் ஒரீஇச் சிறுபீர், வீயேர் வண்ணங் கொண்டன்று கொல்லோ பானாட் கங்குலும் பகலும், ஆனாது அழுவோள் ஆய்சிறு நுதலே[3]'' எனச் சான்றோர் கூறுவது காண்க.

கார்ப்பருவ வரவில் காதலர் வருவரென ஆற்றியிருந்தாள், அரசன் திறைதரு முயற்சி கேட்டலும், ஆற்றாது பசந்தா ளாகலின் முயற்சி மென்றோள் ஆய்கவின் மறைய, பீரத் தலர்செய் தன்று என்றாள். இது பசலைபாய்தல்.

நீரின்மையான் வருந்திய ஞாலத்துக்கு எழிலி கார்செய்து தளிர்க்கச் செய்ததாக, காதலரது திறைதரு முயற்சி, அவரது கூட்ட மின்மையான் வருந்திக் கையற்றிருக்கும் நமக்கு அக் கையறவின்மேலும் ஆய்நலம் கெட்டுப் பசந்தொழியச் செய்வ தாயிற்று என்பாள், எழிலி கார்செய் தன்று என எடுத்தோதினாள்.

(452)

453. அவரூறுந் தேரை தெவிட்ட மிசைதொறும்
வெங்குரற் புள்ளின மொலிப்ப வுதுக்காண்
கார்தொடங் கின்றாற் காலை யதனால்
நீர்தொடங் கினவா ணெடுங்கணவர்
தேர்தொடங் கின்றானம்வயி னானே.

இது, பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

---

1. நற். 93. 2. பதிற். 80. 3. அகம். 57.

ப. உரை: தேர் தொடங்கின்றுல் என்பது தேர் வரத் தொடங்குதல் இல்லையாயிற்று எ. று.

உரை: நீர் நின்ற பள்ளங்கள்தோறும் தேரைகள் ஓசையிடக் குன்றிடந்தோறும் வெவ்விய குரலையுடைய பறவைகள் ஒலியினைச் செய்ய, காலம் கார்ப்பருவமாதல் தொடங்கிற்று; அதனைக் காண்பாயாக; அதனுல், இப்பருவவரவில் வருவல் எனக் குறித்துச் சென்றவர் வாராமை நோக்கி என்நெடிய கண்கள் நீர்சொரிதலைத் தொடங்கின; மற்று, அவருடைய தேர் நம்மிடம் வருதலைத் தொடங்கிற்றன்றுகலான் எ. று.

இப்பருவவரவில் என்பது முதலாயின வருவிக்கப் பட்டன. வினைமாற்றுப் பொருட்டாய இடைச்சொல் விகாரத்தால் தொக்கது. மழை பெய்தலால் பெருகிய தண்ணீர் பள்ளங்களில் நின்றவழி, ஆண்டு வதியும் பவளைகள் ஒலித்தலின், அவல்தொறுந் தேரை தெவிட்ட என்றுர். ''பழமழை பொழிந்த புதுநீ ரவல, நாநவில் பல்கிளை கறங்க [1]'' என்றும், ''படுமழை பொழிந்த பயமிகுபுறவின், நெடுநீ ரவல பகுவாய்த் தேரை, சிறுபல் லியத்தின் நெடுநெறிக் கறங்க [2]'' என்றும் பிறரும் கூறுப.

தேர் தொடங்கு இன்று என்புழித் தொடங்கு, முதனிலைத் தொழிற்பெயர். ''குற்றியலுகரமும் அற்றென மொழிப [3]'' என்றதனுல் உயிரேறி முடிந்தது. புள்ளினம், மரம், குன்று முதலியவற்றின் மேலிடத்தே கூடு கட்டி வாழும் இயல்பின வாதலின், மிசைதொறும் என்றுர். நிலவரைப்பில் காற்றின் அழுத்தம் மிக்கிருத்தலின், புள்ளினம் மிசையிடத்தே கூடமைக்கும் இயல்புடையவாயின என அறிக. அழுத்தம் மிக்க நீர்க்குள்ளிருந்து மேல் வருவோர் கைகால்களை உதைத்துக்கொண் டெழுதல் போலப் புள்ளினமும் நிலவரைப்பினின்று மேனிலை எய்துவதற்குச் சிறைகளை அசைத்தெழுந்து ஏகுவது இதற்குப் போதிய சான்று; மேலிடத்தே இருப்பினும் காற்றின் அழுத்தத்தை எதிர்த்து நீந்திச் செல்லும் செலவு எளிதாமென்க.

1. நற். 42. 2. அகம். 154. 3. தொல். எழுத்து. 106.

தாம் தம் துணையொடு புணர்ந்து, தம்போற் புணராது தனித்தோர்மாட்டு இரங்காது தம் ஓசையால் துன்புறுத்தலே யன்றி, அவர்கட்கு அவர் தம் துணைவர் ஏறிவரும் தேரிற் கட்டிய மணியோசை போல இசைத்துப் பொய்த்தலின், வெங்குரற் புள்ளினம் ஒலிப்ப என்றும், நெடியவாயினும் பொறுக்கும் ஆற்றல் இல என்பாள், நெடுங்கண் என்றும், குறித்த பருவம் எய்திற்றாகவும் வாராமை அவர்க்கு நன்றன்று என்பாள், அவர் என்றும் கூறினாள். துணையொடு புணர்ந்த புட்கள் பிரிந்தோர்மாட்டு இரங்காது ஒலிக்குமென்பது, ''இருந்தோட்டுப் புள்ளினம், தாம் புணர்ந்தமையின் பிரிந்தோர் உள்ளா, தீங்குர லகவ[1]'' என்பதனாலும், புள்ளினம் தேரின் மணியோசை போல் ஒலித்தல், ''புள்ளொலி கேட்டொறும், தேர்மணித் தெள்ளிசை கொல்லென, ஊர்மடி கங்குலும் துயில் மடிந்ததுவே[2]'' என்பதனாலும் அறிக. (453)

454. தளவின் பைங்கொடி தழீஇப் பையென
நிலவி னன்ன நேரரும்பு பேணிக்
கார்நயந் தெய்து முல்லையவர்
தேர்நயந் துறையுமென் மாமைக் கவினே.

இது, பருவவரவின்கண் தலைமகள் ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

உரை : வெண்முல்லைகள் செம்முல்லையின் பசியகொடியினைச் சூழ்ந்து நிலவு போலும் நேரிய அரும்புகளைத் தாங்கிக் கார்ப் பருவம் வந்ததும் நயந்து மெல்ல மலர்தலை எய்தும்; அவ்வாறே என் மாமைக்கவினும் காதலர் ஏறி வரும் தேரை விரும்பியிருந்து, அவர் வரக்கண்டதும் விளங்கும். காண் எ. று.

தளவு, செம்முல்லை. முல்லை பைங்கொடி தழீஇ அரும்பு பேணி, கார் நயந்து பையென எய்தும்; மாமைக்கவின் தேர் நயந்து உறையும் என இயையும். மலர்தலை எய்தும் காரெதிர் பொழுதின் கண் என்க. அரும்பு கட்டிக்கார்ப்பருவம் வந்ததும் மலர்தலைச் செய்தலின், அரும்பு பேணிக் கார் நயந்து எய்தும் என்றார்.

1. குறுந். 191. 2. நற். 287.

அரும்பும் வெண்ணிறத்த தாதல் பற்றி நிலவின் அன்ன எனப் பட்டது.

முல்லை, கார் வரவு நோக்கி அரும்பு பேணி, வந்தவழி மலர்தலை எய்துவது போலக் காதலன் தேர்வரவு நோக்கியிருக்கும் தன் மாமைக்கவின் வந்ததும் விளங்கித் தோன்றும் என்பாள், அவர் தேர் நயந்து உறையும் என் மாமைக்கவின் என்றாள்.

தாம் குறித்த பருவம் போந்தமையின் அவரும் தாழாது வருவரெனக் கருதி ஆற்றியிருக்கின்றேனென்பாள், தன் மாமைக் கவின்மேல் வைத்துக் கூறினாள் ஆகவே, அவன் வாராது தாழ்த்த வழித் தான் தன் கவின் வாடி மெலியுமாறு கூறினாளாம். (454)

455. அரசுப்பகை தணிய முரசுபடச் சினைஇ
ஆர்குர லெழிலி கார்தொடங் கின்றே
அளியவோ வளிய தாமே யொளிபசந்து
மின்னிழை நெகிழச் சாஅய்த்
தொன்னல மிழந்தவென் றடமென் றோளே.

இஃது ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

ப. உரை : அரசு பகை தணிந்து எல்லாரும் மீளும் வண்ணம் கார் வந்தது; இத் தோளுக்குரியவரோ போதரார் என்றவாறு

உரை : அரசர் பகைபொருட்டு மேற்கொண்ட போர்வினை தணியவும், முரசங்கள் ஒளியடங்கவும், மிக்க முழக்கத்தையுடைய மேகம் மின்னி யிடித்துக் கார்ப்பருவத்தைச் செய்யத் தொடங் கிற்று; அது, தாம் குறித்த பருவமெனக் கருதி அவர் வாராமை யின், மேனி யொளி குன்றப் பசலை பாய்ந்து, மின்னுகின்ற இழைகள் நெகிழ்ந்து நீங்கும் வண்ணம் மெலிந்து தம் பண்டை அழகினை இழந்த என் பெரிய மெல்லிய தோள்கள் மிகவும் அளிக்கத்தக்கவாயின எ. று.

எனவே, அரசர் பகை தணியுமாறு கார்வந்ததே யன்றி என் மென்றோள் மெலிவு கெடுமாறு அவர் வந்திலரென இரங்கிய

வாரும். பகை, ஆகுபெயர். முரசுபட என்பதனை உவமமாக்கு தலுமொன்று. கார்காலம் போர்வினைக்கு ஏற்றதன்மையின், அரசு பகை தணிய என்றும், போர்முரசும் ஒடுங்குதலால் முரசு பட என்றும் கூறினர். சினைஇ என்பது இடிக்கு இலக்கணை. அடுக்கு, தோளின் மெலிவு மிகுதியுணர்த்திற்று.

கார்ப்பருவ வரவில் மீண்டு வருவதாக வற்புறுத்திச் சென்ற தலைமகன் வருமுன்பே கார்ப்பருவம் வரக் கண்ட தலைமகள் ஆற்ருளாய், வினைவயிற் பிரிந்த வேந்தர் மீளுதற்குரிய கார்காலம் வந்துவிட்ட தென்பாள், அரசு பகை தணிய முரசுபட எழிலி கார் தொடங்கின்று என்றும், இந்நிலையில் வருதற்குரிய தலைமகன் வாரா மையின், அவனுக்குரிய என் தோள்கள் வருந்தத்தக்க மெலிவை எய்துவ வாயின என்பாள், அளியவோ அளிய தாமே என்றும், நிறம் கெட்டுப் பசலை எய்திய திறத்தை ஒளி பசந்து எனவும், மெலிந் தொழிந்தமையை மின்னிழைநெகிழச்சாஅய் எனவும், இளமையழகு கெடுதலைத் தொன்னலம் இழந்த என் தடமென்ருேள் எனவும் கூறினள். தலைமகள் தோள் தலைவற் குரியதென்பதை, "சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே மாசின் ருதலும் அறியான்[1]" எனச் சான்ருேர் கூறுதல் காண்க. ஒளி பசந்து என்றது பசலை பாய்தலும், மின்னிழை நெகிழ என்றது உடம்பு நனிசுருங்குதலுமாம்.

பெருமையுடையவாயினும் தலைமகன் வினைமுற்றி மீளுங் காறும் ஆற்றகில்லாமையின், மென்ருேள் என்ருள். (455)

456. உள்ளார் கொல்லோ தோழி வெள்ளிதழ்ப்
பகன்மதி யுருவிற் பகன்றை மாமலர்
வெண்கொடி யீங்கைப் பைம்புத லணியும்
அரும்பனி யளைஇய கூதிர்
ஒருங்கிவ ணுறைதல் தெளித்தகன் ருேரே.

இது, குறித்த பருவம் வரவும் தலைமகன் வந்திலனுக ஆற்ரு ளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை : தோழி, வெண்மையான இதழ்களையும் பகற்போதில் தோன்றும் திங்களைப்போலும் உருவினையுமுடைய பகன்றையின்

1. அகம். 32.

பெரிய மலர், வெள்ளிய கொடியாகிய ஈங்கையின் பசிய புதர் அழகுற மலரும், பொறுத்தற்கரிய பனிப்போடு கலந்த கூதிர்ப் பருவத்தின்கண், நம்மோடு கூடி ஒருங்கு வதிதற் கேற்பக் கார்ப் பருவத்தே வருவல் என நம்மைத் தெளிவித்துப் பிரிந்த காதலர் அப்பருவவரவினை நினையார் கொல்லோ, நினைவரேல், வாராதிரார் ஆகலான் எ. று.

நினைவரேல் முதலாயின அவாய்நிலையான் வந்தன. பகன்றை, சிவதைக்கொடி "பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி[1]" என்பத னுரையில் நச்சினார்க்கினியர், "இது சிவதை; 'பகன்றைப்பூ உற நீண்ட பாசிலைத் தாமரை' என்புழி வெள்ளிவட்டில் உவமை கோடலின், இது கிலுகிலுப்பை யன்று" என்று கூறுதலா லறிக. இது பனிக்காலத்து மலர்தலை, "பாண்டி லொப்பின் பகன்றை மலரும், கடும்பனி யற்சிரம்[2]" என்று சான்றோர் கூறுதல் காண்க.

பகன்றைக்கொடி ஈங்கைப் புதலிற் படர்ந்து மலர்ந்து விளங்குவது பற்றி, வெண்கொடி ஈங்கைப் பைம்புதல் அணியும் என்றார். பைம்புதல் அணியும் கூதிர், அரும்பனி அளைஇய கூதிர் என இயையும். கூதிரைத் தொடர்வது பனிப்பருவ மாயினும் கூதிர்தானும் குளிரைச் செய்யும் பருவ மாகலின், அரும்பனி அளைஇய கூதிர் என்றார்.

கார்ப்பருவத்தே வந்தாலன்றிக் கூதிர்க்கண் ஒருங்கு வதிதல் கூடாமையின், கூதிர் ஒருங்கிவண் உறைதல் தெளித்தகன்றோரே என்றும்; ஈங்கை மலர்தலால் கார்ப்பருவம் வரக் கண்டவள் அவன் வாராமை யறிந்து, உள்ளார் கொல்லோ என்றும் கூறினாள்.

கூதிர் காலத்தே மலர்தற் குரிய பகன்றை கார்ப்பருவத்தே மலர்ந்து ஈங்கைப்புதலை அணிசெய்ய நம் காதலர் வருதற் குரிய கார்ப்பருவம் வந்தும், தாம் வந்து நலன் தாராராயின், இது தான் குறித்த பருவமென்பதை அறவே மறந்தாரேயாவர் என்ற வாறு. ஆகவே, யான் ஆற்றுமாறு என்னை என்பதாம். கார்

1. குறிஞ் 88. 2. நற். 56.

தொடங்கின்றே காலை காதலர், வெஞ்சின வேந்தன் வியன்பெரும் பாசறை, வென்றி வேட்கையொடு நம்மு முள்ளார், யாதுசெய் வாங்கொல் தோழி[1]'' எனப் பிருண்டும் தலைவி வருந்துமாறு காண்க. (456)

457. பெய்பனி நலிய வுய்தல் செல்லாது
குருகினம் நரலும் பிரிவருங் காலைத்
துறந்தமை கல்லார் காதலர்
மறந்தமை கல்லாதென் மடங்கெழு நெஞ்சே.

இது, பருவவரவின்கண் ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உரை: பெய்கின்ற பனி வருத்துதலால் உய்யுமா றின்றிப் புள்ளினம் ஒருங்கு கூடி யொலிக்கும் பிரிதற் கரிய கார்ப்பருவத்தே நம்மைப் பிரிந்துறைதல் ஆற்றுராயினும், என் மடம் பொருந்திய நெஞ்சம், அவரை மறந்து சிறிது போதும் அமையாதாகலின் யான் செய்யுமாறு என்னை எ. று.

பெய்பனி, வினைத்தொகை. தொகைச் சொல்லாற் கூறியது, தனக்குரிய கால மெய்தியவழித் தவருது பெய்யும் தொழிற்பண்பை உணர்த்தற்கு. உய்தல் செல்லாது, ஒருசொல்லாய் உய்யாது என்பதுபட வந்தது. ''கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது[2]'' என்ருற் போல. குருகினம், நாரை, கொக்கு முதலிய நீர்வாழ் பறவைகள். நீரின்கண் வாழும் இயல்பினவாகிய குருகுகளும் பெய்பனிக்கு ஆற்ருது வருந்துகின்றன என்றற்குக் குருகினம் நரலும் என்ருர். துறந்து அமைகல்லார் காதலர் என்றது தோழி கூற்றைக் கொண்டு கூறியது.

பெய்பனிக்கு ஆற்ருது குருகினம் நரலும் பிரிவருங்காலை யென்பதைக் காதலர் நன்கு அறிவராகலின், அவர் விரைவில் வந்தெய்துவர்; இப் பனிப்பருவத்தில் நின்னைப் பிரிந்து சிறிது போதும் இருத்தல் வல்லுநரல்லர் என்றற்கு, பிரிவரு காலைத்

1. அகம். 364. 2. அகம். 2.

துறந்து அமைகல்லார் காதலர் எனத் தோழி கூறினளாக, நின் சொல்வழி யான் தேறியிருந்தே னாயினும், என் நெஞ்சம் இருத்தற் குரிய திண்மை யிழந்து அவரை நினைந்தவண்ணம் உளது என்பாள், மறந்து அமைகல்லாது என் மடங்கெழு நெஞ்சு என்றும், தாம் குறித்த பருவம் வந்துழியும் காதலர் வாராமையின் நம்மை மறந்தனர் என்று கொண்டதனைத் தோழி வற்புறுத்திய வழியும் விடாமையின் மடங்கெழு நெஞ்சு என்றும் கூறினள் எனக் கொள்க. (457)

458. துணர்க்காய்க் கொன்றைக் குழற்பழ
மூழ்த்தன
அதிர்பெயர் கெதிரிய சிதர்கொள் தண்மலர்
பாணர் பெருமகன் பிரிந்தென
மாணல மிழந்தவென் கண்போன் றனவே.

இது, பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் வரவு பார்த்திருந்த தலைமகள் பருவமுதிர்ச்சி கூறி ஆற்றாளா யுரைத்தது.

ப. உரை : சிதர்கொள் தண்மலர் என்றது சிந்துதல் கொண்ட தண்ணிய கொன்றைப்பூ என்றவாறு சிதர், சிந்துதல்.

உரை : குலைபொருந்திய காய்களையுடைய கொன்றையின், மகளிர் குழல்போலும் பழங்கள் முற்றின; முழங்கிப் பெய்கின்ற மழைக்கு உதிர்ந்த அதன் தண்ணிய மலர்கள், பாணர்கட்கு அவர் வேண்டும் பொருள்களை வழங்கும் பெருமகனாகிய நம் காதலன் பிரிந்தானாக, அவன் பொருட்டு மாட்சிமை யுற்ற அழகிழந்து பசந்த என் கண்களைப்போல் பொன்னிறம் கொண்டு தோன்றின எ. று.

கொன்றையின் பழம் ஊழ்த்தலும் அதன் மலர்கள் உதிர்தலும் கூறியது கார்ப்பருவ முதிர்ச்சி யுணர்த்தற்கு. கொன்றைப்பழம் குழல்போறலை, ''வீயும் வியப்புறவின் வீழ்துளியான் மாக்கடுக்கை, நீயும் பிறரொடுங்காண் நீடாதே—ஆயுங், கழலாகிப் பொன் வட்டாய்த் தாராய்மடலாய்க், குழலாகிக் கோல்சுரியாய்க்

கூர்ந்து[1]'', என்று பிறரும் கூறினர். ''வென்றி மழவிடை யூர்ந் தார்க்குரியள் இக் கொன்றையம் பூங்குழலாள்[2]'' என்றார் பிறரும். இதற்கு உரை கண்ட அடியார்க்குநல்லார், ''கொன்றைப்பழக் குழற் கோதையர் என்றார் வளையாபதியினும்'' என்பர். பூத்த மரம் காய்த்துப் பழுக்குமிடத்துப் பூக்கள் உதிர்தல் இயல்பாயினும், கார்காலத்து மிகுபெயலால் விரைய உதிர்ந்தமை தோன்ற, அதிர்பெயற் கெதிரிய சிதர்கொள் தண்மலர் என்றார். சிதர், வண்டுமாம். உதிர்ந்த பூப் பொன்னிறம் விளர்த்துத் தோன்ற லின், பசலையுற்ற கண்ணுக்கு உவம மாயிற்று. ''கொன்றைப் பூவின் பசந்த வுண்கண்[3]'' என்ப. பாணர் பெருமகன், பாணர் களைப் புரக்கும் தலைவன்; ''அகவுநர்பெருமகன்[4]'' ''சான்றோர் பெருமகன்[5]'' என்பன காண்க.

காதலன் குறித்த கார்ப்பருவம் வந்தும் அவன் வாரானாக, ஆற்றாமை மிக்க தலைமகள் வருவலென்ற கார்ப்பருவம் வந்து கழியும் செவ்வி எய்துவது கண்டு வருந்துகின்றா ளாகலின் துணர்க்காய்க் கொன்றைக் குழற்பழம் ஊழ்த்தன என்றும், கார்காலத்திற் பெய்யும் கனவிய மழைக்கு ஆற்றாது கொன்றைப்பூ உதிர்தலின், அதிர்பெயர் கெதிரிய சிதர்கொள் தண்மலர் என்றும், மழையால் நனைந்து நிறம் விளர்த்துத் தோன்றும் பூ, பண்டைய அழகிழந்து பசந்து விளங்கும் கண்களை ஒத்தல் பற்றி, மாணலம் இழந்த என் கண் போன்றனவே என்றும் கூறினாள். வண்டு பாடக் கொன்றை பூவைச் சொரிதல், பாடி வரும் பாணர்க்குப் பொன் வழங்கும் தலைமகனை நினைப்பித்தலின், அவனைப் பாணர் பெருமகன் என்றாள். இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமையும் பசலை பாய்தலுமாம். (458)

459. மெல்லிறைப் பணைத்தோள் பசலை தீரப்
புல்லவு மியைவது கொல்லோ புல்லார்
ஆரரண் கடந்த சீர்கெழு தானை
வெல்போர் வேந்தனொடு சென்ற
நல்வய லூரன் நறுந்தண் மார்பே.

1. திணை. 150-98. 2. சிலப். 16. கொளு. 6.
3. ஐங். 500. 4. அகம். 113. 5. பதிற். 67.

இது, ''வேந்தன் வினைமுற்றினன்; நின் காதலர் கடுக வருவர்'' எனக் கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை: பகைவருடைய கடத்தற்கரிய அரண்களைக் கடந்த மறமாண்பு அமைந்த தானையினையுடைய வெல்லுகின்ற போரைச் செய்யும் வேந்தனுடன், வினைவல பாங்கனாய்ச் சென்ற நல்ல நன்செய் நிலங்களையுடைய ஊரனது நறுவிய தண்ணிய மார்பு, மெல்லிய தொடியணிந்த பெரிய தோள்களால் பசலை தீருமாறு யாம் தழுவுதற்கு அமையுமோ, அன்றி அமையாது விரிந்து விளங்குமோ எ. று.

இறை, ஆகுபெயர். பணை, மூங்கிலுமாம். சீர், அடற்றகையும், ஆற்றலும், படைத்தகையும் உடைமையால் எய்தும் மறப்புகழ். தலைமகனாதலின் வேந்தனுக்கு வினைவல பாங்கனாய்ச் சென்றான் என்பது அவாய் நிலையான் வந்தது.

வினைமேற் சென்ற வேந்தன் அதனை முடித்தனன் என்றும், அதனால் தலைமகன் வரற்கு அமைந்தான் என்றும் அறிந்துளாளாகலின், வேந்தனொடு சென்ற நல்வயலூரன் என்றும், தலைமகன் வரவு கேட்டு எய்திய உவகை மிகுதியால் புல்லு நினைந்து ஐயுற்று மெலிதலின், புல்லவும் இயைவது கொல்லோ என்றும் கூறினாள். இஃது ஐயம்செய்தல். (459)

460. பெருஞ்சின வேந்தனும் பாசறை முனியான்
இருங்கல் வெற்பன் றூதுந் தோன்றா
ததையிலை வாழை முழுமுத லசைய
இன்னா வாடையு மலைக்கும்
என்னா குவென்கொ லளியென் யானே.

இது, வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகனைப் பருவ முதிர்ச்சியினும் வரக்காணாது தலைமகள் சொல்லியது.

உரை: மிக்க சினத்தையுடைய வேந்தன் தானும் பாசறைக் கண் தங்குதலை வெறானாயினன்; அதனாற் பெரிய கற்கள் பொருந்திய மலைநிலத் தலைவனாகிய நம் காதலனிடத் திருந்து

தூதுகளும் வாராவாயின ; இவற்றிற் கிடையே நெருங்கிய இலைகளையுடைய வாழைமரத்தின் அடிமுதல் உச்சிவரை அசையும் வண்ணம் துன்பத்தைச் செய்யும் வாடைக்காற்றுப் போந்து வருத்தா நிற்கும் ; ஆகலின், அளிக்கத் தக்க யான் என்னாகுவேன் கொல்லோ, அறியேன் எ. று.

பாசறை இருப்புக்கு மிக்க சினம் காரணமாகலின், பெருஞ்சின வேந்தன் என்றார். பெருமை, மிகுதிப் பொருட்டு; "பெரும் பொருளாற் பெட்டக்க தாகி[1]" என்றாற் போல. கார்காலத்தில் பாசறை இருக்கை இன்பம் பயவாதாகலின், முனிதல் கூறப் பட்டது. வினைமுற்றும் செவ்வியை நெருங்குதலின், தூது வாரா தாயிற்றென்க. வேந்தனும் முனியான், தூதும்தோன்றா, வாடையும் அலைக்கும் ; ஆகவே என்னாகுவென் கொல், அளியேன் என இயையும். தாவரநூல் முறைப்படி வாழை, மரமெனற் காகா தாயினும். அடிப்பட்டு வந்த வழக்குப்பற்றி மரமென்றாம்.

வினை முடியாமையின் பாசறைக்கண் தங்கி அதனை முடித்தலே பொருளாகக் கருதினா னாகலின், வேந்தன் பாசறை முனியான் என்றும், போரிடைப் பகைவர்மாட்டுக் கண்ணோடாது வினைசெய்தல் வேண்டுதலின், பெருஞ்சின வேந்தன் என்றும், அவ்வேந்தனது தானை நோக்கி யிருத்தலின், வெற்பன் தூதும் தோன்றா என்றும், கார்ப்பருவம் முதிர்ந்து பனிப்பினைச் செய்து வருத்துதலின், இன்னா வாடையும் அலைக்கும் என்றும் கூறினாள். "நிலைமக்கள் சால வுடைத் தெனினும் தானை, தலைமக்கள் இல்வழியில்[2]" என்பவாகலின், தானை நோக்கியிருத்தல் இன்றியமையா தாயிற்று. இன்னா வாடை யென்றாள், காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல் கலந்து வருதலின். தூது தோன்றாமை யானும், வாடை அலைத்த லானும் ஆற்றாளாயினமை தோன்ற அளியென் யானே யென்றாள். உம்மை ஆற்றும் வாயிலாம் சிறப்புணர நின்றது. (460)

---

1. குறள். 732. 2. ஷை. 770.

47

தோழி வற்புறுத்தபத்து

இது, தலைமகன் பிரிந்தவழியும், பிரிந்து நீட்டியவழியும், அவன் குறித்த பருவவரவின்கண்ணும் ஆற்ருளாய் வேறுபட்ட தலைமகளைப் பருவம் அன்மையும், தலைமகன் அன்புடைமையும், பிற தகுவனவும் கூறித் தோழி வன்புறை வகையால் ஆற்றுவிக்கும் பாட்டுக்களின் தொகுதியாகலின் இப்பெயர்த்தாயிற்று.

461\. வான்பிசிர்க் கருவியிற் பிடவுமுகை தகைய
காண்பிசிர் கற்பக் கார்தொடங் கின்றே
இனையல் வாழி தோழி யெனைய தூஉம்
நிற்றுறந் தமைகுவ ரல்லர்
வெற்றி வேந்தன் பாசறை யோரே.

இது, பிரிவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி வரவு கூறி, ''உரைத்த பருவம் வந்த தாகலான் அவர் வருவர்'' என வற்புறீஇயது.

ப. உரை: கான் பிசிர் கற்ப என்றது மழை பெய்திட்டால் மரம் பெய்யும் என்னும் முறைமைபற்றிக் கூறியவாறு.

உரை: தோழி, மேகம் மழையைப் பெய்தலால் தொகுதியினை யுடைய பிடவங்கள் அரும்பரும்ப, கான்ம் அம் மழையினை யேற்றுத்

துளியைச் சிந்தாநிற்பக் கார்ப்பருவம் தொடங்குவதாயிற்று; வென்றியினை யுடைய வேந்தனது பாசறைக்கண் தங்கும் காதலர் அது தாம் வருவல் எனக்குறித்த பருவ மாகலின், சிறிதும் நின்னைப் பிரிந்திருத்தலை அமையாது கடுக வருவ ராகலின் நீ வருந்தற்க எ. று

பிசிர்கற்ப என்பது ஒருசொல்லாய்ச் சிந்தாநிற்ப என்னும் பொருள் தந்து நின்றது. பிசிர், மழையினது நுண்ணிய துளி. கருவி, தொகுதி. பிடவு, முல்லைவகையுள் ஒன்று; மரமுமாம். இது கொத்துக் கொத்தாக மலர்வதுபற்றிக் கருவியின் பிடவு முகை தகைய என்றார். ''தொகுமுகை விரிந்த முடக்காற் பிடவு[1]'' என வருதல் காண்க. பிடவு, பிடா எனவும் வழங்கும்; ''யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்[2]'' என ஆசிரியர் கூறுவது காண்க. தகை, அழகு. மலர்த்து அழகுசெய்ய என்னும் பொருளில் ஈண்டுத் தகைய என்றதனால், இது தகை யென்னும் பெயரடியாகப் பிறந்த வினையெச்சம் எனக் கொள்க. பிசிர் கற்றலாவது, மழை பெய்த பின்னர், மரங்கள் தாங்கி நிற்கும் மழைநீரைத்துளித்தல், ''பெயல் உலந் தெழுந்த பொங்கல் வெண்மழை, அகலிரு விசும்பில் துவலை கற்ப[3]'' என்று பிறரும் கூறுவது காண்க. கார் தொடங்கின்று; ஆகலின், பாசறையோர் அமைகுவரல்லர், இனையல் என மாறிக் கூட்டி வினைமுடிவு செய்க. கடுக வருவ ராகலின் என்பன முதலாயின குறிப்பெச்சம்.

கான்பிசிர் கற்பக் கார் தொடங்கின்றே என எடுத்து மொழிந் தாள், அது தலைமகன் பிரிவின்கண் வற்புறுத்திய பொழுதாகலின்; பிறரும், ''துனைதரு தண்கார் வருதும் யாம் எனத் தேற்றிய பருவம் காண் அது பாயின்றால் மழையே[4]'' என்பது காண்க. பிரிந்த காதலர் நின்னொடு பொருந்துதலை எஞ்ஞான்றும் நினைந் தொழுகும் நீர்மையர் என்றற்கு, எனையதூஉம் நிற்றுறந்து அமை குவரல்லர் என்றாள்; பிறரும், ''ஆண்டு அமைந்து உறையுந ரல்லர், நின் பூண்தாங் காகம் பொருந்துதல் மறந்து[5]'' எனத் தோழி வற்புறுத்துமாறு அறிக.

1. அகம். 344. 2. தொல். எழுத்து. 229.
3. நெடுநல். 19–20 4. அகம். 85. 5. ஷை. 159.

வெற்றி வேந்தன் எனவே வினைமுற்றுதல் ஒருதலை என்பது பெற்றும். வேந்தன் வினைமுடித்தமையும், கார்ப்பருவம் தொடங்கினமையும், தலைமகன் கடுக வருதற் கேதுவாயினமை பெற்றும். (461)

462. ஏதில பெய்ம்மழை காரென மயங்கிய
பேதையங் கொன்றைக் கோதைநிலை
நோக்கி
எவளினி மடந்தைநின் கலிழ்வே நின்வயின்
தகையெழில் வாட்டுந ரல்லர்
முகையவிழ் புறவி னாடிறந் தோரே.

இது, பருவம் கண்டு வேறுபட்ட கிழத்தியைத் தோழி பருவம் அன்றென வற்புறீஇயது.

உரை: மடந்தாய், அரும்புகள் மலரும் முல்லைக் காட்டினையுடைய நாட்டினைக் கடந்து சென்ற காதலர், நின்னிடத்து உளதாய மேம்பட்ட அழகினைக் கெடச் செய்யும் பான்மைய ரல்லராகலின், இயைபில்லன வாய மழையைப் பெய்யும் மேகத்தைக் கார்ப்பருவத் தெழும் மேகமெனப் பிறழக் கொண்ட அறியாமையால் மலர்ந்த கொன்றையின் கோதை போலும் பூக்கள் நின்ற நிலையை நோக்கி இப்பொழுது வருந்தும் நின் துயரம் என்ன பயனைச் செய்யுமோ? கூறுக எ. று.

பெய்தற் குரிய கார்காலமாகிய ஏது இல்லையாகவும் பெய்கிறது இம் மழை என்பது தோன்ற ஏதில பெய்ம்மழை என்றார்; "மின்னுபு வானேர்பு இரங்கு மொன்றோ அதன் எதிர் கான மஞ்ஞை கடிய ஏங்கும், ஏதில கலந்த இரண்டற்கு என் பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே[1]" என்றார் பிறரும். பேதைங் கொன்றை என்றது விரிக்கும் வழி விரித்தல். தகையெழில், "தகை வனற்பு[2]" என்றார்போல மிக்க அழகு என்பதுபட நின்றது. நாடு இறந்தோர் தகையெழில் வாட்டுந ரல்லர்; ஆகலின், இனி நின் கலிழ்வு எவன் என மாறிக் கூட்டி வினை

1. குறுந். 194. 2. அகம். 69.

முடிவு செய்க. கொன்றை, கோதைபோல் மலர்தலைப் பிருண்டும், ''குறும்பல் கோதை கொன்றை மலர[1]'' என்று கூறினர். கோதை, பூமாலை.

பெய்தற் கேதுவாகிய கார்ப்பருவ மழையன்று என்று உரைக் கின்ருளாகலின், ஏதில பெய்ம்மழை யென்றும், அதனை ஏதுவாகக் கொண்டு, காரெனக் கருதிக் கொன்றை மலர்ந்தது அறிவுடைமை யன்றெனப் பழித்தலின் காரென மயங்கிய பேதையங் கொன்றை என்றும், பேதையின் செயல் நோக்கிக் கலுழ்தல் பயனில் செயல் என்பாள், எவன் இனி மடந்தை நின் கலிழ்வே என்றும், இனி என்றதனல் இதுகாறும் அறிவு அறைபோகாது அவர் தெளித்த சொல் தேறி யிருந்த நீ இப்போழ்து கலிழ்தல் நன்றன்று என்றும், நாடு கடந்து சென்ரு ராயினும், நின்மாட்டுப் பெருங்காதலர் என்பாள், தகையெழில் வாட்டுநர் அல்லர் என்றும் கூறினள்.

நாடு இறந்தா ராயினும் நின்பாற் பேரன்பின ராகலின், நின் நலம்கெட ஆண்டே தங்குவா ரல்லர் நீ வருந்தற்க என்பாள், தகையெழில் வாட்டுநர் அல்லர் என்ருள் என்றுமாம். ''அகன்றன ராயினும் பெரும்பேரன்பினர் தோழி[2]'' எனத் தோழி கூறுவது காண்க. வற்புறுத்தும் தோழி மலர்ந்து தோன்றும் கொன்றை முதலியவற்றிற்குப் பேதைமை ஊட்டிக் கூறுதலை ஏனைச் சான்ருேரும், ''மடந்தை மதியின்று, மறந்து கடன்முகந்த கமஞ் சூன் மாமழை, பொறுத்தல் செல்லாதி றுத்த வண்பெயல், காரென் றயர்ந்த வுள்ளமொடு தேர்வில, பிடவுங் கொன்றையுங் கோடலும், மடவ வாகலின் மலர்ந்தன பலவே[3]'' என்றும், ''மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை, கல்பிறங்கத்தம் சென்ருேர் கூறிய, பருவம் வாரா வளவை நெரிதரக், கொம்புசேர் கொடியிண ரூழ்த்த, வம்ப மாரியைக் காரென மதித்தே[4]'' என்றும் கூறுப.

முகையவிழ் புறவின் நாடு என்றது, கார்ப்பருவ வரவை அவர்க்கு அப்புறவே மலர்ந்து காட்டித் தாழாது விரைந்து மீளச் செய்யு மாகலின் நீ வருந்துதல் ஒழிக என வற்புறுத்தியவாறு. (462)

1. ஐங். 497. 2. அகம். 91. 3. நற். 99. 4. குறுந். 66.

463\. புதன்மிசை நறுமலர் கவின்பெறத்
தொடரிநின்
நலமிகு கூந்தல் தகைகொளப் புனைய
வாரா தமையலோ விலரே நேரார்
நாடுபடு நன்கலந் தரீஇயர்
நீடினர் தோழிநங் காத லோரே.

இது, குறித்த பருவம் வரவும் தலைமகன் தாழ்த்துழித் தோழி காரணம் கூறி வற்புறீஇயது.

உரை: தோழி, புதர்களின் மேலே மலர்ந்து தோன்றும் நறிய மலர்களை அழகுறத் தொடுத்து நின் வனப்பு மிக்க கூந்தல் அழகு கொள்ளப் புனைந்து மகிழ்வான் நம் காதலர் வாராதமைதலை ஒருகாலும் செய்யார்; ஆயினும், பகைவர் நாட்டின்கட் பெறப்படும் சீரிய பொருள்களைக் கொணர்தற்பொருட்டுத் தாழ்த்தனர், காண் எ. று.

தொடர்புபடத் தொடுத்தலைத் தொடரி என்றார்; ''மனைவிளக் குறுத்து மாலை தொடரி[1]'' என்றாற்போல. காதலர் என்றதற் கேற்பக் கவின்பெறத் தொடரி என்றும், ''தகைகொளப் புனைய'' என்றும் கூறினாள். தலைமகன் பிரிந்தவழித் தலைமகள் தன் கூந்தலிற் பூச்சூடி ஒப்பனை செய்து கோடல் கற்புநெறி யன்மை யின், தகைகொளப்புனைய என்றார். பிரூண்டும் நின் காதலர் விரைந்து வந்தன ராகலின், ''தொடிதோள் இவர்க எவ்வமும் தீர்க, நெறியிருங் கதுப்பின் கோதையும் புனைக[2]'' எனத் தோழி கூறுதல் காண்க. நன்கல மெனவே, நினக்கு நலம்செய்யும் பொருள்கள் என்றாளுமாம். நன்கல மாவன; பகைவர் தரும் திறைப்பொருளும், அவர்தம் நாட்டினை நலமுறுவித்தலால் எய்தும் பொருளுமாம்.

பகைவர் நாடுகளை வென்று, அவர் தரும் திறைப்பொருள் பெறுதலே யன்றி, அந் நாடுகளைத் தமவாக்கி, அவற்றின்கண் ஆக்கம் மிகுமாறு தங்கி ஆவன புரிந்து பொருள் வரும் வாரி

---

1. அகம். 86. 2. ஷை. 269.

பெருக்குதல் அரச நீதி யாகலின், நேரார் நாடுபடு நன்கலம் தரீஇயர் நீடினர் என்றாள். ''மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய, முல்லை முதலாச் சொல்லிய முறையால், பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும், இழைத்த வொண்பொருண் முடியவும் பிரிவே[1]'' என்று விதித்தும், ''நனிபுகன்று உறைதும் என்னது ஏற்றெழுந்து, பனிவார் சிமையக் கானம் போகி. அகநாடு புக்கு அவர் அருப்பம் வௌவி, யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து, மேம்பட மரீஇய வெல்போர்க் குரிசில்[2]'' என்று கூறியும் சான்றோர் காட்டுதல் உணர்க.

நன்கலம் தருற்பொருட்டுச் சிறிது நீடின ராயினும், நின் நன்னலம் மறவாத நெஞ்சின ராகலின் விரைந்து வருவர் என்பாள், வாராது அமையலோ விலர் என்றாள். ''காடிறந் தகன்றோர் நீடின ராயினும், வல்லே வருவர் போலும் ....மாவின் தளிரே ராகம் தகைபெற முகைந்த, அணங்குடை வனமுலைத் தாயநின், சுணங்கிடை வரித்த தொய்யிலை நினைந்தே[3]'' என்று பிறரும் கூறுவது காண்க. (463)

464. கண்ணெக் கருவிளை மலரப் பொன்னென
இவர்கொடிப் பீர மிரும்புதன் மலரும்
அற்சிர மறக்குந ரல்லர்நின்
நற்றோண் மருவரற் குலமரு வோரே.

இது, வரைந்த அணுமைக்கண்ணே பிரிந்த தலைமகன் குறித்த பருவம் வந்துழி, இதனை மறந்தார் என்ற தலைமகட்குத் தோழி, ''வரைவதற்கு முன்பு அவர் அன்புடைமை இதுவாகலான் மறத்தல் கூடா'' தெனச் சொல்லி வற்புறீஇயது.

உரை: தோழி, வரைதற்கு முன்பு, நின்னுடைய நல்ல தோள்களைக் கூடுதல் கருதிப் பல்லாற்றானும் துயருழந்து வருந்தின ராகலின், கருவிளைகள் கண்போல் மலரவும், அருகுள்ளவற்றைப் பற்றிப்படரும் பீர்க்குத் தான் படர்ந்த பெரிய புதலின்கண் பொன்

1. தொல். பொ. 28. 2. மதுரை. 148-51. 3. அகம். 177.

போல் மலரவும் எய்தும் பனிக்காலத்தே நின்னை மறந்துறைவா ரல்லர் எ. று.

கருவிளை, கருங்காக்கணம்பூ. இது மகளிர் கண்போன் மலர்தலை, "காதலர்ப் பிரிந்த கையறு மகளிர், நீர்வார் கண்ணிற் கருவிளை மலர[1]" என்பதனாலும், பீர்க்குப் பொன்போல் மலர்தல், "புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப், பொன் போற் பீரமொடு புதற்புதல் மலர[2]" என்பதனாலும் அறிக. பீர்க்கம்பூ மகளிர் பசலைபோறல், "புதலிவர் பீரி னெதிர்மலர் கடுப்பப், பசலை பாய்ந்த நுதலேனாகி[3]" என்று சான்றோர் கூறுதலால் அறியப்படும். உலமரல், அலமரல் போல்வதோர் உரிச்சொல்; "ஊறில் வழிகளும் பயில வழங்குநர், நீடின்ருக இழுக்குவர் அதனால், உலமரல் வருத்தம் உறுதும்[4]" "உலமரல் உயவுநோய்க்கு உய்யுமா றுரைத்துச்செல்[5]" என்று சான்றோர் வழங்குதல் அறிக. மருவரல், கூடுதல்.

தலைமகள் தலைமகனைப் பிரிந்து கையற்று வருந்துவதனாலும், மேனி பசலைபாய்ந்திருத்தலாலும் இவையிரண்டனையும் உடன் கூறினாள். பல்லாருவன, களவின்கண் இரவினும் பகலினும் குறி வழி யொழுகலும், இடையீடு படுதலும், சேட்படுக்கப் படுதலும் முதலாயின. மறப்பவராயின் இத்துணை இடையீடுகளையும் தாங்கி நின்னை மணப்பா ரல்லர்; ஆகவே, அவர் நின்பாற் பிரிவருங் காதல ரென்பாள், நற்றோள் மருவரற்கு உலமருவோரே என்றும், அப்பெற்றியார் இது தாம் குறித்த பருவமென்று மறவாதே விரைய வருவா ரென்றற்கு, அற்சிரம் மறக்குந ரல்லர் என்றும் கூறினாள். (464)

465. நீரிகு வன்ன நிமிர்பரி நெடுந்தேர்
கார்செய் கானம் பிற்படக் கடைஇ
மயங்குமல ரகல நீயினிது முயங்க
வருவர் வாழி தோழி
செருவெங் குரிசில் தணிந்தனன் பகையே.

---

1. அகம். 294. 2. நெடுநல். 13-4. 3. அகம். 135.
4. ஷை. 18. 5. கலி. 113.

இது, பருவம் கண்டு வேறுபட்ட தலைமகளை வேந்தன் வினை முடித்தா னெனக் கேட்ட தோழி வருவரென வற்புறீஇயது.

ப. உரை: நீரிகுவன்ன நிமிர்பரி என்றது நீரோட்டம் போல உயர்ந் தசைந்து செல்லும் செலவினையுடைய மா என்றவாறு.

உரை: தோழி, நீர் விழுதலை யொத்த மிக்க செலவினை யுடைய நெடிய தேரைக் கார்ப்பருவம் தொடங்கிய காடுகள் பிற் படுமாறு முற்படச் செலுத்திக் கூடுதற் குரிய அகன்ற மார்பினை நீ நன்கு முயங்குமாறு நம் காதலர் வருவர், போரை விரும்பும் அரசனும் பகை தணித்தற்குக் கொண்ட வினைமுற்றின னாகலான் எ. று.

தொழிலுவமம் தேரினது செலவின் விரைவுச் சிறப்பு உணர நின்றது; "குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக[1]" என்றார் பிறரும். கார்ப்பருவத்தே மலரும் மலர்களாலும், மழைத்துளியை யேற்றுச் சிந்துதலாலும் கார்ப்பருவ வரவினை இனிது காட்டுதலின், கார்செய் கானம் எனப்பட்டது, மயங்கு, முதனிலைத் தொழிற் பெயர். அஃது இப்பொருட்டாதல், "நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும், கலந்த மயக்க முலக மாகலின்[2]" என்பதனாலும் அறிக. மயங்குமலர் அகலம் என்பதற்கு மாலை யணிந்து விளங்கும் மார்பு என்றும் கூறுவர். செருவெங் குருசில் என்றது வேந்தனை; "பகைவெங் காதலர்[3]" என்றாற்போல. வீரராயினார் போரே விரும்பும் பான்மைய ராகலின், செருவெங் குரிசில் என்றார். "போரெனிற் புகலும் புனைகழல் மறவர்[4]" என்றும், "மண்டமர் நசையொடு கண்படை பெறாது[5]" என்றும் கூறினர் பிறரும்.

குரிசில் பகை தணிந்தமையாலும், தாம் குறித்த பருவம் வந்தெய்தினமையாலும், காதலர் விரைய வருவ ரென்பாள், வருவர் வாழி தோழி என்றும், தலைமகற்கு எய்தும் இன்பத்தை நீஇனிது முயங்க என்றும் கூறினாள். (465)

1. குறுந். 189. 2. தொல். பொ. 644. 3. ஐங். 452.
4. புறம். 31. 5. முல்லை. 67.

466. வேந்துவிடு விழுத்தொழி லெய்தி
யேந்துகோட்
டண்ணல் யானை யரசுவிடுத் தினியே
எண்ணிய நாளகம் வருதல் பெண்ணியல்
காமரு சுடர்நுதல் விளங்கும்
தேமொழி யரிவை தெளிந்திசின் யானே.

இது, பிரிவின்கண் ஆற்ருளாகிய தலைமகளை, அவர் போன காரியம் இடையூறின்றி முடித்து வருதல் பல்லாற்ருனும் தெளிந்தேன் எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

உரை: பெண்மைக்குரிய இயல்பு, அழகிய ஒளி பொருந்திய நெற்றியிடத்தே விளங்கும் இனிய மொழிகளையுடைய அரிவையே. பெருவேந்தர் பொருட்டுச் செல்வதாகிய விழுமிய தூதினை மேற்கொண்டு சென்று முடித்து, உயர்ந்த கொம்புகளையுடைய பெரிய யானை மிக்க அவ்வரசர்பால் விடைபெற்றுக்கொண்டு நமக்குக் குறித்த பருவத்தே தாழாது வருதலை இப்பொழுது பல்லாற்ருனும் அறிந்தேன்; ஆகலின், நீ ஆற்றியிருப்பாயாக எ. று.

''வேந்துவிடு தொழிலொடு சென்றனன்[1]'' என்ருற் போலாது, வேந்துவிடு விழுத்தொழில் என்றது, உயர்தொழிலாகிய தூதின் மேல் நின்றது; ''வேந்துவிடு விழுத்தூது ஆங்காங்கு இசைப்ப[2]'' என்று பிறரும் குறிப்பது காண்க. வேந்து என்றது அரசர் இனத்துக்குரிய பண்புகொள் பெயராய் விழுத்தொழிலாகிய தூதினைச் சிறப்பித்து நின்றது. அரசு என்றது, தூதுவினையால் சந்து செய்விக்கப்பட்ட வேந்தர் மேலதாயிற்று. விடுத்தலாவது, ஈண்டு வேந்தர்க்கு விடை கொடுக்குமாற்ருல் தான் அவர்பால் விடைபெற்று மீளுதல்; ''ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன[3]'' என்பதனுல், தலைமகன் தூதுபோதல் அமையும் என அறிக. பெண்ணியல் நுதலிடத்தே விளங்கும் அரிவை, தேமொழி அரிவை என இயையும். பெண்ணியல், கண்ணிடனுடல், தோள் இடம் துடித்தல், நுதலொளி சிறத்தல் முதலிய பெண்பாற் குரிய குறிகள்.

---

1. புறம். 319. 2. ஷை. 284. 3. தொல். பொ. 26.

பல்லாருவன. தலைமகனோடு உடன்சென்று மீண்டோர் கூறுவனவும், நன்னிமித்தமும் பிறவுமாம். சின், முன்னிலை யசைச்சொல்; ''ஏனையிடத்தொடும் தகுநிலை யுடைய என்மனார் புலவர்[1]'' என்றதனால் தன்மைக்கண் வந்தது.

தற்பயன் கருதாது நாட்டின் நல்லரசு கண்ணிய செலவாதலின் தலைவனது தூதிற் பிரிவை வேந்துவிடு விழுத்தொழில் என்றும், அதனை மேற்கொண்டு சென்றவன் இடையூறின்றி இனிது முடித்தமை தெளிந்து கூறலின், எய்தி என்றும், அதனால் அவன் பொன்றுப் புகழும் குன்றுப் பொருளும் பெற்று மீளுதலை, ஏந்து கோட்டு அண்ணல் யானை அரசு விடுத்து என்றும், பிரிவின்கண் தான் குறித்த நாளை மறவாது நினைவிற் கொண்டு அக் கால வெல்லைக்குள் மீள்வன் என்பாள், எண்ணிய நாளகம் வருதல் என்றும், அதனை நின்பால் தோன்றும் சில பெண்மைக்குறிகளால் தெளிந்தேன் என்பாள், பெண்ணியல் காமர் சுடர்நுதல் விளங்கும் என்றும், தெளிந்திசின் யானே என்றும் கூறினாள். காதற் கொழுநற் குளவாகும் நன்மை தீமைகள் மகளிர் மேனிக்கண் தோன்றும் சில குறிகளால் உணரப்படும் என்பது பற்றி, பெண்ணியல் காமர் சுடர்நுதல் விளங்கும் என்றாள். ''சென்றோர் புனை நலம் வாட்டுந ரல்லர். மனைவயின் பல்லியும் பாங்கொத் திசைத்தன, நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே[2]'' என்றும், ''இடூஉ ஊங்கண் இனிய படூஉம், ...பொய்யலர் வருவர் வாழி தோழி[3]'' என்றும் தோழி வற்புறுத்துவது காண்க. (466)

467. புனையிழை நெகிழச் சாஅய் நொந்துநொந்
தினையல் வாழியோ இகுளை வினைவயின்
சென்றோர் நீடினர் பெரிதெனத் தங்காது
நம்மினும் விரையு மென்ப
வெம்முரண் யானை விறற்போர் வேந்தே.

இது, தலைமகன் வினைவயிற் பிரிய ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

---

1 தொல். சொல். 275. 2. கலி. 11. 3. நற். 246.

ப. உரை: சென்ருேர் நீடினர் பெரிது என்றது பெயர்த்துரை.

உரை: தோழி, வெவ்விய மாறுபாட்டினை யுடைய யானைப் படை கொண்டு சிறந்த போரைச் செய்யும் வேந்தன் தான் சென்ற விடத்தே நெடிது தங்கினன் என்றேனுக, அவ்விடத்தே தங்காமல் போந்து கூடுதலை நம்மினும் மிக விரைகுவானுயினன் என உடன் சென்று மீண்டோர் கூருநிற்ப ராகலின், வினைவயிற் பிரிந்த நம் காதலர் விரைய வாராது மிகவும் தாழ்த்தனர் எனச் சொல்லி அழகுற அணிந்த இழைகள் நெகிழ்ந்து நீங்குமாறு உடம்பு நனி சுருங்கி உளம் மிக வருந்தி அழுதலைச் செய்யற்க எ. று.

புனையிழை. வினைத்தொகை. அடுக்கு மிகுதிப் பொருட்டு; ''சில்செவித் தாகிய கேள்வி நொந்து நொந்து[1] என்ருற் போல. இகுளை, தோழி; ''இகுளை கேட்டிசின் காதலந் தோழி[2]'' என வருதல் காண்க. வேந்து என்றது தோழியால் வினவப்பட்டோர் தலைமகனைக் குறித்துரைத்தது; தோழி கூற்ருக்கினும் அமையும். சென்ருேர் நீடினர் பெரிதென என்றதை இரண்டிடத்தும் கூட்டி, நீடினர் பெரிதென இனையல் எனவும், நீடினர் பெரிது எனத் தங்காது .... விரையும் என்ப எனவும் உரைக்க.

உண்டியிற் சுருங்கி உடம்பு மிக மெலிந்து உறக்கமுமின்றி வருந்தும் தலைமகளது ஆற்ருமையை விதந்து, புனையிழை நெகிழச் சாஅய் நொந்து நொந்து என்றும், பிரிந்தோர் நின் மாண்நலம் விழைந்து மீளுங்கால் அது நின் பால் குன்றியிருக்கு மாயின் பெரிதும் வருந்துவ ராகலின் நீ மெலிதல் கூடா தென்பாள், இனையல் வாழியோ இகுளை என்றும், அவர்க்குத் தாம் மேற் கொண்ட வினையினும் நின் கூட்டமே பொருளாதலின், அதனை விரைந்து முடித்துத் துனைபரி நெடுந்தேர் கடவிக் கடுக வருவா ராயினர் என்பாள், நம்மினும் விரையும் என்றும், அதனை உடன் சென்று மீண்டோர் பலரும் கூறுவர் எனப் பிறர்மேல் வைத்தும் கூறினுள். ''வினை பொருளாகத் தவிர்விலர் கடை சிவந்து, ஐய அமர்த்த உண்கண் நின், வையேர் வாலெயிறு ஊறிய நீரே[3]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. உடன் சென்று மீண்டோர் பால்,

---

1. புறம். 68. 2. அகம். 138. 3. அகம். 237.

சென்றோர் நீடினர் பெரிது என்றேனாக, உடனே அவர் என்னை மறுத்துத் தங்காது நம்மினும் விரையும் என்ப என்று தோழி கூறினாள்.

புனையிழை நெகிழ என்றது உடம்புநனி சுருங்கல், நொந்து நொந்து என்றது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை. (467)

468 வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்டக்
கார்தொடங் கின்றே காலை யினிநின்
நேரிறைப் பணைத்தோட் கார்விருந் தாக
வடிமணி நெடுந்தேர் கடைஇ
வருவ ரின்றுநங் காத லோரே.

இது, பிரிவுநீட ஆற்றாளாய தலைமகட்குத் தோழி பருவம் காட்டி இன்றே வருவரென வற்புறீஇயது.

உரை : வரிகளையுடைய தவளைகளும் தேரைகளும் ஒலிசெய்ய இக்காலைக் கார்ப்பருவம் தொடங்குவ தாயிற்று; இது தாம் வருவல் எனக் குறித்த பருவமாகலின், இனி, நம் காதலர் நின்னுடைய நேரிய தொடி யணிந்த பருத்த தோள்கட்குப் பொருந்திய விருந்தாதலை வேண்டி வடித்த ஓசையினையுடைய மணி கட்டிய நெடிய தேரைச் செலுத்தி இன்றே வருவர், காண் எ. று.

கார்ப்பருவத்தே தேரையும் தவளையும் ஒலித்தல் இயல்பாதல், "அவல்தொறும் தேரை தெவிட்ட[1]" எனப் பிறாண்டும் கூறிய வாற்றா லறிக. கறங்கல், தெவிட்டல் என்பன ஒருபொருட்கிளவி. நுணல், தவளை. "மணலுள் முழுகி மறைந்து கிடக்கும் நுணலும் தன் வாயால் கெடும்[2]" என்பர் முன்னுறையரயனார். காலை, ஈண்டுப் பருவத்தின் மேற்று. ஆர் விருந்து, பெறுதற்கரிய உயர்ந்தோர் விருந்து. வடிமணி, வடித்த ஓசையை யுடைய மணி. ஓசையின் இயல்பு அதனை வெளியிடும் மணிமேல் ஏற்றப் பட்டது.

---

1. ஐங். 453. 2. பழ. 184.

பிரிந்து சென்ற தலைவர் மீண்டு வந்தவழி விருந்து செய்து கோடல் மகளிர்க்கு விதியாகலின், பணைத்தோட்கார் விருந்தாக என்றும், அவன் வரவுணர்த்தி மகிழ்வித்தலின், வடிமணி நெடுந் தேர் என்றும், நம் காதலோரே எனப் பின்னர் கூறுதலின், இன்று என்றும் கூறினாள். (468)

469 பைந்தினை யுணங்கல் செம்பூழ் கவரும்
வன்புலநாடற் றரீஇய வலனேர்பு
அங்க ணிருவிசும் பதிர வேரொடு
பெயல்தொடங் கின்றே வானங்
காண்குவம் வம்மோ பூங்க ணோயே.

இது, பிரிவுநீட ஆற்றாளாய தலைமகட்குத் தோழி, ''அவரை நமக்குத் தருதற்கு வந்தது காண் இப்பருவம்'' எனக் காட்டி வற்புறீஇயது.

ப. உரை.: அங்கண் இருவிசும்பு அதிர ஏரொடு பெயல் தொடங்கின்றே வானம் என்றது அவர் தப்பாது வருவரென்பது கூறிற்று.

உரை: பூப்போலும் கண்களை யுடையாய், பசிய தினையி னின்று உதிர்ந்து உலர்ந்தவற்றைச் செம்பூழ்ப் பறவைகள் கவர்ந்து உண்ணும் புன்செய்நில நாடனைக் கொணர்வான், மழை வலமாக எழுந்து அகன்ற இடத்தை யுடைய விசும்பின்கண் இடியேற்றோடு முழங்கிப் பெயலைத் தொடங்கிற்றாகலின், அவர் தப்பாது வருதலைக் காணலாம், வருக எ. று.

''பூவென் ஒருபெயர் ஆயியல் பின்றே, ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே[1]'' என்புழி உம்மையை எச்சவும்மையாகக் கோடலால் மெல்லெழுத்து மிகுதலும் உரித்து எனக் கொண்டு அடக்குக. ''பூங்க ணுய மூக்க லூங்காள்[2]'' என்றார் பிறரும். செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. செம்பூழ், காடையினத்தைச் சேர்ந்ததொரு புள். வன்புலம், முல்லையைச் சார்ந்த புன்செய்

1. தொல். எழுத். 268. 2. நற். 90.

நிலப் பகுதி; ''வன்புலக் காட்டு நாட்டதுவே[1]'' என்பதனுலு மறிக. ஞாயிறே யன்றி மழையும் மேருமலையை வலமாக எழுந்து வருதலின், வலன் ஏர்பு என்ருர். ''பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு, கோடுகொண் டெழுந்த கொடுஞ்செலல் எழிலி[2]'' என்றும், ''தாழ்பெயற் பெருநீர் வலனேர்பு வளைஇ, மாதிரம் புதைப்ப[3]'' என்றும் சான்ருேர் கூறுதல் காண்க.

வானம் பெயல் தொடங்கும் கார்ப்பருவம் அவர் தாம் வருவது குறித்த பருவ மாகலின், தரீஇய என்றும், அப்பருவவரவில் தப்பாது வருவ ரென்பாள், காண்குவம் வம்மோ என்றும் கூறினுள். நடுக்கப் பொருட்டாய உரிச்சொல் முழங்குதல் மேற்று, பூங்க ணுேயே என்றது, தலைமகள் மழையெழுதல் நோக்கித் தலைமகன் வாராமையால் ஆற்ருளாயினமை யுணர்த்திற்று. வன்புலம் தனக் குரிய கார்ப்பருவ வரவில் தினையை விளைத்துச் செம்பூழ் முதலிய வற்றை ஊட்டுதல் போலத் தாமும் அப்பருவ வரவில் தாழாது போந்து நமக்கு நலஞ்செய்வா ரென உள்ளுறுத்துரைத்தலின், காண்குவம் வம்மோ என்று வாளாது உரைத்தாள். ''துனைதரு தண்கார் வருதும் யாம்எனத் தேற்றிய, பருவம் காண் அது பாயின்ருல் மழையே[4]'' எனப் பிருண்டும் தோழி கூறுதல் காண்க.
(469)

470. இருநிலங் குளிர்ப்ப வீசி யல்கலும்
அரும்பனி யளைஇய வற்சிரக் காலை
உள்ளார் காதல ராயி னெள்ளிழை
சிறப்பொடு விளங்கிய காட்சி
மறக்க விடுமோநின் மாமைக் கவினே.

இது, பருவம் வந்தது கண்டு தாம் குறித்த இதனை மறந் தாரென வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

உரை: ஒள்ளிய இழையினையுடையாய், மழையின்றி வெம்மை மிக்கிருந்த பெரிய நிலம் குளிருமாறு மழையைப் பெய்து

1. அகம். 94. 2. முல்லை. 4–5. 3. அகம். 84. 4. டை. 85.

பொறுத்தற் கரிய குளிரை நாளும் கலப்பித்த அற்சிரப் போழ்தின் கண், காதலர் நம்மை நினையாராயின், பெருமையுடன் விளங்குதற் கேதுவாகிய அவர் அறிவு தானும் நின் மாமைக்கவினை மறத்தற்கு விடுமோ, விடாது காண் எ. று.

குளிர்ப்ப எனவே மழையின்மையால் வெம்மை மிக்கு இருந் தமையும், கார்மழையால் அது தணிந்து குளிர் எழுந்தமையும் பெற்றும். மிக்க வெம்மையைப் பொறுத்திருந்த நிலம் பனி கலந்த அற்சிரக் காலைக்கு ஆற்றுது என்றற்கு இருநிலம் என்றும், கார்கால இறுதியில் பெய்யும் மழை பனி கலந்து குளிர் செய்யும் இயல்பிற் ருதலின், அரும்பனி அளைஇய அற்சிரம் என்றும் கூறினர். ஆயின் என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. காதலர் உள்ளா ராயினும், மாமைக்கவின் அவரது காட்சியை மறக்கவிடுமோ என இயையும். ஓகாரம் எதிர்மறை.

அரும்பனி யளைஇய அற்சிரக் காலையைக் கூறினள், அது தலைவன் குறித்த பருவமாகலின், இது தலைமகள் கூற்றினைக் கொண்டு கூறியது. உள்ளாராயின் என்றது மறவாமை யுணர நின்றது. சிறப்பெய்துதற்கு ஏதுவாகிய ஆற்றல் மூன்றனுள், அறிவு சிறந்தமையின், சிறப்பொடு விளங்கிய காட்சி யென்றும், அதுதானும், உள்ளத்தைச் சென்றவிடத்தாற் செலவிடாது நன்றின்பால் உய்ப்பதாகலின், காட்சி மறக்க விடுமோ என்றும், சிறப்பொடு விளங்கும் அவரது அறிவை நின்வயிற் பிணிக்கும் வன்மை நின் அழகிற்கு உண்டென்பாள் நின் மாமைக்கவின் என்றும் கூறினள். அன்பிலர் கொடியர் என்ற தலைமகட்குத் தோழி, அவர் அன்பும், அறிவும் ஒருங்குடைய ராகலின் தப்பாது வருவரென வற்புறுத்தியவாறு. (470)

48

பாணன் பத்து

பாணர் என்பவர், தமிழகத்தில் தமிழ்மொழியோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அது வளர உடன் வளர்ந்து அது வீழ உடன் வீழ்ந்து மறைந்து போன பழந்தமிழ்க் குடிகள். இவர்கள் வளம் பெற்று வாழ்ந்த காலம் இத்தொகைநூற் பாட்டுக்கள் தோன்றிய சங்க காலமாகும். அக்காலத்தே, தமிழ், இயல் இசை கூத்து என மூன்ருய் இயன்று மூவேந்தர் போல் முழுப்புகழ் எய்தி நின்றது. மூவேந்தரும் குறுநிலத் தலைவரும் ஏனைச் செல்வரும் முத்தமிழையும் தம் நினைவு சொல் செயல் என்ற மூன்றையும் போலப் பேணி வளர்த்தனர். அதனுல் இயல்வகை புலவரிடத்தும் இசைவகை பாணரிடத்தும், கூத்துக் கூத்தரிடத்தும் வளர்ந்து வந்தன. புலவர் ஓம்பிய இயற்றமிழை வேந்தரும் பிற செல்வரும் பெரிதும் விரும்பி, புலவர்கட்கு ஊரும் பொருளும் மிகைபட நல்கி மேன்மை செய்தனர். அப்புலவர்களால் தொல்காப்பியம் முதலிய இலக்கண வழக்கு நூல்களும், திருக்குறள் முதலிய வாழ்க்கை நூல்களும் தோன்றி வழிவழியாக வழங்கி வருவன வாயின. பாணர்க்கும் கூத்தர்க்கும் வேண்டுவன நல்கிச் சிறப்பித்ததனுல் பெருநாரை பெருங்குருகு முதலிய இசைநூல்களும், பரதம் அகத்தியம் முதலிய கூத்து நூல்களும் தோன்றிச் சுமார் 1000 ஆண்டுகட்கு முன்வரை இருந்து பின்னர்ப் பாணர் முதலியோர் பேணுவாரற்று வீழ்ந்த போது உடன் வீழ்ந்து மறைந்தன.

தமிழகத்துத் தமிழினத்தவர்க்குள்ள பிறவிப் பண்புகளுள் புதுமை காமுறல் என்பது சிறந்த ஒன்ருகும். தமிழ்த் தலைமகன் இயல்பு கூறுமிடத்து, அவன் ''நாளும் புதுவோர் மேவலன்[1]'' என்று சான்ருேர் குறிப்பர். யாவரேனும் புதியவர் வரக் காணினும் புதுக்கருத்தும் புதுமொழியும் எய்தப் பெறினும் அவர்தம் குணம் செயல்களையோ. அவற்றின் நலந்தீங்குகளையோ முன்னுற நோக்காது வரவேற்று மேற்கொண்டு தழீஇச் செல்வது அப்புதுமைக் காமத்தின் செயற் சிறப்பாகும்.

பெருநிலப் பகுதியாகிய ஆசிய நாட்டின் கிழக்கில் வாழும் மக்களுள், சீனர், சப்பானியர், சாவகர், அருமணர் (பர்மியர்) என்ற மக்களினத்தைத் போன்றவரே தமிழர்; பண்டை நாளில் மேலை நாட்டவரோடு நெருங்கிய தொடர்பு பெருது கீழ்ப்பகுதியில் வாழ்ந்த சீனர் முதலாயினருடன் தொடர்பு கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். தமிழ்நாட்டு வழக்காறுகள் பல சீனம் சாவகம் அருமணம் முதலிய நாடுகளில் காணப்படுதற்குக் காரணம் இதுவேயாகும். என்ருலும், புதுமைபால் பெருங்காமம் கொண்டு அதற்குத் தலைதாழ்ந்து மேற்கொண் டொழுகும் மனப்பான்மை தமிழினம் ஒன்றினிடத்தில்தான் சிறந்து காணப்படுகிறது அதன் விளைவே, இன்று தமிழினம் தாழ்ந்து பிறர்க்குப் பணியாளாம் சிறுமை எய்தி நிற்பதும் சீனரும் சப்பானியரும் வல்லரசுகளாய் வாழ்வதுமாகும்.

சங்ககாலத்துக்குப் பின்புதான் தமிழினத்தை இந்தப் புதுமைக் காமவெறி பற்றி அலைக்கத் தொடங்கிற்று. புதுமைக்கு முதன்மையும் தலைமையும் தந்து பேணியதனுல், தனக்குரிய தமிழ்க்கருத்துக்களையும் தமிழ்மொழியையும் தமிழினம் புறக்கணிக்கத் தலைப்பட்டது. புதுமை வெறி பற்றி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கழியினும், இன்னும், ''தமிழ்தானே'' எனப் புறம் பழிக்கும் புல்லறிவு கற்று வல்ல பெரியோர் முதல் கல்லா இளைஞர் ஈருக எல்லாருடைய பேச்சிலும் இருந்து வருவது நாடறிந்த உண்மை. ''ஆங்கிலம் தானே'' என எந்த ஆங்கிலேயனும், ''சருமனி

---

1. ஐங். 17.

தானே'' என எந்தச் சருமானியனும், ''வங்காளம் தானே'' என எந்த வங்காளியும் கூறுதற்கு நாணும் கீழ்மையுரை, கற்ற தமிழன் நாவில் தங்குதடை யின்றித் தவழ்ந்து விளையாடுகிறதென்ருல், தமிழினம் கீழ்மக்களினத்திலும் கடைப்பட்ட கீழினமாகி யிருப்பது இந்தப் புதுமையிற் காமுறும் புன்மைப் பண்பு தந்த பொதுப்பரிசு என்னலாம்.

சங்ககாலத்துக்கும் பல்லவர்காலத்துக்கும் இடையே வட மொழியும் வடவர் கருத்துக்களும் தமிழகத்தே பெருவாரியாகப் புகத் தலைப்பட்டன. புதுமைக் காமுகரான தமிழர் அவற்றை ஆர்வத்தோடு வரவேற்றனர்; வடவர் கருத்துக்கள் பல தமிழ் வாழ்க்கையில் தகுநிலை பெற்றன. தமிழர் வடமொழியில் பெரும் புலமை எய்தினர். வேத வேதாந்த நூல்வகைகளிலும் வடமொழி வல்ல தமிழ்ச்சான்ருேர் செய்தன பல உண்டு. அருத்த சாத்திரம் எழுதிய கௌடிலியரும், நாலந்தா பல்கலைக் கழகத்தில் தலைமை பெற்று விளங்கிய தருமபாலரும், பௌத்த தருக்க ஞானியான திக்கநாகரும், பட்டாசாரியன் மதத்தை நிறுவிய குமரில பட்டரும் பிறரும் தமிழ்நாட்டுத் தமிழினத்துச் சான்ருேர் என்பர். பல்லவர் காலத்தும் தமிழகத்தார் வடமொழிக்கும் அதன் பயிற்சிக்குமே முதன்மையும் தலைமையும் தந்து புதுமை வெறியராய்ப் பொலி வுற்றனர். பல்லவர்க்குப் பின் வந்த பாண்டியர் சோழர் என்ற தமிழ் வேந்தர் காலத்தும் தமிழ் மக்கள் புதுமைக் காமத்திற் புந்தி சலியாமல், புதுமொழிகட்கும் புதுமொழிக் கருத்துக்கட்கும் அடிமையாகி, '' தமிழ் தமது மொழி ; அது வழங்கும் நாடு தமது தமிழ்நாடு; அதனைப் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பேசி வரும் பழங்குடிமக்கள் தாம் '' என்பதை அறவே மறந்து வாழ்ந்தனர். அதனுல், தமிழகத்தின் வடபகுதி தெலுங்கும், வடமேற்குக் கன்னடமும், மேலைப்பகுதி மலையாளமும் துளுவுமாகிய மொழி களின் தோற்றமும், அவற்றை வழங்கும் மக்களினமும் தமிழினத் தின் புதுமைக்காமம் விளைவித்த பயன் என்பதை நினைவு கொள்ள வேண்டும். தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் ஆகிய இம் மொழிகளும் இவற்றைப் பேசும் மக்களும் தமிழும் தமிழினமுமே என்பதை நினைந்து ஒழுகி வாழ்வதற்கும் நெஞ்சு இடம்தராத

வகையில் இப்புதுமைக்காமம் தன் தீமைப்பயனை விளைவித்து விட்டது. வடநாட்டில் முகமதியர் காலத்து வந்த அரபு பாரசிகம் முதலிய புதுமொழியின் வரவும் மக்களிடையே கிளைமொழி பல கிளைத்தற்கு இடம் தந்ததாயினும் அவை தத்தம் முதல்நிலையை மறப்பிக்கும் தீமையை அத்துணை மிகுதியாகச் செய்யவில்லை என்பர்.

புதுமையிற் காமுறல் என்னும் இத்தீயபண்பு, தெலுங்கரும் கன்னடரும் மலையாளரு மெனத் தமிழினத்தைச் சிதறிப் பிரிந்தேகச் செய்ததோடு நில்லாது, தமிழகத்தின் உள்ளே இருந்து செய்த தீமை மிகவும் பெரிது. இயற்கையோடு ஒன்றி உயர்ந்த இயற்றமிழை ஈடழித்தது; செயற்கை நடையும் அணியும் தோற்றுவித்து, இயலை வளர்த்த புலவரினத்தை வறுமைச்சேற்றில் தள்ளி வலியிழக்கச் செய்தது. இசையும் கூத்தும். புதுமை இசையும் புதுமைக் கூத்தும் தழுவ முயன்று, அன்னநடை கற்கப் போய் உள்ளநடையும் இழந்தாற்போலத் தமிழ்க்குரிய பண்ணிசையும் தமிழ்க்கூத்தும் இருந்த இடம் தெரியாமல் கெடச்செய்து கொண்டன. தமிழ்க்கூத்தர் ஆரியக்கூத்து ஆடிப்பார்த்தனர். முடிவில் இசையும் கூத்தும் இறந்தொழிந்தன; அவற்றை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த கலைவாணரான பாணரும் கூத்தரும் மறைந்தொழிந்தனர். இடைக்காலப் பல்லவ பாண்டிய சோழர் கல்வெட்டுக்களில், பாணரும் கூத்தரும் ஆங்காங்கே மிகச் சிலராய் வாழ்ந்து வந்த குறிப்புக்கள் காணப்படுகின்றன.[1] இசை மறைந்த பின்பு, தமிழ்கூத்து மாத்திரம், தமிழ்க்கூத்து ஆரியக்கூத்து எனப் பிரிந்து நின்று வாழ முயன்ற திறத்தை திருவொற்றியூர் முதலிய இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. ஆயினும், தமிழினத்தின் புதுமை மோக வெறி அதனை மீளத் தலைதூக்காத பேரிருட் படுகுழியில் நன்ருகப் புதைத்து விட்டது. இப்போது முத்தமிழைப் பாடுநரும் இல்லை; பாடுநர்க்கு அதனை அறிந்து பயில ஊக்குநரும் இல்லை.

புதுமைக்காமத்துக்கு அடிமையாகாது அதனைத் தனக்கு அடிபணிந்து பயன்பட வாழச் செய்த காலம் பண்டைச் சங்ககாலம்

---

1. A. R. No. 90. of 1931-2.

என்பது முன்பே குறிக்கப்பட்டது. அப்போது புலவரும் பாணரும் கூத்தரும் முத்தமிழையும் முறையே வளர்த்து வந்தனர். இயற்றமிழ் புலவரிடத்தே வளர, இசையும் கூத்தும் பாணரிடத்தே வழி வழியாக வழங்கிவந்தன. பொதுவாக மக்கள் உழவு, கைத்தொழில், வாணிகம் ஆகிய தொழில்வகைகளைச் செய்தாராயினும், ஒருசிலர் அரசியற் பணியிலும், ஒருசிலர் சமயப்பணியிலும், ஒரு சிலர் கல்விப்பணியிலும், ஒருசிலர் ஓவியம் சிற்பம் முதலிய கலைப் பணியிலும் ஈடுபட்டிருந்தனர். போர்த்துறை யொன்றே எல்லார்க்கும் பொது. போர்க்காலத்தில் படைமறவனாய்ப் பணிபுரிபவன் ஏனைக் காலத்திற் குடிமகனாய்த் தனக்குரிய தொழில் செய்து வாழ்வன். ''சீறூர்க் குடியு மன்னும் தானே கொடி எடுத்து, நிறை யழிந்து எழுதரு தானைக்குச் சிறையு மன்னும் தானே[1]'' என்பது காண்க.

உலகம் பொன்றினும் பொன்றாது நிற்பது புகழ் என்றும், அது பெறுவதே உலகில் ஒருவன் உடலோடு கூடி வாழ்வதனால் எய்தும் ஊதியம் என்றும் தமிழ்மக்கள் கருதினர். ''புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின், உலகுடன் பெறினும் வேண்டலர்[2]'' என்பர் சான்றோர். இப்புகழைப் பாட்டிடைத் தொடுத்து நிலை பெறுவிப்பது முத்தமிழின் முழுநோக்க மாகும். இயல்வல்ல புலவரும் இசை வல்ல பாணரும் கூத்து வல்ல கூத்தரும் உழவு, தொழில், வாணிகம், போர் முதலியவற்றால் சிறந்தோர் புகழைப் பாடியும் ஆடியும் நிலைபெறுவிப்பர். அதனால் புலவர் முதலாயினார் வாழ்வு, அவராற் புகழப்படும் செல்வர் தரும் கொடையையே சார்ந்திருந்தது. முத்தமிழ் வாழ்நர் யாவராயினும் அவர் வாழ்வு பிறர்க்குத் தீங்கு செய்வதன்று என்பது பற்றி அவர்க்கு எத்தகைய தடையும் எவரும் எக்காலத்தும் செய்வதில்லை. வேந்தர் தம்மிற் பகைத்துப் படைகொண்டு போர்செய்யுமிடத்தும் இப் பாணரும் புலவரும் தங்குதடை யாதும் இன்றி எங்கும் செல்வர். இது பழந்தமிழ் வாழ்வு, இயல் முதலிய முத்தமிழ்க்கு அளித்திருந்த தனிப்பெருந் தலைமைப் பரிசாகும். ஆனதுபற்றியே புலவரும் பாணரும் நாடுமுழுதும் சிறப்பெய்தி யிருந்தனர்.

---

1. புறம். 314. 2. ஷை. .

இயல் முதலிய மூன்றும் சேர்ந்ததே தமிழ்; அதனால், புலவரும் பாணரும் கூத்தரும் ஒருவர் ஒருவரின் சுற்றமாய்க் கூடி நாடுகளில் உள்ள செல்வரைச் சென்று கண்டு பரிசில் பெற்று வாழ்ந்தனர். இசைத்துறையில் யாழ், துடி, பறை, முழவு எனப் பலவகைக் கருவிகள் உண்டு! அதனால் அவற்றை இயம்பும் பாணர், பாணர் துடியர் பறையர் முழவர் எனப் பலதிறப்படுவர். கூத்தாடுவோர் கூத்தர் எனப்படுவர். இவர்கட்கு வேறு தொழில் இன்மையின், இவர்கட்கு வேண்டுவன கொடுத்து வாழ்வித்தல் தமிழ் மக்களுள் உடையோர் கடனாகும்; அதனைப் பாண்கடன் என்றலும் வழக்கு. "துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று, இந்நான்கு அல்லது குடியு மில்லை[1]" என்பதும் இதுபற்றியே சான்றோரால் குறிக்கப்படுகிறது. இது கொண்டே பாணர்குடி பலதிற மக்களைக் கொண்ட பெருங்குடி என்பதும் இனிது பெறப்படும்.

உடலோடு கூடிய உயிர்க்கு அன்பும் அருளும் போல, பொரு ளோடு கூடிய பாட்டுக்கு இசையும் கூத்தும் சிறந்தனவாகும். கண்ணுக்குக் கண்ணோட்டம் போலப் பாட்டுக்குப் பண் இன்றி யமையாது என்பர் திருவள்ளுவர். பாட்டிடை எழும் பண், மக்கள் உள்ளத்தில் அன்பும் அருளும் வளர்தற்குப் பெருந்துணையாய் இருத்தலின், பண்ணிசைத்து வாழும் மக்களைப் பாணர் என்று பெயரிட்டுச் சிறப்புற பேணி வளர்த்தது பண்டைத் தமிழ் வாழ்வு. பாண்குடி மகளிருள் பாடலும் ஆடலும் வல்லவர் பாடினி, விறலி எனப் பெயர் கூறப்படுவர்.

இயல் இசை கூத்துக்களில் சிறந்த புலமை பெற்ற பாணர், மன்னர் மதிக்கும் மாண்பும் செல்வமும் பெற்று மேன்மை எய்தினர். ஒரு பாண்டியன், "பொன்னிவள நாடு பாணன்பெறப் புரிந்தான்[2]" என்றும், மாறைநாட்டுத் தலைவனை வாணன், மதுரையைக் கைப்பற்றிப் பாணர்க்குத் தந்த குறிப்பை, "பாணன் மதுரைப் பதியாள வைத்த பிரான்[3]" என்றும் பிற்கால கல் வெட்டுக்கள் கூறுவது இதற்குப் போதிய சான்றாகும். போர்க் களத்தில் மன்னர்கள் மறவுணர்ச்சி மீதூர்ந்து பகைவர் நாட்டினை

1. புறம். 2. P.S. In No. 652. 3. பெருந்தொகை. 1191.

அடர்ந்து அழித்தொழுவராயின், அவர் செயலில் நாடு எய்தும் கேட்டினை அவர்க்குத் தம் இசை வாயிலாக உணர்த்தி அவர் உள்ளத்தில் அருளறம் தோன்றச் செய்வர். மறவெறி கொண்டு மனையறத்தில் மனங்கொள்ளாது பாசறைக்கண் நெடிதுறையும் வேந்தர்பால் சென்று மனைமகளிரின் காதல் மாண்பும் மனைவாழ்வின் இன்பச்சிறப்பும் இசையில் தொடுத்துப் பாடி, அவர் உள்ளத்து மறப்பண்பை மாற்றி மனை நலத்தை நினைப்பிப்பர். பகை வேந்தர்க்குத் தகுவன கூறி இருபெரு வேந்தரையும் ஒன்று படுத்தும் உயர்பணியிலும் பாண்பெரியோர் பாடுபடுவர். இன்றைய அரசியல் செல்வ வாழ்வுகளில் நாளிதழ்வாணருக்குள்ள நன் மதிப்பு முற்றும், பண்டு புலவர் பாணர் முதலிய முத்தமிழ் வாணருக்கு இருந்த தென்னின் அது மிகையாகாது. காக்கையூர் பாடினியான நச்செள்ளையாரும் ஔவையாரும் பாண்மகளிருள் நல்லிசை புலமை பெற்ற மெல்லியற் சான்றோராவர். அவர்கள், முறையே ஆடுகோட்பாட்டுச் சேரலாதனாலும், அதியமான் நெடு மான் அஞ்சியாலும் சிறப்பிக்கப் பெற்றப் திறத்தை பதிற்றுப்பத்தும் புறநானூறும் தெரிவிக்கின்றன இப்பாணர்கட்கு வேந்தர் ஊர் களும் மிக்க பொருளும் தந்து பாராட்டியுள்ளனர். குதிரை பூட்டிய தேர்களில் பாணர்களை ஏற்றிக் காலால் ஏழடிப் பின்சென்று வழி விடுவது முடிவேந்தர் அந்நாளின் மேற்கொண்டிருந்த சிறப்பு முறை. யானைகளையும் அவற்றைப் பேணுதற் குரிய பொருளையும் பெருஞ்செல்வர் பாணர்கட்கு அளித்தனர். பாணர்களுள் ஆடவர்க்குப் பொன்னாற் செய்த தாமரைப் பூவும், மகளிர்க்கு மாலையும் பிற அணிகலங்களையும் வேந்தரும் செல்வரும் பரிசு நல்குவர்.

இசையும் கூத்தும் பயிலாது போர்த்துறையில் ஈடுபட்டு மற் போரிலும் நாடுகாத்தலிலும் சிறந்த பாணர்களும் உண்டு. அவருள் பாணன் என்பான் பாலியாற்றின் வடகரையில் உள்ள நாட்டில் அரசு புரிந்தான்; ''வடாஅது, வல்வேற் பாணன் நன்னாடு[1]'' என்று சான்றோர் பாராட்டிக் கூறுவர்; அந்நாட்டில் பாலியாற்றின் கரையில் உள்ள பெரும்பாணப்பாடியும் பாண்மலை

1. அகம். 325.

யும் அப்பகுதியிலுள்ள கல்வெட்டுக்களால் குறிக்கப்படுகின்றன. அவன் வழிவந்தோர் வாணர் எனவும் வாணாதிராயர் எனவும் வாணதரையர் எனவும் நிலவினர்; வடார்க்காடு வட்டத்துத் திருவல்லம் கோயிலில் அவர்களுடைய கல்வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. பிற்காலத்தே அவர்கள் தமிழகமுழுதும் பரவியிருந்தனர்; வாணகோவரையர் என்பாரும் பண்டைய பாணன் வழிவந்தோரே யாவர். வேறொரு பாணன் மற்போரில் சிறந்து சோழர் போரவையில் புகழ்பெற்று விளங்கினான்; உறையூரில் வாழ்ந்த வெளியன் தித்தன் பேரவையில் இருந்த பாணனொடு மற்போர் செய்ய, கங்கநாட்டு பகுதியிலிருந்து கட்டி என்பவன் வந்து, ''போரவையில் ஒலிக்கும் கிணைப்பறையின் ஒலி கேட்ட மாத்திரையே அஞ்சியோடினன் '' என அகப்பாட்டொன்று[1] கூறுகிறது; குடநாட்டுக்கு வடக்கிலுள்ள ஆரியநாட்டிலிருந்து பொருநன் என்பவன், குட்டநாட்டுக் கணையன் என்பவனோடு கூடிப் பாணனொடு மற்போர் செய்ய வந்து முடிவில் பாணன் வலிக்கு ஆற்றாது, கணையன் நேரிற் கண்டு நாணுமாறு தோற்றான்.[2]

பாண்மக்களுள் இசையும் கூத்தும் பிறவும் பயிலாது தாழ்நிலையில் வாழ்ந்தோர் தூண்டில் கொண்டு சென்று மீன்பிடித்து விற்று வயிறுவளர்த்தனர். சிலர் உழுதும் உழுவித்தும் வாழ்ந்தனர்; வேறுசிலர் பனைநாரும் பனம் போழும் கொண்டு கயிறும், மீன்வலையும் கூடை சுளகு முதலியனவும் முடைந்து வாழ்ந்தனர். சிலர் விலங்குகளை வேட்டையாடி யாழ்க்கு நரம்பும் தோற்கருவிகட்குத் தோலும் அமைத்துத் தந்தனர். ஒருசிலர் செல்வர் மனைக்கும் பரத்தையர் மனைக்கும் தூதுசென்று அவரது புறத்தொழுக்கத்துக்கு வாயில்களாகப் பணிபுரிந்து வாழ்ந்தனர். வாயில்களாவாரை, ''தோழி தாயே பார்ப்பான் பாங்கன், பாணன் பாடினி இளையர் விருந்தினர், கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர், யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப[3]'' என்று தொல்காப்பியம் கூறுகிறது.

கீழ்நிலைப் பாண்மகளிர் ஆடவர் கொணர்ந்த மீன்களை நெல்லுக்கும் பிற பொருளுக்கும் விற்று வாழ்க்கை நடத்துவர்.

---

1. அகம். 226. 2. ஷை. 386. 3. தொல். பொ. 193.

சிலமகளிர் செல்வர் மனைகளில் பணிப்பெண்களாய்த் தொண்டு செய்தவர். ஆடலில் சிறந்தோர் விறலியராகி வேந்தர் நல்கும் தலைக்கோல் பெற்று விளக்கமுற்றுத் திகழ்ந்தனர். பாடல் வல்லோர் பாடினிகளாய்ப் புகழ் பரப்பி வாழ்ந்தனர். பாணர் பலரும் மீன் பிடிக்கும் தூண்டிற்கோலும், இசைக்கும் கூத்துக்கு முரிய கருவிகளைப் பெய்த பைகளைச் சுமக்கும் காவடிக்கோலும், ஏனையோர் கழைக்கோலும் தாங்கிச் செல்ல, மகளிருள் பாடினியும் விறலியும் தலைக்கோலும் மீன்விற்போர் கழைக்கோலும் கொண்டு செல்வர். இதனால், வடநாட்டுச் சீக்கியர் எப்போதும் கையில் வாளேந்தி இயலுவது போலப் பண்டைத் தமிழகத்துப் பாண் மக்கள் கையில் கோலேந்தித் திரிவது மரபாயிற்று. ஆதலாற்றான், பாணரைக் குறிக்கும்போது, அவர்தம் கோலை விதந்து, "தேமுதிர் சிமையக் குன்றம் பாடும், நுண்கோல் அகவுநர்[1]" என்றும், "மாக்கோல் யாழ்ப் பாண்மகனே[2]" என்றும் சான்றோர் கூறுவா ராயினர்.

பாணர்களின் செயல்வகை பற்றி, பாணர், அகவுநர் கூத்தர், கோடியர், இயவர், பொருநர் எனப் பலபெயர்களால் நூல்களில் குறிக்கப்படுவர். அவை அனைத்தும் அவரவர் செய்தொழில் காரணமாகப் பிறந்தவையே யன்றிச் சாதிப்பெயர்கள் அல்ல என்பதைத் தெளிய உணர்தல் வேண்டும். பாணர் வரலாறு தமிழ் மொழியின் ஒருசார் வரலாருகப் பிணைந்திருத்தலின் இத்துணையும் கூறல் வேண்டிற்று. இனி, இப்பாணர்கள் தமிழ்ச்செல்வர் மனை வாழ்வில் கலந்து பணிசெய்யும் திறத்தை ஈண்டுத் தொகுக்கப் பட்டுள்ள பாட்டுக்களிற் காணலாம்.

471. எல்வளை நெகிழ மேனி வாடப்
பல்லித ழுண்கண் பனியலைக் கலங்கத்
துறந்தோன் மன்ற மறங்கெழு குரிசில்
அதுமற் றுணர்ந்தனை போலாய்
இன்னும் வருதி யென்னவர் தகவே.

---

1. அகம். 208. 2. திணைமா. 150 ; 125.

இது, பருவவரவின்கண் தூதாகி வந்த பாணன் கூறியவழித் தோழி சொல்லியது.

உரை : பாணனே, இலங்குகின்ற வளைகள் நெகிழ்ந்தோடவும், மேனி வாட்ட மெய்தவும், பலவாகிய இதழ்களை யுடைய மலர்போலும் மையுண்ட கண்கள் பனியலைத்தலாற் கலங்கி நீர் சொரியவும், வீரம் பொருந்திய குரிசிலாகிய தலைவர் பிரிந்தே சென்றார் ; அதனையும் நீ யுணர்ந்திலை போல்கின்றாய் ; அற்றாக, நீ இப்போழ்தும் தூது வருகின்றனை யாகலின், நின்னைத் தூது விடுத்த அவரது தகவு என்ன பயனுடையதாம்? எ. று.

நெகிழாது செறிந்து நின்று ஒலிதிகழ்தற் குரிய வளை நெகிழ்ந்தோடுமாறு தோன்ற, எல்வளை எனச் சிறப்பித்தார். வாடுதல், பசந்து மெலிதல். பல்லிதழ் உண்கண், பூப்போலும் கண் என்றவாறு ; "பல்லிதழ் உண்கண் பசத்தல் மற்று எவனோ[1]" என்புழிக் கூறியன காண்க. பணி அலைக் கலங்க என்றவழி, அலை, முதனிலைத் தொழிற்பெயர். மறவினை பொருளாகத் தலைமகன் பிரிந்தமை தோன்ற, மறங்கெழு குரிசில் என்றார்.

தன்மாட்டு அன்புடையார் வளை நெகிழ்ந்து மேனிவாடிக் கண்கலங்கி வருந்தப் பிரிதல் தன் தலைமைக்கு ஆகா தென்பாள், துறந்தோன் மன்ற என்றும், மகளிர் மாட்டுக் கண்ணோடாது அவரை வருத்தல் மறத்துறை யன்மையின் அவற்கு அது தகவென்றென்பாள், மறங்கெழு குரிசில் என்றும், தூதுபோய் மீளுங்காறும் அவள் ஆற்றாளெனக் கூறி மீள்விக்க வாராது பிரிவுணர்த்துதற்கு வந்ததனை மறந்தொழிந்தாய் என்றற்கு, உணர்ந்தனை போலாய் என்றும், பிரிவு கருதிய துணையே ஆற்றாளாயினாட்குப் பிரிந்த பின்னரும் தூது விடுத்து வரவு தாழ்த்தல் அருளுடையார் செயலன்று என்பாள், இன்னும் வருதி என்றும், என் அவர் தகவே என்றும் கூறினாள்.

எல்வளை நெகிழ என்றது, உடம்புநனி சுருங்கல். மேனி வாட என்றது, பசலைபாய்தல். உண்கண் பனியலைக் கலங்க

---

1. ஐங். 170.

என்றது, பிரிவாற்ருமை. சிறப்பும்மை, தலைமகளின் ஆற்ருமை மிகுதி யுணா நின்றது. இதனைத் தழுவி நிற்கும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. இவற்ருல், தலைமகன் பொதுவகையால் தன் பிரிவுணர்த்திய வழித் தலைமகள் உடன்படாமை கண்டு, உணர்த்தாது பிரிந்தாஞக பாணன் போந்து அவன் பிரிவுணர்த் தினமை பெற்ரும். பன்மை, பழித்தற்கண் வந்தது. மறமுடையார் மகளிர் மாட்டுக் கண்ணேடல் வேண்டு மென்பது, ''ஆவு மானியற் பார்ப்பன மாக்களும், பெண்டிரும் பிணியுடையீரும் பேணித், தென்புல வாழ்நர் கருங்கட னிறுக்கும், பொன்போற் புதல்வர் பெருஅதீரும், எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர் மின் என, அறத்தாறு நுவலும் பூட்கை[1]'' என முன்னேரும், ''பெண்ணுயிர் அவலம் நோக்கிப் பெருந்தகை வாழ்வில் சாதல் எண்ணினன்[2]'' எனப் பின்னேரும் கூறுதல் காண்க, இவ்வாறு தலைமகனைத் தோழி, பாணர் முதலியோர்முன் பழித்துக் கூறல் வழுவாயினும். ''வாயிற் கிளவி வெளிப்படக் கிடத்தல், தாவின் ருரிய தத்தங் கூற்றே[3]'' என்பதனுல் அமையும். (471)

472. கைவல் சீறியாழ்ப் பாண நுமரே
செய்த பருவம் வந்துநின் றதுவே
எம்மி னுணரா ராயினுந் தம்வயின்
பொய்படு கிளவி நாணலும்
எய்யா ராகுத னேகோ யானே.

இது, குறித்த பருவம் வரவும் தலைமகன் வாராஞகிய வழித் தூதாய் வந்த பாணர்க்குத் தோழி கூறியது.

உரை: இசைத்தல் தொழிலில் வல்ல சிறிய யாழை ஏந்திய பாணனே, நும்முடைய தலைவர் தாம் வருவது குறித்துச் சென்ற பருவம் வந்தெய்தியது; அதனை எம்மைப்போல் அறியா தொழிந்தா ராயினும், அவர் உரைத்தவை பொய் பொருந்திய சொற்களாயின கண்டு யாம் நாணி வருந்துவதனையும் அறியா ராயினமைக் கன்றே யான் வருந்துவே ஞயினேன் எ. று.

---

1. புறம். 9. 2. சீவக. . 3. தொல். பொ. 241.

யாழ்வகையுள் பேரியாழ் உண்மையின் சீறியாழ் கூறப் பட்டது. ஆயிரம் நரம்பினையுடைய பேரியாழ் கையிற் கொண்டு செல்லும் எளிமைத் தன்மையின், கையிலேந்தி இசைத்துவரும் பாணன் சீறியாழ்ப் பாணன் எனப்பட்டான். யாழ் இசைத்தலில் புலமை மிக்குடைமை பற்றி, கைவல் சீறியாழ் என்றார்.

தலைமக்கள் புகழைப் பாடிப் பரப்பும் பாணர் கூத்தர் முதலா யினார்க்கு அவர் வேண்டுவன கொடுத்துப் பேணுதல் மரபாகலின், தலைவர்களைப் ''பாணர் பெருமகன்'' என்றும், ''பாண ரொக்கல்'' என்றும், சான்றோர் சிறப்பிப்பர். அம் முறைமை பற்றி, கைவல் சீறியாழ்ப் பாண நுமரே என்றாள். பிறுண்டும் ''நினக்கு யாம் பாணரு மல்லேம் எமக்கு நீயுங் குரிசிலை யல்லை மாதோ[1]'' எனப் பாணன் கூறுதல் காண்க.

செய்த பருவம், பிரிந்த காலையில் தலைமகன் தான் மீண்டு வருதற்குக் குறித்த பருவம். பருவ வரவினை முன்பே யுணர்ந்து தலைமகற்குத் தூது விடுத்துத் தெரிவியாத குறை தலைமகட்கு அமையும் என்பார், எம்மின் உணரா ராயினும் என்றார். கிளவி என்றவிடத்துப் பொருட்டுப் பொருளதாகிய குவ்வுருபு தொக்கது. எய்யா ராகுதல் என்பதை எய்யாமையும் உடையராகுதல் எனப் பிரித்துரைக்க. நாணலும் எய்யாராகுதல் என்று கொள்ளின், தாம் உரைத்தவை பொய்சொற்க ளாகுதற்கு நாணுதல் உயர்ந் தோர் இயல்பாயிருக்க, அதனையும் அறியாதொழுகுதல் எனப் பொருள்தந்து வழுவாம் என உணர்க.

வருவல் எனக் குறித்த பருவம் வந்தெய்திய வழியும் தலைமகன் வாராது தாழ்த்தமையான், நுமரே செய்த பருவம் வந்து நின்றதுவே என்றும், பருவம் வந்து நின்ற வழியும், தெளிவித்துச் சென்ற தலைவர் வாராமையான், இது பருவ மன்றெனக் கொண்டுள்ளேம் என்பாள், எம்மின் என்றும், இது தாம் குறித்த பருவ மென்பதனை அவர் உணராரல்லர் என்பது பட, உணரா ராயினும் என்றும், பருவவரவில் வருகுவேன் என வற்புறுத்த சொல் பொய்த்தற்கு

1. ஐங். 480.

நாணி அஞ்சாது, யாம் அது கண்டு நாணி வருந்துவதையும் நினையாது தூது போக்குதல் நன்றன்று என்பாள், பொய்படு கிளவி நாணலும் என்றும், மெய்ம்மையே ஒழுகுதலுடையராயிருந்தார் அவ்வொழுக்கத்திற் பிழைத்தாராயின், வரும் ஏதம் பலவா மாகலின், எய்யா ராகுதல் நோகோ யானே என்றும் கூறினாள். உம்மை பின்னும் கூட்டப்பட்டது. நம்மின் உணரா ராயினும் என்றற்கு, பருவவரவினை யாம் முன்பே உணரா தொழிந்தவாறு போல அவரும் உணராது ஒழிந்தா ராயினும், பொய்படு கிளவிக்கு யாம் நாணலும், அதனை அவர் எய்யாராய் ஒழுகுதலும் தப்பாது உணர்ந்தாரில்லை; அதனால் யான் வருந்துவே னாயினேன் என்ரு ளெனினுமாம். ஈண்டுப் பொய்படு கிளவி நாணுத லாவது, தாம் தெளிவித்துச் சொல்லியவாறே மீள லாகாமையின், அது பொய்த் தற்கு அஞ்சிப் பாணனால் வினை முடியாமை தெரிவித்தல். எய் யாராய் ஒழுகுதலாவது, தூதுரையாலும், ஒழுகலாற்றாலும் பண்டை அன்புடைமை தோன்ற ஒழுகுதல். இங்ஙனம் தோழி இரங்கிக் கூறியது, ''வருத்த மிகுதி சுட்டுங்காலை, உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்[1]'' என்பதனால் அமையும்.

இது குறித்த பருவத்துத் தலைவன் வாராவழித் தூதாய் வந்த பாணற்குத் தோழி கூறிய தென்பர் நச்சினார்க்கினியர்[2]. (472)

473. பலர்புகழ் சிறப்பினுங் குரிசி லுள்ளிச்
செலவுநீ நயந்தனை யாயின் மன்ற
இன்னா வரும்பட ரெம்வயிற் செய்த
பொய்வ லாளர் போலக்
கைவல் பாணவெம் மறவா தீமே.

இது, தலைமகன் பிரிந்த நாட்டிற்குச் செல்வேம் என்ற அவன் பாணற்குத் தலைமகள் சொல்லியது.

உரை: இசைத்தொழிலில் வல்ல பாணனே, உயர்ந்தோர் பலரும் புகழ்தற்குரிய சிறப்பினையுடைய நும் தலைவனை நினைந்து

---

1. தொல். பொ. 226. 2. ஷி. ஷி. 150.

செல்லுதலை நீ விரும்பினையாயின், இன்னுமையால் பொறுத்தற் கரிய துயரத்தினை எம்பாற் செய்த பொய்த்தல் வல்ல அவர்போல எம்மை மறவாது, அவர்க்கு எம் ஆற்ருமையைக் கூறுவாயாக எ. று.

பலர் புகழும் சிறப்பே மெய்யாய சிறப்பாதல் பற்றிப் பலர் புகழ் சிறப்பு என்ருர். பலர், உயர்ந்தோர். பாணர் பாடும் பாட்டிற் கெல்லாம் தலைவன் தலைமகனுகலின், அவனை நினைந்து செல்வது பாணர்க்கு இயற்கையென உணர்க. செலவு நயந்தனை யாயின் என்றது, தலைமகன் சென்றுறையும் நாட்டின் சேய்மை யுணர நின்றது, படர்தல், நினைத்தல். படர்தல் காரணமாகத் துயரும் இன்னுமையும் உண்டாதலின், இன்ஞு அரும்படர் என்ருர். ஒரு பொய்யை உரைத்தவிடத்து அதனை மறைத்தற்கு வேறு பல பொய்களைப் படைத்து மொழிதற்கு அறிவும் மனமும் வன்மை மிக வேண்டுதலின், பொய் கூறுவோரைப் பொய்வலாளர் என்ப. ''பொய்வலாளன் மெய்யுற மரீஇ[1]'' என்று பிறரும் கூறுதல் காண்க. பாணன் சுற்றமொடு கூடிச் செல்லும் பான்மையனுகலின், நும் குரிசில் என்று பன்மையிற் கூறி, முன் னிற்போன் பாண்தலைவனுதல் தோன்றப் பாண என ஒருமையிற் கூறினுர். ''ஒருமை சுட்டிய பெயர்நிலைக்கிளவி, பன்மைக் காகும் இடனுமார் உண்டே[2]'' என்பதனுல் அமையும்.

தான் கொண்ட துன்பம் மெய்ப்பட்டுப் பாணற்குப் புலனுத லின், எம்வயிற் செய்த என்றும், கார்ப்பருவ வரவில் வருகுவல் என்றவன், அது வந்தெய்தியும் வாராமையினுலும், சான்ருேர் அஞ்சும் பொய்ம்மையைச் செய் தொழுகினமையாலும், பொய்வ லாளர் என்றும், அவர் மறந்தாராயினும், யாம் மறவேம் என்பாள், மறவாதீமே என்றும் கூறினுள்; இஃது அன்புதொக நிற்றல்.

''அவனறி வாற்ற அறியுமாகலின்[3]'' என்ற சூத்திரத்துப் ''பல்வேறு நிலை'' என்றதனுல், இது தூதுவிடக் கருதிக் கூறியது என்பர் நச்சினுர்க்கினியர். (473)

---

1. குறுந். 30. 2. தொல். சொல். நச்சி. 461.
3. தொல். பொ. 147.

474. மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர்
செய்யரண் சிதைத்த செருமிகு தானையொடு
கதழ்பரி நெடுந்தேர் அதர்படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவ லென்னும்
நன்ரு லம்ம பாணன தறிவே.

இது, பிரிவின்கண் ஆற்ருமை கண்டு தூதாகிச் சென்று அவனைக் கொணர்வல் என்ற பாணன் கேட்பத் தலைமகள் சொல்லியது.

உரை: வெகுண்டு போந்த பகைவர் தம்மைக் காத்துக் கோடற்குச் செய்த அரண்கள் பலவற்றையும் அழித்த போர்த் தொழிலில் மிக்க தானையோடு விரையச் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்தி வழிகள் பல கடந்து சேண் சென்ற நம் காதலரைக் குற்றமில்லாத ஒளிபொருந்திய நுதல் விளக்கமுறும் வண்ணம் கொணர்வல் என்று பாணன் கூறுகின்ரு ணகலின், தோழி, அவனுடைய அறிவு நன்ருயிருந்தது, காண் எ. று.

தம்மிடத்தே அமையாது வெகுண்டெழுந்த வழியே ஒருவர் பகைவ ராதலின், கறுத்தோர் என்ருர். தன் னியல்பில் சிறுகுற்ற மும் இன்றித் தலைவன் பிரிவால் பசந்து ஒளி மழுங்கியிருப்பது பற்றி, மையறு சுடர்நுதல் என்று சிறப்பித்தார். விளங்க என்றது பசந்தமை சுட்டி நின்றது. பண்டு இருந்த அரண் போதிய வன்மை யிலதாலும் தலைமகளது படைவலியின் பெருமையும் முன் னுணர்ந்து பகைவர் வலிசெய்து கொண்ட அரண் என்றற்குச் செய்யரண் என்றும், எனவே புதுமையும் வன்மை மிகுதியுமுடைய அந்த அரணையும் தலைவனுடைய தானை எறிந்து சிறந்த தென்பாள், செய்யரண் சிதைத்த செருமிகு தானை என்றும் கூறினுர். அதர் பல கடைஇச் சென்றவராகிய காதலரை நுதல் விளங்கத் தருகுவல் என்றும் என இயைக்க. ஒருவினையொடு பன்மை பற்றி வந்த உயர்பின் வழித்து.

மிக்க சேய்மைக்கட் சென்றன ரென்பாள், அதர்படக் கடைஇச் சென்றவர் என்றும், நாம் அவரை யின்றி யமையேமாய்க்

கொண்ட நோயினை வாய்விட்டுக் கூரு முன்பே குறிப்பின் உணர்ந்து கூறினமையாலும், மிகப் பயின்ருர்க்கன்றிப் புலனுகாத நம் நுதற்பசப்பினை நுனித்து உணர்ந்து சுடர்நுதல் விளங்க என்ற தனுலும், அவன் அறிவை வியந்து, நன்ரு லம்ம பாணனது அறிவே என்றும் கூறினுள்.

''அவனறிவு[1]'' என்ற சூத்திரத்துப் ''பல்வேறு நிலை'' என்றது கொண்டு, இது பாணனைத் தூதுவிட்டுக் கூறியதென்பர் நச்சினுர்க்கினியர். (474)

475. தொடிநிலை கலங்க வாடிய தோளும்
வடிநல னிழந்தவென் கண்ணும் நோக்கிப்
பெரிதுபுலம் பினனே சீறியாழ்ப் பாணன்
எம்வெங் காதலொடு பிரிந்தோர்
தம்மோன் போலான் பேரன் பினனே.

இது, பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தலைமகனுழை நின்று வந்தோர் கேட்பத் தன் மெலிவு கண்டு இரங்கிய பாணனைத் தோழிக்கு மகிழ்ந்து சொல்லியது.

உரை: தோழி, தொடிகள் நின்ற நிலையினின்றும் நெகிழ்ந்து நீங்குமாறு வாட்ட மெய்திய என் தோளையும் மாவடுப் போலும் அழகினை இழந்த என் கண்களையும் நோக்கிச் சிறிய யாழைக் கையிலே யுடைய பாணன் மிகப் புலம்பினு னுகலின், அவன் எம் முடைய காதலொடு பிரிந்து சென்ற நம் காதலரைத் தமக்குத் தலைவனுக வுடையனுயினும் அவர் போலின்றி நம்பால் மிக்க அன்புடையனுயிரா நின்ருன் எ. று.

கலங்க என்னும் செயவனெச்சம் காரியப்பொருட்டு. வடி, மாவடு. ''நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்[2]'' என்ப சான்ருேர். பிரிந்துழித் தலைமகள் தோளும் கண்ணும் நலனிழந்து தோன்றிக் கூடியவிடத்து அந்நலனைப் பெற்றுத் திகழ்தல் தோன்ற,

1. தொல். பொ. 147. 2. ஐங். 61.

"தோள் கவின் எய்தின தொடிநிலை நின்றன; நீள்வரி நெடுங் கண் வாள்வனப் புற்றன[3]" என அழகுறப் பிருண்டுங் கூறுதல் நோக்கி இன்புறுக. வடிநலன், வடியைப் போற லாகிய நலமென விரியும்.

அவர் பிரிந்தா ராயினும், அவர் மாட்டுச் சென்ற தன் காதல் நீங்காமையின் காதலொடு பிரிந்தோர் என்றும், அவர்க்கு உரியவ ளுயினும், அவர் நம்மை மறந்தது போல அன்றி இவள் நம்மை நோக்கிப் பெரிதும் இரங்கிப் புலம்புகின்ருன் என்பாள், தம்மோன் போலான் என்றும், பேரன்பினனே என்றும் கூறிஞள். "தொடி நிலை கலங்க வாடிய தோள்" என்றது. உடம்புநனிசுருங்கல், "வடிநலனிழிந்த கண்ணும்" என்றது அவன் பிரிவாற்ருமை. (475)

476. கருவி வானங் கார்சிறந் தார்ப்பப்
பருவஞ் செய்தன பைங்கொடி முல்லை
பல்லான் கோவலர் படலைக் கூட்டும்
அன்பின் மாலையு முடைத்தோ
வன்புறைப் பாணவவர் சென்ற நாடே

இது, பிரிவாற்ருமை அவற்கும் உளதன்றே, நீ வேறுபடு கின்றது என்னை என்ற பாணர்க்குத் தலைமகள் கூறியது.

உரை: எம்மை வற்புறுத்தலையுடைய பாணனே, தொகுதி யையுடைய வானம் மழை மிக்கு முழங்க, பருவம் நோக்கி மலர்ந்துள்ள பசிய கொடிகளாகிய முல்லையின் பூக்களைப் பலவாகிய ஆக்களையுடைய ஆயர் மாலையிடத்தே தொடுத்து அணியும் அன்பில்லாத மாலைக் காலத்தையேனும் அவர் சென்ற நாடு உடையது கொல்லோ எ. று.

கருவி, தொகுதி. கார்காலத்து மழைமுகில் மிக்கெழும் காட்சியைக் கார் சிறந்தார்ப்ப என்ருர். கார்ப்பெயலால் வளம்

1. ஐங். 498.

பெற்றுப் பூத்து விளங்குதல் தோன்ற பைங்கொடி முல்லை எனச் சிறப்பிக்கப்பட்டது. பருவம் செய்தலாவது, மாலைப்போதில் மலர்ந்து கார்காலம் எய்தி நிற்றலை தெரிவித்தல் ; ''பூங்கொடி முல்லை தொகு முகை இலங்கெயி ருக, நகுமே தோழி நறுந்தண் காரே[1]'' என்று பிறரும் கூறுவது காண்க. படலை, மாலை ; ''பல்லான் கோவலர் படலை சூட்ட[2]'' என்ருற் போல கோவலர் முல்லை சூடுதலை, ''தனியோர் இரங்கும் பனிகூர் மாலைப் பல்லான் கோவலர்க் கண்ணிச், சொல்லுவ வன்ன முல்லை வெண்முகையே[3]'' என்று சான்ருேர் கூறுவது காண்க. மாலைப்போது, காதலரைப் பிரிந்து தனித்திருக்கும் மகளிர்க்குத் ''துனியரும்பித் துன்பம் வளர வரும்[4]'' ஆகலின், அன்பில் மாலை என்றும், ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தலைச் செய்யும் பாணனை, வன்புறைப் பாணன் என்றும் கூறினுர்.

வன்புறைப் பாண என்ருள், இவட் குளதாய பிரிவாற்ருமை அவர்க்கும் உண்டென அவன் கழறுகின்றமையின் பைங்கொடி முல்லை பருவம் செய்தல் அவர் சென்ற நாட்டின்கண் இல்லா தொழியினும், காதலன்புடையார் செயலை விளக்கும் மாலைக் காலமும் உண்டன்ருே என்றது, மாலையம் பொழுது கண்டு தான் ஆற்ரு ளாயினமை உணர்த்தியவாறு ; ''காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து ஏதிலர் போல வரும்[5]'' என்ப. பருவமல்லாக் காலத்தும் மழை சிறந்து ஆர்த்த லுண்மையின், பருவம் செய்தன பைங்கொடி முல்லை யென்ருள். அவர் சென்ற நாட்டின்கண் மாலைப்பொழுது உளதாயின், அவரும் ''மாலை நோய் செய்தல்[6]'' அறிந்து விரைய வந்து சேர்ந்திருப்ப ரென்பது கருத்தாகலின் மாலையும் உடைத்தோ என்ருள் ; ''போனுர் நாட்டு உளதாங் கொல் மதியுமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த இம்மருண்மாலை[7]'' என அடிகளும் பாடுதல் காண்க. (476)

---

1. குறுந். 126. 2. புறம். 265. 3. குறுந். 358.
4. குறள். 1223. 5. ஷை. 1224. 6. ஷை. 1229.
7. சிலப். கானல். 41.

477. பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொ டரும்பட ருழப்போள்
கையறு நெஞ்சிற் குயவுத் துணையாகச்
சிறுவரைத் தங்குவை யாயின்
காண்குவை மன்னுற் பாணவெந் தேரே.

இது, தலைமகண் மாட்டுப் பாணனைத் தூது விடுத்த தலைமகன் கூறியது.

உரை : பாண, குளிர்ந்த மலர்போலும் நீண்ட கண் பசப் பெய்தத் துனி மிகுதற்குக் காரணமாகிய துயரத்தோடு பொறுத்தற் கரிய துன்பத்தினை உறுகின்ற தலைமகளுடைய செயலற்ற நெஞ்சிற்கு உசாத்துணையாகச் சிறிது போது தங்குவை யாயின், எம்முடைய தேரினை ஆண்டு எய்தக் காண்பாய் எ. று.

துனி, அன்பு காரணமாகத் தோன்றும் வெறுப்பு. மன்னும் ஆலும் அசை. துணையாதல், நெஞ்சின்கண் தோன்றிய துன்பத்தை நீக்குதற்குத் துணையா யுதவுதல்; "துன்பத்திற் கியாரே துணை யாவார்[1]" என்புழிப் போல. பனிமலர் நெடுங்கண், பனித்துளி தாங்கு நிற்கும் மலர்போல வருத்தத்தால் கண்ணீர்த்துளி தாங்கி நிற்கும் நீண்ட கண். துனி மிக்கவழித் துயரம் தோன்றி வருத்த வருந்தும் தலைமகளைத் துனிவலி அரும்படர் உழப்போள் என்றார். துனியால் உள்ளம் தளர்ந்து துயர் உறுவோர்க்குத் தனிமை தளர்ச்சியும் துயரமும் மிகுவித்துத் தீது துணியுமாறும் செய்துவிடு மாகலின், அக்காலை உசாத்துணை இன்றியமையாமை பற்றி, உயவுத்துணையாக என ஆசிரியர் எடுத்துரைக்கின்றார் ; "கங்குல் உயவுத்துணை யாகிய துஞ்சா துறைவி[2]" என்பர். சிறுவரை, சிறிது போது; "இன்று செலினும் தருமே சிறுவரை நின்று செலினும் தருமே[3]" என்றாற் போல்வது.

பெரும்பொழுதாகிய காரும் சிறுபொழுதாகிய மாலையும் ஒருங்கே தோன்றி நிலவுதலின், அவட்குத் துனி தோன்றுதலும்,

---

1. குறள். 1299. 2. அகம். 298. 3. புறம். 171.

அதன் பயனுகத் துன்பம் ஒருகாலைக் கொருகால் மிகுதலும் நினைந்து கூறுகின்ரு ளுதலால், துனிமலி துயரமொடு அருந்துய ருழப்போள் என்றும், துயர் மிக்கவழி அவள் நெஞ்சு செயலற்று இனைதல் ஒருதலை என்பான், கையறு நெஞ்சம் என்றும், அந் நெஞ்சத்து மிக்கதனை வாய்விட்டுக் கூறியவழி, ஆற்ருமை சிறிது நீங்குமாகலின், உயவுத் துணையாகி யென்றும், தான் விரையப் போதருதல் கூறுவான், சிறுவரைத் தங்குவை யாயின் என்றும் கூறினுன்.

இது, ''தலைவிமாட்டுப் பாணனைத் தூதாக விடும் தலைவன் கூறியது[1]'' என்பர் நச்சினுர்க்கினியர். இது, தூதுவிடும் தலை மகன் கூறிய தென்பர் இளம்பூரணர்.[2] (477

478. நீடின மென்று கொடுமை தூற்றி
வாடிய நுதல ளாகிப் பிறிதுநினைந்
தியாம்வெங் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லிய துரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே.

இது, பிரிந்துறையும் தலைமகன், தலைமகள் விட்ட தூதாய்ச் சென்ற பாணனை, ''அவள் சொல்லிய திறம் கூறுக'' எனக் கேட்டது.

உரை: முல்லைத்திணைக்குரிய நல்ல யாழையுடைய பாணனே, யாம் விரும்பும் எம் காதலி வரத் தாழ்த்தனமென்று எம்பால் அன்பின்மை கூறி வாட்டமுற்ற நெற்றியினை யுடையளாய்த் துன்பம் மிகுதலான், வாழ்க்கையில் வெறுப்புற்று நின்னிடத்துச் சொல்லிய சொல்லை நீ எமக்குக் கூறுக எ. று.

கொடுமை, ஈண்டு சொல் கோடுதல்; சொல்லியவாறு நடவாமை; ''கொடியாற் கொடுமை யுரைக்கும்[3]'' என்பது

---

1. தொல். பொ. 41. 2, ஷை. 48. 3. குறள். 1235.

காண்க. தூற்றுதல், பலர்க்கும் தெரியவுரைத்தல்; ''துறைவன் துறந்தமை தூற்ருகொல்[1]'' என்பது காண்க. பிறிது நினைதல், உயிர்வாழ்க்கையில் விரும்பிய உள்ளமின்றி வெறுத்த உள்ளம் கொளல்; இது வருத்தம் மிக்க விடத்து உளதாவது; ''வருத்த மிகுதி சுட்டுங் காலே, உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்[2]'' என்பர் ஆசிரியர். நோய் மிகச் சாஅய்ப் பிறிதுநினைந்து சொல்லியது என இயையும். ஏனை மருதயாழ் பாலையாழ் குறிஞ்சி யாழ் போல, முல்லையாழ் முல்லைக்குரியது; இதற்குரிய பண் செவ்வழி; இது மாலைப் போதில் இசைத்தற்குரியது. மதி, முன்னிலை யசை.

பருவவரவில் வருவேன் எனச் சொல்லிப் போந்த தான் அது வந்தெய்தியவழியும் வினை முற்ருமையால் தாழ்த்தமையின், அச் சொல் கோடியது எனச் சொல்லித் தலைமகள் வருந்துவ ளாகலின் கொடுமை தூற்றி என்ருன். தோழியரோடும் பிற வாயில்களோடும் கூறிப் புலம்புதலின், தூற்றி யென்றும், நுதல் வாடி நலன் அழிதலின், அவள் துனியுற்று உயிர் வாழ்தற்கண் வெறுப்புக் கொள்வாளென நினைக்கின்ரு ஞகலின், பிறிது நினைந்து என்றும், தாழ்த்த காலமெல்லாம் ஆற்ருமை மிகுதலின், நோய்மிகச் சாஅய் என்றும் கூறினுன். தம்மாட்டுக் காதலன்புடையார் இன்ஞத சொல்லினும் கேட்போர்க்கு அச்சொல் இன்பமே நல்குதல் இயல் பாகலின், சொல்லியது உரைமதி என்று சொன்மேல் வைத்து மொழிந்தான்; ''சொல்லுமதி பாண சொல்லுதோ றினிய[3]'' எனப் பிருண்டும் வருதல் காண்க. இதனுல் தலைமகள் மாட்டு அருள்மிக வுடைமை யென்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

இது, பாசறைக்கண் தூதுகண்டு கூறிய தென்பர் இளம்பூரணர்[4]. தூது கண்டு அவள் கூறிய திறம் கூறுக எனக் கேட்டது என்பர் நச்சினுர்க்கினியர்[5]. (478)

---

1. குறள். 1157.
2. தொல். பொ. 226.
3. ஐங். 479.
4. தொல். பொ. 48.
5. தொல். பொ. 41.

479. சொல்லுமதி பாண சொல்லுதோ றினிய
நாடிடை விலங்கிய வெம்வயி னுடொறும்
அரும்பனி கலந்த வருளில் வாடை
தனிமை யெள்ளும் பொழுதின்
பனிமலர்க் கண்ணி கூறிய தெமக்கே.

இது, தலைவி விடத் தூதாய்ச் சென்ற பாணன் மாற்றம் கூறக் கேட்ட தலைமகன் இவ் வாடை வருத்தத்திற்கு மருந்தாக இன்னும் கூற வேண்டும் எனக் கூறியது.

உரை: பாண, நாடிடைக் கிடந்த வேற்று நாட்டின்கண் வந்துள்ள எம்மிடத்து, நாடோறும் பொறுத்தற்கரிய குளிரோடு கூடிய அருளில்லாத வாடைக்காற்றுப் போந்து எம் தனிமை குறித்து வருத்தும் இக்காலத்தில், குளிர்ந்த மலர் போன்ற கண்களையுடையாள் விடுத்த மாற்றம் எமக்கு நீ சொல்லுந்தோறும் இவ்வாடை வருத்தத்திற்கு மருந்தாய் இனிமை பயத்தலான், இன்னும் கூறுக எ. று.

இடைவிலங்குதல், இடையே குறிக்கிட்டுக் கிடத்தல்; தலைவன் வந்திருக்கும் நாட்டுக்கும் அவனுடைய நாட்டுக்கும் இடையே பல நாடுகளைக் கடந்து வந்தமை கூறியது, நெடிய சேய்மைக்கண் பிரிந்திருப்பது உரைத்தற்கு. வாடை, குளிர் செய்யும் காற்றுதலின், அரும்பனி கலந்த என்றும், தென்றல்போல உயிர்கட்கு இன்பம் செய்யாமை பற்றி, அருளில் வாடை என்றும் கூறினர். தனிமை எள்ளும்பொழுது, தனித்தோர்க்குத் துன்பநினைவு விளைவிக்கும் மாலைப்போது; ''தனியோர் இரங்கும் பனிகூர் மாலை[1]'' எனச் சான்றோர் குறிப்பது காண்க. எள்ளுதல், ஈண்டு இலக்கணை. சொல்லுமதி என்றது கூற்றின் மேலும், இனிய என்றது கூற்றிடை நிற்கும் சொற்களின் மேலும் நின்றன. நாடிடை விலங்கிய எம் வயின் என்றதனால் மிக்க சேய்மைக் கண்ணுள்ள வேற்றுநாட்டு அகவயின் வந்தெய்தியது பெற்றும். வாடை கூறவே, வினை முடியாமையின் தூது போக்கினமை பெறப்பட்டது.

---

1. குறுந். 358.

குளிரான் மிக்க நடுக்கத்தைச் செய்து வருத்துதலின், அரும் பனி கலந்த அருளில் வாடை என்றும், அது காதலர்ப் பிரிந்தார் கையற்று நலியும் பான்மைத் தாகலின், தனிமை எள்ளும் என்றும், ஆர்வலர் உரைக்கும் எல்லாச் சொல்லும் இனிய வாதலின், சொல்லுதோறு இனிய என்றும், மீட்டும் கேட்டதற்கு நெஞ்சம் அவாய் நிற்றலே யன்றி அவ்வாடை செய்யும் வருத்தத்தைச் சொற்களின் இனிமை மறப்பித்தலின், சொல்லுமதி என்றும் கூறினன். (479)

480. நினக்கியாம் பாணரு மல்லே மெமக்கு
நீயுங் குருசிலை யல்லை மாதோ
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
ஈரித ழுண்க ணுகுத்த
பூசங் கேட்டு மருளா தோயே.

இது, தலைமகட்குத் தூதாய்ப் பாசறைக்கட் சென்ற பாணன் தலைமகனை நெருங்கிச் சொல்லியது.

உரை : பெரும, நின்னையே விருப்பி யுறையும் காதலியாவாள் தன் மனைக்கண்ணே நின் பிரிவாற்ருது புலம்புற்றுக் குளிர்ந்த மலர்போலும் கண்கள் கலுழ்ந்து சொரிந்த கண்ணீரை யாமும் பிறரும் கூறக் கேட்டுவைத்தும் நீ விரைந்து மீளுதலைக் கருதாது இருந்தனை யாகலின், நினக்கு யாம் பாணருமாகோம்; எமக்கு நீதானும் தலைவனு மாகாய் எ. று.

ஆர்வலர் சொரியும் கண்ணீர் பூசல் தரும் என்ப வாகலின், உகுத்த பூசல் என்ருர். உம்மை, பூசல்கேளா முன்பே மீளற் குரியை என்பது தோன்ற நின்றது. நினக்கு யாம் பாணரும் அல்லேம் என்றதே அமையு மாயினும், எமக்கு நீயும் குரிசிலை யல்லை என்றது, வினை முற்றிய தலைமகன் மீளுதலைக் கருதாது பிறிது கருதி யிருந்தமை கண்டு பாணன் விரைய மீளுதற்பொருட்டுப்

புலந்து கூறினது, இது ''பொருட்பயம் பட வந்த அறக்கழிவு [1]'' பொருள், தலைவி பக்கல் நின்று மனைவாழ்க்கை இன்பம் பெருக உறுவது. வினைமுற்றினுன் மீளக் கருதாமைக்கு ஏது வினைத் திறமே யன்றிப் பிறிதின்மை தோன்ற, நீவெங் காதலி என்று ஆசிரியர் குறித்தார். அருளுதல், ஈண்டு விரைந்து மீளுதற் பொருட்டு.

தன் காதலிமாட்டு அருளிலாத நீ பிறர்மாட்டும் அப்பெற்றி யனே யாவாய் எனக் கற்பித்துக் கொண்டு நினக்கு யாம் பாணரும் அல்லேம், எமக்கு நீயும் குரிசிலையல்லை என்றுன். இதன்கண் பாணன், தலைவியின் ஆற்ருமை தோன்ற, அவளுடைய தனிமை யும், ஆற்ருமையும் விளக்கிக் கூறியது அவற் குரிய இலக்கணம்; என்னை, ''நிலம் பெயர்ந் துறைதல் வரைநிலை யுரைத்தல், கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை யுரிய [2]'' என்ரு ராகலின். அன்றியும் இவன் எண்வகைக் குறிப்பும் நன்னயப் படுத்துத் தலைமகற்குக் காட்டல் வேண்டு மாகலின், நினக்கு யாம் பாணரு மல்லேம் என்றதனுற் பெருமிதமும், எமக்கு நீயும் குருசிலை யல்லை என்றதனுல் வெகுளியும், நின்வெங்காதலி என்றதனுல் உவகையும் தன்மனைப் புலம்பி என்றதனுல் மருட்கையும், ஈரிதழுண்கண் உகுத்த பூசல் என்றதனுல் அழுகையும், அருளாதோயே என்றத னுல் இளிவரலும் படக் கூறினமை அறிக.

''எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே [3]'' என்றவிடத்து இது பாணர் கூறியது என்பர் இளம்பூரணர். (480)

---

1. தொல். பொ. 218. 2. ஷை.ஷை. 169. 3. ஷை.ஷை. 45.

49

தேர் வியங்கொண்ட பத்து

இது தேர்ப்பாகனைத் தேரை விரைந்து செலுத்துமாறு தலைமகன் ஏவுதலைக் கொண்ட பொருளவாய பாட்டுக்களின் தொகுதியாகலின், இப்பெயர்த்தாயிற்று. வியம், ஏவல்; வியங் கோள் என்புழிப் போல.

481. சாயிறைப் பணைத்தோ ளவ்வரி யல்குல்
சேயிழை மாத்ரை யுள்ளி நோய்விட
முள்ளிட் டூர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே.

இது, வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

உரை: தேர்ப்பாகனே, நுண்ணிய சந்து பொருந்திய தொடி யணிந்த பருத்த தோள்களையும், அழகிய வரி பொருந்திய அல்குலை யும், செவ்விய இழைகளையு முடைய காதலியை நினைத்தலால் எய்தும் வருத்தம் தீர, நின்னுடைய புட்போல நிலம் தீண்டாத செலவினையுடைய கலித்த குதிரை பூட்டிய தேரை, அக்குதிரைகள் விரைந்து செல்லுமாறு முட்கோலாற் குத்திச் செலுத்துக எ. று.

இறை, ஆகுபெயரால் தொடியை உணர்த்திற்று. திரட்சியினை யுடைய மூங்கில் போலும் தோளெனினுமாம். ''வேயொழுக் கன்ன சாயிறைப் பணைத்தோள்[1]'' என்று பிறரும் வழங்குதல் காண்க. மாதர், காதல். ''தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்[2]'' என்ப வாகலின், விடுதல், தீர்தற்பொருட்டு. முள், ஈண்டு ஆகுபெயராய்த் தாற்றுமுட்கோலை யுணர்த்திற்று. "தீண்டா வைம்முள் தீண்டி நாஞ்செலற், கேமதி வலவ தேரே[3]'' என்றார் பிறரும். செய்தனெச்சம் காரணப் பொருட்டு. வேண்டியவிடத்து இறப்பவும் மிக்க செலவினை யுடைத்தாய் நிலம் தீண்டாது பறப்பது போறலின், புள்ளியற் கலிமா என்றார்; " உள்ளம் போல உற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா உடைமை யான[4]'' என்றும், ''உலகு கடப் பன்ன புள்ளியற் கலிமா[5]'' என்றும் பிறரெல்லாம் கூறுதல் காண்க.

வேறுபடுதற் குரிய தோளும், அல்குலும், இழையும் கூறலின், தன் பிரிவால் அவை அங்ஙனமாயின கொல்லோ என நினைக்குந் தோறும், துயர் எழுந்து வருத்துதலின், நோய்விட என்றும் அவை அவ்வா றாகாமை வேண்டி, சாயிறைப் பணைத்தோள் அவ்வரி யல்குல், சேயிழை மாதர் என்றும் கூறினான். அவை பிரிவிடை வேறுபடு மென்பது, ''தொடிநிலை கலங்க வாடிய தோளும்[6]'' என்றும், ''தேரகல் அல்குல் அவ்வரி வாட[7]'' என்றும், பிறாண்டும் வருவன வற்றா லுணர்க. (481)

482. தெரியிழை யரிவைக்குப் பெருவிருந் தாக
வல்விரைந்து கடவுமதி பாக வெள்வேல்
வென்றடு தானை வேந்தனொடு
நாளிடைச் சேப்பி னூழியி னெடிதே.

இதுவுமது.

---

1. அகம். 213. 2. தொல். சொல். 318. 3. நற். 21.
4. தொல். பொ. 194. 5. அகம். 64. 6. ஐங். 475.
7. ஷை 315.

உரை : பாகனே, வெள்ளிய வேலேந்தி எதிர்த்தோரை வஞ்சியாது வெல்லுகின்ற தானையினை யுடைய அரசனேடு இடைச் சுரத்து ஒருபொழுது தங்கினும், அஃது ஊழியினும் நெடிதாய்த் தோன்றுதலின், ஆராய்ந் தணிந்த இழையினையுடைய அரிவை யாவாட்கு மிக்க விருந்தாகிச் சென்று எய்துமாறு மிக விரையத் தேரைச் செலுத்துவாயாக எ. று.

காதலன் விரும்பும் இழையினையே தேர்ந்தெடுத்தணியும் கற்பு வழிப் பட்ட பொற்பும் அறிவும் விளங்கத் தெரியிழை அரிவை என்ருர். பெருமை நல்கும் விருந்து, பெருவிருந்து எனப்பட்டது; "விருந்தின் துணைத்துணை வேள்விப்பயன்[1]" எனத் திருவள்ளுவர் கூறுவர். இடைச்சுரத்தே ஒருநாள் சேப்பின் என மாறுக. காதல் வயப்பட்ட இருபாலார்க்கும் பொதுவாதலால், ஊழியின் நெடிதே எனப்பொதுப்பட மொழிந்தார்.

விருந்தெனில் விரும்பும் திருந்திய மனையறத்தினள் என்பான், அரிவைக்குப் பெருவிருந்தாக என்றும், வேட்கை வயத்தராயிருர்க்கு அது தணியாத சிறுபொழுதும் பேரூழியின் நெடிதாகத் தோன்றுதல் இயல்பாதலின், நாளிடைச் சேப்பின் ஊழியின் நெடிதே என்றும் கூறினன். "அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும் முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள்[2]" என்றும், "விருந்தயர் விருப்பினள் வருந்தும்[3]" என்றும் தலைவியது விருந்தயர் மாண்பு விதந்து கூறப்படுவது காண்க.

"ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேட்சென்ருர், வருநாள் வைத்து ஏங்கு பவர்க்கு[4]" என்று திருவள்ளுவர் குறிப்பது ஒப்புநோக்கத் தகுவது. இடையே யாண்டும் நில்லாது போதலே செயற்பாற் றென்பதாம். "வேந்துவிடு தொழிலொடு செல்லினும், சேந்துவர லறியாது செம்மல் தேரே[5]" என்ருர் பிறரும். "வினை வயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை, இடைச்சுர மருங்கில் தவிர்குதல் இல்லை, உள்ளம்போல உற்றுழி யுதவும், புள்ளியல் கலிமா உடைமை யான[6]" என்பது தொல்காப்பியம். (482)

---

1. குறள். 87. 2. நற். 142. 3. ஷை. 374.
4. குறள். 1269. 5. குறுந். 242. 6. தொல். பொ. 194.

483 ஆறுவனப் பெய்த வலர்தா யினவே
வேந்துவிட் டனனே மாவிரைந் தனவே
முன்னுறக் கடவுமதி பாக
நன்னுத லரிவை தன்னலம் பெறவே.

இதுவுமது.

உரை: பாக, யாம் செல்லும் நெறி அழகுறுமாறு மலர்கள் மலர்ந்து பரவின; வேந்தனும் வினைமுற்றி மீண்டனன்; தேரிற் பூட்டிய மாவும் விரைந்து செல்லுவவாயின; ஆகலின், நல்ல நெற்றியினை யுடைய அரிவை தனது நலமுற்றும் பெறுதற் பொருட்டுத் தேரை முற்படச் செலுத்துவாயாக எ. று.

தேர் விரைந்து இனிது செல்லுதற்கு வழியருமை இடையீடு செய்யும் என்பது பற்றி, ஆறு வனப்பு எய்தவும் தேர் இனிது செல்லவும், அலர்தாயின என்றார்; எனவே, தலைமகட்குக் குறித்த காலவரவும் காட்டியவா றாயிற்று; "நன்கலம் களிற்றொடு நண்ணா ரேந்தி, வந்துதிறை கொடுத்து வணங்கினர் வழிமொழிந்து, சென்றீ கென்ப வாயின் வேந்தனும், நிலம்வகுத் துறாஅ ஈண்டிய தானையொடு, இன்றே புகுதல் வாய்வது நன்றே[1]" என்று பிறரும் கூறுதல் காண்க. வினைமேற் சென்ற விலங்குகள் மனைக்குரிய மீளும் நெறியில் நிறுத்தியவழிப் பாகர் செலுத்த வேண்டாதே விரைந்து செல்லுமாகலின், மா விரைந்தனவே என எடுத்தோதுவோ ராயினர்.

நெறியும் பிரிந்துழிப் போலன்றி மலர் பரந்து வனப்பிற் றாகலினாலும், விரைய வாராது தாழ்த்தமைக்கு ஏதுவாகிய வேந்தன் வினைமுற்றினமையாலும், இனித் தகைப்பன இல்லை யென்பான், முன்னுறக் கடவுமதி என்றான். "வேந்தனும் வெம்பகை தணிந் தனன் தீம்பெயற், காரும் ஆர்கலி தலைஇயின்று தேரும், ஓவத் தன்ன கோபச் செந்நிலம் வள்வா யாழி யுள்ளுறு புருளக், கடவுக காண்குவம் பாக[2]" என்றார் பிறரும். நலனிழந்து மெலிந்தனள்

1. அகம். 124. 2. அகம். 54.

எனப் பாணர் போந்து தூது கூறக் கேட்டுளா ணுகலின், நன்னுதல் அரிவை தன்னலம் பெற என்ருன். ''தண்பதக் காலே, வரினும் வாரா ராயினும் ஆண்டு அவர்க்கு, இனிதுகொல் வாழி தோழி எனத் தன், பல்லிதழ் மழைக்கண் நல்லகம் சிவப்ப, அருந்துய ருடையள் இவளென விரும்பிப் பாணன் வந்தனன் தூதே[1]'' எனத் தலைவன் கூறுதல் காண்க. (483)

484. வேனி னீங்கக் கார்மழை தலைஇக்
காடுகவின் கொண்டன்று பொழுதே
பாடுசிறந்து
கடியக் கடவுமதி பாக
நெடிய நீடினம் நேரிழை மறந்தே.

இதுவுமது.

உரை: பாகனே, வேனிற் பருவத்து வெம்மை நீங்கக் கார்ப் பருவம் போந்து காலமழையினைப் பெய்தலால் காடு அழகுகொள்வ தாயிற்று; ஆதலால், நேரிய இழையினையுடைய காதலியை மறந்து, நெடிது தாழ்த்தன மாகலின், தேரின் பெருமை சிறக்க விரையச் செலுத்துக எ. று.

முதலொடு கருவுக்கும் ஒற்றுமை யுண்மையின், வினைமுதல் வினையே யாயிற்று. செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. சிறக்க என்பது திரிந்து நின்றது. பாடு, பெருமை; ''பாடு ஊன்றும் களிறு[2]'' என்ருற் போல; போரிடையுழந்தும், விரைந்த செலவால் கட்டு நெகிழ்ந்து வலிகெடாமை தேர்க்குப் பாடு என அறிக. பாடு, ஒலியுமாம். கடிய, விரைவுப் பொருட்டாய கடியென்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த வினையெச்சம். வினைக்குரிய சூழ்ச்சி நிலவிய தலைவன் உள்ளத்தில், வினைமுடிந்தமையால் வீற்றிருத்தற் குரிய தலைவியது நேரிய இழையணிந்த திருவுருவம் நின்று காட்சி வழங்குதலின், நேரிழை என்று ஒழிந்தார்.

வேனில் நீங்கும் கார்ப்பருவ வரவில், வருவல் எனக் குறித்துச் சென்ற தான், அது வந்தெய்தியவழியும், வினை முடியாமையான்

1. அகம். 244. 2. குறள். 597.

தாழ்த்துச் செல்வதுபற்றிக் காடு கவின் கொண்டன்று பொழுது என்றும், கார்ப்பருவத் தொடக்கத்தே வரற்பாலோன், அது கொண்டபின் வருதலின், நெடிய நீடினம் நேரிழை மறந்தே என்றும், வரவு தாழ்த்தமையான் ஆற்ருது வருந்துவாட்குத் தேரினது ஒலி கேட்பின் அஃது அவ் வாற்ருமை தீரும் வாயிலாம் என்பான், பாடுசிறந்து என்றும் கூறினுன். (484)

485 அரும்பட ரவல மவளுந் தீரப்
பெருந்தோ ணலம்வர யாமு முயங்க
ஏமதி வலவ தேரே
மாமருண் டுகளு மலரணிப் புறவே.

இதுவுமது.

உரை: பாக, பொறுத்தற் கரிய வருத்தத்தால் எய்தும் அவலத்தினை அவளும் நீங்க, அவளுடைய பெரிய தோள்கள் இழந்த நலம் மீண்டும் எய்தும் வகை யாமும் முயங்க, விலங்கினம் மருட்சி யுற்றுத் திரியும் மலர்களால் அழகுபெற்ற முல்லைக்காட்டில் தேரைச் செலுத்துக எ. று

அரும்படர், பொறுத்தற்கரிய பிரிவுத்துன்பம்; அவலம் அது காரணமாகப் பிறக்கும் மென்மை; "அரும்படர் அவலநோய் ஆற்றுவ ளென்னுது[1]" என்றவிடத்து, "அரிய நினைவையுடைய அவலத்தைச் செய்யும் காமநோய்" என்பர் நச்சினுர்க்கினியர். தோளுக்குப் பெருத்திருத்தல் நலமாதல் பற்றி, பெருந்தோள் நலம் வர என்ருர். புல்லும் இலையும் நீருமாகிய உணவு மிகப்பெற்றுப் பசிதீர உண்டு மகிழ்ச்சியால் மைந்துற்றுத் துள்ளித் திரியும் விலங்கின் செய்தியை மா மருண்டு உகளும் எனச் சிறப்பித் துரைத்தார்.

செலுத்தியவழித் தான் அவளுடைய கூட்டம் எய்துதலின், அவள் அவலம் தீருமாறும், தோள்கள் நலம் பெறுமாறும் ஒருதலை யாதல் நோக்கி, ஏமதி வலவ தேரே என்ருன். கார்ப்பெயலால்,

1. கலி. 28.

உணவும் நீரும் தேடித்திரியும் வருத்தமின்றி மாவினம் தாம் விரும்பிய புலம் சென்று விரும்பிய பிணையொடு கூடி மபங்கு தலின், மா மருண்டு உகளும் என்றான். அவலம், கண்டார்க்கு இரக்கமுண்டாகும்வகை மேனி மெலிந்து காட்டும் நிலையாதலால் அது தன்கண் தோன்றிய இளிவரல் பற்றிப் பிறந்தமையின், அரும்படர் அவலம் என்றானும். (485)

486. பெரும்புன் மாலை யானாது நினைஇ
அரும்பட ருழத்தல் யாவ தென்றும்
புல்லி யாற்றாப் புரையோட் காண
வள்புதெரிந் தூர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே.

இதுவுமது.

உரை: நெடிய கழியும் புள்ளிய மாலைக்கண் இடையறாது நினைந்து பொறுத்தற் கரிய துயருழத்தல் வேண்டா; நாடோறும் முயங்கிய வழியும் பிரிவு ஆற்றாமைக் கேதுவாகிய பேரின்பத்தை நல்கும் காதலியைக் காண்டற்கு, பாகனே, நின் பறவை போலும் நிலம் தீண்டாத செலவினையுடைய கலித்த குதிரை பூட்டிய தேரை வார்களின் வகையினைத் தேர்ந்து செலுத்துக எ. று.

மாலைப்போது எய்துந்தோறும் காதலரைப் பிரிந்து உறை வோர்க்கு நெடிதாய்த் துன்புறுத்தும் இயல்புடைமைபற்றிப் பெரும்புன்மாலை எனப்பட்டது. "அருஞ்சுரம் நீந்திய வருத் தமொடு கையற்றுப் பெரும்புன் மாலை புலம்புவந் துறுதர[1]" எனப் பிரிந்தேகும் தலைமகனும், "எல்லை பைபயக் கழிப்பி முல்லை அரும்புவாய் அவிழும் பெரும்புன்மாலை[2]" எனப் பிரிந்துறையும் தலைமகளும் குறித்தல் காண்க. பெருமை, ஈண்டு நெடுமை மேற்று. அயரா நினைவு என்பது தோன்ற ஆனாது நினைஇ என்றார். யாவது, ஈண்டுப் பயனின்மை குறித்து நின்றது. புல்லி, என்புழிச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. ஆற்றாப்

1. அகம். 373. 2. நற். 369.

புரையோள், ஆற்ருமைக் கேதுவாகிய புரையோள். புரை, உயர்வு ; ஈண்டு, ''புணர்ந்தார் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய்ப்'' பெருகுதல். வள்பு, குதிரையைச் செலுத்தும் விசை வார்.

பெரிதும் இன்பம் தருதற் குரிய பொழு தாயினும் காதலரை இன்மையின், புல்லென்று தோன்றுதலின், பெரும்புன் மாலை என்றும், செறியுந்தோறும் பேரின்பம் பிறத்தலால் ஆராமையும், அதனுல் ஆற்ருமையும் நிகழ்தல் பற்றி பில்லி ஆற்ரு என்றும், நவில்தொறும் நூல்நயம் போலப் பயில்தொறும் இன்பம் தரும் பண்புடைமையின், புரையோள் என்றும் கூறினுன். வினைமுற்றி மீள்கின்ருன், தலைமகளை காண்டற்கு எழுந்த பெருவிதுப்பினுல் காண என்றவன், விரைந்து செல்வதே பொருளாகப் பாகனை முடுகுதலால், வள்பு தெரிந்து ஊர்மதி என்றும், தெரிந்து இயக்கிய வழிக் குதிரை விரைந்து செல்லும் இயல்பின என்பதைப் புள் ளியற் கலிமா என்றும் கூறினுன். ''வயக்குறு கொடிஞ்சி பொலிய வள்பு ஆய்ந்து, இயக்குமதி வாழியோ கையுடை வலவ[1]'' எனப் பிறரும் கூறுதல் காண்க. (486)

487. இதுமற் பிரிந்தோ ருள்ளும் பொழுதே
செறிதொடி யுள்ள முவப்ப
மதியுடை வலவ வேமதி தேரே.

இதுவுமது.

உரை: காதலரைப் பிரிந்தோர் அவரை நினைந்து வருந்தும் பொழுது இதுவாகலின், அறிவுடைய பாகனே, செறிந்த தொடியினை யுடையாள் தன் நெஞ்சம் உவக்குமாறு தேரைச் செலுத்துவாயாக எ. று.

இப்பொழுதின்கண் பிரியப்பட்டாரிடம் சென்று எய்தாவிடின், அவர் பிரிவாற்ருது இறந்துபடுவ ரென்பது ஒழிய நின்றமையின், மன், ஒழியிசை. ''காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து, கூதிர் நின்றன்ருல் பொழுதே[2]'' என்ருர் பிறரும்.

---

1. அகம். 344. 2. நெடு. 71–2.

செறிதொடி, அன்மொழித்தொகை. உள்ளிய ஒன்று உள்ளிய அப்பொழுதிலே எய்தப்பெறின் உள்ளியார் உள்ளம் கழிபேர் உவகை எய்துவது ஒருதலை யாதலின், உள்ளம் உவப்ப என்ருர். உள்ளிய பொருள் எய்துதலின், உவப்ப என்ருன். மதியுடை வலவ என்ருன், அவன் குதிரைகளின், ஐந்து கதியும் பதினெட்டு சாரியையும், கந்தும், மறமும் முதலிய இயல்புகளையும், வண்ணம், தோற்றம், சுழிநிலை, உறுப்பியல் முதலிய இலக்கணங்களையும் முற்றவும் கற்றுத் துறைபோகியோ ஞதலின். "நப்புலந் துறையும் எவ்வம் நீங்க, நூலறி வலவ கடவுமதி[1]" என்றும், "நூல் நவின்ற பாக நொவ்விதாச் சென்றீக[2]" என்றும் பிறரும் கூறுப. (487)

488. கருவி வானம் பெயல் தொடங் கின்றே
பெருவிறற் காதலி கருதும் பொழுதே
விரியுளை நன்மாப் பூட்டிப்
பருவரல் தீரக் கடவுமதி தேரே.

இதுவுமது.

உரை: தொகுதியையுடைய மேகம் மழை பெய்தலைத் தொடங்கிற்று; பெருமை சிறந்த காதலியாவாள் நம்மை நினைந்து வருந்தும் பொழுதும் இதுவாகலின், அவள் அவ்வருத்தம் நீங்குமாறு விரிந்த தலையாட்டம் அணிந்த நல்ல குதிரைகளைப் பூட்டித் தேரைச் செலுத்துவாயாக எ. று

கருவி, தொகுதி. பெருவிறல், பெரிய திண்மை யமைந்த கற்பின் மேற்று. கருதியவழி எய்தும் துன்பத்தைப் பருவரல் எனப் பின்னர்க் குறித்தலின், கருதும், எனக் குறித்தொழிந்தார். கடவுவதன் பயன் காதலி தன் பருவரல் தீர்தல் என்பது தோன்ற, பருவரல் தீர என்ருர், மதி, முன்னிலையசை. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது, சுட்டு வருவிக்கப்பட்டது.

---

1. அகம். 144. 2. ஐந்திணையைம். 10.

தான் வற்புறுத்துச் சென்ற பருவம் எய்திற்றுகலானும், அது நோக்கி அவள் ஆற்றியிருந்து வருந்துதலானும், கருதும் பொழுது என்றும், பருவரல் தீர என்றும் தன் சொல் தேறி ஆற்றியிருந்த வன்மை தோன்ற, பெருவிறல் என்றும் கூறினுன். உளை, பிடரி மயிர் என்றும் உரைப்ப. "விரியுளை நன்மா கடைஇப், பரியாது வருவர்[1]" என்றும், "விரியுளைப் பொலிந்த வீங்குசெலற் கலிமா[2]" என்றும் பிறரும் கூறினர். (488)

489. அஞ்சிறை வண்டி னரியின மொய்ப்ப
மென்புல முல்லை மலரு மாலைப்
பையு ணெஞ்சிற் றைய லுவப்ப
நுண்புரி வண்கயி றியக்கிநின்
வண்பரி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே.

இதுவுமது.

உரை: பாகனே, அழகிய சிறகுகளை யுடைய வண்டின் அழகிய கூட்டம் சூழ்ந்து ஒலிக்க, மென்புலங்களில் வளரும் முல்லைகள் மலரும் மாலைப்பொழுதின்கண், வருத்தமுற்ற நெஞ்சினை யுடைய தையலாவாள் நம் வரவு கண்டு மகிழும் வண்ணம், நுண்ணிய புரிகளையுடைய வளவிய கயிற்றினை இயக்கி, நின்னுடைய வளவிய குதிரைகள் பூட்டிய நெடிய தேரினை விரையச் செலுத்துக எ. று.

அரியினம், வண்டின் கூட்டம். "அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்[3]" என்றுர் பிறரும். வளன், விரைந்த செலவால் குளம்பு இடையூறு எய்தாவகைக் கால் காப்புடைமை; "கட்டளைப் புரவி சூழ்ந்து கால்புடை காப்ப ஏவி[4]" என்பதனுலும் அறிக. கதி, சாரி, பொருமுரணுற்றல் முதலியவற்றை வளன் என்றுர் என்றுமாம்.

---

1. நற். 367. 2. ஷை. 121. 3. முருகு. 76.
4. சீவக. 767.

மாலையம் பொழுது கண்டு ஆற்ருது வருந்துகின்ருள் என்பான், பையுள் நெஞ்சின் என்றும், விரைந்து சென்ற வழி எய்தும் கூட்டத்தை இன்றியமையாள் என்பான் அதற்கு அவள் செய்து கொள்ளும் ஒப்பனையை விதந்து, தையல் என்றும் கூறினுன். வண்கயிறு இயக்கிக் கடவுமதி என்ருன், வண்பரி நெடுந்தே ராகலின். ''வலவன் வள்பு வலித்து ஊரினல்லது முள்ளுறின், முந்நீர் மண்டிலம் ஆதி யாற்ரு, நன்னுல்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்[1]'' என்ருர் பிறரும். (489)

490. அந்தீங் கிளவி தான்றர வெம்வயின்
வந்தன்று மாதோ காரே யாவயின்
ஆய்தொடி யரும்படர் தீர
ஆய்மணி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே.[2]

இதுவுமது.

உரை: அழகிய இனிய சொற்களையுடைய காதலியை நாம் எய்துதற்பொருட்டுக் கார்ப்பருவம் இப்போது இங்கே வந்தது; அவ்விடத்தே ஆய்ந்தணிந்த தொடியையுடைய அவள் எய்தி வருந்தும் அரிய நோய் நீங்குமாறு தெளிந்த மணி கட்டிய நெடிய தேரை விரையச் செலுத்துவாயாக எ. று.

அந்தீங்கிளவி, ஆய்தொடி என்பன தலைமகளைக் குறித்து நின்றன. தருதல், ஈண்டு எய்துவித்தல்; அஃதாவது, இதுகாறும் மேற் கொண்டிருந்த வினையையே நினைந்திருந்த உள்ளம் அது முடியவும் மறந்திருந்த தலைமகளை நினைப்பித்தல். கார், அந்தீங்கிளவியை எம்வயின் தர வந்தன்று என இயைக்க. மாதும் ஓவும் அசை. ஆய்தொடி, சுட்டுப்பெயர் மாத்திரையாய் வந்தது. படர், பிரிவின் கண் பெருகி நிற்கும் காமநோய் கார் வந்தன்று, இனி ஈண்டு நீடுதல் நன்றன் ருகலின், தேரைக் கடவுமதி என முடிக்க.

---

1. அகம். 104.
2. அச்சுப்பிரதியில் இப்பாட்டு இடையில் சிதைந்துள்ளது; சீர்காழி கோவிந்தசாமி ரெட்டியார் கைப்பிரதியில் கண்டவாறே இங்கு மேற்கொள்ளப்பட்டது.

கார்ப்பருவ வரவில் வருகுவல் எனக் கூறிப் போந்த தன் சொல்லைத் தேறி யிருக்கும் தலைமகள் கார்தோன்றக் கண்டதும், "வருங்கொல் தோழி நம் இன்னுயிர்த் துணையென[1]" இனிய சொற்களால் தன் வரவு நோக்கி நிற்பள் என்பது நினைந்து பாகற்குக் கூறுகின்றானாகலின், அந்தீங் கிளவி என அவள் சொற்களைச் சிறப்பித்தும், அவளால் நோக்கப்படும் கார்முகில், அவளை நினைப்பித்து விரைந்து சென்று அவளை எய்துமாறு அவள் உள்ளத்தைத் துரத்துதலின், வந்தன்று மாதோ காரே என்றும், இனி விரைந்து சென்று அவளை எய்துதலின்றிச் செய்வது பிறிதில்லை என்பான், நெடுந்தேர் கடவுமதி விரைந்து என்றும் கூறினான். கார்வரவு காணின். அவட்கு உளதாகிய வருத்தம் பொறுத்தற் கரிதாம் என்றற்கு அரும்படர் என்றும், தேர் சென்று சேருமுன் நம் வரவைத் தேரின் மணியோசை சென்று இசைக்கவேண்டும் என்றற்கு ஆய்மணி நெடுந்தேர் என்றும் சிறப்பித்தான். "வல்லே கழலொளி நாவின் தெண்மணி கறங்க, நிழலொளி பன்ன நிமிர் பரிப் புரவி வயக்குறு கொடிஞ்சி பொலிய வள்பாய்ந்து, இயக்குமதி வாழியோ கையுடை வலவ[2]" என்று பிறரும் கூறுதல் காண்க.

(490)

---

1. அகம். 224. 2. டை. 344.

50

வரவுச்சிறப்புரைத்த பத்து

இது வினைவயிற் பிரிந்த தலைமகன் மீண்டு போந்தவிடத்து, அவன் தலைவிக்காதல், அவன் வரவு கண்ட தோழி தலைமகட் காதல், தோழி அவனுக்காதல் நிகழ்த்தும் கூற்றுக்களால், அவன் வரவான் உளதாய சிறப்புத் தோன்றப் பாடிய பாட்டுக்களின் தொகுதியாகலின், இப்பெயர்த்தாயிற்று.

491. காரதிர் காலையா மோவின்று நலிய
நொந்துநொந் துயவு முள்ளமொடு
வந்தனெம் மடந்தைநின் னேர்தர விரைந்தே

இது, வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைவிக்குச் சொல்லியது.

உரை: மடந்தையே, கார்முகில் திரண்டு முழங்கும் கார்ப் பருவம் போந்து இடையீடின்றி வருத்துதலால் நோய் மிக்கு உழலும் நெஞ்சமொடு நின்னுடைய அழகு துணைசெய்ய யாம் விரைந்து போந்தேம், காண் எ. று.

கார் அதிர் காலை, கார்முகில் திரண்டு எழுந்து முழங்கி மழைபெய்யும் கார்ப்பருவம். ஓவுதல், இடைவிடுதல். "இன்றி யென்னும் வினையெச்சம், செய்யு ளாகலின், இன்று[1]" என

1. தொல். எழுத். 237.

வந்தது. அடுக்கு, மிகுதிப் பொருட்டு. உயவுதல், வருந்துதல். மடந்தை, ஈண்டுப் பருவமுணர்த்தாது பெண்பாற் பெயராய் நின்றது.

அது தான் குறித்த பருவமாதலாலும், அது தொடங்கிய பொழுதின்கண் வினை முற்றுமையாலும் பெரிதும் வருந்தினேன் என்பான், ஓவின்று நலிய என்றும், பருவ வரவிற்கும், வினை முற்றுமைக்கும் இடையிற் கிடந்து அலமருதலின், நொந்து நொந்து உயவும் உள்ளமொடு என்றும், இவ்வாற்றால் ஆற்றாது வருவேனை, மாவும் புள்ளும் மலரும் நின் அழகு தோற்றுவித்து ஆற்றுவித்தன என்றற்கு, நின் ஏர்தர என்றும், நெஞ்சினை யுளப்படுத்துக் கூறலின், வந்தனெம் என்றும் கூறினான். (491)

492. நின்னே போலு மஞ்ஞை யாலநின்
நன்னுத னாறு முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க
நின்னே யுள்ளி வந்தனென்
நன்னுத லரிவை காரினும் விரைந்தே.

இதுவுமது.

உரை: நல்ல நெற்றியினையுடைய அரிவையே, நின்னை ஒக்கும் மயில்கள் ஆலுதலாலும், நின் நல்ல நெற்றியின் மணம் கமழும் முல்லைகள் மலர்தலாலும், நின்னைப் போலும் மான்கள் மருண்டு நோக்குதலாலும் வானில் எழுந்த மேகத்தினும் விரைய யான் நின்னை நினைந்து போந்தேன் எ. று.

ஆலுதல், ஈண்டு உவமம் அன்று. மான்களின் விழிச் சுழற்சி மருண்டு நோக்குதல் போறலின், மருண்டு நோக்க என்றார்; மருண்ட நோக்கம் எனச் சிறப்பித்தலின், மா வென்னும் பல பொருள் ஒருசொல் மானினத்துக்காயிற்று. மஞ்ஞை சாயலுக்கும், முல்லை நுதல் மணத்துக்கும், மான், மருண்ட நோக்கத்துக்கும் உவமம். ஏகாரங்கள் தேற்றம் எனினுமாம். இன், உறழ்ச்சி. முல்லைப் பூவின் மணம் மகளிர் நுதற்கண் கமழ்தல், ''பூத்த

முல்லைப் பசுமுகைத் தாது நாறும் நறுநுதல் அரிவை[1]'' என்றார் பிறரும்.

ஒருபால் மயிலும் ஒருபால் முல்லையும் ஒருபால் மானினமும் தலைமகளின் சாயல் முதலியவற்றைக் காட்டி அவளை நினைப்பித்தலின், காண்டல் வேட்கை மீதூர நின்னே உள்ளி வந்தனென் என்றும், அவன் வரவு கண்ட உவகையால் நுதல் ஒளிசிறந்து விளங்குதல் பற்றித் தலைவியை நன்னுதல் அரிவை என்றும், கார்ப்பருவத் தொடக்கத்தே வருகின்றானாகலின், காரினும் விரைந்து என்றும் கூறினான். (492)

493. ஏறுமுரண் சிறப்ப வேறெதி ரிரங்க
மாதர் மான்பிணை மறியொடு மறுகக்
கார்தொடங் கின்றே காலை
நேரிறை முன்கைநின் னுள்ளியாம் வரவே.

இதுவுமது.

உரை: நேரிய தொடியணிந்த முன்கையினை யுடையாய், யாம் நின்னை நினைந்து வருமிடத்து ஆமாவின் நல்லேறுகள் மாறுபாடு மிக்குச் சிலைக்க, அவற்றிற்கெதிராக விசும்பில் இடியேறு முழங்க, காதலையுடைய பெண் மான்கள் தம் கன்றோடு மயங்கித் திரியக் கார்ப்பருவம் தொடங்குவதாயிற்று எ. று.

ஏறு, முன்னது ஆனேறும் பின்னது இடியேறுமாம். ஆனேறு என்றது ஈண்டைக்குச் சிறப்புடைய காடுறையும் ஆமாவின் ஏறெனக் கொள்க. '' ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று இழுமென இழிதரும் அருவி[2]'' என்றும், '' விசும்பின் ஏறெழுந்து முழங்கினும் மாறெழுந்து சிலைக்கும், கடாஅ யானை[3]'' என்றும், பிறரும் கூறுவது காண்க. இரங்குதல், முழங்குதல்.

இடியொலிகேட்டு அச்சுற்ற ஏற்றினம் குளிர் மிகுதியால் முரண் மிக்குச் சிலைத்தலின், ஏறு முரண் சிறப்ப என்றார்.

---

1. குறுந். 223. 2. முருகு. 315-6 3. அகம். 144.

''வானேறு வானத்துரற வயமுரண், ஆனேற்றெருத்தல் அதனேடு எதிர்செறுப்ப[1]'' என்ருர் பிறரும். மறியாகிய கன்றுகளைப் பிரியாது உகளுதலின், மாதர் மான்பிணை என்ருர்.

பண்டு பிரிந்த காலத்துக் கார்ப்பருவ வரவில் வருகுவல் என வற்புறுத்திச் சென்ரு ஞகலான், தன் வரவும் கார்வரவும் ஒப்ப நிகழும் நிகழ்ச்சியால் தான் சொல்லிய சொல் தவருது வந்தமை யுணர்த்தித் தலைமகளை மகிழ்வித்தல் தலைவன் கருத்தாகலின், கார் தொடங்கின்றே காலை என்ருன். கார்தோன்று முன்பே தான் வினை முடித்துத் தலைமகளை நினைந்து போந்தமை வற்புறுத் தற்கு நின் உள்ளி யாம் வரவே காலை கார் தொடங்குவதாயிற்று என்ருனும். யாம் வரக்கார் தொடங்கின்று என்றது தான் கார்ப் பருவம் தொடங்குவதன் முன்பே மீண்டு போந்தமை கூறியவாறு. (493)

494. வண்டுதா தூதத் தேரை தெவிட்டத்
தண்கமழ் புரவின் முல்லை மலர
இன்புறுத் தன்று பொழுதே
நின்குறி வாய்த்தனந் தீர்கினிப் படரே.

இதுவுமது.

உரை : வண்டுகள் தேனுண்டு பாடவும், தேரைகள் ஒலித் தலைச் செய்யவும், தண்ணிதாய் மணங்கமழும் காட்டில் முல்லைகள் மலரவும், இக் கார்காலத்து மாலைப்போது இன்பம் செய்வதாயிற் ருகலானும், நீ குறித்தவாறே யாம் தப்பாமல் வந்தெய்தினமை யானும் இனி வருந்துதலை ஒழிக எ. று.

வண்டு பாடுதலும், தேரை தெவிட்டுதலும், முல்லை மலர் தலும் கூடினுரை இன்புறுத்துவ வாயினும், பொழுதின் மேல் வைத்துக் கூறியது நிகழ்ச்சிக் களனும் இயைபுண்மை பற்றி யென்க. காலமும் இடமாம் குறிப்பினை யுடைத் தாகலின் ; ''வினை செய் யிடத்தின் நிலத்தின் காலத்தின், அனைவகைக் குறிப்பின் தோன்று மதுவே[2]'' என்று ஆசிரியர் விதித்தமை உணர்க.

1. கார். 10. 2. தொல். சொல். 81.

வினைமுற்றி மீண்ட தலைமகன் தலைவியொடு கூடி இருக்கையில் மாலைப்போது, வண்டின் இசையும், தேரை ஒலியும், மலர்ந்த முல்லையின் நறுமணமும் கொண்டு விளங்குவது கண்டு உள்ளம் காதல் சிறப்பது உணர்ந்து உறையாடுகின்ருனாகலின், இன்புறுத் தன்று பொழுதே என்ருன். தலைவன் பிரிவின்கண் மாலைப்போது தன் உள்ளத்தில் காமம் மிக்க கழிபடர் விளைத்துத் துன்புறுத்தினமை நினைந்து தலைமகள் நுதலொளி வேறுபட்டாளாக, தான் அவள் குறித்த கார்ப்பருவ வரவில் வாராது சொல் வேறுபட்டதாக நினைந்து வருந்துகின்ருள் போலும் எனக்கருதி அவ் வேறுபாடு நீக்குகின்ருனாகலின், நின் குறி வாய்த்தனம் என்றும், தீர்க இனிப் படரே என்றும் கூறினன். (494)

495. சென்னில மருங்கிற் பன்மலர் தாஅய்ப்
புலம்புதீர்ந் தினிய வாயின புறவே
பின்னிருங் கூந்த னன்னலர் புனைய
உள்ளுதொறுங் கலிழு நெஞ்சமொடு
முள்ளெயிற் றரிவையாம் வந்த மாறே.

இதுவுமது.

உரை: முள்போற் கூரிய பற்களையுடையாய், யாம் பிரிந்து சென்ற நிலத்திடத்தே காடுகள் பலவாய மலர்கள் பரந்து விளங்கின மையால், அவற்றைப் பின்ன லிடுதற் குரிய கரிய நின் கூந்தல் நல்ல அழகுறப் புனைதற்கு, நினைக்குந்தோறும் தனிமை வருத்த வருந்திய மனத்தோடு யாம் வந்தமையால், அவை அத் தனிமை நீக்கி இனிமை செய்வன வாயின எ. று.

புலம்பு தீர்ந்து இனிய வாயின புறவே என்றதனுல் பிரிந்தவழி அவை புலம்புதந்து வருத்தினமை பெற்ரும். புறவு, தாஅய் வருத்தக் கலிழும் நெஞ்சமொடு வந்தமாறு தீர்ந்து இனிய என்று இயைக்க. இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது. தீர்தல், தீர்த்தற் பொருட்டு. மாறு, மூன்ருவதன் பொருட்டாயதோர் இடைச்சொல்.

நின் கூந்தல் நலம் புனைய நினைக்குந்தோறும், நின் பிரிவால் உளதாகிய தனிமை வருத்த வருந்தி வந்தமையால், புறவு அத் தனிமை நீக்கி இன்புறுத்துவ வாயின என்பதாம் எனவே, சென்றுழி வருத்திய புறவு வரும்பொழுது இனிமை செய்வதாயிற் றென வரவுச் சிறப்பு உணர்த்திய வாறு.

தலைமகளைப் பிரிந்து சென்ற போழ்து எதிரே கிடந்த நிலம் பல்வகைப் பூக்கள் மலர்ந்து விளங்கினமையின், தன் நெஞ்சம் அவளையே நினைந்தமை தோன்ற, பன்மலர் தாஅய் என்றும், நினைத்தற் குளதாய இயைபு இஃது என்பான், பின்னிருங் கூந்தல் நன்னலம் புனைய என்றும், நினைவு பன்முறை எழுந்தமை யுணர்த்தற்கு, உள்ளுதொறும் என்றும், பிரிவால் உளதாய புலம்புறு தனிமை அந்நினைவு கைகூடற்கு இடனின்மை பற்றி வருத்தினமையால் நெஞ்சு கலுழ்ந்தது என்பான், கலிழும் நெஞ்ச மொடு என்றும், இக் கூற்றைக் கேட்டு முறுவலித்து மகிழும் தலைவி நலம் வியந்து முள்ளெயிற் றரிவை என்றும், இப்போது அவ்வொப்பனையைச் செய்து உவகை மிகுவது தோன்ற, புலம்பு தீர்ந்து இனியவாயின புறவே என்றும் கூறினன். எனவே, சென்னில மருங்கில் பன்மலர் பரந்து விளங்கிய புறவு புலம்புதந்து இன்னுமை விளைவித்தமையும் இதனுல் புலப்படுத்தா னுயிற்று என அறிக. (495)

496. மாபுதல் சேர வரகினர் சிறப்ப
மாமலை புலம்பக் கார்கலித் தலைப்பப்
பேரமர்க் கண்ணி நிற்பிரிந் துறைநர்
தோடுணை யாக வந்தனர்
போதவிழ் கூந்தலும் பூவிரும் புகவே.

இது, குறித்த பருவத்தின்கண் தலைமகன் வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது.

உரை : பெரிய அமர்த்த கண்களையுடையாய், நின்னைப் பிரிந்து சென்று தங்கிய காதலர் நின் தோளுக்குரிய துணையாய்

விலங்கினம் புதர்க்குட் புக்கு வதியவும். வரகுகள் பூங்கொத்து எடுத்துத் திகழவும், பெரிய மலைகள், இயங்குநரும் இயங்குவனவும் இன்றித் தனிப்பவும், மழை முழக்கிட்டுப் பெயலால் நீர் பெருக் கெடுத்து அலைக்கவும் வந்தன ராகலின், பூக்களை விரும்பாது அவிழ்ந்து கிடந்த நின் கூந்தலில் அவற்றை விரும்பி யணிந்து புனைவாயாக எ. று.

மா வென்றது, ஈண்டு மானினங்களை; கார்காலத்தே புதர்க ளிடை வதிவன வாகலின், '' மானேறு மடப்பிணை தழீஇ மருள் கூர்ந்து, கானம் நண்ணிய புதன்மறைந் தொடுங்கவும்[1]'' என்றார் பிறரும். வரகு கார்காலத்து மலர்ந்து விளைவதாகலின், வரகினர் சிறப்ப என்றார். ''செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த, கௌவை நாற்றின் காரிரு ளோரிலை நவ்வி நாண்மறி கவ்விக் கடன் கழிக்கும் காரெதிர் தண்புனம்[2]'' எனச் சான்றோரும் கூறுப. முல்லை நிலத்தவர்க்கு வரகு உணவுப்பொருளுமாம். '' கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே, சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொடு, இந்நான்கல்லது உணவு மில்லை[3]'' என்பது காண்க.

கற்புடை மகளிர் தம் கணவர் பிரிந்துழிப் பூவும் புனைவன வாய பிறவும் கொள்ளா ராகலின், போதவிழ் கூந்தல் பூவிரும் புகவே என்றாள். '' முல்லை, வைவாய் வான்முகை யவிழ்ந்த கோதை, பெய்வனப் பிழந்த கதுப்பு முள்ளார்[4]'' என்றும், '' மெல்லென, மண்ணுக் கூந்தன் மாசறக் கழீஇச், சில்போது கொண்டு பல்குர லமுத்திய அந்நிலை[5]'' என்றும் சான்றோர் கூறுதல் காண்க.

பிரிந்த காலைத் தலைமகன் குறித்த பொழுதும், தான் வற்புறுத்தி வந்ததும் கார்கால மாகலின், குறித்தாங்குத் தவறாது தலைவன் வரக்கண்ட தோழி, மகிழ்ந்து கார்வரவை விதந்து, மா புதல் சேர வரகு இணர் சிறப்ப, மாமலை புலம்பக் கார் கலித்து அலைப்ப என

1- குறுந். 319. 2. ஷை- 282. 3. புறம். 335.
4. அகம். 144. 5. நற். 42

மொழிந்தாள். அது கேட்கும் தலைவி தன் கண்ணைப் பரக்க விழித்துக் கார் வரவை நோக்குவாள் போன்று காதலன் தேர் வருகையை நோக்குவது குறித்துப் பேரமர்க் கண்ணி என்றும், அக்காலை, இளையர் முற்படப் போந்து தலைவன் வரவு கூறவும், நிற்பிரிந்துறைநர் தோள் துணையாக வந்தனர் என்றும், அவரை வரவேற்றற்கு நீ நின்னை ஒப்பனை செய்து கோடல் வேண்டும் என்பாள், போதவிழ் கூந்தலும் பூ விரும்புக என்றும் கூறினாள். (496)

497. குறும்பல் கோதை கொன்றை மலர
நெடுஞ்செம் புற்ற மீயல் பகர
மாபசி மறுப்பக் கார்தொடங்கின்றே
பேரிய லரிவைநின் னுள்ளிப்
போர்வெங் குரிசில் வந்த மாறே.

இதுவுமது.

உரை: பெரிய இற்கிழமை யுடைய அரிவையே, போரை விரும்பிப் பிரிந்து சென்ற தலைவர் நின்னை நினைந்து வந்தமையால், குறுகியவும் பலவு மாகிய கோதை போலும் பூக்களைக் கொன்றைகள் மலரவும், நெடிய செந்நிறத்தவாய புற்றுக்கள் ஈயல்களை வெளியிடவும், குளிர் மிகுதியால் மாவினம் உணவினை வெறுக்கவும் ஆகிய கார்ப்பருவம் தொடங்குவதாயிற்று எ. று.

கொன்றை மாலைபோல மலர்வ தாகலின், கொன்றை குறும் பல் கோதை மலர என்றார். "பேதையங் கொன்றைக் கோதை நிலை நோக்கி[1]" எனப் பிறருண்டும் கூறுதல் காண்க. செம்மண்ணு லாய நெடிய புற்றாதல் பற்றி, நெடுஞ் செம்புற்றம் என்றும், கார்மழையால் அது நனைந்து நீர்நிறைதலின், உள்ளுறையும் ஈயல் வெளிப்படுதலால், ஈயல் பகர என்றும் கூறினார்; "சிறுபுன் சிதலை சேண்முயன் றெடுத்த நெடுஞ்செம் புற்றத் தொடுங்கிரை முனையின்[2]" எனப் பிறரும் கூறினர். மழை மிகப் பெய்யுங்கால்

1. ஐங். 462.   2. அகம். 149.

மாவினம் மேயலை விரும்பாமையின், மா பசிமறுப்ப என்றார் "பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென....மாயேல் மறப்ப, மந்தி கூர[1]" என வருதல் காண்க.

பெருமை, இல்லின்கண் இருந்து நல்லறம் புரிதலால் வரும் புகழ். "பேரிற் கிழத்தி யாகென[2]" என்பது காண்க. கோதை, ஆகுபெயர். "மா பசி மறப்ப" என்றதனால் ஏதுவருவிக்கப் பட்டது. "மா மேயல் மறுப்ப[3]" என்றார் பிறரும். போமரனில் புகலும் மறவ னாகலின், போர்வெங் குரிசில் என்றும், கார்ப்பருவ வரவில் வருவல் என்று வற்புறுத்துச் சென்றவன் தப்பாது வந்த மையின், வந்தமாறே என்றும் கூறினாள். (497)

498. தோள்கவி னெய்தின தொடிநிலை நின்றன
நீள்வரி நெடுங்கண் வாள்வனப் புற்றன
ஏந்துகோட் டியானை வேந்துதொழில் விட்டென
விரைசெல நெடுந்தேர் கடைஇ
வரையக நாடன் வந்த மாறே.

இதுவுமது.

உரை: உயர்ந்த மருப்புக்களை ஏந்திய யானைகளையுடைய வேந்தன் வினைமுடித்து விடைதந்து விடுத்தானாக, விரைந்த செலவினை யுடைய நெடிய தேரைச் செலுத்திக்கொண்டு மலை நாடன் வந்தமையால் நின்னுடைய கவின் இழந்த தோள்கள் அக் கவின் பெற்று விளங்கின; நெகிழ்ந்து ஓடிய தொடிகள் அந் நிலையே யாப்புற நின்றன; பசந்திருந்த நீண்ட வரி பொருந்திய கண்கள் பசலை நீங்கி ஒளிமிக்கு அழகு திகழ்வவாயின காண் எ. று.

ஏந்துகோட்டு யானை வேந்து என்றது, வேந்தனது மறமிகுதி யும் வினையாண்மையும் தோன்ற நின்றது. தொழில் விடுதலாவது,

1. நெடுநல். 2-9. 2. அகம். 86. 3. நெடு. 9.

வினை முடிந்தமையின், மேலே செயற்குரிய தொழில் வேறின்மையின் வினையாளர்க்கு விடை கொடுத்து அமைதல். வந்தமாறே என்ற தனால் வாராவழி இருந்த நிலை வருவிக்கப்பட்டது.

வினை முடித்தல்லது மீளுதல் இன்மையின், வேந்தன் தொழில் விட்டெனன என்றும், கூட்டம் எய்துவான் போந்தமையின், வரை யக நாடன் என்றும் கூறினள். பிரிவின்கண் தலைமகட்குத் தோள் நெகிழ்ந்து தொடி கழன்றோட மெலிந்திருந்தமையும், நெடிய கண்கள் பசலையுற்று ஒளி மழுங்கி யிருந்தமையும் கண்டு வற்புறுத்து ஆற்றி வந்தா ளாதலால், தலைவன் வரவு கண்டு பிறந்த தலைவி யின் மெய்ந்நலத்தைத் தோள் கவின் எய்தின என்பது முதலிய வற்றால் எடுத்து மொழிந்து தோழி இன்புறுத்துகின்றாள். (498)

499. பிடவம் மலரத் தளவம் நனையக்
கார்கவின் கொண்ட கானங் காணின்
வருந்துவள் பெரிதெனவருந் தொழிற் ககலாது
வந்தன ரானங் காதலர்
அந்தீங் கிளவி நின் னாய்நலங் கொளவே.

இதுவுமது.

உரை : அழகிய இனிய சொற்களையுடையாய், நம் காதலர், நீ, நின் அழகிய நலம்பெறுவதை உளத்தே கொண்டு, பிடவங்கள் மலர்தலைச் செய்ய, முல்லைகள் அரும்புகளை ஈன, கார்ப்பருவத்தால் அழகு பெற்ற காட்டினை நம் காதலியாவாள் காண்பளேல், அது தான் குறித்த பருவமாதல் கண்டு பெரிதும் வருந்துவளெனக் கருதி மேல் செய்தற்கு வரும் தொழிலினையும் மேற்கொள்ளாது விடுத்துப் போந்தார், காண், எ. று.

நனைய, நனையென்னும் பெயரடியாகப் பிறந்த வினை. தளவம், செம்முல்லை. வருந்தொழில், மேல்செய்தல் வேண்டித் தோன்றும் பிறிது வினை. தொடர்ந்த வினையன்மை அகலாது என்றதனாற் பெறப்படும். சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.

வினையே ஆடவற்கு உயிர் எனினும் மனையுறை மகளிர்க்கு அவரே உயிராகையாலும், நின்மாட்டுள்ள காதல் மிகுதியாலும் அதனைவிட்டுப்போந்தார் என்பாள், வருந்தொழிற்கு அகலாது வந்தனரால் நம் காதலர் என்றாள். இதனை, அருந்தொழிற்கு அகலாது எனக் கொள்ளின், அஃது அவன் ஆண்மைக்கு மாசு தருவதாமென வுணர்க.

வருந்தொழிற்கு அகன்றவிடத்து நின் ஆய்நலம் கெடும் என்பதை உள்ளத்திற் கொண்டமையால் வந்தனர் என்றது, '' நன்னுதல் பசப்பவும் பெருந்தோள் நெகிழவும், உண்ணு வுயக்க மொடு உயிர்செலச் சாஅய், இன்னமாகவும் இங்குநத் துறந்தோர், அறவ ரல்லர் எனப் பல புலந்து[1]'' தலைவி வருந்தினமை நினைப் பித்து, அவர் " பெரும்பேரன்பினர்[2]'' எனத் தோழி தன்கூற்றை வற்புறுத்தி மகிழ்வித்தவாறு. (499)

500. கொன்றைப் பூவிற் பசந்த வுண்கண்
குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத்
தொல்கவின் பெற்றன விவட்கே வெல்போர்
வியனெடும் பாசறை நீடிய
வயமான் றோன்றல்நீ வந்த மாறே.

இது, வினைமுற்றி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

உரை: வெல்லுகின்ற போரினைச் செய்யும் அகன்ற நெடிய பாசறைக்கண்ணே தங்கிய புலி போலும் ஆற்றலையுடைய தலைவ, நீ போந்தமையால், இவளுக்குக் கொன்றைப் பூப்போல் பசப்புற் றிருந்த மையுண்ட கண்கள், குன்றிடத்தேயுள்ள நெடிய சுனைக் கண் பூத்த குவளைமலர் போல் பழைய அழகைப் பெற்றன, காண் எ. று.

பசந்த கண்ணிற்குக் கொன்றைப்பூ உவமமாதலைக் ''கொன்றையம் பசுவீ, நம்போற் பசக்குங் காலை[3]'' எனப்

---

1. அகம். 85. 2. ஷை. 91. 3. குறுந். 183.

பிறரும் கூறுவர். பண்டு பிரிவதற்கு முன்னே விளங்கியிருந்த நலம் என்றற்குத் தொல்கவின் என்ருர். குறித்த பருவத்து முடியாது மேற்கொண்ட வினை சிறிது தாழ்ந்தமையும் அதனுல் தலைமகள் பெரிதும் ஆற்ருது மேனி வேறுபட்டமையும் குறிப்பால் தோன்ற, நீடிய என்று சுட்டினுர். வயமான், புலி. "வரிகிளர் வயமான் உரிவை தைஇய, யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்[1]" என்பதனுலும் அறிக.

அவன்பிரிந்தவிடத்து நிகழ்ந்ததனை காட்டுவாள், வந்துழி மலர்ந்து தோன்றும் கொன்றப்பூவினை உவமித்தாள். தொல் கவின் பெறுதற்குக் குன்ற நெடுஞ்சுனைக் குவளையைக் கூறினுள், உடம்பொடு புணர்த்தலால், பண்டு சுனை விளையாடியும் சுனைப்பூக் குற்றும் நுகர்ந்த வின்பத்தினை நினைவுறுத்தற்கு. கூறவே, தலை மகள் நின் பிரிவால் மேனி வேறுபடினும் தனக்குரிய மாண்புக ளான ''கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும், மெல்லியற் பொறையும், நிறையும்'' முதலாயினவற்றைப் பண்டேபோல் உடையளாய் விளங்குகின்ருள் என அவள் மாணலம் கூறி மகிழ் வித்தவாரும்.

இத்தொகை தொகுத்தார், புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்; இத்தொகை தொகுப்பித்தார், யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரல் இரும்பொறையார்.

இந்நூலைத் தொகுக்குமிடத்துத் தொடக்கத்தே அகனைந்திணைக் குரிய இன்ப வாழ்வில், புறத்தொழுக்கத்திற் பிரிந்தொழுகிய தலைமகன், தன் மனையகம் போந்து தலைமகளைக் கூடி நிகழ்த்தும் இன்பவுரையை மங்கல மரபினுல் தோழி கூற்ருக முதற்கண் கோத்ததுபோல, இறுதிக்கண், பொருளும் அறமும் கருதிப் பிரிந்து பாசறையிடத்தும் பிருண்டும் இருத்தலைச் செய்த தலைமகன் மீண்டு போந்து தன் சொல் வழியே கற்பு நெறி நின்று தான்

2. அகம். கட.

குறித்த காலவரவு நோக்கித் தன் மனைக்கண்ணே ஆற்றியிருந்த தலைமகளைக் கூடி இன்புறும் மங்கலமரபே நிலைபெறத் தோழி கூற்றே வரக் கோத்திருப்பது குறிக்கொள்ளத் தக்க தொன்று. இதனால் இதுவும் இதுபோல்வனவு மாகிய தொகைநூற்களைச் சிறந்த குறிக்கோளும் முறையும் அடிப்படையாகக் கொண்டே சான்றோர் தொகுத்துள்ளனர் என அறிக.

பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை எழுதிய
ஐங்குறுநூறு மூலமும் உரையும் முடிந்தன.

திருத்தப்பிற் சேர்க்கை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
45	5	என்பதேனல்	என்பதனல்
51	14	வேறுபாட்டாளாக	வேறுபட்டாளாகத்
66	10	பிரிதல்	பிரிதலும்
71	21	கழருலும்	கழலும்
124	13	கூற்றிலராயினும்	கூறிற்றிலராயினும்
128	11	பாணற்குறைத்த பத்து	பாணன் பத்து
138	7	அகன்பெறுவட்டி	அகன்பெருவட்டி
159	16	ஊரினே	ஊரனே
178	3	நகரார்	பூம்புகார் நகரார்
183	17	பரத்தையால்	பரத்தைபால்
192	5	நயந்துரையும்	நயந்துறையும்
199	29	புதல்வர் பயந்து	புதல்வர்ப் பயந்து
206	18	ஆற்றே	அற்றே
231	27	என்ருர்	என்ருள்
244	15	பாங்காயிரை	பாங்காயினுரை
245	1	தலைமகன்	தலைமகள்
252	8	பண்டைச்	பண்டச்
280	8	தோழிக்கு கிளத்தலின்	கிளத்தலின்
329	12	மகள்	மகன்
352	14	முன்பெருகால்	முன்பொருகால்
394	1	இயற்கைப்புணர்ச்சி நீங்கும்	இயற்கைப்புணர்ச்சி புவிர்ந்து நீங்கும்
394	17	அடுத்துவர	அடுத்துவரல்
397	18	நோக்கி,	நோக்கி
398	10	பலப்பட	புலப்பட
449	17	புரிந்தென	பிரிந்தென
457	3	புலபு கொண்மாலை	புலம்புகொண்மாலை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
520	29	கயவர்	கயர்வர்
526	13	சிதைத்தல்	சிதைதல்
528	27	மருட்டற்றெழுந்து	மருட்ட ஏற்றெழுந்து
534	10	தூராது	வாராது
541	8	முருகன்கண்	முருகின்கண்
543	6	தரிஸ்டர்	தரிஸ்டன்
623	24	மத்தி	மந்தி
638	21	உடம்நனி	உடம்புநனி
641	4	ஆம்பலும்	அம்பலும்
662	11	நுந்தை	எந்தை
669	13	பிரிவுற்று	பரிவுற்று
669	14	மயிலினும்	மலியினும்
671	15	பெருங்கல்	பெருங்கல் வெற்பன்
692	17	றெரியினும்	றெறியினும்
750	7	ஒண்பழத்தை	நறும்பழத்தை
751	28	குறள்	குறள் 227
754	26	இடையே முடிகிறது	இடையும் கழிந்தபின்பும் முடிகிறது
754	30	கூடுவன்	கூடமுயல்வது
763	17	கோள்வதும்	கொள்வதும்
807	1	கோம்புகள்	கொம்புகள்
819	19	வெய்பயில்	வேய்பயில்
821	7	உடன்போக்கிய தலைவன்	உடன்போகிய தலைமகள் தலைமகன்
843	6	இன்மையின்	அன்மையின்
844	28	செந்தா	செந்நா
922	27	கண்டுயிண்	கண்டுயின்
929	24	ணெடுங்கணவர்	னெடுங்கணவர்